பக்கங்கள்.

உ—தொடர்ச்சி

உமாநாத், திரு. ரா—

இரட்டை ஏடு சுருட்டின் மீதான கலால் வரி, தொழிலாளர்கள் பாதிப்பு (ஒ,தி) .. 35—36

குடிநீர், நாகப்பட்டினம் நகராட்சித் திட்டம்.. 228—230

டி.வி.எஸ். நிறுவனங்கள், பாடி, தொழிலாளர்களிடமிருந்து உறுதிமொழி பெற்று வேலைக்கு அனுமதி .. .. 231—238

பத்திரிகை நிருபர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உறுப்பினர்கள் அமர்தல் (ஒ.பி) .. 45,47

பாடியிலுள்ள டி.வி.எஸ். நிறுவனங்களில் தொழில் தகராறுகள் .. .. 230—231

'மக்கள் குரல்' பத்திரிகையில் தவறான செய்தி வந்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து (உ,பி).. 247

மத்திய-மாநில மாநாடு, சண்டிகார் - தமிழக முதல்வர் கலந்து கொள்வது குறித்தும், டெல்லியில் நடைபெற்ற தேசிய அபிவிருத்தி கவுன்ஸிலில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும் (த.கோ) 439

மாநில கூட்டுறவு சங்கம், பல்வேறு கூட்டுறவு சங்கங்களுக்கு தரவேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்களைமுடக்கிவைத்திருப்பதால் நெசவாளர்கள் பாதிக்கப்படுவது குறித்து (க.ஈ.) .. 4:0, 452, 454

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சாலைப் போக்குவரத்துப் பணிகள் - கப்பல் போக்குவரத்து
சாலைகள் —பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ..
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்
} 329,331

வினா—விடை நேரம் தவிர்த்தல் (ஒ.பி) ..1026—1027

வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மதுரை மாநகராட்சி எல்லையிலிருந்து 16 கிலோமீட்டர் தூரத்திற்குட்பட்ட இடங்களில் பணியாற்றுபவர்களுக்கு வழங்குவது பற்றி .., 423—42

பக்கங்கள்.

உ—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினை—

பார்க்க —''தலைவர் — தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்'' 247

உள்ளாட்சிகள்—

ஊராட்சிகள்—

அரியலூரை நகராட்சியாக மாற்றுதல் .. 427—428

ஆனைகுளம், பிரித்தமைத்தல் 11

வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்கள், பிரித்தமைத்தல் .. .. 1—2

நகராட்சிகள்—

கோயம்புத்தூர் நகர அபிவிருத்தித் திட்டம் .. 432—434

பஞ்சாயத்து—

தாராசுரம், நிர்வாக அதிகாரியின் நடத்தை .. 600—601

மாநகராட்சி—

சென்னை, கணக்குத் தணிக்கைகள் .. 599—600

சென்னை, மேல்நிலைக் குழு நியமனம் .. 598—599

ஏ

ஏகாம்பர ரெட்டி, திரு. ஏ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம்
} 506—509

மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு ..
} 1092—1095

ஏடுகள்—

பேரவைமுன் வைக்கப்பெற்றவை .. 143—144, 348—350, 539, 702, 703, 914—915, 1221—1223

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறாவது
சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

1978, மார்ச் 18, 20, 21, 22, 23, 25 ஆம் நாட்கள்

(தொகுதி 16—எண்கள் 1 முதல் 6 வரை)

©
தமிழ்நாடு அரசு
1979

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009
ரூ. 1]

D
V211,31 'N78
N79.1632
122122

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

1978 மார்ச் 18, 20, 21, 22, 23, 25 ஆம் நாட்கள்

(தொகுதி 16—எண்கள் 1 முதல் 6 வரை)

உள்ளடக்கம்

பக்கங்கள்

சனிக்கிழமை, 1978 மார்ச் 18

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். .. i — iv

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். .. v

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (தமிழ் அகரவரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் .. .. vii — xv

1. வினாக்கள் — விடைகள் .. 1—31

2. ஒழுங்குப் பிரச்சினைகள்—

(அ) ஒரு மானியக் கோரிக்கை மீது அவையில் விவாதம் நடைபெறாத போது, அவ் விவாதம் நடந்ததாக, "மக்கள் குரல்" நாளேட்டில் செய்தி வந்திருப்பது குறித்து .. 31—34

(ஆ) உறுப்பினர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமரலாமா என்பது குறித்து. .. 3—50

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

இரட்டை ஏடு சுருட்டின் மீது மத்திய அரசு விதித்த கலால் வரியின் விளைவாக, கைத்தொழில் சுருட்டுக் கிடங்குகள் மூடப்பட்டதும், தொழிலாளர்கள் வேலை நீக்கமும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து .. 35—38

பக்கங்கள்

சனிக்கிழமை, 1978, மார்ச் 18—தொடர்ச்சி.

4. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் .. 38—42

(ஆ) கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் .. 43—44

(இ) கோரிக்கை எண் 44—எழுது பொருள், அச்சுத் துறை .. 50—143

5. தகவல் கோரல்—

ஓர் உறுப்பினரைப் பற்றி பேரவைத் தலைவர் குறிப்பிட்ட சொற்கள் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறலாமா என்பது குறித்து .. 42

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 143—149

திங்கட்கிழமை, 1978 மார்ச் 20

1. இரங்கற் குறிப்பு —

இந்திய நாடாளுமன்ற முன்னாள் தலைவர் திரு. எம். அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் மறைவு குறித்து .. 213

2. வினாக்கள் — விடைகள் 214—244

3. வினாக்கள்—விடைகள் நேரத்திற்குப் பின் ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்புவது குறித்து .. 244—245

4. தகவல் கோரல்—

(அ) டெல்லி செல்லும் தமிழ்நாடு விரைவு ரயில் வண்டியில் தமிழிலும் அறிவிப்பு செய்வது குறித்து. 245—246

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள கேள்விகளுக்கு பல மாதங்கள் ஆகியும் பதில் வராதது குறித்து .. 246

பக்கங்கள்

திங்கட்கிழமை, 1978 மார்ச் 20—தொடர்ச்சி.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) ஒத்தி வைக்கப்பட்ட வினாக்கள் மீண்டும் எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பது குறித்து. .. 264

5. உரிமைப் பிரச்சினை—

'மக்கள் குரல்' பத்திரிகையில் தவறான செய்தி வந்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து .. 247

6. அறிவிப்புகள்—

(அ) ஓர் உறுப்பினரின் உரையில் சில பகுதிகளை நீக்குவது குறித்து பேரவைத் தலைவரின் அறிவிப்பு .. 248—250

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. 270

7. அவையில் அமைச்சர் மீதோ, அதிகாரிகள் மீதோ உறுப்பினர்கள் மீதோ ஆதாரம் காட்டிய பின்னரே குற்றச்சாட்டு செய்ய வேண்டுமென்கின்ற பேரவைத் தலைவரின் தீர்ப்பு .. 250—256

8. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி. 256—348

(அ) கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.

(ஆ) கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்.

(இ) கோரிக்கை எண் 40—சாலைபோக்குவரத்து பணிகள்கப்பல் போக்குவரத்து.

(ஈ) கோரிக்கை எண் 54—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

(உ) கோரிக்கை எண் 55—சாலை போக்குவரத்துப் பணிகள்-கப்பற் போக்குவரத்து குறித்து மூலதனச் செலவு

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 348—350

பக்கங்கள்

செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 21

1. வினாக்கள்-விடைகள் 411—436

2. ஒழுங்குப் பிரச்சினைகள் —

(அ) இராணிப்பேட்டையில் கொண்டாடப்பட்ட உழவர் பெருவிழாவிற்கு அத்தொகுதி உறுப்பினர் அழைக்கப்படாதது குறித்து. 436—437

(ஆ) பேரவையில் ஒரு மானியக் கோரிக்கைமீது விவாதம் நடக்காதபோது விவாதம் நடந்ததாக நாளேடு செய்தி வெளியிட்டது குறித்து எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்னையின் மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு .. 439—442

(இ) ஓர் உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் அதே பொருள் குறித்து கொடுக்கப்பட்டிருந்த மற்றொரு உறுப்பினருடைய தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது குறித்து .. 443—444

3. தகவல் கோரல்—

(அ) அறிவிப்பு கொடுக்கப்பட்ட தீர்மானங்களை எடுத்துக் கொள்வது குறித்து .. 438

(ஆ) சந்திகாரில் நடக்கவிருக்கும் மத்திய-மாநில உறவு மாநாட்டில் தமிழக முதல்வர் கலந்து கொள்வது குறித்தும், டெல்லியில் நடந்த தேசிய அபிவிருத்தி கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும் .. 439

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரிகொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து .. 442—44
445—44

பக்கங்கள்.

செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 21—தொடர்ச்சி.

5. கவன ஈர்ப்பு—

மாநில கூட்டுறவுச் சங்கம், பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தர வேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்களை முடக்கி வைத்திருப்பதும், அதனால் நெசவாளர்கள் பாதிக்கப்படுவதும் குறித்து .. 450—455

6. அறிவிப்பு—

தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு .. 455

7. அரசினர் சட்ட முன்வடிவு—

தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு .. 455

8. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை

(ஆ) கோரிக்கை எண் 11-மாவட்ட நிர்வாகம் .. } 456—539

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 539

புதன்கிழமை, 1978 மார்ச் 22

1. வினாக்கள்-விடைகள் .. 577—609

2. ஒழுங்குப் பிரச்சினை—

விசாரணை கமிஷன் முன்னுள்ள பொருள் பற்றி முதல்வர் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து .. 609—611

பக்கங்கள்

புதன்கிழமை, 1978 மார்ச் 21— தொடர்ச்சி.

3. தகவல் கோரல்—

ஆபாசப் படங்கள் வெளியிடுவோர் மீது எடுக்கயிருக்கும் நடவடிக்கைப் பற்றிய செய்திக் குறிப்பு குறித்து .. 611—612

4. ஒத்திவைப்புத் தீர்மானம் —
சேலம் மத்திய சிறைச்சாலையில் ஒரு நக்சலைட் கைதியின் உண்ணாவிரதம் குறித்து .. 612—622

5. கவன ஈர்ப்புகள்—

(அ) கொடைக்கானல் மலைப்பகுதியில் முடிகொத்து நோயால் வாழை விவசாயம் பாதிப்பும், கட்டாய வணிகப்பயிர் வரி வசூலால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும் .. 622—625

(ஆ) குமரி மாவட்ட பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தியாகும் உபரி பாலை மதுரையில் விநியோகம் செய்வது குறித்து .. 625—629

6. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 24-தொழில்கள்

(ஆ) கோரிக்கை எண் 51-தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. 629—645
648—700

7. அமைச்சரின் அறிக்கை—

பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கைகள் மீது அரசு எடுத்த முடிவுகள் குறித்து கல்வி அமைச்சர் அளித்த அறிக்கை .. 646—648

8. அறிவிப்பு—

பேரவை அலுவல் குறித்து .. 701—702

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 702—703

பக்கங்கள்

வியாழக்கிழமை 1978 மார்ச், 23

1. ஒழுங்குப் பிரச்னைகள்—

(அ) முதல் ஒரு மணி நேரத்தில் வினாக்கள்-விடைகள் எடுத்துக் கொள்ளாமல், வேறு அலுவல்களை எடுத்துக் கொள்வது குறித்து .. 799—802

(ஆ) வினாக்கள்-விடைகள் நேரத்தை நிறுத்தி வைப்பதற்கான தீர்மானத்தை, வாக்கெடுத்து நிறைவேற்றுவதாக அறிவித்த தீர்ப்பை மாற்றி ஒருமனதாக நிறைவேற்றியதாக அறிவிப்பது குறித்து .. 828—829

(இ) வினாக்கள்-விடைகள் நேரம் நிறுத்தி வைக்கப்பட்டது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது குறித்து .. 829—834

2. அரசினர் தீர்மானம்—

விதி 22-ஐத் தளர்த்தல் .. 799—803

3. 1977-78 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள் அளித்தல் .. 803—805

4. 1970-71 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்—அளித்தல் .. 805

5. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்
(ஆ) கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 806—828, 834—878

(இ) கோரிக்கை எண். 18-மருத்துவம்
(ஈ) கோரிக்கை எண். 19—மக்கள் நல்வாழ்வு } 878—914

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 914—915

பக்கங்கள்.

சனிக்கிழமை, 1978 மார்ச் 25

1. அரசினர் தீர்மானம்—

விதி 22-ஐத் தளர்த்தல் 1025—1028

2. தகவல் கோரல் —

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து .. 1028—1030

3. 1978-79-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 18 – மருத்துவம் தொடர்ச்சி 1030—1166

(ஆ) கோரிக்கை எண் 19-மக்கள் நல் வாழ்வு-தொடர்ச்சி 1169 – 1206

(இ) கோரிக்கை எண் 7—மாநில சட்ட மன்றம் .. 1206—1221

4. அறிவிப்பு—

பேரவை அலுவல் குறித்து .. 1167—1168

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 1221—1223

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன்படுத்தும் முறை

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக் காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)' 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது.

அ	—	அறிக்கை
அறிவி.	—	அறிவிப்பு
அ. வி.	..	அரைமணி நேர விவாதம்
கு. வி.	..	குறுகிய கால விவாதம்

பொ.வி.	..	பொது விவாதம்
ஆ.உ.	..	ஆளுநர் உரை
உ.பி.	..	உரிமைப் பிரச்சினை
ஒ.பி.	..	ஒழுங்குப் பிரச்சினை
க.ஈ.	..	கவன ஈர்ப்பு
க.ஈ.அ.	..	கவன ஈர்ப்பு அறிக்கை
ச.மு.வ	..	சட்ட முன்வடிவு
ஆ.த.	..	ஆளுநரிடமிருந்து தகவல்
ஆ.நி.	..	அறிமுக நிலை
ஆ.நி.	..	ஆய்வு நிலை— இந்நிலையில், (1) ஆய்வு / கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம். (2) ஆய்வு / கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம் (4) ஆய்வு/கூட்டாய்வு குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.
பிரி.ஆ.	..	பிரிவு வாரியாக ஆய்தல்.
நிறை (தீ)	..	நிறைவேற்றல் தீர்மானம்
நிறை	..	நிறைவேற்றல்
ச.பே.	..	சட்டமன்றப் பேரவை
ச.மே.	..	சட்டமன்ற மேலவை
த.கோ.	..	தகவல் கோரல்
த.வி.	..	தன்னிலை விளக்கம்
தீ.	..	தீர்மானம்
உ.தீ.	..	உரிமைத் தீர்மானம்
ஒ.தீ.	..	ஒத்தி வைப்புத் தீர்மானம்
த.தீ.	..	தனித் தீர்மானம்
து.மா.கோ.	..	துணை மானியக் கோரிக்கை
மி.மா.கோ.	..	மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
பே.அ.	..	பேரவையின் அலுவல்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்: திரு. பிரபுதாஸ் பட்வாரி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் / சம்பந்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, நல்வாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், பூமிதானம்—கிராமதானம், முன்னாள் இராணுவத்தினர், சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. மாண்புமிகு திரு கி. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத்துறை, வருவாய், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— பொதுப்பணி, சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலை உட்பட்ட சிறு பாசனங்கள், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

5. மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை, சிங்கோனா உள்பட வனங்கள், இளைஞர் அணி, விலைக்கட்டுப்பாடு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் — நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுது பொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், மலைவாழ் பழங்குடியினர், பீடித் தொழிலாளர்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, பால்வளநிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—இடவசதிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார-மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

Thiru Prabhudas Patwri.

Members of the Council of Ministers.

1. The Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister):—Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan, Ex-Servicemen, Mines and Minerals and Rural Industries Project.

2. The Hon. Thiru K. MANOHARAN (Minister for Finance):—Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Public Works):—Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Iron and Steel Control and Electricity.

4. The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR (Minister for Law):—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on money lending, Legislation on Chits and Registration of Companies.

5. The Hon. Thiru G.R. EDMUND (Minister for Food):—Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. The Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Tourism):—Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. The Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education):—Education including Technical Education, Official Language and Employment and Training.

8. The Hon. Thiru K. KALIMUTHU (Minister for Local Administration):—Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. The Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour):—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN (Minister for Harijan Welfare):—Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. The Hon. Thiru C. PONNAIYAN (Minister for Transport):—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. The Hon. Selvi P.T. SARASWATHI (Minister for Social Welfare):—Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggar's Home, Orphanages, Indian Overseas and Refugees, Evacuees and Correctional Administration.

13. The Hon. Thiru P. KOLANDAIVELU (Minister for Agriculture):—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. The Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Handlooms and Textiles):—Accommodation Control, News Print Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Wakfs, Textiles, Yarn, Handloom and Khadi and Village Industries.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. முனு ஆதி

பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. பண்ணை கே. சேதுராம்
2. திரு. ஆர். முத்தையா
3. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா
4. திரு. கே.கே. முத்தையா

*5. திரு. எஸ். ஜே. இராமசாமி

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. ஹானர்ஸ்

சார்புச் செயலாளர்கள்

திரு. வி. சீதாராமன், பி. காம்.
திரு. பி. எம். பத்மனபன் நம்பியார், பி.ஏ.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

தலைமை நிருபர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

எஸ்டேட் அதிகாரி

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

---

*20—3—1978-ம் தேதி பேரவைத் தலைவரால் அறிவிக்கப் பெற்றது.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
1 அண்ணாமலை, திரு. எம். ..	ஊரூர் (செ.வ.)
2 அப்துல் ரஜாக், திரு. கே.எம்.	ஆலந்தூர்
3 அப்துல் லத்தீப், திரு. கி. ..	கடலூர்
4 அப்புனு கவுண்டர், திரு. கா. ..	பெண்ணாகரம்
5 அமிர்தராஜ், திரு. இரா. ..	திருச்செந்தூர்
6 அம்பிகாபதி, திரு. மு. ..	மன்னார்குடி
7 அய்யாச்சாமி, திரு. ரா. ..	தாராபுரம் (செ. வ.)
8 அரங்கசாமி, திரு. க. ..	குன்னூர் (செ. வ.)
9 அரங்கநாதன், திரு. அ. க. ..	வேலூர்
10 அரங்கநாதன், திரு. மு. ..	திருவல்லிக்கேணி
11 அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்)	கோயம்புத்தூர் (மேற்கு)
12 அருணாசலம், திரு. இரா. ..	நாமக்கல் (செ. வ.)
13 அர்ச்சுனன், திரு. வி. ..	ஆரணி
14 அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி
15 அன்பழகன், திரு. க. ..	புரசவாக்கம்
16 அன்பழகன், திரு. தி. ..	நாட்றாம்பள்ளி
17 ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்
18 ஆதிசுவாமி, திரு. இரா. ..	குளச்சல்
19 ஆறுமுகம், திரு. சி. ..	மதுராந்தகம்
20 ஆறுமுகம், திரு. எச். ஜி. ..	பர்கூர்
21 ஆறுமுகம், திரு. இல ..	திருநாவலூர்
22 ஆறுமுகம், திரு. எம். ..	சேலம்-2
23 ஆறுமுகம், திரு. த.	அரியலூர்
24 இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்
25 இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்
26 இராசரத்தினம், திரு. து. ..	பூந்தமல்லி
27 இராதா, திரு. எம். ஆர். ..	கும்பகோணம்

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
28 இராமசாமி, திரு. கே.என்.கே. ..	கோபிசெட்டிப்பாளையம்
29 இராமசாமி, திரு. எஸ். ஜே. ..	சோளிங்கர்
30 இராமசாமி, திரு. எஸ். வி. ..	பெரம்பலூர் (செ.வ.)
31 இராமசாமி, திரு. டி.	இராமநாதபுரம்
32 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்.	சாத்தூர்
33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்)	அருப்புக்கோட்டை
34 இராமச்சந்திரன், திரு. என். ..	செஞ்சி
35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்)	பண்ருட்டி
36 இராமச்சந்திர ரெட்டி, திரு.என்.	ஹோசூர்
37 இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்
38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா.	தல்லி
39 இளங்கோவன், திரு. கோ. ..	திருவையாறு
40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு. பி.	அம்பாசமுத்திரம்
41 உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி (செ.வ.)
42 உச்சி, திரு. கே.	கடலூர்
43 உத்திராபதி, திரு. பொ.	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
44 உமாநாத், திரு. ரா. ..	நாகப்பட்டிணம்
45 உய்யக்கொண்டான், திரு கே.ஜே.	ஆற்காடு
46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரோ. (அமைச்சர்)	திருநெல்வேலி
47 எத்திராஜ், திரு. கி.	அச்சரப்பாக்கம் (செ.வ.)
48 ஏகாம்பர ரெட்டி, திரு. ..	பள்ளிப்பேட்
49 ஐசரி வேலன், திரு.	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்.
50 கணேசன், திரு. இ.	எடப்பாடி
51 கணேசன், திரு. எஸ்.	பூம்புகார்
52 கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.)
53 கந்தசாமி, திரு. க. ..	ஆண்டிப்பட்டி
54 கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
55 கபாலி, திரு. டி. கே. ..	மயிலாப்பூர்
56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை
57 கருணகிரி முத்தையா, திரு. க.	மருங்காபுரி
58 கருணாநிதி, திரு. மு.	அண்ணாநகர், சென்னை
59 கருணாநிதி, திரு. தாழை. மு. ..	திருவாரூர் (செ.வ.)
60 கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்
61 கருப்பசாமி பாண்டியன், திரு.வீ.	ஆலங்குளம்
62 கலியமூர்த்தி, திரு. துரை ..	சிதம்பரம்
63 காத்தமுத்து, திரு. கி. பெ. ..	தொட்டியம்
64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்)	திருப்பரங்குன்றம்
65 காளியப்பன், திரு. பொ. ..	காரைக்குடி
66 காளியப்பன், திரு. இரா. ..	ஏற்காடு (ஆ. வா.)
67 கிட்டப்பா, திரு. என்.	மாயூரம்
68 கிட்டு, திரு. ப. கோ.	பல்லடம்
69 கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு
70 கிருஷ்ணன், திரு. செ.	கன்னியாகுமரி
71 கிருஷ்ணன், திரு. நா. ..	ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.)
72 கிருஷ்ணன், திரு. பி. ..	விழுப்புரம்
73 கிருஷ்ணன், திரு. ரா.	வாசுதேவ நல்லூர் (செ.வ.
74 குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்
75 குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ.வ.)
76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்)	உடுமலைப்பேட்டை
77 கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்
78 கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன், திரு. பி. ..	முசிறி
79 கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்
80 கோவிந்தராசன், திரு. சி. ..	நெல்லிக்குப்பம்
81 கோவிந்தன், புலவர் கா. ..	செய்யாறு
82 கோவேந்தன், திரு. மு. ரெ.	பேராவூரணி
83 சங்கரய்யா, திரு. என். ..	மதுரை கிழக்கு
84 சண்முகம், திரு. கா. ந.	லால்குடி

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
85 சண்முகம், திரு. ப. உ. ..	திருவண்ணாமலை
86 சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி
87 சண்முகம், திரு. கூத்தக்குடி ச...	திருப்பத்தூர்
88 சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி
89 சந்திரசேகரன், திரு. ஆர். ..	கம்பம்
90 சந்திரன், திரு. ப. ..	பெரணமல்லூர்
91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.	தியாகராய நகர், சென்னை.
92 சமரசம், டாக்டர், கே. ..	காவேரிப்பட்டிணம்
93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்)	திருமங்கலம்
94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ...	பாபநாசம்.
95 சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு, சென்னை
96 சாது செல்வராஜ், திரு. கோ...	ஸ்ரீவைகுண்டம்..
97 சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.)
98 சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்
99 சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி
100 சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்
101 சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
102 சின்னசாமி, திரு. வி. கொ.	பவானிசாகர்.
103 சின்னய்யா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.)
104 சின்னராசு, திரு. க. இரா.	கிருஷ்ணகிரி.
105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106 சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107 சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.
108 சுந்தரராஜன், திரு, மு. ..	விருதுநகர்.
109 சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
110 சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113 சுப்பிரமணியம், திரு. ஆர். சி.	கடலாடி.
114 சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.
115 சுப்பிரமணியன், திரு. ஓ. ..	சிவகங்கை.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
116 சின்ன சேலம் சுப்பிரமணியன், திரு. மா.	சின்னசேலம்.
117 சுப்பிரமணியன், திரு. வ. மு.	மானாமதுரை (செ.வ.)
118 சுப்பிர வேலு, திரு. கே. ..	சீர்காழி (செ.வ.)
119 சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120 சுப்புலட்சுமி, திருமதி ..	மொடக்குறிச்சி.
121 சுப்பையா, திரு. ச.	சங்கரநயினார் கோவில் (செ.வ.).
122 சுவாமிதாஸ், திரு. அ. ..	பத்மநாபபுரம்.
123 செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
124 செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
125 செல்லப்பன், திரு. ஏ. ..	வலங்கைமான் (செ.வ.)
126 செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127 செல்வராஜ், திரு. சீனி ..	சமயநல்லூர் (செ.வ.)
128 செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129 சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ.வ.)
130 சோமசுந்தரம், திரு. ஒ. ப. ..	பொள்ளாச்சி.
131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ.வ.).
132 சௌந்திரராசன், திரு. கே. ..	திருச்சிராப்பள்ளி-2.
133 சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி.
134 சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர்.	ஸ்ரீரங்கம்.
135 ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.
136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேல்மலையனூர்.
137 தங்கவேல், திரு. ர.ச. ..	வால்பாறை (செ.வ.)
138 தண்டபாணி, திரு. ரா.க.சு.	காங்கேயம்.
139 தமிழரசன், திரு. இ. ..	பேரணாம்பட்டு (செ.வ.)
140 தனசேகரன், திரு. ந. ..	தூத்துக்குடி.
141 தனபால், திரு. ப.	சங்கரி (செ.வ.)
142 தனுஷ்கோடி, திரு. கோ. ..	ராஜபாளையம் (செ.வ.)
143 தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்).	அறந்தாங்கி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
145 திருவேங்கடம், திரு. பே. சு.	கலசப்பாக்கம்.
146 துரை கோவிந்தராசன், திரு (அரசாங்கத் தலைமைக் கொரடா).	திருவோணம்.
147 துரைசாமி, திரு. ப.	ராசிபுரம்.
148 துரை முத்துசாமி, திரு. ..	சங்கரபுரம்.
149 துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150 துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ.வ.).
151 துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ.வ.)
152 தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153 நடராசன், திரு. ஆர். ..	பேரூர்.
154 நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155 நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க்டவுன், சென்னை.
156 நாச்சிமுத்து. திரு. க. ..	பொங்கலூர்
157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ.	மேட்டூர்.
158 நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159 பட்டாபிராமன், திரு. செ. ..	திருவள்ளூர்.
160 பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161 பரமசிவன், திரு. ஏ. எம். ..	மேலூர்.
162 பரமசிவம், திரு. மொ. ..	வானூர் (செ.வ.)
163 பழனிச்சாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164 பழனிச்சாமி, திரு. சொ. ந.	அவினாசி (செ.வ.)
165 பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166 பழனியப்பன், திரு. அ. ப. ..	ஓட்டன்சத்திரம்.
167 பழனிவேல், திரு. என். ..	பழனி (செ.வ.)
168 பாண்டியன், திரு. பி. எச்.	சேரன்மாதேவி.
169 பாலகிருஷ்ணன், தி . சோ. ..	முதுகுளத்தூர்.
170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ.	சோழவந்தான்.
171 பூவலன், திரு. சு.	பெரம்பூர் (செ.வ.)
172 பாவாஜி, திரு. க.	காஞ்சீபுரம்.
173 பாலுச்சாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ.வ.)
174 புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை, சென்னை.
175 புஸ்பராஜு, திரு. த. ..	ஆலங்குடி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர் (2)
176 பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ.வ.)
177 பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
178 பெரியசாமி, திரு. டி.பி.மு. ..	மதுரை மேற்கு.
179 பெருமாள், திரு. என். ..	வரகூர் (செ.வ.)
180 பெருமாள், திரு. ரா.கு. ..	விளாத்திகுளம்.
181 பொன்னுசாமி, டாக்டர் ஏ.	பெருந்துறை.
182 பொன்னுரங்கம், திரு. ப. ..	இராயபுரம்.
183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்).	திருச்செங்கோடு.
184 மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.)
185 மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
186 மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர், சென்னை (செ.வ.).
187 மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188 மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்).	பாளையங்கோட்டை.
189 மாணிக்கம், திரு. சி. ..	திருச்சிராப்பள்ளி-1.
190 மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.
191 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்	(நியமன உறுப்பினர்).
192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். ..	பட்டுக்கோட்டை.
193 மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
194 முத்துசாமி, திரு. பா. க. சி.	தர்மபுரி.
195 முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
196 முத்துசாமி கரையாளர், திரு. சு.	தென்காசி.
197 முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி.
198 முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
199 முனுசாமி, திரு. பொ. ..	வந்தவாசி (செ.வ.)
200 முனிரத்தினம். திரு. எஸ். ..	கும்மிடிபூண்டி
201 முனு ஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்).	தாம்பரம், சென்னை.
202 மூக்கையா தேவர், திரு. பி.கே.	உசிலம்பட்டி.
203 யூசுப், திரு. யா.சை.மு. ..	ராதாபுரம்.
204 ரகுமான்கான், திரு. ஏ. ..	சேப்பாக்கம், சென்னை.
205 ரகுராமன், திரு. வி. ..	புவனகிரி.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்
(1)	(2)
206 ரகோத்துமன், திரு. கோ. ..	முகையூர்.
207 ரமணி, திரு. கு.	கோயம்புத்தூர் கிழக்கு.
208 ரசாக், திரு. எம். எம். ஏ. ..	கடையநல்லூர்.
209 ராமசாமி, திரு. கோ. ..	சிவகாசி.
210 ராமசாமி, திரு. து. ..	வெள்ளக்கோயில்.
211 ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212 ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213 ராமலிங்கம், திரு. இ. ..	காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான், திரு.	புதுக்கோட்டை.
215 ராஜு, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ.வா.)
216 ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ.வ.)
217 லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218 லத்தீப், திரு. எம். ஏ. ..	வாணியம்பாடி.
219 வடிவேலு, திரு. கே. ..	கரூர்.
220 வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்.
221 வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222 வாசன், திரு சீ. மு. ..	வேடசந்தூர்.
223 வின்சென்ட், திரு. மீ. ..	நாகர்கோவில்.
224 விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.
225 வேங்கா கவுண்டர், திரு. பி.	வீரபாண்டி.
226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. ..	ஆத்தூர்.
228 வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229 வேலுச்சாமி, திரு. ஓ. சோ.	ஓட்டப்பிடாரம் (செ.வ.
230 ஜகதீசன், திரு. ஆனூர் ..	செங்கல்பட்டு.
231 ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232 ஜெபமணி, திரு. ர.	சாத்தான்குளம்.
233 ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234 ஜெயவேலு, திரு. எம். ஏ.	காட்பாடி.
235 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்.	அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்.	அமைச்சர்.
3 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்.	அமைச்சர்.
4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது.	அமைச்சர்.
5 திரு. வி. பி. இராமன். ..	தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறுவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

1978 மார்ச் 18, 20, 21, 22, 23, 25 ஆம் நாட்கள்

தொகுதி 16—எண்கள் 1 முதல் 6 வரை

அ

	பக்கங்கள்
அண்ணாமலை திரு. எம்.—	
தீர்த்தமலையில் சுற்றுலா விடுதி கட்டுதல் ..	215 – 216
வரவு-செலவுத் திட்டம், 1978–79, வாக்கெடுப்பு— நிலவரித்துறை மாவட்ட நிர்வாகம் ..	476—483
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் பின்தங்கிய வகுப்பினர் நலன் எழுது பொருள் அச்சுத்துறை ..	39
மாவட்ட நிர்வாகம் ..	458
அம்பிகாபதி, திரு. மு. —	
அறிவிப்பு கொடுக்கப்பட்ட தீர்மானங்களை எடுத்துக்கொள்வது குறித்து. (த. கோ) ..	438
கவன ஈர்ப்பு, ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படாமை குறித்து (த. கோ).	1028
தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரி கொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து. (ஒ. தீ) ..	445
தாராசுரம் பஞ்சாயத்து, நிர்வாக அதிகாரியின் நடத்தை ..	600—601
மின்சாரம், விவசாயத்திற்கு சேலம் மாவட்டத்தில் இணைப்பு கொடுக்க மறுப்பது குறித்து ..	413
வடவாறு விரிவாக்க கால்வாய், கல்லணையில் இணைக்கும் திட்டம் ..	411—412
வரவு-செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு— தொழில்கள் தொழில்வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு	648—655 867, 877

அ—தொடர்ச்சி.

பக்கங்கள்

வரவு செலவுத்திட்டம், 1978-79 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.
சாலைகளும் பாலங்களும்
சாலைப்போக்குவரத்துப் பணிகள்-கப்பல் போக்கு
வரத்து சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச்
செலவு, சாலைப் போக்குவரத்துப் பணிகள்,
கப்பல்போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் } 297—301, 343,

அய்யாச்சாமி, திரு. வி.—

வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
தொழில்கள்
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. } 697—700

அர்ச்சுனன், திரு. வீ.—

வரவு செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு } 1056—1058

அரங்கநாதன், திரு. மு.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள கேள்விகளுக்குப் பல மாதங்கள் ஆகியும் பதில் வராதது குறித்து (த. கோ) .. 246

பள்ளிகள், சென்னை நகரில், வேலை நேரம் மாற்றம். 594—595

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு .. 880

வினா-விடை நேரம் தவிர்த்தல் (ஒ. பி.) .. 1025

அரங்கநாயகம், திரு. செ.—

கல்லூரி ஆசிரியர் கோரிக்கைகள் (அறி) .. 646—648

அரசு அலுவலர்கள்—

வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மதுரை மாநகராட்சி எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு உட்பட்ட இடங்களில் பணியாற்றுபவர்களுக்கும் வழங்குவது பற்றி ..423—425

அ—தொடர்ச்சி.

பக்கங்கள்

அருணாசலம் திரு. இரா—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
எழுதுபொருள் அச்சுத் துறை
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர்
நலன்—பின்தங்கிய வகுப்பினர் நலன் } 112—115

அழகர்சாமி திரு. சோ—

பள்ளிகள், சென்னை நகரில் வேலை நேர மாற்றம். 594—595

பள்ளி வளர்ச்சி நிதி, வசூலித்தல் .. .. 7—9

வினா—விடை நேரம் தவிர்த்தல் (ஒ.பி.) .. 1026

அறிவிப்பு—

தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு. அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் இசைவு 455

பேரவை அலுவல் குறித்து .. .. ..1167—1168

அன்பழகன் திரு. க—

அவையில் அமைச்சர் மீதோ அதிகாரிகள் மீதோ உறுப்பினர்கள் மீதோ ஆதாரம் காட்டிய பின்னரே குற்றச்சாட்டு செய்ய வேண்டுமென்கின்ற பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்து. 250, 253

பத்திரிகை நிருபர்களுக்கு ஒதுக்கப்பட்டஇடத்தில் உறுப்பினர்கள் அமர்தல் (ஒ.பி.) 44, 46, 49

வரவு செலவுத் திட்டம்—1978—79, வாக்கெடுப்பு—
எழுதுபொருள், அச்சுத் துறை
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர்
நலன்—பின்தங்கிய வகுப்பினர் நலன் } 139—140, 125, 126

மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு .. } 1115, 1124, 1125, 1129—1166

வினா—விடை நேரம் தவிர்த்தல் (ஒ.பி.) .. 832—833

அன்பழகன் திரு. கு.—

சந்தனத் தைலம் தொழிற்சாலை, (வட ஆற்காடு மாவட்டம்) திருப்பத்தூரில் அமைத்தல் .. 414—419

ஆ

பக்கங்கள்

ஆசிரியர்கள்—

அரசு கல்லூரியில் பணிபுரிவோர் ஊதியம், வங்கியில் போடும் முறை .. .. .. 220—223

கல்லூரி ஆசிரியர்கள் கோரிக்கைகள் (அறி.) .. 646—648

தொழிலாசிரியர்கள், பகுதி நேரத் தொழிலாசிரியர்களை முழு நேரமாக மாற்றுதல் .. .. 216—218

ஆண்டி அம்பலம் திரு. மெ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.
பின்தங்கிய வகுப்பினர் நலன்
எழுது பொருள், அச்சுத் துறை
} 38

சாலைகளும் பாலங்களும்
சாலை போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்
} 258

ஆறுமுகம் திரு. சி—

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரி கொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து (ஒ.தீ.) 443

வரவு-செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு—

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துக் குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்
} 262—267, 342

வினா—விடை நேரம் தவிர்த்தல் (ஒ.பி.) .. 828

பக்கங்கள்

ஆ—தொடர்ச்சி.

ஆறுமுகம் திரு. மு—

கொடுமுடி அணை, பணிநிலை .. .. .. 584—586

நக்சலைட் உண்ணாவிரதம், சேலம் சிறை (ஒ வை.தீ.) .. .. 618—619

மகளிர் கல்லூரி, சேலம், திறத்தல் .. .. 225—226

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

எழுதுபொருள் அச்சுத் துறை .. ..
தொழில்கள்
தொழில்வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு
} 630, 631, 687, 688

பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன், பின்தங்கிய வகுப்பினர் நலன் ..
} 39, 40, 41

மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு
} 879, 881, 1086—1092

மாவட்ட நிர்வாகம் 458

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்
சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்கு வரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்கு வரத்துப் பணிகள், கப்பல் போக்கு வரத்துக் குறித்த மூலதனச் செலவு.
} 257, 258, 259, 260—261, 262, 344

ஆனூர் ஜகதீசன் திரு—

வரவு-செலவுத் திட்டம், 1978–79, வாக்கெடுப்பு—

சாலைகளும் பாலங்களும்.
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துக் குறித்த மூலதனச் செலவு.
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்
} 307—310

இ

பக்கங்கள்.

இரங்கல் குறிப்பு—

அனந்தசயனம் ஐயங்கார், திரு. எம். மறைவு . 213

இராகவானந்தம், திரு. எஸ்—

இரட்டை ஏடு சுருட்டின் மீதான கலால் வரி, தொழிலாளர்கள் பாதிப்பு (ஒ.தீ.) .. .. 36—37

இராசமாணிக்கம் திரு. இரெ—

ஒத்திவைக்கப்பட்ட வினாக்கள் மீண்டும் எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பது குறித்து (த.கோ.) 246

கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படாமை குறித்து (த.கோ.). 1029

பூம்புகார் விருந்தினர் மாளிகைக்கு 'அண்ணா' பெயர் .. .. 412—413

இராசாராம் ரெட்டி, திரு. டி. ஆர்—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

மாநில சட்டமன்றம் 1207

இராதா, திரு. எஸ். ஆர்—

பத்திரிகை நிருபர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உறுப்பினர்கள் அமர்தல் (ஒ.பி.) 46

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

தொழில்கள்
தொழில் வளர்ச்சிக் குறித்த மூலதனச் செலவு } 816—823

மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு } 1091, 1115, 1121—1129

வினாக்கள்—விடைகள் முதலில் எடுத்துக் கொள்ளாதது குறித்து (ஒ.பி.) 802

பக்கங்கள்.

இராமச்சந்திரன், திரு. எம். ஜி—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழில்கள்
தொழில்வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 689, 690
849—853
854—863
864—865
866
867—868
869—873
874
876—877

நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம் } 531

மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு } 878, 880,
881—882
1112,
1113—1114
1116—1117
1169—1205

இராமச்சந்திரன், திரு. சு—

அவையில் அமைச்சர் மீதோ அதிகாரிகள் மீதோ உறுப்பினர்கள் மீதோ ஆதாரம் காட்டிய பின்னரே குற்றச்சாட்டு செய்ய வேண்டு மென்கிற பேரவைத் தலைவரின் தீர்ப்பு .. 252, 255

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு } 1114

வாழை, நோயால் பாதிப்பும் கட்டாய வரி வசூலும் (க.ஈ.அ.) .. .. 622—624
625

விதி 22—ஐத் தளர்த்தல் (தீ) 1025

வினாக்கள்—விடைகள் நேரம் நிறுத்தி வைக்க நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து (ஒ.பி.). 830

இ—தொடர்ச்சி

இராமச்சந்திரன், திரு செஞ்சி. ந—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம் 458

இராமசாமி, திரு. எஸ். வி—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
தொழில்கள்
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 641—645

இராமசாமி, திரு. எஸ். ஜே—

ஊராட்சிகள், வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் பிரித்தமைத்தல் .. .. 1—2
சென்னை மாநகராட்சி, கணக்குத் தணிக்கைகள் .. 599—600

இராமசாமி, திரு. கொ—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
எழுது பொருள் அச்சுத் துறை
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன் } 72—76

இராமலிங்கம், திரு. செ—

அரசு கல்லூரி ஆசிரியர்கள் ஊதியம், வங்கிகளில் போடும் முறை .. .. 220—223
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
தொழில்கள்
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 813—816

இராஜா முகமது, திரு. கே—

மாநில கூட்டுவுச்சங்கம், பல்வேறு கூட்டுறவுச்சங்கங்களுக்குத் தரவேண்டிய இலட்சக்கணக்கான ரூபாய்களை முடக்கி வைத்திருப்பதால் நெசவாளர்கள் பாதிக்கப்படுவது குறித்து (க.ஈ அ.) 450—452
453—454

இ—தொடர்ச்சி

இராஜாமுகமது, திரு. கே.—தொடர்ச்சி

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
எழுதுபொருள் அச்சுத் துறை
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன் } 109
110—111

ளங்கோவன், திரு. கோ—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு } 878

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி—

குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், வாடகை .. 16—17

உ

உச்சி, திரு. கே—

குடிநீர்த் திட்டங்கள், கோவை, நீலகிரி மாவட்டங்கள் .. .. 602—603
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம் } 504—506

உத்திராபதி, திரு. பொ—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
எழுதுபொருள் அச்சுத்துறை
நிலவரித்துறை .. } 457
மாவட்ட நிர்வாகம்—
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் பின்தங்கிய வகுப்பினர் நலன் .. 39,40, 79—82
மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு .. } 909—913

பக்கங்கள்

ஒ

ஒத்திவைப்புத் தீர்மானம்—

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரிகொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து .. 445—447

ஒழுங்குப் பிரச்னை (கள்)—

இராணிப்பேட்டையில் கொண்டாடப்பட்ட உழவர் பெருவிழாவுக்கு அத்தொகுதி உறுப்பினர் அழைக்கப்படாதது குறித்து .. .. 436—437

ஒரு மானியக் கோரிக்கை மீது அவையில் விவாதம் நடைபெருதபோது அவ்விவாதம் நடந்ததாக ''மக்கள் குரலில்'' செய்தி வந்திருப்பது குறித்து .. .. .. 31—33

ஓர் உறுப்பினர் கொடுத்த ஒத்தி வைப்புத் திர்மானம் ஏற்றுக்கொள்ளாத நிலையில் அதே பொருள்குறித்து கொடுக்கப்பட்டிருந்த மற்றொரு உறுப்பினரின் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் பட்டது குறித்து .. .. 443—444

சென்னை துப்பாக்கிப் பிரயோகம் குறித்து அவையில் முதலமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் .. 609—611

பத்திரிகை நிருபர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உறுப்பினர்கள் அமர்தல் .. .. 43—50

பேரவையில் மானியக் கோரிக்கை மீது விவாதம் நடக்காதபோது விவாதம் நடந்ததாக ஒரு நாளேடு செய்தி வெளியிட்டது குறித்து .. 439—442

வினாக்கள்—விடைகள் நேரம் தவிர்த்தல் .. 1025—1028

வினாக்கள்—விடைகள் நேரம் நிறுத்தப்பட்டது குறித்து .. .. .. 882—829

வினாக்கள்—விடைகள் நேரம் நிறுத்திவைக்க நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து .. 829—834

வினாக்கள்—விடைகள் முதலில் எடுத்துக்கொள்ளாதது குறித்து .. 799, 800—802

பக்கங்கள்

க

கட்டடங்கள்—

பூம்புகார் விருந்தினர் மாளிகைக்கு ''அண்ணா'' பெயர் .. .. .. 412—413

கடன்களும்—முன்பணங்களும்—

கூட்டுறவுக் கடன்கள், வட ஆற்காடு மாவட்டத்தில் வட்டி வசூல் .. .. 580—583

பதநீர் இறக்கும் தொழிலாளர்களுக்கு .. 243—244

கணேசன், திரு. இ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு } 1078—1080

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள் — கப்பல் போக்குவரத்து
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ..
மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் } 312—314

கணேசன், திரு. எஸ்.—

இணைப்புச் சாலைகளுக்கு நிதி .. .. 29—31

உல்லாசப் பயணிகளுக்கு சாலையோர ஓய்வு விடுதிகள் .. .. .. 2—5

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், நிதிநிலை. .. 594

கந்தசாமி, திரு. கே.—

சோத்துப்பாறை அணைத் திட்டம், பெரியகுளம் வட்டம் .. .. .. 586—587

கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. இராம—

பள்ளிகள், ஊராட்சி ஒன்றியம், கல்வித் தரம் உயர்த்தும் திட்டம் .. .. 596—598

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கருணாநிதி, திரு. தாழை. மு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

எழுதுபொருள் அச்சுத்துறை .. .. } 42—43
பழங்குடிமக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் }
பின்தங்கிய வகுப்பினர் நலன் } 500—56

கருணாநிதி, திரு. மு.—

அவையில் அமைச்சர் மீதோ அதிகாரிகள் மீதோ உறுப்பினர்கள் மீதோ ஆதாரம் காட்டிய பின்னரே குற்றச்சாட்டு செய்ய வேண்டுமென்கிற பேரவைத் தலைவரின் தீர்ப்பு .. 251, 254

ஆபாசப்படங்கள், வெளியிடுவோர்மீது நடவடிக்கை (த.கோ.) .. .. 611—612

பேரவையில் மானியக் கோரிக்கைமீது விவாதம் நடக்காதபோது விவாதம் நடந்ததாக ஒரு நாளேடு செய்தி வெளியிட்டது குறித்து(ஒ.பி).. 441—442

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழில்கள், }
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு } 865—870, 873, 874—875

மருத்துவம் }
மக்கள் நல்வாழ்வு .. .. } 1112, 1114—1115

வினாக்கள்-விடைகள் நேரம் தவிர்த்தல் (ஒ.பி.) ..1025—1026, 1027

கல்லூரிகள்—

அரபு மொழி போதித்தல் .. .. 9—10
ஆசிரியர்கள் சம்பளம், வங்கியில் போடும் முறை .. 220—223
கள்ளக்குறிச்சியில் அமைத்தல் .. .. 6—7
பொறியியல், திருச்சி, மாலை நேர வகுப்புகள் .. 223—224
மகளிர், சேலம், திறத்தல் .. .. 225—226
மாணவர்களிடமிருந்து நன்கொடை வசூலிப்பதை தடை செய்தல் .. .. 419—422
மாமன்னர் அரசினர் கல்லூரி, புதுக்கோட்டை, பட்ட மேற்படிப்புகள் துவங்குதல் .. 225

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கல்வி—

பள்ளியிறுதி, புகுமுக வகுப்புகளில் தேறாத மாணவர்கள் மீண்டும் பள்ளியில் கல்லூரியில் சேர்த்தல் .. 218—219

வன ஈர்ப்புகள்—

பால், கன்னியாகுமரி மாவட்ட சங்கத்தின் உபரி உற்பத்தி .. 625—629

மாநில கூட்டுறவு சங்கம், பல்வேறு கூட்டுறவு சங்கங்களுக்கு தரவேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்களை முடக்கி வைத்திருப்பதால் நெசவாளர்கள் பாதிக்கப்படுவது குறித்து. .. 450—455

வாழை, நோயால் பாதிப்பும் கட்டாய வரி வசூலும் .. 622—625

கிட்டப்பா, திரு. என்.—

கல்லூரி மாணவர்களிடமிருந்து நன்கொடை வசூலிப்பதை தடை செய்தல் .. 419—422

சந்தன தைலம், சோப்பு தயாரிப்பு, தொழிற்சாலை அமைக்கும் திட்டம் குறித்து .. 413—414

சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில் (ஒலிபெருக்கியின்றி) நடைபெறும் கூட்டங்களுக்கு போலீஸ் அனுமதி பெறுவது குறித்து .. 423

தேசியத் தலைவர்கள் பிறந்தநாள் விழாக்கள் .. 5—6

தொழிலாசிரியர்கள், பகுதி நேரத் தொழிலாசிரியர்களை முழு நேரமாக மாற்றுதல் .. 216—218

பள்ளிகள், ஊராட்சி ஒன்றியம், அரசு ஏற்றல். .. 595—596

பூம்புகார் விருந்தினர் மாளிகைக்கு 'அண்ணா' பெயர் .. 412—413

கிருஷ்ணன், திரு. நா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

நிலவரித்துறை }
மாவட்ட நிர்வாகம் .. } 499—501

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கிருஷ்ணன், திரு. ரா.—

நவீனக் கழிப்பிடங்கள், நகராட்சிப் பகுதிகளில் கட்டாயமாகக் கட்டுதல். .. 13—15

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழில்கள்
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. } 630

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. ..
மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் } 258

குடிநீர்—

கோவை, நீலகிரி மாவட்டங்களில் திட்டங்கள் .. 602—603

கோவை-புதூரில், தட்டுப்பாடு .. 227—228

திருப்பூருக்கு திட்டம். .. 17—19

நாகைப்பட்டினம் நகராட்சி திட்டம். .. 228—230

நெல்லிக்குப்பத்திற்கு திட்டம். .. 19—20

குருசாமி, திரு. ப.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

எழுதுபொருள் அச்சுத் துறை.
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.
பின்தங்கிய வகுப்பினர் நலன். } 90—92

குழந்தைவேலு, திரு. ப.—

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரிகொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து (ஒ. தீ.) .. 448—449

பால், கன்னியாகுமரி மாவட்டத்தில் உபரி உற்பத்தி (க. ஈ. அ.) .. 625—62[illegible]

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கூட்டுறவு—

தண்டராம்பட்டு ஒன்றிய விவசாயப் பொறியாளர் கூட்டுறவு சேவை சங்கம். .. 435—436

மீனவர் சங்கங்கள், நிதிநிலை ... 894

கோதண்டராமன் என்கிற முசிறிப்புத்தன், திரு. பி—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சாலைகளும், பாலங்களும்.
சாலைப் போக்குவரத்துப் பணிகள்— கப்பல் போக்குவரத்து.
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.
மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் } 273—278

கோதண்டராமன், திரு. வி. கே.—

பள்ளியிறுதி, புகுமுக வகுப்புகளில் தேறாத மாணவர்கள் மீண்டும் பள்ளியில்-கல்லூரியில் சேர்த்தல். .. 218

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
எழுதுபொருள் அச்சுத்துறை.

தொழில்கள்.
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.. } 631

நிலவரித் துறை—
மாவட்ட நிர்வாகம் } 456

பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.
பின்தங்கிய வகுப்பினர் நலன். } 40
மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு } 881—1116

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்.
சாலைகளும் பாலங்களும்.
சாலைப் - போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு, } 260

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கோவிந்தராசன், திரு. சி.—

- குடிநீர் வழங்கு திட்டம், நெல்லிக்குப்பம் .. 19—20
- டி.வி.எஸ். நிறுவனங்கள், பாடி, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தேர்தல். .. 238—240
- நக்சலைட் உண்ணாவிரதம், சேலம் சிறை (ஒ.தீ.) .. 617—618
- நிலவரி, வெள்ளப் பாதிப்புப் பகுதிகளில் சலுகைகள். .. 577—579
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
  - சாலைகளும் பாலங்களும்.
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச்செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம். } 278—287, 339

ச.

சங்கரய்யா, திரு. என்.—

- அவையில் அமைச்சர் மீதோ, அதிகாரிகள் மீதோ, உறுப்பினர்கள் மீதோ ஆதாரம் காட்டிய பின்னரே குற்றச்சாட்டு செய்ய வேண்டுமென்கிற பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்து. (த.கோ.) 250—251
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
  - தொழில்கள்.
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 659—67

சட்டம்-ஒழுங்கு

- சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில் (ஒலிபெருக்கியின்றி) நடைபெறும் கூட்டங்களுக்கு போலீஸ் அனுமதி பெறுவது குறித்து. .. 413

சட்ட முன்வடிவு(கள்)—

- பொதுவிற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 அ.நி. .. 455

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சண்முகம், திரு. கூத்தக்குடி ச.—

- அவையில் அமைச்சர் மீதோ, அதிகாரிகள் மீதோ, உறுப்பினர்கள் மீதோ ஆதாரம் காட்டிய பின்னரே குற்றச்சாட்டு செய்ய வேண்டுமென்கிற பேரவைத் தலைவரின் தீர்ப்பு .. 254, 255
- நக்சலைட் உண்ணாவிரதம், சேலம் சிறை (ஒ.தீ.) .. 616
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
  - தொழில்கள்.
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. } 872, 875
  - நிலவரித் துறை.
மாவட்ட நிர்வாகம். } 485—492, 529, 531
  - மருத்துவம்.
மக்கள் நல்வாழ்வு. } 1115
- வினாக்கள்-விடைகள் நேரம் தவிர்த்தல் (ஒ.பி.) .. 1026
- வினாக்கள்-விடைகள் நேரம் நிறுத்தப் பட்டது குறித்து (ஒ. பி.) .. 828, 829
- வினாக்கள்-விடைகள் நேரம் நிறுத்தி வைக்க நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து (ஒ.பி.) .. 831, 833

சண்முகம், திரு. ப. உ.—

- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு ;
  - நிலவரித்துறை. ..
மாவட்ட நிர்வாகம். } 513—523, 529

சந்திரன், திரு. ப.—

- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
  - எழுதுபொருள் அச்சுத்துறை.
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன் } 40

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சந்திரன் ஜெயபால், திரு. ஆர். இ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
- மாநிலச் சட்டமன்றம். .. 1208-1211

சமரசம், டாக்டர். கே.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—
- நிலவரித் துறை. மாவட்ட நிர்வாகம். .. 467—472
- மருத்துவம். மக்கள் நல்வாழ்வு. .. 1049-1053

சமூக நலன்—
- முடமானவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் .. 241—242

சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
- சாலைகளும் பாலங்களும். சாலைப் போக்குவரத்துப் பணிகள்— கப்பல் போக்குவரத்து. சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் 260, 261

சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—

- அடையாறு சீரமைப்புத் திட்டம், விவரங்கள். .. 411
- அரபி மொழி, கல்லூரிகளில் போதித்தல் .. 9—10
- சென்னை துப்பாக்கிப் பிரயோகம் குறித்து அவையில் முதலமைச்சர் தெரிவித்த கருத்துகள் (ஓ. பி.) .. 609—611
- பழங்காலச் சின்னங்கள், புனலாம்பட்டி .. 10—11
- பள்ளிகள், சென்னை நகரில் வேலை நேர மாற்றம் 594—595

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
- தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. 834—848, 853—854
- நிலவரித்துறை மாவட்ட நிர்வாகம் 456

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சாமிக்கண்ணு, திரு. தா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு;
- எழுதுபொருள் அச்சுத் துறை .. பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் பிந்தங்கிய வகுப்பினர் நலன் 155

சாலைகள்—
- இணைப்பு-, நிதி ஒதுக்கல் .. .. 29—31
- பணிகள், காட்டுமன்னார்கோயில் ஒன்றியம் .. 12
- வாரன் சாலை, சென்னை, கிளைச்சாலை அமைத்தல் .. .. 15—16

சிகாமணி, திரு. பொ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
- சாலைகளும் பாலங்களும் சாலைப் போக்கு வரத்துப் பணிகள்--கப்பல் போக்குவரத்து. சாலைகள்--பாலங்கள் குறித்த மூலதனச் செலவு சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்தமூலதனச் செலவு. மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 292—294

சிவசாமி, திரு. செ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு:
- தொழில்கள் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 630
- மருத்துவம், மக்கள் நல்வாழ்வு. 879, 881, 1205
- நிலவரித்துறை மாவட்ட நிர்வாகம். 459
- சாலைகளும் பாலங்களும் சாலை போக்குவரத்துப் பணிகள்-கப்பல் போக்குவரத்து சாலைகள்--பாலங்கள் குறித்த மூலதனச் செலவு சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு .. .. மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 258

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சின்னசாமி, திரு. வ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

எழுதுபொருள் அச்சுத் துறை
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன் — 59—64

சின்னசாமி, திரு. வி. கொ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு .. .. 1075—1077

சின்னையா, திரு. வீ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

எழுதுபொருள் அச்சுத் துறை
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன் — 56—59

சுகாதாரம்—

நவீனக் கழிப்பிடங்கள், நகராட்சிப் பகுதிகளில் கட்டாயமாகக் கட்டுதல் .. .. 13—15

சுந்தரராஜ் திரு. நா.—

மாமன்னர் அரசினர் கல்லூரி, புதுக்கோட்டை, பட்ட மேற்படிப்பு துவங்குதல் .. 225

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

மருத்துவம்,
மக்கள் நல்வாழ்வு. 880

சுப்பிரமணியம், திரு, பாக்கூர் சு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

தொழில்கள்
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 672—6[illegible]5

பக்கங்கள்

சு-தொடர்ச்சி

சுப்பிரமணியம் திரு. ஒ.—

பம்புசெட்டு, கல்லல் பஞ்சாயத்து .. 583—584

வரவு-செலவுத் திட்டம், 1978-79-வாக்கெடுப்பு—

நிலவரித்துறை 456

மருத்துவம்,
மக்கள் நல்வாழ்வு. .. .. .. 879, 889—895

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்--கப்பல் போக்குவரத்து
சாலைகள்--பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு .. .. ..
மோட்டார் வண்டிகள்-சட்டங்கள் நிர்வாகம் — 257

சுப்பிரமணியம் திரு. கே. ஜே.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79— வாக்கெடுப்பு—

மருத்துவம்,
மக்கள் நல்வாழ்வு .. .. .. 1065—1068

சுப்பிரமணியன் திரு. சின்னசேலம் மா.—

கல்லூரி, கள்ளக் குறிச்சியில் அமைத்தல் .. 6—7

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகள், விவரங்கள் .. .. 25—29

சுப்பிரமணியன் திரு. வ. மு.—

முடமானவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள், 241—242

வரவு-செலவுத் திட்டம், 1978-79-வாக்கெடுப்பு—

எழுதுபொருள் அச்சுத் துறை
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன் — 68—72

பக்கங்கள்

சு—தொடர்ச்சி.

சுப்பு, திரு. க.—

ஒரு மானியக் கோரிக்கை மீது அவையில் விவாதம் நடைபெறுதபோது அவ்விவாதம் நடந்ததாக 'மக்கள் குரலில்' செய்தி வந்திருப்பது குறித்து. (ஒ. பி.) .. .. .. 31—32

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரிகொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து. (ஒ. தீ.) 443, 445—447

நக்சலைட் உண்ணுவிரதம், சேலம் சிறை (ஒ.வை.தீ.) 614—615, 620, 621

பேரவையில் மானியக் கோரிக்கை மீது விவாதம் நடக்காத போது விவாதம் நடந்ததாக ஒரு நாளேடு செய்தி வெளியிட்டது குறித்து (ஒ.பி.) 442

வினாக்கள்-விடைகள் நேரத்திற்குப் பிறகு ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்புவது குறித்து (ஒ.பி.) 244, 245

சுவாமிதாஸ் திரு. அ.—

வரவு-செலவுத் திட்டம் 1978-79- வாக்கெடுப்பு

நிலவரித்துறை

மாவட்ட நிர்வாகம். .. .. .. 457, 510—513

சுற்றுலா—

செஞ்சி, மையமாக்குதல் .. .. .. 214—215

தீர்த்தமலையில் விடுதி கட்டுதல் .. .. 215—216

பயணிகளுக்குச் சாலையோர ஓய்வு விடுதிகள் 2—5

செ

செங்கோடன் திரு கா.—

வரவு-செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு:

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்--கப்பல் போக்குவரத்து
சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் } 294—297

செஞ்சி இராமச்சந்திரன் திரு. ந.—

செஞ்சி, சுற்றுலா மையமாக்குதல் .. 214—215

மண்டல பொறியியற் கல்லூரி, திருச்சி, மாலை நேர வகுப்புகள் .. .. .. 223—224

பக்கங்கள்

செ—தொடர்ச்சி.

செல்வராசன் திரு. அ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

மருத்துவம்

மக்கள் நல்வாழ்வு .. .. .. 1117—1121

செல்வராஜ் திரு. ம.—

வரவு-செலவுத் திட்டம், 1978 79, வாக்கெடுப்பு—

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்--கப்பல் போக்குவரத்து
சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைகள் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் } 325—330

சௌந்தரபாண்டியன் திரு. பெ.—

வரவு-செலவுத் திட்டம், 1798-79, வாக்கெடுப்பு—

எழுது பொருள் அச்சுத் துறை
பழங்குடி மக்கள், அரிசனங்கள்
முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன் } 38, 39, 40, 121—142

சௌந்தரராசன் திரு, திருச்சி ஆர்.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

மருத்துவம்

மக்கள் நல்வாழ்வு .. .. .. 1068—1074

சௌந்திரராஜன் திரு. மு. ரா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு-

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்--கப்பல் போக்குவரத்து
சாலைகள்--பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துப் குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் } 301—303

பக்கங்கள்

ஞா

ஞானசிகாமணி திரு. தே.—

கடன்கள், பதநீர் இறக்கும் தொழிலாளர்களுக்கு. 243—244

முந்திரிப் பற்றுக்குறை, கன்னியாகுமரி மாவட்ட ஆலைகள் பாதிப்பு .. .. .. 604—606

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் .. .. 20—25

த

தகவல் கோரல்—

அறிவிப்பு கொடுக்கப்பட்ட தீர்மானங்களை எடுத்து கொள்வது குறித்து .. 438

ஆபாசப் படங்கள், வெளியிடுவோர் மீது நடவடிக்கை .. .. 611—612

ஓர் உறுப்பினரைப் பற்றி பேரவைத் தலைவர் குறிப்பிட்ட சொற்கள் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறலாமா என்பது குறித்து .. 42

கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படாமை குறித்து ..1028—1030

மத்திய - மாநில மாநாடு - சண்டிகார், தமிழக முதல்வர் கலந்து கொள்வது குறித்தும், டெல்லியில் நடைபெற்ற தேசிய அபிவிருத்தி கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும்.. 439

தண்டபாணி திரு, ரா. க. சு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு மாநில சட்டமன்றம் .. .. 1218—1221

தமிழரசன் திரு. இ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

மருத்துவம் மக்கள் நல்வாழ்வு .. .. .. 1106—1112

பக்கங்கள்

த—தொடர்ச்சி

தலைவர்—

அறிவிப்புகள்—

ஓர் உறுப்பினரின் உரையில் சில பகுதிகளை நீக்குவது குறித்து .. .. 248—250

பேரவை அலுவல் குறித்து .. 701—702

மாற்றுத் தலைவர்கள் பட்டியல், .. 270

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

அவையில் பயன்படுத்தப்படும் சொற்கள்—

''உட்காருடா'' என ஓர் உறுப்பினர், மற்றொரு உறுப்பினரைப் பார்த்துக் குறிப்பிட்டதாக, வேறோர் உறுப்பினர் பிரச்சினை எழுப்பியபோது தலைவர் அளித்த தீர்ப்பு :

''எந்த உறுப்பினர் அப்படிச் சொன்னர் என்பதை என்னுல் கண்டு பிடிக்க முடியவில்லை: அப்படிச் சொல்வது சரி அல்ல: யாரும் அப்படிச் சொல்லக்கூடாது'' .. 628

''சிண்டு முடிச்சு விடுவது'' என ஓர் உறுப்பினருக்கும், மற்றொருவருக்கும் பேதம் மூட்டிவிடுவது என்கிற பொருளில் ஓர் உறுப்பினர் குறிப்பிட்டதை மற்றொருவர் ஆட்சேபித்தபோது, அதுபற்றி எழுதிக் கொடுத்தால் பரிசீலிப்பதாகத் தெரிவித்தார். .. 801

"You are going beyond the limit'' என்பதாக அவைத் தலைவரைப் பார்த்து ஓர் உறுப்பினர் குறிப்பிட்டது, கண்டிக்கப்பட்டது .. 621

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—

'மக்கள் குரல்' நாளிதழ் மீது—

ஓர் கருத்துக் குறித்து தாம் மறுத்துச் சொல்லியதைப் பத்திரிகை வெளியிடாதது, தாம் அக்கருத்தை ஏற்றுக் கொண்டதுபோல, மக்களிடையே தவறான எண்ணம் தம்மைப் பற்றி ஏற்படக்கூடிய வகையில் பத்திரிகை அவை நிகழ்ச்சியை வெளியிட்டிருப்பது அவை உரிமை மீறலாகும் என ஓர் உறுப்பினர் 1978 மார்ச் 20 ஆம் நாள் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். இதுபற்றி தலைவர் அளித்த குறிப்புரையாவது:

''உரிமைப் பிரச்னை பத்திரிகை மீது இருப்பதால், அவர்களுக்கு எழுதிக் கேட்டு பதில் வந்த பின்னர் என் தீர்ப்பை அளிக்கிறேன்.'' .. 247

நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப் பெற்றிருந்த மானியக் கோரிக்கை ஒன்று எடுத்துக் கொள்ளப் பெறாதபோது, அதுபற்றி விவாதம் நடந்ததாக 'மக்கள் குரல்' நாளேட்டில் செய்தி வந்திருப்பது குறித்து ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை கிளப்பியபோது—

''பத்திரிகைகள்மீது ஒழுங்குப் பிரச்னை கொண்டு வர முடியாது, உரிமை மீறல் பிரச்சினை எழுப்புவதென்றால்எழுத்துமூலமாகத் தர வேண்டும்,''

என்று தலைவர் குறிப்புரைத்தார். .. 31—33

அதன்மீது இரண்டு உறுப்பினர்கள் எழுதிக் கொடுத்த உரிமைமீறல் பிரச்சினையின் மீது 1978, மார்ச் 21 ஆம் தேதி தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :

''சம்பந்தப்பட்ட குறிப்புரை ஏற்கெனவே அவையில் வைக்கப்பெற்ற ஏடு என்ற முறையிலும் உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே தெரிவிக்கப் பெற்ற விவரங்களைக் கொண்ட ஏடு என்ற முறையிலும் அதைப் பிரசுரம் செய்வது தவறாகாது.''

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப்பிரச்னைகள்—தொடர்ச்சி.

'மக்கள் குரல்' நாளிதழ் மீது—தொடர்ச்சி.

மேற்படி நாளேட்டில், ''இதை அவையில் படித்ததாக எழுதப் பெறவில்லை. ஆனால் இதில் அவைமுன் வைக்கப்பட்ட குறிப்புகளில் உள்ள தகவல்களைத்தான் வெளியிட்டுள்ளார்கள். உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் இதில் பொது மக்களுக்கு வேண்டுமென்றே தவறாக செய்தி கொடுக்கும்படியாக பத்திரிகையில் வெளியிடவில்லை.

எந்த ஒரு ஏடும் அவைமுன் வைக்கப்பட்டு விட்டால் அது பொது ஏடாகி விடுகிறது. அதைப் பிரசுரம் செய்வதில் தவறு எதுவும் இல்லை.

எனவே, இதில் அவை உரிமைமீறல் எதுவும் இல்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன். இருப்பினும் இச்செய்தியை இன்னமும் சிறிது தெளிவாகப் பத்திரிகையில் வெளியிட்டிருந்தால் இப்பிரச்சினை எழுந்திருக்காது.'' என்று கருதுகிறேன். 439—441

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் :

இரட்டை ஏடு சுருட்டின் மீது மத்திய அரசு விதித்த கலால் வரியின் விளைவாகக் கைத்தொழில் சுருட்டு கிட்டங்கிகள் மூடப் பட்டதும், தொழிலாளர் வேலை நீக்கமும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து—

தொழிலாளர் நல அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப் பெற்றது. 35—37

சேலம் மத்திய சிறைச்சாலையில் ஓர் நக்சலைட் கைதியின் உண்ணாவிரதம் குறித்து—

சட்டத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பட்டது .. 612—622

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரி கொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து—

வேளாண்மைத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. 449

ஒழுங்குப் பிரச்சினை

ஒரு பொருள் குறித்து, தாம் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்துவிட்டு அதே பொருள் குறித்து மற்றோர் உறுப்பினர் கொடுத்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வது பற்றி ஓர் உறுப்பினர் ஆட்சேபம் தெரிவித்தபோது—

உறுப்பினர் பத்து நாட்களுக்கு முன் அத்தீர்மானத்தைக் கொடுத்தார்கள். அப்பொருள் குறித்த மானியக் கோரிக்கை மறுநாளே அவையில் விவாதத்திற்கு வர இருந்ததால் அதன் மீது உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதனால் அதற்கு அனுமதி மறுக்கப் பெற்றது. உறுப்பினரும் மானியக் கோரிக்கையில் பேசியிருக்கிறார்கள். இன்றுள்ள சூழ்நிலையில் இதை அனுமதித்திருக்கிறேன். இதில் ஒழுங்குப் பிரச்சினை ஏதும் இல்லை 443, 444, 447—448

ஓர் அமைச்சர் முன் மொழிய வேண்டிய மானியக் கோரிக்கைகளை மற்றோர் அமைச்சர் முன்மொழியலாமா என ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப் பெற்றபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது ;

"அமைச்சரவையில் யார் வேண்டுமானாலும் முன்மொழியலாம். அதில் ஒன்றும் தவறு இல்லை." ... 632

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

தம்முடைய தொகுதியில் கொண்டாடப் பெற்ற அரசு விழா ஒன்றினுக்கு தொகுதி உறுப்பினர் என்ற முறையில் அதில் கலந்து கொள்ள தமக்கு அழைப்பு அனுப்பாதது பற்றி ஓர் உறுப்பினர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைமீது தலைவர் இதுபற்றி ஆராய்ந்து பின்னர்* தீர்ப்பளிப்பதாகக் குறிப்பிட்டார்.

பத்திரிகை நிருபர்களுக்கான இடத்தில் உறுப்பினர்கள் அமரலாமா என்பது குறித்து—

அவை உறுப்பினர் ஒருவர் பத்திரிகை நிருபர்களுக்கென ஒதுக்கப் பெற்றுள்ள இடத்தில் சென்று உட்கார்ந்திருந்தபோது ஓர் உறுப்பினர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை மீது தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார் : —

"உறுப்பினர்கள் யாராவது பத்திரிகை நிருபர்களிடம் பேச வேண்டுமென்றால் அவர்களை வெளியே அழைத்துத் தனியாகப் போய் பேசுவது தான் முறை. அதுதான் மரபாக இருந்து வந்திருக்கிறது. அந்த முறையை நாம் பின்பற்றுவதுதான் சரியாக இருக்கும். ஆகவே பத்திரிகை நிருபர்கள் இருக்கும் இடத்திலோ அல்லது அதிகாரிகள் இருக்கும் இடத்திலோ உறுப்பினர்கள் போய் உட்காருவது முறையற்றதாகத்தான் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது."

---

* 1978 மார்ச் 30ஆம் தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

"உறுப்பினர் இருக்கையில் உட்கார்ந்து கொண்டே பத்திரிகை நிருபர்களிடம் பேசுவது என்பது முறையில்லாத காரியம். அப்படி யாரும் பேச வேண்டாம்." .. 43—5

விசாரணையில் இருக்கும் விஷயம் குறித்து முதலமைச்சர் இந்த அவையில் கருத்து தெரிவித்திருப்பது முறைதானா என ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய போது தலைவர் அளித்த குறிப்புரை யாவது :

"சட்டப் பிரச்னை குறித்து, இது போல எழுப்பப் பெறும் ஒழுங்குப் பிரச்னையை முன்பாக எழுதிக் கொடுத்து விட்டு எழுப்பியிருக்க வேண்டும். அப்போது தான் பரிசீலனை செய்து பதில் சொல்ல முடியும், எழுத்து மூலமாகத் தந்தால் இதைப்பற்றி பரிசீலனை செய்யத் தயாரா யிருக்கிறேன்." .. 611

வினா நேரத்தைத் தள்ளி வைத்தல்—

விதி 22-ன் கீழ் வினா நேரத்தை ஒத்தி வைப்பதற்கான தீர்மானம் முன்மொழியப்பெற்றதை ஓர் உறுப்பினர் ஆட்சேபித்தபோது, விதி 244-ன் கீழ் தீர்மானம் முன்மொழியப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, வினா நேரம் தள்ளி வைக்கப்பெற்றதைச் சில உறுப்பினர்கள் ஆட்சேபித்தபோது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:

"விதி முறைப்படிதான் நடைபெற்றிருக்கிறது. இதில் தவறு ஒன்றும் இல்லை." .. 831

த—தொடர்ச்சி.

வர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

தகவல் கோரல்—

தம்முடைய கவன ஈர்ப்பு அறிவிப்பு நிராகரிக்கப் பெற்றுள்ளதாகத் தமக்குத் தகவல் வந்துள்ளது என்றும், அதற்குக் காரணம் என்ன என ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது,

"தலைவரால் ஏன் நிராகரிக்கப் பெற்றது என்று அவையில் கேட்பது தவறு; என் அறையில் வந்து இதைப்பற்றிக்கேட்டால், எந்த விதியின்கீழ் நிராகரிக்கப் பெற்றது என்பதை விளக்குவதற்கு நலமாக இருக்கும்." .. 1028, 1029

விவாதம்—

அவை நடவடிக்கைகள் குறிப்பு—

"உட்கார்ந்து கொண்டு, பேசுவது சபைக் குறிப்பில் வராது." 697

குற்றச்சாட்டு—

அவையில், ஓர் உறுப்பினர் 16-3-78 அன்று, மற்றோர் உறுப்பினர் மீது குற்றஞ் சாட்டிப் பேசியபோது, அக்குற்றச் சாட்டுகளுக்கான ஆதாரங்களை உறுப்பினர் தலைவரிடம் கொடுக்கும்வரை, அச் செய்தியை வெளியிட வேண்டாம் என்று தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

அதுபற்றிய ஆதாரங்களை உறுப்பினர் தலைவரிடம் கொடுக்காததால், அப் பகுதியை அவைக்குறிப்பில் இருந்தே நீக்கி விடும்படி ஆணையிட்டு. பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :—

"இம்மாதிரி குற்றச்சாட்டை ஒருவர் ஓர் உறுப்பினர் மீதோ, அமைச்சர் மீதோ சொல்லிவிட்டு, அக் குற்றச்சாட்டு பற்றிய உண்மையை விசாரிக்க வேண்டும் என்று

த — தொடர்ச்சி.

தலைவர் — தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் — தொடர்ச்சி.

விவாதம் — தொடர்ச்சி.

குற்றச்சாட்டு — தொடர்ச்சி.

கூற வந்ததாகவும், அதற்குள் குறுக்கீடுகள் வந்து விட்டதால் தொடர்ந்து பேச இயலாமல் போய் விட்டது என்றும் விளக்கம் கொடுத்து அதிலிருந்து விலகிக் கொள்வதில், அவையினது கண்ணியம் காக்கப்படுவதாக இல்லை என்று நான் கருதுகிறேன். மேலும் இம்மாதிரி குற்றச்சாட்டுக்களைக் கூறும்போது அது எந்த உறுப்பினரைப் பற்றியதாகவோ, அல்லது அமைச்சரைப் பற்றியதாகவோ, இருக்கிறதோ அதற்கான ஆதாரங்களைப் பேரவைத் தலைவரிடம் காட்டி, பிறகு அவர் அனுமதித்தால், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அல்லது அமைச்சருக்கு முன் அறிவிப்புக் கொடுத்து விட்டு அவையில் எழுப்புவதுதான் பாராளுமன்ற முறை. ஆனால் இவ்வவையில் இம்மாதிரி முறைகள் கடைபிடிக்கப்படுவதில்லை. ஆயினும், இம்மாதிரி குற்றச் சாட்டுக்கள் கூறுவதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் இம்முறைகளைப்பின்பற்றுவதுதான் பாராளுமன்ற நடைமுறைகளுக்குச் சிறந்தது. இம் மரபைப் பற்றி பாராளுமன்ற விதிகளில் சிறப்பாக ஒரு விதி சேர்க்கப்பட்டுள்ளது, அது பின்வருமாறு :

"No allegation of a defamatory or incriminatory nature shall be made by a member against any person unless the member has given previous intimation to the Speaker and also to the Minister concerned so that the Minister may be able to make an investigation into the matter for the purpose of a reply :

த — தொடர்ச்சி.

தலைவர் — தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் — தொடர்ச்சி.

விவாதம் — தொடர்ச்சி.

குற்றச்சாட்டு — தொடர்ச்சி

Provided that the Speaker may at any time prohibit any member from making any such allegation if he is of opinion that such an allegation is derogatory to the dignity of the House or that no public interest is served by making such allegation.
(*Rule* 353 of Lok Sabha Rules.)

நம் விதிகளில் இம்மாதிரி ஒரு விதி சேர்க்கப்படும் வரையில், இம்மன்றத்தில் பாராளுமன்ற மரபாக இது கையாளப்பட வேண்டுமென்று நான் தீர்ப்பு கூறுகிறேன்.

எனவே, இனிமேல் எந்த உறுப்பினரும் வேறொரு உறுப்பினர் பற்றியோ அல்லது அமைச்சரைப் பற்றியோ அல்லது அமைச்சரின் பொறுப்பின்கீழ் பணியாற்றுகின்றவர்களைப் பற்றியோ குற்றம் சாட்டுவதாக இருந்தால், அவற்றைக் கூறுவதற்கு முன் பேரவைத் தலைவருக்குக் காட்டி அவரது முன் அனுமதி பெற்றுத்தான் கூறவேண்டும். அனுமதி பெறாது, பொறுப்பேற்காது பேரவையில் பேச அனுமதிக்கப்பட மாட்டாது. 249--256

<u>தீர்ப்பு குறித்து</u>

தலைவரின் தீர்ப்பின்மேல் பேசுவது மரபு இல்லை, 691

<u>நேரம் ஒதுக்குதல்—</u>

உறுப்பினர்கள், அவர்களுக்கு ஒதுக்கப் பெற்ற நேரத்திற்குள் உரையை முடித்துக் கொள்ள வேண்டும். .. 1038

"தலைவர் மீது குறை சொல்லக்கூடாது." .. 33—34

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி: ..

வினக்கள்—விடைகள்

பதிலளித்தல்

"அமைச்சர்கள் எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. ஒரு அமைச்சருக்குப் பதில் இன்னொரு அமைச்சர் பதிலளிப்பதில் எவ்விதத் தவறும் இல்லை." .. [illegible]

துணை வினக்கள்—

கேட்ட கேள்வியையே மீண்டும் மீண்டும் போட்டு, விளக்கம் கேட்டுக்கொண்டிருத்தல் கூடாது .. 598

சுருக்கமாக இருத்தல் வேண்டும் 578

தனபால், திரு ப.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

எழுதுபொருள் அச்சுத் துறை } 95—98
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன்

தனுஷ்கோடி திரு. கோ.—

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

எழுதுபொருள் அச்சுத்துறை .. } 102—105
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன்

திருவேங்கடம் திரு. பெ. சு.—

கூட்டுறவுக் கடன்கள், வட ஆற்காடு மாவட்டத்தில் வட்டி வசூல் .. .. .. 580—583

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 631

மருத்துவம் } 1080—1086
மக்கள் நல்வாழ்வு .. ..

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

சிவசாமி திரு. செ.—தொடர்ச்சி.

சாலைகளும் பாலங்களும் } 260
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்

தீர்மானங்கள்—

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

இரட்டை ஏடு சுருட்டின் மீதான கலால் வரி, தொழிலாளர்கள் பாதிப்பு .. .. 35—37

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரிகொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து .. .. 442—443

நக்சலைட் உண்ணாவிரதம், சேலம் சிறை .. 612—622

விதி 22-ஐத் தளர்த்தல் 799, 803, 1025

துரை கலியமூர்த்தி, திரு—

சாலைப் பணிகள், காட்டுமன்னார் கோயில் ஒன்றியம் 12

வரவு-செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு—

சாலைகளும் பாலங்களும் } 256—257
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ..
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்

துரைசாமி, திரு. பா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

மருத்துவம் } 1039—1041
மக்கள் நல்வாழ்வு .. .. ..

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

துரை முத்துசாமி திரு—

கல்லூரி, கள்ளக்குறிச்சியில் அமைத்தல்.. .. 6—7

டெல்லி செல்லும் தமிழ்நாடு விரைவு ரயில் வண்டியில் தமிழிலும் அறிவிப்பு செய்வது குறித்து (த. கோ.) 245

நக்சலைட் உண்ணாவிரதம், சேலம் சிறை (ஒ. தீ.) 616—617

பள்ளிகள், சென்னை நகரில் வேலைநேர மாற்றம் .. 594—595

வரவு-செலவுத்திட்டம், 1978—79, வாக்கெடுப்பு—

தொழில்கள்
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு . 630, 686—696

துரை முருகன், திரு—

ராணிப்பேட்டையில் கொண்டாடப்பட்ட உழவர் பெருவிழாவிற்கு அத்தொகுதி உறுப்பினர் அழைக்கப்படாதது குறித்து (ஒ. பி.) .. .. .. 436—437

பத்திரிகை நிருபர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உறுப்பினர்கள் அமர்தல் (ஒ. பி.) 44, 48

வரவு-செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு—

தொழில்கள்,
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 632—641, 855—856

நிலவரித்துறை
மாவட்ட நிர்வாகம் .. .. } 504

வினாக்கள்-விடைகள் முதலில் எடுத்துக் கொள்ளாதது குறித்து (ஒ. பி.) .. .. 799, 800—802

வினா நேரம் நிறுத்தி வைக்க நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து (ஒ. பி.) .. 833—83

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

துலுக்காணம், திரு. வ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

எழுதுபொருள் அச்சுத் துறை .. ..
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன் } 86—90

தேசியத் தலைவர்கள்—

பிறந்த நாள் விழாக்கள் .. .. .. 5—6

தொழிற்சாலைகள்—

அமைப்பு முறையிலில்லாத தொழிலாளர் வாழ்க்கை நிலைபற்றி பரிசீலனை .. .. 428—432

சந்தனத் தைலம்—சோப்பு தயாரிப்பு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் .. .. 413—414

சந்தனத் தைலம் திருப்பத்தூரில் (வ. மா.) அமைத்தல் .. .. .. 414—419

டி. வி. எஸ். நிறுவனங்கள், பாடி, உறுதிமொழி பெற்று வேலைக்கு அனுமதி .. .. 231—238

டி. வி. எஸ். நிறுவனங்கள், பாடி, சங்கப் பிரதிநிதிகள் தேர்தல் .. .. .. 238—240

பதநீர் இறக்குபவர்கள், கடன்கள் வழங்கல் .. 243-244

டி. வி. எஸ், நிறுவனங்கள், பாடி தகராறுகள் .. 230—231

முந்திரி பற்றாக் குறை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆலைகள் பாதிப்பு .. .. .. 604—606

ந.

நடராசன், திரு. ஆ—

குடிநீர் கோவை—புதூரில் தட்டுப்பாடு.. .. 227—228

குடிநீர் வழங்கு திட்டம், திருப்பூர் .. .. 17—19

வரவு-செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:

நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம் .. .. } 459—467

நு—தொடர்ச்சி

நல்லதம்பி, திரு. தீ. சு—

வரவு-செலவுத் திட்டம், 1978–79, வாக்கெடுப்பு:
- மருத்துவம்
- மக்கள் நல்வாழ்வு .. .. } 882—889

நாச்சிமுத்து, திரு. கே. பி—

வரவு–செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
- நிலவரித் துறை
- மாவட்ட நிர்வாகம்.. .. .. } 483—485

நாராயணசுவாமி முதலியார், திரு. கே.—

நக்சலேட் உண்ணுவிரதம், சேலம் சிறை[ஒ.வை.தீ.] 621—622

நிதி அலுவல்கள்—

இறுதி துணை மதிப்பீடுகள், 1977–78, அளித்தல்.. 803—805

மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1970–71, அளித்தல் 805

வரவு-செலவுத் திட்டம், 1978–79, வாக்கெடுப்பு:

எழுதுபொருள் அச்சுத் துறை 41

சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 256—348

சாலைகளும் பாலங்களும்.. .. .. 256—348

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துக் குறித்த மூலதனச் செலவு } 256—348

தொழில்கள்
தொழில்கள் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 629—700, 806—828, 834—878

நிலவரித் துறை .. .. .. 456 - 539,

பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன் } 38—41, 50—148

மக்கள் நல்வாழ்வு
மருத்துவம் .. .. .. } 878—914, 1030—1166, 1169—1206

மாநில சட்டமன்றம் .. .. 1206—1221

மாவட்ட நிர்வாகம் .. .. 457—539

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் .. 256—348

ந—தொடர்ச்சி

நீக்கம்—

105, 142, 233, 616, 628, 1057

நீர்ப்பாசனம்—

அணைகள்—

கொடுமுடி, பணிநிலை .. .. .. 584—586

சோத்துப்பாறை அணைத் திட்டம், பெரியகுளம் வட்டம் .. .. 586—587

ஆறுகள்—

அடையாறு சீரமைப்புத் திட்டம், விவரம் .. 411

பாலாறு, படுகை விதிகள், ரத்து .. .. 588—591

கால்வாய்—

வடவாறு, கல்லணையில் இணைக்கும் திட்டம், விவரங்கள்- .. .. 411—412

பம்புசெட்டு, கல்லல் பஞ்சாயத்து .. .. 583—584

ப

பட்டாபிராமன், திரு. செ.—

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
- எழுதுபொருள் அச்சுத் துறை
- பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் பின்தங்கிய வகுப்பினர் நலன் } 76—78

பண்ணை சேதுராம், திரு. கே.—

வறட்சி, நோயால் பாதிப்பும், கட்டாய வரி வசூலும் (க. ஈ.) 622, 624, 625

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பரமசிவம், திரு. மொ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

எழுதுபொருள்அச்சுத் துறை.
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர்
நலன் பின்தங்கிய வகுப்பினர் நலன் .. } 119—121

பழங்காலச் சின்னங்கள்—

புளுலாம்பட்டி, விவரங்கள் .. 10—11

பழனிச்சாமி, திரு. சொ. ந.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

எழுதுபொருள் அச்சுத் துறை
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர்
நலன் பின்தங்கிய வகுப்பினர் நலன் } 92—96

பழனிமுத்து, திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ..
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் } 259

பழனிவேல், திரு. என்.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

எழுதுபொருள் அச்சுத் துறை ..
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பின்தங்கிய வகுப்பினர் நலன் } 64—68

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ..
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் }

பக்கங்கள்

ப—தொடர்ச்சி

பள்ளிகள்—

உயர்நிலைப்பள்ளி, வள்ளியூர், மாணவிகளை சேர்க்காதது பற்றி .. .. .. 422—423

ஊராட்சி ஒன்றியம், அரசு ஏற்றல் .. .. 595—596

ஊராட்சி ஒன்றியம், கல்வித் தரம் உயர்த்தும் திட்டம் .. .. 596—598

வளர்ச்சி நிதி, வசூலித்தல் .. .. 7—9

வேலைநேர மாற்றம் சென்னை நகர் .. .. 594—595

பால் வளம்—

உபரி, கன்னியாகுமரி மாவட்டம் (க. ஈ.) .. 625—629

பாலகிருஷ்ணன், திரு. சோ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

எழுதுபொருள் அச்சுத் துறை .. ..
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர்
நலன், பின்தங்கிய வகுப்பினர் நலன், } 40

மாவட்ட நிர்வாகம் 458

பாலன், திரு. சு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ..
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் } 259

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 629

மாநில சட்டமன்றம் 1,206

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பாலாஜி, திரு. க.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு .. .. 1,041—1044

பிற்பட்டோர்—

சட்டநாதன் குழு அறிக்கை, அரசின் நடவடிக்கை 606—609

புருஷோத்தமன், திரு. து—

பள்ளிகள், வேலைநேர மாற்றம் சென்னை நகர், .. 594—595

புஸ்பராஜ், திரு. த.—

பேருந்து நிலையம், புதுக்கோட்டையில் அமைப்பது குறித்து .. .. 425—426

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
சாலைகளும் பாலங்களும் .. ..
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 270—273
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்

பெரியசாமி, திரு. டி. பி. எம்—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 310—312
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்

பெரியசாமி, திரு. ரா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
சாலைகளும் பாலங்களும் ..
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 315—317
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு..
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பெருமாள், திரு. என்.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
எழுதுபொருள் அச்சுத் துறை
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் 83—86
பின்தங்கிய வகுப்பினர் நலன் .. ..

பெருமாள், திரு. ரா. கு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
தொழில்கள்—
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. 655—659

பொன்னுசாமி, டாக்டர் ஏ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—
மருத்துவம்—
மக்கள் நல்வாழ்வு .. .. 1058—1065

பொன்னுரங்கம், திரு. ப.—

மீன்பிடி இயந்திரப் படகுகள், கடன் தகவல் .. 591—593

பொன்னையன், திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—
சாலைகளும் பாலங்களும் 256,257
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து... .. .. 258—259
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 260,261,
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் 262,
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்
போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு .. 330—346

போக்குவரத்து—

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகள், விவரங்கள் .. .. .. 25—29
பேருந்து நிலையம் புதுக்கோட்டையில் அமைத்தல் 425—426

பக்கங்கள்

ம.

மனோகரன், திரு. கி.—

இறுதி துணை மதிப்பீடுகள், 1977-78, அளித்தல் 803—805

பொது விற்பனை வரி (திருத்த சட்ட முன்வடிவு, 1978) (அ. நி) 455

மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1970-71, அளித்தல் 805

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

தொழில்கள்
தொழில்வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 629,631, 632

நிலவரித் துறை, ..
மாவட்ட நிர்வாகம் .. .. } 456,459, 523—539

மாநில சட்டமன்றம் .. .. 1206, 1207—1208

மாவட்ட நிர்வாகம் 457

விதி 22-ஐத் தளர்த்தல் (தீ). 799,803

மார்க்கபந்து, திரு. ரா.—

அரியலூர் ஊராட்சியை நகராட்சியாக மாற்றுவது குறித்து .. 427—428

சட்டநாதன் குழு அறிக்கை, அரசின் நடவடிக்கை 606—609

நக்சலைட் உண்ணாவிரதம் சேலம் சிறை (ஒ.வை.தீ.) .. .. .. 619—620

பாலாறு, படுகை விதிகள் .. 588—591

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

தொழில்கள்
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 823—828

எழுதுபொருள் அச்சுத் துறை ..
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர்
நலன் பின்தங்கிய வகுப்பினர் நலன், } 98—102

பக்கங்கள்

ம—தொடர்ச்சி

திரு. கி. மனோகரன்,—தொடர்ச்சி.

மருத்துவம்,
சாலைகளும் பாலங்களும் .. ..
மக்கள் நல்வாழ்வு .. .. ..1,095—1100

சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல்
போக்குவரத்து.
சாலைகள்-பாலங்கள்குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல்
போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு..
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்
சாலைகளும் பாலங்களும் .. } 318—320, 345

மின்சாரம்—

விவசாயத்திற்கு மின் இணைப்பு (சே.மா.) கொடுக்க மறுப்பது குறித்து .. 413

மீனளம்—

மீன்பிடி இயந்திரப் படகுகள், கடன் தகவல் .. 591—593

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், நிதிநிலை .. 594

மீனாட்சிசுந்தரம், திரு. மா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு .. .. .. } 1053—1056

முத்துசாமி, கரையாளர் திரு. சு.—

சென்னை மாநகராட்சி, மேல்நிலைக் குழு நியமனம் 598—599

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
மருத்துவம்
மக்கள் நல்வாழ்வு .. .. .. 1044—1049

முத்தையா, திரு. இரா.—

பத்திரிகை நிருபர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உறுப்பினர்கள் அமர்தல் (ஒ.பி.) .. 43

மொழிகள்—

அரபு, கல்லூரிகளில் போதித்தல் .. 9—10

பக்கங்கள்

ய

யூசுப். திரு. யா. சை. மு.—

ஆனைகுளம் ஊராட்சி, பிரித்தமைத்தல் .. 11

கொடுமுடி அணை, பணிநிலை .. 534—586

பள்ளிகள், வள்ளியூர் உயர்நிலைப்பள்ளி, மாணவிகளை சேர்க்காதது பற்றி .. 423

ர

ரகுமான்கான், திரு. அ.—

வினா நேரம் நிறுத்திவைக்க நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து (ஒ.பி.) .. 829—831, 832

ரகோத்துமன், திரு. கோ.—

வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

சாலைகளும் பாலங்களும், சாலைப்போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து, சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு, சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துக் குறித்த மூலதனச் செலவு மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம், ..305—307

ரமணி, திரு. கு.—

கோயம்புத்தூர் நகர அபிவிருத்தித் திட்டம் .. 432—434

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. .. 863—864

மருத்துவம், மக்கள் நல்வாழ்வு 379 .. .. 895—904

சாலைகளும் பாலங்களும், சாலைப்போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு, சாலைகள் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்தமூலதனச் செலவு மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 346

ராமநாதன், திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம்,1978–79, வாக்கெடுப்பு—

மருத்துவம், மக்கள் நல்வாழ்வு .. .. 1103—1105

பக்கங்கள்

ர—தொடர்ச்சி.

ராமலிங்கம், திரு. ஏ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

எழுது பொருள் அச்சுத்துறை

பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் பின் தங்கிய வகுப்பினர் நலன் 38

சாலைகளும் பாலங்களும் சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து சாலைகள்— பாலங்கள் குறித்த மூலதனச்செலவு சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 303—305

ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான், திரு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

நிலவரித்துறை மாவட்ட நிர்வாகம் .. .. 472—476

ல

லத்தீப், திரு. எம். ஏ.—

ஓர் உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் அதே பொருள் குறித்து கொடுக்கப்பட்டிருந்த மற்றொரு உறுப்பினரின் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டது குறித்து (ஒ.பி.) .. 443—444

ஓர் உறுப்பினரைப்பற்றி பேரவைத் தலைவர் குறிப்பிட்ட சொற்கள் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறலாமா என்பது குறித்து (த.கோ.).. 42

மத்திய மாநில மாநாடு-சண்டிகார்— தமிழக முதல்வர் கலந்து கொள்வது குறித்தும், டெல்லியில் நடைபெற்ற தேசிய அபிவிருத்தி கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும். (த.கோ,) 439

வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. .. .. 630, 631, 806—831, 876

பக்கங்கள்

ல—தொடர்ச்சி.

லத்தீப் திரு. எம். ஏ.—தொடர்ச்சி

வரவு—செலவுத் திட்டம், 1978–79, வாக்கெடுப்பு-தொடர்ச்சி

நிலவரித் துறை 457

எழுதுபொருள் அச்சுத் துறை பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் பின்தங்கிய வகுப்பினர் நலன், .. 39 41, 106—112

மருத்துவம், மக்கள் நல்வாழ்வு. .. 880,881, 1030—1039

மாவட்ட நிர்வாகம் 459

சாலைகளும் பாலங்களும் சாலைப் போக்குவரத்துப் பணிகள்-கப்பல் போக்குவரத்து சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம். 258,259, 261, 320—325, 346

வினா-விடை நேரம் தவிர்த்தல் (ஒ.பி.) .. 1026

வ

வரதராஜன் திரு. சௌ. வே.—

வரவுசெலவு திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழில்கள் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு 683—686

சாலைகளும் பாலங்களும் சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 267—270

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வரிகள்—

நிலவரி,வெள்ளப் பாதிப்புப்பகுதிகளில் சலுகைகள் 577—579

வாசன், திரு. சீ. மு.—

வாரன் சாலை, சென்னை, கிளைச் சாலை அமைத்தல்.. 15—16

வாரியங்கள்—

குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், வாடகை .. 16—17

விவசாயம்—

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள ரிகொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து (ஒ.தீ.) .. 442—443

தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் .. 20—25

வின்செண்ட், திரு. எம்.—

பால், கன்னியாகுமரி மாவட்டத்தில் உபரி உற்பத்தி (க.ஈ.) 625,626, 627

விஜயராகவன், திரு. பொ—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

சாலைகளும் பாலங்களும் சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து சாலைகள்—பாலங்கள்குறித்த மூலதனச்செலவு சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 287—292

நிலவரித் துறை மாவட்ட நிர்வாகம் .. 492—499

மாநில சட்ட மன்றம் .. .. 1207, 1211—1218

வீரப்பன், திரு. ஆர். எம்.—

ஆபாசப்படங்கள், வெளியிடுவோர் மீது நடவடிக்கை (த.கோ.) .. .. 611—612

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வேணுகோபால் திரு. த—

தண்டராம்பட்டு ஒன்றிய விவசாயப் பொறியாளர் கூட்டுறவு சேவை சங்கம் .. .. 435—436

வரவு செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

சாலைகளும் பாலங்களும்
சாலை போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து
சாலைகள்—பாலங்கள்குறித்த மூலதனச்செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் } 257

வேளாண்மை—

வாழை, நோயால் பாதிப்பும் கட்டாய வரி வசூலும் (க.ஈ.) .. .. .. 622—625

ஜ

ஜான்வின்செண்ட், திரு. மு.—

கொடுமுடி அணை, பணி நிலை .. .. .. 584—586

ஜெபமணி, திரு. ர.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 868

மருத்துவம், மக்கள் நல்வாழ்வு .. 905—909

ஜெயராமன், திரு. வே. இரா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

நிலவரித்துறை மாவட்ட நிர்வாகம். .. 509—510

பக்கங்கள்

ஜ—தொடர்ச்சி.

ஜெயவேலு, திரு. எம்.ஏ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

நிலவரித்துறை மாவட்ட நிர்வாகம். .. 501—504

மருத்துவம் மக்கள் நல்வாழ்வு .. 1100—1103

ஜேம்ஸ், திரு. ஜே.—

அவையில் அமைச்சர் மீதோ அதிகாரிகள் மீதோ உறுப்பினர்கள் மீதோ ஆதாரம் காட்டிய பின்னரே குற்றச்சாட்டு செய்ய வேண்டுமென்கிற பேரவைத் தலைவரின் தீர்ப்பு.. 253

பத்திரிகை நிருபர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உறுப்பினர்கள் அமர்தல் (ஒ.பி.) .. 47

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. 632, 675—683, 858, 866

எழுதுபொருள் அச்சுத் துறை.
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன். பின்தங்கிய வகுப்பினர் நலன் } 116—119, 132

மருத்துவம் மக்கள் நல்வாழ்வு 1114

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச்செலவு
சாலைகள் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் } 343

பக்கங்கள்

ஜ—தொடர்ச்சி.

ஜெயவேலு, திரு. ஏம்.ஏ.:—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

நிலவரித்துறை மாவட்ட நிர்வாகம். .. 501—504

மருத்துவம் மக்கள் நல்வாழ்வு .. 1100—1103

ஜேம்ஸ், திரு. ஜே.—

அவையில் அமைச்சர் மீதோ அதிகாரிகள் மீதோ உறுப்பினர்கள் மீதோ ஆதாரம் காட்டிய பின்னரே குற்றச்சாட்டு செய்ய வேண்டுமென்கிற பேரவைத் தலைவரின் தீர்ப்பு.. 253

பத்திரிகை நிருபர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உறுப்பினர்கள் அமர்தல் (ஒ.பி.) .. 47

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. 632, 675—683, 858, 866

எழுதுபொருள் அச்சுத் துறை.
பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன். பின்தங்கிய வகுப்பினர் நலன் } 116—119, 132

மருத்துவம் மக்கள் நல்வாழ்வு 1114

சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து
சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச்செலவு
சாலைகள் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் } 343

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1978 மார்ச், 18

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா 4—மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகிறது.

வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் பஞ்சாயத்துக்களைப் பிரித்தமைத்தல்.

(குறுகியகால வினா 5.) திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —.

(அ) வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள பஞ்சாயத்து ஒன்றியங்களில் எத்தனை பஞ்சாயத்துக்கள் பிரிப்பதற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சிமன்றங்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்று எந்த எந்தப் பஞ்சாயத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளன?

(ஆ) தேர்தலுக்குள் இப்பணிகள் அனைத்தும் முடிவு பெறுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) மற்றும் (ஆ) வடாற்காடு மாவட்டத்தில் 33 ஊராட்சிகளும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 19 ஊராட்சிகளையும் பிரித்து ஆணை பிறப்பிக்கப்பெற்றுள்ளது. அவ்வாறு பிரிக்கப்பட்ட ஊராட்சிகள் அனைத்தும் அடுத்து வரும் ஊராட்சித் தேர்தல் நாள் முதல் நடைமுறைக்கு வரும். இப்பொருள் பற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில்தான் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. பிரிக்கப்பட வேண்டியவை யாவும் பிரிக்கப்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக ப்ரபோசல் வரவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்த ப்ரபோசல் வரப்பெற்றிருக்கிறது. சில

திருத்தங்கள் தேவைப்படும் என்று சுட்டிக்காட்டி அப்பீல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது அரசாங்கத்திலே. அப்படி அப்பீல் தாக்கல் செய்யப்பட்டவைகளில் சிறு திருத்தம் செய்ய அரசாங்கம் ஏற்ற பரிகாரம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே ஒரு நாள் குறிப்பிடுவதே, அதற்குள் அதையெல்லாம் முடித்து விடவேண்டுமென்பதற்காகத்தான். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது பற்றி, உரிய வகையிலே அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி.கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, தேர்தல் நெருங்க நெருங்க பல பஞ்சாயத்துக்கள் இரண்டாகப் பிரிக்கக்கூடிய அளவுக்கு தீர்மானங்கள் போட்டு அனுப்பகூடும். சென்ற வாரத்திலேகூட சில பஞ்சாயத்துக்கள் போட்டு அனுப்பி இருக்கின்றன. எனவே ஏப்ரல் இறுதிக்குள் வரக்கூடிய தீர்மானங்களை எல்லாம் பரிசீலனை செய்து, இரண்டாகப் பிரிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இவ்வாறு பிரிப்பதற்கு போதிய காலம் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்தக் காலத்தை நீட்டித்துக் கொடுப்பது அவசியமற்றது என்று அரசு கருதுகிறது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, பிப்ரவரி 28-ம் தேதி கடைசி நாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குபின் வந்த மனுக்களை எல்லாம் மறுபரிசீலனை செய்து பிரிப்பதற்கு அரசு ஆலோசனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதற்குள் வந்த மனுக்கள் எல்லாம் இறுதி முடிவெடுத்து அனுப்பப்பட்டு விட்டன. இனிமேலும் காலத்தை நீட்டி அவகாசம் கொடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இல்லை.

உல்லாசப் பயணிகளுக்கு ஓய்வு விடுதிகள்.

*வினா—. 605 திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) உல்லாசப் பயணிகள் தங்குவதற்கும், உணவு அருந்தவும் வசதிகள் கொண்ட ஓய்வு விடுதிகளை தமிழ்நாட்டில் முக்கிய நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் அமைக்க அரசு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) தற்போது இராணிப்பேட்டை, உளுந்தூர்பேட்டை ஆகிய இடங்களில் சாலை ஓர ஓய்வு விடுதிகள் (Motels) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தால் கட்டப்பட்டு வருகிறது. மற்றொன்று ஓசூரில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாளைக்கு முன்னால், இந்த நெடுஞ்சாலைகளில் ரோட் சைடு பார்க்கு ஒன்றை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அது எந்தவகையிலும் பயன் தருவதாக இல்லை. அந்த இடங்களில் எல்லாம் அரசாங்கம் விடுதிகளைக் கட்டினால் சாலைகளில் போகின்ற பயணிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். இதை அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற சாலை ஓரங்களில் தங்கும் விடுதிகள் அமைக்கும் திட்டம்தான் பரிசீலனையில் இருக்கிறது. ஒவ்வொரு 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒன்று வீதம் கட்ட வேண்டும் என்பது திட்டம். சாலை ஓர பூங்காக்களை நீக்குவது அல்லது மாற்றுவது என்பது பொதுப்பணித் துறையைச் சார்ந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற சுற்றுலா விடுதிகள் சாலை ஓரங்களில் கட்டப்படுகின்றனவே அவைகள் எந்த அடிப்படியில் கட்டப்படுகின்றன? ஏதாவது ரூல்ஸ் வகுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இதற்கு அடிப்படை என்று தனியாக விதிகள் கிடையாது. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் இந்த விடுதிகள் கட்டப்படுகின்றன. நீண்ட தூர பயணத்திலே ஈடுபடுகின்ற பயணிகள், சுற்றுலாவிற்கு வருகிற பயணிகள் அவர்கள் சாலைகளில் வாகனங்களில் பயணம் செய்கிறபோது, ஆங்காங்கே தங்கி ஓய்வெடுத்துக் கொள்வதற்கும், உணவு வகைகளைப் பெறுவதற்கும் வசதியாக இருப்பதற்கு இந்தச் சாலை ஓர பயணிகள் விடுதி கட்டப்படுகின்றது. இதைத்தவிர வேறு எந்தவிதமான அடிப்படைக் கொள்கை அல்லது திட்டங்கள் இதற்கில்லை.

திரு. கு. ரமணி : தலைவர்வர்களே, கோவை மாவட்டத்தில் அமராவதி நகர், ஆளியாறு நகர், பவானிசாகர் போன்ற அருமையான இடங்கள் அணைக்கட்டுப் பகுதிகளில் இருக்கின்றன. அங்கெல்லாம் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். ஆனால் அவர்கள் சாலையோரங்களில் தங்குவதற்கு வசதி இல்லை. அப்படிப்பட்ட முக்கியமான இடங்களில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கும், உணவு விடுதிகளை அமைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u>: தலைவரவர்களே, நமமுடைய மாநிலத்திலே இருக்கிற பல்வேறு அணைக்கட்டுகள், மற்றும் சுற்றுலாப் பயணிகள் வந்து பார்வையிடும் இடங்கள் அனைத்திலும் இது போன்ற தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் இவைகளை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் அரசின் சுற்றுலாத் துறையின் திட்டம். அதற்கான ஆரம்பத் திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் சுற்றுலாத்துறை கேட்டுள்ளது.

<u>திரு. கே. பண்ணை சேதுராம்</u>: தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் இது போன்ற ஓய்வு விடுதிகளில் தங்க ஒரு வாரத்திற்கு முன்னால் ரிசர்வ் செய்திருந்தாலும் பெரிய அதிகாரிகள் அந்தச் சமயத்தில் வருவதாக இருந்தால் உடனே அதை ரத்து செய்து, அதிகாரிகளுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். அதைத் தவிர்த்து, மக்கள் பிரதிநிதிகளுக்கு முதலிடம் கொடுத்து, ரிசர்வ் செய்திருந்தால் அவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்ய அரசிடம் ஆலோசனை இருக்கிறதா ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u>: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது அரசுக்குச் சொந்தமான அல்லது பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஓய்வு விடுதிகள் என்று கருதுகிறேன். சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓய்வு விடுதிகளுக்கு அப்படிப்பட்ட விதிகள் எதுவும் கிடையாது. அவை வியாபார நோக்கத்தோடு நடத்தப்படுகின்றன. யார் பணம் கட்டி முன்னால் ரிசர்வ் செய்கிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அங்கே அதிகாரிகள் என்றோ அல்லது வேறு தனிப்பட்டவர்கள் என்றோ பாகுபாடு செய்யும் விதிகள் எதுவும் கிடையாது.

மற்றொன்று, இதுபோன்ற சுற்றுலாப் பயணிகள் விடுதிகளில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் குறைந்த கட்டணத்திலோ அல்லது கட்டணம் இல்லாமலோ உறுப்பினர்கள் தங்குவதற்கு வசதி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் அரசு ஆங்காங்கே பல்வேறு விடுதிகளைக் கட்டித் தந்திருக்கிறது.

நான் முன்னாலே சொன்ன மாதிரி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் விடுதிகள் வியாபார நோக்கத்தோடு நடத்தப்படுகின்றவை. அரசிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் கடன் பெற்று அந்த விடுதிகள் நடத்தப்படுகின்றன. ஆகவே அவர்கள் கடனைத் திருப்பித்தர வேண்டும் ; நஷ்டம் இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும்.

<u>திரு. எம். ஆறுமுகம்</u>: தலைவரவர்களே, நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பே தமிழகத்திலுள்ள மிகப் பெரிய அணைக்கட்டு மேட்டூர் அணை. அப்படிப்பட்ட இடத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு எந்தவிதமான வசதியும் இல்லை. ஆகவே, மேட்டூரில் ஒரு முதல்தரமான சுற்றுலா விடுதி அமைக்கப்படுமா ? அதில் ஏழை எளிய மக்களும் தங்கி, மகிழ்வடையும் வகையில் குறைந்த கட்டணம் வசூல் செய்யப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u>: தலைவரவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விடுதிகளைக் கட்டுவதற்கு பல்வேறு இடங்களைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் மேட்டூர் அணைப் பகுதியையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள முடியுமா என்று அக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

தேசியத் தலைவர்கள் பிறந்தநாள் விழாக்கள்.

*வினா 606. <u>திரு. என். கிட்டப்பா</u>: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் தேசியத் தலைவர்களின் பிறந்தநாள் விழாவினை அரசு விழாவாகக் கொண்டாடிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தத் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாட உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u>: (அ) ஆம்.

(ஆ) தேசத் தந்தை காந்தியடிகள், அறிஞர் அண்ணா, முன்னாள் இந்திய பிரதமர் நேரு, முன்னாள் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் மூதறிஞர் இராஜாஜி முதலிய தேசத் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களை அரசு கொண்டாடியுள்ளது. மேலும் முத்துராமலிங்கத் தேவர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் முதலிய தேசத் தலைவர்களின் நினைவுநாள் விழாவும் கொண்டாடப்பட்டன. திருவள்ளுவர் திருநாள் ஜனவரி 15-ம் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா ஏப்ரல் மாதமும், பெருந்தலைவர் காமராஜ் பிறந்தநாள் விழா ஜூலை மாதமும், தந்தை பெரியார் ஈ.வெ.ரா. பிறந்தநாள் விழா செப்டம்பர் மாதமும், நேதாஜி பிறந்தநாள் விழா ஜனவரி மாதமும் கொண்டாட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>திரு. மி. வின்சென்ட்</u>: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே தலைசிறந்த சதாவதானியும், தலைவருமான திரு. வி. க. அவர்களை ஆசிரியராக ஏற்றுக் கொண்ட குமரி பாவலர்—செயிகுதம்பி பாவலர் அவர்கள் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

[1978 மார்ச் 18

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தேசியத் தலைவர் என்ற முறையில் நாடு முழுவதும் பாராட்டுகின்ற தலைவர்களின் பிறந்த நாளை அரசு கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட பல்வேறு சிறப்புமிக்க தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட எல்லாத் தலைவர்களின் பிறந்த நாளையும் அரசு கொண்டாடுவது என்று ஆரம்பித்தால் அதற்கு நாள் போதாது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனையின்படி இப்படிப்பட்ட தலைவர்களின் பிறந்த நாளை நாட்டுக்கு உழைத்த தலைவர்கள் விழாவாக அந்தந்த மாவட்டத்தில் கொண்டாட இயலுமா என்பது பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9-10].

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை ஒரு நாள் மட்டும் விழாவாகக் கொண்டாடுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர் பிறந்த நாளை ஒரு வாரம் முழுவதும் பகுத்தறிவு வாரமாகக் கொண்டாடும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் முன்னாலே சொன்னதைப்போல் விழாக்களைக் கொண்டாட ஆரம்பித்தால் ஆண்டு முழுவதும் கொண்டாடிக் கொண்டு இருக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அவ்வளவு மிகச் சிறந்த, தலைவர்களை இந்த மாநிலம் பெற்று இருக்கிறது. என்றாலும் நான் பெரியார் அவர்களுடைய பிறந்த நாள் விழா கொண்டாடப்படும் என்று தெரிவித்தேன். எத்தனை நாள் என்று குறிப்பிடவில்லை. என்றாலும் ஆண்டுதோறும் ஒரு நாள் கொண்டாடுகிறோம். ஆனால் இந்த ஆண்டு வருகிற பெரியார் அவர்களின் பிறந்த நாள் விழா 100-வது பிறந்த நாள் விழாவாக வருவதால், தமிழகத்தைத் தட்டி எழுப்பிய அந்தத் தன்மான இயக்கத் தலைவனுக்கு இந்த அரசு மிகச் சிறந்த முறையில் 100-வது பிறந்த நாள் விழா இதுவரை தமிழகம் கண்டிராத அளவிற்கு, என்றென்றும் நினைவில் நிற்கிற அளவிற்கு கொண்டாட காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சியில் கல்லூரிக் குழு.

*வினா— 607. திரு. துரை முத்துசாமி,
திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ஒரு கலைக் கல்லூரி அமைக்க கமிட்டி ஏற்படுத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1978 மார்ச் 18]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) மற்றும் (ஆ) கமிட்டி அமைக்க முடிவு செய்யப்பட்டது ஆனால் அது செயல்படவில்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு முக்கியமான வியாபார ஸ்தலம். கல்ராயன் பகுதியில் வசிக்கும் மக்களும் அங்கே வருகிறார்கள். அங்கே தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மிகவும் முக்கியமான பகுதியாக இருப்பதால், அந்தக் கமிட்டி எடுத்த முயற்சி நிறுத்தப்பட்டு இருந்தாலும், இனிமேலாவது அங்கே கல்லூரி துவங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்த மாவட்டத்திலே இருப்பவர்கள் அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

பள்ளி வளர்ச்சி நிதி.

*வினா 608. திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வளர்ச்சி நிதியென பல்வேறு தனியார் கல்வி நிறுவனங்களில் பணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) சென்னை நகரில், எல்லாப் பள்ளிகளிலும் கடந்த மூன்று வருடங்களாக T.V. வாங்க வேண்டும் என்பதற்காக மாணவர்களிடம் பணம் வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) சென்னை, வண்ணாரப்பேட்டை P.A.K. பழனிச்சாமி உயர்நிலைப் பள்ளியில் T.V. வாங்கப் பணம் கொடுக்காத மாணவர்களுக்கு T.C. கொடுக்கப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) பள்ளி வளர்ச்சிக்கென தனிக் கட்டணம் வசூலிக்க அரசு ஆணையேதும் பிறப்பிக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் ஆண்டிற்கு ரூ. 5 வீதம் வசதிக் கட்டணம் (Amenity fees) வசூலிக்க அரசு உத்தரவு உள்ளது.

(ஆ) தொலைக்காட்சி சாதனம் வாங்கி நிறுவிடவும் மற்றும் அதைப் பராமரிக்கவும் ஆண்டொன்றுக்கு ரூ. 2 வீதம் மாணவர்களிடமிருந்து வசூலிக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

(இ) இல்லை.

[1978 மார்ச் 18

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு உத்தரவிடவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அரசாங்கப் பள்ளிகள் உள்பட எல்லாப் பள்ளிகளிலும் அம்மாதிரி வசூல் செய்யப்பட்டுள்ளது மட்டுமல்ல, அந்த டி.வி. வாங்குவதில் எந்தக் கம்பெனி டி.வி. வாங்குவது என்று அரசாங்கத்திலிருந்து உத்தரவு வராத காரணத்தால் அவ்வாறு வசூல் செய்யப்பட்டு இருக்கும் பணம் சில ஆண்டுகளாக உபயோகிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அவற்றைச் சரியான முறைப்படுத்தி உண்மையிலேயே அந்த டெலிவிஷன் அந்தப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் செய்ய அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே அப்படி வசூல் செய்ய அரசு ஆணையிடவில்லை என்று நான் சொல்லவில்லை. டி.வி. வாங்குவதற்காக, அதைப் பராமரிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 வாங்கலாம் என்று அனுமதி அளித்து இருக்கிறது என்று தான் சொல்லி இருக்கிறேன். எந்த செட் வாங்குவது என்பது தற்போது முறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதற்கான உத்தரவு சம்பந்தப்பட்டவர்களுக்கு தற்போது போய்ச் சேர்ந்து இருக்கும். அவர்களும் வாங்கியிருப்பார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, பள்ளிச் சீரமைப்புப் பணி என்ற பெயரில் தனியார் பள்ளிகளில் பள்ளி மாணவர்களிடமிருந்து நிதி வசூல் செய்வது தமிழகம் முழுவதும் நடக்கிறபோது, ஒரு குறிப்பிட்ட பள்ளியில் நடக்கிறது என்று சொல்வதற்கும் உள் நோக்கம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவரவர்களே, சில தனியார் பள்ளிகள் கட்டட நிதிக்காக ஆயிரக்கணக்கான பணத்தை வசூல் செய்து வருகிறார்கள். ஆனால் அந்தப் பணம் கட்டடங்களுக்கு முறையாகச் செலவு செய்யப்படுகிறதா என்கின்ற விவரங்கள் இல்லை. ஆகவே, அதை முறைப்படுத்துவதற்கு, அங்கே எல்லாம் முறைகேடுகள் நடக்காமல் இருப்பதற்கு அரசு குழு அமைத்து ஆடிட் செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தவறுகள் நடக்காமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், உத்தரவு போடுகிறார்களோ, அல்லது போடப்படவில்லையோ, எப்படியோ, தொடர்ந்து வசூல் செய்யப்படும் அந்தப் பணத்திலிருந்து ரசீது

1978 மார்ச் 18]

கொடுக்கப்படுவதில்லை. அப்படி வசூல் செய்து செய்யக்கூடிய கட்டட அபிவிருத்தியோ அல்லது வாங்கக்கூடிய பொருள்களோ அவையெல்லாம் அந்தத் தனியார் துறை நிர்வாகத்தினர் பேரில் தானே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவற்றையெல்லாம் பொதுச்சொத்தில் கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, குறிப்பிட்ட பள்ளிகளில் இப்படி ஏதாவது நடைபெற்றிருக்குமானால் அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந்தால் அரசு அதுபற்றி விசாரிக்க உத்தரவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரபி மொழி.

*வினா 609—திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் அரசு கல்லூரிகளில் அரபி மொழி (Arabic Language) போதிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) தமிழ்நாட்டில் அரசு கல்லூரிகளில் நந்தனம் ஆண்கள் கலைக் கல்லூரியில் அரபி மொழி (Part I of P.U.C. Degree) பயிற்றுவிக்கப்படுகிறது.

(ஆ) அதன் விபரங்கள் கீழ்வருமாறு :

நந்தனம் ஆடவர் கலைக் கல்லூரியில் இவ்வாண்டு (1977–78) அரபி மொழி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை.

பி.யூசி.	4
பட்ட வகுப்பு	5
மொத்தம் ..	9

மாலைக் கல்லூரி—

புகுமுக வகுப்பு	2
பட்ட வகுப்பு	1
மொத்தம்	3

அரபி மொழி பயிற்றுவிப்பதற்காக அக்கல்லூரியில் இரு அரபி உதவிப் பேராசிரியர்கள் உள்ளனர். இவர்களில் ஒருவர் உருதும் போதிக்கத் தகுதி படைத்தவராதலால் உருதுமொழி போதிப்பதற்காகவும் அவருடைய பணி பயன்படுத்தப்படுகிறது.

[1978 மார்ச் 18

திரு. யா.சை.மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் உயர் கல்வியைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் அடிப்படைக் கல்விக்கே தகுந்த வழிவகைகள் செய்து தரப்படவில்லை. குறிப்பாக, அரபி மொழி ஒரு பழமை வாய்ந்த மொழி. அத்துடன் ஒரு சமுதாயத்தினர் தங்களுடைய வேத நூலை ஓதுவதற்குப் படிக்கின்ற ஒரு மொழியாகும். எனவே, கீழ் மட்டத்திலே ஆங்காங்கே உள்ள கிராமங்களிலே இந்த மொழியை போதிப்பவர்களுக்கு ஏதாவது உதவித் தொகை தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, உதவித் தொகை தருவதற்கான ஏற்பாடு எதுவுமில்லை. ஆனால் அப்படிப்பட்டவர்களது தொகைக்கேற்ப வசூல் செய்துகொள்வதற்கான முயற்சிகளைப் பற்றி பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் என்ஜினீயரிங் கல்லூரிக்கு அருகாமையில் அரபிக் கல்லூரி ஒன்று இஸ்லாமிய மதத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. அப்படி தனியார் துறையில் நடைபெறக்கூடிய கல்லூரிக்கு அரசு மானியம் வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசு விதிகளுக்கு உட்பட்டு அது வருமேயானால் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய விளக்கத்திலிருந்து நந்தனம் கலைக் கல்லூரியில் 20-க்கும் குறைவான மாணவர்கள்தான் அரபி மொழியைப் பயிலுகிறார்கள் என்பதும் அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு இரண்டு ஆசிரியர்கள் தான் அங்கே பணியாற்றுகிறார்கள் என்பதும் தெரிய வந்தது. இப்படி இருபது மாணவர்களுக்கு இரண்டு ஆசிரியர்கள் என்பது அதிகச் செலவாகாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இது சிறுபான்மையினரின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உறுப்பினர் கூறிய அந்த அடிப்படையிலே அணுகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புலாம்பட்டியில் பழங்காலச் சின்னங்கள்.

*வினா 610— திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், புலாம்பட்டி கிராமத்தில் பழங்காலச் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

1978 மார்ச் 18]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) புலாம்பட்டி கிராமத்திலிருந்து தொல்பொருள்கள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் போனுமாமபட்டி என்ற கிராமத்திலிருந்து பழங்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

(ஆ) விவர அறிக்கை *ஒன்று பேரவையின்முன் வைக்கப் பட்டுள்ளது.

ஆனைகுளம் ஊராட்சி.

*வினா611— திரு. யா.சை.மு. யூசுப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை மாவட்டம், வள்ளியூர் ஒன்றியத்திலுள்ள ஆனைகுளம் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதாவது அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

இதுபற்றிய கருத்து ஊரக வளர்ச்சி இயக்குநரால் பரிசீலிக்கப் பட்டு ஏற்கப்படவில்லை.

திரு. யா.சை.மு. யூசுப்: தலைவரவர்களே, இந்த ஆனைக் குளத்தினைப் பொறுத்தவரையில் ஊரக வளர்ச்சி இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது சரியான கருத்தாகும். இருந்தபோதிலும், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 ஊராட்சி மன்றங்களில் பல ஊராட்சிகள் பிரிக்கப்பட வேண்டியிருக்கிறது. மேலும் பணகுடியில் இருக்கும் 14 வார்டுகளை 15 வார்டுகளாக மாற்ற வேண்டிய உத்தரவு உள்ளது. தேர்தல் வருவதற்குள்ளாக இந்த மாற்றத்தைச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கேள்வி, ஆனைகுளம் ஊராட்சி பற்றியது. மற்ற ஊராட்சிகள் பற்றிய விவரங்களைத் தருவதற்கில்லை. இனிமேல் பிரிப்பதற்கு ஏது இல்லை.

---

*145-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1978 மார்ச் 18

காட்டுமன்னார்கோயில் ஒன்றியத்தில் சாலைப்பணிகள்.

*வினா 612—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராமச் சாலைகளை பேருந்து சாலைகளாக மேம்பாடு செய்ய காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றிய உபரி பொது நிதியிலிருந்து ரூபாய் ஐந்து லட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு ஆரம்ப வேலைகள் முடிவுற்று வேலை ஒப்படைக்கும் நிலையில் தடைப்பட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது வேலை முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) மற்றும் (ஆ) : காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் மாதர்சூடாமணி, குஞ்சிமேடு மற்றும் முட்டம் ஆகிய ஊர்கள் வழியாகச் செல்லும் திருநாரையூர்-ஓமாம்புலியூர் சாலையைப் பேருந்து சாலையாக மேம்பாடு செய்ய காட்டுமன்னார் கோயில் ஊராட்சி ஒன்றியம் தனது உபரி நிதியிலிருந்து ரூபாய் 5 லட்சம் செலவிட அனுமதி வேண்டிய கோரிக்கையினை ஏற்று விரைவில் அரசு ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. துரை கலியமூர்த்தி: இத்திட்டத்தில் குணமங்கலம்-குமாரகுடி (வழி காவாலக்குடி) என்று ஒரு சாலை குறிப்பில் இருந்தது. அதுவும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா? அடுத்து, இரண்டு ஆண்டுகளாக அது செயல்படாமல் இருந்ததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அனைத்து ஒன்றியங்களிலிருந்து இது போன்ற செயற்குறிப்பைப் பெற்று அனுப்பிவைக்குமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அதோடு சேர்ந்து இந்தச் சாலை பற்றிய விவரமும் வந்திருக்கிறது. ஊரக வளர்ச்சி இயக்குநர் அங்கீகாரத்திற்காக வேண்டி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. செ. இராமலிங்கம்: தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள காட்டுமன்னார்கோயில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் செலவில் அறிஞர் அண்ணாவின் பெயரில் ஒரு திருமண மண்டபம் கட்ட மதிப்பீடு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா? ஆமெனில், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது பேருந்துசாலை பற்றிய கேள்வி. திருமண மண்டபம் பற்றி வேறு கேள்வி போடவும்.

1978 மார்ச் 18]

நகராட்சிப் பகுதிகளில் நவீன கழிப்பிடங்கள்.

*வினா 613—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதியிலுள்ள வீடுகளில் நவீன கக்கூஸ்களை கட்டாயமாக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.

திரு. ரா. கிருஷ்ணன் : நகரங்களிலும், மாநகரங்களிலும் இப்படிப்பட்ட நவீனமுறையில் கக்கூஸ்களைக் கட்ட கட்டாயப் படுத்துவதன் மூலம் மலத்தைத் தலையில் சுமக்கிற ஒரு கொடுமையான பணியிலிருந்து அதில் ஈடுபட்டிருப்பவர்களைத் தடுக்கமுடியும். ஆகவே நவீன முறையில் கக்கூஸ்கள் அமைக்க, வீடுகளில் அப்படிப்பட்ட கக்கூஸ்கள் அமைக்க அரசு கடன் கொடுக்க முன்வருமா?

அதேபோல் குடிசைவாழ் மக்கள் உபயோகப்படுத்துகிற பொதுவான கக்கூஸ்களுக்கு தாராளமாகத் தண்ணீர் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இவ்வாறு அமைக்கப்படுகிற கழிப்பிடங்களுக்கு அதிகமான பணச் செலவு இல்லாமல் ஏறத்தாழ ரூ. 100 செலவில் அமைக்கிற வகையில் பூந்தமல்லி ஆராய்ச்சிக் கூடம் ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறது. அதைத்தான் செயல்படுத்த வேண்டும் என்று அரசாங்கமும் கருதுகிறது. ஆகவே, இதற்கு அரசு கடன் கொடுக்கிற உத்தேசமில்லை.

குடிசைவாழ் மக்கள் நிலைப்பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி அரசாங்கம் தனியாகப் பரிசீலிக்கும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் இவற்றிற்குப் போதுமான நிதி வசதி இல்லாததன் காரணமாக சுகாதாரச் சீர்கேடுகள் அதிகமாக ஏற்படுகிறது. மில்கள் எல்லாம் சில நேரங்களில் மூடப்படுகிறபோது, ஸிக் மில்ஸ் என்று டிக்ளேர் செய்து அரசு எடுத்து நடத்துவதுபோல் குறிப்பிட்ட பஞ்சாயத்துக்களை அரசு எடுத்து சுகாதார இலாக்கா மூலம் பப்ளிக் கன்வீனியன்ஸ் ஏற்படுத்திக் கொடுத்து அவற்றின் சுகாதார நிலையைச் சீர்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அது பற்றி சுகாதார இலாக்காதான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. சி. கோவிந்தராசன் : இப்படிப்பட்ட நவீன கக்கூஸ்கள் கட்டுவதற்காக என்று பல முனிசிபல் நகரங்களில் குறிப்பாக திருச்சியில் ரோடுகள் எல்லாம் வெட்டி பல ஆண்டுகளாக ஆகியும் அது செய்யப்படாத காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. குழந்தைகள் பள்ளிக்குப் போக முடியவில்லை. ஆகவே, அந்த இடங்களில்—வெட்டப்பட்டு செய்யப்பட வேண்டுமென்று முடி வெடுத்த இடங்களில்—துரிதமாகச் செய்து முடிக்கப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அரசு செய்யும்.

திரு. எஸ். ஆர். இராதா : நகராட்சிப் பகுதிகளில் புதை சாக்கடைத் திட்டம் உள்ள பகுதிகளில்கூட பலயிடங்களில் கக்கூஸ்களுக்கு இணைப்புத் தருவதில்லை. எனவே, அவற்றிற்கு உடனடியாக இணைப்புத்தர ஏற்பாடு செய்வதோடு நகராட்சிகளைப் பொறுத்தவரையில் இந்த நவீன கக்கூஸ்களை அமைப்பதற்கு நக ராட்சிகளுக்கு நிதி உதவி செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உறுப்பினர் திரு. இராதா அவர்கள் கும்பகோணம் நகராட்சியை வைத்துக் கொண்டு எல்லா நகராட்சிகளையும் சொல்கிறார் என்று கருதுகிறேன். குறிப் பிட்டுச் சொன்னால் அது பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு திட்டம் தயாரிக்கலாம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, குறைந்த செலவில் நவீன கக்கூஸ் கட்டப்பட்டு ஒரு சில மாவட்டங்களில் சில பகுதிகளில் மட்டும் பயன்பட்டு வருகிறது. இதை மாநில அளவில் முழுமையாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதுபற்றி நகராட்சி ஆய்வாளர் அவர்களின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அது கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. சிகாமணி : சென்னையில் சில இடங்களில் பொது கழிவிடங்கள் மிகவும் சீர்கேடாக இருக்கின்றன. இந்த இடங்களை மாற்றி, அந்த இடங்களில் சமூகக் கூடங்களோ அல்லது நகராட்சி ஆஸ்பத்திரிகளோ கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது மாநகராட்சி மேற் கொள்ள வேண்டிய வேலை. இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர் களே, சிங்காநல்லூர் நகராட்சியில் பொதுவாக இருக்கக் கூடிய கக்கூஸ்கள் எல்லாம் மிகவும் சீரழிந்து இருக்கின்றன. இவை களை எல்லாம் மராமத்து செய்து நல்ல கக்கூஸ்களாக அமைப் பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் அதற்குரிய விவரங்களைத் தெரிவிக்கலாம்.

திரு. இ. தமிழரசன் : நகராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட நவீன கக்கூஸ்களை அமைக்க முடியாவிட்டாலும், எல்லா நகராட்சி பகுதிகளிலும் இருக்கின்ற பேருந்து நிலையங்களில் இருக்கின்ற கக்கூஸ்களையாவது நவீன முறையில் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஒவ்வொன்றாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, விஞ்ஞானம் பரவி வருகின்ற இந்த நாளில் மனிதனின் மலத்தை மனிதனே சுமக்கக்கூடிய நிலை இன்னும் நகராட்சிகளில் இருந்து வருகிறது. இந்த நிலையைப் போக்க புதிதாக நகராட்சிப் பகுதிகளில் கட்டிடங் கள் கட்டுவதற்கு வரைபடங்கள் அனுமதிக்காக வரும்போது, கட்டாயமாக நவீன முறையில் கக்கூஸ்கள் கட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையை இதில் சேர்க்க முடியுமா? அதே நேரத்தில் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதற்கேற்ற முறையில் நகராட்சிச் சட்டங்களைத் திருத்தம் செய்ய முடியுமா என்று அரசு முயற்சி செய்து வருகிறது. பாதாளச் சாக்கடைத் திட்டம் என் பதை, சேலத்தை நினைவில் வைத்துக் கொண்டு கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்குத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

Warren Road in Madras

*Q. No. 614— Thiru. S. M. VASAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether land assigned for the construction of a road by the Madras Corporation has been appropriated by private parties at Warren Road, Mylapore, Madras;

(b) the steps taken to recover the land; and

(c) the steps taken to lay the road ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) வாரன்சாலை ஏற்கெனவே இருந்து வருகிறது. அதி லிருந்து மேற்கு திசையில் செல்லும் வேறு ஒரு சாலை அமைக்கும் பொறுப்பு சாலையையொட்டியுள்ள நில சொந்தக்காரர்களைச் சேர்ந்தது.

குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம்

*வினா 615—திரு. ஈஸ்வரமூர்த்தி, பி. என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) குடிநீர் வழங்கு வடிகால் வாரியத்தின் தலைமையக அலுவலகம் இடம் மாற்றியதால் வாடகை அதிகமாகக் கொடுக்கப் படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், முன்பு கொடுத்த வாடகைக்கும் தற்பொழுது கொடுக்கப்பட்டு வரும் வாடகைக்கும் எவ்வளவு வித்தியாசம்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—

(அ) ஆம்.

(ஆ) மாதம் ஒன்றுக்கு அதிகப்படியாகக் கொடுக்கப் படும் வாடகை ரூ. 30,621.75.

திரு. ஈஸ்வரமூர்த்தி. பி. என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்த வாடகை யிலிருந்து இவ்வளவு அதிகப்படியாக வாடகை கொடுத்து இதில் குடியேற வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? இதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலும் இருந்து வந்த அலுவலகங் களை 16—2—1977ஆம் நாளன்று, ஒரே இடத்திற்குக் கொண்டு வந்ததின் மூலமாக, வாரிய தலைமை அலுவலகம், தலைமைப் பொறியாளர் அலுவலகம், இருப்பு தணிக்கை கோட்ட செயல் பொறியாளர் அலுவலகம் இவையெல்லாம் ஒரே இடத்தில் வந் ததின் காரணமாக அதிகமாக வாடகை கொடுத்தாலும், மீதம் அதிகமாயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இந்த அலுவலகமானது எந்த இடத்தில் இருக்கிறது? இதற்கு முன்பு இருந்தபோது எவ்வளவு வாடகை கொடுக்கப்பட்டு வந்தது? இப்போது அதிகமாக வாடகை கொடுக்க வேண்டிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அலுவலகம் சென்னை அண்ணாசாலையில், 160 எண் உள்ள கட்டிடத்தில் இருக்கிறது. பச்சையப்பா அறக் கட்டளைக்குச் சொந்தமான இக் கட்டிடத்தின் 5, 6 மாடிகளில் அலுவலகம் இயங்கி வரு கிறது.

திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய அரசாங்கத்தில் இப்படிப்பட்ட கட்டடங்கள் வாடகை கட்டடங்களில் இருந்தால், அதை மாற்றி அரசுக்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டி அவற்றைக் கொண்டு வருவது என்று திட்டமிடப்பட்டிருந்தது. அந்த முறையில் சீக்கிரமாக இதற்கும் சொந்தமாகக் கட்டடம் கட்டி இப்போது வாடகைக் கட்டடத்தில் நடைபெற்று வருகின்ற இதையும் மாற்றுவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தக் கட்டத் டத்தை மாற்றியதன் காரணமாக லாபம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல், அரசாங்க அலுவல்கள் தனியாருக்குச் சொந்தமான வீடுகளில் எவ்வளவு நடைபெறுகின்றன என்கின்ற புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. எங்கெங்கெல்லாம் வாடகை கட்டடத்தில் அதாவது தனியாருக்குச் சொந்தமான இடங்களில் அரசு அலுவலகம் நடைபெற்று வருகிறதோ அவைகளை மாற்ற வேண்டும் என்ற யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆனால் அது நீண்டநாள் திட்டம் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

திருப்பூரில் குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா 616—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்க இரண்டாம் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து நகராட்சி மன்றம் அரசைக் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம். பூர்வாங்க மதிப்பீட்டில் செலவிடப்பட்ட தொகை போக மீதத் தொகையைக் கொண்டு இப்போதுள்ள திட்டத்தை மேம்பாடு செய்து தர வேண்டுமென்று நகராட்சி மன்றம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைக் கேட்டுக் கொண்டது.

(ஆ) தலைமை நிலையத்திலும் மற்றும் நீரேற்றுக் குழாயின் வழியில் அமைந்துள்ள நீருந்து நிலையங்களிலும் அதிக சக்தியுள்ள விசையேற்றங்கள் பொருத்தப்படும். சரிவு நீரேற்றக் குழாயிலும், மற்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு நீரேற்றும் இடமான தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டி இருக்கும் இடத்திலும், நீருந்து நிலையங்கள் அமைக்கப்படும். ரூ. 19.61 இலட்சம் மதிப்பீட்டில் மேற்சொன்ன மேம்பாடுகளுக்கான திட்டம் வகுக்கப்பட்டு அதற்குத் தொழில் நுட்ப ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது. திட்ட வேலைகள் துவங்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-30]

திரு ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் குடி தண்ணீர் பற்றுக்குறை அதிகமாக இருக்கிறது. எனவே இத் திட்டத்தை அரசு எப்போது நிறைவேற்றும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, திட்ட வேலை துவங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அந்தத் தகவல் மட்டும்தான் இருக்கிறது.

திரு கு. ரமணி: தலைவர் அவர்களே, திருப்பூர் ஏராளமான ஜனத்தொகையைக் கொண்ட நகரமாக வளர்ந்து வரக்கூடிய நகரம் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்குமென்று நம்புகிறேன். இப்போது துவங்கப்பட்டிருக்கும் இந்த உப திட்டத்தின்படி எத்தனை லட்சம் ஜனங்களுக்குத் தண்ணீர் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றும், தலைக்கு எவ்வளவு காலன் தண்ணீர் கிடைக்கும் என்றும் ஏதாவது கணக்கு உண்டா? அப்படிக் கணக்கு இருக்குமானால் அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட தகவலாக இருக்கிறது. படிப்பதற்கு நேரம் அதிகமாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எழுத்து மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த உப தண்ணீர் திட்டத்தைப் பற்றி, 19 லட்சத்திற்கு மேற்பட்ட இந்த

இடைக்காலத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவிநாசி வழியாக திருப்பூர் நகரத்திற்குத் தண்ணீர் வந்து கொண்டிருக்கும் செகண்டு லைன் ஸ்கீம் என்ற இன்னொரு பெரிய திட்டத்தை உருவாக்கக்கூடிய செயற் குறிப்புகள் நம்முடைய அரசிடத்தில் ஏதாவது இருக்கிறதா? அதை உடனடியாக அமலாக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு நகராட்சியால் அனுப்பப்பெற்று, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இங்குள்ள தகவல்படி அப்படி ஒன்றுமில்லை. திரு. ரமணி அவர்களுக்குச் சொன்னதுபோல், இப்போதுள்ள திட்டத்தின் முக்கியமான தகவல்கள் உங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

திரு. சொ. ந. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் குடிநீர் திட்டத்தின்கீழ் வழியோர கிராமங்களுக்குத் தண்ணீர் விநியோகிக்கின்ற முறைகளைச் செய்து தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

நெல்லிக்குப்பத்தில் குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா 617— திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் நகராட்சியில், பெண்ணையாற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதாவது அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

இல்லை. எனினும், நகரிலேயே ஆழ்நுளைக் கிணறுகள் அமைத்து அவற்றிலிருந்து நகருக்குக் குடிநீர் வினியோகம் செய்யத் திட்டம் ஒன்று செயலில் உள்ளது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் 'பைலேரியா' பகுதி என்று ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கே கிடைக்கக்கூடிய தண்ணீரும் உவர்ப்பாக இருக்கின்ற காரணத்தால், பெண்ணை ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கொண்டு வந்தால், அது சுகாதாரத்திற்கும் உகந்ததாக இருக்கும். எனவே, இங்கே கிடைக்கக் கூடிய தண்ணீரும் அப்படிப்பட்ட நல்ல தண்ணீராக

இல்லாத காரணத்தால், அருகிலுள்ள பெண்ணை ஆற்றிலிருந்து நீர் கொண்டு வருவதற்கான திட்டத்தை அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி உத்தேசம் இல்லை. இப்போது இருக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்.

*வினா 618— திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த பட்சக் கூலி எல்லாக் கிராமங்களிலும் வழங்கப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச கூலி எல்லாக் கிராமங்களிலும் வழங்கச் செய்ய என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து இது போன்ற அறிக்கை எதுவும் வரவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தே. ஞானசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, சட்டப்படி அமுலாக்காமல் இருப்பவர்கள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அதற்கென்று பல்வேறு பகுதிகளில் தாசில்தார்கள், வ ,வாய்த் துறை இன்ஸ்பெக்டர்கள். . .நான் எல்லாவற்றையும் வேண்டுமானாலும் படித்து விடுகிறேன், சற்று அதிக நேரமாகும். குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிப்பதற்கென்று தாசில்தார்கள், வருவாய்த்துறை இன்ஸ்பெக்டர்கள், கடை நிலை ஊழியர்கள், இப்பேர்பட்டவர்கள் நிர்ணயிக்கப்பட்டு, அவர்கள் அந்த வேலையைக் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் அது எங்கெங்கே எவ்வளவு என்பதெல்லாம் நீண்ட அறிக்கையாகும். இருக்கின்றார்கள். மூன்று பேர் இதற்காக இருக்கின்றார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுது விவசாயக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டது? அதிலே, கூலிக்குச் செல்பவர்கள் ஒரு நாளைக்கு இத்தனை மணி

நேரம் வேலை செய்ய வேண்டுமென்று ஏதாவது நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறதா ? பல்வேறு விவசாய வேலைகள் இருக்கின்றன. ஒரு விவசாய வேலைக்கு எத்தனை ஆட்கள் என்று ஏதாவது வரையறுக்கப் பட்டிருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, வேலையின் தன்மை, வேலை நேரம், கூலி என்பவற்றை நிர்ணயித்து, 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 ஆம் தேதி வெளியிட்ட கெசட்டிலேயே அது வெளியாகியிருக்கிறது. அது நீண்ட பட்டியல். கெசட் விலைக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவரவர்களே, இது முக்கியமான ஒரு சட்டம். மாநிலம் பூராவிலும் இதை அமுல் படுத்துவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு நியாயமான கூலி கிடைக்கவில்லை யென்று அவர்களிடத்திலே புகார் தந்தால்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதற்குப் பதிலாக, அரசாங்கமே இது ஒரு சமூக நலத் திட்டம் என்ற வகையில் அரசாங்க இயந்திரத்தை, போலீஸ், ரெவின்யூ ஆகிய அனைத்தையும் முடுக்கிவிட்டு, மாநிலம் பூராவும் குறைந்த பட்சக் கூலி கொடுக்க அரசு ஆவன செய்யுமா ? இந்த மாதிரி குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தை அமுல் படுத்துகின்ற நேரத்தில், மிராசுதார்கள் அதைத் தடுப்பதற்கு வெளியிலிருந்து ஆட்களைக் கொண்டு வருவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ரெவின்யூ, போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது குறைந்த பட்ச ஊதிய வீதங்களைச் செயல் படுத்தும் பணி வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்கென்று இருக்கின்ற அதிகாரிகளிடம் புகார் செய்தால், Minimum Wages Act 1948 -ஐ அமுல் படுத்த ஏற்பாடு செய்கிறார்கள். உங்களுக்கு எங்கெங்கே இப்படித் தகவல் வருகிறதோ, அதை எனக்குத் தெரிவித்தால், தவறுகளை நிவர்த்தி செய்ய முடியும். உதாரணமாக, தொண்டாமுத்தூர் என்று நினைக்கிறேன். அங்கே நான் சென்ற பொழுது, 17 பெண்கள் விவசாயக் கூலிகளாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் எவ்வளவு கூலி என்று கேட்டேன். அவர்கள் ஆளுக்கு ரூ. 2 என்று சொன்னார்கள். நானே, ஆளுக்கு ரூ. 1, 'எக்ஸ்ட்ரா' கொடுத்து, இன்றைக்கு உங்களுக்கு ஆளுக்கு ரூ. 3 என்று சொல்லிவிட்டு, 'ஒயர்லஸ்' மூலமாக தாசில்தாரை வரவழைத்து, அந்த நிலச்சுவாந்தார்களிடம் பேசி மறு நாளிலிருந்து ரூ. 3 கிடைக்கிறது. அவர்களுக்கு. அதே போல், மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களுடன் குடியாத்தம் தொகுதிக்குச் சென்ற பொழுது, ரூ. 7 கொடுத்திருக்கிறேன், 7 பெண்களுக்கு, அவர்களுக்கும் ரூ. 3 கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 18

திரு. பி. ராமதாஸ் : தலைவரவர்களே, இந்தக் கூலி ஆட்களுக்கு கிராமப் புறங்களில், வேலை நேரத்தை அமுல் படுத்த அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விவசாயத் தொழிலாளிகளுக்கு வேலை நேரம், பணி, வேலையின் தன்மை, கூலி, என்பவை யெல்லாம் 1976 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2-ஆம் நாளன்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். அதே தேதியுள்ள கெசட்டிலே, இன்ன கூலி, 'பிளக்கிங்', அதாவது நாற்று எடுப்பு, நடவு, உழவு மாடோடு போனால் எப்படி, மாடில்லை யென்றால் எப்படி, என்பதெல்லாம் நிர்ணயிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூலிப் பிரச்னை வரும்போது வருவாய்த் துறையை அணுக வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். கிராமங்களிலே, ஏழைத் தொழிலாளர்கள் வருவாய்த் துறையைத் தெரிந்தவர்கள் இந்த நாட்டிலே எத்தனை பேர்? அதை மனதிலே கொண்டு, தாலூகா அளவிலே அந்தக் கூலிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சுருக்கமாகச் சொன்னேன். நீண்ட நேரம் ஆகும் என்பதால் முழுவதையும் படிக்கவில்லை. பேரவைத் தலைவரவர்கள் அனுமதி அளித்தால் முழுவதையும் படிக்கிறேன். இக்காரியத்திற்காக வருவாய்த் துறை வாரியம், துறைத் தலைமையாக ஆக்கப்பட்டிருக்கிறது. குறைந்த பட்ச ஊதிய வீதங்கள் சட்டத்தின் விதித் துறைகளைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக கூடுதலாக 6 தாசில்தார்கள், 60 வருவாய்த்துறை இன்ஸ்பெக்டர்கள், 66 கடைநிலை ஊழியர்கள் ஆகியோரை நியமிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்தின் பணிச் சுமைக்கு ஏற்ப மாவட்டம் ஒன்றுக்கு 2 முதல் 8 வரை வருவாய்த்துறை இன்ஸ்பெக்டர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

திரு. து. ராமசாமி : விவசாயத் தொழிலாளர்களுக்கு, மற்ற தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள் கொடுப்பதைப் போன்று, வசதிகள் கொடுக்க அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இப்போதைக்கு இல்லை.

1978 மார்ச் 18]

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, இந்த விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி தரப்படுவதில்லை என்று பல்வேறு இடங்களிலே புகார்கள் இருக்கின்றன. குறிப்பாக, மேலைத் தஞ்சை மாவட்டத்திலே பெரிய பண்ணை வைத்திருக்கிற பண்ணைக்காரர்கள் இந்தக் குறைந்தபட்சக் கூலியைத் தருவதில்லை. எனவே, அரசு நேரடியாக இதற்கு நடவடிக்கை எடுத்து, அந்தக் கூலி கிடைக்கச் செய்வதோடு, அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள், பல இடங்களில் பெண் தொழிலாளர்களுக்குக் கூலி கொடுத்திருக்கிறேன் என்று. அதேபோல், தஞ்சை மாவட்டத்திற்கும் அவர் வந்து ஆண் தொழிலாளர்களுக்கும் கூலி கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஆர். இராதா அவர்கள் சொன்ன மேற்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் இச் சட்டத்தின் விதித்துறைகளை 6 தாசில்தார்கள், 6 கடைநிலை ஊழியர்கள் ஆகியோர் செயல்படுத்தி வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே, முக்கியமானது, 'ஆர்கனைஸ்ட் லேபருக்கு' தொழிற்சங்கங்கள் இருப்பது போல், இந்த விவசாயத் தொழிலாளர்களுக்குப் போதுமான அளவுக்கு தொழிற்சங்கங்கள் இல்லை. எனவே, அவர்களுக்குப் போதுமான அளவு—தமிழகமெங்கும் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கங்கள் அமைத்துப் பணி செய்ய முன்வந்தால், அவர்கள் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நம்புகிறேன். அதற்குத் தொழிற்சங்கத் தலைவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவரவர்களே, நம் மாநிலத்தில் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு ஒரு சம்பளமும் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு ஒரு சம்பளமும் இருப்பது போல், தஞ்சை மாவட்டத்தில் கீழத் தஞ்சையில் ஆண்களுக்கு ரூ. 6-ம், பெண்களுக்கு ரூ. 4-ம் என்று ஒரு சட்டம் இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் ரூ. 3-ம் ரூ. 5-ம் என்று இருக்கிறது. அப்படிப் பார்க்கின்றபொழுது இங்கே வாழக்கூடியவர்கள் அங்கே வாழக்கூடியவர்களை விட வேலை வசதியில் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். இந்த அரசு, தமிழ்நாடு பூராவும் இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரே விவசாயக் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டு வருமா என்று கேட்க விரும்புவதோடு, விவசாயிகளுக்குக் குறைந்தபட்சக் கூலி கொடுக்காத நிலப் பிரபுக்கள்மேல் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, கீழத் தஞ்சாவூரில் இப்பொழுது அமுலில் இருப்பது, (Fair wages Act,. 1969) 1969-ம் ஆண்டு நியாயமான ஊதியங்கள் சட்டத்தின்கீழ் கூலி கொடுக்கப்பட்டு வருகிறது. கீழத் தஞ்சாவூர் தவிர, மற்ற எல்லா இடங்களுக்கும் (Minimum

wages Act 1948) 1948ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியங்கள் சட்டத்தின் அடிப்படையில் கூலி கொடுக்கப்படுகிறது. அந்தக் கீழத் தஞ்சாவூரில் அப்படிக் கொடுக்கக் கூடாது, சமமாகத்தானிருக்க வேண்டும், எல்லோரும் சமமாகத் தான் பெற வேண்டுமென்று எல்லாத் தொழிற்சங்கங்களும் ஒன்றுசேர்ந்து ஒரு ஆலோசனை சொன்னால், அதை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. பொ. காளியப்பன் : பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர்கள், வேலை செய்யும்போது, திடீரென்று மழையினாலோ, வேறு காரணங்களாலோ, பாதியிலே வேலை நின்று விட்டால், அன்று மிராசுதார்கள் கூலி கொடுக்க மறுப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதைப் பற்றிய முறையீடுகள் அரசுக்கு இதுவரை வரவில்லை. எங்கே என்று குறிப்பிட்டார்களேயானால் அங்கே உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், அமைச்சரவர்களுடைய நல்லெண்ணத்தை நான் பாராட்டுகிறேன். நானும் அவரும் குடியாத்தம் தொகுதியிலே போனது உண்மை. அவரே கூப்பிட்டுக் கேட்டார். எத்தனை மணிநேரம் வேலை செய்கிறீர்கள், என்று. காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை என்று பதில் சொன்னார்கள். எவ்வளவு கூலி என்றுகேட்டசார். ரூ. 2 என்று சொன்னார்கள். உடனே, தாசில்தாரைக் கூப்பிட்டுச் சொன்னார்கள். உடனே நடவடிக்கை எடுங்கள் என்று. ஆனால், இப்பொழுது நிலைமை என்னவென்றால், நாங்கள் மத்தியானம் வரைதான் வேலை செய்கிறோம். ரூ. 2 சரி. எங்களுக்கு அதில் மீதியும் இருக்கிறது; ஆக எந்த வித நடவடிக்கையும் தேவையில்லையென்று தொழிலாளிகள் எழுதிக் கொடுப்பது போல், நிலச்சுவாந்தார்கள் நிர்ப்பந்தப்படுத்தி வாங்குகிறார்கள், அது நடந்திருக்கிறது. ஆகவேதான் விவசாயச் சங்கங்களை ஸ்தாபன ரீதியில் திரட்ட வேண்டுமென்று கூறியிருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். ஆனால், அப்படிப் போராட்டம் நடத்தும்போது, போலீஸை விட்டு அடிப்பது, என்றில்லாமல் அவர்கள் தூண்டி விட்டார்களோ என்றில்லாத, அளவுக்கு இருக்குமானால், அவர்கள் ஸ்தாபன ரீதியாகத் திரண்டு வருவார்கள். (மணி அடிக்கப் பெற்றது). ஆகவே, அதை ஆரம்பிக்கக்கூடிய அளவு முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களும் என் போன்றவர்களும் 40 ஆண்டுக் காலமாக இதுமாதிரி சக்திகளை எதிர்த்துப் போராடி வந்திருக்கிறோம். உங்கள் தொகுதியில் ஒரு விவசாயத் தொழிலாளர் சங்கம்

அமைத்து அநிலை இவர்களையும் சேர்த்துக் கொண்டால் நானே வந்து அவர்களையும் சேர்த்துக்கொண்டு இருவரும் சேர்ந்து நன்மை செய்யலாமா என்று முயற்சிக்கலாம்.

திரு. என். வரதராஜன் : அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் தொழிலாளர்களுக்குச் செய்த நன்மைகளைப் பாராட்டுகிறேன். ஆனால் ஒரு கோடிப் பேர் தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இன்று தாசில்தார்களுக்கு இருக்கும்படியான எண்ணற்ற வேலைகளில் பத்தோடு பதினொன்றாகத்தான் இந்த வேலைகளை அவர்கள் நடை முறையில் கவனிக்க முடிகிறது. அவர்களால் சாத்தியம் இல்லாமல் இருக்கும் காரணத்தால் தொழிலாளர் நல இலாக்காவே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா? மேலும் இது 1976ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கூலி. பல்வேறு மாநிலங்களில் இன்றையதினம் தினக்கூலி 11 ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. நம்முடைய தமிழக விவசாயத் தொழிலாளிகள் பல்வேறு ஸ்தாபனத்தின் மூலம் 8 ரூபாய் தினக்கூலி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி விரிவாகப் பரிசீலிக்கப்படுமா? விரைவில் புதிய கூலி அறிவிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தக் கூலி ஜனாதிபதி ஆட்சியின்போது—நான் ஏற்கனவே சொன்னது போல் 2—3—76ல் நிர்ணயிக்கப்பட்டது. அந்தச் சட்டத்தின் 3 (பி) பிரிவின் கீழ் அரசு தேவை என்று கருதுகிறபோது மாற்றியமைக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் ஐந்தாண்டுகளுக்கு மேல் போகக் கூடாது என்றும், ஐந்தாண்டுகளுக்குள்ளாகவே மாற்றியமைக்கலாம் என்றும் இருக்கிறது. இந்த அரசு அதை மாற்றுவது பற்றிப் பரிசீலனை செய்கிறது. நான் எது செய்தாலும் தனிப்பட்ட முறையில் செய்வதல்ல; புரட்சித் தலைவர் ஆட்சியின் சார்பாகத்தான் செய்கிறேன். இந்தக் கூலியை மாற்றியமைக்க அவகாசம் கூடக் கொடுக்காமல் நிரம்பப் போராட்டங்களை நடத்துவதால் தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் அமைதிக்கு உத்தரவாதம் கொடுத்தால் விரைவில் பரிசீலனை செய்யப்படும்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

* 619 வினா — திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் தென் ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன? அவற்றின் மூலம் தினசரி எவ்வளவு ரூபாய் வருமானமாகக் கிடைக்கிறது?

[1978 மார்ச் 18

(ஆ) 1976–77ல் எத்தனை பஸ்கள் பயனற்றதாக ஒதுக்கப் பட்டன ?

(இ) அவற்றை விற்றதில் மொத்தம் கிடைத்த வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் 9—3—1978ஆம் நாளைய நிலவரப்படி மொத்தம் 70 பேருந்துகள் ஓடுகின்றன. அவற்றின் மூலம் 1978 பிப்ரவரி மாதப் புள்ளி விபரப்படி, நாள் ஒன்றிற்கு ரூ. 39,000 சராசரி வருமானமாகக் கிடைத்தது.

(ஆ) மற்றும் (இ) பத்துப் பஸ்கள் பயனற்றதாக ஒதுக்கப் பட்டன. அவற்றை ஏலம் விட்டு விற்றதில் ரூ. 45,900 வருமான மாகக் கிடைத்துள்ளது.

திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன்: பெரியார் போக்கு வரதத்துக் கழகத்தில் ஓடுகின்ற பேருந்துகளுக்கு ஒரு வருஷத்திற்கு ஆகும் மெயின்டனன்ஸ் செலவு எவ்வளவு? லாபத்தில் ஓடுகிறதா அல்லது நஷ்டத்தில் ஓடுகிறதா ? லாபத்தில் ஓடினால் மாநக ராட்சி மன்றத்தில் தீர்மானம் போட்டிருக்கும் அடிப்படை யில் டவுன் பஸ் விட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பெரியார் போக்கு வரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை 1976–77 ஆம் ஆண்டில் 48,56,000 ரூபாய் நஷ்டத்தில் ஓடியிருக்கிறது. நகரப் பேருந்துகள் விடுவது பற்றிய பரிசீலனை இப்போது இருந்து வருகிறது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தற்போது பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் ஓடுகின்ற பேருந்துகளில் எத்தனை பேருந்துகள் ஓடாமலிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றிய சரியான குறிப்பு இல்லையென்ற போதிலும் மொத்தமுள்ள பேருந்து களில் பத்துப் பேருந்துகள் மட்டும் பழுதடைந்த காரணத்தால் ஏலத்திற்கு விடப்பட்டன.

திரு. கோ. ரகோத்தமன் : மணலூர்ப் பேட்டையிலிருந்து திருவண்ணாமலை வரை பெரியார் போக்குவரத்து மூலமாக டவுன் பஸ் விடப்பட்டு வந்தது 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10-ந் தேதி முதல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் விட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேருந்து அந்த வழித் தடத்தில் நிறுத்தப்படக் காரணம் என்ன என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றிய குறிப்பைக் கொடுத்தால் பரிசீலிக்கப்படும்.

1978 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பெரியார் போக்கு வரத்துக் கழகத்தைப் பற்றியது பாண்டியன், சேரன், சோழன் எல்லாம் கையைத் தூக்குகிறீர்கள் (சிரிப்பு]

திரு. சி. ஆறுமுகம் : அமைச்சர் அவர்கள் பத்துப் பேருந்து களை ஏலம் விட்டதால் ஏறத்தாழ 45,000 ரூபாய் கிடைத்தது என்று குறிப்பிட்டார்கள். பழைய பஸ்களைச் சரி செய்து நகரங் களில் டவுன் பஸ்ஸாக மாற்றுததற்கு என்ன காரணம் ? ஏலம் விட வேண்டிய அவசியம் என்ன?

[முற்பகல் 9–50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளை ஏலம் விடுவது என்பது 8 ஆண்டுக் காலமாக அவை பயனில் இருந்த காரணத்தாலும் அல்லது 8லட்சம் கிலோ மீட்டர் பயணம் செய்திருந்த காரணத்தாலும் மிகவும் பழுது அடைந்த பேருந்துகள் ஏலம் விடப்படுகின்றன, அவை களை மீண்டும் சரிசெய்து வழித்தடங்களில் விடுவதற்குத் தகுதியற்றிருக்கின்ற காரணத்தால்தான் ஏலம் விடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே நட்டம் வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல்வேறு மார்க் கங்களிலே லாபகரமாக ஓடுகின்ற பேருந்துகளைக்கூட அங்கே இருக்கின்ற அதிகாரிகள் நட்டத்தில் ஓடுவதாகக் காட்டி நிறுத்திவிடுகிறார்கள், அவைகளையெல்லாம் அமைச்சர் அவர்கள் முறையாக ஆராய்ந்து அவைகள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய தவறு நிகழ்ந்து இருப்பதாக மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், அதைப்பற்றி ஆய்வு நடந்து வருகிறது, ஆய்வுக்குப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே தென் ஆற்காடு மாவட் டத்திலே அதிக வருமானம் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு வழி இருக்கிறது. நெல்லிக்குப்பத்தி லிருந்து கடலூருக்கு மாணவ மாணவியர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் சென்று வருகிறார்கள், ஆகவே டவுன் பஸ்கள் அதிகம் இன்னும். தேவைப்படும், ஏற்கனவே இருப்பது போதாது, மேலும் பன்ருட்டியிலிருந்து திருத்துறையூர், கன்ட்ராகோட்டை வழியாக பஸ் விடலாம். அந்தப் பகுதி யிலே பஸ்கள் இல்லாமல் பயணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த இரண்டு இடங்களிலே பஸ் விடுவதற்கு அரசு முன்வருமா ?

[1978 மார்ச் 18

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் நட்ட நிலையை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இரண்டு வழித்தடங்களிலேயும் பேருந்துகளை விடுவதால் மட்டுமே சரிக்கட்டி விட முடியாது. குறிப்பாக நகரப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் நட்ட நிலைமை மிகையாக இருப்பதைக் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம். இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வழித்தடங்களிலே பயணிகளின் அளவைப் பொறுத்தும், அந்தப் பகுதியின் நிலையைப் பொறுத்தும் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன பாதிக்கப்பட்ட பயனில்லாமல் இருக்கின்ற சில பஸ்களை தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கே தள்ளிவிடுவதாக ஒரு செய்தி சொல்லப்படுகிறதே அது உண்மையா ? அப்படி பழுதடைந்த வண்டிகள் தந்தை பெரியார் போக்குவர்த்துக் கழகத்தில் எத்தனை ஓடுகின்றன ? பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே பழுதடைந்த பேருந்துகள் தந்தை பெரியார் போக்குவரத்துக கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதாகச் சொல்கிறார்களே, அதுவும் உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினரிடம் அந்தக் குறையைக் கூறியவர்கள் அந்தத் தவறைப் பற்றி அரசிடம் கூறவில்லை. அதுபற்றி அரசின் கவனத்திற்கு வருமானால் அது பரிசீலிக்கப்படும். உண்மை என்னவென்றால் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே புதிய பேருந்துகளும் இருக்கின்ற பேருந்துகளை செம்மைப்படுத்தியும் தான் விடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. முனுசாமி : வட ஆற்காடு மாவட்டத்திலே சென்னையிலிருந்து வந்தவாசிக்கு 120 கிலோ மீட்டர் தூரம் தான் இருக்கிறது. அந்த பஸ்ஸுக்கு 3½ மணி நேரம் ஆகின்றது. அதை இன்னும் குறைத்து 2½ மணி நேரத்தில் அல்லது 3 மணி நேரத்தில் செல்லக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்யுமா ? அது மட்டுமல்லாமல் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பஸ் மெட்ரூஸுக்கு விடுகின்ற நிலையில் துரித பஸ்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் சரியில்லாமல் இருக்கிறது. ஆகவே, அதை அரசு மாற்றியமைக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கு ஏற்ப படிப்படியாக புதிய பேருந்துகளை விடுகின்ற நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையிலிருந்து வந்தவாசிக்கு விரைவுப் பேருந்து விடுவதற்கு பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 18]

திரு. துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே 70 பஸ்கள் ஓடுவதாகச் சொல்கிறார்கள், அதிலே 10 பஸ்கள் ஓடவில்லை. மீதம் இருக்கிற பஸ்களில் ஸ்பேர் பஸ் எத்தனை, டவுன் பஸ் எத்தனை, மொபஸ்ஸல் பஸ் எத்தனை என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் 49 ஆயிரம் ரூபாய் நட்டம் வருகிறது என்று சொன்னார்கள். அப்படியிருக்கும்போது இப்போது வரியை ஏற்றி இருக்கிறார்கள். தொழிலாளர்கள் பங்குபெறும் நிறுவனம் என்று சொல்லப்படுகின்ற முறையிலே அந்தத் தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக இந்த வரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அரசுக்கு வருமானம் வரவேண்டும், அந்த வருமானத்தின் மூலம் தொழிலாளர் நலன் காக்கப்பட வேண்டும் என்ற நன்நோக்கம்தானே தவிர தொழிலாளர்களை நசுக்கவில்லை என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகளுக்கு நிதி.

* வினா 620—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—

கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டில் 1977-78-ல் கிராமப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கு மத்திய சர்க்கார் ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—

ரூபாய் 65 இலட்சம் .

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, இந்த லிங்க் ரோடுகளுக்குப் பணத்தைப் பிரித்துக் கொடுப்பதில் எந்தெந்த லிங்க் ரோடுகளுக்கு பிரையாரிட்டீஸ் கொடுப்பது என்று கைட்லைன்ஸ் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, மிகவும் உள்ளேர இருக்கும், இன்டீரியர் வில்லேஜ்களை மெயின் ரோட்டோடு லிங்க் பண்ணும் விதத்தில் இந்த பண்டில் பிரையாரிட்டி கொடுக்க கைட்லைன்ஸ் அனுப்ப வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, கிராமப்புற இணைப்புச் சாலைகளுக்கு இந் நிதியை ஒதுக்குவது மத்திய அரசாகும். மத்திய அரசு நிதியை ஒதுக்கும் போது சில வரையறைகளை ஏற்கனவே வகுத்திருக்கிறது. அதன்படி கிராமப்புறங்களில் விவசாயம் முன்னேற்றம் அடைந்த

பகுதிகளில் மார்க்கெட்டிற்கு அதிகமாகப் பொருள்களை எடுத்துச் செல்லும் சூழலில் இருக்கும் பகுதிகளுக்கு முன்னுரிமை இருக்க வேண்டுமென்ற வரையறை ஏற்கனவே உள்ளது. அந்த முறையில்தான் செயல் பட்டு வருகிறது.

திரு ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு சட்டமன்றத் தலைவரவர்களே, இந்த லிங்க் ரோடு என்று சொல்லும் பொழுது கேரளாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் உள்ள லிங்க் ரோடாகிய கொடைக்கானலிலிருந்து மூணார் வரையில் இருக்கும் ரோடு மிகவும் சீர் கெட்டிருக்கிறது. அந்த ரோட்டில் இருபக்கமும் விவசாயம் நடக்கிறது. கிட்டத்தட்ட 6,000 பேர், 8,000 பேர் வரைக்கும் வேலை பார்க்கிறார்கள். அந்த ரோட்டை சீர் செய்ய அரசாங்கம், மத்திய அரசாங்கத்திலிருந்து பணம் கேட்டு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வழித்தடம் கேரள மாநிலத்தைஇணைக்கும் வழித்தடங்கள். அதைச் செம்மைப் படுத்த சீர்படுத்த ஏற்கனவே திட்டம் ஒன்றை அரசு வகுத்து வருகிறது.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, ஏற்கனவே 1,500 பேர், 2.000பேர் இருக்கும் ஊர்களுக்கான இணைப்புச் சாலைகளுக்கு தார்ச்சாலையாக கழக அரசு போட்டது. இப்பொழுது அந்தத் திட்டத்தின்படி எத்தனை சாலைகளுக்குத் தார்ச் சாலைகள் போடப் படும். மெயின் ரோடுகளோடு பக்கத்திலிருக்கும் அரிசனக் காலனிகளுக்குச் சாலையில்லாமல் இருக்கிறது. அவைகள் இந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படுமா?.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இணைப்புச் சாலைகளுக்குத் தார்ச் சாலைகள் போடப்பட்டதாகக் கூறுகிறார்கள். அதுபற்றித் தனியாகக் குறிப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புற இணைப்புச்சாலை என்பதற்கு மிகக் குறைந்த அளவில் ஒரு ஆண்டுக்கு 65 இலட்சம் ரூபாய் மத்திய அரசு ஒதுக்கித் தருகிறது. 65 இலட்சம் ரூபாயைக் கொண்டு இணைப்புச் சாலைகளைக் கிராமப்புறங்களில் எந்த அளவிற்குப் போட முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மத்திய அரசை அதிக நிதி ஒதுக்கி கிராமப்புற இணைப்புச் சாலைகளைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் முன்னேறுகின்ற செயல் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த இணைப்புச் சாலைகள் என்று சொல்லும்பொழுது இணைப்புச் சாலைகளுக்கு அதிகபட்ச தூரம் என்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படிப்பட்ட அளவிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட

எத்தனை சாலைகள் தமிழ்நாட்டில் இணைப்புச் சாலைகள் இந்த வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று அரசாங்கத்திடம் குறிப்பு இருக்கிறதா? ஆலங்காயம் — போளூரை இணைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதே, அது இதுவரையில் ஏன் எடுக்கப்படவில்லை? சி. ஆர். எஃப்., அதாவது, சென்ட்ரல் ரோடு ஃபண்ட் மத்திய அரசு கொடுக்கிறது. அதைத் தவிர இணைப்புச் சாலைகளுக்கு என்று வேறு ஒரு தலைப்பிலே ஏதாவது கொடுக்கப்படுகிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இணைப்புச் சாலைகளுக்கு தூர வரையறையை மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. 5 கிலோ மீட்டர் உள்ள அளவிற்கு இணைப்புச் சாலை போடலாம் என்ற குறிப்பு இருக்கிறது. தற்பொழுது 137.1 கிலோ மீட்டர் நீளமுள்ள 60 சாலை வேலைகளை மேற்கொள்ள அரசிடம் திட்டமிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய இணைப்புச் சாலை பற்றிய குறிப்பினைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 621, 622 எண்களுள்ள வினாக்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. ஒழுங்குப் பிரச்சினை

ஒரு மானியக் கோரிக்கைமீது அவையில் விவாதம் நடைபெறாத போது அவ்விவாதம் நடந்ததாக மக்கள் குரல் நாளேட்டில் செய்தி வந்திருப்பது குறித்து.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். அவை உரிமை மீறல் பிரச்சினையே கொண்டு வரவேண்டியது. ஆனாலும் கூட பத்திரிகைகள்மீது அடிக்கடி அவை உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரக் கூடாது என்பதால், ஒழுங்குப் பிரச்சினையாக இதைக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒரு மானியக் கோரிக்கை மீது அவையில் விவாதம் நடைபெறாத போது அவ்விவாதம் நடந்ததாக மக்கள் குரல் நாளேட்டில் செய்தி வந்திருப்பது குறித்து

(திரு. க. சுப்பு) [1978 மார்ச் 18

நேற்றைய தினம் ''முதலமைச்சரவர்கள் கீழ்க்கண்டவாறு கோருவார் : .... 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டநிர்வாகம் பற்றிய 12-ம் எண் மானியக் கோரிக்கையின் கீழ்,............தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்று கோருவார் என்று நேற்றைய நிகழ்ச்சி நிரலில் வெளியிடப்பட்டிருந்தது. நேற்று அவையிலே வைக்கப்பட்ட ஏடுகளிலே கூட என்ன, என்ன ஏடுகள் என்று கூறப்பட்டிருக்கின்றன. அறநிலையத்துறை பற்றிய மானியக் கோரிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்குமானால், அத்துறை பற்றிய விளக்கக் குறிப்புகள் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளில் இருக்க வேண்டுமென்று முதல்வர் சொன்ன பிறகுதான் அவை, அவைக் குறிப்பேட்டின் பகுதியாக' மாறுகிறது. ஆனால், பத்திரிகையிலே படித்தது மாதிரி, 'மக்கள் குரல், பத்திரிகையிலே, முதல்வர் படித்ததைப் போல, ''தி. மு. க' ஆட்சியில் கோவில் ஊழல்கள்—முதல்வர் விளக்கினார் என்று இங்கே அவர் பேசியதைப் போலவும், விளக்கியதைப் போலவும் மூன்றாவது பக்கத்திலே பெரிய செய்தியாக வெளியிட்டிருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கே தெரியாத விவகாரங்கள், நாமே அவைக் குறிப்பிலே ஏற்றுக் கொள்ளாத விவகாரங்கள் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டிருப்பது முறைதானா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகள் மீது ஒழுங்குப் பிரச்சினை கொண்டுவர முடியாது. உரிமை மீறல் பிரச்சினைதான் எழுத்து மூலமாகக் கொண்டுவர வேண்டும். பத்திரிகைகள் மீது ஒழுங்குப் பிரச்சினை கொண்டு வந்தால் நான் எப்படி முடிவு கூற முடியும்? எழுதிக் கொடுத்தால், அதை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு முடிவு கூறலாம். அது உரிமை மீறலா என்றுகூடப் பார்க்க வேண்டுமானால் எழுதித் தரவேண்டும்.

திரு. க. சுப்பு : நான் எழுப்புகிற பிரச்சினை வேறு. ஒரு ஒழுங்குப் பிரச்சினையை பத்திரிகை மீது கொண்டுவருவது என்பதல்ல. ஒழுங்குப் பிரச்சினை என்பது, நம்முடைய அவைக்கு வருவதற்கு முன்னே பத்திரிகைக்குப் போனதா? இல்லையென்றால், பத்திரிகை மீது உரிமை மீறல் பிரச்சினை வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பத்திரிகைமீது ஒழுங்குப் பிரச்சினை கொண்டு வருகிறேன் என்று சொன்னதையொட்டிச் சொல்கிறேன். நீங்கள் அதை எழுத்து மூலமாகத் தாருங்கள். அந்த முக்கியமான பிரச்சினையை நான் கவனிக்கிறேன். அவசியம் இப்படி வருவது நம்முடைய அவை உரிமை மீறலா என்று நான் கவனிக்கிறேன்.

1978 மார்ச் 18]

(திரு. சி. ஆறுமுகம் திரு. சுப்புவிடமிருந்து பெற்ற கடிதத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தார்.)

திரு. ரா. உமாநாத் : இது சம்பந்தமாக, 'அசிஸ்டன்ஸுக்காக' ஒன்று சொல்கிறேன். லோக் சபாவிலே, எனக்கு எக்ஸ்பீரியன்ஸ் இருக்கிறது. ரூல்ஸ்படி ஒரு டாக்குமென்ட்டை டேபிளிலே வைத்தாயிற்று என்று சொன்னால், It is a public document. ஆனால், ஒரு வெரிஃபிகேஷன் செய்யவேண்டும். அது என்னவென்றால், whether it has been placed on the Table of the House டேபிளிலே வைக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பது. அப்படி வைத்திருந்தால், It is a public document. That is what I learn. That is the fact. Then you can decide.

திரு. க. சுப்பு : பப்ளிக் டாக்குமென்ட்—டேபிளிலே வைத்தால் போதும் என்று சொல்கிறார். ஆனால், இங்கே மிஸ்லீடிங்காக, பேசினார், விளக்கினார் என்ற அர்த்தத்திலே சொல்லியிருக்கிறார்கள். பேசவே இல்லை, அவர் பாவம்!

திரு. துரை முருகன் : தங்களுடைய தீர்ப்புக்கு நான் கட்டுப்படுகிறேன். உரிமை மீறல் பிரச்னை தரலாம் என்று சொல்கிறீர்கள். எனவே, இப்பொழுது நான் அந்தப் பத்திரிகை மீது உரிமைப் பிரச்னை தருகிறேன்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஏற்கனவே கொடுத்து விட்டார். ஆகவே, நீங்கள் படிக்க வேண்டாம் கொடுத்து விடுங்கள்.

(திரு. துரை முருகன் பேரவைத் தலைவரிடம் ஒரு கடிதம் கொடுத்தார்.)

திரு. ரா. உமாநாத்: உரிமை மீறல் பிரச்னையை இப்படியே, இங்கே கொடுக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களே, திரு. சுப்புவுக்குச் சொன்னால், நல்லது. நான் சொன்னால்கூட ஏற்றுக் கொள்ள மாட்டார். நீங்கள் சொன்னால் நல்லது.

அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம்.......

ஒரு மானியக் கோரிக்கை மீது அவையில் விவாதம் நடைபெறாத போது அவ்விவாதம் நடந்ததாக மக்கள் குரல் நாளேட்டில் செய்தி வந்திருப்பது குறித்து

[1978 மார்ச் 18

திரு. எம். ஏ. லத்தீப் : நான் கொடுத்து, இரண்டு நாட்களாகி இருக்கிறது. அதைத் தாமதமாக எடுத்தால், பயனில்லாமல் போய்விடும். உரிமைப் பிரச்னையை நேற்றே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசியம் எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. அறையிலே வந்து விவரமாகக் கேளுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் இல்லை.

டாக்டர் கே. சமரசம் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே; பாயின்ட் ஆப் ஆர்டர். இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் 41-வது விதியின்கீழ் கால் அட்டென்ஷன் கொடுத்தேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அறையிலே வந்து கேளுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, பாயின்ட், ஆப் ஆர்டர். இங்கே கேள்வி நேரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆளுங்கட்சி என்று சொல்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பாதிப் பேருக்கு மேல் அதிகமாக இருந்தாலும் கூட, நீங்கள் நேரம் ஒதுக்கித் தரவில்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து தலைவர் மீது குறை சொல்லக் கூடாது என்ற விதி தெரியுமா? தலைவர் மீதே குறை சொல்லக் கூடாது. உட்காருங்கள். முதலிலே அதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

(திரு. ப. சந்திரன் எழுந்தார்.)

ஒவ்வொருவரும் கேட்டுக் கொண்டே போனால், அதை அனுமதித்தால், அவை நேரம் என்ன ஆவது? ஒன்றிரண்டு இருந்தால் பரவாயில்லை. அனுமதிக்கிறேன் என்று ஒவ்வொருவரும் எழுந்தால்?......அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.

1978 மார்ச் 18]

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

இரட்டை ஏடு சுருட்டின் மீது மத்திய அரசு விதித்த கலால் வரியின் விளைவாக, கைத்தொழில் சுருட்டு கிட்டங்கிகள் மூடப்பட்டதும், தொழிலாளர் வேலை நீக்கமும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சமீபத்தில் இரட்டை ஏடு சுருட்டின் மீது மத்திய அரசு சுமத்திய 100 சதம் கலால் வரியின் காரணமாக திருச்சி மாவட்டம்; திண்டுக்கல் உள்ளிட்ட, தமிழகம் முழுவதும் எல்லா கைத்தொழில் சுருட்டு கிட்டங்குகளும் மூடியதின் விளைவாக ஏராளமான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ளதின் விளைவாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. ஆர். உமாநாத் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள்.

இது எப்படி அவசர முக்கியமானது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய இரட்டை ஏடு சுருட்டு தெளிவாக சொல்லியிருக்கிறீர்கள், ஒத்தை சுருட்டு, அதை தெளிவுபட சொல்லியிருக்கிறீர்கள். 40 ஆண்டுகளாக மேற்படி தொழிலாளர்கள் இதிலே ஏராளமாக இருக்கிறார்கள். குறிப்பாக திருச்சி, திண்டுக்கல் போன்ற இடங்களிலும், அதற்காக பெட்டிகளைத் தயாரிக்கும் தொழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்கள் இதற்கு டிப்பன்டன்டாக இருக்கிறார்கள். உறையூர் ரெட்டை ஏடு சுருட்டுக்கு எக்ஸ்போர்ட்டுக்கு பேமசாக இருக்கிறது. முன்னாலே எக்சைஸ் டூட்டி போட்டதனாலே பல சிறிய தொழிற்சாலைகள் அன்று மூடப்பட்டு நலிந்த நிலைமையில் இருக்கின்றன. Chanda Committee Central Excise Reorganisation Committee, 1963 போன்ற கமிட்டிகள் சிபாரிசு செய்ததன் பேரிலே வரிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த நலிந்த தொழிற்சாலைகள் தொடர்ந்து இருந்தன. இப்போது மீண்டும் திடீரென்று இந்த பட்ஜெட்டில் மத்திய அரசு போட்டிருக்கிற வரி, 100 சுருட்டுகளின் விலை 15 ரூபாய், அந்த சுருட்டுக்குப் போட்டிருக்கிற வரியும் 15 ரூபாய் என்று போட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சுருட்டின் விலை 15-லிருந்து 30 ரூபாயாகிறது. சிறு தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்படுகிற நிலைமை, தொழிலாளர்கள் வெளியேற்றப்படுகிற நிலைமை இருக்கிறது. இதனால் புகையிலை டிமான்டும் குறையும். ஏற்கனவே இந்தப் புகையிலையின் விலை குறைச்சலாக இருக்கிறது. அவர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

[திரு. ரா. உமாநாத்] [1978 மார்ச் 18

ஆகவே, மின்சார வரி போடுகிறபோது மாநிலத்தைப் பாதிக்கிறது என்று நமது மாநில அரசு எப்படித் தமிழகத்தைப் பாதிக்கிறது என்று பரிந்துரை செய்ததோ அதே நிலையில் நமது மாநில அரசு, தொழிலாளர்களைப் பாதிக்கிறது என்று சொல்லி, இந்த வரியை நீக்கவேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும்.

எவ்வளவோ சிறு விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில், மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டும். பரிந்துரை செய்வதற்கு இன்னும் நேரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்து, அதைப்பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் சுருட்டு சுற்றும் நிறுவனங்கள் சுமார் 220 இருக்கின்றன. இவற்றில் சுமார் 2,052 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இவற்றின் விவரங்கள் பின்வருமாறு :

(1)	தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கை. (2)	தொழிலாளர்களின் எண்ணிக்கை. (3)
திருச்சி	41	600
சேலம்	48	291
திருநெல்வேலி	5	23
தஞ்சாவூர்	92	668
தென்னாற்காடு	15	107
வடார்க்காடு	9	64
மதுரை	10	299

ஆக, 220 தொழில் நிறுவனங்களில், 2,052 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். திருச்சி மாவட்டத்தில் 11 நிறுவனங்களில் இரட்டை ஏடு சுருட்டு சுற்றும் தொழில் நடைபெற்று வருகின்றது. இத் தொழிலில் 100 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மீதியுள்ள 30 நிறுவனங்களில் ஒற்றை ஏடு சுருட்டு சுற்றும் தொழில் நடைபெறுகின்றது. இதில் 500 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த நிறுவனங்களில் ஒன்று கூட இதுவரை மூடப்படவில்லை.

1978 மார்ச் 18] [திரு. எஸ். இராகவானந்தம்]

மத்திய அரசு விதித்துள்ள கூடுதல் கலால் வரிக்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்காக 20-3-78 அன்று ஒரு நாள் மட்டும் உற்பத்தியை நிறுத்துவது என்று 13-3-78 அன்று தமிழ்நாடு புகையிலை வியாபாரிகள் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது.

திண்டுக்கல்லில் 299 தொழிலாளர்களைக் கொண்ட சுருட்டு சுற்றும் நிறுவனங்கள் 10 உள்ளன. இவற்றில் பகவதி விலாஸ் சுருட்டுத் தொழிற்சாலை தவிர ஏனைய நிறுவனங்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. பகவதி விலாஸ் சுருட்டுத் தொழிற்சாலையில் உற்பத்திச் செலவு பாதிக்கப்பட்டு விட்டது என்ற பொருளாதாரக் காரணத்தால் 150 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. இவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களோ அல்லது அவர்களது சங்கமோ தொழிற் தகராறு எதையும் எழுப்பவில்லை.

எனவே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர்..........

திரு. எம். எ. லத்தீப் : சார், ஒரு ஒழுங்குப் பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ஒழுங்குப் பிரச்னை கிளப்பக் கூடாது. நான் அமைச்சர் அவர்களை அழைத்து விட்டேன். நீங்கள் நினைக்கிறபோது எல்லாம் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முடியாது. டிமான்ட் மூவ் செய்த பிறகு எழுப்பலாம்.

திரு. எம். எ. லத்தீப் : நான் ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப விரும்புகிறேன். எப்போது வேண்டுமானாலும் எழுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போது வேண்டுமானாலும் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முடியாது. மானியக் கோரிக்கைகளை அமைச்சர் மூவ் செய்த பிறகு எழுப்பலாம். உட்காருங்கள்.

(4) 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகின்றேன்:—

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ்—ரூபாய் 16,01,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

திரு. ஏ. இராமலிங்கம்: தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், 1976 ஆம் ஆண்டு அம் மாவட்டத்திலுள்ள வடதலைக்குளம் அரிசனக் காலனிக்கு வீடு கட்டித் தருவது குறித்து டெண்டர் வைத்தும், இது நாள் வரை ஏழை அரிசனங்களுக்கு வீடு கட்டித் தரப்படவில்லை என்பது பற்றியும், டெண்டர் வைத்த உடன் அதிகாரிகள் உடன் வீடுகளைப் பிரித்துக் கொடுங்கள் வீடு கட்டவேண்டும் என்று கூறியதன் கீழ் இருந்த குடிசை வீடுகளைப் பிரித்துவிட்டதால் அவர்கட்கு உடனடியாக சுமார் 65 வீடுகள் கட்டித் தருவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,01,89,000-ல் ரூ. 100 குறைக்கப்பெற வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்."

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவரவர்களே, நத்தம் தொகுதியிலுள்ள அரிசன விடுதியில் அதிக இடங்கள் காலியாய் இருக்கும் இடத்தில் பின்தங்கிய வகுப்பினர்கள் பிள்ளைகளைச் சேர்க்கும் விஷயத்தைக் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,01,89,000-ல் ரூ. 100 குறைக்கப் பெற வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, அரிசன குழந்தைகள் நலம்பேணு குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,01,89,000-ல் ரூ. 100 குறைக்கப் பெற வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, சேலம் மாவட்டம், கொளத்தூர், மலைப் பிரதேசத்தில் வசிக்கும் பழங்குடி மக்கள் பட்டியலில் உள்ள கொண்டாரெட்டி வகுப்பினருக்கு எல்லாச் சலுகைகளும் மறுக்கப்படுவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,01,89,000-ல் ரூ. 100 குறைக்கப் பெற வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு குடியிருப்புக் காலனிகள் கட்டிக் கொடுப்பது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கிழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,01,89,000-ல் ரூ. 100 குறைக்கப் பெற வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. A. LATHEEF : Hon. Mr. Speaker, Sir, To discuss about the need to give house-site pattas to the Harijans of Periankuppam, Alankuppam, Minnur, Vinnemangalam, Kannadikuppam villages in Madanoor Block —

I move :

"That the allotment of Rs. 16,01,89,000 under Demand No. 31—Welfare of the Scheduled Tribes and Castes, etc.—be reduced by Rs. 100."

(ஆ) கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,68,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

[1978 மார்ச் 18

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, ஏராளமாகப் படித்து விட்டு இருக்கும் பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படாவிட்டால் ஏற்படுகின்ற ஆபத்தைப் பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,68,53,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்கள், கல்விச் சலுகை பெற பெற்றோர்களின் ஆண்டு ஊதியம் ரூ. 2,500 ஆக இருப்பதை மாற்றி ரூ. 5,000 என்று ஆக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.6,68,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்; தலைவரவர்களே, முற்பட்ட வகுப்பினர்களை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்ததன் காரணமாக உண்மையான பிற்பட்ட வகுப்பினர் நலன் பாதிக்கப் பட்டதையும் அதற்குத் தீர்வு காணுவது பற்றியும் விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.6,68,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, மாணவர்கள், கல்விச் சலுகைபெற பெற்றோர்களின் வருட வருமான வரம்பை ரூ. 5,000 ஆக உயர்த்த வேண்டுமென்று விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,68,53,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ப. சந்திரன்: தலைவரவர்களே, பின்தங்கிய மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.6,68,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1978 மார்ச் 18]

THIRU M. A. LATHEEF: Hon. Mr. Speaker, Sir, To discuss about the need to include Labbais and Decanis in the most Backward Classes list I move:

"That the allotment of Rs. 6,68,53,000 under Demand 32—Welfare of the Backward Classes, etc. — be reduced by Rs. 100"—

(இ) கோரிக்கை எண் 44— எழுதுபொருள் அச்சுத் துறை.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண் 44— எழுது பொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,64,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

திரு. எம். ஆறுமுகம்: தலைவரவர்களே, அங்கஹீனர்கள், விதவைகள், வேலை இல்லாமல் அவதியுறும் படித்தவர்களுக்கு, தாமே தொழில் நடத்துவதற்கும் பழுதடைந்த தட்டெழுத்து இயந்திரங்களை மலிவு விலையில் வழங்குவது குறித்து விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 44— எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,64,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க— ''மானியக் கோரிக்கை எண் 44— எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,64,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, என்னால் இந்த அரசின் சார்பில் முன்மொழியப்பட்ட மானியக் கோரிக்கைகளில் இந்த அரசின் கொள்கைகளும், திட்டங்களும், புரிந்துள்ள சாதனைகளும் குறிப்பிடப்பட்டு, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, புத்தகவடிவில் தரப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் படித்து, தங்களுடைய மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் இந்த அரசுக்கு எடுத்துரைப்பார்கள் என்ற நல்ல நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது. ஆகவே, அச்சிட்டு வழங்கப்பட்ட புத்தகங்களை* நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துக்களைக் கேட்டுவிட்டு என்னுடைய பதில் உரையை ஆற்றுகிறேன் என்று கூறி அமருகிறேன்.

* 146—211-ம் பக்கங்களில் இணைப்புகள் II, III, IV ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[1978 மார்ச் 18

5, தகவல் கோரல்.

ஓர் உறுப்பினரைப்பற்றி பேரவைத் தலைவர் குறிப்பிட்ட
சொற்கள் நடவடிக்கை குறிப்பில் இடம் பெறலாமா என்பது
குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், நம்முடைய திரு. உமாநாத்
அவர்கள் ஒரு விஷயத்தைச் சொல்லும்போது திரு. சுப்பு அவர்
களைக் குறிப்பிட்டு, " தாங்கள் சொன்னால்தான் கேட்பார்,
நான் சொன்னால் கேட்க மாட்டார் " என்று நீங்கள் சொன்னீர்
கள். சபாநாயகர் சொல்லியும் கேட்கமாட்டார் என்பது சரியா ?
அது அவைக் குறிப்பில் இடம் பெறலாமா என்பதற்கு தங்களுடைய
தீர்ப்பை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை ஒரு பிரச்சனை
யாகச் சொல்லவில்லை ; அதை ஒரு பரஸ்பர நல்லெண்ணத்தில்
தான் சொன்னேன். அது சபைக் குறிப்பில் இருக்கலாம் ;
அதில் ஒன்றும் தவறில்லை.

(4) 1978-79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது
விவாமுதம் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து உறுப்பினர்களுக்கு
ஒரு வேண்டுகோள். ஏறத்தாழ 28 பேர்கள் இன்றைக்குப் பேச
வேண்டும். கிட்டத்தட்ட 180 நிமிடம் இருக்கிறது. அதனால்
ஆளுக்கு 5, 6 நிமிடம்தான் வரும். கடைசியில் அமைச்சர்
பேச வேண்டும் : பிரதான எதிர்க்கட்சி இறுதியில் பேசுவதற்கு
அதிக நேரம் கேட்பார்கள். ஆகவே, 5 நிமிடத்திற்குள் ஒவ்
வொரு உறுப்பினரும் முடித்துக் கொண்டால் நல்லது. அப்படி
யானால்தான் 28 பேர்களும் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும்.
முதலில் திரு. தாழை மு. கருணாநிதி. நீங்கள் 10 நிமிடம்
எடுத்துக் கொள்ளலாம். (திரு. லத்தீப் குறுக்கீடு) திரு லத்தீப் அவர்
களுடைய உணர்வுகளை நான் புரிந்துகொள்கிறேன.
நான் என்ன செய்ய முடியும் ? 5 நிமிடம் என்று சொன்னால்தான்
6, 7 நிமிடத்திற்குள் முடிப்பார்கள். ஆகவே, 5 நிமிடம் என்று
கட்டுப்படுத்திக் கொண்டால் நல்லது. அதிக நேரம் பேச வேண்டு
மென்றால் நீங்களாகவே 10 பேர்களை மட்டும் பேசுவதற்கு
பெயர் கொடுங்கள் ; ஆளுக்கு 20 நிமிடம் பேசலாம். அதில்
எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. இல்லை என்றால் இருக்கின்ற
நேரத்திற்குள் அத்தனை பேர்களும் பேசவேண்டும்; அப்படியானால்
ஆளுக்கு 5 நிமிடம்தான் வரும்.

திரு. தாழை மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே
இன்றையதினம் மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்
கள் முன் மொழிந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கைகள்
மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

1978 மார்ச் 18] [திரு. தாழை மு. கருணாநிதி]

குறிப்பாக, மாண்புமிகு அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கிற
அறிக்கையில் முதலமைச்சருடைய தலைமையிலும், துணைத்
தலைவராக அரிசன நலத் துறை அமைச்சரும் இருக்கிற
ஒரு உயர்மட்ட கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி
யிருக்கிறார்கள். உண்மையிலேயே அதை நான் வரவேற்கிறேன்.
குறிப்பாக அமைக்கப்பட்டிருக்கிற கமிட்டி சிறப்பாக சீர்தூக்கிப்
பார்த்து உண்மையான உணர்வோடு செயல்படுகின்ற கமிட்டி
யாக இருக்க வேண்டுமே தவிர, காகிதத்திலே அமைக்கப்படுகின்ற
கமிட்டியாக அது இருக்கக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக்
கொண்டு, மாவட்ட கமிட்டிகளும் இதைப்போல அமைக்கப்பட
வேண்டும். கமிட்டிகளை அமைத்து, அது எல்லாத் துறைகளின்
நடவடிக்கைகளையும் பார்த்து, எல்லாத் துறைகளிலும் 18 சத
வீதம் அரிசனங்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறதா
என்பதைத் தெரிந்துகொண்டு, செயல்பட வேண்டுமென்று
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக நான் சொல்வதெல்லாம் எந்தத் துறையிலும்
அரிசனங்களுக்கு 18 சதவீதம் என்பது கொடுக்கப்படவில்லை
என்பதுதான். அதிலும் குறிப்பாக உயர் அதிகாரிகளுடைய
பதவிகள் வரும்போது நிச்சயமாகக் கொடுக்கப்படுவதில்லை. ஏதோ
கடைநிலை ஊழியர் வேலைக்கு அல்லது எழுத்தர் வேலைக்குத்தான்
கொடுக்கப்படுகிறதே தவிர, உயர் அதிகாரிகள் பொறுப்பிலே
ரிசர்வேஷன் முறைப்படி கொடுக்கப்படுவதில்லை. இவைகளை
எல்லாம் கண்காணித்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10-20]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எல்லாத் துறைகளிலேயும் 18 சதவீதம் கொடுக்கப்பட
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். . . . .

(2) ஒழுங்குப் பிரச்னைகள்— தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு ஒதுக்கப்பட்ட
இடத்தில் அமரலாமா என்பது குறித்து.

திரு. இரா. முத்தையா : ஓர் ஒழுங்குப் பிரச்னை. பேரவைத்
துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்
கள் எப்போது பத்திரிகை நிருபர் ஆனார் என்று தெரியவில்லை. சபை
நடந்து கொண்டிருக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
பத்திரிகை நிருபர்கள் வரிசையில் அமரலாமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

திரு. துரை முருகன் : அங்கத்தினர்கள் அவர்கள் இருக்கும் இடத்தை விட்டுவிட்டு அதிகாரிகள் இருக்கும் இடத்திலோ அல்லது பத்திரிகை நிருபர்களுடைய இடத்திலோ சென்று அமர்ந்து பேசக் கூடாது. அந்த வரிசையிலே போய் உட்காரக் கூடாது. அப்படியானால் நானும் போய் உட்கார்ந்து கொஞ்சம் விளக்கம் கேட்க வேண்டும்.

(மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் எழுந்து சென்று பத்திரிகை நிருபர்கள் உட்காரக்கூடிய இடத்தில் அமர்ந்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி உட்காரக் கூடாதுதான். ஏதோ அவசரமாகப் போய் இருப்பார். வந்து விடுவார். அங்கத்தினர்கள் அவரவர்களுடைய இடத்தை விட்டு வேறு இடத்திலே அமர்வது சரியல்ல, ஆகவே, அவரவர்கள் இடத்தில் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, அங்கத்தினர்களது இடத்தில் வேறு அங்கத்தினர்கள் உட்காரலாமே தவிர வெளியார் யாரும் உட்காரக்கூடாது. அவை நடைபெறும்போது ஆனால் உறுப்பினர்கள் மற்ற இடங்களில் சென்று அமர்வது என்பது அவையினுடைய மரபுக்கு முழு அளவில் ஒத்தது அல்ல. ஆகவே, வேறு இடங்களில் உட்காராமல் இருப்பது நல்லது என்று தான் தாங்கள் ஆலோசனை கூற வேண்டும். ஆனால் உறுப்பினர்களை இடங்களைச் சம்பந்தப்படுத்திப் பேசுவது அவையின் உரிமைக்கு மாறுபட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நானும் அதைத் தான் சொன்னேன். உட்காரக் கூடாது என்றுதான் சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : தாங்கள் துணைத் தலைவராக இருப்பதனால் தாங்கள் சொல்கிற கருத்து நாளைக்கு வேறுவிதமாக பொருள்படக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அவை உறுப்பினர் உட்காரும் இடங்களில் வேறு உறுப்பினர்கள் உட்கார்ந்தாலும் வெளியார் யாரும் அவை நடக்கிறபோது உட்காரக் கூடாது. ஆனால் உறுப்பினர்கள் வேறு இடத்திலே உட்காருவது மரபுக்குத்தான் ஏற்றதல்ல. ஆக இந்த இரண்டையும் பிரித்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேராசிரியர் அவர்கள் சொல்வதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அங்கத்தினர்கள் இருக்கின்ற இடங்களில் வேறு யாரும் அமருவதற்கு விதிகளிலே இடம் கிடையாது. அது விதிக்கு முரணானது. அதே போல் அதிகாரிகள் இடத்திலோ அல்லது பத்திரிகை நிருபர்களின்

இடத்திலோ மாண்புமிகு உறுப்பினர்கள் அமர்ந்திருப்பது மரபுக்கு தவறான காரியம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே, அவரவர்கள் அவரவர்கள் இடத்திலே அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தயவுசெய்து அவர்களிடத்திற்கு வந்து அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களும் கண்டிப்பாக எழுந்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு ரா. உமாநாத் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் அங்கே போய் உட்கார்ந்தது சம்பந்தமாக இந்தப் பிரச்சினை கிளம்பி இருப்பதனால் நான் எக்ஸ்பிளயின் பண்ண வேண்டி இருக்கிறது. அவையின் சீட்டிலே உட்காருவதற்கும் சேம்பருக்குள் வருவதற்கும் யாருக்கும் உரிமை கிடையாது. பட் அது ப்ரெஸ் காலரி. ப்ரெஸ் காலரி மாதிரியல்ல ஆபீஸர்ஸ் காலரி. நான் 9 ஆண்டுக் காலம் பாராளுமன்றத்திலே உறுப்பினராகப் பணியாற்றி இருக்கிறேன். There is difference between Officers' Gallery and Press Gallery. There are Members of Parliament who are Press Correspodents also. For example 'Theekkadir'. There are Accredited Representatives among the Members of Lok Sabha also. ஆகவே அவர்கள் ப்ரெஸ் காலரியிலே போய் உட்காருவது இந்த அவையினுடைய அந்தஸ்துக்குக் குறைச்சல் என்று சொல்வது சரியல்ல.

ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், மரபு என்று சொல்கிறபோது எப்போதும் அங்கே போய் உட்காருவது என்றால் மரபு கொஸ்டின் வரும். இது அப்படியல்ல.

It is only for a few minutes, for a certain purpose ஆகவேதான் அங்கே சென்று உட்கார்ந்தேன். ஸ்போர்ட்டிங்காக எடுப்பது என்றால் பிரச்னை இல்லை.

I am absolutely certain that Officers' Gallery is entirely different from Press Gallery அங்கே உட்காருவது என்பது அவை உறுப்பினர் அந்தஸ்துக்கு குறைச்சல் இல்லை. அப்படிக் குறைச்சல் என்று சொன்னால் அது ப்ரஸ் காலரியை அவமானப்படுத்துவதாக, அது அவமானகரமான ஒரு இடம் மாதிரி இன்பரன்ஸ் வரும்.

Inference against the Press whose freedom of expression and their status, we are here to protect.

தவறு செய்யும்போது கண்டிக்கிறோம். அது குறைச்சலான இடம் மாதிரி இன்பரன்ஸ் கொடுப்பது தப்பு.

திரு. க. அன்பழகன் : திரு உமாநாத் அவர்கள் கூறிய கருத்துபற்றிய உணர்வை ஏற்றுக்கொள்கிறேன். அந்த உணர்வுக்கு மாறுபாடு இல்லை. அங்கே உட்காருவது தகுதிக் குறைவு என்ற கருத்தில் பேசப்படவில்லை. பத்திரிகை நிருபர்களுக்கு ஏற்கெனவே உள்ள இடம் காணாது. திரு. உமாநாத் அவர்கள் பத்திரிகை நிருபர்கள் உட்காருகிற இடத்தில் உட்கார்ந்தால் மாற்றுக் கட்சித் தோழர்களும், திருவாளர்கள் துரைமுருகன், ரகுமான்கான் போன்றவர்களும் சில நண்பர்களைக் கண்டுபேச அங்கே போய் உட்கார்ந்தால் அங்கே நிருபர்களுக்கு இடமில்லாமல் போய்விடும். அந்த இடத்திற்குப் பாதுகாப்புத்தர உறுப்பினர்கள் ஒத்துழைக்க தலைவர் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

திரு ரா. உமாநாத் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். அவர்களுக்கு இடம் இல்லாமல் போய்விடும் என்று சொன்னார்கள், கரெக்ட். அவர்கள் அனுமதித்தால் என்று சொன்னார்கள், கரெக்ட், அவர்கள் அனுமதித்தால், அவர்கள் அனுமதித்தார்கள், உட்கார்ந்தேன்.

திரு எஸ். ஆர். இராதா : பத்திரிகை நிருபர்கள் இடத்தில் உட்காருவதுபற்றி திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பத்திரிகை நிருபர்களுக்கு இன்னார் இன்னார் இன்னின்ன இடத்தில் உட்கார வேண்டும் என்று அவர்களுக்கு இடம் ஒதுக்கி அனுமதி தந்திருக்கிறார்கள். அப்படி அனுமதிக்கப்பட்ட இடத்தில் வேறு ஒருவர், நிருபர் அல்லாதவர் அல்லது சம்பந்தப்படாதவர், அனுமதி இல்லாமல் உட்காரமுடியாது. எப்படி இந்த மன்றத்திற்குள் வந்து மற்றவர்கள் உட்கார முடியாதோ அதேமாதிரி அந்த இடத்திலும் மற்றவர்கள் உட்காருவதை அனுமதிக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். பத்திரிகை நிருபர்கள் இடத்தில் அமர்வதாக இருந்தால்—அவர்கள் நண்பர்களாக இருந்தால் கூட—அதற்கான அனுமதி அவர்களுக்கு இருக்குமானால், அதற்கான அனுமதிச் சீட்டு இருக்குமானால் அந்த இடத்தில் அமர்வதில் எனக்கு ஆட்சேபணையில்லை.

திரு ரா. உமாநாத் :
I d'd not go to Press Gallery for the purpose of reporting. I am not alsc an accred ted Press Reporer.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சும்மா பேசுவதற்கு அங்கே உட்காரமுடியாது. It is not proper

பத்திரிகை நிருபராக இருந்தால், பாஸ் இருந்தால், அனுமதி இருந்தால், பரவாயில்லை. உங்களுக்கு அனுமதிச் சீட்டு இல்லை என்று நினைக்கிறேன். உங்களுக்கு அனுமதிச் சீட்டு இருக்கிறதா?

திரு ரா. உமாநாத் : நான் ப்ரஸ் ரிப்போர்ட்டர் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அனுமதி இல்லாமல் உட்காரக் கூடாது.

திரு ரா. உமாநாத் : நான் அக்ரெடிட்டட் ப்ரஸ் ரெப்ரசென்டேட்டிவ் அல்ல. அங்கே, நான் ப்ரஸ் ரிப்போர்ட்டிங்-க்குப் போகவில்லை. ஆகவே அந்த க்வஸ்டின் இல்லை. ஒன்றைச் சொல்வதற்காகவும், அந்தக் கவரை வாங்குவதற்காகவும் அங்கே உட்கார்ந்தேன். துணைத் தலைவர் அவர்கள் சொன்னது சரி, ரிப்போர்ட்டிங்-க்காகப் போகவில்லை.

திரு ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டிருந்தாலும் இந்த அவையில் இதற்கு முன்னதாக சில நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது இந்தச் சந்தர்ப்பத்தில் உகந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 10-30]

ஏதோ அங்கத்தினர்கள் பிரஸ் காலரியில் சென்று அவர்களுடன் கலந்து சில கருத்துக்களைத் தெரிந்து கொள்வதில் ஏற்படுகின்ற சில சிக்கல்களைப் பற்றி இதற்கு முன்னால் சொல்லியிருக்கிறார்கள். அதாவது பிரஸ் காலரியில் இருக்கின்றவர்கள் தங்கள் கருத்துக்களை அங்கத்தினர்களுக்குச் சொல்லிக் கொடுத்து அதை அங்கத்தினர்கள் இங்கே பேசுகின்ற நிலைமை ஏற்படுகிறது என்ற ஒரு நிகழ்ச்சி முன்னால் நடைபெற்றிருக்கிறது. அப்போது இப்படி செய்வது சரியல்ல, நேரடியாக அவர்களிடம் சென்று பேசுவது முறையாக இருக்காது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவைப்பட்டால் அவர்களை வெளியே அழைத்துப் பேசுவது தான் முறையாக இருக்குமே தவிர நேரடியாக அவர்களிடம் சென்று கலந்து கொள்வது முறையாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: No. No It 's a reflection on me. I am entitled to say certain things.
அவர் சொல்வதிலிருந்து என்ன தெரிகிறது. அவர்கள் ஏதோ சொல்லிக் கொடுத்து, நான் இங்கு வந்து பேசுகிறேன் என்று சொல்வதாக இருக்கிறது

It means that a Member is subjective to etraction by Pressmen. It affects the privilege of the House

இப்படிச் சொல்வது இந்த அவையினுடைய மதிப்பையே பாதிப்பதாக இருக்கிறது. நான் கொடுத்திருந்த ஒரு கவரை நான் வாபஸ் பெறத்தான் அங்கு போயிருந்தேன். அவ்வளவு தான். வேறு எதுவுமில்லை. The member's speech is a reflection on the whole House.

[1978 மார்ச் 18

திரு துரை முருகன் : பிரஸ் காலரியில் பத்திரிகை நிருபர்கள் உட்காருவதைப்பற்றிச் சொன்னீர்கள். 'தினகரன்' பத்திரிகையின் ஆசிரியர் கந்தசாமி அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அவர், அவர் இதனுடைய மானேஜிங் டைரக்டராக இருக்கிறார். அவர் பிரஸ் காலரியில் உட்காருவதற்கு விரும்பிய நேரத்தில் அனுமதிக்கப்படவில்லை. பின்னால் அவர் தினகரன் பத்திரிகையின் எடிட்டர் என்று எழுதிக் கொடுத்தோம், அதற்குப் பின்னாலும் அவர் உட்காருவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆகவே பிரஸ் காலரியில் நானும் பத்திரிகை நிருபர் தான் என்று யாரும் உட்கார்ந்துவிட முடியாது என்பது தான் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகை நிருபர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் வேறு யாரும் உட்காரக் கூடாது தான், பொதுவாக உறுப்பினர்கள் எங்கு வேண்டுமென்றாலும் உட்காரலாம் என்று சொன்னதை வைத்துக் கொண்டு, விளையாட்டாக நீங்கள் உடனே அதிகாரிகள் காலரியில் போய் உட்கார்ந்து கொள்வது சரியா?

திரு துரைமுருகன் : விளையாட்டுத்தனமாக நான் போனேன் என்று நீங்கள்எப்படிச் சொல்லலாம்? அதைநான் வன்மையாகக் கண்டிக்கிறேன். விளையாட்டுத்தனம் என்று நீங்கள் சொன்னதை நீங்கள் திரும்பப் பெற வேண்டும்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : No. No. நான் விளையாட்டுத்தனம் என்று சொல்லவில்லை. விளையாட்டாக என்று தான் சொன்னேன்........உட்காருங்கள்.

திரு துரை முருகன் : You are not my teacher. என்னைப் பார்த்து விளையாட்டுத்தனம் என்று நீங்கள் எப்படிச்சொல்லலாம்? எனக்கும் உங்களைப் போல் பொறுப்பு இருக்கிறது, உங்களை விட நான் ஸீனியர் தான்......எப்படி விளையாட்டுத்தனம், சிறு பிள்ளைத்தனம் என்று சொல்லலாம் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளையாட்டுத்தனம் என்று நான் சொல்லவில்லை. விளையாட்டாக அதாவது just a joke ஜோக் செய்வது போல் போனீர்கள் என்று தான் சொன்னேனே தவிர, விளையாட்டுத்தனமாகப் போனீர்கள் என்றோ, சிறுபிள்ளைத்தனமாகப் போனீர்கள் என்றோ நான் சொல்லவில்லை. அந்த முறையில் அந்த எண்ணத்தில் நான் சொல்லவும் இல்லை. உட்காருங்கள். இதை நான் சீரியஸாகச் சொல்ல வில்லை. ஜோக் என்ற முறையில் தான் சொன்னேன், உட்காருங்கள்.

திரு க. அன்பழகன் : தாங்கள் சொன்னது சீரியஸ் என்ற அளவில் அல்ல, ஜோக் என்ற அளவில் தான் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Yes. Yes. Just a joke I said.

1978 மார்ச் 18]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழில் பேச்சு வழக்கில் உள்ள சில சொற்களைச் சொல்லும்போது, தம்மைத் தாழ்வு படுத்துவதாகப் பொருள் கொள்ளும்படியான அளவுக்கு உணர்வு வருகிறது. ஆங்கிலத்தில் சொல்லியிருந்தால் சரியாக இருந்திருக்கும். எனவே தாங்கள் "நாட் சீரியஸாக" என்னும் பொருளில்தான் கூறினீர்கள் என்பதால், அது தவறான பொருளை அல்லது தவறான உணர்வுகளை ஏற்படுத்தும்படியான அளவில் அமையாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சீரியஸாக இதைச் சொல்லவில்லை, ஜோக்-காக செய்து விட்டீர்களே என்ற அளவில் தான் சொன்னேனே தவிர, விளையாட்டுத் தனமாகச் செய்தீர்கள் என்றோசிறுபிள்ளைத்தனமாகச் செய்தீர்கள் என்றோ அந்த முறையில் சொல்லவில்லை.

ஆக, இந்த விஷயத்தில் என்னுடைய ரூலிங் என்னவென்றால் உறுப்பினர்கள் யாராவது பத்திரிகை நிருபர்களிடம் பேச வேண்டுமென்றால், அவர்களை வெளியே அழைத்துத் தனியாகப் பேசுவது தான் முறை, அது தான் மரபாக இருந்து வந்திருக்கிறது. அந்த முறையை நாம் பின்பற்றுவது தான் சரியாக இருக்கும். ஆகவே, பத்திரிகை நிருபர்கள் இருக்கும் இடத்திலோ அல்லது அதிகாரிகள் இருக்கும் இடத்திலோ எந்தவிதமான அனுமதியுமில்லாமல் போயிருப்பது முறையற்றதாகத்தான் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு தாழை மு. கருணாநிதி ....

திரு தாழை. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசியல் சட்டத்தில் பெற்றிருக்கின்ற உரிமைகள் காரணமாகத்தான் பலர் சட்டமன்ற உறுப்பினர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் வர முடிகிறது, அதைப் போலத்தான்........

(திரு வி. கே. கோதண்டராமன் அவர்கள் எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப்பற்றி பேசி முடிந்தாகிவிட்டது, இப்போது என்ன புதியப் பிரச்னை ?

திரு வி. கே. கோதண்டராமன் : திரு உமாநாத் அவர்கள் பத்திரிகை நிருபர்கள் இருக்கும் இடத்திற்குப் போய் பேசிக் கொண்டிருந்ததற்காக வந்த பிரச்னையில், இது மரபுக்குச் சரியாக இல்லை என்று சொன்னீர்கள். வரவேற்கிறேன். அதைப் போல், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் டக்கவாட்டில் அவர்கள் இடத்திலேயே இருந்து கொண்டு பத்திரிகை நிருபர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார்களே, அது மட்டும் சரியா ? அதுவும் சபையின் மரபுக்கு சரியில்லை. ஆகவே அதுவும் மரபுக்கு சரியில்லை. என்று சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இங்கே உட்கார்ந்து கொண்டு, அங்குள்ள பத்திரிகை நிருபர்களிடம் பேசுவது என்பது முறையல்லாத காரியம்தான். அப்படி யாரும் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி யாராவது பேசும்போது, பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால், அதற்கு நான் தீர்ப்பளிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு ஏ. ரகுமான்கான் : Sir, I am on a point of order.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள்.

திரு ஏ. ரகுமான்கான் : I am entitled to rise a point of order. He has made an allegation against me. ஸ்பெசிபிக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின்மேல் சொல்கிறார். That is an allegation. ஆதாரம் இல்லாமல் இப்படிச் சொல்லலாமா என்று.....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். நீங்கள் அப்படிப் பேசுவதை நானே பார்த்திருக்கிறேன். எனவே, இவை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லி, ஒரு பெரிய பிரச்சினையாக்க வேண்டாம். தயவு செய்து உட்காருங்கள்.

4. 1978-79ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

திரு தாழை மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அதிக நேரமாகிவிட்டது. எனக்குக் கொஞ்சம் அதிக நேரம் கொடுங்கள்.

அரசியல் சட்டத்திலே பாதுகாப்பு இருக்கின்ற காரணத்தினாலேதான், குறைவாக இருந்தாலும்கூட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் வர முடிகின்றது. ஆனால், அதே நேரத்திலே ஊராட்சியின் தலைவர்களாகவோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களாவோ வர முடியவில்லை. ஆகவே, அரசியல் சட்டத்திலேயும், தம்முடைய சட்டத்திலேயும் இதற்குப் பாதுகாப்பு அளித்து ஊராட்சிகளின் தலைவர்களாகவும், ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களாகவும் வருவதற்கு ரிசர்வேஷன் என்ற அடிப்படையில் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மாவட்டக் கலெக்டராகக் கூட வர முடிகின்றது. ஆனால் கிராமங்களில் கிராம அதிகாரியாக வர முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி, இந்த அமைப்புகளிலும் 18 சதவீதம் கிராம அதிகாரிகள் வரக் கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 மார்ச் 18] [திரு. தாழை மு. கருணாநிதி]

சர்வீஸ் கமிஷனிலே இதுவரை திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சி இருந்தபோது வயது வரம்பு கிடையாது. தாழ்த்தப்பட்ட
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான வயது வரம்பும்
இல்லாத நிலைமை இருந்தது. ஆனால், இன்றையத் தினம் எமர்
ஜன்சி ஆட்சிக்குப் பிறகு வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்
கிறது. இந்த நிலைமையை மாற்றி, திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியில் இருந்ததுபோல், திருத்தி அமைக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் ஆட்சிக் காலத்தில், சர்வீஸ் கமிஷனிலே குரூப் 1
தேர்வு வருகிறது என்று சொன்னால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு
இத்தனை பேர்களுக்கு ஆர். டீ. ஓ. கொடுக்கப்பட்டிருக்கிறது
என்றும், வன்னியர்களுக்கு இத்தனை பேர்கள் என்றும்,
முக்குலத்தோருக்கு இத்தனை பேர்கள் என்றும் ஒரு அடிப்படையில்
ஒதுக்கப்பட்டு, வேலைகள் கொடுக்கப்பட்டன. அதைப் போல்,
இந்த ஆட்சியிலும் கொடுக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசன நலப் பள்ளிகள் இருக்கின்றன. இந்த அரிசன
நலப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் நான் கருத்துக்கள் சொல்ல
வேண்டுமென்று சொன்னால், ஒன்றியங்களிலே இணைத்துவிட்டு.
அதற்கு மாறாக நம்முடைய எல்லாக் கிராமப் பகுதிகளிலும்
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, இளம் குழந்தைகளுக்கு அறிவு
வளர்ச்சி ஏற்படுகின்ற முறையிலே பாலர் பள்ளிகளை எல்லாக்
கிராமங்களிலும் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும்,
தாழ்த்தப்பட்ட மக்கள் அதிக அளவிலே படித்துப் பயன்படத்தக்க
அளவிற்கு, தங்கும் விடுதிகள் அமைத்துக் கொடுப்பார்களானால்,
நிச்சயமாக இந்தச் சமுதாய மக்கள் நல்ல முறையிலே கல்வியைப்
பெறுவதற்கான சூழ்நிலை உருவாகும் என்பதை நான் இந்த
நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசாங்கம் உதவி பெறுகின்ற வருவாய்ச் சலுகையை
ஆறு ஆயிரத்திலிருந்து 9 ஆயிரமாக உயர்த்தி யிருக்கிறது. ஆனால்
நம்முடைய தமிழக அரசாங்கத்தில் 3,000 என்றிருக்கிறது.
நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன். ஒரு சாதாரண கடைநிலை ஊழியர்
ஆனாலும், அல்லது இடைநிலைப் பள்ளி ஆசிரியராக இருந்தாலும்
அவர்கள் பெறுகின்ற சம்பளம் இந்த 3,000-க்கும் அதிகமாக
வருகின்றது. ஆகவே, அவர்களுடைய பிள்ளைகளுக்கு இந்தச்
சலுகைகள் கிடைக்க நிச்சயமாக வாய்ப்பில்லை. ஆகவே, மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு, இந்த
3,000 ரூபாய் என்பதை 6,000 ரூபாயாக உயர்த்தி, அந்தத்
தன்மையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[தாழை மு. கருணாநிதி] [1978 மார்ச் 18

[முற்பகல் 10·40]

அவசர காலத்தில் மத்திய அரசாங்கம் இரண்டு பிள்ளைகளுக்கு மட்டுந்தான் உதவித் தொகை கொடுப்போம் என்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். அதை மறு பரிசீலனை செய்வதற்கான சூழ்நிலையை இந்த அரசாங்கம் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன்கள் நம்முடைய அரிசன நலத்துறையின் மூலம் கொடுக்கப் படுகிறது. அப்படிக் கொடுக்கப்படுகிற கடன்கள் உண்மையிலேயே பயன்தரத்தக்க அளவு நிலைமை ஏற்பட்டிருக்கிறதா என்றால் ஓரளவு இல்லையென்று தான் சொல்ல வேண்டும். ஆகவே, தொழிற்கல்விக்குப் படித்த இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்குத் தொழில் செய்ய எந்த அளவுக்குப் பணம் தேவையோ அந்த அளவுக்குக் கொடுத்து அவர்கள் சுய நம்பிக்கையோடு தொழில் நடத்தும் தன்மையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பால் சொசைடிகள் கிராமப் பகுதிகளில் உருவாக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே தவிர, நடைமுறையில் செயல்படுத்துவதாக நிச்சயமாக இல்லை. என்னுடைய ஊருக்கு அவ்வாறு சொசைடி அமைக்க வேண்டுமென்று நான் பல நேரங்களில் எடுத்துச் சொன்னேன். ஆனால் அது உண்மையில் செயல்படுத்தப்படவில்லை. ஆகையால் அந்தத் துறையில் இருக்கிற மரியாதைக்குரிய அதிகாரிகள் எல்லாம் கவனம் செலுத்தி எல்லாக் கிராமப் பகுதிகளிலும் பால் சொசைடிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் கொடுக்கலாம், கடன் வாங்கலாம் என்று சொல்லுகிறார்கள். அதைச் சொல்லும்போது நிச்சயமாக மகிழ்ச்சி தரத்தக்கதாக இருக்கிறதே தவிர, எந்த ஒரு அரிசனக் குடிமகனும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடம் இருந்து கடனைப் பெற்று தொழில் செய்வதாக நிச்சயமாகத் தெரியவில்லை.

இரண்டாயிரம் வீடுகள் கட்டும் திட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கலைஞர் ஆட்சிக் காலத்தில் செய்த திட்டத்தை இவர்கள் தொடருகிறார்கள். உண்மையில் பாராட்டுகிறேன். ஆனால் யானைப் பசிக்கு சோளப்பொறி போல் பல லட்சக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற இந்தத் தமிழகத்தில் இரண்டாயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்போம் என்ற திட்டம் நிச்சயமாக மக்களுக்கு மகிழ்ச்சி தரத்தக்கவை அல்ல என்று சொல்ல விரும்புகிறேன். அதிக அளவில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

1978 மார்ச் 18] (தாழை மு. கருணாநிதி)

அடுத்து, அரிசனங்களுக்குப் பட்டா கொடுக்கிறபோது கிராமப் பகுதிகளில் மட்டுந்தான் கொடுக்கப்படுகிறது. நகரங்களிலும் நகராட்சிப் பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களுக்கு பட்டாக்கள் வழங்கப்படுவதில் பலசட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துகிற நிலைமை இருக்கிறது. அதைப் பரிசீலித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பட்டாக்களை வழங்கும் நிலைமையை உருவாக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொத்தடிமையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்வேன்—கொத்தடிமை என்பது எமர்ஜன்சி காலத்தில் வானொலி மூலமாகவும் பத்திரிகை மூலமாகவும் ஒலிக்கப்பட்ட திட்டமாகும் அது. உண்மையில் கொத்தடிமை நீக்கப்பட்டிருக்கிறதா? கலைஞர் அரிசன மக்களுக்குப் பல காரியங்களைச் செய்தார். அதை மாற்றுவதற்காக கொத்தடிமை என்று சொல்லுகிறார்கள். பண்ணையாட்களாக நிரந்தரமாக வேலை செய்து கொண்டிருப்பவர்களைக் கொத்தடிமைகள் என்று சொல்கிறார்கள். வேண்டுமென்றால் அவர்களுக்குத் தெரிந்தவர்கள் இருக்கலாம். நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

யார் கொத்தடிமையை நீக்குவதாகச் சொன்னார்கள் என்று யோசித்துப் பாருங்கள். கபிஸ்தலம் மூப்பனார் போன்றவர்கள் பூண்டி வாண்டையார் போன்றவர்கள் குன்னியூர் சாம்பசிவம் போன்றவர்கள் நிரம்பியிருக்கும் காங்கிரஸ் கட்சியில் கொத்தடிமையை நீக்குவதாகச் சொன்னார்கள்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். பிரிகளைக் கட்டி வைத்து சாட்டையால் அடித்து, சாணிப்பாலை வாயிலே ஊற்றி கொத்தடிமையை நீக்குவார்கள்! அப்படிப்பட்ட சோஷலிசச் சிறப்புக்கள் கொண்டவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் இந்தக் கொத்தடிமையை நீக்குவதாகச் சொன்னார்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் இல்லாத எங்களுடைய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. மூப்பனாரைப் பற்றிப் பேசலாமா?

திரு. தாழை. மு. கருணாநிதி : நான் மூப்பனாரைப் பற்றிச் சொல்லவில்லை. அவர்களுடைய பாரம்பரியம் பற்றித்தான் சொன்னேன். அவர்களுடைய பாரம்பரியம்—அப்படிச் செய்தார்கள்.

திரு. டி. இராமசாமி : அவரைப் பற்றி மிகத் தவறான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் அதைச் சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்

திரு. தாழை மு. கருணாநிதி : நான் மூப்பனாரைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மரபு வழியாக வந்த பாரம்பரியத்தைப் பற்றித்தான் சொன்னேன். ஆகவே இவைகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்காமல் உண்மையான சமுதாய இழிவு எண்ணத்தோடு இன்றைய தினம் அந்தச் சமுதாயம் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை உணர வேண்டும்.........

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, ஏதோ அந்த பாரம்பரியத்திலே பியூடல் சிஸ்டத்திலே அப்படிச் செய்துள்ளார்கள் என்று சொல்லலாமே தவிர இப்போது இருக்கிற மூப்பனாரும் செய்தார் என்ற முறையிலே சொல்லக் கூடாது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூப்பனார் செய்தார் என்று குறிப்பிலே இருக்குமானால் அவை குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. தாழை மு. கருணாநிதி : மூப்பனார் பற்றி நான் சொல்லவில்லை. அவர் என்னுடைய மரியாதைக்குரியவர். தாழ்த்தப்பட்ட சமுதாயம் எப்படி இழிவுபடுத்தப்படுகிறது என்று பார்க்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான் சில குடும்பங்கள் மட்டுமே மலம் அள்ள வேண்டும், பறை அடிக்க வேண்டும், மாடுகள் இறந்து விட்டால் தூக்கவேண்டும், யாராவது இறந்து விட்டால் அவர்களுக்கு குழிவெட்ட வேண்டும் என்ற மோசமான நிலைமை இருக்கிறது.

ஏதோ அடிமை நிலையை மாற்றுவதற்காகத் திட்டம் தீட்டுகிற முறையில் பண்ணையாட்களாக இருக்கிறவர்களைப் பற்றி மட்டும் சொல்லிவிட்டு கொத்தடிமையை நீக்கிவிட்டோம் என்று வாய்ச் சவுடாலாகச் சொல்லாலமே தவிர, இந்தச் சமுதாயத்தை அவைகள் வாழ வைக்க முடியாது.

நாங்கள் சிறைச்சாலையிலே இருந்தபோது ஏதோ சமபந்தி போஜனம் என்ற செய்தியைப் பத்திரிக்கையிலே பார்த்தோம். அந்த போஜனம் சரியான ஐய்யர் ஹோட்டலில் இருந்து செய்து கொண்டுவந்து போடப்பட்ட உணவைச் சேரியிலே சாப்பிட்டுவிட்டு சமபந்தி போஜனம் என்று சொன்னார்கள் என்று பார்த்தோம். இன்றைக்கு ஜாதி உணர்வுகள் அழிந்துவிட்டதாகக் கருத கூடாது. இன்னும் அவை இருந்து கொண்டிருக்கின்றன.

தீண்டாமை ஒழிப்புக்கு மாவட்ட போலீஸ் அலுவலகத்திலே அந்த அலுவலகம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கே அது எங்கே இருக்கிறப் என்று தெரியவில்லை. அப்படி இருக்கிறபோது மற்றவர்களுக்கு

எப்படித் தெரியும்? அந்த மாவட்ட அலுவலகம் எங்கே இருக்கிறது என்று தெரியாது? ஆகவே ஒவ்வொரு வட்ட அளவிலேயும் சரக அளவிலேயும் போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள் அதற்காக இருக்க வேண்டும். அப்போது தான் தீண்டாமை எங்கெங்கு தலைதூக்குகிறதோ அப்போது உடனடியாகத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் தான் இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் தரப்படுகிற சம்பளம் மிகமிகக் குறைவாக இருக்கிறது. முத்தரப்பு மாநாட்டை அதற்காகக் கூட்டி சம்பளவிகிதத்தை மாற்ற வேண்டுமென்றும் அதைச் சட்டப்பூர்வமாக்க வேண்டுமேன்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சார வசதிகள், ரோடு வசதிகள், குடிநீர் வசதிகள் அனைத்தும் செய்துதரப்பட வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக கால ஆட்சிக் காலத்திலே கூட சிறப்புத் திட்டமாக சுடுகாட்டுக்குப் போகிற வழி, ரோடு வசதியை செய்துதரவேண்டுமென்ற திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்போது அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜாதியை ஒழிக்கிறோம் என்று சொல்கிறார்கள். எங்கள் சிங்கிபட்டி சானிடோரியத்திலே காச நோய் மருத்துவ மனையிலே பணியாற்றி வருகிற தாழ்த்தப்பட்ட ஊழியர்கள் அந்த நிர்வாகத்தினரால் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள், எத்தனையோ முறைகள் எடுத்துச் சொல்லியும்கூட இந்த நிலைமை மாற்றப்படவில்லை. அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள், இந்தக் கொடுமைபற்றி மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்ற இங்கே கேள்விகள் கேட்ட நேரத்தில் அது இந்ததுறைக்குச் சம்பந்தமில்லை என்று சொல்கிறார்கள். அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அதற்கு சேர்மன் ஆக இருக்கிறார், அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தி நிச்சயமாகப் பரிசீலிக்க வேண்டும்.

நாகையிலே எஸ். பீ. அலுவலகம் இருக்கிறது. அதிலே படித்தவர்கள் எப்படி ஜாதி வெறியர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக, அங்கே பணியாற்றுகிற உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரை அந்த எழுத்தரைப் பார்த்து, ஜாதியின்மீது தாக்கிப் பேசியிருக்கிறார், அவரைக் கேவலமாகப் பேசியிருக்கிறார். அதைப் பற்றி ஐ.ஜி. மூலமாக எடுத்துச் சொல்லியும்கூட என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றால் ஏதோ பைல் லேட் செய்யப்பட்டால் அதற்காக என்ன மெமோ கொடுப்பார்களோ அதை போன்றுதான் ஒரு மெமோ கொடுக்கப்பட்டிருக்கிறது.

[திரு. தாழை மு கருணாநிதி] [1978 மார்ச் 18
[முற்பகல் 10–50]

இப்படிப்பட்ட நிலைமைகளை யெல்லாம் களைந்தெறிய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. தாழை மு. கருணாநிதி : அடுத்து, அரிசன நலப் பள்ளி
களில் பணியாற்றுகிறார்கள் என்ற காரணத்திற்காகவோ
என்னவோ தெரியவில்லை. அந்த ஆசிரியர்களுக்கெல்லாம்—மற்றத்
துறையிலே வேலை பார்க்கின்ற ஆசிரியர்களுக்கு செலக்‌ஷன் கிரேட்
கொடுக்கப்படுகிறது, ஆனால் அரிசன நலப் பள்ளிகளில் வேலை
செய்யும் ஆசிரியர்களுக்கு—செலக்‌ஷன் கிரேட் கொடுக்கப்பட
வில்லை. அதைப் பரிசீலித்து அவர்களுக்கும் கொடுக்க வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்
டும்.

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியில் சூரனூர் என்ற
கிராமத்தில் ஏறத்தாழ 80 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்கள்
வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில் உயர்நிலைப் பள்ளி அமைக்க
வேண்டுமென்று நான் பலமுறை கோரிக்கையைச் சொல்லியிருக்
கிறேன். அதை அமைச்சரவர்கள் கவனித்து சூரனூரில் உயர்
நிலைப்பள்ளி அமைப்பதற்கான திட்டத்தைத் தீட்டித் தர
வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. வீ. சின்னய்யா : மதிப்பிற்குரிய சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது அரிசன நல மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில வார்த்தைகள் பேச முன் வருகிறேன்.

இப்பொழுது 1978–79 ஆம் ஆண்டினுடைய வரவு-செலவுத் திட்டத்தில் அரிசன மக்களுக்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கியது பற்றி இந்த அரசை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். அது போலத் தமிழ்நாட்டில் 20 ஆண்டுக் காலமாக காங்கிரஸ் ஆட்சி செய்த காலத்தில்கூட இவ்வளவு தொகை ஒதுக்கியது கிடையாது. அதற்கடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்பதாண்டுக் காலமாக தமிழகத்தை ஆண்டபொழுதுகூட இந்தத் தொகையை ஒதுக்கியது கிடையாது. இப்பொழுது இவ்வளவு தொகை ஒதுக்கி தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களும், பழங்குடி மக்களும் முன்னேற வேண்டுமென்ற ஒரு நல்லெண்ணத்தோடு கொண்டுவந்த இந்த மானியக் கோரிக்கையை, வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கிறேன்.

1978 மார்ச் 18] [திரு. வீ. சின்னையா]

இப்பொழுது மாணவர்கள் விடுதி 24 கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உண்மையிலேயே மாணவர்கள் பாழடைந்த கட்டிடத்தில் தங்கி படித்துக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு விடுதி கட்டுவதானது மிகமிக அவசியம். அந்த மாணவர்கள் நல்ல முறையிலே படிக்க வேண்டுமென்றால் அந்த விடுதிகள் நல்ல முறையிலே அமைய வேண்டும். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 24 விடுதிகள் போதாது. இன்னும் அதிகப் படியாக விடுதிகள் கட்டப்பட வேண்டும்.

அதுபோல தமிழ்நாடு அரிசன மக்கள் குடியிருப்புக்காக 2·2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை உண்மையிலேயே நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், தமிழ்நாடு அரிசன மக்களுக்காகக் கட்டப்படக்கூடிய வீடு நல்ல வீடா என்றால் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காரணம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்ட வீடுகள் கரம்பையால் கட்டப்பட்டன. சிமெண்ட் என்ற பெயரில் கரம்பையினால் கட்டப்பட்டு நாளடைவில் அந்த வீடுகள் கரைந்து கொண்டிருக்கின்றன.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், புதுக்கோட்டை மாவட்டத்தில், திருமயம் தாலுக்காவில் விராச்சிலை என்ற இடத்தில் கட்டப்பட்ட வீடுகள் கரைந்து விட்டன. ஆகவே, உடனடியாக அமைச்சரவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு அந்த வீடுகளை மீண்டும் புதுப்பித்துக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மனைகள் வாங்குவதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மனைகள் வாங்க கிராம மக்கள் விண்ணப்பித்தால் அது சரியாகப் பரிசீலனைக்கு வருகிறதா இல்லையா என்று தெரியவில்லை. ஒரு மாதம் அல்ல, ஒரு ஆண்டுக் கணக்கில்கூட பதில் வருவது கிடையாது. ஆனால், மாவட்ட அரிசன நல அதிகாரியைக் கண்டு விண்ணப்பம் என்னவாயிற்று என்று கேட்டால், நான் பரிந்துரை செய்து மேலிடத்திற்கு அனுப்பியிருக்கிறேன், அது வரையில் பொறுத்திருங்கள் என்று சொல்கிறார். பிறகு, ''என்ன ஐயா, இவ்வளவு மாதங்கள் ஆகியும் வரவில்லை'' என்று கேட்டால், ''அதற்கு நான் என்ன செய்வது?'' என்று சொல்லித் தட்டிக் கழித்து விடுகிறார்கள். மாநில அளவில் இருக்கின்ற அரிசன நல அதிகாரிகள் அந்த விண்ணப்பத்தைக் கட்டிப் போடாமல் காலாகாலத்தில் அதைப்பரிசீலனை செய்து முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உழவு மாடுகள் வாங்க அரசு மானியம் வழங்குகிறது. அரிசன ஏழை எளிய மக்கள் விவசாயம் செய்வதற்காக, இந்த உழவு மாடுகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 10 சோடிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், புதுக்கோட்டை 5 தாலுக்காக்களைக் கொண்டது. சிறிய மாவட்ட

[திரு. வீ. சின்னையா] [1978 மார்ச் 18

மாக இருந்தாலும், ஒரு மாவட்டத்திற்கு 10 சோடி என்ற கணக்கில், ஒரு தாலுகாவுக்கு 2 சோடி என்று ஆகிறது. ஆனால், ஒவ்வொரு தாலுகாவிலும் நூற்றுக்கணக்கான மனுக்கள் வருகின்றன. மாடு வைத்திருக்கிறவர்களுக்கும், வசதி உள்ளவர்களுக்கும்தான் சீட்டுப் போட்டுக் கொடுத்து, அந்த சோடிமாடுகள் போய் விடுகின்றன. ஆகவே, அந்த நிலைமை மாற வேண்டும். சீட்டுக் குலுக்சல் முறையை மாற்றி, யார், யாருக்குக் கொடுக்க வேண்டுமோ, யார், யார் வாங்க சக்தியற்றிருக்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல், கிணறு வெட்ட மானியம் கொடுக்கப்படுகிறது. 20 ஆண்டுக் காலத்திற்கு முன்பாக, காங்கிரஸ் சர்க்கார் கொடுத்த மானியம் ரூபாய் 2,000. அதே போல், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும்போது, ரூபாய் 2,000தான். இப்பொழுதும் அந்த ரூபாய் 2,000 மானியம் கொடுப்பது மிகவும் நன்றாக இல்லை. குறைவாக இருப்பதால். உண்மையிலே, அன்றைக்கு இருந்த கூலி வேறு, இன்றைக்கு இருக்கிற கூலி வேறு. ஆகவே, ரூபாய் 2,000 வாங்கிவிட்டு, வேலையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். கடன் வாங்கி, வட்டி கூடக்கட்ட முடியாத நிலைமையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ரூ. 2,000/-ஐ, ரூ.5, 000/- ஆக்க வேண்டுமென்று, தமிழக அரசை, அரிசன நலத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்காக வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மின்சாரம் கிடையாது. கேட்டால், அடிக் கிணறு கணக்கைச் சொல்கிறார்கள். நிலத்தடி நீரை வெளியே எடுக்க முடியாத அளவு அரசாங்கம் செய்திருக்கிறது. அரிசனங்களுக்காக அந்த விதி முறைகளை நீக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது அரிசனங்கள் உயர வேண்டுமென்று, 18 சதவீதம் உத்தியோக முறையிலே அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், உத்தியோகம் 18 சதவீதம் என்று இருக்கிறதா என்றால், உண்மையிலே கிடையாது. உண்மையிலே, எம்பிளாய்மெண்ட் ஆபீசிலே சொல்வோமானால், உங்களுக்கு சீனியாரிட்டி இல்லை என்று சொல்கிறார்கள். உண்மையிலே, எம்பிளாய்மென்ட் ஆபீசில் ஓராண்டு பூர்த்தியானால், அவர்களுக்கு விதி விலக்கு அளித்து, அவர்கள் கொடுக்கக்கூடிய லிஸ்டிலே அனுப்பும்படி சொல்ல வேண்டும். அப்படி சொன்னால் தான் அரிசனங்கள் முன்னேறுவதற்கும், வேலை வாய்ப்பு பெறுவதற்கும் முடியுமே தவிர, இல்லையென்றால், அவர்கள் வேலை பெற முடியாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது போல், நகரசபைகளும் சரி, பஞ்சாயத்துக்களும் சரி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய அளவிலே, சேர்மன் வரக் கூடிய அளவிலே இருக்கிறார்கள். உண்மையிலே, அந்த நிலையை

1978 மார்ச்18]] [திரு. வி. சின்னையா]

மாற்றி அரிசனங்களுக்கு அதிலே பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். அரிசனங்கள், தேர்தலிலே எதிர்த்து பிரதிநிதித்துவம் பெற முடியாது. அரிசனங்கள் சேர்மனாக வந்தால்தான் அரிசனங்கள் முன்னேற வழிவகை செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போல், உத்தியோகத்தில் பிரமோஷன் கொடுப்பதும் தடைப்படுகிறது. ஏதோ, சாக்குப் போக்கு சொல்லி, ஏதோ குற்றம் சொல்லி, அவர்கள் பிரமோஷனைத் தடுக்கிறார்கள். அரிசனங்களை முன்னேற்ற வேண்டுமென்பது புரட்சித் தலைவருடைய கருத்து. ஆகவே, மற்ற அரசைப் போல் இல்லாமல். இந்த அரசு அரிசன மக்களுக்கு நல்லது செய்யும் என்று நினைத்து, தலைவருக்கு நன்றி கூறி, எதிர்ப்புகளுக்கிடையே முன்னேற்றம் அடைந்த தமிழக முதல்வர் நீடுழி வாழ வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-00).

திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசனப் பழங்குடி மக்களின் மானியக் கோரிக்கையில் பேசும் வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு, ஒரு சில கருத்துக்களையும், வேண்டுகோளையும் எடுத்துக் கூறி விடை பெறுகிறேன்.

18 சதவிகித அரிசன பழங்குடி மக்கள் நலனுக்காக சுமார் 17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சமூகத்தின் மீது புரட்சித் தலைவரின் அரசு கொண்டுள்ள அக்கறையைக் காட்டுவதாகும். இதில் சேலம், தென்னாற்காடு மாவட்டப் பழங்குடி மக்களின் நலன் கருதி மின் வசதிக்காக ரூ. 10 லட்சமும், குடி நீர்த்திட்டத்திற்காக ரூ. 10 லட்சமும் ஒதுக்கியிருப்பதையும், 1977-78 லே ரூ. 153 என்றிருந்ததை 1978-79 லே ரூ. 200 லட்சம் என்று ஒதுக்கியிருப்பதற்காக பழங்குடி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன பழங்குடி மக்களுக்கு சிறு தொழில் நடத்துவதற்கும் கடன் வழங்க ரூ. 11 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து பாராட்டுகிறேன். ஆனால் இந்தத் தொகையை இன்னும் அதிகப்படுத்தி சிறு தொழில் செய்து இம்மக்கள் மேம்பாடு அடைய அரசு உதவ வேண்டுகிறேன்.

அரிசன பழங்குடியினருக்கு 1976-77ல் ரூ. 52 லட்சம் வீட்டு மனைக்கு ஒதுக்கப்பட்டிருந்ததை இவ்வாண்டு 100 லட்சமாக, ஒதுக்கியிருப்பது புரட்சித் தலைவரின் அரசு அரிசனப் பழங்குடி மக்களின் மீது அக்கறையும், பரிவும் கொண்டுள்ளதை இவ்விரு சமூகத்தினரும் மனமாரப் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை

[திரு. வ. சின்னசாமி] [1978 மார்ச் 18

தமிழகத்தில் உள்ள சுமார் 4 லட்சம் பழங்குடி மக்கள் நலன்களுக்காக முந்தைய ஆண்டில் ரூ. 101.82 லட்சம் என்றிருந்ததை இவ்வாண்டு ரூ. 153 லட்சம் செலவிடத் திட்டமிட்டு இருப்பது இவ்வின மக்கள் மேம்பாடு அடைய அரசு கொண்டுள்ள அக்கறையைக் காட்டுவதாகும்.

153 லட்சம் ரூபாயில் சிறுபாசனத் திட்டம், விவசாயம், கால்நடை பராமரிப்பு, மின் இணைப்பு, சாலை வசதி, மருத்துவ வசதி, கல்வி, குடிநீர் வசதி, பாசன கிணறுகள் போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்டு இருப்பது மிகவும் போற்றுதற்கு உரியதாகும்.

மேலும், இந்தச் சமுதாய மக்களுக்கும் தாழ்த்தப்பட்டோரிலிருந்து மதம் மாறிய கிருஸ்துவ மாணவர்களுக்கும் பெற்றோர்களது வருமான வரம்பைப் பாராமல் பள்ளிப் படிப்புக்கானப் புத்தகங்கள், செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணங்கள் புகுமுக வகுப்பு வரை இருந்ததை, அதற்கு மேல் உள்ள உயர் மட்ட வகுப்பு வரையில் சலுகை அளித்திருப்பது இச் சமூகத்தினர் மேலும் முன்னேற்றம் அடைய மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு அக்கறை கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.

அரிசன பிற்பட்டோர் நலக் கல்லூரி விடுதிகளில், கல்லூரி பட்டப் படிப்பு படித்துக் கொண்டு இருந்த மாணவர்கள் தேர்வில் தவறிவிட்டால், அவ்வாண்டு இறுதிவரை தான் தங்க அனுமதிக்கப் பட்டு இருந்தது. ஆனால், புரட்சித் தலைவர் ஆட்சியில், அதை மாற்றி எத்தனை முறைத் தவறினாலும் தங்களது படிப்பு காலம் முடியும் வரை விடுதிகளில் தங்குவதற்கு உத்தரவு இடப்பட்டது. அவர்களது உயர்வுக்கு இது பேருதவியாகும்.

எனவே, அரசு இவர்களுக்கு வயது வரம்பை உயர்த்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அவசரகால நிலைக்கு முன் அரிசன பழங்குடியினருக்கு தமிழ் நாடு அரசு தேர்வாணைக் குழு நடத்தும் குரூப் 1 சர்வீசுக்கு வயது வரம்பு இல்லாமல் இருந்தது, ஆனால், அந்த வயது வரம்பு அவசரக்கால நிலையின் போது 32 ஆக நிர்ணயிக்கப்பட்டு விட்டது. வயது வரம்பு இல்லாமல் இருந்த போதே பழங்குடியினர் வகுப்பிலிருந்து டெப்டி கலெக்டராகவோ, டெப்டி சூப்ரண்டெண்ட் ஆஃப் போலீசாகவோ இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

புதிய வேலைக்கும், பதவி உயர்வுக்கும் 18 சதவிகிதம் ஒதுக்கியிருப்பதை முழுமையாக பயன்படுத்தவில்லை எனக் கூறப்படுகிறது. தேர்ந்தெடுப்பதில் சீனியாரிட்டி முறையைக் கைவிட்டு, தேர்வு நடத்தும் பொழுது எல்லோருக்கும் இன்டர்வியூ அனுப்ப அரசு உத்தரவிட வேண்டுகிறேன்.

1978 மார்ச் 1[[திரு. வ. சின்னசாமி]

பதவி உயர்வு கொடுப்பதிலும் பதவிக்கு ஆட்கள் எடுப்பதிலும் நடைபெறும் தவறுகளைக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுக்க அரசை வேண்டுகிறேன்.

பழங்குடி மக்களது சொந்தமான நிலங்களில் உரிமம் மாற்றம் செய்யப்படுவதைத் தவிர்க்க அரசு ஒரு மசோதா கொண்டு வருவதை நான் வரவேற்கிறேன்.

அவர்கள் பட்ட கடன் சுமைகள் குறையவும், அவைகளை ரத்து செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்கவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இச்சட்டம் கண்டிப்பாகச் செயல்படுகிறதா என்பதைக் கவனிக்க காவல் துறை டி.ஐ.ஜி. பதவி தரத்தில் காவல் துறை அதிகாரி ஒருவரை நியமித்து இருப்பது தீண்டாமையை ஒழிப்பதில் புரட்சித் தலைவரின் அரசு கொண்டுள்ள அக்கறையைக் காட்டுவதாகும்.

எனது தொகுதியில் அரிசன பழங்குடி மக்கள் வாழும் அநேக கிராமங்களில் கழிப்பிடம் இல்லாமலும், குடிநீர் இன்றியும் மிகவும் கஷ்டப்படுகின்ற நிலைமையை மாற்றி அமைக்க அரசைக் கேட்டுக் கொள்கிறேன. கொல்லிமலையில் கால்நடை மருத்துவமனை ஒன்றுதான் உள்ளது. குறைந்தது இன்னும் மூன்று இடங்களிலாவது விரிவுபடுத்த வேண்டுகிறேன்.

இன்று ஏறக்குறைய சேலம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு மலையிலும் ஒவ்வொரு சுகாதார நிலையம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சுகாதார நிலையத்தை வந்தடைய பெரும்பகுதி மக்கள் மிக்க தொலையிலிருந்து காடுகளையும், மலைகளையும் கடந்து கரடுமுரடான நடைபாதையின் வாயிலாக நடந்து வர வேண்டியுள்ளதால் மருத்துவ வசதிகளை மக்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை உள்ளது. இதன் விளைவாக போலி வைத்தியத்தின் வாயிலாக ஈர்க்கப்பட்டு தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்ற நிலையை உண்டாக்கிக் கொள்கின்றனர். எனவே, இவற்றிலிருந்து விடுபடவும், உடனுக்குடன் மருத்துவ வசதி பெறவும் சுமார் 2,000 சனத்தொகை கொண்ட மையத்தில் ஒரு மருந்துவ மனை நிறுவி உடனுக்குடன் மருத்துவ பணி சிறப்புடன் செய்ய வழிவகை செய்ய வேண்டுகிறேன். மலைவாழ் மக்கள் 10, 15 ஆண்டுகளாக பயிர் செய்தும், பழ மரங்களை வளர்த்தும் ஜீவித்து வரும் நிலங்களை வன இலாகாவினரின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவித்து அந்நிலங்களை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

ஆண்டாண்டு காலமாக சேலம் மாவட்டத்தில் உள்ள ஆதிவாசி மக்கள் அனுபவித்து வருகின்ற புறம்போக்கு நிலங்கள் இன்னும் அடையாள பட்டா வழங்காமல் இருப்பதை காண முடிகிறது. இதன் விளைவாக அரசாங்கம் அந்த மக்களுக்குக் கொடுக்கும் கிணறு

[திரு. வ. சின்னசாமி] 1978 மார்ச் 81]

வெட்டுதல், பம்புசெட்டு அமைத்தல், பயிர் காலக் கடன்கள் போன்ற சலுகைகளை பெற முடியாத அவல நிலை காணப்படுகிறது. எனவே, இம்மக்களுக்கு இந்நிலையினைப் போக்கி உடனடியாக பட்டா வழங்க அரசை கேட்டுக் கொள்கிறேன.

தறபொழுது கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் சுமார் 54 ஆரம்பப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்த பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெரும்பகுதிநாட்களை குழந்தைகளின்றியே பள்ளியை நடத்தி வருகின்றனர். இதன் விளைவாக பெரும்பாலான ஆசிரியர்கள் தங்களுடைய பணிகளைச் செவ்வனே செய்ய முடிவதில்லை. குழந்தைகள் பள்ளிக்கு மலைகளையும், காடுகளையும் கடந்து வரும் நிலை உள்ளது. இதனால் குழந்தைகளின் பெற்றோர்கள் தங்கள் வயிற்று பிரச்சனையை பொதாகக் கொண்டு, குழந்தையின் எதிர்காலத்தைப் பற்றிய கவலையை மறந்து தங்களுடைய வாழ்க்கையினையே பெரிதாகக் கொண்டுள்ளதால் குழந்தைகளை கவனிக்கும் பொறுப்பை விட்டு விடுகின்றனர். இந்நிலையில் மாநில, மத்திய அரசும் இதற்காக செலவிடும் தொகைகள் குறிப்பிட்ட இலட்சியத்தை அடைய முடியாமல் வீணாக்கப்படுகிறது.

எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டு மேற்படி பள்ளிகளை 10 உறைவிடப் பள்ளிகளாக மாற்றி கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுல்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் வாழும் இடமாகிய கொல்லிமலையில் உள்ள அரப்பலீஸ்வரர் ஆலயத்திற்கு ஆண்டுதோறும் பல லட்சக்கணக்கான உல்லாசப் பயணிகள் வந்து போகக் கூடிய சிறப்பு மிகுந்த சுமார் 300 அடி உயர நீர்வீழ்ச்சியினைக் கொண்ட இடமாக உள்ளது. அதை சுற்றுலாத் தலமாக மாற்ற அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரப்பலீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏராளமாக உள்ளதாகக் கூறுகிறார்கள். அந்த நிலங்களில், வரும் வருமானத்தை, அரசை ஏமாற்றி அக் கோயிலில் உள்ள பூசாரி (ஐயர்) மலை வாழ் மக்களையும் அரசையும் ஏமாற்றி சாப்பிட்டு வருவதாக அறிகிறேன். அதை அரசு தீவிரமாக விசாரித்து, முழு வருமானமும் கோயிலுக்குக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

என் தொகுதியில் மலையின் அடிவாரத்தில் காரவள்ளி என்னும் இடத்தில், மலைவாழ் மக்களுக்கென வாரம் இருமுறை நான்கு நாட்கள் சந்தை கூடுகிறது. அங்கு மலையில் விளையும் பெரும்பகுதி கனிகளையும், மற்றப் பொருள்களையும் விற்க ஒவ்வொரு வாரமும் பல ஆயிரக்கணக்கான மக்கள் வந்து

[1978 மார்ச் 18 [திரு. வ. சின்னசாமி]

போகும் இடமாதலால், அங்கு வரும் அவர்களுக்கு வைத்தியம் செய்துகொள்ள ஏதுவாக ஒரு மருத்துவமனை ஏற்படுத்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை பலா, வாழை, அன்னாசி, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற கனி வகைகள் விளையக்கூடிய இடமாகும். அங்கு மலைவாழ் மக்கள் கூட்டுறவு முறையில் பழரசத் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

சேலம் மாவட்டத்தில் பெரும் பகுதியான மலைப்பகுதிகளில், சாலை வசதிகள் குறைவாக உள்ளது. கொல்லிமலையிலுள்ள பயில்நாட்டுப் பகுதியில் சாலைக்காக பல இலட்ச ரூபாய் செலவு செய்தும் 1967-ல் போடப்பட்ட சாலை மேற்கொண்டு தொடர்ந்து பராமரிப்பு இல்லாமல் புறக்கணிப்பு செய்ததன் வாயிலாக இன்று அவைகள் முட்புதர்களால் சூழப்பட்டு சிறு நடைபாதையாக காட்சியளிக்கின்றது. இதன் விளைவாக அப்பகுதி மக்கள் தங்கள் பொருட்களை தலையில் சுமந்து சுமார் 15 மைல் தூரம் சென்று குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமையும், மற்றும் பிரசவ வைத்தியம் போன்ற அவசர மருத்துவ வசதியை நாடிச் செல்வதற்கு தடையாகவும் இருக்கின்றது.

இத்தோடு மட்டுமல்லாமல் கொல்லிமலை பஞ்சாயத்து யூனியன் ஆரம்பிக்கப்பட்டு 15 ஆண்டுகள் ஆகியும் பெரும்பகுதியான கிராமங்கள் பஞ்சாயத்து சாலைவசதி கூட இல்லா நிலையைக் காண முடிகிறது. இதன் விளைவு அரசால் அளிக்கும் எந்த ஒரு அபிவிருத்திப் பணியும் நடைபெறுவதில்லை. இக் கிராமங்களுக்கு இதனாலேயே மின்சார வசதியும் தடைபடுகின்றது. இக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள். 5 நிமிடம் ஆகிவிட்டது. இன்னும் 25 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

திரு. வ. சின்னசாமி : முடித்து விடுகிறேன். இன்னும் இரண்டு நிமிடங்கள் தாருங்கள். மலைவாழ் மக்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் என்னென்ன என்ற விவரங்களை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் விளம்பரப்படுத்தி, அவர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் அனைத்தும் முழுமையாக அவர்கள் பெற வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் வீடில்லாத அரிசன மக்கள் பலர் சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன், வீடு கட்டிக்கொள்ள நிலம் கேட்டு விண்ணப்பித்தும் கிடைக்காமல் இருந்து வந்து இருக்கிறது.

இந்த நிலை மாற புரட்சித் தலைவர் ஆட்சியில் அவர்களுக்கு நிலம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மலையின் அடிவாரப் பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கும் சலுகைகள் அனைத்தும் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

*திரு. என். பழனிவேல் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர் நலன் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் அரிசனங்கள் நலனைப்பற்றி இங்கே வீற்றிருக்கக்கூடிய எல்லா உறுப்பினர்களும், எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும், அவர்களுக்காக எவ்வளவு அனுதாபத்தோடும், ஆர்வத்தோடும் பேசிக் கொண்டு தான் இருக்கிறோம். ஆனால், எப்படித்தான் நாம் பேசினாலும், அவர்களுடைய உண்மையான பிரச்னைகளைத் தீர்ப்பதிலே யாரும் எந்தவிதமான ஒரு சிறிதளவு முன்னேற்றம்கூட செய்து வைக்க முடியவில்லை என்பதை நாம் உண்மையிலேயே பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம்.

உதாரணத்திற்காகக் கூறுகிறேன். அரிசனங்கள் என்று சொன்னாலே இந்த நாட்டிலே யாரும் மதிப்பது கிடையாது. ஏதோ தேர்தல் வருகிறது என்று சொன்னால், அப்போது அவர்களிடம் சென்று, அப்பா, சாமி என்று சொல்லி, கையெடுத்துக் கும்பிட்டு, அவர்கள் ஓட்டைப் பெறுவதற்காகச் செல்கிறோம். மற்ற நேரங்களில் யாரும் அவர்களுக்கு மதிப்புக் கொடுத்துப் பேசுவது இல்லை. ஆகவே, இதையெல்லாம் போக்குவதற்கு இந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஓரளவிற்கு நல்ல நடைமுறையைக் கையாள்கிறது என்பதாகத் தெரிகிறது. அதைத் தொடர்ச்சியாக வாயளவில் இல்லாமல், அறிக்கைகளை மட்டும் விட்டுக் கொண்டு இருக்காமல், சட்டங்களில் இருக்கும் சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய முறையில் கறாராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகை பெறுவதற்காக ஜாதி சான்றிதழ் வேண்டும் என்று கேட்கிறார்கள். இதை ஒவ்வொரு ஆண்டும் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஒரு மாணவன் பள்ளியில் சேரக்கூடிய நேரத்தில், எந்த ஜாதி என்று அவனுடைய அப்பா, அம்மா எழுதிக் கொடுத்து இருக்கிறார்களோ அதையே கடைசிவரையில் வைத்துக் கொள்ள

வேண்டும். ஒவ்வொரு வருஷமும் சான்றிதழ் கொண்டுவரச் சொல்வது சரியல்ல. இதனால் அவன் படிப்பே பாதிக்கிறது. முதல் வகுப்பில் சேருகின்ற நேரத்தில் அவன் எந்த வகுப்பைச் சேர்ந்தவன் என்று சான்றிதழ் வாங்கித் தருகிறானோ அதையே வைத்துக்கொண்டு அவனுக்குச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். அந்த வகையில் இந்த அரசு உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

அதைப் போல 18 சதவீதம் வேலை என்பது சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் எந்த இலாகாவிலும் அவர்களுக்கு இந்த 18 சதவீதம் கொடுக்கப்படவில்லை. 30 ஆண்டு காலம் மத்தியிலும் மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. பின்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 9 ஆண்டுகள் நடந்தது. ஆனால் இன்றுவரை 18 சதவீதம் அடிப்படையிலே எங்காவது ஒரு கிராம கர்ணமாக அரிசன் இருக்கிறாரா என்றால் தேடித் தேடிப் பார்க்கிறேன், எங்கும் காணப்படவில்லை. ஆகவே, கிராம கர்ணம் போன்ற வேலைகளில் உடனடியாக அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களையும் நியமித்து, கிராமங்களில் அவர்களுக்கு ஒரு அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அரிசன மாணவர்களுக்கு கடன்கள் வழங்குவது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 12.22 லட்சம் ரூபாய் பழங்குடி, அரிசன மாணவர்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அது போதாது. ஏனென்றால் அவர்கள் தனியார்களிடத்திலே கடன் வாங்குவது இந்த நாளிலே முடியாது. ஆகவே, அரசாங்கம் எவ்வளவு அதிகபட்சம் ஒதுக்க முடியுமோ அந்த அளவுக்கு ஒதுக்கி, கொடுக்க வேண்டும். அதற்காக இந்தத் தொகையைக் குறைந்தது 25 லட்சம் ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 942 அரிசனப் பள்ளிகள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அரிசனப் பள்ளி என்று இருப்பதை நிச்சயமாக நான் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் அரிசன பள்ளி என்பது கடைக்கோடியில் ஒதுக்குப் புறங்களில் கட்டிக் கொடுக்கிறார்கள். அங்கே சுற்றுப்புற சுகாதார வசதிகள் இல்லாமல் இருக்கிறது. மற்ற ஜாதிக்காரரர்கள் அதைப் பார்த்தால் கேவலமாக, இழிவாக எண்ணும் நிலை இருக்கிறது. அவர்களுக்கு சலுகைகள் கொடுக்கட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அரிசனப் பள்ளி என்று போர்டு எழுதிப் போட்டு, மற்ற ஜாதிக்காரரர்கள் மனதிலே ஒரு இழிவான எண்ணம் ஏற்படுகின்ற வகையில் பள்ளிகளைக் கட்ட

[திரு. என். பழனிவேல்] [1978 மார்ச் 18

வேண்டாம். ஆகவே, அரிசனப் பள்ளி என்பதை அரசினர் பள்ளி என்று மாற்றி, நல்ல சுற்றுப்புறச் சூழ்நிலைகள் உள்ள இடங்களில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பால் மாடு வாங்க ஆயிரம் ரூபாய் மானியம், 2,000 ரூபாய் கடன் என்று கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக 10,41,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த 10,41,000 ரூபாயில் தமிழ்நாட்டில் இருக்கிற 96 லட்சம் மக்களில் எத்தனை பேருக்கு கடனும் மானியமும் கொடுக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் தொகை போதவே போதாது. அதற்கும் மனுக்கள் போட்டால் அந்த மனுக்களைப் பரிசீலித்து முடிவெடுப்பதில் பல மாதங்கள் ஆகிவிடுகின்றன. அதற்குள் நடந்து அலைந்து, சலித்துப் போய் கடைசியில் கைவிட்டு விடுகிறார்கள். ஆகவே, இந்தத் தொகையை அதிகப்படுத்துவதோடு, மனுப் போட்டால் அதற்கு உண்டா இல்லையா என்ற முடிவை 15 அல்லது 20 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டுமென்றும், உண்டு என்றால் அந்த 15 அல்லது 20 நாட்களுக்குள் கொடுத்து விட வேண்டுமென்றும், அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்கூட கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சிமிண்டுக்குப் பதில் கரம்பையில் வீடு கட்டிக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். எத்தனையோ அரசுகள் வந்தாலும் திராவிட முன்னேற்றக் கழக அரசில்தான் வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள் என்ற எண்ணம் அந்த மக்கள் மத்தியிலே இன்னும் இருக்கிறது. அத்தகைய ஒரு நல்ல திட்டம் அது. ஆகவே வீடு கட்டும் திட்டத்தை இந்த அரசு விரிவுப்படுத்த வேண்டும்; அதற்கான தொகையை அதிகப் படுத்த வேண்டும். 2,000 அல்லது 3,000 வீடுகள் கட்டிக் கொடுத்தால் பிரச்சினை தீராது. ஆகவே, ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 10,000 வீடுகளாவது கட்டிக்கொடுத்து, வீட்டு வசதியை செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொளகிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அரிசன மக்கள் வாழக்கூடியது பெரும்பாலும் ஊரைச் சுற்றியிருக்கிற நத்தம் புறம்போக்கிலேதான். அங்கே குடிசைகள் போட்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். நத்தம் புறம்போக்கில் எந்தவிதமான வசதியும் கிடையாது. அங்கே சுகாதார வசதி கிடையாது; கக்கூஸ் வசதி கிடையாது; மின்சார வசதி கிடையாது. காரணம் என்ன என்று கேட்டால் ஊராட்சி ஒன்றியத்திலே அதை இன்னும் அங்கீகரிக்கவில்லை; பஞ்சாயத்து அதை குடியிருப்பாக ஏற்றுக் கொண்டு, தீர்மானம் போட்ட பின்னால்தான் அங்கே

1978 மார்ச் 18] [திரு. என். பழனிவேல்]

லைட் போட்டுக் கொடுக்க முடியும் என்று கூறுகிறார்கள். ஊராட்சி ஏற்றுக்கொள்ளாத நிலையில் அந்த மக்களுக்கு எப்படி விளக்கு வசதி செய்து கொடுக்க முடியும் என்பதை எண்ணிப் பார்த்து, நத்தம் புறம்போக்கில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களும் அரிசனங்களும் பயனடையும் வகையில் அவர்கள் குடியிருப்பை அங்கீகரித்து, உடனடியாக எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஜாதி ஒழிப்பைப் பற்றி நாம் சொல்லத் தேவையில்லை. அதைப்பற்றிச் சொல்வது என்றால் மணிக்கணக்கில், அல்ல நாள் கணக்கில் சொன்னாலும் சொல்லித்தீராது. அந்த அளவுக்கு இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் மெயின் ரோட்டில் இருக்கிற கிராமங்களில் அந்த வித்தியாசம் தெரியாது. கடைக்கோடியில் இருக்கிற குக்கிராமங்களில் சென்று பார்த்தால், தனி கிளாஸ், தனி தொட்டி, தனி இடம் என்று இருப்பது தெரிய வரும். அதிகாரிகள் அதையெல்லாம் பார்த்தும், கண்டும் காணாதவர்கள் மாதிரி இருந்துவிடுகிறார்கள்: எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. காரணம் அவர்களுக்கு ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் தயவு தேவைப்படுகிறது. ஏதோ அவர்கள் கொடுக்கிற காப்பி, மற்றும் உபசரணைகளில் இருந்து விட்டு, மற்ற விஷயங்களில் கவனம் செலுத்துவதில்லை. அதற்காக அரசை நான் குறை சொல்லவில்லை. அந்த அதிகாரிகள் இதிலே ஒத்துழைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறேன். அதைத் தீர்ப்பது அவ்வளவு சின்ன சமாச்சாரம் அல்ல. அதில் கறாராக இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சேலம், தர்மபுரி மாவட்டத்திலுள்ள பழங்குடி மக்களுக்கு எந்தவிதமான ரோடு வசதியும் கிடையாது என்று தகவல் கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு சரியான போக்குவரத்து வசதியை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே மான் வேட்டையாடுபவர்கள் அதாவது பெரியதனக்காரர்கள் அங்கே மான்களை வேட்டையாடிவிட்டுப் போய்விடுகிறார்கள். அதிலே அடிபட்ட மான்கள் தப்பித்தவறி எங்கோ ஓரிடத்தில் விழுந்து இறந்து கிடக்கக்கூடிய சூழ்நிலையில் அதைக்காணுகின்ற அந்த ஏழை மக்கள் அதை எடுத்துக்கொண்டு வந்து சாப்பிடுகிறார்கள். சாப்பிட்டபின் அதன் தோலை உரித்து வைத்திருக்கிறார்கள். இதை அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் பார்த்துவிட்டு, மானை நீ தானே கொன்றாய் என்று அவர்கள் மீது கேஸ் போட்டு அந்த ஏழை எளிய பழங்குடி அரிசன மக்களைத் துன்புறுத்துகிறார்கள். அதை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுடுகாடு என்பதிலே பல பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதை எல்லாம் எடுத்து பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று மனுக் கொடுத்தால் உடனடியாக அந்த பிரச்சினைகள் பைசல் செய்யப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த ஊரைச் சுற்றி இருக்கக்கூடிய நிலங்கள் வேறு பல ஜாதிக்காரர்களிடம் இருக்கின்றன. அதை அரசு எடுப்பதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. நாம் அதை உணராமல் இல்லை. ஆகையால் நடைபாதை என்ற பிரச்சினையிலாவது உடனடியாக தயவு தாட்சண்யம் இல்லாமல் அரசு அவசர நிலைபோல் பாவித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் காவல்துறையினர் இருக்கிறார்களே, அவர்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அவர்கள் அரிசனங்களைப் பிடித்து ஸ்டேசனுக்குக் கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய எந்த வீட்டுக்கும் அவர்கள் போகமாட்டார்கள். இந்த நிலையில் அவர்களைப்போய் சுப்பா, குப்பா வா என்று ஸ்டேசனுக்கு அழைத்துக் கொண்டு வந்து, நன்றாக நையப் புடைப்பது சாதாரணமான விஷயமாய் இருக்கிறது. அந்தக் கொடுமையை இழைப்பது இன்னும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. அந்த 'அரிஜனங்களை தயவு செய்து மனிதனாக வாவது நீங்கள் மதிக்க வேண்டும்' என்று உத்தரவு போடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக ஸ்டேசனுக்கு அழைத்துக் கொண்டு வருபவர்களுக்கு ஓரளவு மரியாதை கொடுத்து நடத்த வேண்டும் என்று உத்தர விட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பல விஷயங்கள் பற்றி பேச இருக்கின்றன. இருப்பினும் நம்முடைய தலைவரவர்கள் நேரமாகிவிட்டதென்று மணியடித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அரிஜன, பழங்குடி மக்கள் நல மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு எனது நன்றியினைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுவரும் இந்தக் குறுகிய காலத்தில் பல அரிஜன சலுகைகளை புதிதாகச் சேர்த்திருப்பது குறித்து நான் மிகவும் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த 1949ஆம் ஆண்டிலிருந்து 1977 வரையிலும் மொத்தம் வீட்டு மானியத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 52 இலட்சம் ரூபாய்தான். ஆனால் 30-6-1977 முதல் 30-12-1977

வரை ஒதுக்கப்பட்ட தொகை 100 இலட்சம் ரூபாயாகும். இது பெரிய தொகை என்பதை நாம் எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனை என்பதை எண்ணும்போது பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

அதேபோல கறவை மாடுகள் வாங்குவதற்கு 125 ரூபாய் மானியமாகவும், ரூ. 375 கடனாகவும் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது ரூ. 500 அரிசன மக்களுக்கு மானியமாகவும் ஆயிரம் ரூபாய் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடனாகவும் பெறுவதற்கு வழி வகை செய்யப்பட்டிருப்பது உண்மையிலேயே இந்த அரசின் சாதனை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக அரிசன நல மாணவர் விடுதியில் மாணவர்களின் உணவுக்காக கொடுக்கப்பட்ட தொகை அதிகமாக ஆக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். முன்பெல்லாம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 65 தான. ஆனால் இப்போது அது 80 ரூபாய் என்ற அளவில் கொடுக்கப்பட்டிருப்பது மகத்தான சாதனையாகும்.

[முற்பகல் 11-20]

இப்படிப்பட்ட பல அரிய சாதனைகளை நமது மாண்புமிகு ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பது பெருமைக்குரியது. அதை வரவேற்கிறேன்.

இதைக் குறிப்பிடும்போது எனது கருத்துக்களை, எனது உணர்வுப்பூர்வமான சில யோசனைகளை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதில் பல சிக்கல்கள் இருந்தன. பத்து ஆண்டுக்காலம் வரை வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. அதைத் தவிர்க்கும் பொருட்டு இந்த வீட்டுமனைப் பட்டா வழங்க நிலத்தை கையகப்படுத்தும் உரிமை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அளிக்கப்பட இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால் நாம் கொடுக்கிற மூன்று அல்லது ஐந்து சென்ட் நிலத்தில் அவர்கள் வீடு கட்டிக் கொள்ள முடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த ஒரு தாழ்த்தப்பட்ட மகனும் வீட்டுமனை கேட்பதில்லை. வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்றுதான் அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் வீட்டு மனை மட்டும் தான் நாம் அவர்களுக்குக் கொடுக்கிறோம். வீடுகள் கட்டிக் கொடுப்பது என்பது ஒருசிலருக்கேதான் கொடுக்கிறோம். அனைத்துப் பேர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க முடிவதில்லை. ஆகவே அனைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

[திரு. வ. மு. சுப்பிரமணியன்] [1978 மார்ச் 18

தாழ்த்தப்பட்ட மக்கள், அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிலத்தில் வீடுகட்டிக் கொள்ள முடியாத நிலையில்தானிருக்கிறார்கள். ஒதுக்கிக் கொடுக்கும் இடம் வீணாகப் போகிறது, யாரும் அதை உபயோகிப்பதில்லை என்ற நிலைதான் இருக்கிறது. இது வருந்தத்தக்க ஒரு நிலையாகும். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்கள் அனைத்துப் பேர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க படிப்படியாக ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் வீடுகள் என்ற முறையில் கட்டிக் கொடுத்தால் நலமாக இருக்கும். நிதிவசதி இடையூறாக இருக்கிறது என்றால், இது ஒரு சமுதாயப் பிரச்னை, கீழ்மட்டத்திலுள்ளவர்கள் பிரச்சினை என்பதால் இதில் சிறிது தாராள மனப்பான்மையோடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமை பற்றி இங்கு பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதுபற்றி என் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். தீண்டாமை குற்றத்திற்காக எவ்வளவு வழக்குகள் போடப்பட்டன, எவ்வளவு வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது என்று தரப்பட்டிருக்கிறது. எனது மாவட்டத்தில் குடி உரிமை பாதுகாவல் சட்டம் வந்த பிறகு எவ்வளவு வழக்குகள் போடப்பட்டன என்று தெரியவில்லை. இதுகுறித்து மாவட்ட ஆட்சியாளரிடம் கேட்ட போது ஒரு வழக்குக் கூடப் போடவில்லை என்று சொன்னார்கள்.

எனது பகுதியில் 1958-ல் பெரிய ஜாதிக் கிளர்ச்சி ஏற்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்னும் ஜாதிக் கொடுமைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. பல சிற்றுண்டி விடுதிகளிலும், தேநீர் விடுதிகளிலும் இன்னும் தனி இடங்கள் போட்டு வைத்திருக்கிறார்கள். சில குடியிருப்புகளில், அரசாங்கம் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கிற இடங்களில்கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அது மறுக்கப்படுகிறது. அவர்களால் அதைப் பயன்படுத்த முடியவில்லை. காரணம், அவர்கள் பிறருக்கு அடிமைகளாக இருப்பதுதான். ஏன் அப்படி அடிமைகளாக இருக்கிறார்கள் என்றால் அவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய நிலை இல்லாதிருப்பதுதான் காரணம்; பொருளாதார ரீதியிலும் சரி சமூக அந்தஸ்திலும் சரி மற்றவர்களை எதிர்த்துப் போராட முடியாத நிலையில் இருப்பதுதான் காரணம்.

ஒரு உறுப்பினர் கூறியதுபோல் அவர்கள் இழிதொழில் செய்பவர்களாக இருப்பதுதான் காரணம். செத்த மாட்டைத் தூக்குவது தாழ்த்தப்பட்டவன். மலஜலத்தை அள்ளுபவன் தாழ்த்தப்பட்டவன். பறை அடிப்பவன் தாழ்த்தப்பட்டவன். மடத் தொழில் பார்ப்பது தாழ்த்தப்பட்டவன். இப்படி இழி தொழில் செய்பவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் தான். இந்த இழி தொழில் செய்வது பாரம்பரியமாய் இருந்தால் கூட இதைத் தடுக்க சட்டம் கொண்டுவர வேண்டும் என்பது

1978 மார்ச் 18] [திரு. வ. மு. சுப்பிரமணியன்]

என் கருத்து. சட்டத்தால் முடியுமா முடியாதா என்பது ஒரு பிரச்சினையாக இருந்தால், மனமாற்றம் மூலம் இதைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்வது எதிர்வாதம்.

மனமாற்றப் பிரச்னை என்றால் உரிமை கொடுக்கக்கூடாது என்றுதான் நினைக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களை வைத்துத்தான் மற்றவர்கள் வாழவேண்டும். அவர்கள் விவசாயம் செய்து மற்ற ஏற்பாடுகளைச் செய்து சாப்பிட மட்டும் இருப்பவர்களுக்கு எப்படி மனமாற்றம் ஏற்படும்? மனமாற்றம் என்பதற்கு இடமில்லை. இது ஒரு பகுத்தறிவுப் பிரச்சாரம் என்பதற்கு இடமில்லை. பெரியார் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார்கள். அந்தப் பகுத்தறிவுப் பிரச்சாரம் ஓரளவு வெற்றி பெற்றது என்றால் மேல் ஜாதி இந்துக்களுக்குத் தான் வெற்றியே தவிர தாழ்த்தப்பட்டவர்கள் வெற்றி காணவில்லை. மேல் ஜாதி இந்துக்கள்தான் பெரியார் அவர்களின் பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் நன்மை பெற்றவர்கள்.

அப்படி நன்மை பெற்றவர்கள் தங்களுக்குக் கீழே உள்ளவர்களுக்கு உரிமை அளிக்க மறுக்கிறார்கள் என்பதை வருத்தத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தங்களுக்கு மட்டும் உரிமை என்று நினைத்து அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் குறித்த பெரியார் அவர்களின் கொள்கையை ஆதரிக்கவில்லை என்பது என் கருத்து. தாழ்த்தப்பட்டவர்களை ஆதரித்து பெரியார் அவர்கள் பேசியதை இவர்கள் ஆதரிக்கவில்லை என்பது என் கருத்து.

அப்படி ஆதரித்திருந்தார்கள் என்று சொன்னால் இன்றைக்கு இந்த தாழ்வான நிலை, தீண்டாமை என்ற பிரச்சினை வந்திருக்காது. பெரியார் அவர்களைப் பற்றி என்னவெல்லாமோ சொல்கிறார்கள். ஆனால் சாதாரண தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை இன்றைக்கு என்ன?. இன்றைக்குள்ள பிரச்சினை அவர்களுடைய வயிற்றுப் பிரச்சினை, போராட்டப் பிரச்சினை. இவற்றைத் தீர்த்துக் கொள்ள அவர்கள் யாரையும் எதிர்பாராக்காமல் தாங்களாகவேதான் போராட வேண்டுமென்கிற கொள்கையை உருவாக்க வேண்டியுள்ளது. யாரும் இதில் வந்து ஒன்றும் செய்யப் போவதில்லை என்கிற என்னுடைய கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் ஒரு அரிசன பள்ளிகூட கிடையாது. அரிசனக் குழந்தைகள் பள்ளி கிடையாது, பால்வாடி கிடையாது, இதையெல்லாம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருப்புவனத்தில் அரிசன மகளிர் பள்ளி ஒன்று இருக்கிறது. இதில் அரிசனப் பெண்கள் வந்து

பயிலுகிறார்கள். இப்படி வருகின்ற இந்த அரிசனப்பெண்களுக்கு ஒரு மகளிர் விடுதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கட்டமனூர் என்ற இடத்தில் ஹைஸ்கூல் எதுவும் இல்லை, அந்த இடத்தில் ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

*திரு. கோ. ராமசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரிசன பிற்பட்டோர் நலத்துறையின் மீது எனக்குப்பேச வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலனுக்காக இந்த ஆண்டு நிதிநிலையில் ரூ.6.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பிற்பட்டோர் நலனுக்காக தீவிர நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இதில் பெரும்பகுதி கல்விக்கு உதவிப்பணமாக கொடுக்கப்படுகிறது. ஆனால் ஆண்டுக்கு பெற்றோர் வருமானம் ரூ. 2,500 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இதனால் அநேகம் பேர் பாதிக்கப்படுகின்றனர். ஆண்டு வருமானம் 5,00,0 ரூபாய் என்ற அளவிலாவது நிர்ணயிக்கப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

மிகவும் பிற்பட்டோர், மோஸ்ட் பேக்வேர்ட்டு கிளாஸ் (Most Backward Class) என்று சொல்லக்கூடிய மாணவர்களுக்கு இலவசப்புத்தகங்கள், மற்ற படிப்பு சலுகைகள் வழங்கிட வகை செய்யப்பட வேண்டும்.

மாணவர்கள் விடுதிகளில் மாணவர்களைச்சேர்ப்பதில் இன்னும் கூடுதலான மாணவர்களைச்சேர்க்க வகை செய்ய வேண்டும்.

அத்துடன் நகரங்களை விட்டு வெகு தொலைவிலுள்ள கிராமப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு முதல் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் சிவகாசியைச்சேர்ந்த திருத்தங்கலும், ஆலங்குளமும் பிற்பட்ட சமுதாயமும், அரிசன சமுதாயமும் நிறைந்து வாழும் இடம். இங்கு இரண்டு விடுதிகளைத்திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிவகாசி நகரத்தில் இதுவரை வாடகை கட்டிடத்தில் விடுதி இருந்து வருகிறது. இது ஒரு பெரிய தொழில் நகரம். ஊருக்குள் காற்றோட்ட வசதியில்லாமல் சுகாதார வசதிக் குறைவுடன் இந்த மாணவர் விடுதி இயங்கி வருகிறது. இந்த விடுதிக்கான ஒரு புதிய கட்டிடத்தை நகர்ப் பகுதிக்கு வெளியே நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் கட்டி, அங்கு மேலும் கூடுதலான மாணவர் மாணவியரை சேர்க்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிய உணவுத் திட்டம் இன்னும் விரிவான முறையில் செயலாற்றப்படவேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் சிலகுறிப்பிட்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. எல்லா மாணவர்களுக்கும் கிடைக்க வகை செய்யப்படவேண்டும். அத்துடன் 15 காசுகள் என்றுள்ளதை 20 காசுகளாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, ஒரு பள்ளியில் 30 மாணவர்களுக்கு என்று மதிய உணவு கொடுக்கப்பட்டால், கிராமத்தில் அந்தப் பள்ளியில் உள்ள முக்கால் பங்கு மாணவர்கள் தட்டுகளை கொண்டு வந்துவிடுவார்கள். அத்தனை மாணவர்களுக்கும் உணவு கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் மதிய உணவு மாணவர்களின் எண்ணிக்கையை, அந்த பள்ளியின் சராசரி வருகை அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்சமயம் பிற்பட்டோர் மக்களுக்குத் தொழில் கடன் கொடுப்பதை தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் அனேகமாக நிறுத்திவிட்டன. இதற்காக அரசு விசேட நிதி ஒதுக்கீடு செய்து தொழில் வியாபாரக்கடன் கொடுக்கவும் இதற்கான உதவித் தொகை கொடுக்கவும் வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சலவைத் தொழிலாளர்களுக்கும் முடிவெட்டுவோருக்கும் உபகரணங்கள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது பரவலாக எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஏக காலத்தில் கொடுக்கப்பட வகை செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாத்தூர் தாலூகாவில், சாத்தூர் வைப்பாற்றில் ஒரு டோபிகானா கட்டுவதற்கு உதவித் தொகை வழங்க சென்ற ஆண்டு ஏற்பாடு ஆகியிருந்தது. ஆனால் அங்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதத்தினால் இன்னும் இத்திட்டம் நிறைவேறாமல் உள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இதனால் 50-க்கு மேற்பட்ட சலவைத் தொழிலாளர்கள் பயன் அடைவார்கள்.

மிகவும் பிற்பட்டோர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டு மனை நிலம் அரிசனங்களுக்குக் கொடுக்கப்படுவது போல், நில ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டும். அரிசன மக்களை விட வறுமையில் வாடும் மக்கள், வீடு இல்லாமல் பிற்பட்டோர் இனத்திலும் இருக்கிறார்கள். இவர்களுக்கு வீடு கட்ட உதவிப் பணம் கொடுக்க வகை செய்யப்படவேண்டும்.

பிற்பட்டோர் பட்டியலில் வடுகர் என்ற சமுதாயம் சேர்க்கப்பட்டுள்ளது. நாயுடு, நாயக்கர் என்ற இனத்தவர் இந்த வடுகர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கல்விக்காக

உதவிப்பணம் வழங்கப்பட்டு வந்தது. இவர்களது எஸ்.எஸ்.எல்,சி. சான்றிதழ்களில் வடுகர் என்ற இனப்பெயர்குறிப்பிடப் பட்டிருந்தது. இப்பொழுது இந்த சர்டிபிகேட்களை மட்டும் ஆதாரம் காட்டினால் போதாது. இவர்கள் வடுகர்கள் என்பதற்கு இவர்கள் விற்று, வாங்கிய கிரயப் பத்திரங்களைக் கேட்கிறார்கள். இது சாத்தியமானதல்ல. இதனால் பலர் இந்தக் கல்விச் சலுகைகளைப்பெறத் தவறுகிறார்கள். பல குழப்பங்கள் உண்டாகின்றன. வடுகர்தான் நாயக்கர், நாயுடு சமூகத்தினரைச் சேர்ந்தவர்கள். இதில் ஜாதி சான்றிதழ் கொடுப்பதில் குழப்பமில்லாமல் இருக்க வடுக இனத்தைச் சேர்ந்த நாயக்கர், நாயுடுவினரும் பிற்பட்டோர் இனத்தைச்சேர்ந்தவர் பட்டியலில் சேர்க்க இந்த அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்டோர் இனத்தில் எஸ்.எஸ்.எல்.சி. முடித்து விட்டு கூலி வேலை செய்யும் அநேக ஏழைப் பெண்களுக்கு தட்டெழுத்து பயில உதவிப்பணம் கொடுத்து வகை செய்யவேண்டும். எந்தவிதமான வருமானமும் இல்லாதவர்களுக்கு இந்த உதவிப்பணம் கொடுத்தால் போதுமானது.

ஏற்கனவே நிலத்தடி நீர்ப் பிரச்சினை, மின் இணைப்புப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பிற்பட்டவர்களுக்காகவும், அரிஜன பழங்குடி மக்களுக்காகவும் விவசாயக் கிணறுகள் வெட்டும் கடன், மான்யம். கொடுப்பதினால் எந்தப் பயனும் கிடையாது. இந்தச்செலவினத்தைவேறு வழிக்கு பயன்படுத்தலாம்.

[முற்பகல் 11.30]

அரிசனங்களுக்காக கல்விக்காக கணிசமான நிதி ஒதுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. ஏராளமான அரிசன வகுப்பினர் படிப்பதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. ஓரளவு ப்படிப்பு படித்து விடுகிறார்கள். இவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கும் திட்டம் எதுவும் உருவாக்கப்படவில்லை. படித்த அரிசன மாணவர்கள் விவசாய வேலைக்கோ, தொழில் வேலைகளுக்கோ செல்வதில்லை. படித்து விட்டு எந்தப் பயனும் இல்லாமல் இருக்கிறார்கள். இதனால் பல பிரச்னைகள் வருகின்றன. படித்தவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புக் கொடுக்க துரிதமான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 26 ஆண்டுகளாக அரிசனங்களுக்கு வீட்டு மனை நிலம் சொடுக்கப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இதற்கான நிதி கூடுதலாகவே ஒதுக்கப்படுகிறது இந்த ஆண்டும் இதற்காக சுமார் ரூ. 100 லட்சம் ஒதுக்க-

படுகிறது. இதுவரையும் ஏராளமான நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வீடுகள் கட்டப்படாமலிருக்கின்றன. எனது தொகுதியில் அநேக ஊர்களில் இந்தமாதிரி நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, பல வருடங்களாகியும் அந்த நிலங்கள் யாருக்கு ஜாரி செய்யப்பட்டது என்றுகூடத் தெரியாமலிருக்கிறது.

இப்படி இருக்க, மேலும் மேலும் நில ஆர்ஜிதம் செய்வதை விடுத்து, ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடங்களில் வீடுகள் கட்டுவதற்கான திட்டங்களை அரசே பொறுப்பேற்று, இதற்கான விசேட மானியம் ஒதுக்கினால் நலமாக இருக்கும். எனது தொகுதியில் சிவகாசி தொழில் வளமிக்க நகரம். இந்நகரைச் சுற்றி 4 மைல் சுற்றளவில் அநேக அரிசன குடியிருப்புகள் உள்ளன. இங்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வீடுகள் கட்டப்படாமலேயே இருக்கின்றன. மேலும் வீட்டு மனை நிலம் கோரி மனுக்கள் வந்தவண்ணமிருக்கின்றன. இந்த இடங்களில் வீட்டு மனைக்கு நிலம் எடுப்பதை விட்டு, எடுக்கப்பட்ட நிலங்களில் வீடுகள் கட்டுவதற்கான ஒரு திட்டத்தை உடனடியாக வகுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இத்திட்ட நிதி நிலையில் குடிநீர் வசதிக்கு நிறையப் பணம் ஒதுக்கியது வரவேற்கத்தக்கது. மேலும் கிணறுகள் வெட்டாமல், இந்த நிதியைக் கொண்டு, தெருக்களில் குழாய்கள் பதித்து தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்தை ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரிய அரிசன ஊர்களில், தண்ணீர் ஒரு இடத்தில் வந்து எடுத்துச் செல்கிறார்கள். நல்ல தண்ணீர் இருக்கும் இடத்திலிருந்து, குழாய்கள் மூலம் அந்த இடத்திற்குக்கொண்டு செல்லும் திட்டத்தை ஏற்று நடத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதார, போக்குவரத்து வசதிக்காக இத் திட்டத்தில் போதிய நிதி வசதி ஒதுக்கப்படவில்லை. அரிசன குடியிருப்புகள் விரிவாக்கப்படுகின்றன. அங்கு தெருக்களை அமைத்தல், வாருகால் கட்டுதல், பாலங்கள் அமைத்தல் போன்ற வேலைகளை எடுத்துச் செய்ய அந்த சிறிய பஞ்சாயத்துக்களில் போதிய நிதி வசதி கிடையாது. இத்திட்டங்களை செயல்படுத்தமுடியாமல், அந்தப் பஞ்சாயத்திற்கும், மக்களுக்கும் வீண் மனஸ்தாபம்தான் ஏற்படுகிறது. அரசுதான் இதற்கான விசேட மானியம் ஒதுக்கி, இந்த வேலைகள் சரிவர நடைபெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார விளக்குகளுக்கு அரிசன குடியிருப்புகளுக்காக நிதி ஒதுக்கியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இந்த மின் கட்டணம், தற்சமயம் பஞ்சாயத்து நிதியிலிருந்துதான் கட்டப்படுகிறது. எல்லா அரிசன குடியிருப்புகளுக்கும் மின் இணைப்பு

[திரு. கோ. ராமசாமி] [1978 மார்ச் 18

கொடுப்பதை அரசே ஏற்றுக்கொண்டால் மிக்க நல்லமாக இருக்கும். இத்துறையில் கடந்த 30 ஆண்டுக் காலமாக தனிக் கவனம் செலுத்தப்பட்டு வந்தாலும், இன்னும் பழைய நிலைதானிருக்கிறது. இந்தக் கிராமங்களுக்குச் செல்ல எந்தப் பாதை வசதியும் கிடையாது. இந்த ஊர்களுக்கு பாதை வசதி நிரந்தரமாகச் செய்யவும், பாலங்கள் கட்டவும் முழு நிதி உதவி செய்யவேண்டும். ஒவ்வொரு அரிசன ஊரிலும் முழு நிதி உதவியுடன் ஒரு மனமகிழ்மன்றம் கட்ட வகை செய்யப்பட வேண்டும். அதை நல்ல முறையில் பராமரிக்கும் பொறுப்பை மட்டும் பஞ்சாயத்து வசம் ஒப்படைக்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அரிசன,பழங்குடி மக்கள் வாழ்வில் ஒரு உண்மையான திருப்பம், மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமானால், இவர்களுக்கு வீடு வசதி, சுகாதார வசதி, ரோடு வசதி இவைகளை முதலில் தன்நிறைவு காண வகை செய்யப்பட வேண்டும். பிற சமுதாயத்தினருடன் ஓட்டி உறவாட இவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியாக வேண்டும். அதற்கான திட்டங்களை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்

திரு. செ. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978–79 ஆம் ஆண்டு அரிஜன நலத் துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன்.

இந்த மாநிலத்தில் மொத்த அரிஜன மக்கள் தொகை 76 இலட்சம் ஆகும். ஏறக்குறைய மாநிலத்தின் ஐந்தில் ஒரு பங்கினைக் கொண்ட அரிஜன மக்களின் முழு ஆதரவு பெற்று இங்கு நாம் ஆளுங்கட்சியாக அமர்ந்திருக்கிறோம் என்பதை நம்மில் யாரும் மறுக்க முடியாது. இந்த மக்கள் முன்னேறினால், இந்த நாடு முன்னேறும். நமது தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி இந்த மக்களுக்கு நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

அரிஜன பெருமக்களுக்கு முக்கியமாக படிப்பு வசதி, வீட்டு வசதி, குடிநீர் வசதி, தொழில் வசதி, தொழில் செய்ய பொருளாதார வசதி போன்ற முக்கியத் திட்டங்கள் இம்மானியத்தில் சேர்க்கப்பட்டு இருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். வீட்டு வசதிக்கு, மின்சார வசதி அவசியம் தேவை. அதற்காக 1977–78 ஆம் ஆண்டு 10 லட்சமும், 1978–79 ஆம் ஆண்டு 5 லட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக அந்த மக்கள் சார்பாக அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 மார்ச் 18] [திரு. செ. பட்டாபிராமன்]

அரிஜன மக்களோடு இந்தப் பழங்குடி மக்களையும் மறந்து விடவில்லை. அவர்களுக்கும் 1978—79 ஆம் ஆண்டு குடிநீர் வழங்க ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய விஷயமாகும். முக்கியமாக, இந்த நிதி நிலை ஆண்டில் அரிஜன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா, காலனிகள், தெரு பராமரிப்பு, சுடுகாட்டிற்குப் பாதை அமைத்தல் போன்ற காரியங்களுக்கு ரூ. 100 லட்சம் ஒதுக்கியிருப்பது ஒரு புரட்சிகரமான செயலாகும். இதற்கு முன்பு எந்த அரசாலும் இவ்வளவு தொகை ஒதுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் ஆணித்தரமாக கூறிக் கொள்கிறேன்.

அரிசன மக்கள் மேட்டுக்குடி மக்களோடு சரிசமமாக சமுதாயத்தில் மதிக்கப்பட வேண்டுமானால் அவர்களுக்கு மிகவும் முக்கியமானது கல்வி வசதியாகும். இந்த நிதியாண்டில் கல்விக்காக ஒரு கணிசமான தொகையை ஒதுக்கியமைக்கு இந்த அரிசன சமுதாயம் நமது புரட்சித் தலைவரின் ஆட்சியைப் பாராட்ட என்றென்றும் கடமைப்பட்டவர்கள். இந்த மானியக் கோரிக்கையில் 4 முதல் 11 ஆம் வகுப்பு வரையில் அரிசன கிருஸ்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்கு, அவர்களது பெற்றோர் ஆண்டு வருமானத்தைக் கணக்கிடாமல், எல்லா வகையான பாடப் புத்தகங்களையும் இலவசமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

அரிசன குடியிருப்புப் பகுதிகளில் 50 பாலர் பள்ளிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதால் ஒவ்வொரு பாலர் பள்ளியிலும் 70 குழந்தைகள் வீதம் ஆக 3,500 குழந்தைகளைப் பேணி வளர்க்க வகை செய்யும்.

அரிசன நல மானியக் கோரிக்கையின்மீது பேசும் இத்தருணத்திலே கேட்டுக்கொள்வதெல்லாம் இன்றைக்கு நாட்டிலே தீண்டாமையை ஒழிக்கச் சட்டம் இயற்றியும், அதற்காகப் பல பெருந்தலைவர்கள் போராடியும்கூட அவற்றை முழுமையாக ஒழித்தபாடில்லை என்பதை மெத்த வருத்தத்தோடு கூறிக் கொள்கிறேன். மேலும் அரிசன சமுதாய மக்கள் பல இடங்களில் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வரும் காட்சியைப் பார்க்கிறோம். ஆகவே, நம் கழக அரசு இக்குறைபாடுகளை நீக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நில உச்சவரம்புச் சட்டத்திலே உள்ள சில குறைகளைப் பயன்படுத்தி, பினாமி பெயரிலேயே நிலங்களை வைத்திருக்கும் பெரும் நிலச்சுவான்தார்களிடமிருந்து உபரி நிலங்களைக் கைப்பற்றி அவற்றை ஏழை அரிசன விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பகிர்ந்தளிக்க நம் கழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. பட்டாபிராமன்] [1978 மார்ச் 18

அதுமட்டுமல்லாது பல கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை நிலமுள்ள பெரும் பணக்கார்ரர்கள், ஒவ்வொருவரும் பல ஏக்கர் நிலங்களை குறைந்த குத்தகைக்கு எடுத்து ஆண்டு அனுபவித்து வருகின்றனர். அவற்றையும் இன்றைய பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியுள்ள ஏழை அரிசன மக்களுக்குப் பயிரிட, குத்தகை மூலம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அரிசன சமுதாயப் பெருங்குடி மக்களின் வருமானத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்ற வகையில் நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு வெகுவாகப்பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டில் பல இடங்களில் இன்றைக்கு அரிசன விவசாய மக்கள் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களைச் சீர்படுத்தி பல ஆண்டுகளாகப் பயிர் செய்து அனுபவித்து வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களை அவர்களுக்கு மிக விரைவாக பட்டா செய்து தருமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன் மக்களுக்கு தொழில்கள் நடத்துவதற்கு வியாபாரக் கடன்கள் கொடுக்கும் திட்டங்கள் இன்றுவரை ஏட்டளவிலேதான் உள்ளன. எனவே, அதைச் செயலளவிலே அமல்படுத்த விதிமுறைகளை மாற்றியமைத்து, மிகச் சுலப முறையில் அரிசனங்கள் கடன் வாங்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற அகில இந்தியப் பணிகளுக்கு போட்டித் தேர்வு எழுத அரிசன மாணவர்களுக்குத் தேர்வுக்கு முன்பு பயிற்சி அளிக்கும் நிலையம் இருப்பது போல்—சார்டர்டு அக்கவுண்டன்ட்—சி.ஏ. தேர்வுக்கும் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், எனக்குத் தெரிந்தவரை நமது மாநிலத்திலே ஒரு அரிசன மாணவன்கூட சி. ஏ. தேர்வு பெற்றதாகத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்று அரசு ஆராய்ந்து அந்தக் குறையைப் போக்குமாறு மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, என் தொகுதியிலுள்ள குறைகளை மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் 52,000 அரிசன வாக்காளப் பெருமக்கள் இருக்கிறார்கள். அநேக காலனிகளைக் கொண்ட அந்தச் சட்டமன்றத் தொகுதியில் இன்னும் வீட்டு வசதி, குடிநீர் வசதி பெரும் குறையாகவே உள்ளது. உதாரணமாக, கம்மவார்பாளையம், புதூர், காந்திகிராமம், வதட்டூர் போன்ற காலனிப் பெருமக்களுக்கு வீட்டு

1978 மார்ச் 18] [திரு. செ. பட்டாபிராமன்]

மனைப் பட்டா வழங்கப்பட வேண்டும். வதட்டூர், சேலை, சென்றான்பாளையம், பூண்டி போன்ற கிராமக் காலனிகளில் குடிநீர் வசதி செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதைகளே இல்லாத காலனிகள் அதிகம் உள்ளன. வெள்ளியூர், திம்மபூபாலபுரம், ராமலிங்காபுரம், நந்திமங்கலம், பொந்தவாக்கம் போன்ற ஊராட்சிகள் உள்ள காலனிகளிலும் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் பிணங்களைத் தூக்கிக் கொண்டு தனியார் நிலங்களில் தான் போகவேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு உள்ள நிலைமையை அரசு நிச்சயமாகப் போக்க வேண்டுமென்று கூறி இந்த அளவுக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–40.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் திரு. பட்டாபிராமனைப் போன்று எல்லோரும் 5 நிமிடத்தில் கச்சிதமாக முடித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>*திரு. பொ. உத்திராபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனம் மற்றும் பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

29 கோடி ரூபாய்க்கு மேல் இன்றைக்கு அதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன், ஆனால் அரிசனங்கள், பிற்பட்டோர் மானியக் கோரிக்கைகள்மீது இங்கே நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இந்தியாவில் அரிசனங்களைக் கொடுமைப்படுத்துவது என்பது மேலும் மேலும் தலை தூக்கிக் கொண்டிருக்கிறது. மத்தியிலே ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 6 மாத காலத்தில் உத்திர பிரதேசத்தில் மட்டும் 1,400 கொடுமைகள் நடந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல. பீகார், பஞ்சாப், அரியானா மாநிலங்களிலேயும் இப்படி நடந்து கொண்டிருக்கின்றன என்பதை இன்றைக்கு நாடாளுமன்றத்திலே கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய தொடர்பாக இன்றைக்கு தமிழகத்திலே கூட பல்வேறு இடங்களிலே அப்படி நடந்து கொண்டிருக்கிறது.

படித்துவிட்டு வரக்கூடிய அரிசன மாணவர்களுக்கு 18 சதவீதம் என்பது நீண்டகாலமாக இருந்துகொண்டிருக்கிறது. இன்றைய அரசு அதை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை ஓரளவுக்குத் தீர்ப்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து இருப்பதாக மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். நல்ல யோசனை. இருந்தாலும் அந்தக் குழுவிலே அதிகாரிகள் மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களும், மக்கள் பிரதிநிதிகளும் இருந்தால்தான் அதிகாரிகள் சொல்லக்கூடிய யோசனைகள் இன்னும் சீரும் சிறப்புமாக அமையும்.

அதேபோல் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சம்பந்தமாக இன்றைக்கு ஹாஸ்டலில் தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு 65 ரூபாய் நீண்டகாலமாக இருக்கிறது. அது போதாது. ஒரு மனிதனுக்கு வேண்டிய உணவிற்கும் மற்ற மற்ற சௌகரியங்களுக்கும், குறைந்தது 100 ரூபாயாவது தேவைப்படுகிறது. இன்றைக்குக் கேரளத்திலும், கர்நாடகத்திலும், ஆந்திரத்திலும் 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதைப்போலவே நம்முடைய அரசும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் அரிசனங்கள், ஏழை எளியவர்கள், பிற்பட்டோர் ஆகியோர் படித்துவிட்டு இன்றைக்கு லட்சக்கணக்கானோர் வேலையில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள், வேலை கிடைக்கவில்லை. கேரள மாநிலத்திலேயும் மேற்கு வங்காளத்திலேயும் அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். அதைப்போலவே நம் மாநிலத்திலும் தமிழக அரசும் படித்துவிட்டு வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டு இருக்கிறவர்களுக்கு, வேலை கிடைக்கிற வரையிலும் உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விடுதிகளில் இன்றைக்கு மாணவர்களுக்கு இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. 2 பேர் தங்கக்கூடிய இடத்திலே இன்றைக்கு 9 பேர்கள் தங்கக்கூடிய நிலைமை இருக்கிறது, ஆகவே இட வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிண்டியிலே ஐ.டி.ஐ. விடுதியிலே அப்ரன்டீஸ் மாணவர்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தார்கள். அதற்காக அங்கே 3 மாணவர்களை பிரின்ஸிபால் நீக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் இடம் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டில் இன்றைக்கு அதிகமான மாணவர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும்,

காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலேயும் பல்வேறு வாக்குறுதிகளை அதற்காகக் கொடுத்தார்கள், அவைகளை நிறைவேற்றவில்லை. அதைப் போக்குவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இந்தச் சட்டமன்றத்திலே சிக்கணுங்குப்பத்தைப் பற்றி நான் பேசினேன். அதையொட்டி தமிழக அரசு போர்டு மெம்பர் ராமச்சந்திரனை அங்கே அனுப்பி விசாரிக்கச் சொன்னார்கள். அங்கே இருக்கின்ற நிலப் பிரபுக்கள், போர்டு மெம்பர் ராமச்சந்திரன் விசாரித்தும் அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்தும் மீறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் அதுபற்றி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே பட்டுக்கோட்டை பகுதியிலே மதுக்கூர் வட்டாரம் கோபாலசமுத்திரம் கிராமத்தில் 40 வீடுகள் இன்றைய ஆட்சிக்காலத்திலே இடிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலைமையைப் போக்க அந்த 40 குடும்பங்களுக்கும் வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுத்து வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது போன்று சுடுகாடு. இன்றைக்குப் பல்வேறு பிரச்னைகள் எல்லாயிடங்களிலும் இருக்கின்றன. செத்தால் புதைப்பதற்குக்கூட பெரும்பகுதி இடங்களில் மிராசுதார்கள் இடம் கொடுக்க மறுக்கிறார்கள். தஞ்சைமாவட்டம் மணலி பட்டாமணியம்கூட இடத்தை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

அதைப்போல இன்றைக்கு மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் பெரும்பாலான கிராமங்களில் கம்பங்கள் நடப்பட்டிருக்கின்றனவே தவிர விளக்குகள் கிடையாது. ஓவர்சேரிக்குப் பக்கத்தில் இருக்கின்ற அரிசனத் தெருவிற்கு மின்சாரம் போகவில்லை.

அதுபோல் குடிநீர்ப் பிரச்னை போன்ற இப்படிப்பட்ட பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. இதையெல்லாம் தீர்ப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு மூன்று மாதங்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. இந்த 3, 4 மாதங்கள் தவிர மற்ற நாள் பூராவும் வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களது குறைந்தபட்சவேலைக்குஉத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1978 மார்ச் 18

அதைப்போல புயலால் பாதிக்கப்பட்டு இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்கள், அரிசன மக்கள் வீடிழந்து நிற்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு குறிப்பிட்ட வீடுகளைக் கட்டி விளம்பரம் செய்தார்கள். அதைப்போல காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும். எனவே, இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க சாதாரண ஏழைகளாக இருக்கும் அரிசன மக்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுத்தால் அடுத்தடுத்து புயல் வரும் நிலைமைகளில் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுவதற்குப் பதிலாக வீடுகள் கட்டிக் கொடுப்பது நல்ல அம்சம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுக்கூர் வட்டாரத்தில் எடுத்துக் கொள்வோம். இன்றைக்கு ஜாதி பற்றி பேசுகிறவர்கள் பேரில் அதிகாரிகளிடத்தில் புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்காமல், யார் பேரில் பெட்டிஷன் கொடுக்கிறார்களோ அவர்கள் வீட்டிற்குப் போகிறார்கள். அந்தப் புகார் யார் மீது சொல்லப்பட்டிருக்கிறதோ அவர்களை விசாரிப்பதில்லை. மதுக்கூர் வட்டாரம் போலீஸ் சரகத்தில் உட்பட்ட பகுதிகளான அத்திவெட்டி மதுக்கூர் வடக்கில் ஜாதியைப்பற்றி இழிவாகவும் தரக்குறைவாகவும் பேசியவர்கள்மீது தொடரப்பட்ட வழக்கில் அந்த அதிகாரிகள் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

அடுத்து, விழுப்புரம் பாணம்பட்டு பாட்டையில் வாழ்ந்த பெருமாள் என்பவர் சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் சாராய கரைமேடு கிராமத்தில் கட்டி வைத்து அடித்துக் கொல்லப்பட்டு அவரது பிணம் மறைக்கப்பட்டது. பின்பு அக்கிராமத்தில் விவசாயச்சங்கம் தந்த புகாரின்பேரில் பிணம் போலீசாரால் தோண்டி எடுக்கப்பட்ட பின்பும் கொலைகாரர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தவறி வருகிறார்கள். இதுபோல பல்வேறு நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவைகளைப்பற்றிச் சொல்லிக் கொண்டே போனால் நேரம் அதிகமாகும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஆறு மாத காலமாக இந்திய நாட்டில் வேகமாகத் தலைதூக்க முடியாமல் நிலப்பிரபுத்துவ சமுதாயம் மறுபடியும் கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. இதன் விளைவாகத்தான் தமிழகத்திலும் நடைபெறுகிறது. கும்பகோணம், தஞ்சாவூர், பாபநாசம், சீக்குணங்கும்பம், தட்டுமாம்படுகை போன்ற இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான சம்பவங்கள் உருவெடுத்திருக்கின்றன. நிலப்பிரபுக்கள், இன்றைக்கிருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு அரிசன மக்கள் மத்தியில் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்தில் செயல்படுகிறார்களோ என்ற அச்சம் உருவாகியிருக்கிறது. எனவே, தயவு செய்து நமது அரசு இதில் கடுமையான நடவடிக்கை எடுத்து அரிசன மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

1978 மார்ச் 18]

திரு. என். பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978-79ஆம் ஆண்டு பழங்குடி அரிஜனங்கள் மானியக் கோரிக்கைமீது பேச எனக்குக்கிடைத்த வாய்ப்பிற்கு பெருமைப்பட்டு என்னுடைய சில கருத்துக்களையும் சொல்ல விழைகின்றேன்.

இதுவரை இருந்த அரசைவிட புரட்சித் தலைவரின்கீழ் அமைந்துள்ள அரசு கேட்பாரற்றுக் கிடந்த அரிசன பழங்குடி மக்களுக்கு அதிக நிதி ஒதுக்கி அவர்கள் பொருளாதாரத்தில் உயர்வடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் அவர்கள் தொழில் நடத்தவும் வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்து இருப்பது மிகவும் பாராட்டக் கூடியது. எனவே எனது தொகுதி மக்களின் சார்பில் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், அருந்ததியர்களுக்கும் போடப்பட்டுள்ள சலுகைகளில் இன்று ஒருசிறிதளவுதான் இம்மக்களுக்குக் கிடைக்கின்றது. எனவே, தமிழக அரசு முன்னின்று அனைத்துச்சலுகைகளும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வழிவகை செய்ய மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அதோடு தமிழக அரசு அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும். சலுகைகள் இருந்தும் இத்தனை ஆண்டுகளாக தாழ்த்தப்பட்ட மக்கள்—— அருந்ததியர் மக்கள் முன்னேறாமல் இருந்ததற்குக் காரணம் முந்தைய அரசுகளின் அலட்சியப் போக்கும் அரசு அதிகாரிகளின் செயல்களும்தான் என்பது நாடு அறிந்த உண்மை. ஆனால், இந்திய அரசியல் அமைப்பில் 1980 வரைக்கும்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகைகள் என்று உள்ளது. அதை இன்னும் பல ஆண்டுகள் அதிகரிக்க வேண்டும். அதற்காக நம்முடைய தமிழக சட்டமன்றத்திலிருந்து தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். இதைப் புரட்சித் தலைவர் ஆட்சியில் செய்வார் என்ற நம்பிக்கை, தமிழக தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே அசைக்க முடியாத அளவுக்கு உள்ளது. அதையும் அவர் நிறைவேற்றுவார் என்றே இருக்கின்றேன்.

[முற்பகல் 11-50]

அடுத்து, வேலை வாய்ப்புக்களில் அரசு ஒதுக்கியுள்ள விகிதப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதில்லை. இதற்கு அதிகாரிகளே முழுப் பொறுப்பு ஆவார்கள். இந்தக் குறைகளைப் போக்க புரட்சித் தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இனி மேலாவது நன்கு செயல்படும் என்று கருதுகின்றேன்.

அதோடில்லாமல், நேர்முகத் தேர்வு நடத்துகின்ற அதிகாரிகளில் கண்டிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியும் இடம் பெற வேண்டும். 100-க்கு 95 சதவீதம் இப்படிப்பட்ட குழுக்களில் அரிசன அதிகாரிகள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். உதாரணத்திற்கு எனது தொகுதியில் உள்ள பண்டி ஒ

[திரு. என். பெருமாள்] [1978 மார்ச் 18

நேரு சர்க்கரை ஆலையில் நேர்முகத் தேர்வு செய்யும் அதிகாரிகளிலோ அல்லது அங்குள்ள பெரிய அதிகாரிகளிலோ இதுவரை ஒரு அரிசன் கூட இல்லை என்பதை நான தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரிசனங்கள் எந்த அளவுக்கு அந்தத் தொழிற்சாலையில் புறக்கணிக்கப்படுகின்றார்கள் என்பதையும் நான் நன்கு அறிவேன் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவா விழைகின்றேன்.

அரசுத் துறைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விகிதப்படியே தனியார் துறையிலும் கொடுக்க வேண்டும் என்ற விதி இருந்த போதிலும் இதுவரை எந்த நிறுவனமும் வேலை கொடுத்ததில்லை. எனவே, அவ்வாறு கொடுக்காமல் இருக்கின்ற நிறுவனங்களாகிய கல்லூரி, பள்ளி, தொழிற்சாலைகள் போன்றவற்றின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அரசைக் கேட்டுக் கொள்கின்றேன்.

முந்தைய அரசு மாணவர்களுக்கு விடுதிகளைத் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என இரண்டாகப் பிரித்து, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் விடுதியை மட்டும் ஊரின் ஒதுக்குப்புறத்தில் கட்டியுள்ளார்கள். இந்தச் செயல்கள் மாணவர்—பொதுமக்களின் மனதில் மிகவும் புண்படும்படி அமைந்துள்ளது. எனவே, அரசு அவர்களும் மக்கள் என்பதை உணர்ந்து ஊரின் நடுவிலேயே அமைத்துக் கொடுக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள பெரும்பாலான விடுதிகளில் தண்ணீர், மின்சாரம், சுகாதாரம் போன்ற வசதிகளே இல்லாமல் உள்ளது. அரசு அவற்றைக் கனிவுடன் நோக்கி வசதி செய்து கொடுக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியைச் சேர்ந்த கீழ்ப்புலியூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த மன்னார்குடி காலனியில் இலங்கை, பர்மா அகதிகள் காலனியில் சுமார் 400 குடும்பங்கள் வசிப்பதால் அவர்களுக்கு அங்கேயே ஒரு பள்ளிக்கூடம் நிறுவ வேண்டும். அங்குள்ள மாணவர்கள் 3 மைல் நடந்து சென்றுதான் பள்ளிக்குப் போக வேண்டி இருப்பதால் இதற்கு அரசு உடன் ஆவன செய்ய வேண்டும்.

அதோடு அந்தக் காலனியில் வாழக்கூடிய மக்களுக்கு அங்கே அரசு புதிய வீடுகள் கட்டி வருகிறார்கள், அதிலும் அரசு ஆவன செய்து அங்குள்ள இலங்கை, பர்மா அகதிகளுக்கு நன்கு வசதி செய்து தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், என்னுடைய வரகூர் தொகுதி, திருச்சி மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அங்குள்ள விவசாயிகளுக்கு இன்னும் அதிகப்படியான விவசாய மேம்பாட்டுக் கடன்கள்—புதுக் கிணறு வெட்டுதல், அடிக்கிணறு வெட்டுதல்,

1978 மார்ச் 18] [திரு. என். பெருமாள்]

இன்சின், பம்பு செட் மற்றும் நவீன விவசாயக் கருவிகள் வாங்கிட—நிலவள வங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கூட்டுறவு வங்கிகள் மூலமாக மிகத் துரிதமான காலத்தில் கிடைக்கவும் நமது அரசு ஆவன செய்ய வேண்டும். புதுக் கிணறு, அடிக் கிணறு வெட்டுவதாய் இருந்தால் 650 அடி இருந்தால்தான் வங்கிகள் கடன் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். அதையும் 300 அடியாக மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது நாட்டில் இருக்கின்ற நரிக் குறவர்கள் என்ற இனத்தின் முன்னேற்றத்திற்கு அதிக நிதி ஒதுக்கி, அவர்களையும் சமுதாயத்தில் உயர்ந்த மக்களாக ஆக்க வேண்டும். அவர்களுக்கும் காலனிகள் கட்டி ஓர் இடத்தில் நிலையாகக் குடியிருக்கச் செய்ய வேண்டும். அவர்களுக்குப் பள்ளிகள் அமைத்தும், தனியார் மற்றும் அரசு விடுதிகளிலும் அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று நமது அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

படித்து வேலையின்றி இருக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களை, கிராம முன்சீப், கர்ணம் போன்ற வேலையில் அமர்த்த அரசு ஆவன செய்தும், அவர்களுக்கு அந்த வேலைக்கு இலவசமாகப் பயிற்சி கொடுத்தும், உணவு, தங்க இடம் போன்றவற்றை இலவசமாகப் பயிற்சியின் காலத்தில் கொடுத்தும் முன்னேற்ற வேண்டும். இது கிராமப்புறத்தில் உள்ள தாழ்த்தப்பட்டவர்களின் சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நீக்க வகை செய்வதோடு சமத்துவ உணர்வுகள் அனைத்து மக்களிடத்தேயும் வளர இவை போன்றவைகள் உதவி புரியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தற்பொழுது, பெரும்பாலான கிராமப் பஞ்சாயத்துக்களில் அரிசனங்களின் தெருக்களில் விளக்குகள் எரிவது இல்லை. அவ்வாறு உள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிராமக் கூட்டுறவு வங்கிகளில் பெரும்பாலான அரிசனங்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கும் கிராம வங்கிகளிலிருந்து சரியானபடி அனைத்து உதவிகளுமே கிடைக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, சிறு விவசாயி கார்டுகளை அனைத்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போது பெரும் பணக்காரர்களுக்கு விவசாயி கார்டுகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அரசு இதன் மீது கவனம் செலுத்தி தாழ்த்தப்பட்ட ஏழை மக்களுக்கே கிடைக்க வழி செய்ய வேண்டும்.

[திரு. என். பெருமாள்] [1978 மார்ச் 18

பால் மாடுகள் வாங்க கிராம வங்கிகள் மூலமாகப் பிற்பட்டோர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கடன் கொடுப்பதை இன்னும் அதிகப்படுத்தும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்கள் வாழும் பகுதிகளில் குடியிருப்பு மனை வழங்கும் திட்டமும் இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமும் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. அரிசனங்களுக்கும் அருந்ததியர்களுக்கும் கட்டிக் கொடுக்கப்படும் வீட்டு மனைகள் மூன்று செண்டு பரப்பளவாக இருப்பதை மேலும் வசதியாக இருக்கும் பொருட்டு 6 செண்டு பரப்புள்ள மனை வழங்கவும் அதற்கு வீடு கட்டிக் கொடுக்கும் செலவுத் தொகையை அதிகரிக்கவும் அரசு ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பயிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அரசு வழங்கும் உதவித் தொகை, சீருடை, பாட புத்தகங்களையும் கோடை விடுமுறைக்குப்பின் பள்ளி துவங்கிய ஒரு மாதத்திற்குள்ளாக கொடுத்தால் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மேலும் வசதியாக இருக்கும். அவர்களுக்கு உபகாரச் சம்பளம் இன்னும் கூடுதலாக அளிக்க வேண்டுகிறேன். ஆகவே, முந்திய அரசு காலத்தில் எனது தொகுதியைச் சார்ந்த சில கிராமங்களில் காலனியில் அரசு உதவியால் கட்டப்பட்ட வீடுகள் குறிப்பாக செட்டிக்குளம், இருவூர், எழுமூர், அத்தியூர், காரை, குன்னம், சித்தழிகம்பேணியில் உள்ள வீடுகள் மழைக் காலங்களில் ஒழுக்கல் எடுக்கின்றன. ஆகவே, இந்தக் கிராமங்களில் கட்டி இருக்கக் கூடிய வீடுகளை உடனடியாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு எனக்கு இந்தப் பேரவையில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். வணக்கம்.

<u>திரு. வ. துலுக்காணம் :</u> பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அரிசன நல மான்யத்தின் மீது பேசச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன் என்ற சொல் மறைந்து அவர்களும் நாட்டில் சம அந்தஸ்துடன் வாழ வேண்டும் என காந்தியடிகள், நேரு, பெரியார், அண்ணா போன்றவர்கள் அரும்பாடு பட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து டாக்டர் கலைஞர் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தில் திருத்தம், இலவச படிப்பு, இலவசப் பாடப் புத்தக திட்டம். உதவித் தொகை அதிகரித்து கொடுத்தல், நில ஆர்ஜித சட்டத்தில் திருத்தம் செய்து அதிக வீட்டு மனை பட்டாக்கள் வழங்குவது வீடுகள் கட்டிக் கொடுப்பது போன்ற திட்டங்களைத் தீட்டினார்.

ஆனால் இந்த அரசாங்கம் அரிசன மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவும், முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லவும் தயக்கம் காட்டுகின்றது. முதலும் கோணல், முற்றிலும் கோணல் என்பது போல் இரண்டு மந்திரி பதவிகள் கொடுக்கப்

1978 மார்ச் 18] [திரு. வ. துலுக்காணம்]

பட்ட சட்டமன்றத்தில் ஒரு மந்திரி பதவிதான் கொடுக்கப் பட்டிருக்கிறது. 1 கோடி ஜனத்தொகையுள்ள இந்தப் பிரிவிற்கு இன்னும் அதிக நன்மை செய்ய அவசியம் இன்னொரு மந்திரி நியமிக்க முன் வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

வானொலி, தொலைக்காட்சி பயிற்சிக்கு மாநிலம் முழுவதும் 20 பேருக்குப் பயிற்சி என்பது மிகவும் குறைவு. 100 பேருக்காவது பயிற்சி அளிக்க வேண்டும். படிப்பு உதவி தொகை உச்ச வரம்பை நீக்க வேண்டும், அல்லது மத்திய அரசு அறிவித்துள்ள ரூ. 9,000 மாக உயர்த்த வேண்டும். கல்லூரிகளில் சேரத் தகுதி வாய்ந்த மாணவருக்கு உதவித் தொகையை ரூ.100 ஆகவும் 60 சதவிகித மார்க் பெற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியத் தொகையை ரூ. 500 ஆகவும் உயர்த்த வேண்டும். டாக்டர், வக்கீல், பட்டப்படிப்பு படிப்பவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கடன் தொகை ரூ. 900-ஐ மற்ற ''வெட்டர்னரி'' டாக்டர் வேலைக்குப் படிக்கும் மாணவருக்கும் கொடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிகள் திறக்கப்படும்போது அரிசன மாணவர் அதிக அளவில் படிக்க ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் ஒரு நடுத்தர பள்ளியும், ஒவ்வொரு சிறிய காலனிக்கும் ஒரு ஓர் ஆசிரியர் பள்ளியும், ஒரு யூனியன் பகுதிக்கு ஓர் உயர்நிலைப் பள்ளியும் திறந்தால்தான் அரிசன மாணவர்கள் அதிக அளவில் படிக்க வசதியாக, இந்த ஆண்டு பள்ளிகள் திறப்பதைப் பற்றி எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. ஆகவே இந்த ஆண்டிலிருந்தே பள்ளிகள் திறக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

21 உயர்நிலை பள்ளி உள்ளதில் ஐந்து பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடம் என்பது மிகக் குறைவானதும், சொற்பமானதும் ஆகும். உடைகள் வழங்குவதில் முறைகேடுகள் நடைபெறுகின்றன. அந்தக் குறையை நீக்க பெற்றோர்கள் முன்னிலையில் கொடுக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பாலர் பள்ளிகளை ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் திறந்து சிறு குழந்தைகளுக்கு நல்ல சத்துள்ள உணவுத் திட்டத்தையும் சேர்த்து நடத்த வேண்டும். மதிய உணவிற்கு $22\frac{1}{4}$ பைசா என்பதை 30 பைசாவாக மாற்றி இளம் சிறார்களின் சிறு குடலாவது நிரம்ப உணவு அளிக்கக் கோருகிறேன்.

அடுத்து, அரிசன மாணவர்களுக்குத் தங்கும் விடுதி உள்ளது. அங்குள்ள ''வார்டன்''கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் தலைவர்களைப் போல் நடந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் அப்படி நடந்து கொள்ள வசதி ஏது என்றால் பள்ளிப் பிள்ளைகளின் உணவைக் குறைத்து இவர்கள் வசதி படைத்தவர்களாக மாறி விடுகின்றார்கள். இதைப் போக்க 6 மாதத்திற்கு ஒரு ஆசிரியரை மாற்றி மாற்றி வார்டன்களாகப் போட வேண்டும்.

[திரு. வ. துலுக்காணம்] [1978, மார்ச் 18

தட்டெழுத்து-சுருக்கெழுத்துப் பயிற்சிகளுக்கு அதிகப் பள்ளிகளைத் திறந்து 8-வது முதல் 11-வது படித்துள்ள மாணவர்களை அதிக அளவில் சேர்த்து கொள்ள வேண்டும். தொழில் தொடங்க கடன் வசதி கொடுக்கும் பாங்குகளுக்குக் கண்டிப்பான உத்திரவு அளிப்பதோடு ஜாமீன்தார் இல்லாமல் கொடுக்க ஏற்பாடு வேண்டும்.

பட்டப் படிப்பு படித்த வழக்கறிஞர்களுக்குத் தொழில் தொடங்கக் கடன் என்பதை இனமாகக் கொடுக்க வேண்டும்.

பட்டப் படிப்பு சிறப்புப் பயிற்சி 3 மாதம் என்பதை ஆறு மாதமாகவும் மாற்ற வேண்டும்.

பத்தாவது படிப்பு மாணவர்களுக்குப் பயிற்சி என்பதை 8-வது வகுப்பில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

மாணவர் இல்லங்களும், மாணவியர் இல்லங்களும் இன்னும் அதிக அளவில் திறக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்வதோடு, தற்போது உள்ள இல்லங்களில் அந்தப் பள்ளிகளில் உள்ள அத்தனை அரிசன மாணவர்களையும் சேர்த்த பிறகுதான் மற்றவர்களைச் சேர்த்துக் கொள்ள உத்தரவு அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதோடு மாடு வாங்க அதிக மானியம் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்ற மின் விளக்குகளுக்குப் பஞ்சாயத்து மூலம் தொகை கட்டுவதால் அரிசன நலத் துறை மான்யத் தொகையில் கட்டுவது அரிசனங்களின் வயிற்றில் அடிப்பது போலத் தெரிகிறது.

அரிசனங்கள் கல்யாணம் நடத்த வேண்டுமானால் இடம் கிடைப்பது அரிது. ஆகவே ஒவ்வொரு யூனியன் பகுதியிலும் ஒரு திருமண மண்டபமும், ஒரு சமுதாய நலக் கூடமும் கட்டித்தர வேண்டும்.

அரசாங்க அலுவலகங்களில் வேலை ஒதுக்குவது 18 சதவீதமாக உள்ளது. ஆனால் வேலை கிடைக்கின்றதா என்றால் 18 போர்க்களம் நடத்தினால்கூட கிடைக்காத நிலையாக உள்ளது. மேலும் 18 சதவிகிதம் என்பதை மாற்றி 25 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு தனியார் துறைகளிலும் வேலை கொடுக்க வேண்டும் எனச் சட்டம் கொண்டுவர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பதவி உயர்வு அளிக்கும்போது கண்டிப்பாக 18 சதவிகிதத்தினருக்கும் வேலை கிடைக்கும்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 18] [திரு. வ. துலுக்காணம்]

(நண்பகல் 12.00)

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளிக்கூடம் அரிசன மாணவர்களுக்கு என்று திறந்தால்தான் அதிக அளவில் மாணவர் தொழிற்பயிற்சி பெற முடியும்.

கல்லூரிகளில் ஒதுக்கப்படும் 18 சதவிகிதம் இடம் என்று சொல்வது ஒதுக்கப்படுவது இல்லை. இந்த மாதிரி புகார்கள் அதிகமாக வருகின்றன. அதைத் தவிர்த்து, அந்த 18 சதவிகிதம் கட்டாயமாக ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலம் ஆர்ஜிதம் செய்து மனைப்பட்டா வழங்கும்போது அதிக வருடங்கள் ஆகின்றது. ஆகவே, குறைந்தது 2 வருடத்திற்கு பட்டாக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்ட அத்தனை மனைகளிலும் வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றத்திற்கு என்று அரிசன வகுப்பிற்கு ரிசர்வ் இடம் ஒதுக்கப்படுவது போல கிராமப் பஞ்சாயத்துகளிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் ரிசர்வ் இடம் கண்டிப்பாக, அவசியம் ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன நலத் துறையில் வேலை செய்யும் அதிகாரிகள் அம்மக்களின் பேரில் கருணை வைத்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்க உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., படித்தவர்களுக்குப் பதவி உயர்வு என்பது வெறும் சொல்லளவில் தான் உள்ளது. ஏட்டளவில் உள்ளதா என்று 1978-ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் டைரியைப் பார்த்தால் அதில் ஒரு கடுகு அளவு காரமான உயர்வுகூடக் காணோம்.

அடுத்தது கிராமப் பகுதிகளில் கிராமத் தலைவர்கள், மணியம், கர்ணம் ஆகிய பதவிகள் அரிசனங்களுக்குக் கிடைக்காததால் அவசியம் மணியம், கர்ணம், பதவியையும் 18 சதவிகிதம் ஒதுக்குவதோடு சட்டப்பிரச்னையைப் பார்க்காமல் படித்த மாணவன் என்ற அளவில் இருந்தால் போதும், அவனை நியமிக்கலாம் என்று கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உளுந்தூர்பேட்டைப் பகுதியில் அவசியம் ஒரு அரிசன நலப்பள்ளியைத் திறக்கவேண்டும். எலவானூர் கோட்டையில் தங்கும் விடுதி திறக்கவேண்டும். அதேபோல் சேம்பாக்கம் அரிசன நலப்பள்ளியை ஹையர் செகண்டரி பள்ளியாக மாற்ற வேண்டும். மேலும் எனது தொகுதியைச் சேர்ந்த

[திரு. வ. துலுக்காணம்] [1978 மார்ச் 18]

நாகலூர் அரிசனக் காலனி, விருகாவூர் அரிசன காலனி, உளுந்தூர் பேட்டை மாடல் காலனி இன்னும் பலகாலனிகளில் உண்மையாக தண்ணீர் வசதி இல்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்தக் குறையை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது முதலமைச்சர் அவர்கள் மேலாடை இல்லாத மக்களைப் பற்றி அடிக்கடி குறிப்பிடுகிறார். மேலாடை போட வசதி இல்லாத மக்களுக்கு அதிக நிதி ஒதுக்கி வசதி செய்து கொடுத்தால் வருங்காலத்தில் மேலாடை இல்லாமல் இல்லாதவர்களாக எல்லோரும் இருக்க முடியும் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் துணைக்கு இன்னொரு அரிசன அமைச்சரையும் சேர்த்துக்கொண்டு, நல்ல வகையில் அவர்கள் பணியாற்ற வேண்டும் என்று கேட்டு, சந்தர்ப்பம் கொடுத்த தலைவருக்கு அதிக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*திரு ப. குருசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நமமுடைய மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு என்முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே ஏற்றத்தாழ்வு ஒழிக்கப்படும், ஏழைப் பணக்காரர் என்ற பாகுபாடு மாற்றப்படவேண்டும், தாழ்த்தப்பட்டோர் உயர்வு பெற்றோர் வித்தியாசத்தை ஒழிக்கவேண்டும் என்று இரவு பகலாக உழைக்கும் ஒரே தலைவர் எங்கள் புரட்சித் தலைவர் என்பதை இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல தமிழக மக்கள் எல்லோருமே உணர்ந்து பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்திலே புரட்சித் தலைவருடைய ஆட்சியில் நல்ல பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அதிலும் குறிப்பாக ஏழை அரிசனங்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள் ஆகியவர்களுடைய வாழ்க்கையை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதில் மிக அக்கறை கொண்டு பல நல்ல கருத்துக்களை இந்த அரசு கொண்டு இருக்கிறது என்பதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். பெரும்பாலும் தமிழகத்திலே ஆதி ஆந்திரா, ஆதி திராவிடர்கள், அருந்ததியர் போன்றவர்களுக்கு குறிப்பாக எந்த இடத்திலும் இதுவரையிலும் எத்தனையோ கட்சி ஆட்சிக்கு வந்தபோதிலும் எத்தனையோ முறை அவர்களிடம் கேட்ட பிறகும், அவர்களுக்கு இதுவரையிலும் நிலமோ, பட்டாவோ கொடுக்கப்படவில்லை, ஆனால், நம்முடைய தானைத் தலைவர், புரட்சித் தலைவர் ஆட்சியில் நிச்சயமாக அது கிடைக்கும் என்று மிகவும் ஆவலாக மக்கள் இருக்கிறார்கள்.

1978 மார்ச் 18] [திரு. ப. குருசாமி]

அடுத்தபடியாக நம்முடைய தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் கிராமங்களில் வாழும் அரிசன மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் நல்ல பல காரியங்களைச் செய்வார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் நம்முடைய புரட்சித் தலைவரவர்கள் நிச்சயம் செய்வார்கள்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியாகிய அந்தியூர் தொகுதியில் வாழும் அரிசன ஏழை எளிய மக்கள் இதுவரை எந்த முன்னேற்றமும் அடையவில்லை. ஏனென்றால், அங்கு அவர்களுக்கு ஏற்ற வசதிகளோ அல்லது நிலமோ இல்லை. ஆகையால், அவர்களுக்கு ஒரு வாரத்தில் இரண்டுமுறைதான் கூலி வேலை கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதுவும் குறிப்பாக ஒரு நாளைக்கு 2 அல்லது 3 ரூபாய்தான் கூலி கிடைக்கிறது. ஆகையால், அந்த மக்களுக்கு தங்களுடைய அன்றாட வாழ்க்கையை நடத்தி செல்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்த மக்கள் செய்கின்ற தொழில் ஒரு சிறுதொழில்தான். அதாவது தோல் பதனிடும் தொழிலை அவர்கள் கற்றிருக்கிறார்கள். ஆகையால் அரிசன, அருந்ததி மக்கள் வாழ்க்கை முன்னேற வேண்டுமென்றால், தோல் பதனிடும் தொழிலை ஆண்டியூர் தொகுதியில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அந்தியூரில் வாழும் அரிசன மக்களின் குறைகளைப் போக்க வேண்டுமென்றால் நம்முடைய ஆட்சியில் பல சிறு தொழில்களை ஏற்படுத்த வேண்டும். அதற்குப் பல்வேறு விதமான உதவிகள் தேவைப்படுகின்றன. பல்வேறுவிதமான தொழில்களுக்கும் பல்வேறுவிதமான கருவிகள் தேவைப்படுகின்றன. அவைகளை வாங்குவதற்கு அவர்களுக்கு ''லோன்'' வசதி செய்து கொடுக்க வேண்டும்.

அந்தியூர் பகுதியில் வாழும் மலைவாழ் மக்களுக்கு ரோடு வசதி கிடையாது. அவர்களுக்கு ரோடு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

அந்தியூர் தொகுதியில் வாழும் அரிசன மக்களுக்கு வீட்டு வசதி கிடையாது. வீடு கட்டிக்கொள்ள நிலமும் கிடையாது. அதனால் அவர்களுக்கு வீட்டு மனைகளை பட்டா செய்து கொடுத்து, வீடு கட்டிக்கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அந்தியூர் பகுதியில் வாழும் அரிசனங்களும் மலைவாழ் மக்களும் முன்னேற வேண்டுமென்றால் அங்கே சிறு தொழில் போன்ற தொழில் வசதிகளை செய்துகொடுத்தால், முடி

யும். அதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு சொ. ந. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன பழங்குடி நலத்துறை 1978-79 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனக்குப் பேசுகின்ற வாய்ப்பை நல்கியதற்கு நன்றி தெரிவித்து எனது உரையைத் தொடங்குகிறேன்.

நடப்பு ஆண்டில் அரிசன, பழங்குடி மக்கள் நலனுக்காக ரூ. 1,601·89 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்டோரின் மக்கள் தொகை 76 லட்சம் என்ற குறிப்பைப் பார்க்கையில், மேற்படி நலனுக்கு ஒதுக்கிய நிதி போதாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன நலத்துறையினர் செயல்படுத்தும் பல நல்ல திட்டங்கள் இருந்தபோதிலும் கிராமப்புறங்களில் வசிக்கின்ற 83 சதவீத அரிசன பெருங்குடி மக்களின் அவல நிலைமை சுதந்திரம் அடைந்து 30-ஆண்டுகள் ஆகியும் இன்னும் புரையோடிய புண் போலத்தான் இருக்கிறது. இதுவரையிலும் 2,883 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும், இதில் 2,187 நபர்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் நிலம் வழங்கப்பட்டும் வேலை வாய்ப்பு மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி அளித்தும் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன மக்கள் எந்த அளவுக்குப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம்அடையவேண்டுமோ அந்த அளவுக்குப் பொருளாதார முன்னேற்றம் அடையவில்லை. இந்தச் சமுதாயத்தில் இன்னும் தீண்டாமை இருக்கிறது என்று சொன்னால் அது எந்த அளவுக்கு உண்மைஎன்பதை அரசு மிகவும் கவனமாக கண்காணிக்க வேண்டும் என்பதை மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது தொன்றுதொட்டு வந்த ஒரு குறையாக இருக்கிறது.

உழைத்து, உழைத்து உடல் உரம் பெற்றவர்கள்தான் அரிசன மக்கள். அவர்கள் கடமையைச் செய்கிறார்கள். கடமையோடு கட்டுப்பாடு மட்டும் அவர்கள் கடைபிடித்தால் உண்மையிலேயே இந்தச் சமுதாயம் கேவலமாக எண்ணப்பட மாட்டாது. நாகரிகத்தின் உச்சியில் இருக்கின்ற ஜாதி இந்துக்கள் அவர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக இருந்து உதவினால் இப்படி ஒரு தனித் துறையே தேவைப்படாது.

அரிசனங்களின் முன்னேற்றம் தேசிய பிரச்சினையாகும். தீவிரமாகத் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தினால் ஓரளவு குறுகிய காலத்தில் அரிசனங்களின் முன்னேற்றம் காணலாம். மாநில அரசைப் பொறுத்த வரையில் கணிசமான நிதி ஒதுக்கியிருந்தும், சட்டங்கள் விதிகள் நடைமுறையில் இருந்தும் தீண்டாமையை ஒழிக்க முடியவில்லை. அரிசனங்களின் முன்னேற்றத்திற்குப் பெரும் துணையாக இருப்பது கல்வியே ஆகும்.

[பிற்பகல் 12 10]

படித்துப் பட்டம் பெற்று அல்லது தொழில் கல்வி கற்று தொழில் நிபுணர்களாகத் தேர்ந்து தொழிலில் அமர்ந்து பின்புதான் அவர்களின் பொருளாதாரமும் உயருகிறது. எல்லோருடன் சமமாக அமரும் வாய்ப்பையும் பெறுகிறது. ஆகவே, அரசு பயனுள்ள திட்டத்தைத் தீட்டி செயல்பட்டால் நாம் எதிர்பார்க்கிற அளவு முன்னேற்றம் காண முடியும். அதற்காக எனது திட்டத்தை இப்பேரவையில் சொல்வது நலமுடையதாக இருக்கும் என்று எண்ணுகின்றேன்.

கட்டாயக் கல்வித் திட்டம் நெடுங்காலமாக அமுலில் இருந்து வருகிறது. அத்திட்டத்தின் கீழ் அரிசன சமூகத்தைச் சேர்ந்த ஐந்துவயதிற்கு மேற்பட்ட சிறுர்களைபள்ளிகளில் சேர்த்துமாணவர்களுக்கென விடுதி வசதியை அளித்து எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் வரை விடுதியிலேயே தங்கிப் படிக்கும் வசதியை அரசு செய்து தர வேண்டும். சிறுர்களின் பெற்றோர்கள் மாதம் ஒரு முறை வந்து குழந்தைகளின் நலன்களைப் பார்த்துவிட்டுப் போகலாம். விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவன் கல்வியின் மீது கவனமும், தான் படித்து முன்னேற வேண்டும் என்ற நல்ல எண்ணமுடன் மனமாற்றம் ஏற்படும்.

எஸ். எஸ். எல். சி. தேறியவுடன் அரைநாள் படிப்பும், அரைநாள் விருப்பமான தொழிற்கல்வி கற்றுத் தந்தால் குறிப்பிட்ட கால அளவில் பி. ஏ. பட்டத்தோடு தொழில் பட்டமும் பெற்று சிறந்து விளங்குவான். இதனால் அந்த அரிசன மாணவன் அரசாங்க வேலையை மட்டும் நம்பி இராமல் தான் கற்ற தொழிலை நடத்துவதற்கு வழிமுறை காண்பான். இதற்கு ஆகும் கால அளவு இப்போது உள்ள கால அளவேயாகும். இப்போது அரசு செலவிடும் நிதியே சற்றுக் கூடுதலாகச் செலவாகலாம். மேற்கண்ட முறையில் அரசு நடத்த முற்படுவார்களேயாகில் 15-ஆண்டுகளுக்குள் இந்தச் சமூகம் மிக நல்ல முன்னேற்றம் காணும். இதை உயர் மட்டக் கமிட்டி பரிசீலனை செய்து பார்க்கட்டும்.

கைத்தறி நெசவாளர்களின் குறையைப் போக்க அரசு பெரும் முயற்சி எடுப்பதைப் போல், மீனவர்களின் குறையைப் போக்க திட்டம் தீட்டி செயல்பட்டு வருவதைப் போல், பொற் கொல்லர்

கள் விஷயத்தில் அக்கறை காட்டி செயல்படுவதைப் போல் அரிசன பிரிவில் அருந்ததியருக்கு சிறப்புச் சலுகையுடன் கூடிய நல்வாழ்வு திட்டங்கள் ஏற்படுத்துமாறு அன்புடன் அரிசன நல அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அரிசனங்களுக்கு நிலத்தைப் பட்டா செய்து கொடுப்பதிலும், கிணறுகள் வெட்ட, உழவு மாடுகள் வாங்க, சிறு தொழில் அமைக்க கடன் கொடுப்பதிலும் மிகவும் காலதாமதம் செய்வதால், இதனைத் தவிர்த்து விரைவில் அவர்களுக்குக் கிடைப்பதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முழு உரிமை கொடுத்து உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க அவருக்கு ஆணை பிறப்பிக்க வேண்டும். ஆண்டுக் கணக்கில் உள்ள இத்தகைய கோரிக்கைகள் உடனே முடிவதற்கும் மக்கள் பயன் பெறுவதற்கும் உதவியாக இருக்கும்.

திருச்சி, தஞ்சாவூர் சி. எஸ். ஐ. திருச்சபை டயோஸிஸில் 1965 முதல் ஆசிரியராகவும் பின்னர் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி வந்துள்ள திரு. ஜே. ஜார்ஜ்மனுவேல், பி. ஏ., பி. டி., திடீரென்று பதவிக் குறைப்பு செய்யப்பட்டிருக்கிறார். இதுவரை நிர்வாகத்தினர் நியாயம் வழங்காததும், கல்வி இலாக்காவினருக்கு முறையீடு செய்து கவனிக்கப்படாதது சிறுபான்மையோர் அருந்ததியர் சமூகத்திற்கு இழைக்கப்படும் கொடுமையாகும். இதேபோல் நீலகிரி மாவட்டம் அரவேனு உயர்நிலைப்பள்ளியில் பத்து ஆண்டுகளாக ஓவிய ஆசிரியராகப் பணிபுரிந்த கே. ராஜமாணிக்கம் என்ற நபரையும் எவ்வித முகாந்திரமும் இன்றி வேலையை விட்டு விலக்கியிருக்கிறார்கள். கல்வி இலாக்காவினருக்கு முறையீடு செய்தும் அவருக்குச் சரியான வேலைவாய்ப்புக்கு உத்தரவு பிறப்பிக்கவில்லை. அவர்களது கோரிக்கைகளை இந்த மன்றத்தின் முன்பே வைப்பதால், சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு எண்ணுவார் என்று நினைக்கிறேன்.

சொந்த நிலங்கள் எதுவும் இன்றியும் வேறு எந்தவித பொருளாதார வசதிகள் இன்றியும் கொடிய வறுமையால் வாடி வருகின்றோம் என்ற அவர்களது மனுவை பரிசீலித்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதியில் வன இலாக்காவிற்குச் சொந்தமான ஏராளமான பூமி சுமார் ஐயாயிரம் ஏக்கர் பயனற்றுக் கிடப்பதாக எனக்குத் தகவல் வருவதால் அரசு இதில் கவனம் செலுத்தி அரிசனப் பழங்குடி மக்களுக்கு நபருக்கு இரண்டு ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுப்பதற்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஏற்கனவே இது விஷயமாக தங்களுக்குச் சம்பந்தப்பட்ட அருந்ததியர் சங்கத்தினர் தெரிவித்து இருக்கிறார்கள் என்பதை [illegible] கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்காக குறைந்தபட்சக் கூலி சட்டம் அமுலில் இருந்தும் தமிழகத்தில் பூரணமாக அமுலாக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வதோடு பண்ணையில் அடிமையாகப் பணி செய்யும் ஹரிசன சகோதரர்களுக்கும் மாத ஊதியத்திற்கும் சட்டத்தில் இடம் கொண்டு வருமாறும் கேட்டுக் கொள்கிறேன். மருத்துவம், இன்ஜினியரிங், சட்டம் ஆகிய துறைகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கும் அரசாங்கத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யவும் பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து போர்டு, முனிசிபல் மாநகராட்சி ஆகிய அலுவலகங்களில் 18 சதவீதம் உத்தியோகம் கொடுக்காத நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் கோருகிறேன். தனியார் நடத்தும் தொழிற்சாலைகளில் இதை உடனடியாகக் கொண்டு வருவதற்கு அரசு தீவிர முயற்சியில் ஈடுபட வேண்டும்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு செலக்ஷன் கிரேடு குறிப்பிட்ட சதவீதம் தருவதைப் போல் மாநில அரசும் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன். அரிசன காலனிகளுக்கு ரோடு வசதி, தண்ணீர் வசதி, மின்சார வசதி குறைவின்றி கிடைக்கச் செய்ய வேண்டும். அன்னூர் ஊராட்சி ஒன்றியம், அவிநாசி ஒன்றியம் சேர்ந்த அரிசனக் காலனிகள் மிகவும் சுகாதார வசதியின்றி இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். [illegible], அவிநாசி, கருவலூர், அன்னூர் பொகளூர், பசூர், கறுவக்கரை, பொன்னிக் கவுண்டன் புதூர் ஆகிய ஊர்களுக்கு மொபேல் வேன் சென்றுவர அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் அன்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு நிலையத்தில் அதிகப் படுக்கைகள் போடுவதற்கு அனுமதி அளித்தால் அரிசனத் தாய்மார்கள் மிகவும் நலம் பெறுவார்கள்.

அரிசனக் கோவில்களைப் பராமரிக்க ரூ. 1,000 கொடுப்பதாக அரசு அறிவித்தது. எந்த கிராமத்திற்கும் இதுவரை கொடுக்கவில்லை. அதே போன்று கோவை மாவட்டத்தில் எந்தக் கிராமத்திலும் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கவில்லை. அதற்காக ஒதுக்கிய நிதிகள் எங்கு போயிற்று என்று அமைச்சர் அவர்கள் கவனித்தால் மிகவும் நலமாக இருக்கும். எனது தாலுக்காவின் மேற்கு எல்லைக்கு அப்பால் பழங்குடி மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதியோடு கல்வி வசதியும் செய்து கொடுக்க வேண்டும்.

இருளர் என்பவர்கள் இன்னும் மேலாடை இல்லாமல் இருப்பதை நான் கண்டதை இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன். பட்டா நிலத்தில் சில அரிசனக் கோயில்கள் இருப்பதினால் பல இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். அதைப் பட்டா செய்து கொடுக்கும்படி அரசை கேட்டுக் கொள்கிறேன். திருப்பூர் குடிநீர் திட்டத்தின் இரண்டாவது கட்டம் தற்பொழுது நடைபெறுவதால், அதை உடனடியாக முடித்து வழியோர கிராமங்களுக்கு [illegible] கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் போன்ற தேர்தல்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கம் செய்தால் அரிசனங்கள் முன்னேறுவதற்கு அது உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரிசன ஹாஸ்டல்களில் ஒரு மாணவனுக்கு ரூ. 40 கொடுப்பதைப் போல் தனியார் ஹாஸ்டல்களுக்கும் அதைக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அரிசன பழங்குடி மானியத்தில் பேச அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

*திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கிற ஹரிசன நல மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நான் முதலில் என் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக இருக்கிற 76 லட்சம் ஹரிசன, பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, கல்வி, சுகாதாரம், வீட்டுமனைகள் வழங்குவது, வீடுகள் கட்டிக் கொடுத்தல் போன்ற அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இந்த மானியக் கோரிக்கையில் கோரி உள்ள தொகையை வரவேற்றுப் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மானியத்தில் பழங்குடி மக்கள், மலைப்பகுதிகளில் வசிக்கிற மக்களுக்காக மின்வசதி செய்துத்தர ரூ. 5 லட்சம் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதையும் நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

வானொலி, தொலைக்காட்சி, இயந்திரவியல் இவற்றில் பயிற்சி அளிக்க ஒரு பயிற்சி நிலையம் அமைத்து, இருபது பேர்களுக்கு பயிற்சி அளிக்க ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியத்தில் பாதிக்கு மேல் கல்விக்காக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி அறிவு பெற்றாக வேண்டும். அவர்கள் சமுதாயத்தில் மற்றவர்களோடு சம அந்தஸ்து பெறவேண்டும் என்ற முறையில் அவர்கள் எல்லாம் கல்வி அறிவு பெற்றால்தான் அவர்கள் சமுதாயத்தில் சிறந்த இடத்தைப்

பெறுவார்கள் என்ற எண்ணத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் கல்விக்காக இந்த மானியக் கோரிக்கையில் அதிக வசதி செய்து கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

பாலர் பள்ளிகள் அமைத்து ஏழைக் குழந்தைகளுக்கு நல்ல முறையில் ஒழுக்க உணர்வுகளைக் கற்றுத்தர வழிவகை செய்ய பாலர் பள்ளிகள் 50 பள்ளிகளை அமைத்து அதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு ஒழுக்க உணர்வுகளைக் கற்றுத் தருகிற ஒரு நல்ல திட்டத்தை வரவேற்கிற அதே நேரத்தில் இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி பஞ்சாயத்துக்கு ஒரு பள்ளிக்கூடம் என்ற முறையில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் சட்ட பட்டதாரி மாணவர்களுக்கு, புதிதாக ஐந்து சட்ட பட்டதாரி மாணவர்களுக்குப் பண, உதவி அளித்து தொழில் செய்கிற வகையில் அவர்களுக்குத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு அதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கையை ஐந்து என்பதை அதிகப்படுத்தி அதிகப் பட்டதாரிகளுக்கு உதவி அளிக்கும் வகையில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்துகிற தேர்வுகள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளுக்குச் செல்கிற ஹரிஜன மாணவர்களுக்கும், க்ருப் 4 மாணவர்களுக்கும், இப்போது பயிற்சி கொடுக்கப்படுகிறது. அதை இன்னும் விரிவுபடுத்துகிற வகையில் க்ருப் 1, 2, 3, டி.பி.எஸ்.ஸி. நடத்துகிற பரீட்சைகள் அனைத்துக்கும் ஹரிஜன மாணவர்கள் செல்கிற வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிற வகையில் பயிற்சியளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்ட மையத்திலும் ஒவ்வொரு தேர்வுப் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதில் தமிழ்நாட்டில் 1949-ம் வருடத்திலிருந்து 1977-வரை 52 லட்சம் வரை உயர்ந்திருக்கிறது. ஆனால் நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இந்தத் தொகை 100 லட்சமாக உயர்ந்திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வீட்டுமனை வழங்குவதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கினாலும் அது முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்றால் முழுமையாகச் செயல்படுத்தப்பட முடியவில்லை.

வீட்டு மனை வழங்குகிற இத் திட்டத்தில் காலதாமதம் ஏற்படுகிறது. அதில் பல சட்டச் சிக்கல்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை மாற்றி சட்டபூர்வமாக ஆர்ஜிதம் செய்ய ஒரு தனி அமைப்பினை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு தாலுக்

[திரு. ப. தனபால்] [1978 மார்ச் 18

காவிற்கும் ஒரு தனி தாசில்தார் என்றும் மாவட்ட அளவில் ஒரு தனி அதிகாரியை நியமித்து நில ஆர்ஜிதம் செய்து வீட்டுமனைகள் வழங்க வேண்டும்.

அடுத்து, வீடு கட்டித் தருகிற திட்டத்தில் எவ்வளவு வீடுகள் கட்டினோம் என்பதை விட எத்தனை உறுதியாக இருக்கின்றன என்ற அளவில் செயல்படுகிறவிதத்தில் இட்போது ரூ. 4,000 என்றிருப்பதை ரூ. 6,000 என்று உயர்த்தி இருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ள அருந்ததியர் சமுதாயத்தை முன்னேற்ற அதற்கானதொரு திட்டத்தை உருவாக்கி அந்தச் சமுதாயத்தை முன்னேற்ற திட்டங்கள் தீட்ட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன.

(பிற்பகல் 12-20).

அடுத்து, கம்யூனல் ஜி.ஓ.வை நாங்கள் உறுதியாக அமல் நடத்துவோம் என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு 18 சதவீதம் ஒதுக்கியிருப்பது போல், பஞ்சாயத்துத் தேர்தலிலும், பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தலிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று, 18 சதவீத இடங்களை தனியாக ஒதுக்கி அதில் தாழ்த்தப்பட்ட மக்களும் சமநிலையில் நல்ல முறையில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கான வழிமுறைகளை வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம் புரட்சித் தலைவரின் ஆட்சியில் நாம் எல்லாம் முன்னேறுவோம் என்ற நினைப்பில் இருக்கிறார்கள். அதற்கேற்ற வகையில் இந்த மானியக் கோரிக்கை இருக்கிறது என்று கூறி, இத் தீர்மானத்தை வரவேற்று அமருகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய இம் மாநிலத்தின் முதல்வர் அவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற பின்தங்கிய மக்கள், மிகப் பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் இவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதில் இந்த அரசாங்கம் தன்னுடைய கவனத்தை முழுமையாகச் செலுத்தும் என்று இந்த அவையில் உறுதிமொழி தந்திருக்கிறார்கள். அதற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கு உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 மார்ச் 18] [திரு. ரா. மார்க்கபந்து]

குறிப்பாக, பின்தங்கிய சமுதாயப் பாதுகாப்பிலே இந்த அரசு பொன்முட்டையிடும் வாத்தாக இருக்கும் என்பதை அடிப்படையாகக் கொண்டு என்னுடைய வாதத்தை துவக்க இருக்கிறேன்.

இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையைப் பார்த்தால், யாரோ பிச்சைபோடுவது போல் இல்லாமல் ஒரு அரசியல் சட்டத்தின் அடிப்படையில். இந்த மக்களுக்கு நியாயமான முறையில் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை நிச்சயமாகக் கொடுத்தாக வேண்டும் என்கின்ற அடிப்படையில் இன்றைய நாடும், இன்றைய அரசும் அமைந்திருக்கிறது. அதற்கு அடிப்படையாக இந்திய அரசியல் சட்டத்தில் 15-வது ஆர்டிகிள் 4-வது விதியில்..........

Article 15 (4): Nothing in this Article or in clause (2) of Article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward classes of citizens or for the Scheduled Castes and the Scheduled Tribes

என்று இருக்கிறது.

Article 16 (4) : Nothing in this Article shall prevent the State from making any provision for the reservation of appointments or posts in favour of any backward class of citizens which, in the opinion of the State, is not adequately represented in the services under the State.

என்கின்ற அடிப்படையில் சற்றேறக்குறைய 1954-ம் ஆண்டில் அகில இந்தியா பூராவுக்குமாக காகா சாகேப் கலேல்கர் தலைமையில் பேக்வார்டு கிளாஸ் கமிஷன் அமைக்கப்பட்டு அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

சென்ற முறை தமிழக அரசின் சார்பில் பின்தங்கிய சமுதாயத்தினரைப்பற்றி விசாரிப்பதற்காக சட்டநாதன் கமிஷன் என்ற ஒரு பேக்வார்டு கிளாஸ் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டது. அதில் அவர்கள் சேப்டர் 44-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள், ஏறக்குறைய அகில இந்தியா பூராவுக்கும் இருக்கின்ற 80 சமுதாய மக்களையும் மிகவும் பிற்பட்ட வகுப்பினராகச் சேர்க்க வேண்டும் என்ற பரிந்துரையைத் தந்திருக்கிறார்கள். அதை அடிப்படையாக வைத்து தமிழகத்தில் 39 சமுதாய மக்களைச் சேர்ந்தவர்களை, மிகவும் பின்தங்கிய சமுதாயப் பட்டியலில் சேர்த்து அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். இவர்கள் யார் என்று பார்க்கிற பொழுது,

1978 மார்ச் 18] [திரு. ரா. மார்க்கபந்து]

அடி மட்டத்தில் இருக்கின்ற குறிப்பாக, போயர், ஒடர், தொம்
பாரா, குறும்பா, நரிக்குறவர், வேட்டைக்காரன், வண்ணான் என்
றெல்லாம் சொல்லப்படுகின்ற, 39 சமுதாய மக்களை அங்கீகாரம்
செய்து, அவர்களுக்குப் பல சலுகைகளை அளிக்கின்ற விதத்தில்
பல குறிப்புகள் இந்த அறிக்கையில் தந்திருப்பதை நாம் பார்க்
கின்றோம்.

1971-ம் ஆண்டு ஜனத்தொகையின் கணக்குப்படி தமிழகத்தில்
நான்கில் ஒரு பங்காக மிகவும் பின்தங்கிய சமுதாய மக்களாக
அதாவது இந்த 39 சமுதாய மக்களாக இருக்கிறார்கள். ஆனால்,
இந்த சமுதாய மக்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய உரிமைகள்
கொடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கும்போது—

It is absolutely zero.

ஒரு அரசாங்க உத்தியோகமானாலும் சரி அல்லது எந்தவிதமான
சந்தர்ப்பங்கள் அரசாங்கத்திலே கொடுக்கப்படுவதானாலும் சரி,
அவர்கள் நிர்ணயித்துள்ள லிஸ்டின்படி. அந்த மக்களுக்கு
முன்னுரிமை கொடுக்க முடியாத ஒரு நிலைமைதான் இப்போது
இருந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி தன்னுடைய சேப்டர்
344–லே அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

"That Most Backward Classes as a group has made little or
no progress in Education particularly in Engineering and
Medical education" . . .

என்று சொல்கிறார்கள்.

அதேபோன்று, சேப்டர் 319லே சொல்கின்றபோது இந்த
ஜாப் ஆப்பர்சூனிடியைப் பற்றிச் சொல்லும்போது, மிகவும்
பின்தங்கிய மக்களைப் பொறுத்த வரையில் எவ்விதமான மாற்ற
மும் இல்லை என்ற நிலைமையைச் சொல்கிறார். இப்படி 4-ல்
ஒரு பங்காக இருக்கக்கூடிய மக்களுக்கு வேலை வாய்ப்பு வந்தி
ருக்கிறதா என்று சொன்னால், ஏறக்குறைய 6 சதவிகிதம் அல்லது
7 சதவிகிதம் தான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது
என்கிற கருத்தினைத் தான் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே நான் சொல்வதைத் தவறாக எடுத்துக்
கொள்ளக் கூடாது என்று வேண்டுகிறேன். தமிழகத்தைப்
பொறுத்த மட்டிலும், எத்தனை உயர்தர அதிகாரிகள் இரு
கிறார்கள். செகரட்டேரியட் சர்வீஸ் லெவலிலே எத்தனை உய
தர அதிகாரிகள் இருக்கிறார்கள், ஹைகோர்ட்டிலே எத்தனை நீ
பதிகள் இருக்கிறார்கள், நாடுதழுவிய ஸ்டேட் லெவல் ஆபீசர்
எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்றால் அப்படி யாரும் இல்
தயவுசெய்து உங்களை ஒன்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறே
இப்படி மிகப் பின்தங்கிய 39 சமுதாய மக்களிலே யாரா

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச் 18

ஒருவர் இருக்கிறாரா என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டு
கிறேன். அப்படி இல்லை என்று சொன்னால், இந்த நாட்டிலே
நாலிலே ஒரு பங்கு சமுதாயமாக இருக்கின்றவர்கள் இந்த
நாட்டை ஆள்வதற்குத் தகுதியில்லையா? அல்லது அவர்கள்
அந்தப் பதவிகளைப் பெறுவதற்கான தகுதி பெறவில்லையா?
அப்படித் தகுதி பெறவில்லை என்று சொன்னால், அப்படித் தகுதி
பெற முடியாத அளவிற்கு அவர்களை எந்தச் சக்தி தடுத்திருக்
கிறது என்ற நிலைமைகளை எல்லாம் ஆராய வேண்டும்.

மிகவும் பின்தங்கியவர் பட்டியலிலே அங்கீகரிக்க வேண்டும்
என்று ஏற்கனவே கூச்சல், போராட்டங்களை எல்லாம் உழைப்
பாளர் முன்னேற்றக் கட்சி செய்திருக்கிறது. இந்த நாட்டிலே
பின்தங்கிய மக்கள் ஏற்கனவே கூக்குரல் எழுப்பியிருக்கிறார்கள்.
அந்தக் கூக்குரலினுடைய அடிப்படையிலே எந்த அளவுக்குப் பலன்
கிடைத்திருக்கிறது என்பதைப் பார்க்கின்ற நேரத்திலே, ஒன்றும்
இல்லை.

அரசாங்க அட்வகேட் ஜெனரல் பராசரன் அவர்கள் லீகல்
ஒபினியன் தந்திருக்கிறார்கள். அந்த லீகல் ஒபினியனிலே
மோஸ்ட் பேக்வேர்ட் கிளாஸ் என்ற அமைப்பிலே சட்டபூர்வ
மாக எந்தவிதமான தவறுகளும் இருக்க முடியாது என்று தந்தி
ருக்கிறார்கள். அதேபோல் சட்டநாதன் கமிஷனும் அரசாங்
கத்திற்குப் பல கரஸ்பான்டென்சுகள் செய்திருக்கிறார்கள். அவை
களிலே ஒன்றுகூட இதுவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.
ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவோடு இவைகளை
எல்லாம் ஏற்றுக் கொண்டு, செயல்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மற்றொன்றையும் நான் சொல்ல விழைகிறேன். மத்திய
அரசாங்கத்தின் அடிப்படையிலே உள்ள மோஸ்ட் பேக்வேர்ட்
பட்டியலை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, அதை அமுல்
படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்
கிறேன். இப்படிச் சொல்கின்றபோது, எகனாமிக்
ஆப்பர்சூனிடி கொடுக்க வேண்டுமென்று சொல்கிறபோது, உத்தி
யோகங்கள், எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்க
வேண்டிய இடங்களுக்கு முன்னுரிமை
போதாது என்று நான் கேட்டுக் கொள்கி மத்திய அரசு
பேக்வேர்ட் கிளாஸ் கமிஷன் மூலம் எக கன்செஷன் தர
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது மத்திய அரசாங்கம் ஒரு பேக்வேர்ட் கிளாஸ்
கமிஷன் அமைக்க இருக்கிறது. இப்படி அமைக்கப்பட இரு
கின்ற இந்தக் கமிஷனிலே, திராவிட நாடு என்று சொல்

1978 மார்ச் 18] [திரு. ரா. மார்க்கபந்து]

படுகின்ற ஆந்திரா, கர்நாடகா, கேரளம், தமிழ்நாடு போன்ற இடங்களிலே இருந்து ஒருவர்கூட இல்லாமையால் இதற்கு, இந்த பேக்வேர்ட் கிளாஸ் கமிஷனிலே அப்படி ஒருவர் அங்கம் வகிக்க வேண்டுமென்ற ஒரு தாக்கீது........

(மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுக்கு பத்து நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. Excuse me.

Thiru R.Margabandu : two or three minutes. Only two or three minutes. Only two points.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ, நோ, எக்ஸ்கியூஸ் மீ.

[பிற்பகல் 12-30]

(திரு. ரா. மார்க்கபந்து நின்று கொண்டிருந்தார்.)

திரு. கோ. தனுஷ்கோடி : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலம், பிற்பட்ட நலத்துறை மீது இந்த நேரத்தில் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறிக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த மானியத்தை இந்த அரசு பல நல்ல வகைகளிலே பயன்படுத்தியிருக்கிறது. எழுபத்தாறு லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக..........

திரு. ரா. மார்க்கபந்து : பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த விவாதத்திலே ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. மார்க்கபந்து அவர்கள் அமர வேண்டும். திரு. தனுஷ்கோடி தொடர்ந்து பேசுவார்.

திரு. ரா. மார்க்கபந்து : சில கருத்துக்களை நான் எடுத்துச் சொல்ல நேரம் அளிக்காத காரணத்தால் இந்த அவையில் இருக்க விருப்பமில்லை என்று எங்கள் கட்சியின் சார்பாகக் கூறி வெளி நடப்புச் செய்கிறேன்.

(திரு ரா. மார்க்கபந்து வெளிநடப்புச் செய்தார்).

திரு. கோ. தனுஷ்கோடி : எழுபத்தாறு லட்சம் தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் இதைப் பாராட்டுகிறேன்.

[திரு. கோ. தனுஷ்கோடி] [1978 மார்ச் 18

அரசு சார்பில் அரிசன மாணவர்களுக்கு விடுதிகள் நடத்தப்படுகின்றன. அந்த விடுதிகளுக்குப் பள்ளிக்கூடம் திறக்கும் ஜூன் மாதத்திலேயே மாணவர்கள் தேர்வு செய்யப்படுவதில்லை. ஜூன் மாதம் பள்ளிக்கூடம் திறக்கப்படுகிறது என்றால் ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்தில்தான் மாணவர்கள் விடுதிகளில் சேர்க்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அந்த நிலை மாறி ஜூன் மாதத்திலேயே விடுதிகளில் மாணவர்களைச் சேர்க்கும் பணி நடைபெற மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே போல் சீருடை வழங்கும் போதும், பொங்கல், தீபாவளிக்கு வழங்கப்பட வேண்டிய உடைகள் அந்தப் பொங்கல், தீபாவளி முடிந்த பிறகு வழங்கப்படுகிறது. அவர்கள் விடுதியில் சேர்க்கப்பட்ட உடனேயே அளவுகளை எடுத்துக் கொண்டு பொங்கல், தீபாவளி அன்றே அவர்களுக்கு உடைகள் கொடுக்க அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ரீதியில் அரிசன நலத்துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவருக்குக் கீழே தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு மூன்று தாசில்தார்கள்தான் இருக்கிறார்கள். ஆறு தொகுதியைச் சேர்ந்த மக்களுக்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை முதல் ராஜபாளையம் வரை ஒரே ஒரு தாசில்தார்தான் இருக்கிறார். ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தாசில்தார், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போட்டு அவர்கள் மூலமாகக் குறைகளை ஆராய்ந்து உடனுக்குடன் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்து குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று இந்த அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்களுக்காக நிலங்களை எடுக்கிறபோது தகராறுகள் வருகின்றன. அதனால் அந்த நிலங்களை அரிசனங்களுக்குக் கொடுப்பது தடைப்படுகிறது. அது எப்படி இருந்தாலும் உடனடியாக அரிசனங்களுக்கு நிலங்களைக் கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

உத்தியோகம் என்ற வகையில் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஐ.ஏ.எஸ். அதிகாரி முதல் பியூன் வரை எந்த அலுவலகத்திலாவது 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்கள் உத்தியோகம் பார்க்கிறார்களா என்றால் அந்த நிலவரம் இன்று வரை இல்லை. - 100 பேர் ஒரு அலுவலகத்தில் இருந்தால் கட்டாயம் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்கள் அங்கே பணியாற்ற வழிவகை செய்ய வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவியுடன் நடைபெறும் கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள், ஏனைய கூட்டுறவுத் துறைகள் போன்றவற்றில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உத்தியோக வாய்ப்பு இதுவரை கொடுக்கப்படவில்லை. இனிமேலாவது அப்படிக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்க முன்வராத கல்லூரிகள், பள்ளிகளுக்கு அரசு மானியம் வழங்குவதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற முறை 200 தமிழாசிரியர்கள் மாநிலம் முழுவதும் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என்று கூறப்பட்டது. மொத்தம் 200 என்ற கணக்கில் பார்க்கும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 2 முதல் 4 பேர் வரை கொடுக்க வேண்டும். அப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் நாலைந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு தமிழாசிரியர் வேலை இதுவரை கொடுக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். மொத்தம் 200 பேர் என்றாலும், 36 இடம் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால், ஒரு தாழ்த்தப்பட்டவர் கூட தமிழாசிரியராக வேலை வாய்ப்புப் பெறவில்லை என்பது என்னுடைய கருத்து.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகளைக் கேட்கும் போது நான் இந்தச் சட்டமன்றத்தில் இருந்தே ஆரம்பிக்கிறேன்—நான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லவில்லை; தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் கூறுகிறேன். அரசு மாநில, சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் கொண்ட சில குழுக்களை அமைக்கிறது. அதிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சரியான பங்கு கொடுக்கப்படவில்லை. 18 சதவிகிதம் என்றால் 40க்கு மேற்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும். மேலவையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த விகிதாசாரத்தில் பதவி கொடுக்கப்படவில்லை. 76 லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்ட தமிழகத்தில் மந்திரி சபையில் அவர்கள் பிரதிநிதியாக ஒரே ஒருவர்தான் இருந்து பணியாற்றி வருகிறார். மேலும், விரிவுபடுத்தி மந்திரி சபையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

கடைசியாக, 12—3—78 காலை 9 மணி அளவில் எம்.சி. ராஜா ஹாஸ்டலில் ஒரு மாணவர் மண்டை உடைக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அந்த மாணவரின் தகப்பனார் ராஜபாளையம் பகுதியில் இருக்கிறார். அவருக்கு இதுவரை எந்தவிதத் தகவலும் விடுதிக் காப்பாளரால் தரப்படவில்லை. தேவராஜ் என்பவரால் அடிக்கப்பட்டதாகத் தகவல். அதனால், எங்கள் தொகுதியைச் சேர்ந்த மாணவர்கள் அச்சப்பட்டுக்

கொண்டிருக்கிறார்கள். அந்த தேவராஜ் என்ற மாணவர் மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. தா. சாமிக்கண்ணு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன நல மானியத்தின் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைப் பேச ஆசைப்படுகிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே, செங்கம் என்னுடைய தொகுதி, என்னுடைய தொகுதியிலே துரைப்பாடி என்ற கிராமத்திலே சுமார் 100 ஆண்டு காலமாக அரிசன மக்களுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்படவே இல்லை. அதைப்போன்றே வேடங்குப்பம் என்ற கிராமத்திலேயும் 100 ஆண்டுக் காலமாக அங்கே இருக்கின்ற அரிசன மக்களுக்குப் பட்டா கொடுக்கப்படவில்லை.

எதிர்க் கட்சித் தலைவர் ஆக இருக்கக்கூடிய கலைஞர் அவர்கள் சில கருத்துக்களை இந்த அவையிலே என்மேல் புகார் சொல்லி இருக்கிறார்கள். அந்த புகார் பற்றி இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கருங்கலப்பாடி என்ற கிராமத்திலே பொன்னுமுடி கவுண்டர் என்ற ஒரு ஆள், அவர் குறும்ப கவுண்டர், குழந்தை கவுண்டர், என்ற ஒரு ஆள் இருக்கிறார். அவர்கள் 40 ஆண்டுகாலமாக அங்கே நிலத்திலே சாகுபடி செய்து வருகிறார்கள். * * * அதைப்பற்றி நான் தாசில்தாரிடம் சொல்லி, திருவண்ணாமலை ஆர்.டி.ஓ.விடம் மனுக் கொடுத்து விசாரணை நடத்தி, என்மேல்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

எந்தப் பழியும் இல்லாது இருக்கும்போது அதே சமயம் எதிர்க் கட்சித் தலைவர் அருமை அண்ணன் திரு. லத்தீப் என்னுடைய தொகுதியில் உள்ள அரிசன மக்கள், ஏழை எளிய மக்கள் ஆகியவர்களுக்காக புறம்போக்கு இடத்தில், கணக்குப்பிள்ளையை வைத்து இடம் வாங்கிக் கொடுத்தேன் நான். ஆனால் முஸ்லீம் குடியானவர்கள் எங்கள் மேல் புகார் சொல்லி கெட்ட அபிப்ராயம் சொல்லி புகார் கொடுத்தார்கள். இப்போது அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை என்று சொல்லிக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. லத்தீப் தாங்கள் 10 நிமிடத்திற்குள் முடித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க பிற்பகல் 12.35–12.40-இல் சில பகுதி அகற்றப்பெற்றன.

திரு. எம். ஏ. லத்தீப்: துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. பழனிசாமி மிக முக்கியமான உண்மையை இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார், பெரும்பான்மைச் சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையோராக தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் இருக்கக்கூடிய சமுதாயங்கள்பால் பெருநோக்கமும், பரந்த நோக்கமும் கொண்டு அவர்களை அணைத்துக்கொண்டு செல்வார்களேயானால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு என்று ஒரு தனிக் துறை தேவையில்லை என்று அவர்கள் சொன்னார்கள். நாட்டிலே நடைபெறுகிற காரியங்களை ஒத்துதான் குறைகளும் இருக்கின்றன, நிறைகளும் ஏற்படுகின்றன, நெறிகளும் உருவாகின்றன. அந்த அடிப்படையில் தத்துவங்களும் உருவாகின்றன.

[பிற்பகல் 12-40.]

கட்சிகள் ஏற்படுத்துவதற்கும் இதுதான் காரணம். ஆகையினால் பெரும்பான்மையான மக்கள், எண்ணிக்கையிலே அதிகமாக இருக்கின்ற மக்கள், தாழ்த்தப்பட்டவர்களாக, பல்லாண்டு பல்லாண்டு காலமாக உதாசீனப்படுத்தப்பட்டவர்களாக, பின் தங்கிய நிலைக்குத் தொடர்ந்து ஆளாக்கப்பட்டவர்களாக அல்லது சிறுபான்மையோராக இருக்கக்கூடியவர்களோடு பெரு நோக்கோடு நடந்து கொள்வார்களேயானால் தனித்த துறைகள் தேவையில்லை, அவர்களுக்குத் தனித்த கட்சிகளும் தேவையில்லை. தனித்த கட்சிகளும், துறைகளும் இருப்பதே நாட்டிலேயிருக்கின்ற நிலைமைகளை உத்தேசித்துத்தான், இருக்கின்ற பிரத்யட்ச நிலையை உணர்த்தத்தான் என்பதை அவர்கள் ஒரு வாக்கியத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மிகவும் பொருள் உள்ள ஒரு கருத்து. அதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்கு வைக்கிறேன்.

இப்பொழுது தாழ்த்தப்பட்டோர் என்று சொல்லக்கூடிய அரிசனங்களுக்கும், மற்றும் பின் தங்கியோருக்கும் உரிய மானியம் இது. அரிசனங்களுக்கு என்னென்ன சலுகைகளை நாம் கொடுத்தாலும், அவர்சள் என்னதான் கல்வித்துறையிலே முன்னேறினாலும் சமுதாயத்திலே அவர்களும் சம அந்தஸ்து பெற்றவர்கள் என்ற உணர்வினை சமுதாயம் ஒட்டுமொத்தமாகப் பெற்றாக வேண்டும். அந்த உணர்வை என்றைக்கு வரையிலே சமுதாயம் பெறவில்லையோ அதுவரையிலே தாழ்த்தப்பட்டவர்கள் என்ற சமுதாயம் இருந்து கொண்டு போராட்டத்தை நடத்திக் கொண்டுதான் இருக்கும். அந்தப் போராட்டம், அது சமுதாயம் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ள விட்டாலும் நடந்து கொண்டுதான் இருக்கும். அப்படித்தான் பின்தங்கியோர் நிலைமையும். பின் தங்கியோர் என்று ஒரு பட்டியல் போட்டு, இவர்களெல்லாம் பின்தங்கியோர் என்று நாம் சொல்கிறோம். அந்தப் பின் தங்கியவர்கள் பட்டியல்

எப்பொழுது வரைக்கும் இருக்குமென்றால், எதுவரையில் பின்தங்கியோரின் நல்ல நிலைமைகளுக்குச் சூழ்நிலைகள் மாறுவது இல்லையோ அதுவரையில் அந்தப் பட்டியல் இருந்துகொண்டுதான் இருக்கும். யார் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அந்தப் பட்டியலை அகற்ற முடியாது. சட்டத்திலேயிருந்தும், திட்டத்திலேயிருந்தும் அகற்றிவிடலாம். அவைப் பேச்சுக்களிலேயிருந்து அகற்றிவிடலாம். ஆனால் சமுதாயத்திலே இருந்து கொண்டு இருக்கும், உள்ளங்களிலே இருந்து கொண்டிருக்கும். அதை அகற்ற முடியாது.

எனவே சமுதாய உணர்வுகளைப் பக்குவப்படுத்த வேண்டும். இப்படி எல்லாம் சமுதாயத்திலே ஏற்றத்தாழ்வு, சிறுபான்மை சமுதாயம், பெரும்பான்மை சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயம், பின்தங்கிய சமுதாயம் என்றெல்லாம் இருக்கலாமா என்று கேள்விகளைக் கேட்டுவிடலாம். அது எனக்குக்கூட பிடித்தமான கேள்விதான். ஆனால் கேள்விகளைக் கேட்டுவிடுவதால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்து விடாது. இதனால் பிரச்சினைகள் வளருமே தவிர பிரச்சினைகள் தீர்ந்து விடாது என்பதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

சிறுபான்மை சமுதாயத்தில் முஸ்லிம்கள் இருக்கிறார்கள். முஸ்லிம்களைப் பற்றி நான் மட்டுமல்ல, எல்லோரும் பேசுகிறார்கள். நாட்டிலேயிருப்பவர்கள் எல்லோரும் பேசலாம். நான் இன்றைக்கு அரிசனங்களைப் பற்றிப் பேச எழுந்திருக்கிறேன். முஸ்லிமாகிய நான் அரிசனங்களைப் பற்றிப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். பிற்பட்டவர்களைப்பற்றி பேச வேண்டிய கடமையிருக்கிறது. இப்படி முஸ்லிம்களின் வாக்குகளையும் பெற்று வந்திருக்கின்ற 234 உறுப்பினர்களும் முஸ்லிம்களைப் பற்றியும் பேசுவார்களேயானால் நான் பேச வேண்டியதில்லை.

நான் ஒருவன்கூடப் பேசுவது கூடாது என்று சொன்னால், அது குற்றம் என்று சொன்னால் அந்தக் குற்றத்தை இழைப்பதற்காகத்தான் நான் இந்த அவைக்கு வந்திருக்கிறேனே தவிர வேறு காரணத்திற்காக நான் வரவில்லை. முஸ்லிம் லீக் என்ற பெயரிலே நான் இந்த அவைக்கு வந்திருக்கிறேன். முஸ்லிம்களுக்காக மட்டுமல்ல, எல்லா சிறுபான்மை மக்களுக்கும், நாட்டிலுள்ள பொதுப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்காகவும், பொதுவாக அவர்களுக்காகவும், சிறப்பாக முஸ்லிம்களுக்காகவும் நான் வந்திருக்கிறேன். இதை நான் சொல்வதில் எனக்கு எந்தவிதமான வெட்கமும் இல்லை. அதற்காகத் தான் நான் வந்திருக்கிறேன். அது குற்றம் என்று சொன்னால் அதைத் தொடர்ந்து நான் செய்வேன், அதைச் செய்யத்தான் நான் இந்த அவையிலே இருக்கிறேன். இல்லாவிட்டால், இந்த அவையிலே எனக்கு வேலையில்லை. இதைத் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன்.

[திரு. எம். ஏ. லத்திப்] [1978 மார்ச் 18

முஸ்லீம்கள் 800 ஆண்டுகாலமாக இந்த நாட்டை ஆண்டார்கள். 800 ஆண்டுகாலமாக, ஆண்டவர்கள் இன்றைக்கு எங்கே இருக்கிறார்கள்? 'டக் டக்' டாங்காக்காரர்களாக, குதிரை வண்டி ஓட்டுபவர்களாக, ரிக்ஷா ஓட்டுபவர்களாக, பீடிசுற்றுபவர்களாக இருக்கிறார்கள். அந்த நிலைமை நடந்து கொண்டிருக்கிறது. நான் கேட்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பற்றிப் பேசுகிறேன் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் வாதாடினார்கள். அரிசனங்களுக்காக மட்டும் வாதாடினார்கள். நான் முஸ்லீம்களுக்காக வாதாடினேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலே வாதாட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். It is division of labour நான் வக்கில். எல்லாம் படித்துத்தான் பட்டம் பெற்றிருக்கிறேன். ஜூரிஸ்புருடன்ஸ் படித்தேன். கான்ட் ராக்ட் லா படித்தேன், டார்ட்ஸ் படித்தேன், சிவில் லா படித்தேன், கிரிமினல் லா படித்தேன். லேபர் லா படித்தேன். எல்லாம் படித்திருந்தாலும் நான் ஏதாவது ஒரு துறையிலே கிரிமினல் லாவிலே ஸ்பெஷலிஸ்ட் லாயர், சிவில் லாவிலே அதுவும் ரென்ட் கன்ட்ரோலில் இப்படித்தான் இருக்க முடியும். இப்போது எல்லாம் படித்த ஒருவன் ரென்ட் கன்ட்ரோலில் ஸ்பெஷலிஸ்டாக இருக்கிறேன். என்றால் அதுதான் division of labour ஒவ்வொரு துறையிலேயும் ஒருவர் சிறப்பாக பேச வந்திருக்கிறோமே தவிர அந்த ஒரு துறையைப் படித்து விட்டு, ரென்ட் கன்ட்ரோலில் மட்டும்தான் தெரியும். பி.எல். படித்திருக்கிறேன். நான்தான் முஸ்லீம் பற்றி பேசிக்கொண்டிருக்கிறேன். முஸ்லீம்கள் பற்றி சிறப்பாகப் பேசுவதற்குத்தான் இங்கே வந்திருக்கிறேன். என் தொகுதி மக்களுக்கு அவர்கள் யாராக இருந்தாலும், பொது மக்களின் பொதுவான பிரச்னைக் குறித்து பொதுவாகப் பேசுவதற்கு வந்திருக்கிறேன். ஆகையினாலே இங்கே நான் பிற்பட்ட வகுப்பினரைப் பற்றி பேசுகிறபோது, முஸ்லீம்களைப் பற்றி நான் மீண்டும் சொல்கிறேன். முஸ்லீம்கள் உதாசீனப் படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். உங்களை முஸ்லீம்களைப்பற்றி பேச வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அத்தனைபேர்களும் முஸ்லீம்களைப்பற்றி பேசாததால் நான் ஒருவன் மட்டும் தான் முஸ்லீம்களைப்பற்றி பேசுகிறேன் என்று அந்தப் பொருள்பட நீங்கள் பேசுகிறீர்கள். ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க் கட்சி உறுப்பினர்களும் அவர்களைப் பற்றிப் பேசவில்லை என்று பொருள் தொனிக்கும் விதத்தில் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம்.ஏ. லத்தீப்: முஸ்லீம்களுக்காகப் பேசுகிறேன் என்று சொல்வது அன்பார்லிமென்டரி இல்லை. அது என்னுடைய உரிமை.

1978 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் அன்பார்லிமென்டரி என்று சொல்ல வில்லை. அந்த மாதிரி பொருள்பட இருந்தால் அது அன்பார்லிமென்டிரிதான். நீங்கள் நான் மட்டும் தான் வந்திருக்கிறேன், முஸ்லீம்களுக்காக நான மட்டும்தான் பேசுகிறேன் என்று சொன்னால் அது அன்பார்லிமென்டிரிதான்.

திரு. எம்.ஏ. லத்தீப்: ஆகையினாலேதான் நான் பேசுகிறேன. நான் முஸ்லீம் லீக்கிலே இருந்து வந்திருக்கிறேன. முஸ்லீம் லீக் சின்னத்திலே நின்று வெற்றி பெற்றிருக்கிறேன். முஸ்லீம் லீகினுடைய கொள்கைகளின் அடிப்படையிலே என்னை இணைத்துக் கொண்டிருக்கிறேன். முஸ்லீம் லீகின் சார்பில் அறிவிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையிலே செயல்படுவது என்னுடைய உரிமை என்று உங்களுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பேசுகிற காரணத்தால் மற்றவர்கள் பேசக் கூடாது என்று நான் எந்தக் காலத்திலும் சொல்லவில்லை. All are welcome முஸ்லீம்களினுடைய பிரச்னையிலே நீங்கள் பேசுவதாக இருந்தால் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். முஸ்லீம்களைப்பற்றி மற்றவர்கள் பேசினால் அதிலே மகிழ்ச்சி அடைபவர்கள் என்னைவிட வேறு யார் இருக்க முடியும். முஸ்லீம்களின் ஓட்டுக்களை வாங்கிக் கொண்டு வந்திருக்கிற உங்களுக்கும் அந்தக் கடமை உண்டு. நானும் மற்றவர்களைப் பற்றியும் பேசுகிறேன். முஸ்லீம்களைப்பற்றி மட்டும் பேசுவதில்லை. 99 சதவிகிதம் மற்றவர்களைப் பற்றித்தான் பேசுகிறேன். வேறு என்ன பேசுகிறேன். நீங்கள் பேசவில்லை அதனால் நான் பேசுகிறேன். நீங்கள் பேசுகிறேன் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்குச் சந்தோஷம்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கொஞ்சம் உணர்ச்சி வயப்பட்டு விஷயத்தைத் தாண்டி எங்கோ போய்க்கொண்டிருக்கிறார். இங்கே வெளிப்படையாகப் பேசிக் கொண்டும் காரியங்கள் செய்கிறோம். பேசாமலும் சில காரியங்களைச் செய்கின்றோம். பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொனி அவ்வளவு சரியாக இல்லை என்பதைப் புரிந்து கொண்டால் நல்லது. வேறு விதமாக குறுக்கிட விரும்பவில்லை. குறுக்கிட்டதற்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முஸ்லீம்களின் வாக்குகளை மட்டுமன்றி மற்ற சகோதரர்களுடைய வாக்குகளையும் பெற்று வந்திருக்கிறோம். நாம் எல்லோருக்குமாகவும் வந்திருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்காக மட்டுமல்லாது எல்லோருக்கும் இருக்கிறோம் என்பதைக் கொஞ்சம் உணர்ந்து பேசினால் நலமாக இருக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நானும் அதைத்தான் சொல்கிறேன். அவர்களுடைய தொனி சரியில்லை. தான் மட்டும்தான் முஸ்லீம் சமுதாயத்தினருக்காகப்பேசுகிறேன் என்று சொல்வது சரியல்ல. இதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன்.

THIRU M.A. LATHEEF : Every action of mine is corresponding to the reaction. My every reaction is corresponding to the action, I do not react contrary to actions. I react, confirm and in consonance with the way in which actions are conducted. அதுதானே தவிர வேறு எந்தவிதமாக எப்போதுமே ரீயாக்டு செய்வது கிடையாது. எந்த விதத்தில் வந்து கொண்டிருக்கிறதோ அந்த விதமாகத்தான் ரீஆக்ட் பண்ணுகிறேன்.

(பிற்பகல் 12·50)

நான் வெளிப்படையாக பேசிப் பழக்கப்பட்டவன். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவரை எவ்வளவு வேகமாக நான் ஆதரித்துப் பேசினேன் என்பது இந்தச் சட்டசபை அறியும். என்னைவிட அவரை வேகமாக ஆதரித்தவர்கள் கிடையாது. தேவைப்படும்போது, எனக்கு மனதிலேபட்டதை எடுத்துச் சொல்லிவிடுகிறேன். அந்தவகையில் வெளிப்படையாகப் பேசிப் பழக்கப்பட்டவன் ஒன்றை மனதில் வைத்துக்கொண்டு மறைத்துப் பேசுகிற பழக்கம் எனக்குக் கிடையாது. எனக்கு இயற்கை அந்த வகையில் இடம் கொடுக்கவில்லை. இப்படித்தான் நான் எங்கும் பேசிக்கொண்டு இருக்கிறேன். அது என்னுடைய இயற்கையான குறைபாடாக இருக்கலாம். ஆனால் அதைத்தான் என்னுடைய மறையாக, நிறையாக நான் கருதுகிறேன்.

நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மற்றவர்கள் பேசவில்லை என்று குற்றம் சாட்ட விரும்பவில்லை. நான் முஸ்லிம்களுக்காகப் பேசும் கடமை எனக்கு இருக்கிறது. மற்றவர்களுக்கும் அந்தக் கடமை இருக்கிறது என்று கருதுகிறேன். மற்றவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டுதான் இங்கே வந்து இருக்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உண்மைதான். மற்றவர்களின் வாக்குகளைப் பெற்றுத்தான் இங்கே வந்திருக்கிறேன். அதனால்தான் தொகுதியைப் பற்றிப் பேசும்போது, எல்லோரையும் பற்றிப் பேசுவேன், இது போன்றே மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் எங்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டுதான் இங்கே வந்து இருக்கிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: எங்களின் வாக்குகளைப் பெற்று வந்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். முஸ்லீம்களின் வாக்குகளைப் பெற்று வந்து இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகிறார்களா அல்லது ஒட்டுமொத்தமாக முஸ்லீம்களின் ஏகப் பிரதிநிதித்துவம் தங்களுக்குத்தான் இருக்கிறது என்று கருதிக் கொண்டு பேசுகிறார்களா ? முஸ்லீம்கள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். அவர்களும் முஸ்லீம்களுக்காக அவ்வப்போது பேசுகிறார்கள். ஆகவே, அதை ஒரு பிரச்னையாக்காது பேசுவது நலமாக இருக்கும். தாங்கள் பேசுகிற தொனி

அப்படி இருக்கிறது. முஸ்லீம்களின் ஏகப் பிரதிநிதி நீங்கள்தான் என்பதை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு 10 நிமிடம் பேசுவதற்கு நேரம் ஒதுக்கியிருந்தேன். நீங்கள் முஸ்லீம்களைப் பற்றிய அந்தப் பிரச்னை குறித்தே பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். ஒரு வார்த்தை கூட இந்த மானியத்தின் மீது பேசவில்லை. உங்கள் நேரம் முடியப் போகிறது. தயவு செய்து உங்கள் பேச்சை முடித்து விடுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : முஸ்லீம் லீக் ஒன்று தான் முஸ்லீம்களின் மற்ற சிறுபான்மையினரின் ஏக பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக இருக்கிறது என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எங்களுடைய கொள்கை முஸ்லீம்கள், மற்ற சிறுபான்மைச் சமுதாயத்தினர், அது கிருஸ்துவர்களாக இருந்தாலும் சரி, முஸ்லீம்களாக இருந்தாலும் சரி, மற்ற சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களின் ஏக பிரதிநிதியாக, பிரதிநிதித்துவம் அளிக்கும் ஸ்தாபனம் முஸ்லீம் லீக் ஒன்றுதான். மற்றக் கட்சிகளிலும் முஸ்லீம்கள் இருக்கிறார்கள். இருக்கலாம். ஆனால் அவர்கள் இஸ்லாமிய போதனைகளுக்கு உட்பட்டு, நெறிகளுக்கு உட்பட்டு அவர்கள் எந்த நேரத்திலும், கட்டுப்பட்டு இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இஸ்லாமிய நெறியைப் பின்பற்றித்தான் முஸ்லீம்கள் எல்லோரும் இருக்கிறார்கள். அவர் இன்று வரம்பைத் தாண்டி பேசுகிறார் என்று கருதுகிறேன். எல்லோருக்குமே கட்டுப்பாடு இருக்கிறது. எல்லோரும் அந்தக் கட்டுப்பாட்டைப் பின்பற்றித் தான் இருக்கிறார்கள். இஸ்லாமிய மக்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். பெருமானார் ஒரு முறை சொல்லி இருக்கிறார்கள், "இஸ்லாமியர்கள் எங்கெங்கே சிறுபான்மையினராக இருந்து, பெரும்பான்மைச் சமுதாயத்தினரோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறார்களோ, அங்கே அவர்கள் அந்தப் பெரும்பான்மைச் சமுதாயத்தினர்களோடு சகோதரத்துவ உணர்வோடு கூடி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நல்ல நெறி முறையை, நிலைமையைக் கெடுத்து விடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பெருமானாரைப் பற்றி எனக்கு அறிவுறுத்தியதற்காக ஜனாப் இராஜா முகமது அவர்களுக்கு நன்றி. அதே நேரத்தில் வரம்பை மீறுகின்ற எதுவாக இருந்தாலும், ஒருவன் எந்த நம்பிக்கையை மனதிலே வைத்துச் செயல்படுகின்றானோ, அந்த மனச்சாட்சிக்கு விரோதமாக அவன் செயல

[திரு. எம். ஏ. லத்திப்] [1978 மார்ச் 18

படுவானேயானால், அவன் என்னைச் சார்ந்தவன் அல்ல என்று பெருமகனார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உண்மையைச் சொல்ல வேண்டும். அந்த உண்மையைச் சொல்வதற்கு யார் தடையாக இருந்தாலும், உன்னுடைய உயிரையும் கொடுத்து அதை எதிர்த்துப் போராடி, உன்னுடைய மனத்தையும், மனச் சாட்சியையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று பெரு மகனார் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் மரியாதைக்குரிய இராஜா முகமது அவர்களுக்குத் தெரிவித் துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவ ரவர்களே, என்னை ஜனாப் என்று அழைத்தால்தான் மரியாதை என்று நினைக்கிறார்கள் போல் இருக்கிறது. என்னைத் தமிழில் திரு. என்று அழைத்தாலே பெரு மகிழ்ச்சி அடைகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்திப்: அதிலே தான் விஷயம் அடங்கி இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு, இந்த மானியத் திலே நான் பேசுவதற்கு ஒன்றுமில்லை.

திரு. யா. சை மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர் லத்திப் அவர்கள் பேசுகிற நேரத்தில் ஏதோ 'திரு' என்ற சொல் இஸ் லாமிய சமுதாயத்திற்குத் தெரியாதது போல் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. எம். ஏ. லத்திப்: திரு. என்பது அழகு. அந்த அழகான வார்த்தையைப்பயன்படுத்தியது தவறு என்று சொல்கிறார்களா? (மணியடிக்கப்பட்டது) நேரம் இல்லை என்று சொல்கிறீர்கள். அவர்களுக்குப்பதில் சொல்ல நேரம் இல்லை என்பதால் இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அருணாசலம்: பேரவைத் துணைத் தலைவரவர் களே, மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள அரிசன-பழங்குடி நலத்துறை மானியக் கோரிக்கை களின்மீது எனது கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்கு முத லில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் இலட்சி யங்களில் ஒன்று 'உயர்ந்தவர் தாழ்ந்திடத் தேவையில்லை தாழ்ந்த வர் உயர்ந்தால் போதும்' என்பதாகும். அதற்கேற்ப இந்த மானியக் கோரிக்கைகளில் நல்ல பல புரட்சிகளைக் கொண்டு வந்திருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும்.

1978 மார்ச் 18] [திரு. இரா. அருணாசலம்

நமது மாநிலத்திலுள்ள மொத்த மக்கள் தொகையில் அரிசன பழங்குடியினர் மட்டும் 76 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இவர் களில் மிகப் பெரும்பாலோர் ஏழ்மையின் எல்லைக் கோட்டிற்கும் கீழ் நிலையில் இருந்து கொண்டு, அன்றாட வாழ்க்கை ஜீவியத்திற் காகத் தவித்துக் கொண்டு இருப்பவர்கள். இதனை நன்கு உணர்ந்துள்ள அரசு கிராமப்புற முன்னேற்றங்களுக்காக அதிகக் கவனம் செலுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமென்றால் அந்தச் சமுதாயம் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முதன்மை பெற வழிவகைகள் காண வேண்டும். அந்த வகையில் நமது அரசு நாடு சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டு காலமாகியும் என்றுமில்லாத அளவுக்கு இந்த 9 மாத காலத்தில் புரட்சித் தலைவர் ஆட்சியில் 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது ஒரு மாபெரும் சாதனையாகும். மொத்த ஒதுக்கீட்டுத் தொகையின் பெரும்பகுதி கல்வித் துறையில் மாண வர்கள் முதன்மை அடைய வேண்டும் என்ற நோக்கில் செலவு செய்யப்படுகிறது.

அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூடங்கள் அமைக்க ரூ. 2.60 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதனால் மாணவர்கள் செய்முறைப் பயிற்சியில் தேர்ந்து மேல்படிப்புக்கு ஆர்வத்துடன் படிக்க வழிவகை செய்கிறது.

இதேபோல அரிசன மாணவர்களின் மேன்மைக்காக நூல கங்கள் ஏற்படுத்துதல், பள்ளிக் கட்டிடங்களை விஸ்தீரணப்படுத்து தல், மாணவர்களுக்குச் சீருடை வழங்குதல், பாலர் பள்ளிகளை அமைத்தல், கல்விச் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்தல், விளை பொருட்களை வழங்குதல், நண்பகல் உணவு வழங்குதல், இலவச பாட நூல்கள் எழுது பொருட்கள் வழங்குதல், தேர்வில் தவறிய மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல், நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்கு ஊக்கச் சிறப்புப் பயிற்சி அளித்தல், கல்லூரி மாணவர்களுக்கும் தனிப் பயிற்சி அளித்தல், மாணவர் இல்லங் களை விஸ்தீரணப்படுத்துதல், விடுதி மாணவர்களுக்குக் கட்டுப்பாடு விலையில் தேவையான பொருட்களை வழங்குதல் போன்ற திட்டங் களை எல்லாம் நிறைவேற்றும் போது அரிசன மாணவர்களின் நிலை உயர்ந்து, ஒரு அந்தஸ்து மிக்க சமுதாய மேம்பாட்டை உண்டாக்க அரசு எடுத்துக் கொண்ட பெருமுயற்சிகளாகும்.

அரிசன பழங்குடி மக்களுக்கென்று ஒதுக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் நிறைய நிரப்பப்படாமலிருக்கின்றன. இதனை உணர்ந்த அரசு, தானே முன்வந்து மாணவர்களை அந்த வேலை களுக்குத் தகுதி உடையவர்களாக்கத் திட்டம் தீட்டி இருப்பது பாராட்டுக்குரியதாகும்.

[திரு. இரா. அருணாசலம்] [1978 மார்ச் 18

அரிசன பழங்குடியினருக்கு உழவு மாடுகள், விதைகள், வேளாண்மைக் கருவிகள் வாங்கவும், கிணறுகளை வெட்டவும், கடன் வழங்கவும் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இவைகள் அவர்களுக்கு எளிதாகக் கிடைக்க வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன, பழங்குடியினர் பற்றிய நமது அரசின் கொள்கை இந்த மானியக் கோரிக்கையில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.. அதாவது அரிசன மக்களின் வருமானத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்ற பொருளாதாரத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை கணிசமாக உயர்த்துவது என்பது நமது கொள்கை என்பதாகும்.

அரிசன மக்களுக்கு வீட்டு மனைகளை வழங்கும்போது ஊரின் தனிப்பகுதியாக இல்லாமல் சமுதாயத்தின் மற்ற வகுப்பினர் வாழும் இடங்களில் சமமான சூழ்நிலை உருவாகும் நிலையில் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தி.மு.க. அரசு வழங்கிய வீடுகளைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். முன்னாள் முதல்வர் கலைஞர் ஆட்சியிலிருந்த போது அரிசன மக்களுக்கு வீடுகளைக் கட்டித் தந்திருக்கிறார்கள். அவை தற்போது எந்த நிலையில் இருக்கின்றன என்றால், என்னுடைய நாமக்கல் தொகுதியில் பல இடங்களில் வீடுகள் கரைந்து கொண்டும், சில இடங்களில் விரிசல் விட்டும் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. இந்த மாதிரியான தவறுகள் வீடு கட்டும்போது எப்படி நடைபெற்றன என்று தெரியவில்லை. அதிலுள்ள தவறுகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமையை ஒழிக்க நமது அரசு தீவிர தனிக் கவனம் செலுத்தி வருகிறது. தீண்டாமை ஒழிப்புச் சட்டம் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கவனிக்க காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவித் தரத்தில் காவல்துறை அதிகாரி ஒருவரை நியமித்திருப்பது பாராட்டுக்குரியது ஆகும். கிராமப் புறங்களில் இன்னும் தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகிறது. அதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

கிராமங்களில் இன்னும் தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனவே, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாமக்கல் தொகுதியில் ஹரிஜன பழங்குடி மக்கள் பாய் முடைதல் போன்ற வேலைகளை அதிகமாகச் செய்து வருகிறார்கள். அந்தத் தொழிலுக்கு அரசு உதவிப்பணம் அளிப்பதன் மூலம் சிறப்பான வசதி செய்து தரவேண்டுமென்று

1978 மார்ச் 18] [திரு. இரா. அருணாசலம்]

திருச்சியிலும் கோவையிலும் இரண்டு பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட இருக்கின்றன. தன் வாழ்நாள் முழுவதும் தமிழர் நலனுக்காகவும், தீண்டாமையை ஒழிப்பதற்கும் பாடுபட்ட தந்தை பெரியார் அவர்களுடைய பெயரையும், அரசியல் சாசனத் தந்தை டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய பெயரையும் நிறுவப்பட இருக்கும் இரண்டு பல்கலைக்கழகங்களுக்கும் வைக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கபிலர் மலைத் தொகுதியில் பிளிக்கல்பாளையம் என்ற கிராமத்தில் அரிசன மக்கள் கல்லுடைத்து பிழைப்பு நடத்தி வந்தார்கள். அது தற்போது அதிகாரிகளால் தடை செய்யப்பட்டுள்ளது. அந்தத் தடையை நீக்கி அவர்களை மீண்டும் வேலை செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. சேலம் ஜமீன் எனம்பள்ளி அரிசன மக்கள் வசிக்கும் பகுதியில் 46 வீடுகள் எரிந்து போயிருக்கின்றன. வீடிழந்து தவிக்கும் அம்மக்களுக்கு வீடு கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றந் தொகுதி, நாடாளுமன்றத் தொகுதியில் ஹரிஜனங்களுக்கு பிரதிநிதித்துவம் ஏற்படுத்தி இருப்பதுபோல் ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் முனிசிபாலிட்டி தலைவர்கள் ஆகியவற்றிற்கான தேர்தல்களிலும் பிரதிநிதித்துவம் அளித்தால்தான் இந்த நாட்டில் சம அந்தஸ்து இருக்கிறது என்பதை நாம் நிரூபித்துக் காட்ட புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் இது நிச்சயமாக நடைபெறும் என்று கூறி இந்த வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு உறுப்பினர் தாழை மு. கருணாநிதி அவர்கள் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. து. ராமசாமி மற்றும் திரு ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர் ஒழுங்குப் பிரச்னை எழுப்பி திரு. கருப்பையா மூப்பனார் அவர்களைப் பற்றி அவர் பேசிய வார்த்தைகளை நீக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர் பேசிய அந்தப் பகுதியிலே அவரைப்பற்றி நேரடியாகக் குறிப்பிட்டு தனிப்பட்ட முறையிலே எதுவும் பேசாமல் குறிப்பாக அந்த இயக்கத்தைப் பற்றி அவர் பேசி இருக்கிற காரணத்தால் தனிப்பட்ட முறையில் அவரைப் பாதிக்கின்ற வகையில் எந்தவிதமான பேச்சும் அமையவில்லை என்பதைக்கூறி நீக்கப்பட வேண்டியது எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 18

திரு. ஜே. ஜேம்ஸ். பேரவைத் துணைத் தலைவரவர்களே,
அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற பிற்பட்டோர் நல, இலாகா
ஹரிஜன நல இலாகா மானியக் கோரிக்கையின் மீது சில
கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகள் ஆகியும் இன்னும் சமுதாயத்
தில் அண்ணல் காந்தியடிகள் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்பட
வில்லை என்று சொன்னால் அதை அரசியலில் இருப்பவர்கள் உன்
னிப்பாகக் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான்
இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் எந்தக் கட்சியையோ அல்லது அரசையோ குறைகூற
விரும்பவில்லை. இந்த இடைக்காலத்தில் பல்வேறு கொள்கை
கொண்ட பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அரசுகள் இந்த
முயற்சியிலே ஈடுபட்டிருந்தபோதிலும்கூட இன்னும் ஹரிஜனங்கள்
எதிர்பார்த்த அளவு பொருளாதார ரீதியில் முன்னேறவில்லை
என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இந்து
சமுதாயத்திலே கூட எதிர்பார்த்த சமுதாயம் மறுமலர்ச்சி
அடையவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்

அதுமட்டுமல்ல. இன்னும் தீண்டாமை நமது மாநிலத்தில்
அதிகமாக இருக்கிறது என்று சொன்னால் உண்மையிலேயே நாம்
ஒவ்வொருவரும் வேதனைப்படக் கூடிய ஒரு விஷயம் என்பதை
கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலையில் அரசு அதிகக்
கவனம் செலுத்தி மேலும் அதிகப் பணத்தை ஒதுக்கினாலும்
பரவாயில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சமுதாயத்தில் இருக்கின்ற இழிவான சூழ்நிலையை
மாற்ற இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறுகிறபோது
மதத்தின் அடிப்படையில் ஹரிஜனங்கள் இரு பிரிவாகப் பிரிக்கப்
பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்
பதை நான் இங்கே இதற்கு முன்னாலே பல சந்தர்ப்பங்களிலே
கூறி இருக்கிறேன். அதற்கு இந்த அரசு இப்போதிருக்கிற
அரசியல் சட்டம் குறுக்கே இருக்கிறது என்று சொன்னால் அதை
மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்கவில்லை என்பதைச் சொல்லிக்
கொள்கிறேன்.

மதம் மாறுகிற காரணத்தால் மட்டும் பொருளாதாரத்தில்
வித்தியாசம் ஏற்படவில்லை என்பதை நன்றாக உணர்ந்துகொள்ள
வேண்டும். கிறிஸ்தவர்கள் என்று சொன்னால் ஏற்கனவே பல்
வேறுசமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் ஏற்கனவே இருந்த
சமுதாயத்திலிருந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவி இருக்கிறார்களே
தவிர அவர்கள் எல்லா வகையிலும் மாறிவிட்டார்கள் என்று
பொருள் அல்ல, அவர்களுடைய மற்றக் காரியங்களைப் பார்க்கின்ற
போது அவர்கள் ஏற்கனவே இருந்த சமுதாயத்தைத்தான் சார்ந்
திருக்கிறார்கள் என்பதை இந்த அரசு நன்றாக உணரவேண்டும்.

1978 மார்ச் 18] [திரு. ஜே. ஜேம்ஸ்]

மதம் மாறிய காரணத்தால் பொருளாதாரத்தில் அவர்களுக்கு
வித்தியாசம் ஏற்படவில்லை. சமுதாய அடிப்படையிலும் கூட
வித்தியாசம் ஏற்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். அந்த அடிப்படையில் ஏற்கனவே அவர்கள் சார்ந்
திருந்த சமுதாயத்தில் இருந்திருப்பார்களேயானால் அவர்களுக்கு
என்னென்ன நன்மைகள் கிடைத்திருக்குமோ அந்த நன்மைகள்
அவர்கள் மதம் மாறிய பிறகும் அவர்களுக்குக் கிடைக்க அரசு
முயற்சிக்கவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் பெரும்
பான்மை சமுதாயமாக இருக்கிற இந்து சமுதாயத்திற்கு அடுத்த
படியாக ஜனத்தொகையில் பெருவாரியாக இருப்பவர்கள் கிறித்
தவர்கள். ஆக சிறுபான்மை சமுதாயத்தில் அதிக மக்கள் தொகை
கொண்ட இந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு—பல சமு
தாயங்களில் இருந்து வந்தவர்கள், மதம் மாறி வந்தவர்கள் என்ற
காரணத்தால்— அரசு தீமை விளைவிக்கக் கூடாது. அவர்
களுக்கு மதம் மாறிய காரணத்தினால் எந்தவிதமான பொரு
ளாதார மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு ஜாதிகளைச்
சார்ந்தவர்கள், பல மதத்தைத் சார்ந்தவர்கள் இருந்தாலும்
உண்மையிலே அனைவரும் சகோதரர்களைப்போல் நமது கிராமங்
களில் வாழ்கிறார்கள் என்பதை நாம் மகிழ்ச்சியோடு கண்டுகொண்
டிருக்கிறோம். ஆகவே, மதத்தை காட்டி அவர்களுக்கு அநீதியை
அரசு விளைவிக்கக் கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஹரிஜனங்களைப் பொறுத்தவரையில், மதுவின் கார
ணமாக அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை
நாம் நன்றாக உணர்வோம். மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்து
வோம் என்றால் அதிகமாகப் பயன் அடையக்கூடியவர்கள் ஹரி
ஜனங்கள்தான் என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

அடுத்து, பிற்பட்ட இனத்தவர்களுக்கு எமர்ஜன்ஸி காலத்தில்
ஒரு அநீதி விளைவிக்கப்பட்டிருக்கிறது என்பதை இதற்கு முன்ன
தாகப் பல நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். க்ரூப் 1 சர்வீஸ்க்கு
வயதுவரம்பு நிர்ணயித்திருக்கிறார்கள். பிற்பட்ட வகுப்பினருக்கும்
ஹரிஜன மக்களுக்கும் அதுவரை ஏஜ் லிமிட் இல்லாமலிருந்தது.
ஆனால் எமர்ஜன்ஸி காலத்தில் 31 வயது என்று வயது
வரம்பு நிர்ணயித்து அதற்கு மேற்பட்டால் அவர்கள் இந்த சர்
வீஸில் ஏறமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே
உடனடியாக அந்த ஜீ.ஓ. மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் காணிக்காரர்கள் என்ற ஹில் ட்ரைப்ஸ், மலைவாழ்மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஜனத் தொகை ஏறத்தாழ 10,000 இருக்கும். அவர்கள் திரு–கொச்சியில் இருந்தபோது பல சலுகைகள் அவர்களுக்கு இருந்தன. அந்தச் சலுகைகள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே ஏற்கனவே அவர்களுக்கு எந்தெந்தச் சலுகைகள் கிடைத்துக் கொண்டிருந்தனவோ அவற்றைக் கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டும். அவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். கேரளாவில் அவர்களுக்குக் குடும்பத்திற்கு ஐந்து ஏக்கர் நிலம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல் இந்த மலைவாழ் மக்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அவர்கள் பறவைகள், மற்றும் ஜந்துக்களை உணவாகக் கொள்கிறார்கள். அதற்காகத்துப்பாக்கியைப் பயன்படுத்துகிறார்கள் இதுவரை துப்பாக்கி லைசென்ஸ் அவர்கள் எடுக்கவேண்டும் என்று அரசாங்கம் நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்தது. ஆனால் தமிழ் நாட்டிலுள்ள சட்டப்படி அவர்கள் லைசென்ஸ் எடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆனால் அவர்கள் வசிக்கிற மலைப் பிரதேசத்திலிருந்து பட்டணத்திற்கு வரவேண்டுமென்றால் அவர்களுக்குத் துணையாக இரு நபர்களை அழைத்துவர வேண்டும். அப்படிஇரு நபர்களை அழைத்து வரவேண்டுமென்றால் அவர்களுக்கு ஆகும் செலவை இவர்கள் கொடுக்கவேண்டும். துப்பாக்கி லைசென்ஸ்க்கும் பணம்கட்டவேண்டும். ஆகவேஅவர்கள் லைசென்ஸ் எடுக்க வேண்டுமென்றால், பணம்கட்டி எடுக்க வேண்டுமென்றால் அதிகாரிகள் அவர்கள் வாழ்கிற இடங்களுக்குச் சென்று லைசென்ஸைப் புதுப்பிக்க ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும். இதற்கு முன்னதாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்த நிலை இருந்தது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு அவர்களுக்கு மருத்துவ வசதி இப்போது போதுமான அளவிற்குக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் மலைகளில் வாழ்கிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தக்க மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பத்து காணி, ஆறு காணி, பேச்சிப்பாறை போன்ற இடங்களில் அவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளுக்குப் போதுமான கட்டட வசதி இல்லை; ஆசிரியர்கள் இல்லை. இந்த இனத்தைச் சார்ந்தவர்களின் குழந்தைகள் தங்கிப் படிக்க ஹாஸ்டல்கள் உள்ளன. ஆனால் அந்த ஹாஸ்டல்களில் போதுமான வசதிகள் இல்லை. உணவிற்குக் கூட மற்ற மாணவர்களுக்குக் கொடுப்பது போல் மாதம் ரூ. 40 கொடுக்கப்படுகிறது. ஆனால் அது போதாது. அதையும் அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டும்.

பேச்சிப்பாறையில் ஒரு உயர்நிலைப் பள்ளி அவர்களுக்காக இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்திற்கு பரீட்சை எழுத சென்டர் கொடுக்கப்படாததால் பல மைல்கள் அவர்கள் பஸ்ஸில் அல்லது நடந்து சென்று பரீட்சை எழுத வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அது குறித்து மனு கொடுத்திருக்கிறேன். அடுத்த ஆண்டாவது பேச்சிப்பாறையில் அவர்கள் படிக்கிற பள்ளியிலேயே எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை நடத்த வேண்டிய ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குறவர்கள் என்ற ஜாதியினர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். குறவர்களும், அந்த மலைவாழ் மக்களும் பிரம்புத் தொழில் நன்றாகச் செய்வார்கள். இப்போது அவர்களுக்கு மலையிலிருந்து பிரம்பு எடுக்க தடை

(பிற்பகல் 1–10)

இருக்கிறது. அந்தத் தடைக்கு விதிவிலக்கு அளித்து, பிரம்புத் தொழில் செய்கிறவர்களுக்கு பயிற்சி கொடுக்கின்ற விதத்தில் அதற்கென்று ஒரு பள்ளி இருக்கிறது. அது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து நடத்தி அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக் கிடைக்கச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அச்சுத் தொழில் துறையைப் பொறுத்தவரையில், அவசர நிலை காலத்தில் பல்வேறு தொழிலாளர்கள், வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் மீண்டும் வேலை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. மொ. பரமசிவம் :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று அரிசன நல மான்யக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, இதைப்பற்றி என்னுடைய கட்சியின் —திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மக்களின் எண்ணிக்கை 76 லட்சம். இந்த மக்களை மற்ற சமுதாயத்தினரின் சமூக மற்றும் பொருளாதார நிலைக்கு உயர்த்த வேண்டி முக்கியமாக கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம், வீட்டு வசதி முதலியவை பெறும் வகையில் திட்டம் தீட்டி அதற்காக அரசு இத்துறையின் மூலம் செலவழிக்கும் தொகை ரூ. 16 கோடியாகும். இதை ரூபாய் 20 கோடியாக உயர்த்தி அரிசனங்களின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்துமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, தாழ்த்தப்பட்டோர் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கவிருக்கும் ரூ. 500 மான்யத்தையும் கடன் ரூபாய் 1,000/-த்தையும் அரசே நேராக ஏற்று முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் இருந்ததைப்போல் வழங்க வேண்டுமென்றும் இவை உடனடியாகக் கிடைக்குமாறும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசால் ஏற்படுத்தப்பட்ட அரிசன வீட்டு வசதி வாரியத்தின் மூலம் இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் பணி தற்பொழுது நின்று விட்டுள்ளது. அரசு அறிவித்துள்ளதைப் போல் விரைவில் பணி மீண்டும் தொடர வேண்டும் என்றும் கேட்டு கொள்கிறேன்.

சுயமாக சிறு தொழில் நடத்த உதவியளிக்கும் திட்டத்தின் கீழ் வட்டியில்லாக் கடனுக அதிக பட்சம் ரூபாய் 15,000/- வரை அளிக்கப்படுகிறது. இது அவ்வளவு எளிதில் கிடைப்பதில்லை. இடைத்தரகர்கள் ஏராளமாக இருக்கிருர்கள். இது உடனடியாக விண்ணப்பம் செய்வோர்க்குக் கிடைக்குமாறு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்க அரசு ரூபாய் 56 லட்சம் ஒதுக்கியுள்ளதைப் போல் தாழ்த்தப்பட்டோருக்கு பம்பு செட், புதிய மின் இணைப்புகள் வழங்க முன்னுரிமை தரவேண்டும். மற்றும் என் தொகுதியில் கிணற்றடி நீர் என்ற முறையால் பெரும்பாலோர் மின் இணைப்புக் கிடைக்க வழியின்றித் தவிக்கிருர்கள். இதை மாற்றி மின் இணைப்புக்கள் வழங்க அரசு உடனடியாக ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியான வானூர் பகுதியில் அமைந்துள்ள மிகப் பெரிய அரிசன காலனி பகுதிகள் நிறைந்த கிளியனூர் என்ற பெரிய கிராமத்தில் உயர்நிலைப்பள்ளி ஒன்று இல்லாததால் மாணவர்கள் 15 கிலோமீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது. எனவே இங்கு ஒரு அரிசன நல உயர்நிலைப்பள்ளி அமைத்துத் தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக்கூடம் கட்டுவதற்கு இங்கு இடவசதியுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் என் தொகுதியில் உள்ள பெரும்பாலான அரிசன நல பாடசாலைகளின் கட்டிடங்கள் கூரைகளாகவும் பழுதடைந்தும் உள்ளன. இதையும் மாற்றியும் சீரமைத்தும் தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி நிலையம் சென்னையில் உள்ள சைதாப்பேட்டையில் உள்ளது. இது மத்திய அரசின் நிதி உதவியுடன் மாநில சமூகநலத்துறையால் நடத்தப்படுகிறது. இங்கு

அடிப்படை வசதிகள் ஏதும் இன்றி மாணவர்கள் பெரிதும் அவதிப்படுகிருர்கள். மத்திய அரசு தரும் 100 ரூபாய் ஒரு மாத சாப்பாட்டிற்குப் போதாது. ஆகையால் மாநில அரசு 50 ரூபாய் சேர்த்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன்:</u> சட்டமன்றத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சிலபல குறைபாடுகளையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். என்னுடைய பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்பே மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் பசிக்கிறது, சீக்கிரம் முடியுங்கள் என்று சொல்லுகிருர். வெளியிலே இருப்பவர்கள் இந்த அரசாங்கம் என்னென்ன திட்டங்கள் தரப்போகிறது என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், நாம் பசிக்கிறது என்று திட்டங்களைச் சொல்லாமல் விட்டால் வேறு விதமாக அவர்கள் கருதி விடலாம். நாளை இந்த 2, 3 துறைகளைப் பற்றி இந்த அரசு எதுவும் செய்யவில்லை என்பது போன்ற ஒரு செய்தி பரவிவிடும். இருந்தாலும், உங்களுடைய கோரிக்கையையும் நான் கொஞ்சம் ஏற்று எவ்வளவு விரைவாக என்னுடைய கருத்துக்களை கூறி முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

இந்த மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர் திரு.மு.கருணாநிதி அதாவது தாழை மு. கருணாநிதி அவர்கள் உரையைத் துவக்கியிருக்கிருர்கள். கிட்டத்தட்ட 20 பேர்கள் பேசியிருக்கிருர்கள். பேசிய ஒவ்வொரு கருத்தும், சுட்டிக்காட்டிய ஒவ்வொரு திட்டமும், ஆலோசனையும் இந்த அரசாங்கத்தின் எண்ணத்தில் இருக்கிறது என்பதை நான் ஆரம்பத்திலேயே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இருந்தாலும், சிலர் நாம் சொன்னோமே எந்தப் பதிலும் அரசுத் தரப்பிலே இருந்து வரவில்லையே என்கிற குறைபாடு இருக்கக் கூடாது என்பதற்காக முக்கியமான சில வற்றிற்கு நான் இங்கே பதில் அளிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் தாழை மு. கருணாநிதி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அரசாங்கத்தில் தரப்படுகின்ற வேலை வாய்ப்புகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் தரப்படுகிறதா? இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறதா? இல்லையா? என்பதை உயர்மட்டக் குழு கண்காணித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இந்த அரசாங்கம் மாண்புமிகு முதல் அமைச்சர், புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் பொறுப்பேற்ற உடனேயே, உயர்மட்டக் குழுவில்

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1978 மார்ச் 18

என்னென்ன ஆலோசனைகள் செய்யப்பட வேண்டும், அந்த குறைபாட்டைப் போக்க என்னென்ன செய்ய வேண்டும், என்னென்ன விதிமுறைகளை வகுக்க வேண்டுமென்பதையெல்லாம் அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தி, பல அலுவலகங்களில் பரிசீலனை செய்யப்பட்டு, 18 சதவிகிதம் தருகிறவரை ஒவ்வொரு நிலையிலும் இந்த வேலைவாய்ப்பு விகிதாச்சாரத்தைக் கட்டாயம் அமுல்படுத்த வேண்டுமென்று இந்த அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் அவர்கள் சொன்னார்கள். சர்வீஸ் கமிஷனில் வயது வரம்பை அவசர நிலை காலத்தில் விதித்து விட்டார்கள் அந்த ஆணைப்படி அரசாங்கம் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அநீதி விளைவித்து விட்டார்கள், இந்த ஆணையை மாற்ற வேண்டுமென்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற உடனேயே, அதைப் பரிசீலனை செய்தது. எந்தெந்த வகையில் தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதைத் திருத்துவதற்கு இந்தத் துறை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் தாழை மு. கருணாநிதி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு குடும்பத்தில் 4, 5 பேர்கள் படித்தால், மத்திய அரசாங்கம் 2 பேர்களுக்குத்தான் உபகாரச் சம்பளம் வழங்குகிறது. இதை இந்த அரசு முயற்சி எடுத்து, அந்தக் கட்டுப்பாட்டைப் போக்க வேண்டுமென்று இங்கே அவர்கள் குறிப்பிட்டார்்கள்.

[பிற்பகல் 1-20]

1974-75 ஆம் ஆண்டு அப்போது மத்திய அரசில் ஆட்சி செலுத்தியவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாக அமல் படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் இரண்டு பேருக்கு மேல் படித்தால், இருவருக்குத்தான் மத்திய அரசாங்க உபகாரச் சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்ற ஒரு விதி முறையை வகுத்தது. அது அமலுக்கு வந்தது.

ஆனால் இந்த மாநில அரசு பொறுப்பேற்றவுடன் இந்த விதிமுறையை நீக்க வேண்டுமென்று இந்த அரசின் சார்பில் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினோம். சமூக நலத்துறை செயலாளர் டில்லிக்குச் சென்றிருந்தபோது அங்கிருக்கிற

1978 மார்ச் 18] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து பேசினார்கள். மத்திய அரசாங்கம் இந்த மாநில அரசின் கருத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. ஆகவே, இந்த அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறது என்பதை இங்கே நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. மத்திய அரசாங்கம் ஒரு குடும்பத்தில் படிக்கும் இரண்டு பேருக்குத்தான் உபகாரச் சம்பளம் வழங்க முடியும் என்று சொல்லிவிட்ட காரணத்தால் மீதி இருக்கும் அந்தக் குடும்பத்துப் பிள்ளைகளுக்கு இந்த மாநில அரசு உபகாரச் சம்பளம் வழங்குகிறது என்பதை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நான் கூறிய பதிலைக் கேட்டு திரு. தாழை மு. கருணாநிதி அவர்கள் கொஞ்சம் மகிழ்ச்சியுடன்தான் இங்கே அமர்ந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் பழனிவேலு அவர்கள் பேசுகிற நேரத்தில் ஒரு குறிப்பைச் சொன்னார். சாதிச் சான்றிதழ் பெறக்கூடிய நேரத்தில் சங்கடம் இருக்கிறது. பல சிக்கல்களை உருவாக்குகிறார்கள். உபகாரச் சம்பளம் பெறுவதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அதாவது முதலில் சாதிச் சான்றிதழ் வாங்குவது புதிதாக உபகாரச் சம்பளம் பெறத்தான். மீண்டும் புதுப்பிக்கிற நேரத்தில் அந்தச் சாதிச் சான்றிதழ் தேவையில்லை என்பதுதான் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இருந்தாலும் இந்த அரசாங்கம் சாதிச் சான்றிதழ் வழங்குவதில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கிறது ; தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து பார்த்து ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வரலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லுகிறேன்—நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு போக்குவரத்தில் பயணம் செய்வதற்கு ஒரு அடையாள அட்டையை வழங்கியிருக்கிறோம். இதே போன்று உபகாரச் சம்பளம் வாங்கக்கூடிய அல்லது ஆரம்பத்தில் பள்ளிக்கூடத்தில் படிக்கிற நேரத்திலும், ஒரு அதிகாரி சாதிச் சான்றிதழ் தந்து இதுபோன்ற ஒரு அடையாள அட்டையை வழங்குவோமானால் அதை எந்த நேரத்திலும் பயன்படுத்தலாம், பயன்படுத்த முடியும், சிக்கல் இருக்காது என்ற ஒரு நல்ல ஆலோசனையை இந்த அரசு கருத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டிய திட்டத்தைத் தீட்டி கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். பள்ளிக்கூடங்களின் பெயர் பலகைகளில் 'அரிசன நல பள்ளிகள்' என்று இருக்கின்றன. விடுதிகளில், 'அரிசன

நல விடுதி' என்று இருக்கிறது. இந்தப் பெயரை மாற்றவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நியாயமான கோரிக்கைதான். அவர் இந்தக் கோரிக்கையை எழுப்புவதற்கு முன்பே, முன்உதாரணமாக, சென்னை மாநகரத்தில் 'எம்.சி. ராஜா அரிசன கல்லூரி மாணவர் விடுதி' என்று இருந்ததை இப்போது மாற்றியிருக்கிறோம். 'எம். சி. ராஜா அரசினர் கல்லூரி மாணவர்கள் விடுதி' என்று இப்போது அங்கே பெயர்ப் பலகை வைக்கப் பட்டிருக்கிறது. புதிதாகக் கட்டப்படும் விடுதிகளின் 'அரசினர் மாணவர் இல்லம்' என்று தான் பெயர் போடுகிறோம். இந்த முறையைப் பள்ளிகளிலும் இந்த அரசாங்கம் வரும் ஆண்டில் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரும் என்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

அவர் இன்னொன்றையும் சொன்னார். சுடுகாட்டுக்குப் பாதை இல்லை, இந்த நிலைமையை எந்த அரசாங்கமும் போக்க முயற்சி எடுக்கவில்லை என்று மெத்த வருத்தப்பட்டார். நான் கடந்த கூட்டத்திலேயேகூட ஒரு கருத்தைச் சொன்னேன். சுடுகாட்டுக்கு ஏன் இதுவரை பாதை போடப்படவில்லை என்றால், சுடுகாட்டுக்குப் போவதற்குப் பல பேர் அஞ்சுகிறார்கள். போனவர்கள் மீண்டும் வந்து கோரிக்கை எழுப்புவதில்லை. ஏனென்றால் மாண்டவர்கள் மீண்டும் வந்து கோரிக்கைகள் எழுப்பாத காரணத்தாலோ என்னவோ சுடுகாட்டுப் பாதை மட்டும் இன்னும் பல ஊர்களில் சரியாகப் போடப்படாத சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னேன். இருந்தாலும் இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீட்டு மனை வழங்கவும் பாதை வசதி செய்து தரவும், இன்னும் தெருக்கள் நல்ல முறையில் சுத்தமாக அமையவும் நல்ல இடங்களை ஆர்ஜிதம் செய்வதற்கும் 1949 ஆம் ஆண்டிலிருந்து குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலம் வரை இந்தப் பணிகளுக்காகப் படிப்படியாக ஒதுக்கிய தொகை 52 லட்சம் ரூபாய்தான்.

இந்த அரசாங்கம் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைந்த பிறகு இந்தக் குறுகிய காலத்திலே இந்தப் பணிகளுக்கு ஒதுக்கியிருக்கிற தொகை 100 லட்சம் ரூபாய். இந்த 100 லட்சம் ரூபாயை 6, 7 மாதத்தில் எவ்வளவு செலவழிக்க முடியுமோ அவ்வளவு செலவழிக்க வேண்டும் என்ற முறையிலே விறுவிறுப்போடு நம்முடைய அரசு அதிகாரிகள் பணியாற்றி ஓரளவிற்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் வீட்டு மனை தான் வழங்குகிறீர்கள், எல்லோருக்கும் வீடுகள் கட்டித் தர வேண்டும், அப்போதுதான் அரிசனங்கள் நல்ல வீட்டினைப் பெற்று நிம்மதியோடு வாழமுடியும் என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய நாட்டின் பொருளாதாரம், குறிப்பாக நம்முடைய தமிழ்நாட்டின் நிதிநிலை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக

அறிவீர்கள். ஆகவே நிதிநிலைக்கேற்ப இந்த அரசு தன்னுடைய முயற்சியையும், தன்னுடைய சக்தியினையும் தன்னுடைய பணத்தையும் செலவழித்து வருகிறது என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே என்ன முன்னேற்றம் இந்த அரசு கண்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு துலுக்காணம் அவர்கள் கேட்டார்கள். தி.மு.க. அரசு பல ஆயிரக் கணக்கான வீடுகளை கட்டிக் கொடுத்தது. இந்த அரசாங்கம் ஏன் கட்டிக் கொடுக்கவில்லை, என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்றெல்லாம் கேட்டார்கள். நியாயமான கேள்விதான். இந்த அரசாங்கம் பொறுப்பேற்றபிறகு இந்த வீட்டின் வடிவமைப்பை மாற்றி அமைக்கலாமா அல்லது ஒதுக்கப்படுகிற நிலப்பரப்பை அதிகப் படுத்தலாமா என்று ஆலோசித்தது. ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் ஆங்காங்கே கட்டிய வீடுகளில் ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன......................

திரு. க. அன்பழகன் : முதலிலே அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது நிதிநிலை இடம் தராத காரணத்தாலே வீடுகள் கட்டப் படுகிற வாய்ப்பில்லை, காரணம் தமிழ்நாட்டின் நிதி நிலைமை அதற்கு இடம் கொடுக்க வில்லை என்றார். நிதிநிலை இடம் தரவில்லை என்று சொல்கிற அமைச்சர், ஏற்கனவே கட்டிக் கொடுக்கப்பட்ட 80 ஆயிரம் வீடுகளைத் தொடர்ந்து கட்டாமல் நிறுத்திவிட்டு இப்போது கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளிலே ஓட்டை, உடைசல் எங்காவது இருக்கிறதா என்று தேடும் காரியத்தில் ஈடுபடுவதாகத் தொடர்ந்து சொல்கிறார். அப்படி யென்றால் எத்தனை ஓட்டை, உடைசல்களை அவர்கள் இதுவரையிலே கண்டுபிடித்திருக்கிறார்கள்! அண்மைக் காலத்திலே கட்டப்பட்ட வீடுகளில் எத்தனை வீடுகளில் அவர்கள் அவற்றைக் கண்டிருக்கிறார்கள். அவ்வளவு குறைபாடுகள் இருக்கின்றன வென்பதை அமைச்சர் அவர்களே நம்புகிறார்களா?

திரு. ப. சந்திரன் : தலைவர் அவர்களே, ஓட்டை உடைசல் என்றெல்லாம் இருக்கிறதாவென்று கேட்டார்கள், நான் சொல்கிறேன். தி. மு. க. உறுப்பினர் அவர்கள் தி. மு. க. ஆட்சியிலே எங்கேயும் அரிசனக் காலனி வீடுகளில் ஓட்டை, உடைசல்கள் இருக்கின்றனவா என்று கேட்டார்கள். வந்தவாசித் தொகுதியிலே முன்பு அது செய்யாறு தொகுதியாக இருந்தது, தேத்தரை என்ற ஒரு கிராமத்திலே 42 அரிசன வீடுகள் கட்டப்பட்டன. அந்த வீடுகளிலே அரிசன மக்கள் இன்னும் குடிபுகாமல் இடிந்த நிலையில் வீடுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : எப்போது கட்டப்பட்டது?

[1978 மார்ச் 18

திரு. ப. சந்திரன் : தி. மு. க. ஆட்சியிலே அந்த வீடுகள் கட்டப்பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தர பாண்டியன் : தலைவர் அவர்களே, நிதி நிலை பற்றாத காரணத்தால் நாங்கள் வீடு கட்டவில்லை என்று சொல்லவில்லை. திட்டம் தீட்டுவது எப்படி என்பதை ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம் என்பதைச் சொல்லத்தான் வந்தேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஓட்டை உடைசல் வீடு எங்கே இருக்கிறது என்றும் அமைச்சர் பார்த்தாரா என்றும் கேட்டார். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் பல இடங்களில் இந்த நிலைமை இருக்கிறது. நான் புதுக்கோட்டை மாவட்டத்திலே சுற்றுப்பயணம் சென்றேன். அப்போது காரையூர் என்ற ஊரில் அந்த ஊர் பொது மக்கள் நான் செல்கின்ற நேரத்திலே வழிமறித்து ஒவ்வொரு வீட்டையும் காட்டினார்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எப்போது கட்டியது என்கிறார், தி. மு. க. ஆட்சிக்காலத்திலேதான் கட்டப்பட்ட வீடு.

[பிற்பகல் 1–30]

ஆகவே, உதாரணத்திற்காக மாண்புமிகு உறுப்பினர் சந்திரன் அவர்களும் ஒன்றைச் சொல்லியிருக்கிறார், நானும் ஒன்றைச் சொல்லியிருக்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்கள், 3500 ரூபாய் 4000 ரூபாயில் ஏறத்தாழ 25,000,அல்லது30,000வீடுகள் கட்டப்பட்டன மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பிலே கட்டப்பட்டது,பொது அளவிலே பரவலாகப் பார்த்து அப்படிப்பட்ட குறை இருக்கிறதா என்று தெரிவிக்கவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரே பொறுப்பேற்றுக் கொண்டு பொது மக்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு கட்டப்பட்டவை, அவ்வளவு குறைபாடு உடையதா? அப்படிச் சொல்லக்கூடிய அளவிற்குக் குறைபாடு உடையதா என்று தயவு செய்து அமைச்சரவர்கள் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சில பல இடங்களில் குறைபாடு இருக்கிறது என்பதைத்தான் அவரும் சுட்டிக் காட்டினார். நான் இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற என்ன வழிவகை என்று காணத்தான் அரசு முயற்சிக்கிறது என்று சொல்லி, ஏன் காலதாமதம் ஆகிறது என்று கேட்டதற்குப் பதில் சொல்கிறேனே தவிர திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கட்டிய வீடுகள் அத்தனையும் ஓட்டை உடைசல் என்று சொல்ல வரவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

.978 மார்ச் 18] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக ஆலோசித்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல வசதியான வீடுகள் கட்டித் தர வேண்டும் என்கிற நோக்கத் தோடுதான் முன்பு 207 சதுர அடியில் கட்டப்பட்ட வீட்டை தற்பொழுது 237 சதுர அடி அளவில் கட்டுவதற்கும் முன்பு 4000 ரூபாயில் கட்டப்பட்ட வீட்டை இப்பொழுது 6000 ரூபாயில் கட்டுவதற்கும், ஆர். சி. கான்க்ரீட் போட்ட பிறகும் சதுர வடிவுள்ள ஓடு போட்டு மழைக்காலத்தில் ஒழுகாத அளவிற்கு நிலைமைகளை உருவாக்கித்தருவதற்கு இந்த அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் 5,000 வீடுகள் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளை வாக்கெடுப்பிற்கு விடும் வரையில் பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சலவைத் தொழிலாளர்கள்,. சவரத் தொழிலாளர்களுக்கு எவ்வளவுதான் நிதி ஒதுக்கினாலும், எவ்வளவுதான் உதவி செய்தாலும், கருவிகள் வழங்கினாலும் தகும் என்கிற ஒரு நல்ல கருத்தினை இங்கே சொன்னார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் அடித்தளத்திலே யிருக்கின்ற மக்கள் , பின் தங்கிய மக்கள் நல்ல முறையில் முன்னேற வேண்டும், தொழில் செய்து வருவாய் ஈட்டி வாழ வேண்டு மென்பதில் புரட்சித் தலைவரின் தலைமையில் இருக்கின்ற இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு உதாரணமாக, 1974–75-ல் சலவைத் தொழிலாளர்கள் சவரத் தொழிலாளர்களுக்குக் கருவி வழங்க ஒதுக்கப்பட்ட தொகை ஆறு லட்சம் ரூபாய். 1975–76-ல் ஒதுக்கப்பட்ட தொகை ஐந்து லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாய். 1976–77-ல் ஒதுக்கப்பட்ட தொகை ஆறு லட்சம் ரூபாய். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு 1977–78-ல் ஒதுக்கிய தொகை ஆறு இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு சவரத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்களுக்குக் கருவிகள் இலவசமாக வழங்க புரட்சித் தலைவரின் தலைமையில் அமைந்திருக்கின்ற இந்த அரசாங்கம் ஒதுக்கியிருக்கிற தொகை பதினேறு இலட்சத்து எண்பத்தேழாயிரம் ரூபாய் என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கு மின்சார வசதி சரிவர செய்து தரப்படவில்லை என்கிற ஒரு கருத்தினை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்தத் துறையைப் பொறுத்த

வரையிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டுமென்பதற்காக மின்சார வாரியத்திற்கு ஒவ்வோராண்டும் 56 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தருகிறது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சாதிப்பிரச்சினை தலைவிரித்தாடுகிறது என்று கூறினார். மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். அண்ணல் காந்தியடிகளின் காலத்திலிருந்து இன்று வரையில் எவ்வளவோ பாடுபடுகிறோம்.

தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க வேண்டும் என்று சட்டம் போடுகிறோம். ஆனால் இன்னும் அது முழுமையாக ஒழிக்கப் படவில்லை. எப்போதுதான் இந்த நிலை மாறுமோ என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள்,

அதுமட்டுமல்ல. இந்தியப் பெருநாட்டிலேயே அந்த ஏக்கப் பெருமூச்சினை விடுகின்றார்கள். அதைப் போக்குவதற்காகத் தான், மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் பல திட்டங்களைப் போடுகின்றது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் எல்லாம் இந்தக் கொடுமையைப் போக்க என்ன செய்வது என்று சில உறுப்பினர்கள் கேட்டார்கள். பழங்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருந்ததா என்றால், இல்லை என்பதை இலக்கியம் காட்டுகிறது. வள்ளுவர் கூட, ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமை யான்'' என்று சொன்னார். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று திருமூலர் கூறியிருக்கிறார். ''சாதி இரண்டொழிய வேறில்லை'' என்று ஔவை பிராட்டியார் எடுத்துச் சொல்லியுள்ளார். நம் முன்னோர்கள் உரைத்தமூல மந்திரங்களை மூலை முடுக்கெல்லாம் பரப்ப வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களும் அந்த முயற்சியில் பணியில் ஈடுபடவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பெருமாள் அவர்கள் பேசுகிறபோது நரிக்குறவர் சமுதாயத்திற்கு இந்த அரசாங்கம் நல்லபல திட்டங்களை வகுக்க வேண்டும் என்று எடுத்துக் கூறினார்கள். சமுதாயத்தின் அடித்தளத்தில் வறுமையின் எல்லைக்கோட்டில் நாகரிகம் அற்ற நிலைமையில் வாழ்கிற மக்கள் நரிக்குறவர் சமுதாய மக்கள் என்பதை நாடு பூராவும் நன்கறியும். அவர்களுக்கு என்ன செய்தாலும் தகும் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அவர்களை இப்போது மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் வைத்திருக்கிறார்கள். அது நியாயமா என்பதை அத்தனை பேரும் சிந்திக்க வேண்டும். அவர்களைப் பழங்குடியினர். பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று இந்த அரசாங்கம் பலமுறை மத்திய அரசினிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு சில விதி முறைகள் இருக்கின்றன. அந்த மக்கள் வாழ்கின்ற முறை பழக்க வழக்கங்கள் அந்த விதி முறைகளுக்கு ஒத்து வரவில்லை. ஆகவே, பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க இயலாது, என்று மத்திய அரசு மறுத்து விட்டது. இருந்தாலும் நம்முடைய தமிழக அரசு பழங்குடி மக்களுக்கு என்னென்ன சலுகைகளை, உதவிகளைத் தருகிறோமோ அவைகளை எல்லாம் இந்த நரிக்குறவர் சமுதாயத்திற்கும் செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாடு சுதந்திரம் அடைந்து குடியரசுத் தலைவர் ஆட்சி காலம் வரையில், எந்த ஆலோசனைக் குழுவிலேயும் நரிக்குறவர் சமுதாயத்தினருக்கும் இடம் தரவில்லை. புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்திருக்கும் இந்த அரசு பின்தங்கியோர் நல ஆலோசனைக் குழுவில் நரிக்குறவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடம் தந்திருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்வதிலே மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்தச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக அவர்கள் நடத்துகின்ற பள்ளிகளுக்கு கட்டட வசதி செய்து தருவதற்கும் இன்ன பிற வசதிகளைச் செய்து தரவும் இந்த அரசாங்கம் உதவி செய்து வருகிறது என்பதையும் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் துலுக்காணம் பேசுகிறபோது, இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகைகள் தர, காரியங்கள் ஆற்ற தயக்கம் காட்டுகிறது என்று சொன்னார்கள். தயக்கம் காட்டவில்லை என்பதற்குத்தான், வீட்டுமனையைக் கையகப் படுத்த 100 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்றும் வீடு கட்ட ரூபாய் 4,000 என்றிருந்ததை மாற்றி ரூ. 6,000 என்கிற அளவுக்கு ஒதுக்கியிருக்கிறது என்றும், வீட்டு மனையைக் கையகப் படுத்துவதிலே ஏகப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன, தடங்கல்கள் இருக்கின்றன என்று எடுத்துச் சொன்ன பிறகு அதைப் போக்கத்தான் வருகிற சட்டமன்றக் கூட்டத்தில் அந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தரவேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு இந்த அரசு வீட்டு மனை கையகப் படுத்த ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறது என்பதையும் இங்கே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இவையெல்லாம் அரசு தீவிரம் காட்டுகிறது என்பதற்கு ஆதாரமாகும்.

[பிற்பகல் 1.40]

இன்னொரு நல்ல ஆலோசனையையும் திரு. துலுக்காணம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வார்டர்கள் அடிக்கடி மாற்றப்பட வேண்டும். நிர்வாகம் சரியில்லை, அவர்களின் நடவடிக்கைகள் சரியில்லை. ஆகவே, வார்டர்களை ஓராண்டிற்கு

ஒரு முறை மாற்றியாகவேண்டும் என்ற நல்ல கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இந்த நடப்பு ஆண்டில் இருந்து எல்லா தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதியிலும், பின் தங்கியோர் மாணவர்கள் விடுதியிலும் பணியாற்றும் வார்டர்கள் யாராக இருந்தாலும், ஓராண்டுக் காலத்திற்கு மேல் பணியாற்ற முடியாது என்ற கட்டளையை இந்த அரசாங்கம் இட இருக்கிறது என்பதையும் இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் சமுதாயக் கூடங்கள் ஆங்காங்கு கட்டவேண்டும், இன்னும் பல பணிகள் செய்யப்பட வேண்டும் என்றும் எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட தேவையான இடங்களில் நிதி நிலைமைக்கு ஏற்ப சமுதாயக் கூடங்களையும் கட்டுவது என்கிற நல்ல முடிவினை எடுத்து இருக்கிறது என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் ஒதுக்கிய நிதி போதாது, போதாது என்ற குறைபாட்டைச் சொல்லி இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் சட்டியில் இருப்பதைத்தான் அகப்பையில் எடுத்து மக்களுக்குப் பரிமாற இருக்கிறது, சட்டி நிரம்பும்போது நிச்சயமாக தொகை அதிகமாக ஒதுக்குவதற்கு வழிவகை ஏற்படும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் ஒரு நல்ல கருத்தை எடுத்துச்சொல்லி விட்டு, இன்னொன்றையும் சொன்னார், அரசாங்கம் பொன் முட்டையிடும் வாத்து, அது பிற்பட்ட மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதிக முட்டை இடவேண்டும் என்று. அந்தப் பொன் முட்டை இடும் வாத்துக் கதை உங்களுக்கு நன்றாகத் தெரியும். வாத்து பொன் முட்டை இடுகிறது என்பதற்காக கதையில்வரும் பேராசைக்காரர் போல் பொன் முட்டையிடும் இந்த அரசு என்கிற வாத்தை அறுத்து ஒழித்துவிட நினைக்கவேண்டாம். அவர் அப்படி நினைக்க மாட்டார். இந்த அரசாங்கம் நீண்ட காலம் இருக்கவேண்டும். அப்போது தான் படிப்படியாக தேவையான சலுகைகள், முன்னேற்றங்கள் தாழ்ந்த மக்களுக்குச் செய்ய முடியும்.

அவர்கள் சொல்லிய ஒரு கருத்து, பிற்பட்ட சமுதாயத்திற்கு என்று 31 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறீர்கள், அதனால் பின் தங்கியோர் பட்டியலில் இடம்பெற்றுள்ள, மிக மிகப் பின் தங்கியோரான போயர்கள், ஒட்டர்கள், இன்னும் மற்ற சமூகத்தினர் உரிய அனைத்துச் சலுகையும் பெறமுடியவில்லை. அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவில்லை, ஆகவே, தனி ஒதுக்கீடு செய்யமுடியுமா, இந்த அரசாங்கம் செய்து தரவேண்டுமென்று இங்கே குறிப்பிட்டார்கள்.

நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அவர்கள் கூறிய அந்தக் கருத்துக்களை ஆலோசித்துப் பார்த்தேன். அதிலே ஏற்படுகின்ற லாப நஷ்டத்தையும் கணக்கிட்டுப்பார்த்தேன். அண்டை மாநிலமான ஆந்திராவிலும், கருநாடகத்திலும் இது போன்ற தனி ஒதுக்கீடு நிலைமை இருந்து வருகிறது. நம்முடைய அரசியல் சட்டத்திலும் சிக்கல் எதுவும் இல்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து இந்த அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்து, அவர்களுக்கு உரிய பதிலை அளிக்கும் என்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள், பள்ளிக்கூடங்கள் திறந்துவிட்ட பிறகு, ஆகஸ்ட் மாதத்திலேதான் விடுதிகளில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்று. இந்த மாணவர்களைச் சேர்ப்பதில் என்னென்ன வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது என்பதை எல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வந்து இருக்கிறோம். ஆகவே, நடப்பு ஆண்டில் இருந்து இந்த அரசாங்கம் உரிய நேரத்தில் மாணவர்களைச் சேர்க்க வழிவகை செய்யும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசுகிற நேரத்தில் மொத்தத்தில் மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல சலுகைகள் கிடைக்கவில்லை. மதம் மாறிய கிருஸ்துவர்களுக்கு இந்த அரசாங்கம் எந்த விதமான உதவியும் செய்யவில்லை. அது செய்யப்பட வேண்டும், நியாயமான கோரிக்கை என்று சொன்னார்கள். மதம் மாறிய கிருஸ்துவர்களுக்கு இதுபோன்ற சலுகைகள் தரப்படவேண்டும் என்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால் இங்கே அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய இந்த இரண்டிலும் அவர்களுக்குச் சலுகைகள் தரக்கூடாது, தர இயலாது என்கிற ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மதம் மாறிய கிருஸ்துவர், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தருகிற மற்ற எல்லா வசதிகளையும் சலுகைகளையும் தந்து கொண்டு இருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லக்கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த இரண்டை மட்டும் தரமுடியாத ஒரு சூழ்நிலை இந்திய அரசியல் சட்டத்தில் இருக்கிறது. மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் மத்திய அரசிடம் இந்த நல்ல ஆலோசனையைத் தெரிவித்து, அரசியல் சட்டத்தைத் திருத்த வழிவகை செய்து தந்தால் அதையும் இந்த அரசு பரிசீலனை செய்யும் என்று சொல்லிக்கொள்ள

[1987 மார்ச் 18

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அரசியல் சட்டத்தில் மதம் மாறிய தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு அந்தச் சலுகைகளைக் கொடுக்கக் கூடாது என்று இல்லை. அரசியல் சட்டத்தில் இருப்பது 'ஷெட்யூல் காஸ்ட்' என்பதற்கு 'டெஃபனிஷன்' இந்துவாக இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆக, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். திருத்த வேண்டுமென்றால் முதலில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். அதனால் முன் கூட்டியே நமது மாநில சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசிய பேச்சை அப்படியே எழுதி வைத்திருக்கிறேன். மதத்தின் அடிப்படையில் உரிமைகள் பெற அரிசன மக்கள் இரு பிரிவினர்களாக இருக்கிறார்கள். அரசியல் சட்டம் குறுக்கே நிற்குமானால் அதை மாற்ற அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பேசியிருக்கிறார் ள். நான் அதற்குத்தான் சொல்கிறேன், இந்த ஒரு அரசு மட்டும் முயற்சி செய்து பயனில்லை. அகில இந்திய அடிப்படையில் செய்ய வேண்டும். மத்திய அரசு செய்யுமானால் மாநில சட்டமன்றங்கள் ஏற்றுக்கொள்ள எந்தவிதமான தடையும் இருக்காது. அதுதான் எங்களது கருத்து. திரு. ஜேம்ஸ் அவர் கள் மத்திய அரசுக்கு சிபாரிசு செய்ய முயற்சி எடுப்பார் என்ற நம்பிக்கையில் இந்தப் பிரச்னையை முடிக்கிறேன்.

இன்னும், அவசரக் காலத்தில் பிறப்பிக்கப்பட்ட ஆணை பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு கவனத்தில் வைத்து, எந்தெந்த விதிமுறைகளில், ஆணைகளில் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய சமுதாயத்திற்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறதோ அதை மாற்றியமைக்க பரிசீலனை செய்வோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லி இந்த அரசு என்னென்ன பணிகளை ஆற்ற இருக்கிறது என்பதைக் கொஞ்சம் வேகமாகச் சொல்லி உங்கள் பசிக்கொடுமையை நீண்ட நேரம் நீட்டிக்காமல் சுருக்கமாக முடித்து கொள்ளலாம் எனக் கருதுகிறேன்.

பிற்பட்ட வகுப்பு, மற்றும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் ஆகியோருடைய மாணவர்களுக்கு உள்ள விடுதிகளில் மாணவர் உணவுத் தொகையை மாதம் ஒன்றுக்கு ரூ. 40-லிருந்து 45 ஆக் உயர்த்தி, அதன் மூலமாக வாரம் ஒருமுறை மட்டனும், வாரம் ஒருநாள் முட்டையும் போடுவதற்கு இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 மார்ச் 18] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோர் படிப்புக் கட்டணச் சலுகை பெற அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமான வரம்பை 2,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக இந்த அரசு உயர்த்தியிருக்கிறது. அதற்காக அரசுக்கு ஆகின்ற செலவு ரூ. 3,75,000 ஆகும்.

பிற்பட்டோர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு 10 இடங்களில் புதிய மாணவர் விடுதிகள் ஆரம்பிக்கப்படும். அதோடு விடுதிகளில் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கு இலவச உடையும் வழங்கப்படும். அதற்கு 3,36,000 ரூபாய் அரசுக்குச் செலவாகும்.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் மாணவர்கள் பயிலும் பள்ளிகளில் அந்த மாணவர் மாணவியர்கள் எல்லோருக்கும் பாடப் புத்தகங்களும், இதர குறிப்புப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படும். இதனால் அரசுக்கு 2,20,000 ரூபாய் செலவாகும்.

சேலம், தென்னாற்காடு, கோவை, மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களில் கல் உடைப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கும்—மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கபந்து அவர்கள் குறிப்பிட்ட போயர் சமுதாயத்திற்கு தொழில் கருவிகள் வாங்க இந்த ஆண்டு முதல் இந்த அரசு 10,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதை இங்கே பெருமகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-50]

அரசு உதவி பெறும் தனியார் விடுதியில் சேருவதற்கு குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பை ரூ. 2,000-லிருந்து ரூ. 2,500 ஆக இந்த ஆண்டு முதல் இந்த அரசாங்கம் உயர்த்தி இருக்கிறது.

பிற்பட்டோர் நலத்துறையின்கீழ் இயங்கும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட, விடுதிகளில் சேர இருக்கும் மாணவ மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு இதுவரை ரூ. 2,000 ஆக இருந்தது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு இந்த ஆண்டு முதல் அது ரூ. 2,500 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பிற்பட்டோர் நலத்துறையின்கீழ் இயங்கும் பின்தங்கிய மாணவ மாணவிகள் விடுதியில் சேர மாணவ மாணவிகளின் பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு இதுவரை ரூ. 2,000 ஆக இருந்தது. இந்த ஆண்டு முதல் ரூ. 2,500 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

[திரு. சௌந்தரபாண்டியன்] [1978 மார்ச் 18

அரசு உதவி பெறும் தனியார் விடுதியில் சேருவதற்கு பின் தங்கிய மாணவிகளின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு இதுவரை ரூ. 2,000 ஆக இருந்தது. இந்த ஆண்டு முதல் ரூ. 2,500 ஆக உயர்த்தப்படுகிறது.

அதோடில்லாமல் படிப்புதவித் தொகைக்கு தருகின்ற படிவம், ஸ்காலர்ஷிப் ஃபார்ம் நீண்ட பக்கங்கள் கொண்டதாக இருக்கிறதென்று மாணவர்கள் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார்கள். நடப்பாண்டில் அந்தப் பக்கங்களைச் சுருக்கி மாணவர்களின் துக்கத்தை குறைக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றும் சொல்கிறேன். குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டித்தருகிற ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. 1974-75 இல் வீடு ஒன்றுக்கு ஒதுக்கிய தொகை ரூ. 1,200. 1975-76-லே வீடு ஒன்றுக்கு ஒதுக்கிய தொகை ரூ. 2,200. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு இந்த ஆண்டு ஒரு வீடு ஒன்றுக்கு ஒதுக்கி இருக்கிற தொகை 4,000 ரூபாய் என்பதையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் சில காரியங்களை இந்த அரசாங்கம் செய்ய இருக்கிறது. பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான முனைப்புத் திட்டம் ரூ. 2 கோடியிலே தீட்டப்பட்டு நடப்பாண்டிலே இருந்து செயல்படவிருக்கிறது. 1978-79 ஆம் வருடத்தில் நிதிநிலை அறிக்கையில் அரிசன மற்றும் பழங்குடியினர் பொருளாதார முன்னேற்றம் அடைகின்ற வகையில் அவர்கள் சிறு தொழில் நடத்தி மேம்பாடு அடைவதற்கு இந்த அரசாங்கம் நல்ல திட்டத்தைத் தீட்டி ஆரம்பகட்டமாக ரூ. 36 இலட்சத்தை ஒதுக்கி இருக்கிறது. அதோடில்லாமல் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 2 கோடி ரூபாய் கடனைப் பெற்று இதை அவர்கள் சிறு தொழில் செய்து முன்னேற்றம் அடைவதற்கு முதற்படியாக முதற்கட்டமாக இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த முடிவு செய்து இருக்கிறது என்பதையும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே இருக்கிற பல உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த நிலைமையில் இருக்கிறார்கள், எப்படி வாழ்கிறார்கள் என்பதை எல்லாம் நன்றாக அறிவார்கள். தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் யாராவது ஒருவர் இறந்துவிட்டால் அந்த ஏழை எளிய தாழ்த்தப்பட்டவர்கள் அண்டா, குண்டாவை எடுத்துக்கொண்டுபோய் அடகு வைத்து ஈமக் கடன்களைச் செய்யவேண்டும் அல்லது தங்களிடம் இருக்கிற அரைப்பவுன், ஒரு பவுன் நகையை அடகு வைத்து ஈமச்சடங்கை நிறைவேற்ற வேண்டி இருக்கிறது அல்லது

1978 மார்ச் 18] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

யாரிடமாவது வட்டிக்கு கடன் வாங்கவேண்டும் அல்லது தான் உழைத்துச் சேகரித்து வைத்திருக்கிற தானியத்தை விற்று அந்த ஈமக் கடனை ஆற்ற வேண்டும். இப்படி இறந்து துக்கப்படுகின்ற நேரத்தில் அவதிப்படுகிற தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் மேலும் துயரம் அடையக்கூடாது என்பதற்காக இந்த புரட்சித்தலைவரின் ஆட்சி நடப்பாண்டிலே இருந்து தாழ்த்தப்பட்ட குடும்பங்களில் இறப்பவர்களுக்கு ஈமச் சடங்கைச் செய்வதற்கு அடையாளத் தொகையாக ரூ. 50 ரூபாயை வழங்க உத்தரவிட்டிருக்கிறது என்பதை இங்கே மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆளும் கட்சித் தரப்பில் ஆரவாரம்)

இதற்காகிற செலவு ஆண்டு ஒன்றுக்கு 34,81,000 ரூபாயாகும்.

தாழ்த்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்காக அரசாங்கவிடுதிகளில் உணவுத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 40-ல் இருந்து ரூ. 45 ஆக இந்த ஆண்டில் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் அந்த விடுதி மாணவர்களுக்கு வாரம் ஒரு முறை மட்டனும், வாரம் ஒரு முறை முட்டையும் கிடைக்க வழி வகை செய்யப்பட்டு இருக்கிறது. இதற்காகிற செலவு ரூ. 17,05,000 ஆகும்.

அரக்கோணம், நல்லம்மாள்புரம் ஆகிய இரண்டு ஹரிஜன பள்ளிகளுக்கு கிட்டத்தட்ட எட்டு லட்சம் ரூபாய் அளவில் கட்டடம் கட்ட இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.

கொத்தடிமைகள் மேம்பாட்டிற்காக ஏறத்தாழ ரூ. 5,08,000 நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்து தருவதற்காக பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு மின் இணைப்பு தருவதற்காக இந்த ஆண்டு ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

13 புதிய பள்ளி மாணவர்கள் விடுதிகள், ஒரு கல்லூரி மாணவர் விடுதி, மற்றும் இரண்டு தனியார் விடுதிகளை அரசு ஏற்று நடத்த கிட்டத்தட்ட ரூ. 3,78,000-ஐ இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது.

அரிஜன உயர்நிலைப் பள்ளிகள் ஐந்தில் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் அமைக்க இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

அரிஜன குடியிருப்புகளில் 50 குழந்தைகள் காப்பகம் அமைப்பதற்கு இந்த ஆண்டு ரூ. 1,94,000-ஐ இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது.

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1978 மார்ச் 18

தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்ராயன்மலையில் வெள்ளி மலை, சிரப்பட்டு போன்ற இடங்களில் பழங்குடியினர் தங்கிப் படிக்க கிட்டத்தட்ட ரூ. 1,61,000-ஐ இந்த அரசு ஒதுக்கி யிருக்கிறது.

20 அரிஜன பழங்குடி பெண்களுக்கு சென்னையில் வானொலி தொலைக்காட்சி இயந்திரங்களில் பயிற்சி அளிக்க 17,000 ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சலவைத் தொழிலாளர்களுக் காக ஒரு துணி வெளுக்கும் இடம் அமைப்பதற்காக 10,000 ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது.

பழங்குடி மக்கள் கடன் சுமையால் எவ்வளவு வேதனைப் படுகிறார்கள் என்பதை பழங்குடி மக்களை அறிந்தவர்கள், பழகிய வர்கள் நன்கு உணர்வார்கள். ஆகவே பழங்குடிமக்களுக்கு கடன் பளுவிலிருந்து நிவாரணம் அளிக்க பழங்குடியினர் கடன் நிவாரண மசோதா ஒன்றைக் கொண்டுவர இந்த அரசு தீவிர ஆலோசனை செய்து விரைவில் கொண்டுவரவும் இருக்கிறது என்பதை இங்கு சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பழங்குடியினருக்கு ஒப்படை செய்த நிலங்களும், அவர்களுடை பட்டா நிலங்களும் மாற்றம் செய்யப்படுவதைத் தடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அந்த நல்ல ஆலோசனையையும் இந்த அரசு நிறைவேற்ற இருக்கிறது.

இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேர்களும், திரு. ஜேம்ஸ் தவிர, அச்சகத் துறைபற்றி யாரும் எந்தக் கருத்தும் சொல்லவில்லை. சொல்லாததினால் வருத்தப்படவில்லை. அந்தத் துறை எவ்வளவு நல்லமுறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளம் தான் இது எனபதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றும் சொல்லியாக வேண்டும். நாம் பார்த்தோம். சட்டசபையில் பேசினோம். எங்கு பார்த்தாலும் அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தம் இருக்கிறது என்று சிலபேர்கள் அச்சப்பட்டார் கள். சட்டமன்றம் நடக்கிறதே நம்முடைய மானியக் கோரிக்கைப் புத்தகங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அச்சிட்டு வழங்கப் படுமா அச்சிட்டு வழங்காமல் போனால் சட்டமன்றம் நடக்குமா என்று இப்படிப்பட்ட அச்சப்பாடு இருந்தது. என்னையும் பல பேர்கள் கேட்டார்கள். அவர்களிடம் நான் சொன்னேன், அச்சகத் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு பொறுப் பேற்ற பிறகு ஆற்றியிருக்கிற பணிகள் ஏராளம். அங்கே பணிபுரிகிற தொழிலாளர்கள் (குறுக்கீடு) நல்ல முறையில் நல்ல உணர்வோடு சட்டமன்ற நிகழ்ச்சிகள் தடைபடாமல்

1978 மார்ச் 18] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

நடக்கவும் உறுதியெடுத்துக்கொண்டு எந்தவிதமான குறைபாடும் இன்றி அச்சுத் துறை பணியாளர்கள் பணியாற்றி இதுவரையில்—இன்று தேதி 18—29-ம் தேதி வரைக்கும் தேவையான சட்ட மன்ற நடவடிக்கைப் புத்தகங்களை அச்சிட்டுத் தந்திருக்கிறார்கள் என்பதற்காக இந்த அச்சகத் தொழிலாளர்களை நான் மட்டுமல்ல, நீங்கள் மட்டுமல்ல, இந்த நாடே பாராட்டியாக வேண்டும். என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 2.00)

அவர்கள் ஆற்றிய அரும் பெரும் தொண்டினைப் பாராட்டி அரசின் சார்பில் நன்றியை நான் சொல்லாமல் விட்டால் நிச்சயமாக அச்சகப் பணியாளர்கள் வருத்தப்படுவார்கள். ஆகவே இந்த மாமன்றத்தின் சார்பாகவும் உற்சாகத்துடன் அரும்பாடு பட்டு உழைத்த அச்சகப் பணியாளர்களுக்கு உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தி பணியாற்றிய நெறியாளர்கள், துணை நெறியாளர் கள், இதன் துறை செயலாளர் அத்தனை பேருக்கும் இந்த அரசின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரி வித்துக்கொள்கிறேன். (ஆளும்கட்சித் தரப்பில் ஆரவாரம்)

வெறும் நன்றி தானா என்று அவர்கள் கேட்கலாம். நாங்கள் கூட யோசித்தோம். இவர்களுக்கு ஊக்கத்தொகை தரலாமா என்று என் உள்ளம் எண்ணியது. ஆனால் நிதிநிலைமை சரியில்லாத தாலும் சில விதிமுறைகள் குறுக்கிடுகின்ற காரணத்தாலும் எங்க ளுடைய எண்ணத்தை நிறைவேற்ற முடியவில்லை. இப்போது நிறைவேற்ற முடியாவிட்டாலும் காலம் அவர்களுக்கு நல்ல சன் மானம் தரும் என்கிற நம்பிக்கையுடன் இருக்க வேண்டுகிறேன்.

இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு அச்சகத்துறையில் என்னென்ன பணிகளை ஆற்றியிருக்கிறது, ஆற்ற இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இன்று ஏன் பல பேர்கள் அச்சகத்துறையைப்பற்றி பேசவில்லை என்றும், மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் மட்டும்தான் பேசினார் என்றும் யாரும் அச்சம் கொள்ளவேண்டியதில்லை.

ஏனென்றால், அச்சகத் துறையை பொறுத்தவரையிலும் இதன் நிர்வாகத்திலும் சரி, அச்சடிப்பதிலும் சரி, சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகங்களைப் பொறுத்த வரையில் நல்ல கவனத் துடன் செய்து தருகிற பணியை அவர்கள் செய்கிறார்கள். சில பல நேரங்களில் அச்சிடுவதில் சில குறைகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டலாம். ஆனால், தருகின்ற விபரங்களை செய்தி யைத் தான் அச்சடிக்கிறார்கள். செய்தியை, விபரங்களை மாற்று வதற்கு அச்சுத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அதிகாரம் கிடை யாது. இந்த வகையில் அச்சகத்துறை நல்ல முன்னேற்றத்தை, சிறப்பை, சாதனையை செய்து காட்டியுள்ளது.

சென்னை மைய அச்சகத்தில் ஏறத்தாழ 138 பெண் பணியாளர்கள் பணியாற்றுகின்றார்கள். இந்த அச்சகம் ஆரம்பத்திலிருந்து இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்கிற வரை, தாய்மார்கள் காலை 6 மணி முதல் 2 மணி வரையிலும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். தாய்மார்கள் காலையில் வேலைக்கு வருவதில் சிரமங்கள் இருக்கின்றன என்று பல முறை, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பாகவே சொல்லியிருந்தும் இந்த நியாயமான கோரிக்கை ஏற்கப்படவில்லை. இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு தாய்மார்கள் மீது இரக்கம் கொண்டு காலை 9 மணி முதல் மாலை 5½ மணி வரை பணியாற்றலாம் என்று அனுமதி வழங்கியிருக்கிறது.

அவர்கள் பணியாற்றிட நல்ல இடவசதியும், தனியாக— ஓய்வு அறையும் ஒதுக்கித் தரப்பட்டுள்ளது என்பதையும் சொல்ல விரும்புகின்றேன்.

இந்தியா முழுவதிலும் உடல் ஊனமுற்றவர்கள் எத்தனை— பேர்கள் தனிப்பட்ட நிறுவனங்களிலும் அரசு நிறுவனங்களிலும் பணியாற்றுகின்றார்கள் என்று கணக்கெடுத்த போது, நம்முடைய தமிழக அரசின் அச்சகத்தில்தான் 105 உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு தந்திருக்கிறது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டு, அதற்கு மத்திய அரசு விருதும் தந்திருக்கிறது என்பதை ஏற்கெனவே இந்த அவைக்குச் சொல்லியிருக்கிறேன். மைய அச்சகத்தில் இட நெருக்கடியைப் போக்குவதற்காக 5 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டவும், 92 மின் விசிறிகள் அமைப்பதற்கு 22,300 ரூபாயும் இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், தண்டையார்பேட்டையிலுள்ள அச்சகப் பணியாளர்களுடைய குடியிருப்பில் பல ஆண்டுகளாக செய்யாமல் இருந்த, பழுது பார்த்தல், வெள்ளையடித்தல் முதலிய பணிக்கு கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி, அப்பணிகளை செய்து முடிக்க இந்த அரசு உத்திரவிட்டிருக்கிறது என்பதையும், 29,290 ரூபாய் செலவில் நல்ல சாலை வசதி செய்யவும் இந்த அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது.

இத்துறையில் பணிபுரியும் 98 செய்தியாளர்கள், காவல்காரர்கள், மின் பணியாளர்கள் ஆகியோர் மழையில் நனையாமல் பணிபுரிவதற்கு கோட்டும், தொப்பியும் புரட்சித் தலைவரின் அரசு காலத்தில் தற்போது முதல் நடவையாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

3,500-க்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள மைய அச்சகத்தில் ஏற்கெனவே உள்ள குடிநீர் பற்றாக்குறையை நீக்குவதற்காக 17,000 ரூபாய் செலவில்.......

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அமைச்சருக்கு இவ்வளவு கஷ்டம் கொடுக்கக் கூடாது. அந்த வகையிலே இத்துறையிலே உள்ளவர்கள் அமைச்சருக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த விவரங்களையெல்லாம் இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே முதலிலேயே வைத்திருக்க வேண்டும். அதைப் படிக்கும்படியாகச் செய்யாதது இந்தத்துறையின் குறை. அமைச்சர் இதையெல்லாம் உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகப் படிக்கிறார். ஏறத்தாழ 20 நிமிடங்கள் படிக்கின்ற அளவுக்கு, ஒரு அமைச்சருக்கு தொல்லை தருகின்ற அளவுக்கு, ஒரு துறை இருக்கக் கூடாது. அடுத்த முறை முதற்கொண்டாவது, அவையின் முன்னே வைக்கப்படுகின்ற அறிக்கையிலே இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் தரவேண்டுமென்று— இந்த அவையின் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அரசின் சாதனைகளைப் படிப்பதில் எனக்குத் தொல்லை தருவது பற்றி, தொல்லை ஏற்படுவது பற்றி நான் வருத்தப்படவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு தொல்லையாக இருக்குமானால், உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சட்ட மன்றத்திலே அறிக்கை வைக்கின்றபோது, அந்த அறிக்கையில் இந்த விவரங்களையெல்லாம் வைத்திருக்க வேண்டும். இவையெல்லாம் முன்பே முடிவெடுத்தவை. பட்ஜெட்டினுள்ளே காணப்படுகின்றன. முதலிலேயே அறிக்கையிலே வைத்திருந்தால், உறுப்பினர்கள் அதைப் படித்துவிட்டு, அதைப் பாராட்டிகூட சில வார்த்தைகள் சொல்லியிருக்கக்கூடும். ஏதோ அவற்றிலே இல்லாத விவரங்களை இங்கே படிப்பது, புதியதாக அறிக்கை வைப்பதுபோல் ஆகிறது. இன்று இனி அதைப்பற்றி பேசவோ அல்லது விளக்கவோ இந்த அவையில் முடியாத காரியமாகி விடுகிறது. இவ்வளவையும் இங்கே படிப்பது எவ்வளவு உங்களுக்குக்கூட சிரமமாக இருக்கிறது என்பதையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே. இந்த அவையில் 10 ஆண்டுகள் நான் இருந்திருக்கின்றேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் 20 ஆண்டுகளாக இருந்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் திட்டங்களையும், செய்த சாதனைகளையும் எத்தனையோ முறை இங்கே படிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் நன்கு அறிவேன். (குறுக்கீடு) இது சாதனைதான்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சாதனை என்று சொல்கிறார்கள். சாதனை என்பது செய்து முடித்தது. ஆனால், செய்யப் போவதாக தெரிவிப்பது

அறிக்கை. அமைச்சர் படிப்பதிலே உள்ள கருத்துக்களை நான் வரவேற்கிறேன் சாதனைகளைக்கூட முன்கூட்டியே அறிக்கையில் தெரிவிக்கலாம். செய்யப்போவதை அறிக்கையில் தெரிவித்தால் அமைச்சர் அவர்களுக்கு உதவி செய்வதாக இருக்கும். அமைச்சர் எல்லாவற்றையும் இங்கே படித்துக் கொண்டிருந்தால், நாங்கள் பாடம் கேட்பதுபோல் கேட்டுக் கொண்டேதான் இருக்கவேண்டும். போதுமான நேரமில்லாததால்தான் அந்த யோசனையைச் சொன்னேன். அடுத்த முறையிலிருந்தாவது இவற்றை அறிக்கையிலேயே வெளியிடும் முறையைக் கையாளும்படி தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்</u> : இவர்கள் அமைச்சர்களாக இருந்த நேரத்தில் சாதனைகளை பக்கம் பக்கமாக படித்துக் காட்டினார்கள். இருப்பினும் இந்த நல்ல ஆலோசனைக்கு நன்றி.

நான் இந்த அச்சகத் துறை புரிந்துள்ள சாதனைகளைச் சொல்லிக் கொண்டே போனால், எதிர்க் கட்சித் துணைத் தலைவருக்கு கொஞ்சம் அச்சமும், சங்கடமும் ஏற்படுமோ எனத் தோன்றுகின்ற காரணத்தால், இன்னும் முக்கியமான சாதனைகளை பல இருந்தாலும், ஒன்றிரண்டை மட்டும் சொல்ல விரும்புகின்றேன்.

இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, விருத்தாசலத்திலே கிட்டத்தட்ட 17 லட்சத்து 95 ஆயிரம் ரூபாயில் ஒரு நிரந்தரமான கட்டிடத்தைக் கட்டுவதற்கு உத்திர விட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, சேலம் திருச்சி போன்ற இடங்களில் இருக்கின்ற அரசாங்க அச்சகங்கள் தற்போது வாடகை இடத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு நிரந்தரமான கட்டிடம் கட்டுவதற்காக, இந்த அரசாங்கம் முயற்சி எடுத்து, திருச்சியிலே 3 ஏக்கர் 80 செண்டு நிலத்தையும், சேலத்திலே 3 ஏக்கர் 85 செண்டு நிலத்தையும் கையகப்படுத்தி, தயாராக வைத்திருக்கிறது. அதற்குரிய கட்டிடங்களை இந்த அரசாங்கம் விரைவில் கட்டுகிற பணியை மேற்கொள்ள பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்த அச்சகத் துறையில் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு வாங்கிய இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு 20 இலட்சம் ரூபாயில் 19 புதிய இயந்திரங்கள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. இதுவரை 4 இலட்சம் ரூபாயில் 5 இயந்திரங்கள் வாங்கி நிறுவப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவைகளும் விரைவில் வாங்கி நிறுவப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 2·10).

மேலும், இந்த அச்சகத்துறை ஆற்றியிருக்கும் பணிகள் ஏராளம்; என்றாலும் அவைகளை நான் கூறி என் பேச்சை நீட்டிக் கொண்டு போவது உங்கள் பசி நேரத்தைச் சோதிப்பதாகும் என்பதை நானும் உணருகிறேன். இருந்தாலும் ஒரு அரசாங்கம் என்ன செய்தது, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றதும் என்ன செய்தீர்கள் என்று கேட்பவர்களுக்கு விடையளிக்கும்போது இந்த அரசு செய்த சாதனையைச் சொல்வது பிறருக்கு வேதனையை ஊட்ட அல்ல என்பதை இங்கே நான் பணிவுடன் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நடப்பு ஆண்டில் அச்சகத் துறையில் என்னென்ன பணிகளை ஆற்றியிருக்கிறோம் என்பதைப் பற்றி இங்கே தெரிவிப்பது என்னுடைய கடமை. 9 லட்சம் செலவில் மேலும் 22 புதிய அச்சு இயந்திரங்கள் வாங்குவதற்கு இந்த அரசாங்கம் திட்டமிட்டு முடிவு எடுத்திருக்கிறது. ஏற்கனவே உள்ள இயந்திரங்கள் நல்ல முறையில் பராமரிப்பு செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு 16,97,000 ரூபாய் செலவிட இந்த அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

மைய அச்சகத்திலிருந்து பிரித்து தனியாக 1—1—1978 முதல் இயக்குநர் அலுவலகத்தை அண்ணாசாலையில் இயங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாயை இந்த அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது.

தண்டையார்பேட்டையில் வசிக்கும் அரசு அச்சகப் பணியாளர்கள் அவர்களுடைய காலனியில் சுற்றுச் சுவர் இல்லாமல் திருடர் பயம் இருக்கிறது என்கிற அச்ச உணர்வில் இத்தனை ஆண்டு காலமாக அச்சப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்த அச்சத்தைப் போக்க இந்த அரசாங்கம் 2,58,000 ரூபாய் செலவில் சுற்றுச் சுவர் எழுப்ப உத்தரவிட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, அச்சகப் பணியாளர்கள் ஆற்றுகின்ற இந்த அரும்பணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் அவர்களின் சார்பிலும், இந்தத்துறையின் சார்பிலும் அந்தத் தொழிலாளர்களுக்கும், நெறியாளர் போன்றவர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து—மாண்புமிகு உறுப்பினர்கள் பசி நேரத்தில் இருக்கிறார்கள்; ஆகவே வெட்டுத் தீர்மானத்தை, பசிக்கிற காரணத்தால் வலியுறுத்தமாட்டார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது. ஆகவே நல்ல மனதோடு வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டு உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

[1978 மார்ச் 18

திரு. தாழை மு. கருணாநிதி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது ஒரு கருத்தை எதிர்பார்த்தேன். ஊராட்சித் தலைவர்களுக்கு, ஒன்றிய தலைவர்களுக்கு ரிசர்வ் சீட் கொடுக்கப்படவில்லை என்று கூறினேன். அதற்குத் தயவு செய்து பதிலளிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைக் கவனத்தில் வைத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோர்களிடம் இது பற்றிக் கலந்து பேச வேண்டும். காலம் வரும்போது இந்த அரசாங்கம் பரிசிலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சாமிக்கண்ணு அவர்கள் பேசும்போது * * * என்ற வகையில் உள்ள வாசகங்கள் அனைத்தும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் : 31-க்கு திருவாளர்கள் ஏ. இராமலிங்கம் மெ. ஆண் அம்பலம், எம். அண்ணாமலை, எம். ஆறுமுகம், பொ. உ. திராபதி, எம்.ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண்: 31—பழங்குடிமக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,01,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

அடுத்து, கோரிக்கை எண்: 32-க்கு திருவாளர்கள் சோ. பாலகிருஷ்ணன், வி. கே. கோதண்டராமன், எம். ஆறுமுகம், பொ. உத்திராபதி, ப. சந்திரன், எம்.ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1978 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக்கோரிக்கை எண் : 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்'' என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,68,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் : 44-க்கு திருவாளர்கள் எம். ஆறுமுகம், எம்.ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் : 44—எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,64,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20—3—1978 திங்கட்கிழமை காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2:17 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

*307. 1976 ஆம் ஆண்டிற்கான மதுரை பாண்டியன் பொறியியல் கழகத்தின் 2 ஆம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

* 308. 1977 ஆம் ஆண்டிற்கான மதுரை பாண்டியன் பொறியியல் கழகத்தின் 3 ஆம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*309. 1976 ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 5 ஆம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*310. 1977 ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 6 ஆம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

311. 1976-77 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்தின் 5 ஆம் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

†134. கோரிக்கை எண் 31—அரிசன-பழங்குடி நலத்துறைக் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

†135. கோரிக்கை எண் 31—அரிசன-பழங்குடி நலத்துறைக்கான இணைப்புகள், 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

† 136. அரிசன-பழங்குடி நலத்துறையின் 1978-79 ஆம் ஆண்டின் செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

‡137. எழுதுபொருள் அச்சுத்துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (தமிழ்).

‡ 138. கோரிக்கை எண் 3--மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

‡ 139. தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து பற்றிய ஆய்வுரை 1977-78 (ஆங்கிலம், தமிழ்).

---

*தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகளின் 21 (5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன.

†16—3—1978 அன்று அனுப்பப்பெற்றன.

‡17—3—1978 அன்று அனுப்பப்பெற்றன.

இணைப்பு I.

(..........11ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 610-க்கான விடையைக் காண்க.)

கோவை மாவட்டம் புலாம்பட்டி கிராமத்திலிருந்து தொல் பொருள்கள் ஏதும் கண்டெடுக்கப்படவில்லை. ஆனால் போலு மாம்பட்டி என்பதே சரியாக அழைக்கப்படுவதாகும். இவ்வூரிலிருந்து பல வரலாற்றுச் சிறப்புமிக்க பழங்கலாச் சின்னங்களைத் தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது.

இவ்வூரில் உள்ள சிறு மேட்டுப் பகுதியாக இருந்த இடம் விளைநிலமாகப் பயன்படுத்தப்பட்டு வேளாண்மை செய்யப்பட்டு வருகிறது. அங்குத் தோண்டும்பொழுது சுமார் 3 அடி ஆழத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நான்கு செங்கற்களுக்கு இடையில் ஒரு சிறு கலப்பையும், அதனை இரு எருதுகள் இழுக்கும் நிலையில் இருந்ததாகவும் கூறினர். அதனை எடுத்தவர்கள் அதனுடைய வரலாற்றுச் சிறப்பும், கலை நுணுக்கமும் அறியாது அழித்து விட்டார்கள். அதில் ஒரு எருது மட்டும் தொல்பொருள் ஆய்வுத் துறையால் மீட்கப்பட்டது. இவ்வெருது செம்பால் ஆனது 5 சென்டி மீட்டர் நீளம் உடையது. மேலும் இங்கு பழங்காலச் செங்கற்கள் அதிக அளவில் கிடைத்துள்ளதால் இதைக் கட்டிடங் கட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என கருதப்படுவதோடு இவ்விடம் முற்காலத்தில் மக்கள் வாழ்ந்த பகுதியாக இருத்தல் வேண்டும்.

இதே பகுதியிலிருந்து முன்னர் இரு சுடுமண்பாவைகளின் தலைப்பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. 8 ஆம் நூற்றுண்டைச் சார்ந்தன. இவை இரண்டும் மிக அழகும் கலை நுணுக்கமும் வாய்ந்தவை. இப் பகுதி மிகவும் பிற்காலத்தில் பெரும் தீ விபத்துக்குள்ளாகி மணலில் பெரும் பகுதி சாம்பல் நிறைந்து காணப்படுகிறது. இப்பொழுது அங்கு பயிர் விளைந் திருப்பதால் தொல்லியலாய்வு தொடரப்படவில்லை. அறுவடையான பின்னர் அங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளலாமா என்பது பற்றிக் கருதப்படும்.

[41-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

அரிசன-பழங்குடி மக்கள் நலத் துறை

மானியக் கோரிக்கை எண் 31.

கொள்கை விளக்கக் குறிப்பு

"அரிசன-பழங்குடி மக்கள் நலன்" என்ற தலைப்பின் கீழ் 31ஆம் எண் மானியக் கோரிக்கைக்காக 1978–79ஆம் ஆண்டிற்கு ரூ. 1,601.89 இலட்சம் நிதி ஒதுக்கீட்டு செய்ய, ஒப்புதல் அளிக்குமாறு இச் சட்டப் பேரவையினை வேண்டு கிறேன்.

இம் மாநிலத்திலுள்ள அரிசன, பழங்குடியினரின் மக்கட் தொகை 76 இலட்சமாகும். இது, இம்மாநிலத்தின் மொத்த மக்கட்தொகையில் 18 சதவீதமாகும். இதில் 83 சதவீத மக்கள் கிராமப்புறங்களிலும் மீதி 17 சதவீத மக்கள் நகர்ப் புறங்களிலும் வசித்து வருகின்றனர். இம் மாநிலத்தில் அரிசன நல முன்னேற்றத்திற்காக அரசு கொண்டு வந்துள்ள பலமுனைத் திட்டங்களின் கீழும், வேளாண்மை, வருவாய் கூட்டுறவு போன்ற பல பொதுத் துறைகளின் மூலம் ஏனைய பொதுமக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். மேலும் அரிசன-பழங்குடியினர் நலத்துறையினர் செயல்படுத்தும் திட்டங்களின் வாயிலாகவும் அரிசன மக்கள் பலன் பெறு கிறார்கள்.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்த் திட்டப் பணிகளைச் செயற்படுத்தும் ஒரு பகுதியாக படிப்படியாகப் பழங்குடியின் துணைத் திட்டப்பகுதிகளுக்கு மின்வசதி வழங்கும் பணி மேற்கொள்ளப்படலாம் என்று அரசு கருதியுள்ளது. எனவே, கல்ராயன் மலை (தென் ஆற்காடு

மாவட்டம்), கல்ராயன் மலை (சேலம் மாவட்டம்), பச்சை மலை (சேலம் மாவட்டம்) ஆகிய பகுதிகளிலுள்ள கிராமங் களுக்கும் சிற்றூர்களுக்கும் 1977–78ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் செலவில் மின்வசதி வழங்குவதற்கு அரசு இசைவளித்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டில் இதற்காக ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதுபோன்ற பழங்குடியினர் பகுதிகளில் குடிநீர் வழங் கும் திட்டத்திற்காக 1978–79ல் ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சலவைத் தொழிலா ளருக்குச் சலவைத் துறைகள் கட்டுவது 1978 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படவேண்டும்.

வானொலி, தொலைக்காட்சி, இயந்திரவியல், பயிற்சியில் அரிசனங்கள்-பழங்குடியினர் பயிற்சி பெறுமலிருப்பதைப் போக்கும் பொருட்டு, 1978–79-ல் முதன்முறையாக அப் பயிற்சியில் சென்னை மாநகரத்தில் அரிசன-பழங்குடியினர் மகளிர் 20 பேருக்குப் பயிற்சியளிக்கப்படும்.

பழங்குடியினர் மேம்பாட்டிற்காக, 1977-78ம் ஆண்டு ரூ. 153 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. 1978–79-ல் அதனை ரூ. 200 இலட்சமாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இதில் 1978–79ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 147 இலட்சமாகும். எஞ்சிய ரூ. 53 இலட்சம் 1978–79ல் ஏனைய பொதுத்துறை நிதி ஒதுக்கத் திலிருந்து அரிசன நலத்திற்கான கணக்கில் வைக்கப்பட்டவை யாகும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக அரசு மேற் கொண்டுள்ள பல்வேறு திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அரிசன-பழங்குடி நலக் கோரிக்கையின் கீழ் "மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ் ரூ. 68·55 இலட்சம் ஒதுக்கியிருப்பதுடன் 1978–79ம் ஆண்டிற்கான அரிசன-பழங்குடியினர் நலத்திட்டங்களுக்காக "கடன்களும் முன் பணங்களும்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 23·93 இலட்சமும் "சாட்டியது" (வருவாய்) என்பதன் கீழ் ரூ. 0·62 இலட்சமும்

[1978 மார்ச் 18

நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கிற் கொள்ளப்பட்டால், 1978-79-ல் அரிசனப் பழங்குடி மக்கள் நலத்திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கம் ரூ. 1,694·46 இலட்சமாகும். ரயத்துவாரி கிராமப் பணிகள் திட்டம் குறித்து பயிற்சி நிலையங்களுக்காக ரூ. 0·53 இலட்சம் இதில் சேராது. இதில், ரூ. 907.49 இலட்சம் திட்டப் பணிகளின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 86·39 இலட்சம் மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டங்களுக்கும் ரூ. 821·10 இலட்சம் மாநிலத் திட்டப் பணிகளுக்கும் ஒதுக்கப்பட்டவையாகும்.

அரிசன-பழங்குடியினரின் நலனை மேம்படுத்துவதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கீழ்க்காணும் மூன்று பெருந்தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம்:—

1. கல்வி.
2. வேலைவாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும்.
3. மக்கள் சுகாதாரமும் வீட்டு வசதியும்.

I. கல்வி:

ஆண்டுதோறும் அரிசன-பழங்குடி மக்களின் நலத்திற்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பகுதி அரிசனங்கள்-பழங்குடியினர் கல்விக்காகச் செலவிடப்படுகிறது. அதன விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஆண்டு.		அரிசன-பழங்குடியினர் நலனுக்கான மொத்த நிதி ஒதுக்கம்.	அரிசனங்கள்-பழங்குடியினரின் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை.
		(ரூ. இலட்சத்தில்.)	
1977–78	..	1,595·62	905·4(
1978–79	..	1,694·99	1,009·1(

படிப்புதவித் தொகைகள்.

1976–77 ஆம் ஆண்டு இறுதி வரையில், 1 முதல் 9ஆப் வகுப்பு வரையில் படிக்கும் அரிசன-பழங்குடியினர் மாணவா களுக்கும், கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக் கும் (மெட்டிரிக படிப்புக்கு முந்திய படிப்புக்கு) புத்தகச் செவுலக்கும், சிறப்புக் கட்டணங்களுக்கும் படிப்புதவித்

1978 மார்ச் 18]

தொகை பணமாக வழங்கப்பட்டது. தேவையானபோது படிப்புதவித் தொகையுடன் தேர்வுக் கட்டணமும் பணமாகவே வழங்கப்பட்டது. மேற்கூறிய படிப்புதவித் தொகையை வழங்குவதற்கு பெற்றோர்/காப்பாளரின் ஆண்டு உயரளவு வருமான வரையறை ரூ. 3,000 ஆகும். 1977–78 ஆம் ஆண்டிலிருந்து 4 முதல் 11 வகுப்பு வரையில் படிக்கும் அரிசன, கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானத்தைக் கருத்திற் கொண்டு பாராமல் எல்லாப் பாடப் புத்தகங்களையும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. (ஏனெனில் 1 முதல் 3 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்குக் கல்வித் துறை இலவசமாகப் புத்தகங்களையும் பலகைகளையும் வழங்குகிறது.) சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு, மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தைச் செலுத்துவது, தேர்வுக் கட்டணங்களைச் செலுத்துவதும் குறித்த சலுகை, மாணவர்களது பெற்றோரின்/காப்பாளரின் வருமானத்தைப் பாராமலே, அரிசனங்கள், பழங்குடியினர், கிறித்துவர்களாக மாறிய அரிசனங்கள் ஆகியோருக்கு நீட்டிக்கப்பட்டது. இச் சலுகைகள் வழங்கப்படுவதன் மூலம், 4–11 வகுப்பு வரையில் படிக்கும், அரிசன, பழங்குடி, கிறித்துவர்களாக மாறிய மாணவர்கள் 6·50 இலட்சம் பேர் பயனடைவர். இதனைத் தவிர, 6–11 வகுப்பு வரையில் படிப்பவர்களும் பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் இல்லங்களில் தங்கியிருப்பவர்களுமான அரிசன, பழங்குடி, கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்குத் தங்கிப் பயிலுவதற்கான உதவித் தொகையும் தொடர்ந்து வழங்கப்படும்.

மெட்ரிக்குக்குப் பிந்திய வகுப்புகளில் படிக்கும் அரிசன, பழங்குடி மாணவர்களனைவருக்கும் அவர்களது பெற்றோரின் வருவாயைக் கருதிப் பாராமல் படிப்புக் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. இவ்வாறாக, அரிசன, பழங்குடிச் சிறாருக்கு எல்லா நிலைகளிலும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது. பள்ளி இறுதிப் படிப்பு வரையில் இலவசமாகக் கல்வி பெறுவதுடன், இலவசமான எல்லாப் பாடப் புத்தகங்களையும் இம்மாணவர்கள் பெறுவர்.

அரிசன, பழங்குடி வகுப்பைச் சார்ந்த (மதம் மாறியவர்கள் உட்பட) மாணவர்களுக்கு, தங்கிப் பயிலும் படிப்புதவித் தொகை, தங்கிப் பயிலா படிப்புதவித் தொகை, தொடரா இன மானியங்கள் ஆகியவை, பள்ளி இறுதிப் படிப்பிற்குப் பிறகு கலைப் படிப்பு, அறிவியல் படிப்பு, தொழிற் படிப்புக்குத் தொடர்ந்து வழங்கப்படும். 1976–77, 1977-78 (31-12-77

[1978 மார்ச் 18

வரை) ஆகிய ஆண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட படிப்புதவித் தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	தமிழ்நாடு அரசு படிப்புதவித் தொகை.			இந்திய அரசு படிப்புதவித் தொகை. (மத்திய அரசு உதவி சிறிதளவுடன்.)	
ஆண்டு.	பள்ளியில் பயில்வோர்.	கல்லூரியில் பயில்வோர்.	தொகை. (ரூ. இலட்சத்தில்)	கல்லூரியில் பயில்வோர்.	தொகை. (ரூ. இலட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			அரிசன மாணவர்கள்		
1976-77	513,032	4,973	1.07·19	16,682	1,35·57
1977-78 (31-12-77 வரை)		3,573	14·00	16,357	1,24·32
			பழங்குடி மாணவர்கள்		
1976-77	2,329	..	0·29	177	1·46
1977-78 (31-12-77 வரை)	..	..	..	203	1·61

மெட்ரிக்குக்கு முந்திய படிப்புதவித் தொகைக்குப் பதிலாக பாடப் புத்தகங்கள் வழங்குவதற்கான புதிய திட்டங்கள் 1977–78 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்டன. 1977–78ல் மெட்ரிக்குக்கு முந்திய வகுப்புகளில் படிக்கும் 3,200 அரிசன, பழங்குடி, மதம் மாறிய அரிசன மாணவர்களுக்குத் தங்கிப் பயிலும் படிப்புதவித் தொகை வழங்குவதற்கும், தோராயமாக 6 இலட்சம் அரிசன, பழங்குடி, மதம் மாறிய அரிசன மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்குவதற்கும் 31–12–1977 வரையில் ரூ. 12·91 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

குறிப்பு—(1) இந்திய அரசுப் படிப்புதவித் தொகை திட்டத்தின்கீழ் 1973–74 ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட செலவின் அளவுக்கு மேற்பட்ட செலவுத் தொகையை மட்டுமே இந்திய அரசு தருகிறது. எஞ்சிய தொகை, பொறுப்பேற்ற செலவாக மாநில அரசால் ஏற்கப்படுகிறது.

1978 மார்ச் 18]

(2) இந்திய அரசு, பல்வேறு பாடமுறைகளில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கும் வாழ்க்கைப்படி வீதத்தை 1974–75லிருந்து உயர்த்தியுள்ளது. இந்திய அரசு, ஆண்டு வருமான வரம்பை ரூ. 6,000-லிருந்து ரூ. 9,000-ஆக உயர்த்தியுள்ளது. மாநில அரசின் படிப்புதவித் தொகை பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களுக்கான ஆண்டு வருமானம் குறைந்த அளவு ரூ. 3,000 ஆகும்.

(3) புத்த மதத்திற்கு மாறிய அரிசன மாணவர்களும் இந்திய அரசுப் படிப்புதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

நூலக அறிவியல், உடற்பயிற்சிக் கல்வி ஆகிய பட்டப் படிப்புகளுக்கும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது.

கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு வழக்கமாக அளிக்கப்படுகின்ற படிப்புதவித் தொகையுடன் ''காந்தியடிகள் நினைவு சிறப்புக் கல்வி உதவித் தொகை'' தனிப்பட்ட முறையில் செயலூக்கம் அளிக்கின்றது.

பழங்குடியினர், அரிசனங்கள், கிறிஸ்தவர்களாக மதம் மாறிய அரிசனங்கள் ஆகியோரின் பயனுக்காக, தகுதி-வழி வகைப் பரிசுத் திட்டம் ஒன்று '' காந்தி நினைவுப் பரிசுத் '' திட்டத்தை யொட்டி 1976-77-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

வேலையை நோக்கமாகக் கொண்ட செலவு-பணி கணக்கர் பாடமுறையில் பயின்று வரும் அரிசனங்கள், பழங்குடி வகுப்பைச் சேர்ந்த 80 மாணவர்களுக்கு 1976–77 ஆம் ஆண்டிலிருந்து படிப்பு உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

செயலாக்கத் திட்டம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் அரிசன மாணவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்கள் கல்லூரிக் கல்வியைத் தொடருவதற்கு உதவி செய்யப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு 80 ரூபாய் சிறப்புக் கல்வி உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. அம்

[1978 மார்ச் 18

மாணவர்கள், மாணவர்கள் இல்லத்தில் தங்க வேண்டுமென்ற நிபந்தனையோ வருமான வரையறையோ இத்திட்டத்தின் கீழ் இல்லை.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண்களும் அதற்கு அதிகமாகவும் பெற்றுள்ள அரிசன/பழங்குடியினர் கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய அரிசன மாணவர் ஒவ்வொருவருக்கும் தகுதி மானியமாக 300 ரூபாய் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இதே போல், புகுமுக வகுப்புத் தேர்வில் முதல் வகுப்பில் தேறிய அரிசன/பழங்குடி கிறித்துவ மதத்திற்கு மாறிய அரிசன மாணவர்களுக்கு ரொக்க மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. 1977-ம் ஆண்டு மார்ச்/ஏப்ரல் தேர்வுகளில் 60 சதவீதத்திற்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்று பள்ளியிறுதியாண்டுத் தேர்வு பெற்ற மற்றும் புகுமுக வகுப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெற்ற 2,450 மாணவர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளார்கள்.

பொறியியல், வேளாண்மை, மருத்துவம் முதலிய தொழிற் கல்வி கற்கும் மாணவர்கள் அவர்களுக்கு அளிக்கப்படும் படிப்புதவித் தொகையைவிட அதிகமான தொகை செலவிட வேண்டியுள்ளது. எனவே, அரசு உரிய முறையில் ஆய்வு செய்த பிறகு, நிதியுதவி தேவையான மாணவர்களுக்குக் கடன்வழங்குமாறு ஆணை பிறப்பித்துள்ளது. பட்டக் கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டம் 1974–75 ஆம் ஆண்டிலிருந்து நீட்டிக்கப்பட்டது.

1978–79 ஆம் ஆண்டில் அரிசனங்களுக்கு வழங்கப்படுவதற்காக 11 இலட்சம் ரூபாயும், கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய அரிசன மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்காக 1·22 இலட்சம் ரூபாயும் வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், 1977–78ஆம் ஆண்டில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ், திறந்த கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள அரிசனங்கள், பழங்குடியினர் அல்லாத வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்திய படிப்பைக் கற்பதற்காக வழங்கப்படுவதற்கு 60 படிப்புதவித் தொகைகளை மத்திய அரசு இம் மாநிலத்திற்கு ஒதுக்கியது. இத்திட்டம் 1978–79 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அதற்காக 1·91 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1978 மார்ச் 18]

அரிசன-பழங்குடியினர் நலப் பள்ளிகள்—

(அ) அரிசனங்கள்—இம் மாநிலத்தில் அரிசன நலப் பள்ளிகள் 942 உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

(1) தொடக்கப்பள்ளிகள்	..	741
(2) நடுத்தர பள்ளிகள்	..	80
(3) உயர்நிலைப் பள்ளிகள்	..	21
(4) ஒற்றை ஆசிரியர் பள்ளிகள்	..	100
மொத்தம்	..	942

இப்பள்ளிகளில் அரிசன, பழங்குடியினர் ஏனைய வகுப்பைச் சேர்ந்த சுமார் 1·36 இலட்சம் மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் பாலவாக்கத்திலுள்ள தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளியாக 1977-78 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டது.

(ஆ) பழங்குடியினர்—பழங்குடியினருக்காக தங்கிப் பயிலும் பள்ளிகள் 85 உள்ளன. இவை அரிசன-பழங்குடியினர் நலத் துறையின் நிர்வாகத்தின்கீழ் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

தொடக்கப் பள்ளிகள்	..	..	71
நடுத்தரப் பள்ளிகள்	..	..	1[illegible]
உயர்நிலைப் பள்ளிகள்	..	..	4
மொத்தம்		..	85

மேற்சொன்ன பள்ளி விவரத்தில் 1977–78 ஆம் ஆண்டில் தென் ஆற்காடு மாவட்டம் (3), தருமபுரி மாவட்டம் (2), கோயம்புத்தூர் மாவட்டம்(1), திருச்சிராப்பள்ளி மாவட்டம் (1) ஆகிய இந்த மாவட்டங்களில் திறக்கப்பட்ட பழங்குடியினர் தங்கிப் பயிலும் 7 பள்ளிகளும் அடங்கும். வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் உள்ள அரசினர் பழங்குடியினர் தங்கிப் பயிலும் நடுத்தரப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 18

85 பள்ளிகளோடு, மதுரை மாவட்டம் மஞ்சப் பரப்பில்
அரிசனங்கள் நலத்திற்காக உள்ள தங்கிப் பயிலும் வசதி
இல்லாத பள்ளி ஒன்றும் உள்ளது.

பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளிகள் சிலவற்றை
மேலும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரிசன நல உயர்நிலைப் பள்ளிகள், நான்கு பழங்குடியினர்
தங்கிப் பயிலும் அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்று ஆகிய
இவற்றிற்கு ஆய்வுக்கூட வசதிகள் 1977–78-ம் ஆண்டில்
செய்து கொடுக்கப்பட்டன. இதேபோல், அரிசன நல உயர்
நிலைப் பள்ளிகள் ஐந்திற்கு ஆய்வுக்கூட வசதிகளை 1978–79
ஆம் ஆண்டில் செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
அதற்காக 2·60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்
பட்டுள்ளது.

ஒவ்வொரு பள்ளிக்கும் 1,000 ரூபாய் செலவில் அரிசன
நலப்பள்ளிகள் 21-க்கும் பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகள்
மூன்றிற்கும் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.
இதற்காக, 1978–79 ஆம் ஆண்டில் 24,000 ரூபாய் நிதி
ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

அரிசன நலப் பள்ளிகளில் கூடுதல் வசதிகள் – அரிசன
நலப் பள்ளிகள் அமைந்துள்ள அரசுக் கட்டிடங்களைப் பரா
மரிக்கவும் புதிய கட்டிடங்களைக் கட்டவும் 1978–79 ஆம்
ஆண்டிற்கு 13·50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
இதோடு, ஒவ்வொன்றும் 4 இலட்சம் ரூபாய் செலவில்
திருநெல்வேலி மாவட்டம், நல்லம்மாள்புரத்திலுள்ள அரிசன
நலப் பள்ளி, வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணத்திலுள்ள
அரிசன நலப் பள்ளி ஆகியவற்றிற்கான கட்டிடங்களைக் கட்ட
1978–79 ஆம் ஆண்டில் 8 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம்
செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு உடைகள் வழங்குதல்—அரிசன நலப்
பள்ளிகளில் அல்லது அரசினர் மாணவிகள் இல்லங்களில்
தங்கிப் பயிலும் மாணவிகள் அனைவருக்கும் ஒவ்வோர் ஆண்
டும் இரண்டு ஜோடி உடைகள் வழங்கப்படுகின்றன.

4 முதல் 11 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலும்
மாணவர்கள் அனைவருக்கும் அரசினர் அரிசன நல மாணவர்
கள் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும் ஒவ்
வோர் ஆண்டும் இரண்டு ஜோடி உடைகள் வழங்கப்படு
கின்றன.

1978 மார்ச் 18]

பாலர் பள்ளிகள்—அரிசன குடியிருப்புப் பகுதிகளில்
50 பாலர் பள்ளிகளை ஏற்படுத்த அரசு 1977–78 ஆம் ஆண்
டில் ஆணை பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு பாலர் பள்ளி
யிலும் 70 குழந்தைகள் இருப்பர். தங்களது குழந்தைகளைப்
பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து வேலை பார்க்கும் பெண்களை
விடுவிப்பது, வளர்ந்து வரும் பருவத்தில் அவர்களுக்குச் சுகா
தாரப் பழக்க வழக்கங்களைக் கற்பிப்பது, பள்ளிகளிலிருந்து
இடையே நின்று விடுவதைத் தடுக்கும் பொருட்டு, அக்
குழந்தைகளிடையே பள்ளி செல்லும் பழக்கத்தை ஏற்படுத்
துவது ஆகியவையே பாலர் பள்ளிகளை ஏற்படுத்துவதன்
நோக்கமாகும். வளர்ந்து வரும் பருவத்தில் குழந்தை
களுக்குச் சரிவிகித உணவு அளிப்பதற்கும் இது வழிவகுக்கும்.
1978–79 ஆம் ஆண்டில் மேலும் 50 பாலர் பள்ளிகளை அரிசன
குடியிருப்புப் பகுதிகளில் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்
ளது. இதற்காக, 4·88 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம்
செய்யப்பட்டுள்ளது.

கல்விச் சுற்றுலா—மாணவர்கள் தங்களது பொது
அறிவை வளர்த்துக் கொள்வதற்கு வசதி அளிக்கும்
வண்ணம் அரிசன-பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்
களை முக்கியமான இடங்களுக்குக் கல்விச் சுற்றுலாவில் அழைத்
துச் செல்வதற்கான திட்டம் 1969–70 ஆம் ஆண்டிலிருந்து
செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலிருந்
தும் 40 மாணவர்களைக் கல்விச் சுற்றுலாவில் அழைத்துச்
செல்வதற்கு 1977–78 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்
டும் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதற்காக 1978-79 ஆம்
ஆண்டிற்கு அரிசன. பழங்குடி மாணவர்களுக்காக 23,000
ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டுப் பொருள்களை வழங்குதல்—விளையாட்டுப்
பொருட்களை வாங்குவதற்காக ஒவ்வொரு பள்ளிக்கும் 1,000
ரூபாய் என்ற வீதத்தில் அரிசன நல உயர்நிலைப் பள்ளிகள்
இருபத்தி நான்கிற்குத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

நண்பகல் உணவு—அரிசன நலப் பள்ளிகளில் பயிலும்
மாணவர்களுக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது.
மாணவர்கள் பள்ளிக்குத் தவறாது வருகை தர அவர்களை
ஊக்குவிப்பதும், வருமானத்தை உயர்த்துவதற்கு
மாணவர்களை அவர்களது பெற்றோர் வேலை பார்க்க
அழைத்துச் செல்வதைத் தவிர்ப்பதும் நண்பகல் உணவு
அளிப்பதன் நோக்கமாகும்.

[1978 மார்ச் 18

"கேர்" நிறுவனத் திட்டத்தின்கீழ் கல்வித்துறை ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 90 கிராம் உணவு தானியங்கள், 6 கிராம் எண்ணெய் ஆகியவற்றை ஒரு கல்வியாண்டில் 100 நாட்களுக்கு வழங்கி வருகிறது. எஞ்சியுள்ள 120 நாட்களுக்கு உணவுப் பொருள் வழங்கு கழகத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படும் அரிசியைக் கொண்டு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது.

தற்போது வழங்கப்பட்டு வரும் நண்பகல் உணவின் அளவு பின்வருமாறு :—

80 கிராம் அரிசி	0·15 காசு.
சுவையூட்டும் பொருட்கள் காய்/கறிகள்	0·5½ காசு.
எரிபொருள்	0·1½ காசு.
மொத்தம் ..	0·22 காசு.

'கேர்' நிறுவனம் வழங்கும் உணவுக்கான செலவு 0·29 காசு ஆகும். அதன் விவரம் பின்வருமாறு :—

90 கிராம் உணவு தானியங்கள்.	0·21½ காசு.
6 கிராம் எண்ணெய் ..	0·4½ காசு.
சுவையூட்டும் பொருட்கள்—எரிபொருள்	0·3½ காசு.
மொத்தம் ..	0·29½ காசு.

அரிசன நலப் பள்ளிகள் 942-க்கு நண்பகல் உணவு வழங்குவதற்காக 1978–79ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 40·90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பயிலும் மாணவர்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கும், அரிசனம் அல்லாதோர் நலப் பள்ளிகள் சுமார் 350ல் அரிசனக் குழந்தைகளுக்கு நண்பகல் உணவு அளிக்கும் பொறுப்பு சென்னைப் பள்ளிக் கல்வி இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 18]

மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், எழுதுப் பொருள்களை வழங்குதல்—இம் மாநிலத்தில் அரிசனங்களுக்காகவும் பழங்குடியினருக்காகவும் 1,028 பள்ளிகளை இத்துறை நடத்தி வருகிறது. இக் கல்வியாண்டில் அரிசன-பழங்குடியினர் நலப் பள்ளிகள் திறக்கப்பட்ட பிறகு மாணவர்களுக்கு அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் அதனைக் கருதி பாராது அவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுக்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1977–78 ஆம் ஆண்டில் 1,48,125 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக, 1978–79 ஆம் ஆண்டிற்கு 17·66 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான இல்லங்கள்— அரிசன பழங்குடியினர் நல பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்குச் சம வெளிகளில் 10,000 ரூபாய் செலவிலும் மலைப் பகுதிகளில் 11,500 ரூபாய் செலவிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதற்காக 1978–79 ஆம் ஆண்டிற்கு 2·54 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தட்டச்சு-சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம்—தட்டச்சு-சுருக்கெழுத்துக் கல்வியில் போதிய அளவு எண்ணிக்கையில் அரிசன பழங்குடி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பெறவில்லையாதலால் மேற்சொன்ன பதவிகளுக்கு அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பதவிகள் நிரப்பப்பட இயலவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, அரிசன-பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தட்டச்சு-சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இதைக் கருத்திற் கொண்டு, தனியார் வணிக நிறுவனங்களில் அரிசன மாணவர்களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்தது. இத்திட்டத்தின்படி 900 மாணவர்களுக்குத் தட்டச்சு பாடமுறையிலும், 450 மாணவர்களுக்குச் சுருக்கெழுத்துப் பாடமுறையிலும் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக 1978–79-ல் ரூ. 2·54 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேர்வில் தவறிய மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்—அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 11 வரை வகுப்புகளில் தவறிய மாணவர்களுக்கு (அரிசன பழங்குடி மாணவர்களுக்கு) இலவசமாகப் பயிற்சி அளிக்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பட்டயக் கணக்கர் பாடமுறை— அரிசன மாணவர்கள் தங்களது வாழ்க்கை நிலையை வளப்படுத்திக்கொள்ள 11 பட்டயக் கணக்கர்கபாடமுறையைப் பயில உதவுவதற்காக அரசு திட்டம் ஒன்றிற்கு அனுமதித்துள்ளது. தொடக்கத்தில் இத்திட்டம் சென்னை மாநகரில் சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. 1975–76-ல் பட்டயக் கணக்குப் பாடமுறையில் இரண்டு மாணவர்கள் பயிற்சி பெற்றனர்.

சட்ட பட்டதாரிகளுக்கு நிதி உதவி— சட்டத் தொழிலை மேற்கொள்ள அரிசன பழங்குடியினரிடையே உள்ள சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு நிதியுதவி அளிக்கும் முக்கியத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சட்டத்தொழிலை மேற்கொள்ள விரும்புகிற 5 சட்டப் பட்டதாரிகளுக்கு (அரிசனங்கள், பழங்குடியினர்) 1974–75 முதல் அரசு கீழ்க்கண்ட நிதி உதவியை அளிக்கிறது:—

(1) வழக்குரைஞராகப் பதிவுசெய்து கொள்வதற்கான கட்டணம், வழக்குரைஞர்கள் அறைக்கான வாடகைக் கட்டணம் முதலியவை குறித்து ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 கடன்.

(2) புத்தகங்கள் மரச் சாமான்கள் முதலியவை வாங்க ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 500 உதவித் தொகை.

இத்திட்டத்தின்கீழ் 1977–78-ல் 5 பட்டதாரிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரி மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சித் திட்டம்— கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம் போன்ற பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் பொருட்டு மாணவர்களுக்காக ஒரு நிலையமும் மாணவிகளுக்காக ஒரு நிலையமும் ஆக இரண்டு நிலையங்கள் இரண்டு மாதங்களுக்குச் செயல்பட்டன. இந்தவசதி மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கும் நீடிக்கப்பட்டது. 1976–77-ல் 189 கல்லூரிகள் அனைத்திற்கும் இந்தப் பயிற்சி வசதி 3 மாதங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இப் பயிற்சிக்காக கால அளவில் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ. 1,000 ஒரு மொத்தத் தொகை கொடுக்கப்படும். 1977–78 லும் இத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக 1978–79ஆம் ஆண்டில் ரூ. 1·00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வித் தகுதியில் மேம்பாடுள்ள மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் சிறப்புப் பயிற்சி—நான்கு நிலையங்களில் (அதாவது சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்) நிகரற்ற கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ள அரிசன பழங்குடி மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் உயர்ந்த தரமுடைய சிறப்புப் பயிற்சி இத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டு வருகிறது. இச் செலவில் பாதியை பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை ஏற்றுக் கொள்கிறது.

மாணவர் இல்லங்கள்— பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சி பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. தேவை, நிதிவாயில்களின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் புதிய மாணவரில்லங்கள் திறக்கப்படுகின்றன. தனியார் மாணவர் இல்லங்களும் அரசினுல் ஒவ்வோராண்டும் படிப்படியாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள அரிசன பழங்குடி மக்கள் நல மாணவர் இல்லங்களில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

	சதவிதம்.
அரிசன மாணவரில்லங்கள்—	
அரிசனங்கள், பழங்குடியினர்-பின்தங்கிய வகுப்பினர்	75
பின்தங்கிய வகுப்பினர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் ..	20
முன்னிலை வகுப்பினர்	5
பழங்குடியினர் மாணவர் இல்லங்கள்—	
பழங்குடியினர்	60
அரிசனங்கள்	30
பின்னிலை வகுப்பினரும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினரும்.	10

அரிசனங்களுக்கென்று 602 மாணவர் இல்லங்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 37,829 மாணவர்கள் உள்ளனர். 1978–79-ல் மாணவர்களுக்காக 11 உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களையும், மாணவிகளுக்காக 2 உயர்நிலைப் பள்ளி மாணவியர் இல்லங்களையும், கல்லூரி மாணவர் இல்லம் ஒன்றையும் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. உதவி பெறும் மாணவர் இல்லங்கள் இரண்டினை எடுத்துக் கொள்ளவும் கருதப்ப்ட்டுள்ளது. பழங்குடியினரைப் பொறுந்தவரை 19 இல்லங்கள் உள்ளன. இதில் மொத்தம் 790 மாணவர்கள் உள்ளனர்.

புதிய இல்லங்களைத் தொடங்கவும், ஐந்தாவது திட்டக் கால அளவில் தொடங்கப்பட்ட இல்லங்களைப் பராமரிக்கவும் 1978–79–ல் ரூ. 26.27 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிய (31–3–1974 வரை) ஆரம்பிக்கப்பட்ட மாணவ விடுதிகள் பராமரிப்பதற்காக 1978–79ஆம் ஆண்டில் ரூபாய் 212.76 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

அரிசனங்களுக்காகவும் பழங்குடியினருக்காகவும் உள்ள அரசினர் இல்லங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்கள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

மாணவர் இல்ல வகை.	மாதம் ஒன்றுக்கு ஆகும் கட்டணம் ரூபாய்.
1. சென்னை மாநகரில் உள்ள அரசுக் கல்லூரி மாணவர் மாணவியர் இல்லங்கள், தொழிற்பயிற்சி இல்லங்கள் ..	80
2. வெளியூர்களில் கல்லூரி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள்	65
3. வெளியூர்களில் தொழிற் பயிற்சி மாணவர்களுக்கான இல்லங்கள் ..	55
4. உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள்	40

சென்னை மாநகரில் கல்லூரி மாணவர்/மாணவியர்களுக்கான அரசினர் இல்லங்கள் தங்கியுள்ளவர்களுக்குரிய உணவுக் கட்டணங்களை மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ. 60 லிருந்து ரூ. 80 ஆகவும், வெளியூர்களில் இந்தக் கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு 50 ரூபாயிலிருந்து 65 ரூபாயாகவும் அரசு உயர்த்தியுள்ளது. உயர்நிலைப் பள்ளி மாணவர்/மாணவியர்களுக்கான அரசினர் இல்லங்களில் தங்கியுள்ளவர்களுக்கான உணவுக் கட்டணங்களை மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு 36 ரூபாயிலிருந்து 40 ரூபாயாகவும் உயர்த்தியுள்ளது.

மாணவர் இல்லங்களில் உள்ள மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டு விலைகளில் இன்றியமையாத பொருள்களை வழங்குதல்.—இத்துறை 706 இல்லங்களை (அரிசனங்களுக்காக 602, பழங்குடியினருக்கு இல்லத்துடனான பள்ளிகள் 85, பழங்குடியினருக்காக 19 இல்லங்கள்) நடத்தி வருகின்றது. இந்த இல்லங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் இன்றியமையாத பொருள்கள் கட்டுப்பாடான விலைகளில் உணவுப் பொருள் வழங்கல் கழகம் மூலமாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கப்படுகின்றன.

மாணவர் இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல்—621 மாணவர் இல்லங்களில் (அதாவது 602 அரிசனங்களுக்கானது, 19 பழங்குடியினருக்கானது) 100 இல்லங்கள் (89 அரிசனங்களுக்கானது, 11 பழங்குடியினருக்கானது) அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. அரிசனங்கள் பழங்குடியினருக்காக இல்லங்களைக் கட்டும் பணியை அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது. 15–2–78 முடிய 33 மாணவர் இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மாணவர் இல்லக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக 1978–79ல் ரூ. 60.53 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் பத்துகாணியில் பழங்குடியினர் (மாணவியர்) அரசு இல்லத்தைக் கட்டுவது குறித்து மாநில அரசுக்கும் இந்திய அரசுக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

பகுதி நேர சிற்றாசிரியர்கள்—மாணவர் இல்லத்தில் தங்கியுள்ளவர்கள் நன்கு படித்துத் தேர்வில் தேர்ச்சி அடையும் பொருட்டு, அரிசனங்களுக்கான உயர்நிலைப் பள்ளி அரசு இல்லங்களில் பகுதி நேர சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். 248 பகுதி நேர சிற்றாசிரியர் பதவிகள் உள்ளன. அக்டோபர் முதல் நாள் தொடங்கி ஓர் ஆண்டில் ஆறு மாதங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவர். பத்தாவது, பதினோராவது வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 15க்கும் அதற்கு மேற்பட்டும் உள்ள உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்களில் பகுதி நேர சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். 248 பகுதி நேர சிற்றாசிரியர்கள் பதவிகள் தவிர கல்லூரி மாணவர்கள் இல்லங்களுக்காக 3 பகுதி நேர சிற்றாசிரியர்கள் பதவிகளும் சிதம்பரத்தில் உள்ள நந்தனார் அரசு மாணவர்-மாணவியர் இல்லங்களுக்காக ஐந்து பதவிகளும் உள்ளன.

[1978 மார்ச் 18

தனியார் இல்லங்களுக்கான உதவித் தொகை—மேலே குறிப்பிடப்பட்ட 706 அரசு இல்லங்கள் தவிர, தொண்டு நிறுவனங்கள் நடத்தும் 42 உதவித் தொகை பெறும் இல்லங்களும் உள்ளன. ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 என்ற வீதத்தில் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. அதேபோல பழங்குடியினருக்காகத் தொண்டு நிறுவனங்கள், மாணவரில்லத்துடனை பழங்குடியினர் பள்ளிகள் நான்கினையும் நடத்தி வருகின்றன. தனியாரால் நிர்வகிக்கப்படும் இந்தப் பள்ளிகளுக்கான மாணவர் இல்ல மானியம் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 25 ரூபாயிலிருந்து 36 ரூபாயாக 1977 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23-ம் நாள் முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக 1978–79ல் ரூ. 6.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

II. வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும்–உழவு மாடுகள் வாங்கவும், பாசனக் கிணறுகள் தோண்டவும் உதவித் தொகை—அரிசனங்கள், பழங்குடியினரின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் பொருட்டு உழவுமாடுகள், விதைகள், பிற வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் 600 ரூபாய் என்ற வீதத்தில் உதவித்தொகை அளிப்பதன் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. அதேபோல பாசனக் கிணறுகளை வெட்டுவதற்காக கிணறு ஒன்றுக்கு ரூ. 2,500 என்ற வீதத்தில் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. 1978–79 ல் இதற்காக அரிசனங்களுக்கு ரூ. 6.68 இலட்சமும், பழங்குடியினருக்காக ரூ. 1.40 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை தவிர, இதே காரியத்திற்காக கிறிஸ்தவர்களாக மாறிய அரிசனங்களுக்கு ரூ. 0·96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கொல்லிக்கரைப் பகுதியில் காப்பிக் கொட்டை விளைச்சலைப் பெருக்க பழங்குடி மக்களுக்கு ரூ. 0.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தோட்டக் கலை—சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லிமலை, சின்னக் கல்ராயன்மலை, பெரிய கல்ராயன்மலை ஆகிய இடங்களில் (தோட்டக்கலையை மேம்படுத்துவதற்கு இந்த இடங்களின் சீதோஷ்ண நிலை சாதகமாக உள்ளது) வாழும் பழங்குடி மக்களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு, சென்னை வேளாண்மை இயக்குநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ்த் திட்டம் ஒன்று 1960 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு அரிசன நல–பழங்குடியினர் நல நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி பழங்கள், காய்கறிகள்

1978 மார்ச் 18]

முதலியவற்றை வெற்றிகரமாகவும் ஆதாயம் தரத்தக்க வகையிலும் வளர்ப்பதற்காக பழங்குடியினருக்கு நடைமுறை ஆலோசனை, அறிவுரை, தொழில்நுட்ப அறிவு ஆகியவை அளிக்கப்படுகின்றன. பழங்கள், நறுமணப் பொருள்கள், காய்கறிகள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கானப் பொருள்கள் அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. இதுவரை இத்திட்டத்தின்கீழ் சுமார் 7,013.56 ஏக்கர்கள் பரப்பளவில் இவை பயரிடப்பட்டுள்ளன. இதற்காக 1978–79-ல் ரூபாய் 2.49 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கருவிகள் இலவசமாக வழங்குதல்—கருமார், தச்சர், தையல் கலைஞர் மற்றும் ஏனைய 18 வணிகங்களில் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற அரிசனங்கள், பழங் குடியினர்கள், கிறித்துவர்களாக மாறிய அரிசனங்கள் ஆகியவர்களுக்கு கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 1978–79-ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 3.63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறு வணிகக் கடன்—சைக்கிள் கடைகள், ஹோட்டல்கள் (சிற்றுண்டிச்சாலைகள்), மளிகைக்கடைகள் முதலியன போன்ற முப்பது (30) தொழில்களை நடத்துவதற்காக அரிசனங்களுக்குச் சிறு வணிகக் கடன் வழங்கும் திட்டம் தொடர்ந்து 1968–69-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடன் வரம்பு, வணிகத் தன்மையினைப் பொறுத்து ரூ. 125-லிருந்து ரூ. 15,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

1978–79-ம் ஆண்டில் அரிசனங்களுக்காக ரூ. 10.00 இலட்சமும், கிறித்துவர்களாக மாறிய அரிசனங்களுக்காக ரூ. 1.25 இலட்சமும், பழங்குடியினருக்காக ரூ. 0.40 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நிலையங்கள்— வேலை வாய்ப்பு பயிற்சித்துறையிலிருந்து மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் வாங்கிப் பயிற்சி பெறும் அரிசன வகுப்பினர்களுக்கு அரிசன நல நிதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 20 கூடுதலாக உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய அரிசன மாணவர் அனைவருக்கும் ரூ. 45 உதவித் தொகையும், பழங்குடி மாணவர்களுக்கு 82.50 ரூபாயும் வழங்கப்படுகின்றன. இத்தொகை அரிசன நல நிதியிலிருந்து சரிக்கட்டப்படுகிறது. 1978–79-ம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 10.50 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சென்னை வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.

[1978 மார்ச் 18

வானொலி–தொலைக்காட்சி இயந்திரவியல் பயிற்சி— சென்னை மாநகரத்தில் உள்ள அரிசனங்கள் அரிசன பழங்குடி வகுப்பைச் சேர்ந்த பெண்கள் 20 பேர்களுக்கு 1978–79-ம் ஆண்டில் வானொலி–தொலைக்காட்சி இயந்திரவியல் பயிற்சி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

கூட்டுறவு—(அ) அரிசனங்கள்—தொழில் துறையில்; அரிசனங்கள் விரைந்து முன்னேற குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், பயிற்சி-உற்பத்தி நிலையங்கள், பணி நிலையங்கள் பலவற்றை அரசு நிறுவியுள்ளது. இத்துறையில் போதிய தொழில் நுட்ப அறிவைப் பெற்றுள்ள தொழில்-வணிக இயக்குநர், சமூகநலத் துறை இயக்குநர், கைத்தறி துணி இயக்குநர், தமிழ்நாடு கதர்-கிராம-தொழில்கள் வாரியம் ஆகியவர்களால் நடத்தப்படுகின்றன. இந்த நிலையங்களையும், சங்கங்களையும் நடத்துவதற்குத் தேவையான தொகை அரிசன பழங்குடியினர் நலத்துறையால் ஏற்கப்படுகிறது.

(ஆ) பழங்குடியினர்—சுரண்டல்காரர்களின் பிடியிலிருந்து அரிசனங்களை விடுவிக்கும் பொருட்டும், அவர்களின் காடுபடு பொருள்களை விற்பனை செய்து தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டும், இம்மாநிலத்தில், பழங்குடியினருக்காக ஏழு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களையும் ஏழு வனத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களையும், ஆறு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

நிதியுதவி அளிக்கும் நிறுவனங்களின் மூலம் நியாயமான வட்டி வீதத்தில் அரிசனங்களுக்கு மாற்றுக் கடன் வசதி அளிக்கும் பொருட்டு பழங்குடியினர் வாழும் பகுதிகளில் ஏழு பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பெரிய அளவிலான இந்தப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்திக்கான கடன் வசதிகள் மட்டுமன்றி நுகர்வோர் கடன் வசதிகளையும் அளிக்கின்றன. வேளாண்மை பயிரிடு பொருட்களை வழங்குவது குறித்து அளிக்கப்பட்ட உதவித் தொகை சரிக்கட்டுவதற்கும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

1978 மார்ச் 18]

பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்.— வாக உள்ள காலங்களில், ஏழை அரிசன மக்களுக்கு உதவி செய்தலையும், வேலை வாய்ப்பளித்தலையும் நோக்கமாகக் கொண்டு பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களில் அரிசன உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு கால்நடைக்கு ரூ. 1,500 என்ற வீதத்தில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. அவர், ஒவ்வொரு கால்நடைக்கும் அரிசன நல நிதியிலிருந்து ரூ. 500 உதவித் தொகையும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியிடமிருந்து ரூ. 1,000 கடனும் பெறத் தகுதியுடையவராவர். ஒவ்வொருவரும் இரண்டு கால்நடைகள் மட்டுமே வாங்க மேற்கூறிய உதவித் தொகையைப் பெற தகுதியுடையவராவார். இந்நோக்கத்திற்காக 1978–79-ம் ஆண்டில் அரிசனங்களுக்கும், கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய அரிசனங்களுக்கும் ரூ. 10.41 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் வீட்டு வசதியும் கல்விச் சலுகைகளும் அளித்துவிடுவதால் மட்டும், அவர்கள் நலனைக் கட்டிக்காத்ததாக ஆகிவிடாது. அவர்களுடைய பொருளாதார நிலை, குறிப்பாகக் கிராமங்களில் மேம்படுத்தப்பட்டால்தான் நிலையான முன்னேற்றம் ஏற்படுவதற்கு அடிப்படை அமையும். இந்த அணுகுமுறை கடந்த காலத்தில் பின்பற்றப்படவில்லை. அரிசன மக்களுக்கு வருமானத்திற்கு உத்தரவாதம் அளிக்கிற பொருளாதாரத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளைக் கணிசமாக உயர்த்துவது நமது கொள்கையாகும். உழவு மாடுகள், கறவை மாடுகள் வழங்குவது, பாசனக் கிணறுகள் தோண்டுவது, குடிசைத் தொழில்கள் தொடங்குவது, வியாபாரக் கடன்கள் அளிப்பது, கைத்திறப் பணியாளர்களுக்குக் கருவிகள் வழங்குவது முதலான பல்வேறு பொருளாதாரத் திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இத் திட்டங்கள் விரிவுபடுத்துவதற்காக இத்தொகையை அடிப்படை மூலதனமாகக் கொண்டு, மேற்கொண்டும் தேவைப்படுகிற நிதி வசதி வங்கிகளிடமிருந்து 1.5 கோடி ரூபாய் முதல் 2 கோடி ரூபாய் அளவுக்கு வரும் ஆண்டில் பெறப்படும்.

பயிற்சியும் வேலைவாய்ப்பும்— தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு தேர்விற்குப் பயிற்சியளித்தல்.— அரிசனங்கள், பழங்குடியினர், மதம் மாறிய அரிசன வகுப்பைசேர்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கும்

நோக்கத்துடன், ஒவ்வோராண்டும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி 4 பணிக்கான போட்டித் தேர்வு எழுத விண்ணப்பித்துள்ளவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொகுதி 4 பணிக்கான போட்டித் தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் 5 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ. 45 உதவித் தொகை அளிக்கப்பட்டது. 1976—77-ம் ஆண்டு வரை இம்மாநிலத்தில் 15 நிலையங்கள் செயல்பட்டன. 1977-ம் ஆண்டுக்கான தொகுதி 4 பணிக்கான தேர்வினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தாததால், இத்திட்டம், 1977—78-ம் ஆண்டில் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் 1978—79-ம் ஆண்டிற்கு ரூ. 1.55 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அகில இந்தியப் பணிகளுக்கான போட்டித்தேர்வுகள் எழுத அரிசன பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு தேர்விற்கு முன்பு பயிற்சி அளிக்கும் நிலையம்.—ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். போன்ற அகில இந்திய பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத அரிசன பழங்குடி மாணவர்களுக்கு தேர்விற்கு முன்பு பயிற்சியளிக்கும் நிலையம் 1977—78-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்பட்டது. இப்பயிற்சிக்கு இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்நிலையத்துடன் இணைக்கப்பட்ட மாணவர் இல்லம் ஒன்றும் உள்ளது. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றிற்கு உணவுக் கட்டணத்திற்காக ரூ. 100 உதவித் தொகை வழங்கப்படுகிறது. அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளில் தேறிய ஒவ்வொருவருக்கும் வழங்குவதற்காக ரூ. 1,000 மானியம் அளிக்கப்படுகிறது. 1977-ம் ஆண்டில் இந்நிலையத்திலிருந்து 38 மாணவர்கள் தேர்வு எழுதினர். தேர்விற்கான முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

III. பொதுச்சுகாதாரமும், வீட்டு வசதியும்—வீட்டு மனை :—எங்கெங்கெல்லாம் அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் இந்த நிலங்கள் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக, அரிசனங்களுக்கு வீட்டுமனைகளாக ஒப்படை செய்யப்படுகின்றன. அரசு நிலங்கள் இல்லாத போது தனியார் நிலங்கள், 1894-ம் ஆண்டு நிலங்களைக் கையகப்படுத்துதல் சட்டத்தின்கீழ்த் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி அரிசனங்களுக்கு வீட்டு மனைகளாகக்

கொடுக்கப்படுகிறது. குடும்பம் ஒன்றிற்கு வழங்கப்படுகின்ற ஒவ்வொரு மனையின் அளவும் 3 செண்ட் முதல் 5 செண்ட் வரை இருக்கும். அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கு 1949ஆம் ஆண்டிலிருந்து 1977-ம் ஆண்டு (1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள்) வரையில் 2,70,306 மனைகள் வழங்குவதற்குரிய 17,264.47 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை இந் நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக ரூ. 536.34 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இயன்ற வரையில் மற்ற சாதி இந்துக்கள் வாழுகின்ற இடங்கட்கு அருகாமையிலேயே அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரிசனங்கள் பழங்குடி மக்களுடன் கிறிஸ்துவ சமயத்திற்கு மாறிய அரிசனங்களும் கூட வீட்டு மனைப்பட்டாக்களைப் பெறுவதற்குக் தகுதியுடையவர்களாவர். இத் திட்டத்திற்காக 1978—79-ம் ஆண்டில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டு வசதி.—தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் 1973—74-ம் ஆண்டில் அமைக்கப் பெற்றது. இக் கழகம் தமிழ்நாடு முழுவதிலும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் வீடுகளைக் கட்டித்தரும் பணியை மேற்கொண்டுள்ளது. 1978—79-ம் ஆண்டில் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்திற்காக ரூ. 320.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் ரூ. 220 இலட்சம் அரிசன மக்களுக்கு வீடு கட்டுவதற்காக செலவிடப்படும்.

இதுவரை நடைமுறையில் உள்ள வடிவமைப்பின்படி கட்டப்பட்டு வரும் வீடுகளின் பரப்பளவு 207 சதுர அடியாகும். அதன் மதிப்பீடு சமவெளிப் பகுதிகளில் ரூ.4,000 மும் மலைப்பகுதிகளில் ரூ. 6,000மும் ஆகும். அரிசன வீட்டு வசதி கழகத்திற்கு 10 சதவீதம் மேற்பார்வைக் கட்டணம் உள்பட வீடொன்றுக்கு ரூ. 4,400. இன்றைய விலைவாசியின்படி இதன் மதிப்பீடு ரூ. 4,840 ஆகிறது.

தற்போது கட்டப்பட்டு வரும் வீடுகளில் இடம் போதவில்லையென்றும், அவற்றில் சில விரிசல் விட்டு ஒழுக்கல் ஏற்படுகிறதென்றும் முறையீடுகள் வந்தன. அக்குறைகளைப் போக்கி நடைமுறையில் உள்ள வீட்டின் வடிவமைப்பை மாற்றி மேலும் சிறந்த முறையில் வீடுகள் கட்டுவதற்கு

[1978 மார்ச் 18

புதிய வடிவமைப்பு ஒன்றை சிபாரிசு செய்வதற்காக திரு. செல்வம் (ஓய்வுபெற்ற ஹட்கோ இயக்குநர்) தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

அக்குழு பரிந்துரை செய்த வடிவமைப்புகளையும் ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளின் வடிவமைப்புகளையும் முன்னாள் அரசு நிர்வாகக் குழுவின் கருத்தினையும் நன்கு ஆய்வு செய்து திரு. செல்வம் குழு பரிந்துரை செய்த வடிவமைப்போடு ஆனால் தனித்தனியாக வீடுகள் கட்டப்படலாம் என்று அண்மையில் முடிவெடுக்கப்பட்டது. இப்புதிய வடிவமைப்பில் கட்டப்படும் வீடுகளின் பரப்பளவு 237 சதுர அடியாக இருக்கும். கடைக்காலின் ஆழம் ஏற்கனவே கட்டப்பட்டு வரும் கட்டிடங்களின் கடைக்காலைவிட ½ அடி அதிகமாகவிருக்கும். R. C. C. கூரையைப் பலப்படுத்தும் வகையில் 50 கிலோ இரும்புக் கம்பிகள் அதிகமாக உபயோகிக்கப்படும். கூரை ஒழுகாதிருக்க தட்டோடு (Flat tiles) போடப்படும். வராந்தாவையும் அறையாக உபயோகிக்கும் வகையில் செங்கல் ஜல்லி (Brick Jelly) முன்புறம் அமைக்கப்படும். இம்மேம்பாடுகளோடு கட்டவிருக்கும் வீட்டின் மதிப்பு சம வெளிப்பகுதிகளில் ரூ. 6,000 ஆகும். (கட்டிடச் செலவு ரூ. 5,454 மற்றும் 10 சதவீத மேற்பார்வை கட்டணம் ரூ. 546-ம்) மலைப்பகுதிகளில் மேற்பார்வைக் கட்டணம் உள்பட ரூ. 9,000-ம் ஆகும்.

இப்புதிய வடிவமைப்போடு கூடிய 5,000 வீடுகளை 1977-78 நிதியாண்டில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

துப்புரவுப் பணியாளர்கள், தோட்டிகளின் வேலை நிலைமையை மேம்படுத்தல்.—சில நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் துப்புரவுப் பணியாளர்கள் மலத்தைத் தலைச்சுமையாக எடுத்துச் செல்லும் பழக்கம் இன்னும் நீடித்து வருவது பற்றி இவ்வரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இப்பழக்கத்தைப் படிப்படியாக ஒழிப்பதற்காக, துப்புரவுப் பணியாளர்களுக்குத் தள்ளு வண்டிகள், கையுறைகள், புதை காலணிகள், தட்டுகள், சுரண்டு கருவிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவது போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 1977-78-ம் ஆண்டில், 432 தள்ளு வண்டிகளும் 216 தட்டுகளும், சுரண்டு கருவிகளும் ரூ. 1.76 லட்சம் செலவில் வழங்கப்பட்டன. இத்தொகையில் 75 சதவீதம் அதாவது ரூ. 1.32 லட்சம் அரிசன நல நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. எனினும் அளிக்கப்பட்ட வசதிகளெல்லாம் பிரச்சினையை ஓரளவே தீர்த்துள்ளன.

1978 மார்ச் 18]

பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் நீரடிக் கழிப்பிடங்கள் அமைத்துத் தரப்பட்டாலன்றி அருவருக்கத்தக்க இந்த பழக்கத்திற்கு முடிவு கட்ட முடியாதென்பதை அரசு உணர்ந்துள்ளது. இக்குறிக்கோள் எய்தும் பொருட்டு, 1974-75-ம் ஆண்டில், செங்கல்பட்டு, தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களில் சாதாரணக் கழிப்பிடங்களை ஆராய்ச்சி-செயல் திட்டக் கழிப்பிடங்களாக (நீரடிக்கழிப்பிட வகை) மாற்றும் திட்டம் கொண்டுவரப்பட்டது. 1975-76-ல் இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்திற்கும் விரிவு படுத்தப்பட்டது. 1976-77 வரை ரூ. 13.82 லட்சம் செலவிடப்பட்டது. இதன்மூலம் இந்த மாவட்டங்களில் 5,853 சாதாரணவகைக் கழிப்பிடங்கள் (ஆராய்ச்சி-செயல்-திட்ட) நீரடிக் கழிப்பிடங்கள் ஆக மாற்றப்பட்டன. 1977-78-லும் இத்திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றது; மேற்சொன்ன நான்கு மாவட்டங்களில் (அவையாவன; செங்கற்பட்டு, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி) 1,900 சாதாரண வகைக் கழிப்பிடங்களை (ஆராய்ச்சி-செயல்-திட்ட) நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுவதற்காக ரூ. 4.50 லட்சம் செலவிடப்பட இருக்கிறது. இதற்காக 1978-79ஆம் ஆண்டில் ரூ. 5.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிநீர்க் கிணறுகள் :

அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் நல்ல குடிநீர் வழங்குவதற்கென அரிசனக் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒரு குடிநீர்க் கிணறு தோண்டுவதற்காகும் செலவின் உயர் அளவு ரூ. 5,000. இது தற்போது ரூ. 6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குடிநீர்க் கிணறுகள் தவிர அரிசனங்கள் பழங்குடி மக்களுக்காக ஆண்டு தோறும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் நிலமட்ட நீர்த் தேக்கங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு நில மட்டங்களில் அமைக்கப்படுகின்ற நீர்த்தேக்கம் கட்டவும் ஆழக்கிணறு ஒன்று தோண்டவும் இதற்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த உயர் அளவு தொகை ரூ. 10,000. இத்தொகை இப்போது ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சாதாரண குடிநீர்க் கிணறுகளுக்குப் பதிலாக கூடவே துளைக்கிணறுகள் (Bore Wells) அமைக்கப்படும். அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் கிறிஸ்துவ மதத்துக்கு மாறிய அரிசனங்களுக்கும் குடி நீர்க் கிணறுகள் அமைத்துக் கொடுப்பதற்காகவும், 1978-79ஆம் ஆண்டில் ரூ. 27.26 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மின் வசதி :

அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்வசதிசெய்து கொடுக்கும்வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட ஒவ்வோராண்டும் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இதற்கென்று 1957–58 ஆம் ஆண்டிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1978–79 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ. 56 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சமுதாயக் கூடங்கள் :

அரிசனக் குடியிருப்பில் வாழும் மக்கள் திருமணம், கூட்டங்கள் முதலியன நடத்துவதற்கென்று அரிசனக் குடியிருப்புகளில் படிப்படியாக நிறைவேற்றும் திட்டங்களின் கீழ் 1971–72 ஆம் ஆண்டிலிருந்து (ஒவ்வொன்றும் ரூ. 10,500 செலவில்) சமுதாயக் கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன. 1974–75ஆம் ஆண்டிலிருந்து சமுதாயக் கூடங்கள் ஒவ்வொன்றும் ரூ. 15,000 மதிப்பீட்டுச் செலவில் கட்டப்படுகின்றன. இதற்கென 1978–79ஆம் ஆண்டில் ரூ. 1.5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சமுதாய நிலையங்கள் :

அரிசனங்கள், அவர்தம் குழந்தைகள் ஆகியோரிடையே நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பரவச் செய்ய ஆண் சமூகப் பணியாளர் ஒருவரும் பெண் சமூகப் பணியாளர் ஒருவரும் குற்றேவலர் (பெண்) ஒருவரும் கொண்ட 25 சமுதாய நிலையங்கள் இம்மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் தங்கள் தலைமையிடத்திலிருந்து 5 முதல் 8 கிலோமீட்டர் வரையிலுள்ள கிராமங்களில் மும்முரப் பிரச்சாரம் செய்கின்றனர். அவர்கள், குழந்தைகளுக்கு நீராட்டி, சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுக்கின்றனர். இந்நிலையங்களில் மதிய உணவும் பல வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் அரிசனக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. இக்குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 14 ரூபாய் செலவில் உடைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கென 1978–79ஆம் ஆண்டில் 3.02 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

துணி வெளுக்குமிடங்கள் :

1978–79ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குத் துணி வெளுக்குமிடங்களை அமைத்துத் தரும் திட்டத்தை செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. முதலில் அம்மாவட்டத்தில் ஒரு சாதாரண பேரூராட்சியில் துணிவெளுக்குமிடம் கட்டித்தரப்படும். பின்னர் இவ்வசதி அம்மாவட்டத்தில் உள்ள பிற பகுதிகளுக்கும், அதன் பின்னர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டத்திற்கும் விரிவுபடுத்தப்படும். இவற்றிற்காகவும் பேணுதல் செலவுகளை அந்தந்த உள்ளாட்சி மன்றங்கள் ஏற்றுக் கொள்ளும்.

தீண்டாமை ஒழிப்பு :

1955ஆம் ஆண்டு குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தி இயற்றப்பட்ட ''குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம்'' 1976ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19-ம் தேதி முதற்கொண்டு செயலுக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை கூற மாநில அளவில் குழுவொன்றும் அமைக்கப்பட்டு உள்ளது.

இச்சட்டம் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கவனிக்க காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர் – ஜெனரல் பதவித் தரத்தில் காவல்துறை அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தீண்டாமை பழக்கத்தை ஒழிப்பதற்காக, தீண்டாமை குற்றங்கள் சட்டம் (தற்போது குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் எனப்படுகிறது) எந்த அளவுக்குச் செயல்படுத்தப்படுகிறது என்பதை ஆய்வு செய்ய (சென்னை மாவட்டம் நீங்கலாக) வட்ட, மாவட்ட அளவில் அரிசன நலக்குழுக்களை அரசு அமைத்துள்ளது. வட்ட அரிசன நலக்குழு உறுப்பினர் தங்களுக்குத் தெரிந்து நடந்திருக்கக் கூடிய தீண்டாமைக் குற்றத்தை, அல்லது அவ்வகையில் பாதிக்கப்பட்டவர்கள் முறையீடு செய்து கொள்ளும் போது அது தொடர்பான தகவல் விசாரித்தறிந்த பிறகு அதைக் காவல்துறையினரின் நாட்டத்திற்குக் கொண்டு வரலாம். மேலும், தீண்டாமைக் குற்றத்தை ஒழிப்பதற்கென்று ஏற்படுத்தப்பட்ட ரோந்துக் காவல்படையினர்

1972-ல் செயல்படத் தொடங்கினர். அக்காவல் படையினர் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை 6,771 வழக்குகள் பதிவு செய்து உள்ளனர். அவற்றில் 3.667 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தீண்டாமையை விரைவில் ஒழிக்கத் தூய்மையும் துப்புரவும் பெரிதும் துணைபுரிவதால், ஒவ்வொரு வட்டத்திலும் மிகவும் தூய்மையாகப் பராமரிக்கப்பட்டுவரும் அரிசனக் குடியிருப்பு ஒவ்வொன்றுக்கும், வானொலிப் பெட்டியைப் பரிசாக வழங்கும் திட்டமொன்றுள்ளது. இதற்கென 1978–79ஆம் ஆண்டில் 0.52 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாவட்டம் நீங்கலாக) தீண்டாமை ஒழிக்கப் பாடுபடும் இரண்டு கிராமங்களுக்கு 2 பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசின் மதிப்பு 1,000 ரூபாயும், இரண்டாவது பரிசின் மதிப்பு 500 ரூபாயும் ஆகும். இதற்கென 1978–79 ஆம் ஆண்டில் 0.21 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை அரிசன வாரம் (தீண்டாமை ஒழிப்பு வாரம்) கொண்டாடப்படுகிறது. இந்த அரிசன வாரத்தில் தீண்டாமை ஒழிப்பினை மக்களின் கவனத்திற்கு கொண்டுவர மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அரிசனங்களின் நிலையைச் சீர்திருத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்கும் மடிப்பு வெளியீடுகளை அரசு 1978 ஜனவரி திங்களில் வெளியிட்டது. அரசு சுவரொட்டிகளையும் வெளியிட்டது. தீண்டாமையின் விளைவுகளை விளக்கிக்கூறும் சுவரொட்டிகளையும் அரசு வெளியிட்டது. தமிழ்நாட்டில் மிகவும் நீண்ட தொலைவில் அமைந்துள்ள கிராமங்களிலும்கூட மக்கள் எளிதில் அறியும் வண்ணம் இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இந்த சந்தர்ப்பத்தில் குடி உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள விதிகளையும் தீண்டாமை ஒழிப்புக்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் விவரித்து எழுதப்பட்ட கட்டுரைகளை தாங்கிய சிறப்பு வெளியீடு கொண்டுவரப்பட்டது. தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கை செயல்படுத்துதல், குடும்ப நலத்திட்டத்தின் நன்மைகள் ஆகியவை குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகளை மக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு மூன்று அம்ச மும்முர இயக்கம் ஒன்றினைத் தொடங்குமாறும் மாவட்ட ஆட்சியருக்கு அரசு கட்டளையிட்டுள்ளது. மாவட்ட ஆட்சி

யாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள விளம்பரப் பிரிவைத் தவிர, மாநில முழுவதிலும் உள்ள மகளிர் மன்றங்கள், கிராம சேவிகைகள், முக்கிய சேவிகைகள் வட்டார அதிகாரிகள், வருவாய் அதிகாரிகள் ஆகியோரின பணியையும் இதற்குப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் ஆணையிடப்பட்டது.

கலப்புத் திருமணங்கள்:

ஜாதி, சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஊக்கமளிக்கும் ஒரு நடவடிக்கையாகக் கலப்புத் திருமணங்கள் செய்து கொண்ட தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் 1968–69-ல் கொண்டுவரப் பட்டது. கிறுஸ்துவ மதத்திற்கு மாறிய அரிசன மக்களுக்கு 1976-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 முதல் இத்திட்டம் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது. தற்போது, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் கீழ்க்காணப் பெறும் பரிசுகளும் சலுகைகளும் பெறத்தகுதியுடையவராவர் :—

1. $1\frac{1}{2}$ சவரன் (14 காரட்) மதிப்புள்ள தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

2. அரிசனங்களுக்கென்று கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் மூன்று சென்ட் பரப்புள்ள வீட்டு மனைகளை ஒப்படை செய்தல்.

3. 200 ரூபாய் ரொக்க மானியம்.

4. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்குப் பிறக்கும் குழந்தைகள் அப்பெற்றோர்கள் அறிவிக்கின்ற உறுதிமொழிக்கு ஏற்ப தந்தையின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது தாயின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ கருதப்படுவர். ஒரு குழந்தை தொடர்பாகச் செய்யப்படும் அறிவிப்பு இத்தம்பதியினரின் எல்லாக் குழந்தைகளுக்கும் பொருந்தும்.

5. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1978ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் வரை 651 தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

6. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்/குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக் கைத்திறப் பணியாளர்களுக்கான மனைகள்/வீடுகள் வாங்குவதற்கென ரூ. 1,200 ஒரு மொத்த மானியம் பெறவும் தகுதியுடையவராவர். மாதம் 250 ரூபாய்க்கு குறைந்த வருமானமுள்ள கலப்பு மணத் தம்பதிகளுக்கு தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ், ஒவ்வொராண்டும் 10 வீடுகளைத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒதுக்கித் தரும்.

இதற்காக 1978–79ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடி மக்கள் நல்வாழ்வுக்கான சிறப்புத் திட்டம் :

இம்மாநிலத்தில் 3.11 இலட்சம் பழ்ங்குடி மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் ஆங்காங்கே பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் திரட்டவும் ஏனைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் வேண்டி ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கான துணைத் திட்டத்தின் கீழ் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் காணப்படும் முன்னேற்றத்தையும் இப்பிரிவு கண்காணித்து அதை பழங்குடி மக்கள் மேம்பாட்டு அதிகார மன்றத்துக்குத் தெரியப்படுத்தும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தமிழ்நாட்டிலுள்ள பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கென ரூ. 842.54 இலட்சம் செலவு மதிப்புடைய தவணைத் திட்டம் ஒன்றை ஆராய்ச்சி பிரிவு தயாரித்துள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட 9 பகுதிகளுக்கென திட்ட அறிக்கைகள் தயாரிப்பதில், ஆராய்ச்சிப் பிரிவும் பழங் குடியினர் துணைத் திட்டங்களைச் செயல்படுத்தும் மாவட்ட ஆட்சியர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டனர். ஆதிவாசிகளுக்கென திட்ட அறிக்கை தயாரிப்பதில், இந்த ஆராய்ச்சிப் பிரிவு தற்போது ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சிப் பிரிவு, தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் அந்த மக்களுக்குள்ள கடன் சுமை பற்றி விரைவான ஆய்வினை நடத்தி முடித்துள்ளது. பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் நிலம் பராதீனம் செய்வது குறித்து அறிக்கை தயாரிக்கும்

பணியையும் மேற்கொண்டுள்ளது. பழங்குடி மக்கள் குழந்தைகளின் கல்வி பிரச்சினைப் பற்றிய ஆய்வு ஒன்றை ஆராய்ச்சிப் பிரிவு நடத்தியுள்ளது. மேற்கூறிய பணிகளுடன், இந்த பிரிவு, 1978–79ஆம் ஆண்டுக்கென பழங்குடி துணை ஆண்டுத் திட்டத்தை தயாரித்து உள்ளது.

கார்த்திகேயன் குழுவின் பரிவுரையின் பேரில், தமிழ்நாடு பழங்குடி மக்கள் மேம்பாட்டு அதிகார மன்றத்தை அரசு அமைத்துள்ளது. இந்த அதிகார மன்றம், பழங்குடி மக்கள் நலனுக்கான திட்டங்கள் செயல்படுத்தப் படுவதை மேற்பார்வையிடுகிறது. அரசின் இரண்டாவது செயலாளர் இந்த அதிகார மன்றத்தின் தலைவர் ஆவார்.

1976–77ஆம் ஆண்டில் பழங்குடி மக்கள், துணைத் திட்டத்தின் கீழ், வழக்கமான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு மேல் ரூ. 101·82 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டுடன் பழங்குடி மக்கள் மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. 1977–78ஆம் ஆண்டில் ரூ. 153 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தொடர்பான ஏனைய துறைத் தலைவர்களும் இத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றனர். இதற்காக 1978–79ஆம் ஆண்டிற்கு ரூபாய் 200 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

கல்ராயன் மலையில் உள்ள இரும்தாரர்கள் தொடர்பாக நீண்ட காலமாகவே இருந்து வந்த பிரச்னைக்குத் தீர்வு கண்ட பின்னர் 1976ஆம் ஆண்டு ஆகஸ்டில் அப்பகுதி நிர்வாகத்தை அரசு மேற்கொண்டதன் விளைவாக, இப்பகுதியில் வாழ்ந்துவரும் பழங்குடி மக்களில் பெரும்பாலோர் ஜாகிர்தாரர்களின் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அப்பகுதி முழுவதும் பழங்குடி மக்கள் துணைத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. பழங்குடி மக்கள், காலத்திற்கேற்ப மாற்றம் காணும் வகையில் அவர்களின் பொருளாதாரம், சமூகம், கல்வி நிலைகளை மேம்படுத்த அறிவுரை நல்கப்பட்டு வருகிறது.

பழங்குடி மக்களுக்கு நில ஒப்படை செய்வதை ஆய்வு செய்யவும், ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை பராதீனம் செய்யப்பட்டிருப்பது தெரியவந்தால் அவற்றை மீட்டு அவற்றிற்குரிய பழங்குடி மக்களிடமே ஒப்படைக்கவும் தேவையான உத்தரவுகளும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

[1978 மார்ச் 18

மின் இணைப்பு-தண்ணீர் வழங்கும் திட்டங்கள் :

ஒருங்கிணைந்த பழங்குடி மக்களுக்குள்ள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், திட்டப் பணிகளை செயல்படுத்துவதின் ஒரு பகுதியாக, பழங்குடி மக்களுக்கான துணைத் திட்டத்தைச் செயல்படுத்தும் பகுதிகளில் மின் இணைப்பு கொடுக்கும் பணி 1977–78ம் ஆண்டு முதல் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என அரசு கருதியுள்ளது. எனவே, 1977–78ம் ஆண்டுக்கு ரூ. 10.00 இலட்சம் 1978–79ம் ஆண்டுக்கு ரூ. 5.00 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அஃது போலவே, பழங்குடி மக்களுக்கான துணைத்திட்டத்தைச் செயல்படுத்தும் பகுதிகளில் நீர் வழங்கும் திட்டம் 1978–79ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். அத் திட்டப் பணிக்காக, வரவு-செலவு திட்டத்தில், ரூ. 10.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறு பாசனத் திட்டங்கள் :

சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் தடுப்பு அணைகளை, கசிவு நீர்க் குட்டைகளைக் கட்டுதல் அம்மாவட்டங்களில் தற்போதுள்ள ஏரிகளின் நிலைகளை மேம்படுத்துதல் குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. 1977–78ம் ஆண்டில், சேலம், வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் ரூ. 5·51 இலட்சம் மதிப்புள்ள பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் இடம் ஒதுக்குவதற்கான விதி:

(1) மாணவர்களைக் கல்வி நிலையங்களில் சேர்த்தல்,—மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழிற்கல்வி நிறுவனங்கள் உட்பட, கல்வி நிறுவனங்களில் அரிசனங் களுக்கும் பழங்குடி மக்களுக்கும் உரிய இடம் கொடுக்க, 18 சதவீத இடங்கள் அரிசன மாணவர் களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும் ஒதுக்கப்பட் டுள்ளன

(2) அரசுப்பணிகளில் நியமனம்,— மாநில அரசுப் பணிகளில் 18சதவீதஇடங்கள் அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைத்தலைவரும், தலைமைச் செயலகத் துறைகளும்; ஆண்டுதோறும் விவரக் கணக்கு ஒன்றை அனுப்பவேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ள தன் மூலம் இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன

1978 மார்ச் 18]

அதிகாரிகள் ஒழுங்காகப் பின் பற்றுகின்றனரா என்பது தொடர்ந்தாற்போல் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசு பணிகளில் அரிசனங்களுக்கு/பழங்குடி மக்களுக்கு அளிக்கப் பட்டுள்ள பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்ய முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரிசன நலத்துறை அமைச்சரை இணைத் தலைவராகவும் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது.

கண்காணிப்புத் துணைக்குழு :

பணியாளர், நிர்வாகச் சீர்திருத்தத் துறைச் செயலா ளரைத் தலைவராகக் கொண்டு ஓர் ''உயர் அதிகாரம் பெற்ற கண்காணிப்புக் குழு''வை அரசு அமைத்துள்ளது. இது உயர் மட்டக் குழுவின் நிலையான துணைக் குழுவாகும். அரிசன, பழங்குடி வகுப்பினர்களுக்கென ஒதுக் கீடு பற்றிய விதிகளை, பதவி உயர்வு/பதவி மாற்றம் மூலம் செய்யப்படும் அனைத்து நியமனங்களுக்கும் பொருந் தச்செய்வது பற்றிய செயற்குறிப்பை இக்குழு ஆய்வு செய்யும். மேலும், பல நிலைகளில் செய்யப்படும் பணி நியமனங்களை மறு ஆய்வு செய்தல், தற்போதுள்ள நிலையினை மதிப்பீடு செய்தும், பொதுப்பணிகளில் அரிசன வகுப்பினர்/பழங்குடியினர்களுக்கு போதுமான பிரதி நிதித்துவம் கிடைக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கருத்துரை வழங்குதல் ஆகிய பணிகளையும் கவனிக்கும்.

கொத்தடிமைகளுக்கான மறுவாழ்வு திட்டங்கள்:

தமிழக அரசைப் பொருத்தவரையில் பழங்குடி மக்களின் முழுமையான முன்னேற்றத்திற்கேற்ற திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன. இதுவரையிலும் தமிழ்நாட்டில் மட்டும் 2,883 நபர்கள் அடங்கிய 2,271 குடும்பங்கள் 9 மாவட்டங்களிலிருந்து கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டு உள்ளனர். இதில் 2,187 நபர்களடங்கிய 1,849 குடும்பங்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் நிலம் வழங்கப்பட்டும் வேலைவாய்ப்பு மற்றும் நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடனுதவி அளித்தும் உள்ளது. மீதமுள்ள 516 நபர்களடங்கிய 275 குடும்பங்கள் இன்னும் பயனடையக்கூடிய நிலையில் உள்ளன. அரசு, மாவட்ட ஆட்சியாளர் மற்றும் வருவாய்த் துறைத் தலைவர்களுடன் கலந்து பல நல்ல திட்டங்களைச்செயல்படுத்தி இத்திட்டம் பழங்குடியினரின் ஒருங்கிணைந்த துணைத் திட்டம் மற்றும் மிகப்பண்டைய பழங்குடியினரின் மேம்பாட்டுத்

திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும்போது இம்மக்களின் முன்னேற்றம் விரைவில் அடையப்பெறும் என்பதில் ஐயமில்லை.

அரிசன வகுப்பினர், பழங்குடியினர் இவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை ஏனைய பிற பிரிவினர்களின் வாழ்க்கைத் தரத்திற்கு இணையாக உயர்த்த அரசு இவ்வாறு இயன்ற அளவு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. எனவே அரிசன-பழங்குடி நல மானியக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிக் கொள்கிறேன்.

இணைப்பு III

[41-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

பிற்பட்டோர் நலத்துறை—மானியம் எண் 32.

கொள்கை விளக்கக் குறிப்பு 1978 79.

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக 1978–79-க்கான மானியக் கோரிக்கையை நான் இம்மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக தமிழக அரசு முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ள பணிகள், 1978–79 ஆம் ஆண்டில் எடுக்க இருக்கும் முன்னேற்றப் பணிகள் பற்றிய விவரங்களை கீழே தருகிறேன்.

2. 1949-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்பு வரை பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்கான திட்டங்கள் தொழிலாளர் நல ஆணையாளரால் அரிசன நலம், மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றுடன் ஒருங்கே கவனிக்கப்பட்டு வந்தன. பின்னர் குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலம், காவல் துறையினரால் கவனிக்கப்பட்டு வந்தது. 1949-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளில் அரிசன நலத்துறை ஏற்படுத்தப்பட்டு அரிசனங்கள், பழங்குடிமக்கள், குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் ஆகியோரின் நலன்கள் அத்துறையால் கவனிக்கப்பட்டன. பிற்பட்ட வகுப்பினர், மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் என்பதன் காரணமாக அவர்களுடைய முன்னேற்றத்தை துரிதப்படுத்தும் வகையில் இந்த பிற்பட்டோர் நலத்துறை புதியதாக ஏற்படுத்தப்பட்டு 1969-ம் ஆண்டு மே திங்கள் 2-ம் நாள் முதல் செயல்பட்டு வந்தது. இதுவரை அரிசன நலத்துறையால்,

கவனிக்கப்பட்டு வந்த பிற்பட்டோர் நலம், குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலம் தொடர்பான பணிகள் இத்துறைக்கு மாற்றப்பட்டன.

3. இத்துறை, இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. மாவட்டங்களில் மே 1974 வரை இத்துறையின் வேலைகளை மாவட்ட நல அதிகாரிகள் கவனித்து வந்தனர். 1974-ம் ஆண்டு மே திங்கள் 17-ம் நாளிலிருந்து துணை ஆட்சியாளர் பதவி நிலையில் மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர். மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள், மாவட்ட ஆட்சியாளரின் நேரடிப் பார்வையில் பணி புரிகின்றனர்.

பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப் பற்றி ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சரின் தலைமையில் "மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு" ஒன்று இயங்கி வருகின்றது. இக்குழு 1974-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவைத் திருத்தி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இதுபோன்று மதுரை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளர் சமுதாய முன்னேற்றத்திற்கு ஆலோசனை கூற மதுரை மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் ஒரு தனிக் குழு செயல்பட்டு வருகின்றது.

4. பிற்பட்டோர் முன்னேற்ற நலனுக்கென 1971–72 முதல் தனியாக மானியக் கோரிக்கை ஏற்படுத்தப்பட்டது. 1967–68-ல் பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கு ரூ. 1,61,40,000 ஆக இருந்த மானியத் தொகை ஆண்டு தோறும் அதிகமாகி 1978–79-ல் ரூ. 6,68,53,000 ஆகியது. இது பிற்பட்டோர் நலனுக்கென அரசு மேற்கொண்டு வரும் தீவிர நடவடிக்கைகளைக் காட்டுகிறது. மேலும் இந்த தனி ஒதுக்கீடு தவிர இம்மாநில அரசு மேற்கொள்ளும் பல்வேறு பொதுத் திட்டங்கள் பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் கருதியே செயலாக்கப்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவையில் கூற விரும்புகிறேன். இந்தத் துறையின் முக்கியமான பணிகள் சிலவற்றை கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

5. படிப்பு உதவித் தொகை:—(1) பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் கல்வி கற்க போதிய வசதியின்மையால் இன்னமும் பிற்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள் எல்லோரும் அறிவர். அவர்களுடைய முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு, கல்வி மேம்பாட்டிற்கு வழிவகை செய்வது மிக அவசியம். எனவே

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் கல்வி வசதிக்காக, படிப்பு உதவித் தொகை மற்றும் உண்டி, உறையுள் வசதிகள் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், குற்றப்பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு முதலாம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்கும் அதிகமாக இருக்கக்கூடாது.

உதவித் தொகை பெற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றிருந்தாலே போதுமானது. ஆனால் குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒரு லட்சம் ரூபாயுடன் 1948–49-ல் தொடங்கப்பட்டு 609 மாணவர்களுக்கு பயனளித்தது.

பின்னர், இத்தொகை 1949–50-ம் ஆண்டில் ஐந்து லட்சம் ரூபாயாக உயர்ந்ததில் 2,908 மாணவர்கள் பயனடைந்தனர். 1960–61-ல் 19,900 மாணவர்களுக்கு ரூ. 41 லட்சம் செலவழிக்கப்பட்டது.

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் படிப்பு உதவித் தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினைக் காட்டும்.

ஆண்டு.		குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். உயர் பள்ளிப் படிப்பு.	கல்லூரிப் படிப்பு.	ரூபாய் லட்சங்களில்.
(1)		(2)	(3)	(4)
		(உதவித் தொகை பெற்ற மாணவர் எண்ணிக்கை.)		
1966–67	..	24,745	1,619	13.71
1967–68	..	27,967	1,941	14.50
1968–69	..	32,347	2,122	16.71
1969–70	..	41,361	2,828	21.16

ஆண்டு.		குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். உயர் பள்ளிப் படிப்பு.	கல்லூரிப் படிப்பு.	ரூபாய் லட்சங்களில்.
(1)		(2)	(3)	(4)
		(உதவித் தொகை பெற்ற மாணவர் எண்ணிக்கை.)		
1970–71	..	53,769	3,173	25.55
1971–72	..	60,614	3,805	30.85
1972–73	..	67,772	4,638	34.29
1973–74	..	65,876	4,338	34.38
1974–75	..	60,661	4,673	35.66
1975–76	..	61,845	3,964	29.64
1976–77	..	57,026	3,985	33.65
		பிற்பட்ட வகுப்பினர்		
1966–67	..	10,306	21,099	82.90
1967–68	..	10,075	25,260	91.73
1968–69	..	20,375	33,162	113.07
1969–70	..	42,515	48,050	160.89
1970–71	..	74,862	59,407	201.20
1971–72	..	92,694	76,281	290.50
1972–73	..	1,04,486	87,652	324.65
1973–74	.	94,032	80,025	318.86
1974–75	.	88,897	86,494	331·68
1975–76	..	90,620	71,433	317.08
1976–77	.	80,372	78,741	295.00

(iii) மேற்கண்ட விவரங்கள் பிற்பட்டோர் கல்வி வளர்ச்சிக்காக புதிதாக இத்துறை தொடங்கப்பட்ட பிறகு, உதவித் தொகையினால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதைக் காட்டும். மேலும், கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், பட்ட மேற்படிப்பு மற்றும் சட்டம் போன்ற படிப்புக்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. மேலும், அவர்களுடைய முன்னேற்றத்திற்காக (சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்) பட்டயக் கணக்கர் பயிற்சி பெறும் மாணவர்கட்கு உதவித் தொகை வழங்க அரசு 1973–74-ம் ஆண்டு முதல் அனுமதித்திருக்கிறது. இதன்படி, 1973–74-ல் ரூ. 16,035-ம், 1976–77-ல் ரூ. 37,000மும் செலவிடப்பட்டது. 1978–79-க்கு ரூ. 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

(iv) 1977–78-ம் ஆண்டு முதல் அரசு உயர்பள்ளி வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகையினைப் பணமாக வழங்குவதற்குப் பதிலாக, குறிப்பிட்ட புத்தகங்களை வழங்கும் கல்வி நிலையங்களுக்கு அவைகளுக்காக தனிக் கட்டணமும், பள்ளி இறுதி நிலை தேர்வு எழுதும் மாணவர்களுக்குக்குரிய தேர்வுக் கட்டணமும், அரசு தேர்வுகள் இயக்குனருக்கு அரசால் நேரிடையாக செலுத்தப்படும். இச்செலவுகள் முன்பு வழங்கப்பட்டு வந்த உபகாரச் சம்பள அளவுக்கு ஏற்கப்படும்.

(v) 1974–75-ல் அரசு பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களின் படிப்பு உதவித் தொகைக்கான பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தை ரூ. 2,000-த்திலிருந்து ரூ. 2,500-க்கு உயர்த்தியது. ஆனல், இச்சலுகை படிப்புக் கட்டணச் சலுகைகளுக்கு வழங்கப்படவில்லை. எனவே, ஆண்டு வருமானம் ரூ. 2,000-த்திற்குமேல் உள்ள பெற்றோரின் குழந்தைகள் (மாணவர்கள்) தமிழ்நாடு கல்வி விதிகள் 92-ன்படியோ அல்லது இத்துறையின் வாயிலாகவோ படிப்புக் கட்டணச் சலுகையைப் பெற முடியவில்லை. எனவே, வருமான வரம்பை ரூ. 2,000-த்திலிருந்து ரூ. 2,500-க்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

(vi) பிற்பட்ட வகுப்பு மாணவர் பெற்று வரும் உண்டி மற்றும் உறைவிடச் செலவுகள் 1971–72-லிருந்து கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது.—

	சென்னையில்.				வெளியூர்களில்.			
	பழையது.		புதியது.		பழையது.		புதியது.	
	*பி.வ.	**கு.ப.நீ	பி.வ.	கு.ப.நீ.	பி.வ	கு.ப.நீ.	பி.வ.	கு.ப.நீ
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
(1) கலை, விஞ்ஞானம், சட்டம் ..	40	60	60	70	35	50	50	55
(2) மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் ஆகியவை.	40	70	60	75	35	55	55	70
(3) தொழில் நுட்பக் கல்வி ..	40	50	50	60	35	45	45	50

*பி.வ. : பின் தங்கிய வகுப்பினர்.

**கு.ப.நீ. : குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்.

(Vii) உதவித் தொகை வழங்குவதற்காக கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

	1976–77 செலவு.	1977–78 மதிப்பீடு.	1977–78 திருத்திய மதிப்பீடு.	1978–79 மதிப்பீடு
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் ஆயிரத்தில்.)		
பிற்பட்ட வகுப்பு மாணவர்கள்	29,499	33,635	33,635	34,010
குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள்.	3,365	3,569	3,569	3,569
மொத்தம் ..	32.864	37,204	37,204	37,579

[1978 மார்ச் 18

(viii) மத்திய அரசு உதவியுடன் குறைந்த வருமானம் உடையோரின் பிள்ளைகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் 1964–65ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டது. இதற்கு மத்திய அரசு 1968–69 வரைதான் நிதி உதவி செய்து வந்தது. ஆயினும் தொடர்ந்து இந்தத் திட்டத்தின்கீழ் 1969–70, 1970–71ஆம் ஆண்டுகளில் மத்திய அரசின் உதவியின்றியே உதவித் தொகை வழங்கப்பட்டது. 1971–72ஆம் ஆண்டு முதல் இந்த உதவித் தொகை வழங்கப்படவில்லை. ஏற்கெனவே இந்தச் சலுகை பெற்றவர்களுக்கு அவர்கள் எடுத்துக் கொண்ட பாடமுறையில் தேர்ச்சி பெற்று முடிக்கும் வரை இத்திட்டம் அவர்களுக்கு உதவி அளிக்கும் வகையில் தற்போது மாற்றப்பட்டுவிட்டது. இத்திட்டத்தின்கீழ் 1969–70-ல் ரூ. 14.84 இலட்சம் செலவிடப்பட்டது. 1977–78 திருத்திய மதிப்பீட்டில் ரூ. 3,000 மும், 1978–79 ல் ரூ. 3,000மும் இதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இத்திட்டத்தில் புதிய உதவித்தொகை வழங்கப் படாததால் செலவு குறைவாக உள்ளது.

7. **படிப்புக் கட்டணச் சலுகை**.—புகுமுக வகுப்பு வரையிலும் மாணவர்களிடம் படிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. புகுமுக வகுப்பிற்குமேல் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், மிகப் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களின் வருமானம் ஆண்டிற்கு ரூ. 1,500க்கு மேற்படாதிருப்பின் முறையே அரைக் கட்டணச் சலுகையும் முழுக் கட்டணச் சலுகையும் வழங்கப்படுகிறது.

8. **அரசு மாணவர் இல்லங்கள்**.— (1) மாணவர்கள் கல்வி பயில வசதியாக இருக்கும்பொருட்டு, அரசினர் உணவு விடுதிகள் திறக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

978 மார்ச் 18]

இவ்விடுதிகளில் பல்வேறு வகுப்பு மாணவர்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் சேர்க்கப்படுகின்றனர்:—

		குற்றப் பரம்பரையினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கான விடுதிகள்.	பிற்பட்டோர் வகுப்பினருக்கான விடுதிகள்.	அரிசன வகுப்பினருக்குக்கான விடுதிகள்.
(1)		(2)	(3)	(4)
பிற்பட்ட வகுப்பினர்	..	10 } 60	65	20
குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்.				
அரிசன வகுப்பினர்	..	25	25	75
இதர வகுப்பினர்	..	5	10	5
மொத்தம்	..	100	100	100

(2) பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காகவும் குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காகவும் நடத்தப்பெறும் விடுதிகளின் விவரங்கள் :—

ஆண்டு.	பிற்பட்ட வகுப்பினர்.		குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்.	
	விடுதிகள் எண்ணிக்கை.	மாணவர்கள் எண்ணிக்கை.	விடுதிகள் எண்ணிக்கை.	மாணவர்கள் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
1966–67முதல் 1969–70வரை	11	979	37	3,619
1970–71	28	2,144	40	4,039
1971–72	81	5,333	46	4,369

[1978 மார்ச் 18

ஆண்டு.	பிற்பட்ட வகுப்பினர், விடுதிகள் எண்ணிக்கை.	பிற்பட்ட வகுப்பினர், மாணவர்கள் எண்ணிக்கை.	குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர். விடுதிகள் எண்ணிக்கை.	குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர். மாணவர்கள் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)
1972–73	123	7,608	46	4,368
1973–74	144	9,348	54	5,099
1974–75	177	11,210	54	5,099
1975–76	196	12,060	53*	5,069
1976–77	215	13,305	51*	4,919
1977–78	227	14,065	57	5,219

(3) மேலே குறித்த 284 பிற்பட்ட வகுப்பு விடுதிகளில் 54 விடுதி கல்லூரி மாணவர்களுக்கானவை.

(4) இந்த விடுதிகள் 284 ஐயும் பராமரிப்பதற்காக 1978–79 ஆம் ஆண்டிற்கு ரூ.1,02,37,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக மேலும் 10 புதிய விடுதிகளை 1978–79-ல் ரூ. 2,49,000 செலவில் திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1978–79 ஆம் ஆண்டு முதல் மாணவர்கள் விடுதியில் சேர, பெற்றோர்களின் ஆண்டு வருமானவரம்பை ரூ. 2,000-த்திலிருந்து ரூ. 2,500-க்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் ரூ. 2,000-த்திலிருந்து ரூ. 2,500 வரை ஆண்டு வருமானம் உடைய பெற்றோர்களின் குழந்தைகள் பயனடைவர்.

மேற்படி விடுதிகளில் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுச் செலவுத் தொகை 1977–78 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

(1)	சென்னை. ரூபாய். (2)	வெளியூர். (3)
1 கல்லூரி மாணவர் விடுதிகள் ..	60–65*	50–55
2 தொழிற் கல்வி மாணவர் விடுதிகள்.	60–65	50–55
3 இதர விடுதிகள்	36–40	36–40

*தேவையான மாணவர்கள் இல்லாததினால், 3 குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான விடுதிகள் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான விடுதிகளாக மாற்றப்பட்டன.

1978 மார்ச் 18]

*இத்தொகை 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ஆம் நாள் முதல் சென்னைக்கு ரூ. 80 ஆகவும் வெளியூர்களில் ரூ. 65 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

குறிப்பு.—மாணவியருக்கு மேற்குறித்த தொகைகளை விட அதிகமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றும் மலைப் பிரதேசங்களில் மேலும் ரூபாய் ஒன்றும் அதிகம் அளிக்கப்படுகிறது.

(5) மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்கள்.— மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்களைக் கட்டும் பொறுப்பைத் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. நடப்பாண்டில் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

9. பள்ளிக் கட்டிடங்கள்.—இத் துறையினால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு அதிக வசதிகளுடன் கூடிய கட்டிடங்களைக் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 1977–78 திருத்திய மதிப்பீட்டில் ரூ. 50,900 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1978–79-ல் கட்டிடங்களுக்காக ரூ. 53,000 வகை செய்யப்பட்டுள்ளது. குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து

நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காகச் செயல்பட்டு வரும் 275 பள்ளிகளின் விவரம் மாவட்ட வாரியாகக் கீழே தரப்பட்டுள்ளது :—

மாவட்டங்கள்.	உயர்நிலைப் பள்ளிகள்.		நடுநிலைப் பள்ளிகள்.		ஆரம்பப் பள்ளிகள்.	
	எண்ணிக்கை.	மாணவ மாணவியர்.	எண்ணிக்கை	மாணவ மாணவியர்.	எண்ணிக்கை	மாணவ மாணவியர்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
வட ஆற்காடு ..	..	..	..	..	4	398
தென்னாற்காடு	..	..	..	..	1	283
மதுரை (கள்ளர் சீரமைப்பு). ..	9	2,465	32	9,988	206	27,399
இராமநாதபுரம் ..	..	..	1	300	5	963
திருநெல்வேலி ..	..	..	..	..	10	1,119
சேலம் ..	..	..	..	..	2	303
கோவை ..	..	..	1	176	1	57
தர்மபுரி ..	..	..	..	..	3	302
மொத்தம் ..	9	2,465	34	10,464	232	30,824

1978 மார்ச் 18]

10. மதிய உணவு.—குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள், தம் ஏழ்மையின் காரணமாக, பள்ளிகளில் தொடர்ந்து படிப்பதில்லை. அவர்கள் பள்ளிகளை விட்டுச் செல்லாமல் இருப்பதற்குத் தூண்டுகோலாக குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் பள்ளிகளில், அம்மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. ஒரு மதிய உணவின் விலை 15 காசுகள். திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அரசினர் அல்லாத தனியார் பள்ளிக்கூடங்களிலும் குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் பெரும் பகுதியினராக இருக்கின்ற காரணத்தால், அம்மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்படுகின்றது. இதனால், மாணவர்கள் தொடர்ந்து படிக்க ஊக்கம் ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருள்களின் விலை அதிகமாகிவிட்டதால், ஒரு மதிய உணவின் விலை 30 காசுக்கு அதிகரிக்கும்படி கோரப்பட்டது. ஆனால், அரசு இதற்கான அதிகச்செலவினை தவிர்க்க அம்மாணவர்களுக்கு 'கேர்' நிறுவனத்தின் மூலமாக மதிய உணவு வழங்கும்படி உத்திரவிட்டுள்ளது. இது, அரசுப் பள்ளிகளில் மார்ச் 1975 முதற்கொண்டும் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் சனவரி 1976 முதற் கொண்டும் அமுல் செய்யப்பட்டு வருகிறது.

11. உணவு மானியங்கள்—(i) பள்ளிப் படிப்பு.— தனிப்பட்ட நபர்களாலும், சமூக நல நிலையங்களினாலும் நடத்தப்படும் தனியார் விடுதிகளில் தங்கி உள்ள பள்ளி மாணவர்களுக்கு 1955–56 வரை அரிசன நலத்துறை உணவு மானியம் வழங்கி வந்தது. 1956–57 முதல் இம்மாதிரி தனியாரின் உணவு விடுதிகளை புதியதாக அங்கீகரிக்க வேண்டாம் என்று அரசு முடிவு செய்து, தேவையான இடங்களில் அரசே உணவு விடுதிகளைத் திறந்து வருகின்றது. மற்றும் ஒழுங்காகப் பராமரிக்கப்படாத உணவு விடுதிகளை அரசினரே எடுத்து அரசாங்க விடுதிகளாக மாற்றி நடத்தி வருகிறார்கள். தற்பொழுது தனியார் உணவு விடுதிகள் 45 உள்ளன. இவைகளில் ஒரு மாணவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 25 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. 1974–75-க்கு முன்பாக இந்த மானியம் ரூ. 20 ஆக இருந்தது. 1978–79-ம் ஆண்டுக்கு 5,64,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உணவு மானியம் பெறும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 2,000-த்திலிருந்து ரூ. 2,500-க்கு 1978–79-ம் ஆண்டு முதல் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 18

(ii) கல்லூரிப் படிப்பு :— கல்லூரிகளில் படிக்கும் மாண
வர்களுக்கு இவ்வுணவு மானியம் வழங்கப்படுவதில்லை.
இந்த மாணவர்கள் கல்லூரியைச் சார்ந்த விடுதிகளில் தங்கிப்
படித்தாலும், கல்லூரியினர். அங்கீகாரம் செய்த விடுதிகளில்
தங்கிப்படித்தாலும் கல்வித்துறையினர் அல்லது அரிசன
நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறையின் அங்கீகாரம்
பெற்றுள்ள விடுதிகளில் தங்கிப்படித்தாலும் அவர்
களுக்கு படிப்பு உதவித்தொகையுடன் உணவுச் செலவுக்கான
தொகை வழங்கப்படுகிறது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட
விடுதிகளின் விவரம் :—

மாவட்டம்.		விடுதிகளின் எண்ணிக்கை.		
	1972 –73.	1973 –74.	1974 –75.	1975 –76.
1. சென்னை	6	1	..	..
2. வட ஆற்காடு ..	3	1	..	3
3. திருச்சிராப்பள்ளி ..	20	9	8	6
4. புதுக்கோட்டை ..	..	7	..	..
5. மதுரை	2	..	..	..
6. கோயம்புத்தூர் ..	2	..	..	..
7. தஞ்சாவூர்	..	1	..	..
மொத்தம் ..	33	19	8	9

இம்மாணவ்ர்களுக்கு பத்தி 6 (VI)-ல் குறிப்பிட்டுள்ள
வீதத்தில் உணவு விடுதித்தொகை வழங்கப்படுகிறது.

12. புத்தகங்களும் சிலேட்டுகளும் :—அரசினர் நடத்
தும், குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்
டோர் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும்
புத்தகங்களும் சிலேட்டுகளும் இலவசமாக வழங்கப்படுகிறது.
இவ்வாறு இலவச உதவி பெற்ற மாணவர்கள் 1969–70-ல்
7,600. இதனால் பயன்பெறும் மாணவர்கள் எண்ணிக்கை
ஆண்டுதோறும் அதிகரித்துள்ளது. ஆரம்பப் பள்ளிகளில்
முதல் வகுப்பு முதல் மூன்றும் வகுப்பு வரை படிக்கும் மாண
வர்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்ட புத்தகம், சிலேட்டு
கள் பெற்றவர்கள் 1977-78-ல் 40,300 பேர். 1978–79-ம்
ஆண்டிலும் இதே அளவு மாணவர்களுக்கு இவ்வுதவி
அளிக்கப்படும்.

1978 மார்ச் 18]

மதுரை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் 4 முதல்
11-ம் வகுப்பு வரையிலும் இதர மாவட்டங்களில் 1 முதல் 8-ம்
வகுப்பு வரையிலும் உள்ள குற்றப்பரம்பரையினர் பட்டிய
லில் இருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு, புத்தகங்
கள், எழுது பலகைகள் 1978–79-ம் ஆண்டுக்கு வழங்க
ரூ. 2,20,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் மதுரை
மாவட்டத்தில் மட்டும் 9,033 மாணவர்கள் பயன்பெறுவர்.
இத்திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ. 5,82,000, 1978–79ம்-
ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. (i) ஆடை வழங்குதல் :—குற்றப்பரம்பரையினர்
பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளிலும், உணவு
விடுதிகளிலும் உள்ள எல்லா மாணவ, மாணவியருக்கும்
ஒவ்வொரு ஆண்டும் 2 செட் ஆடைகள் வழங்கப்படுகின்றன.
முதல் செட் பள்ளி ஆரம்பித்த உடன் அல்லது தீபாவளிக்கு
முன்பாகவும், 2 வது செட் பொங்கல் சமயத்திலும்
வழங்கப்படுகிறது. முதல் முதலாக இவ்வாறு இலவச
ஆடைகள் வழங்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில்
1969–70 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அப்பொழுது
கள்ளர் வகுப்பினர் பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் மூன்
றும் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு செட் ஆடை மட்டும்
வழங்கப்பட்டது. இப்போது இருமுறை வழங்கப்படுகின்
றன. இத்திட்டத்திற்காக 1972–73-ல் ரூ. 3,91,000,
1973–74-ல் ரூ. 8,06,000, 1974–75-ல ரூ. 6,58,000,
1975–76-ல் ரூ. 10,39,000, 1976–77-ல் ரூ. 3,94,900-ம்
செலவிடப்பட்டுள்ளது. 1977–78 திருத்திய மதிப்பீட்டில்
ரூ. 11,11,000-ம் 1978–79-ல் 10,89,000-ம் வகை
செய்யப்பட்டுள்ளது.

மேலும் 1971–72 முதல், அரசினர் நடத்தும் பிற்பட்ட
வகுப்பு மாணவர், உணவு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாண
வர்களுக்கும் மாணவிகளுக்கும் ஆண்டு தோறும் 2 செட்
ஆடைகள் அளிக்கப்படுகின்றன. இதற்கு 1973–74-ல்
ரூ. 1,67,000, 1974–75-ல் ரூ. 2,16,000, 1975–76-ல்
ரூ. 2,38,000, 1976–77-ல் ரூ. 2,98,000 செலவிடப்பட்டது.
1978–79க்கு ரூ. 3,30,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்கு தனிப்
பயிற்சி அளித்தல் :—கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்
கள் பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்றப்
பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு
மாணவர்களுக்கும் தாங்கள் எடுத்துள்ள பாடத்தில் அதிக

[1978 மார்ச் 18

திறமை பெற 1975–76 ஆம் ஆண்டு முதல் தனிப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் சென்ற இரண்டு ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. இதற்கு 1978–79-ம் ஆண்டிற்கு ரூ. 25,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 8-வது வகுப்புத் தேர்விலும், 11-வது வகுப்புத் தேர்விலும் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு பரிசுகள், முதற் பரிசு ஒன்று, இரண்டாவது பரிசு ஒன்று வழங்கப்படுகின்றன. இப்பரிசுகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு. இதற்காக இவ்வாண்டிற்கு ரூ.4,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14 ஆசிரியர்களுக்கு வீடுகள்:—குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக நடத்தப்படும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஒரு திட்டம் உள்ளது. இதன்படி, ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ. 10,000 மதிப்பில் ஒரு வீடு கட்டி கொடுக்கப்படும். 1978–79-ம் ஆண்டிலும் 16 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1·65 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

15 ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., மற்றும் அரசு உயர் பணிகளுக்கான பயிற்சிக்கூடம் :—டிசம்பர் 71-ல், பிற்பட்ட வகுப்பு மாணவர்களை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் உயர் அரசு பணிகளுக்கான தேர்வுகள் எழுத பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப்பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட (1971–72-ம்) ஆண்டில் 12 மாணவர்கள் சேர்ந்தனர். இதில் 8 பேர் தேர்வுக்குச் சென்றனர். 3 பேர் நேர்முக தேர்வுக்குச் சென்றனர். ஆனால் எவரும் தேர்ச்சி பெறவில்லை. 1972–73-ல் 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். 34 பேர் தேர்வு எழுதினர். 6 பேர் நேர்முக தேர்வுக்குச் சென்றனர். இதில் ஒருவர் ஐ.ஏ.எஸ்.–க்கும் இருவர் மத்திய அரசு பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1973–74-ல் 33 பேர் பரீட்சை எழுதினர். 4 பேர் நேர்முக தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் இதில் ஒருவர் ஐ.ஏ.எஸ்.-க்கும், ஒருவர் மத்திய அரசு பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1974–75-ல் 51 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 41 பேர் பரிட்சை எழுதினார்கள். இதில் 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கடைசியாக ஒருவர் ஐ.பி.எஸ்-க்கும், இருவர் மத்திய அரசுப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1975–76-ல் 60 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 3 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 1976–77-ல் 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 32 மாணவர்கள் தேர்வு எழுதினர். தேர்வு முடிவுகள் வரவில்லை.

1978 மார்ச் 18]

மேலும், இந்திய யூனியன் தேர்வாணைக்குழு நடத்தும் அகில இந்திய பரீட்சைகளில் ஒன்றான தேசிய பாதுகாப்பு கல்லூரி தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு தனிப்பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதில் 15 பிற்பட்ட மாணவர்களுக்கும் 15 அரிசனப் பழங்குடி மாணவர்களுக்கும் இடம் உண்டு. அம்மாணவர்களுக்கு கைச் செலவுக்காகவும் போக்குவரத்து செலவுக்காகவும் மாதம் ரூ. 40 வழங்கப் படுகிறது.

16. பொருளாதார வளர்ச்சி:—(i) இத்திட்டத்தின்கீழ் முடிதிருத்துவோர்களுக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அவரவர் தொழில்களைச் செய்துவர தொழிற் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1971–72 வரை வெளி மாவட்டங்களிலும் 1971–72 முதல் சென்னை உள்ளிட்ட எல்லா இடங்களிலும் அமுலாக்கப்படுகிறது. சென்ற ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்தோரின் எண்ணிக்கை :—

ஆண்டு.	பயனடைந்த நபர்கள்.
(1)	(2)
1966–67	1,440
1967–68	1,425
1968–69	1,498
1969–70	1,542
1970–71	1,512
1971–72	1,633
1972–73	1,639
1973–74	4,081
1974–75	3,961
1975–76	3,582
1976–77	3,695
1977–78	3,695

(ii) 1977–78-க்கு ரூ. 5,77,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1978–79-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 11,77,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போயர்களுக்கு இலவச தொழில் கருவிகள் வழங்கும் பொருட்டு 1978–79-க்கு ரூ. 10,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனால், சேலம், தென்னாற்காடு, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள போயர்கள் பயனடைவர். இது நாளடைவில் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும்.

(iii) சலவைத்துறைகள் கட்டுதல் :—சலவைத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைத் திறம்படச் செய்வதற்கு சில இடங்களில் சலவைத் துறைகள் தேவையாக உள்ளன. இவைகளை சுகாதார முறைகளில் அமைப்பதற்காக நகர ஊராட்சிகளுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மொத்தச் செலவில் பாதித் தொகை கடனாகவும் மீதித் தொகை மானியமாகவும் வழங்கப்படுகிறது. தமிழ் நாட்டில் 42 இடங்களில் சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

(iv) சென்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 3 பொது நோக்கு பொறியியல் பணிமனைகள் குற்றப்பரம்பரையினர்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மக்களின் உயர்வு கருதி தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவைகள் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலும், மதுரையில் செக்கானூரணியிலும், திருநெல்வேலியில் வீரகேரளம்புதூரிலும் அமைந்துள்ளன. இவை தொழில் வணிகத்துறைஇயக்குநரின் மேற்பார்வையில் உள்ளது. இவைகளில் பற்ற வைத்தல், சேர்த்தல் ஆகிய துறைகளில் 18 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பொதுநோக்கு பொறியியல் பணிமனை ஆரம்பிக்கப்பட இருக்கிறது. 1978–79-ல் இவைகளைப் பராமரிக்கும் பொருட்டு ரூ. 4,36,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரின் நலத்திற்காக கீழ்க்கண்ட இடங்களில் தொழிற் பயிற்சிக் கூடங்கள் நடத்தப் படுகின்றன :—

(1) தையல் மற்றும் ஆயத்த ஆடைகள் பயிற்சிககூடம்—குலவணிகர்புரம், திருநெல்வேலி மாவட்டம்.

(2) தையல் பயிற்சிக்கூடம்—உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

(3) பிரம்பு மற்றும் நார் பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம்—(1) பூாகோடு, (2) குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

மேலும், 1977–78-ம் ஆண்டில் தையல் பயிற்சி அளிப்பதற்காக புதியதாக 5 தையல் பயிற்சிக் கூடங்கள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் ஆரம்பித்து, நிலையம் ஒன்றில் 20 பேருக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது :—

மாவட்டம்.

கன்னியாகுமரி.

தென்னாற்காடு (அஜீஸ் நகர்).

மதுரை.

இராமநாதபுரம்.

திருநெல்வேலி.

இப்பயிற்சிக்கூடங்களை பராமரிப்பதற்காக 1976-77-ல் ரூ. 4,68 இலட்சம் செலவிடப்பட்டது. 1977–78-ல் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 6.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டது. 1978–79-ல் இதற்காக ரூ. 7.09 இலட்சம் ஒதுக்கிடப்பட்டுள்ளது.

17. விவசாயம்:—குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கிணற்றிற்கு ரூ. 2,500 வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. 1977–78-ல் 40 பேர்களுக்கு உதவியளிக்க ரூ. 1,00,000ஒதுக்கப்பட்டது. 1978–79-க்கும் ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

18. சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் இதர திட்டங்கள் :—1956–57-ம் ஆண்டு முதல் குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக கடன் மற்றும் மானிய அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. முன்னர் ஒரு வீடு ரூ. 1,200 மதிப்பில் கட்டப்பட்டது. இதில் கடன் ரூ. 300, மானியம் ரூ. 900. 1975–76-ல் இருந்து வீட்டிற்கான மொத்தத் தொகை ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டது. இதில் ரூ. 2,025 மான்யமும் ரூ. 675-க்கு பொருளாகவோ, உழைப்பாகவோ பணமாகவோ பயனடைவோர் பங்காகவும் உள்ளது. இத் திட்டத்திற்கு 1978-79-க்கு ரூ. 10,00,000 ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

[1978 மார்ச் 18

19. குழந்தைகள் காப்பகம்—அஜீஸ் நகர் குடியிருப்பில் குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரின் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் சரியாக பராமரிக்கப்படவில்லை என்று தெரிய வந்தது. இக்குழந்தைகளின் நலனைப் பேணி வளர்ப்பதற்காகவும், கருவுற்றுள்ள மகளிர் நலத்தைப் பேணுவதற்காகவும் அஜீஸ் நகரில் 5 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டு உள்ளன. இவை சமூக நலத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. இவைகளுக்கான செலவினை பிற்பட்டோர் நலத்துறை ஏற்கிறது. 'கேர்' நிறுவனத்தின் உதவி இவைகளுக்குக் கிடைக்கும். இவைகளில் 350 தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. ஐந்து பால சேவிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்காக 1977–78 திருத்திய மதிப்பீட்டில் ரூ. 53,000-மும், 1978–79-க்கு ரூ. 17,000-மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக, பிற்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எனவே, பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிக்கொள்கிறேன்.

இணைப்பு IV

[41-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் பணி குறித்த கொள்கை விளக்க ஆய்வுரை

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இரு பெரும் அங்கங்கள் கொண்டது—அச்சகம், எழுதுபொருள் கிடங்கு என்பவை. அவை எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன. அவருக்கு நிர்வாகத்தில் அச்சகத் துணை இயக்குநர் ஒருவரும், அச்சகப் பிரிவில் பொது மேலாளர் ஒருவரும், கணக்குகளைப் பொறுத்தவரை தலைமைக் கணக்கு அதிகாரி ஒருவரும், எழுதுபொருள் கிடங்கைப் பொறுத்தவரை எழுதுபொருள் உதவி இயக்குநர்

1978 மார்ச் 18]

ஒருவரும், உதவிபுரிந்து வருகின்றனர். இவர்கள் தவிர, அண்ணாசாலையில் உள்ள அரசு வெளியீடுகள் நிலையம் விற்பனை அலுவலர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது.

இயக்குநர் மைய அச்சகம், கிளை அச்சகங்கள், வட்டார அச்சகங்களின் அன்றாட நிர்வாகப் பணியிலிருந்து விடுபட்டு, மிகப் பெரும் பணிகளான திட்டமிடுதல், முடிவெடுத்தல் ஆகியவற்றில் கவனத்தைச் செலுத்தும் பொருட்டு, எழுதுபொருள் அச்சுத்துறையைத் திருத்தி அமைக்கும் குழுவின் பரிந்துரைக்கிணங்க, 220 நபர்களைக் கொண்ட ஒரு தனி இயக்குநர் அலுவலகம், 1978-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் அமைக்கப்பட்டது.

2. அச்சடிப்புப் பிரிவு கீழ்க்கண்ட பகுதிகளைக் கொண்டுள்ளது :—

(அ) சென்னை வள்ளலார் நகரிலுள்ள மைய அச்சகம்.

(ஆ) சென்னை உயர்நீதிமன்றக் கட்டிடத்தில் உள்ள கிளை அச்சகம்.

(இ) சென்னை மத்திய சிறைச்சாலையில் உள்ள கிளை அச்சகம்.

(ஈ) சென்னை சூளைப் பகுதியில் ஆனைக்காரர் எஸ்டேட்டில் உள்ள கிளை அச்சகம்.

(உ) புதுக்கோட்டையிலுள்ள கிளை அச்சகம்.

(ஊ) திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டார அச்சகம்.

(எ) சேலத்திலுள்ள வட்டார அச்சகம்.

(ஏ) விருத்தாசலத்திலுள்ள வட்டார அச்சகம்.

(ஐ) மதுரையிலுள்ள வட்டார அச்சகம்.

3.1. மைய அச்சகம், சென்னை.

வள்ளலார் நகரிலுள்ள மைய அச்சகத்தின் அலுவலக அமைப்பும், பணியாளர்கள் வகையும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. மைய அச்சகத்தின் பணி மேலாளர், மைய அச்சகப் பிரிவு சம்பந்தப்பட்ட

[1978 மார்ச் 18

செலவினங்களுக்குப் பணம் பெறும் அதிகாரத்துடன் அலுவலகத் தலைவராக இருக்கிறார். இவ்வச்சகம் தொழில் நுட்ப பணியாளர்கள் உட்பட 3,527 நிர்வாகப் பணியாளர்களை நிரந்தரமாகக் கொண்டது. இவ்வச்சகம் மூன்று பணிமுறை மாற்றில் செயல்படுகிறது. இப்பிரிவில் 105 உடல் ஊனமுற்றவர்களும், 222 பெண் பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். பரிசுச் சீட்டுகளை அச்சடிப்பதற்கென்று கூடுதல் பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதியளித்துள்ளது. இதில் 57 அச்சடிக்கும் பொறிகள், 21 வரியச்சு இயந்திரங்கள் (Lino and Inter-type), 10 தனியச்சுப் பலகணிகள், 32 தனியச்சு வார்ப்புகள், 2 உயர்நிலை அச்சுவார்ப்புகள் (Super Casters), உதிரி எழுத்துக்கள் வார்க்கும் இயந்திரம் ஒன்று (Loose type Caster), மற்றும் 53 பலவித புத்தகம் கட்டும் பொறிகள் உள்ளன. இத்துடன் 5 ''ரோட்டா'' அச்சுப் பொறிகள், பட அச்சு ஒளிப்படக் கருவி, பட அச்சு தயாரிக்கும் பிற சாதனங்கள், ''ஆப்செட்'' தட்டுகள் (Plate Making) செய்யும் சாதனங்கள் உள்ளன. சமீபத்தில் ஓர் ''எலக்ட்ரானிக் ஸ்டென்சில் கட்டிங்'' இயந்திரமும் (Electronic stencil cutting machine), மின்சாரத்தால் இயங்கும் இரண்டு ''பிரதி எடுக்கும் இயந்திரங்களும்'' இவ்வச்சகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. ரூ. 3·24 இலட்சம் மதிப்புள்ள ஒரு தனியச்சு உயர்நிலை வார்ப்பு இயந்திரமும் (Monotype Super Caster), அதன் உதிரி சாதனங்களும் மைய அச்சகத்தில் அண்மையில் அமைக்கப்பட்டன. ரூ. 5,000 செலவில் மின் விசிறிகளும் காற்றுப் போக்கிகளும் இரகசியப் பிரிவில் பொருத்தப்பட்டுள்ளன.

1977–78 நடப்பு ஆண்டில் கட்டிடம் முதலியன பராமரிப்புக்காக ரூ. 1·29 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 5·92 இலட்சம் செலவில் புதிய கட்டிடத்தில் இரண்டாம் தளம் கட்டும் பணி நடந்து வருகிறது.

தரப்படுத்திய படிவங்கள், தரப்படுத்தாத படிவங்கள் ஆகியவற்றை அச்சடிப்பதோடல்லாமல் இவ்வச்சகம் அரசுச் செயலகத்தின், பல்வேறு துறைகள்,

1978 மார்ச் 18]

போக்குவரத்துக் கழகங்கள், பால்வள நிறுவனம் மற்றும் ஊராட்சி, நகராட்சி முதலியவைகளால் கொடுக்கப்படும் அச்சுப் பணிகளையும் துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவர்கள் ஆகியோர் தரும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. மைய அச்சகம் மேற்கொண்டுள்ள பணிகளில் முக்கியமான சில பணிகள் வருமாறு :—

(1) வரவு - செலவுத் திட்ட ஆவணங்கள் (சுமார் 6,000 பக்கங்கள்).

(2) வாராந்திர தமிழ்நாடு அரசிதழ், விசேட தமிழ்நாடு அரசிதழ்கள்.

(3) பரிசுச் சீட்டுகள்.

(4) பங்கீட்டு அட்டைகள்.

(5) பால் அட்டைகள்.

(6) தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் மற்றும் ஊராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வாக்குச் சீட்டுக்கள்.

(7) மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மாதாந்திரப் பேருந்துச் சலுகை அட்டைகள்.

(8) தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் ''யார்-எவர்''.

(9) ஊராட்சித் தேர்தல் சின்னங்கள்.

(10) மும்மாத நாட்காட்டிகள், மாதாந்திர நாட்காட்டிகள், சிறப்பு நாட் குறிப்பேடுகள்.

(11) சட்டமன்ற நடவடிக்கைகள்.

(12) சென்னை நகரிலுள்ள அரசு அலுவலகங்களின் தொலைபேசி எண்கள் அடங்கிய நூல்.

(13) ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சித் தேர்தல்களுக்கான படிவங்களும், பதிவேடுகளும்.

(14) முதல் அமைச்சரின் பொதுமக்கள் நிவாரண நிதிக்கான இரசீது புத்தகங்கள்.

(15) விதித் தொகுப்புகளும், நடைமுறை நூல்களும்.

(16) பல துறைகளின் செய்தி இதழ்கள்.

(17) பல துறைகளின் சாதனைத் திட்டங்களும், கொள்கை விளக்கக் குறிப்புகளும்.

[1978 மார்ச் 18

(18) தலைமைச் செயலகத்திலுள்ள பல்வேறு துறைகள், துறைத் தலைவர் அலுவலகங்கள் ஆகியவற்றின் பணியாளர் பட்டியல்.

(19) அழைப்பிதழ்களும், மற்றவைகளும்.

3.2. உயர்நீதி மன்றக் கிளை அச்சகம்.

இவ்வச்சகம் 237 பணியாளர்களை நிரந்தரமாகக் கொண்டு, உயர்நீதி மன்றக் கட்டிடத்தில் செயல்படுகிறது. உயர்நீதி மன்றத்திற்குத் தேவைப்படும் அன்றுடப் பட்டியல்கள், வாராந்திர உயர்நீதி மன்றப் பட்டியல்கள் ஆகியவற்றை உரிய காலத்தில் அச்சடித்து வழங்குவது இவ்வச்சகத்தின் முக்கிய பணியாகும். இத்துடன் இந்தியச் சட்டத் தீர்ப்பு அறிக்கைகள் அச்சிடுவதும் உயர்நீதி மன்ற நூலகப் புத்தகங்களைக் கட்டுவதும் (Binding) இவ்வச்சகத்தின் .. பணியாகும். இவ்வச்சகமும் மூன்று பணிமுறை மாற்றில் செயல்படுகிறது.

3.3. சென்னை மத்திய சிறையிலுள்ள கிளை அச்சகம்.

இவ்வச்சகம், குற்றவாளிகளின் நலனைக் கருதி, அச்சடிப்புப் பணியில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நோக்குடன், மத்திய சிறையில் அமைக்கப்பட்டுள்ளது. கைதிப் பணியாளர்களுடன் இவ்வச்சகத்தில் இத்துறையின் 44 பணியாளர்கள் செயலாற்றி வருகின்றனர். கைதிகளின் நலன் கருதிய பயிற்சியாக இருந்த போதிலும், இத்துறை இவ்வச்சகத்தில் பணிபுரியும் ஒவ்வொரு கைதிக்கும், நாள் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் கொடுக்கின்றது. இவ்வாருக் கைதிகள் பயிற்சி பெறும் போதே ஊதியமும் பெற முடிகின்றது. இப்பயிற்சி அவர்களுக்கு விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்புப் பெறும் வாய்ப்பையும் அளிக்கின்றது. இவ்வச்சகம், காவல்துறை மற்றும், கல்வித் துறைக்கான படிவங்களின் ஒரு பகுதியை அச்சிட்டு, தேவைப்படும் அத்துறை அலுவலர்களுக்கு வழங்குகிறது.

1978 மார்ச் 18]

3.4. சென்னை சூளையிலுள்ள ஆனைக்காரன் எஸ்டேட்டில் உள்ள கிளை அச்சகம்.

இவ்வச்சகம், 1974ஆம் ஆண்டிலிருந்து வாடகைக் கட்டிடத்தில், மூன்று பணி முறை மாற்றில் செயல்படுகிறது. இவ்வச்சகத்தின் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 696 ஆகும். அவர்களில், 183 பெண் பணியாளர்கள் உள்ளனர். இவ்வச்சகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு, காவல்துறை, மருத்துவத்துறை மற்றும் வணிகவரித் துறையினரால் கொடுக்கப்படும் அச்சடிப்புப் பணிகளுடன் கீழ்க்கண்ட முக்கிய வெளியீடுகளும் அச்சிடப்படுகின்றன:—

(1) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை குழுவின் இருவார செய்தி அறிவிப்புகள்.

(2) சாதாரண நாட் குறிப்பேடு.

(3) காவல்துறை நிலை ஆணைகள் (தமிழில்).

இவ்வச்சகத்தில் இணைக்கப்பட்டுள்ள திட்டப் பிரிவு குறைந்த செலவில் பணியாளர்கள், இயந்திரங்கள், பொருள்கள் முதலியன பெரிதும் உகந்த அளவுக்குப் பயன்படவும், உற்பத்தி அட்டவணையை நிர்ணயிக்கவும், பிரதிகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பவும் செயல்படுகிறது.

சுழல்முறை எண் அச்சு இடும் இயந்திரங்கள் (Rotary Numbering Machines) இரண்டு புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

பணியாளர்களுக்குத் தேவைப்படும் சிற்றுண்டிகளை நியாயமான விலையில் வழங்க ஒரு தனி குத்தகையாளரால் சிற்றுண்டிசாலை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது குழந்தைகள் காப்பகம் ஒன்றும், ஓய்வுக் கொட்டகை ஒன்றும் இங்கு பணிபுரியும் மகளிர் நலனுக்காக உள்ளன.

[1978 மார்ச் 18

3.5. புதுக்கோட்டை கிளை அச்சகம்.

இந்த அச்சகம் மொத்தம் 256 பணியாளர்களைக் கொண்டு, இரண்டு பணி முறைமாற்றில் செயல் படுகிறது. இந்த அச்சகத்தில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

(1) சென்னை தவிர, மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள், சிறப்பு வெளியீடுகள் ஆகியவை ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சடிக்கப்படுகின்றன.

(2) சென்னை உயர்நீதிமன்றம் தொடர்பான படிவங்கள்.

(3) தமிழ்நாடு கணக்கு, நிதி, ஓய்வு விதித் தொகுப்புகள் ஆகியவை சம்பந்தப்பட்ட படிவங்கள்.

(4) அரிசன நலம், பின்தங்கிய வகுப்பினர் நலன், மீனளம், பத்திரப்பதிவு ஆகிய துறைகள் தொடர்பான படிவங்கள்.

(5) செட்டில்மெண்ட் 'ஏ' பதிவேடுகள்.

(6) "மெட்டாலிக்" புத்தகங்கள், "நில அளவை" புத்தகங்கள், "கார்பன்" நோட்டுப் புத்தகங்கள், "போனோ" நோட்டுப் புத்தகங்கள் போன்றவை அச்சகம் தயாரிக்கும் பொருட்களாகும்.

இந்த அச்சகத்திற்குத் தேவைப்படும் பட அச்சுகள் செய்துகொள்ளப் புதிதாகப் பட அச்சு தயாரிக்கும் பிரிவு ஒன்று 1977-78 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வச்சகத்தில் உள்ள பழைய இயந்திரங்களை மாற்றியமைக்க, ரூ. 4·90 இலட்சம் செலவில் மூன்று புதிய எச்.எம்.டி. அச்சடிக்கும் இயந்திரங்களை வாங்குவதற்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3.6. அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.

இந்த அச்சகம் அரியமங்கலம் தொழிற்பேட்டையில் அமையப்பெற்றுள்ளது. 167 பணியாளர்களைக் கொண்டு இரண்டு பணி முறைமாற்றில் செயல்படுகிறது. சிறப்பாக தரப்படுத்திய பொது படிவங்களை அச்சிடும்

1978 மார்ச் 18]

பணியில் முழுக்கவனம் செலுத்துவதோடு, கால்நடை பராமரிப்புத்துறையின் பணியாளர் பட்டியல், திருச்சிராப்பள்ளி மாவட்ட செஷன்ஸ் வழக்குகளின் தீர்ப்புகளின் நகல்கள், செட்டில்மெண்ட் 'ஏ' பதிவேடுகள் ஆகியவற்றை அச்சிடும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.

இந்த அச்சகத்தில், புதிய பட அச்சு தயாரிக்கும் பிரிவு ஒன்று 1977-78 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அச்சகத்தில் உள்ள பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக, ரூ. 8·15 இலட்சம் செலவில் ஐந்து எச்.எம்.டி. அச்சடிக்கும் இயந்திரங்களை புதிதாக வாங்குவதற்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அச்சகத்திற்கு நிரந்தரமான கட்டிடம் கட்டுவதற்காக துவாக்குடித் தொழிற்பேட்டையில் 3·08 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அச்சகத்தில் மனமகிழ் மன்றம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த மனமகிழ் மன்றத்திற்குத் தொழிலாளர் நல நிதியிலிருந்து ஆண்டு தோறும் ரூ. 200 வழங்கப்பட்டு வருகிறது.

3.7. அரசு வட்டார அச்சகம், சேலம்.

இந்த அச்சகம் ஒரு வாடகை கட்டிடத்தில், இரண்டு பணி முறைமாற்றுகளில் 150 பணியாளர்களைக் கொண்டு இயங்கிவருகிறது.

தரப்படுத்திய கருவூலப்படிவங்கள், செட்டில்மென்ட் 'ஏ' பதிவேடுகள் ஆகியவற்றையும் மத்திய அச்சகம் ஒப்படைக்கும் ஏனைய அச்சுப் பணிகளையும் இந்த அச்சகம் செய்துவருகிறது.

பணியாளர்களின் நலனுக்காக மனமகிழ் மன்றம் ஒன்று இருக்கிறது.

[1978 மார்ச் 18

3.8. அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.

இந்த வட்டார அச்சகத்திற்கு நிரந்தரமான கட்டிடம் கட்டுவதற்காக, விருத்தாசலம் நகருக்கடுத்துள்ள கண்டியாகுப்பம் கிராமத்தில் 3·65 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது. கட்டிடங்கள் கட்டவும் அச்சகத்திற்கு மின்வசதி செய்யவும், ரூ. 17·95 இலட்சத்திற்கு மேற்படாமல் செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. கட்டிடம் கட்டும் பணி நடந்தேறி வருகிறது.

இதற்கிடையில், இந்த அச்சகம் வாடகைக் கட்டிடத்திலிருந்து புதிதாக கட்டப்பட்ட ஓரளவு நிரந்தரமான கட்டிடத்திற்கு அண்மையில் மாற்றப்பட்டுள்ளது. இந்த அச்சகம், 154 பணியாளர்களைக் கொண்டு இரண்டு பணி முறைமாற்றில் செயல்பட்டு வருகிறது. ஒரு புதிய கம்பி அடித்துத் தைக்கும் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை படிவங்கள், ஜமாபந்தி படிவங்கள், செட்டில்மெண்ட் 'ஏ' பதிவேடுகள், கால்நடை பராமரிப்புத் துறை, வனத்துறை, புள்ளி விவரத்துறை, தொழில்துறை, தேசிய மாணவர் படை, வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை, வேளாண்மைத்துறை, ஆகியவற்றிற்குத் தேவைப்படும் படிவங்கள் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

பணியாளர்களின் நலனுக்காக பணியாளர் சிக்கனக் கடன் வழங்கு சங்கம் செயல்பட்டு வருகிறது.

3.9. அரசு வட்டார அச்சகம், மதுரை.

இந்த அச்சகம் 14-4-1975-லிருந்து செயல்பட்டு வருகிறது. இது 334 பணியாளர்களைக் கொண்டு இரண்டு பணி முறைமாற்றில் அதனுடைய சொந்தக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. வருவாய்த்துறைப் படிவங்கள், பதிவேடுகள், சிறைத்துறை, அறநிலையத் துறை ஆகியவற்றிற்குத் தேவைப்படும் படிவங்கள், பதிவேடுகள், ஆகியவை அச்சடிக்கப்படுகின்றன. இங்கே "சுழல் முறை எண் அச்சு இடும்" (Rotary Numbering Machine) இயந்திரம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 18]

இந்த அச்சகம் நிறைவாக அமையும் பொருட்டு இதில் பட அச்சு தயாரிக்கும் பிரிவு ஒன்றும் 1977-78-ல் புதியதாக ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

4. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம்.

அரசு வெளியீடுகள், அண்ணாசாலையிலுள்ள அரசு வெளியீட்டு விற்பனை நிலையத்தின் மூலமாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாக பொதுமக்களுக்கு நேரடியாக விற்பனை செய்யப்படுகின்றன. இவ்விற்பனை நிலையத்தில் 54 பேர் பணியாற்றுகின்றனர். 1-4-1977 முதல் 31-1-1978 வரை ரூ. 3·40 இலட்சத்திற்கு மொத்த விற்பனையாகியுள்ளது.

பொதுமக்கள் மற்றும், வழக்கறிஞர்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று துணை விற்பனை நிலையம் ஒன்று, உயர்நீதிமன்றக் கட்டிடத்தில் 23-9-1977 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இத்துணை விற்பனை நிலையத்தில், பொதுமக்கள், வழக்கறிஞர்களின் ஆதரவால் நல்ல விற்பனை ஆகிறது.

5. எழுதுபொருள் பிரிவு.

எழுதுபொருள் அச்சுத்துறையின், எழுதுபொருள் பிரிவில் 328 பேர் நிரந்தர அடிப்படையில் பணியாற்றுகின்றனர். அப்பிரிவு மைய முகவராக இருந்து, மாநிலம் முழுவதிலுமுள்ள அரசு அலுவலகங்களுக்குத் தேவையான காகிதம், அட்டைகள், எழுதுபொருட்கள், தட்டெழுத்துப்பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கிடும் பொறிகள் ஆகியவற்றை வாங்கி வழங்குகிறது. மேலும் சென்னை மாநகரில் தலைமைச் செயலகம் துறைத் தலைவர்கள் அலுவலகங்களிலுள்ள கடைநிலை ஊழியர்களுக்கும், மாநகரிலும் வெளியூர்களிலும் உள்ள மருத்துவ மனைகளில் பணிபுரியும் குற்றேவலர்கள், மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட நீதிபதிகளின் டபேதார், கடைநிலை ஊழியர்கள் ஆகியோர்களுக்கும் உடைகள் வழங்குகிறது. அரசு அலுவலகங்களுக்கு வேண்டிய எழுதுபொருட்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. வணிக அடிப்படையில் இயங்கும் அரசுத்

[1978 மார்ச் 18

துறைகளுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் உரிய தொகை பெற்று எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன.

6. "குறிக்கோள் கொண்ட நிர்வாக முறையை" நிறைவேற்றுதல்.

எழுதுபொருள்-அச்சுத் துறையில், "குறிக்கோள் கொண்ட நிர்வாக முறை" செயல்படுத்தப்பட்டு வருகிறது. மைய அச்சகத்திலும், கிளை அச்சகங்களிலும், வட்டார அச்சகங்களிலும் மேற்குறித்த முறையின் பலனாக உற்பத்தி அளவு பெருகி இருப்பதைக் காண முடிந்தது. அச்சடிப்பு வேலைகள் யாவும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு, கால நிர்ணயம் செய்யப்பட்டு, அக்கால கெடுவுக்குள்ளாக அனுப்புவதற்கு, ஏற்ப வகை செய்யப்படுகிறது. வேலையைச் சிக்கனமான செலவில் முடிக்கும் உணர்வு மிகப்பெரும் அளவில் வளர்க்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன "குறிக்கோள் கொண்ட நிர்வாக முறை"யைக் கையாண்டதன் விளைவாக அச்சிடுவதற்காகும் தாள்கள், அச்சடிக்கும் செலவு மிச்சப்படுத்தப்படுகின்றன. மேலும், உற்பத்தித் திறனும், உற்பத்திக் காலத்தின் உபயோகமும் அதிகரித்துள்ளன.

7.1. பணியாளர்களுக்கான வசதிகள்.

பணியாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதில் இத்துறை தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. அவைகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

7·2. சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள அரசினர் அச்சகப் பணியாளர் குடியிருப்பில் 300 குடும்பங்கள் உள்ளன. இவைகளுக்குத் தேவையான வசதிகளைப் பல ஆண்டுகளாகச் செய்து தராத நிலை மாறி தற்போது வசதிகள் செய்து தரப்படுகின்றன. பொதுப் பராமரிப்புப் பணிகளுக்காகவும், பெரிய பழுது பார்ப்புப் பணிகளுக்காகவும், படிப்படியாக திட்டமிடப்பட்டு நடப்பு ஆண்டில் (1977–78) ரூ. 1·37 இலட்சம் செலவில் தேவையான வசதிகளைச் செய்து தரும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

1978 மார்ச் 18]

7·3. சென்னை மத்திய அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்களுடைய குடிநீர் தேவைக்காக, இரண்டு கூடுதல் நீர்ப் பதனப் பெட்டிகள் வாங்குவதற்காக சமீபத்தில் அரசு ரூ. 17,000 வழங்கியுள்ளது.

7·4. மதுரை வட்டார அச்சகத்திற்குப் போதுமான அளவு குடிதண்ணீர் வசதி கிடையாது. இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக மதுரை மாநகராட்சி குடி நீர் வழங்கல் ஏற்பாட்டு முறையுடன் அச்சகத்தை இணைக்க, 3 அங்குல குழாய்களை அமைப்பதற்காக ரூ. 31,600க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

7·5. இத்துறையில் பணிபுரியும் செய்தியாட்கள், காவல்காரர்கள் மற்றும் மின்பணியாளர்கள் ஆகிய 98 பணியாளர்களுக்கு மழையில் நனையாமல் இருக்க கோட்டும், தொப்பியும் வாங்கி அளிப்பதற்காக ரூ. 5,488 அரசு அனுமதித்துள்ளது.

7·6. மைய அச்சகத்தில் இணைக்கப்பட்டுள்ள மருந்தகம், நாள்தோறும் சுமார் 175 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறது. மருத்துவ அலுவலர், வெள்ளிக்கிழமையன்று எழுதுபொருள் சேமிப்பகத்திற்கும், வியாழக்கிழமையன்று சென்னையிலுள்ள ஆனைக்காரன் எஸ்டேட் கிளை அச்சகத்திற்கும், செவ்வாய்க்கிழமையன்று உயர்நீதி மன்ற கிளை அச்சகத்திற்கும் வாராவாரம், நேரில் சென்று அங்கு பணியாற்றுவோருக்குத் தக்க மருத்துவ உதவி செய்து வருகிறார். பணியாளர்களுக்கு மட்டுமின்றி, அவர்களுடைய குடும்பத்தாருக்கும் மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது. அவசரமாகப் பணியாளர்களை அரசினர் மருத்துவ மனைகளுக்குக் கொண்டு செல்வதற்காக ஒரு "ஆம்புலன்ஸ்" வண்டியும் (Ambulance Van) மருந்தகத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

7·7. பெண் பணியாளர்களுக்கு உதவியாக, அவர்களின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள "குழந்தைகள் காப்பகம்" ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பெண் பணியாளர்களின் பயனுக்காக ஓய்வறை ஒன்றுக்கும் வகைசெய்யப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 18

7·8. ஈயம் உருக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு பணியின்போது ஏற்படும் கெடுதியிலிருந்து பாதுகாப்பளிக்கக் கொடுக்கப்பட்டு வந்த பாலுக்குப் பதிலாக, ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 40 காசுகள் வீதம் ரொக்கமாகவும் பல்வகை உயிர் ஊட்டச் சத்து மாத்திரைகளும் கொடுக்கப்படுகிறது.

7·9. மைய அச்சகத்தில் செயல்படும் தமிழ்நாடு அரசினர் எழுதுபொருள் அச்சுத்துறைத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம், பணியாளர்களுக்குத் தேவையான கடன் வசதிகளை அளித்து நல்லமுறையில் பணியாற்றி வருகிறது. அது தன் அங்கத்தினர்களுக்கு அவர்களுடைய பங்குத் தொகைக்கு ஏற்ப 9 சதவீதம் ஈவுத் தொகையாக நடப்பு ஆண்டில் வழங்கியுள்ளது.

கூட்டுறவுப் பண்டகசாலை, பணியாளர்களுக்கு இன்றியமையாது தேவைப்படும் பண்டங்களை நியாய விலையில் அளிப்பதன் மூலம், பயனுள்ள தொண்டாற்றி வருகிறது.

7·10. பணியாளர்களுக்காக, பலவித போட்டி விளையாட்டுகளுக்கு நல நிதியிலிருந்து ரூ. 3,000 வழங்கப்பட்டுள்ளது.

7·11. பணியாளர்கள் இறக்கநேரிடின், அவர்களது குடும்பத்திற்கு, ஈமச்சடங்கிற்கும், மற்றைய செலவுகளுக்கும் ஏற்படும் உடனடித் தேவைகளுக்கு, நல நிதியிலிருந்து உதவப்பட்டு வருகிறது. அவ்வாறு கொடுக்கப்பட்டு வந்த ரூபாய் 50ஐ, ரூபாய் 100 ஆக அரசு சமீபத்தில் உயர்த்தியுள்ளது.

7·12. தொழிலாளர்களது குறைகளை விரைவில் போக்குவதற்கு இத்துறை தனிப்பட்ட நாட்டம் செலுத்தி வருகிறது. எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர், பணியாளர்களது குறைகளை நேரில் கேட்டு உடனுக்குடன் தீர்வு காண இதற்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கியுள்ளார்.

பொது.

8·1. பணியாளர்கள் இத்துறையின் முன்னேற்றத்திற்காக பயிற்சி பெறும் பொருட்டு, போதுமான வசதிகளைச் செய்ய இத்துறை மும்முரமாகக் கவனம் செலுத்தி

1978 மார்ச் 18]

வருகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்கள், சென்னை வட்டார தொழிலாளர் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் "தொழிலாளர் கல்வி ஆசிரியராக" சிறப்புப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள அனுப்பப்பட்டு வருகின்றனர். தொழிலாளர் கல்வி ஆசிரியருக்கும், இக்கல்வி வகுப்பில் கலந்து கொள்ளும் பணியாளர்களுக்கும், கல்விப் பயணம் சென்றுவர ஒரு குறிப்பிட்ட தொகை அளிக்கப்பட்டு வருகிறது. அவருடைய பயிற்சிக் காலத்தை ஊதியத்துடன் கூடிய பணிநாளாகக் கருதப்படுகிறது.

8·2. சென்னையிலுள்ள தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநரால் நடத்தப்படும் தொழிற்சங்க தலைவர் பயிற்சி வகுப்பிற்கு, தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர். அவர்கள் பயிற்சி பெறும் காலம் முழு ஊதியத்தோடு கூடிய பணிக்காலமாகக் கொள்ளப்படுகிறது.

8·3. அரசு எழுதுபொருள்-அச்சுத்துறையில் பணியாற்றும் 195 மேற்பார்வையாளர்களுக்காக, சென்னை உற்பத்தித்திறன் குழுவினர், "மேற்பார்வை மேம்பாட்டுப் பயிற்சி வகுப்புகள்" நடத்தினர்.

8·4. குடும்பங்களுக்குத் துணை வருவாய் கிடைப்பதற்கு, மகளிர் நலத்திட்டமாக மேலுறைகள் தயாரித்தல், புத்தகங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் சென்னை நகரிலுள்ள ஒன்பது சமூக நல நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அவைகள் செய்த பணிகளுக்கு 1977 ஆம் ஆண்டு உழைப்பூதியமாக, ரூ. 60,928 கொடுக்கப்பட்டது. இதனால் 201 வசதியற்ற குடும்பங்கள் பயனடைகின்றன.

[1978 மார்ச் 18

8·5. கதர்-கிராமக் கைத்தொழில்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலம், பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாண்டில், ரூபாய் 16·71 இலட்சம் மதிப்புள்ள ஈச்சம் பாய்கள், சோப்புகள், கதர்த் துணிகள் முதலியவை மேற்படி பிரிவுகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

8·6. பணியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு முறைகளை உறுதியாக ஏற்படுத்தப் பாதுகாப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அரசினர் மைய அச்சகத்தில் பணியாற்றி வருகிறது. இந்த அச்சகம் பாது காப்பு நடவடிக்கைகளைச் செவ்வனே செயற்படுத்திச் சிறப்பிடம் பெற்றுள்ளது. 1976 ஆம் ஆண்டுக்கான இந்திய அரசு தொழிலாளர்கள் நல அமைச்சக மதிப் பளிப்புக் குழுவினர் சென்னை வள்ளலார் நகரிலுள்ள அரசினர், மைய அச்சகத்தை தேசியப்பாதுகாப்பு விருது வழங்கத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

8·7. உடலூனமுற்றவர்களைப் பணிக்கமர்த்துவதில் இத்துறை சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன் மூலம் அவர்கள் வாழத் தேவையான உதவிகளை அளித்து வருகிறது. 105 உடல் ஊனமுற்றவர்களை மத்திய அச்சகம் வேலைக்கு அமர்த்தியுள்ளது. உடல் ஊனமுற்றவர்களை வேலைக்கமர்த்தி ஆதரிப்பதில் தமிழ் நாடு அரசினர் எழுது பொருள்-அச்சுத்துறை முதலிடம் வகிப்பதால், உடலூனமுற்றோரை வேலைக்கமர்த்தும் மிகச் சிறந்த நிர்வாகத்தினர் எனும் விருதை, புது டில்லியிலுள்ள ராஷ்டிரபதி பவனத்தில், இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் நாள் அத்துறைக்கு அளிக்கப் போகிறார் என்ற நற்செய்தி, இந்திய அரசாங்க சமூக நல இலாகாவிலிருந்து இத்துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 18]

"எழுதுபொருள்-அச்சுத்துறை", பணியாளர்களது அயராத ஒத்துழைப்புடன், சிக்கனம், தரம், விரைவு ஆகியவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு, ஏனைய துறைகளுக்கு, இன்னும் மேலான சேவை செய்யும் நற் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1978 மார்ச் 20

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கற் குறிப்பு

இந்திய நாடாளுமன்ற முன்னாள் தலைவர் திரு. எம். அனந்த சயனம் ஐயங்கார் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்திய நாடாளு மன்றத்தின் முன்னாள் தலைவரும் பீகார் மாநில முன்னாள் ஆளுநராகவும் இருந்த திரு. எம். அனந்த சயனம் ஐயங்கார் அவர்கள் 1978-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. அனந்தசயனம் ஐயங்கார் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறை சென்றவர். அவர் 1932-ஆம் ஆண்டி லிருந்து மத்திய சட்டசபை உறுப்பினராக இருந்தவர். 1952-ம் ஆண்டு முதல் 1956-ஆம் ஆண்டு வரை நாடாளுமன்றத்தின் துணைத் தலைவராகவும், பிறகு, 1956-ல் இருந்து 1962-வரை நாடாளுமன்றத்தின் தலைவராகவும் இருந்தார். பின்னர் பீகார் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

செஞ்சியை சுற்றுலா மையமாக்கல்

* 623 வினா—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு சுற்றுலா வாரியம், செஞ்சி சுற்றுலாவுக்கான இடம் என்று ஏற்றுக் கொண்டதா ?

(ஆ) ஆம் எனில், அங்கு ஒரு சிற்றுண்டி இல்லம் கட்டும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, இது ஒரு டூரிஸ்ட் சென்டர் என்று அறிவித்த பிறகு ரெஸ்டாரண்ட் இல்லாதது எந்தவகையில் சரியாக இருக்கும் ? குறைந்த பட்சம் அந்த இடத்தைப் பார்வையிட வருபவர்களுக்கு ரெஸ்ட்டாரண்ட் இருப்பது அடிப்படைத் தேவையில்லையா? அதை உடனடியாக அமைப்பதற்கு ஏன் முன்வரவில்லை ? அதற்கு என்ன தடையிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, டூரிஸ்ட் சென்டர் என்று அறிவித்துவிட்டு மாநில அரசு நடவடிக்கை எடுப்பது என்கின்ற திட்டம் இல்லை. மத்திய அரசால் தமிழ்நாட்டிலே உள்ள சுற்றுலா மையங்கள் எவையெவை என்ற விவரங்கள் கேட்கப்பட்டபொழுது அந்தப் பட்டியலில், "தமிழக சுற்றுலா வள மதிப்பீட்டில்" இந்த மையம் சேர்க்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்கு சுமாரான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ரூபாய் 15 இலட்சம் தோராயச் செலவு செய்ய வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் பதில் தரப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, செஞ்சிக் கோட்டை தேசிங்குராஜன் கோட்டையாக இருந்தது. இப்பொழுது இருந்து கொண்டுதான்இருக்கிறது. அப்படிப்பட்ட வரலாற்றுப் பெருமை படைத்த அந்த கோட்டையையும்,

அதற்குப் பக்கத்திலிருக்கிற அகழிகளையும், இப்படிப்பட்ட பழைய கால வரலாற்றுப் பெருமையை நிலைநாட்டக்கூடிய அந்த இடத்தை துப்புரவு செய்து, அபிவிருத்தி செய்து பழங்காலப் பெருமையைக் காப்பாற்றுவதற்கும், இடிபாடுகளை எடுத்துச் சுத்தமாக வைக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, செஞ்சிக் கோட்டைப் பகுதி தொலைபொருள் ஆராய்ச்சித் துறையிலே இருக்கிறது. அவர்கள் மேம்படுத்தி அதை ஒரு மிகச் சிறந்த சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை பரிசீலனையில் வைத்துக் கொண்டிருக்கிறது.

திரு. அ. க. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே செஞ்சிக் கோட்டையில் அரங்கநாதர் கோயில் என்ற ஒரு கோயில் இருந்தது. அந்தக் கோயிலை அழகுபடுத்தி, அங்கே வணங்குவதற்குரிய, தெய்வ வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நான் முன்னாலே சொன்னபடி, செஞ்சிக் கோட்டைப் பகுதி சுற்றுலாத்துறையினிடத்திலே இல்லை. ஆகவே, இந்தக் கேள்வியை அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரிடம் கேட்டால் பதில் கிடைக்கும் .

தீர்த்தமலையில் சுற்றுலா விடுதி.

* 624 வினா—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு செ சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், தீர்த்தமலையில் சுற்றுலா விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, அரூர் வட்டம் தீர்த்தமலையிலுள்ள அந்த இயற்கையான நீரூற்று அந்த மலையிலுள்ள இரும்பு, மற்றும் தாதுப் பொருள்களைக் கொண்டிருப்பதால், அவற்றால் சரும நோய் போன்ற நோய்கள் தீர்க்கப்படுவதாக தினசரி ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் அங்கு வந்து

போவதால், அந்த இடத்தில் சுற்றுலா மையம் அமைத்தால் நலமாக இருக்கும். இனியேனும் அதுசம்பந்தமாக அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பகுதிநேரத் தொழிலாசிரியர்கள்.

*625 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பகுதிநேரத் தொழிலாசிரியர்களை முழுநேரத் தொழிலாசிரியர்களாக மாற்றி அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர்களுக்குரிய தகுதிகள் இருந்தும் பகுதிநேரக் கைத்தொழில் ஆசிரியர்களாக உயர்தொடக்கப் பள்ளிகளில் பணி செய்து வந்தவர்கள் சுமார் 800 பேருக்கு 1974-75 முதல் 1977-78 முடியவுள்ள காலத்தில் முழுநேரப் பதவிகள் அளிக்கப்பட்டன. மீதம் இருக்கும் சுமார் 1,200 பகுதிநேரக் கைத்தொழில் ஆசிரியர்களுள் பெரும்பாலோர் முழுநேரப் பதவிக்குரிய தகுதி இல்லாதவர்கள் எனத் தெரியவருகிறது. அவர்களுள் ஓரளவு தகுதி படைத்தவர்கள் சிலருக்காவது இனிவரும் ஆண்டுகளில் முழுநேரப் பதவிகள் அளித்திட இயலுமா என்பது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதிநேரத் தொழில் ஆசிரியர்களாக உள்ளவர்கள் ஆயிரத்திற்கும்மேற்பட்டவர்கள்இன்னும் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களை எல்லாம் கூடுமான வரையில் முழுநேர ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அவர்களுக்கு மாதம் ரூ. 60 தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதையாவது, உயர்த்திக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. துரை [illegible] : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் பயிற்சித் தொழிலாசிரியர்களுக்கு, அரசு உயர்நிலைப் பள்ளிகளிலே ரூ. 210 என்றும், அதே தகுதி உடைய

ஆசிரியர்களுக்கு உயர் துவக்கப் பள்ளிகளிலே ரூ. 150 என்றும் அடிப்படைச் சம்பளம் இருப்பதை மாற்றி, உயர்பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதைப் போல் நடுநிலை, மற்றும் உயர் துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஒரே தகுதி உடைய ஆசிரியர்களுக்கும் ஒரே ஊதியங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மூன்றாவது சம்பளக் கமிஷனுடைய அறிக்கைக்குப் பிறகு இதை நாம் பரிசீலிக்கலாம்.

திரு. என். பழனிவேல் : இந்தப் பகுதி நேர ஆசிரியர்களுக்கு ரூ. 60 மட்டும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்த ரூ. 60 டவுன் பஸ் சார்ஜுக்குக் கூடப் போதுமானதாக இல்லை. ஆகவே, முழு நேர ஆசிரியர்களாக மாற்றாவிட்டாலும்கூட, சம்பளத்தையாவது ரூ. 120 ஆகக் கொடுக்கின்ற செயற்குறிப்பு இந்த அரசிடம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, சம்பளக் கமிஷனுடைய அறிக்கைக்குப் பிறகு அதைப் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, பகுதி நேரத் தொழில் ஆசிரியர்களுக்குள் பலர் தகுதி இல்லாதவர்கள் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு தகுதி அளிக்கக்கூடிய அளவில் 'இன் சர்வீஸ் டிரெயினிங்'க்கு ஏற்பாடு செய்யப்படுமா? அல்லது கடந்த காலப் பணியை வைத்து, இந்த ரூல்லை ரிலாக்ஸ் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தப் பிரச்னைகள் எல்லாம் சம்பளக்கமிஷனுடைய பரிசீலனைக்கு உட்பட்டவைகளாக இருக்கின்றன. அவர்களது அறிக்கைக்குப் பிறகு நாம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலெல்லாம் படிக்காமலும் பட்டம் பெறாமலும் இருப்பவர்களெல்லாம் ஆயாக்களாக இருந்து சம்பளம் ரூ. 120, ரூ. 140 வாங்குவது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, படித்து, பட்டம் பெற்றவர்கள் இந்தக் குறைந்த சம்பளத்தில் இருப்பதை மாற்றியமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 20

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் ஆசிரியர்கள் சம்பந்தமாக பகுதி நேரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள ஓராண்டுக் காலம் பணிபுரிந்தால் அவர்களை நிரந்தரமாக்கி, அதற்குரிய ஊதியத்தை அவர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் பிரச்னைகள் முழுவதும் மூன்றாவது சம்பளக் கமிஷன் பரிசீலனைக்கு உட்பட்டதாகும். ஆகவே, அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு நாம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்பதை நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 9–10)

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளிலும் குறைந்த சம்பளத்தைப் பெற்று பணியாற்றுகிறவர்கள்இந்தக் கணக்கில் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும் நடுநிலை பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றுகிறவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று ஆணை இருக்கிறதே. அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டும் என்று ஆணையர்களைஇந்த அரசு கேட்டுக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒன்றியப் பள்ளிகளிலேயும் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்டவர்களுடைய பிரச்சினையை நாம் அந்த அறிக்கைக்குப் பிறகு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதுமட்டுமல்ல, ஹையர் செகண்டரி பள்ளிகள் வரும்போது அதிலேயும் பகுதி நேர ஊழியர்களைப் போடுகின்ற வாய்ப்பிருக்கிறது. ஆகவே பொதுவாகவே பகுதி நேர ஊழியர்களைப் பற்றிய முடிவை அரசு எடுக்க வேண்டியதாக இருக்கிறது.

பள்ளியிறுதி, புகுமுக வகுப்புகளில் தேறாத மாணவர்கள்.

*626 வினா— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1978 மார்ச் 20]

(அ) S.S.L.C and P.U.C. தேர்வில் தவறிய மாணவர்களை மீண்டும் அவர்கள் படித்த அதே பாடசாலை அல்லது கல்லூரியில் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படுகிறதா ?

(ஆ) இல்லை என்றால், இனிமேலாவது அதுபோல் அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம், ஆனால் 1977–78-ம் ஆண்டில் 11-ம் வகுப்பில் புதிய பாடத் திட்டம் அமுலுக்கு வந்து விட்டபடியால் 1976–77-ல் 11-ம் வகுப்பில் பழைய பாட திட்டத்தின்படி பயின்று ஏப்ரல் 1977-ல் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு எழுதி தவறியவர்களை 1977–78-ஆம் ஆண்டில் மீண்டும் 11-ம் வகுப்பில் படிக்க அனுமதிக்க இயலவில்லை. ஆயினும் 1977–78-ல் பத்தாம் வகுப்பில் பயிலுபவர்கள் 1978 ஏப்ரல் எஸ்.எஸ்.எல்.சி.யில் தவறினால், 1978–79-ல் மீண்டும் பத்தாம் வகுப்பில் சேர்ந்து படிக்க அனுமதிக்க இயலும்.

கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பில் இது போல் தவறிய மாணவர்கள் மீண்டும் சேர்ந்து படிக்க வகை உள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், திட்டவட்டமான உத்தரவு பிறப்பிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். அதன் காரணமாக பல ஊராட்சி பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் அரசு நடத்தக்கூடிய பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், சேர்ப்பது கிடையாது. ஆகவே, தனியார் துறையிலே நடைபெறக்கூடிய ஊராட்சிப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பணத்தை வாங்கிக் கொண்டு, சேர்க்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே அந்த ஊழலைப் போக்கக்கூடிய வகையிலே அரசு நடத்தக்கூடியகல்லூரிகளிலேயும், பாடசாலைகளிலும் சேர்ப்பதற்கு உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தவறியவர்களை சேர்க்க வேண்டுமென்று திட்டவட்டமான உத்தரவை நாம் போடுவோமேயானால் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் தேறியவர்கள் அல்லது ஒழுங்கான முறையிலே முழுத் தகுதிகள் பெற்றவர்கள் அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படும். அவர்களுக்குப் போக மீதி இடங்கள் இருக்குமானால் சேர்த்துக் கொள்ளலாம் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற விதியாகும்.

[1978 மார்ச் 20

அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் சம்பளம்.

*627 வினா— திரு செ. இராமலிங்கம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனைத்து அரசு கல்லூரிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்கட்கு அவர்களது மாதாந்திர ஊதியத்தை நேரடியாக வங்கிகளில் அவர்களுடைய கணக்குகளில் போடும் முறையினை நடைமுறைப் படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, சில கல்லூரிகளில் மட்டும் இதுபோன்ற முறையில் ஊதியம் வழங்கப்படுகிறதாக அறிகிறேன். அதை அனைத்துக் கல்லூரிகளுக்கும் அமல் படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் இப்போது அவர்கள் சம்பள விகிதங்களின் படி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அதாவது ரூ. 1000-க்கு உச்ச சம்பளம் உள்ளவர்கள் தாங்களே சம்பளம் கருவூலத்திலிருந்து நேரிடையாகப் பெறுபவர்கள் எனவும், ரூ. 1,000-க்குக் குறைவாக உச்ச சம்பளம் உள்ளவர்கள் கல்லூரி அலுவலகத்தின் வழியாகச் சம்பளம் பெறுபவர்களாகவும் உள்ளனர். ரூபாய் ஆயிரத்துக்கு மேல் சம்பளம் பெறும் அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் தாங்களே கருவூலத்திலிருந்து நேரிடையாக சம்பளம் பெறுபவர்களாக இருப்பதால் அவர்களே தங்கள் சம்பளப் பட்டியல்களை தங்களுடைய வங்கிக் கணக்குகள் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். இதுதான் இப்போது இருக்கிற நடைமுறை. இதிலே மாறுதல் செய்யும் நடவடிக்கை எதுவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே மேற்கு வங்கத்திலே இதுபோன்ற கல்லூரிகளிலே, தனியார் கல்லூரிகளிலேயும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்குகின்ற திட்டத்தை அமுல்படுத்தியிருக்கிறார்கள். ஏற்கனவே தனியார் கல்லூரிகளில் இப்படிச் செய்வதற்கு சட்டம் குறுக்கிடுவதாகக் கூறப்பட்டது. அதைப் போக்குகின்ற வகையில் அரசு அந்தக் கல்லூரிகளுக்கிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி, அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே இந்தச் சம்பளத்தை நேரடியாக வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

1978 மார்ச் 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை எல்லாம் இப்போது அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதுபற்றி முடிவெடுக்கும்போது இந்த மாமன்றத்திற்கு அறிவிக்கப்படும்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, அமைச்சர் பதில் தெரிவிக்கும்போது ரூ. 1,000 சம்பளம் பெறுகிறவர்கள் நேரடியாகச் சம்பளம் பெறலாம் என்று ஏற்கனவே பழைய உத்தரவு இருக்கிறது என்று சொன்னார்கள், அந்த ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுகிறவர்கள் என்பதற்குப் பதிலாக ரூ. 600–800 சம்பளம் வாங்குபவர்கள்கூட நேரடியாகப் பெறுவதற்கு வழி செய்ய அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது அதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

திரு. ஒ. சுப்பிரமணியன : தலைவரவர்களே, அநேக தனியார் கல்லூரிகளில் சரிவர சம்பள பட்டுவாடா செய்யப்படவில்லை. பல மாதங்கள் பாக்கி இருக்கிறது. தனியார் பள்ளிகளில் இருப்பவர்களுக்கு முழுத் தொகையையும் அரசே கொடுப்பதால், அவர்கள் மேனேஜ்மென்ட் தயவில் இல்லாமல் இருக்கும் வகையில், கட்டாயமாக அவர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் நல்லதாக இருக்கும். அதற்குள் அரசின் கருத்தையும் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் எத்தனை பேர், ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்கக்கூடியவர்கள் எவ்வளவு பேர் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு: செ. அரங்கநாயகம்: அது பற்றிய முழு விவரம் இங்கே இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, இந்த ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளிகளில் ஹையர் செகண்டரி கல்வி ஆரம்பிக்க உத்தேசித்து இருப்பதாகத் தெரிகிறது. அதற்காக ரூ. 25,000 பணம் செலுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, நிதிவசதி உள்ள ஒன்றியங்களில் இருந்து அதற்குப் பணம் கொடுக்க அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது தனிக் கேள்வி போடவேண்டிய ஒன்றாகும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, பல மாதங்களாகக் கொடுக்கப்படவில்லை என்பது வேறு விஷயம். ஒவ்வொரு தனியார் துறையில் நடத்தப்படுகிற கல்லூரிகளிலும் 5%, 10%, 20% வரையில் சம்பளம் மாதாமாதம் பிடித்துக் கொண்டு கொடுக்கக்கூடிய அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. இதை அமைச்சர் அவர்கள்கூட பல மேடைகளில் பேசியிருக்கிறார்கள். நான் கேட்டிருக்கிறேன். ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து அதை நிறுத்தக்கூடிய அளவிற்கு அமைச்சர் அவர்கள் முன்முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கு இது தொடர்புடையது அல்ல என்றாலும், என்னுடைய பேச்சிலே அவர் நம்பிக்கை வைக்கலாம் என்பதை மட்டும் இப்போது சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, புதிய கல்வித் திட்டத்தின் கீழ் அரசுத் துறையில் எத்தனை பள்ளிகள், தனியார் துறையில் எத்தனை பள்ளிகள் துவங்க இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போடவும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. கோதண்டராமன் அவர்கள் கூறியதுபோல் தனியார் கல்லூரிகளில் சம்பளப் பட்டுவாடா செய்வதில் தவறு இருப்பதை அரசு அறிந்து இருக்கும் நிலைமையில் எல்லாத் துறைகளிலும் உள்ள ஆசிரியர்களுக்குச் சரியான முறையில் சம்பளம் வழங்க பேங்க் சிஸ்டத்தை அறிவிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியார் கல்லூரியைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, தமிழகத்திலே சமீபத்தில் நடைபெற்ற தேர்வில் 6 இடங்களில் கேள்வித் தாள்கள் மாறுதல் ஆகியிருப்பதால், அந்த மாணவர்களுக்கு வேறு தேர்வு நடத்தப்பெறுமா? அந்தத் தவறு ஏற்பட்டது தலைமையாசிரியர்களின் கவனக் குறைவாலா, அல்லது சம்பந்தப்பட்ட தேர்வு வாரியத்தின் கவனக் குறைவாலா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே! கல்வி மானியத்தின் மீது பேசிக் கொண்டு இருப்பது போல் கேள்விகள் போய்க் கொண்டு இருக்கின்றன என்பதை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திருச்சி மண்டல பொறியியற் கல்லூரியில் மாலை நேர வகுப்புகள்.

*628 வினா—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மண்டல பொறியியற் கல்லூரி (Regional Engineering College)யில் 30 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ளவர்கள் மட்டும் மாலை நேர வகுப்பு (B.E.) க்கு சேர்க்க வேண்டும் என்ற விதி இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அந்த விதியை மீறியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பொதுவாக திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரியிலிருந்து 30 கிலோ மீட்டருக்கு அப்பால் வேலை செய்பவர்களை அக்கல்லூரி மாலை நேர வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இவ்விதி, மாலை நேர வகுப்பில் சேருவதற்கு வேண்டிய தகுதிகளில் (Qualification for admission) ஒன்றாக சேர்க்கப்படவில்லையானாலும், இப் படிப்புக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கான அறிவிப்பில் (Information and Instruction to Candidates) பொதுச் செய்தியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) இதுவரையில் 30 கிலோ மீட்டருக்கு அதிகமான சுற்றளவில் வேலை பார்க்கும் எவரும், திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரியில் நடத்தப்படும் பொறியியல் மாலை நேர வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(முற்பகல் 9-20)

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, அந்த கல்லூரியினுடைய ரூல்ஸைப் பொறுத்தமட்டில், பார்ட் டைம் பி.இ. கோர்ஸ் 30 கிலோ மீட்டர் தூரத்திற்குள் தங்கக் கூடியவர், 3 ஆண்டு காலம் அனுபவம் உள்ளவர், தற்போது வேலையில் இருக்கிறவர் என்ற இந்த மூன்று கண்டிஷன்களிலும் தகுதி படைத்தவர்களை அட்மிட் செய்வது என்று பொதுவான விதி இருக்கிறது. இந்த விதியை மீறிய ஒரு கேஸ்கூட இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பல கேஸ்கள் இருக்கின்றன என்பதற்கு உதாரணமாக ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன்.

[1978 மார்ச் 20

30 கிலோ மீட்டர் அல்ல, இந்த மாநிலம் அல்ல, தென் மாநிலம் கூட அல்ல, வடக்கே இருந்து ஒருவர் பார்ட் டைம் பி.இ. கோர்ஸுக்கு அட்மிட் செய்யப்பட்டு, அவருக்கு வீடும் இல்லாமல், ஆஸ்டலிலேயே இடம் கொடுக்கப்பட்டு, மத்திய அரசில் யாரோ செல்வாக்கு பெற்ற ஒருவரின் சிபாரிசின் பேரில் அட்மிட் செய்து, கல்லூரி ரூல்ஸை வயலேட் செய்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன காரணம்? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. இருந்தாலும் அதுபற்றி விசாரிக்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, எஞ்சினீயரிங் கல்லூரிகளில் காரைக்குடி, திருச்சி, சேலம் போன்ற இடங்களில் 30 மாணவர்கள் என்றால் சென்னையில் 45 மாணவர்கள் வரை சேர்த்திருக்கிறார்கள். அந்த உத்தரவில் 30 கிலோ மீட்டர் தூரத்திற்குள் வேலை செய்கின்ற டிப்ளமா ஹோல்டர்ஸ் மட்டும் தான் சேரலாம் என்றிருக்கிறது. அதை மாற்றி எல்லா இடங்களிலிருந்தும் அட்மிஷன் கேட்பவர்களுடைய மனுக்களைப் பரிசீலித்து, அவர்களை கல்லூரியில் சேர்த்துவிட்டு, சேர்க்கப்பட்டவர்களுக்கு 30 கிலோ மீட்டர் தூரத்திற்குள் வேலை கொடுத்தால் இந்த நாட்டிலே இருக்கிற டிப்ளமா ஹோல்டர்ஸ் அனைவரும் இஞ்சினீயராக மாறும் வாய்ப்பு ஏற்படும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த தூரம் போன்ற நிபந்தனைகள் எல்லாம் அவர்கள் செய்கின்ற வேலைக்குப் பாதகம் ஏற்படாமல் படிக்கின்ற படிப்புக்கும் குந்தகம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே, அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஒ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, சிவகங்கையிலும் அதைச் சுற்றிலும் 400-க்கு மேற்பட்ட டிப்ளமா எஞ்சினீயர்கள் இருக்கிறார்கள். அவர்கள் காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரியில் மாலை நேர படிப்பு படிக்க அனுமதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படி கோரிக்கை வந்தால் அரசு பரிசீலிக்கும்.

1978 மார்ச் 20]

புதுக்கோட்டை மாமன்னர் அரசினர் கல்லூரி.

*629 வினா—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாமன்னர் அரசினர் கல்லூரியில் வரும் கல்வியாண்டில் பட்ட மேற்படிப்புக்கள் தொடங்க நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: தலைவரவர்களே, சிறிது நாளைக்கு முன்பு பத்திரிகையிலே எம்.காம். வருவதாகப் போட்டிருந்தது. அதுபற்றி கேட்டதற்கு அமைச்சரவர்கள் ஆம் என்று இங்கே பதில் சொன்னார்கள். அதே நேரத்தில் கல்லூரியில் இருக்கக்கூடிய இடம் இப்போது இருக்கக்கூடிய வகுப்புகளுக்குத்தான் இருக்கிறது. எம்.காம்., எம்.ஏ. (ஹிஸ்டரி) போன்றவைகளுக்கு அதிக கட்டிடங்கள் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. அரசு அதைப் பரிசீலனை செய்து, கட்டிடங்களைக் கட்ட முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதுபற்றித் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, இந்த புதுக்கோட்டை கல்லூரியில் போஸ்ட் கிராஜுவேட் படிப்புக்கு என்னென்ன பாடப் பிரிவுகளைத் தொடங்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, புதுக்கோட்டை கல்லூரியில் சென்ற ஆண்டு பட்ட மேற்படிப்பு தொடங்குவதைக் குறித்து பல்கலைக்கழக இணைப்பு மானியக் குழு ஆராய்ந்து, ஒப்புதல் அளித்திருக்கிறது. அவர்கள் இந்தக் கல்லூரியில் எம்.காம். பிரிவைத் தொடங்க அனுமதித்திருக்கிறார்கள்.

சேலத்தில் மகளிர் கல்லூரி.

*630 வினா—திரு. மு. ஆறுமுகம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் மகளிர் கல்லூரி திறக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1978 மார்ச் 20

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, மக்கள் தொகையில் சரிபாதி எண்ணிக்கையில் இருக்கிற மகளிருக்காக சேலம் மாவட்டத்தில் ஒரு அரசினர் மகளிர் கல்லூரி இல்லாத குறையைப் போக்க வருமாண்டிலாவது மகளிர் கல்லூரி ஒன்றை அங்கே தொடங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, 1974—75 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழகத்தில் புதிய அரசு கலைக் கல்லூரி எதுவும் திறக்கப்படவில்லை. அரசு கலைக் கல்லூரி புதியதாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றால் அந்த இடத்தில் உள்ள பள்ளிக்கூடத்தின் எண்ணிக்கை, அரசு நிதி ஒதுக்கீடு, பல்கலைக் கழக அங்கீகாரம் ஆகியவற்றைப் பொறுத்ததாகும். மேலும் தற்போது உள்ள கலைக் கல்லூரிகளில் குறிப்பாக நகர்ப்புறம் அல்லாத இடங்களில் உள்ள கலைக் கல்லூரிகளில் 20,000-க்கு மேற்பட்ட இடங்கள் காலியாக உள்ளன.

தமிழ் வழி	..	..	..	6,477
ஆங்கில வழி	..	..	..	14,217
மொத்தம்	..	..	..	20,694

ஆகவே தமிழகத்தில் புதிய கலைக் கல்லூரிகள் தற்போது திறக்கும் வாய்ப்பு இல்லை.

திரு. கே. எம். அப்துல் ரசாக் : பேரவைத் தலைவரவர்களே, புதிய கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுகின்றபோது அங்கே இருக்கின்றவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஆரம்பிக்கப்படுகிறதா ? அல்லது உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஆரம்பிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு 5 மைல் சுற்றளவில் கல்லூரி இல்லாத இடங்களில் புதிதாகக் கல்லூரி அமைத்திடும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கல்லூரிகள் தேவைகளைப் பொறுத்து திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 20]

கோவை புதூரில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு.

* 631 வினா—திரு ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பேரூர் ஒன்றியம், குனியமுத்தூர் பேரூராட்சியில் உள்ள கோவை-புதூரில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டினை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கோவை-புதூரில் 1977—78-ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஓர் ஆழ்துளைக் கிணறு போடப்பட்டு இதில் கைப்பம்பும் பொறுத்தப் பட்டுள்ளது. இவ்வூர் நல்ல குடிநீர் கிடைக்கும் குடியிருப்பு என வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டத்தினால் பயன் பெறவிருக்கும் ஊர்களில் கோவை-புதூரும் ஒன்றாகும்.

திரு ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குழாய்க் கிணறு போடப்பட்டிருப்பதாகவும் கை பம்பு போடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். அதற்கு உடனடியாக விசை மோட்டார் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, கோவை-புதூருக்குச் சிறுவாணித் திட்டத்தின் கீழ் தண்ணீர் கொடுக்கின்ற காரணத்தினால் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பேரவைத் தலைவரவர்களே, பேரூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட கோவை-புதூரில் இந்த நேரத்தில் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. அதே போல் பேரூராட்சி பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்டு இருக்கக்கூடிய பல பஞ்சாயத்துக்களிலும் சிங்காநல்லூர் நகராட்சியிலுள்ள பகுதிகளிலும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவ்வாறு தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் கஷ்டப்படுகின்ற ஜனங்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்காக லாரிகளிலும், டிரக்குகளிலும் தண்ணீர் கொண்டுவரப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. அதனை முறையாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு கு. ரமணி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கோவை-புதூர் நன்றாகத் தண்ணீர் கிடைக்கக்கூடிய இடம் என்று குறிப்பிட்டார். ஆனால் அங்கே ஒரு

மலையடிவாரத்தில் அந்தக் கோவை-புதூர் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவாணிக் குடிநீர் வந்தால்தான் அங்கே தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கும் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா, என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, இந்தக் கஷ்ட காலத்தில் வேறு வகையில் தண்ணீர் தருவதற்கு பிரத்தியேகமான ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றியெல்லாம் ஆலோசனை செய்து பார்க்கலாம்.

திரு ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சிறுவாணித் திட்டம் பற்றித் தெரிவித்தார்கள். அதை நிறைவேற்றுவதற்கு இரண்டாண்டு காலம் ஆகும் என்கிற காரணத்தினால் அங்கே இருக்கக்கூடிய குழாய்க் கிணறுகளுக்கு விசை மோட்டார் பொருத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு அங்கே நபர் ஒன்றுக்கு எவ்வளவு காலன் நீர் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இதைப்பற்றி அரசுக்கு வேண்டுகோள் கொடுத்தால் பரிசீலித்துப் பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, சிறுவாணிக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக கோவை—புதூருக்கு தண்ணீர் வருகின்ற வழியிலே இருக்கக்கூடிய கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, எந்தெந்த கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்ற தகவல்கள் எல்லாம் இருக்கின்றன, தனிக் கேள்வி போட்டால் அதற்குச் சரியான விடை தரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Supply of Drinking Water in Nagappattinam Municipality

* 632 Q.—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the Government are aware that the drinking water supply system in Nagappattinam Municipality is very very old leading to constant breakdown, lean supply in certain parts and no supply in certain other parts ;

(b) whether the municipality is expressing lack of finance ; and

(c) if so, the steps proposed to be taken to renovate the entire system to ensure adequate supply to all areas ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :— (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) நாகப்பட்டினம் குடிநீர் திட்ட மேம்பாடு பணிகளுக்கான இரண்டாவது கட்ட உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 9-30)

திரு. ரா. உமாநாத்: நாகப்பட்டினம் தண்ணீர் சப்ளை விஷயமாக கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். சைக்ளோன் நேரத்தில் அவரது ஸ்க்வாட் நல்ல முறையில் பணியாற்றி இரண்டு நாட்களில் 28 குழாய் கிணறுகளைப் போட்டார்கள். ஆனால் சிறிது உப்புத் தண்ணீராக இருக்கிறது. ஆய்வில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுவதால் அந்த ஆய்வை விரைவில் முடிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: எவ்வளவு விரைவில் முடிக்க முடியும் என்று தகவல் இல்லை. உறுப்பினர் அவர்கள் சொல்லிவிட்ட பிறகு, விரைவில் முடிப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ரா. உமாநாத் : அதற்கிடையில் மேட்டுப்பகுதியில் தண்ணீர் வராமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கிருந்து அதற்காக மேட்டுப்பகுதியில் சப்ளை ரெகுலரைஸ் செய்ய ரூ. 1·2 லட்சத்திற்கு எஸ்டிமேட் போட்டு ஒரு ப்ளான் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இடைக்காலத் திட்டத்தை, மேட்டுப்பகுதி மக்களைப் பாதுகாக்க நார்மல் பார்மாலிட்டிஸ் பார்க்காமல்-ஸ்பாட் டிசிஷன்ஸ் எடுப்பதில் கனம் அமைச்சர் அவர்கள் பெயர்போனவர்கள்—அது சாங்க்ஷன் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போத்திப்பாளயம் தெரு, மார்க்கட் தெரு, சாமிக் கோவில் தெரு என்று நினைக்கிறேன். தனியாக இதுபற்றி முறையீடு கொடுத்தால் பரிசீலனை செய்து பார்க்கலாம்.

திரு. எம்.ஏ. ஜெயவேலு: இதுபோல் பல பஞ்சாயத்துக்களில் ப்ரஷர் டாங்க்ஸ் பழுதடைந்திருக்கின்றன. தண்ணீர் எடுக்கமுடியவில்லை. பல ஆண்டுகளாக அது சரிசெய்யப்படாமலிருக்கிறது. அங்கு தண்ணீர் எடுக்கமுடியாத நிலை இருக்கிறது. Water water everywhere but not a drop to drink என்று சொல்வர்கள். அது போல் இருக்கிறது. தண்ணீர் எடுக்கமுடியாத ஒரு நிலை இருக்கிறது. அதைப் போக்க காட்டிகரி 1 ல் அதைச் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: If there is water everywhere that means flood and cyclone. இருந்தாலும் மெயின்டனன்ஸ் என்பது அந்தந்தப் பஞ்சாயத்துக்களும், முனிசிப்பாலிட்டிகளும் கவனித்துக் கொள்ளக்கூடியது. அதைப்பற்றி அவர்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்று அரசுக்கு முறையீடு வந்தால் அதைப் பற்றி அரசு கவனிக்கும்.

Industrial disputes in T. V. S. Units at Padi

* 633 Q.—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the required notice under the Industrial Disputes Act was given by the managements of the Clayton (T V.S.) and T. V. S. Lucas, while declaring the second lockout ;

(b) whether it was a legal or illegal lockout ; and

(c) if illegal, the action taken by the Government to lift the lockout ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :—(அ). சென்னையிலுள்ள சுந்தரம் கிளேட்டன் லிமிடெட். மற்றும் லூகாஸ் டி. வி எஸ், ஆகிய இரு நிர்வாகங்களும் கதவடைப்புக்கான அறிவிப்பைச் சட்டப்படி கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

(ஆ) } கதவடைப்பு சட்ட பூர்வமானதா அல்லது சட்டத்திற்குப் புறம்பானதா என்பதை தொழில் நீதி
(இ) } மன்றம்தான் தீர்மானிக்க வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : சட்டப்படியானதா இல்லையா என்று அரசாங்கம் சொல்வதற்கில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனது கேள்வி, 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதா என்பதாகும். இன்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்படி 14 நாள் நோட்டீஸ் லாக் அவுட் என்றால் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அது கொடுக்கப்பட்டதா என்பது என் கேள்வி. இங்கே சொல்வதற்கில்லை என்றால்—அன்று கூட டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் ஒரு ஸ்ட்ரைக்கைப்பற்றிச் சொல்லும்போது இல்லீகல் ஸ்டிரைக் என்று சொல்லி ஸ்டேட்மென்ட் வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினாவிற்கும் சேர்த்து பதிலை அளித்துவிட்டால் தாங்கள் கேட்பதற்கு உதவியாகஇருக்கும்

* 634 Q.—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Labour be pleased to state —

(a) whether it is a fact that the managements of Clayton-Lucas (T. V. S.) made the signing of individual undertaking by workmen as a pre-condition to admitting them to work after lifting the second lock-out ;

(b) whether the terms contained in the undertaking did not unilaterally modify the terms of the agreement signed by them in the presence of the Transport Minister ; and

(c) if so, the action taken by the Government to prevent this violation ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) சுந்தரம் கிளேட்டன் மற்றும் லூகாஸ் டி. வி. எஸ், ஆகிய நிறுவனத்தார் 29-9-77 முதல் இரண்டாவது கதவடைப்பை நீக்கி தொழிலாளர்களிடமிருந்து தனித்தனியாக எழுத்து மூலமாக உறுதி மொழி பெற்றுக் கொண்டு அவர்களை வேலைக்கு அனுமதித்தனர்.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. உமாநாத் : 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளதா இல்லையா என்று சொல்லுங்கள். குறிப்பிட்ட லாக் அவுட் லீகலா இல்லீகலா என்று சொல்லுங்கள். இதைப்பொறுத்தவரையில் ஸெட்டிலாகி உள்ளே போன பிறகு பர்னிச்சர்ஸ் அன்ட் பிக்சர்ஸ் சிலபேர்கள் வெளியே கொண்டு வந்து டிஸ்ப்யூட்டாகி டி.வி.எல். ஸ்டாட்டில் போய் அன்லோட் செய்து தீர்க்கப்பட்டது. இந்த 14 நாள் நோட்டீஸ் மண்டே மூடப்பட்டிருக்கிறது. இந்த 14 நாள் நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையில் லாக் அவுட் செய்ய வேண்டுமென்றால் 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று தொழில் தகராறு சட்டத்தில் இல்லை.

இரண்டாவது, தொழில் தகராறு சட்டம் 25-எம்,-ல்-லே, ஆஃப் கொடுப்பதற்கு அதாவது 300 தொழிலாளர்களுக்கு மேல் உள்ள தொழிற்சாலையில் லே ஆ ப் கொடுக்க வேண்டுமென்றால் பெர்மிஷன் வாங்க வேண்டும். 25-என்-ல் ரிட்ரேன்ச்மென்ட் பண்ண வேண்டுமென்றாலும் அரசின் அனுமதி பெற வேண்டும்.

அடுத்தது, ஓ-இதில் க்ளோஷர்-க்கு பெர்மிஷன் வாங்க வேண்டும். மூன்று விதம், அதாவது லே ஆ ப், ரிட்ரேன்ச்மென்ட், க்ளோஷர் இவைகளுக்கு பெர்மிஷன் வாங்க வேண்டும். இதை மீறினால் 25 க்யூ. ஆர். பிரகாரம் பிராசிக்யூஷன் செய்யலாம். இவ்வளவும் இருக்கிறது. லாக் அவுட்டைப் பொறுத்தவரை 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று தொழில் தகராறு சட்டத்தில் இல்லை. இதையும் இணைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 635-யையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதில் சில வேறு விஷயம் சேர்ந்திருக்கிறது. தனியாக எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ரா. உமாநாத்: இந்த இரண்டாவது லாக் அவுட் சம்பந்தமாக ஒரு தொழில் தகராறு செங்கற்பட்டு டிவிஷன் லேபர் ஆபீஸர் முன்னால் லாக் அவுட்-க்கு சம்பளம் வேண்டும் என்று ஏற்கனவே பஸ்ட் எக்ரிமென்ட், டெப்யுடி லேபர் கமிஷனர் முன்பாகச் செய்யப்பட்டிருக்கிறது. வொர்க் லோடு சம்பந்தமாக டிஸ்ப்யூட் செய்யப்பட்டது உண்மை தானா? அரசாங்கத்தின் முன்னால் சீப் மினிஸ்டர் முன்னால் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கேட்காமல் இருப்பது சரிதானா? இப்படி இரு சாராருக்கும் ஒரு ஒப்பந்தம் இருக்கிறதா? அது முடிந்து விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தொழில் தகராறு சட்டத்தின் இந்தப்பிரச்னையை தொழிற் சங்கம் எடுத்திருப்பதாகத் தகவல் இல்லை. இரண்டாவது முதலமைச்சர் முன்னால் ஏற்பட்டது தொழில் தகராறு சட்டத்தின் கீழ் செய்து கொண்ட, ஒப்பந்தம் அல்ல. ஒரு ஏற்பாடு. அதில் எல்லாவற்றையும் அந்த தொழிற்சாலை அதிபர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். எதையும் அவர்கள் மீறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் முன்னால் செய்து கொண்ட ஏற்பாட்டிலுள்ள எல்லாவற்றையும் நிறைவேற்றி விட்டார்கள் என்பதை மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் தகராறு சட்டத்தின் அடிப்படையில் இரு தரப்பின் இடையிலும் ஒப்பந்தம் ஏற்பட்டதா? அது மீறப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் தகராறு சட்டத்தின் கீழ் ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமானால், ஒன்று, 'டைரக்ட் நெகோஷியேஷன்' அதாவது நேரடி பேச்சு வார்த்தையின் மூலம் 18 -1(1)-ன் கீழ் செய்து கொள்ளலாம். இரண்டாவது கன்ஸிலியேஷன், லேபர் கமிஷனர், அல்லது டெப்யூடி லேபர் கமிஷனர் முன்னால் தொழில் தகராறு சட்டத்தின் 12-(3)-ன் கீழ் ஒப்பந்தம் செய்து கொள்வது. இந்த இரண்டு முறைகளின் கீழ் அல்ல. முதல்வர் முன்னால் செய்து கொண்ட ஏற்பாடு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : முதலமைச்சர் என்பது ஸ்டேட்டின் ஹையர் அத்தாரிட்டி. லேபர் விஷயத்தைப் பொறுத்தவரையில் லேபர் மினிஸ்டர் இருக்கின்றார் என்றாலும் அவருக்கு முதலமைச்சர், இருக்கின்றார் அப்படிப்பட்ட முதலமைச்சர் முன்னால் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறக் கூடிய அளவில் நிர்வாகம் செயல்பட்டிருக்கிறது. நிர்வாகம் எழுதி வாங்கிக் கொண்டுதான் தொழிலாளர்களை அனுமதிக்க வேண்டும் என்று எந்த தொழிலாளர் தகராறு சட்டத்திலாவது சொல்லப்பட்டிருக்கிறதா, அதற்கு மாறாக எழுதி வாங்குவது முறைதானா? இரண்டாவது இந்த லாக் அவுட் ' இல்லீகல் ' என்று டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் சொல்லியிருக்கிறார். அப்படியல்ல என்று இப்போது லேபர், மினிஸ்டர் ஜஸ்டிபை செய்கிறார். இப்படிப்பட்ட தகராறுகளில் டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் ஏன் தலையிடுகிறார்? லேபர் மினிஸ்டருக்கு என்ன **டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் ' இல்லீகல் ' என்கிறார். லேபர் மினிஸ்டர் ' இல்லீகல் ' அல்ல என்கிறார். இப்படி ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்துக்களைச்சொல்ல வேண்டிய நிலை வருகிறது. காரணம் இதை ஒருவரே ' டீல் ' பண்ணியிருந்தால் சரியாக இருந்திருக்கும். இது முறைதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.... இரண்டாவது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை. அமைச்சர்கள் எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. ஒரு அமைச்சருக்குப் பதில் இன்னொரு அமைச்சர் பேசுவதில் எந்த வித தவறும் இல்லை. தயவு செய்து உட்காருங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1978 மார்ச் 20

திரு. க. சுப்பு : . கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்பது தெரிந்தது தான். அதற்காக ஒரு அமைச்சர் 'இல்லீகல்' என்றும், இன்னொரு அமைச்சர் 'இல்லீகல்' அல்ல என்றும் சொல்வது முறைதானா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்னையில் குறிப்பிட்டு ஒரு அமைச்சரைப் பற்றிச் சொல்லக் கூடாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேள்விகள் நேரத்தில் குற்றச்சாட்டுகளைக் கூறக்கூடாது என்று விதி இருக்கிறது. இதில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைப்பற்றி ஒரு 'ரிமார்க்கை' தெரிவித்திருக்கிறார்கள். அது முறைதானா என்பதைத் தாங்கள் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் * * என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று உத்தர விடுகிறேன்.

திரு. க. சுப்பு : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ. தயவு செய்து அமருங்கள். எக்ஸ்கியூஸ் மி. அனுமதிக்க முடியாது.

திரு. மு. கருணாநிதி : நண்பர் சுப்பு அவர்கள் கேட்ட கேள்வியில் * * என்று சொன்ன வார்த்தைகளை நீக்கி விடலாம். ஆனால் அவர் கேட்டது, தொழிற் துறை அமைச்சர் இருக்கின்றபோது, போக்குவரத்து அமைச்சர் தலையிட்டது என்பது. இதிலே தவறு இல்லை. அதற்கு வேண்டுமானால் பதில் சொல்லாமல் இருக்கலாம். * * என்று அவர் சொன்ன வார்த்தைகளை வேண்டுமானால் நீக்கி விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் சொல்ல வேண்டாம் என்று தலைவரே சொல்லி விட்டார்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது லாக் அவுட்டின்போது இன்டிவிஜுவல் அண்டர்டேக்கிங் கொடுக்க வேண்டுமென்று கோரியபோது . . . கனம் முதல் அமைச்சர்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1978 மார்ச் 20]

அவர்கள் முன்பாக வற்புறுத்தப்பட்டது. இப்போது அதுவும் இல்லை. அது சரியில்லை என்ற ஒரு சந்தேகமும் இருக்கிறது. அண்டர்டேக்கிங் முதலமைச்சரிடம் கொடுத்தால் போதுமென்ற உடனேயே நிர்வாகத்தினர் முதலமைச்சரிடம் சென்று கொடுத்தார்களா? அதை அரசு தெரிவிக்குமா? அதை நிர்வாகம் ஏற்றுக்கொள்ள மறுத்தது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனியார் ஒப்பந்தம் கேட்கக் கூடாது. முதலாளிகள் தனிப்பட்ட ஒப்பந்தம் கொடுக்கக் கூடாது. முதல் அமைச்சர் அவர்களிடம் ஒப்பந்தம் செய்து கொடுக்கிறோம் என்று சொன்னது உண்மைதான். முதல் அமைச்சர் அவர்களிடம் யாரும் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கவில்லை. முதலமைச்சருக்கு என்று எழுதி, என்னிடத்தில்தான் கொடுத்தார்கள். அப்படி 716 பேர்கள் கொடுத்தார்கள். அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லி, சுந்தரம்-கிளேட்டன் டி.வி.எஸ்.—லூகாஸ் சார்பில் திரு. பாலாஜி என்பவரும் திரு. ரத்னம் என்பவரும் கையெழுத்துப் போட்டது உண்மை.

ஆனால, அதற்குப் பின்னால் சிலர் வயலென்ஸ் என்ற முறையில் ஈடுபட்டார்கள் என்ற காரணத்தைக் கூறி, அவர்கள் இதை ஏற்றுக் கொள்ள முடியாது. தாங்கள் கையெழுத்துப் போட்டதை ஏற்றுக் கொள்ள முடியாது, அதைத் திரும்ப வாங்குகிறோம் என்று சொன்னார்கள். இதை இல்லீகல என்று சொலல முடியாது. இது ஒரு ஏற்பாடே தவிர, தொழிற் தகராறு சட்டம் 18 (1). 12 (3)-ன்படி செய்த ஒப்பந்தம் அல்ல. It is immcral, but it is not illegal.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே. இன்டஸ்ட்ரியல டிஸ்பியூட் ஆக்டின்படி. பப்ளிக் யூடிலிடி அல்லது எஸ்ஸென்ஷியல் சர்வீஸ் நிறுவனங்களில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வதாக இருந்தால் 15 நாட்களுக்கு முன்பு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதைப் போல. அப்பேர்ப்பட்ட நிறுவனங்களில் முதலாளிகள் லாக்-அவுட் செய்ய வேண்டுமென்று சொன்னாலும். அதேபோல நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அறிவிக்க வேண்டும். இது கறாராக இன்டஸ்ட்ரியல டிஸ்பியூட் ஆக்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. டி.வி.எஸ். நிறுவனத்தை ஒரு எஸ்ஸென்ஷியல சர்வீஸ் அல்லது பப்ளிக் யூடிலிடி கன்சர்ன் இல்லையென்று கறாராகச் சொல்ல முடியுமா? அவர்கள் பாதுகாப்பிற்கு வேண்டிய சாதனங்களைச் செய்கிறார்கள் என்ற காரணத்தால். அது எஸ்ஸென்ஷியல் சர்வீஸ் அலலது பப்ளிக் யூடிலிடி கன்சர்ன் ஆகும். அப்படிப்பட்ட முறையில் இது இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்

[978 மார்ச் 20

ஆக்ட்படி தொழிற் தகராறு சட்டத்தின்கீழ் முன் அறிவிப்புக் கொடுக்கத் தேவையில்லை என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, லாக்-அவுட் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று எனக்குத் தெரிந்தவரையில் இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டில் இல்லை. நான் செக்ஷன் கோட் பண்ணினேன். நீங்களும் எந்த செக்ஷன் என்று கோட் பண்ணினால் நலமாக இருக்கும், because man is fallible and is subject to correction

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே முதல் அமைச்சர் அவர்கள் முன்பாக ஒரு ஏற்பாடு நடந்திருந்தால் கூட, அது இருதரப்பையும் கட்டுப்படுத்தும். செட்டில்மெண்டைப் பொறுத்தவரையில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் முன்பு ஏற்றுக்கொண்டு சென்றவர்கள் ஒவ்வொரு தொழிலாளரிடமும் எழுத்துமூலம் எழுதி வாங்கி அவர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? தொழிலாளர்களைக் காப்பாற்றுவோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் முன்பு கொடுத்த வாக்குறுதி பற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ. இராகவானந்தம் : நான் முன்பே சொன்னதுபோல, தொழில தகராறு சட்டத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் ஏற்பட்டு மீறியிருந்தால் தொழில் தகராறு சட்டம் 29 பிரகாரம் பிராசிகியூஷன் செய்யலாம். Breach of settlement என்ற வகையில். ஆனால் இந்த ஒப்பந்தம் 25 எம். என். ஓ. பிரிவுகளை மீறியிருந்தால், 25 கியூ. ஆர். பிரகாரம் பிராசிகியூஷன் செய்யலாம். ஆனால் இந்த ஏற்பாடு இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டை மீறியதாகத் தெரியவில்லை.

திரு. க. சுப்பு : முதலமைச்சர் முன்னிலையில நடந்த ஏற்பாடு என்றே வைத்துக்கொண்டாலும் அதை ஏற்றுக்கொண்டு அமுல் படுத்த மறுத்த நிர்வாகம் என்று தெரிந்த பிறகும், முதலமைச்சர் அவர்கள் போலீசை வாபஸ் வாங்கிவிடுவோம் என்று சொன்னபடி செய்யாமல் போலீசை அங்கு நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் என்ன? முதலமைச்சர் பேச்சைக் கேட்காத நிறுவனத்திற்கு ஆதரவாக போலீசை நிறுத்தக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். முதல்வர் அவர்கள் முன்னால் அவர்கள் ஏற்றுக்கொண்டதைச் செயல்படுத்தி விட்டார்கள். ஆனால்

[978 மார்ச் 20]

மீண்டும் ஒரு பத்து தினங்களுக்குள்ளாக வன்முறை ஏற்பட்டது என்று சொல்லி லாக் அவுட் செய்தார்கள். முதல்வர் அவர்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. ஏற்றுக்கொண்டு முழுமையான ஒப்பந்தத்தை ஃபுல் இம்பிளிமெண்டேஷன்—செய்வதற்கு முன்னதாக வன்முறை நடந்தது என்ற காரணத்தைக் காட்டி 'லாக் அவுட்' செய்தார்கள். லாக் அவுட் சட்டபூர்வமானதா இல்லையா என்ற நிலை இல்லை. It is not illegal—லாக் அவுட் பர்மிஷன் வாங்கித்தான் செய்ய வேண்டுமென்று—இன்னும் சொல்கிறேன். சட்டத்தில் இல்லை. This Government cannot do it.

திரு. என். சங்கரய்யா : தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்—டி.வி.எஸ். நிர்வாகம் செய்தது இல்லீகல் என்று இல்லாவிட்டாலும் இம்மாரல் என்று சொல்கிறார்கள். அதாவது நெறியற்றது : தார்மிக முறையற்றது. இது சட்ட விரோதமானது என்பதைக் காட்டிலும் கூட, ஒரு பெரிய நிர்வாகம், ஒரு பெரிய கம்பெனியானது அரசாங்கத்தின் அமைச்சர் அவர்களால் நெறியற்ற முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். முதலமைச்சர் முன்னால் செய்த ஏற்பாடு என்று வைத்துக் கொண்டாலும். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தது முறையற்றது. தார்மிக நெறிப்படி முரணானது என்ற காரணத்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் இனி மேலும் முதலமைச்சர் அவர்கள் முன்னால் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் நடைபெற்றால் அதையும் சட்ட விரோதமானது அல்ல என்ற முறையில் மீறினால், இந்த மாநிலத்தில் எப்படி தொழில் அமைதி ஏற்பட முடியும். ஆகவே, அப்படிப்பட்ட காரியங்களை அமல் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மீண்டும் சொல்லுகிறேன். முதல்வர் அவர்களோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தை அவர்கள் மீறவில்லை. முதலமைச்சர் சொன்னவுடனேயே தொழிற்சாலையைத் திறந்து விட்டார்கள். ஆனால் அதற்குப் பின்னால் வன்முறை ஏற்பட்டது என்று சொல்லி லாக் அவுட் செய்திருக்கிறார்கள். அந்த லாக் அவுட் லீகலா, இல்லீகலா என்பதற்கு வழக்கு மன்றம் செல்ல வேண்டும். என்ஃபீல்டு இந்தியா லிமிடெட், மெடல் பாக்ஸ் கம்பெனி ஆகியவற்றில் தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டிலும் 50 சதவீதம் வேஜஸ் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சங்கம் லாக் அவுட் பற்றிக் கேட்கவில்லை. தொழிற்சங்கம் இதைப் பிரச்சினையாகக் கிளப்பவில்லை. அங்கு அமைதி நிலவுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : அவர்கள் பழி வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. பழி வாங்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். பழி வாங்குவது Victimisation என்றால் என்ன என்று தீர்ப்பே

[1978 மார்ச் 50

இருக்கிறது. What is Victimisation ? தொழிலாளி தனக்குப் பிடிக்காத தொழிற்சங்கத்தைச் சார்ந்தவன் என்ற காரணத்திற்காக முதலாளி அவனை வேலையை விட்டு நீக்குவது—' Punishment imposed is disproportionate to the offence that is said to have been committed. செய்ததாகக் கூறப்படுகிற குற்றத்திற்கு தண்டனை அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது இரண்டாவது. இவைகள்தான் பழிவாங்குதல் என்பதாகும். வேலையை விட்டு நீக்குவது, சஸ்பென்ஷன் செய்வது எல்லாம் பழி வாங்குவது அல்ல என்று தெளிவாக வழக்கு மன்றத் தீர்ப்பு இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

*635 வினா—மாண்புமிகு திரு. சி. கோவிந்தராசன்: தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பாடி டி.வி.எஸ். நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்களின் உண்மையான தொழிற்சங்கப் பிரதிநிதிகள் யார் என்பதை முடிவு செய்ய தேர்தல் நடைபெறும் என்று அரசினால் கூறப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், தேர்தல் எப்போது நடைபெறும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை. ஆனால் இந் நிறுவனங்களில் நடந்த தொழில் தகராறுகள்மீது ஏற்பட்ட உடன்பாடுகளில் சங்க நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல் அல்லது விருப்பப்பட்டு சேர்த்தல் இவைகளில் உள்ள கருத்து வேறுபாடுகளை நல்ல முறையில் தீர்ப்பதற்குத் தொழிலாளர் நல இலாக்கா ஆராய்ந்து தகுந்த ஏற்பாடுகளை முறைப்படுத்தும் என்று உள்ளது.

(ஆ) நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் முடிந்த பிறகு தேவை இருப்பின் இதுபற்றி நடவடிக்கை உரிய காலத்தில் எடுக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : பாடி டி.வி.எஸ். நிறுவனத்தில் இப்படிப்பட்ட தொழிற் தகராறுகள் நடந்து கொண்டிருந்தபோது இந்த மன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்—இந்தத் தொழிற்சங்கத்தில் யார் தலைவராக ஆக்கப்படுவது என்பது ரகசிய வாக்கெடுப்பின் மூலம் அமைதி நிலவும்போது செய்யப்படும் என்ற அறிவிப்பை இந்த மன்றத்தில் கூறினார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னதாகத் தொழிலாளர் நல அமைச்சர்கூட அங்கு அமைதி நிலவுவதாகச் சொன்னார்கள். இப்போது ஒரு

1978 மார்ச் 20]

நிமிஷத்திற்கு முன்னால் கூட அங்கு அமைதி நிலவுவதாக அமைச்சர் சொல்லுகிறார்கள். அப்படி அமைதி நிலவும்போது தொழிற் சங்கத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை ?

[முற்பகல் 9.50]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, உடன்பாட்டில் தேர்தலைப்பற்றிச் சொல்லியிருப்பதை இப்பொழுது படிக்கிறேன்—

"வேலை திரும்பத் தொடங்கிய பிறகு, சங்க நிர்வாகிகளை தேர்ந்தெடுத்தல் அல்லது விருப்பப்பட்டு சேர்த்தல் இவைகளில் உள்ள கருத்து வேறுபாடுகளை நல்லமுறையில் தீர்ப்பதற்கு தொழிலாளர் நல இலாக்கா ஆராய்ந்து தகுந்த ஏற்பாடுகளை முறைப்படுத்தும்."

இதுதான் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. இதில் பிரச்னை என்னவென்றால், அந்தத் தொழிற்சங்கத் தலைவர், சி.ஐ.டி.யூ. வைச் சேர்ந்தவர், தேர்தல் முறையாக நடத்தப்பெற்று சென்ற வர் அல்ல. தலைவர் இராஜினாமா செய்ய, இவர் இணைப்பு முறை யில், அதாவது கோவாப்ஷன் என்ற முறையில் சென்றவர், ஓட்டு மொத்தமாக தொழிலாளர்களின் ஆதரவு பெற்றுச் சென்றவர் என்று சொல்ல முடியாது, கோவாப்ஷன் மூலமாகச் சென்றார். அப்படி அவர் தலைவராக வந்தது சரியாகாது என்று சிவில் சூட் நடந்து கொண்டிருக்கிறது. அப்படி நடந்து கொண்டிருக்கும் பொழுது தேர்தலை வைத்தால் சப்ஜுடீஸ் ஆக வரலாம். அந்தத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த அவர்கள்தான் இந்த நடவடிக்கையில் இனிஷியேட் செய்ய முடியும். நாமாகத் தலையிட முடியாது. இரகசிய முறையில் தேர்தலை நடத்த தொழிலாளர் இலாக்கா முன்வர வேண்டும் என்றால் அந்தத் தொழிற்சங்கம் கடிதம் எழுத வேண்டும். ஒரேயொரு தொழிற்சங்கம்தான் இருக்கிறது. அவர்களிடமிருந்து கடிதம் வரவில்லை. Trade Union Act of 1926, செக்ஷன் 10, பிரகாரம் அந்த டிரேடு யூனியனின் ரெஜிஸ்ட்ரேஷனை ரத்து செய்ய முடியும். அப்படியொரு முயற்சி சட்டமன்றத்தில் எழுப்பப்படுகின்றதே தவிர தொழிலாளர் பிரதி நிதிகளிடமிருந்து, இருக்கின்ற ஒரேயொரு தொழிற்சங்கத் திடமிருந்து எங்களுக்கு முறையீடு வரவில்லை. அவர்கள் அமைதி யாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவரவர்களே, தொழிலாளர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தங்களுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுத்தாலும் இந்த டி.வி.எஸ். நிறுவனங்களில்,

கிளேட்டன், லூக்காஸ், பிரேக்ஸ் இந்தியா போன்ற இடங்களில் அவர்கள் விரும்புகின்ற தலைவர் இல்லை என்றால் அங்கீகரிப்பது இல்லை என்று சொல்லப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்களை அந்த நிர்வாகம் அங்கீகரிக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகிறதா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u>: பேரவைத் தலைவரவர்களே, அப்படியொரு புகார் இதுவரையில் வரவில்லை. இப்பொழுது பிரச்னை எழுப்பும் தலைவர் கோவாப்ஷன் மூலம் சென்றவர், சீக்ரெட் பேலட் மூலமோ, கைதூக்குவதன் மூலமோ தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல.

<u>திரு. சி. கோவிந்தராசன்</u>: தலைவரவர்களே, அந்தச் சங்கத்தினுடைய விதிமுறைகளில் கோவாப்ஷன் மூலமாகத் தலைவர் போகலாம் என்று இருந்த காரணத்தால்,—இன்றைக்கும் அப்படி இருப்பதால், அது இன்னும் திருத்தப்படவில்லை—அந்தத் தலைவர் கோவாப்ஷன் மூலம் சென்றார். இப்பொழுதுள்ள பிரச்னை என்னவென்றால் இந்தப் பிரச்னைக்குப் பிறகு அதனால் இந்த விளைவுகள் ஏற்படுகின்றன என்று உணர்ந்த அரசு, அமைதி நிலவும்பொழுது தொழிற்சங்கத் தலைவர் தேர்தல் சீக்ரட் பேலட் மூலம் நடத்தும் என்ற உத்தரவாதம் கொடுத்த பிறகும், அது அக்ரிமென்டில் இருக்கும்பொழுது. இப்பொழுது கோர்டில் இருக்கிறது என்றும், அவர்களிடமிருந்து முறையீடு வரவில்லை என்றும் கூறுவது சரியல்ல. நல்ல அமைதி நிலவும்பொழுது அந்தப் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u>: பேரவைத் தலைவரவர்களே; அந்தத் தொழிற்சங்கச் சட்டம் மட்டுமல்ல, எந்தத் தொழிற்சங்கமாக இருந்தாலும் (Interim vacancies will be filled in by co-option) என்று இருக்கும். எனவே, அது புதிது அல்ல. இங்கே ஒரேயொரு தொழிற்சங்கம் இருக்கிறது. அந்தத் தொழிற்சங்கத்திலிருந்து, எங்களுக்கு முறையாக லேபர் ஆபீஸர் மூலம் சீக்ரட் பேலட்டில் தேர்தலை நடத்தி வைக்க வேண்டுமென்று அரசுக்கு முறையீடு வரவில்லை. அப்படி வந்தால் நிச்சயமாகப் பரிசீலித்து செயல்படுவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துக்கொள்ளும்.

<u>முடமானவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கல்.</u>

*636 வினா—<u>திரு. வ. மு. சுப்பிரமணியன்</u>: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால் முடமானவர்களுக்கு மூன்று சக்கரவண்டி வழங்கும் திட்டம் தற்பொழுது கைவிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

<u>மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி</u>: கால் ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 1977–78-ல் 500 முச்சக்கர வண்டிகள் வழங்கப்படுகின்றன. 1978–79ஆம் ஆண்டும் 500 முச்சக்கர வண்டிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

<u>திரு. ஆ. வெள்ளைச்சாமி</u>: பேரவைத் தலைவரவர்களே ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் கொடுப்பதில் மாவட்டத்திற்கு இவ்வளவுதான் கொடுக்க வேண்டுமென்ற வரையறை இருக்கிறதா? எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி</u>: தலைவரவர்களே, தேவையின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது.

<u>திரு. செ. மெ. ராஜு</u>: தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் கொடுப்பதைப் போல காது கேளாதவர்களுக்கு காது கேட்கும் கருவி கொடுக்க அரசிடம் திட்டமுள்ளதா?

<u>மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி</u>: தலைவரவர்களே, குறிப்பாக பள்ளிச் சிறுவர்கள் 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு காது கேட்க முடியாதவர்களுக்கு இந்த அரசாங்கம் ஆண்டு ஒன்றுக்கு 300 காது கேட்கின்ற கருவிகளை இலவசமாக வழங்கிக் கொண்டிருக்கிறது.

<u>திரு. மு. அரங்கநாதன்</u>: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஊனமுற்றவர்கள் சென்னை நகர வீதிகளில் கேட்பாரற்ற முறையிலே நடைபாதைகளிலும் மற்றைய பகுதிகளிலும் திரிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பிடிப்பதற்கு சென்னை மாநகராட்சி சுகாதார சட்ட விதிகளில் இடமில்லை. காவல் துறையினராவது அவர்களைப் பிடித்து பராமரிப்பு இல்லங்களில் சேர்ப்பதற்கு வகை செய்யப்படுமா?

<u>மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி</u>: தலைவரவர்களே நான் ஏற்கனவே மானியக் கோரிக்கையின் போது இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். தகுந்த முறையிலே பரிசீலித்து, கூடிய விரைவிலே முடிவெடுக்க இருக்கிறோம்.

[1978 மார்ச் 20

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, கால் முடம் ஆனவர்கள் எவ்வளவு பேர்கள் மனுக்களைத் தந்திருக்கிறார்கள்? அவர்களுக்கு, குறிப்பாக அரசாங்க உத்தியோகங்களில் முன்னுரிமை தர ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. ரா. க.சு. தண்டபாணி: தலைவரவர்களே, இது போன்ற கருவிகள் கிராமப்புறங்களிலே இதற்கு முன்னால் நடந்த ஆட்சியிலே சரியாகக் கொடுக்கப்பெறவில்லை. இதில், மற்றொன்று; சட்டமன்ற உறுப்பினர்கள் போன்ற பிரதிநிதிகள்தான், அதிகாரிகளை விட, எவ்வளவு முடம் ஆனவர்கள் இருக்கிறார்கள், எவ்வளவு முச்சக்கர வண்டிகள் தேவைப்படும் என்ற விவரங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக அல்லது மக்கள் பிரதிநிதிகள் மூலமாக, எவ்வளவு வண்டிகள் தேவைப்படும் என்று கணக்கெடுத்து, உதவி அளிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, யார், யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் பரிசீலித்து முடிவெடுக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் ஏதாவது அப்படி இருக்குமானால் தகவல் கொடுப்பார்களானால் அதுபற்றி அரசு முடிவெடுக்கும்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினர் கேள்வி கேட்கும்போது முன்பிருந்த ஆட்சியில் இத் திட்டங்கள் நல்ல முறையில் செயலாக்கப்படவில்லை யென்று சொன்னார். உடல் ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்குகின்ற திட்டமும், அதேபோல், பள்ளியிலே படிக்கின்றவர்களுக்கு, காது கேளாதவர்களுக்கு காது கேட்கும் கருவிகளைக் கொடுக்கின்ற திட்டமும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தொடங்கப்பட்டது. இப்பொழுது அமைச்சரவர்கள், முன்பிருந்த ஆட்சியில் இது தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரையில் இந்த காது கேட்கும் கருவிகளும் முச்சக்கர வண்டிகளும் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டன என்ற விவரத்தை அளிப்பார்களா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துச் சொல்கிறேன்.

1978 மார்ச் 20]

பதநீர் இறக்கும் தொழிலாளர்களுக்குக் கடன்கள்.

*637 வினா—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு கைத்தறி 'பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட' வினாவுக்கு விடையளிப்பாரா'—

பதநீர் இறக்கும் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பதநீர் இறக்கும் தொழிலாளர்களுக்குக் கடனும், மானியமும் கதர் கிராமத் தொழில் வாரியம், பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து வருடா வருடம் பெற்று வழங்குகிறது. வறட்சிக் காலங்களிலும் புயல் மற்றும் வெள்ளம் ஏற்படும் சமயங்களிலும் அரசு சிறப்பாக கடனும், மானியமும் வழங்கி வருகிறது.

திரு. தே. ஞானசிகாமணி: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பதநீர் இறக்கும் தொழிலாளர்களுக்குப் பல ஆண்டுகளாக மானியமோ கடனோ கொடுப்பதில்லை. ஆகவே, அவர்களுக்குத் தனியாக கூட்டுறவுச் சங்கம் அமைத்து, அதன் மூலம், கடனும் மானியமும் கொடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பதநீர் இறக்கும் தொழிலிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கு மானியமாக ரூ. 50-ம், கடனாக ரூ. 50-ம், கருவிகள் வாங்கக் கொடுக்கப்படுகிறது. அதைப்போல், அவர்கள் மூலதனச் செலவிற்கு ரூ. 250 கடனாக வழங்கப்படுகிறது. நான்கு ஆண்டுகளில் 4 சத விகிதம் வட்டியிலே, அவர்கள் திருப்பிக் கொடுத்தால் போதுமானது. ரூ. 200 வழங்குகின்ற திட்டமும் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிற பகுதியிலிருந்து அப்படிப்பட்ட மனுக்கள் வந்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை, அப்படி மனுக்கள் வந்தால், தனிப்பட்ட முறையிலும் கொடுக்கப்படும். அவர்கள், தாங்களாகவே கூட்டுறவு முறையில் அமைக்க கூட்டுறவுத் துறை மூலமாக வந்தால், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தால், வாரியத்தினுடைய கூட்டத்திலே வைத்து முடிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது சொன்னார்கள், வறட்சிக் காலங்களிலும், மற்றும் வெள்ளம், புயல் இருக்கும் காலங்களிலும் கடன் வழங்கப்படும் என்று சொன்னார்கள். பதநீர் இறக்கும் தொழிலாளர்கள் 6 மாதம்தான் அந்த வேலையில் ஈடுபடுகிறார்கள். மீதமுள்ள 6 மாதம் அவர்கள் தொழிலிலே ஈடுபட வாய்ப்பில்லை. ஆகவே, தொழிலில் ஈடுபடாத காலங்களில், அவர்களுக்குக் கடன் வசதி செய்து தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 20

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, பதநீர் இறக்குகின்ற காலம் 6 மாதம்தான். மீதமிருக்கிற 6 மாதங்களுக்குத் தொழில் செய்ய முடியாத சிரமம் இருக்கிறது. எனவேதான், பனந் தும்பு, நார், ஓலை இவைகளை எடுத்து, பயிற்சி நிலையங்களுக்கு அனுப்ப, ஒர்க்கிங் கேப்பிட்டல், மூலதனம் கொடுக்கிறோம். அதைத்தான் ரூ. 200, ரூ. 250 கொடுக்கிறோம் என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10-00.)

3. வினாக்கள்-விடைகள் நேரத்திற்குபின் ஒழுங்குப் பிரச்னைகள் எழுப்புவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தினமும் இப்படி எல்லோரும் எழுந்திருந்து நிற்கிறீர்கள். கேட்டால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுகிறீர்கள். இதை எல்லாம் அனுமதித்தால் இதற்கே நேரம் சரியாக இருக்கும். என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன். நீங்கள் இனிமேல் ஒன்று செய்யுங்கள். முன் கூட்டியே என்னுடைய அறையில் வந்து, இன்ன காரணத்திற்காக நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பப் போகிறேன் என்று சொல்லிவிட்டால் அனுமதிப்பதற்கு வசதியாக இருக்கும். இல்லை என்றால் அந்த பாயின்ட் ஆப் ஆர்டர், இங்கே பாயின்ட் ஆப் டிஸ் ஆர்டராக ஆகிவிடுகிறது. ஆகவே, தயவு செய்து நாளையிலிருந்து நான் சொல்கிற முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். திரு. அம்பிகாபதி தயவுசெய்து அமரவேண்டும்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர். இது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குத் தெரியும். நான் நேரத்தை சுருக்கமாக்க வேண்டுமென்று கருதுகிறேன். நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்க மனமில்லாமல், வேறு ஏதாவது எழுப்புவேன் என்பது வேண்டாமென்று சொல்கிறேன். திரு. அம்பிகாபதி அவர்களுக்கு முதலிலேயே சொன்னேன். தயவுசெய்து அமர வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-ந் தேதி இந்த அவையிலே காவல்துறை மானியத்திலே 8 மணி நேர வேலை வேண்டும் என்று பேசினேன். ஆனால் நெல்லை மாவட்ட தினமலர் பத்திரிகையில் 24 மணி நேரம் வேலை வாங்க வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள்.

1978 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். திரு. அம்பிகாபதி அவர்கள் விதிகளை நன்றாகத் தெரிந்தவர்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, எழுதிக் கொடுத்தால் நீங்கள் அனுமதிக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைக் கூட இங்கே கேட்கக் கூடாது. பேரவைத் தலைவர் அனுமதி இல்லாமல் பேசக் கூடாது. பேரவைத் தலைவர் மீது களங்கம் கற்பிக்கக் கூடாது. அதைப்பற்றி நீங்கள் எழுதிக் கொடுங்கள்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்த நேரம் ஜீரோ அவர் மாதிரி 242-ன் கீழ் எழுப்புகிறார்கள். ஆனால் ஒழுங்குப் பிரச்னை என்பது திடீரென்று வருவது. அதை எழுதிக் கொடுங்கள் என்று சொன்னால் எங்களுக்கு ஆபத்து வந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது என்று சொல்லவில்லை. நீங்கள் உண்மையான பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணி இருப்பீர்கள், ஒத்துக் கொள்கிறேன். அதைப் பார்த்து மற்றவர்களும் நானும் பாயின்ட் ஆப் ஆர்டர், நானும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று தொடர்ந்து எழுப்புவதைத் தவிர்க்கலாம் என்பதற்காகத் தான் சொல்கிறேன். இந்த அவையின் நேரம் வீணாகக் கூடாது, உறுப்பினர்களுக்குள்ள உரிமையைப் பறிக்கவில்லை.

4. தகவல் கோரல்.

(அ) டெல்லி செல்லும் தமிழ் நாடு விரைவு ரயில் வண்டியில் தமிழிலும் அறிவிப்பு செய்வது குறித்து.

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து டெல்லிக்குப் போகிற தமிழ்நாடு எக்ஸ்பிரசில் செய்தியும் அறிவிப்பும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் சொல்கிறார்கள். தமிழிலே சொல்ல வேண்டும் என்று நாங்கள் சென்றபோது கூட, பொது நிறுவனங்கள் குழுவில் சென்றபோது கூட, சட்ட மன்ற உறுப்பினர்கள் கருத்தைத் தெரிவித்தோம்.

ஆனால், அதற்கு எந்தவிதத் தகவலும் வரவில்லை. எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மத்திய சர்க்காரோடு தொடர்பு கொண்டு இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட மன்ற உறுப்பினர் யாரிடம் எழுதிக் கொடுத்தார் என்பது பற்றி எனக்குத் தகவல் இல்லை. இது பெரிய பிரச்சினை. அவையிலே அனைவரும் கூடி

முடிவெடுத்தால் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். இந்த விதியின் கீழ் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும், இந்த விதியின் கீழ் அவையை ஒத்திவைக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்வீர்களானால் அதைப் பற்றி விவாதிக்கலாம். பாயின்ட் ஆப் ஆர்டரே இப்பொழுது எழுப்ப வேண்டாம் என்று சொல்கிறேன். ஆனால், நீங்கள் பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று சொல்லுகிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள கேள்விகளுக்குப் பல மாதங்கள் ஆகியும் பதில் வராதது குறித்து.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தங்களிடம் இரண்டுமுறை தெரிவித்தேன். தங்கள் அறையிலேயும் தெரிவித்தேன். 11-7-1977 அன்று 3 கேள்விகள் கொடுக்கப்பட்டு 8 மாதங்கள் நடந்து விட்டன ஒரு கேள்விக்கும் பதில் வரவில்லை. கேள்விகளுக்கு இத்தனை. நாட்களுக்குள் பதில் வரவேண்டும் என்று விதியிருக்கிறது. அப்படி விதி இருந்தும் இந்த 8 மாதங்களாகப் பதில் அனுப்பாத அதிகாரிகள் மீது தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஒரு கேள்விக்கு 42 நாட்களுக்குள் பதில் வரவில்லை என்றால் அதைப் பற்றி எழுப்புவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. அது ஏன் வரவில்லை என்று அமைச்சர் அவர்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அவையிலே அமைச்சர் அவர்கள் 42 நாட்களுக்குள் பதில் தெரிவித்துவிட்டால் நல்லது. பல கேள்விகளுக்கு 4, 5 மாதங்கள் ஆகியும் பதில் வரவில்லை. அவைகளைத் துரிதப்படுத்தி சீக்கிரமாகக் கொடுப்பதற்கு நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

(இ) ஒத்திவைக்கப்பட்ட வினாக்கள் மீண்டும் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம் : 11—3—1978-ஆம் தேதி அன்று மருத்துவத்துறை சம்பந்தமாகக் கேள்விகள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு வந்த கேள்விகளுக்குப் பதில் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக் கேள்விக்களுக்குப் பதில் சொல்லவில்லை. அவைகளுக்கு எப்போது பதில் சொல்லப்படும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, அவர்களுக்கு வேறு பிரச்சினைகள் இருக்கிற காரணத்தால் ஒத்தி வைக்கப் பட்டுள்ளன, அந்தக் கேள்விகள் கட்டாயம் வரும். வராமல் போகாது. அமருங்கள். அமருங்கள்.

5. உரிமைப் பிரச்சினை "மக்கள் குரல்" பத்திரிகையில் தவறான செய்தி வந்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரா. உமாநாத் அவர்கள் "மக்கள் குரல்" நாளிதழ் மீது ஒரு உரிமை மீறல் பிரச்னை எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அதை எழுப்ப அனுமதி அளிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, 44-வது அரசியல் திருத்தச் சட்ட விவாதத்தின்போது. நான் கடைசியில் பேசுகிறபோது அரசியல் குற்றங்களுக்காக திருமதி இந்திரா காந்தி அவர்களை நீதிமன்றத்தில் வைத்து விசாரிக்க வேண்டுமென்று சொன்னேன். நான் பேசி முடித்த உடனே மாண்புமிகு நண்பர் மாரிமுத்து அவர்கள்எழுந்து சமீபத்தில்நடந்து இருக்கும்தேர்தல்' அவர்கள் "மக்கள் தலைவி" என்று நிரூபிக்கப்பட்டு விட்டது, ஆகவே, அதற்காக மறுபடி ட்ரையல் தேவை இல்லை என்று கூறினார். உடனே நான் எழுந்து, இந்திய நாட்டிலுள்ள பெருவாரியான மக்கள் அளித்த தீர்ப்பு "அவர்கள் தலைவி அல்ல" என்று சொல்லி, அதைக் கான்டிரடிக்ட் பண்ணி, அந்த மக்கள் தீர்ப்பு பிரச்சினை வேறு, செய்த குற்றத்திற்கான தீர்ப்பு வேறு என்ற முறையில் பதில் சொன்னேன்.

எல்லாப் பத்திரிகைகளும் அந்த பதில், கான்டிரடிக்ஷன், இரண்டையும் சேர்த்து பப்ளிஷ் செய்து இருக்கின்றன. ஆனால், இந்த ஒரு பத்திரிக்கை மட்டும், "இந்திய நாட்டிலுள்ள பெருவாரியான மக்களின் தலைவி அல்ல" என்ற போர்ஷனை கட் பண்ணி தேர்தல் தீர்ப்பு வேறு. இது வேறு என்று என்னுடைய பதிலாகக் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, அருமை நண்பர் திரு.மாரிமுத்து அஸர்ட் பண்ணியதற்குப் பிறகு "தேர்தல் தீர்ப்பு வேறு" என்று படித்தால், நான் தேர்தல் தீர்ப்பை ஏற்றுக் கொள்கிற மாதிரியாகும். நான் கான்டிரடிக்ட் செய்ததையும் பப்ளிஷ் செய்து இருக்க வேண்டும். அவர்கள் இப்படி பப்ளிஷ் செய்து இருப்பது நான் பேசியிருப்பதை "மியுடிலேட்" பண்ணியதாகும். இது என்னுடைய கட்சியின் அரசியல் நிலைக்குத் தவறாக இருக்கிறது. அந்த நிருபர் தப்பாகச் சொல்லி இருக்க முடியாது. உங்களுடைய ரிகார்டுகளிலும் கரெக்ட்டாக இருக்கிறது. அந்தத் தவறை அந்த மானேஜ்மென்டார் செய்து இருப்பார்கள். அவர்கள் இந்திரா காந்தி தலைவி என்று கருத்துக் வைத்துக் கொள்வதில் தவறு இல்லை. ஆனால், Let them not put their ideas into my mouth அது தான் நான் சொல்ல விரும்புவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்னை பத்திரிக்கை மீது இருப்பதால், அவர்களுக்கு எழுதிக் கேட்டு பதில் வந்த பின்னர் என் தீர்ப்பை அளிக்கிறேன்.

6. அறிவிப்புகள்.

(அ) ஓர் உறுப்பினரின் உரையில் சில பகுதிகளை நீக்குவது குறித்த பேரவைத் தலைவரின் அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 16—3—1978 அன்று இப்பேரவையில் காவல் துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் வின்சென்ட் மீது ஒரு குற்றச்சாட்டை கூறினார். அப்போது குறுக் கிட்டுப் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் " இதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது விளக்கினால் எனக்கு உதவியாக இருக்கும் " என்று குறிப்பிட்டார்.

அப்போது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் " கோப்பு களைப் பார்த்ததுபோல மாதிரி என்று அந்தக் கருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள். போல, மாதிரி என்பதெல்லாம் போலி என்பதன் மறு பெயர் என்றுகூடச் சொல்லலாம். நான் அப்படி எடுத்துக் கொள்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு நாஞ்சில் வின்சென்ட் அவர்களுக்கு இன்னமும் நேரம் இருக்கிறது. அவர்கள் சொல்லிய தற்கு ஆதாரம் இல்லை என்றால் வருத்தத்தோடு திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன் " என்று குறிப்பிட்டார்கள்.

" ஆதாரம் இருக்குமானால் அந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேச வேண்டுமே தவிர இருக்கிறது, இருக்கிறது என்று சொல்லாமல் அந்த ஆதாரத்தை உடனடியாகக் காட்டினால் நான் தீர்ப்புச் சொல்ல முடியும். ஆகவே, அந்த உறுப்பினரவர்கள் அந்தப் பிரச்சினையில் எனக்கு ஆதாரம் காட்ட வேண்டுமென்றும் இப்போது இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு வேறு பிரச்சினையைப் பேச வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன் " என்று பேர வைத் தலைவர் குறிப்பிட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் " நீங்கள் தீர்ப்புக் கூறும் வரையில் இந்தச் செய்தி பதி வேட்டில் ஏற வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன் " என்று கூறியதற்கிணங்க, " நாஞ்சில் வின்சென்ட் அவர்களை அந்தப் பிரச்சினை பற்றிய பேச்சிற்கான ஆதாரங்களை நான் நன்றாகப் பரிசீலனை செய்து தீர்ப்பு சொல்லும் வரையிலும் அதனை வெளி யிட வேண்டாமென்று தீர்ப்பு அளிக்கிறேன் " என்று பேரவைத் தலைவர் குறிப்பிட்டார்.

இது பற்றி, மாண்புமிகு திரு. நாஞ்சில் வின்சென்ட் அவர் களிடம் விளக்கம் கேட்டதற்கு, குற்றச்சாட்டை சொல்லி, இது உண்மையா, பொய்யா என்பதற்கு முதல்வர் கண்டுபிடிக்க

வேண்டும் என்று, தான் சொல்வதற்கு முன்னால் குறுக்கிடுகள்வந்து
விட்டன என்று விளக்கம் அளித்துள்ளார். எனவே அவர் பேசிய
தற்கு தகுந்த ஆதாரம் இல்லை என்பதுதான் தெளிவாகிறது.

இம்மாதிரி குற்றச்சாட்டை ஒருவர் மீது ஒருவர் சொல்லி
விட்டு, அவ்வாறு இருக்கின்றதா, பேசப்படுகின்றதா என்று
சொல்லி அதிலிருந்து விலகிக் கொள்வதில், அவையினது கண்
ணியம் காக்கப்படுவது இல்லை என்று நான் கருதுகிறேன். மேலும்
இம்மாதிரி குற்றச்சாட்டுக்களைக் கூறும்போது அது எந்த உறுப்பி
னரைப் பற்றியதாகவோ, அல்லது அமைச்சரைப் பற்றியதாகவோ
இருக்கிறதோ அதற்கான ஆதாரங்களைக் காட்டி பிறகு பேரவைத்
தலைவர் அனுமதித்தால், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு
அல்லது அமைச்சருக்கு முன்அறிவிப்புக் கொடுத்து விட்டு அவையில்
எழுப்புவதுதான் பாராளுமன்ற முறை. ஆனால், இவ்வவையில்
இம்மாதிரி முறைகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஆயினும்,
இம்மாதிரிக் குற்றச்சாட்டுக்கள் கூறுவதற்கு ஒரு முற்றுப் புள்ளி
வைக்கும் வகையில், இம்முறைகளைப் பின்பற்றுவதுதான் பாராளு
மன்ற நடைமுறைகளுக்குச் சிறந்தது. இம் மரபைப் பற்றி
பாராளுமன்ற விதிகளில் சிறப்பாக ஒரு விதி சேர்க்கப்பட்டுள்ளது.
அது பின்வருமாறு :—

"No allegation of a defamatory or incriminatory nature shall be made by a member against any person unless the member has given previous intimation to the Speaker and also to the Minister concerned so that the Minister may be able to make an investigation into the matter for the purpose of a reply :

Provided that the Speaker may at any time prohibit any member from making any such allegation if he is of opinion that such allegation is derogatory to the dignity of the House or that no public interest is served by making such allegation. (Rule 353 of Lok Sabha Rules)

நம் விதிகளில் இம்மாதிரி ஒரு விதி சேர்க்கப்படும் வரையில் இ
மன்றத்தில் பாராளுமன்ற மரபாக இது கையாளப்பட வேண்டும்
மென்று நான் தீர்ப்புக் கூறுகிறேன்.

எனவே, இனிமேல் எந்த உறுப்பினரும் வேறொரு உறுப்பினர்
பற்றியோ அல்லது அமைச்சரைப் பற்றியோ அல்லது அமைச்
சரின் பொறுப்பின் கீழ் பணியாற்றுகின்றவர்களைப் பற்றியோ,
குற்றம் சாட்டுவதாக இருந்தால், அவற்றைக் கூறுவதற்கு முன்
பேரவைத் தலைவருக்குக் காட்டி அவரது முன் அனுமதி பெற்றுத்
தான் கூறவேண்டும். அனுமதி பெறாது, பொறுப்பேற்காது பேர
வையில் பேச அனுமதிக்கப்பட மாட்டாது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் தகுந்த ஆதாரங்கள் எனக்குக் காட்டவில்லையாதலால், அவர் கூறிய குற்றச்சாட்டுகள் பற்றிய குறிப்புகள் எல்லாம் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

(முற்பகல் 10-10)

(7) அவையில் அமைச்சர் மீதோ அதிகாரிகள் மீதோ, உறுப்பினர்கள் மீதோ ஆதாரம் காட்டிய பின்னரே குற்றச்சாட்டு செய்ய வேண்டுமென்கின்ற பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கொண்டுவரப்பட்ட உரிமைப் பிரச்சனையை ஒட்டி தாங்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களை பெருமளவுக்கு ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், இடையிலே தாங்கள், எதிர்காலத்திலே சட்டமன்றம் எந்த விதிமுறையின்கீழ் இயங்க வேண்டும் என்பதை விளக்கும் வகையில் உறுப்பினர் ஒருவர் பேசுகின்றபோது குறிப்பிடுகின்ற குற்றச்சாட்டு அமைச்சரைப்பற்றியோ அதிகாரி பற்றியோ அல்லது நிர்வாகம் பற்றியோ நிர்வாகத்தில் இருக்கின்ற சீர்கேடு பற்றியோ குறிப்பிட வேண்டுமென்றாலும் முன்னதாக ஆதாரம் காட்டிவிட்டுத்தான் கூறவேண்டுமென்று கூறுவதானால் அதற்குச் சட்டமன்றம் தேவையில்லை.

நிர்வாகத்தில், அமைச்சர்கள், அதிகாரிகள், செயலாளர்கள் பற்றி வருகின்ற புகார்களைக் கூட ஆதாரம்காட்டிப் பேசவேண்டுமென்றால் அதில் அர்த்தம் இருக்காது. நிர்வாகம் என்பது வேறு, தனிப்பட்டவர் என்பது வேறு. நிர்வாகத்தில் இலட்சம் ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விட்டதில் தவறு நடந்திருக்கிறது என்று சொல்லும்போது அதற்கு ஆதாரம் காட்டிவிட்டுத்தான் பேச வேண்டும் என்று சொல்வது எந்த விதத்திலும் சரியல்ல. நிர்வாகம், தனிப்பட்டவர் என்பதைப் பிரித்துப் பார்க்க வேண்டும் ; இரண்டும் ஒன்றல்ல. நிர்வாகத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது ஆதாரம் காட்டித்தான் பேசவேண்டுமென்பது உறுப்பினர்களின் உரிமையைப் பறிப்பது ஆகும். எதிர்க் கட்சிக்காரர்களுக்கு இருக்கின்ற முதல் உரிமையே அதுதான். ஆகவே, அந்த வகையில் தங்களுடைய தீர்ப்பை மாற்றியமைக்க வேண்டும் ; அதுபற்றித் தெளிவாகப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர்வர்களே, எங்களுடைய கட்சியின் சார்பிலும் மாண்புமிகு திரு அன்பழகன் அவர்கள் கூறிய கருத்துக்களை வரவேற்கிறேன். நாம் இதுபற்றி ரூல்ஸ் கமிட்டியிலே கலந்து பேசி, அதற்குப் பிறகு முடிவு செய்வதுதான் சரியானது. நிர்வாகத்தில் இருக்கக் கூடியவர்கள் பற்றி புகார்

பொதுவாகச் சொல்லப்படும்போது, அதை முன்கூட்டியே ஆதாரம் காட்டிவிட்டுத்தான் சொல்ல வேண்டுமென்பது பொருத்தமுடையதல்ல ; அது சரியும் அல்ல. அது உறுப்பினர்களின் உரிமையைப் பாதிப்பதாகும். ஆகவே, தங்களுடைய தீர்ப்பில் மாற்றம் தேவைப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதற்கு விளக்கம் சொல்கிறேன். பொதுவாக, நிர்வாகத்தைப்பற்றிக் கூறும்போது ஆதாரம் காட்டிவிட்டுத்தான் பேசவேண்டும் என்று சொன்னால் அது உறுப்பினர்களின் உரிமையைப் பறிப்பதாகும். குறிப்பிட்ட ஒரு அதிகாரி பற்றியோ அல்லது ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றியோ தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் அதற்கு என்னுடைய அனுமதியை முன்னதாகப் பெற வேண்டும் ; என்னுடைய அறையிலே அதற்கான ஆதாரத்தைக் காட்டி அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய தீர்ப்பு. பொதுவாக ஒரு இலாகாவைப் பற்றியோ அல்லது நிர்வாகத்தைப் பற்றியோ குறை சொல்வது பற்றி நான் ஒன்றும் குறிப்பிடவில்லை. மொத்தத்தில் சீர்கேடு பற்றி சொல்வதற்கு ஆதாரம் காட்ட வேண்டுமென்று நான் கூறவில்லை. குறிப்பிட்ட அதிகாரியின் பெயரைச் சொல்லக்கூடாது என்று ஏற்கெனவே நம்முடைய இந்த மன்றத்தில் மரபு இருக்கிறது. அந்தமாதிரியாகத்தான் தனிப்பட்டவர் மீது குற்றஞ்சாட்டும்போது, ஆதாரம் இல்லாமல் சொல்லக் கூடாது என்று தீர்ப்பு கூறியிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, நான் சில நேரங்களில் விவாதங்களிலே கலந்து கொண்டு பேசுகிறபோது குறிப்பாக நட்சத்திர இரவு போன்ற நிகழ்ச்சிகளில் சில அதிகாரிகள் கெடுபிடி வசூலைக் கையாண்டார்கள் என்பதற்கான ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பதற்கு முன்பே கூட அவர்கள் கைப்பட எழுதிய அறிக்கைகளை இங்கே படித்துக் காட்டினேன். அது தவறாக இருக்குமேயானால் அமைச்சரவர்கள் குறுக்கிட்டோ அல்லது சம்பந்தப்பட்டவர்கள் குறுக்கிட்டோ அதனை எடுத்துச் சொல்லி அந்த ஆதாரங்களைக் கேட்பார்களேயானால் அதைத் தருவதில் நான் தயாராக இருந்திருப்பேன்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆதாரங்களைக் காட்டமுடியவில்லை என்றால் அவையினுடைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து ஆதாரம் இல்லாமல் பேசிய கருத்துக்களை நீக்குவதற்கு தங்களுக்கு உரிமை இருக்கிறது. அதைத்தான் தாங்கள் பயன்படுத்த வேண்டுமேயல்லாமல் நாங்கள் பேசப் போகின்ற கருத்துக்களை இவைகள் பற்றி பேசப் போகிறோம் என்று முன்னரே அறிவித்துவிட்டுத்தான் பேசவேண்டும் என்பது அவ்வளவு சரியாக இந்த சட்டமன்றத்திலே அமையாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் உணர்வு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும். அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் நிர்வாகத்திலே செய்கின்ற மிஸ்மேனேஜ்மென்ட், லேப்ஸஸ் ஆகியவைகளைப் பற்றிச் சொல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு.

ஆனால் அதே நேரத்தில் தனிப்பட்ட முறையில்—உதாரணத்திற்கு அவர் இந்த இடத்திலே லஞ்சம் வாங்கினார் அல்லது இன்ன தவறுகளைச் செய்தார் என்று தனிப்பட்ட முறையில் வருகிறபோது—அதாவது ஸ்பெசிபிக் சார்ஜஸ் வருகிறபோது முன்கூட்டியே மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு அல்லது துணைத் தலைவருக்கு அறிவித்துவிட்டால் அதுபற்றிய தகவல்களைச் சேகரித்து வருவதற்கு பேரவைத் தலைவருக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

உதாரணமாக மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் பேசுகிறபோதும், மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவரவர்கள் பேசும்போதும் குறிப்பிட்டதுபோல ஒரு கான்ட்ராக்ட் விடுகிறோம். அந்த கான்ட்ராக்ட்டிலே தவறு நடந்திருக்கிறது என்பது வேறு. அந்த கான்ட்ராக்ட்காரரிடத்தில் பணம் வாங்கிக் கொண்டு கொடுத்தார் என்பது வேறு.

ஆகையால் லேப்ஸஸ், மால் அட்மினிஸ்ட்ரேஷன் போன்றவைகளைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கு நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. நம்முடைய சட்டமன்ற விதிகளிலே கூட 68ஆவது விதியில் இரண்டாவது பிரிவில் 3ஆவது பாராவில்

it shall not refer to the conduct or character of a person except in h's official or public capac ty

என்று இருக்கிறது. மூன்றாவது பிரிவு முழுமையாக என்ன சொல்கிறதென்றால்

In order that a motion may be adm ss:ble it shall satisfy the following conditions, namely:

x x x

(iii) it shall not refer to the conduct or ch^racter of a person except in h's official or public capacity.

அவர்களுடைய அஃபிஷியல் or பப்ளிக் கெப்பாசிட்டி பற்றி ரெஃபர் பண்ணுவதற்கு உரிமை உண்டு. ஆனால் தனிப்பட்ட முறையில் சில குற்றச் சாட்டுகள் வருகிறபோது பேரவைத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும். ஆகவே, இந்தக் கருத்து உரிமைகளைப் பறிக்க வேண்டும் என்பதல்ல. முன்னுரிமை பெற்றுவிட்டால் பிரச்சினைக்கு இடம் இல்லாமல் சுமுகமாக முடியும் என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் சொல்கிற அதே கருத்துக்கு முன்னனுமதி பெறுவது என்பது வரையறுக்கப்பட்டதாக ஆகிவிடக் கூடாது. நான் இதே அவையில் சில குற்றச்சாட்டுகள் பற்றிப் பேசி இருக்கிறேன். தனிப்பட்ட முறையில் ஒருவரைக் களங்கப்படுத்துவதாக இருந்தால் அவற்றுக்கு முன்னனுமதி பெற வேண்டுமென்றால், தனிப்பட்ட முறையில் ஒருவரைக் களங்கப்படுத்துவதா அல்லவா என்பதற்கு இடையிலே இருக்கும் வித்தியாசம் மிகக் குறுகலான ஒன்றுதான்.

எனவே, அங்கத்தினர்கள் குற்றச்சாட்டுகள் சொல்வதை அவையிலே அனுமதிக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் களங்கப்படுத்துகின்ற முறையில் அமையுமானால் அவைத் தலைவர் உடனே எச்சரித்துத் தடுக்க வேண்டும். முன்னனுமதி பெற வேண்டும் என்பதன் மூலம் சபாநாயகரிடத்தில் கேட்டுக் கொண்டு குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்று சொன்னால் பல குற்றச் சாட்டுகள் சொல்ல முடியாமலே போய்விடும். இந்த அவையிலே கூறுவதற்கு முன்னனுமதி கேளுங்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் அப்படிப்பட்ட குற்றச்சாட்டு யாரையும் களங்கப்படுத்துவதற்காக அல்ல, நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்காகவே அப்படியெல்லாம் பேச வேண்டியிருப்பதால் அவற்றை நீங்கள் முதலில் தங்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று சொன்னால் அவையிலே பங்கு பெறக்கூடிய உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைப்பதே கடினமாகும்.

[முற்பகல் 10-20]

திரு. ஜே. ஜேம்ஸ்: தாங்கள் கூறுவது ஒருவேளை நல்ல நோக்கோடு கூறியிருந்தாலும் ப்ராக்டிக்கல் டிபிகல்டீஸ் வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நடைமுறையில் சிலரைப் பற்றி நாங்கள் குற்றச்சாட்டு கூறவேண்டுமென்றால் சட்டசபையில் தங்களிடம் வந்து சொல்லி உரிமை பெறவேண்டுமென்றால் தாங்கள் விசாரித்துத்தான் உரிமை வழங்க முடியும். அப்படி தாங்கள் விசாரித்து உரிமை வழங்குவது என்றால் சட்டசபையில் நாங்கள் எடுத்துச் கூறுவதற்குள் காலம் கடந்துவிடும். ஆக, நடைமுறையில் அந்தச் சிக்கல் இருக்கிறது. தங்களிடம் தகவல் சொல்லிவிட்டுச் சொல்ல வேண்டும் என்று. சொன்னால் ஓரளவிற்கு அது பொருத்தமாகயிருக்கும்.

ஆனால் முன் அனுமதி பெறவேண்டுமென்றால், அது நம் விதிமுறைகளில் கூட அப்படி இல்லை. நமது விதிகளில் கூறுவது என்னவென்றால், குற்றச்சாட்டுகளைக் கூறுகிற உறுப்பினர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்ற அளவில்தான் விதிகள் இருக்கின்றன. ஆகவே, நமது விதிமுறைகளை மாற்றியமைப்பது வரையில் இதுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கிற வழக்கத்தை யொட்டி செயல்பட வேண்டுமே தவிர பாராளுமன்ற விதிமுறைகளைச் சுட்டிக்காட்டுவது என்பது முறையாகாது.

[1978 மார்ச் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு ஜேம்ஸ் அவர்களுக்கு
நான் சொல்கிறேன். உங்களுக்கும் எனக்கும் அதிக வித்தியாசம்
இல்லை. நான் சொல்வது என்னவென்றால், விசாரித்து அனு
மதிக்கிறேன் என்பதல்ல. நமக்கு என்று, நம்மைக் கட்டுப்
படுத்துவதற்கு, விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறை
களுக்கு உட்பட்டுச் சொல்கிறீர்களா என்று பார்ப்பதற்காகத்
தான் சொல்கிறேனே தவிர ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அல்லது
கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் போன்றவற்றில் அமைச்சர்களை
அல்லது அதிகாரிகளைக் கேட்டுச் சொல்கிறேன் என்று சொல்கிற
வாய்ப்புக்கு இடமில்லை. நீங்கள் சொல்கிற பிரச்னைகள் விதி
களுக்கு உட்பட்டு ஆதாரங்கள் இருக்கின்றன என்றால் பிரச்னை
யில்லை. இப்போது பிரச்னை வருகிறது. நீங்கள் பேச முடிய
வில்லை, சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடுமோ என்று பயப்
படுகிறீர்கள். நீங்கள் பேசி முடித்துவிட்ட பிறகு எனக்கு
ஏற்படுகிற பிரச்னை, அதை ஆராய்ந்து, விதிகளைப் பார்த்து அது
பற்றிப் பேசலாமா கூடாதா என்பதுபற்றி தீர்ப்புக் கூறுவதில் நேரம்
விரயமாகாமல் இருக்க விதிகளுக்கு உட்பட்டு குற்றச்சாட்டுகளை,
ஆதாரமுள்ள குற்றச்சாட்டுகளைச் சொல்ல உரிமை அல்லது அனு
மதி பெற்றால் பிரச்னைக்கே இடமில்லை.

திரு. மு. கருணாநிதி : காவல் துறை மானியத்தின்போது
மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் சாட்டிய
குற்றச்சாட்டுபற்றி தாங்கள் அளித்த தீர்ப்பு வரவேற்கத்தக்க
தொரு தீர்ப்பாகவும், அப்படிப் பேசியிருக்கக் கூடாது, ஆதாரம்
இல்லாமல் பேசியது தவறு என்று சுட்டிக் காட்டுகிற தீர்ப்பாகவும்
அமைந்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் அதில் பிற்பகுதி பாராளுமன்ற முறைகளை
எடுத்துக்காட்டிவிட்டு இந்த மன்றம் எப்படி நடக்க வேண்டும்
என்றெல்லாம் எடுத்துச்சொன்ன அந்தப் பகுதியை மாத்திரம்
தாங்கள் தயவுசெய்து இப்போது வற்புறுத்தாமல் அலுவல் ஆய்வுக்
குழுவில் அதைப்பற்றி நாம் கொஞ்சம் விரிவாக விவாதித்து
அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுப்பது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே,
உங்கள் நோக்கத்தைப் பற்றி நான் சந்தேகிக்கவில்லை. என்றாலும்
நீங்கள் தெரிவித்த கருத்து, கருத்து சுதந்திரம் பறிக்கப்படுகிறதோ
என்ற ஒரு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, மதிப்பிற்
குரிய அமைச்சர் அவர்கள் விதியைச் சொல்கிறபோது இலாக்கா
சம்பந்தப்பட்ட தனி நபர்களையும் சேர்த்துப் பேசலாம் என்று
தான் நான் புரிந்துகொண்டேன். அவர்கள் சொந்த வாழ்க்கை
பற்றி நமக்கு அக்கறை இல்லை. ஆனால் பொது விஷயம் என்று
வருகிறபோது, பொது விஷயத்தில் தவறுசெய்யும்போது பேசாதே
என்று கட்டுப்படுத்துவதாகத்தான் நான் புரிந்து கொண்டேன்.
தயவுசெய்து அந்த அச்சத்தைப் போக்க எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் சொன்னதுபோல் கொஞ்சம் பேசித் தீர்த்தால்
பரவாயில்லை.

1978 மார்ச் 20]

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தங்கள் தீர்ப்பிலேயே
அதைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். பாராளுமன்ற விதிமுறைகளை
எடுத்துச்சொல்லி அந்த விதிகள்பற்றி நம் ரூல்ஸ் கமிட்டியில்
பேசலாம் என்று சொல்லிவிட்டு அதுவரை அதை மரபாகக்
கொள்ளலாம் என்பதுதான் தங்கள் தீர்ப்பின் அடிப்படை.
பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் அல்லது ரூல்ஸ் கமிட்டியில்
கூடப் பேசி முடிவு எடுக்கலாம், அதிலும் கட்சித் தலைவர்கள்
இடம் பெற்றிருக்கிறார்கள். நமது சட்டமன்ற விதிகளில் தெளி
வாக இருக்கிறது. ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப்
பற்றி குற்றச்சாட்டு சொல்வது கூடாது.

"A Member while speaking must not make apeisonal charge against a member"

ஆகவே நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களைப்
பொறுத்தவரையில் அத்தகைய குற்றச்சாட்டுகளைக் கூறக் கூடாது
என்றிருக்கிறது.

சட்டமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களைப் பற்றிய குற்றச்
சாட்டுக்கள் வருகிறபோது பேரவைத் தலைவர் அவர்களிடத்தில்
தெரிவிப்பது சட்டமன்றத்தில் இருக்கிற மற்ற உறுப்பினர்களுக்கு
தங்களைப் பற்றிய குற்றச்சாட்டுகள் வருகிறபோது பதில் சொல்
வதற்கு உரிய வாய்ப்புக் கிடைக்கும். ஆகவே, சட்டமன்ற
உறுப்பினர்களைப் பொறுத்தமட்டிலாவது நம்முடைய விதி
முறைகளுக்கு ஏற்ப அவர்களைப் பற்றிய குற்றச்சாட்டுகள்
சொல்லக் கூடாது என்று விதி இருக்கிற காரணத்தால் தகுந்த
குற்றச்சாட்டுகள் இருக்குமேயானால் அதைத் தங்களிடம் தெரி
வித்துகொள்ளலாம்.

அதிகாரிகளைப் பொறுத்தவரை, நம் விதிமுறைகளில் அவர்
களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட அல்லது பப்ளிக் ஆக்டி
விட்டீஸ்க்கு உட்பட்ட கருத்துக்கள்பற்றிப் பேசலாம் என்றிருக்
கிறது. மற்றவை பற்றி பேசலாமா கூடாதா என்பதுபற்றி
ரூல்ஸ் கமிட்டியில் முடிவு செய்துகொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித்
தலைவர் அவர்கள் சொல்கிற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.
நான் சொன்னதில், லோக் சபா-விதிகள் 353-ல் சொல்லியிருப்
பதை தெரிவித்தேன்......

No allegation of a defamatory or incr minatory nature would be made by a Member aga nst any person.'( )'

என்று சொல்லும்போது, என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்
" against any person"

என்று சொல்வதில் அதிகாரிகள் உட்பட தான். ஆகவே இது உங்கள் உரிமையைப் பறிப்பதற்காக சொல்லப்படவில்லை.

"against any Member or Minister"

என்று சொல்லியிருந்தால் தான் இந்தப் பிரச்னை வரும்.

No allegation of a defamatory or incriminatory nature shall be made by a Member against any person unless the Member has given previous intimation to the Speaker and also to the Minister concerned.

என்று தெளிவாக இருக்கிறது. அந்தக் கருத்தில் தான் இதைச் சொன்னேன். இதைப்பற்றி விரிவாக ரூல்ஸ் கமிட்டியிலோ அல்லது பி.எ.சி.யிலோ விவாதித்து முடிவு செய்து கொள்ளலாம். அதுவரை இப்போது உறுப்பினர்களைப் பற்றியும் அமைச்சர்களைப் பற்றியும் என்று இருப்பதை வைத்துக் கொள்ளலாம்.

எனவே ஏற்கெனவே இருப்பதை திருத்தி, வேறு எந்த உறுப்பினரைப்பற்றியோ அல்லது அமைச்சரைப்பற்றியோ என்று மட்டும் வைத்துவிட்டு, "அமைச்சரின் கீழ் பொறுப்பில் பணியாற்றுகிறவர்கள் மீது குற்றச்சாட்டு இருந்தால்," என்றிருப்பதை நீக்கிவிட்டு, அமைச்சரைப்பற்றியோ, உறுப்பினரைப்பற்றியோ குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது என்று எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : உறுப்பினர் என்று சொல்லும் போது அமைச்சர் என்பதும் அடங்கிவிடுகிறது. அமைச்சர் என்று தனியாக வேண்டியதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி பின்னல் விவாதித்து முடிவு செய்யும்போது பார்த்துக்கொள்ளலாம். அடுத்தது, மானியக்கோரிக்கைகள்.

8. 1978-79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"மானியக்கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 93,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து வண்டிகளுக்கு தற்போது வாங்கப்படும் 3 மாத வ...

(குவார்ட்டர்லி டாக்ஸ்) என்பதை ஒவ்வொரு மாதம் வாங்க வேண்டியது பற்றியும், தற்போது போடப்பட்டுள்ள வரியினால் சிறிய பஸ் உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதும் பற்றி விவாதிக்க—

"மானியகோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 93,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில்-ஒப்பந்த வண்டிகளுக்கு தற்சமயம் வசூல் செய்யும் கட்டணம் மிகவும் அதிகமாக இருப்பது பற்றி விவாதிக்க—

"மானிய கோரிக்கை எண் 3-மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 93,47,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் திர்மானத்தை முன் மொழிகிறேன்.

Thiru M. Arumugam : Sir, To discuss the need to set up a High Power Committee of Public men of character to examine the Motor Vehicles regulations and to suggest methods to modernise the system.

I move—

"that the allotment of Rs. 93,47,000 under Demand No. 3-Motor Vehicles Acts-Administration, be reduced by Rs. 100"

Thiru M. A. Latheef : Sir, To discuss the Policy

I move—

"that the allotment of Rs. 93,47,000/- under Demand No. 3-Motor Vehicles Acts--Administration, be reduced by Rs. 100"

(ஆ) கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட திர்மானத்தை முன்மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 31,92,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, கல்நாட்டூர், புதுவூர், குற்கலாம்பூர், உள்செக்கடி போன்ற மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்கு சாலை வசதி செய்து தருவதுபற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,92,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மெ. ஆண்டியம்பலம்: தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி மலைப் பிரதேசமாய் இருப்பதால் பல சாலைகள் பழுதடைந்திருப்பதை புதுப்பிக்கும் விஷயத்தை குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,92,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரிக்கு கிழக்கே சத்திரம் தென் மலை வழி வடுகப்பட்டி இணைப்புச் சாலையும் அதில் இரண்டு பாலங்களும் அமைக்காமல் இருப்பது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,92,75,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சேலம் நகர் காந்தி ஸ்டேடியம் அருகிலும் லீபஸார் ரயில்வே கேட் அருகிலும் மேம்பாலம் கட்ட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,92,75,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கிராமாந்திர பகுதிகளிலிருந்து படிப்புக்காக உயர்நிலைப் பள்ளிகளுக்குவரும் ரோடுகளை செப்பனிடும் முறையில் மானாமதுரை தெளிச்சாந்தநல்லூர் ரோட்டிலிருந்து கச்சாத்தநல்லூர், வளையனேந்தல் வழியாக பரமக்குடி வரும் ரோட்டை செப்பனிட வேண்டியது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,92,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. A. LATHEEF: Sir, to discuss about the need to lay a metalled road between Nimmiampet and Vaniyambadi (via) Mullai, Periakurumbatteru, Veppampattu and Kanavoipudur,

I move--
"that the allotment of Rs., 31,72,95,000 under Demand No., 39- Roads and Bridges be reduced by Rs. 100"

(இ) கோரிக்கை எண் 40—சாலை போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

(முற்பகல் 10-30)

"மானியக் கோரிக்கை எண் 40— சாலை போக்குவரத்துப் பணிகள்— கப்பல் போக்குவரத்து என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,88,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலை முழுமையாக நாட்டுடைமையாக்கத் தவறியதைச் சுட்டிக்காட்டி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 40— சாலைப்போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போப்புவரத்து என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,88,54,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. பழனிமுத்து: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூரிலிருந்து மஞ்சினி; புங்காவாடி பைத்தூர் வரை பஸ் விடுவதன் அவசியத்தை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 40—சாலை போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து என்ற தலைப்பின் கீழ் துவக்கப் பெறுகின்ற ரூ. 1,88,54,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்."

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, பழனியிலிருந்து கிராமங்களுக்குச் செல்லும நகரப் பேருந்துகள் இரண்டு வண்டிகள் தவிர அனைத்து வண்டிகளும் தனியார் வண்டிகளாக இருப்பதனுல் அப்பகுதி மக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிற நிலையில் எல்லாக் கிராமங்களுக்கும் அரசு கார்ப்பரேஷன் பஸ்களை விட வேண்டியது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,88,54,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தைக் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,88,54,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. A. LATHEEF: Mr. Speaker, Sir, To discuss policy
I move—
"that the allotment of Rs. 1,88,54,000 under Demand No. 40, Road Transport Services and Shipping, be reduced by Rs. 100"

[1978 மார்ச் 20

(ஈ) கோரிக்கை எண் 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,91,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, கலசபாக்கம் அருகில் செய்யாற்றில் ஒரு மேம்பாலம் கட்டக்கோரி விவாதிக்க—

"மானியக்கோரிக்கை எண் 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,91,10,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரே. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, கும்பகோணம்—தஞ்சாவூர் ரயில் நிலையங்களுக்கு இடையில் சுந்தரப்பெருமாள் கோவில் ரயில் நிலையத்திற்கும் பாபநாசம் ரயில் நிலையத்திற்கும் இடையில் உள்ள இரண்டு லெவல் கிராஸிங்குகளுக்கு மேம்பாலங்கள் கட்டுவதின் அவசியத்தைக் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,91,10,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, காட்பாடி ரயில்வே ஜங்ஷன் பஸ் போக்குவரத்து மேம்பாலத்தை அகலமாகக் கட்டுவதைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,91,10,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்."

திரு. ஏ. ஆறுமுகம்: தலைவரவர்களே, சேலம் தாலுக்கா, மூக்கனேரி ஏரிக்கரையின் மீது செல்லும் சாலையைப் புதுப்பித்து விரிவுபடுத்துவதுபற்றி விவாதிக்க—

1978 மார்ச் 20] [திரு. ஏ. ஆறுமுகம்]

"மானியக் கோரிக்கை எண் 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,91,10,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. A. LATHEEF: Mr. Speaker, Sir, To discuss policy I move....

"that the allotment of Rs 7,91,10,000 under the Demand No. 54, Capital Outlay on Roads and Bridges, be reduced by Rs. 100/-"

(உ) கோரிக்கை எண் 55—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துக் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 55—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துக் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

திரு. ரே. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, கப்பல் போக்குவரத்து துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், ஆகியவை குறித்து விவாதிக்க—

"மானிய கோரிக்கை எண் 55—சாலைப் போக்கு வரத்துப் பணிகள், கப்பற்போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கொள்கைப் பற்றி விவாதிக்க—"மானியக் கோரிக்கை எண். 55— சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பினகீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண்கள். —3,39,40,54, 55 ஆகியவற்றைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்* வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே உள்ளவைகளை நான் படித்ததாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், அதற்கு அவைத் தலைவர் அவர்கள் அனுமதி தருவார்கள் என்று நான் நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய ஆலோசனைகளை கொடுக்க வேண்டுமென்றும், அதுபற்றி அரசின் கருத்துக்களைப் பின்னர் அறிவிக்கிறேன் என்றும் கூறிக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய மானியத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

போக்குவரத்துத் துறையும், சாலைகள், பாலங்கள் மேம்பாட்டுத் துறையும் இந்த நாட்டுக்கு எவ்வளவு அவசியம் என்பதை நாமும் அமைச்சர்களும் அறிவார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடக்கத்திலே நான் குறிப்பிடுவது, நம்முடைய அமைச்சர் அவர்கள் இளம் வயது உள்ளவர். சிரித்துக் கொண்டே இருக்கின்றவர்கள். ஆனால் இந்தப் போக்குவரத்துத்துறை தொடர்ந்து சிறிய வயதுள்ளவர்களால் தொடக்கத்திலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்திருப்பதை நாம் கண்டிருக்கிறோம். அந்த வயதிற்கேற்ப, தங்களுடைய வேகத்தை இந்த துறையிலே தாங்கள் காட்ட வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டு கொள்கிறேன். நீங்கள் காட்டினாலும், இந்தத் துறையிலே இருக்கின்ற அதிகார இயந்திரம் ஆமை வேகத்திலே போகும், அதை அனைவரும் அறிவோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*351–410-ம் பக்கங்களில் இணைப்புகள் I, II, III, IV ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

இந்தத் துறையை 7 பிரிவுகளாக, 7 கார்ப்பரேஷன்களாக அமைத்திருக்கிறார்கள். இந்த 7 பிரிவுகளையும் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். நாடாளும் மன்றத்திலே ஒவ்வொரு அமைச்சரின் இலாக்காவிற்கும் எப்படி ஒரு ஆலோசனைக் குழு இருக்கின்றதோ, அதைப் போன்று மாநில அமைச்சர்களுக்கும்க் பொதுவாகவே அப்படி ஒரு ஆலோசனை குழு அமைக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பமாகும்.

இந்த ஏழு சாலைப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஏழு குழுக்களைப் போட்டு அமைச்சர் தலைவராகவும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை தரும் அளவுக்கு அதன் உறுப்பினர்களாகவும் கொண்டு குழுக்களை அறிவிக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் வழங்குகின்ற வரிப் பணத்தைச் செலவு செய்கிறபோது அதிகார வரம்பிலே இருப்பவர்கள் ஏகபோகம் செலுத்துவார்களானால் மக்கள் விரும்புகிற தேவைகள் அங்கிருந்து கிடைக்காது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். அந்த ஆலோசனைக் குழுக்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடி ஒவ்வொரு கார்ப்பரேஷனைப் பற்றியும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். 90 நாளைக்கு ஒரு கழகத்தில் எவ்வளவு பஸ்கள் ஓடுகின்றன, எவ்வளவு பஸ்கள் நிற்கின்றன, எவ்வளவு சம்பாதனை, எவ்வளவு நஷ்டம் என்ற புள்ளிவிவரத்தை நாம் ஒவ்வொரு குவார்ட்டரிலும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அப்படி எடுத்துக் கொள்ளும் போது, லாப நஷ்டம் பற்றிய பாலன்ஷீட்டை ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ஒரு முறை பார்த்தால் அடுத்து உடனடியாக அந்த நஷ்டத்தைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள ஏதுவாக இருக்கும். அந்த முறையை நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஏழு கார்ப்பரேஷன்களையும் ஆடிட் ஜெனரலிடம் விட வேண்டும். இப்போது அந்த முறை இல்லை. இது மிகவும் முக்கியம். யார் ஆள்கிறார்கள் என்பது முக்கியமல்ல. மக்களுடைய வரிப்பணம் எப்படிக் கணக்கு வைத்துக் கொள்ளப் படுகிறது என்பதற்காக ஆடிட் ஜெனரலுக்கு விட வேண்டும். இல்லையென்றால் இந்த வருஷம் ஒரு கோடி ரூபாய் லாபம் என்று காட்டுகிறார்கள். அடுத்த வருஷம் இரண்டு கோடி ரூபாய் நஷ்டம் என்று கூறுகிறார்கள். இதெல்லாம் அரசாங்கத்திலுள்ள புக் அட்ஜெஸ்ட்மென்ட் முறை. இந்த முறையை மாற்றியமைத்து ஆடிட் ஜெனரலுக்கு விட வேண்டுமென்று வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சி. ஆறுமுகம்] [1978 மார்ச் 20

இன்றைக்கு புதிய வண்டிகள் வாங்குகிறோம். ஏறத்தாழ 278 பென்ஸ் சேசிஸ்களைப் பெற்றிருக்கிறார்கள். உலக வங்கி கடன் உதவியுடன் வாங்கியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படி வாங்கப்படுகிற பஸ்கள் சென்னை மாநகரத்தை உள்ளடக்கிய பகுதிகளில் முதலில் ஓட வேண்டுமா ? எத்தனை ஆண்டுகள் ஓட வேண்டும் ? இரண்டு ஆண்டுகள் கழித்து கார்ப்பரேஷனுக்கு அனுப்பி விடுகிறார்களா ? இது பற்றி யெல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்கம் தரக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

278 சேசிஸ்கள் பென்ஸ் சேசிஸ்கள் என்றால் அது கல்கத்தா நகரிலிருந்து சாலை மூலமாகச் சென்னைக்கு வரவேண்டும். ஏறத்தாழ 1,500 மைல் தூரம் சாலையில் டயர்கள், எஞ்சின்கள், மற்ற பாகங்கள் எல்லாம் தேய்ந்து வருகின்றன. இங்கே தமிழ் நாட்டிலேயே அசோக் லேலண்ட் சேசிஸ்கள் இருக்கின்றன. ஐந்தாறு மைலில் இருக்கிறது. இங்கே வாங்காமல் கல்கத்தா பென்ஸ் சேசிஸ்களை வாங்கக் காரணம் என்ன? அங்கேதான் வாங்க வேண்டுமென்று வற்புறுத்தியவர்கள் யார் ? இதை வாங்க வேண்டுமென்று வலியுறுத்தியவர் இங்கிருந்து மாற்றல் பெற்றுச் சென்ற அதிகாரி யா ? இந்த விளக்கங்கள் எல்லாம் மன்றத்திற்கும் நாட்டு மக்களுக்கும் தேவை. காரணம்—அசோக் லேலண்டில் வாங்கியிருந்தால் தமிழ்நாட்டில் எத்தனை ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்திருக்க முடியும் என்று பார்க்க வேண்டும். நம்முடைய தொழிலாளர்கள் பிழைத்திருப்பார்கள். 278 சேசிஸ் ஒன்று இரண்டு அல்ல. இதை வாங்கியவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? அமைச்சருக்குத் தெரிந்து வாங்கினரா அல்லது அவராகவே வாங்கி வைத்துவிட்டுச் சென்று விட்டாரா ? உங்கள்மீது குறை சொல்லவில்லை. நீங்கள் புதிதாக வந்திருப்பவர்கள். இது பற்றியெல்லாம் விளக்கம் அளிக்க வேண்டும். இந்த முறையை தொடர்ந்து இந்த அரசு கடைப்பிடிக்கப் போகிறதா என்பதையும் அறிவிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-40].

அதற்கடுத்தபடியாக, கணக்குக் கொடுத்திருக்கிறார்கள் நம்முடைய அதிகாரிகள். 1977-78ஆம் ஆண்டுக்கு 2 கோடியே 79 இலட்சம் லாபம் என்று. இதிலே வருமான வரி கட்ட வேண்டும், ஆனால் அதைப்பற்றிய குறிப்பு இல்லை. வருமான வரி எவ்வளவு கட்டப் போகிறோம் ? புதிதாக வண்டி போட்டு விட்டதாலே பேலன்ஸ் ஆகிவிட்டது, ஆகவே கட்ட மாட்டோம் என்று சொல்லலாம். இது தெரிந்த விஷயம்தான். 65 சதவீதமா, 70 சதவீதமா என்று தெரிய வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒலி பெருக்கியை மறைத்துக் கொண்டு பேசுகிறீர்கள்; புத்தகத்தால் வேறு மறைத்து விடுகிறீர்கள் ; நேராக நின்று பேசுங்கள்.

1978 மார்ச் 20]

<u>திரு. சி. ஆறுமுகம் :</u> திசை திருப்புகிறார் பேரவைத் தலைவர். பேரவைத் தலைவரவர்களே, 2 கோடியே 79 இலட்சம் ரூபாய் 1977-78 ஆம் ஆண்டுக்கு இலாபம் வந்தது என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். நான் ஒரு பழமொழி சொல்கிறேன், 'மொட்டைத் தாதன் குட்டையிலே விழுந்தான்' என்பதைப், போல இருக்கிறது. ஆனால் ஏற்கெனவே 1977-ஆம் ஆண்டு கொடுத்துள்ள புள்ளிவிவரம் 11 கோடியே 25 இலட்சம் ரூபாய் நஷ்டம். இது 1977ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட புள்ளி விவரம், 31—3—1977-இல். நடப்பாண்டில் கொடுத்திருக்கிறார்கள், அப்ராக்ஸ்மேட் என்று. இந்த ஆண்டு இப்படிக் கொடுத்து விட்டு மீண்டும் வருகின்ற ஆண்டுகளில் எப்படிக் கொடுப்பார்கள் தெரியுமா ? மீண்டும் 1977-78 என்பதை இப்படிப் போட்டு விட்டு மறுபடியும் போடுவார்கள் அப்ராக்ஸ்மேட் என்று.

அடுத்து, ஏழு கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. இந்தக் கணக்கிலே அதற்கான பேலன்ஸ் ஷீட் வைக்கவில்லை. ஒவ்வொரு கார்ப்பரேஷனுக்கும் ஒரு ஆண்டில் எவ்வளவு வருவாய், எவ்வளவு செலவு, அரசின் மூலதனம் எவ்வளவு, வங்கி மூலதனம் எவ்வளவு, உலக வங்கியின் மூலதனம் எவ்வளவு என்ற குறிப்பு கொடுக்கப்படவில்லை. மொத்தமாகக் கொடுத்திருக்கிறார்கள் 51 சதவீதம் அரசிடத்திலும், 49 சதவீதம் தனியாரிடத்திலும் என்ற புள்ளி விவரம் தெரிவிக்கப்படுகிறது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒவ்வொரு கழகத்திலும் எவ்வளவு பஸ்கள், எவ்வளவு புதிய பஸ்கள், எவ்வளவு பழைய பஸ்கள் என்று புள்ளிவிவரம் கொடுக்கப்பட வேண்டும்.

அதற்கடுத்தபடியாக, ஒவ்வொரு கழகத்திலேயும் எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது, பழைய சாமான்கள் எவ்வளவு இருக்கிறது, இருக்கின்ற டயர்கள் எவ்வளவு என்று கூற வேண்டும். அவசர நிலை காலத்தில் மதுரையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் காயலான் கடையிலிருந்து வாங்கிய சாமான்கள் எவ்வளவு என்று சொல்ல வேண்டும். காயலான் கடையில் கை விலைக்கு வாங்கலாமா ? அப்படிச் சட்டத்தில் இருக்கிறதா ? சர்க்கார் வாங்குவது என்றால் கொட்டேஷன் கேட்க வேண்டும். அரசுப் பிரிவில் அல்லது தனியாரிடத்தில் கொட்டேஷன் கேட்க வேண்டும். ஆனால் மதுரையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் முன்பு இருந்த அதிகாரி இப்படிச் செய்யவில்லை, அவர் மாற்றப்பட்டு போய்விட்டார் என்று கருதுகிறேன். இலட்சக்கணக்கான ரூபாய்களுக்குக் காயலான் கடையில் சாமான்கள் வாங்கிவைத்திருக்கிறார். இன்னும் அது கோடவுனில் இருக்கிறதா ? அல்லது இடைக் காலத்தில் ஏலம் போடப்பட்டு விற்றிருக்கின்றார்களா ? இந்தக் காரியம் எப்படி நடைபெறுகிறது ? என்ன தான் நாங்கள் எதிர்க் கட்சியாகவும், நீங்கள் ஆளுங்கட்சியாகவும் வந்தாலும், நாட்டு மக்களிடத்திலே இவ்வளவு செய்வோம் என்று சொல்லி விட்டு வந்தாலும் இங்கே வந்தவுடன் விவகாரம் எப்படியிருக்கிறது ?

அதிகாரிகள் என்ற இயந்திரத்தில் நாம் மாட்டிக்கொண்டு நசுங்கிக்கொண்டு இருக்கிறோம். இதை மாற்றுவதற்கு வழி என்ன என்று பார்க்க வேண்டும். தொடக்கத்திலேயே நான் குறிப்பிட்டதைப்போல, அமைச்சரவர்கள் இளைய வயதினர், சிரித்துக் கொண்டே இருப்பார்கள். நாம் சொல்வதைத் தான் அதிகார வர்க்கம் ஏற்க வேண்டும், அவர்கள் சொல்வதை நாம் ஏற்றுக் கொள்வதற்காக மக்கள் நமக்கு வாக்களிக்கவில்லை. (மணி யடிக்கப்பட்டது) இது முக்கியமான விஷயம்.

நீங்கள் ஆளுங்கட்சியாக இருக்கிறீர்கள், நாங்கள் எதிர்க்கட்சி யாக இருக்கிறோம், நீங்களும் நானும் மக்கள் ஓட்டுப்போட்டால் வருகிறோம், இல்லையென்றால் கிடையாது. ஆனால் அதிகாரிகள், நிரந்தரமாக இருக்கக் கூடியவர்கள். அவர்கள் கொடுக்கின்ற புள்ளி விவரத்தை நீங்கள் சொல்லப் போகிறீர்கள். எனவே, அதைப் பற்றி நான் தகராறு செய்யத் தயாராக இல்லை. ஏழு கிடங்கு களிலும் ஒரு முறையைக் கையாளுகிறார்கள். இது ஏகபோகம்தானே ? மூன்று மாதங்கள் பஸ்ஸை ஓட்டு கிறார்கள் ஒவ்வொரு பகுதியிலேயும். 3 மாதம் ஓட்டி விட்டு நஷ்டம் வருகிறது என்று நிறுத்திவிடுவார்கள். நான் அமைச்சரவர்களைத் கேட்டுக்கொள்வது, 3 மாதத் திலே ஒரு பஸ்ஸிலே இலாப நஷ்டத்தைப் பார்க்க முடியுமா ? நீங்களோ, நானோ மகனுக்குத் திருமணம் செய்துவிட்டு, 3 மாதத் திலே பேரன் பிறக்கவில்லை என்றால் அதற்காக அந்தப் பெண்ணைத் திருப்பி அனுப்புவேன் என்று சொன்னால் என்ன அர்த்தம் ? பெண் கேட்டுக்கொண்டு சும்மா இருப்பாரா ? அல்லது, அவரது உற வினர்கள்தான் சும்மா இருப்பார்களா ? அதுபோல்தானே, இது வும் இருக்கிறது.

3 மாதம் பஸ்ஸை ஓட்டிவிட்டு நிறுத்திவிடுவது என்றால் என்ன அர்த்தம் ? உடனே, ஆளுங்கட்சி உறுப்பினர்கள், ஆறுமுகம் நீ, தேசியமயத்திற்கு விரோதமாகப் போகிறாயா என்று கேட்கலாம், நான் தேசியமயத்திலே முழு நம்பிக்கை கொண்ட வன். ஒரு கண் போனாலும், தலை இருக்கிறதென்று மகிழ்பவன். கண் போவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நான் கண் இழந்தவன். இருந்தாலும், அக் கொள்கையிலே நம்பிக்கை கொண் டவன். எதிராக உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறார், ஆறு முகம் ஏதாவது பேசினால் நாம் பதில் சொல்லலாம் என்று, முன்னாள் போக்குவரத்து அமைச்சர் திரு. இராமச்சந்திரன்.

கவுன்டர் அப்ளிக்கேஷன் முறையிருக்கிறது. வேறு ஒருவர் ஓட்டுகிறார், அவருக்கு ஒரு ஸ்கீம், நீயும் ஓட்டாதே, நானும் ஓட்டமாட்டேன் என்று ஸ்கீம் போடுவது என்றால் அது எப்படி முறையாகும் ? அவன் ரின்யூவல் அப்ளிக்கேஷன் போடும்போது,

கவுன்டர் அப்ளிகேஷன் போடுகிறார்கள். சட்டம் இருக்கிறது. நீங்கள் முன்பு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த போது, நீங்களும் நாமும் சேர்ந்துதான் அந்தச் சட்டத்தை போட்டோம். ஆனால், அந்த முறை தேவைதானா ? கவுன்டர் அப்ளிகேஷன் முறை தேவையில்லை. சரி, கவுன்டர் அப்ளிகேஷன் போடுகின்ற கழகங்கள் முறையாக நடத்துகிறார்களா ? 'எந்த கழகமாக இருக்கட்டும், எனக்கு என்ன தெரியும்? நான் சமீபத் திலே வந்தவன், என்னை நெருக்குகிறாயா' என்று கேட்காதீர்கள். நான் உங்களை நெருக்கவில்லை. நீங்கள் (முன்னாள் அமைச்சர்) அவர்களைக் கேளுங்கள், கவுன்டர் அப்ளிக்கேஷன் தேவைதானா என்று.

சர்க்காரிலே, இன்றைக்கு 51 சத விகிதம் என்று சொன்னார் களே, இந்த 51 சதவீதத்தில் பல நூற்றுக்கணக்கான பஸ்கள் 4 மாதம் டெம்பரரி பர்மிட் வாங்கித்தான் ஓட்டுகிறார்கள். இதில், டாக்ஸே கட்டாதவர்கள் நிறைய பேர் ; நம்பர் பிளேட்டே மாற்றாமல் ஓட்டினார்கள். 39 ஆக்ட், தனிப்பட்டவர்களுக்கும் அரசுக் கழகத்திற்கும் ஒன்றுதானே. சட்டம் இரு தரப்புக்கும் ஒன்றுதானே. ஏன் அரசுக் கழகத்தில் இந்தத் தவறுகள் நடக் கின்றன ? அரசாங்கத்தில் இத் துறைக்கு ஒரு செயலாளர் ; அந்த 7 கார்ப்பரேஷன்களுக்கும் அவரே தலைவர். இது எப்படி சரியாக வரும் ? இங்கே இருக்கிற செயலாளர், 7 கார்ப்பரே ஷனுக்கும் சேர்மன். அது எப்படி பொருந்தும் ? எனக்கு ஒன்றும் புரியவில்லை. அது எப்படி பொருந்தும் ? ஒன்று சொல்லலாம், இரண்டும் அரசாங்கத்தைக் காப்பாற்றும், என்று. அதை வேண்டு மானாலும் ஒத்துக்கொள்ளலாம். ஆனால், கொள்கை அளவிலே அது பொருந்தி வருமா ? ஆக, அதை இரு தலைமைப் பொறுப்பாக மாற்றி அமைத்தால், நிர்வாகம் சரியாக இருக்கும்.

புதிய அரசின் கொள்கை என்ன, போக்குவரத்துத் துறையில் ? தேசிய மயம் ஒன்றா, இரண்டா அல்லது மூன்றா என்று நீங்கள் சொல்வீர்களானால், என்னைப் போன்றவர்கள் அல்லது ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்திருப்பவர்கள் கால்நடை அமைச்சரிடம் போய் 1 எருமை மாடாவது வாங்கிக் கொண்டு, பஸ்ஸை விட்டுவிடு வான். ஒன்று, இத்தனை பஸ்களுக்கு மேல் தேசியமயம் என்று தெரிவியுங்கள், அல்லது 'கம்பிளீட்' தேசியமயம் என்று தெரி வியுங்கள். ஆக, இரண்டுங்கெட்டான் நிலையில் ஆளை சாகடிக் காதீர்கள் என்று தெரிவித்து இந்த அளவோடு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

நான், இங்கே எனது தொகுதியான சேலம் மாநகரில் உள்ள சில பிரச்சினைகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். சேலம் மாநகரம் வளர்ந்த ஒரு பெரிய நகரம். அங்கே சாலைப் போக்குவரத்து நெரிசலான கட்டத்தை அடைந்திருக்கிறது. இதனால், பாதசாரிகளுக்கு உள்ள இடர்ப்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஆகவே, முக்கியமான இடங்களிலே அங்கே சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்தை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சேலம் அப்சரா தியேட்டர் அருகே உள்ள பாலம் மிகவும் பழுதடைந்த நிலையிலே உள்ளது. இதைப் பலமுறை எடுத்துக் கூறியும் அங்கே அதைப் பழுது பார்க்காமல், சீரமைக்காமல் இருக்கிறார்கள். ஆகையினால், அது நகராட்சித் துறையின் பொறுப்பிலே இருந்தாலும், இந்த அரசு எடுத்து, கண்டிப்பாக அந்தப் பாலத்தைச் சீர்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–50)

மேலும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சேலம் பொது மருத்துவமனை அருகில் உள்ள ரயில் கேட் மீது சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், திருப்பதி, பெங்களூர் போன்ற முக்கியமான ஊர்களுக்குச் செல்லும் பாதையாக இருப்பதால் அங்கு ஒரு மேம்பாலம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அந்த ரயில் கேட் மூடப்பட்டால் 5 நிமிடத்திற்குள்ளாக நூற்றுக்கணக்கான வண்டிகள், பஸ்களும் லாரிகளும் தேங்கி நிற்கும் நிலை ஏற்பட்டு அதை சீர்படுத்துவதற்கு ½ மணி நேரம் ஆகிற சூழ்நிலை ஆகிவிடுகிறது. எனவே அங்கு ஒரு மேம்பாலம் கட்ட கண்டிப்பாக இந்தத் திட்டத்திலே ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக சேலம், பெங்களூர் இரவு நேர ஏ.டி.சி. வண்டிகளில் சில வசதிக் குறைவுகள் இருக்கின்றன. தனியார் பஸ்களில் உள்ளதைப்போல இந்த பஸ்களையும் சொகுசு பஸ்களாக மாற்றிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இன்னொன்றையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சேலம் பெங்களூர் பல்லவன் போக்குவரத்துக் கட்டணத்தைக் குறைத்தது வரவேற்கத்தக்கதாகும்.

அடுத்து சேலத்திலே புறநகர்ப் பகுதிகளுக்கு டவுன் பஸ் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சேலத்திற்குப் பல பகுதிகளில்/ இருந்தும் வருகின்ற வியாபாரிகளுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும், மருத்துவமனைக்கு வருகின்றவர்களுக்கும் கிராமத்திலே இருந்து வருகின்றவர்களுக்கும் இப்போது இருக்கிற டவுன் பஸ் வசதிகள் மிகக் குறைவாக இருக்கிறது. கண்டிப்பாக அதை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்றவைகளை ஓட்டுகிறவர்கள் கட்டாயம் ஹெல்மட், தலையில் தொப்பி அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டும். அவர்களுக்கு அதை அணிவது முதலில் தயக்கமாக இருந்தாலும் சங்கோஜமாக இருந்தாலும் பழக்கப்பட்டு விட்டால் சரியாகிவிடும். ஆகையால் இதைக் கட்டாயமாக அணிய வேண்டும் என்று சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் பல உயிர்கள் காப்பாற்றப் படக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

மேலும் டவுன் பஸ் ஸ்டாண்டில் அதிக விஸ்தாரம் இல்லாமல் குறைவான நிலப்பரப்பு இருக்கிறது. அதனால் பஸ் போக்குவரத்துக்கு இடைஞ்சலும் இருக்கிறது. அந்த பஸ் ஸ்டாண்டை விரிவுபடுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆட்டோ, டாக்சி போன்ற வாகனங்கள் நிற்பதற்கு எந்தவிதமான ஸ்டாண்டும் இல்லை. அங்கே டாக்சி, ஆட்டோ போன்ற வாகனங்களை நிறுத்த மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதைப் போக்கத்தக்க விதத்தில் அவைகளுக்கு ஒரு ஸ்டாண்டு, குறிப்பாக பொது மருத்துவமனை அருகில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அரசு ஆற்றிவரும் நல்ல பல திட்டங்களில்—சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு—ரூ. ஒரு கோடியே 42 லட்சம் செலவில், சூரமங்கலம்—தாரமங்கலம் சாலையை மேம்படுத்துத் திட்டம் வரவேற்கத் தக்க ஒரு நல்ல திட்டமாகும்.

புரட்சித் தலைவரின் அருமைத் தம்பியும், சேலத்தின் செல்லப்பிள்ளையுமான நம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கீழ், தமிழக வரலாற்றில் என்றும் காணாத முறையில் இது போன்ற நல்ல பல திட்டங்களைச் செயலாக்கி, புரட்சித் தலைவரின் புகழுக்கு அணி சேர்க்கும் வகையில் இந்த ஆற்றல்மிகு பணி தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்தச் சாலைகளை கான்ட்ராக்ட் முறையில் செப்பனிடும் முறையைக் கைவிடுவதற்கு அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சேலத்திலிருந்து, கோவை செல்லும் பாதையில், சேலம்—மகுடம்சாவடி பாதை சுமார் [illegible] ஆண்டு காலமாக இன்னும் சரியாக சரிச் செய்யப்படவில்லை. எந்த நோக்கத்தோடு அந்த கான்ட்ராக்ட் எடுத்தவர்கள் இப்படி தள்ளிப்போட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

இப்படித் தள்ளிக்கொண்டு போவதால் இன்னொரு தலை முறை வந்துவிடும் போல் இருக்கிறது. ஆகவே, காண்ட்ராக்ட் எடுத்து விட்டு, அரசே செயல் முறையில் அரசு அதிகாரிகளைக் கொண்டு அந்தப் பாதையைச் சீரமைக்கும் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவை விதி 6 (1)-ன் கீழ் திரு. எஸ் ஜே. இராமசாமி அவர்களை மாற்றுத் தலைவராக நியமிக்கிறேன்.

8. 1978–79-ஆம் ஆண்டுக்கான மான்யக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)

திரு. த. புஸ்பராஜு : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இன்று வந்துள்ள மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்தை இங்கே கூறுகிறேன்.

பஸ்கள் தேசியமாக்கப்பட்டவுடன் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் எடுத்து நடத்தப்பட்ட பல பஸ் தடங்கள் இன்று பஸ் ஓடாமல் நிறுத்தப்பட்டுள்ள ஒரு நிலையை நம் தமிழகத்தில் இன்று பார்க்கின்றோம். இந்த நிலையை அரசு மாற்ற வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு மேல் தனியார்கள் மூலம் நல்ல முறையில் லாபத்தில் ஓடிக் கொண்டிருந்த பஸ்கள் கூட போக்கு வரத்துக் கழகங்கள் மூலம் எடுத்து நடத்தப்பட்டு லாபம் இல்லை என்ற காரணத்தால் இன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலையை அரசு உணர்ந்து லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல், ஏழை எளிய பொதுமக்கள் வசதியைக் கருதி உடனடியாக இவ்வாறு நிறுத்தப்பட்ட பஸ்களை ஓட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு விரைவுப் பேருந்துகள் குறிப்பிட்ட நேரத்திற்கு வருவது இல்லை. கூடியவரை குறிப்பிட்ட நேரத்திற்கு ஓட்டுமாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக வாடகைக்குக் கொடுக்கப்படுகின்ற ஒப்பந்த ஊர்திகளுக்கு வாங்கப்படுகின்ற வாடகையும், டீசலுக்காக வாங்குகின்ற செலவுத் தொகையும், தனியார் வாங்குவதை விட அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஒப்பந்த ஊர்திகளுக்கு வாடகையைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களுக்காகக் கட்டப்பட்டிருக்கின்ற பணிமனைகளில் பல வசதிக் குறைபாடுகள் இருக்கின்றன. குறிப்பாக பல பணிமனைகளில் தரை கூட கான்கிரீட் போடாத ஒரு நிலையும், மேற்கூரையும் இல்லாத ஒரு நிலையினையும் நாம் இன்று காண்கிறோம். இந் நிலையினைப் போக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்களின் நலனைக் கருதி, சில சமயங்களில் தற்காலிக பர்மிட் வழங்க வேண்டியிருக்கிறது. அந்தச் சமயத்தில் பர்மிட் வாங்குவதற்காகப் போக்குவரத்துக் கமிஷனரை அணுக வேண்டியிருக்கிறது. கமிஷனர் அரசாங்கத்தை நாடவேண்டியிருக்கிறது. அவ்வாறு ஆகும்போது குறிப்பிட்ட நேரத்திற்குள் தற்காலிக பெர்மிட் வழங்க முடிவதில்லை. இந்நிலையை உணர்ந்து அரசு அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகத் தற்காலிக அனுமதி வழங்க உத்திரவு பிறப்பித்தால் குறிப்பிட்ட நேரத்திற்குள் பெர்மிட் வழங்கி பொதுமக்களுக்கு நன்மை செய்ய ஏதுவாக இருக்கும். அரசு இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மினி பஸ் கிராமங்களில் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்து வருவதைப் பாராட்டுகிறேன். அவ்வாறு பஸ்கள் ஓட்டும் உரிமையை போக்குவரத்துக் கழகங்களுக்குக் கொடுக்காமல், தங்களுடைய வாழ்நாள் எல்லாம் பொதுமக்களுக்குச் சேவை செய்துவிட்டு, ஓய்வு பெற்றவுடன் வேறு வருமானம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் டிரைவர்கள், கண்டக்டர்களைக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்துவதற்கு மினி பஸ் ஓட்டும் உரிமையை வழங்க வேண்டும். அவ்வாறு கூட்டுறவு முறையில் நடத்த முன் வருகின்ற டிரைவர்கள், கண்டக்டர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடம் இருந்து கடனுதவி அளிக்க வேண்டும். இம்மாதிரியான ஒரு திட்டத்தை அரசு செய்தால் வருமானமில்லாமல் வாழ்க்கையில் அவதிப்படும் டிரைவர்கள், கண்டக்டர்களுக்கு ஒரு நல்ல வழியாக அமையும். அதோடு மட்டுமல்லாமல் டிரைவர்கள் கண்டக்டர்களுக்கு அனுபவம் இருப்பதால் கிராம மக்களுக்கு நல்ல முறையில் அவர்கள் சேவை செய்ய முடியும்.

இன்று தமிழகத்தில் உள்ள பேருந்துகளில் சுமார் 50 சதவிகிதம் தனியார் வசம் உள்ளது. 10 பேருந்துகளுக்கு மேல் நடத்தும் உரிமையாளர்கள் சுமார் 12 நபர்களே. சுமார் 1,800 உரிமையாளர்கள் 4,900 பேருந்துகளை நடத்துகிறார்கள். இந்த 1,800 உரிமையாளர்கள் 5 பேருந்துகளும், அதற்குக் குறைவாகவும் உள்ள பேருந்துகளையும் நடத்துகிறார்கள். இன்றைய நிலையில் பேருந்து நடத்துபவர்கள் கஷ்ட நிலையில்தான் உள்ளார்கள். பொதுவாக டையர், உதிரி பாகங்கள், டீசல் ஆயில் ஆகியவற்றின் விலையுயர்வு கடுமையாக இருப்பதாலும், மோட்டார் வாகன வரி ஆகியவற்றைத் தாங்க முடியாத நிலை இருப்பதாலும் உள்ள நிலையில்தான் இருக்கிறார்கள்.

அரசாங்கம் எடுத்து நடத்தும் போக்குவரத்துக் கழகங்களின் பஸ்களில் 66.35 சதவீதம் பஸ்கள் லாபம் இல்லாமல் ஓடிக் கொண்டுதான் இருக்கின்றன என்று கணக்குக்

காட்டப்பட்டு இருக்கிறது. இதற்குக் காரணம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில்தான் மோட்டார் வாகன வரி அதிகமாக உள்ளது. கேரள மாநிலத்தில் காலாண்டு வரி ஒரு சீட்டுக்கு ரூ. 115 தான். தமிழகத்தில் ரூ. 215 தற்போது ரூ. 230 ஆக ஆக்கியுள்ளோம். இதனால் மேலும் பேருந்து உரிமையாளர்களின் நிலை கஷ்டம் தான். இருந்த போதிலும் சிறிய உரிமையாளர்கள் பல ஆண்டு காலமாக இதே தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். தேசியமயக் கொள்கையாலோ அல்லது கஷ்ட நிலையாலோ இந்தத் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலுக்கு மாற்றிக்கொள்ள வேறு தொழில் அனுபவம் இல்லாதவர்கள். அதோடு அவர்களுக்கு அதற்குப் பணவசதியும் இல்லை. இந்தத் தொழிலை விட்டு விடுவதானல் தொழிலை குளோஸ் செய்து பார்த்தால் கடன்தான் மிஞ்சும். கடன்காரர்களுக்குப் பயந்தும் அன்றாடம் தன் குடும்பம் நடத்த வேண்டியும், நஷ்டத்துடனும், கஷ்டத்துடனும் தொழிலை தொடர்ந்து நடத்துகின்றனர். ஆகையால் அவர்களை முதலாளிகள் என்ற வார்த்தையில் எண்ணிப்பார்க்காது அவர்களையும் பொருளாதார ரீதியிலும், தொழில் முறையிலும் பின் தங்கியவர்களாகக் கருதி பேருந்து தேசியமயக்கொள்கைகளுக்கு உட்பட்டு சிறிய உரிமையாளர்களுக்கு சில சலுகைகளைக் கொடுக்க வேண்டியது அவசியம். இதை மனதில் கொண்டு தனியார் துறை பேருந்து உரிமையாளர்கள் அனைவரையும் முதலாளிகள் என்று எண்ணக் கூடாது.

பேருந்துகள் தேசியமயக் கொள்கையை நான் கைவிடும்படி கேட்கவில்லை. தேசியமய திட்டத்திற்குள் சிறிய பேருந்து உரிமையார்களுக்குத் தொடர்ந்து நிலையான வாழ்வு அளிக்குமபடி கேட்டுக் கொள்கிறேன்.

சிறிய உரிமையாளர்கள் என்று தீர்மானிக்கும் போது, ஒன்று ஒரு ஒர்க்ஷாப் வைத்துக் கொள்ள வசதி வேண்டும். இரண்டு, ஒரு ஸ்பேர் பஸ் வைத்துக் கொள்ள வசதி வேண்டும். மூன்று, சிறந்த நிர்வாகம் நடத்துவதற்கேற்ப அலுவலகத்திலும் மற்றும் கணிசமான தொழிலாளர்களையும் வைத்துக்கொள்ள வசதி வேண்டும். நான்கு, 20 தொழிலாளர்களுக்கு குறைவில்லாமல் இருந்தால்தான் பிராவிடண்ட் பண்ட் வசதி கிடைக்கும். ஐந்து, தொழிலாளர்களுக்கு நிரந்தரமில்லாத தன்மையைப் போக்கி அவர்களை நிரந்தர ஊழியர்களாக நியமித்துத் தகுந்த வசதிகளைச் செய்ய வேண்டும்.

இவ்வளவு வசதிகளையும் கொண்டு சிறந்த நிர்வாகத்துடன் மக்களுக்கு பேருந்து உரிமையாளர்கள் சேவை செய்ய வேண்டுமானல், குறைந்தது ஐந்து பஸ்களையாவது வைத்து நடத்தினல் தான் கட்டுபடியாகும் என்பது என் அபிப்பிராயம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களும் இவற்றைப் பரிசீலனை செய்து சிறிய உரிமையாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் தற்போதைய நிலை ஏராளமான வழித்தடங்களின் பர்மிட்டுகள் புதுப்பிக்கப்படாமல் தற்காலிக பர்மிட்டுகள் ஒவ்வொரு நான்கு மாதத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. அதனல் அந்த உரிமையாளர்களுக்கு பர்மிட்டுகள் நிலையில்லாத காரணத்தால் பாங்குகளிலோ மற்ற தனியார்களிடமோ எவ்வித கடன் வசதியும் கிடைப்பதில்லை. முக்கியமாக காலாண்டு வரி செலுத்தும் நேரத்தில் அவர்கள் படும் அவதி குறிப்பிடத்தக்கது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—திரு. எஸ்.ஜே. ராமசாமி தலைமை.)

தேசியமயத் திட்டத்திற்குள் சிறிய பஸ் உரிமையார்களுக்கு வாழ்வு அளிக்க எண்ணும்போது அந்த சிறிய பஸ் உரிமையாளர்கள் பொதுமக்களுக்குச் சேவை செய்யவும், தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்படவும், சிறந்த முறையில் ஒரு நல்ல சர்வீசை நடத்த வேண்டுமானல் குறைந்தபட்சம் ஐந்து பேருந்துகளாவது நடத்தும் அளவிற்கு அவர்களுக்குச் சலுகை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அறந்தாங்கி பட்டுக்கோட்டை சாலையில் பட்டுக்கோட்டையில் இருந்து 1 மைல் தொலைவில் நரியாறு என்று ஒரு ஆறு குறுக்கிடுகிறது. சாதாரண மழை பெய்தால் கூட இவ்வாற்றில் நீர் நிறைந்து போக்குவரத்து தடைபட்டு ரோடு துண்டிக்கப்படுகிறது. இந்த வழியில் சுமார் 100 பஸ்கள் ஓடிக் கொண்டு இருக்கின்றன. இந்நிலையினை உணர்ந்து அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டிக் கொடுக்க அரசு முன் வரவேண்டும். (மணி அடிக்கப்பட்டது.)

(முற்பகல் 11-00).

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்: தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது பேசுவதற்கு முன்னால் இந்தத் துறையை மேற்கொண்டிருக்கிற அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் எந்த அளவுக்கு இந்தத் துறையில் மிகக் குறுகிய அனுபவத்தில் பிரச்னைகளைச் சமாளிக்க முடியுமோ அந்த அளவுக்கு சமாளித்திருக்கிறார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர் பொறுப்பேற்றுக் கொண்ட மூன்று மாதக் காலத்திலேயே பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை அந்தத் தொழிலாளர்களோடு உரையாடி, அவர்களோடு கலந்து பேசி, அந்தப் பிரச்சனைகளுக்குத்

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]
[1978 மார்ச் 20

தீர்வு கண்ட விதம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் துணையாக இருந்து, அந்தத் துறையிலே எடுத்துக் கொண்ட முயற்சியை இந்த நாட்டிலே உள்ளவர்கள் மட்டுமல்ல ஏடுகள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, இது போன்ற பிரச்சினைகளில் அவருக்கு இருக்கிற அறிவு, அனுபவம் மெச்சத் தகுந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

இன்றைய தினம் போக்குவரத்துத் துறை பற்றி மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைச் சொல்வார்கள் என்று நினைத்தேன். இந்தியத் துணைக் கண்டத்தில் குறிப்பாக நான்கு மாநிலங்களில் உள்ள போக்கு வரத்துத் துறையைப் பார்த்தோம்; நாங்கள் பார்க்கிற போது அந்த மாநிலங்களிலே இருக்கிற அதிகாரிகளும் அமைச்சர்களும் என்ன சொன்னார்கள் என்றால் போக்குவரத்துத் துறையில் எந்த மாநிலம் போக்குவரத்துத் துறையை எப்படி எப்படி நடத்த வேண்டும், எப்படி எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக இருக்கிறதோ அந்த மாநிலத்திற்குச் செல்ல வேண்டுமென்றும் அதற்குத் தாங்கள் தெரிந்தெடுத்திருக்கிற இடம் தமிழ்நாடு தான் என்றும் தெரிவித்தார்கள்.

அந்த அளவுக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழ்நாடு தான் போக்குவரத்துத் துறையிலே முன்னணியில் இருக்கிறது என்பதை அருமை அண்ணன் ஆறுமுகம் அவர்கள் பார்த்து வந்தார்கள். நாம் அந்த அளவுக்குச் செய்திருக்கிறோம். ஆனால் அவர்கள் குறிப்பிடும்போது இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு 9 மாதத்தில் 5 சதவீதம்தான் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று வாதித்தார்கள். எதிர்க்கட்சிக்காரர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அந்த அளவுக்கு இன்றைக்கு சிறப்பாகப் போக்குவரத்துக் கழகங்கள் பணியாற்றுகின்றன.

நம்முடைய போக்குவரத்துக்களில் விபத்துக்கள் அடிக்கடி ஏற் படுகின்றன; குறிப்பாக பல்லவன் பஸ்களில் ஏறினால் உயிரோடு போய்ச் சேருவோமா என்பது சந்தேகமாக இருக்கிறது; அதிலும் எக்ஸ்பிரஸ் பஸ்களில் ஏறினால் நிச்சயமாகப் போய் சேரு வோமா என்ற அச்சம் இருப்பதாக அவர்கள் தெரிவித்தார்கள். பல்வேறு இடங்களில் விபத்துக்கள் நடக்கின்றன; இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. அதற்குக் காரணம் ஓட்டுநர்கள் கவனக் குறைவாக ஓட்டுகிறார்கள். ஓட்டுநர்கள் கவனமாக ஓட்டு வதற்கு தமிழ்நாட்டில் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிற அமைச்சர் அவர்களுக்கு ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். விபத்து இல்லாமல் ஓட்டுகிற ஓட்டுநருக்கு ஆண்டு தோறும் 100 ரூபாய் போனஸ் தருவது என்று அறிவித்தால் கொஞ்சம் கவனமாக அவர்கள் ஓட்டுவார்கள்.

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]
1978 மார்ச் 20]

அதுமட்டுமல்ல, ஓட்டுநர்கள் ஓரளவு படித்தவர்களாக, குறைந் தது 8-வது அல்லது 9-வது வகுப்பு படித்தவர்களாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல. டி.வி.எஸ். நிறுவனத்தில் ஸ்பீடா மீட்டர், டெக்கா மீட்டர் வைத்திருக்கிறார்கள். இதற்கு ஏகபோக உரிமை அவர்கள் கையில்தான் இருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்திலே பல மாநிலங்களிலிருந்தும் இந்த கருவிகளை அவர்களிடம் தான் வாங்க வேண்டும். அதனால் விலையும் அதிக மாக இருக்கிறது; கிடைப்பதும் கஷ்டமாக இருக்கிறது.

இந்த மீட்டர்களைத் தமிழக அரசே இங்கே தயார் செய்தால் அதன் விலை அவர்கள் கொடுக்கும் விலையில் 30 சதவிகிதம் தான் வரும்; அந்த அளவுக்குத்தான் அடக்கவிலை இருக்கும் என்பதைக் குறிப்பிட்டு, அதைத் தயாரிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று; தமிழ்நாட்டில் மோட்டார் வெகிக்கிள்ஸ் இன்ஸ்பெக்டர் போஸ்ட் என்பது ஒரு பெரிய காமதேனுவாக இருக்கிறது. அதைச் சரிப்படுத்த வேண்டும். இன்றைக்கு தமிழ் நாட்டில் சந்தன மரம் கடத்தல், சாராயம் கடத்தல், பிராந்தி கடத்தல் போன்ற தவறுகள் நடைபெறுவது யாருக்குத் தெரியா விட்டாலும் மோட்டார் வெகிக்கிள்ஸ் இன்ஸ்பெக்டருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும். இந்தக் கடத்தல்கள் எல்லாம் அவர்கள் மூலமும் வாகனங்களை ஓட்டுகிறவர்கள் மூலமும்தான் நடைபெறுகின்றன. ஆகவே, அவர்கள்மீது தகுந்த நடவ எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மோட்டார் வாகனச் சட்டத்தின் மூலம் வரி கட்டுவதால் அரசாங்கத்திற்கு வருகிற வருமானம் 72 கோடி ரூபாயாகும். ஆனால் சாலைப் பராமரிப்புக்குச் செலவிடுவது ரூ. 27 கோடிதான். அந்த 72-லே இருக்கிற இரண்டை மாற்றிப்போட்டு சாலை பராமரிப்புக்குத் தொகை செலவிடுகிறார்கள். இது மிகவும் வருந்தத் தக்கது. நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ரூ. 50 கோடியாவது இதற்கென ஒதுக்க வேண்டும்.

சென்னை நகரிலே ஆர்.டி. ஓ. ஆபீஸ் ஒரே ஒரு இடத்திலேதான் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அதனால் டாக்சேஷன் வாங்கு கிறபோது பெரிய நெருக்கடி வருகிறது., லஞ்சம் வருகிறது என்று எல்லாம் சொல்கிறார்கள். எப்படி இன்சூரன்சுக்குச் செய்திருக் கிறார்களோ அதேபோல் தேசிய வங்கியிலே கட்டுவதற்கு நீங்கள் அனுமதி தருவீர்களேயானால் கார் வைத்திருப்பவர்கள் லாரி வைத் திருப்பவர்கள் எல்லோரும் இந்த தேசிய வங்கி மூலம் தங்கள் வரியைச் சுலபமாகச் செலுத்தலாம். சென்னை நகரத்தில் ஒரே ஒரு இடத்தில்தான் அந்த ஆபீஸ் இருக்கிறது. அப்படி இருப்பதற்குப் பதிலாக நான்கு இடத்திலே அது இருக்க வேண்டுமென்று நான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]
[1978 மார்ச் 20

எடுத்ததற்கெல்லாம் ரூரல் டெவலப்மென்ட் என்று பேசுகிறோம். ஆனால் கிராமப் புறத்தில் பஸ் வசதிகள் இல்லை. நம்முடைய ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டது போல் இரண்டு மாதம் மூன்று மாதம் ஓட்டிப் பார்க்கிறார்கள். பிறகு நஷ்டம் வருகிறது என்று நிறுத்திவிடுவார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் சாலைகள் சரியாக இல்லை என்று சொல்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் அவர்கள் போக்குவரத்துத் துறைக்கும், சாலைகளுக்கும் அவரே அமைச்சராக இருப்பதால் இந்த ரோடு வசதி செய்து தாருங்கள் என்பதேயாகும். தார் ரோடு போட்டுத் தரவேண்டும் என்று சொல்லவில்லை. மண் ரோடுகளையாவது மெட்டலிங் செய்தால் போதும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களில் சிறிய மினி பஸ்கள் விட்டால் அங்கு நஷ்டம் வராத அளவுக்கு அதாவது நஷ்டம் வருகிறது என்று நிறுத்தி விடாத அளவுக்கு இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. சென்னை நகரில் சைக்கிள் ரிக்ஷா ஓடிக் கொண்டிருக்கிறது. இதிலே—கோபித்துக்கொள்ளக் கூடாது, என்னைப் போன்றிருப்பவர்கள் மூன்று பேர்கள் ஏறி உட்கார்ந்து விடுகிறார்கள், சில நேரங்களில் நான்கு பேர் கூட ஏறி உட்கார்ந்து விடுகிறார்கள். ஆகையால் அந்த ரிக்ஷாகாரர்கள் ஏறி மிதித்து ஓட்ட முடியவில்லை. நான் உத்திரப்பிரதேசத்தில் பார்த்தேன். அம்மாதிரி வடமாநிலங்களிலே செய்வது போல் இந்த ரிக்ஷாக்களைத் தடுத்து நிறுத்திவிட்டு மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்று. இங்கே சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கு அந்த ரிக்ஷா சொந்தமாக இருப்பதில்லை. அதன் சொந்தக்காரர் வேறு யாராகவோ இருக்கிறார். ஆகவே, மிதித்து ஓட்டுபவர்களுக்கே அது சொந்தமாக இருக்கும்படியான நிலைமையை உருவாக்குவதற்கு, இந்த மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களை ஏற்படுத்துவதற்கு முன்பே, இருக்கக்கூடிய இடைக்காலத்தில் உரிய ஏற்பாடு செய்து அந்த சைக்கிள் ரிக்ஷாவை யார் ஓட்டுகிறார்களோ அவர்கள் பெயரிலேயே உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தத் துறையில் மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிற அமைச்சரவர்களிடத்தில் நான் கேட்பதெல்லாம் 72 கோடி ரூபாய் வருமானம் வருவதால்—வேறு பல செலவுகளுக்கும் இதிலிருந்து ஒதுக்குவதாக இருந்தாலும்—தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 20 கோடி அல்லது 25 கோடி என்று ஒதுக்கி ரூரல் டெவலப்மென்ட்

1978 மார்ச் 20] [திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்

என்கிற அளவில் கிராமப்புற சாலைகளை மெட்டலிங் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொகையைப் பெற்று அரசு செலவு செய்தால் உடனடியாக கிராமப்புறங்களுக்கு பஸ் வசதி கிடைக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

எதிர்க் கட்சித் தரப்பிலே இருப்பவர்கள் பல்வேறு பிரச்சினைகள் பற்றிச் சொன்னார்கள். நீங்கள் என்ன தேசியமயமாக்கும் கொள்கையை 72-லே 73-லே எவ்வளவு வேகமாகச் செய்திருக்கிறீர்கள் 5, 6 ஆண்டுகளிலே எவ்வளவு பண்ணி இருக்கிறீர்கள் என்பதை எல்லாம் சொல்ல வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு எதிர்த்தரப்பிலே வந்து விட்டார்கள். அவர்கள் என்ன கொள்கையைக் கையாண்டார்கள் என்பதைச் சொல்லி, நாங்கள் இந்த நேரத்திலே இன்ன கொள்கையைக் கையாண்டோம் அதுபோல நீங்களும் இந்தக் கொள்கையைக் கையாளுங்கள் என்று சொல்லி இருந்தால் பாராட்டுக்குரியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11·10)

ஓட்டுபவர்கள் எச்சரிக்கையாக ஓட்ட பழகித் தந்தால், படித்தவர்களை அங்கே நியமித்தால் ஓரளவிற்கு விபத்துக்கள் குறையும்.

நான் ஏற்கனவே சொல்லியதைப் போல் விபத்து இல்லாமல் பஸ் ஓட்டுபவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.100 போனஸ் தருவது என்ற முறையை அமைச்சர் அவர்கள் கையாள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய எக்ஸ்பிரஸ் பஸ்கள் நிற்கிற இடங்களில் உள்ள கழிப்பிடங்கள் பக்கத்தில் நெருங்க முடியாத நிலையில் இருக்கின்றன. அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

அடுத்து பஸ் ஸ்டாண்டுகளுக்கு மேல், 100 கிலோ மீட்டருக்குக் குறைவான பகுதிகளில் குறைந்த அளவிற்கு ஒரு 50 அறைகள் இரண்டு ரூபாய் வாடகைக்குக் கட்டி ஒதுக்கித் தந்தால் நமது தேசியமயமாக்கும் கொள்கை மட்டுமல்ல, நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதியையும் நிறைவேற்றித் தர வாய்ப்பு ஏற்படும். நம் அமைச்சர் அவர்கள் அந்த முறையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகள்—தனியார் துறையைப் பற்றிச் சொல்லவில்லை— 20 கிலோ மீட்டருக்கு உள்ளே உள்ள ஊர்களில் நிற்பதேயில்லை. ஆகவே, [illegible] கண்டிப்பாக நிறுத்தச் சொல்ல வேண்டும்.

[திரு.பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்] [1978 மார்ச் 20

முனிசிபல் பஸ் ஸ்டான்ட்கள், பஞ்சாயத்து பஸ் ஸ்டான்ட்கள் என்று ஒதுக்கியிருக்கிறோம். அந்த பஸ் ஸ்டான்ட்களுக்குள், பேருந்துகள் வருவதேயில்லை. வழியிலேயே பயணிகளை ஏற்றுவதும் இறக்குவதும் வழக்கமாக இருக்கிறது. பேருந்துகள் பஸ் ஸ்டான்டிற்கு உள்ளே சென்று நின்றால்தான் பயணிகள் இறங்கிச் சாப்பிட்டு அங்குள்ள கடைகளிலிருந்து பஞ்சாயத்துக்களுக்கு வருகிற வருவாயைப் பெருக்க முடியும். ஆகவே, பேருந்துகள் அந்தந்த பஸ் ஸ்டான்டிற்குள் குறிப்பிட்ட காலத்திற்கு நின்றே தீரவேண்டும் என்று சொல்ல வேண்டும். நான் இது குறித்து சம்பந்தப்பட்ட துறை செயலாளர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். இருபது கிலோ மீட்டருக்குள் பேருந்துகள் நிற்பதில்லை. ஆகவே ஆங்காங்கே நிற்கிற மக்களை ஏற்றிச் செல்கிற வகையில் ஒரு அறிவிப்பைச் செய்ய வேண்டும்.

நமது புரட்சித் தலைவர் அவர்களின் பின்னால் இருக்கிற எல்லா அமைச்சர்களும் அந்தந்தத் துறைகளை செவ்வனே நடத்தி வருகிறார்கள். அதேபோல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.பொன்னையன் அவர்களும் நடந்து முடிந்த ஸ்ரைக்குகளையும்—எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற ஸ்ட்ரைக்கையும் மிகவும் வல்லமையான முறையில், எப்போதும்போல் பொறுமையாக, மிகுந்த சகிப்புத் தன்மையோடு கையாண்டு இந்த அரசுக்கு வெற்றி தேடித் தருவார்கள் என்று நம்புகிறேன்.

திண்டிவனம் பேருந்து நிலைய மாடியை அரசுக்கோ அல்லது தனியாருக்கு வாடகைக்கு விட்டிருப்பதை மாற்றி பயணிகளுக்கு வாடகைக்குவிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

திருச்சியிலிருந்து கரூர் வழி ஈரோட்டிற்கு பஸ் போகிறது. அதைவிடக் குறைவான தூரத்தில் திருச்சியிலிருந்து முசிறி வழியாக ஈரோட்டிற்கு ஒரு பஸ் விட்டால் அதிக வசூல் ஆகும். இருபது கிலோ மீட்டருக்குள் பஸ் நிற்பதில்லை. ஆகவே மீண்டும் கேட்டுக் கொள்கிறேன், அதற்கு இடையில் நிற்கும் பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துறையைச் சிறப்புடன் செயல்படுத்தி வருகிற மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களைப் பாராட்டி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1978 மார்ச் 20] [திரு. சி. கோவிந்தராசன்]

இந்த பட்ஜட்டில் ஸீட்டுக்கு கால் ஆண்டுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை இதர மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் இங்குள்ள வரி அதிகமாக இருக்கிறது. இப்போது ரூ. 215 கட்ட வேண்டியிருக்கிறது, மேலும் ரூ. 15 என்று சொன்னால் இதனால் ஆப்பரேட்டர்கள், உரிமையாளர்கள் போக்குவரத்துக் கட்டணத்தை அதிகப்படுத்தாமல் இருக்கக் கூடிய அளவிற்கு இதைச் செய்ய வேண்டும் என்ற என் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தேசீயமயமாக்கக்கூடிய கொள்கையை நாங்கள் என்றைக்கும் வரவேற்கக் கூடியவர்கள் என்பது அரசுக்குத் தெரியும். 1968-ம் ஆண்டில் 120 மைல்களுக்கு அப்பாலுள்ள வழித் தடங்கள் எல்லாம் நாட்டுடைமையாக்கப்பட்டன. 1967-ல் 75 மைல்களுக்கு அப்பாலுள்ள வழித் தடங்கள் எல்லாம் நாட்டுடைமையாக்கப்பட்டன. மேற்கொண்டு படிப்படியாக இப்படி வரும்போது, இடைக்காலத்தில் அதாவது 'டிரான்ஸிஷனல் பீரியடில்' தனியார் துறையில் இருக்கக் கூடியவர்கள் அவர்கள் 'எக்னமிக்' காக நடத்தக்கூடிய முறையில் சில பஸ்களை ஓட்ட ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும். இன்றைக்கு மெயின் ரூட்டில் 16 கிலோ மீட்டர் அவர்கள் வழித்தடம் வந்தால் அந்த பஸ்கள் ஓட முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

மூன்று, நான்கு பஸ்களை வைத்திருக்கக்கூடியவர்கள் ஒரு குறிப்பிட்ட பஸ்களை மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்ற முறையில் வரையறுத்துக் கொண்டு ஒரு ஏற்பாட்டை இந்த இடைக்காலத்தில் அவர்களுக்கு, அதாவது நாட்டுடைமை பூர்த்தியாகும் வரை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட அவர்களுக்கு உதவும் நிலைமையை விட்டு விட்டு, பொதுத் துறையை போட்டி போடக் கூடிய அளவில் இரவு நேரத்தில் நீண்ட தூர ஆம்னி பஸ்களை விடுவதற்கு மட்டும் தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்படுகிறது. உடனடியாக அதையெல்லாம் நிறுத்தி குறிப்பிட்ட மூன்று நான்கு பஸ்களை மட்டும்தான் விடலாம் என்ற அளவில் ஏதாவது ஏற்பாட்டை தனியார் துறைக்குச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, பொதுத் துறை நிறுவனங்களில் எஃபிஸியன்ஸி போதுமான அளவு இல்லை, சரியான முறையில் அவைகள் நடப்பது இல்லை என்ற குறை மக்கள் மத்தியில் இருந்து கொண்டிருக்கிறது. பிரேக் டவுன் அதிகமாக ஏற்படுகிறது. இதற்கு அடிப்படையான காரணம் சரியான முறையில் பராமரிப்பு இல்லை என்பதுதான். பராமரிப்பு செய்யக் கூடிய வொர்க்ஷாப்களில், தேவையான அளவுக்கு தொழிலாளர்கள் கிடையாது.

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 மார்ச் 20

அது மட்டுமல்ல, பராமரிப்புத் துறையை நாம் வைத்திருக்கக் கூடியவர்கள். நம்முடைய பொதுத்துறையில் இரண்டு வொர்க் ஷாப்கள் இருக்கின்றன. ஒன்று குரோம்பேட்டையிலும், இன்னொன்று ராணித் தோட்டத்திலும் இருக்கின்றது. இந்த இடங்களில் சிறப்பான முறையிலும், மலிவான முறையிலும் பராமரிப்புச் செய்யப்படுகிறது.

ஆனால் அதை விட்டுவிட்டு, பாடி பில்டிங் உட்பட, சிறிய விஷயம், பெரிய விஷயம் எல்லாவற்றுக்குமே மாஜி பெரிய மோட்டார் மன்னர்களிடமே— அதாவது டி.வி.எஸ்., எல்.ஜி.பி. போன்றவர்களிடம் விடுகிறார்கள். இவ்விதம் ஏன் விடுகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. இதைப் பார்க்கும் போது சந்தேகங்கள் வருகின்றன. அதே நேரத்தில் அவர்கள் இதன் காரணமாக ஏராளமாக லாபம் சம்பாதிக்கிறார்கள்.

அதேபோன்று ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குகின்ற விஷயத்திலும் தேவைக்கு அதிகமான அளவில் ஸ்பேர் பார்ட்ஸ்களை வாங்கி வைப்பதன் காரணமாக பணம் விரயமாகிறது. வாங்குவதில் ஒழுங்கீனம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 'லோக்கல் பர்ச்சேஸ்' என்ற முறையில் பல பார்ட்ஸ்கள் வாங்கப்படுகின்றன. இவ்விதமில்லாமல் டெண்டர்கள் போட்டுத்தான் இப்படிப்பட்ட சாமான்கள் வாங்க வேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும். அதுவும் ஸ்டான்டர்டு கம்பெனிகளிடமிருந்து தான் வாங்க வேண்டும் என்றும் நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

துரித வண்டிகளைப் பொறுத்தவரையில் பிரயாணிகள் மிகவும் அவதிப் படுகிறார்கள். நானும் அனுபவித்திருக்கிறேன். அவசரமாக அதுவும் குறிப்பிட்ட காலத்தில் போக வேண்டும் என்றால் போக முடியாத நிலைதான் இருக்கிறது. இதனால் அதிலிருக்கின்ற கண்டக்டர்கள், டிரைவர்கள் இவர்களுக்கும் பிரயாணிகளுக்குமிடையே அடிக்கடி சச்சரவு ஏற்படுகிறது. அடிக்கடி இவ்விதம் பிரேக் டவுன் ஏற்படுவதற்குக் காரணம் இவர்கள்தான் என்று பொதுமக்கள் நினைக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? 'விரைவு வண்டிப் பகுதியில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு புதிய வண்டி மாற்ற வேண்டும் என்றிருக்கிறது.

ஆனால் அவ்விதம் விடுவதில்லை. இதேபோன்று ஒரு பார்ட் பழுதானால் அந்தப் பழைய பார்ட்ஸ்களைப் போடாமல், புதிய பார்ட்ஸ்களைப் போட வேண்டுமென்றிருக்கிறது. ஆனால், பழைய பார்ட்ஸ்களையே போடுகிறார்கள். புதிய டயர்களைப் போடாமல், பழைய ரீட்ரீட் பண்ணின டயர்களைப் போடுகிறார்கள். இது கூடாது என்று தீர்மானமோ முடிவோ இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட நிலைமை வராதவாறு

1978 மார்ச் 20] [திரு. சி. கோவிந்தராசன்]

ரீட்ரீட் பண்ணின டயர்களைப் போடாமலும், ரிப்பேர் ஆனால் பழைய பாகங்களைப் போடக்கூடாது என்றும் சொல்லப்பட்டால் அடிக்கடி குறிப்பாக இரவு நேரங்களில் பிரேக் டவுன் போன்ற தொந்தரவுகள் இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகள் பராமரிப்பு விஷயத்தில் சாலைகள் எல்லாம் குண்டும் குழியுமாக இருக்கிறது. இதுவும் இந்த அமைச்சரிடத்திலேயே பொறுப்பு விடப்பட்டிருப்பது நல்லது. சாலை பராமரிப்பு சரியான முறையில் இல்லாதிருப்பதால் அதிகமான அளவு தேய்மானங்கள் இருக்கும். இதற்கு நான் சொல்ல விரும்புவது சாலை பராமரிப்பு விஷயத்தில் ரயில்வேயில் செய்திருப்பது போல் ஒரு கிலோ மீட்டர் அல்லது ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒவ்வொரு கேங்க் அமைத்துக் கொடுத்து அதற்கு மேல் மேஸ்திரி, சூப்பர்வைசர் என்று போட்டு அவர்கள் பொறுப்பிலேயே சாலை பராமரிப்பு வேலைகளை விட்டுவிட வேண்டும். அப்படியில்லாமல் இருப்பதால்தான் ரோடு ரிப்பேர் காலத்தில் அதிகமான அளவு அக்கறையில்லாத நிலையில் காரியங்கள் நடைபெறுகின்றன.

ஆகவே குறிப்பிட்ட தூரமுள்ள சாலையை காங்க்-யிடத்தில் பொறுப்பு ஒப்படைத்து, கொடுப்பதோடு, அந்த காங்கை நிரந்தரமாக்கி, அதோடு அவர்களுக்கு கூலியும் நிர்ணயித்துக் கொடுத்து அமைத்துக் கொடுத்தால் நல்ல முறையில் இருக்கும் என்று கருதுகிறேன்.

அதே மாதிரி சாலை பொறியாளர்களில் பி.இ. படித்த கிராஜுவேட்கள் இருக்கிறார்கள், டிப்ளமோ ஹோல்டர்ஸ்களும் இருக்கிறார்கள். இவர்கள் பொறியாளர்களாக அப்பாயின்ட் செய்யும் போது 3:1 என்ற முறையில் எடுத்துவிட்டு, பின்னால் பிரமோஷன் வரும்போதும் இதே விதத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது 3 பி.இ. பட்டதாரிகளுக்கு பிரமோஷன் கொடுத்தபின் ஒரு டிப்ளமோ ஹோல்டர்க்கு பிரமோஷன் கொடுக்கிறார்கள். இதனால் டிப்ளமோ ஹோல்டர் பிரமோஷன் கிடைப்பதற்கு 20 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருக்கிறது, அதற்குப் பிறகுதான் ஏ.இ. யாக பிரமோஷனாகக் கூடிய சூழ்நிலை வருகிறது.

(முற்பகல் 11·20)

பிரமோஷன் வரும்போது அல்லது கன்பர்மேஷன் வரும்போது, 10 ஆண்டுகள் வேலை செய்தால்தான் டிப்ளமா-ஹோல்டர்கள் கன்பர்ம் செய்ய முடியும் என்றும், 5 ஆண்டுகள் வேலை செய்தால் போதும் கிராஜுவேட்ஸ் கன்பர்ம் செய்யலாம் என்று கூறியதற்கு

பிறகு, இரண்டு பேர்களையும் மேற்கூறிய சர்வீஸ்கள் அடிப்படையில் 'ஈகுவல்' என்று வைத்த பிறகு, இன்னும் இந்த 3:1 என்ற விகிதம் அவசியமில்லை என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

கிராமங்களை இணைப்பதுதான் போக்குவரத்துத் துறையின் கொள்கை என்று அரசு அறிக்கையில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. சிறு கிராமங்களுக்குச் சாலைகள் போடப்பட வேண்டுமென்பதிலே அரசு அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். மினி பஸ்கள் ஏராளமாக விடுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அத்துடன் சாலைகள் அமைப்பது, பாலங்கள் கட்டுவது சமுதாய நலனுக்காக என்று கூறும்போது, கட்டிய பாலத்திற்கு ஆண்டுக்கணக்காக, முடிவே இல்லாமல், எப்போது முடியும் என்று தெரியாமல் பணம் வசூலிக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. இதைப்பற்றி நான்கூட கேள்வி கேட்டு, அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். இன்னும் பல உறுப்பினர்களும் கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். பன்ருட்டியில், கள்ளிப்பட்டுக்கு அருகில் பெண்ணையாற்றில் கட்டிய பாலத்திற்கு வரி வசூலிக்கப்படுகிறது. கொள்ளிடம் பாலம் கட்டி, பல ஆண்டுகளாக வரி வசூலித்துக் கொண்டு வருகிறார்கள். இது எப்போது நிறுத்தப்படும் என்று கேள்வி கேட்டபோது, இன்னும் 10, 15 ஆண்டுகள்கூட ஆகலாம், இன்னும் 17, 20 லட்சம் வர வேண்டியிருக்கிறது என்று கூறுவது சரியல்ல. சமுதாய நலனுக்காக என்று அந்தத் தொகை ஒதுக்கப்பட்டு, செலவழித்த பிறகு, அப்படிப்பட்ட சுங்க வரி போன்ற வரி வசூலிப்பது நிறுத்தப்பட வேண்டும்.

இப்போது பணியாளர்களுடைய நிலையைப் பற்றிக் கொஞ்சம் பேச விரும்புகிறேன். பணியாளர்கள் இந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய மூன்றாவது சொத்து என்று அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுடைய நிலை என்ன? அவர்கள் அடிக்கடி தொலைதூரங்களுக்கு மாற்றப்படுகின்றார்கள். அவர்கள் மனைவி, குழந்தைகளைக்கூட பார்க்கமுடியாத நிலைமைகள் ஏற்படுகிறது. அதோடு அவர்கள் பெறுகின்ற ஊதியம் மிகமிகக் குறைவு. அவர்கள் ஏற்கனவே என். ஜி. ஒக்களாக இருந்தார்கள். இப்போது அவர்களை இன்டஸ்ட்ரியல் ஒர்கர்ஸ் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, 75 ஆம் ஆண்டிற்குப் பிறகு. இது பல்லவன் போக்குவரத்து சம்பந்தப்பட்டவரையாகும். அப்போது நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்திற்குப் பிறகு, பஞ்சப்படி சம்பந்தப்பட்ட வரையில் அப்போது புள்ளிவிவரக் கணக்கு 323 ஆக இருந்தபோது 75 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது. 4 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட அதே 75 ரூபாய் பஞ்சப்படி வாங்கி வருகின்றார்களே தவிர, அதற்கு மேல் ஒரு பைசாக்கூட வாங்க முடியாத நிலைமை இருக்கிறது.

அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில்தான் ஏற்கனவே ஒரு வேலை நிறுத்தம் வந்தது. அந்த வேலைநிறுத்த சமயத்திலே, இடைக்கால நிவாரணமாக 27 ரூபாய் கொடுத்து, அவர்களுடைய எல்லாக் கோரிக்கைகளையும் இந்த மாதம் 31ஆம் தேதிக்குள், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அந்தச் சங்கங்களோடு கலந்து கொண்டு, பேச்சுவார்த்தைகள் நடத்தி நிர்ணயிக்கப்படும் என்று சொன்னாலும், உடனடியாக அப்படி பேச்சுவார்த்தைகள் நடக்கவில்லை.

ஆனால், இடையிலே என்ன ஏற்பட்டது? அரசின் இத்துறையின் செயலாளர் அவர்கள் தன் இஷ்டத்திற்கு இன்னென்ன பிரச்னைகள் என்று குறிப்பிட்டு, ஊதியம், டெர்மினல் பெனிபிட் போன்ற கோரிக்கைகள் நீக்கப்பட வேண்டுமென்று சொன்ன காரணத்தினாலே, சங்கங்கள் பேச மறுத்து விட்டார்கள். 6 மாத இடைவெளிக்குப் பிறகு, இப்போதுதான் இந்தப் பிரச்னை பற்றி விவாதிக்கலாம் என்று அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஊதிய உயர்வு கொடுக்கப்பட வேண்டும், எல்லாப் பிரச்னைகளும் பேசி சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று சட்டமன்றத்திலே கோரப்பட்டது. அப்படிப் பேசலாம் என்றும், சங்கங்களின் கருத்தைக் கேட்கலாம் என்றும் சொல்லப்பட்டது. ஆனால், நிலைமை என்னவென்றால், மார்ச்சு 31ஆம் தேதி முடியப் போகிறது. ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. இவர்கள் அரசு ஊழியர்களாக இருந்த நிலை மாறிய பிறகு என். ஜி. ஓக்களின் சலுகையும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. பஞ்சப்படியும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. காரணம், இவர்கள் இன்டஸ்ட்ரியல் ஒர்கர்ஸ் என்று சொல்லப்பட்டு 75 ரூபாய் மட்டும்தான் பஞ்சப்படியாக வாங்கிக் கொண்டு வருகிறார்கள்.

இப்படி இன்டஸ்ட்ரியல் ஒர்கர்ஸ் என்று சொல்லப்படுபவர்கள் பஞ்சப்படியாக மட்டும் 300 ரூபாய், 250 ரூபாய், 200 ரூபாய் என்று வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால், இவர்கள் மட்டும் இன்னும் 75 ரூபாய் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். தவிர, எமெர்ஜன்சி நேரத்தில் இவர்கள் உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டன. தொழிற் சங்க உரிமைகள் பறிக்கப்பட்டு, பல தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். பல தொழிலாளர்கள் தொலை தூரங்களுக்கு மாற்றப்படுகின்ற நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டன. அதனாலேதான் இந்த வேலைநிறுத்தம் சென்ற ஆகஸ்டில் வந்தது. அதை 6 மாதங்களுக்குள்ளாக, இந்த மாதம் 31ஆம் தேதிக்குள்ளாகத் தீர்த்து வைப்பதாகச் சொல்லப்பட்டு, 5 மாதங்களாகி விட்டன. இப்போது எல்லாப் பிரச்னைகளும் அவர்களுக்குத் தீர்க்கப்பட வேண்டியிருக்கிறது. அந்த முடிவுக்கு வந்த பிறகு, இதை எவ்வளவு துரிதமாக அவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, இந்தத் துறையிலே உள்ளவர்கள் மேலும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமல் இருக்க, இந்தத் தொழிலாளர்களோடு நல்ல முறையிலே சுமுகமாகப் பேசி அவர்க

ளோடு கன்பிரான்டேஷன்-இல்லாமல் ஓரளவு பிரச்னைகளை சுமுகமாகத் தீர்க்கின்ற வகையிலே அப்பேர்ப்பட்ட ப்ரபோசலை அவர்களுக்கு ஆபர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் கேள்விப்படுகிறேன்—13 ரூபாய் 'ஆஃபர்' என்று சொன்னால் அதை யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இதர தொழிற்சாலைகளில் இருக்கக்கூடிய நிலைமை என்ன என்று பார்க்க வேண்டும். சாதாரண சர்க்கரைத் தொழிற்சாலையில் இருக்கக்கூடிய சாதாரணத் தொழிலாளிக்கு அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி உட்பட 450 ரூபாயிலிருந்து 600 ரூபாய் வரை கிடைக்கிறது. இவர்களுடைய சம்பளம், பஞ்சப்படி எல்லாம் சேர்த்து, ரூபாய் முன்னூற்றுச் சொச்சம் கூட இல்லை. இதையெல்லாம் கணக்கில் கொண்டு உங்களுடைய ஆஃபர் இருக்க வேண்டும். பத்து நாட்கள் அவகாசம் இருக்கிறது.

தொடர்ந்து பேசுவதாகக் கூறியிருக்கிறார்கள். பேசத் தயாராக இருக்கக்கூடிய சங்கங்களோடு பேச வேண்டும். பேசுகிற பேச்சில் தினசரி அபிவிருத்தி ஏற்படக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். 31ம் தேதிக்குப் பிறகு பொதுமக்களுக்கு எந்தவிதமான அசவுகரியமும் ஏற்படாத வகையில், அந்த அடிப்படையில் ப்ரொபோசல்ஸ் இருக்க வேண்டும். பேசுகிறோம், பேசுகிறோம் என்று சொல்லி 31ம் தேதியைத் தாண்டிப் பேசுவது என்பது வேறு விதமான நிலைமையைத்தான் ஏற்படுத்தும். அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் நடக்க வேண்டும். எல்லாக் கோரிக்கைகள் குறித்தும் பேசுவது என்ற இந்த அளவுக்கு நிலைமை வந்த பிறகு சுமுகமான முறையில் அமைச்சர் அவர்களும், அமைச்சரவையும் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையில் தொழிலாளர்களுக்கு பல்வேறு விரோதமான நிலைமைகள் இருக்கின்றன. சேரன் போக்குவரத்துக் கழகத்தில் ஒரு தொழிற்சங்கம் அமைக்க முற்பட்ட காரணத்தால் தொழிலாளர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். 16 பேர் இன்றைக்கு டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள்; 30 பேருக்கு மேல் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். கம்பெனி சங்கம் பொதுத்துறையில் இருக்கிறது. இதற்கு டெக்னிகல் டைரக்டர், லேபர் வெல்பேர் ஆபீசர், அங்கிருக்கக் கூடிய மானேஜிங் டைரக்டர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. அங்குள்ள அதிகாரிகளின் சங்கம் அது. இதை நான் கூறும்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் தவறாக நினைக்கக் கூடாது. அப்படிப்பட்ட நிலைமை சேரன் போக்குவரத்துக் கழகத்தில் இருக்கிறது. அங்கிருக்கக்கூடிய தொழிலாளர்கள் அடிக்கப்படுகிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் 7—3—78ல் இருந்து இப்படிப்பட்ட பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று தொடர் உண்ணாவிரதம் நடத்தி வருகிறார்கள்.

வேடிக்கை என்னவென்றால் தொழிற் தகராறுகளைத் தீர்க்கும் பொறுப்பில் இருந்த டெபுடி கமிஷனர் ஆப் லேபர் அங்கே மானேஜிங் டைரக்டராக இருக்கிறார். எல்லாப் பிரச்சினைகளையும் புரிந்தவர். இப்படிப்பட்ட அன்ஃபேர் லேபர் பிராக்டிசுக்கு உடந்தையாக இருக்கிறார்.

அடுத்து, நம்முடைய வண்டிகளுக்கு இன்ஷூரன்ஸ் கிடையாது. ரோட்டில் விபத்து ஏற்பட்டு விட்டால் டிரைவர்களை அரெஸ்ட் செய்து அவர்களே காம்பன்சேஷன் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்களை நிரபராதி என்று நீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்த பிறகும் அவர்களை வேலைக்கு எடுப்பதில்லை.

சில சில்லரைப் பிரச்சினைகளும் அவர்களுக்கு இருக்கின்றன. எங்களுக்கெல்லாம் பாஸ் கிடைக்கிறது. மற்றவர்களுக்குக் கிடைக்கிறது. வண்டியை ஓட்டுகின்றவர்களுக்கு பாஸ் கிடையாது. அவர்கள் குடும்பமும் மாதம் ஒரு முறை தங்கள் இல்லத்திற்குச் செல்வதற்கு பாஸ் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை நியாயமான கோரிக்கை. இதையும் அரசு செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஒன்று கூற விரும்புகிறேன். ஆதாயம் இல்லை, ஆதாயம் இல்லை; ஆதாயம் வரும்போது பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியும் என்று அமைச்சர் சொன்னார்கள். இன்றைக்கு இந்தத் துறையில் டாப் ஹெவி அட்மினிஸ்ட்ரேஷன்தான் இருக்கிறது. எல்லாக் கழகங்களையும் ஒருங்கிணைத்து ஒரே கழகமாகச் செய்ய வேண்டுமென்று ஏற்கனவே கூறியிருக்கிறேன். தற்போது அட்மினிஸ்ட்ரேட்டிவ் எக்ஸ்பென்சஸ் அதிகமாக இருக்கிறது. அவர்களுக்குச் சம்பளம் மட்டுமல்ல. ஆடம்பரச் செலவுகளும் அதிகமாக இருக்கிறது. அமைச்சர்களின் அலுவலகங்களிலேயே ஏர் கண்டிஷன் கிடையாது. ஆனால் மானேஜிங் டைரக்டர்கள் அறைகள் எல்லாம் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டிருக்கின்றன. நல்ல முறையில் அவர்கள் இருக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆதாயம் இல்லை, நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லும்போது இவை எல்லாம் அவசியந்தானா? எங்காவது போக வேண்டுமென்று சொன்னால் அவர்கள் பஸ்களிலே போவதில்லை; கார்களில் கூடப் போவதில்லை: ஆகாய விமானத்திலேதான் பறப்பார்கள்.

ஏற்கனவே இருந்த ஒரு நிலைமை. அந்த ஆள் இப்போது இந்தத் துறையில் இல்லை. அவருடைய மகளின் திருமணத்திற்காக 10 மைல் ரோடே போடப்பட்டது. பத்துப் பதினைந்து அரசு பஸ்கள் அதற்காக விடப்பட்டன. அவர் இந்தத் துறையின் முன்னாள் செயலாளர். இப்போது அவர் இல்லை.

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 மார்ச் 20

பட்டாபிராமன் குழு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. ஏற்கனவே சோமசுந்தரம் குழு அறிக்கை கொடுத்திருக்கிறது. போக்குவரத்தின் முன்னேற்றத்திற்காக இந்தக் குழுக்கள் அறிக்கை கொடுத்தும் கூட, அதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. பரிசீலித்து வருவதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. பரிசீலனை செய்வது மட்டுமல்ல, அந்த அறிக்கையை இந்த அவைமுன் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் கான்டீன் வசதி கூடக் கிடையாது.

அடுத்து, பஸ்ஸில் நெருக்கடி அதிகமாக இருக்கிறது.

(முற்பகல் 11-30)

அடுத்து, ஸ்டாண்டிங் பாசஞ்சர்ஸை எடுத்துக்கொண்டால் வெற்றிலை அடுக்குவது மாதிரி தள்ளித் தள்ளிச் செல்கிறார்கள். அந்த மாதிரி நிலையைத் தவிர்க்க பஸ்களில் இரண்டு கண்டக்டர்களையாவது நியமிக்க வேண்டும்.

அத்துடன், ஆக்சிடெண்ட் எப்போதோ ஏற்பட்டது என்ற காரணத்திற்காக அரசியல் கட்சிகளின் மாநாடுகள் நடக்கும் பொழுதும் அல்லது வேறு காரியங்களுக்காகவும் லாரிகளில் போகக் கூடாது என்று உத்தரவு வந்திருக்கிறது. ஏற்கனவே சட்டமன்றத்திலே, இந்தப் பிரச்னை வந்தது. ஒருசிலர் லாரிகளில் சென்றபொழுது விபத்து ஏற்பட்டதால் லாரிகளில் போகக் கூடாது என்று கூறப்படுகிறது. ஆகாய விமானத்திலேயும் விபத்து நடக்கிறது, இரயிலில் போகும்பொழுதும் விபத்து நடக்கிறது, அதற்காக அவைகளில் போகாமல் இருக்கிறார்களா? பஸ்களிலேயும்தான் விபத்துகள் நடக்கின்றன, அதற்காக பஸ்களை நிறுத்தி விடுதில்லை, யாரும் பிரயாணம் செய்ய வேண்டாமென்று சொல்வதில்லை.

ஆகவே, எப்பொழுதோ நடந்த விபத்திற்காக அரசியல் கட்சித் தொண்டர்களும் ஊழியர்களும் லாரிகளில் போகக்கூடாது, பஸ்களில்தான் போக வேண்டுமென்று சொல்வது சரியல்ல. ஆகவே, அந்த உத்தரவைத் தயவு செய்து ரத்து செய்து, எல்லாக் கட்சிகளுக்கும் —நான் ஒரு கட்சிக்காகச் சொல்லவில்லை— இந்த அனுமதியை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன். சற்றுமுன் நான் கேட்ட கேள்விக்கு லாக்-அவுட் செய்வது என்றால் அதற்குச் சட்டத்தில் இடமில்லை என்று தொழிலாளர் அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்கு அடிப்படையாகக் கூறப்படுவது,

1978 மார்ச் 20] [திரு. சி. கோவிந்தராசன்]

டி.வி.எஸ். பப்ளிக் யுடிலிட்டி சர்வீஸ் இல்லை என்பதுதான் சிறு பஞ்சாலையானாலும், சர்க்கரை ஆலையானாலும், ஏன் டிரான்ஸ்போர்ட்டை எடுத்துக் கொண்டாலும் பப்ளிக் யுடிலிட்டி சர்வீஸ் என்று பிரகடனப்படுத்தப்படும்பொழுது பாதுகாப்பு சாதனங்களைச் செய்யக்கூடிய, முக்கியமாக சென்ட்ரல் கவர்மெண்டிற்கு அவசியமான அந்தத் தொழிலை ஏன் பப்ளிக் யுடிலிட்டி சர்வீஸ் என்று அறிவிக்கவில்லை என்பதற்கும் உடனடியாக விவரங்களை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாடி பில்டிங் சம்பந்தப்பட்ட வரையில் இன்றைக்கு நாங்கள் சட்டமன்றத்திற்கு வந்த பஸ்கூட எல்.ஜி.பி.-யில் பாடி கட்டப்பட்டதாக இருக்கிறது. இரண்டு பணிமனைகளை வைத்துக்கொண்டு இருக்கும்பொழுது பாடி பில்டிங்கில் அக்கறையோடு, கருத்தோடு இருந்து செய்ய வேண்டும். குரோம்பேட்டை, இராணித் தோட்டம் ஆகிய இந்த இரண்டு பணிமனைகளிலும்தான் செய்யப்பட வேண்டும். ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதிலும் உஷாராக இருக்க வேண்டும். லோகல் பர்சேஸ் என்ற முறையில் இப்படிப்பட்ட மோசமான நிலைமைகள் இருக்கக் கூடாது.

கடைசியாக, மறுபடியும் கூறுகிறேன். இந்தத் தொழிலாளர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் பல்லவன் மற்றும் இதர போக்குவரத்துக் கழகங்களில் சுமார் 40,000 தொழிலாளர்களின் பிரச்சினைகள் இதில் அடங்கியிருக்கின்றன. பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் 6 மாத காலம் அவகாசம் கொடுத்தார்கள். எனவே, இந்தப் பிரச்னைகளை விரைவில் தீர்ப்பது மட்டுமல்ல, அவர்களுக்கு திருப்திகரமாகவும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை இன்று முதல் எடுக்க வேண்டுமென்று நான் கூறி அமர்கிறேன்.

*திரு. பொ. விஜயராகவன்: பெருமதிப்பிற்குரிய மாற்றுத் தலைவரவர்களே, இன்றைக்கு மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம், சாலைகளும் பாலங்களும், சாலைப்போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து, சாலைகள் — பாலங்கள் குறித்த மூலதனச் செலவு, சாலைப் போக்குவரத்துப் பணிகள் கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் சிறு பேருந்து உரிமையாளர்கள் எவ்வளவு பேருந்துகளை வைத்துக் கொள்ளலாம் என்ற அளவில் திட்டவட்டமான கொள்கை இல்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த சட்ட மன்றக் கூட்டத் தொடரில்கூட இதுபற்றி மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இந்தச் சிறு பேருந்து உரிமையாளர்களைப் பொறுத்தவரையில் அரசுக்குத் திட்டவட்டமான கொள்கை இருக்க வேண்டும், அவர்கள் எவ்வளவு பஸ்களை வைத்துக் கொள்ளலாம் என்று அறிவிக்க வேண்டுமென்று கூறியும், இதுகாறும் அதுபற்றிய நிலைமைகள் வரையறுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆளுநர் ஆட்சிக்கு முந்தைய அரசு பத்துப் பேருந்துகளை உரிமையாளர்கள் வைத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள். அப்படிக் கூறுகின்ற நேரத்தில் பினாமிகள் பலர் அந்தமாதிரி பேருந்துகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குறை சுட்டிக்காட்டப்பெற்றது. அந்தப் பினாமிகள் அப்படி வைத்துக் கொள்வார்களேயானால் அவைகளை இந்த அரசே நடத்துவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சிறு பேருந்து உரிமையாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எத்தனை பேருந்துகளை வைத்துக்கொள்ளலாம் என்பதைத் திட்டவட்டமாக இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சிறு பேருந்து உரிமையாளர்களைப் பொறுத்த வரையிலும் தற்பொழுது நிர்ணயிக்கப்பட்ட வரி விகிதங்கள் மிகவும் அதிகமாக இருக்கின்றன என்ற அளவிற்குக் கூடச் சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், அவர்களால் தாங்கக்கூட முடியாமல் இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கர்நாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களில் இருப்பதைவிட ஒரு மடங்கு வரி விகிதம் இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து அந்த வரிவிகிதத்தைச் சீராக்கி சிறு பேருந்து உரிமையாளர்களும், அரசுப் பேருந்து நிறுவனங்களும் நஷ்டத்தில் ஓடாதபடி நிலைமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல்; கிராமப்புறங்களிலே ஓடுகின்ற பேருந்துகளுக்கு ரூ. 15 வரி என்றும் நகரங்களிலே ஓடுகின்ற பேருந்துகளுக்கு ரூ. 25 வரி என்றும் அமுல்படுத்துவதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது, இப்பொழுது புதிதாக விதிக்கப்படுகிறது. இதையும் இரண்டுக்கும் ஒரே சீராக விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகரங்களில் ஓடுகின்ற பேருந்துகளைப் பொறுத்தவரை, தேய்மானமும் நட்டமும் அதிகம் என்பதைக் கணக்கில் கொண்டு இரண்டுக்கும் ஒரே வரி விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றி விவாதிக்க நாளே இல்லையென்று சொல்லலாம். அந்தக் கழகத்தைப்

பற்றி பல குற்றச்சாட்டுகள் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு, அதற்கு அமைச்சரும் அது அரசின் கவனத்திலே இருக்கிறது என்று கூறினார். விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொன்னார்கள்.

4-1-78 அன்று நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் இந்தப் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தின்மீது பல குற்றச்சாட்டுக்களைச் சொன்ன நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் கீழ்க்கண்ட பதிலை அளித்தார்கள். " மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கட்டபொம்மன் எம்.டி. சீனிவாசன் அவர்களைப் பற்றி விசாரணை நடந்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். விசாரணைக்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்". விசாரணைக்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், யார் விசாரிக்கிறார்கள், எப்பொழுது விசாரிக்கிறார்கள் என்பதைப் பற்றிய தெளிவு எங்களுக்கு இல்லை. பல விதமான குற்றச்சாட்டுகள், அந்த நிர்வாகத்தின் மீதும் அந்தக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் மட்டுமல்ல, அங்கே இருக்கிற தொழிலாளர்களும் கொண்டு வந்திருக்கிறார்கள். அவைகளை நீதிபதியை நியமித்து, விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி நீதிபதியை நியமித்து விசாரிக்கிற நிலையில், அந்த அதிகாரி அங்கே இருப்பாரானால், அவர்மேல் சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை பற்றிக்கூற சாட்சிகள் அஞ்சுகின்ற நிலைமை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே சர்வாதிகாரமான நிலைமையில் அந்த அதிகாரி நடத்து கொண்டு வருகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, நீதிபதியை நியமித்து, அவர் விசாரித்து, விசாரணை முடிவடைகிறவரையில், அந்த அதிகாரியை அங்கிருந்து மாற்றிவிட்டு, விசாரணை முடிவில் அவர்மீது குற்றம் இல்லை என்று நிரூபிக்கப்படுமானால், அவரை மீண்டும் அங்கே வைக்க எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், அதுவரை அவர் அங்கே இருக்கக்கூடாது. ஆகவே, அவரை மாற்றி, விசாரணை ஒழுங்கான முறையில் நடக்க ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தமட்டில். தொழிலாளர் விரோதப் போக்கு மட்டுமல்ல, மக்களுக்குச் சரியான தொண்டாவது இருக்கிறதாவென்றால், வேதனை தரத்தக்க செய்தி தானிருக்கிறதென்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறைந்த கட்டண வசதியில் டவுன் பஸ்கள் விட வேண்டுமென்று மனுக்கள், கோரிக்கைகள் வந்தும், அந்த நிர்வாகம் தட்டிக் கழிக்கிற சூழ்நிலைதான் இருந்து வருகிறது.

டவுன் பஸ்ஸை, குறைந்த கட்டண வசதியில் 25 கிலோ மீட்டர் வரை ஓட்ட அனுமதிக்கலாம் என்ற விதி இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி அந்த விதி இருக்கும்போது, அதைப் பயன்படுத்தி, இப்பொழுது தொடுவெட்டி-கருங்கல் வரை செல்கின்ற 108-சி எண்ணுள்ள பேருந்தை, மிடாலம் வரை நீட்டிக்கப்பட வேண்டுமென்று கேட்டபொழுது, அக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏற்கனவே, 16 கிலோ மீட்டர் வரை அப்பேருந்து ஓடிக் கொண்டிருக்கிறது. இன்னும் 5 கிலோ மீட்டர் நீட்டித்துத் தாருங்கள் என்று கேட்கிறோம். அதனால், அந்தப் பகுதியிலே வாழ்கிற மீனவர், மாணவர், ஆசிரியர், பணியேற்றத் தொழிலாளர், மற்றும் ஏராளமான பேர்கள் பயணம் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அது வாழ்க்கையின் அடித்தட்டில் இருக்கிற மக்கள் வாழ்கிற பகுதி. ஆகவே, டவுன் பஸ்ஸை நீட்டித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடுகூட, அந்த நிர்வாகம் அதையும் மறுத்துள்ளது. ஆகவே, அதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே எடுத்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முஞ்சிறை-நாகர்கோவில் செல்லும் 10-பி பஸ், வேங்கோடு தொலையாவட்டை வழியாக, நாகர்கோவிலுக்கு விடப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் வந்துள்ளது. அது தற்போது 10 கிலோ மீட்டர் தொலைதான் இருக்கிறது. அந்தக் கோரிக்கையும் அங்கே நிறைவேற்றப்பட்டதா என்றால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விரைவுப் பேருந்துகள் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருந்து வருகின்றன. ஆகவே, தொலை தூரங்களுக்குச் சென்று வருகின்ற அந்தப் பேருந்துகளைக் குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு ஒரு முறை மாற்ற வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. இதுவரையிலும் அப்படி மாற்றியிருப்பதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல, அந்தப் பேருந்துகள் வழியிலே டயர் பஞ்சர் ஆனாலும் ஜாக்கி போன்ற கருவிகள்கூட அந்தப் பேருந்துகளில் இருப்பதில்லை.

(முற்பகல் 11-40.)

வெள்ளை உடை உடுத்திக்கொண்டு யாரும் அந்தப் பேருந்தில் பயணம் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. நாங்கள் எல்லாம் இதை நேரடியாக அனுபவித்து வருகிறோம். வெள்ளை உடைகளை அணிந்து சென்றால் உடைகள் எல்லாம் கறையாகக் கூடிய சூழ்நிலை, சரியாக கழுவப்படாத சூழ்நிலையிலேதான் இன்றைக்கு விரைவுப் பேருந்துகள் இருக்கின்றன. காரணம், போதிய

அளவுக்கு தொழிலாளர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்குமானால் இந்தப் பேருந்துகளைப் பராமரிக்கும் நிலை எப்படி என்று இங்கே நான் கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்குத் தொழிலாளர்களுக்கு யூனிபார்ம் கொடுக்கிறார்கள். யூனிபார்ம் கொடுக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு அந்தத் துணியை இந்தப் போக்குவரத்துக் கழகங்களே தைத்துக் கொடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவைகள் சரியாக இல்லை என்கிற அளவில் சொல்கிறார்கள். எனவே, அவர்களுக்கு தைத்துக் கொடுக்காமல், துணியாகவே கொடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த விரைவுப் பேருந்துகளில் பணியாற்றுகின்ற கண்டக்டர்கள், டிரைவர்களுக்கு ஓய்வு இல்லாத நிலைமையைப் பார்க்கிறோம். ஆகவே, விபத்துக்கள் கூட ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்து அவர்களுக்குப் போதிய ஓய்வு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகள், பாலங்கள் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குமரி மாவட்டம் கிள்ளியூர் யூனியனுக்குட்பட்ட பூட்டேற்றி விழுந்தையம்பலம் சாலை அமைக்கப்படாமல் பல ஆண்டுகளாக இருக்கின்றது, அந்தச் சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். விழுந்தையம்பலத்திலிருந்து அம்சி வரையில் உள்ள ரோடை எக்ஸ்டன்ட் பண்ண வேண்டும் என்று கோரிக்கை வைத்து, ஆய்விலிருந்து, இன்னும் நடைமுறைக்கு வராத காரணத்தால் பேருந்துகள் செல்வதற்கு வழிவகை இருந்தும் இணைப்புப்பாதை அமைக்கப்படாததால் பேருந்துகள் செல்வதற்கு வழியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மேல்புரம் யூனியனில் திருத்துவபுரம் மருதங்கோடு சாலை 1961 ஆம் ஆண்டிலே நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறையினரால் சர்வே செய்யப்பட்டு எஸ்டிமேட் செய்யப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்ட அந்த சாலை இன்று வரையில் நடைமுறையிலே செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்படாத நிலைமை இருந்து வருகிறது. அதையும் விரைவில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முன்சிறை யூனியனில் புதுக்கடை, கொல்லங்கோடு சாலையில் கணபதியான் கடவில் பாலம் ஒன்று கட்ட வேண்டும் என்று ஒரு கோரிக்கை இருக்கிறது. அதையும் இந்த அரசு கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேங்கோடு, கூட்டாலுமூடு, வெட்டைசாலை, மணியாரம்குன்று, தொட்டாரம் எலா நடவரம்பு, விராலிவிளை போன்ற பகுதிகளின் வழியாக அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1973-லே தொடங்கப்பட்ட ஏழு தேசம் பஞ்சாயத்துக்குட்பட்ட வயக்கலூர் சாலை இன்னும் முடிவுறவில்லை. அதை மீண்டும் தொடங்கி முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புத் தந்தமைக்கு தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. பொ. சிகாமணி : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதித்தற்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

மோட்டார் வாகன சட்டங்கள் நிலையில் அரசு சில நல்ல திட்டங்களை ஆற்றிக் கொண்டிருப்பது வரவேற்கத் தக்கது. சாலை விபத்துக்களைத் தடுப்பதற்காக வண்டிகளில் டெக்கோ மீட்டர்கள் பொறுத்த உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மீட்டர் உற்பத்திக்கு, பல உறுப்பினர்கள் சொன்னதைப்போல, ஏகபோக உற்பத்தியாளராக என். கே. என்ற நிறுவனம் இருக்கிறது. இந்த நிறுவனத்தில் இந்த டெக்கோ மீட்டர்களை அதிக விலை கொடுத்து வாங்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் அரசே சொந்தமாக இந்த மீட்டர்களைத் தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் தொழிலாளர்கள் நலத்தில் அக்கறையுள்ள இந்த அரசை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்வது, விபத்துக்களைத் தடுப்பதற்கும், ஓட்டுநர்களை ஊக்குவிப்பதற்கும் ஒவ்வொரு கழக ஓட்டுநர்களுக்கும் சிறப்புப் போனஸ் திட்டம் அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

சரக்குப் போக்குவரத்தில் சில முறைகேடுகள் நடக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சரக்குப் பேருந்துகள் மூலம் கள்ளக் கடத்தல் போன்றவை பெரும் அளவில் நடந்து கொண்டு இருக்கின்றன. குறிப்பாக, சந்தனக் கட்டைகள், பால்ஸ் பர்மிட் போன்றவைகள் நிகழ்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அரசு அது குறித்து கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆர். டி. ஓ. மாற்றி அமைக்கப்பட வேண்டும். நான்-டிரான்ஸ்போர்ட், டிரான்ஸ்போர்ட் என்று விரிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டிராக்டர் டிரய்லர் சொந்தக்காரர்களுக்கு டிராபிக் அதிகாரிகள் பெரும் அளவிற்குத் தொல்லை கொடுக்கிறார்கள். அவர்கள் ஹெவி மெஷினரி போன்றவை ஏற்றிச் செல்ல முடியாது. இப்படிப்பட்ட தொந்தரவால் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் தொழிலாளர்கள் வேலையும் பாதிக்கப்படுகிறது. எனவே, அதிலே சில விதிமுறைகளைத் தளர்த்தி, டிராபிக் அதிகாரிகள் தொந்தரவிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு மொபைல் கோர்ட் எடுத்ததற்காக புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுதல்களையும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமச் சாலைகளை சீர்திருத்துவதற்கு யூனியன்களிடமும் போதிய நிதி வசதி இல்லை. கிராமப்புறத்தில் தார் சாலைகள் போட இயலவில்லை என்றாலும், உடனடியாக குறைந்தது மெட்டல் சாலையாவது போட திட்டம் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன. சாலைகள்-பாதைகள் திட்டத்திக்காக 27 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 27 கோடி ரூபாய் பராமரிப்பிற்கே செலவிடப்படுகிறது. இந்தத் தலைப்பில் வருமானம் 72 கோடி இருக்கிறது. ஆகவே, அந்தத் தொகை முழுவதையும் அதற்காகவே செலவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரும் சாலைகளில் போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவான நிலையில் இருக்கின்றன. நிதிப்பற்றாக்குறை என்று இருந்தாலும், குறைந்தது மைனர் கல்வெர்ட்டுகளையாவது சீர்படுத்தி, ஓரளவு நல்லமுறையில் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமச் சாலைகளையும் சிறந்த முறையில் செப்பனிட வேண்டும் என்பதையும் உங்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த கான்டிராக்ட் முறை ஒழிக்கப்பட வேண்டும். பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் அரசு 'கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷன்' அமைத்து, அதன் மூலம் எல்லாவற்றையும் செய்து கொண்டு இருக்கிறது. ஆகவே, தமிழக அரசும் கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷன் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுடமையாக்கப்பட்ட திட்டத்தில், இந்த அரசு பொறுப் பேற்றுக் கொண்ட பின்பு 48 சதவீதம் என்று இருந்ததை 52 சதவீதம் என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கிறது. அதற்காக நான் பாராட்டுகிறேன். இந்த அரசு தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள அரசாகவும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு

காணவேண்டும் என்ற நோக்கத்தை உடைய அரசாகவும் இருப்பதால் முன்அறிவிப்பு இல்லாமல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது நடுரோட்டில் பஸ்களை நிறுத்திவிட்டு பயணிகள் இன்னலுக்குள்ளாக்கப்படுகிற நேரத்தில், அத்தகைய முன்அறிவிப்பு இல்லாமல் வேலைநிறுத்தம் செய்கிற தொழிலாளர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, சென்னையில் மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்றவைகளில் பயணம் செய்பவர்கள் கட்டாயம் ஹெல்மெட் அணிந்து செல்லவேண்டும் என்ற உத்தரவை உடனடியாக சென்னையில் அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு முசிறிபுத்தன் அவர்கள் பேசுகிற நேரத்தில், மினி பஸ் ஓட்டும் உரிமங்களை தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். மினி பஸ்களை தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் நிறுவி நல்ல முறையில் நடத்த முடியும் என்று நான் நம்புகிறேன். திருவொற்றியூர் பகுதியில் மினி பஸ்கள் விடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரில் டாக்சி ஸ்டாண்டுகளில் டெலிபோன் வசதி, பப்ளிக் கன்வீனியன்ஸ் போன்றவைகளைச் செய்யவேண்டும். இது போன்ற வசதிகள் டெல்லி நகரத்தில் வெற்றிகரமாக நடந்து வருகின்றன என்று கூறிக்கொண்டு, எண்ணூர் பகுதியில் மீன் பிடி துறைமுகம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-50)

திரு. கா. செங்கோடன்: தலைவரவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கொண்டுவந்துள்ள சாலை போக்குவரத்து பராமரிப்பு மானியங்களின்கீழ் பேசக்கூடிய நல் வாய்ப்பினை நல்கியமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராம முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு தமிழ்நாட்டு முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் மினி பஸ் விடக்கூடிய திட்டத்தை கிராம மக்கள் எல்லாம் உளமார, மனமார பாராட்டி வரவேற்கிறார்கள்.

என்னுடைய தொகுதியாகிய கபிலர்மலை தொகுதியில் புதிய பஸ்கள் விட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வேலூர்—திருச்செங்கோடு (வழி) பாண்டமங்கலம், அண்ணாநகர், நெட்டையாம்பாளையம், சிறுகிணற்று

பாளையம், கபிலர்மலை, திடுமல்கவுண்டம்பாளையம், நகப்பாளையம் சிறுநெல்லிக்கோவில், கொத்தமங்கலம் செல்லக்கூடிய பாதைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது அமைச்சரவர்களுடைய தொகுதியையும் இணைக்கக்கூடிய பாதை. அதைக் கருத்திற்கொண்டு அமைச்சரவர்கள் உரிய கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, நாமக்கல்லிலிருந்து கபிலர் மலைக்கு வேலகவுண்டம்பட்டி, அணியார், நருவலூர், செக்குப்பட்டி, ஏத்தக்கடை, எட்டிக்கன்பாளையம், குஞ்சம்பாளையம் வழியாகச் செல்லக்கூடிய பாதையிலே பஸ் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சவரர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மோகனூரில் சர்க்கரை ஆலை போன்ற பல்வேறு தொழில்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தால் தொழிலாளர்கள் அங்கு வந்து செல்லப் போதுமான பஸ் வசதி இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அங்கே ஹையர் செகண்டரி பள்ளியும் நிறுவப்பட இருக்கிறது. எனவே தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவைப்படும் பஸ் வசதியைக் கருத்திற்கொண்டு ஒரு டவுன் பஸ் விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த டவுன் பஸ் மோகனூரிலிருந்து ஜேடர்பாளையத்திற்கு பாலப்பட்டி, நஞ்செய் இடையாறு, வேலூர், வெங்கமேடு, வீரணம்பாளையம், கபிலர் மலை வழியாக விடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரியில் இருக்கக்கூடிய வேலூர் பாலத்தில் விளக்குகள் சீரழிந்த நிலையில் இருக்கின்றன. அதனால் பொதுமக்கள் அங்கு வருவதற்கு பெரிதும் அவதிப் படுகிறார்கள். எனவே, அதைச் செப்பனிட்டு விளக்குகள் எரியச் செய்து மக்களின் சிரமத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாமக்கல் பகுதியிலே கீழ்சாத்தம்பூர், பரமத்தி செல்லும் பாதை சீர்குலைந்து கிடக்கிறது. ஊராட்சியில் நிதி வசதி இல்லை. பாதை செப்பனிடப்படாததால் பஸ்ஸை நிறுத்தி விட்டார்கள், அதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுபற்றி அமைச்சரிடம் மனு தந்திருக்கிறேன். அதை அமைச்சரவர்கள் கவனித்து, ஹைவேஸ் பாதையாக எடுத்துக்கொண்டு, அதன் மூலம் அந்தப் பாதையைச் செப்பனிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை to சென்னை செல்லும் பஸ் நாமக்கல் வழியாகச் செல்கிறது. அப்படிப்பட்ட வழித்தடம் தமிழ்நாட்டிலேயே அது ஒன்றுதான் என்று கருதுகிறேன். அந்தப் பாதை சீரழிந்த நிலையில் இருக்கிறது ; அதைச் செப்பனிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தூசூர், செல்லிபாளையம், பௌத்திரம் ஆகிய 3 ஏரிகளின் கரைகளும் தண்ணீர் வழிந்து, கரை அரிக்கப்பட்டு அகலம் குறைந்து மிகவும் சிக்கலான ஒரு நிலையில் இருக்கின்றன. அந்த வழியாக நிறைய பஸ்கள் ஓடுகின்றன. முக்கியமாக சென்னை—சென்னை பஸ் போகிறது. ஆகையால் அந்த ஏரிகளின் கரைகளை விரைவில் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1967ஆம் ஆண்டு இங்கே எதிர்க்கட்சியில் இருக்கிற பேராசிரியர் அவர்கள் அந்தத் தொகுதி பாராளுமன்ற வேட்பாளராக நின்ற போது வாக்குறுதி கொடுக்கப்பட்டது. இன்று வரையில் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. அதை மனதிற்கொண்டு ஆண்டுக்கு ஒரு ஏரி என்று எடுத்துக் கொண்டாவது 3 ஆண்டுகளில் 3 ஏரிக்கரைகளையும் செப்பனிட்டு, அகலப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல இடங்களில் நெடுஞ்சாலைகள் அருகிலுள்ள ஏரிகள், குளங்கள் மழைக் காலத்தில் நிரம்பி, தண்ணீர் வழிந்து ஓடியதால் அரிப்பு எடுத்திருக்கின்றன ; அதனால் பஸ்கள் ஓடுவதற்குத் தடை ஏற்படுகிற காரணத்தால் அந்த நீர் அரிப்புகளை எல்லாம் சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், தேவையான இடங்களில் பாலங்கள் அமைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதைப்போல அணியார்—நருவலூர் சாலையில் ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் நகரின் மத்திய பகுதியில் இரயில்வே லைன் ரோட்டின் குறுக்கே செல்வதால் அடிக்கடி பஸ் போக்குவரத்திற்குத் தடை ஏற்படுகிறது. அந்த இடத்தில் ஒரு மேம்பாலம் கட்டி, இந்தத் தடையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்ட இரயில்வே செஸ் நிதி 35 லட்சம் ரூபாய் இருக்கிறது. அதைப் பயன்படுத்தியாவது இந்த மேம்பாலத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றைக் கூற விரும்புகிறேன். நாமக்கல் லாரி பாடி கட்ட சிறந்த இடம். அகில இந்தியாவிலும் லாரி பாடி கட்டும் தொழிலில் சிறந்து விளங்குமிடம் நாமக்கல் என்றுகூடச் சொல்லலாம். கல்கத்தா, ஒரிசா, பாம்பே போன்ற இடங்களிலிருந்தும் கூட லாரி பாடி கட்டுவதற்கு அங்கே வருகிறார்கள். ஆகவே, அங்கே இத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் நலனில் அதிக அக்கறை செலுத்தி, வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாடகை லாரிகளுக்கு மஞ்சள் நிறம் கட்டாயம் பூச வேண்டுமென்று உத்தரவு போட்டு, மஞ்சள் நிறம் பூசிய ஆட்சியின் சட்டத்தை ரத்து செய்யும் வகையில் அது கட்டாயமல்ல என்று ஆக்கப்பட்டிருப்பதை லாரி சொந்தக்காரர்கள் எல்லாம் வரவேற்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது).

இறுதியாக லாரி பாடி கட்டும் தொழிலாளர்களுக்கும் கடன் வசதி, மற்ற பல வசதிகளையும் செய்து கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கை சிறப்பாக அமைய ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு மீண்டும் நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது சில முக்கியமான விஷயங்களை இங்கே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஒருங்கிணைந்த முறையில் ஊதியக் கொள்கை வகுக்கப்பட வேண்டுமென்று முதலில் கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் திட்டத்திலுள்ள குறைபாடுகளைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகக் கட்சித் தவிர அனைத்துக் கட்சிச் சங்கங்களும் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டவுடனே போராடினார்கள்.. அத்தகைய போராட்டத்திலே கலந்து கொண்டவர்கள், சிறை சென்றவர்கள் இன்றைக்கும் அதிலே உள்ள தடைகளைப் போக்க வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டு வருகிறார்கள்.

குறிப்பாக 1—9—1977 அன்று இடைக்கால நிவாரணமாக ரூபாய் 27 அறிவிக்கப்பட்டு 31—3—1978 அன்று பேசித் தீர்ப்பது என்று அன்றைக்கு ஒத்துக் கொள்ளப்பட்டது. ஆனால், பேசித் தீர்ப்பதில், இடையில் சில தேக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப் போராட்டத்திலே 1—9—1977 அன்று எடுத்துக் கொண்டபடி துரிதமாக இதைக் கூட்டுவதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ் ஆகியவற்றைப் பற்றி எல்லாம் தொழிற்சங்கங்கள் கலந்து பேசுவதற்குப் பதிலாக சில நிர்வாக இயக்குநர்களே அதிலே முனைந்து செயல்பட்டு இருக்கிறார்கள். குறிப்பாக, இருதரப்பு குழுவும் கடந்த 4 மாதங்களாக கூடிப் பேசாமல் காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது. 31—3—78க்குள் இனிப் பேசித் தீர்க்க முடியாது என்று 1—9—1977 அன்று அறிவிக்கப்பட்ட இடைக்கால நிவாரணத்தோடு, பேசித் தீர்க்க

[திரு. மு. அம்பிகாபதி] [1978 மார்ச் 20

முடியாது, ஏனென்றால் மேலும் காலதாமதம் ஏற்படும் என்று கருதுவதால், இந்த மானியக் கோரிக்கையின் மீது பகிர்ந்தளிக்கும் போதே அந்த இடைக்கால நிவாரணம் ரூபாய் 27-ஒடு மேலும் சேர்த்துக் கொடுத்து அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று தாழ்மையோடு நான் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் குழுவும் அனைத்து சங்கங்களும் உட்கார்ந்து ஊதியம், பஞ்சப் படி, பாட்டா ஆகிய அனைத்தையும் பற்றி பேசவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

15—3—1978 அன்று அனைத்து சங்கங்கள் மாநாடு சென்னையில் நடந்திருக்கிறது. அதிலே வாக்கெடுப்பு எடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் வேலை நிறுத்தம் செய்வது என்ற முறையிலே தொழிற் சங்கங்கள் அறிவித்திருக்கிறார்கள்.. இதோடு மட்டுமன்றி ஏ. ஐ. டீ. யூ-வின் தலைவர் கே. எம். சுந்தரம் அவர்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் பல விவரங்களை அரசாங்கத்திற்கு அளித்திருக்கிறார்கள். இன்றைக்கு பல விஷயங்கள் பொறியியல் கழகத்திலும் அதே போல் பொருள் போக்குவரத்துக் கழகத்திலும் இருக்கின்றன. பல படித்த இளைஞர்கள் அங்கே அத்தக் கூலியாகப் பணிபுரிகிறார்கள்.

பொருள் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் மூன்றாண்டு காலத்திற்கு மேலாகியும் அதிலே இருக்கின்ற தொழிலாளர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் அத்தக் கூலியாகவே நடத்தப்பட்டு வருகிறார்கள். அதன் நிர்வாக இயக்குநர் ஊதியம் பற்றி மூர்மார்க்கட்டிலே போய் விசாரித்து வருகிறார் என்கிற நிலைமை இருக்கிறது.

அதேபோல் பல்லவன் போக்குவரத்துக் கழக நகரப் பிரிவிலும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலும் நிர்வாக இயக்குநர் தொழிலாளர்களை மிகவும் மோசமாக நடத்துகிற நிலைமை இருக்கிறது என்று கூறப்படுகிறது. "பல்லவன் என்ஜினியரிங் கார்ப்பரேஷன்-இல் படித்த இளைஞர்கள் வண்டி கழுவும் வேலையிலும், துடைக்கும் வேலையிலும் கூலிகளாக நடத்தப்பட்டு வருகிறார்கள். அதை உடனடியாக களையவேண்டும். அரசு நிறுவனங்களிலேயே கூலிகளாக நடத்தப்பட்டு வந்தால் தனி முதலாளிகள் இவற்றைச் செய்வதற்குத் தயங்க மாட்டார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, அரசின் தொழிலாளர் சட்டங்கள் அனைத்துப் போக்குவரத்து கழகங்களிலேயும் முறையாக அமுல்படுத்துவதற்கு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, சில நல்ல வருமானம் வரக்கூடிய வண்டிகள் அதாவது பட்டுக்கோட்டையிலிருந்து மன்னார்குடி வழியாக மெட்ராஸ் வருகிற வண்டியும் அதுபோல் தஞ்சாவூரிலிருந்து பழனி வண்டியும் இப்படி ஓடிய வண்டிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

1978 மார்ச் 20] [திரு. மு. அம்பிகாபதி]

[நண்பகல் 12-00]

அதுமட்டுமன்றி, பட்டுக்கோட்டை—சென்னை வண்டி சென்னையிலிருந்து மண்டபம் வரை நீட்டிக்கப்பட்டு மண்டபம் வரை சென்று வருகிற கண்டக்டர்களுக்கு பாட்டா கிடைக்காத நிலை ஏற்படுகிறது. ஆகவே, தொழிலாளர்களைக் கலந்து எந்த வண்டியை நீட்டிக்கலாம். எந்த வண்டியை எந்த நேரத்தில் விடலாம் என்பது போன்ற ஆலோசனைகளை தேசியமயமாக்கப்பட்ட நிர்வாகங்கள் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தஞ்சையிலிருந்தும், திருச்சியிலிருந்தும், மதுரையிலிருந்தும், புதுக்கோட்டையிலிருந்தும் குறிப்பிட்ட நேரத்தில் லேட்ஸிங்க் பஸ்கள் இடையில் நிற்காமல் தஞ்சையிலிருந்து புறப்பட்டால் சென்னை, மதுரையிலிருந்து புறப்பட்டால் சென்னை, திருச்சியிலிருந்து புறப்பட்டால் சென்னை, என்று ஒன்பது அல்லது பத்து மணிக்கு சரியாக குறிப்பிட்ட காலத்தில் புறப்படுகின்ற அளவிற்கு வண்டிகளை விட்டால் மக்களுக்கு இருக்கிற சிரமங்கள் நீங்குமென்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட ஒரு உத்தரவு அவசர நிலை காலத்தில் அமுலாக்கப்பட்டு, சோழன் போககுவரத்துக் கழகத்தில் இதுவரையில் 129 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காத ஒரு அவல நிலை இருக்கிறது. அதை அரசாங்கம் மறுபடியும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சிறிய பஸ் உரிமையாளர்கள் எவ்வளவு பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்பதை அரசாங்கம் தெளிவாக அறிவிக்க வேண்டும். 1971-ல் பத்து பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்திருந்தது. பிறகு அதிலே மாற்றம் ஏற்பட்டது. இந்த அரசைப் பொறுத்த வரையில் ஒரு தெளிவான கொள்கையை, கட்டுப்பாடான கொள்கையைப் பராமரிக்க வேண்டும்.

உதாரணத்திற்கு, 15 லட்சம் ரூபாய் வைத்திருந்தால் ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் என்றிருக்கிறது. 15 லட்சம் ரூபாய்க்கு உட்பட்டு வரக்கூடிய அந்த அளவிற்குப் பஸ்களை வைத்துக்கொண்டால் தான் அவர்கள் எக்கனமிக்கலாக நிர்வகிக்க முடியும் என்ற கருத்தை அரசு பரிசீலிக்க வேண்டும்.

அண்மையில் விதித்திருக்கிற வரி மிகவும் அதிகமானது. உதாரணமாக ரூ. 215 ப்ளஸ் ரூ. 15, ரூ. 230 விதிக்கப்பட்டிருக்கிறது.

கர்நாடகாவில் க்வார்ட்டருக்கு ரூ. 110. ஏழு காசு கிலோ மீட்டருக்கு.

[திரு. மு. அம்பிகாபதி] [1978 மார்ச் 20

ஆந்திராவில் ரூ. 115.75, கிலோ மீட்டருக்கு காசு 5.

கேரளாவில் ரூ. 112.50, கிலோ மீட்டருக்கு காசு 5.

தமிழ்நாட்டில் ரூ. 215 ப்ளஸ் ரூ. 15, ரூ. 230, கிலோமீட்டருக்கு ஐந்து காசு.

இன்றைக்கு மத்திய அரசில் எக்ஸைஸ் ட்யூட்டி என்று கூறி 5 சத வீதம் ரப்பர், அலுமினியம், இரும்பு என்று இப்படி பல்வேறு பொருள்களுக்கு டாக்ஸ் போட்டிருக்கிறார்கள். டீஸலுக்குப் போட்டிருக்கிறார்கள். பெயின்ட்க்குப் போட்டிருக்கிறார்கள். நம் அரசாங்கம் டீஸலுக்கு இரண்டு காசு உயர்த்தியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 4 காசாக இருந்தபோது மக்கள் பயணம் செய்ததைவிட 5 காசான பிறகு குறைந்திருக்கிறது. இதற்கு மேல் கிலோ மீட்டருக்கு உயர்த்த முடியுமா என்றால் முடியாது. எனவே இப்போது விதித்திருக்கக்கூடிய க்வார்ட்டர்க்கு உள்ள டாக்ஸை குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கூட குறிப்பாக அரசாங்கம் தனியார் எவ்வளவு பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று அறிவிக்காததன் விளைவாக மூன்று பஸ்கள், இரண்டு பஸ்கள், நான்கு பஸ்கள் வைத்திருப்பவர்கள் கடன் பெற முடிவதில்லை. அப்படிக் கடன் கிடைக்காததால் அதைச் சீர்படுத்த முடியவில்லை. அப்படிச் சீர்படுத்த முடியாததால் தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு.

அதோடுமட்டுமல்ல. தேசியமயமாக்குவதில் கம்யூனிஸ்ட் கட்சி எதிரி அல்ல. எதையாக்க வேண்டும், எப்படியாக்க வேண்டும் —இராணுவம் முக்கியத்துவம் உள்ள—டி.வி.எஸ். போன்ற தொழிற்சாலைகள் இராணுவத்தோடு தொடர்புள்ளவை, சிம்ஸன் க்ரூப் இராணுவத்தோடு தொடர்புள்ளது. இவைகளை தேசியமயமாக்கலாம்.

தேசியமயமாக்குகிறோம் என்ற பெயரில் நான்கு ஓட்டை பஸ்கள், இரண்டு டப்பா பஸ்கள் இவற்றை தேசியமாக்கி அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்துகிற நிலையைப் பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று குறிப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு 1976-ல் தமிழக அரசுக்காக பட்ஜட்டை டெல்லியில் கொண்டுவந்தபோது ரூ. 225 என்று அறிவிக்கப்பட்டு ரூ. 10 திரும்பப்பெறப்பட்டு ரூ. 215 ஆக்கப்பட்டது. எனவே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இதில் ஒரு தெளிவான கொள்கை இருத்தல் வேண்டும். நகரசபை வரிகள் 100 சத வீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஸ்பேர் பார்ட்ஸ், உதிரி உறுப்புகள் வாங்குவதில் நிதானம் தேவை. ரூ. 20 கோடி அளவில் லேலண்ட் கம்பெனியிலிருந்து வாங்கியிருப்பதாக தகவல் சொல்கிறார்கள். அதை யார்வாங்கியது? ஏன் வாங்கினார்கள்? இப்போது வாங்க வேண்டிய அவசியம் என்ன? இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? என்பதையெல்லாம் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் உதிரி உறுப்புகள் வாங்கும்போது அதிலே போதுமான நிதானம் இருக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1978 மார்ச் 20] [திரு. மு. அம்பிகாபதி]

இன்றைக்கு சாலையைப்பற்றிச் சொல்லும்போது, மன்னார்குடியில், கோரையாற்றங்கரையில் பாலம் கட்ட வேண்டும், பெருகவாழ்ந்தான் அருகே பாமணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டும். இவைகளை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சைக்கிள் ரிக்ஷாக்களை ஓட்டுகின்றவர்கள் வில்லைகளை கையில் கட்டிக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியில்லாமல் பாக்கட்டிலும் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட வேண்டும். நாய்க்குத்தான் கழுத்தில் வில்லையைக் கட்டிவிடுவார்கள், அதுபோல் இவர்களுக்கும் கைகளில் தான் கட்டிக்கொள்ள வேண்டும் என்று இருப்பதை மாற்றி கைகளிலும் கட்டிக்கொள்ளலாம், பாக்கட்டிலும் வைத்துக் கொள்ளலாம் என்று இந்த அவையிலேயே அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இந்த மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் சார்பாக என்னுடைய சில கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். அவைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* <u>திரு. மு. ரா. சௌந்திரராஜன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்முறை மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் நல்ல அரிய திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள். உதாரணமாக ஒரு டிரைவர் வண்டியை ஓட்டிக் கொண்டு போகின்றபோது, ஆக்ஸிடென்ட் செய்து விடுகின்றான். அப்போது பயணத்தை வைத்துக்கொண்டு வழக்காடி வெளியே வந்துவிடுகின்றான். மீண்டும் இதே ஆள் வேலைக்கு வந்துவிடுவதால், இதுபோன்ற பல பேர்கள் தங்கள் உயிர்களை இழப்பதற்கு ஆளாகிறார்கள். ஆகவே இதுபோன்ற விபத்தைத் தடுப்பதற்காக புள்ளிமுறை கட்டுப்பாட்டை கொண்டு வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு முறையையும் கணக்கு வைத்துக் கொண்டு நான்கு முறை இதுபோன்ற குற்றங்களைச் செய்தால், அவருடைய லைசென்ஸ் பறிமுதல் செய்யப்படும் என்கின்ற நல்லதொரு திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்கு உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. மு. ரா. சௌந்திரராஜன்] [1978 மார்ச் 20

அடுத்தபடியாக, சென்னை நகரத்தில் ஸிட்டி பஸ்களில் அதிகமாக கவர்ன்மென்ட் பஸ்கள் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அடிக்கடி இவற்றில் கண்டக்டர்களும் டிரைவர்களும் ஸ்டிரைக் செய்கிறார்கள். இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே ஸிட்டியில் ஓடுகின்ற பஸ்களில் பிரைவேட் செக்டார்களும் பஸ்களை ஓட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் அனைத்து பஸ்களையும் தேசியமயமாக்கவேண்டும் என்று கூறவில்லை. ஒவ்வொரு பஸ் முதலாளியும் 10 வண்டிகள் 20 வண்டிகள் என்று வைத்துக்கொள்ளும்படியான அளவில் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதை கருத்தில் கொண்டிருந்தார். ஆகவே ஒரு பஸ், இரண்டு பஸ் என்று வைத்துக் கொண்டு குடிசைத் தொழிலைப் போன்று வைத்துக் கொண்டு தொழில் நடத்துவதை எல்லாம் தேசியமயமாக்கப்படக்கூடாது என்றும், அதற்கான பாலிசியை உடனடியாக அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று பஸ்கள் முதல் ஐந்து பஸ்கள் வரை ஒருவர் வைத்துக்கொள்ளலாம் என்ற அளவில் ஒரு அறிவிப்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியிருந்தால்தான் பிரைவேட் செக்டாருக்கும், பப்ளிக் செக்டாருக்கும் காம்பெட்டிஷன் இருக்கும், அப்படியிருந்தால் பொதுமக்களுக்கு அது உதவியாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 7 (ஏழு) சக்ரவர்த்திகள் இருக்கின்றார்கள். நான் குறிப்பிடுவது 7 போக்குவரத்து கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டர்களைத்தான். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களது அறைக்குப் போய் பார்த்திருக்கிறேன். தற்போது டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்களின் சேர்மென்னாக இருக்கின்ற மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஜே. எஸ். பாங்கோ அவர்களுடைய அறைக்கும் சென்று பார்த்திருக்கிறேன். இவர்கள் எல்லாம் சாதாரணமான அறைகளில்தான் இருக்கிறார்கள். ஆனால் இந்த மானேஜிங் டைரக்டர்களுடைய அறையைப் போய் பார்த்தால்—நாம் தப்பி தவறி பழைய மன்னர்களின் உல்லாசபுரிக்கு வந்துவிட்டோமோ என்று எண்ணுகின்ற அளவுக்கு அவர்கள் எல்லாம் அற்புதமாக வாழ்கிறார்கள். நம்முடைய நாடு ஏழைமக்களுடைய நாடு. அப்படிப்பட்ட ஏழை மக்களுடைய வரிப்பணத்தை உபயோகப்படுத்தி இவ்வளவு ஆடம்பரமாக இருக்க வேண்டுமா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் பழைய கார்களைத்தான் உபயோகித்து வருகிறார்கள். ஆனால் இந்த மானேஜிங் டைரக்டர்கள் சென்னைக்கு வந்தால் புதிய கார்களில் தான் வருகிறார்கள். சென்னைக்கு அவர்கள் வந்தால் சாதாரண ஓட்டல்களில் தங்குவதில்லை. பைவ் (ஐந்து) ஸ்டார் ஓட்டல்களில் தான் தங்குகிறார்கள். இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 20] [திரு. மு. ரா. சௌந்திரராஜன்]

அடுத்து, திருவிழாக் காலங்களில் தனியாக பஸ்களை விடுவதற்கு கார்ப்பரேஷன்களுக்கு மட்டும் உரிமைகள் வழங்கப்படுகின்றன. இப்படி உரிமைகள் வழங்கும்போது, பிரைவேட் செக்டார்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கார்ப்பரேஷன்களுக்குக் கொடுக்கும் போது—அத்துடன் பிரைவேட் செக்டார்களுக்கும் அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்தபடியாக, நம்முடைய கார்ப்பரேஷன்களிலே எல்லாம் புது ஸ்கீம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த ஸ்கீமிலே வேரியேஷன் கேட்டால், தனிப்பட்ட பஸ் முதலாளிகள் கேட்டால், அந்த ஸ்கீமிலே இந்த ரூட் கவர் ஆகிறது என்றும், ஆகவே கொடுக்கக் கூடாது என்றும் சொல்லப்படுகிறது. அதனால் அவர்கள் அப்பீல் செய்கிறார்கள். இப்போதுகூட எஸ்.டீ.ஏ. அவர்கள் ஜட்ஜ்மென்டில் ஒரு உத்தரவு கொடுத்திருக்கிறார்கள்.

எப்படியும் எல்லாவற்றையும் தேசிய மயமாக்கும் போது, இந்த ரூட்டை எடுத்துக் கொண்டால் என்ன தவறு! எனவே மாற்றுவதற்கு அனுமதி வழங்கலாம் என்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பை மதித்து, அதை உடனடியாக அமுல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை அளித்தமைக்காக நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ராமலிங்கம்: சட்ட மன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோவில் தொகுதியைச் சேர்ந்த கஞ்சன் கொல்லையில் இருந்து வல்லம்படுகை வரை கொள்ளிடம் வடக்கு கரையில் சுமார் 40 கிராமங்கள் இருக்கின்றன. இந்த 40 கிராமங்களில் சுமார் ஒரு லட்சம் ஜனதொகை மக்கள் வாழ்கின்றனர். இவர்கட்கு போக்குவரத்து வசதி இன்றி மிகவும் அவதிப்படுகிறார்கள். கொள்ளிடம் வடக்கு கரையில் மழைக்காலங்களில் நடமாட முடியாதநிலை நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. எனவே, கொள்ளிடத்தின் வடக்குக் கரையில் நல்ல போக்குவரத்து வசதிக்காக அங்கே தார் சாலை போட்டுத் தரும்படி இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஜமாபட்டியில் இருந்து வரும் புளியங்குடி நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்து, தற்போது போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனையும் நல்ல தார்ச்சாலையாக மாற்றித் தர வேண்டி நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஏ. ராமலிங்கம்] [1978 மார்ச் 20

காட்டுமன்னார்கோயில் ஒன்றியத்தைச் சேர்ந்த, குணவாசல் சாலையில் வெள்ள மதகு என்ற மதகும், தொண்டமானத்தில் உள்ள மதகும் சுமார் 10 ஆண்டுகளாக பழுதடைந்து இருப்பதால், அந்தப் பகுதியில் வாகன வசதிகள் செல்ல முடியாமல் இருப்பதால், அந்த மதகுகளையும் பழுது பார்த்துத் தரும்படி நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

காட்டுமன்னார்கோயில் ஒன்றியத்தில் கடந்த 1972 ஆம் ஆண்டு காவேரித் திட்டத்தின் கீழ் ஓமாம்புலியூர் சாலையில் இருந்து முட்டம்வரையும், புவனகிரி ஒன்றியத்தைச் சேர்ந்த கரமேட்டில் இருந்து மருதூர் வரை தார் சாலை போடப்பட்டு சுமார் 6 ஆண்டுகளாக அரசு பராமரிப்பு இன்றி நல்ல முறையில் போடப்பட்ட சாலை பழுதடைவதால் அந்தச் சாலையையும் அரசு பராமரிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சிதம்பரத்தில் இருந்து காட்டுமன்னார்கோயில் செல்லும் சாலையும், சிதம்பரத்தில் இருந்து விருத்தாசலம் செல்லும் சாலையும் கடந்த கால வெள்ளத்தால் மிகவும் பழுதடைந்து இருப்பதால், அரசு இதனையும் பழுது பார்த்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரத்தில் இருந்து ஓரத்தூர் வழியாக சேத்தியாத்தோப்பு செல்லும் சாலையில் வெள்ளாற்று வெள்ளம் சாலையின் ஓரத்தை சுமார் 1 கிலோமீட்டர் தூரம் அரித்து மிகவும் ஆபத்தான நிலைமையில் உள்ளதால், பஸ் போக்குவரத்து போக முடியாத நிலை உள்ளது. எனவே, அந்த இடத்திற்கும் ஒரு தடுப்புச் சுவர் அமைத்துத் தரும்படி இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தென் ஆற்காடு மாவட்டம், மருதூர்-புதவராயன்பேட்டை சாலை ஏற்கனவே பஸ் போக்குவரத்துச் சாலையாக இருந்தது. அதுவும் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, அந்த பஸ் போக்குவரத்துச் சாலையையும் உடன் பழுதுபார்த்துத் தார்ச் சாலையாக மாற்றித் தரும்படி இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, சிதம்பரம் வட்டத்தில் உள்ள சாலைகள் அனைத்தும் கடந்த வெள்ளத்தால் மிகவும் சேதம் அடைந்திருப்பதால், அத்தனை சாலைகளையும் நல்ல முறையிலே பழுதுபார்த்து தார்ச் சாலைகள் போட்டு மக்களின் குறையினைத் தீர்த்துத் தரும்படி நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலை நகருக்கும்-சிதம்பரம் நகருக்கும் இடையே அடிக்கடி போக்குவரத்து தடைப்படுவதால், அங்கே ஒரு ரயில்வே மேம்பாலம் கட்டித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 20] [திரு. ஏ. ராமலிங்கம்]

தஞ்சை மாவட்டத்தையும், தென் ஆற்காடு மாவட்டத்தையும் இணைக்கும் வகையில் மணல் மேட்டில் இருந்து முட்டம் கொள்ளிடத்தில் ஒரு பாலம் இணைக்கும் திட்டம் நீண்ட நெடுங்காலமாக இருந்து, அது தடைப்பட்டுக் கொண்டு வருகிறது. அதையும் இந்த அரசு உடனடியாக மேற்கொண்டு, அங்கே ஒரு இணைப்புப் பாலம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. கோ. ரகோத்துமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாலைப் போக்குவரத்து, கிராமப் போக்குவரத்துத் துறை பற்றிய மானிய விவாதத்தின்போது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க் கட்சி உறுப்பினர் நண்பர் ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, இந்தத் துறையிலே உள்ள அமைச்சர் மிகவும் இளைஞராகவும், எப்பொழுதும் புன்சிரிப்புடன் அவர்களை அணுகும்போது காரியங்களைச்செய்கிறார்கள், அப்படிச் செய்யக் கூடிய திறமை உள்ளவர்கள் என்று கூறுகிறார்கள். உண்மையிலேயே நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

மேலும் அவருடைய துறையைச் சேர்ந்த போக்குவரத்து, நெடுஞ்சாலைத் துறையினர் கடந்த பெரு வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல சாலையை உடனுக்குடன் அமைத்து நிவாரணப் பணியில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய முகையூர் தொகுதியில் திருக்கோயிலூரிலிருந்து புத்தூர் செல்லக்கூடிய மினி பஸ் திட்டத்தை விரிவுபடுத்தி பரனூர், மேலகுண்டூர், கீழகொண்டூர், வீர சோழபுரம், ஆயந்தூர், மாம்பழப்பட்டு, கல்பட்டு வரை நீட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருக்கோயிலூரிலிருந்து மூங்கில்துறைப்பட்டுக்கு ஒரு மினி பஸ் விடவும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருக்கோயிலூரிலிருந்து தேவனூர், ஆதிச்சனூர், நாயனூர், வீரப்பாண்டி, ஒட்டம்பட்டு, அரணுபுரம், வீரங்கிபுரம், கண்டாச்சிபுரம், நல்லாபாளையம், கடையம், கருவாட்சி, சி. என். பாளையம், பணமலை, அனந்தபுரம் வழியாக பேருந்தை விட அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கோ. ரகோத்தமன்] [1978 மார்ச் 20

என்னுடைய தொகுதியாகிய முகையூர் தொகுதி பின்தங்கிய பகுதி. பின்தங்கிய கிராமங்கள் நிறைந்த ஒன்றாகும். அந்தக் கிராமப் புற மக்கள் நகரத்திற்குச் சென்று வரும் வகையில் வாழ்க்கையை நடத்தும் வகையில் எல்லிசத்திரம், கல்பட்டு, மாம்பழப்பட்டு, மல்லிகைப்பட்டு, அரியலூர். அத்தியூர் திருக்கை, பணமலை, அனந்தபுரம் வழியாக பேருந்து வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருக்கோயிலூரிலிருந்து அத்திப்பாக்கம், கொழுந்தராம்பட்டு, சுரயப்பட்டு, மணலூர் பேட்டை, மேலந்தம், மூங்கில்துறைப் பட்டு, வழியாக பேருந்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அனந்தபுரம், அடங்குணம் கொசப்பாளையம், பணமாலை வழியாக விழுப்புரத்திற்கு ஒரு பேருந்து விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் பஸ் போக்குவரத்து மூலமாக திருவண்ணாமலை யிலிருந்து மணலூர் பேட்டை வரை சென்று கொண்டிருந்த பேருந்து 1978-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 10ம்-தேதியிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை தெரிவித்துள்ளேன். பெரியார் பஸ் போக்குவரத்து திருவண்ணாமலை—மணலூர் பேட்டை டவுன் பஸ்ஸை மீண்டும் விடுவதற்கு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூங்கில்துறைப்பட்டு, ஆலைக் கரும்பு செஸ் நிதியின் கீழ் ஏழு லட்சம் ரூபாய் செலவில் ரோடு போடப்பட்டுள்ளது, பாலம் குறுக்கே உள்ள இடைப்பட்ட சோனைநதி, அது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. சோனை நதியில் அந்தப் பாலத்தைக் கட்டி முடித்தால்தான் அந்தத் திட்டம் முழுமை யாகப் பயன் அடையும், இல்லையேல் அரசு செலவு செய்த தொகை வீணாகும்.

நமக்கெல்லாம் உதவும் வகையில், நம்முடைய செய்தியை நாடு முழுவதும் பரப்பும் வகையில் செய்தி நிருபர்களாக ஆங் காங்கே இருந்து செய்தியை சேகரித்து பணியாற்றிக் கொண் டிருக்கிற நிருபர்கள் தமிழகம் முழுவதும் செல்லக்கூடிய வகையில் அவர்களுக்கு பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய பாஸ் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கினால் தான் கிராமப் புற மக்கள் நல்ல பலன் அடைய முடியும்.

1978 மார்ச் 20] [திரு. கோ. ரகோத்தமன்]

அடுத்து வரும் நிதியாண்டில் போக்குவரத்துத் துறைக்கு அதிக நிதியை ஒதுக்கி சிறு பாலங்கள் போன்றவற்றை உடனடி யாக அமைத்துத் தரவேண்டும். அப்போதுதான் மினி பஸ் திட்டத்தை விரிவுபடுத்த வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பொறியாளர்கள் திட்ட மதிப்பீடு செய்து அனுமதிப்பது 3,000 ரூபாய் என்று இருப்பதை 5,000 ரூபாய் என்றும், உதவிப் பொறியாளர் மதிப்பீடு அனுமதிப்பது 10,000 ரூபாய் என்று இருப்பதை 15,000 ரூபாய் என்று உயர்த்தியும் அந்தத் திட்டம் அமல்படுத்தப்பட வில்லை. இதனால் உடனுக்குடன் திட்ட வேலைகள் நடைபெறுவது தாமதப்படுகிறது. மேலும் விரைவுபடுத்தி அரசு அந்தத் திட்டத் தைச் செயல்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

இந்த நேரத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–20)

திரு. ஆரூர் ஜகதீசன் : மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை, சாலை போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து ஆகிய துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நெடுஞ்சாலை—கிராமப் பணித் துறையைப் பொறுத்தமட்டில் பொறுப்பேற்றிருக்கும் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் எந்த அளவிற்கு சுறுசுறுப்பாகவும், வேகமாகவும், அதே சமயத்தில் திறமையாகவும் செயல்பட்டு வருகிறாரோ அதேபோல் அவருக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் அத்துறையைச் சார்ந்த தலைமைப் பொறியாளர் முதல் கீழ்நிலை சிப்பந்திகள் வரையில் சிறப்பாகப் பணியாற்றி வருவதை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

வெள்ள நிவாரணப் பணிக்காக, தேசிய நெடுஞ்சாலைகள், மாநில அரசுச்சாலைகள் ஊராட்சி ஒன்றியச் சாலைகள், சிறுபாசன ஏரிகள், பள்ளிகள் ஆகியவற்றின் சீரமைப்பிற்காக இந்த அரசு 30 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற் கிறேன். இதிலே இந்த ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள்ளாக ஏறக்குறைய 11 கோடி ரூபாய் செலவிட வேண்டுமென்று உத்தேசித்திருப்பதையும் பாராட்டுகிறேன்.

வெள்ளப் பணிகள் மார்ச் மாதம் 31-ஆம் தேதிக்குள் செய்து முடிக்கப்பட வேண்டுமென்கிற குறியீடு தேவைதான். என்றாலும் கூட வேலை, தரம் உள்ளதாகவும், சிறப்பாகவும், ஒழுங்கீனம் இன்றியும் செய்யப்பட வேண்டுமானால் சிறிது காலந் தாழ்ந்தாலும்

நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் முன்பெல்லாம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒர்க் ஆர்டர் கொடுக்கப்பட்ட ஓரிரு நாட்களிலேயே வேலை பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாக மெஷர்மென்ட் புத்தகத்திற்குள் நிரப்பப்பட்டு காசோலைகள் பறந்து கொண்டிருக்கும். ஆனால் இந்த ஆட்சியில் அப்படிப்பட்ட சூழ்நிலை முற்றிலும் மாறிவிட்டிருப்பது அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும்.

முன்பெல்லாம் ஒப்பந்தக்காரர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டி யிட்டுக்கொண்டு 30 சதவீதம், 35 சதவீதம் மதிப்பீட்டுக்குக் குறைவாக வேலைகள் எடுக்கப்பட்டு, ஒழுங்காக வேலை செய்ய முடியாமல் ஊழலும் லஞ்சமும் தலைவிரித்தாடிய நிலை மாறி சம்பந்தப்பட்ட கிராமங்களில் உள்ள மக்களுக்கும், பட்டம் பெற்ற இளைஞர்களும் சிறப்பாக, சீராக வேலை செய்யும் முறையில் இந்த அரசு மாற்றம் செய்திருப்பதை வரவேற்காமல் இருக்க முடியாது.

இங்கே சாலை வேலைகளையும், ஏரி வேலைகளையும், கட்டிட வேலைகளையும் முழுக்க முழுக்க நம்பியிருக்கின்ற, அதையே நடத்தி வருகின்ற பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த ஒட்டர் சாதியினருக்கு இத்துறையிலே முன்னுரிமை வழங்கப்பட்டு வேலைகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்குப் பரவலாக நிதி ஒதுக்கம் செய்து மேம்பாடு செய்வதற்காக தார்ச்சாலைபோடுவதை நிறுத்தி ஜல்லிக் கற்கள் போட்டு பரவலாகச் சாலை போட வேண்டுமென்று புதிய உத்தரவை வரவேற்கிறேன் என்றாலும் சில முக்கியமான தேவையான ஒன்றியச் சாலைகளுக்காவது தார்ச் சாலையாகப் போடுவதற்கு தனிச் சலுகை தந்திட வேண்டுமென்று **கேட்டுக்** கொள்கிறேன்.

சாலைகளுக்கு அண்டையில் உள்ள நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தை அகலப்படுத்திட சாலையை வெட்டி குறுகலாக்கி விடுகிறார்கள். இதனால் சாலை மிகவும் குறுகி போக்குவரத்து மிகவும் பாதிக்கிறது. இந்த அவல நிலையை மாற்றிட துரிதமான கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாகக் கிராம சாலைகளைப் போடும்போது அதற்கு மிகக் குந்தகமாய் இருப்பது காட்டிலாக்கா. இவர்களுடைய காரணமற்ற குறுக்கீடுகளால் பல சாலைகளை ஒழுங்காகச் செய்ய முடியாமல் அரைகுறையாக நிறுத்தப்பட்டுள்ளதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப்பற்றிச் சில விவரங்களை மட்டும் சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன். எடையாத்தூர்–இரும்புலிச்சேரி பகுதியில் ஒரு தீவு பாலாற்றுக்கு இடையில் இருக்கிறது. இந்தத் தீவுக்குப் போக்குவரத்து வசதி கிடையாது. நிறை கர்ப்பிணியாக இருந்தாலும், அந்த மாதர்களை கட்டை வண்டியிலே எடுத்துச் செல்ல முடியாமல் கட்டிலில் போட்டு திருக்கழுக்குன்றத்திற்குக் கொண்டுவந்தாக வேண்டும். எனவே, மக்கள் தொகையினையும், பணச் செலவுகளையும் கணக்கில் எடுத்துப் பார்க்காமல் அங்கேயுள்ள மக்களுடைய நலனைக் கருதி ஒரு தரைப்பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற பாராளுமன்றத் தேர்தலின்பொழுது ஓட்டுப்போடாமல் ஐந்து ஊராட்சிகள் எங்கள் பகுதியில் இருந்தன. குளவாய் குறுக்கே 5 ஊராட்சிகள் — குண்ணவாக்கம், அஞ்சூர், தேதூர், ஈச்சரங்கணை, கொல்லைமேடு, தர்காஸ்து, அருமந்தை ஆகிய கிராம மக்கள் அந்தத் தேர்தலில் ஓட்டளிக்கவில்லை. அவர்களுக்குப் போக்குவரத்து வசதி இல்லாததால் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ள மறுத்துவிட்டார்கள். இப்படிப்பட்ட கிராமங்களுக்கு நல்ல சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடற்கரையில் உள்ள புதுப்பட்டணம் — ஒய்யாவி குப்பம் சாலைக்கும் நிதி ஒதுக்கம் வேண்டும்.

அகஸ்தீஸ்வரமங்கலம்—ஆனூர் சாலையை மேம்பாடு செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். நரும்பூர் — நடுவக்கரை இடையில் உள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்போரூர் கூட்டுச் சாலையிலிருந்து சிங்கபெருமாள்கோவில் சாலையில் இணையும் 6 கிலோ மீட்டர் சாலையை மேம்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். கரும்பு அபிவிருத்தி சாலை வல்சபுரம்—நெரும்பூர் சாலை—8 கிலோ மீட்டர் தூரமுள்ள அந்தச் சாலையை மேம்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய மாமன்றத்தினுடைய தலைவரவர்கள் சட்டமன்றத்திலே, எதிர்க் கட்சியிலே இருந்தபொழுது கூறிய ஒரு கருத்தை, மீண்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தப் பேருந்துகளிலே—ஒவ்வொரு பேருந்திலும், லாரிகளில் கொண்டு செல்வதைப் போல், தேங்காய், மரங்கள், பெரிய மூட்டைகள், பிலிம் சுருள் பெட்டிகள் பால்கேன்கள், ஆகிய சாமான்களை ஏற்றிச் செல்வதால், அவை அதிக அளவில் பழுதுபடுகின்றன. ஆகவே, அப்படிப்பட்ட அளவில் இல்லாமல், லாரிகளில் ஏற்றிச் செல்வதைப் போல் இல்லாமல், கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேருந்துகள் பழுதுபட்டால் இடையிலுள்ள டெப்போக்களில் பழுது பார்க்கப்படுகின்றன. சில பகுதிகளில் டெப்போக்களுக்கு வெளியிலே நல்ல வெயில் காலத்திலேகூட, எவ்வித வசதியும் இல்லாத இடத்தில் பயணிகளை இறக்கிவிட்டு, காக்க வைக்கின்ற நிலையை மாற்றவேண்டும்.

அதே போல், பி.டி.சிக்கும், பி.இ. சிக்கும் இருக்கிற வேறுபாட்டை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுராந்தகத்திற்கும், மாமல்லபுரத்திற்கும் திருக்கழுகுன்றம் வழியாக முன்னால் சென்று கொண்டிருந்த பேருந்துகள் இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றை மீண்டும் விடவேண்மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுடைமையாக்கப்பட்ட வழித்தடங்களில், குறிப்பாக, சென்னை, வந்து போகும் தனியார் பேருந்துகள் இன்னமும் நிறுத்தப்படாமல் போய்க்கொண்டிருக்கின்றன. இதற்கு, முழுக்க, முழுக்க மேலதிகாரிகளே காரணமாக இருக்கிறார்கள். இது தொடர்பான வழக்குகள், விரைவாகத் தீர்க்கப்பட முடியாத அளவில் குந்தகம் ஏற்படுத்தி, அதன் மூலமாக, அந்தப் பேருந்துகள் சுலபமாகச் செல்ல வழி செய்யப்படுகிறது. ஆகவே, இதில் அமைச்சரவர்கள் உடனடியாகத் தலையிட்டு, வழக்குகளை விரைவாக முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் நாட்டுடைமையாக்கப்பட்ட வழித்தடங்களிலே அரசுப் பேருந்துகள் செல்ல உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன், வணக்கம்.

திரு. டி. பி. எம். பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசின் சாலைப் போக்குவரத்து, சாலைப் பராமரிப்பு போன்றவற்றின் மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய தேசிய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

போக்குவரத்துக்களை அரசுடைமையாக்க வேண்டுமென்பதை 1948-ஆம் ஆண்டு மாநில அரசு கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதை பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன்தான் அதற்கு முழு வடிவம் கொடுத்து நிறைவேற்ற முன் வந்தார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1967-ம் ஆண்டு அமுல்படுத்திய நேரத்தில், 75 மைல்களும் அதற்குமேலுமுள்ள வழித்தடங்களில் எங்கெங்கு பேருந்துகள் ஓடினவோ, அந்த வழித்தடங்களை நாட்டுடைமையாக்கி ஒரு வழி

காட்டினார்கள். 1971-ல், பெரியபஸ் கம்பெனிகள் நாட்டுடைமையாக்கப்படுமென்ற நல்ல திட்டம் நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

அந்த நல்ல திட்டங்கள் எந்த அளவுக்குச் செயல்பட்டன. அந்தத் திட்டங்கள் மூலமாகப் பொதுமக்கள் எந்த அளவுக்குப் பயன்பட்டார்கள் என்பதைப் பார்க்கும்போது, இந்த நாட்டுடைமையாக்கப்பட்ட தேசியமயமாக்கப்பட்ட பஸ் போக்குவரத்துக்கள் எவ்வளவு சீர்கேடு அடைந்திருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஏனென்றால், தேச உடைமை அல்லது நாட்டுடைமை என்று வருகின்றபொழுது பொதுமக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டுதான் தேசஉடைமை அல்லது நாட்டுடைமை என்றவாதம் இதுபோன்ற மாமன்றங்களில் எடுத்து வைக்கப்படுகின்றது.

ஆனால்; நாட்டுடைமையாக்கப்பட்ட, தேசஉடைமையாக்கப்பட்ட இலாக்காக்கள் அல்லது தொழில்கள் எந்த அளவிற்குப் பொது மக்களின் நன்மையைப் பாராது, அந்தப் பொதுமக்களின் நன்மையைப் புறக்கணித்து அங்கங்கு போராட்டங்களும் நடத்தி, கோரிக்கைகளை வலியுறுத்துகின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது, அதுபோன்ற நாட்டுடைமை தேச உடைமை என்ற உன்னதமான கோட்பாடுகள் கேலிக்கூத்தாகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம்.

(பிற்பகல் 12-30.)

சமீபத்தில் பல்லவன் போக்குவரத்துக், கழகம் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் போன்ற கழகங்களின் கோரிக்கைகளையும் அதைத் தொடர்ந்து நடந்த போராட்டங்களிலும் நாம் பார்த்தோம். எந்த அளவுக்கு பொதுமக்களின்மீது இந்தத் தொழிலாளர்கள் அன்பும் பாசமும் வைத்திருந்தார்கள் என்பதை பார்க்கிறபோது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது.

சட்டமன்றக்கூட்டம் நடைபெறுகிறது. வெளியே பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஸ்டிரைக் நடத்துகிறது. இன்னும் பலர் ஸ்டிரைக் செய்கிற நேரத்தில் எவ்விதமான பாதுகாப்பும் இல்லாத அளவுக்கு பொதுமக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற எண்ணமே இல்லாது ஸ்டிரைக்கிலே ஈடுபடுகிறபோது, அவர்கள் வைக்கிற கோரிக்கைகள் நியாயம்தானா என்பதை பேசுவதற்குத் தயாராக இருக்கிற நேரத்தில்கூட, ஸ்டிரைக்கிலே இறங்குவதை நாம் பார்க்கிறோம்.

அவர்களுடைய கோரிக்கைகள் நியாயமானவை என்பதை சட்டமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் வலியுறுத்துகிற நேரத்திலேகூட போராட்டங்கள் நடத்துகிற

சாட்சிகளை நாம் பார்க்கிறோம். இவைகளுக்குப் பின்னால் ஏதாவது ஒரு சக்தி இயங்குகிறதா என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. போராட்டத்தில் ஈடுபடுகிற தோழர்களின் உணர்வுகளை நாம் மதிக்கிறோம். அவர்களுக்கு வேண்டிய வாய்ப்புகளை வசதிகளை செய்து தரவேண்டும் என்று இந்திய தேசிய பார்வார்டு பிளாக்கின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த உரிமையை, உணர்வை பெறுவதற்காக நாங்கள்தான் தகுதியானவர்கள் என்று மறைமுகமாக வேலை நிறுத்தம் செய்யத் தூண்டிவிடும் சக்திகள் யார் என்பதை இந்த நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. பொதுமக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசு உணர்ந்து இனிமேல் தேசியமயமாக்கும் கொள்கையை அமல் படுத்துகின்ற நிலையினைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்களுடைய நலனை மட்டுமல்லாது, பொதுமக்களின் உரிமைகளும் நலன்களும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறோம்.

ஆகவே, தேசியமயமாக்கப்பட்ட கொள்கைகளில் 1971 ஆம் ஆண்டில் 10 பஸ்களுக்கு மேல் வைத்திருக்கின்றவர்களுக்கு மேலும் உரிமம் வழங்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அப்படி 10 பேருந்துகள் வைத்திருப்பவர்கள் எவ்வளவு பேர்களிடம், தனியார்களிடமும் வங்கிகளிலும் கடன் பெற்றிருப்பார்கள் என்பதைப் பார்த்து அவர்கள் வறுமையை அகற்றுகிற வகையில், அவர்கள் மேலும் உரிமம் கேட்டால் புதிய உரிமங்கள் கொடுப்பது எந்தவிதமான சிக்கலையும் உண்டாக்காது. அதே நேரத்தில் படித்த இளைஞர்களுக்கு, பொறியியல் படித்த இளைஞர்கள் உரிமம் கேட்டால் அவர்களுக்கு முதல் சலுகை கொடுத்து அதை அரசின் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இந்த அறிக்கையில் முக்கியமான ஒன்று, அரசு ஊழியர்களுக்கு மற்ற துறையில் கொடுப்பது போல போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகிற தோழர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வைத்திய வசதி அரசு ஆஸ்பத்திரிகளில் கொடுக்கப்படும் என்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கிற வைத்திய வசதியைப் போல அந்த தொழிலாளர்களுக்கு மட்டும் கொடுக்காமல் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இந்த வைத்திய வசதியைக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. இ. கணேசன் : தலைவரவர்களே, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத் துறை ஆகிய துறைகளுக்கான கோரிக்கைகளை ஆதரித்துப் பேசுவதற்கான வாய்ப்புக் கிடைத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

புரட்சித் தலைவரது ஆட்சியில் இந்தத் துறை சிறந்த முறையில் பொதுமக்கள் சேவை செய்து வருகிறது என்பதை அனைவரும் ஒத்துக்கொள்வார்கள் என்பதில் எனக்கு எந்தவிதமான ஐயமும் இல்லை.

''இதனை இதனால் இவன் முடிப்பன் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''

என்றார் பெருந்தகை வள்ளுவர். அதற்கேற்ப பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த எங்களது அன்பிற்குரிய நண்பரை அமைச்சராக்கி போக்குவரத்துத் துறையின் பொறுப்பினை வழங்கியுள்ளார்கள். புரட்சித் தலைவரது நம்பிக்கை சிறக்கும் வகையில் கடந்த 9 மாதங்களாக போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையை மிகவும் திறமையாகவும் சிறப்பாகவும் நடத்தி வருகிறார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும்.

இந்த ஆட்சிக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும், குந்தகம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிர்க்கட்சிகளைச் சார்ந்த தொழிற்சங்கங்கள் போக்குவரத்துத் துறையில் ஒரு வேலைநிறுத்தத்தை உருவாக்கியதை அதற்குள் மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த வேலைநிறுத்தத்தின் போதும், அதற்கு முன்னரும் நமது போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இரவு பகல் பாராது உண்ணாமல், உறங்காமல், கொண்ட கடமையே பெரிதென உழைத்து அந்தச் சட்ட விரோதமான முறையற்ற வேலை நிறுத்தத்தை முறியடித்து, பொதுமக்களுக்குப் போக்குவரத்து வசதிகள் குறையாமல் பார்த்துக் கொண்டதற்காக அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். போக்குவரத்துத்துறையும், பேருந்துப் போக்குவரத்தும், பொதுமக்களுக்கு சேவை செய்திட வேண்டிய அமைப்புகள் என்ற உணர்வுகளை தொழிலாளர்கள் மறந்தாலும், இந்த அரசு அந்தச் சேவையில் எவ்வளவு குறுக்கீடுகள் குந்தகங்கள் ஏற்பட்டாலும், தளராது, தயங்காது பொதுமக்களுக்கு உழைக்க வேண்டும் என்ற நல்ல கொள்கையினை நிரூபித்து, நாட்டு மக்கள் இடத்தில் நல்லதொரு பெயரை நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பெற்று இருக்கிறார்கள். அதற்காக அவரை நாம் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

சாலைப் போக்குவரத்தில் நமது அமைச்சர் அவர்கள் செய்து வரும் பணிகளை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. அண்மையில் தமிழகத்தில் வீசிய புயலாலும், வெள்ளத்தாலும், தமிழகத்தின் சாலைகள் பல மாவட்டங்களில் மிகுந்த சேதத்திற்கு ஆளானது என்பதையும், பாலங்கள் பழுதடைந்து போக்குவரத்து பெருமளவில் பாதிக்கப்பட்டது என்பதையும் இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவர். பழுதடைந்த பாலங்களும், சேதமடைந்த சாலைகளும் எவ்வளவு விரைவில் சீர்படுத்தப்பட்டு, மீண்டும் போக்கு

வரத்து நல்ல முறையில் இருந்திடும் வகையில் செம்மைப்படுத்தப் பட்டன என்பதை எண்ணிப் பார்த்து, இந்த நாட்டு மக்கள் நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைப் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களோடு உழைத்த அதிகாரிகளுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையும், போக்குவரத்துத் துறையும் ஒரே அமைச்சரது பொறுப்பில் கொண்டு வந்து சாலைகள், சாலைப் போக்குவரத்து என இரண்டையும் இணைத்திருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய செயலாகும். சட்டமன்ற உறுப்பினர்கள் சாலை போட வேண்டும், பேருந்துகள் விட வேண்டும் என்று கோரும் கோரிக்கைகளை ஒன்றாகக் கவனித்து செயல்பட மிகவும் வசதியாக இருக்கும் என்று கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அத்துடன், என்னுடைய தொகுதியில் ஒரு சில காரியங்களை மிக முக்கியமாக உடனடியாகச் செய்ய வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இடைப்பாடி தொகுதியைச் சார்ந்த மகுடஞ்சாவடி ஒன்றியத்திலுள்ள எளம்பிள்ளை-கடையாம்பட்டி ரோட்டில் கி.மீ. 2.40-ல் குறுக்கிடும் சித்தர் கோயில் ஓடையில் ஒரு பாலம் கட்ட வேண்டியது மிகமிக அவசியமாக உள்ளது. இந்த ஓடையில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் அந்தச் சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் போக்குவரத்து மிகவும் பாதிக்கிறது. அந்த இடத்தில் பாலம் கட்டப்படாமல் நீண்ட காலமாக இருந்து வருகிறது. ஆகவே, இந்த இடத்தில் பாலத்தை உடனடியாகக் கட்டி, அந்தப் பாலத்தில் முறையாக நடந்து செல்ல விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்க்க வேண்டும். ஆகவே, அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன், சின்னம்பட்டியிலிருந்து அக்கரைப்பட்டிக்கு ஒரு பாலத்தை உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பாலத்தை உடனடியாக அமைக்காவிட்டால் பள்ளி மாணவர்கள் கடந்து செல்வதற்கு முடியாமல், குட்டைகளில் நீந்திச் செல்லும் கோரமான காட்சியைத்தான் காண முடியும். அக்கரைப்பட்டியிலிருந்து இறந்து போனவர்களின் பிணங்களைக் கொண்டு வரவேண்டுமென்றால் தெப்பம் கட்டித்தான் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டும். ஒரு நாட்டிலே, சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகாலம் ஆகியும் இந்த நிலை என்றால் ....(மணியடிக்கப்பட்டது.

(பிற்பகல் 12-40.)

<u>திரு. ரா. பெரியசாமி</u>: பேரவைத் தலைவரவர்களே, ரோடுகளும் பாலங்களும், போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து மானியங்களின்மீது இந்திய தேசிய இந்திரா காந்தி காங்கிரஸ் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

முதன் முதலாக "ரூரல் ரோட்ஸ்"—கிராம ரோடுகள், இணைப்புச் சாலைகள் என்று இருக்கிறது. இந்த ரூரல் ரோடுகளை எல்லோரும் ஊழல் ரோடுகள் என்று பரவலாகப் பேசிக் கொள்கிறார்கள். நானும் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். ஏனென்றால் இதற்கு முன்னால் இருந்த அரசு காலத்தில் 3, 4 வருஷமாக வறட்சி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளை எல்லாம் நிவாரணப் பணிகளின்கீழ் கொண்டுவந்தார்கள். அப்படிப்பட்ட வறட்சிப் பகுதிகளில் என்னுடைய தொகுதியும் ஒன்று. என்னுடைய தொகுதியில் அப்போது செய்த வேலைகள் எல்லாம் பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. அமைச்சரவர்கள் வேண்டுமானாலும் அதைப் பார்க்கலாம். அதை நேரிலே வந்து காட்ட வேண்டுமென்றாலும் நான் தயாராக இருக்கிறேன்.

ஒரு ரோடு கூடச் சரியாக இல்லை. விசும்பல் சமுத்திரம் பகுதியில் ஐயாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டப்பட்டது. பாலம் கட்டி சுமார் இரண்டு வருஷம்தான் இருக்கும். புயல்-வெள்ளம் வந்தபோது அந்தப் பாலம் பழுதடைந்துவிட்டது. பாலத்தின் மேல் பகுதி பழுதடைந்தால் ஒருவேளை வெள்ளம் மோதியதாலும், பெருவெள்ளத்தில் அடித்துவரப்பட்ட மரங்கள் மோதி, தடுத்ததாலும் பழுதடைந்திருக்கும் என்று எண்ணிக் கொள்ளலாம். ஆனால் நிலைமை அப்படியல்ல. பாலத்தின் கீழே ஒரு பகுதி அப்படியே இறங்கிவிட்டது. அஸ்திவாரத்தில் அதற்குச் சரியான முறையில் காங்க்ரீட் போட்டிருந்தால் பாலம் உடைந்து போகாது; கீழே இறங்கியிருக்காது; இப்படி நெகிழ்ந்து இருக்காது; அதைப் பார்க்கும்போது வறட்சிப் பணியின்கீழ் செய்யப்பட்ட வேலைகள் எல்லாம், ரோடுகளும் பாலங்களும் அப்படித்தான் இருக்குமோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

ரூரல் ரோட்ஸ் போடும்போது, முதலில் டெண்டர் விடும்போது சம்பந்தப்பட்டவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு தொகையைக் கொடுத்துதான் டெண்டர் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்படி வரும்போது ஆரம்பத்திலேயே ஊழல் இருக்கிறது. நூற்றுக்கு 20 ரூபாய், 30 ரூபாய் கொடுக்கிறவர்களுக்குத்தான் டெண்டர் கிடைக்கும். அதையெல்லாம் பார்த்துதான் பொதுமக்களே ஊழல் ரோடுகள் என்று சொல்கிறார்கள்; அதை நானும் ஆதரிக்கிறேன்.

அந்த ரூரல் ரோட்ஸ் போட்டு 4, 5 வருஷங்கள் இருக்கும். அப்போது அங்கே இருந்த அதிகாரிகள் எல்லாம் முன்பு இருந்ததை விட தற்போது அவர்களுடைய போக்கையும் வசதிகளையும் பார்த்தால் ரொம்ப வசதியோடு இருக்கிறார்கள். குறிப்பாக, திருச்சி நகரில்தான் அப்படிப்பட்ட அதிகாரிகள் பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டி, அந்தக் கட்டடங்களில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது இந்த ரூரல் ஒர்க்ஸ் நமக்குத் தேவையில்லை என்று தோன்றுகிறது.

10 வருஷங்களுக்கு முன்னால் காங்கிரஸ் அரசு இருந்தபோது கட்டிக் கொடுத்த யூனியன் ஆபீஸ், பள்ளிக்கூடம், பாலம் இவைகள் எல்லாம் இன்றும் நல்லமுறையில் சிறப்பாக இருக்கிறது. இன்றைக்குக்கூட அவைகளைக் கடப்பாறை கொண்டும் உடைக்கமுடியாத நிலையில் இருக்கின்றன. தனிப்பட்டவர்கள் பூச்சு மண்ணாலும் மண் செங்கலாலும் கட்டிய வீடுகள் கூட 30, 40 வருடங்கள், ஏன் 100 வருடங்கள் ஆனாலும் கூட அழியாமல் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகின்றன. ஆனால் தற்போது கட்டக்கூடிய வீடுகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. யூனியன் ஆபீஸ் பலவற்றை 10, 20 வருஷங்களுக்கு முன்னால் கட்டினவைகளையும் தற்போது கட்டியவைகளையும் நான் பார்க்கிறேன். ஏனென்றால் நானும் 1958 லிருந்து பஞ்சாயத்துப் போர்டு தலைவராக இருக்கிறேன்.

அதனைச் செய்தால் இந்தக் குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல வாய்ப்பாக இருக்கும். கிராமத்தில் இருக்கக்கூடிய மக்கள் ஆணையரிடத்தில் போய் சொல்லக்கூடிய வாய்ப்பு நேரடியாக இருக்கிறது. ஆகவே அந்தப் பொறுப்பை எங்களிடமே ஒப்படைத்துவிட்டால் நல்லது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடித்து விடுங்கள். தாங்கள் 10 நிமிடம் கூடப் பேசலாம். ஆனால் உங்கள் கட்சியிலே இருந்து இரண்டு பேர்கள் பேச வேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ரா. பெரியசாமி : அடுத்தபடியாக, சேலம் மாவட்டத்தில் கொல்லிமலையில் மலைவாழ் மக்கள் நிறைய இருக்கிறார்கள். அங்கு யூனியன் அலுவலகம் உண்டு. அந்தக் கொல்லிமலையில் ஒரு பஞ்சாயத்துக்கு ரோடு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அங்கே பிரசித்தி பெற்ற அறப்பளீஸ்வரர் கோயில் இருக்கிறது. இந்தக்கோயிலுக்கு யாத்ரீகர்கள் லட்சக்கணக்கில் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே பஸ் வசதி கிடையாது.

அதேபோல செம்மேட்டிலிருந்து அரியாநல்வி என்ற கிராமம் வரைக்கும் ரோடு போடப்பட்டிருக்கிறது. அந்த ரோடு திருச்சி மாவட்டத்திலுள்ள மலையடிவாரத்தை சேர்வதற்கு மைல்

தொலைவுதான் உள்ளது. அந்த ரோட்டைச் செப்பனிட்டு இன்னும் கொஞ்சம் பெரிது படுத்தினால் மேலே உள்ள மலை வாழ் மக்கள் அங்குள்ள பழவர்க்கங்களை எடுத்துக் கொண்டு கீழே வருவதற்கும் கீழே உள்ள பொருள்களை வாங்கிச் செல்வதற்கும் வசதியாக இருக்கும். திருச்சி மாவட்டத்திற்கு அருகாமையில் அந்த மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் 400, 500 பேர்கள் அங்கே குடியிருக்கிறார்கள். அவர்கள் மேலே செல்வதற்கும் அந்த மலைக்குப் போவதற்கும் கோயிலுக்குப் போவதற்கும் வசதியாக இருக்கும் என்ற கருத்தினைச் சொல்லிக் கொள்கிறேன்.

அரிஜன இலாக்காவில் பல தவறுகள் இருக்கின்றன. ஹரிஜன நல இலாக்காவில் கட்டியிருந்த பள்ளிகள், பாலங்கள் சரியான முறையில் கட்டப்படவில்லை. திருச்சி மாவட்டத்தில் உள்ள எங்கள் கிராமத்திற்கு வருவதற்கு 40, 50 மைல் இருக்கிறது. அங்கு சூப்பர்வைஸ் பண்ண ஒரே ஒரு ஏ.ஈ. தான் இருக்கிறார். அதனால் சரியான முறையில் கண்காணிக்கப்படுவதில்லை. அதனால் காண்ட்ராக்ட் எடுத்தவர்கள் அவர்கள் இஷ்டம்போல் கட்டி முடித்துவிடுகிறார்கள். அந்தக் கட்டிடங்கள் அவ்வளவு உறுதியாக இல்லை. இந்தத் தவறுகள் எல்லாம் இதற்கு முன்னாலிருந்த அரசாங்கத்திலும் இருந்து வந்தன. தற்போதுள்ள அரசாங்கமாவது நல்ல முறையில் செய்யும் என்ற நம்பிக்கையில் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல எங்கள் ஊரிலே என்னுடைய தொகுதியிலே கடந்த மழையினால் ஏற்பட்ட பாதிப்பு மிகவும் அதிகமாகும். அந்த ஊரிலுள்ள அய்யாற்றில் அணை கட்டித்தர (கொல்லிமலை அணைக்கட்டு) வேண்டுமென்பது பொதுமக்களின் நீண்ட நாளைய கோரிக்கை. அந்தத் தொகுதியிலே இருந்துவந்த சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்கள் எல்லோரும் இந்த மன்றத்தில் குரல் எழுப்பிவிட்டார்கள். நானும் குரல் எழுப்பிப் பார்த்தேன். எடுபடவில்லை. அங்கே புயல் வெள்ளத்தால் அதிக பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கே அணை இல்லாத காரணத்தினால் விவசாய நிலங்கள் தற்போது இரண்டாயிரம் ஏக்கருக்கு மேல் பாழடைந்து விட்டன. அங்கு எந்த வேலையும் செய்வதில்லை.

அந்தப் பகுதியிலே பல ரோடுகள் வெள்ளம் பாய்ந்து மணல் மேடாக இருக்கின்றன. மணல் மேட்டை புல்டோசர் வைத்து அகற்ற வழி செய்ய வேண்டும். உப்பிலியபுர யூனியனைச் சார்ந்த பாலகிருஷ்ணம்பட்டி நகர பஞ்சாயத்துக்கும் என்னதான் சலுகை அளித்திருந்தாலும் மேலும் அந்தப் பஞ்சாயத்துக்கு ரூ. 50 ஆயிரம் கொடுத்தால் தான் வேலை செய்ய முடியும்.........(மணியடிக்கப்பட்டது.

(பிற்பகல் 12–50)

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் போக்குவரத்து வாகனங்களைத் தேசியமயமாக்கவேண்டும் என்ற கொள்கையை, தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கையை, உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி வரவேற்கிறது. அதற்குரிய காரணங்களைச் சொல்கிறபோது நாட்டுடைமையாக்கப்படுவதன் காரணமாக பொதுமக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் சிறப்பான நன்மைகள் ஏற்பட வழி வகைகள் அதனால் ஏற்படுகிறது. அதன் காரணமாகப் பொருளாதாரம் ஒரு சில தனியாரிடம் குவிவது தடுக்கப்படுகிறது. இந்த முறையில் நாட்டுடைமையாக்கப்படுவதை வரவேற்கிறோம்.

அதே நேரத்தில் தனியார்களுக்குக் கொடுக்கப்படுகிற பஸ்களின் எண்ணிக்கை மூன்று, மூன்று பஸ்கள் என்று இப்போது நிர்ணயித்திருக்கிறார்கள். அது அன்-எக்கனாமிக்கல் என்று சொல்ல விரும்புகிறேன். காரணம், ஒரு பஸ் நின்றுவிடுகிறபோது அதற்கு மாறுதல் செய்கிற முறையில் குறைந்த பட்சம் ஒரு ஐந்து பஸ்களாவது ஒரு தனிப்பட்ட ஆப்பரேட்டரிடம் கொடுக்கப்படுமானால்தான் they can run on economical basis என்ற முறையிலும், தனிப்பட்டவர்கள் நஷ்டமடையாத வகையிலும் அந்த எண்ணிக்கையை ஐந்து பஸ்கள் என்று நிர்ணயம் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

குறிப்பாக பஸ் பெர்மிட்கள் வழங்குவதில் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதில், மோட்டார் வெகிக்கிள்ஸ் ஆக்டில் சில குறிப்புகள் தந்திருக்கிறார்கள். மார்க்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். அந்த மார்க் அடிப்படையில் வொர்க்ஷாப் பெஸிலிட்டீஸ் இருக்கிறதா அல்லது மற்ற பெஸிலிட்டீஸ் இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். அதற்கு மார்க் போடுகிறார்கள். மார்க்குகளை வைத்துத்தான் பஸ் ரூட் தருவது என்ற முறையில் செயல்படுகிறார்கள். ஏற்கனவே அந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறவர்களால்தான் அந்த பஸ் ரூட்களைப் பெற வாய்ப்பிருக்கிறது. ஆகவே ஒரு சர்வே நாம் எடுக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களில் முன்னேற்றத்திற்காக, பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காக, பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடுவது என்று this Government has taken a pledge.

நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மூன்று வகை மக்களுக்காக எவ்வளவு பஸ் ரூட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். எவ்வளவு மனுக்கள் வந்திருக்கின்றன, அந்த மனுக்கள் ஏன் எடுத்துக் கொள்ளப்படவில்லை, ஏன் அவர்களுக்குக் கொடுக்கவில்லை என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த பஸ் ரூட்கள் வழங்குகிறபோது அவர்களுக்கு முன் உரிமை, இந்த மூன்று

வகைப்பட்ட மக்களுக்கும் முன் உரிமை தருவதன் மூலம் இந்த டௌண்ட்ராடன் என்று சொல்லப்படுகிறவர்களின் முன்னேற்றத்திற்கு வாய்ப்பு வசதி செய்து கொடுத்தவர்களாவோம். ஆகவே, இவர்களுக்கு பஸ் ரூட் கொடுக்கும்போது முன் உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் ஒரு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே பஸ் ரூட்கள் பலயிடங்களில் திறக்கிறார்கள். கலெக்டர் தன் விருப்பப்படி, பலயிடங்களில், தான் நினைத்தயிடங்களில் பஸ் ரூட்கள் திறக்கிறபோது அந்த மாவட்டத்திலுள்ள எம்.எல்.ஏ.யைக் கலந்துகொண்டு அன்சர்வ்ட் ஏரியாஸ் எவை எவை இருக்கின்றன என்று பார்த்து அவற்றின் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில் பஸ் ரூட்கள் தருவதற்கு முன் உரிமை தருகிற வகையில் நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காக ஒரு பஸ் ரூட் ஓப்பன் செய்கிறபோது அந்த மாவட்டத்தில் உள்ளவர்களைக் கலந்து கொள்ள வேண்டும். கலந்து செயலாக்க வேண்டும்.

அதே நேரத்தில் பஸ் ரூட்கள் தருகிறபோது family must be taken as a unit.

ஒரு குடும்பத்தில் பல பேர்களுக்குப் பஸ் ரூட்கள் தராமல் அந்த ஒரு குடும்பத்திற்கு என்று மட்டும் பஸ் ரூட்கள் தரப்பட வேண்டும். அது இல்லாத அளவில் ஒரே இடத்தில் குவித்து வைத்துக்கொள்கின்ற தன்மை இல்லாத அளவில் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

மற்றும், ஆக்ஸிடென்ட் ட்ரிபூனல்' என்று வைக்கிறார்கள். ரயில்வேயை எடுத்துக் கொண்டால், ரயில்வே ஆக்ஸிடென்ட்டில் ஒருவர் இறந்துவிடுவாரேயானால் அரசாங்கம் 50 ஆயிரம் ரூபாய் மேக்ஸிமம் காம்பன்ஸேஷனைக் கொடுப்பதற்கு தகுந்த வகையில் வழிவகை செய்திருக்கிறார்கள். நம்முடைய சட்டத்தில் இன்ஷூரன்ஸ் கம்பெனி மூலம் 5,000 ரூபாய் கொடுப்பதற்கு லிமிட் என்று வைத்திருக்கிறோம். வேறு ஏதாவது தீர்ப்பு கிடைத்தாலும் கூட, அதற்கான தொகையை தனியார் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கவேண்டுமென்றால் வசூலிக்க முடியாது என்கின்ற சூழ்நிலைதான் ஏற்படுகிறது. ஆகவே ரயில்வே டிப்பார்ட்மென்டில் இருப்பது போல் 50 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று. இல்லாவிட்டாலும், குறைந்தபட்சமாக, 25 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு என்ற அளவில்.. Minim m compensation mu t be fixed under the Act. நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது சம்பந்தமான தீர்ப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் மூலம் நிறைவேற்ற வேண்டும் என்றிருக்கிறது. இதில் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒரு தீர்ப்பு என்று வந்தவுடன் அதை அமல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்குச் சொந்தமான பஸ்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்கிற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும், நெடுஞ்சாலைகளைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் குறிப்பாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விழைகிறேன். இந்தத் துறையில் இன்ஜினியர்கள் பட்டதாரிகள் இருக்கிறார்கள். டிப்ளோமா பட்டதாரிகளும் இருக்கிறார்கள். டிப்ளோமா பட்டதாரிகள் யூனியன் இன்சினியர்களாக ஆயிரம் பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். அட்மினிஸ்ட்ரேடிவ் ரிஃபார்ம்ஸ் கமிட்டியினுடைய ஒரு ரெக்கமன்டேஷன் என்னவென்றால், 2:1 என்ற முறையில் அதாவது இரண்டு பி.இ. பட்டதாரிகள் என்று இருந்தால் ஒரு டிப்பளாமா பட்டதாரி இருக்க வேண்டும் என்ற அளவில் உத்தியோக உயர்வை அனுசரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அட்மினிஸ்ட்ரேடிவ் ரீஃபார்ம்ஸ் கமிட்டியினுடைய இந்தப் பரிந்துரையை ஒரு கடமையாக ஏற்றுக் கொண்டு இதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது நிலைமை என்னவென்றால் ஸ்டாக்னேஷன் பொஸிஷன் இருந்து கொண்டிருக்கிறது. நேற்றுகூட யூனியன் இன்சினியர்களிடத்தில் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் சொன்னார்கள், 22 ஆண்டுக் காலமாக யூனியன் இன்சினியராகவே இருந்து கொண்டிருக்கிறோம், ஆனால் ஐந்து வருடங்களுக்கு முன்னால் வந்த ஒரு பி.இ. பட்டதாரி, எ.இ. என்றோ, ஈ.ஈ. என்றோ பிரமோஷன் வந்து விடுகிறது. எங்களிடையில் இவ்வளவு ஸ்டாக்னேஷன் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். இந்த ஸ்டாக்னேஷனைத் தவிர்க்க 2:1 முறையை உடனடியாக அமலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சார்பாக என்னிடம் கொடுக்கப்பட்ட அவர்களுடைய கோரிக்கைகளை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனுவைக் கொடுத்தார்..)

மற்றும் நான் கேட்டுக்கொண்டது போல் பஸ் ரூட்டுகள் வழங்க வகை செய்யவேண்டும் என்று என்னுடைய கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு.எம்.ஏ.லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, செயலின் வேகத்திற்கும், சிந்தனையின் விவேகத்திற்கும் சொந்தக்காரராக இருக்கின்ற ஒரு நல்ல இளைஞரிடத்தில் இந்த இலாக்கா ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ..(ஆளும்கட்சி தரப்பில் கரவொலி) அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். இந்தத்துறையை பொறுத்த வரையில் அதிருஷ்டம் செய்த துறை என்று தான் சொல்லுவேன். இதற்கு முந்தி இருந்த அமைச்சர் கூட இந்தத் துறையில் செம்மையாகச் செயல்பட்டு, இதில் ஆக்கத்தையும் ஊக்கததையும் வலிவையும் பொலிவையும் அளித்திருக்கிறார்கள் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறுவது எனது கடமை என்று எண்ணுகிறேன்.

நாட்டுடமை என்ற தத்துவத்தை நான் எதிர்ப்பவன் அல்ல. ஏற்றுக் கொள்பவன் தான். அதே நேரத்தில் நாம் மேற்கொள்கின்ற காரியங்கள் நாட்டிலிலுள்ள ஒட்டுமொத்தமான நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய வகையில், அதைப் பாதுகாக்கின்ற முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதை அரசு கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். maximisation of social benefits. என்று சொல்லுகிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் திரு.கே. பண்ணைசேதுராம் தலைமை)

ஸோஷியல் பெனிபிட்ஸ் என்று வரும்போது அது மாக்ஸிமைஸ் செய்யப்பட வேண்டும். அதிகமான அளவில் சமூதாயத்திற்கு நன்மையைக் கொடுப்பதாக இருந்தால் அதைச் செய்யவேண்டுமே தவிர அரசியல் காரணங்களுக்காக் அரசியல் சூழ்நிலைகளுக்கு அடக்கமாகிவிட வேண்டும் என்கிற நோக்கத்தோடு சில முடிவுகளை எடுப்பது தேசத்திற்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவதோடு ஒரு சிலருக்கு நன்மைகளைச் செய்வது சிலருக்கு சாதகமாகவும் அதே முடிவுகள் பலருக்குப் பாதகமாகவும் அமையக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

(பிற்பகல் 1.00)

இந்த நேரத்தில் நாட்டு உடமையாக்கப்பட்ட வழித் தடங்களை நாம் பார்க்கிறோம். பல வழித் தடங்களுக்கான திட்டங்களைப் போடவேண்டுமென்று அரசு கருதுகிறது. அதற்கு என்ன காரணம் என்பதை இந்த அரசு ஆராய்ந்து முடிவு செய்கிறார்கள். ஆனால் இந்தத் துறை அப்படி முடிவு செய்யும்போது, சில வழித் தடங்கள் நோடிபிகேஷன் செய்துவிட்ட பிறகு, அந்த வழித் தடங்களில் பஸ்கள் ஓடுவதில்லை. அப்படி பஸ்கள் ஓடாததற்குக் காரணம், அன்-எகனமிக் ரூட் என்று சொல்லப்படுகிறது.

அப்படிச் சொல்லும்போது, பல மாதங்களுக்கு, பல வருஷங்களுக்கு அந்த ரூட்டில் பஸ்கள் ஓடுவதில்லை, அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அன்-எகனமிக் ரூட் என்று சொல்கிறார்கள். அதே சமயத்தில் இதுவரையிலே அங்கே தனியார்களுக்கும் அந்த பஸ் ரூட்டுகள் கொடுக்கப்படுவதில்லை. அரசுத் துறை அங்கே பஸ் விடவில்லை என்று சொல்லும்போது, அதனால் அங்கே பாதிக்கப்படுகின்றவர்கள் யார்? பொதுமக்கள்.

நம்முடைய நாட்டிலே ரத்த நாளங்களாக இந்தப் போக்குவரத்துத் துறை இருக்கிறது. ஓரிடத்திலே இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லவேண்டுமென்றால் இந்தப் போக்குவரத்துத் துறை அவசியமாக இருக்கிறது. எப்படி ரெட் பிளட் கார்ப்பசெல்ஸ் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு சத்தையும்,

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 20

உணவையும் எடுத்துச் செல்கிறதோ அதைடபோல் இந்தப் போக்குவரத்துத் துறை இந்த நாட்டு மக்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்கிறது. இதை இந்த அரசு நன்றாக தன் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எந்தெந்த இடங்கள் அன்-எகனாமிக் என்று சொல்கிறார்களோ அந்த இடங்களை அல்லது எந்தெந்த இடங்கள் உங்களுக்கு நிதிப் பற்றாக்குறையினால் செம்மையாகச் செயல்படுத்த முடியவில்லையோ அந்த இடங்களை, அவைகள் எவை எவைகள் என்பதை முடிவெடுத்து, அந்த பஸ் ரூட்டுகளை தனியார் இடத்திலே கொடுத்தால் நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படும். அதனால் அரசாங்கத்திற்கும் வரி கிடைக்கும், பணம் கிடைக்கும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் அதனால் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட வழி ஏற்படும்.

இப்படி நடைமுறையில் செயல்படுத்த முடியாமல் இருப்பதை ரிசர்வ் செய்கிறோம் என்று வைத்துக் கொள்வதால், நாட்டிலே உள்ள மக்களுக்கு பெரிய சோதனையாகவும் வேதனையாகவும் அது இருக்கிறது. குறிப்பாக என்போன்றவர்கள் வசிக்கக்கூடிய பகுதிகள், காடுகளிலே மிகவும் தூரப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்கள் பஸ் வசதி இல்லாமல் இன்னும் 10, 15 மைல்கள் நடந்து போகக் கூடிய ஒரு பெரிய வேதனைக்குரிய போக்கு, உண்மையிலேயே இருக்கின்றது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, பஸ் இல்லாத இடங்களை உடனடியாகத் தனியார்களுக்கு உரிமம் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, ஒட்டுமொத்தமாக தேசீய மயமாக்குவதும்கூட இந்த அரசுக்கு ஆபத்தைத்தான் விளைவிக்கும். இதையும் அரசு கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் ஒரே நிர்வாகத்தின்கீழ் வைத்துக் கொள்ளும்போது, ஏதாவது ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு ஒரு வேலைநிறுத்தம் என்று தொழிலாளர்கள் சொல்கிறபோது, இந்த நாடே ஸ்தம்பித்து விடக்கூடும். எனவே சில இடங்களைத் தனியார்கள் இடத்திலே கொடுங்கள். அது நாட்டுக்கு நல்லதும்கூட என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவு படுத்த விரும்புகிறேன்.

தனியார்கள் எவ்வளவு செம்மையாக நடத்துகிறார்கள் இந்த பஸ் போக்குவரத்துத் துறையை என்பதைப் பார்க்க வேண்டும். பொதுத்துறை பஸ்கள் சரியாக நடைபெறவில்லை என்பதை நான் பகிரங்கமாகவே சொல்வேன். யார் என்ன சொன்னாலும், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. பொதுத் துறை பஸ்கள் நஷ்டத்திலே ஓடுகின்றன; அவைகள் செம்மையாக நடைபெறுவதில்லை. அதை ஓட்டுகின்றவர்களிடத்திலும் ஒழுங்கும் அதிகமாக இல்லை. தனியார் துறையினர் ஒழுங்காக நடத்துகின்றனர். அப்படி ஒழுங்காக நடத்துவதோடு, நல்ல கலெக்ஷனும் பெறுகிறார்கள். அவர்களிடம் ஒரு பஸ் நீண்ட நாட்களுக்கு வேலை செய்கின்ற நிலைமையையும் பார்க்கிறோம். அதிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கும் நல்ல ஊதியம் கிடைக்கிறது. நல்ல முறையிலே நடக்கிறது. மக்களுக்கும் அதனால் நல்ல பலன் கிடைக்கின்றது. ஆகவே, இதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது இந்த நேரத்திலே என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

1978 மார்ச் 20] [திரு. எம். ஏ. லத்தீப்]

இப்போது தனியார் துறையிலே சுமார் 4,800 பேருந்துகளை சுமார் 1,900 பஸ் அதிபர்கள் பல சிரமங்களுக்கிடையே நடத்தி வருகிறார்கள். இப்படிச் சிரமங்கள் இருந்தாலும், அரசு ஒரு உரிமையாளர் அதிகபட்சமாக எத்தனை பஸ்களை வைத்துக் கொள்ளலாம் என்பதை அறிவிக்க வேண்டும். அப்படி ஒரு பஸ் முதலாளி உரிமம் வைத்துக் கொள்ளுவதிலே, எத்தனை பஸ்கள் வைத்துக் கொண்டால் அது ஆப்டிமம் லெவலாக இருக்கும். அவருக்கு அது எகனாமிக்காக இருக்கும் என்பதையும் அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, தனியார் துறையிலே அதிகப்படியான உரிமங்கள், பர்மிட்ஸ் வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு அரசு ஒரு உத்தரவு போட்டு, அதை உடனடியாக அமுல்படுத்துவது நல்லது என்பதை நான் இந்த நேரத்திலே வற்புறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி, அப்படி நிர்ணயம் செய்கிறபோது அதிகபட்சமான பேருந்துகளை வைத்திருக்கும் உரிமையாளர்கள், அவைகளைத் தங்களுடைய பங்குதாரர்களுக்கோ அல்லது குடும்பத்திலே உள்ளவர்களுக்கோ பிரித்துக் கொள்ளவும் அனுமதி வழங்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பேருந்துகளுக்கு நிர்ணயித்துள்ள வரி விகிதமானது தாங்க முடியாத அளவுக்கு தமிழ் நாட்டிலே இருக்கிறது. தென்னக மாநிலங்களிலே எந்த மாநிலங்களிலும் இல்லாத அளவுக்கு வரியைச் சுமத்தியிருக்கிறார்கள். இப்படிச் சொல்வதால், யாரும் இந்தத் துறையை வேண்டாம் என்று சொல்வதாகக் கருதக் கூடாது. ஆகவே, தயவுசெய்து இந்த அரசு அவர்களைப் பரிவுடன் பார்த்து, அவர்கள் இந்த நாட்டுக்குச் சேவை செய்கிறார்கள் என்ற அடிப்படையிலே அவர்களுக்குச் சலுகைகளை கொடுக்க வேண்டுமென்று நான் இந் கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், கேரளம் போன்ற மற்ற மாநிலங்களை எல்லாம் பார்க்கும்போது தமிழ்நாட்டில் 200 சதவிகிதம் வரியை அவர்கள் மீது போடுவது அவ்வளவு நல்லதல்ல என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தனியார் துறையையும் அரசு போக்குவரத்துக்

கழகங்களின் நடைமுறையையும் சமன் முறையில் அணுகவேண்டும். அவர்களுக்கும் இவர்களுக்குமிடையே டிஸ்கிரிமினேஷன் காட்டப்படக் கூடாது. பொதுத் துறையில் இருப்பவர்கள் ஒரு தவறு செய்தால் அப்படியே விட்டுவிட வேண்டும். தனியார் துறையில் ஒரு பஸ், இரண்டு பஸ்கள் வைத்திருப்பவர்கள் எப்போதாவது ஒரு தவறு செய்து விட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது சரியல்ல. பேடன்ட் டிஸ்க்ரிமினேஷன் என்று சொல்லக்கூடிய முறையில் இருக்கக் கூடாது. சட்டம் என்றால் எல்லோருக்கும் ஒரே சட்டந்தான் என்ற முறையில் நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாலங்களைப் பற்றி ஒரு வார்த்தை. பல்லாண்டுகளாக நான் கூறி வருகிறேன். ஆம்பூர் நகரத்தையும் அல்லது கிழக்குப் பகுதியையும் மேற்குப் பகுதியில் இருக்கிற பேரணாம்பட்டு, குடியாத்தம், காட்பாடி, சித்தூர் ஆகிய பகுதிகளோடு இணைக்கக் கூடிய ஒரு பாலம் வேண்டும். ஆம்பூர் நகராட்சியை ஒட்டி குடியாத்தத்திற்குப் போகிற வழியில் பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்ற கோரிக்கையையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆம்பூரிலிருந்து மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதியான நாயக்கன் ஏரிக்குச் செல்ல வேண்டுமென்றால் 15 மைல் செங்குத்தான மலையில் ஏறித்தான் செல்ல வேண்டும், மறுபடியும் இறங்கி வரவேண்டும். இந்த நிலைமையை நான் எப்போதாவது அனுபவிக்கிறேன் : அவர்கள் பல்லாண்டுகளாக அனுபவிக்கிறார்கள். அங்கு சாலை வேண்டுமென்ற குறிப்பு அரசாங்கத்தில் இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆலங்காயம்–போளூர்–சி.ஆர்.எப். பண்ட் — 75 லட்சம் ரூபாய் இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டத்திலே மேற்கொள்ளப்படும் என்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வருவதால் அவர்கள் கால்கோல் விழாவை நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாளையாப்பட்டி–ஜாப்ராத் பாலத்தையும் கட்டித் தர ஏற்பாடு செய்ய வேண்டும். கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்கள் பெயரை அதற்கு வைக்க வேண்டுமென்று இரண்டாண்டுகளுக்கு முன்பே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அது சாத்தியமாயிருக்குமானால், மறைந்த பெரியவருடைய பெயரை அந்தப் பகுதி மக்களின் விருப்பத்திற்கேற்ப வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளைக்கோட்டைக்கும் ஆம்பூருக்கும் குறுக்கே காட்டுக் கொல்லை வழியாக சாலை அமைத்தால் 17 மைல் மிச்சமாகிறது. அதனால் அந்தப் பகுதி மக்கள் நேரடியாக ஆம்பூருக்கு

ருக்கு வர சவுகரியமாக இருக்கும். அதையும் சாத்தியம் இருந்தால் செய்து தரவேண்டுமென்று கேட்டு இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. செல்வராஜ் : பேரவைத் தலைவா அவர்களே, அவையின் முன்பு இருக்கிற நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, சாலைகள், பாலங்கள், கப்பல் போக்குவரத்து, மூலதனச் செலவு போன்ற மானியங்களின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1948-ல் தேசவுடைமையாக்கப்பட்ட திட்டம் துவங்கப்பட்டு 1967-ல் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு விரிவுபடுத்தப்பட்டு மீண்டும் 1971-ல் 50 மைலுக்கு மேற்பட்ட பேருந்துகளைத் தேசியமயமாக்க வேண்டுமென்று 1967-ம் ஆண்டைத் தொடர்ந்து போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள், தொடர்ந்து முதலமைச்சராக இருந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றினார்கள். அன்றைக்கு மாவட்ட வாரியாக பேருந்துகளைக் கையகப்படுத்த வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்து சட்டசபையில் நிறைவேற்றினார்கள். ஆனால் பேருந்து உரிமையாளர்கள் அதன்மீது உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, அங்கு அரசாங்கத்திற்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்பட்டு இன்றையதினம் அது புல் உயர்நீதி மன்றத்தில் இருந்து வருகிறது. நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் அந்த வழக்கின்மீது இந்த அரசு பொறுப்பேற்று இன்றைக்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், அதைத் துரிதப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரை தேசிய உடைமைத் திட்டத்தில் இந்த அரசாங்கம் கொஞ்சம் மெதுவாகச் செல்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. 1976ல் அவசர கால நிலையின்போது அன்றையதினம் இருந்த ஆட்சியாளர்கள் சி.ஆர்.பட்டாபிராமன் குழுவை அமைத்தார்கள்.

(பிற்பகல் 1-10)

அந்தக் குழு அறிக்கை தாக்கல் செய்து ஏறக்குறைய ஆறு, ஏழு மாதங்களுக்கு மேல் ஆகிறது. அந்தக் குழுவினர் என்ன தெரிவித்திருக்கிறார்கள், என்ன ரிஃபார்ம்ஸ் செய்திருக்கிறார்கள் என்ற நிலைமைகளையெல்லாம் இந்த அவையிலே குறிப்புகளாக வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வைப்பதற்குக் காலதாமதம் ஆகுமானால் நம்முடைய அமைச்சரவர்கள் அதிலுள்ள சாராம்சத்தைச் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

(திரு. மு. செல்வராஜ்) [1978 மார்ச் 20

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் மிகவும் பரவலாகவும், தெளிவாகவும் பேசியிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக ஒருசில உறுப்பினர்கள் தவிர மற்றவர்களெல்லாம் நாட்டுடமைத் திட்டத்தை ஆதரித்தாலும் அதிலுள்ள குறைகளை மிகவும் கடுமையாக விமரிசனம் செய்திருக்கிறார்கள். எனக்கு முன் பேசிய திரு. லத்தீப் அவர்களும் இந்தத் திட்டமே தேவையில்லை என்று அவர்களுடைய கட்சிக் கொள்கையைச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். தேசிய மயமாக்கப்பட்ட திட்டம் தேவையில்லை என்று சொன்னார்கள் என்று கருதுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, தேசியமயமாக்கப் படுவதை முஸ்லிம் லீக் ஏற்றுக்கொள்ளவில்லை என்று நான் சொல்லவில்லை. அந்தக் கொள்கையை நிறைவேற்றுகின்றபொழுது ஒட்டுமொத்தமாக சமுதாயத்திற்குக் கிடைக்க வேண்டிய பயன் எந்த வகையில் கிடைக்க வேண்டுமோ அந்த வகையில் கிடைக்கின்ற முறையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதானே தவிர தேசியமயமாக்கக்கூடாது என்று முஸ்லீம் லீக் விரும்பவில்லை. எனவே, முஸ்லீம் லீக் தேசியமயமாக்கப்படுவதை எதிர்க்கிறது என்ற கருத்தைத் தயவுசெய்து அவர்கள் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. செல்வராஜ் : அமைச்சரவர்கள் கொடுத்துள்ள குறிப்பில் 4,988 பேருந்துகள் பொதுத்துறையிடம் உள்ளது என்று பார்க்கிறோம். நேரம் குறைவாக இருப்பதால் கொஞ்சம் வேகமாகச் சொல்ல விரும்புகிறேன்.

ஏறத்தாழ 38,500 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். முதலில் அரசாங்கத் துறையில் இருந்ததை கழகங்களாக மாற்றப்பட்டதன் நோக்கம், இதன் மூலம் வங்கியில் பணம் பெறுவது, அதைக் கொண்டு பொதுமக்களுக்குச் சீரிய சேவை செய்வது, தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதி செய்வது, பொருளாதாரத் துறையிலே முன்னேறுவது என்ற முறையிலே கழகங்கள் உருவாக்கப்பட்டன. அன்றையதினம் இந்தத் துறை அமைச்சராக இருந்த திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு இது தெரியும் என்று கருதுகிறேன். எனவே, இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு, இன்றையதினம், நான்கைந்தாண்டுகளுக்குப் பிறகு இதை நல்லமுறையில் செயல்படுத்த இன்றைக்கு அரசாங்கம் முன்வர வேண்டும். எந்த நோக்கத்திற்காக இவைகள் உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதாயம் இல்லாத வழித்தடங்களில் பேருந்துகள் விடுகிறோம் என்றால், நம்முடைய நோக்கம் சர்வீஸ் மோட்டிவ் என்று இருக்க வேண்டுமே தவிர அதில் ஆதாயத்தைப் பார்க்கக் கூடாது. ஆதாயம் இல்லாவிட்டாலும் அதில் நஷ்டமாவது இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நஷ்டம் எப்படி வருகிறது என்பதற்குப் பல ஆராய்ச்சிகளைச் செய்தால், நேரம் இல்லாவிட்டாலும் கூட, குறுகிய காலத்தில் சொல்ல விரும்புகிறேன்.

1978 மார்ச் 20] [திரு. மு. செல்வராஜ்]

பொதுவாக ஒரு கழகம் என்றால் அதிலே Branch Distrsct Manager, Commercial Manager, Technical Commercial Manager, Divisional Superintendent, General Manager' Managing Director என்று இருக்கிறார்கள். ஏறத்தாழ மாதத்திற்கு இவர்களுக்கு 15,000 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி ஒவ்வொரு கழகத்திலேயும் இருக்கிறது. இந்தக் குறையை நான் மட்டும் சொல்லவில்லை. இன்றையதினம் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. இராகவானந்தம் அவர்கள், ஏற்கனவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கத் தலைவராக இருந்தபொழுது இந்தக் கருத்தை வெளியிட்டு, இவ்வளவு அதிகாரிகள் தேவையா என்ற கருத்திலெல்லாம் அன்றையதினம் பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும். இதற்கெல்லாம் ஒரு கமிட்டி அமைத்துப் பரிகாரம் காண வேண்டும். இன்றைய தினம் நம்முடைய திரு. ஆறுமுகம் அவர்களிடம் 100 பேருந்துகளைக் கொடுத்தால் நிச்சயமாக இலாபத்திற்குக் கொண்டு வருவார்கள்.

தனியார் நல்லமுறையில் நடத்துகிறார்கள் என்று உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கூடச் சொன்னார்கள். தனியார்கள் பி. ஈ. படித்தவர்கள் அல்ல. அந்தத் தொழிலில் போதுமான அனுபவம் இல்லை என்றாலும் இன்றைக்கு அவர்கள் நடத்துகின்ற முறையையும், நாம் நடத்துகின்ற முறையையும் பார்த்தால் பொதுமக்கள் மத்தியில் நாட்டுடைமையானால் வென்றுமென்றே நஷ்டத்தில் ஓட்டுகிறார்கள் என்ற தவறான எண்ணம் உருவாகும் நிலையிருக்கிறது. அது மட்டுமல்ல, அதில் உள்ள அதிகாரிகளெல்லாம் அந்தக் கொள்கையில் பற்றுடையவர்களா என்று பார்க்க வேண்டும்.

இதே மன்றத்தில், 1960 ஆம் வருஷம் என்று கருதுகிறேன். மதிப்பிற்குரிய பக்தவத்சலம் அவர்கள் இருந்தார்கள். திரு. வெங்கட்ராமன் அவர்கள் அன்றைக்குப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள் பொதுவாக அந்தக் கொள்கையில் நாட்டம் உடையவர்களை அதில் கொண்டு வரவேண்டும். போர்டு மீட்டிங் என்றால் ஃபைவ் ஸ்டார் ஹோட்டலிலே தங்குகிறார்கள். அங்கே ஒரு சாப்பாட்டிற்கே 30 ரூபாய், 40 ரூபாய் ஆகும். தாஜ் கோரமண்டல், சோழா போன்ற ஹோட்டல்களில் கூடுகிறார்கள். அது மட்டுமல்ல, அவர்கள் ஏதாவது லாட்ஜில் தங்கினால் 80 ரூபாய் கொடுக்கப்படுகிறது. நான் இந்த அவையிலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் எல்லாம் பணம் செலவு செய்துவிட்டு, மக்களிடம் வாக்குபெற்று வந்திருக்கிறோம். எங்களுக்கு படி ரூ. 35. அதுவே அதிகம் என்று சொல்லுகிறார்கள்.

[திரு. மு. செல்வராஜ்] [1978 மார்ச் 20

அமைச்சர்களுக்கு ரூ. 25 தான் படி. இங்கே கிடையாது. அவர்
கள் வெளியே சென்றால், படி ரூ. 25 கூட இருக்காது. ஆனால்,
அதிகாரிகளுக்கு ரூ. 85. இங்கிருக்கிற அதிகாரி பி.இ. படித்தவர்
கள். அதே பி.இ. படித்த அதிகாரி, சி.இ. ஆக இருக்கிறார்கள்.
அவருக்கு அந்தப் படி உண்டா என்றால் இல்லை. ஏன் இதில்
மாற்றம் செய்யக் கூடாது? இதையெல்லாம் அமைச்சரவர்கள்
கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் சென்னையிலும் சரி, மற்றும் பொது
மக்கள் மத்தியிலும் சரி, மிகப் பெரிய பிரச்னையாக இருப்பது,
பல்லவன் போக்குவரத்துக் கழகப் பிரச்னை. அந்தப் பிரச்னையை
ஏதோ முடித்திருந்தாலும் இன்றையதினம் அது பூதாகரமாக
இருக்கிறது. நாங்கள் சொல்வதாலே, தூண்டி விடுவதாகக்
கருதக் கூடாது. பொதுவாக, தொழிலாளர் மத்தியிலே இந்த
அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அணுகுமுறை சரியாக இல்லை
யென்று சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் போராட்டம் துவங்கியவுடன், அவர்கள் போராட்
டத்தைத் தடுத்து நிறுத்த, அரசு நடவடிக்கை எடுத்து, ஒரு
தொகையை அறிவித்து, செட்டில்மென்ட் போட்டார்கள்.
செட்டில்மென்ட் ஆன பிறகு இந்தத் துறையைச் சேர்ந்த
செயலாளர்—இன்றையதினம் அவர் இல்லாவிட்டாலும் கூட,—
ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார். ஃப்ரிஞ்ச் பெனிஃபிட்ஸ் பற்றி,
செருப்பு பற்றி பேசலாமா என்று கடிதம் அனுப்பியிருக்கிறார்.
இப்படியெல்லாம் நிலைமை உருவாக கடிதம் அனுப்பியிருக்
கிறார்கள். ஐக்கிய தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இதைச்
சாதாரணமாகக் கருதக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள்.
அவர்களது முக்கியமான, ஜீவாதாரமான கருத்து, சம்பளப்
பிரச்னை; கம்பெனிஸ் என்று கொண்டு வந்த பிறகு, இன்டஸ்ட்டி
ரியல் ஒர்க்சர்ஸ் என்ற நிலைமையிலே பேச வேண்டும், 245
கேட்டகரீஸ் என்ற முறையெல்லாம் பேசவேண்டியிருக்கிறது.
இப்படி பல்வேறு பிரச்னைகளை வைத்திருக்கிறார்கள். இப்பொழுது
கூடப் பேசினார்கள். இப்பொழுது கூட, அமைச்ச
ரவர்கள் தலையிட்டு, எம்.டி.யோடு பேச வேண்டுமென்று
கேட்டார்கள். எம்.டி. என்ன முடிவாயிற்று என்று அரசாங்கத்தை
கேட்டு, உங்களுக்குப் பதில் அளிக்கிறேன் என்று சொன்னார்கள்.
நீங்கள் பை பார்டைட் டிஸ்கஷனாக வைக்காமல், டிரிபார்டைட்
டாக வையுங்கள். இருப்பது குறுகிய நாட்கள். 15 நாட்கள்
தான். தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள், வாக்கெடுப்பு
நடத்தி, மெஜாரிட்டியினர் வேலை நிறுத்தத்திலே ஈடுபடுவதாகச்
சொல்கிறார்கள். இருப்பது குறைவான நாள். இதற்குள் முடிவு
வந்துவிடும் என்று நான் கருதவில்லை. முடிவெடுக்காத நிலையில்,
வேலை நிறுத்தம் ஏற்படாமல் தடுக்கின்ற பொறுப்பு அரசாங்
கத்திடம் இருக்கிறது. வேலை நிறுத்தத்தைத் தடுப்பதிலே நாம்

1978 மார்ச் 20] [திரு. மு. செல்வராஜ்]

மெத்தனப் போக்கிலே இருக்கிறோம் என்று தெரிவித்து, தன்
திறமையை அமைச்சரவர்கள் நன்கு பயன்படுத்தி, சுறுசுறுப்பாக
வேலை செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

பேருந்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு மருத்துவ
வசதி செய்து கொடுக்கப் போகிறோம் என்று அமைச்சரவர்கள்
சொன்னார்கள். எனக்கு வந்த தகவல், மருத்துவ மனைக்கு
வந்த தொழிலாளர்கள், இன்பேஷண்டாக வந்தால், முதலில்
அட்வான்ஸ் கட்ட வேண்டுமென்று மருத்துவ அதிகாரிகள் கேட்
கிறார்கள். இரண்டாவது, அவுட்-பேஷண்ட்ஸ் ஆக தொழிலாளர்
கள் சென்றால், எக்ஸ்-ரே எடுக்க வேண்டும், இ.சி.ஜி. எடுக்க
வேண்டும் என்றால், மருத்துவத் துறை அதிகாரிகளிடம், தாங்கள்
பி.டி.சி. தொழிலாளர்கள் என்று சொன்னால், அனுமதிக்கப்படாத
நிலைமை இருக்கிறது.

நான், கேள்விப்பட்ட முறையிலே, டெண்டல் ஆஸ்பத்திரியிலே
ஒரு தொழிலாளி, கண்டக்டரோ, டிரைவரோ, சென்ற
போது, அவரது பல்லைப் பிடுங்கி விட்டார்கள். பிறகு, அத்
தொழிலாளியை எங்கு வேலை செய்கிறார் என்று கேட்டதற்கு
இவர் பல்லவன் டிரான்ஸ்போர்ட் என்று சொன்னவுடன், உனக்கு
இங்கே அனுமதி கிடையாது, வெளியே போ என்று சொல்லி,
அத்தொழிலாளிக்கு வீங்கி, அவர் வெளியிலே போய் வேறிடத்தில்
மருத்துவம் பார்த்திருக்கிறார். அதற்கான ஆதாரங்கள் என்னி
டம் இருக்கின்றன. அதற்குச் சொல்கின்ற காரணங்கள்,
ஐ ஆஸ்பிட்டல், டெண்டல் ஆஸ்பிட்டல், அந்த லிஸ்டிலே வர
வில்லை என்று சொல்கிறார்கள். எனவே, அதற்கு நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பல்லவன் தொழிலாளர் என்பதால்,
பல்லைப் பிடுங்கி விட்டு விட்டார்களா.......... ....(சிரிப்பு).

திரு. மு. செல்வராஜ்: பூம்புகார் போக்குவரத்துக் கப்பல்
கழகம் பற்றி ஒன்றிரண்டு சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சர்
அவர்கள், 'அண்ணா, பெரியார்' போன்ற கப்பல்களை
விற்பனை செய்யப் போகிறோம் என்று பேசியிருப்பதாகப்
பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

(பிற்பகல் 1-20)

எனவே, அதைப்பற்றி எல்லாம் இங்கே அமைச்சர் அவர்கள்
விளக்கம் தரவேண்டும். கடலூர் துறைமுகம் 2½ கோடி ரூபாய்
செலவில் விரிவு படுத்தப்பட்டும் கூட, பல்வேறு திட்டங்களை
உருவாக்கியும் கூட கடந்த 2 ஆண்டுகளாக கப்பல் போக்கு
வரத்து அந்தத் துறைமுகத்தில் நடைபெறவில்லை. இதன் காரண
மாக 50 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்
படுகிறார்கள். இது சம்பந்தமாக அதிகாரிகள் தங்களுக்கு
அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தந்தை பெரியார் கார்ப்பரேஷனையும், பல்லவன் போக்குவரத்துக் கார்ப்பரேஷனையும் இணைத்துச் செயல்படுத்தினுல் லாபகரமாக ஓட்ட முடியும். அதிகாரிகளும் இரண்டையும் நேரடியாகப் பார்வையிட சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரம் இல்லாத காரணத்தினுல் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில கருத்துக்களை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்ல இருக்கிறேன். கடலூரில் இருந்து சிதம்பரம் செல்லும் வழியில் 17.2 சாலையில் திருச்சோபுரம், தோணித்துறையிலே ஆலப்பாக்கம் ரயில்வே கேட்டிலிருந்து தோணித்துறையில் பரவலாற்றின் மீது ஒரு பாலம் கட்டித்தர வேண்டும் என்று கோரிக்கை ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு அதைப் பொறுத்தவரையில் பிரதம இன்ஜினியரிடமிருந்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு விட்டது. அந்தப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து சிதம்பரம் கடலூர் சாலையில் தம்பிக்கு நல்லான்பேட்டை என்னும் இடத்தில் கடந்த இரண்டாண்டுக் காலமாக வேலையை முடிக்காமல் அந்த கன்ட்ராக்டர் எந்தவிதமான வேலையையும் செய்யாமல் இருக்கிறார். அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டு நான் அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், குறிப்பாக மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களும், சி. கோவிந்தராஜன் அவர்களும், லத்தீப் அவர்களும், மார்க்கபந்து அவர்களும் நாட்டுடமைக் கொள்கையைப்பற்றி அரசு எந்நிலையைக் கடைபிடிக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கோரினுர்கள். தமிழக அரசினைப் பொறுத்தவரைக்கும் நாட்டுடமையாக்கப்பட்ட 7 போக்குவரத்து கழகங்களின் மூலமாக, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னுல் இருந்த 48 சதவிகிதம் என்ற நிலையில் இருந்து இன்று உயர்ந்து 52 சதவிகிதம், அதாவது 5,071 பேருந்துகள் நாட்டுடமைக் கொள்கையின் அடிப்படையில் நாட்டுடமை ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மோட்டார் வாகனச் சட்டத்தில் உள்ள 4-வது பிரிவு 4 (எ) என்ற பகுதியின் கீழ் நாட்டுடைமையாக்கப்படும் திட்டம் நிதிநிலைமைகளுக்கு ஏற்ப விரிவு படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனுல் அதே நேரத்தில் தொழிலாளர் நலன் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் நாட்டுடமையாக்கப்படுகின்ற இந்த அடிப்படைக் கொள்கை தொழிலாளர்களுக்கு எந்த

அளவுக்கு நன்மை அளிக்க முடியுமோ அதே அளவுக்கு பொது மக்களுக்கும் நன்மை ஈட்டப்படுவதிலே இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரைக்கும் தொழிலாளர் நலனும், பொதுமக்கள் நலனும் இரு கண்கள் எனப் பாவித்து நடக்க வேண்டுமென்று இன்று நடைமுறைச் செயல்கள் இருந்து வருகின்றன என்பதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏழு போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரைக்கும்திரண்ட நட்டம் என்ற அடிப்படையிலே இன்று 12, 26, 25, 000 ரூபாய் நட்ட நிலையிலே இருந்து வருவதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனுல் பாண்டியன் போக்குவரத்துக் கழகமும், சேரன் போக்குவரத்துக் கழகமும் மட்டும் திரண்ட லாப நிலையிலே இருந்து வருகிறது. போக்குவரத்துக் கழகங்களிலே உள்ள 5071 பேருந்துகளையும் நட்ட நிலையிலே இருந்து மீட்டு லாப நிலையிலே ஓட்டுகின்றபோதுதான் தொழிலாளர்களுக்கு உகந்த நிலையிலே சிறப்பாகச் செய்து கொடுக்க முடியும் என்ற அளவிலே தான் இப்போது இருக்கிற 7 போக்குவரத்துக் கழகங்களும் இன்னும் நல்ல முறையில் சரிசெய்யப்பட்டு தொழிலாளர் நலனைக் காக்கும் வண்ணம், வருவாயை ஈட்டும் வண்ணம் செய்யப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத் : பொதுவாக ஜனங்களிடத்திலே இருக்கும் இம்பிரஷன் என்னவென்றால் இதே பஸ் பிரைவேட் ஹேன்ஸில் இருக்கிறபோது பிராபிடபிளாக ஓடிக் கொண்டு இருந்திருக்கிறது. அப்படியிருக்க, எப்படிச் சர்க்கார் கைக்கு வரும் போது லாஸாகப் போகிறது என்று அந்தக் குவச்டியன் இருக்கிறது அதைக் கொஞ்சம் கிளாரிபை பண்ணினுல் நல்லது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, நாட்டுடமையாக்கப்பட்ட பேருந்துகள் நஷ்ட நிலையில் இருந்து மீண்டும் லாப நிலைக்கு ஓடவேண்டுமானுல் கண்டிப்பாக அதற்குப் பலதரப்பட்ட தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் மிகச் சிறந்த அக்கறையோடு செயல்பட வேண்டிய நிலை உள்ளது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுமக்களைப் பொறுத்த வரையில் வண்டிகள் குறித்த காலத்தில் செல்ல வேண்டும் என்பதிலும், வழித்தடங்களில் நின்றுவிடாமல் செல்ல வேண்டும் என்பதிலும், சீரான முறையில் வண்டிகள் வழித்தடத்தில் ஓடவேண்டும் என்பதிலும் பொது மக்கள் கவனமாக இருக்கிருர்கள், அதைத்தான் எதிர்பார்க்கிருர்கள்.

ஆனால் நாட்டுடமையாக்கப்பட்ட பேருந்துகள் என்றவுடன் யாருக்கோ சொந்தமான வண்டியை ஓட்டுகிறோம் என்று பணியாளர்கள் எண்ணி நடந்துவிடுகிற காரணத்தால் பல போக்குவரத்துக் கழகங்கள் நஷ்ட நிலையில் ஓடிக் கொண்டு இருக்கின்றன.

ஆனால் தமிழகத்தில் இருக்கும் 7 போக்குவரத்துக் கழகங்களிலும் ஊக்க போனஸ் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு இருக்கிற காரணத்தால், படிப்படியாக அவைகள் நஷ்ட நிலையில் இருந்து மீண்டும் லாப நிலைக்கு வந்து கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், திரண்ட நஷ்டம் 12 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் நிலை காரணமாகப் போக்குவரத்துக் கழகங்கள், பொதுமக்கள் பலர், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், பல வழித்தடங்களில் புதிதாக பேருந்துகள் விடவேண்டுமென்று கோரிக்கை கொடுத்து இருந்தபோதிலும், நிதிநிலை காரணமாக புதிதாக வழித்தடங்களில் பேருந்துகளை விடவும், கூடுதல் பேருந்துகளை விடவும் சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவேதான், இருக்கின்ற பேருந்துகளை நல்ல முறையில் பராமரித்து, நஷ்ட நிலையில் இருந்து மீட்டு, பொதுமக்களுக்கு நற்பணியாற்றும் நோக்கத்தோடும், பணியாளர்களுக்கும் சிறந்த முறையில் செயலாற்ற நல்ல திட்டங்களை அமல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடும், அரசாங்கம் செயல்பட்டு வருகிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், நாட்டுடமையாக்கும் கொள்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் கூறியதுபோல், இதற்காக அமைக்கப்பட்ட சட்டம் உச்ச நீதி மன்றத்தில் இருக்கிற கார்ணத்தால் அந்த முடிவு வந்த பிறகுதான் துரித முறையில் நாட்டுடமை கொள்கை செயல்படுத்த இருக்கிறோம். ஆனால் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் உள்ள 4-வது பிரிவு, 4 (ஏ) பிரிவின் கீழ் இப்போதும் பேருந்துகள் நாட்டுடமையாக்கப்படுவது தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களும், கோவிந்தராசன் அவர்களும், விஜயராகவன் அவர்களும், அம்பிகாபதி அவர்களும், பெரியசாமி அவர்களும், மார்க்கபந்து அவர்களும், குறிப்பாக சிறு பேருந்து வைத்து இருக்கும் தனியார் குறைந்த பட்சம் எத்தனை பேருந்துகள் வைத்துக்கொள்ளலாம் என்று அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென்று சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் பேசுகிறபோது "எகனாமிக் ஆபரேஷன்" என்று சொல்கிறபோது நஷ்டநிலை இல்லாமல் தனியார் பேருந்துகள் ஓடவேண்டுமென்றால், குறைந்தது 5 பேருந்துகளாவது இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதைப் போலவே பல உறுப்பினர்களும் 5 பேருந்துகள் இருக்க வேண்டும்

என்று கூறினார்கள். தமிழக அரசைப்பொறுத்தவரையில், தனி
யார் துறையில் பேருந்துகள் எத்தனை வைத்து இருந்தால் லாப
கரமாக இருக்கும் என்பதைப் பரிசீலித்து கூடிய விரைவில் ஒரு
முடிவு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : இது சம்பந்தமாக தொடர்ச்சி
யாக போன பட்ஜெட் செஷனில் இருந்து கேட்டுக் கொண்டிருக்
கிற காரணத்தால், கூடிய விரைவில் என்று அமைச்சர் அவர்கள்
குறிப்பிட்டது எவ்வளவு நாள் என்று சொல்ல முடியுமா என்று
கேட்கவிரும்புகிறேன்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஏற்
கனவே முந்தைய ஆட்சியில் தனியார் ஒருவர் 10 பேருந்துகள்
வரை வைத்துக் கொள்ளலாம் என்று இருந்தபோதிலும் படிப்
படியாக பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதற்கு மோட்டார்
வாகனச் சட்டத்தின் விதி 4, 4ஏ அமுலில் இருந்து வருகிறது.
அதன் அடிப்படையில்தான் இப்போது இந்த நாட்டுடைமை
யாக்கும் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால்
சிறிய நிறுவனங்கள்— தனியார்கள் குறைந்தபட்சம் பேருந்துகளை
வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை
நெடுநாட்களாக இருந்து வருகிறது. அதில் பல பிரச்சனைகள்
அடங்கி இருப்பதால் அரசு தீர ஆலோசித்து செய்ய வேண்டி
இருப்பதால் 'என்று' என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாமல்
இருக்கிறது. ஆகவே, கூடிய விரைவில் முடிவு செய்யப்படும்
என்று சொன்னேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேதுராம்) :
மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு முடியும் வரை
அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே,
மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பயணப் பேருந்துகள்,
சுற்றுலா ஓமினி பஸ், சரக்கு பேருந்துகள் ஆகியவைகளை நெறிப்
படுத்தி, ஒழுங்குப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை மூலம்
தவறு செய்த மாநில போக்குவரத்து அதிகாரி, அலுவலக
கண்காணிப்பாளர், மோட்டார் வாகன ஆய்வாளர், முதுநிலை
எழுத்தர், இளநிலை எழுத்தர் ஆகிய 44 பேர் மீது ஒழுங்கு
நடவடிக்கை எடுத்து, தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

திறமை மிக்க அதிகாரிகளின் கடுமையான நடவடிக்கையின்
பயனாக மோட்டார் வாகன சட்ட விதிகளைச் சரியாகப் பயன்
படுத்தாமல் இருத்தல், சாலை போக்குவரத்து விதிகளை மீறுதல்
ஆகிய குற்றத்திற்காக 6,749 வாகனங்களின் உரிமங்கள் தற்
காலிகமாக ரத்து செய்யப்பட்டு, 127 உரிமங்கள் நிரந்தரமாக
ரத்து செய்யப்பட்டன, 1,998 வாகனங்களின் உரிமையாளர்
கள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள். மீதமுள்ளவர்களுக்கு அபராத
மாக ரூ. 7½ லட்சம் விதிக்கப்பட்டிருக்கிறது.

மோட்டார் வாகன வரி செலுத்துவதற்கு என்று அரசு ஒரு புதிய திட்டத்தை 'நான்-ட்ரான்ஸ்போர்ட் வெகிகிள்ஸுக்கு' அறிவித்திருக்கிறது. ஸ்கூட்டர், கார், ஜீப், மோட்டார் சைக்கிள், மோபெட் போன்ற சொந்த உபயோக வாகன உரிமையாளர்கள் மோட்டார் வாகன வரியினை பல போக்குவரத்து அலுவலகம், காவல் நிலையம் துணைக் கருவூலம் போன்ற இடங்களில் 3 மாதம், அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை அல்லது ஒரு வருடத்திற்கு ஒருமுறை செலுத்துவதில் உள்ள சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் வாகன வரியினை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவும் செலுத்துகிற முறையினை வருகின்ற ஏப்ரல், 1978-லிருந்து இந்த அரசு செயல்படுத்த உள்ளது.

சென்னை மாநகரத்தில் ஆர்.டி.ஓ. ஆபீஸ் ஒரே ஒரு இடத்தில் இருப்பதால் ட்ரான்ஸ்போர்ட், நான்-ட்ரான்ஸ்போர்ட் என்று சொல்லப்படுகிற வண்டிகள் அனைத்தும் அங்கே செல்வதில் சிரமம் இருப்பதால் மூன்று ஆர்.டி.ஓ. அலுவலகங்கள் தனித்தனியாக அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு ஆண்டு முழுவதும் எந்தவிதமான விபத்தும் இல்லாமல் ஓட்டுகின்ற நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்தை ஓட்டுகின்ற ஓட்டுநருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 வீதம் வெகுமதி அளிக்கப்படும்.

சாலை விதிமுறைகளை ஒழுங்காக புரிந்து அனுசரிப்பதும், விபத்துக்களைத் தடுக்கப் பெரிதும் உதவும் என்பதால் இனிமேல் புதிதாக வழங்கப்படும் ஓட்டுநர் உரிமம் பெற குறைந்தது எட்டாவது வகுப்பு வரை படித்துள்ளவர்களாக இருக்க வேண்டுமென்ற விதிமுறையை நடப்பாண்டிலிருந்து அரசு அமுல்படுத்த உள்ளது.

பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து பிரிவு சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்கும், மதுரையிலிருந்து பெங்களூருக்கும் "ஏர் கண்டிஷன்" செய்யப்பட்ட பகல் நேரப் பேருந்துகளை நடப்பாண்டிலிருந்து இயக்க இருக்கிறது.

கிராமப்புற மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அண்மையிலிருக்கிற நகரப் புறங்களோடு கிராமங்களை பேருந்து வசதியோடு இணைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 'மினி பஸ்'களை விட அரசு முடிவு செய்துள்ளது. அதோடு மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி, ஆற்காடு வட்டங்களிலும், நீலகிரி மாவட்டத்திலும், இராமேஸ்வரத்திலும் மினி பஸ் என்று சொல்லக் கூடிய சிறிய பேருந்துகளை விட்டதில் பொதுமக்கள் பெரிதும் பலனடைந்திருப்பதால் மற்ற மாவட்டங்களிலும் நடப்பாண்டில் இருந்து படிப்படியாக கிராமப்புற மக்கள் நலன் கருதி மினி பஸ்கள் விடப்படும்.

அடுத்து, வாடகைக் கார்களின் டிக்கி அல்லது மேல் பகுதியில் வைக்கப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் 30 காசு வீதம் வசூலிக்கப்படலாம் என்ற செயற் குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது.

சென்னை மாநகராட்சி எல்லைக்குள் 1978-79 ஆம் ஆண்டில் புதிதாக 10 டாக்ஸி ஸ்டாண்டுகள் டாக்ஸி சொந்தக்காரர்களின் வேண்டுகோளுக்கிணங்க அமைக்கப்படும்.

டாக்ஸிகள் நிறுத்தும் இடங்களில் தொலை பேசி, சிறுநீர் கழிப்பிடங்கள், குடிநீர் போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாநகராட்சியை அரசு கோரியுள்ளது.

சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு கைகொடுத்திட வேண்டுமென்ற எண்ணத்துடன் சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டு ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கு மட்டுமே ரிக்ஷா லைசென்ஸ் கொடுக்கப்பட வேண்டும் அல்லது புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் 'மெட்ராஸ் ஹாக்னி ஆக்ட்' என்ற சட்டம் விரைவில் இந்த அவையில் தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் ஆலோசனைப்படி சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள் கையில் வில்லைகள் கட்டிக் கொள்ள வேண்டிய கட்டாயமில்லை என்பதை நடப்பு ஆண்டில் இருந்து அமல்படுத்தப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள் அவர்களது சைக்கிள் ரிக்ஷாக்களை இன்ஜின் பொருத்தப்பட்ட மோட்டாரைஸ்டு சைக்கிள் ரிக்ஷாக்களாக மாற்றிக்கொள்ள முன்வருவார்களேயானால் -- 'மேன் சுட் நாட் புல் தி மேன்' என்ற கொள்கையின் அடிப்படையில் அவர்களுக்கு உரிமம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, சாலைகள், பாலங்கள் என்ற பிரிவிலே மாண்புமிகு உறுப்பினர்கள் 34 பேர்கள் 26 பாலங்களும், 14 சாலைகளும் அமைக்க வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். 'மாவட்ட இதர சாலைகள்' திட்டத்தின் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் 127 பேர்கள் 82 பாலங்களும், 59 சாலைகளும் உடனடியாக அமைக்க வேண்டுமென்று கோரி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலருடைய கோரிக்கை மிகவும் நியாயமான கோரிக்கையாக இருந்த போதிலும், நிதிநிலை குறுக்கீடாக இருக்கிற காரணத்தால் இவைகளை விரைந்து செயல்படுத்துவதில் சிரமங்கள் பல இருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழகத்தில் இருக்கிற ஏறத்தாழ 86 ஆயிரம் கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலைகளில் கிட்டத்தட்ட 38 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகளில் பேருந்துகள் விடப்படுகின்றன.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் இருக்கிற 53 ஆயிரத்துக்கு மேற்பட்ட கிலோ மீட்டர் சாலைகளிலே பேருந்துகள் செல்வதற்கான தரம் உடைய சாலைகள் 6,334 கிலோ மீட்டர் சாலைகள்தான் இருந்து வருகின்றன. மீதம் உள்ள 47,134 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளில் பேருந்துகள் செல்லத்தக்க வகையில் செப்பனிட வேண்டுமென்றால் அரசுக்கு பல கோடி ரூபாய் தேவையாக இருக்கின்ற காரணத்தால் பயணப் பேருந்துகள் அச் சாலைகளில் இன்னும் விடப்படாத நிலை உள்ளது

சாலைகள், பாலங்கள் பேருந்து செல்லக்கூடிய அளவில் அமைப்பது கிராமப்புறங்களை உரிய முறையில் முன்னேற்றுவதற்கு பேருதவியாக இருக்கும் என்று கருதி மூன்று கட்டங்களில் நிதி நிலைக் கேற்ப மேற்கொண்டு செயல்பட உள்ளது.

முதல் கட்டமாக ஏற்கனவே பேருந்துகள் ஓடிக் கொண்டு இருந்த சாலைகளின் பழுதடைந்த நிலையின் காரணமாக அந்தப் பேருந்துகள் நின்றுவிட்டிருக்கிற பகுதிகளில் பயணப் பேருந்துகளை மீண்டும் விடும் அளவுக்குச் செய்ய வேண்டுமென்ற அந்த நோக்கத்தில் அந்தத் திட்டம் செயல்பட இருக்கிறது. அந்த வகையில் பணியை மேற்கொள்வதற்கு 9 கோடி ரூபாய்க்கு மேல் நிதி தேவைப்படுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்த கட்டமாக ஏற்கனவே இருக்கிற சாலைகளில் சிறு சிறு குறைபாடுகளைக் களைவதின் மூலம் பேருந்துகள் செல்வதற்கு வழிவகை காண்பதை இரண்டாவது கட்டமாக மேற்கொள்ள அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இணைப்புச் சாலைகளை ஆங்காங்கே ஏற்படுத்துவதன் மூலம் கிராமப்புறங்களில் பேருந்துகள் செல்லுகின்ற வகையில் ஏற்படுத்த முடியும் என்ற நோக்கத்தில் அப்பணிகளையும் அரசு எடுத்துச் செயல்படுத்த இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசைப் பொறுத்த வரைக்கும் சாலைகள் மேம்பாடு செய்வதற்கு நிதிநிலை குறுக்கீடாக இருக்கின்ற காரணத்தால் மத்திய அரசை அணுகி தமிழக முதல்வரவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் டெல்லி சென்றிருந்தபோது நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலிலே சாலைப் பகுதியை மத்திய அரசின் 'Core

Sector' என்ற முக்கியத் திட்டத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென்றும் சாலைகள் அமைப்பதற்கு மாநில அரசுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு தரவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் சாலைகள், பாலங்கள் கட்டுவதிலே கான்ட்ராக்ட் முறை இருந்துவருவது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. தரமான சாலைகளை அமைப்பதற்கும், துரித காலத்திலே அமைப்பதற்கும் தடைகள் பல இம்முறையிலே இருப்பதன் காரணத்தால் அரசுப் பொறுப்பிலேயே இவ் வேலைகளைச் செய்வதற்கு 'கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் ஆஃப் தமிழ்நாடு' என்ற ஒரு நிறுவனம் அமைக்கப்பட உள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

அடுத்து, மத்திய அரசின் பங்கினைப் பெற்று வருகிற 1978–79ம் ஆண்டு மூன்று ரெயில்வே மேம்பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. சேலம்—உளுந்தூர் பேட்டை சாலையில் நெய்யாமுறிச்சி அருகில் ஒரு மேம்பாலமும், கடலூர்—சித்தூர் சாலையில் பனருட்டி அருகில் ஒரு மேம்பாலமும், சென்னை—கும்பகோணம் சுந்தரப் பெருமாள் கோவில் அருகில் ஒரு மேம்பாலமும் அமைக்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

அடுத்து, போக்குவரத்துத் துறை பற்றிய முக்கியமான சிலவற்றைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோவிந்தராஜன் அவர்களும், திரு செல்வராஜ் அவர்களும் தாங்கள் உரையாற்றுகிற நேரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் சென்ற ஆகஸ்ட் மாதம் நடந்த போராட்டத்திற்குப் பிறகு நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் 31–3–1978-க்குள் போக்குவரத்துத் தொழிலாளர்களின் குறைபாடுகள் எல்லாம் இருதரப்பு பேச்சு வார்த்தைகள் மூலம் நிவர்த்தி செய்யப்படவேண்டும் என்று ஒரு முடிவை ஏற்றபோதிலும் நிர்வாகமும் அரசாங்கமும் தாமதம் செய்த காரணத்தால் இன்று முடிவான நிலை ஏற்படவில்லை என்று கூறினார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உண்மை நிலையை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்லாண்டுகாலமாக பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் தார்மீகமாக சந்தித்துவந்த பல குறைபாடுகளை விரைந்து களைய வேண்டுமென்ற நோக்கோடு இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று செயல்பட்டு வருகிற நேரத்தில் சட்டப்படி

[திரு. சி. பொன்னையன்] [1978 மார்ச் 20

யான வேலைநிறுத்த நோட்டீஸ் கூட கொடுக்காத நிலையில் பல தொழிற் சங்கங்கள் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டன என்பதை நான் மீண்டும் இங்கு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். போராட்ட முடிவிற்குப் பிறகு போக்குவரத்துத் தொழிலாளர்களின் நலன் கருதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் மட்டுமின்றி அனைத்துப் போக்குவரத்துத் தொழிலாளர்களும் நலன் பெறவேண்டும் என்று நன்நோக்கோடு ரூ. 27 ஊதிய உயர்வு எல்லாப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் இந்த அரசு அறிவித்தது.

செப்டம்பர் 3-ம் தேதி அந்த உடன்பாடு ஏற்பட்டவுடனே அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட சங்கங்கள் இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு எந்தவித கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கொடுப்பதாக கூறிச் சென்றார்கள். சி.ஐ.டி.யூ. தவிர மற்ற யூனியன்கள் அனைத்தும் கோரிக்கைகளைப் புதிதாக வகைப்படுத்தி விரைவில் தருவதாகச் சொல்லிச் சென்றார்கள். கோரிக்கை ஏதும் வேலை நிறுத்தத்தின்போது கொடுக்காதிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சங்கமும், தேசீய காங்கிரஸைச் சேர்ந்த ஐ.என்.டி.யூ.சி. சங்கமும், ஜனதாவைச் சார்ந்த சங்கமும் டிசம்பர் 25-ல் அவர்கள் கோரிக்கைகளைக் கொடுத்தார்கள் என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். அதற்குப் பிறகு தமிழ்நாடு அரசு போக்குவரத்து, மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பொறியியல் மேற்பார்வையாளர்கள் சங்கம் அவர்களுடைய கோரிக்கைகளை 18-1-1978 அன்று தந்தனர். கோரிக்கைகளை முன்னரே தந்துவிட்ட சி.ஐ.டி.யூ. சங்கம் அந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டது ஜனவரி மாதம்தான் என்று இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். கோரிக்கைகளை எல்லாம் ஒட்டுமொத்தமாக ஐக்கிய சங்கங்கள் விரைந்து கேட்பதற்குக் காரணம் இருந்தபோதிலும் ஏறத்தாழ டிசம்பர் மாதம் வரை, நான்கு மாதங்களாகியும், ஐக்கிய சங்கங்கள் கோரிக்கைகளைக் கொடுக்காதிருந்த காரணத்தினால் பேச்சுவார்த்தை துவங்க தாமதம் ஏற்பட்டது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அனைத்துச் சங்கங்களும் பேச்சுவார்த்தைக்கு வேண்டிய கோரிக்கைகளை கொடுத்தது ஜனவரி மாதத்தில். ஜனவரி மாதத்திற்குப் பிறகு பேச்சுவார்த்தைகள் துவங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசின் ஆலோசனைப்படி நிர்வாகத்தினர் விரைந்து எடுத்து வருகிறார்கள். இப்போது நடந்துவருகிற சுமூகமான அந்தப் பேச்சுவார்த்தைகளால் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஒரு நல்லுறவு ஏற்படும் அளவில் அது அமையும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 20]

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை]

*திரு. சி. கோவிந்தராசன்: சங்கங்கள் கோரிக்கைளை வைக்காத காரணத்தினால்தான் காலதாமதமாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வேலைநிறுத்தம் முடிந்த பிறகு ஏற்பட்ட உடன்பாட்டிலே The government in consultation with the unions which are signatories to the settlement. கோரிக்கைகளை சங்கங்களோடு கலந்து பேசி நிர்ணயிப்பது என்று அதில் இருக்கிறது. சங்கங்களிலிருந்து ஆலோசனைகள், பெறுமல், அவர்களைக் கலக்காமல் தன்னிச்சையாகச் செயலினை அவர்களே தேர்ந்தெடுத்து ஊதிய உயர்வு போன்ற கோரிக்கைகளையெல்லாம் நீக்கிவிட்ட காரணத்தால் பேச்சுவார்த்தைக்கு அழைத்த பிறகுகூட சங்கங்கள் போகவில்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அதனால் தான் காலதாமதம்.

இரண்டாவது, ஜனவரி மாதத்தில் கோரிக்கை அனுப்பியும் மார்ச் 14-ம் தேதிதான் பேச்சுவார்த்தைகான அழைப்புகள் தரப்படுகிறது. ஆகவே, கால தாமதம் தொழிலாளர்கள் தரப்பில் அல்ல. நிர்வாகத்தின் தரப்பில்தான் என்பதை அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் உண்மையான நிலையைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நிர்வாகத்தினரைப் பொறுத்தவரைக்கும், அரசினரைப் பொறுத்தவரைக்கும் உடன்பாட்டில் கையெழுத்திட்ட போது in consultation wtth the signatories the government will refer the terms of the reference for bi-hartlike discussions.

என்றுதான் இருக்கிறது. ''கன்ஸலீடேஷன்'' என்பதில் கோரிக்கைகள் என்னென்ன என்பதை இரு தரப்புகளும் அறிந்து கொள்வதற்காக விரைவில் அனுப்புவதாக ஐக்கியச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கூறிய காரணத்தால் அதை எதிர்பார்த்து இருந்தோம். நான்கைந்து சங்கங்களும் சேர்ந்து கோரிக்கைகளை அனுப்புவதற்கு காலதாமதம் ஏற்பட்டது. ஜனவரி இறுதியில் தான் கோரிக்கை அனுப்பப்பட்டது. பின்னால் இதைப்பற்றிய குறிப்புகள் அரசுக்கும் நிர்வாகத்தினருக்கும் சென்றது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் நலன்கள் என்ற அளவில் 1977-78-ல் எடுக்கப்பட்ட சில முடிவுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு 49 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் லாபம் ஈட்டி 20 சதவீதம் போனஸ் வழங்கிய சேரன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டு 75 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் அளவில் லாப

[திரு. சி. பொன்னையன்] [1978 மார்ச் 20

நிலையில் முன்னேற்றம் கண்டிருப்பதால் சேரன் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வுத்திட்டத்தின் அடிப்படையில் 20 சதவீதம் போனஸ் வழங்கப்படும்.

சென்ற ஆண்டு 85 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் லாபம் ஈட்டி, 13·3 சதவீதம் போனஸ் வழங்கிய பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் இந்த ஆண்டு ஒரு கோடி 30 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் அளவுக்கு முன்னேற்றம் கண்டிருப்பதால், பாண்டியன் போக்கு வரத்து தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் போனஸ் வழங்கப்படும்.

சென்ற ஆண்டு 17 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் மட்டுமே லாபம் இருந்த கட்டபொம்மன் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச போனஸாக 8·33 சதவீதம் போனஸ் வழங்கப்பட்டது. இப்போது 85 லட்சம் என்ற அளவில் லாப நிலை இருப்பதால் தொழிலாளர்களுக்கு 15 சதவீத போனஸ் வழங்க உள்ளது.

சென்ற ஆண்டு 3·83 லட்சம் ரூபாய் லாபம் பெற்று 8·33 சதவீதம் போனஸ் வழங்கிய அண்ணா போக்குவரத்துக் கழகம் இவ்வாண்டு 23·32 லட்சம் என்று லாப நிலையில் முன்னேற்றம் கண்டதால் இவ்வாண்டு தொழிலாளர்களுக்கு 12 சதவீதம் போனஸ் வழங்க முடிவு செய்துள்ளது.

சென்ற ஆண்டு 13 லட்சத்து 39 ஆயிரம் நஷ்டத்தில் இருந்து, 8·33 சதவீதம் போனஸ் வழங்கிய சோழன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டு 15 லட்ச லாப நிலையில் முன்னேற்றம் இருப்பதால் 8·33 சதவீதம் போனஸ் வழங்க முடிவு செய்துள்ளது.

சென்ற ஆண்டு 48 லட்சத்து 56 ஆயிரத்து நஷ்டத்தில் இயங்கி வந்து, குறைந்தபட்சமாக 8·33 சதவீதம் போனஸ் வழங்கிய தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், நஷ்டத்தை சரி கட்டி 18 ஆயிரம் ரூபாய் லாப நிலையில் இருப்பதால் குறைந்த பட்ச போனஸாக 8·33 சதவீதம் போனஸ் வழங்கப்படுகிறது.

சென்ற ஆண்டு நஷ்டத்தில் இருந்து 8·33 சதவீதம் போனஸ் வழங்கிய பல்லவன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டும் தொடர்ந்து நஷ்ட நிலையில் இருப்பதால், 8·33 சதவீதம் குறைந்த பட்ச போனஸ் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

பல்லவன் போக்குவரத்து தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு வட சென்னை, தென் சென்னை இரண்டு பகுதிகளிலும் இரண்டு ஆம்புலன்ஸ் வண்டிகள் விடப்படும். போக்குவரத்துக் கழகங்களில் டீசல் சிக்கனத்தை கடைப்பிடிப்பதன்

1978 மார்ச் 20] [திரு. சி. பொன்னையன்]

காரணமாக ஏற்படும் மீதத்தில் மூன்றில் ஒரு பங்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு அடுத்த நிதி ஆண்டிலிருந்து வழங்கப்படும்.

மாண்புமிகு ஆறுமுகம் அவர்களுடைய ஆலோசனைக்கு இணங்க தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியும் நிர்வாகப் பிரதிநிதியும், தொழிலாளர்கள் பிரதிநிதியும் கொண்ட ஆலோசனைக் குழு ஏழு போக்குவரத்துக் கழகங்களிலும் அமைக்கப்படும்.

[பிற்பகல் 1·50]

அத்தோடு, போக்குவரத்துக் கழகங்களில் முன்னேற்றம் கருதி ஒவ்வொரு பணி மனையிலும் நல்ல திட்டங்களும், ஆலோசனைகளும் பரிந்துரைக்கக்கூடிய தொழிலாளர் பிரதிநிதிகள், நிர்வாகத்தின் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.

மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத் தொழிலாளர்களுக்கு உகந்த உற்பத்தி ஊக்க ஊதியத் திட்டம் (புரடக்டிவிடிவ் இன்சன்டிவ்) அடுத்த ஆண்டிலிருந்து கொடுக்கப்படும்.

பொதுமக்களின் நலம் கருதி வரும் 1978–79 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த இருக்கும் திட்டங்களும், வசதிகளும் என்ற அடிப்படையில், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இது வரை 576 கிராமங்கள் பயன் பெறும் வண்ணம் 221 புதிய வழித் தடங்கள் துவங்கியுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் வரும் ஆண்டில் மேலும் 746 கிராமங்களுக்குப் பயன் தரும் வண்ணம் 232 புதிய வழித் தடங்கள் தொடங்கவும், 893 புதிய பேருந்துகளை விடவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

பயணிகள் நலன் கருதி வரும் நிதி ஆண்டில் பல்லவன் போக்கு வரத்துக் கழகம் (பெருநகர்ப் பிரிவு) 200 பயணிகள் பஸ் ஸ்டாப் ஷெல்டர்களையும், மற்றப் போக்குவரத்துக் கழகங்கள் 150 பஸ் ஸ்டாப் ஷெல்டர்களையும் ஆக மொத்தம் 350 பஸ் ஸ்டாப் ஷெல்டர்களையும் அமைக்கும். மற்றும் பல்லவன் போக்கு வரத்துக் கழக (பெருநகர்ப் பிரிவு) 7 புதிய பேருந்து நிலையங்களை அமைக்கும்.

பயணக் கட்டணத்தைப் பொறுத்வரைக்கும், மத்திய அரசு, மாநில அரசு இவற்றின் தற்போதைய பட்ஜெட்டுகள்படி டீசல், பெட்ரோல் போன்ற எரிபொருட்களின் மீதான வரியிலும், மோட்டார் வாகன வரியிலும் வரிகள் உயர்த்தப்பட்ட போதிலும், நாட்டுடமையாக்கப்பட்ட பேருந்துகளிலோ, தனியார் பேருந்துகளிலோ பயணக் கட்டண உயர்வு இல்லை என்று அரசு முடிவெடுத்துள்ளது. மாருக......

திரு. சி. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனித் தனியாக போக்குவரத்துக் கழகங்கள் நடந்து வருகின்றன. அதற்கான போனஸ் வழங்கப்படுகின்றது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். லாப நஷ்டக் கணக்கை 7 கார்ப்பரேஷன்களுக்கும் வைத்திருக்கிறார்கள். அதைப்போல் எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒட்டுமொத்தமாக இந்த போனஸ் வழங்கப்படும் என்பதை இந்த அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் இந்தியக் கம்பனீஸ் ஆக்ட் என்று சொல்லப்படுகின்ற சட்டத்தின் கீழ் தனித் தனி நிர்வாகமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக ஒரு போக்குவரத்துக் கழகத்தின் நிதி இன்னொரு கழகத்திற்கு சட்டரீதியாக மாற்றப்பட இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாறாக, பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்தில் சென்ற பட்ஜெட்டில் கிலோமீட்டர் 1-க்கு 6 பைசாவிலிருந்து 5·5 பைசாவாகக் குறைக்கப்பட்ட பயணக் கட்டணத்தை வருமாண்டில் 5·5 பைசாவிலிருந்து 5 பைசாவாகப் பொதுமக்களின் நலன் கருதி குறைக்கப்படும்.

அடுத்து, வழித் தடங்களில் பேருந்துகளில் ஏற்படும் சிறு கோளாறுகளை விரைந்து களைந்து பயணிகள் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய ஆலோசனைகளுக்கு ஏற்ப 50 மைல் அதாவது 80 கிலோ மீட்டருக்குமேல் செல்கின்ற வாரியப் பேருந்துகள் அனைத்திலும் ஜாக்கி, கூடுதல் டயர் உட்பட்ட தேவையான பழுது பார்க்கும் கருவிகள் வைப்பது கட்டாயப்படுத்தப்படும். இது வழித் தடங்களில் பேருந்து நின்று விடுவதால் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியத்தைக் குறைக்க ஏதுவாக இருக்கும். (ஆரவாரம்).

நெடுந்தூர வழித் தடங்களில் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் பழுதடைந்து நின்று விட்டால் பயணம் செய்யும் பொதுமக்களின் நேரம் வீணாவதைத் தடுக்கவும், சிரமங்களைக் குறைக்கவும் வேண்டி, பேருந்துகள் நின்று விட்ட இடத்திலிருந்து மீதமுள்ள தூரத்திற்கான பயணக் கட்டணத்தை பயணிகளுக்கு உடனே திருப்பிக் கொடுக்க வேண்டும் எனுதப் திட்டம் 1—4—1978 முதல் அமுல்படுத்தப்படும். (ஆராவாரம்).

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள....

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவித்ததில் ஓராண்டுக்காலம் விபத்துக்கள் இல்லாமல் ஓட்டுகின்ற ஓட்டுனருக்கு 100 ரூபாய் தொகை வழங்கப்படும் என்று கூறினார்கள். அது அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் பொருந்துமா என்றும், அடுத்து 230 ரூபாய் குவாட்டர்லி டாக்ஸ் குறைக்கப்படுமா என்பதை மட்டும் விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அறிவிப்பு 7 போக்குவரத்துக் கழகங்களுக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்ஸ்........(குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் இப்படி ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் 100 ரூபாய் அனைத்துப் பொருள் போக்குவரத்து கழகத்திற்கும் பொருந்துமா என்று கேட்கிறார்கள். இந்த அறிவிப்பு—அனைத்து—பொருள் போக்குவரத்துக் கழகத்திற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: போக்குவரத்துத் கழகத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் சம்பந்தமாக, யூனியன்களோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள். இதுபோன்ற கோரிக்கைகள் மற்ற ஆறு கழகங்களில் இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கும் இருக்கின்றன. ஆகவே, பேச்சுவார்த்தை நடத்துகிறபோது மற்ற தொழிலாளர் சங்கத் தலைவர்களையும் அழைத்து அந்தக் தொழிலாளர்களுக்கு இருக்கிற பிரச்சனையையும் ஒரே சமயத்தில் தீர்க்க அரசு முன்வருமா? நீண்ட நாட்களாக கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு இது போன்ற பிரச்சினை இருந்து வருகிறது. அந்தப் பிரச்சினையையும் தீர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நான் ஏற்கனவே கூறினேன். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மட்டும் போராட்டம் நடத்தினாலும் இப்போது அறிவித்த சலுகைகள் ஏழு போக்குவரத்துக் கழகங்களிலும் உள்ள தொழிலாளர்களுக்கும் பொருந்தும் வகையில்தான் அறிவிக்கப்பட்டது. பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களைப் போல் ஏனைய போக்குவரத்துக் கழகங்களில் உள்ள தொழிலாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டால்தான் அவர்கள் நலம் காக்கப்படும் என்பதல்ல. அவர்களுடைய குறைகளையும் தார்மிகமாகப் பரிசீலித்து பலன்கள் அனைவருக்கும் ஒருமுகப்படுத்தப்படும் பலனாக இருக்கும், அவ்வாறு நடைமுறைப் படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1978 மார்ச் 20

சிறு துறைமுகங்களின் வளர்ச்சித் திட்டத்தில் தொழிலாளர் நலன் கருதி அரசு மைய அரசோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களின் ஆலோசனைக்கேற்ப தீவிரத் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கைகள் பலனாக ஓராண்டுக்குப் பிறகு முதன் முறையாக ஒரு கப்பல் நாகப்பட்டினம் துறை முகத்தில் வெளிநாட்டு உர வகைகளை இறக்குகிறது. அத்தோடு வெங்காய ஏற்றுமதியினை ஒரு கப்பல் நாகப்பட்டினம் துறைமுகத்தி லிருந்து வெளிநாட்டுக்குச் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. மைய அரசோடு தொடர்பு கொண்டு அரசு நட வடிக்கை எடுத்திருக்கும் காரணத்தால் அங்கு ஓராண்டுக் காலமாக வேலை இழந்து தவிக்கும் பல தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளது.

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு திரு. அம்பிகாபதி அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வில்லை. சீட் ஒன்றுக்கு காலாண்டுக்கு 250 ரூபாய் நகரப் பேருந்துகளுக்கு விதிக்கப்பட்ட வரியைக் குறைக்க வேண்டு மென்பது பற்றி அமைச்சர் அவர்கள் பதில் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அடிக்கடி எழுந்து பிரச்சனைகளை எழுப்பிக் கொண்டே இருந்தால் அதற்கு முடிவே இருக்காது. ஆகவே தயவு, செய்து அமைச்சர் சொல்லு வதில் முக்கியமானதற்கு மட்டும் விளக்கம் கேட்டுத் தெரிந்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: வரி உயர்வை ஆராய்ந்த பின்னர்தான் தேவையின் அடிப்படையில், நிதிநிலைப் பற்றாக் குறையில் இருக்கும் அரசு ஏற்கனவே அறிவித்தது.

இராமேஸ்வரம் துறைமுகத்தில் பயணிகள் கப்பலுக்குச் செல்வதற்கும், கப்பலிலிருந்து இறங்கி கரை சேர்வதற்கும் வசதி செய்யும் வகையில் பிளாட்பாரம் (பயர்) நீட்டிய மேடை ஒன்று அமைக்க மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழகத்தில் கப்பல் கட்டும் தொழிலைச் சார்ந்த துணைத் தொழில்களுக்கு ஊக்கமளிக்கவும், சுமார் 5,000 தொழில் நுட்பப் பணியாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் மாலுமிகள் ஆகியோருக்குப் புதிதாக வேலைவாய்ப்புக் கிட்டும் வண்ணம் கப்பல் கட்டும் கூடமொன்றும் (Shipyard) நிலத்தில் கப்பல் பழுது பார்க்கும் கூடமொன்றும் (Dry dock) சென்னையில் விரைந்து அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு எழுதினார்கள். மைய அரசு கப்பல் துறை அமைச்சர் அவர்கள் கப்பல் பழுது பார்க்கும் கூடமான (Dry dock) ஐ அடுத்த சுழல் திட்டத்திலேயே, (Rolling Plan) சேர்த்துக் கொள்வது பற்றிப் பரிசீலிப்பதாகவும் கப்பல் கட்டும் கூடம் அமைப்பது பற்றியும் பரிசீலிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

1978 மார்ச் 20] [திரு. சி. பொன்னையன்]

கரூரிலிருந்து திண்டுக்கல்லுக்கும் திண்டுக்கல்லிருந்துமதுரைக்கும் மதுரையிலிருந்து மணியாச்சி வழியாகத் தூத்துக்குடிக்கும் பிராட்கேஜ் இருப்புப் பாதை அமைக்கும் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதை விரைவில் நடை முறைப்படுத்த பரிசீலனை செய்வதாக மத்திய இரயில்வே அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலவிதமாக ஆலோசனைகளையும் நல்ல கருத்துக்களையும் எடுத்துக் கூறினார்கள். பலவற்றுக்குக் காலம் இல்லாத காரணத்தால் பதிலிறுக்க முடியாமல் போய் விட்டது. அவைகளை எல்லாம் பரிசீலித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைக் கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

[பிற்பகல் 2–00]

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, இந்த பஸ் ரூட்டுகள் வழங்குவதில் நலிந்த மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்று கேள்வி கேட்டேன். அதற்கு ஏதாவது இந்த அரசு பதிலிறுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர் களே, பேருந்துகளை விடுவது என்றாலே அதற்குப் பொரு ளாதாரம் மிகவும் தேவையாக இருக்கிறது. நலிந்தவர்களால் இதில் எப்படி ஈடுபட முடியும் என்பது எனக்குப் புரியவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசிய பிறகு பிரச்சனைகளை எழுப்பிக் கொண்டே போனால் நேரமாகும். அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டே இருக்கிறார். நாமும் கேட்டுக் கொண்டே இருப்போம் என்று போனால் மணி இரண்டையும் தாண்டும். எனவே , சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, அன்-எகனுமிக் ரூட்டிலே இதுவரையிலும் பர்மிட், லைசென்ஸ் கொடுக்காமல் பஸ் ஓடுவது இல்லை. தனியாருக்குக் கொடுக்கலாம் என்று சொன்னேன். அதற்காவது ஏற்பாடு செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப்போல பலரும் இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். ஏழு போக்குவரத்துக் கழகங்களும் இதைப்பற்றிப் பரிசீலித்துத் தக்க நடவடிக்கை விரைவில் எடுக்கும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தில் தொழிலாளர்கள் சங்கம் வைத்து, தங்களுக்கு இஷ்டமான சங்கம் நடத்த முடியாத ஒரு மோசமான நிலை ஏற்பட்டு, அமைச்சருக்கு ரிப்போர்ட் ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது உண்ணாவிரதப் போராட்டத்திலிருந்து பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பல சலுகைகளை அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதை நல்லமுறையில் துரிதமாக நடத்த அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அடக்குமுறையில்லாமல் இஷ்டப்பட்ட சங்கத்தில் சேர அனுமதி கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் எந்த அளவிற்குச் சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய அந்தக் குறைகளில் அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறார்களோ அவைகளை முழுவதும் உணர்ந்து தீவிரமாக விரைவாக முடிவெடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 3-க்கு திருவாளர்கள் துரை கலியமூர்த்தி, ஓ. சுப்பிரமணியன், மு. ஆறுமுகம், எம். ஏ. லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி—

" மானியக் கோரிக்கை எண். 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 93,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 39-க்கு திருவாளர்கள் ச. வேணுகோபால், மெ. ஆண்டி அம்பலம், ரா. கிருஷ்ணன், மு. ஆறுமுகம், செ. சிவசாமி, எம். ஏ. லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

" மானியக் கோரிக்கை எண். 39 — சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,92,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 40-க்கு திருவாளர்கள் சி. பழனிமுத்து, என். பழனிவேல், மு. ஆறுமுகம், எம். ஏ. லத்திப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

" மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,88,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 54-க்கு திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், ரெ. வி. சவுந்திரராசன், வி. கே. கோதண்டராமன், மு. ஆறுமுகம், எம். ஏ. லத்திப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,91,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ."

[1978 மார்ச் 20

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் கோரிக்கை எண் 55-க்கு அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு. எம். ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 55 — சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

312. தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 113வது விதியில் திருத்தமொன்று செய்வதற்காக உள்துறையின் 18-1-1978ஆம் தேதியிடப்பெற்ற 132ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

313. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வதற்காக உள்துறையின் 16-1-1978 ஆம் தேதியிடப்பெற்ற 132 ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

1978 மார்ச் 20]

314. 1-1-1978 ஆம் தேதியுடன் முடிவடையும் காலாண்டு காலத்திற்கு கும்பகோணத்திலுள்ள சோழன் போக்குவரத்துக் கழகம் வைத்திருக்கிற அல்லது பயன்படுத்துகிற பயணிப் பேருந்துகளைப் பொருத்தவரையில் தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் கீழ் வரி செலுத்துவதற்கான காலத்தை நீட்டிப்பது குறித்த உள்துறையின் (போக்குவரத்து-I) 17-1-1978ஆம் தேதியிடப்பெற்ற 127 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

315. சென்னை பெருநகர்ப்பகுதி குடிநீர் வழங்கு—கழிவு நீரகற்று திட்டப் பணியில் தற்போது அமர்த்தப்பட்டுள்ள, பன்னாட்டு வளர்ச்சித்திட்ட, உலக சுகாதார நல நிறுவனத்திற்குச் சொந்தமான பத்து வண்டிகளுக்கு, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் கீழ் விதிக்கத் தக்க வரியைச் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து-I) 1-2-1978 ஆம் தேதியிடப்பெற்ற 238 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

316. வேளாண்மைத் துறையில் 23-10-1971 ஆம் தேதியன்று வெளியாகி 17-11-1971 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II பிரிவு 1-ல் பக்கங்கள் 1177-1179 (ஆங்கிலத்தில்) வெளியான II—1. 5117/1971 ஆம் எண் அறிவிப்பில் (இது பின்னர் திருத்தப் பெற்றுள்ளது) திருத்தமொன்று செய்வது குறித்து, வேளாண்மை துறையின் 3-2-1978 ஆம் தேதியிடப்பெற்ற 164 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 27/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1978 மார்ச் 20

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

† 140. தமிழ்நாடு துறைமுகத் துறையின் 1978-79 ஆம் ஆண்டுச் சாதனை விளக்க அறிக்கை (தமிழ்).

† 141. நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்தும் கப்பல் வணிகமும்-கோரிக்கை எண் 40 சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும், கோரிக்கை எண் 55-ம் சாலைப் போக்குவரத்துப் பணிகள் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு 1978-79 (தமிழ்).

* 142. கோரிக்கைகள் எண் 35, 57—தமிழகத்தில் உணவு நிலைமை, 1978 (தமிழ்).

@ 143. 1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கு— கழிவுநீரகற்று சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1978).

@ 144. 1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கு— கழிவு நீரகற்று சட்ட முன்வடிவிற்கான பிழை திருத்தம் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1978).

* 145. நிலவரி மானியக் கோரிக்கையின் கீழ் வரும் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

* 146. 265-ஏ ஏனைய நிர்வாகப் பணிகள் என்னும் தலைப்பில் 11, 43 ஆம் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

* 147. கோரிக்கை எண் 19— கழிவுநீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கலுக்கான துணைக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

@ 16—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.
† 17—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.
* 18—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

1978 மார்ச் 20]

[262-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க]

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 1978-79 பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

1977-78 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து பற்றிய ஆய்வுரை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

2. 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டம், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டம் இவ்விரு சட்டங்களின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றை நிர்வகிப்பது போக்குவரத்துத் துறையின் பொறுப்பாகும். மோட்டார் வண்டிகள் சட்டம் ஒழுங்கு முறைப் படுத்துவதற்கான சட்டமாகும். இச்சட்டம், மோட்டார் வண்டிகளைப் பதிவு செய்தல், போக்குவரத்து வண்டிகளைக் கட்டுப் படுத்துதல், ஓட்டுநர் உரிமம் வழங்கல், போக்குவரத்தை ஒழுங்கு படுத்துதல்) மோட்டார் வண்டி விபத்து ஈட்டுறுதி செய்தல் ஆகியவற்றிக்கு வகை செய்கிறது. பயணிகள், சரக்குகள் போக்குவரத்திற்கானப் போதுமான வசதிகளைச் செய்து தந்து, அப்போக்குவரத்தில் மக்கள் பாதுகாப்பிற்கு உறுதி செய்வதும் இதன் குறிக்கோளாகும்.

3. பொது மக்களுக்கு வசதி எனக் கருதப்படும் வழித் தடங்களில் பயணிப் பேருந்துகள் ஓட்டுவதற்காகப் போக்குவரத்து அதிகாரிகளால் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. வாடகை சிற்றுந்துகளுக்கும், சரக்குப் பேருந்துகளுக்கும் அனுமதிச் சீட்டுகள், தாராளமாக வழங்கப்படுகின்றன. ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்குவதையும் அவர்கள் ஓட்டும் வேகத்தையும் கட்டுப் படுத்துதல், சரக்கு வண்டிகளில் ஏற்றும் பளுவை ஒழுங்குபடுத்தல், பயணிப் பேருந்துகளில் இருக்கைகள், இடைவெளி வசதியாக அமைத்தல், ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை நிர்ணயித்தல், போக்குவரத்து வண்டிகளை கால முறைப்படி முழுமைகாகத் தணிக்கையிடல் ஆகியவற்றின் மூலம் பொது மக்களுக்குப் பாதுகாப்பும் வசதியும் உறுதி செய்யப்படுகிறது.

[1978 மார்ச் 20

4. மோட்டார் வண்டிகள் மீதான வரியை வசூல் செய்வதும் போக்குவரத்துத் துறையின் பொறுப்பாகும். போக்கு வரத்து வண்டிகளின் மீதான வரி, போக்குவரத்துத் துறையால் நேரடியாக வசூல் செய்யப்படுகிறது. மோட்டார் கார்கள் போக்கு வரத்துப் பேருந்துகளல்லாத வண்டிகளின் மீதான வரிவசூலிப்பு மாவட்டங்களில் கருவூலங்கள் மூலமும் சென்னை மாநகரில் வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் காவல் நிலையங்கள் மூலமும் வசூல் செய்யப்படுகிறது.

5. 1974ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம், வரி விதிப்பு அடிப்படையைச் சீரமைக்கவும் பயணி வண்டிகள் சரக்கு வண்டிகள் அல்லது இவ்விருவகை வண்டிகளின் மீதான பல்வேறு வரிகளை ஒருங்கிணைப்பதைக் கருத்திற் கொண்டு செய்யப்பட்டதாகும்.

போக்குவரத்து வசதிகளை அமைத்துத் தருவதில் போக்கு வரத்துத் துறை போக்குவரத்துத் தேவைகளில் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது. ஒரு புதிய வழித்தடத்தைத் தொடங்குவது சிக்கலான நடைமுறையாக இருந்து வந்தது. 1971ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தினால், புதிய வழித்தடங்களை தொடங்குவதில் நிலைமை சீரடைந்துள்ளது. இச்சட்டத்தின் படி புதிய வழித்தடம் ஒன்றைத் தொடங்குவது என்பது, நிர்வாகப் பணி எல்லைக்குள் அமைந்து, அதிகாரியின் தீர்ப்பே முடிவானது என அமைகிறது.

போக்குவரத்துத் தொடர்பற்ற, வெகு தொலைவிலுள்ள மலைப்பகுதிகளுக்குப் போக்குவரத்து வசதியளிப்பதற்காக அந்த பகுதிகளில் ஜீப் வகை சிறு பேருந்துகள் விடப்பட்டுள்ளன. இந்த ஜீப் பேருந்துகளுக்கு 25 சதவீத வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே, நீலகிரி மாவட்டத்தில் போக்குவரத்து வசதி யற்ற பகுதிகளிலும், இராமேசுவரம் தீவிலும் சிறுசக்கரபீடம் அமைந்த சிறிய பேருந்துகள் விடப்பட்டுள்ளன. இந்தப் பேருந்துகளுக்குச் சலுகை வீதத்தில், பயணி ஒருவருக்கு காலாண்டிற்கு மேல் வரிக் கட்டணத்தையும் சேர்த்து ரூ. 50 வீதம் வரி விதிக்கப் படுகிறது. கிராமப் பகுதிகளில் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த

1978 மார்ச் 20]

நிலக்கோட்டை வட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆற்காடு, வாணியம்பாடி வட்டங்களிலும் அண்மையில் சிறு பேருந்துகள் சோதனை அடிப்படையிலான ஏற்பாட்டின்படி விடப்பட்டுள்ளன. இத்தகைய பேருந்துகளுக்கு, காலாண்டுக்கு பயணி ஒருவருக்கு (மேல்வரி உட்பட) ரூ. 50 எனும் சலுகை வீதத்தில் வரி விதிக்கப்படுகின்றது.

போக்குவரத்துத் தொழிலில் ஏகபோக உரிமையையும், அனுமதிச் சீட்டுகள் சிலரிடம் குவிவதையும் தடுப்பதைக் கருத்திற் கொண்டு, ஓர் உரிமையாளருக்கு பத்துப் பேருந்து அனுமதிச் சீட்டுகளுக்கு மேல் இருக்கலாகாது என உச்சவரம்பு விதித்து 1971ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் செல்லுபடியை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு போடப்பட்டு, அது இன்னும் பைசலாகாமல் உள்ளது. எனினும், 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தின்கீழ், உபரி அனுமதிச் சீட்டுகளை அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு மாற்ற வகை செய்யப்பட்டுள்ளது.

பயணிப் பேருந்து வண்டிகளுக்குப் பயணக் கட்டணப் பட்டிலுக்குப் போக்குவரத்து அதிகாரி ஒப்புதல் அளிக்க வேண்டும். இக்கட்டண வீதத்தில் ஒரே சீரான நிலை இருக்கும் பொருட்டு, அரசே கட்டண வீதங்களை நிர்ணயித்துள்ளது. இவ்வாறு நிர்ணயிப்பதில் பொது மக்கள், பேருந்து உரிமையாளர்களின் முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. பயணிப் பேருந்துகளுக்கான உயரளவு கட்டண வீதம் வரையறை செய்யப்பட்டு 12–3–1976ஆம் நாளன்று திருத்தியமைக்கப்பட்டது.

வாடகைக் கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள் ஆகியவற்றிற்கான கட்டண வீதம் பெட்ரோல் விலையேற்றத்தின் காரணமாக 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் திருத்தியமைக்கப்பட்டது.

ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு தாராளமாக மக்கள் போக்குவரத்தும் சரக்குகள் போக்குவரத்தும் நடைபெறுவதற்கு, வசதியாக அண்டை மாநிலங்களோடு, பரிமாற்ற

ஏற்பாட்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இவ்வொப்பந்தங்களின்படி ஒவ்வொரு மாநிலமும் 'பேருந்துகள் விடுவதற்கான வழித் தடங்கள் இன்னவை என ஒதுக்கப்பட்டு, சரக்குப் பேருந்துகள், மற்ற வண்டிகள் ஆகியவற்றிற்கான அனுமதிச் சீட்டு மேலொப்பம் தரப்படும் என்பது பற்றிய எண்ணிக்கையும் நிர்ணயிக்கப்படுகிறது. பயணிப் பேருந்துகளைப் பொறுத்த வரையில், வழித்தடங்கள் பொதுவாக அந்தந்த மாநிலங்களில் ஓடும் கிலோ மீட்டர் தூரத்தில் சமநிலை இருக்கும்படியாக ஒதுக்கப்படுகின்றன. புதுச்சேரியுடன் ஒப்பந்தம் ஒன்று இறுதி செய்யப்படுவதற்கான வரைவுச் செயற் குறிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம், கர்நாடக மாநிலங்களோடு செய்யப்பட்ட ஒப்பந்தங்களை மாற்றி அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

6. இந்தியா முழுவதும் அல்லது ஐந்துக்குக் குறையாமல் ஒன்றை ஒன்று ஒட்டியுள்ள மாநிலங்களிடையே சரக்குப் போக்குவரத்து எளிதாக நடைபெறும் பொருட்டு, சரக்கு வண்டிகளுக்கான தேசிய அனுமதிச் சீட்டு வழங்குவதற்காக இந்திய அரசு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இம்மாநிலத்திற்காக இந்திய அரசு வரையறுத்துள்ள அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை 400 ஆகும். இவற்றில் இதுவரை 390 அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 6 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும் நிலையில் உள்ளன. எஞ்சியுள்ள அனுமதி கோரிக்கையாளர்கள் அனுமதி சீட்டு அளிப்பதற்கான பத்திரங்களை தாக்கல் செய்யவில்லை.

7. பொது இடத்தில் மோட்டார் வண்டியை ஓட்டிச்செல்ல உரிமம் ஒன்று பெற்றிருக்க வேண்டும். தொழில்முறை" ஓட்டுநர்களும் போக்குவரத்து வண்டிகளுக்கான ஓட்டுநர்களும் மருந்துவச்சான்று பெற்றிருத்தல் வேண்டும். ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை ஒழுங்குபடுத்தவும் அவை உரிமம் பெறச் செய்யவும் விதிகள் இயற்றப்பெற்றுள்ளன. ஓட்டுநர்களை நன்கு கண்காணித்து "புள்ளி முறை கட்டுப்பாடு" என்ற ஒரு முறையைச் செயற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முறையின்கீழ் ஓட்டுநர் ஒருவர் விதிகள் மீறல் ஒவ்வொன்றுக்கும் இத்தனைப் புள்ளி எனக் கணக்கிட்டு, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள புள்ளிகளைப் பெற்றவுடன் தானாகவே ஓட்டுநர் உரிமம் செல்லுப்படி இல்லாமல் போகும். இவ்வாறு செய்வதற்கான ஏற்பாடு பரிசீலனையில் உள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகள் மாநில நெடுஞ்சாலைகள் அல்லது முக்கியமான மாவட்டச் சாலைகளில் பக்கத்தில் உள்ள கிராமங்களை இணைக்கிற நெடுஞ்சாலைச் செல்வழித் தடங்களில் அல்லது கிராமத் தொடர்பு சாலைகளில் சிறு பேருந்துகளையும், சிறு ஒப்பந்த வண்டிகளையும் விடும் திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

8. மோட்டார வண்டிகள் சட்டம், மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் வருவாய் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

(1)	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1977-78. (2)	திருத்த மதிப்பீடு. 1977-78. (3)	வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு 1978-79. (4)
	(ரூபாய் ஆயிரத்தில்.)		
1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின்கீழ் வருவாய்.	1,48,72	1,59,85	1,66,75
தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் வருவாய்.	48,49,28	48,94,22	50,74,28
ஏனைய வருவாய்கள். ..	2,00	2,30	2,30
மொத்தம் ..	50,00,00	50,56,37	52,43,34

9. செலவினங்களில், 1977–78 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்ட மதிப்பீடு, திருத்த மதிப்பீடு 1978–79 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1977–78 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.	94·50
1977–78ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு ..	90.68
1978–79 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.	93·53

கருவூலங்கள் மூலம் வசூலிக்கப்படுகின்ற போக்குவரத்துப் பேருந்துகளல்லாத வண்டிகளின் மீதான வரிகள் வசூலுக்கான செலவு இதில் சேர்க்கப்படவில்லை.

10. போக்குவரத்துத் துறையன்றி, காவல் துறையும் மோட்டார் வண்டிகள் சட்டம், போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சட்டம் அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பு வகிக்கிறது. போக்குவரத்துப் பேருந்துகளல்லாத வண்டிகளின் மீதான வரி செலுத்தப்படுகிறதா எனக் கண்காணிக்கும் பொறுப்பும் காவல் துறையினுடையதாகும்.

இணைப்பு II

[262 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறைக்கான மான்யக் கோரிக்கைகள் 1978–79.

பேரவைத் தலைவரவர்களே,

ஆளுநரின் பரிந்துரையின் பேரில், மான்யக் கோரிக்கை 39—சாலைகளும் பாலங்களும் எனும் தலைப்பிலும், மான்யக் கோரிக்கை 54—'சாலைகள் மற்றும் பாலங்களின் மூலப் பணிகளுக்காக' எனும் தலைப்பிலும் முறையே ரூ. 31,92,75,000 மற்றும் ரூ. 7,91,10,000 ஆகிய தொகைகளுக்கு மேற்படாமல் அரசுக்கு வழங்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

மான்யக் கோரிக்கை எண். 39:

பொருளாதார வளர்ச்சி மற்றும் மாநிலங்களுக்கிடையேயான திட்டங்கள், மையசாலை நிதித் திட்டங்கள், கிராமச் சாலைத் திட்டம் (அடிப்படைத் தேவைகள், துறையின் பணியாளர் செலவினங்கள் மற்றும் கருவிகளும் இயந்திரங்களுக்குமான செலவுகள் போன்ற மூலதனச் செலவினங்கள் " 337. சாலைகள் மற்றும் பாலங்கள் " எனும் வருவாய்த் தலைப்பில் அடங்கியுள்ளன.

மான்யக் கோரிக்கை எண் 54:

" 537. மூலதன ஒதுக்கீடு" என்ற தலைப்பின்கீழ் மாநில அரசின் பெரும் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

2. மாநில அரசின் கீழுள்ள சாலைகளையும் பாலங்களையும் அமைத்தல், மேம்படுத்துதல், பராமரித்தல் ஆகியவை நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித் துறையின் நேரடிப் பொறுப்பாகும். மத்திய தேசிய நெடுஞ்சாலைகளின் பணிகளை நிறைவேற்றும் முகவராகவும் இத் துறை செயல்படுகிறது. மேலும் உள்ளாட்சி அமைப்புகளின் சாலைத் திட்டங்களின் தொழில் நுணுக்க மேற்பார்வை பணியினையும் ஆற்றுகிறது.

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை ஆற்றும் பல்வேறு பணிகள் வருமாறு—

மாநிலச் சாலைத் திட்டங்கள்.—

3. இத் திட்டத்தின்கீழ் பலம் குறைவான சாலைகளுக்கு பதிலாக புதிய சாலைகள் போடுதல், விரைவான வாகனப் போக்குவரத்துக்கு ஏதுவாக முன்னேற்றங்கள் செய்தல், சாலை அமைப்புகளின் முன்னேற்றங்கள் செய்தல் முதலிய பணிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

1978–79-ல் பின்வரும் மூன்று சாலைப் பணிகளை எடுத்துக் கொள்ள கருதப்படுகிறது:—

(i) திருநெல்வேலி மாவட்டம், நாரணம்மாள்புரம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல்—மதிப்பீடு ரூபாய் 20 இலட்சம்.

(ii) தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை சாலையில் (பிரதான மாவட்ட சாலை கி.மீ. 3-4ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல்—ரூபாய் 2.11 இலட்சம்.

(iii) சேலம் மாவட்டம் முள்ளக்குறிச்சி கிராமத்தில் வச்சுக்கல் ஆற்றின் குறுக்கே கி. மீ. 9—80ல் பாலம் அமைத்தல் ரூ. 5 இலட்சம்.

தூத்துக்குடியில் உள்ள "ஸ்பிக்" உரத் தொழிற்சாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ரூபாய் 26.50 இலட்சம் பெறுமான பணிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் தொடங்கும். சேலம் எஃகு தொழிற்சாலைக்கு (இரண்டாம் கட்டம்) செல்லும் சூரமங்கலம்—தாரமங்கலம் சாலையை மேம்படுத்த ரூபாய் 142.07 இலட்சம் மதிப்பீடுள்ள வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதர சாலைகள் திட்டம்.—

4. இத்திட்டம் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ரூபாய் 40,000-க்கு மேற்பட்ட மதிப்பீடு உடைய சாலைகள், பாலங்கள் மற்றும் தரைப் பாலங்களை அமைத்தல், மேம்படுத்தல் போன்ற மூலப்பணிகளை உள்ளடக்கிய திட்டமாகும். பணிகள் முடிவடைந்த பின்னர் இச்சாலைகள் மற்றும் பாலங்கள் பேணிக்காக்கப்படுவதற்காகச் சம்மந்தப்பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்படுகின்றன.

பிரதான வேலைகளை எடுத்துச் செய்ய போதிய நிதிவசதி இல்லாத ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பிரதானமாக உதவி செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். அண்மையில் ரூ. 58.13 இலட்சம் மதிப்பீடு உடைய 10 வேலைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த வேலைகள் விரைவில் எடுத்துச் செயலாற்றப்படும். 1978–79 ஆம் ஆண்டில் ரூபாய் 19.66 இலட்சம் மதிப்பீடு உடைய ஐந்து வேலைகளை எடுத்து செயல்பட இருக்கிறது.

கிராமச் சாலைகளுக்கு சல்லிக்கல் போடும் திட்டம்.—

5. கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் எல்லாப் பருவத்திற்கும் ஒத்த தார்ச்சாலைகள் அமைக்கப்பட்டு அதன் பின்னர் அவை எதிர்காலப் பராமரிப்புக்காக நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையினரிடம் ஒப்படைக்கப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய 2,685 கிராமங்கள் பயன் பெறும் வண்ணம் ரூபாய் 15,47,72 இலட்சம் செலவில் 3,183.5 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. சீர்பருவச்சாலைத் திட்டமானது மக்கள் தொகை வரம்பின்றி எல்லாக் கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி அளிக்கும் பொருட்டு மண்சாலைகள் அமைக்கும் வேலைகளை உள்ளடக்கிய திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சாலைகள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு

எதிர்காலப் பராமரிப்புக்கென்று ஒப்படைக்கப்படுகின்றன. இத்திட்டம் 1974 ஆம் ஆண்டு தொடங்கி செயல்பட்டு வருகிறது. 1977ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய இத்திட்டத்தின் கீழ் 3,225 கிராமங்கள் பயன்பெறும் பொருட்டு ரூபாய் 443.13 இலட்சம் செலவில் 4,119.03 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள நிலைமையில் கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் தார்ச்சாலைகளுக்கு அதிகச் செலவாகிறது. ஆகவே சல்லிக்கல் சாலைகள் மாத்திரம் அமைக்கப்பட்டால் இத்தலைப்பின்கீழ் உள்ள ஒதுக்கீட்டை அதிக கிராமங்கள் பயன்பெறும் வகையில் செலவழிக்கலாம். சீர்பருவகாலச் சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சாலைகள் மழையினால் எளிதாக அரிப்பு ஏற்படுவதால் இத்திட்டத்தின்கீழ் நிரந்தரமான வேலைகள் எடுத்துச் செயலாற்ற அத்தியாவசியமான தேவை இருக்கிறது. மேலும் உள்ளாட்சி நிறுவனங்களின் குறைவான நிதி வசதியின் காரணமாக அவைகளிடம் ஒப்படைக்கப்படும் சாலைகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. ஆகவே மேற்படி இரு திட்டங்களை ஒருங்கிணைத்து, சல்லிக்கல் சாலைகளை அமைக்கும் புதிய திட்டம் ஒன்றைச் செயலாற்ற அரசு ஒரு முடிவு எடுத்துள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் கீழ் எல்லாச் சாலைகளும் சல்லிக்கல் நிலைக்கு அமைக்கப்படும் அல்லது மேம்படுத்தப்படும். இதனால் அரசுக்கு நிரந்தர சொத்துக்கள் ஏற்பட ஏதுவாகும். மேலும், பெருமளவான கிராமங்கள் பயனடையும். ஆகவே, அதிக கிராமங்களின் தேவையை இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் சீர்பருவகாலச் சாலைகளை சல்லிக்கல் சாலையாக மாற்றும் வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு தற்போது செயலாற்றப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் ரூபாய் 300 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

பேருந்துகள் செல்லும் சாலைகளை மேற்கொள்ளும் திட்டம்.—

6. ஊராட்சி ஒன்றியங்களில் கடந்த ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் மூலம் அமைக்கப்பட்ட சாலைகள் போதுமான நிதி வசதியின்மையால் ஊராட்சி ஒன்றியங்களால் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. அதனால் பேருந்துகள் செல்லும் சாலைகள் பழுதாவதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்படுகிறது. ஆகையால் பேருந்துகள் செல்லும் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளும் திட்டம் 1960–61 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுகாறும் 12,637 கி. மீ. நீளமுள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இன்னும் 6,100 கி. மீ. நீளமுள்ள சாலைகளை எடுக்துக் கொள்ள வேண்டியுள்ளது. 1977–78 ஆம் ஆண்டு 1,500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை எடுத்துக் கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

வேளாண்மை கரும்புச் சாலை வளர்ச்சித் திட்டம்.

7. கரும்பு உற்பத்தியாகும் பகுதிகளில் சாலைகள் அமைக்கும் இத்திட்டம் பல ஆண்டுகளாக செயலில் இருந்து வருகிறது. இச் சாலைகளை மேம்படுத்தவும், வரும் ஆண்டுகளில் இச்சாலைகளைப் பராமரிக்க நிதி ஒதுக்கவும் கரும்புத்தீர்வை நிதியிலிருந்து அதிக நிதி ஒதுக்கீடுபெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் சாலைகளை மேம்படுத்தவும், பராமரிக்கவும் 1977–78 ஆம் ஆண்டு ரூபாய் 105 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1978–79 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 110 இலட்சம் ஒதுக்கப்படும்.

தற்போதுள்ள இருப்புப்பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் அமைத்தல் :—

8. இருப்புப்பாதை கடவுகள் போக்குவரத்தைத் தடைப்படுத்துவதால் இவைகளுக்குப் பதிலாக மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் படிப்படியான திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. இப்பணிகளுக்காகும் செலவு பங்கீட்டு முறையின் அடிப்படையில் மாநில அரசாலும், இரயில்வே துறையாலும், நகராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருப்பின், சம்பந்தப்பட்ட நகராட்சிகளாலும் ஏற்கப்படுகின்றன. மாநில அரசின் பங்கு 'ரெயில்வே பாதுகாப்பு நிதி' யிலிருந்து ஈடு செய்யப்படுகின்றது. இத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கொண்டுவரப்பட்டது.

இந்தத் திட்டத்தின்கீழ் 14 பணிகள் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சாலைப்புற மரங்கள்

9. மாநிலம் முழுவதும் சாலையோரங்களில் மரங்களை வளர்க்க இலக்குகளை நிர்ணயித்து, தொடர்ந்து கவனம் செலுத்தப்பெற்று வருகிறது. நெடுஞ்சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் மரங்களின் தேவையை நிறைவுசெய்ய பொது நாற்றுப்பண்ணைகள் பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் இதற்காக நிதி ஒதுக்கப்படும்.

பராமரிப்பு

10. வேலைநிறுத்த ஊழியப் பணியாளருக்கான செலவுத் தொகையை உள்ளடக்கி ஒவ்வொரு ஆண்டிற்கும் பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு ரூ 9.00 கோடியாகும். அரசு தன் பராமரிப்பிற்கென்று எடுத்துக்கொண்டுள்ள சாலைகளின் அளவை முன்னிட்டு இம் மாநிலத்திலுள்ள பிரதான மாவட்டச்

சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளைச் சரியான முறையில் பராமரிக்கத் தேவையான நிதிஅளிக்கும் பொருட்டு தேவையை முன்னிட்டு, 1977–78 ஆம் ஆண்டு ரூ. 1.50 கோடி அதிகப்படுத்தப்பட்டது. அவ்வாறே 1978–79 ஆம் ஆண்டிற்கும் ரூபாய் 1.65 கோடி அதிக நிதி ஒதுக்கீட்டிற்கு வகைசெய்யப்பட்டுள்ளது.

<u>மத்திய அரசு ஏற்று நடத்தும் டணிகள்.</u>

<u>இணைப்புச் சாலைகள்</u>

11. 1977–78-ல் கிராமப் புறங்களில் இணைப்புச் சாலைகள் அமைக்கும்பொருட்டு மத்திய அரசு ரூபாய் 71 இலட்சம் தமிழ்நாட்டிற்காக ஒதுக்கீடு செய்தது. இந்த மத்திய அரசு உதவியின்கீழ் இம்மாநில அரசு 7 மாவட்டங்களில் உள்ள 36 ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 84,784 இலட்சம் மதிப்பீடு உள்ள 60 வேலைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் 137.10 கிலோ மீட்டர் ஆகும்.

இத் திட்டம் கடலோரம் மற்றும் பின்தங்கிய இடங்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. வரும் ஆண்டுகளில் மத்திய அரசின் உதவி இந்தத் திட்டத்திற்கு தொடர்ந்து கிடைக்கும் என்றும் மத்திய அரசு குறிப்பிட்டிருக்கிறது.

<u>மலைவாழ் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்.</u>

12. இத்திட்டமானது மத்திய அரசின் நிதி உதவியுடன் நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதிகளின் சமூகப்பொருளாதார முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. ரூபாய் 100 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்தும் ப...கள் முடியும் தறுவாயில் இருக்கின்றன. மேலும் ரூபாய் 21.11 இலட்சம் மதிப்பீடுள்ள வேலைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ் வேலைகள் 1978–79ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

<u>மலைவாழ் மக்கள் நலனுக்கான துணைத் திட்டம் :—</u>

13. மலைவாழ் பகுதி மக்களின் முன்னேற்றத்திற்காக முக்கியச் சா...களோடு அப்பகுதிகளை இணைக்கும் சாலைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தினால் மலைவாழ்பகுதி மக்கள் மருத்துவம், கல்வி மற்றும் சமூகநலம் போன்ற பயன்களைப் பெறுவார்கள். தென்னாற்காடு மாவட்டம் மற்றும் சேலம் மாவட்டத்தில் கல்ராயன் மலைப்பகுதியில் ரூபாய் 88 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்ட நான்கு மேம்படுத்தும் பணிகள் முடியும் தறுவாயில் இருக்கின்றன. 1978–79 ஆம் ஆண்டு பச்சைமலைப்

பகுதியில் ஓடைக்காட்டுப்புதூரிலிருந்து வெங்கமுடி வழியாக மேல் செங்காட்டுப்பட்டிக்குச் செல்லும் 10.2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையை அமைக்கும் மற்றும் மேம்படுத்தும் பணி ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

<u>மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம் :</u>

14. இத்திட்டத்தில் ஏற்கனவே ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட மதுரை மாவட்டம் சிறுமலைச் சாலையை மேம்படுத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மேலும் அதிக வேலைகளை எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

<u>பெருநகர் வளர்ச்சித் திட்டம் (உலக வங்கித் திட்டம்) :</u>

15. 1977–80 ஆண்டுகளில் ரூபாய் 4,00.8 இலட்சம் மற்றும் தோராயமாக ரூபாய் 3,17.883 இலட்சம் மதிப்பீடுடைய திட்டங்கள் முறையே நெடுஞ்சாலைத் துறையினருக்கும் சென்னை மாநகராட்சிக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (1) இந்து நாளிதழ் அலுவலகம் எதிரில், (2) சபையர் திரையரங்கு அருகில், (3) சென்ட்ரல் ரயில்வே நிலையத்திற்குப் பக்கத்தில் வால்டாக்ஸ் சாலையில் மற்றும் (4) கடற்கரை ரயில் நிலையத்திற்கு எதிரே வடக்கு கடற்கரை சாலையில் போன்ற இடங்களில் பாதசாரிகளுக்கென்று சுரங்கப்பாதை அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவை தவிர தெற்குப் பெருவழிச் சாலை (Grant Southern Trunk Road) யையும் பூவிருந்தவல்லிச் சாலையையும் இணைக்கும் வகையில் ஒரு உள்வளைவுச்சாலை(Inner Ring Road)அமைக்கும் வேலையும் நடைபெற்று வருகின்றன. மன்றோ சிலையிலிருந்து கட்டிப்பாரா வரையிலுள்ள அண்ணா சாலையை அகலப்படுத்தும் வேலையும், சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள செவிலியர் விடுதியிலிருந்து பூவிருந்தவல்லி சாலையை மேம்படுத்தும் வேலையும் விரைவில் எடுத்துச் செயல்படவிருக்கிறது. மாநகராட்சியைப் பொறுத்தவரை, காண்ட்ஸ் சாலையில் நல்லாவின் குறுக்கே ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பெரிய பாலம் அமைக்கும் வேலை எடுத்துச் செயல்படவிருக்கிறது.

<u>தேசிய நெடுஞ்சாலை.</u>

16. 1,865 கி.மீ. நீளமுள்ள 8 தேசிய நெடுஞ்சாலைகள் தமிழ்நாட்டில் அடங்கியுள்ளன. கீழ்க்கண்ட பணிகள் தேசிய நெடுஞ்சாலைகளை மேம்பாடு செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

(i) தேசிய நெடுஞ்சாலை 47-ல் குமரபாளையம்—பவானி புறச் சாலையில் காவிரி நதியின் குறுக்கே ஒரு பிரதான பாலம் 1975–77-ல் ரூபாய் 80 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டுள்ளது.

(ii) தேசிய நெடுஞ்சாலையில் கொள்ளிடம் நதியின் குறுக்கே ரூ. 1,18.50 இலட்சம் செலவில் பெரும் பாலம் ஒன்று கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாநில அரசு 1977–78-ல் பாம்பன் பாலத் திட்டத்திற்காக ரூ. 100 இலட்சம் உட்பட மொத்தம் ரூ. 5,09.03 இலட்சம தேசிய நெடுஞ்சாலை வேலைகளுக்காக மத்திய அரசிடமிருந்து பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தொகையில் ரூபாய் 470 இலட்சம் ஏற்கனவே மத்திய அரசு வழங்கிவிட்டது. 1978–79ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் தொகை ரூபாய் 6,72.51 இலட்சம் ஆகும். (தேசிய நெடுஞ்சாலைகள் ரூ. 5 35.51 இலட்சம், பாம்பன் பால திட்டம் ரூ. 137 இலட்சம்).

மைய சாலை நிதி வேலைகள்.

17. காலகெடுவற்ற நிதியான மைய சாலை நிதி மத்திய அரசால் வசூலிக்கப்படும் ஆயத் தீர்வையில் ஒரு லிட்டர் மோட்டார் எண்ணெய்க்கு 3.5 காசு வீதம் வசூலிக்கப்படும் தொகையிலிருந்து வருவாயாகக் கிடைக்கிறது. மொத்த வருவாயில் 80 சதவிகிதம் இத் திட்டத்தின்கீழ் உள்ள வேலைகளுக்கென்று மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்படுகிறது. 20 சத வீதத்தை மத்திய அரசு 'சேம நிதியாக' நிறுத்தி வைத்துக் கொள்கிறது.

அண்மையில் மத்திய அரசால் திருத்தி அமைக்கப்பட்ட மைய சாலை நிதியின் குறிக்கோள் ஆராய்ச்சி, பயிற்சி, பரிசோதனைகள், போக்குவரத்து ஆய்வுகள் ஆகியவைகளுக்கு அதிக முக்கியத்துவமும், சாலைகள் மேம்பாலங்கள் போடும் பணிகளுக்குக் குறைந்த முக்கியத்துவமும் அளிப்பதாக உள்ளது.

இத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட மலைச் சாலைகள் ரூ. 817 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன :

(1) கோடை—பழனி சாலை இணைப்பு.

(2) தடியன் குடிசை—ஆடலூர் சாலை இணைப்பு.

(3) ஒட்டன்சத்திரம்—வடக்காடு —பாச்சலூர் சாலை.

முதல் இரண்டு சாலைகள் ஏற்கனவே போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டன. மூன்றாவது சாலை போக்குவரத்திற்காகத் திறப்பதற்குத் தயாராக உள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1976–77, 1977–78 ஆண்டுகளில் மத்திய அரசு ரூ. 3,19.76 இலட்சம் செலவில் 14 வேலைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1979ஆம்

ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் நாளில் முடிவடையும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதற்கும் உத்தேச நிலுவை தொகை ரூபாய் 252.80 இலட்சம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

பெட்ரோல் மீது விதிக்கப்படும் சுங்கம் மற்றும் ஆயத் தீர்வையின் வாயிலாக கிடைக்கும் தொகையிலிருந்து ஒதுக்கப்பட்டுவரும் ஒதுக்கீட்டுத் தொகையின் வீதத்தை அதிகரித்தும் மற்றும் அதிவேக டீசல் எண்ணெயின் மீதும் தீர்வை விதித்து அத்தொகையையும் இந்த நிதியின் கீழே கொண்டுவந்து மைய சாலை நிதியைப் பெருக்குவது குறித்தும் இம்மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது.

பாம்பன் பாலத் திட்டம்.

18. பாம்பன் பாலத் திட்டம் அலை கடலில் அமைக்கப்படவிருக்கும் தனித்தன்மை வாய்ந்த திட்டமாகும். இவ்வேலை தேசிய நெடுஞ்சாலை 49-ல் அமைந்திருப்பதால் இதன் மொத்தச் செலவும் மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மத்திய அரசுக்காக மாநில அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு தொகை ரூபாய் 532.87 இலட்சங்களாகும். இதில் ரூபாய் 60 இலட்சம் இருபக்கமும் அணுகுசாலைகள் அமைப்பதற்கான மதிப்பீடு ஆகும். இத்திட்டத்திற்கு மத்திய அரசு 1972-ம் ஆண்டு மார்ச்சு மாதம் ஒப்புதல் வழங்கியது. இப்பாலத்தில் 76 பாலக்கண்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 89 அடி அகலமும் உள்ளவை. மத்தியில் கப்பல் போக்குவரத்து வசதிக்காக 378 அடி அகலம் உள்ள ஒரு பாலக்கண்ணும், 225 அடி உள்ள இரு பாலக்கண்களும் அமைந்திருக்கும். தங்கு தடையற்ற கப்பல் போக்குவரத்திற்காகப் பாலத் தளத்தின் கீழ்மட்டம் உயர்ந்த அலை மட்டத்திலிருந்து சுமார் 55 அடி உயரத்தில் உள்ளது. ரூபாய் 100 இலட்சம் இத்திட்டத்திற்காக 1977–78 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வேலை டிசம்பர் 1979-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாநிலத் தொடர்பு மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டப்பணிகள்.

முன்னுரிமை.

19. பொருளாதார மாநிலத் தொடர்பு முதன்மைப்பணிகளுக்காக சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்கும், அவற்றை மேம்படுத்துவதற்கும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம். இது ஒரு கடன் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் பொருளாதார மாநிலத் தொடர்பு முக்கியம் வாய்ந்த தேர்வு செய்யப்பட்ட குறிப்பிட்ட பணிகளுக்கு அரசு ஒவ்வோராண்டும்

[1978 மார்ச் 20

தேவையான உதவி செய்கிறது. கீழ்க்காணும் வகையைச் சார்ந்த சாலைகள் மற்றும் பால வேலைகள் இத்திட்டத்தின்கீழ் பரிசீலனைக்குக் எடுத்துக் கொள்ளக் கருதப்படுகின்றன.

(அ) மாநிலங்களை இணைக்கக்கூடிய நேரடிப்போக்குவரத்துச் சாலைகள்.

(ஆ) கூடிய விரைவில் இருப்புப் பாதைகள் அமைக்க முடியாத புதிய இடங்களில் புறப்பகுதிகளை இணைக்கும் சாலைகள் மற்றும் பாலங்கள்.

(இ) உயர்ரக தாதுவளங்களை / இயற்கை வளங்கள் கொண்ட மலைப்பாங்கான மற்றப் பகுதிகளை இணைத்துப் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படும் சாலைகள் மற்றும் பாலங்கள் போன்றவை.

நான்காவது திட்டக் காலத்தில் ரூபாய் 261.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில் உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையில் 38 பாலங்கள் கட்ட மத்திய அரசு அங்கீகாரம் அளித்தது. மேற்கொண்டு மேலே ஆகும் செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நிபந்தனை விடப்பட்டது. மேற்கூறிய 38 பால வேலைகளில் 32 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ளவைகளில் வேலைகள் நடந்து வருகின்றன.

31-1-1978 வரை இதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 370.31 இலட்சமாகும். இதில் மத்திய அரசு கடனுதவி ரூபாய் 261.00 இலட்சமாகும். முழுவேலைகளையும் எல்லாவகையிலும் 1978–79-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் திருச்சி மாவட்டத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே மணப்பாறை-துறையூர் சாலையில் முசிறியையும்-குளித்தலையையும் இணைக்க ரூபாய் 139 இலட்சம் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது. இப்பணி நான்காவது மற்றும் ஐந்தாவது திட்டத்தில் மாநிலத் தொடர்பு மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ள மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆயினும் மத்திய அரசு நான்காவது அல்லது ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் இதனைச் சேர்த்துக் கொள்ள ஒப்புக்கொள்ளாததால் இத்திட்டம் மாநில அரசு நிதியிலிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும் ரூபாய் 60 இலட்சம் செலவில் ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மத்திய அரசின் ஒப்பளிப்பு பெற்றுள்ள கீழ்க்கண்ட இரண்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் பெரும்பகுதி 1978–79-ல் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1978 மார்ச் 20]

(1) சென்னை-திருத்தணி சாலையை கி.மீ. 47/0 முதல் கி.மீ. 85/6 வரை செப்பனிடவும், அரக்கோணம் ரேணிகுண்டா சாலையில் கி.மீ. 13/8 முதல் கி.மீ. 23/2 வரை உள்ள பகுதியை தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்குக் கொண்டு வருதல் (செங்கல்பட்டு மாவட்டம்) ரூ. 40 இலட்சம்.

(2) மார்த்தாண்டம்—பளிச்சமோடு ரோட்டில் மைல் 0/8 (கி.மீ. 1/6-ல்) குழித்துறை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் (குமரி மாவட்டம்) ரூ. 20 இலட்சம்.

வெள்ள நிவாரணப் பணிகள்.

20. 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் முன் நிகழ்ந்திராத வகையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தினால் சேதமான சாலைகள் மற்றும் பாலங்களின் விவரங்கள் பின்வருமாறு :—

	(மதிப்பீடு கோடி ரூபாயில்.)
தேசிய நெடுஞ்சாலைகள்	3.50
மாநில அரசுச் சாலைகள்	13.31
ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள்	13.15
மொத்தம் ..	29.96

1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் தேதி முடிய அரசுச் சாலைகளைப் பழுதுபார்க்கும் பணிகளுக்கென்று ரூபாய் 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சாலைகளுக்கென்று ரூபாய் 5 கோடியும், சிறு பாசன ஏரிகளுக்கென்று ரூபாய் 0.75 கோடியும், கட்டிடங்களுக்கு ரூ. 0.45 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகள் நடைபெற்று வருகின்றன. தேசிய நெடுஞ்சாலைப் பணிகளுக்கென்று மத்திய அரசு ரூபாய் 35 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மையநிதி சாலை வேலைகளுக்கென்று மத்திய அரசு ரூபாய் 7 இலட்சம் ஒதுக்கியுள்ளது. வெள்ள நிவாரண வேலைகளைத் துரிதமாகச் செயல்படுத்தும் பொருட்டு, அரசு வேலைகளுக்கென்று நிர்வாக ஒப்புதல், தொழில் நுட்ப ஒப்புதல், வேலைகளைப் பிரித்தல், ஒப்பந்தம் கோருதலைத் தவிர்த்தல், உள்ளூர் மக்களுக்கு ஒப்பந்தமின்றி நேரடியாக வேலைகளை ஒப்படைத்தல் போன்ற காரியங்களுக்கு சம்பந்தப்பட்ட விதிமுறைகளைத் தளர்த்தி நெடுஞ்சாலைத் துறையிலுள்ள பல்வேறு வகையான அதிகாரிகளுக்கு அனைத்து நிலைகளிலும் அதிகாரம் வழங்கியுள்ளது.

பணி ஆலோசனைக் குழுக்கள்.

21. அரசுத் துறைகளில் ஏற்படும் செலவு குறித்து துறை அளவில் மட்டுமே ஆய்வு செய்வதைவிட பொது மக்களின் தொடர்ந்த கண்காணிப்புக்கும் உட்பட்டிருக்க வேண்டுமென்பதே இவ்வரசின் கொள்கையாகும். சாலை மற்றும் பால வேலைகள் உள்ளிட்ட பொதுப்பணிகளின் தரம், முன்னேற்றம் ஆகியவை குறித்து ஆய்வு செய்வதில் உள்ளூர் மக்களும் பங்கு கொள்ள வேண்டும். அப்போதுதான் முறைகேடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்டு, அரசு செலவிடும் பணத்திற்கு நல்ல பலன் கிட்டும். இந்த நோக்கங்களை எய்துவதற்காக, கோட்டாட்சியரின் தலைமையில் வட்ட அளவில் பணி ஆலோசனைக் குழுக்களை அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழுவில், தேர்ந்தெடுக்கபட்ட மக்கள் பிரதிநிதிகள், பொது மக்களின் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆகியோர் இருப்பர். இந்த ஆலோசனைக் குழு துறை கட்டிவரும் பணிகள் அனைத்தையும் பார்வையிட்டு அவற்றின் முன்னேற்றத்தையும் தரத்தையும் ஆய்வு செய்யும். முறைகேடுகளும், ஊழல்களும், நடந்திருப்பதாகத் தெரிய வருமாயின் அவை அரசுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்படும். பணி நடைபெறும் இடம் ஒவ்வொன்றிலும் பணியின் விவரங்கள், ஒப்பந்தக்காரரின் பெயர், ஒப்பந்தம் அளிக்கப்பட்ட நாள், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி முடிக்கப்படுவதற்கு வரையறுக்கப்பட்ட நாள் ஆகியவை குறித்த விவரங்கள் எல்லோருக்கும் தெரியும் வகையில் வைக்கப்பட வேண்டும். அதனால், பொதுமக்கள், பணியின் முன்னேற்றம், தரம் குறித்துத் தெரிந்து மனநிறைவு கொள்வர்.

வேலையில்லாப் பொறியாளர்களுக்கு உதவுவதற்கான திட்டம்.

22. வேலையில்லாப் பொறியாளர்களுக்கு பெரும் அளவில், உதவுவதற்கு இவ்வரசு, வேலைகளுக்கான ஒப்பந்தங்கள் வழங்கும் முறையில் ஏற்கெனவே உள்ள சலுகைகளை மேலும் தளர்த்திவிட்டுள்ளது. இச்சலுகைகளை வேலையில்லாப் பட்டதாரிகளும் சான்றிதழ் பெற்றவர்களும் அனுபவிக்கலாம்.

பணிகளின் முன்னேற்ற ஆய்வுக்குழு அமைப்பு (Pert Cell)

23. பல்வேறு காரணங்களை முன்னிட்டு திட்ட வேலைகள் நாம் திட்டமிட்ட வகையில் செயல்படுத்தப்பட முடியாமற் போயின என்பது நம்முடைய அனுபவமாகும். ரூபாய் 3 இலட்சமும் அதற்கு மேல் மதிப்பீடு உள்ள சென்னை நகருக்காக அனுமதிக்கப்பெற்றுள்ள அனைத்து சாலை பால வேலையையும் முன்னேறுவதை ஆய்வு செய்வதற்கு பணிகளின் முன்னேற்ற ஆய்வுக்குழு (pert cell)

ஒன்று தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ளது. அதேபோல் இதர மாவட்டங்களில் ரூபாய் 20 இலட்சமும் அதற்கு மேல் மதிப்பீடு உள்ள எல்லா சாலை, பால வேலைகளையும் ஆய்வு செய்வதற்கென்று ஆய்வுக் குழுக்கள் விரைவில் துவக்குவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசிலனையில் உள்ளது.

கிராமச் சாலைகளின் சமூக-பொருளாதார ஆய்வு :

24. கிராமப்புறங்களில் சாலைகள் அமைப்பதற்கென்று ஏராளமான கோரிக்கைகளை அரசு பெற்றுவருகின்றது. ஆனால், அரசின் வசம் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, சம்பந்தப்பட்ட அம்சங்களைக் கணக்கில் கொண்டு பணிகளுக்குத் தகுந்த முதன்மையை நிர்ணயம் செய்யாமல் தற்கால அடிப்படையில் பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இதனால் பல ஏற்றத்தாழ்வுகள் உண்டாகின்றன. ஆகவே, கிராமப் புறங்களில் புள்ளி விவரங்கள் சேகரித்து சாலை வேலைகளைத் தேர்ந்தெடுப்பதென்று ஒரு திட்டமான வரையறை ஏற்படுத்தப்படவிருக்கிறது. கீழ்க்காணும் மூன்று கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு குறைந்த தேவையான சாலை வசதி உண்டாக்குவதற்கான ஒரு சமூக-பொருளாதார முன்னோடி ஆய்வு செயல்படவிருக்கிறது.

(i) நகரத்தைச் சார்ந்த பகுதிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடிய பல்வேறு அத்தியாவசிய வசதிகளைச் செய்து கொடுத்தல்.

(ii) பொருளாதார ஆக்க வேலைகளுக்கான முன்னேற்ற வேலைகளைச் செயல்படுத்தல், மற்றும்

(iii) முன்னேறிய பகுதியோடு தொடர்புள்ள மேம்பாட்டு வேலைகள் ; முதற்கண், மேற்கூறிய முன்னோடி ஆய்வு வேலை மூன்று வெவ்வேறு பஞ்சாயத்து ஒன்றியங்களில் மேற்கொள்ளப்படும். அவை (1) திருவாடானை பஞ்சாயத்து ஒன்றியம் (இராமநாதபுரம் மாவட்டம்) கடற்கரைப் பகுதி, (2) ஜமனமருதூர் பஞ்சாயத்து ஒன்றியம் (வட ஆற்காடு மாவட்டம்) மலைப்பகுதி, மற்றும் (3) செஞ்சி பஞ்சாயத்து ஒன்றியம் (தென் ஆற்காடு மாவட்டம்) சமவெளிப் பகுதி.

நிலப்படை :

25. தலைமைச் செயலாளரின் தலைமையில் நிலப்படைத் திட்டத்தை இம் மாநிலத்தில் உருவாக்க குழு ஒன்று அமைத்துள்ளது. விரைவில் அப்படை அமைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

<u>நேரடியாகச் செயலாற்றும் பணிகள் :</u>

26. ஒப்பந்தக்காரர்கள் சில வேலைகளைச் செய்வதில் காட்டும் தாமதத்தைக் குறித்து அரசு அதிருப்தி கொண்டுள்ளது. குறிப்பாக தேசிய நெடுஞ்சாலைத்துறை வேலைகளில் அவற்றைச் செய்வதற்கான, போதிய சாதனங்களும், இயந்திரங்களும், அனுமதிக்கப்பட்ட அளவில் ஒப்பந்தக்காரர்களிடம் இல்லை.. ஆகையால், இவ்வேலைகள் பல ஆண்டுகளாக நீட்டிக்கப்படுகின்றன. இதன் காரணமாக இவ்வேலைகளை 'கட்டுமானக் கழகம்' மூலமாகவோ அல்லது இத்துறை மூலமாகவோ செயல்படுத்துவது குறித்து மாற்று யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

<u>சாலை விபத்துக்களை தடுப்பதற்கான ஆய்வு :</u>

27. சாலைகளில் வாகனங்களால் விபத்துகள் ஏற்படுகின்றன. அவற்றில் விபத்துக்களில் சில சாலைகளின் நேர்பாடு, சாலைகளின் மேற்பரப்புக் குறைபாடுகள் முதலியவற்றால் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. இக்குறைப்பாடுகள், விபத்திற்கு எவ்வாறு காரணமாகின்றன என்பதை எளிதாகக் கண்டறியவும் அவைகளைத் தடுக்கவும் சீர் செய்யவும் முடியும். இதுபற்றிய ஆய்வு ஒன்றை அரசு நடத்த இருக்கிறது.

<u>தலைமைச் செயலகத்தில் 'சாலைகள்' என்ற பொருள் பொதுப் பணித்துறையிலிருந்து போக்குவரத்துத்துறைக்கு மாற்றப்படல்.</u>

28. "சாலைகள்" என்ற பொருள் தற்பொழுது தலைமைச் செயலகத்தில் பொதுப்பணித்துறையில் செயல்பட்டு வருகிறது.

திரு. சி. ஆர். பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் உள்ள போக்குவரத்துத் துறைக்கான குழு தனது 1977 ஜூன் திங்கள் அறிக்கையில் சாலைகள் என்னும் பொருள் பொதுப் பணித்துறையினின்று "சாலைகள் போக்குவரத்து" என்னும் பொருளைக் கவனித்து வரும் போக்குவரத்துத் துறைக்கு மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்தது. பிரதான சாலை வேலைகளுக்கும், அதன் பராமரிப்புக்கும் மிகக் குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அப்போது பல்வேறு இடங்களிலிருந்து குறிப்பிட்ட பகுதிகளில் சாலை வேலைகள் எடுத்துச் செயலாற்றப்பட போட்டிக் கோரிக்கைகள் இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட போட்டிக் கோரிக்கைகள் இருப்பதால் குறைவான நிதி வசதியை முன்னிட்டு போக்குவரத்து திட்டங்கள் மீது தனிக் கவனம் கொண்டு சாலைகள் மீதுள்ள செலவை வரையறை செய்யும் கவனத்தோடு வரையப்பட்ட திட்டமொன்று அவசியமாகிறது. அமைச்சர் நிலையைப் பொறுத்த வரையில் சாலைகள் மற்றும் சாலைப் போக்குவரத்து என்னும் பொருட்கள் போக்கு

வரத்துத் துறை அமைச்சராலேயே கவனிக்கப்படுவதால் இந்த ஒருங்கிணைப்பு மேற்படி இரு பொருள்களும் தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத் துறையிலேயே செயல்பட்டால்தான் முற்றுப் பெறும். மேற்கண்ட போக்குவரத்துப் பகுதிக் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டு 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து 'சாலைகள்' எனும் பொருள் தலைமைச் செயலகத்தில் பொதுப் பணித் துறையினின்று போக்குவரத்துத் துறைக்கு மாற்றப்படலாம் என முடிவு செய்துள்ளது.

29. 1977–78-ல் பல்வேறு சாலை மேம்பாடு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஒரு விரிவான ஆய்வு அறிக்கையையும் அவையின் முன் வைக்கிறேன்.

<u>இணைப்பு III.</u>

262-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக்காண்க.]

<u>தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து—1977-78.</u>

<u>ஆய்வுரை.</u>

<u>போக்குவரத்துத் துறையின் அமைப்பு.</u>

கீழ்க்காணும் சட்டங்களையும் அவற்றின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளையும் செயற்படுத்துவது போக்குவரத்துத் துறையின் முக்கிய பணியாகும் :—

(1) 1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டம்.

(2) தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டம்.

போக்குவரத்து ஆணையாளரின் நிர்வாகப் பொறுப்பின்கீழ் போக்குவரத்துத் துறை செயல்படுகிறது. இந்த ஆணையாளர் வருவாய்த் துறைவாரிய முதல் உறுப்பினர் ஆவார் ; இவர் மாநில அரசுப் போக்குவரத்துத் துறை அதிகார மன்றத்தாரும் ஆவார் ; மாநில அளவில், போக்குவரத்துத் துறை இணை ஆணையாளரும், போக்குவரத்துத் துறை துணை ஆணையாளரும், போக்குவரத்துத் துறை ஆணையாளருக்கு உதவியாக இருக்கின்றனர். இணை ஆணையாளர் போக்குவரத்துத் துறை ஆணையாளரின் செயலாளராகவும், துணை ஆணையாளர் போக்குவரத்துத் துறை அதிகார மன்றத்தாரின் செயலாளராகவும் பணியாற்றுகின்றனர். தலைமையிடத்தில், உதவிச் செயலாளர்கள் இருவர், துறைப் பிரதிநிதி ஒருவர், முதுநிலைக் கணக்கு அதிகாரி ஒருவர், மோட்டார் வண்டிகள் உதவிப் பொறியாளர் ஒருவர், புள்ளியியல்

அதிகாரி ஒருவர் இருக்கின்றனர். மாநில அரசுப் போக்குவரத்து அதிகார மன்றம். அதன் செயலாளர், வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றங்கள், வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றங்களுடைய செயலாளர்கள் ஆகியோர் பிறப்பிக்கும் உத்திரவுகளுக்கு எதிரான மேல் முறையீடுகளையும் மறு ஆய்வு மனுக்களையும் மாவட்ட நீதிபதி தரத்திலுள்ள மாநில அரசுப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம் விசாரணை செய்கிறது. மாநில அரசுப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றச் செயலாளர் என்று பதவிப் பெயர் கொண்ட வட்டாரப் போக்குவரத்து அதிகாரி தரத்திலுள்ள அதிகாரி ஒருவர் மாநில அரசுப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றத்துக்கு உதவியாகப் பணியாற்றுகின்றார்.

2. போக்குவரத்துத் துறை, 15—9—1974 முதற்கொண்டு சீரமைக்கப்பட்டுள்ளது. சீரமைக்கப்பட்டுள்ள அமைப்பில் பேருந்துகளைப் பார்வையிடுவது, துறை வசூலிக்க வேண்டியுள்ள வரியைக் கட்டுவதற்குப் பொதுமக்கள் மாவட்டத் தலைமையிடங்களுக்குச் செல்வதற்குப் பதிலாக, அதைத் தாமே வசூலிப்பது முதலிய துறைப் பணிகளை கள அலுவலகங்களே செய்கின்றன. வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளின் தலைமையிடங்களில் உள்ள 15 அலுவலகங்கள் உட்பட, அத்தகைய அலுவலகங்கள் 44 உள்ளன. வண்டிகளின் எண்ணிக்கைக்கேற்ப ஒவ்வொரு பிரிவும், மோட்டார் வண்டிகள் ஆய்வாளர் தரம் I-ன் தலைமையின் கீழ் அல்லது மோட்டார் வண்டிகள் ஆய்வாளர் தரம் I மற்றும் II-ன் தலைமையின்கீழ் உள்ளது. வட்டாரம் முழுவதும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் பொறுப்பில் இருக்கிறது. இவர், மாவட்ட ஆட்சித் தலைவரான சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றத்தாருக்குச் செயலாளராகப் பணியாற்றுகிறார். மேற்பார்வை வசதிக்காக மாநிலம் முழுவதும் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது ஒவ்வொரு மண்டலமும் போக்குவரத்துத் துணை ஆணையாளர் பொறுப்பில் உள்ளது. சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்துத் துணை ஆணையாளருக்கு உதவியாகத் தலைமையிடங்களில் நிர்வாகப் பணியாளர்கள், மோட்டார் வண்டி ஆய்வாளர்கள் (பறக்கும் படைகள்), இளநிலைக் கணக்கு அதிகாரி ஒருவர் ஆகியோரும், மாவட்டங்களில், வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளும் செயல்படுகின்றனர்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரை போக்குவரத்துத் துணை ஆணையாளர் ஒருவர் வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றமாகச் செயல்படுகிறார். சென்னைப் பெருநகரில் மட்டும் இயங்கும் பேருந்துகளைப் பொறுத்தவரை, நாட்டு உடைமையாக்கப்பட்ட பேருந்துப் போக்குவரத்துத் தொடர்பான பணியையும் அவர் கவனிக்கிறார். சென்னை மாநகரிலுள்ள வட்டாரப்

போக்குவரத்து அதிகாரி, வட்டாரப் போக்குவரத்துக் கூடுதல் அதிகாரி, மோட்டார் வண்டி ஆய்வாளர்கள் ஆகியோர் அவரது கட்டுப் பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றனர்.

மோட்டார் வண்டிகள் போக்குவரத்து வளர்ச்சியும், போக்குவரத்து வசதிகளும்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான ஒப்பீட்டு புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	பயணிப் பேருந்துகள்.		சரக்கு வண்டிகள்.				
	தனியார் துறை.	அரசுத் துறை.	பொது வாடகை வண்டிகள்.	தனியார் வண்டிகள்.	ஒப்பந்த வண்டிகள்.	ஏனைய போக்குவரத்து வண்டிகள்.	மொத்தப் போக்குவரத்து வண்டிகள்.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
31-12-1976	4,724	4,918	18,523	2,782	12,795	11,804	55,546
31-12-1977	4,549	4,988	19,832	2,881	13,252	13,242	58,744

பயணிகள் போக்குவரத்து வண்டிகளை நாட்டுடைமை ஆக்கும் அரசின் கொள்கைக்கேற்ப, அரசுத் துறையில் இயங்கிவரும் பயணிப் பேருந்துகளின் எண்ணிக்கை பெருகியும், தனியார் துறையில் இயங்கி வரும் பயணிப் பேருந்துகளின் எண்ணிக்கை குறைந்தும் வருகிறது. வளர்ந்து வரும் வர்த்தக, வணிகத் தேவைகளை ஈடு செய்ய அரசுப் போக்குவரத்து வண்டிகளுக்கும், தனியார் போக்குவரத்து வண்டிகளுக்கும், கட்டுப்பாடு ஏதுமின்றி, மாநில அளவில் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டில் மேலும், 1,408 சரக்கு போக்குவரத்து வண்டிகள் இயங்கத் தொடங்கின. இந்தியா முழுவதும் சரக்குகள் மாநிலம் விட்டு மாநிலம் செல்வதை ஊக்குவிக்கும் பொருட்டு வாடகை வண்டிகளுக்குத் தேசிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் வழங்கப்படுவதற்கென மத்திய அரசு ஒதுக்கியுள்ள 400 அனுமதிகளில், மாநில அரசுப் போக்குவரத்து அதிகார மன்ற

[1978 மார்ச் 20

ஏற்கெனவே 390 அனுமதிகள் வழங்கியுள்ளது. தேசிய அனுமதி பெற்ற ஆறு வண்டிகளை ஓட்ட அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சுற்றுலாவை அபிவிருத்தி செய்ய இந்தியா முழுவதும் ஒப்பந்த வண்டிகளை இயக்க தேசிய அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. விவரம் வருமாறு :—

வகை.	ஒதுக்கீட்டளவு.	வழங்கப்பட்ட அனுமதிகள்.
(1)	(2)	(3)
சுற்றுலா வாடகைக் கார்கள் ..	100	99
சுற்றுலா தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் (29 பயணிகளுக்கு மேற்பட்டு). ..	10	10
சுற்றுலா தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் (29 ப்யணிகளுக்கு மேற்படாமல்).	15	15
சரக்கு போக்குவரத்து வண்டிகள் (தேசிய அனுமதி).	400	389+1 (த.அ.).

35 பயணிகளுக்கு மேற்படாத இடவசதி கொண்ட அனைத்து இந்தியச் சுற்றுலா தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் விட கூடுதலாக 25 அனுமதிகள் இந்திய அரசு ஒதுக்கியுள்ளது. இந்த அனுமதிகளை ஒதுக்கீடு செய்ய மாநிலப் போக்குவரத்து அதிகார மன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாநிலங்கள் இடையே போக்குவரத்து.

ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் பயணிகள் போக்குவரத்தும் சரக்குகள் போக்குவரத்தும் தாராளமாக நடைபெற இயலும் பொருட்டு, அண்டை மாநிலங்களுடன் பரஸ்பர உடன்பாடுகள் செய்து கொள்ளப்படுகின்றன. மாநிலங்கள் அளவில் பயணிப் பேருந்துகளுக்கு அனுமதிகள் வழங்குவது மாநில அரசுப் போக்குவரத்து அதிகார மன்றமாகும். ஒப்பந்தம் செய்து கொள்ளும் மாநில அரசுகளின் அரசிதழில் செயற் குறிப்புகள் வெளியிடப்பட்டு, அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குக் குறையாத கால அளவில் இச்செயற் குறிப்புகள் 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 63 (3)-A பிரிவின் கீழ் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று

1978 மார்ச் 20]

அறிவிக்கப்படுகிறது. அவ்வாறு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 63 (3-B) பிரிவின்கீழ் வெளியிடப்பட வேண்டும். மாநிலப் போக்குவரத்து அதிகார மன்றம் அல்லது வட்டார போக்குவரத்து அதிகார மன்றம் அந்த ஒப்பந்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கவேண்டும். தமிழ் நாட்டிற்கும் அண்டை மாநிலங்களாகிய ஆந்திரப் பிரதேசம், கேரளம், கருநாடகம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் இடையே இத்தகைய ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றுக்கும் ஏற்கெனவே செய்து கொள்ளப் பெற்றிருக்கின்றன. அந்தந்த மாநிலங்களில் வண்டிகள் சென்று வரும் கிலோ மீட்டர் சம தொலைவுதான் இந்த ஒப்பந்தங்களில் உள்ள அடிப்படையாகும். 63 (3-B) பிரிவின் கீழ் புதுச்சேரி யூனியன் பிரதேசத்துடன் ஒப்பந்தம் செய்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தற்போது முறைசாரா ஒப்பந்தமொன்று தமிழ்நாட்டிற்கும், புதுச்சேரிக்கும் இடையே செய்து கொள்ளப் பெற்றிருக்கிறது. இதன்படி, அனுமதிகள் இவ்விரண்டு மாநிலங்களுக்குமிடையே 4:1 என்ற விகிதத்தில் பங்கிடப் பெறுகின்றன.

சரக்கு வண்டிகள், ஒப்பந்தப் பேருந்துகள் ஆகியவற்றின் அனுமதிகள் மீது மேலொப்பமிடுவதற்காக அண்டை மாநிலங்களுடன் ஏற்கெனவே செய்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் இன்னும் தொடர்ந்து செயலில் இருக்கின்றன.

கூட்டு அனுமதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு, கருநாடகம், கேரளம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், யூனியன் பிரதேசங்களாகிய புதுச்சேரி, கோவா ஆகியவை அடங்கிய தென்மண்டலத்தில் 500 சரக்கு வண்டிகள் ஓடுவதற்கு ஏற்பாடு உள்ளது.

பயணிப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கல்.

பயணிப் போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்கும் கொள்கைக்கு இணங்க, பின்வரும் வகைகளில் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமங்களின் செயல்திறன் கால அளவு முடிவடையும் பொழுது அந்தப் பேருந்து வழித்தடங்கள் அரசால் மேற்கொள்ளப்படுகின்றன :—

(அ) 75 மைல்களுக்குக் குறையாத வழித்தடங்கள் அனைத்தும் ;

(ஆ) எவ்வளவு தொலைவாக இருந்தபோதிலும், சென்னை மாநகரிலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் அனைத்தும் ;

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் உட்பட, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வழித்தடங்கள் அனைத்தும்.

இக்கொள்கை, 1967 ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்டது. பேருந்து உரிமையாளர்கள் நீதி மன்றத்திற்குச் சென்றதால் மேற்சொன்ன எல்லா வகை வழித்தடங்களையும் நாட்டுடைமையாக்க இயலாமல் போயிற்று. 1967-ல் வகுத்த நாட்டுடைமையாக்கும் கொள்கையின் வரம்பிற்குள் வரும் வழித்தடங்களில் தற்போது தனியார் பேருந்துகள் இன்னும் ஓடிக் கொண்டிருக்கின்றன. நாட்டுடைமையாக்கும் திட்டத்தை விரைவுபடுத்தும் பொருட்டு, 50 பேருந்துகளுக்கு மேல் சொந்தத்தில் வைத்துள்ள தனியார் பேருந்து உரிமையாளர்களின் பயணிப் பேருந்துகள் தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு பேருந்து உரிமையாளர்களின் பயணிப் பேருந்துகள் (கையகப் படுத்தல்) சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. ஐந்தாண்டுக் காலத்திற்குள் பயணிப் போக்குவரத்துப் பணிகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கும் தனது கொள்கையை 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அரசு அறிவித்தது. இக்கொள்கைக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப் படுத்தல்) சட்டம் செல்லுபடியற்றதென உயர்நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. தலைமை உயர் நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு ஒன்று செய்து கொள்ளப்பட்டது அதன்மீது இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. தலைமை உயர்நீதி மன்றம் அது குறித்து முடிவெடுக்கும் வரையில், மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள இயல்பான சட்டவிதித் துறையின் கீழ் இக்கொள்கை குறித்து தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தனியார் பேருந்து உரிமையாளர்கள் நீக்கப்படுவதற்கான, நடைமுறை இதுவாக இருக்கையில், புதிய வழித்தடங்களைத் தொடங்குவதற்கும் ஏற்கனவே உள்ள போக்குவரத்துப் பணிகளைப் பெருக்குவதற்குமான பொறுப்பு அரசுப் போக்குவரத்து நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் அதற்கெனத் திட்டங்களை வெளியிடலாம்.

ஆலோசனைக் குழுக்கள்.

பல்வேறு போக்குவரத்துத் துறைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு நிலவுவதை உறுதி செய்வதற்காக இம்மாநிலத்தில் தமிழ் நாடு போக்குவரத்து வளர்ச்சி மன்றம் ஒன்று உள்ளது. இதன் தலைவர் போக்குவரத்துத்துறை அமைச்சராவார். மேற்

சொன்ன மன்றத்தின்கீழ் உள்ள நிலைக் குழுக்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

நிலைக் குழுக்கள்.	அமைப்பாளர்.
(1)	(2)
1 சாலை, இரயில், விமானம் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து, கரையோரக் கப்பல் போக்குவரத்து ஆகியவற்றை மேம்படுத்தலும், பேணுதலும்.	போக்குவரத்துத் துறைச் செயலாளர்.
2. போக்குவரத்துப் பொறியியல், போக்குவரத்து விதிகளைச் செயற்படுத்தல், போக்குவரத்து விதிகளைப் பின்பற்றும்படி பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்தல்.	உள்துறைச் செயலாளர்.
3. போக்குவரத்து வண்டிகள், துணைக் கருவிகள் எரி பொருள் ஆகியவற்றைத் தயாரித்து வழங்குதல்.	தொழில் துறைச் செயலாளர்.

போக்குவரத்தைக் கவனித்து வரும் பல்வேறு துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த போக்குவரத்து துறை அமைச்சர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று உள்ளது.

காவல் துறை ஆணையாளர் தலைவராகவும், காவல் துறை துணை ஆணையாளர் (போக்குவரத்துப் பிரிவு) அவரது செயலாளராகவும், அரசுச் சார்புள்ள ஏழு உறுப்பினர்களும் கொண்ட மாநகரச் சாலை மேம்பாடு-போக்குவரத்துத் திட்டக் குழு ஒன்று உள்ளது.

மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும், காவல் துறை சூப்பிரண்டு செயலாளராகவும் ஒவ்வொரு மாவட்டத்தின் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி உட்பட ஆறு அல்லது ஏழு மாவட்ட அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்டச் சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்டக் குழுக்கள் உள்ளன.

கட்டணங்கள்.

பெட்ரோல் ஏனைய பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் உயர்ந்ததன் காரணமாக, ஒப்பந்தப் பேருந்துகள், பயணிப் பேருந்துகள் ஆகியவற்றின் கட்டண விதங்கள் முறையே 1974 ஆம் ஆண்டிலும், 1976 ஆம் ஆண்டிலும் கடைசியாகத் திருத்தி யமைக்கப்பட்டன. தற்போது நடைமுறையில் உள்ள திருத்தக் கட்டண விதங்கள் பின் வருமாறு :—

விவரங்கள். (1)	கட்டண விதங்கள். (2)
பயணிப் பேருந்துகள்.	
1. விரைவுப் பயணிப் பேருந்துகள்.	சமவெளிகளில் ஒரு கிலோ மீட்டருக்கு 6 காசு (மலைச் சாலைகளில் ஒரு கிலோ மீட்டருக்கு 8 காசு) உயர் வகுப்பு இடவசதி செய்து கொடுக்கப் பட்டிருப்பின் ஒரு கிலோ மீட்டருக்குக் கூடுதலாக 1 காசு
2. சாதாரணப் பயணிப் பேருந்துகள்.	சமவெளிகளில் ஒரு கிலோ மீட்டருக்கு 5 காசு (மலைச் சாலைகளில் ஒரு கிலோ மீட்டருக்கு 7 காசு.)
3. பெருநகர, நகரப் பயணிப் பேருந்துகள்.	முதல் கட்டண நிலைக்கு 20 காசு ; அதற்கு அடுத்த ஒவ்வொரு நிலைக்கும் 5 காசு. (மாநகரின் எல்லைப் பகுதியிலிருந்து தொடங்கி முதன்மை வழித்தடம் ஒன்றை இணைபுச்கும் இணைப்பு வழித்தடங்கள் வகையில் முதல் கட்டண நிலைக்கு 15 காசு.)
4. சந்தைகள், திருவிழாக்கள். போன்ற சிறப்பு நிகழ்ச்சி காலங்களில் ஓடும் பயணிப் பேருந்துகள்.	ஒரு கிலோ மீட்டருக்கு 6 காசு.

விவரங்கள். (1)	கட்டண விதங்கள். (2)	
ஒப்பந்த ஊர்திகள்.		
1. ஆட்டோ ரிக்ஷாக்கள் ..	ஒரு கிலோ மீட்டருக்கு 40 காசு ; குறைந்த அளவு கட்டணம் 80 காசு (காத்திருப்பதற்கான கட்டணம் ஒவ்வொரு 5 மணித் துளிகளுக்கும் 5 காசு).	
வாடகைக் கார்கள் ..	ஒரு கிலோ மீட்டருக்கு 90 காசு ; குறைந்த அளவுக் கட்டணம் ரூ. 1.70 காசு (காத்திருப்பதற்கான கட்டணம் ஒவ்வொரு 5 மணித் துளிகளுக்கும் 10 காசு).	
சுற்றுலா வாடகைக் கார்கள்.	சமவெளியில் கட்டணம்.	மலைச்சாலைகளில் கட்டணம்.
14 குதிரைத் திறனுக்கு அதிகமாகவும் 22 குதிரைத் திறனுக்குக் குறைவாகவுமுள்ள நடுத்தர வகைக் கார்.	ஒரு கிலோ மீட்டருக்கு 90 காசு.	ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 1.
22 குதிரைத் திறனுக்குக் குறையாத பெரிய கார்கள்.	ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 1.	ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 1.20.

கார்களில் சேர்வளிச் சாதனமிருப்பின் ஒரு கிலோ மீட்டருக்குக் கூடுதல் கட்டணம் 15 காசு ஆகும்.

[1978 மார்ச் 20

வரி விதிப்பு.

தமிழ் நாட்டில் மோட்டார் வண்டிகளின் மீதான வரிகள் சீரமைக்கப்பட்டதற்கிணங்க, தமிழ் நாடு 1931 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டமும், தமிழ் நாடு 1952 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (பயணிகள், சரக்குகளின் மீது வரி விதிப்பு) சட்டமும் ரத்து செய்யப்பட்டு அவற்றுக்குப் பதிலாக. 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் வகையில் 1974 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த புதிய வரிவிதிப்புச் (சட்டம் 13/1974) சட்டம் நிறைவேற்றப் பட்டது. இச்சட்டம், தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் (திருத்தம்) சட்டத்தால் திருத்தி அமைக்கப்பட்டது. இத்திருத்தச் சட்டம் 1—10—1974 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இத்திருத்தச் சட்டம். பயணிப் பேருந்துகளின் மீது மேல்வரி விதிக்கும் பொருட்டு தமிழ் நாடு 1976 ஆம் ஆண்டு மோட்டர் வண்டிகள் வரி விதிப்புச் (திருத்தம்) சட்டத்திஞல் (குடியரசுத் தலைவர் சட்டம் 3/1976) மேலும் திருத்தியமைக்கப்பட்டது. இவ்வாறு திருத்தப்பட்ட சட்டம் 1—4—1976 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது.

புதிய வரிவிதிப்பின் முக்கிய கூறுகள் பின் வருமாறு :—

(i) தமிழ் நாடு மாநிலத்தில் வைத்து வரப்படும் அல்லது பயன்படுத்தப்படும் மோட்டார் வண்டிகள் தொடர்பாக வரி செலுத்துவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

(ii) சாலைகளில் பயன்படுத்தப்படாத வண்டிகளைப் பொறுத்தவரையில், விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுவதன் மேல், வரி திருப்பிக் கொடுக்கப்படும்.

(iii) வண்டிகள் சாலைகளில் ஓட்ப் பயன்படுத்தப்படவில்லை என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு வண்டியின் உரிமையாளரைச் சாரும்.

(iv) பயணிப் பேருந்துகளிலும் சரக்கு வண்டிகளிலும் பயணிகளுக்காகவும் சரக்குகளுக்காகவும் தனியாக வரி விதிக்கப் பட மாட்டாது.

(v) பயணிப் பேருந்துகளைப் பொறுத்த வரையில் ஒரு பேருந்து நாள்தோரும் ஓடுகிற தொலைவு எதுவாக இருந்த போதிலும், அதில் பயணம் செய்ய இயலும் பயணிகளின் எண்ணிக்கை அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வீதங்களில்

1978 மார்ச் 20]

வரி விதிக்கப்படும். வரி வீதங்களைப் பொறுத்த வரையில் நின்று பயணம் செய்யும் பயணிகள், இருக்கையில் அமர்ந்து பயணம் செய்யும் பயணிகள் என்ற வேறுபாடு காட்டப்படமாட்டாது.

(vi) சரக்கு வண்டிகளைப் பொறுத்தவரையில், சரக்குகள் ஏற்றப்பட்ட நிலையில் உள்ள அதன் எடையின் அடிப்படையில் வரி விதிக்கப்படுகிறது. வரி விதிப்பு நிலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள வரி வீதங்கள் பின்வருமாறு :—

பயணிப் பேருந்துகள் (சாதாரணமானவை).	பயணி ஒருவருக்குக் காலாண்டுக்கு ரூ. 180.
விரைவுப் பேருந்துகள் ..	பயணி ஒருவருக்குக் காலாண்டுக்கு ரூ. 200.
சென்னை பெருநகர்ப் பகுதியில் ஓடும் பயணிப் பேருந்துகள்.	பயணி ஒருவருக்குக் காலாண்டுக்கு ரூ. 50.
மதுரை நகர்ப் பகுதி, பிற நகரப் பகுதிகளில் ஓடும் பயணிப் பேருந்துகள்.	பயணி ஒருவருக்குக் காலாண்டுக்கு ரூ. 90.
ஒப்பந்தப் பேருந்துகள் (ஆம்னி பஸ்). ..	பயணி ஒருவருக்குக் காலாண்டுக்கு ரூ. 200.
சுற்றுலாப் பயணி வண்டிகள்	பயணி ஒருவருக்குக் காலாண்டுக்கு ரூ. 100.

பயணிப் பேருந்துகளைப் பொறுத்தவரை, விரைவு பேருந்துகளுக்குப் பயணி ஒருவருக்குக் காலாண்டுக்கு விதிக்கப்படும் மோட்டார் வண்டி வரியுடன் மேல்வரிக் கட்டணமாக ரூ. 40-ம், பெருநகர், மாநகர், நகரப் பேருந்துகள் நீங்கலாக சாதாரண பயணிப் பேருந்துகளுக்கு பயணி ஒருவருக்குக் காலாண்டுக்கு மேல்வரிக் கட்டணமாக ரூ. 35-ம் விதிக்கப்படுகின்றது.

கூட்டு அனுமதித் திட்டத்தின் கீழ் சூழ்நிலைக்கேற்ப ஆந்திரப் பிரதேசம், கேரளம், மகாராஷ்டிரம், கருநாடகம், தமிழ் நாடு (சொந்த மாநிலம் நீங்கலாக) ஆகிய மாநிலங்களைப் பொறுத்த வரை வண்டி ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு 700 ரூபாயும், கோவா, புதுச்சேரி மாநிலங்களைப் பொறுத்தவரை வண்டி ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு 150 ரூபாயும் 1—1—1977-லிருந்து இணக்க வரியாகச் செலுத்தப்பட வேண்டும். பேருந்து உரிமையாளர் எவரேனும் கூட்டு அனுமதி வரியை வரையறுக்கப்பட்டுள்ள காலத்திற்குள் செலுத்தாவிட்டால், ஆந்திர மாநிலம்,

கேரளம், மகாராஷ்டிரம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைப் பொறுத்தவரை, அவர் மாதம் ஒன்றுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு அபராதம் ரூ. 25 செலுத்த வேண்டும். புதுச்சேரி, கோவா மாநிலங்களைக் பொறுத்தவரை மாதம் ஒன்றுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூ. 2 அபராதம் செலுத்த வேண்டும்.

நாடு முழுவதும் சரக்கு வண்டிகள் சென்று வர அனுமதி வழங்குவது குறித்து இந்திய அரசு வகுத்துள்ள திட்டத்தின் கீழ், சரக்கு வண்டி உரிமையாளர் ஒருவர் அவரது மாநிலத்திற்குள் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்துவதோடு, அந்த வண்டி எந்தெந்த மாநிலத்திற்குள் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதோ அந்த மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆண்டொன்றுக்கு கூட்டு அனுமதிக் கட்டணம் ரூ. 700 செலுத்த வேண்டும். புது டில்லி தவிர ஏனைய யூனியன் நேரடி ஆட்சிப் பகுதிகளைப் பொறுத்த வரையில் ஆண்டொன்றுக்கு செலுத்தத் தக்க கட்டணம் ரூ. 150 ஆகும். 400 பேருக்கு தேசிய அனுமதி வழங்கப்பட்டதில் 31—12—1977 வரை 390 பேர் வண்டி ஓட்ட தேசிய அனுமதி பெற்றுள்ளனர்.

பல்வேறு வருவாய்த் தலைப்புகளின் கீழ் வருவாய்க் குறித்த வரவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

இனம்.	1976–77 கணக்கு.	1977–78 திருத்த மதிப்பீடு.	1977–78 ஆம் ஆண்டுக்கான கணக்கு (ஆறு திங்களுக்குரியது).
(1)	(2)	(3)	(4)
1939—ஆம் ஆண்டு மோட்டார். வண்டிகள் சட்டம்.	1,91,19,000	1,59,85,000	91,18,000
தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம்.	46,65,82,000	48,94,22,000	23,99,24,000
ஏனைய வருவாய்.	1,93,000	2,30,000	93,000
மொத்தம் ..	48,58,94,000	50,56,37,000	24,91,35,000

செயல்படுத்தல்.

போக்குவரத்துத் துறைப் பணியாளர்கள் வரி ஏய்ப்பைக் கண்டுபிடிப்பதுடன் பயணிப் பேருந்துகளில் உரிய எண்ணிக்கைக்கு மேல் பயணிகளை ஏற்றிச் செல்லுதல், ஒப்பந்த ஊர்திகளைப் பயணிப்பேருந்துகளாகப் பயன்படுத்தல், கள்ளத்தனமாக டாக்சிகள் ஓட்டுதல் போன்ற ஏனைய குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் தொடர்ந்து பயனுள்ள பணியைச் செய்து வருகின்றனர். 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையிலான கால அளவில் 16,588 போக்குவரத்து வண்டிகள் சோதனையிடப்பட்டு பெரிய அளவில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இம் முறைகேடுகள் குறித்து வண்டிகள் சோதனையிட்டு மறித்து வைத்ததன் வாயிலாக அபராதம் விதித்து வசூலித்த தொகை, 2,955 ரூபாயாகும். ரோந்து படையினர் கண்டுபிடித்த குற்றங்கள் குறித்து இணக்கக் கட்டணம் விதித்ததன் வாயிலாகக் கிடைத்த தொகை 30,650 ரூபாயாகும்.

காவல் துறையின் பங்கு.

போக்குவரத்துத் துறையைத் தவிர, காவல் துறையும் மோட்டார் வண்டிகள் சட்டத்தின் விதிகளைச் செயல் படுத்தும் பொறுப்பு வகிக்கின்றது. போக்குவரத்துத் துறைப் பணியாளர்கள் உரிமம் வழங்கும் அலுவல்களைக் கவனிக்கையில் சாலை விதிகளைச் செயல்படுத்தும் பொறுப்பு காவல் துறையைச் சார்ந்ததாகும். தமிழ்நாடு போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சட்டம், தமிழ்நாடு வாடகை வண்டிகள் சட்டம் ஆகியவற்றை நிர்வகிப்பதும் காவல் துறை பொறுப்பாகும்.

மோட்டார் வண்டி விபத்துகளின் எண்ணிக்கை 1976-ல் 13,370 ஆக இருக்க, 1977-ல் 13,571 ஆக இருந்தது. இவற்றில் 1976-ல் 1,502 விபத்துகள் மரண விபத்துகளாகும்; 1977-ல் 1,921 விபத்துகள் மரண விபத்துகளாகும். எஞ்சியுள்ள 11,650 விபத்துகள் 1977-ல் நிகழ்ந்த மரண விபத்தல்லாத சாதாரண விபத்துகளாகும். 1976-ல் 11,868 மரண விபத்தல்லாத சாதாரண விபத்துக்கள் நிகழ்ந்தன. இந்த விபத்துக்கள் காரணமாக 1976-ல் மொத்தத்தில் 1,706 பேர் மரணமடைந்தனர்; 8,883 பேர் காயமுற்றனர். 1977-ல் இந்த விபத்துகள் காரணமாக மொத்தத்தில் 2,153 பேர் மரணமடைந்தனர்; 10,235 பேர் காயமுற்றனர். 1976 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1977-ல் இந்த விபத்துகளின் எண்ணிக்கை சிறிது உயர்ந்துள்ளதைக் காணலாம். இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தையும் அதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பையும் தமிழ்நாடு காவல் துறை நன்கு உணர்ந்து, இவ்விபத்துகளைக் குறைக்கும் பொருட்டு, பல்வேறு போக்குவரத்து விதிகளையும் விதி முறைகளையும் செவ்விய முறையில் செயல்படுத்த, முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பாக மேற்கொள்ளப்படுகிற பல்வேறு நடவடிக்கைகளை மூன்று தலைப்புகளின் கீழ் தொகுக்கலாம். அவையாவன:—(1) போக்குவரத்து விதிகளைச் செயற்படுத்தல்; (2) போக்குவரத்து விதிமுறைகள் குறித்து அறிவூட்டுதல்; (3) போக்குவரத்துப் பொறியியல். 1974 ஆம் ஆண்டிலிருந்து போக்குவரத்துத் தகவல் கட்டுப்பாட்டு நிலையம் ஒன்று சென்னை மாநகரில் இயங்கத் தொடங்கியது. இது, அல்லும் பகலும் செயற்பட்டு வருகிறது. போக்குவரத்து விதிகளைச் செயற்படுத்தும் அதிகாரிகள் அனைவருடனும் இதன் வாயிலாக வான் தந்தி மூலம் தொடர்பு வைத்துக் கொள்ளப்படுகிறது. மோட்டார் வண்டி ஓட்டுபவர்கள் மிகை வேகக் கட்டுப்பாட்டை மீறுவதைக் கண்டு பிடிப்பதற்காக அதற்குரிய திடீர்ச் சோதனைகள் முறையாக நடத்தப்பட்டன. 1977 ஆம் ஆண்டில், 8,702 பேர் மிகை வேகத்தில் வண்டிகளை ஓட்டியதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. உரிய அளவுக்கு மேல் சரக்கு ஏற்றியதற்காக 1976-ல் 810 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்க,

நடப்பாண்டில் 915 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. படிக்கட்டில் நின்று பயணம் செய்வோரைப் பிடித்து அவர்களுக்கு அபராதம் விதிக்கும் நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்ததன் பயனாக, படிக்கட்டில் நின்று பயணம் செய்வதால் ஏற்படும் விபத்துகள் குறைந்தன. படிக்கட்டில் நின்று பயணம் செய்ததற்காக 1976–77-ல் 9,651 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்க, 1977-ல் 5,041 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்கு முன்னால் பல்லவன் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள் செய்த குற்றங்களுக்காக அவர்கள் மீது துறை நடவடிக்கை எடுக்க, அக் குற்றங்கள் அக்கழகத்தின் நிர்வாக இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டன. குற்றவியல் நீதிமன்றத்தில் அவர்கள் மீது வழக்கு ஏதும் தொடரப்படவில்லை. பல்லவன் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களும் மற்ற ஓட்டுநர்களைப் போலவே கருதப்படுவதோடு, மோட்டார் வாகனங்கள் சட்டம், அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக நீதி மன்றத்தில் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படுகிறது. சென்னை மாநகரில், சாலை விபத்துக்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏனைய நடவடிக்கைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(i) போக்குவரத்து நெரிசல் மிகுந்த நேரங்களில் நடந்து செல்வோர் கடக்குமிடங்களில் தேவையான காவலர் அமர்த்தப்படுகின்றனர்.

(ii) சாலை விதிகளைப் புறக்கணித்து மனம்போன போக்கில் நடந்து செல்வோர் மீதும் சைக்கிற்காரர்களுக்கும், மோட்டார் வண்டி ஓட்டுவோருக்குமிடையே தகராறு ஏற்படும்போது சாலை விதிகளை மீறும் சைக்கிற்காரர்கள் மீதும் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

(iii) சாலை விதிகளை மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் பிரச்சார வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

(iv) குழந்தைகள் போக்குவரத்துப் பயிற்சிப் பூங்காவில் போக்குவரத்து அடையாளக் குறிகள், சாலையைப் பயன்படுத்தும் முறை ஆகியவை குறித்து பள்ளிக் குழந்தைகளுக்கு முறையாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஊர்க்காவல் படையினருக்கும் தொண்டு புரிய விழையும் கல்லூரி மாணவர்கட்கும் சாலைப் போக்குவரத்து முறைப்படுத்தும் பணியில் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களும் அப்பணியில் பயன்படுத்தப்படுகின்றனர்.

(v) தேவையான இடங்களிலும் மேம்பாடு செய்வதற்கு இயலும் இடங்களிலும் பொறியியல் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(vi) நடைமுறை அனுபவ அடிப்படையில், விபத்துகளைக் குறைப்பதற்காக 'ஒரு வழிப்பாதை', 'வழி அல்ல,' 'இங்கு நிறுத்தக் கூடாது', 'மெதுவாகச் செல்லவும்', போன்ற கட்டுப்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன.

(vii) அண்ணா சிலைக்கருகே போக்குவரத்து நெரிசல் மிகுந்த அண்ணாசாலை சந்திப்புகளில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் தானியங்கி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

(viii) குறிப்பிட்ட விபத்துத் தடுப்புச் சிறப்பு நடவடிக்கையாக, குடிபோதையில் மோட்டார் வண்டி ஓட்டுபவர்களைக் கண்டு பிடிப்பதற்காக குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை திடீர்ச் சோதனையை நடத்த குறிப்பாக நாட்டம் செலுத்தப்பட்டது.

போக்குவரத்துப் பொறியியல் பிரிவு ஆற்றும் பணி.

ஆய்வாண்டில், அரசு, போக்குவரத்துப் பொறியியல் பிரிவை போக்குவரத்துப் பொறியியல் வட்டமாக தரம் உயர்த்தியுள்ளது. சென்னை மாநகரைத் தலைமையிடமாகக்கொண்டு, கோட்டப்பொறியாளர் ஒருவரின் தலைமையில் உலக வங்கித் திட்டப் போக்குவரத்துப் பொறியியல் கோட்டம் ஒன்றும் தனியாக அமைக்கப் பட்டுள்ளது. இது, போக்குவரத்து நிர்வாக ஏற்பாடுகளைச் செயல்படுத்துவதில் உலக வங்கித் திட்ட நிறைவேற்றப் பிரிவிற்கு உதவி புரியும். தற்போதுள்ள, போக்குவரத்துப் பொறியியல் பிரிவின் தலைமையிடம் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டுள்ளது. இப்பிரிவு, சென்னை மாநகரம் நீங்கலாக, மாநிலம் முழுவதிலும் போக்குவரத்துச் சீரமைப்புப் பணிகளைக் கவனித்து வருகிறது. போக்குவரத்துப் பொறியியல் பிரிவு, போக்குவரத்துத் திட்டமிடும் பணிகளைத் கவனித்துக் கொள்வதுடன், இம்மாநிலத்திலுள்ள மாவட்டச் சாலை வளர்ச்சி போக்குவரத்துத் திட்டக் குழுவிற்குத் தொழில் நுட்ப முறையில் உதவியையும், ஆலோசனையையும் நல்குகின்றது. இப்பிரிவு, போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் தானியங்கி விளக்குகள், சாலையைக் கடந்து செல்வோருக்கான அடையாள விளக்குகள், ஒளி உமிழ் விளக்குகள் ஆகியவற்றின் வடிவமைப்பு, தயாரிப்பு, அவற்றை வாங்குதல், நிறுவுதல், பேணுதல் ஆகிய பணிகளை நேரடியாக மேற்பார்வையிடுகிறது; மேலும் போக்குவரத்து விபத்துகள் நிகழ்வதற்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்கிறது. போக்குவரத்து தொடர்பானவை குறித்துச் சிறப்பாய்வு செய்கிறது. 1977-78 ஆம் ஆண்டில் இப்பிரிவு 5 தொழில் நுட்ப அறிக்கைகளைத் தயாரித்துள்ளது. 119 போக்குவரத்துச் சீரமைப்புப் பணிகளை நிறைவேற்றியுள்ளது.

இணைப்பு IV.

[262ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

நாட்டுடைமையாக்குதல்.

பெருகிவரும் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், பொருளாதார வளர்ச்சியின் ஓர் அங்கமாக, பயணிகள் சாலைப் போக்குவரத்து அமையவேண்டும்.

1948ஆம் ஆண்டு சென்னை நகர வழித் தடங்கள் அனைத்தையும் அரசு மேற்கொண்டதன் மூலம் பேருந்துப் பணிகளை நாட்டுடைமையாக்கும் முறை தமிழ்நாட்டில் கொண்டு வரப்பட்டது. 120 மைல்களுக்கு மேற்பட்ட வழித்தடங்கள் அனைத்தும் அரசால் இயக்கப்படவேண்டும் என்கிற அப்போதையக் கொள்கைப்படி, முன்னாள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, 1959ஆம் ஆண்டு முதல் தொலை தூரப் பயணிப் பேருந்துகளை இயக்க ஆரம்பித்தது. 1967ஆம் ஆண்டு அரசு கீழ்க்கண்ட வகைத்தடங்களை நாட்டுடைமையாக்க முடிவு செய்தது:—

(அ) 75 மைலுக்கும் (120 கி. மீட்டர்) அதற்கும் மேற்பட்ட வழித் தடங்கள், சாதாரண, விரைவுப் பேருந்து போக்குவரத்து;

(ஆ) சென்னை மாநகரில் தொடங்கும் அல்லது முடிவடையும் வழித்தடங்கள்; அவற்றின் தொலைவு எவ்வளவாயிருப்பினும் அத்தகைய வழித்தடங்கள் அனைத்தும்;

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கும் அல்லது முடிவடையும் வழித்தடங்கள் யாவும்.

அடுத்தபடியாக 1971ஆம் ஆண்டு தனியார் பேருந்து உரிமையாளர்கள் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின்படி 50 உரிமங்களுக்குக் குறையாத தனியார் பேருந்துகள், அவற்றின் தடங்கள், பணிமனைகள், அவற்றில் பணி புரிந்த பணியாளர்கள் உட்பட யாவும் நாட்டுடமையாக்கப் பட்டன. இச்சட்டத்தின் கீழ் சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை; ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட், பொள்ளாச்சி; ராமன் அண்ட் ராமன் பிரைவேட் லிமிடெட், கும்பகோணம்; ஸ்ரீராமவிலாஸ் லிமிடெட், கும்பகோணம் மற்றும் சக்தி விலாஸ் பஸ் சர்வீஸ், பொறையார் முதலிய தனியார் நிறுவனங்களிடமிருந்து, கையகப்படுத்தப் பட்ட பேருந்துகளும், வழித்தடங்களும் போக்குவரத்துக் கழகங்களுக்கு மாற்றப்பட்டன. 1973ஆம் ஆண்டு பயணிப்

பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் பயணிப் பேருந்துகளை 5 ஆண்டுகளுக்குள் மாவட்ட வாரியாக நாட்டுடைமையாக்க வகை செய்தது. இச்சட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்திலுள்ள பேருந்து போக்குவரத்து முழுவதும் நாட்டுடைமையாக்கப்பட்டது. ஆனால் பிற்பாடு சென்னை உயர்நீதி மன்றம் இச்சட்டத்தை செல்திறனற்றது என்று தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அரசு மேல் முறையீடு செய்துள்ளது. இவ்வழக்கு இன்னும் முடிவுறாமல் உள்ளது.

நீதிமன்ற வழக்குகளினால் முழுவேகத்துடன் நாட்டுடைமை திட்டம் செயல்படுத்தப்பட முடியாமை வேதனைக்குரியது. நாட்டுடைமையாக்குத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தும் நோக்கத்துடன் அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு, வருவாய் தரக்கூடிய வழித்தடங்களுக்கான உரிமத்தைப்பெறும் வகையில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியிடம் அல்லது மாநிலப் போக்குவரத்து அதிகாரியிடம் மனு செய்து கொள்ளுமாறும், மோட்டார் வாகனச் சட்டத்தின் பகுதி IV, IV-A ன் கீழ் நாட்டுடைமை யாக்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் எனவும், அரசு கட்டளை வழங்கியுள்ளது. சிறந்த பொருளாதார கோட்பாடுகளுக்கு இணங்கவும், ஒருங்கிணைந்ததாகவும் திறம்படவும் ஆதாயம் அளிக்கும் வகையிலும் போக்குவரத்து முறையை அளிக்கவே மேல் கண்ட நடவடிக்கை தேவைப்பட்டது.

1976ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பையும் செயல்திறனையும் ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை வழங்கும் பொருட்டு திரு. சி. ஆர். பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் குழுவொன்றை அரசு நியமித்தது. 1985ஆம் ஆண்டு வரை பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளை மனதிற்கொண்டு பயணப் போக்குவரத்து முன்னேற்றத்திற்காக வழிமுறைகள் வகுத்தல்; இவ்வழி முறைகளைப் படிப்படியாகச் செயல்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை அறிவித்தல் ஆகியன இக்குழு ஆராய வேண்டிய பொருட்களில் ஒன்றாகும். 1977ஆம் ஆண்டு ஜுன் திங்களில் இக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

நாட்டுடைமையாக்கும் திட்ட வளர்ச்சியும், வழி முறைகளும் கிராம முன்னேற்றத்திற்கான வகையில் அமையும். இவ்வாண்டு தொடங்கப்பட்ட செயல்முறைகள் அடுத்த ஆண்டும், அதைத் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். கிராம மக்கட் தொகை, அவர்களின் பொருளாதார நிலைமை மற்றும் சமூகத் தேவைகள், இவற்றின் அடிப்படையில் கிராமப் புறங்களில் போக்குவரத்துச் சேவைகளைப்

பூர்த்தி செய்யும் வகையில் விரிவானதொரு மதிப்பீடு செய்யுமாறு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. கிராமங்களில் பொருளாதாரம் விரைவாக வளர்ச்சியடைய வேண்டும் என்கிற இந்த அரசின் கொள்கைக்குப் பொருத்தமாகவும், மேற் கூறிய மதிப்பீட்டின் அடிப்படையில் போக்குவரத்துத் தேவைகளை அறிந்து, ஏற்கனவே உள்ள பகுதிகளை புதிய பகுதிகளுடன் இணைப்பது, கிராமப்புற பகுதிகள் பயனடையும் வகையில் புதிய தடங்கள் திறக்கப்படுவது ஆகியன செயல்படுத்தப்படும். போக்கு வரவு குறைவாக உள்ள தடங்களில் சிறிய பேருந்துகள் விடப்படும். எந்த ஒரு குடியிருப்பில் இருந்தும் 2 கி.மீ-க்கு மேற்படாத தூரத்தில் பேருந்துகள் நிற்குமிடம் அடுத்து 5 ஆண்டுகளில் அமைய வேண்டும் என்பதே எங்களது குறிக்கோள். பெருவாரியான மக்களுக்கு மிகுந்த நன்மைகள் என்கிற வலுவானஅடிப்படையில் புதிய கிராமங்களைத் தேர்ந்தெடுப்பது அரசின் கவனத்தில் மிகுந்து நிற்கும்.

கிராமங்களை இணைத்தல் எனும் இந்தப் போக்குவரத்துக் கொள்கையால் கிராமச் சாலைகளை சீர்படுத்தவும் சாலை மேம்பாட்டுக்கான திட்டங்களை எதிர்கால கண்ணோட்டத்தோடு பார்க்கவும் இயலும். கிராமப்புறப் பகுதிகளுக்கு போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்த வேண்டுமானால் கிராமச் சாலை சீர்படுத்த வேண்டியது மிக அவசியமாகிறது. சாலைப்பராமரிப்பு துறையும், சாலைப் போக்குவரத்துத் துறையும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனப் பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்த இந்த அரசு ஆட்சிக்கு வரும் வரையில், அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. நமது அரசு சாலைகள், சாலைப் போக்குவரத்து இரண்டையும் கவனிக்கும் பொறுப்பினை ஒரே அமைச்சரிடம் அளித்துள்ளது. நாம் இதனை செயல்முறையில் கொண்டுவர முடிவு செய்துள்ளோம். தேசிய நெடுஞ்சாலை, நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்து ஆகிய மூன்று துறைக்கும் திட்ட நிலையிலும் செயல்படுத்தும் நிலையிலும், ஒரே செயலரின் கீழ் இயங்க வகை செய்யப்பட்டுள்ளது.

நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்தின் வளர்ச்சி.

30-6-1976 நாள் நிலவரப்படி, மாநிலத்திலுள்ள 9,259 பேருந்துகளில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் 4,419 பேருந்துகளை இயக்கி வருகின்றன. இதில் சென்னை மாநகரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இயக்கப்படும் 1,407 பேருந்துகளும் அடங்கும். நீண்ட தூர விரைவு பேருந்துகள் நீங்கலாக பொதுத் துறையில் இயக்கப்படும் பேருந்துகள் 48 சதவீதமாகும். 31—12—1977 நாள் நிலவரப்படி தமிழகத்தில் இருந்த பயணிப் பேருந்துகளின் எண்ணிக்கை 9,537. இதில்

4,988 பேருந்துகள் பொதுத்துறையினிடமும், 4,549 பேருந்துகள் தனியார் துறையினிடமும் உள்ளன. பொதுத்துறையினிடம் உள்ள பேருந்துகள் 52 சதவீதமாகும்.

பயணிகள் போக்குவரத்துக் கழகங்கள்.

இம்மாநிலத்தில் இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் (Indian Companies Act) கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏழு பயணிப் போக்குவரத்துக் கழகங்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துப் பணிகளை மேற்கொண்டுள்ளன.

சிறந்த பொருளாதார கோட்பாடுகளுக்கிணங்கவும் ஒருங்கிணைந்ததாகவும், அந்தப் பகுதியில் திறம்படவும், ஆதாயம் அளிக்கும் வகையிலும், முக்கியமாக பயணிகளின் வசதிகளைக் கருத்தில், கொண்டும், போக்குவரத்து முறையை இயக்கும் பொறுப்பை இக்கழகங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. வளர்ச்சிக்கும், தேய்மானத்திற்கும் ஒதுக்கியபின், இக்கழகங்களின் வருமானம் முதலீட்டில் 6 சதவீதம் இருக்க வேண்டும்.

போக்குவரத்துக் கழகங்கள் 1972-லிருந்து 1975-க்குள் ஏற்படுத்தப் பட்டன. முன்னுள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் வாகனங்களையும், சொத்துக்களையும், மாற்றியும் 1971ஆம் ஆண்டு தனியார் பேருந்து உரிமையாளர்கள் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின்படியும் இக்கழகங்கள் அமைக்கப்பட்டன. அப்போது மாற்றித் தரப்பட்ட சொத்துக்களின் ஒரு பகுதி கடனாகவும், மற்றொரு பகுதி பங்குகளாகவும் கருதப்பட்டது. பின்னுல் இக்கழகங்களுக்குத் தேவையான நடைமுதலைக் கடனாகவும், முன் பணமாகவும் அரசு அளித்தது. இக்கழகங்களின் கடனும், பங்கும் 1:1 என்கிற விகிதத்தில் அமையுமாறு திருத்தி அமைக்கப் பட்டன. இவ்வாறு திருத்தி அமைத்தது போக்குவரத்துக் கழகங்கள் வாணிப வங்கிகளிடமிருந்து கடன் பெறும் சக்தியினை அதிகப்படுத்தியது. அரசு போக்குவரத்துக் கழகங்களின் கடன், பங்கு 1—1—1978 நாளைய நிலவரப்படி கீழ்க்காணுமாறு இருந்தது:—

வரிசை எண்ணும், கழகத்தின் பெயரும்.	பங்கு.	கடன்.	கடன் திருப்பியளிக்கப்பட வேண்டிய வரையறை.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
1. பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெரு நகர்).	3,35.1	3,32.90	நிரந்தரக் கடன்
(புறநகர்)	1,10.00	1,07.74	நிரந்தரக் கடன்.
(விரைவு)	3,46.00	2,52.73	நிரந்தரக் கடன்.
2. பாண்டியன் போக்குவரத்துக் கழகம்	75.00	74.06	நிரந்தரக் கடன்.
3. சேரன் போக்குவரத்துக் கழகம் ..	50.00	4.13	5 ஆண்டுக்குள் திருப்பித் தர வேண்டியது.
4. சோழன் போக்குவரத்துக் கழகம்	78.00	..	பரிசீலனையில் உள்ளது.
5. அண்ணா போக்குவரத்துக் கழகம் ..	30.00	11.22	5 ஆண்டுகளுக்குள் திருப்பித்தர வேண்டியது.
6. கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகம்	1,40.00	1,37.00	நிரந்தரக் கடன்.
7. தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகம்.	83.00	63.88	நிரந்தரக் கடன்.
மொத்தம் ..	12,47.00	9,84.23	

இக்கடனுக்கு, 1976-77 ஆண்டிலிருந்து 12 சதவிதம் வட்டி உண்டு. இணைப்பு 1இல் 1976-77 ஆண்டின் பயணிகள் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையினையும் 31-3-1977 நாளைய நிலவரப்படி ஒட்டு மொத்தமான நிலைமையும், 1977-78-ம் ஆண்டில் எதிர்பார்க்கும் ஆதாயம் இழப்பு முதலிய விவரங்களையும் காணலாம். 1977-78 ஆண்டு மகிழ்ச்சி தரத்தக்க ஆண்டாக அமையும். கடந்த ஆண்டில் ஈட்டிய ஆதாயம் 46.53 இலட்சம் இந்த ஆண்டில் நிகர ஆதாயம் 2,79.88 இலட்சமாக இருக்கும். மக்களுக்கு உதவும் வண்ணம், திரும்பவும் முதலீடு செய்யும் வகையில் போக்குவரத்துக் கழககள் ரூ. 10,61.06 இலட்சம் உபரியாகப் பெருக்கும். சேரன் போக்குவரத்துக் கழகமும், பாண்டியன் போக்குவரத்துக் கழகமும் பங்குமூலதனத்தில் மீதி ஊதியப் பங்காக 12 சதவீதம் என்கிற கணக்கில் ரூ. 6 இலட்சமும் 4 சதவீதம் என்கிற கணக்கில் ரூ. 3 லட்சமும், கொடுக்க முன் வந்துள்ளது எனும் செய்தி உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். அக்கழகங்கள் பணியாளருக்கு 20 சதவிவீதமாக ரூ. 20.34 இலட்சமும் 13.3 சதவீதமாக 24.65 இலட்சமும் பூரிப்பு ஊதியமாக (Bonus) அளித்துள்ளன. கழகங்களின் தனிப்பட்ட செயல் திறன்களின் வேற்றுமை தொடர்ந்து இருந்து வருகிறது. சேரன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்கு வரத்துக் கழகம், அண்ணு போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் முதலியன நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. சோழன் போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்கு வரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் முதலியன இன்னமும் இழப்பு நிலையில் இருந்து மீளவில்லை. ஆயினும், இக்கழகங்கள் இழப்பு குறிப்பிடத்தக்க வகையில் குறைந்து வந்துள்ளது. கடந்த ஆண்டுகளில் பண இழப்பு அடைந்த கழகங்கள் இந்த ஆண்டிலும் அதே நிலையில் இல்லாதது திருப்தி அளிக்கிறது. பிரச்சினைக்குரியதாக இருந்த பொருள் போக்குவரத்துக் கழகம், 1977 டிசம்பரிலிருந்து முன்னேற்றம் காட்டி வருகிறது. இதனால் நல்ல நிலையில் இது இயங்க முடியும்.

நடப்பு ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 10,22 இலட்சம் செலவில் 681 புதிய பேருந்துகளை வாங்கிவிட்டுள்ளன. இவற்றில் 492 பேருந்துகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டவை. 189 பேருந்துகள் அதிகமாகச் சேர்க்கப்பட்டவை. இது தவிர பேருந்து நிலையங்கள், பணிமனைகள், பணியாளர் வசதிகள், பயணிகள் வசதிகள் இவைகளுக்காகப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 2,38.30 இலட்சம் செலவிட்டுள்ளன.

சென்னைப் பெருநகரின் போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதற்கு உலக நாடுகள் வளர்ச்சி நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் நடப்பு ஆண்டில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். உலக நாடுகள் வளர்ச்சி நிறுவனம், 285 பேருந்துகள், 2 பெரிய மற்றும் ஒரு சிறிய பணிமனைகள், 8 பேருந்து முனைகள் (Terminals) மற்றும் 400 பேருந்து நிழற்குடைகள் அமைப்பதற்காக ரூ. 4.05 கோடி உதவ ஒப்புக் கொண்டுள்ளது. இரண்டரை கோடி ரூபாய் கழக நிதியிலிருந்து திரட்டப்படும். இத்திட்டம் மூன்றாண்டுகளில் முடித்து வைக்கப்படும்.

பயணிப் போக்குவரத்தின் வளர்ச்சியை ஈடுகட்டியதல்லாமல் இப்பேருந்து எண்ணிக்கையின் அதிகரிப்பு 325 குடியிருப்புகளுக்கும் ,8,15,000 புதிய மக்கட் தொகையினருக்கும் பயனளித்துள்ளது. தேய்மானங்களை குறிப்பிட்ட இடைவெளியில் தேவைக்கேற்றபடி அவ்வப்போது புதுப்பித்ததினால் திறம்படவும் குறித்த காலத்திலும் போக்குவரத்துப் பணி செயல்பட ஏதுவாகியது. பேருந்துப் பராமரிப்பின் தரம் முன்னேற்றம் கண்டுள்ளது. பேருந்துகளின் உபயோகத்தின் சராசரி அளவு 85-லிருந்து 88 சதவீதமாக உயர்ந்துள்ளது.

நகரத்தையே நாடியிருக்கும் போக்குவரத்துத் தொழிலை நாட்டுப் புறத்திற்கும் கொண்டு செல்ல வகை செய்யப்பட்டுள்ளது. சேரன் மற்றும் பாண்டியன் போக்குவரத்துக் கழகங்கள் 15 சிறிய பேருந்துகளை (குறுகிய சக்கர அடிப்படைக் கொண்ட பேருந்துகள் உட்பட) இயக்கி வருகின்றன. சாதாரணப் பேருந்து போக்குவரத்திற்கு லாயக்கற்ற சிறிய குறுகிய பாதைகளைக் கொண்ட கிராமங்களுக்கும் பயணி போக்குவரத்து அதிகமில்லாமல் இருக்கும் காரணத்தால் தனியார் பேருந்துகள் விடாத இடங்களிலும், இச்சிறிய பேருந்துகள் விடப்படுகின்றன. சமூக நீதியினை நிலை நாட்டும் கொள்கை, இதுவென அரசு கருதுகிறது. இதனால் கழகங்களுக்கு வருவாயில் இழப்பு ஏற்பட்டாலும் அவற்றை ஆதாயக் கணக்கில் சரி செய்து கொண்டு, நாட்டுடமைத் திட்ட முன்னேற்றத்தை நிலை நாட்டும்.

போக்குவரத்துக் கழகங்களின் பணிகள், பொருளாதார மற்றும் சேவை மனப்பான்மையுடன், தொடர்ந்து செயல்படும் முறையில் அரசு இன்னும் முன்னேற்றம் காண முனையும். வழித்தடங்களை நாட்டுடமை யாக்குவதன் மூலம், தேய்மானங்களைப் புதுப்பிக்கும் கொள்கை, சிக்கனம் மற்றும் திறன் வாய்ந்த பராமரிப்பு, காலம் தாழாத மற்றும் ஆதாயத்துடன் இயக்குதல் முதலியவற்றில் முன்னேற்றம் ஏற்படும். 1978-79 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 1,40.06 இலட்சம் மொத்த ஆதாயமாக (வரி செலுத்துமுன்) ஈட்டும் எனவும், அனைத்து போக்கு வரத்துக் கழகங்களும் ரூ. 1,080.73 இலட்சம் உபரியாக பெருக்கும் எனவும், எதிர்பார்க்கப்படுகிறது. அளவில் வேறு பட்டாலும், அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் ஆதாயத்தில் இயங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். கட்டுமானத் தேவையான பேருந்து பணிமனைகள், இயந்திரங்கள், மற்றும் கட்டிட வேலைகள், முதலியனவற்றிற்கு ரூ. 3,64.72 இலட்சம் செலவிடப்படும்.

தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் செயல்படுவது குறித்த முக்கிய கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

பல்லவன்போக்குவரத்துக் கழகம் (பெருநகர்ப் பிரிவு)

பல்லவன் போக்குவரத்துக் கழகம், 1,288 பேருந்துகளுடன் 1972 ஆம் ஆண்டு சனவரி 1-ஆம் நாள் அன்று அமைக்கப்பட்டது. இதன் இயக்கம் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் அடங்கும். 31-1-1978 தேதியில் இக் கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 1,469 ஆகும். இதில் 121 உபரிப் பேருந்துகள். இதில் வேலை செய்யும் தொழிலாளர் எண்ணிக்கை ஏறத்தாழ 12,800. கணக்கெடுப்பு ஆண்டு 1976-77-ல் இக்கழகம் எல்லா ஊழியர்களுக்கும் 8.33 சதவீதம் குறைந்த அளவு போனசாக வழங்கியது. இக்கழகப் பேருந்துகளில் சராசரி நாளொன்றுக்கு 20 இலட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர். குறைந்த மக்கள் தொகையுள்ள புதிய இருப்பிடங்களில் வாழ்வோரின் வசதிக்காக இக்கழகம் பத்து சிறிய பேருந்துகள் (Mini Buses) இயக்குகிறது. உடல் ஊனமுற்றோர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு கொடுத்துள்ளமையில் இக் கழகம் முதல் இடம் வகிக்கிறது என இந்தியக் குடியரசுத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இக்கழகம் உபரி உறுப்புகள் சீர்திருத்தத்திலும், மற்றும் நாட்டு மூல வள பாதுகாப்பிலும் 1977ஆம் ஆண்டின் சிறந்த பாதுகாப்பகமாக்தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசளிக்கப்பட்டுள்ளது

பல்லவன் போக்குவரத்துக் கழகம் (மாவட்டப் பிரிவு).

முன்னாள் மாநில போக்குவரத்துத் துறையினால் இயக்கப்பட்டு வந்த மாவட்டத் தடங்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு 15-9-1975-லிருந்து பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மாவட்டப் பிரிவாக அமைந்தது, இக்கழகத்தின் இயக்கம் செங்கற்பட்டு மாவட்டம். இதன் பேருந்துகளின் எண்ணிக்கை 31-1-1978-ம் தேதியில் 411. இதில் 35 உபரிப் பேருந்துகள் உள்ளன. இக்கழகத்தில் வேலை செய்யும் தொழிலாளர் எண்ணிக்கை 3,000. கணக்கெடுப்பாண்டு 1976-77-ல் இக்கழகம் எல்லா ஊழியர்களுக்கும் 8.33 சதவீதம் குறைந்த அளவு போனசாக வழங்கியது. இக்கழகப் பேருந்துகளில் சராசரி நாளொன்றுக்கு 1,2 இலட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவுப் பிரிவு).

தமிழ்நாட்டு மாவட்டத் தலைமையகங்களை சென்னை நகருடன் இணைக்கவும் மாவட்டத் தலைமையகங்கள் ஒன்றையொன்று இணைக்கவும் முன்னாள் தமிழ்நாடு போக்குவரத்துத்

துறை நெடுந்தூர விரைவுப் பேருந்துகளை இயக்கி வந்தது. அத்துறை தன்னியக்கக் கழகங்களாக 15-9-1975 முதல் பிரிந்த போது, விரைவுப் பேருந்துகள் புதியதாக அமைக்கப்பட்ட பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பிரிவிற்கு மாற்றப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இவ்விரைவுப் பேருந்துகள். இயக்கப்படுகின்றன. இந்த பேருந்துகளின் எண்ணிக்கை 31-1-1978 தேதியன்று 256. இதில் உபரிப் பேருந்துகள் 30. இதன் மொத்த ஊழியர்கள் 2,600. நாளொன்றுக்கு சராசரியாக 20,000 பயணிகள் இப்பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். நிதியாண்டு 1976-77-ல் இக் கழகம் எல்லா ஊழியர்களுக்கும் 8.33 சதவீதம் குறைந்த அளவு போனசாக வழங்கியது. 15-9-1977 முதல் இக்கழகம் பயணக் கட்டணத்தை ஒரு கிலோ மீட்டருக்கு 6 பைசாவிலிருந்து 5.5. பைசாவாக குறைத்துள்ளது.

பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம்.

சென்னை சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பேருந்துகளை (346 வண்டிகள்), 1971 ஆம் ஆண்டின் பேருந்து உரிமையாளர்கள், பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் கிழ், இக்கழகத்திற்கு மாற்றப்பட்டு, 1972ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினேழாம் நாள் முதல் இக்கழகம் செயல்பட தொடங்கியது. இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 31-1-1978 அன்று 735 ஆக உயர்ந்துள்ளது. இதில் உபரி பேருந்துகள் 51. மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் இக்கழகம் செயல்படும் பகுதி, ஏறத்தாழ 5,200 ஊழியர்கள் இக்கழகத்தில் பணிபுரிகின்றனர். இக் கழக ஊழியர்கள் அனைவருக்கும் போனசாக 13.3 சதவீதம் 1976—77 கணக்கு எடுப்பு ஆண்டில் வழங்கப்பட்டது. 1977-78 ஆண்டில் மூலதனத்தில் வழங்கப்பட்ட 4 சதவீத பங்கு ஊதியம் (D vidend) ரூ.3 இலட்சங்களாகும். நாளொன்றுக்கு சராசரியாக 6 இலட்சம் பயணிகள் இக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். இக்கழகம் நிலக்கோட்டை வட்டத்தில் 4 சிறு பேருந்துகளையும் (Mini Buses) இராமேசுவரத்தில் 2 குறைந்த அடித்தளமுள்ள வண்டிகளையும் (Short wheelBase Buses) இயக்குகிறது.

சேரன் போக்குவரத்துக் கழகம்.

ஏ.பி.டி. பிரைவேட் ஸ்தாபனத்திடமிருந்து அரசு எடுத்துக் கொண்ட பேருந்துகளை தமிழ்நாடு போக்குவரத்துத் துறை சேரன் போக்குவரத்திற்கு மாற்றம் செய்து 1—3—72 ஆம் நாள் முதல் இக்கழகம் செயல்பட துவங்கியது. இக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை 31-1-1978 அன்று உபரிப் பேருந்துகள் 57 உட்பட 724 ஆகும். 1973 ஆம் ஆண்டில் 12-வது சட்டம் செல்திறன் குறித்து தமிழக அரசு தலைமை நீதி

மன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு, நிலுவையில் உள்ள காரணத்தால் 93 பேருந்துகள் இயக்கமில்லாமல் உள்ளன. இக்கழகம் கோயமுத்தூர், நீலகிரி மாவட்டப் பகுதிகளில் செயல்படுகிறது. இக்கழகத்தில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,950. இக்கழக ஊழியர் அனைவருக்கும் உயர்ந்த பட்ச போனசாக 20 சதவீதம் கணக்கெடுப்பு ஆண்டு 1976–77ல் வழங்கப்பட்டது. செலுத்தப்பட்ட மூலதனத்தில் இக்கழகம் 12 சதவீதம் பங்கு ஊதியம் வழங்கியது. இதில் அரசிற்குக் கிடைத்த தொகை ரூ. 6 இலட்சம். இக்கழகப் பேருந்துகளில் நாளொன்றுக்கு 4 இலட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர். இக்கழக நிதி நிலைமை நிரந்தரமாகவும் நன்றாகவும் அமைந்திருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் இக் கழகம் 9 சிறு ஊர்திகளை இயக்க ஆரம்பித்துள்ளது.

சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம்.

கும்பகோணம் ஸ்ரீ ராமவிலாஸ் பஸ் சர்வீஸ் லிமிடெட், கும்பகோணம் (65 பேருந்துகள்); திருவாளர்கள் ராமன் அண்டு ராமன் நிறுவனம் (180 பேருந்துகள்); ஸ்ரீ சக்தி விலாஸ் பஸ் சர்வீஸ், பொறையாறு நிறுவனம் (50 பேருந்துகள்) ஆகியவற்றைச் சேர்ந்த பேருந்துகளையும் தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டில் பேருந்து உரிமையாளர்கள்-பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டு இக்கழகம் 1972ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ஆம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது. இதன் மொத்த எண்ணிக்கை 31-1-1978-இல், 560. இதில் 38 உபரிகளும் உள்ளடங்கியுள்ளவை. இக்கழகத்தின் தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,610 ஆகும். 1976-77 கணக்கெடுப்பு ஆண்டில் தனது தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு போனசாக 8.33 சதவீதம் வழங்கியுள்ளது.

சராசரி தினமும் நான்கு லட்சம் பயணிகள் இக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள்.

அண்ணா போக்குவரத்துக் கழகம்.

அண்ணா போக்குவரத்துக் கழகம் 45 பேருந்துகளுடனும், சேலம் தருமபுரி மாவட்டங்களில் அரசு போக்குவரத்துத் துறையின் சொத்துக்களுடனும் 1973 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 ஆம் நாளிலிருந்து செயல் படத் தொடங்கியது. சேலம், தருமபுரி, மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்கங்கள் மூன்றினையும் இக் கழகம் எடுத்துக் கொண்டுள்ளது. 21 உபரிகள் அடங்கிய 269 பேருந்துகளைக் கொண்டுள்ளது. இக்கழகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்த பட்ச போனஸ் 8.33 சதவீதம் 1976–77 கணக்கெடுப்பு ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. இக் கழக ஊழியர்களின் எண்ணிக்கை 1,665. சராசரியாக தினமும் 1.12 இலட்சம் பயணிகள் இக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்

இக் கழகம் 1974 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாளில் செயல்படத் தொடங்கியது. இது செயல்படும் பகுதி திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களாகும். இப்பகுதிகளில், இயங்கிய தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் இக்கழகத்திற்கு மாற்றப்பட்டன. 458 பேருந்துகளுடன் தொடங்கி, தற்போது 48 உபரிகள் அடங்கிய 560 பேருந்துகளைக் கொண்டுள்ளது. இக்கழக ஊழியர்களின் எண்ணிக்கை 4,040. இக்கழகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்த பட்ச போனசாக 8.33 சதவீதம் 1976–77 கணக்கெடுப்பு ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. சராசரியாக தினமும் நான்கு இலட்சம் பயணிகள் இக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்.

போக்குவரத்துக் கழகம் ஒன்றின் நிர்வாகத் திறனைக் கருத்திற் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை பல்லவன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், ஆகியவை இம்மாவட்டத்தில் இயக்கிய 172 பேருந்துகளை மேற்கொண்டதன் மூலம் வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களிலுள்ள பேருந்து போக்குவரத்து முறைக்குப் புதிய கழகம் ஒன்று 1975 ஆண்டு சனவரித் திங்கள் 16 ஆம் நாள் முதல் அமைக்கப்பட்டது. இந்தக் கழகத்திற்கு விழுப்புரம் தலைமையிடமாகும். 31–1–1978 அன்று 22 உபரிகள் உள்ளிட்ட 243 பேருந்துகளை இக்கழகம் கொண்டுள்ளது. இக்கழகத் தொழிலாளர்கள். அனைவருக்கும் குறைந்த பட்ச போனசாக 8.33 சதவீதம் 1976–77 கணக்கெடுப்பு ஆண்டில் வழங்கப்பட்டது. இக் கழகத்தின் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,680. சராசரி தினமும் 84,007 பயணிகள் இக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள்.

பயணிகளுக்கு வசதிகள்.

பொது மக்களின் நலனைக் கருதி, அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள், பெருவாரியான வழித்தடங்களில் இழப்பு ஏற்பட்ட போதிலும், பேருந்துகளை இயக்கி வருகிறது. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அன்று உள்ள 4,368 பணிகளில், 2,898 பணிகள் ஆதாயமற்றவை, இது 66.35 சதவீதம் ஆகும்.

அரசுப் போக்குவரத்து நிறுவனப் பேருந்துகளில், புற்று நோயாளிகள் மருத்துவ சிகிச்சைக்காக இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். விழி இழந்தோர் சென்னை நகரில் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

[1978 மார்ச் 20

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மதுரை மாநகரில் ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள ஒரு தானியங்கும் போக்குவரத்து சைகை காட்டியை (Signal) நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

உதகமண்டலத்தில் சேரன் போக்குவரத்துக் கழகம் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பேருந்து நிலையத்தை ரூ. 5 லட்சம் செலவில் கட்டியுள்ளது. கோயமுத்தூரிலும், உதகமண்டலத்திலும் பல இடங்களில் பேருந்து நிழற் குடைகள் கட்டப்பட்டுள்ளன. சேரன் போக்குவரத்துக் கழகம் கோயம்புத்தூரில் ஒரு தானியங்கும் சாலைப் போக்குவரத்து சைகை காட்டியைப் (Signal) பொருத்தியுள்ளது.

அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் தமிழகத்தில் நடைபெறும் பல்வேறு விழாக்களுக்கும், கண்காட்சிகளுக்கும், சிறப்பு வசதிகள் செய்கின்றன. பயணிகள் கூட்டத்தைத் தவிர்க்கப் போதுமான அளவு தனிப் பேருந்துகளை இயக்கி போக்குவரத்து வசதி செய்கின்றன. ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் கூடிய போக்குவர்த்திற்கு ஏற்பாடு செய்கின்றன. பயணிகளின் வசதிக்காக, தேவையான இடங்களில் பந்தல்கள், மற்றும் குடிநீர் வசதி, கழிவறை வசதி முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தாயமங்கலத்தில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஒரு பயணிகள் தங்குமிடத்தைக் கட்டியுள்ளது. இந்த மாவட்டத்தில் இருக்கன்குடியில் ஒரு பயணிகள் தங்குமிடத்தைக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இவ்விடங்களுக்குப் பெருமளவு எண்ணிக்கையில் யாத்திரிகர்கள் விழாக்களுக்கு வருவதனால், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் தனிப் பேருந்துகளை இயக்குகின்றது.

பயணிகளின் வசதிக்காக 10 நாட்களுக்கு முன்னதாகவே இருக்கைகளைப் பதிவு செய்யலாம். இந்த வசதியை எல்லாப் பெரிய பேருந்து நிலையங்களிலும், மற்றும் பேருந்து முனைகளிலும் (Terminal) பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவுப் பிரிவு) ஏற்பாடு செய்திருக்கிறது. மேலும் பங்கு (quota) முறைகளில் இருக்கைகளைப் பதிவு செய்யும் முறை முக்கிய இடை நிலையங்களில் இருக்கிறது. மேற்குறித்த பங்கு அளவிற்குமேல் முன்னுரிமை அடையாளச் சீட்டுக்களும் இடை நிலையங்களில் வழங்கப்படுகின்றன. சென்னை, திண்டிவனம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில், சேலம், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, வேலூர் போன்ற எல்லா முக்கிய பேருந்து நிலையங்களிலும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவுப் பிரிவு)

1978 மார்ச் 20]

கழிவறை வசதிகளுடன் கூடிய, பயணிகள் தங்கும் அறைகளைப் பராமரிக்கிறது. திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில், கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை, சென்னை ஆகிய இடங்களில் ஓய்வு அறைகளும், சாமான் அறை வசதிகளும் இருக்கின்றன. குழுக்களாக வரும் பயணிகள் வசதிக்காக சென்னையில் படுக்கைக்கூடங்கள் (Dormitory type) போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன. வரும் ஆண்டில் பேருந்து நிழற் குடைகள், ஒளி சைகைகள், வரிசை (Queue) வசதிகள் போன்ற பயணிகளுக்கான வசதிகள் பெரும்பான்மையோருக்குத் தரப்படும்.

தொழிலாளர் நல நடவடிக்கைகள்.

தங்களது பேருந்துகளை சரிவரப் பராமரிப்பது, தங்களது மதிப்புக்குரிய வாடிக்கையாளருக்கு சேவை புரிவது மற்றும் அவர்களது மூன்றாவது சொத்தான பணியாளரின் நலன் பேணுவதை போக்குவரத்துக் கழகங்கள் செய்து வருகின்றன.

போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுபவருக்கு அவர்களின் பணி நிபந்தனைகளில் ஒரு படித்தான (uniform) நிலை இருக்க வேண்டும் என்று தொழிலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரிய உறுப்பினர்கள் எல்லோரும் தொடர்ந்து கோரி வந்தனர். அரசு போக்குவர்த்துக் கழகங்களின் நிர்வாக இயக்குநர்களுடனும் அங்கீகாரம் பெற்ற தொழிற்சங்கங்களுடனும் இதுபற்றி பலமுறை கலந்து பேசப்பட்டது.

இதன் முடிவாக ஆயுட்கால ஊதியத்திட்டம் 1975 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் தேதி முதல் போக்குவரத்து (Traffic) தொழில் நுட்ப, நிர்வாகப் பணியாளர்களுக்கு தொழில் தகராறு சட்டம் 1947 இன் 18 (i) இன் பிரிவின் கீழோ அல்லது 12 (3) இன் பிரிவின் கீழோ அமுலாக்கப்பட்டது. இத் திட்டம் போக்குவரத்துக் கழகங்களிடையே சீரான ஊதிய அமைப்பு, அகவிலைப்படி, விடுப்பு விதிகள், மருத்துவ வசதிகள் ஆகியவற்றிற்கு வழி வகை செய்கிறது. இத் திட்டம் அரசு போக்குவரத்துக் கழகங்களில் இதற்கு முன்னிருந்த பல்வேறு ஊதிய நிலைகளைச் சீரமைத்துள்ளது. பணியாளரின் கல்வித் தகுதியையும் அனுபவத்தையும் பொறுத்து இவ்வூதியப்படி முறைகளுக்குள் பல்வேறு நிலைகளில் பணியில் அமர்த்துவதற்கு இது வழிசெய்துள்ளது. பணி உயர்வுக்குப் போதிய வாய்ப்பு இன்றி தொழிலாளர்கள் மனச் சோர்வு அடையாமல் இருக்கச் செய்வது ஆயுட்காலத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ்

[1978 மார்ச் 20

30 ஆண்டுகள் பணி செய்த தொழிலாளி தன்னுடைய பணியைத் திறமையாகவும், நிறைவுள்ள முறையிலும் செய்திருந்தால் பணிக்காலம் முழுவதும் படிப்படியாக ஊதிய உயர்வு பெற்று குறிப்பிட்ட நிலைக்கு உயர வசதி உள்ளது.

மற்ற எல்லாப் பணி நிலைமைகள், அதாவது அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, விடுப்பு, மருத்துவ வசதிகள் போன்றவை அனைத்தும் அனைத்துக் கழகங்களிலும் ஒரே மாதிரியாக இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

எல்லாக் கழகங்களிலுமுள்ள, எல்லாப் பணியாளர்களுக்கும் பயன் பெறத்தக்க வகையில் தகுந்த ஊக்கத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இது கீழ்க்கண்ட இரண்டு நோக்கங்களை அடைவதற்காக உள்ளது :—

(அ) மிகுதியான ஊதியத்தால் பணியாளரைப் பயன் பெறச் செய்தல்.

(ஆ) அதிக உற்பத்தி, குறைந்த செலவுமூலம் போக்குவரத்துக் கழகத்தைப் பயன் பெறச் செய்தல்.

சமீபத்தில், கலந்துரை உடன்பாட்டிற்குப் பின், 1—9—1977 முதல் எல்லா போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் பொறியியற் கழகப் பணியாளர்களுக்கு மாதம் ரூ. 27 தனிப்பட்ட கொடையாக வழங்கப்பட்டது. இது தற்போது பணியாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் இருமுனைப் பேச்சு வார்த்தைகளின் மூலம் நிச்சயிக்கப்படும். இறுதி நிவாரணத் தொகையில் சரி கட்டப்படும்.

இந்த அவையில் கொடுத்த வாக்குறுதிக்கிணங்க போக்குவரத்துக் கழகங்கள் சிற்றுண்டிச்சாலைகள் மனமகிழ் வசதிகளுடன் கூடிய ஓய்வு அறைகளையும் திறக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றன. 15—9—1977 முதல் எல்லாப் போக்குவரத்துக் கழக நிர்வாகங்களும், போக்குவரத்துக் கழகப் பணியாளரின் குழந்தைகளுக்கும் பள்ளி, கல்லூரி செல்ல மாணவர்களுக்கான இலவசச் சீட்டுகளை வழங்கி வருகின்றன.

குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்கும்தகத்தான் இறந்தவருடைய ஒரு வாரிசிற்கு போக்குவரத்துக் கழகத்தில் வேலை தேடித் தரும் அலுவலகத்தை அணுகாமலேயே, காலியாகும் வேலையிடத்திற்கு அவரது தகுதியைப் பொறுத்து வேலை கொடுக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

1978 மார்ச் 20]

அரசு மருத்துவ மனைகளில் அரசு ஊழியர்களுக்கு ஒப்பாக போக்கு வரத்து ஊழியர்களுக்கும் இலவச மருத்துவம் கிடைக்க அரசு ஆணைப் பிறப்பிப்பதாக உறுதி அளித்திருந்தது. இதற்கான ஆணைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டன. இவ்வகையான இத்திட்டம் 1—4—1978 முதல் நடைமுறைக்கு வரும்.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் குடும்ப நல நிதி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மையான போக்குவரத்துக் கழகங்கள் பணியாளர்களின் நல அறக்கட்டளைகளை ஏற்படுத்தித் தங்களுடைய அதிகப்படி வருவாயிலிருந்து பெரும் பகுதியை அதில் செலுத்தின. இவ்வழியில் சேரன் போக்குவரத்துக் கழகம் தங்கள் பணியாளர்களின் சீரிய பணியின் காரணமாக ரூ. 7.3 இலட்சத்தை இவ்வகையில் செலுத்தி முன்னோடியாகத் திகழ்கிறது.

இந்நிதி பணியாளர்களின் குழந்தைகளுக்கு, புத்தகங்கள், குறிப்பு புத்தகங்கள், கரும்பலகைகள் மற்றும் படிப்பு உதவித் தொகை இவற்றிற்காக செலவிடப்படுகின்றது.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் ''பாதுகாப்பு ஓட்டுநர் பரிசுத் திட்டத்தை'' ஏற்படுத்தியுள்ளன. இத்திட்டத்தின்கீழ் விபத்துக்கள் இல்லாமல் ஒவ்வொரு முழு வருடத்திய வண்டியியக்கத்திற்கு ஊர்தி ஓட்டுநர்களுக்கு ரூ. 25-ம் இதைத் தவிர ரூ. 75-லிருந்து ரூ. 500 வரை விபத்துகள் இன்றி வண்டி ஓட்டும் வருடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து நிதிப் பரிசு அளிக்கப்படும்.

பெரும்பான்மையான போக்குவரத்துக் கழகங்களும் அவர்களின் பணியாளர்களுக்கு மிதமான வட்டி வீதத்தில் சுலபத் தவணைகளில் திரும்பப் பெறும் வகையில் திருமணக் கடன் அளிக்கின்றன.

சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஆகியவை தங்களது பணியாளருக்கு அத்தியாவசிய பண்டங்கள் கிடைப்பதற்குப் பணியாளர் கூட்டுறவு அங்காடிகளுக்கு சலுகை கட்டண வட்டி வீதத்தில் நிதி உதவி செய்திருக்கின்றன. பல்வேறு கிளைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உணவுத் தானியங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் கூட்டுறவுக் கடைகள் மூலம் விநியோகிப்பதற்காக சேரன் மற்றும் சோழன் போக்குவரத்துக் கழகங்கள் இயங்கும் ஊர்திகளை (Mob le v.n) ஏற்பாடு செய்திருக்கின்றன.

நிறுவனத்தினரது கடனுதவி பெற்று ''நீங்களே உங்கள் வீட்டை உடைமையாக்கும் திட்டத்தின்கீழ்'' வீட்டு கடனுதவிக்கு சேரன் போக்குவரத்துக் கழகம் தங்களது

பணியாளருக்கு உதவியிருக்கிறது. ஒரு வீடு கட்டும்' கூட்டுறவு சங்கத்தை அமைக்கும் கருத்து பல்லவன் போக்கு வரத்துக் கழகத்திடம் இருக்கிறது.

எல்லா போக்குவரத்துக் கழகங்களும் தங்களது பணியாளருக்குத் தவறாமல் தைத்த சீருடைகளும் மிதியடிகளும் வழங்குகின்றன.

ஐந்து வருடங்களுக்குமேல் பதவியிலிருக்கும் பணியாளருக்கு அவரது தேவையைப் பொறுத்து இலவசமாகக் கண்ணாடிகள் பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் வழங்கி வருகிறது. அவர்களது சேவையை பாராட்டும் வகையில் 10 வருடங்கள் பணி செய்த பணியாளருக்கு கைக்கடிகாரங்களும் பரிசளிக்கப் படுகின்றன. தங்களது பணியாளருக்கு இருக்குமிடம் தருவதற்கான ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தை இப் போக்குவரத்துக் கழகம் அமைத்திருக்கிறது.

எதிர்காலத்தில் பணியாளரின் நலனே அரசின் எண்ணத்தில் முதன்மையாக இடம் பெறும். பெரிய மற்றும் நல்ல. வேலை நிலைமைகளையும், தொழிலாளர் கல்வியையும் கொடுப்ப தோடல்லாமல் உட்பணி பயிற்சி கொடுப்பதற்கும், உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படும். இதுதான் ஆயுட்கால ஊதிய திட்டத்துடன் தொடங்கப்பெற்ற அலுவல் திட்டம் தனது தர்க்கரீதியான முடிவை எட்டும்.

நடப்பு ஆண்டில் பல்லவன் போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்து கழகம் ஆகியவற்றில் பெரிய வேலை நிறுத்தங்கள் நடந்தன. இந்த வேலை நிறுத்தங்கள் இலட்சக்கணக்கான பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியது மட்டுமின்றி போக்குவரத்துக் கழகங்களுக்கு சுமார் 95 இலட்ச ரூபாய் வரை இழப்பையும் ஏற்படுத்தின. வேலை நிறுத்தமென்பது தொழிலாளர்களுக்கு ஒரு சட்ட ரீதியான ஆயுதமாக இருப்பினும், அவற்றை குறைந்த அளவிலே உபயோகிக்கவேண்டும். பயணம் செய்யும் மக்களைக் கருத்திற்கொண்டு வேலை நிறுத்தம் போன்ற தீவிர நடவடிக்கைகளை திடீர் என்று எடுப்பதற்கு முன் பயணம் செய்யும் பொதுமக்களை பணியாளர்கள் கருத்திற் கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது.

பொது.

பேருந்துப் பணிகளை இயக்கும் பிரச்சினைகளில் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களுக்கு அறிவுரை தருவதற்காக தமிழ்நாடு அரசுடமை ஆக்கப்பட்ட போக்குவரத்து கலந்தாராயும் குழுவை (Tamil Nadu Nationalised Transport consultative committee) அரசு திருத்தி அமைத்தது. இக்குழு, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளை தவிர 12 சட்டப் பேரவை உறுப்பினர்களையும் 3 சட்ட மேலவை உறுப்பினர்களையும் கொண்டதாகும்.

முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட மழை, வெள்ளம், புயலைக் கருத்தில்கொண்டு ரூ. 11.89 இலட்சத்தை நன்கொடையாக நடப்பு வருடத்தில் இலாபத்தை ஈட்டிய சேரன் போக்குவரத்துக் கழகம், சேரன் பொறியியற் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மற்றும் அண்ணா போக்குவரத்து கழகம் ஆகிய இவைகள் வழங்கின.

அரசு போக்குவரத்து நிறுவனங்கள் மக்களுக்கு குறைந்த கட்டண செலவில் வசதிகளையும் அதே சமயத்தில் வியாபார நோக்கத்துடன் நிலைநிற்கக் கூடிய நிறுவனமாகவும் இருக்க வேண்டிய இரு நோக்கங்களையும் சரிசமன் செய்ய வேண்டியுள்ளது. இம் மாற்றத்தில் சாலைப் போக்குவரத்துப் பணிகள் இந்நாட்டின் மேம்பட்ட எந்த மாநிலத்தையும் ஒப்பிடக் கூடிய நிலையில் உயர்ந்து உள்ளது.

நடப்பு ஆண்டில் எல்லா போக்குவரத்துக் கழகங்களின் நிதி மேம்பாடு (Financial performance) பொதுவாக திருப்திகரமாகவே இருந்து வருகிறது. போக்குவரத்துப் பணியாளர்களின் ஒற்றுமையோடு இந்த போக்குவரத்துக் கழகங்கள் இன்னும் சிறந்த முறையிலே தங்களது பணிகளை வரும் ஆண்டில் செவ்வனே தொடரும் என இந்த போக்குவரத்துக் கழகங்கள் எதிர்பார்க்கின்றன.

பொறியியற் கழகங்கள்.

மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ஐந்து லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தைக் கருத்திற் கொண்டு, 1973—74, 1974—75 ஆண்டுகளில் ஐந்து பொறியியற் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 31—12—1977 அன்று இந்த ஒவ்வொரு பொறியியற் கழகங்களிலும் பணிபுரிவோரின் எண்ணிக்கை பின்வருமாறு :—

(1)	பல்லவன் பொறியியற் கழகம் ..	680
(2)	மதுரை பாண்டியன் பொறியியற் கழகம்.	536
(3)	சேரன் பொறியியற் கழகம்	710
(4)	சோழன் பொறியியற் கழகம்	312
(5)	அண்ணா பொறியியற் கழகம்	300
	..	2,538

அவைகள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்கின்றன :—

(அ) ஊர்திக்கான கூடு கட்டுதல்;

(ஆ) பராமரிப்பும், பிரித்து ஆராய்தலும்;

(இ) டயர் புதுப்பித்தல்;

(ஈ) வாகனங்களைப் பராமரித்தல்;

(உ) இரும்பில்லா உலோகக் கலவைகளை வார்ப்படம் செய்தல்;

(எ) கழகங்களின் கட்டிடங்களுக்கு மின் கம்பி பொருத்துதல்;

(ஏ) பெரிய அளவு பழுதுபார்க்கும் வேலைகள்;

(ஐ) தடைக் கருவிகள் (Break drums) உற்பத்தி செய்தல் (சேரன் பொறியியற் கழகம்);

(ஒ) எண்ணை சீர்படுத்துதல் (சேரன் பொறியியற் கழகம்);

(ஓ) மோட்டார் துணைக் கருவிகள் உற்பத்தி செய்தல்;

இக் கழகங்களின் நிதி செயல் திறன் (நிகர இலாபம்/இழப்பு) இணைப்பு II-ல் தரப்பட்டிருக்கிறது.

சேரன் பொறியியற் - கழகம் 1976–77 ஆம் நிதி ஆண்டில் 12 சதவீதம் பங்கு வீதத் தொகையான ரூ. 3 இலட்சத்தை வழங்கியிருக்கிறது.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம்.

பொதுமக்களிடமிருந்தும் மற்றும் நிறுவனங்களிடமிருந்தும் வைப்புத்தொகை மற்றும் கடன் ஈட்டுப் பத்திர மூலமாக, அரசுரிமை போக்குவரத்துக் கழகங்களின் மூலதன செலவு திட்டங்களுக்கு போதிய நிதி வசதி அளித்திட 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக்கழகம் நிறுவப்பட்டது. இக்கழகம் நிறுவப்பட்டு 2½ ஆண்டுகளுக்கு மேலாகிறது. இதுவரை இக்கழகம் ரூ. 600 இலட்சம் வைப்புத் தொகை பெறுவதற்கான ஏற்பாட்டில் ஈடுபட்டு, தற்போது ரூ. 500 லட்சம் நிகர வைப்புத் தொகையாக பெற்றுள்ளது. இது தவிர, ரூ. 70 இலட்சம் மதிப்புள்ள கடன் ஈட்டுப் பத்திரங்களையும் பெற்றுள்ளது. இக் கழகம் ரூ. 115 லட்சம் பங்கு மூலதனத்தில், தற்போது ரூ. 685 லட்சம் நிதி வசதி படைத்துள்ளது.

2. 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரை இக்கழகம் ரூ. 14,50 லட்சம் வரை கீழ்க்கண்டவாறு கடன் வசதி அளித்துள்ளது :—

ஆண்டு.		நேரடியாக தந்த கடன்.	பிறர் மூலமாக கடன் வசதி.	மொத்தம்.
(1)		(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்).		
1975–76	..	1,49.00	1,65.00	3,14.00
1976–77	..	5,35.55	70.00	6,05.55
1977–78	..	5,31.33	..	5,31.33
மொத்தம்	..	12,15.88	2,35.00	14,50.88

3. இப்படி ரூ. 14.50 லட்சம் வரை கடன் வழங்கியும் பிறரிடம் கடனுக்கு ஏற்பாடு செய்தும் தந்ததால், போக்குவரத்து நிறுவனங்களின் பேருந்துகளின் எண்ணிக்கை சுமார் 900 அதிகமாகி, அதன் மூலம் 7,000-க்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

4. மேற்கண்டவாறு புறநகர் போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதி உதவி அளித்ததோடு நில்லாமல், இக்கழகம் விரிவுபடுத்தப்பட்ட சென்னை பெருநகரின் நன்மையைக் கருதி பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெரு நகர்) மேலும், சுமார் 550 பேருந்துகள் வாங்குவதற்கு உலக நாடுகள் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து உதவியது. மேற்படி திட்டத்திற்கு தேவையான ரூ. 12,18 லட்சம் தொகையில், இக்கழகம் தன்னுடைய நிதி வசதியிலிருந்தும், மற்றும் பிற நிறுவனங்களின் மூலமாக சுமார் ரூ. 5,60 லட்சம் தர இருக்கிறது. இத்திட்டத்திற்கு பிற நிறுவனங்களின் மூலமாக மீதியுள்ள தொகை கடனாக பெற்றுதரப்படும்.

இத்தொகையில் இக்கழகத்தின் பங்கு 1977–78-ம் ஆண்டு ரூ. 70 லட்சமாகவும், மற்றும் 1978–79-ம் ஆண்டு ரூ. 1,20 லட்சமாகவும் இருக்கும்.

5. நாள்தோறும் சுமார் 40 லட்சம் பேர் பயணம் செய்கின்ற அரசு போக்குவரத்து நிறுவனங்களின் வளர்ச்சிக்காக, இக்கழகம் இந்த அளவு நிதி வசதி அளித்து உள்ளது. வருகின்ற 1978–79 ஆம் ஆண்டு மேலும் அதிக நிதி வசதி அளித்திடும். அது ரூ. 6 50 லட்சமாக இருக்கும்.

[1978 மார்ச் 20

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம்.

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம், 1975 ம் ஆண்டு மார்ச் திங்கள் தமிழ்நாட்டில் சாமான்களையும் அவசிய பண்டங்களையும் கொண்டு செல்ல, 1974–75-ஆம் ஆண்டிற்கான வேலை வாய்ப்பு வளர்ச்சி திட்டத்தினையொட்டி, 1956-ம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டது. இதன் பங்கு மூலதனம் ரூ. 40 லட்சம்.

2. ஆரம்ப காலத்தில் முன்னாள் இராணுவத்தினருக்கு வேலை வாய்ப்பளிப்பதும், முக்கியமாக தமிழ்நாடு நுகர் பொருள் வழங்கும் கழகத்திற்குத் தேவையான பொருட்களை ஏற்றிச் செல்வதும், இதற்காக 100 சரக்குப் பேருந்துகளை வைத்துக் கொள்வதும் இக்கழகத்தின் நோக்கங்களாக இருந்தன. தற்பொழுது இக்கழகத்திடம் 68 சரக்குப் பேருந்துகள் உள்ளன. மொத்தம் 255 நபர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் 188 நபர்கள் முன்னாள் இராணுவத்தினராவார்கள்.

3. இக்கழகம் தொடக்கக் காலத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வழங்கும் கழகத்திற்கும், தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கும் பணியாற்றி வந்தது. தற்பொழுது இந்திய உணவு கழகத்தினரின் உணவுதானிய நடமாட்டத்திற்கான சரக்கு ஏற்றும் இறக்கும் பணிகளையும், தமிழ்நாடு இரும்புக் கழகத்தினருக்கான இரும்புப் போக்குவரத்துப் பணியினையும் இக்கழகம் மொத்த அளவில் மேற்கொண்டுள்ளது. 1977 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19-ம் நாளிலிருந்து இக்கழகம் தமிழ்நாட்டிலுள்ள 89 முக்கிய எல்லா இடங்களையும் உள்ளடக்கி கூட்டுப் போக்குவரத்தினையும் துவங்கியுள்ளது. இதன் மூலம், அரசு அச்சகங்களிலிருந்து பல்வேறு அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் எழுது பொருள் மற்றும் பண்டங்கள் எடுத்துச் செல்லும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கிய வியாபாரங்கள் உள்ள அதிக இடங்களில் சார்பு அலுவலர்களை நியமிப்பதுபற்றிய கேள்வி அரசின் பரிசிலனையில் உள்ளது.

4. இக்கழகம் தற்பொழுது நட்டத்தில் இயங்கி வருகின்றது. இக்கழகத்திற்கென சென்னையில் ஒரு முறையான தொழிற்கூடம் கட்டுவதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. பராமரிப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும் நிலையினாலும், சரக்கெடுத்துச் செல்லும் போக்குவரத்துப் பணியினை பொதுமக்களுடைய கவனத்திற்கு பரந்த அளவில் கொண்டு வருவதனாலும், அரசு உற்பத்திப் பிரிவுகள் இக்கழகத்தினை மேலும் அதிகபட்ச அளவில் பயன்படுத்த முன்வரும் நிலையினாலும், இக்கழகம் நட்டப்போக்கிலிருந்து திரும்பி, நல்ல இலாபம் தரக்கூடிய அமைப்பாக மாறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

1978 மார்ச் 20]

சாலைப் போக்குவரத்து நிறுவனம்.

எந்த ஒரு நிறுவனத்திற்கும் அதனுடைய முன்னேற்றத்திற்காக அதனுடைய நிர்வாகிகளுக்கு காலமுறை நிர்வாக பயிற்சியும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகள் தேவை. இந்த அடிப்படை நோக்கத்தின்கீழ், 1976-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சாலைப் போக்குவரத்து நிறுவனம் துவக்கப்பட்டது. அந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:—

(1) சாலைப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அந்நிறுவனங்களின் தொழில் நுட்ப வளர்ச்சி, போக்குவரவு, நிர்வாகம் மற்றும் கணக்கு ஆகிய பிரிவுகளில் பயிற்சி அளிப்பது ;

(2) சாலைப் போக்குவரத்து நிறுவனங்கள் திறமையாக செயல்பட சாலைப் போக்குவரத்துத் துறையில் நடைமுறை மற்றும் விஞ்ஞான ரீதியாக ஆராய்வது ;

(3) சாலைப் போக்குவரத்தில் தற்கால முன்னேற்றங்கள் பற்றியும் அவைகளின் தற்போதைய பிரச்சினைகள் பற்றியும் விவாதித்து அறிந்துகொள்ள கருத்தரங்குகளும், மாநாடுகளும் நடத்துவது ;

(4) மாநில போக்குவரத்து நிறுவனங்களுடன் கலந்து தக்க ஆலோசனை கூறுவது ;

(5) மாநில போக்குவரத்து நிறுவனங்கள் வாங்கிய பல்வகை உபரி உறுப்புகளின் தன்மைகளை பரிசோதித்து தருதல் ;

(6) போக்குவரத்து நடைமுறை நூல் (Transport Manual) தயாரித்தலும், மற்றும் திட்டமிட்ட அளவு மற்றும் தேவையான வரையறைகளை நிர்ணயித்தலும் ;

(7) போக்குவரத்து கழகங்களுக்குத் தேவையான தொலைநோக்குத் திட்டங்களை தயாரித்தல்.

1977–78 ஆம் ஆண்டு, போக்குவரத்து அதிகாரிகள், தொழில் நுட்ப அதிகாரிகள், பணி பிரிவு அதிகாரிகள், கிளை மேலாளர்கள், உதவி கிளை மேலாளர்கள், கட்டிடப் பொறியாளர்கள், மற்றும் இளநிலை உதவியாளர்கள் பொறியாளர்கள் ஆகியோருக்காக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது.

இந்நிறுவனம் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேருந்து தடங்களைப் பற்றி பல்லவன் போக்குவரத்து (விரைவு) நிறுவனத்திற்கு தக்க ஆலோசனை கூறி அந்நிறுவனம் நெடுந்தூரப் போக்குவரத்து தடங்களில் பேருந்துகள்

விட பரிந்துரை செய்தது. இந்நிறுவனம் செய்துள்ள பல குறிப்பிட்ட காரியங்களில் இந்திய தொழில் நுட்ப கழகத்துடன் (I. I. T.) கலந்து பேருந்துகளிலிருந்து வெளியாகும் புகையினை கட்டுப்படுத்தும் வகைக்கான தொழிற்கூடம் ஒன்றைநிறுவியது ஒன்றாகும். அத் தொழிற்கூடத்திற்குத் தொடர்புள்ள கண்காட்சி ஒன்றினையும் நடத்தியது. அக் கண்காட்சியில் பல சிறப்பு பெற்ற மோட்டார் வாகன உதிரி உறுப்பு உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். ஐ.சி. எஞ்சின் (I.C. Engine) மற்றும் எண்ணை எரி பொருளாவது குறித்து தேசிய மாநாடு ஒன்றினையும் பேருந்துகளுக்குத் தேவையான உதிரி பாகங்களைக் குறைத்து உபயோகப்படுத்துவது குறித்து கருத்தரங்கு ஒன்றினையும் இந்நிறுவனம் நடத்தியது. மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு உதவுகின்ற வகையிலே நால் நிலையச் செய்திக் கதிர் ஒன்றை காலமுறையாக வெளியிட்டது.

போக்குவரத்து நிறுவனம் வெற்றிகரமாக இயங்க மிக முக்கிய மானவர் சிறந்த பேருந்து ஓட்டுநர் என்பது நாங்கள் அறிந்த உண்மை. பொது மக்களிடமிருந்து ஓட்டுநர்களுடைய பழக்க வழக்கங்களைப் பற்றிய புகார்கள் முடிவில்லாமல் வந்த வண்ணம் இருந்தன. அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அவர்களைக் கட்டுப்படுத்தவும், ஒழுக்கமாக இருத்தல் பற்றியும் நிறைய ஆலோசனைகள் கூறப்பட்டன. இக் குறைகளுக்குக் காரணம் அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் கோளாறு இருப்பதாக அரசு நம்புகிறது. அவர்கள் இவற்றினை சரக்கு போக்குவரத்து மற்றும் பார வண்டி ஓட்டுநர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். ஓட்டுநர்கள் தங்களின் கடுமையான உழைப்பினால் தொய்வு அடைந்து சமூக நலனுக்கு பொறுப்பில்லாத லாதவராகி விடுகிறார். நாங்கள் ஆரம்ப நிலையிலிருந்தே ஓட்டுநர்களுக்குச் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் விஞ்ஞான ரீதியாகவும், முறையாகவும், உபயோகமான முறையில் பயிற்றுவிக்கவும் சமூக நலனை கருத்தில் கொண்டு நல்ல முறையில் பேருந்துகளை ஓட்டுவிக்கவும் முடிவு எடுத்துள்ளோம்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு மின் வாரியத்திற்காக தமிழ்நாட்டிலுள்ள அனல்மின் நிலையங்களுக்கு கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு நிலக்கரி எடுத்து வரும் பணிக்காக அமைக்கப்பட்டது. தமிழ்நாடு மின் வாரியம் இப்பணிக்காக, 1975-ம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 8-ஆம் நாளில், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துடன் ஒரு ஐந்தாண்டுக் கால ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டது. அவ்வொப்பந்தத்தின் அடிப்படையின் பேரில், நிலக்கரி ஏற்றி வரும் பணி, 1976 ஜூன் திங்கள் வரை மேற்கொள்ளப்பட்டது. 1975 மார்ச் மாதத்திலிருந்து 1976 ஜூன் வரை

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்கள் தமிழ்நாடு மின்வாரிய உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்ட கால அளவில், சுமார் 1,15,000 மெட்ரிக் டன்கள் நிலக்கரி சென்னைக்கு எடுத்து வரப்பட்டது.

2. ஜூன் 1976-க்குப் பின்னர் புயலின் காரணமாக. இரயில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டதின் காரணமாக, 1977 ஆகஸ்டிலிருந்து அக்டோபர் முடிய 30,000 டன்கள் நிலக்கரி தற்காலிகமாக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்டது. இது தவிர ஜூன் 1976-க்குப் பின்னர் இரயில் பெட்டிகள் கிடைப்பதில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாகவும், மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள சந்தா நிலக்கரிச் சுரங்கங்களிடமிருந்துதான் தமிழ்நாடு மின்சார வாரியம் நிலக்கரி பெற வேண்டும் என்ற மைய அரசின் ஏற்பாட்டினாலும், கல்கத்தாவிலிருந்து, தமிழ்நாடு மின் வாரியத்திற்காக கடல் மார்க்கமாக நிலக்கரி எதுவும் கொண்டு வரப்படவில்லை. சமீபத்தில் மத்திய எரிபொருள் ஆராய்ச்சிக் கழகத்தினர், பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலுள்ள உலைக்கு மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள சந்தாவில் கிடைக்கும் நிலக்கரி ஏற்றவையல்ல என்று தமிழ்நாடு மின்வாரியத்திற்குக் கருத்து தெரிவித்துள்ளனர். இதனையொட்டி, தமிழ்நாடு மின்வாரியம், மத்திய அரசின் நிலக்கரித் துறைக்கும், பம்பாயிலுள்ள கப்பல் போக்குவரத்துத் தலைமை இயக்குநருக்கும் இரயில் மற்றும் கடல் மார்க்கமாக வங்காளம், பீகார் நிலக்கரியைக் கொண்டு வரும் பணியை மீண்டும் தொடங்கக் கோரியும், இதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்களை பயன்படுத்தக் கோரியும் வேண்டுகோள்கள் விடுத்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்களான தமிழ் அண்ணாவையும், தமிழ்ப் பெரியாரையும் பயன்படுத்தாத நிலையில் இக்கப்பல்கள் இரயில்வேக்கான நிலக்கரியை எடுத்துவரப் பயன்படுத்தப்பட்டன. கரையோர கப்பல் கட்டண விகிதங்கள் குறைவாக இருந்த காரணத்தால், மேற்சொன்ன வகையில், கழகத்திற்கு நட்டம் ஏற்பட்டது. 1976–77இல் தமிழ்நாடு மின்வாரியத்திற்கென, 20,512 மெட்ரிக் டன் நிலக்கரியும் (ஜூன் 1976 வரை) இரயில்வேக்கான, 20,254 மெட்ரிக் டன் நிலக்கரியும், இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனத்திற்காக பங்களாதேஷிலிருந்து 3,365 டன் அஸ்பால்டும், 6,040 மெட்ரிக் டன் உப்பும், 193 மெட்ரிக் டன் எடை அளவிற்கு ஏனைய பிற பொருள்களையும் எடுத்து வந்தன. இக்கப்பல்கள் 1977–78ஆம் ஆண்டு இறுதி வரை, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்கள் தமிழ்நாடு மின்வாரியத்திற்கென 31,449 மெட்ரிக் டன் நிலக்கரியும், இந்திய ரயில்வேக்காக, 30,280 மெட்ரிக் டன் நிலக்கரியும், தனியார் தொழிற்சாலைகளுக்கென 12,110 மெட்ரிக் டன் நிலக்கரியும் எடுத்து வந்தன. தமிழ் அண்ணா கப்பல் 6,298 மெட்ரிக் டன் உப்பும் எடுத்துவர 24 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கும் கொடுக்கப்பட்டது. மேற்கூறிய

கரையோர வாணிபம் தவிர, தமிழ்ப் பெரியார் கப்பல் இந்திய தாது மற்றும் உலோக வணிகக் கழகத்திற்கென, 9,941 மெட்ரிக் டன் நிலக்கரியை இலங்கைக்கும் எடுத்துச் சென்றது.

1976–77ஆம் ஆண்டு தமிழ்ப் பெரியார் கப்பல் விசாகப் பட்டினம் இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழில் கூடத்தில் 62 இலட்ச ரூபாய் செலவில் சிறப்பு மதிப்பீட்டாய்வு செய்து பழுது பார்க்கப்பட்டது. தமிழ் அண்ணா கப்பல் 1978ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சிறப்பு மதிப்பீட்டாய்வு செய்து பழுது பார்க்கப்பட வேண்டும்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வரும் நிலைமையை, இந்தியக் கப்பல் நிறுவனங்களில் மத்திய அரசு இயக்குநர் ஆய்வு செய்து, கழகத்தை நல்ல முறையில் வளர்ச்சி அடையச் செய்வதற்கான அடிப்படைக் கட்டமைப்பு உள்ளதென்றும், கழகம் விரிவுபடுத்தப்பட வேண்டுமானல், அதற்கான முடிவை, விரைவில் மேற்கொள்ள வேண்டுமென்றும், கருத்துத் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மின் வாரியத்திற்கென ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி எடுத்து வரும் பணிக்கு, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்களைப் பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையிலிருந்து வருகிறது.

மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனம்.

தமிழக அரசின் சுமார் 6,000 மோட்டார் வாகனங்களை நல் நிலையில் பேணிப் பராமரிக்கும் பொறுப்பை மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனம் ஏற்றுள்ளது. இந்நிறுவனத்தின் பணிக் களரிகள் (workshops) அரசு வண்டிகள் எல்லாவற்றையும் முழு அளவில் பராமரிக்க இயலாத நிலையில் இருக்கின்ற காரணத்தால், குறிப்பிட்ட விதி முறைகளின் கீழ் 39 தனியார் பணிக்களரிகளுக்கு பழுது பார்க்க அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பட்டினப்பாக்கத்தின் அருகில் எல்லா வசதிகளுடன் கூடிய புதிய தலைமைச் செயலக சர்வீஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேலும் நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் முதல்தரப் பணிக்களரிகள் ஏற்படுத்த செயற்குறிப்பு உள்ளது. இந்நான்கு இடங்களிலும் பணிக்களரிகளுக்கான கட்டிடப் பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டன.

1977ஆம் ஆண்டு பல்வேறு வகைப்படும் கிட்டத்தட்ட 15,000 பழுதுப் பணிகளை இந்நிறுவனம் செய்து முடித்தது.

1977 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்தைச் சார்ந்த மத்தியக் கொள்முதல் மற்றும் பண்டகசாலை, ரூபாய் 25 இலட்சம் பெறுமானமுள்ள உதிரிச் சாமான்கள், சார்புப் பொருட்கள் ஆகியவற்றை மொத்தமாகக் கொள்முதல் செய்து பணிக்களரிகளுக்கும் இதர துறைகளுக்கும் வழங்கியது.

மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்திலுள்ள தொழிலாளர்களுக்கு காலணிகள், சீருடைகள், சோப்பு, துப்புரவுத் துணிகள் போன்றவை இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்தின் எல்லாப் பணியாளர்களையும் 1960ஆம் ஆண்டு தமிழ்நாடு தளர்த்தப்பட்ட ஓய்வு ஊதியத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவர இவ்வரசு சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளது.

ச. பொன்னையன்,
போக்குவரத்துத்துறை அமைச்சர்.

இணைப்பு.

போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலை.

கழகத்தின் பெயர்.	1976–77 ஆண்டில் ஆதாயம் (+) இழப்பு (—)		31–3–1977 கணக்குப்படி திரண்ட ஆதாயம் (+) இழப்பு (—)		1977–78 கணக்குப்படி திருத்தப்பட்ட மதிப்பீடுகள்*	
(1)	(2)		(3)		(4)	
			(ரூபாய் இலட்சத்தில்.)			
1. பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர் பிரிவு).	(—)	0.40	(—)	5,42·56	(—)	13.16
(விரைவுப் பிரிவு)	(—)	7.29	(—)	1,35.39	(+)	2.10
(புறநகர்ப் பிரிவு)	(—)	40.21	(—)	1,13.72	(—)	39.08
2. பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ..	(+)	85.40	(+)	19.98	(+)	1,30.66
3. சேரன் போக்குவரத்துக் கழகம் ..	(+)	49.48	( )	80.37	(+)	75.86
4. சோழன் போக்குவரத்துக் கழகம் ..	(—)	13.39	(—)	1,43.15	(+)	15.00
5. அண்ணா போக்குவரத்துக் கழகம் ..	(+)	3.83	(—)	20.95	(+)	23.32
6. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்	(+)	17.67	(—)	1,23.17	(+)	85.00
7. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்	(—)	48.56	(—)	1,47.31	(+)	0.18
மொத்தம் ..	(+)	46.53	(—)	11,25.90	(+)	,79.88

* வருமான வரி செலுத்துமுன்.

பொறியியற் கழகங்களின் நிதி நிலை

கழகத்தின் பெயர்.	1976–77 ஆண்டில் ஆதாயம் (+) இழப்பு (—)		31–3–1977 கணக்குப்படி திரண்ட ஆதாயம் (+) இழப்பு (—).		1977–78 கணக்குப்படி தற்காலிகமான ஆதாயம் (+) இழப்பு* (—)	
(1)	(2)		(3)		(4)	
			(ரூபாய் இலட்சத்தில்).			
1. பல்லவன் பொறியியற் கழகம்.. ..	(+)	0.14	(—)	0·18	(—)	0.31
2. மதுரை பாண்டியன் பொறியியற் கழகம்	(+)	3.61	(—)	2.61	(+)	18.37
3. சேரன் பொறியியற் கழகம்	(+)	15.95	( )	20.19	(+)	16.27
4. சோழன் பொறியியற் கழகம்	(+)	0.20	( )	0.13	(+)	3.19
5. அண்ணா பொறியியற் கழகம்	(+)	0.18	(—)	4.08	(+)	5.26
மொத்தம்	(+)	20.8	( )	13.45	(+)	42.78

* வருமான வரி செலுத்துமுன்.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

அடையாறு சீரமைப்புத் திட்டம்.

*638 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அடையாறு சீரமைப்புத் திட்டம் அரசின் ஆலோசனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, மதிப்பீடு எவ்வளவு என்றும், எப்போது துவங்கப்படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டு இருக்கின்றன. ஒன்று, நம்பியார் குழு. மற்றொன்று, சிவலிங்கம் குழு. நம்பியார் குழுவின் சிபாரிசின்படி கரை அமைக்கும் பணி ரூ. 3·07 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சிவலிங்கம் குழுவின் அறிக்கை அரசின் ஆலோசனையில் உள்ளது.

வடவாறு விரிவாக்கக் கால்வாய்.

*639 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில், மன்னார்குடி தாலுக்காவில் 43 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெற காரணமாக உள்ள வடவாறு விரிவாக்கக் கால்வாயை கல்லணையில் இணைக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

1978 மார்ச் 21]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவிரியில் இருந்து பிரிந்து பாசனத்திற்கு உபயோகப்படுத்தப்படும் வடவாறு விரிவாக்கக் கால்வாய் பாசனத்தின் விளைவாக சுமார் 43,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகின்றது. ஆகவே, அதைச் சீரமைக்கும் திட்டம் ஏதாவது அரசுக்கு உண்டா ? விரிவாக்கம் செய்யும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதன் கீழ் பயிரிடப்படுகின்ற பாசன நிலங்களின் பரப்பளவு 28,127 ஏக்கர். இந்தக் கால்வாயை நவீனமாக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்த வாய்க்கால் பாசனத்திலுள்ள நிலங்கள் பாசன ஆயக்கட்டில் சேர்ந்ததாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதே தவிர ஒழுங்காகத் தண்ணீர் கிடைப்பது இல்லை. எவ்வளவு மழை பெய்தாலும், எவ்வளவு தண்ணீர் இருந்தாலும், அந்த வாய்க்காலின் கடைசிப் பகுதிக்குத் தண்ணீர் போய்ச் சேருவது இல்லை. ஆகவே, அதைப் பரிசீலனை செய்து, அந்தப் பாசன வாய்க்காலின் கடைசிப் பகுதிக்கும் தண்ணீர் கொடுக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே கல்லணைக் கால்வாய் நவீனமாக்கும் திட்டம் வருகிறபோது, அது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, கல்லணைக் கால்வாய், கல்லணை விரிவாக்கக் கால்வாய் ஆகிய இரண்டு திட்டங்களும் மன்னார்குடி, பட்டுக்கோட்டை பகுதிகளுக்குப் பாசனவசதி கொடுக்கும். ஆனால் காவிரியின் கடைமடைப் பகுதியான இளவனூர், திருவக்கோட்டை ஆகிய பகுதிகளுக்குத் தண்ணீர் போவதே இல்லை. தண்ணீர் வரும்போது அதிகாரிகளிடம் சொல்லி செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, அதை விரிவாக்கம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தற்போது அத்தகைய யோசனை ஏதும் இல்லை.

பூம்புகார் விருந்தினர் மாளிகை.

*640 வினா—திரு. இரா. இராசமாணிக்கம், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம் பூம்புகாரில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா விருந்தினர் மாளிகையின் பெயர் அண்மைக் காலத்தில் மாற்றப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

1978 மார்ச் 21]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேளாண்மைப் பணிகளுக்கு மின் இணைப்பு.

(துணை வினா இல்லை.)

*641 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், சிங்களம் கோம்பை, வரதராஜபுரம் முதலிய கிராமங்களில் விவசாயத்திற்கு மின் இணைப்புக் கொடுக்க மறுப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மின் இணைப்புக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ). நிலுவையிலுள்ள மனுக்களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஒரு முன்னுரிமை பட்டியல் தயாரித்திருக்கிறது. இந்த வழி முறைக்கு ஏற்ப சிங்களம்கோம்பை, வரதராஜபுரம் முதலிய கிராமங்களில் மின் இணைப்பு வழங்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சிங்களம்கோம்பை, வரதராஜபுரம் ஆகிய இடங்களில் எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்படும், எவ்வளவு சீக்கிரம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கிராமப்புற மின் வசதி திட்டத்தின் கீழ் வரதராஜபுரத்தில் இருந்து 15 மனுக்களும் சிங்களம்கோம்பையில் இருந்து 28 மனுக்களும் வரப் பெற்றுள்ளன. வரதராஜபுரத்திலிருந்து வரப்பெற்ற 15 மனுக்கள் எடுத்துக் கொள்ளப்படும். சிங்களம்கோம்பையிலிருந்து வரப்பெற்ற 28 மனுக்களில் 18 சிக்கனம் அற்றவைகளாக இருக்கின்றன. மீதமுள்ள 10 ஆய்வில் உள்ளன.

சந்தனத் தைலம் மற்றும் சோப்பு தயாரிப்பு.

*642 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தமிழ்நாட்டில் வளரும் சந்தன மரத்தைக் கொண்டு இங்கேயே ஒரு சந்தனத் தைலம் மற்றும் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்குப் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தமிழ்நாட்டில் காடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் சந்தன மரங்களைக் கொண்டு சந்தனத் தைலம் மற்றும் அகர் பத்தி தயாரிக்கும் தொழிற்சாலை களுக்கான திட்டம் ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது. சோப்பு தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

*643 வினா—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் சந்தனத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தமிழ்நாட்டின் காடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் சந்தன மரங்களைக்கொண்டு சந்தன தைலம் மற்றும் அகர்பத்தி தயாரிக்கும் தொழிற்சாலைக் கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது என்றாலும், இடம் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நமக்கு அண்டையிலே உள்ள கேரளாவிலும், அதைப்போல கர்நாடகாவிலும் சந்தன சோப்புகள் தயாரிக்கப்படுகின்றன. கேரளாவில் கேரளா சான்டல்உட் சோப் என்றும், கர்நாடகத்திலே மைசூர் சான்டல் உட் சோப் என்றும் தயாரிக்கப்படுகின்றன. அதைப்போல தமிழ் நாட்டிலேயும் சந்தன சோப்புகள் தயாரிக்க அரசு முன்வருமா, அல்லது தனியார் யாராவது இந்தத் தொழில் நடத்துவது பாதிக்கப்படும் என்று இது தவிர்க்கப்படுகிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, தனியார் யாருக்கும் எவ்வித சலுகையும் காட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு இதைத் தவிர்க்கவில்லை. இதற்கு முன்னாலேயே தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கும் ஏராளமான சந்தனக் கட்டை களைக் கொண்டு சந்தனத் தைலம், ஊதுபத்தி போன்றவைகள் தயாரிக்கும் முயற்சிகளை இதுவரையிலும் யாரும் எடுத்துக்கொள்ள வில்லை. எனினும் இந்த அரசு சந்தன மரத்தில் இருந்து எண்ணை எடுத்தல், ஊதுபத்தி தயாரிப்பது/போன்றவைகளில் தனியார் யாருக்கும் சலுகை காட்டுவதாக இல்லை. காடுகளில் இருந்து கிடைக்கும் இந்த சந்தன மரங்களைப் பயன்படுத்தி இந்த நாட்டை தொழில் மயமாக்கவேண்டும் என்ற நல்ல எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லி புத்தூர் அருகில் உள்ள அழகர் கோவில் மலைக்காடுகளில் சந்தன மரங்கள் அதிகமாக இருக்கின்றன. அவைகளை நல்லமுறையில்

விருத்தி செய்ய அரசு முயற்சிக்குமா ? எங்கெங்கு தமிழகத்தில் சந்தன மரங்கள் கிடைக்கிறதோ அங்கே எல்லாம் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வருமா, மேலும் சந்தன மரங்கள் அதிகமாக திருட்டுப் போகின்றன. அவைகளை தடுக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருப்பதால் இந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சியைப் பொறுத்து சந்தன மரங்களின் தேவை அதிகரிக்கின்ற வாய்ப்புகள் இருக்கின்றன. அப்போது சந்தன மரங்களை எங்கெங்கே வளர்ப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் வளர்ப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும். சந்தன மரங்கள் திருட்டுப் போவதாகச் சொன்னார்கள். இந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதன் மற்றொரு நோக்கமே இதைத் தவிர்ப்பதற்காகத்தான்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே திருப்பத்தூரிலே தனியார்துறையிலே சந்தனத் தைலங்கள் எடுக்கப்பட்டு வந்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா, பல ஆண்டுகளாக எடுக்கப்பட்டு வந்தது நிறுத்தப்பட்டுவிட்டது. மீண்டும் அதை திருப்பத்தூரில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு அந்த சந்தன சோப்பை, கேரளா சான்டல் சோப்பு, மைசூர் சான்டல் சோப்பு என்று இருப்பது போல, தமிழ் நாட்டிலே இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்வதை விட, உடனடியாக அதை ஏற்பாடு செய்யும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, சந்தனத் தைலத்திலிருந்து சோப்பு செய்வதை பின்னால் இந்த அரசு நிச்சயமாக யோசிக்கும். திருப்பத்தூரில் சோப் தொழிற்சாலை அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் அமைக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்து உள்ளது. எந்த இடம் என்று இன்னும் முடிவெடுக்கவில்லை.

திரு. செ. ம. ராஜு : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஏற்காடு மலை, கொல்லிமலை, பச்சைமலை போன்ற பகுதிகளில் அதிகமாக சந்தன மரங்கள் இருக்கின்றன. அதைப் பயன்படுத்திக்கொண்டு சந்தன தொழிற்சாலைகளை அமைத்து சோப்பு தயாரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, சேலத்திலே சந்தன தொழிற்சாலை அமைப்பது குறித்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை. வடாற்காடு மாவட்டத்திலே ஆரம்பிப்பதாகத்தான் இருக்கிறோம். அந்தத் தொழிற்சாலை

[1978 மார்ச் 21

வளர்ச்சியைப் பார்த்து இன்னும் அதிகமாக சந்தன மரங்கள் கிடைக்கின்ற பகுதிகளிலே தொழிற்சாலைகள் ஆரம்பிப்பது. குறித்து அரசு பின்னாலே உத்தேசிக்கும்.

[முற்பகல் 9-10]

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இந்த சந்தனத் தொழிற்சாலை தமிழ்நாட்டில், குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில் வேறு ஏதாவது இருக்கிறதா ? அரசாங்கத்தின் சார்பில் இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுவதால், ஏற்கெனவே அங்கே ஏதாவது தொழிற்சாலை இருந்தால் அது பாதிக்கப் படாமல் பார்த்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, தனியார் யாரும் சந்தனத் தொழிற்சாலை நடத்துகிறார்களா என்ற விவரம் இல்லை. அப்படியே இருந்தாலும், அரசு இத்தொழிலை ஆரம்பிக்கும்போது தனியார் பாதிக்கப்படுவார்களா என்பதுபற்றி நிச்சயமாகக் கவலைப்படாது. காரணம், சந்தனக் கட்டைகள் திருட்டு போவைத் தடுப்பதும் அரசின் நோக்கமாகும்.

திரு. துரை முருகன் : அங்கே வேறு ஒரு தொழிற்சாலை இருக்கிறது ? அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள்.

மாண்மிகு பேரவைத் தலைவர் : விவரம் இல்லை என்று சொல்லிவிட்டார் ; அவ்வளவுதான்.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, அரசாங்கத்தின் கைவசம் தற்போது எத்தனை டன் சந்தனக் கட்டை இருக்கிறது என்பதையும், ஏன் இதுவரை அதை விற்கவில்லை என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, சந்தனத் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றியது மூலக் கேள்வி. எவ்வளவு டன் கைவசம் இருக்கிறது என்பதுபற்றிய புள்ளி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் மிக அதிகமாக சந்தன மரங்கள் திருட்டு போகின்றன. பக்கத்தில் கர்நாடகம், கேரள மாநிலங்கள் இருப்பதுதான் அதற்குக் காரணம். அதைத் தடுக்க, அந்தப் பகுதியில் சந்தனத் தைலமோ சோப்போ தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப் படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ; தலைவரவர்களே, ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுவதற்குத்தான் இப்போது அரசு முடிவு செய்திருக்கிறது. இந்தத் தொழிற்சாலையை

1978 மார்ச் 21]

ஆரம்பிக்க ஏறத்தாழ 122 லட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதியில் ஆரம்பிப்பதுபற்றி பின்னால் யோசிக்கலாம்.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, வாணியம்பாடிக்கு அருகிலே ஜவ்வாது, ஏலகிரி மலைகள் இருக்கின்றன. அங்கே சந்தன மரங்கள் அதிகமாக இருக்கின்றன. இன்றைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் வாணியம்பாடிக்கு வருகை தரும்போதெல்லாம் நிச்சயமாக வாணியம்பாடியில் ஒரு சந்தனத் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அது மேடைப் பேச்சோடு இருந்துவிட்டது. இப்போதாவது இந்த சந்தனத் தொழிற்சாலையை வாணியம்பாடியில் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அவர்கள் முயற்சி எடுத்து, வெற்றிபெற என்னுடைய வாழ்த்துக்கள்.

திரு. நி. அன்பழகன் : தலைவரவர்களே, திருப்பத்தூரில் ஏற்கெனவே சந்தனக் கிடங்கு இருப்பதாலும், அங்கே போக்குவரத்து வசதி, இட வசதி, தண்ணீர் வசதி போன்ற வசதிகள் நிரம்ப இருப்பதாலும் அந்தப் பகுதியில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கிறோம் என்று தெரிந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள், தங்கள் பகுதியில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஒரு தொழிற்சாலையைத்தான் ஆரம்பிக்கப் போகிறோம் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் வடாற்காடு மாவட்டத்தில் ஆரம்பிப்பது என்று ஏற்கெனவே இரண்டு நாட்களுக்கு முன்னால் முடிவு செய்யப்பட்டுவிட்டது. அங்கே எந்த இடத்தில் ஆரம்பிப்பது என்று இன்னும் முடிவு செய்யவில்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க 122 லட்சம் ரூபாய் மதிப்பீடு என்று சொன்னார்கள். அது பப்ளிக் செக்டார் எனப்படும் பொதுத்துறையில் ஆரம்பிக்கப்படுமா அல்லது ஜாயின்ட் செக்டார் எனப்படும் கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப் படுமா ? அதோடு மினி பாக்டரி—சிறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது ; அப்படியானால் கோவை மாவட்டத்தில் நாமையூரில் ஒரு சிறு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் எண்ணம் நிச்சயமாக இல்லை. வடாற்காடு மாவட்டத்தில் தான் ஆரம்பிக்கப்படும். இந்தத் தொழிற்சாலையில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிலுக்கு 101.50 லட்சம் ரூபாயும், ஊதுபத்தி தயாரிக்கும் தொழிலுக்கு 20 லட்சம் ரூபாயும் ஆக ஏறத்தாழ 122 லட்சம் ரூபாயில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலை பொதுத்துறையில் ஆரம்பிக்கப்படுவது தான் உசிதம் என்று அரசு கருதுகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, வசதி படைத்தவர்கள் இறந்துபோனால் அவர்களுடைய பிணங்களை சந்தனக் கட்டை வைத்து எரிக்கிறார்கள். சில மடாதிபதி களின் பிணங்களை சந்தனக் கட்டை வைத்து எரிக்கிறார்கள். அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, சந்தனக் கட்டையை பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்து கிறார்கள். அவற்றிலே இதுவும் ஒன்று.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை வட ஆர்க்காடு மாவட்டத்திலே ஆரம் பிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஜவ்வாது மலைப் பகுதியிலே அதிகமான சந்தனக்கட்டைகள் கிடைக்கின்றன. ஆகவே, மலைவாழ் மக்களின் முன்னேற்றத்தைக் கருதி ஜவ்வாது மலை, ஜமுனாமத்தூரிலே இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப் பதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து, மலைப் பகுதியிலே அந்த சந்தனக் கட்டைகள் தனியார் நிலங்களிலே விளைகின்றன. அப்படிப்பட்ட தனியாருக்கு மானியம் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவ ரவர்களே, நல்ல மணம் கிடைக்கின்ற இடம் நோக்கி எல்லோ ருடைய கவனமும் செல்லும். அதுபோல் ஜவ்வாது மலையில் நல்ல மணம் உள்ள சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன என்பது அரசுக்குத் தெரியும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, காடு வளம் பெருகி இருக்கக்கூடிய பகுதி தர்மபுரி மாவட்டம். அது சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்களுக்கு மையப் பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தால் அங்கே இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவது சாலச் சிறந்தது என்று தமிழகமே சொல்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே இந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவ ரவர்களே, ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். ஒரு தொழிற் சாலை ஆரம்பிப்பதற்குத்தான் இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. அதுவும் வட ஆர்க்காடு மாவட்டம் என்று முடிவாகிவிட்டது. எனவே, அதனை மாற்றுவதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, தென் னாற்காடு கல்வராயன் மலையில் ஏராளமான சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன. ஆகவே, அங்கே சந்தனச் சோப்பு தொழிற் சாலை ஏற்படுத்தாவிட்டாலும் சந்தனத் தைலம், ஊதுவத்தி போன்றவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலையாவது அமைக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்திலே அங்கே இருக்கக்கூடிய சந்தனக் கட்டைகளை ஏற்றுமதி செய்கிறார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவ ரவர்களே மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த தகவலுக்கு இந்த அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட் டின் பல்வேறு பகுதிகளுக்கு சந்தனக்கட்டை அனுப்பப்படுகிறது. குறிப்பாக தனிப்பட்ட வியாபாரிகள் எல்லாம் வாங்குகிறார்கள். அதிகபட்சம் கர்நாடக மாநிலத்திலே அரசின் மூலமாகவும் வாங்கப்படுகிறது.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவரவர்களே, சந்தன மரத்தைக் கொண்டு செய்யப்படும் அழகு சிலைகளுக்கும் மாலை களுக்கும் வெளிநாடுகளிலே நல்ல தேவை இருப்பதால் அந்தத் தொழிலை ஊக்குவிப்பதற்கு ஏதாவது திட்டம் அரசிடம் இருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவ ரவர்களே, அந்தத் தொழில் ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டு தான் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்கொடை வசூலித்தல்.

*644 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகள், மாணவர்களிடம் எந்த உருவத்திலும் நன் கொடை வசூலிக்கத் தடை செய்யும் வகையில் கண்டிப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவரவர்களே, இது வரையில் எந்தெந்த கல்லூரிகள் அத்தகைய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவரவர்களே, கல்லூரி மாணவர்களிடத்திலே நன்கொடை வசூலிக்கின்ற கல்லூரியின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நாம் வலியுறுத்திக் கூறியதற்கு பின்னல் சென்னையிலே தியாகராஜர் கல்லூரியிலே அப்படி வசூலிக்கப்படுகிறது என்கின்ற புகார் வந்தது. ஆனால் விசாரித்ததில் போதுமான ஆதாரங்கள் இல்லையெனத் தெரிய வருகிறது. இருந்தாலும் அதை நடைமுறைப் படுத்துவதிலே அரசு கண்டிப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, தனியார் கல்லூரி ஆசிரியர்கள், அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கு, இப்போது உயர்நிலைப்பள்ளிகளில் புதிதாக ஹையர் செகண்டரி எஜுகேஷன் பாடமுறை ஆரம்பிக்கப் படுவதால், பாதிப்பு அதாவது பணிகள் இழப்பு ஏற்படாது என்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, கல்லூரிகளிலே நன்கொடை வாங்குகின்ற இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயது செய்து உறுப்பினர்கள் மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்விகள் கேளுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, பல கல்லூரிகளில் பணம் படைத்தவர்கள் பணம் கொடுப்பதும் அந்த நிர்வாகத்தினர் பணம் வாங்குவதும் இப்படித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அரசு நடவடிக்கை எடுப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் நேரத்திலேயும் வசூலிக்கிறார்கள். ஆகவே இப்போது அந்தக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அரசே சம்பளம் கொடுக்கின்ற வகையிலே இருப்பது போல் அந்தக் கல்லூரி மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் அரசே மேற்கொள்வதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, மாணவர்களைக் கல்லூரியிலே சேர்ப்பதற்கு விதிமுறைகளை உருவாக்க முடியுமா என்பதை அரசு ஆலோசித்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

திரு. ரா. உமாநாத்: கட்டாயமாக வசூல் செய்வதாக புகார் வந்து விசாரித்தபோது ஆதாரம் இல்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆதாரம் இல்லை என்பதல்ல உண்மை. கொடுக்கிறார்கள், உண்மையில் வசூல் செய்யவும் செய்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி விசாரிக்கப்போகிறபோது பெற்றோர்கள் சொல்லப் பயப்படுகிறார்கள். அந்த மாணவர்களை வேறுவகையில் பெயில் பண்ணிவிடுவார்களோ என்று அந்த பயத்தின் கான்டெக்ஸ்டில்தான் ஆதாரம் கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே ஆதாரங்களைப் பெற வழிவகை செய்ய யோசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அத்தகைய தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிற கல்லூரிகளின் மீது நடவடிக்கை எடுக்க அரசு நிச்சயமாக உறுதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதைத் தவிர்ப்பதற்காகத்தான் மாணவர்களைச் சேர்க்கிறமுறையில் ஏதாவது விதிமுறைகளைப் புகுத்த முடியுமா என்பதுபற்றி இப்போது ஆராய்ந்து வருகிறோம். ஆதாரம் இல்லாமல் நாம் நடவடிக்கை எடுப்பது என்பது அவ்வளவு உசிதமாகாது என்பதால்தான் அதிலே நாம் கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டியதாக இருக்கிறது.

திரு. போ. கோபாலன் : கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்க நன்கொடை வசூலிப்பதை தடை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தாலும் கல்லூரிகளில் சில நல்ல காரியங்களை நிறைவேற்ற வசூல் செய்வது தேவைப்படும். அந்நிதியை மாணவர்கள் அன்பளிப்பாக அல்லது நன்கொடையாக அளிப்பதை பெற கல்லூரி நிறுவனங்களுக்கு உரிமைகள் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தத் தனியார் கல்லூரிகளின் நிர்வாகப் கூட்டுப் மாநாட்டில் நான் பேசுகிறபோது இதைப் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் மாணவர்களைச் சேர்க்கின்ற போது என்ன நன்கொடை வாங்குகிறது ... அது இடத்திற்காகப் பெறப்படுகிற விலையாகத்தான் மக்கள் கருதுவார்கள், நாங்களும் கருதுகிறோம் என்று அவர்களுக்கு உறுதியாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : சென்னையில் இருக்கிற எஸ். ஐ. இ. டி. கல்லூரி அரசாங்க மானியம் தேவையில்லை என்றும், அவர்கள் நன்கொடை வசூல் பண்ணியே நாங்கள் கல்லூரியை நடத்துகிறோம் என்று அரசாங்கத்திற்கு சவால் விடுகிற நிலை இருப்பதாகக் கேள்விப்படுகிறேன், அது உண்மையா? அதேபோதில் நாகர் கோவிலில் உள்ள பயோனியர் குமாரசாமி கல்லூரியில் ஏற்கனவே எம். எஸ்.-ன் இன்னிசைக் கச்சேரி வைத்து பல லட்சக்கணக்கான

ரூபாய் மோசடி செய்திருப்பதாக பல புகார்கள் வந்திருக்கின்றன, போட்டோஸ்டெட் காப்பியும் இங்கே காட்டப்பட்டிருக்கிறது. அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எஸ். ஐ. இ. டி. கல்லூரியில் அவர்கள் சம்பளமே வாங்கிக்கொண்டிருக்கிறார்கள், என்று தகவல் இருக்கிறது. ஆகவே நாம் மானியத்தை நிறுத்தி விடுகிற நிலையில் இப்படி அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். பயோனியர் குமாரசாமி கல்லூரி பற்றி பல்வேறு பிரச்சினைகள் விசாரணையில் இருந்து வருகிறது.

திரு. ஓ. சுப்பிரமணியம் : சமீபத்தில் ''ஸ்டார் நைட்'' போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஆரம்பப் பள்ளி மாணவர்களாகிய சிறுவர்களிடமிருந்து கூட வசூல் செய்வதாக தகவல் இருக்கிறது. அது உண்மையா? அப்படி சின்னஞ்சிறு சிறார்களிடமிருந்து வசூல் செய்கிற காரியத்தை இனிமேலாவது நிறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி தகவல் இல்லை.

வள்ளியூர் உயர்நிலைப் பள்ளி.

* 645 வினா—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நெல்லை மாவட்டம் நெல்லை தெற்கு பகுதிக்கு உட்பட்ட வள்ளியூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவிகள் சேர்க்கப்படாததற்கு காரணம் என்ன?

(ஆ) இந்தச் சலுகை வள்ளியூரிலுள்ள இதர தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு மேற்கண்ட அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மட்டுமே மறுக்கப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) பெண்களுக்கென தனியாக பள்ளிகள் இயங்கும் இடங்களில், ஆண்கள் பள்ளிகளில் பெண்களைச் சேர்ப்பது பொதுவாகத் தவிர்க்க வேண்டுமென அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது தான் இதற்குக் காரணமாகும்.

(ஆ) இல்லை. வள்ளியூரிலுள்ள கஸ்தூரியா உயர்நிலைப் பள்ளியில் மாணவிகள் சேர்க்கக்கூடாதென பிறப்பிக்கப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரின் ஆணையை எதிர்த்து பள்ளி நிர்வாகம்

உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து, அவ்வாணை அமுல் படுத்துவதிலிருந்து நிறுத்த உத்தரவு பெற்றுள்ளது. ஆகையினால் இப்பள்ளியிலும் மற்றும் வடக்கன் குளத்தில் இதே நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளியிலும் மாணவிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்ட நூலகக் கட்டிடத்தில் நடைபெறும் கூட்டங்கள்.

* 646 வினா—திரு. என். கிட்டப்பா — மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில் ஒலிபெருக்கி பயன்படுத்தாமல் நடக்கும் இலக்கியக் கூட்டங்கள், செயற்குழுக் கூட்டங்களுக்குக் கூட போலீஸ் அனுமதி பெற்றாக வேண்டும் என்று அரசு புதிதாகக் கட்டளையிட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், எப்பொழுது முதல் ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுரையைச் சுற்றியுள்ள ஒன்றியப் பணியாளர்களுக்கு படிகள்.

* 647 வினா—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மதுரை கார்ப்பரேஷன் எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள கிராமங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஒன்றிய சிப்பந்திகள் அனைவருக்கும் வீட்டு வாடகைப் படியும் நகர ஈட்டுப் படியும் கொடுக்கப்பட வேண்டும் என்ற இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரையினை அமுல் படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று மதுரை நகர எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள இடங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் உட்பட எல்லா ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கும் குறிப்பிட்ட சில அளவுகளின்படி வீட்டுவாடகை மற்றும் நகர ஈட்டுப் படிகள் கொடுக்கப்படவேண்டும் என்று அரசு ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது.

[1978 மார்ச் 21

திரு. ரா. உமாநாத் : அப்படி உத்திரவிட்ட பிறகு அந்தக் குறிப்பிட்ட ஒன்றியங்களில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுக்கக் கொண்டு வந்திருக்கக்கூடிய சி. சி. ஏ., எச். ஆர். ஏ. ஆடிட் அப்ஜெக்ஷன் காரணமாக நிறுத்தியிருப்பதாக, 13-10-77-ல் கமிஷனர்கள் உத்தரவு போட்டது உண்மையா? அந்த ஆடிட் அப்ஜக்ஷனுக்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலநிதித் தணிக்கைத் துறையும், மாநிலத் தலைமைக் கணக்காயரும் தடை செய்துள்ளார்கள். இக் கிராமங்கள், மேற்கண்ட படிகள் வழங்குவதற்கு தகுந்தவை என அரசால் அறிவிக்கப்படவில்லை எனக் காரணம் காட்டப்பட்டுள்ளது. எனவே, இத்தணிக்கைத் தடையினை நீக்கும் பொருட்டு மதுரை நகரத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள எல்லாக் கிராமங்களையும் அறிவிக்கும்படி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி அக்டோபர், நவம்பர், டிசம்பர் 77, ஜனவரி 78 மாதங்களுக்கு தொடர்ந்து வழங்க ஆணையாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த 16 கிலோ மீட்டர்களுக்கு உட்பட்ட கிராமங்களை நோட்டிபை பண்ணுவதற்கு கலெக்டர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 8–6–76-லேயே கலெக்டர் கடிதம் இங்குள்ள செக்ரடரிக்கு எழுதியிருக்கிறார். அதில் வெஸ்ட் மதுரை, ஈஸ்ட் மதுரை, திருப்பரங்குன்றம் இதிலுள்ள கிராமங்களையெல்லாம் இந்த 16 கிலோ மீட்டருக்குள் சேர்த்து அங்குள்ள கலக்டர் 8–6–76-லேயே கடிதம் எழுதியிருக்கிறார்கள். I have seen the copy அதைத் தொடர்ந்து நோட்டிபை பண்ண வேண்டியதுதானே, இன்னும் நோட்டிபை பண்ணாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பிய கடிதத்தில் சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, முறைகேடுகள் எதுவும் வராமல் இருப்பதற்காக சில விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அதில் சொல்லப்பட்டுள்ள கிராமங்கள் அத்தனையும் 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ளனவா என்று சான்றிதழ் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. சோ. அழகர்சாமி : வீட்டு வாடகைப்படி கொடுக்க வேண்டிய இடங்களில் அந்த வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படாமல் இருப்பது தெரியுமா? 1972-ம் ஆண்டிலேயே கோவில்பட்டி இரண்டாம் நிலை நகராட்சியாக ஆக்கப்பட்டுவிட்டது. இங்கு கொடுக்கப்பட வேண்டிய 8 சதவீதம் வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படவில்லை. இதை உடனடியாகக் கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

1978 மார்ச் 21]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : எங்கெல்லாம் வீட்டு வாடகைப்படி கொடுக்கப்பட வேண்டுமோ அங்கெல்லாம் உரிய வீட்டு வாடகைப்படி கொடுக்கப்பட்டுதான் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவில்பட்டியைப் பற்றி குறிப்பிட்டார்கள், அதற்கான விவரம் தற்போது என்னிடமில்லை

புதுக்கோட்டையில் பேருந்து நிலையம்.

*648 வினா—திரு. த. புஸ்பராஜு : மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) புதுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) மற்றும் (ஆ) ; புதுக்கோட்டையில் புதுக்கோட்டை நகராட்சியால் ரூபாய் ஒன்பது லட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் (முதல் பகுதி) அமைப்பதற்காக அரசு 27–5–77-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

திரு. த. புஸ்பராஜு : பேரவைத் தலைவரவர்களே, புதுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு லோன் கொடுக்கப்படுதவதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரை சாங்ஷன் ஆகாமல் இருப்பதாகத் தெரிகிறது. ஆதலால் இந்த பேருந்து நிலைய வேலை - தொடக்க வேலை ஆரம்பிக்கப்பட்டு வேலை அத்துடன் நின்றுவிட்டது. எவ்வளவு சீக்கிரமாக இந்த வேலை ஆரம்பிக்கப்படும் ? எப்போது முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கடன் வழங்கப்பட்டுவிட்டது என்று ஏற்கனவே நான் தெரிவித்தேன். தலைமைப் பொறியாளரின் வரைபடம் தயாரானவுடன் வேலை ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜகுமார் விஜய ரெகுநாத தொண்டமான் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் கட்டக்கூடிய நேரத்தில் பயணிகள் தங்குவதற்கு அறைகள் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றிய விவரம் இல்லை. பேருந்து நிலையத்திற்கு தேவைப்படும் வசதிகள் முழுமையும் அமையக்கூடிய வகையில் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 21

திரு. எம். எம். ஏ. ரசாக் : பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையங்களில் இருக்கின்ற எல்லா கழிப்பிடங்களும் அசுத்தமாக இருக்கின்றன. ஆகவே கழிப்பிடங்களை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஏதாவது கட்டணம் வசூலித்து, அவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : எல்லா பேருந்து நிலையங்களிலும் உள்ள கழிப்பிடங்கள் அசுத்தமாக இருக்கின்றன என்ற கருத்தை ஏற்க முடியாது. எங்கெங்கு இப்படியிருக்கிறது என்று குறிப்பிட்டு தெரிவித்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம்.

அரியலூர் ஊராட்சி.

*649 வினா—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அரியலூர் பஞ்சாயத்தை முனிசிபாலிட்டியாக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஐந்து லட்சம் வருமானம் உள்ள பெரிய நகராட்சிகள்கூட நிர்வாகத்தை சரியாக நடத்த முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இரண்டு லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றலாம் என்பது முறையாகாது. ஆகவே, ஐந்து லட்சத்திற்குக் குறைவாக இருக்கின்ற பேரூராட்சிகளை நகராட்சியாக மாற்றாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படி ஒட்டு மொத்தமாகச் செய்ய இயலாது. குறிப்பிட்ட பேரூராட்சிகளில் இருக்கின்ற நிலைமையைப்பற்றி தெரிவித்தால் அதைப்பற்றி அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும்.

திரு. த. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் பேரூராட்சி மன்றம் இதற்காகத் தீர்மானம் போட்டு, நிறைவேற்றி, அதை கோட்ட வளர்ச்சி அதிகாரியும், மாவட்ட ஆட்சித்தலைவரும் நகராட்சியாக மாற்றுவதற்கு இதற்கு தகுதி இருக்கிறது என்று தீர்மானத்தை இங்கு அனுப்பியிருக்கிறார்கள். எந்த ஆண்டில் நகராட்சியாக மாற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 மார்ச் 21]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரியலூர் ஊராட்சியை 3-ம் தர நகராட்சியாக மாற்றலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுபற்றி ஊரக வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை வந்த பிறகு அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும்.

[முற்பகல் 9-30.]

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, என்னுடைய ஊராட்சியான திருவத்திபுரம் பேரூராட்சி 20,000 ஜனத்தொகை கொண்டதாகவும், 2 லிருந்து 3 லட்சம் வரை வருவாய் வரக்கூடிய பேரூராட்சியாகவும் இருக்கின்றது. அதை நகராட்சியாக மாற்றவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு புலவர் அவர்களுடைய கருத்து ஆராயப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் நகராட்சியாக உயர்த்தப்படுவதால், பொதுவாக அங்குள்ள பொது மக்கள் சொத்து வரி உயர்த்தப்படும் என்று பயப்படுகிறார்கள். இப்படி நகராட்சியாக உயர்த்தப்படுகின்ற நேரத்தில், முதல் ஐந்தாண்டு காலத்திற்காவது சொத்து வரியை உயர்த்துவதில்லை என்று அரசாங்கம் முன்வருவதோடு, அதற்கான பணிகளை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று அந்தப் பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. மாவட்ட ஆட்சியாளரும் அதை அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அது நகராட்சியாக மாற்றப்பட வேண்டும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லும்போது எல்லா நகராட்சிகளுக்கும் உரிய விதிமுறை இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சொ. ந. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகளை நகராட்சிகளாக மாற்றுவது என்பது மக்கள் அடிப்படையிலே மாற்றப்படுகின்றதா அல்லது வருமான அடிப்படையிலே மாற்றப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இரண்டின் அடிப்படையிலுமே மாற்றப்படுகின்றது.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி பேரூராட்சியை நகராட்சியாக ஆக்கும் திட்டம் உண்டா ? அதைப்போல் இந்த மாநில

அரசைப் பொறுத்தவரையில், எத்தனை பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்கியிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஏற்கனவே பதில் அளிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால் ஒட்டு மொத்தமாக தெரிவிக்கின்ற அளவுக்கு இப்போது என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்குப் பதில் கொடுக்கலாம்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, புதிய அரசு பொறுப்பேற்ற பின்னாலே, எத்தனை பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன ? அதைப்போல் எத்தனை நகராட்சிகள் பேரூராட்சிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுராந்தகத்தை நினைவிலே வைத்துக்கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்று நினைக்கிறேன். தனியாகக் கேள்வி போட்டால், விவரங்கள் தெரிவிக்கலாம்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அல்லது அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சென்னை நகராட்சியிலிருந்து இப்போதுதான் வெளியே வந்திருக்கிறீர்கள். தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரம் சொல்லலாம்.

ஸ்தாபன ரீதியில்லாத தொழிலாளர்கள்.

* 650 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பீடி தொழிலாளர் மற்றும் ஸ்தாபன ரீதியாக அல்லாத தொழிலாளர்கள் வாழ்க்கை நிலையை பரிசீலனை செய்ய அமைக்கப்பட்ட குழு அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதா?

(ஆ) அந்தக் கமிட்டியின் சிபாரிசுகளை தமிழக அரசு பரிசீலித்ததா ?

(இ) அவைகளை அமுல் நடத்துவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) அமைப்பு முறையில் அல்லாத தொழிலாளர் நலனுக்கெனத் தனிச் சட்டம் இயற்ற அரசு முடிவு செய்துள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இதில் எந்தெந்தத் தொழிலாளர்கள் அடங்குவார்கள் ? அதற்கான நடவடிக்கை என்னென்ன செய்வதாக உத்தேசம் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பு முறையில் இல்லாத எல்லாத் தொழிலாளர்களும் இதிலே அடங்குவார்கள் Unorganised industries other than Beedi Industries, and Shops and commericial Establishments. மேற்கண்டவர்களைத் தவிர மற்ற எல்லோருக்கும் இந்தச் சட்டம் பொருந்துவதாக இருக்கும்.

திரு. மி. வின்சென்ட் : அன்-ஆர்கனைஸ்ட் லேபர் அமைப்பு முறை இல்லாத தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருவதில், தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் முக்கியமான அம்சங்களைச் சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, குறைந்தபட்ச ஊதியம், வீட்டு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி முதலியன குறித்து 32 பரிந்துரைகள் வந்திருக்கின்றன. அவைகளையொட்டி சட்டம் இயற்றப்படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, திரட்டப்படாத தொழிலாளர்களில் ஒரு கணிசமான பகுதி கல்லுப்பட்டறைத் தொழிலாளர்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டறை வாடகையைக் கூலியிலே பிடிக்கிறார்கள், கருவி வாடகையை கூலியிலே பிடிக்கிறார்கள். கிட்டத்தட்ட கொத்தடிமைகளாக அவர்கள் இருக்கிறார்கள். திருச்சியிலே உண்ணாவிரதம் கூட இந்த தொழிலாளர்கள் இருந்தார்கள். என்னுடைய கேள்வி என்னவென்றால், இந்தக் கல்லுப்பட்டறைத் தொழிலாளர்கள் இந்தப் பரிந்துரையில் உட்படுத்தப்பட்டிருக்கிறார்களா ? அப்படியானால் அந்தப் பரிந்துரை என்ன என்பதைச் சொல்ல முடியுமா ? இல்லாவிட்டால் இதற்கு ஒரு ஒர்கிங் கண்டிஷன் பற்றிய ஒரு கமிட்டியை நிறுவ இந்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும். விரிவான பதில் வேண்டுமென்றால் அதைப் பற்றித் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பீடித் தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாக முறைப்படுத்த தொழிலாளர்களுக்காக கமிட்டி அமைக்கப்பட்டது. இதன் மீது சட்டம் எப்போது கொண்டு வரப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : குழு அமைத்தது 1973 ஆம் ஆண்டில். 28-1-78 அன்று கமிஷனருக்கு ஆய்வுரை வழங்க கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இன்று கூட தொலைபேசியில் சொல்லி உடனே அனுப்பச் சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே சட்ட அமைச்சர் ஒப்புதலும், முதலமைச்சர் ஒப்புதலும் கொடுத்துவிட்ட காரணத்தால் விரைவில் சட்டம் கொண்டு வரப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : திருநெல்வேலி மாவட்டத்தில் ஏறகதாழ ஐந்து லட்சம் பீடி சுற்றும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். சமீபத்திலே தொழிலாளர் நல ஆணையாளர் அவர்கள் அங்கே வந்திருக்கும்போது பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது எந்த அளவில் இருக்கிறது ? அங்கே இருக்கிற பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு சட்டத்தின் அடிப்படையில் கிடைக்கவேண்டிய குறைந்தபட்ச சம்பளத்தைக் கொடுக்கின்ற நிலை இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ? அப்படிக் கொடுக்காமல் இருக்கிற நிர்வாகிகள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்தது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பீடி சிகார் ஒர்க்கர்ஸ் ஆக்ட் 1966 அண்டு ரூல்ஸ் 1968 என்று ஏற்கனவே இருக்கிறது. ஊதியம், மற்றச் சலுகைகள், லீவ் போன்றவைகளிலே ஏதாவது தவறுகள் செய்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. சுப்பு : அன்-ஆர்கனைஸ்டு செக்டாரில் கைத்தறித் தொழிலாளர் பிரச்சினையையும் சேர்த்துதான் பரிசீலிக்கப்பட்டது. ஆனால் கைத்தறித் தொழிலாளர்களுக்குத் தனியாகக் கமிட்டி போட்டு தனிச் சட்டம் கொண்டு வரப்படும் என்று முன்பு அறிவிக்கப்பட்டது. இப்போது அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்து இருக்கும் சட்டம் கைத்தறித் தொழிலாளர்களையும் உள்ளடக்கியதா அல்லது அவர்களுக்குத் தனியாகச் சட்டம் கொண்டுவர அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : 1973-ல் அமைக்கப்பட்ட இந்தக் குழு 1978 ஆம் ஆண்டு வரையில் செயல்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். இப்படி பல்வேறு கமிட்டிகள் போடப்படுகிற நேரத்தில் அந்தக் குழுவின் செயற்குறிப்புகளை ஏற்றுக் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை என்ற குறை இருக்கிறது. அதை மாற்றுவதோடு, சென்னை போன்ற பெரிய நகரங்களில் தனிக் கடைகள் போன்றவற்றில் வேலை செய்கிறவர்களுக்குப் பெஞ்ச் போட்டுத் தரவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று அரசு உத்தரவு போட்டும் அதைச் செய்யாமல் இருக்கிறார்கள். அவ்வாறு செய்யாமல் இருக்கும் கடைக்காரர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட முதல் கேள்விக்கு—அந்தக் கமிட்டியின் பரிந்துரை 1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வந்திருக்கிறது. அதற்குப் பின்னர் குடியரசுத் தலைவர் ஆட்சி 1976 ஜனவரி 31 ஆம் தேதியிலிருந்து வந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த அரசு 30-6-77-ல் வந்த பிறகு ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் போராட்டங்கள் நடைபெறுவதை நீங்கள் அறிவீர்கள். அப்படி இருந்தும் கூட முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் கொடுத்துவிட்ட காரணத்தால் விரைவில் சட்டம் வர இருக்கிறது. கமிஷனர் ரிப்போர்ட் வந்தவுடன் விரைவில் சட்டம் கொண்டு வரப்படும்.

ஷாப் அண்டு எஸ்டாப்ளிஷ்மென்ட் ஆக்டில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு மாறாக ஏதாவது நடந்ததாகத் தகவல் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன். அதற்காகத்தான் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : விவசாயிகளுக்கு அடுத்தாற்போல் இருக்கக்கூடியவர்கள் 20 லட்சம் 30 லட்சம் பேருக்கு மேல் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மிகப் பெரிய அளவுக்கு அன்-ஆர்கனைஸ்டு ஒர்க்கர்ஸ் என்ற நிலையில் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்தக் குழு அறிக்கையில் கைத்தறி நெசவாளர்களைச் சேர்க்கவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிகிறது. ஆகவே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குத் தனியாகக் குழு அமைக்க ஏதாவது திட்டம் உண்டா ? இந்த அறிக்கை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் அதற்கென்று தனி அமைச்சர் இருக்கிறார்—இருவரும் கலந்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 9-40]

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பீடி, சுருட்டு கம்பெனிகளில் குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தை அமல் நடத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடந்த 50 நாட்களாக திண்டுக்கல்லில் இரண்டு சுருட்டு கம்பெனிகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தை அமல் நடத்த முடியாது என்று அவர்கள் பிடிவாதமாக இருக்கிறார்கள். அது 50 நாட்களாக மூடப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இனிமேலாவது அதுகுறித்து கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஏற்கனவே கேட்கப்பட்டு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் நான் பதில் கொடுத்து இருக்கிறேன். பீடி, சுருட்டு தொழிலாளர்கள் சட்டம் 1966 ஆம் ஆண்டு வந்தது. அந்தச் சட்டம் செல்லாது என்று முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்று பிறகு அது செல்லும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. அதற்குப் பிறகு அமல்நடத்தி வருகிறோம். அண்மையிலே, சென்னை, வட ஆற்காடு, திருச்சி ஆகிய இடங்களிலே நல்ல ஒப்பந்தங்கள் ஏற்பட்டு தொழிலாளர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தருகிறேன்.

கோயமுத்தூர் நகர அபிவிருத்தித் திட்டம்.

*651 வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோயமுத்தூருக்கு ஒரு பெரும் திட்டத்தை மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக எவ்வளவு தொகை செலவழிக்க உள்ளது ?

(இ) தமிழகத்தில் எத்தனை நகரங்களுக்கு இத்திட்டம் போடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டுக்காக ரூ. 2·92 கோடி செலவழிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) தமிழகத்தில் இரண்டு நகரங்களுக்கு (கோயம்புத்தூர் மற்றும் மதுரை) இத்திட்டம் போடப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்காக அளிக்கப்படும் அந்தப் பணம் ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய கட்டுக்கோப்புக்குள் வருகிறதா ? அல்லது தனியாகக் கடன் கொடுக்கப்படுகிற பணமா ? இந்தப் பணம் முழுவதற்கும் தமிழக அரசு என்ன வட்டி விகிதத்தைக் கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஐந்தாவது பிளான் புரோகிராமில்—தான் வருகிறது. 50 சதவீதம் லோன் ஆகவும் மத்திய அரசு தருகிறது. இதை 25 ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதிலே பர்ஸ்ட் பைவ் இயர்ஸ் மாரடோரியம் திரும்பத் தரவேண்டியதில்லை. அதற்கு வட்டி விகிதம் 5½ சத விதம்.

திரு. செ. மெ. ராஜு : தலைவர் அவர்களே, இந்த நகர் அபிவிருத்தித் திட்டத்திலே சேலத்தையும் இணைத்துக் கொள்வதற்கு உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 3 லட்சம் மக்கள் தொகைக்கு மேல் இருக்கக்கூடிய இடங்களுக்குத்தான் இந்த அபிவிருத்தித் திட்டம். சேலத்தினுடைய மக்கள் தொகை என்ன என்று எனக்குத் தெரியாது. தனிக் கேள்வி போட்டால் அதைப்பற்றிச் சொல்லலாம்.

திரு கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தின் கீழ் கோவை நகரத்தில் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன ? என்ன என்ன நன்மைகள் அந்த மக்களுக்கு அதனால் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான ஒருங்கிணைப்பு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கு முடிவான ஒப்புதல் நகர் ஊரமைப்பு இயக்குநருடன் கலந்தாலோசித்து அளிப்பதற்கு முன் கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சி அலுவலாளர்களை கீழ்க்கண்ட பணிகளை, முதலில் தொடங்குமாறு கேட்டுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

(1) சிங்காநல்லூர் மற்றும் குறிச்சி பகுதிகளுக்கு தண்ணீர் வசதி அளித்தல்.

[1978 மார்ச் 21

(2) குறிச்சி பகுதியில் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி.

(3) சிங்காநல்லூர் பகுதியில் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது சேலத்தினுடைய மக்கள் தொகை எனக்கு எவ்வளவு என்று தெரியாது என்று சொன்னார்கள். சேலத்தினுடைய மக்கள் தொகை 3½ லட்சம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கோவையைப்பற்றிய கேள்வி. தாங்கள் கையை எழுப்புகிறீர்கள். அனுமதி தரவில்லை என்றால் கோபித்துக்கொள்கிறீர்கள், இது சேலத்தைப்பற்றிய கேள்வியல்ல, கோயம்புத்தூரைப்பற்றி இருந்தால் கேளுங்கள், இல்லாவிட்டால் அமருங்கள்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சிக்கு இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது ? என்ன என்ன நன்மைகள் இந்தத் திட்டத்தின் மூலம் அளிக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகராட்சிக்கு 232 லட்சமும் மதுரை மாநகராட்சிக்கு 64 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 296 லட்சம் ரூபாய் ஆகும். இதிலே கோயம்புத்தூர் பற்றி நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். மதுரையில் செய்யப்போவது : (1) போக்குவரத்து வசதி அளித்தல் (டிராபிக் அரேன்ஞ்மெண்ட்).

(2) சந்தைப்பேட்டையில் வடிகால் பம்பிங் ஆலை.

(3) இஸ்மாயில்புரத்தில் வடிகால் வசதி.

(4) வடபகுதிக்கு தண்ணீர் வசதி.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோயம்புத்தூரைப்பற்றிக் கூறும்பொழுது கவிஞர் கண்ணதாசன் அவர்கள்

" கன்னியரின் கனியிதழை சோலை என்பார்,
என்ன காரணத்தினாலோ இவ்வூரை கோவை என்றார்! "

என்று கூறியுள்ளார்கள். அங்கு மேம்பாடு செய்யப்பட்டு தொழிலாளர்களுக்கு ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் படிக்கும்பொழுது இரண்டு வகையான வீட்டு வசதிகளைப் பற்றிப் படித்திருக்கிறேன்.

1978 மார்ச் 21]

தண்டராம்பட்டு ஒன்றிய விவசாயப் பொறியாளர் கூட்டுறவு சேவை சங்கம்.

*652 வினா திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தண்டராம்பட்டு ஒன்றியத்தில் உள்ள விவசாயப் பொறியியல் கூட்டுறவு சேவை சங்கத்தின் நிர்வாக இயக்குநர் பதவி நீண்ட நாட்களாக காலியாக உள்ளதால் நடைபெறவேண்டிய பணிகள் செவ்வனே நடைபெறாமல் உள்ளதால், விவசாயிகளின் நலன் கருதி உடனடியாக நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 27—9—1977 முதல் 10-1-1978 வரையில் தண்டராம்பட்டு விவசாயப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் திரு. அப்பாதுரை என்னும் நிர்வாக இயக்குநரின்கீழ் இயங்கி வந்திருக்கின்றது. திரு அப்பாதுரையை இராமநாதபுரம் மாவட்டம் சாக்கோட்டை விவசாயப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையத்திற்கு மாற்றியபின், 11—1—1978-லிருந்து, செங்கம் மையத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சி. கணேசன் என்பவரின் கூடுதல் பொறுப்பில் இயங்கி வருகின்றது தற்போது கூடுதல் பொறுப்பில் பணிபுரியும் நிர்வாக இயக்குநர், விவசாயிகளின் தேவையைக் கவனித்துக்கொண்டு வருகிறார். இம்மையத்திற்கு தனியே ஓர் நிர்வாக இயக்குநரை விரைவில் நியமனம் செய்ய தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையக நிர்வாக இயக்குநர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவரவர்களே, செங்கம் நிர்வாக இயக்குநர் அவர்களின் பொறுப்பிலே இந்தப் பணி இயங்குவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இங்குள்ள உதிரிப் பொருட்களை செங்கம் நிர்வாக இயக்குநர் அவர்கள் எல்லாமே எடுத்துச் சென்று விட்டார்கள். எந்தப் பணியும் நடைபெறவில்லை என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் விவசாயப் பணி மையத்திலே பணியாற்றும் நிர்வாக இயக்குநர் தண்டராம்பட்டு பணி மையத்தின் கூடுதல் பொறுப்பைக் கவனித்து வருகிறார். அங்கே இருக்கின்ற விவசாயக் கருவிகளையும், பொருள்களையும் வேறு மையத்திற்க்கு எடுத்துச் செல்ல முன் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும். அப்படி ஏதாவது எடுத்துச் சென்றதாக புகார் ஏதாவது மாண்புமிகு உறுப்பினரவர்கள் தருவார்களேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1978 மார்ச் 21

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் விவசாயப் பொறுப்பில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகஸ்தர்கள் இல்லாமல் இருக்கிறது. ஏற்கெனவே உறுப்பினர்கள் முன்னாலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது தனி அதிகாரியின் நிர்வாகத்தில் இருப்பதால் பல இடங்களில் இருக்கும் கருவிகள் பயன்படுத்தப்படாமலும், பிரயோசனம் இல்லாமலும் இருப்பதால் உடனடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பை அமைக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. கா. சு. தண்டபாணி: தலைவரவர்களே, கூட்டுறவு விவசாயப் பணி மையங்கள் இல்லாத ஒன்றியங்களில் துணை மையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இதுபோன்ற நிறுவனங்களில் இதற்குமுன் நடந்த ஆட்சியில் .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி தண்டராம்பட்டு ஒன்றியத்தைப் பற்றியது. வேறு தகவல்கள் அமைச்சரிடம் இருக்காது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) இராணிப்பேட்டையில் கொண்டாடப்பட்ட உழவர் பெருவிழாவிற்கு அத்தொகுதி உறுப்பினர் அழைக்கப்படாதது குறித்து.

*திரு. துரை முருகன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, இந்த நேரத்தில் ஒரு முக்கியமான பிரச்சினையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகளாக இந்த அவையிலே நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டும் என்றால் அரசாங்கம் நாங்கள் எந்தக் கட்சியிலே இருந்தாலும் எங்களை முறையாக நடத்த வேண்டும்.

1978 மார்ச் 21] [திரு. துரை முருகன்]

24 ஆம் தேதி என்னுடைய தொகுதியில் இராணிப்பேட்டையில் நௌலாக்கில் பண்ணை தினம், உழவர் பெருவிழா கொண்டாடப்பட இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை தாங்குகிறார். டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் வருகிறார். மாண்புமிகு அமைச்சரவர்கள் வருகிறார்கள். நான் பணிவன்போடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன், சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பிரதிநிதியாகிய எனக்கு அந்த விழாவிற்கு ஒரு அழைப்பு இல்லை, அதிலே என்னுடைய பெயரும் இல்லை. அரசாங்க விழாவில் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.யை அழைக்க வேண்டும் என்று ஜீ.ஓ. இருக்கிறது. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு நீங்களே மதிப்பு கொடுக்கவில்லை என்றால் நாங்கள் யாரிடத்தில் சொல்வது? எப்பொழுதுமே ஜனநாயகத்தில் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லியாகி விட்டது. ஒழுங்குப் பிரச்சினையைச் சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. துரை முருகன்: என்னுடைய தொகுதியில் நான் ஆற்ற வேண்டிய பணியை எப்படி ஆற்றுவது? இது பிரிவிலேஜாகவே வரும். நீங்கள் சொன்னால் நான் பிரிவிலெஜ் மோஷன் கொடுத்துவிட்டுப் போகிறேன். மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பெரும்பான்மை பலம் உள்ள கட்சியில் இருக்கிறார். அவருக்கு நாங்கள் மதிப்பு தருகிறோம். அதேபோல் அந்த இடத்தில் பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற எனக்கு மதிப்பு கொடுக்கப்படவில்லையென்றால் அமைச்சர் வரும்பொழுது தொகுதிப் பிரச்சினைகளை எப்படிச் சொல்ல முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய ஒழுங்குப் பிரச்சினையை நான் புரிந்துகொண்டேன்.

[முற்பகல் 9-50]

நான் சொன்னாலும் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். உங்களுடைய எண்ணங்களைப் புரிந்து கொண்டேன். கனம் உறுப்பினர் அவர்களுடைய ஒழுங்குப் பிரச்சினை அவைத் தலைவருக்கு உட்பட்டதா என்பதை நான் ஆய்வுக்கு எடுத்து, அவைத் தலைவர், அதிலே ஈடுபட்டு சொல்லக்கூடியதா என்பதையும் பார்த்து, அரசுத் தரப்பிலேயும் கேட்டு (குறுக்கீடு) அதற்கான முடிவை பின்னாலே நான் உறுப்பினருக்குச் சொல்கிறேன். உங்களுடைய ஒழுங்குப் பிரச்சினையைப் நான் புரிந்து கொண்டேன்.

3. தகவல் கோரல்.

(அ) அறிவிப்பு கொடுக்கப்பட்ட தீர்மானங்களை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அம்பிகாபதி அவர்கள் சொன்ன அத்தனை கருத்துக்களையும் நீக்கும்படி ஆணையிடுகிறேன். நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இந்தப் பிரச்னைகளை அறையிலே வந்து சொல்லவேண்டும். ஒழுங்குப் பிரச்னை என்று இவைகளைக் கிளப்பினீர்களானால், நான் குறிப்பிலிருந்து நீக்குவதைத் தவிர வேறு வழியில்லை. தயவு செய்து அமருங்கள். அந்த 41, 42, மற்றும் உரிமைப் பிரச்னைகளை அங்கே வந்து அறையிலே பேசுங்கள், *தாராளமாக ஒத்துழைக்கிறேன். வேண்டிய முகாந்திரங்கள் இருக்குமானால் அனுமதிக்கவும் தயாராக இருக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : ஒரு விஷயம் சொல்கிறேன். எஸ்.எஸ்.எல்.ஸி. பேப்பர் அவுட்டாகிவிட்டதென்று........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை இங்கே கேட்கக் கூடாது, அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, 42ஆவது விதியின்கீழ் 15ஆம் தேதியன்றும், 20ஆம் தேதியன்றும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அறையிலே வந்து கேளுங்கள். நீங்கள் கொடுத்ததை ஏற்றுக்கொள்வதையோ, ஏற்றுக்கொள்ளாததையோ, என் அறையிலே வந்து கேளுங்கள். இந்த அவையினுடைய நேரத்திலே நான் அனுமதிக்கமாட்டேன். உட்காருங்கள், தயதுசெய்து உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் தன் ஒழுங்குப் பிரச்னையோ, அல்லது ஒத்தி வைப்போ, அல்லது உரிமைப் பிரச்னையோ அங்கே வந்து கேளுங்கள்.

திரு. எம். ஆறுமுகம் : தொடர்ந்து இரண்டு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள். இங்கே கேட்கவேண்டாமென்று சொல்லும்போது, மறுபடியும் கேட்பேனென்பது சரியல்ல. அது என்னுடைய ஆய்விலுள்ள ஒன்று.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(ஆ) சந்திகாரில் நடக்கவிருக்கும் மத்திய-மாநில உறவு மாநாட்டில் தமிழக முதல்வர் கலந்து கொள்வது குறித்தும் டெல்லியில் நடந்த தேசிய அபிவிருத்தி கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, மிக முக்கியமான பிரச்னை-மாண்புமிகு முதலமைச்சரவர்களும் நிதியமைச்சரவர்களும் டெல்லிக்குச் சென்றுவிட்டு இன்றைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் மத்திய மாநில உறவைப்பற்றி பேசிவிட்டு வந்திருப்பதாகவும், அதுபற்றி சந்திகாரிலே நடைபெறக்கூடிய மாநாட்டிலே கலந்துகொள்ள ஒப்புதல் அளித்திருப்பதாகவும் இன்றைக்குத் தகவல் வந்திருக்கிறது. இன்றைக்கு முக்கியமான பிரச்னையாக இது இருப்பதாலே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அவைக்கும் சில தகவல்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவரவர்களே, என்.டி.சி. கூட்டம் நாடு பூராவும் முக்கியத்துவம் வாய்ந்தது, நம்முடைய தமிழகத்தின் அபிவிருத்தியும் சம்பந்தப்பட்டது. அதிலே, முதலமைச்சரவர்களும் நிதியமைச்சரவர்களும் சில முடிவுகள் எடுத்திருக்கிறார்கள். ஆகவே, நேரடியாக சம்பந்தப்பட்ட முடிவுகளின் இம்பாக்ட் நமக்கு இருக்கிறது. ஆகவே, அது சம்பந்தமாக ஒரு அறிக்கை இந்த ஹவுசிலே வைக்கவேண்டும். பார்லிமெண்டிலே இதுபற்றி பிரதமர் ஒரு அறிக்கை வைத்திருக்கிறார். அந்த ஹவுசிலே அவர் வைத்திருக்கிறார், சப்மிட் பண்ணினார். ஆகவே, இங்கே, முதலமைச்சரோ, நிதியமைச்சரோ, அவர்களுக்குள்ளே யாராவது ஒருவர் ஒரு ஸ்டேட்மென்ட்—இதுபற்றி கொடுப்பது—நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(பதில் இல்லை.)

2. ஒழுங்குப்பிரச்னைகள்.

(ஆ) பேரவையில் ஒரு மானியக் கோரிக்கைமீது விவாதம் நடக்காதபோது விவாதம் நடந்ததாக ஒரு நாளேடு செய்தி வெளியிட்டது குறித்து எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்னையின்மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் தேதியன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கூப்பு அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னை என்று கீழ்க்கண்ட பொருள் பற்றிக் குறிப்பிட்டார்:—

"1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் தேதியிட்ட 'மக்கள் குரல்' நாளிதழில், 'தி.மு.க. ஆட்சியில் கோவில் ஊழல்கள்—சட்டசபையில் எம்.ஜி.ஆர். அறிக்கை' என்ற தலைப்பின்கீழ் வெளியிடப்பட்ட செய்தி குறித்து.

பேரவையில் ஒரு மானியக் கோரிக்கை மீது விவாதம் நடக்காத போது விவாதம் நடந்ததாக ஒரு நாளேடு செய்தி வெளியிட்டது குறித்து எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினையின் மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு

[பேரவைத் தலைவர்] [1978 மார்ச் 21

அவையில் இந்து அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாத நிலையில், அம்மானியக் கோரிக்கைக்காகக் கொடுக்கப்பட்ட குறிப்புரையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் படித்தது போலவே அப்பத்திரிக்கை வெளியிட்டிருப்பது வேண்டுமென்றே செய்யப்பட்டதென்றும், எனவே இதில் அவை உரிமை மீறப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுத்து மூலமாகக் கொடுத்தால் அதைக் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுப்பதாகப் பேரவைத் தலைவர் அறிவித்தார்.

அந்த அறிவிப்பை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப்பு மற்றும் திரு. துரைமுருகன் ஆகியோர் அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்துள்ளனர்.

1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை 17–3–1978 அன்று பேரவையில் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மானியக் கோரிக்கை குறித்த குறிப்புரைகள் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் 14–3–1978 அன்றே அனுப்பப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இரண்டு நாட்கள் முன்னதாக இக்குறிப்புரைகள் வழங்கப்பட வேண்டும் என்று பேரவைத் துறை வழக்கமாகப் பின்பற்றிவரும் முறைப்படி அப்படி அனுப்பப்பட்டது. ஆனால் பத்திரிகை நிருபர்களுக்கு மானியக் கோரிக்கை அவையில் எடுத்துக் கொள்ளப்பட அறிவிக்கப்பட்டுள்ள நாளன்று காலை கொடுக்கப்படுகிறது. இதே வழக்கப்படி, இந்த மானியக் கோரிக்கை பற்றிய குறிப்புரைகள் 17–3–1978 அன்று காலை பத்திரிகை நிருபர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், 17–3–1978 அன்று காவல் துறை மானியக் கோரிக்கை நிறைவேற்றப்படவே நேரம் ஆகிவிட்டபடியால், அறநிலையத்துறை பற்றிய மானியக் கோரிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஆனாலும் குறிப்புரைகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் ஏற்கனவே கொடுக்கப்பட்டு விட்டன. இந்த குறிப்புரை தான் 'மக்கள் குரல்' பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. இப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசாத ஒன்றைப் பேசியதாக அப்பத்திரிகை வெளியிட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப்பு மற்றும் திரு. துரைமுருகன் இருவரும் குறிப்பிட்டு ஆகவே, இது அவை உரிமை மீறல் என்று கூறியுள்ளனர்.

1978 மார்ச் 21] [பேரவைத் தலைவர்]

சம்பந்தப்பட்ட குறிப்புரை ஏற்கனவே அவையில் வைக்கப் பெற்ற ஏடு என்ற முறையிலும் உறுப்பினர்களுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பெற்ற விவரங்களைக் கொண்ட ஏடு என்ற முறையிலும் அதைப் பிரசுரம் செய்வது தவறாகாது.

மேலும் 17–3–1978 அன்று வெளியான 'மக்கள் குரல்' பத்திரிக்கையில் 'சட்டசபையில் எம்.ஜி.ஆர் அறிக்கை—இன்று சட்ட சபையில் முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். விளக்கினார்' என்றும் '' இந்த ஊழல்களை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கமிட்டி காட்டிய முறைகேடுகளை முதலமைச்சர் வெளியிட்டார் '' என்றும் பத்தித் தலைப்புகள் போட்டு விட்டு அதன் கீழே செய்திகள் வெளியிடும்போது ' இது தொடர்பான விளக்கக் குறிப்பில் அவர் கூறியதாவது ' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை அவையில் படித்ததாக எழுதப்பெறவில்லை. ஆனால் இதில் அவைமுன் வைக்கப்பட்ட குறிப்புகளில் உள்ள தகவல்களைத்தான் வெளியிட்டுள்ளார்கள். உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் இதில் பொது மக்களுக்கு வேண்டுமென்றே தவறாக செய்தி கொடுக்கும்படியாக பத்திரிக்கையில் வெளியிடவில்லை.

எந்த ஒரு ஏடும் அவைமுன் வைக்கப்பட்டு விட்டால் அது பொது ஏடாகிவிடுகிறது. அதைப் பிரசுரம் செய்வதில் தவறு எதுவும் இல்லை.

எனவே, இதில் அவை உரிமை மீறல் எதுவும் இல்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன். இருப்பினும் இச்செய்தியை இன்னமும் சிறிது தெளிவாகப் பத்திரிகையில் வெளியிட்டிருந்தால் இப் பிரச்சினை எழுந்திருக்காது என்று கருதுகிறேன்.

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு ஒரு கருத்தினை கூற விரும்புகிறேன். பத்திரிகையிலே இந்தச் செய்தி வந்ததற்கான விரிவான விளக்கத்தைத் தாங்கள் அளித்திருக்கிறீர்கள். அந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது பத்திரிகையினுடைய தவறாக இருக்க முடியாது என்பதையும் நான் நிச்சயமாக நம்புகிறேன். ஏன் என்றால் அவையிலே வைக்கப்பட்ட ஏடுகள் பொது ஏடுகளாக ஆகிவிடுகின்றன என்று தாங்கள் சொன்னதற்கேற்ப அவர்கள் வெளியிட்டுயிருக்கிறார்கள். ஆனாலும் மானியக் கோரிக்கையை அன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட இயலாத சூழ்நிலை இருப்பதை அறிந்துள்ள செய்தித் துறையினர் பத்திரிக்கைகளுக்கு முன்கூட்டி அதை அறிவித்து மான்யக் கோரிக்கை இன்று எடுக்கப்படுவதாக இல்லை, அதை நீங்கள் பத்திரிகையிலே பிரசுரிக்கவேண்டாம் என்று—பத்திரிகைத் தொடர்பு அதிகாரிகள் இருக்கிறார்கள்—

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 21

அவர்கள் அந்தப் பணியினைச் செய்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. அந்த அதிகாரிகள் இனிமேல் இதிலே உரியகவனம் செலுத்த வேண்டும் என்று தாங்கள் அவர்களுக்கு கருத்து அறிவிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்கிறேன், வேறு ஒன்றும் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன பிறகு நீங்கள் அமர்ந்து விட்டால் நல்லது. என்னுடைய தீர்ப்புக்குப் பின்னல் விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்வது இல்லை.

திரு. க. சுப்பு : தீர்ப்பின் மேல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்னையின் மேல் எழுப்பக்கூடாது.

. க சுப்பு ; *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அவர்கள் பேசியதை நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன். இந்தப் பிரச்னை மீது எழுப்பக்கூடாது.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரிகொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து.—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : " தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டி இம்மாதத்தில் இருந்து வரிகொடா இயக்கம் அறிவித்திருப்பதால் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை பற்ற விவாதிக்க." பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். திரு. மு. அம்பிகாபதி, திரு. க.சுப்பு, திரு. துரைமுருகன். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1978 மார்ச் 21]

திரு. க. சுப்பு, பேசவேண்டியதை இப்போதே பேசிவிடுங்கள். தீர்ப்பு கொடுத்ததற்குப் பின்னல் மறுபடியும் கேட்காமல் இப்போதே பேசி விடுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, என்பேரில் ஒரு உரிமை மீறல் பிரச்னையைக் கொடுத்திருந்தேன். அது பற்றி எடுத்துக்கொள்ளவும் இல்லை, தாங்கள் சொல்லவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய பார்வையிலிருந்து விடுபட்டிருக்கலாம்.

திரு. க. சுப்பு : நானும் அவரும் ஒன்ருக கையெழுத்துப் போட்டு கொடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சியிலேஇரண்டு பேர் இருக்கிருர்கள்.

திரு. சி. ஆறுமுகம் : அவர்களைப் பற்றி வேண்டாம். நான் கொடுத்தது என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கூட சேர்த்துக் கொள்ளலாம். என்னுடைய கவனத்திற்கு வராமலேயே போயிருக்கலாம். நான் பார்க்கிறேன் என்று சொல்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் ; தங்களிடத்தில் நானே கொடுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்க்கிறேன் என்று சொல்கிறேன். என்னுடைன் பார்வையிலே இருந்து விடுபட்டிருக்கலாம்,

(முற்பகல் 10·00)

2. ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

(இ) ஓர் உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளபடாத நிலையில் அதே பொருள் குறித்து கொடுக்கப்பட்டிருந்த மற்ருெரு உறுப்பினருடைய தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நான் கூட இது விஷயமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன். அது திருப்பி அனுப்பப்பட்டு விட்டது: இவர்களுக்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். என்னுடைய பெயர் நீக்கப்பட்டு இருக்கிறதே. அதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நீண்ட காலத்திற்கு முன்பு கொடுத்து இருக்கலாம் என்று கருதுகிறேன், அண்மையில் கொடுக்கப்பட்டவர்களது ஒத்தி வைப்புத் தீர்மானத்மானத்தை எடுத்துக் கொண்டு இருக்கிறேன். உங்களை ஒதுக்கி விடவேண்டும் என்ற எண்ணம் இல்லை. நீங்கள் 10 நாளைக்கு முன்னால் தந்து இருக்கலாம். அன்றைய சூழ்நிலையில் இல்லை என்று சொன்னேன். இன்றைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது. ஏற்றுக்கொண்டு இருக்கிறேன். வேறு எதுவும் கருதிக் கொள்ள வேண்டாம். இன்றைக்கு கொடுத்துள்ளவர்களில் ஒத்தி வைப்புத் தீர்மானங்களை வைத்துக்கொண்டு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோயம்புத்தூர் விவசாயிகள், மற்றும் பல்வேறு விவசாயிகள், அவர்களுக்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். ஒத்திவைப்புத் தீர்மானம் ஏன் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற காரணத்தை விளக்குவதற்குத்தான் அனுமதி அளித்து இருக்கிறேன். தயவு செய்து திருத்திக்கொள்ளவேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைரவர்கள் கவனத்தோடு இருக்கிறார்கள். மகிழ்ச்சி.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, வேறு ஒரு ஒழுங்குப் பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு முறை ஒழுங்குப் பிரச்சினை கேட்டீர்கள், பதில் சொல்லிவிட்டேன். இப்படி பல முறை எழுந்து ஒழுங்குப் பிரச்சினை என்று கேட்டு ஏன் நேரத்தை வீணாக்குகிறீர்கள். தவவு செய்து உட்காருங்கள். நீங்கள் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து ஏற்கனவே முடிவு சொல்லியிருக்கிறேன். மீண்டும் வேண்டாம், உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்; அந்தப் பிரச்சினைக்குப் தீர்ப்புச் சொல்லிவிட்டீர்கள். இன்னொரு ஒழுங்கு பிரச்சினை, நான் கொடுத்து 14 நாள் ஆகி விட்டது. இது ஏன் இன்னும் எடுத்துக் கொள்ளப்பட என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: இத்தனை நாளைக்குள் கொடுக்கவில்லை வேண்டுமென்று விதி இருந்தால் சொல்லுங்கள். நான் சொல்கிறேன். அவைத் தலைவரின் நினைவில் இருக்கிறது. ஆய்வில் இருக்கிறது. தீர்ப்பு தரத்தான் போகிறேன். அதற்குள்ளே உறுப்பினர்கள் கேட்டால் நான் என்ன செய்வது?

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரிகொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து

*திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் இருக்கும் 4½ கோடி மக்களில் 3½ கோடி மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் மட்டுமல்ல, தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் விவசாயிகளும் கூட்டுறவு கடன் வசூல் போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதற்காக குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு அறிக்கையைப் பரிசீலித்து முடிவு எடுக்கலாம் என்று அரசு இருக்கிறது.

ஆனால் இன்று விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. மின்சார இணைப்பு சரியாகக் கொடுக்கப்படவில்லை. கடன் வசூல் ஒத்திவைக்கக் கேட்டது ஒத்தி வைக்கப்படவில்லை. தேவையான நேரத்தில் கடன் அளிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட கொந்தளிப்பான சூழ்நிலையில் பாசன வசதி குறித்தும் சரியான ஏற்பாடு செய்யப்படவில்லை. இத்தகைய கொடுமையான நெருக்கடி நிலையில் காரணமாக, தங்களுடைய அதிருப்தியை வெளிப்படுத்த வரிகொடா இயக்கம் துவங்க கோயம்புத்தூர் விவசாயிகள் அறிவித்து இருக்கிறார்கள். இன்றைக்கு பாசனம், விலைபொருள்களுக்கு நியாயவிலை மின்சார இணைப்பு கொடுப்பதில் தாமதம் ஆகிய இந்த பிரச்சினைகளைப் பற்றித் தெளிவாக விவாதிக்க வேண்டும் இந்த பிரச்சினைகள் விவசாயிகள் மத்தியில் ஒரு கொந்தளிப்பான. நிலையை உருவாக்கி இருப்பதால், இந்தப் பிரச்சினையில் தமிழகத்தில் இருக்கும் 3½ கோடி விவசாயிகளின் வாழ்க்கை பிரச்சினை இணைந்து இருப்பதால், இந்தப் பிரச்சினையைப் பற்றி தெளிவாகவும், துல்லியமாகவும் விவாதிக்க வேண்டுமென்ற காரணத்தால், இந்த அவையின் இதர நிகழ்ச்சிகளை உடனடியாக ஒத்தி வைத்து, இன்றைய தினம் முழுவதும் இந்த விவசாயப் பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, நில வரி ரத்து செய்யப்பட வேண்டும், கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும், நெல்லுக்குக் கட்டுப்படியான விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அரசு கொள்முதல் நிலையங்களை அமைக்க வேண்டும், மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். கடுமையான வரையில் வரிவசூல் செய்வதும், ஜப்தி செய்வதும் நிறுத்தப்பட வேண்டும் போன்ற சில கோரிக்கைகளை வைத்துச் சென்ற கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையில் ஒரு விவசாயப் பேரணியை நடத்தியது.

அந்தப் பேரணியினர் அளித்த விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு முதலமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கோரிக்கைகளை உடனடியாக கவனிக்க

ஒரு குழு அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்தக் குழுவில் விவசாயிகள் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை என்ற குறைபாடு இருந்தது. இது வரையில் அவர்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை. எல்லாவற்றிற்கும் குழுகள் அமைப்பது, கமிட்டி போடுவது என்பது பிரச்னைகளைத் தள்ளிப் போட கையாளப்படும் ஒரு தந்திரமே தவிர, அவற்றை உடனடியாக தீர்த்து வைப்பதற்காக அமைக்கப்படுவது இல்லை என்பதை நாம் அறிவோம்.

"தலைவலிக்குத் தலையணையை மாற்றிக் கொள்வதை" போல பேரணிக்கு குழு அமைப்பது என்று சொல்லி பிரச்னைக்குத் தீர்வு காணாமல் தள்ளிப் போடுவதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. அது எந்த வகையிலும் பொருத்தமுடைய காரியமல்ல அதை ஏற்கெனவே சுட்டிக்காட்டினேம்.

ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று சொன்னார்கள். அப்போதே பிரச்னைக்குத் தீர்வு கண்டிருக்க வேண்டும். தீர்வு காணாததால் இன்று தமிழ் நாடு பூராவும் பல்வேறு வகைகளில் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரம் வந்துகொண்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் பகுதிக்கு குடிதண்ணீர் சப்ளை செய்கிறேம் என்று சொல்லி, வேளாண்மையைப் பாதிக்கும் வகையில் ஆழ் குழாய்க் கிணறு அமைக்கப்படுவதாக புகார் வந்திருக்கிறது. எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் அருப்புக்கோட்டை பகுதியைச் சேர்ந்தவர்கள். எதிர்ப்புத் தெரிவித்தவர்களை— பெண்கள் உள்பட— சிறையிலே அடைத்தார்கள். அவர்கள் இப்போது உண்ணாவிரதம் தொடங்கி இருக்கிறார்கள்.

பிரச்னைக்குத் தீர்வு காணப்படாததால் மேலும், மேலும், விவசாயிகள் போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும் தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது மிகவும் வருந்தத்தக்க ஒரு சம்பவம். பிரச்சினைகளைத் தள்ளிப் போட்டதின் விளைவு இந்த சட்ட மன்றத்தில் இருக்கிறவர்களும் மற்ற கட்சிக்காரர்களும் விவசாயப் பிரச்னைகளை சரியாக கவனிக்கவில்லை என்று சொல்லி, இப்போது அவர்கள் தங்களுக்கென்று ஒரு கட்சியை—விவசாய முன்னேற்றக் கட்சி— அமைத்திருக்கிறார்கள். அது அவர்களுக்கு தேவைதான். பிரச்சினையைத் தள்ளிப் போடுவதில் நியாயம் இல்லை. அதன் விளைவாகத்தான் இன்றைக்கு புதிய கட்சி உதயமாகியிருக்கிறது.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். வள்ளுவரை மறந்தாலும் அவருடைய மொழியை மறக்க வேண்டாம் என்று சொல்லி, விவசாயிகளின் பிரச்னையை விவசாய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். போராட்டம் நடத்தினால் தான் கவனிப்போம் என்ற நிலை இல்லாமல் உடனடியாக அவற்றிற்கெல்லாம் தீர்வு காண வேண்டும்.

இப்போது வரி கொடா இயக்கம் ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது. அது தமிழ்நாடு பூராவும் பரவக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் நிலைமை விபரீதமாகப் போய்விடும். பிரச்னை முக்கியமானதாக இருப்பதால் தன்னையும் மீறி, அவையில் எடுத்துக் கொள்வதாக அவைத் தலைவரவர்கள் அறிவித்தார்கள். * * ஆகவே, பிரச்சினை முக்கியமாக இருப்பதால் அதற்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டியிருப்பதால் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர் இப்படி பேசுவது சரியல்ல. அவருக்கு எல்லாம் தெரிந்திருக்கும்; எல்லாம் தெரிந்தவர் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் குறிப்பிட்டதும் அவருக்குத் தெரிந்த ஒன்றுதான். அது அவருக்கு கைவந்த கலை. * * * * * * *
நான் எல்லோரையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் முனு ஆதியைப் பார்த்து பேச வேண்டாம்; இந்த நாற்காலியைப் பார்த்து பேசுங்கள் முனு ஆதிக்கு மரியாதை கொடுக்க வேண்டாம்; இந்த நாற்காலிக்கு மரியாதை கொடுத்து பேசுங்கள். ஒரு வழக்கறிஞர், பாராளுமன்ற சட்ட மன்ற நடைமுறைகள் தெரிந்தவர் ஒரு அவைத் தலைவரைப் பார்த்து இப்படிப் பேசுவது இந்த அவையின் மரபு அல்ல. * * *
என்று சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

(2) ஒழுங்குப் பிரச்சினைகள்— தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. லத்தீப் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சனையை கிளப்பினார்கள். நான் பார்த்தது 7-ந் தேதி; அன்றுதான் தந்திருக்கிறீர்கள். [illegible]—3—1978 அன்று அதுபற்றிய மானியக் கோரிக்கை மீது விவா

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [1978 மார்ச் 21

தம். அதில் உங்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது பற்றிப் பேசுவதற்குத் தங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததால், அதற்கு அனுமதி மறுக்கலாம். ஆகவே, தங்களுடைய தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் தீர்மானம் கொடுத்து 14 நாட்கள் ஆயிற்று; வேளாண்மைத் துறை மானியத்தில் நீங்கள் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்து, நீங்களும் நிறையப் பேசியிருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை சரியல்ல என்று தீர்ப்பளிக்கிறேன்.

[முற்பகல் 10–10]

4. ஒத்திவைப்புத் தீர்மானம் — தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பற்றி ஆழ்ந்து ஆராய அரசு 21 பேர்கள் கொண்ட குழு ஒன்றை 26–12–1977-ம் தேதி நியமித்துள்ளது. இதில் 10 அதிகாரிகளும், 11 அரசு அலுவல் சார்பற்றவர்களும் உறுப்பினராக உள்ளனர். இந்தக் குழு கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி ஆராயும்.—

1. விவசாய நீரேற்றும் பம்புசெட்டுக்கான மின்கட்டண விகிதம்.

2. நெல் கொள்முதல் விலை.

3. கடன்களைத் திருப்பிக் கொடுப்பதில் சலுகை அளித்தல்.

4. ஆக்க செலவுக்கேற்ப வேளாண்மை உற்பத்திப் பொருட்களுக்குக் குறைந்த அளவு விலை நிர்ணயித்தல்.

இவற்றோடு இவை சம்பந்தமான விஷயங்கள் பற்றியும் இக்குழு ஆராயும்.

2. இந்தக் குழு அமைப்பதற்கு முன்னமேயே பொதுப்பணித் துறை அமைச்சரும், போக்குவரத்துத்துறை அமைச்சரும் மற்றும் உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சரும் விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர்கள். அவர்களின் கோரிக்கைகள் குறித்து தமிழக முதல்வரின் ஆலோசனையின்பேரில் சுமுகமான முடிவு எடுக்கப்பட்டதால், 25–11–1977 முதல் நடைபெறுவதாக அறிவித்திருந்த போராட்டங்களைத் தமிழக விவசாயிகள் சங்கம் வாபஸ் பெற்றுக் கொண்டது.

3. இப்பேச்சுவார்த்தைகளின் பயனாக ஏற்பட்ட கீழ்க்கண்ட முடிவுகளை தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் நிறைவேற்ற அரசு உடனே நடவடிக்கை எடுத்துள்ளது.

1978 மார்ச் 21] [திரு. ப. குழந்தைவேலு]

(1) 1–3–1977 முதல் 30–11–1977 வரையான காலத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய விவசாய பம்புசெட்டுகளுக்கான மின் கட்டணம், விவசாயிகளின் பிரச்சினைகள் பற்றி ஆராய அமைத்துள்ள குழுவின் முடிவுகள் அரசுக்குக் கிடைத்து அரசின் முடிவு அறிவிக்கப்படும் வரை ஒத்திவைக்கப்படும். இதன் காரணமாக மின் இணைப்பு துண்டிப்பு இராது.

(2) வறட்சிக் காலத்தில் பணம் கட்டாமைக்காக துண்டிக்கப்பட்ட விவசாய பம்புசெட்டுகளுக்கான மின் இணைப்பு திரும்பத் தரப்படும். பாக்கியை தவணைகளில் செலுத்தலாம்.

(3) 1–12–1977 முதல் பம்புசெட்டுகளுக்குச் செலவாகும் மின்சாரத்துக்கான மின்கட்டணம் தற்போதைய விகிதப்படி செலுத்தப்படவேண்டும். குழுவின் அறிக்கையின் பேரில் அரசு பிறப்பிக்கும் உத்தரவின்படி இந்தத் தொகை அதிகமாயிருப்பின் அவரவர் செலுத்த வேண்டிய கட்டண பாக்கிக்கு ஈடு செய்யப்படும்.

4. இந்த முடிவின்படி 1–3–1977 முதல் 30–11–1977 வரைக்கான காலத்திற்குச் செலுத்தவேண்டிய மின்கட்டணத்தை வசூல் செய்வதை நிறுத்தி வைத்து பத்திரிகைக் குறிப்பு ஒன்றை 9–3–1978-ல் அரசு வெளியிட்டுள்ளது. விவசாயிகளின் சங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவின்படி மின் வாரியம் செயலாற்றி வருகின்றது. முன்பு வறட்சிக் காலத்தில் ஏற்பட்ட பாக்கியைச் செலுத்தத் தவறியதால், துண்டிக்கப்பட்ட பம்புசெட்டுக்கான மின் இணைப்புகளைத் திரும்பப் பெறுவதில் சிரமங்கள் இருக்குமாயின், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அரசு பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

5. விவசாயிகளுடைய பிரச்சினைகளை ஆராய்ந்துவரும் குழுவின் முடிவுகள் கிடைத்தவுடன் அவற்றை அரசு கவனமாய் பரிசீலனை செய்து முடிவு எடுக்கும். தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள 'வரி கொடா இயக்கம்' தேவையற்றது.

6. இதனால் அவையின் அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானத்தை எடுத்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

5. கவன ஈர்ப்பு.

அ. மாநில கூட்டுறவுச் சங்கம், பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு தரவேண்டிய இலட்சக்கணக்கான ரூபாய்களை முடக்கி வைத்திருப்பதால் நெசவாளர்கள் பாதிக்கப்படுவது குறித்து.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, மாநிலத்தில் செயல்படும் பல்வேறு சொசைட்டிகளுக்குத் தரவேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்களை மாநில அரசின் பொறுப்பில் இருக்கும் மாநில கூட்டுறவு சங்கம் தர மறுப்பதன் காரணமாக, நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கூட்டுறவு நூல் ஆலைகளுக்குத் தரவேண்டிய பாக்கியை செலுத்த முடியாத நிலையில் அவர்கள் பெயரில் எடுக்கவிருக்கும் ஜப்தி நடவடிக்கைகள் பற்றியும், நூற்பாலைகள் நூல் கொடுக்க மறுப்பதன் விளைவாக ஏராளமான நெசவாளர் வேலை இழந்ததின் காரணமாக ஏற்பட்டுள்ள பதட்டநிலை பற்றியும் உள்ள பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக பல கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு, தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருவதால் கூட்டுறவு சங்கங்களில் கைத்தறி துணிகளின் உற்பத்தி கணிசமான அளவுக்கு அதிகரித்து வருகிறது. இந்த உற்பத்தி பெருக்கத்துக்கேற்ப விற்பனை வசதி அளிக்க கோ-ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யும் அளவை அதிகரித்து வருகிறது. 1976-ஆம் ஆண்டு பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து ரூ. 16.50 கோடி மதிப்புள்ள துணிகளைக் கொள்முதல் செய்த கோ-ஆப்டெக்ஸ் 1977-ம் ஆண்டு ரூ. 20 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைப் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்தது. அடிக்கடி ஏற்படும் கைத்தறி துணிகளின் தேக்கத்தின்பொழுது, நெசவாளர் சங்கங்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக கோ-ஆப்டெக்ஸ் தேவையில்லாத கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்ய நிர்பந்திக்கப்படுகிறது. இக்காரணங்களால், கோ-ஆப்டெக்ஸ், ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா திட்டத்தின் கீழ் அதிகமான கடன் வசதியைப் பெற்றிருந்தும், அது பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தாமதமின்றி பணம் கொடுக்க முடியாமல் போகிறது.

சாதாரணமாக, கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்யும் துணிகளுக்கு 45 நாட்களுக்குள் பணம் கொடுத்து வருகிறது. போதிய விற்பனையில்லாமல் பணக் கஷ்டமான காலங்களில்கூட பிரதம

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குப் பாக்கியை கோ-ஆப்டெக்ஸ் பகுதி பகுதியாக பட்டுவாடா செய்து அவற்றின் உற்பத்தி பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்கிறது. கடந்த 8 மாதங்களில் கோ-ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பட்டுவாடா செய்த விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(ரூபாய் இலட்சத்தில்.)

ஜூலை 1977 ..	..	97.00
ஆகஸ்ட் 1977	..	116.00
செப்டம்பர் 1977	..	104.00
அக்டோபர் 1977		181.00
நவம்பர் 1977	..	140.00
டிசம்பர் 1977	..	108.00
ஜனவரி 1978	..	233.00
பிப்ரவரி 1978	..	160.00
		1,139.00

தற்பொழுது கோ-ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 4 கோடி கொடுக்கவேண்டியிருக்கிறது. கோ-ஆப்டெக்ஸின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க அகில தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் ரூ. 20 லட்சம் பங்குத்தொகை நிதியுதவி அளித்துள்ளது. இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் சேர்ந்து ரூ. 100 லட்சம் கோ-ஆப்டெக்ஸின் பங்குத் தொகைக்கு நிதியுதவி அளிக்க உள்ளது. சமீபத்தில், கோ-ஆப்டெக்ஸ் மாநில கூட்டுறவு வங்கியிலிருந்து ரூ. 1 கோடி கடன் பெற்றுள்ளது. தற்பொழுதுள்ள ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் காசுக் கடன் அளவான ரூ. 5 கோடியை 1978–79-க்கு ரூ. 6.50 கோடியாக அதிகரித்துக் கொடுக்க கோ-ஆப்டெக்ஸ் கோரியுள்ளது. இந்தக் கூடுதல் நிதியுதவிகளைக் கொண்டு பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுக்கவேண்டிய தொகையை விரைவில் பட்டுவாடா செய்ய கோ-ஆப்டெக்ஸ் கோரப்பட்டுள்ளது.

பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அவற்றின் செயல்முறைக்குப் பணம் தேவைப்படும்பொழுதெல்லாம், கோ-ஆப்டெக்ஸ் அவற்றுக்குக் கொடுக்க வேண்டிய கொள்முதல் தொகையைக் காட்டும் உறுதிச் சான்றிதழைப் பெற்று மத்திய கூட்டுறவு

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 21

வங்கியிலிருந்து கடன் பெற்றுக்கொள்கின்றன. சில மத்திய கூட்டுறவு வங்கி இம்மாதிரிக் கடன் வசதிகளை ஏற்கனவே அளித்து வருகின்றன. ஏனைய மத்திய கூட்டுறவு வங்கிகளும் இம்மாதிரி கடன் வசதிகளைப் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த வசதிகளுடன் நெசவாளர் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுத்துவர முடியும்.

பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் போதிய நிதி வசதி இல்லாத சமயங்களிலும் அவைகளின் உற்பத்தி தடைப்படாமல் தொடர வேண்டும் என்ற நோக்கில், தமிழ்நாட்டில் உள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகளும், அந்தந்த சரக உதவி இயக்குநரின் பரிந்துரையின் பேரில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் தாராளமாகக் கடனில் வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள எல்லா நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் இவ்வசதியைப் பயன்படுத்திக்கொள்கின்றன. நாளது தேதியில் இந்த 12 கூட்டுறவு நூற்பாலைகளும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 1.25 கோடி அளவுக்குக் கடனுக்கு நூல் வழங்கியுள்ளன. கடனுக்குக் கொடுத்த நூலுக்கு பணவசூல் செய்வதில் கூட்டுறவு நூற்பாலைகள் கடுமையாக நடந்து கொள்வதில்லை. நோட்டீசில் குறிப்பிட்டவாறு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உடமைகளை ஜப்தி செய்தல் என்ற பேச்சு ஒரே ஒரு சங்கத்தைத் தவிர வேறு எந்தச் சங்கங்களுக்கும் பொருந்தாது. திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைக்கும், சேலம் மாவட்டத்தில் உள்ள கனகம்பட்டி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் 1975ஆம் ஆண்டு கடனில் நூல் வழங்கியது சம்பந்தமாக ஏற்பட்ட தகராறில் நூற்பு ஆலை தாவா கொடுத்து ரூ. 600 மதிப்புள்ள சங்கத்தின் துணிகளை ஜப்தி செய்தது. மேற்கூறிய கூட்டுறவு நூற்பாலை ஜப்தி செய்த துணிகளைச் சங்கத்திற்கு திருப்பிக் கொடுத்துவிடுமாறு கோரப்பட்டுள்ளது. 1975ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்தச் சம்பவம் தவிர வேறு எவ்வித ஜப்தி நடவடிக்கையும் கூட்டுறவு நூற்பு ஆலைகளால் எடுக்கப்படவில்லை. தங்கள் நிதி நிலைக்கு ஏற்ப எல்லா கூட்டுறவு நூற்பு ஆலைகளும் தொடர்ந்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான நூலைக் கடனுக்கு வழங்குமாறு கோரப்பட்டுள்ளன.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையை விளக்கி கனம் அமைச்சர் அவர்கள் கூறியதற்காக மிக்க நன்றி. அன்றே நிதி அமைச்சர் அவர்களும், கைத்தறி விற்பனைக்கு உத்தரவாதம், அரசாங்கமே அதற்கு பொறுப்பு எடுக்கிறது என்று நல்ல மனதோடு சொன்னார்கள். கைத்தறியைப் பொறுத்தவரையில் எவ்வளவு கோடி பாக்கி இருக்

மாநில கூட்டுறவுச் சங்கம், பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு
தரவேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்களை முடக்கி
வைத்திருப்பதால் நெசவாளர்கள் பாதிக்கப்படுவது
குறித்து

1978 மார்ச் 21] [திரு. ரா. உமாநாத்]

கிறது என்பது. அது ஒரு சீரியஸ் பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, நான் கேட்க விரும்புவது என்னவென்றால், அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து கணிசமான அளவு பாக்கி இருக்கிறது. ரிசர்வ் பாங்கை கேட்டிருக்கிறோம், விரைவில் முயற்சி எடுப்பதாகக் கூறுகிறார்கள். இப்போது கிடைக்காத காரணத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே காலாகாலத்தில் அந்தந்த சொஸைட்டிகளில் இருந்து வாங்கிய பொருள்களுக்குப் பணம் கொடுக்க நிரந்தரமான ஒரு ஏற்பாட்டைச் செய்ய உத்தேசம் உண்டா? மாநில சொஸைட்டியும், கூட்டுறவு நூற்பாலையும் ஒரே இலாகாவில் இருப்பதால் பணம் கட்டவில்லை என்பதால் நூல் சப்ளையை நிறுத்திவிடக் கூடாது. நூல் சப்ளை நிற்காமல் இருக்க என்ன செய்யப் போகிறார்கள்?

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையில் விளக்கமாக எல்லா விவரங்களும் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லி அதைப் பாராட்டியும் இருக்கிறார்கள். அவர்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன்.

மூன்றில் ஒரு பங்கு காசு கடன் வசதி 'வொர்க்கிங் காப்பிடல்'லாகக் கொடுக்கிறோம். மேலும் நான்கு மாத உற்பத்திக்கான நூலும் வழங்கப்படுகிறது. உற்பத்தி செய்கின்ற விஷயத்தில் ஒரு மாதத்திற்கு மட்டும் 3½ கோடி ஆகிறது. மேலும் கொள்முதல் செய்த 45 நாட்களுக்குள் அதற்கான பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறோம். நான்கு மாதம் வரை உற்பத்தி செய்தவைகளை நாம் கொள்முதல் செய்கின்ற நேரத்தில் நான்கு மாதம் வரை இருப்பதைத் தேக்கம் என்று சொல்வதற்கு இல்லை.

அது மட்டுமல்ல, கொள்முதல் செய்த 45 நாட்களுக்குள் பணத்தையும் கொடுத்துவிடுகிறோம். இதற்கிடையில் ஏற்படுகின்ற நிலைதான் இந்தத் தேக்கம் என்பது. இது இயல்பான தேக்கம் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒரு மாதத்திற்கு மட்டுமே 3½ கோடி ரூபாய்க்கு உற்பத்தி ஆகிறது. ஆகவே, இதில் நான்கு கோடி ரூபாய் பாக்கி இருப்பது என்பது பெரிய விஷயமல்ல. கடந்த எட்டு மாதங்களில் மட்டும் ஏறத்தாழ 12 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். ஆகவே நான்கு கோடி என்றிருப்பது பெரிய விஷயமல்ல. அதோடு கொள்முதல் செய்த துணிகளுக்கு 45 நாட்களுக்குள் அதற்கான பணத்தையும் கொடுத்து வருகிறோம். சாதாரணமாக என்ன நிலைமை என்றால்,

கொள்முதல் செய்யுங்கள் என்று வலியுறுத்துகிறார்கள். அப்படிக் கொள்முதல் செய்தவுடனேயே பணத்தையும் கொடுங்கள் என்று உடனேயே கேட்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இதனால்தான் குழப்பம் ஏற்படுகிறது என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சாதாரணமாக ஒரு வணிகத்தில் 30 நாட்கள் தேக்கம் ஏற்படுவது என்பது சாதாரண விஷயம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அது தவிர கூட்டுறவு நூற்பு ஆலைகள் கடன் கொடுத்ததற்காக ஜப்தி நடவடிக்கைகள் எடுக்க முடியாது. ஒரே ஒரு சங்கத்தில் மட்டும் வாங்கிய கடனுக்கு, காலதாமதமாகியும், திருப்பிச் செலுத்த மறுத்தார்கள், அதற்காக வழக்கு போடப்பட்டது. இதில் 600 ரூபாய் அளவுக்கு நூலை எடுத்திருக்கிறார்கள். வேறு எந்தவிதமான ஜப்தி நடவடிக்கையும் எங்கும் எடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நான் சகஜமான நிலை இருந்து வருவதைக் குறிப்பிட்டேன், தேக்கம் என்று கூறவில்லை. மூன்றுமாத கடன் பாக்கி இருப்பதால், நூற்பு ஆலைகள் நூலைக் கொடுப்பதற்கு மறுத்து வருகிறார்கள். இதனால் மறு பாவுக்கு நூல் கிடைக்காமல் வேலையில்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. திருச்சி சொஸைட்டியில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பாக்கி இருந்தாலும் தொடர்ந்து நூலைக் கொடுக்க வேண்டும் என்று கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு உத்தரவிடுவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதோடு அட்டாச்மென்ட் புரொஸிடிங்ஸ் திருச்சி மாவட்டம் பூவாளூர் பத்மசாலா சொஸைட்டியில், தஞ்சாவூர் கூட்டுறவு நூற்பாலையில் பாக்கியிருப்பதற்காக ஜப்தி புரொஸிடிங்ஸ் நடந்து கொண்டிருக்கிறது. இதை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இங்குள்ள அறிக்கையின்படி வேறு எந்த சொஸைட்டியிலும் ஜப்தி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்புகள் இல்லை. தனியாக இதைப்பற்றிய விவரங்களைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதற்கு தக்க நடவடிக்கை எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பு ஆலைகளைப் பொறுத்தவரை, சொஸைட்டிகளுக்கு 4 மாத உற்பத்திக்கான நூல் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், சொஸைட்டிகளிலிருந்து

உற்பத்தி செய்யப்பட்டதைக் கொள்முதல் செய்து 45 நாட்களுக்குள் பணமும் கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் ஒருவேளை கூட்டுறவு நூற்பு ஆலைக்கும், சில சங்கங்களிலுள்ள தலைவர்களுக்கும் சரியான தொடர்பு இல்லாமல் இருப்பதின் காரணமாக சில சிக்கல்கள் இருக்கலாம். இதைப் பற்றி தனியாக குறிப்பிட்டு என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதன்மீது உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிவிப்பு.

தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை சட்டமன்றப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

8. 1978-79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண் 1— நிலவரித் துறை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்பேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 1— நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,41,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் என்று கோருகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, நிலவரித் துறையில் பணியாற்றும் எல்லா தரப்பு அலுவலர்களும் வீட்டுவசதி செய்து கொடுப்பது சம்பந்தமாக விவாதிக்க,

"மானியக் கோரிக்கை எண் 1— நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,41,48,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, நிலவரியை அறவே ரத்து செய்வது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 1— நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,41,48,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலத்தில் விவசாயம் செய்பவர்களுக்கு மிகவும் அதிகப்படியான தண்டத் தீர்வைகளை போடுவதைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 1— நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,41,48,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மாத்தை முன்மொழிகிறேன.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து நில உடமையாளர்களும் அவசர கால நிலை பிரகடனம் செய்யப்படுவதற்கு முன்னர் செலுத்திவந்த நிலவரியைவிட தற்போது பத்து மடங்கு அதிகமாக அவர்களிடமிருந்து நிலவரி வசூலிக்கப்படுவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 1— நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,41,48,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலத் தீர்வை ரத்து செய்வது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 1— நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,41,48,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF: Hon. Mr. Speaker, Sir,

To discuss about the need to check undue harassment by the officials in the collection of land taxes

I move:

"That the allotment of Rs. 4,41,48,000 under Demand No. 1—Land Revenue Department—be reduced by Rs. 100".

(ஆ) கோரிக்கை எண் 11— மாவட்ட நிர்வாகம்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்பேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 11— மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,04,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்

என்று கோருகிறேன்."

1978 மார்ச் 21]

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள திருவண்ணாமலை, போளூர், செங்கம், செஞ்சி, கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர் ஆகிய வட்டங்களைச் சேர்த்து திருவண்ணாமலை மாவட்டமாக மாற்றுவது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 11— மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,40,56,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளான முதுகுளத்தூர் ராமநாதபுரம், பரமக்குடி, திருவாடானை முதலிய பகுதிகளைச் சேர்த்து ஒரு தனி மாவட்டமாக ஆக்குவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 11— மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,04,56,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரூர் வட்டம், தற்போது ஆறு ரெவின்யூ பிர்காக்களாக உள்ளதால் தூரப்பகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் பகுதியான கோட்டப்பட்டி, சிட்லிங், சித்தேரி போன்ற பகுதியில் இருந்து அலுவலக காரியங்களில் ஈடுபடுவதில் சிரமமும் தடையும் உள்ளதாலும், பிற்பகுதி மக்களின் நலனைக்கருதியும், கோட்டப்பட்டி, பொம்மிடி, கம்பைநல்லூர் ஆகியவைகளை பிர்காக்களாக ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 11— மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,04,56,000இல் 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

To discuss the need to hand over all the poramboke lands in the Panchayat Union Council areas to the respective Panchayat Union without delay

"மானியக் கோரிக்கை எண் 11— மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,04,56,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1978 மார்ச் 21]

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தின் தலைநகர் பாண்டிய நாட்டின் தலைநகரத்தில் உள்ளதை முகவை மாவட்டத்திற்குள்ளேயே கொண்டுவந்து மாவட்ட நிர்வாகம் சீராக நடப்பது சம்பந்தமாக விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 11— மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,04,56,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF : Hon. Mr. Speaker, Sir,

To discuss about the need to effectively check corrupt practices by the village Revenue Officials

I move :

"That the allotment of Rs. 16,04,56,000 under Demand No. 11 —District Administration—be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர் :- மானியங்களும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்காக வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 1— நிலவரித் துறை, மானியக் கோரிக்கை எண் 11— மாவட்ட நிர்வாகம் ஆகிய இரண்டு கோரிக்கைகளும், அதுபற்றிய விளக்க உரைகளும்* இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப் பெற்றிருக்கின்றன. அவைகளைப் படித்ததாக ஏற்றுக்கொண்டு, குறிப்பேட்டில் அவைகள் இடம் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்ததற்குப் பிறகு, என்னுடைய பதிலைக் கூற விரும்புகிறேன்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவரி மானியத்தின் மீதும், மாவட்ட நிர்வாக மானியத்தின் மீதும் என் கருத்துக்களை உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் ஒரு மாநிலத்தில் உள்ள அத்தியாவசியமான தேவைகளை நிறைவேற்றுவதற்கு அது ஒரு நிர்வாக அமைப்பாக அமைந்திருக்கிறது. ஆனால், இன்றைய

* 540, 474 ம் பக்கங்களில் இணைப்புகள் I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[திரு. ஆ. நடராசன்] [1978 மார்ச் 21

திமை இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னர் மாவட்ட நிர்வாகத்திலே ஏற்பட்டிருக்கின்ற சீர்கேடுகளிலே ஒரு சில வற்றை நான் உங்கள் முன்னாலே எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன்.

லஞ்ச லாவண்யத்தை ஒழித்து விடுவோம் என்று இந்த ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் எடுத்துச் சொன்னார்கள், ஆனால், இன்றையதினம் லஞ்ச லாவண்யம் ஒவ்வொரு அலுவலகத்தி லேயும் பெருகியிருக்கிறது. அதை மதிப்பிற்குரிய முதல் அமைச்ச சர் அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு மாவட்ட நிர்வாகத்திடத்திலே செல்லுகின்றபோது, பல்வேறு பிரச்னைகளுக்காக நேரடியாக லஞ்சம் தரவேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலைமை இன்றைய தினம் இருப்பதைப் பார்க்கிறோம். இதையெல்லாம் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, ஒரு விண்ணப்பம் இன்றையதினம் அதிகாரிகளிடத்திலோ, அமைச்சர்களிடத்திலோ தரப்படு மானால், அந்த மனுக்களின் மீது முடிவெடுப்பதோ அல்லது அந்த மனுவைக் கண்டுபிடிப்பதோ மிகுந்த தொல்லையாக இருக்கிறது. ஒரு மனுவை அமைச்சர் அவர்களிடத்திலோ அல்லது அதிகாரி களிடத்திலோ தரும்போது, அந்த மனுவின் பேரில் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பது முந்திய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சொல்லப்பட்டது.

[முற்பகல் 10-30]

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை.)

ஆனால் இன்றையதினம் கொடுக்கப்படுகின்ற மனுவைக் கண்டு பிடிக்கவும், அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று தெரிந்துகொள்ளவும் சிரமமான நிலைமை இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பல ஆண்டுகாலமாக அந்த மாவட்டத்து மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக நிறைவேற்றி அந்த மாவட்டத்தில் நிர்வாகம் சீராக நடைபெற வழிவகை காணவேண்டும்.

நிலவரி வசூலில் இன்றையதினம் கடுமையான போக்கு இருந்து வருகிறது. கடன்களுக்காக ஜப்திகள் செய்யப்படாது என்று அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் உறுதி சொன்னாலும் அதி காரிகள் கடன் வசூலில் மிகுந்த தீவிரத்தைக் காட்டி வருவதைப் பார்க்கிறோம். நிலவரி வசூலுக்காக ஜப்தி என்ற கொடுமைகளெல்லாம் இன்றையதினம் நடைபெற்றுவருகின்றன.

1978 மார்ச் 21] [திரு. ஆ. நடராசன்]

விவசாயிகள் பிரச்சினை பற்றி ஆராய இன்றையதினம் இந்த அரசாங்கம் குழுவை அமைத்தாலும் அதே நேரத்தில் விவசாயி களிடத்தில் கடன் வசூல் செய்ய கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நான் இந்த நேரத்தில் பணிவோடு குறிப்பிட விரும்புகிறேன்.—மாவட்ட வளர்ச்சிக் கூட்டம் மாதம் ஒரு முறை கூட்டப்பட வேண்டுமென்ற முறை இருந்து வந்தாலும் கடந்த ஒன்பது மாத காலத்தில் கோவையில் ஒரே ஒரு முறைதான் கூட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் பேசப் படுகின்ற கருத்துக்கள் நிறைவேற்றப்படுவதில்லை என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து மாதம் ஒரு முறை நடத்துவதற்கு அரசாங்கம் தக்க உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

பல்லடம், அவினாசி வட்டங்களை இணைத்து ஒரே கோட்டமாக அமைக்க வேண்டுமென்று அந்த வட்டார மக்கள் நீண்ட கால மாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றினால் அந்தப் பகுதி மக்கள் தங்கள் அன்றாட நிர்வாகப் பணி களை, காரியங்களைக் கவனிக்க வசதியாக இருக்கும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அதற்கான மானியத் தொகையைத் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் தேதி மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் கோவைக்கு வந்தபோது என்னுடைய தொகுதியான பேரூரில் சிரநாயக்கன்பாளையம் நெசவாளர்கள், தங்கள் தறிகள் வெள் ளத்தால் மூழ்கி பாதிக்கப்பட்டு விட்ட காரணத்தால் தொழில் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறோம் என்று கூறி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக் கொடுத்தும் நஷ்ட ஈடு தரப்படவில்லை என்று நிதியமைச்சர் அவர்களிடம் மனுக் கொடுத்தார்கள். அந்த மனுவின் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உடனடியாக தீர்வு காண்பதற்கான முயற்சிகளை எல்லாம் எடுத்து விட்டோம் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அறிக்கை யில் சொல்லியிருக்கிறார்கள். நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன்.—அங்கு நூற்றுக்கணக்கான நெசவாளர்கள் தண்ணீர் புகுந்து தறிகள் சேதப்பட்டதன் காரணமாக தொழில் செய்ய முடியாத நிலைமையில் இருக்கும் அவர்களுக்கு உடனடியாக மானியம் தருவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலவரியை ரத்து செய்வதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு தக்க உத்தரவுகளைப் பிறப்பித்தது. ஆனால் புன்செய் நிலத்திற்கான நிலவரி ரத்து இன்னும் அமல் செய்யப்படவில்லை. இந்த அரசாங்கம் அதைச் செய்ய முன்வரவேண்டும்.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்காக திராவிட முன்னேற்றக்கழகம் அரசுப் பொறுப்பில் இருந்தபோது மிகப் பெரிய கட்டிடத்தை கட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தையும் மற்றபடி பல இடங்களில் இருந்த அரசு அலுவலகங்களையும் அங்கே ஒன்றாகச் சேர்த்தார்கள். ஆனால் இன்னும் பல அலுவலகங்கள் கலெக்டர் அலுவலகத்திற்கு வெளியே இருக்கின்றன. ஆகவே, இன்னும் ஒரு கட்டிடத்தைக் கட்டி எல்லா அலுவலகங்களையும் ஒன்றாகச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா தருகிற பிரச்சினையைப் பற்றி இந்த மானியக் கோரிக்கையில் விளக்கியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் ஏற்பட்டதற்குப் பின் 30,540 பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குவதைக் கவனிக்க ஏற்கனவே திராவிட முன்னேற்றக்கழக அரசு பொறுப்பில் இருந்த நேரத்தில் ஒரு துணைத் தாசில்தாரை நியமித்திருந்தார்கள். இன்றைக்குக் கோவையில் இருக்கும் வட்ட ஆட்சியரே அந்தப் பணியையும் செய்யும் நிலைமை இருக்கும் காரணத்தால் பட்டா தருவதில் மிகுந்த தாமதம் ஏற்படுகிறது.

கோவை நகரத்தில் அம்மன்குளம் பகுதியில் 15 ஆண்டுக் காலமாக குடியிருக்கும் மக்கள் பட்டா வேண்டுமென்று கேட்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 250 மக்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டது. 350 பேர்களுக்கு அளவுகள் எல்லாம் எடுக்கப்பட்டும் இந்த ஆட்சி வந்த பிறகு அந்தப் பட்டாக்கள் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்றபோது பட்டா தரவேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் அங்கே வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கட்டிடத்தைக் கட்டியிருக்கிற காரணத்தால் பட்டா தர முடியாது என்று சொன்னார்கள். அந்தப் பகுதி மக்கள் தாங்கள் 15 ஆண்டுக் காலம் 20 ஆண்டுக் காலமாக வீடுகளைக் கட்டி வாழ்ந்து வருகிறோம். அவற்றுக்குப் பட்டா தர வேண்டுமென்று கேட்டார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பகுதிக்குள் பட்டா தருவதில்லை. குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் தான் கட்டித் தரப்படும் வித் இன் அர்பன் லிமிட்ஸ்.

திரு. ஆ. நடராசன்: தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அர்பன் ஏரியாவில் பட்டா வழங்குவதில்லை என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் அனுமதியோடு 1973 ஆம் ஆண்டிலே சில பகுதிகளுக்கு பட்டா தருவதற்கு ஆணையிடப்

பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அங்கே இருக்கின்ற அரிசன மக்கள் ஏறத்தாழ 350 வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். இப்போது அவைகளை இடித்துவிடுவேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்வது நியாயம் இல்லை. அந்த மக்கள் எல்லாம் நாங்கள் 10, 15 ஆயிரம் போட்டு வீடுகளைக் கட்டியிருக்கிறோம், நீங்கள் இடிக்கக்கூடாது என்று சொன்னபோது அமைச்சர் அவர்கள் * * * * * என்று சொன்னார்கள். வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்குப் பதிலாக * * * * என்று சொல்வது நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, சொன்னார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு அமைச்சர் மீது பழிகொண்டு வருவது சரியல்ல. எதையும் ஆதாரத்தோடுதான் சொல்லவேண்டும். உண்மை என்னவென்றால் வித் இன் அர்பன் லிமிட்ஸ் பட்டா வழங்குவதில்லை என்று குடிசை மாற்றுவாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைச் சொல்லிவிட்டு வந்தேன். அப்போது திரு ரமணி அவர்கள் உடன் இருந்தார்கள். அவர்கள் அதற்கு சாட்சியமாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் * * * * * * என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

திரு. ஆ. நடராசன்: குன்னூர் தொகுதியிலே தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சென்றபோது வண்ணாரப்பேட்டையிலே அரிசன மக்கள் அவர்களிடத்திலே மனு கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுவை வாங்கி அவர்கள் கிழித்து எறிந்து விட்டு உங்களுக்குப் பட்டா தரமுடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம் அமைச்சர் அவர்கள் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே இவைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஏழை எளிய மக்கள் பலர் பட்டா தரவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்திலே ஓரளவிற்கு நிறைவேற்றப்பட்டாலும் கடந்த ஒன்பது மாத காலமாக கோவையிலே ஒரு துணைத் தாசில்தார், அவர் சத்தியமங்கலத்திலிருந்து பட்டா கொடுப்பதற்காக இருக்கிறார் என்று சொல்கிறார்கள். கோவையிலே ஒரு பட்டா கூட கொடுக்கப்பட

---

* * * * மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வில்லை. ஆகவே, சத்தியமங்கலத்திற்கு துணை தாசில்தாரை இருப்பதைப் போல கோவைக்கும் தனி துணைத் தாசில்தார் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப் பட்டா கொடுக்கப்படுகிறபோது அந்த நிலங்களை 10 ஆண்டு காலத்திற்கு விற்கக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால் மதுக்கரை என்ற கிராமத்திலே 7 ஆண்டுகளுக்கு முன்னால் 7 ஏக்கர் நிலத்தை பட்டா பெற்றவர் இன்றையதினம் தேசிய நெடுஞ்சாலைத் துறையினருக்கு 68 ஆயிரம் ரூபாய்க்கு விலைக்கு விற்றிருக்கிறார். கோவையிலே உள்ள அதிகாரிகள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து அரசாங்கமே பட்டா கொடுத்த நிலத்தை அவசர காலத்திலே அரசாங்கத்திற்கே விற்றிருக்கிறார்கள். இந்த 68 ஆயிரம் ரூபாயை திரும்ப வாங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த நிலம் எடுக்கப்பட்ட இடத்தில் முஸ்லீம்களுக்கு என்று மயானம் என்ற முறையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசின் காலத்திலே அவர்களுக்குத் தரப்பட்டது. அந்த இடத்தினை தேசிய நெடுஞ்சாலைத் துறையினர் நெடுஞ்சாலைக்காக ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றி அந்த மக்களுக்கு மயானத்தை வேறு இடத்தில் மாற்றித் தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த இடத்திலே ஒரு கிணறுக்கு 1,600 ரூபாய் போடப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 28 ஆயிரம் ரூபாய் வரையில் அந்த புறம்போக்கு நிலத்திற்காக தந்திருக்கிறார்கள். அதைப்பற்றியும் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே மனு நீதித் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. இந்தத் திட்டம் இப்போது பேப்பரிலேதான் இருக்கின்ற பரிதாப நிலை இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதிகாரிகள் மக்களை நாடிச் செல்கின்ற வகையில் கொண்டு வந்தார்கள்.

[முற்பகல் 10·40:]

அங்கே கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் உடனடியாக அங்கேயே தீர்வு செய்யப்பட்டன. ஆனால் இன்றையதினம் மனுநீதித் திட்டம் எங்கே கூட்டப்படுகிறது என்ற தகவலே கொடுக்கப்படுவதில்லை.

அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தத் தகவலைத் தெரிவிக்காமல் அங்கே கொடுக்கப்படும் மனுக்கள் வாங்கி வைக்கப்பட்டு வருகின்றன. நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. அதைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் நடைபெற்ற நட்சத்திரக் கலைவிழாவிற்காக கோவை மாவட்ட அதிகாரிகள் அங்கேயுள்ள விவசாயிகளிடம் கடுமையான முறையில் வசூல் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு, அதன் காரணமாக அங்கே உள்ள விவசாயிகளிடமும், வியாபாரிகளிடமும் கடுமையான, கொடுமையான நடவடிக்கைகள் மூலம் வசூல் செய்திருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையிலே அங்கே மதுக்கரை ஒன்றிய ஆணையாளர் அதிகாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார். இந்த வசூலில் எல்லா டிக்கெட்டுகளையும் விற்றுப் பணத்தைத் தராவிட்டால் அதற்கான முன்னேற்றம் இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்கிற காரணத்தால் இந்த வசூலை நிறைவேற்றித் தராதவர்கள் மிகுந்த விளைவுகளை எதிர் பார்க்க வேண்டும் என்ற கருத்தில் அறிவிப்பை அனுப்பியிருக்கிறார்கள். இதுபோன்ற நடவடிக்கைகள், ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னதாக மக்களிடத்திலே நாங்கள் நியாய உணர்வோடு நடப்போம் என்று சொன்னதற்கு மாறாக இருப்பதால் இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது இந்த நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது பல்வேறு குற்றச் சாட்டுகளைச் சொல்லி வந்தார்கள். ஆனால் அந்தக் குற்றங்களைப் பொய்யாக்கும் முறையில் இன்றையதினம் மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் கோவை மாவட்டத்திற்கு வரும்பொழுது ஒரு அழைப்பிதழைப் போட்டிருக்கிறார்கள். அதில் 32 பக்கங்கள் போட்டு அமைச்சருடைய நிகழ்ச்சி ஈரோட்டிலிருந்து, கோபியிலிருந்து கோயம்புத்தூரிலே வடவள்ளி வரையில் வரும் ஒன்பது நிகழ்ச்சிகளையும் புக்லெட்டாகப் போட்டு 32 பக்கங்கள் அச்சடித்திருக்கிறார்கள். நாங்கள் விளம்பரத்திற்கு ஆசைப்படாதவர்கள் என்று சொன்னவர்கள் இன்றையதினம் இதுபோன்ற புத்தகங்களைப் போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டது உள்ளபடியே வருந்தத்தக்கது. மக்களுடைய வரிப் பணத்தை இதுபோன்ற இனத்தில் செலவு செய்யக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, நகர்ப்புற நில உச்சவரம்பு என்ற அடிப்படையில் ஒரு சட்டம் 1976ஆம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 3ஆம் தேதியன்று அவசரக் காலத்தில் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்தின் மூலம் இன்றையதினம் வீடு கட்டுகிற பணியில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் மிகுந்த தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வீடுகள் கட்டுகின்ற வாய்ப்புகள் குறைந்திருக்கின்றன. ஏழை எளியவர்கள் தங்களுக்கான வீட்டுக்கான இடங்களைப் பெற்ற பிறகு அந்த இடங்களில் வீடு கட்டக்கூடிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்ட மக்களுக்கு மிகுந்த

சிரமம் இருப்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தச் சட்டம் வருவதற்கு முன் ஏறக்குறைய ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டுவதற்கான அனுமதிகளை டவுன் பிளானிங்கில் அப்ரூவ் செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த இடத்தில் வீடு கட்ட இன்றையதினம் அனுமதியில்லாமல் இருக்கிறது.

புன்னைராஜபுரம் என்ற இடத்தில் ஏறக்குறைய 4,000 வீடுகள் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அந்த நடவடிக்கை இன்றையதினம் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. காரணம், இந்த நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தினால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத துர்பாக்கியமான நிலைமையிருக்கிறது. எனவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன் எந்தெந்த இடத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டதோ அவைகளுக்கெல்லாம் உடனடியாக அனுமதி கொடுக்க தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குத்தகைத்தாரர் பதிவுச் சட்டம் கொண்டு வந்து குத்தகைதாரர்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுத்தோம். ஆனால், இன்றையதினம் குத்தகைதாரர்கள் தாசில்தார் அவர்களிடத்திலும், ஆர்.டி.ஓ. அவர்களிடத்திலும் நடந்து கொண்டிருக்கின்ற பரிதாப நிலைமையிருக்கிறது. அந்த வழக்குகளை உடனடியாகப் பைசல் செய்து குத்தகைதாரர்களுக்கு உதவி செய்ய வேண்டும். 5 ஆண்டு, 6 ஆண்டு, 10 ஆண்டுக் காலமாக வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனால் ஏழை குத்தகைக்கார விவசாயிகள் மிகுந்த பாதிப்பிலே இருக்கிறார்கள். அதிலே பல ஊழல்கள் நடைபெற வாய்ப்பிருக்கின்றன என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, குத்தகைத்தாரர் பதிவுச் சட்டத்தில் போடப்பட்டிருக்கும் வழககுகளைத் தீர்வு செய்ய உடனடியாக தாசில்தாரைப் புதிதாகப் போட்டு, தனித் தாசில்தாரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே, பட்டா பாஸ் புத்தகத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தது. இன்றையதினம் அந்தப் பட்டா பாஸ் புத்தகத்தை கொடுப்பதற்கான முயற்சியிம் பல அதிகாரிகள் தடை செய்து கொண்டிருக்கிறார்கள். காரணம், அவர்களுக்கு வருகிற வருமானம் பாதிக்கின்றது என்கின்ற அடிப்படையிலே செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நல்ல திட்டத்தை, இந்த அரசாங்கம் உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அதற்காக, வருவாய் ஆணையர் தலைமையிலே ஒரு குழு போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிலே இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, உடனடியாக அந்தக் குழுவின் மூலமாக, விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பிலே இருந்த பொழுது, ஏழை எளியவர்களுக்குப் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து வந்தது. அந்த நல்ல காரியங்களை எல்லாம் இந்த அரசாங்கம் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். அந்த காரியங்களில் காழ்ப்புணர்ச்சி இல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகம் செய்த காரியம் என்று செயலாக்காமல் இருந்து விடாமல், திராவிட முன்னேற்றக் கழகம் செய்த நல்ல திட்டங்களைச் செய்ய வேண்டும், மாவட்ட நிர்வாகத்திலே இருக்கிற ஊழல்களை ஒழிப்பதிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இலஞ்ச இலாவண்யத்தை உண்மையிலேயே தடுக்க வேண்டுமானால், தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றையதினம் அரசு அலுவலகங்களிலே எந்த அலுவலகத்திலே வேண்டுமானாலும் அதனை நிரூபிக்க முடியும். ஒரு குறுவை சான்றிதழ் வாங்க வேண்டு மென்றால்கூட, அந்த அலுவலகத்திலே வெளிப்படையாகவே பணம் கேட்கிற நிலைமை இருந்து கொண்டு வருகிறது. விவசாயிகள் இன்றையதினம் பல்வேறு காரியங்களுக்காக தாசில்தார் போன்றவர்களைச் சந்திக்கிற நேரத்தில், பல்வேறு இடங்களில் அந்த நிலைமை இருந்து வருகிறது. அவைகளையெல்லாம் போக்குகின்ற வகையிலே, இந்த அரசாங்கம் நடக்க வேண்டுமென்றுகூறி, முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமாசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று அவை முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளான, நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம் குறித்து சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி நவின்று எனது கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

முதலாவதாக, வெள்ள நிவாரணப் பணிக்காக, இன்றையதினம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், 37 பைசாவுக்குக் கீழாக விளைச்சல் இருக்கக்கூடிய இடங்களிலே நல்லதொரு வரி விதிவிலக்கு அளித்திருப்பது வரவேற்கக்கூடியது, பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

அடுத்தபடியாக, நிலமற்ற ஏழைகள், யார், யார் என்பதனை, அறிந்து, யார், யாருக்கு அந்த நிலம் வழங்க வேண்டுமென்று வரையறுக்கின்ற செய்தி, பாராட்டுக்குரிய, வரவேற்புக்குரிய ஒன்றாகும்.

அதுமட்டுமல்லாமல், அப்படி நிலத்தைப் பெறக்கூடியவர்கள், 10 ஆண்டுக் காலத்திற்கு அதனை விற்பனை செய்யக்கூடிய உடமை கூடாது என்று சொல்லி யிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். நல்ல முறையிலே, யாருக்கு இந்த அரசு தேவை என்று கருதுகிறதோ, பொது மக்கள் எந்தெந்த வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யவிருக்

இறுது என்ற வகையில், சீர்தூக்கி, ஆராய்ந்து அந்தக் கருத்துக்களை வெளியிட்டமைக்காக என்னுடைய பாராட்டுக்களையும் வரவேற்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு புறம்போக்கு நிலங்களில் இருக்கிற வீட்டு மனைகள் ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது, பாராட்டுதற்குரியது.

பட்டா புத்தகங்களைப் பரிசீலிக்க 5 உறுப்பினர்கள் கொண்ட குழுவை நியமித்திருப்பது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். காரணம் பட்டா புத்தகம் என்ற ஒன்று இருந்தது. கொடுத்தார்கள் என்பதுதான் தெரியுமே தவிர, அதில் உள்ள விவரங்கள் தெளிவான அளவில் இல்லையென்பது நாடறிந்த உண்மையாகும். பட்டா புத்தகம் இருக்குமே தவிர, அதிலே எவர் எத்தனை ஏக்கருக்குப் பட்டாதாரர் என்ற நடைமுறைக் கணக்கு இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையான ஆஸ்திப் பொறுப்பை யார் நிர்வகிக்கிறார்கள் என்பதைக் கண்டறிகின்ற வகையில் ஒரு குழுவை அமைத்திருப்பது, இந்த ஆட்சி எந்த அளவு சீர்திருத்தச் சிந்தனையை உடையது என்பதை எடுத்துக் காட்டுகிறது. அதற்கு நான் என்னுடைய வரவேற்பைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, குத்தகை உரிமை என்று சொல்லும்போது, எப்படி, எப்படி இருக்க வேண்டும், எந்த அளவிலே அவர்கள் அமுலாக்கத் தவறினால், அதிலேயிருந்து வெளியேற்றப்பட வேண்டுமென்று வரையறைகளை அளித்திருப்பதை நான் வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன்.

அடுத்தபடியாக, நில வரியைப் பற்றி பேசுகின்ற பொழுது, கிராமங்களிலே குடி மராமத்து என்ற ஒன்று இருந்தது. அது இப்பொழுது இருக்கிறதா என்று சந்தேகிக்கக்கூடிய நிலையிலே இருக்கிறது. இத்தனை ஆண்டுக்காலமாக இருந்த அந்தக் குடி மராமத்து, சமீபத்தில் மட்டுமல்லாமல், நெடுங்காலமாக, அது தீர்ந்து விட்டது, பேச்சே இல்லாத நிலைமையில் அது அமுலில் இல்லையென்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

வாய்ப்புக்களற்ற நிலையில் பலப்பல வரிகளைப் போடும்போது, அங்கே விவசாயிகள் உண்மையிலே வரி போட்டதன் பலனை அனுபவிக்க முடியாமல் இருக்கின்ற நிலையில், அவர்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய காரியத்தைச் செய்ய வேண்டுமென்றால், ஏரிகளைத் தூர் எடுத்து, அதனால் பலன் அனுபவிக்கும் ஆயக்கட்டுக்காரர்களிடம் அதற்கான செலவுத் தொகையை வசூலிக்கும் நிலையை அந்த ஒன்றியங்களுக்கும் நாம் அளிக்கலாம். இதனால், எந்த எந்த ஏரி, எவ்வளவு நீளம், அகலம், ஆழம் உள்ளது என்பதைத் தெளிவுபடுத்த வசதியாக இருக்கும்.

[முற்பகல் 10—50]

ஏரி இருக்கிறதே தவிர, அந்த ஏரிக்குப் போவதற்கு வழியில்லை. சொர்க்கத்தைக் காட்டுகிறேன் என்று சொல்வார்கள். ஆனால், அந்த சொர்க்கத்துக்குப் போவதற்கு வழி இருக்காது. அதைப்போல ஏரி என்று ஒன்று இருக்கும். அந்த ஏரிக்குப் போவதற்கு வழியற்ற நிலையிலே இன்றையதினம் கிராமங்கள் இருக்கின்றன என்பதை இந்த அரசுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆக, இப்படிப்பட்ட நிலையில் அந்த ஏரிகளுக்கு வாய்க்கால்கள் வெட்டி தண்ணீர் எடுப்பதற்கும் தூர் வாருவதற்கும் ஆன வாய்ப்புகளை அந்தந்த ஒன்றியங்களுக்கு அளித்து, அதனால் ஏற்படுகின்ற செலவுகளை அவர்களே ஆயக்கட்டுக்காரர்களிடம் வசூலித்துக் கொள்வதற்கு வேண்டிய வழிமுறைகளை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. பட்டா புத்தகம் கொடுத்தது சரியல்ல, சரியற்ற நிலையில் இருந்தது என்பதை சொல்லுகிறார்கள். ஆகவே, நான் ஒரு புதிய முறையைக் கொண்டு அரசுக்கு ஆலோசனை சொல்லுகிறேன். லேண்டு ரிக்கார்ட் ஆபீஸ் என்று ஒரு அலுவலகம் ஏற்படுத்தி அந்த அலுவலகத்தில் நில உடமையாளர்களுக்குத் தேவையான சர்வே நம்பர்களையும், பட்டாக்களின் விவரம், அவர்கள் எந்த அளவுக்கு வரி கொடுக்கிறார்கள், அவர்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, எந்தெந்த இடங்களிலே இருந்து அவர்களுக்கு வருவாய் இருக்கிறது என்ற நிலைமையில் சேர்க்கக்கூடிய புத்தமாக இருந்தாலும் அதுவும் ஸ்கெட்சாக இருந்தாலும், ஒரு ரூபாய், ஐந்து ரூபாய் கொடுத்தால் கிடைக்கும் என்ற நிலையில் இருந்தால் தமிழகத்திலே பட்டா புத்தகத்தை வைத்து தேசியமயமாக்கப்பட்ட எல்லா வங்கிகளில் இருந்தும் கடன் பெற முடியும்.

இப்போது உருப்படியாக கடன் வாங்க முடியாமல் இருக்கிறது. காரணம் கர்ணம் சர்ட்டிபிகேட் முன்சீப் சர்ட்டிபிகேட் இன்னபிற சர்ட்டிபிகேட் தேவை என்று சொல்வது ஆங்காங்குள்ள கிராமங்களில் உள்ள உள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப இருக்கிறது. அது சரியாக நிர்ணயிக்கப்படுவதில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட நிலைமை மாற ஒவ்வொருவருடைய சொத்துக்கள் விவரம் அடங்கிய புத்தகத்தை பஞ்சாயத்து அலுவலகத்திலோ அல்லது ஒன்றிய அலுவலகங்களிலோ வைத்தால், அந்தப் புத்தகத்தை வைத்துக்கொண்டு எந்த வங்கியிலே வேண்டுமானா

லும் அவர்கள் கடன் வாங்கும் நிலைமையை உருவாக்கினால், விவசாயிகள் வாழ வழி செய்ததாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. கிராம அதிகாரிகள் என்று இருக்கிறார்கள். அவர்கள் ஜாதிச் சான்று, சொத்துச் சான்று கொடுக்கிறார்கள். அவர்கள் கொடுக்கிற சொத்துச் சான்றுகள் பலப்பல இடங்களில் சரியாக இல்லை என்பது மிக திட்டவட்டமாக சொல்கிற கருத்தாகும். ஜாதிச் சான்று கொடுப்பதற்கே ஒருவர் இருக்க வேண்டும் என்ற சூழ்நிலை கூட இருக்கிறது. மற்ற இலாக்காக்களில் தனித்தனியாக இருக்கிறார்கள்.

பஞ்சாயத்திலே வீட்டு வரி வசூல் செய்கிறார்கள். இது போன்று நில வரி வசூல் செய்வதே கூட கிராம அதிகாரிகள்தான். இந்த நிலைமை மாறி, ஒன்றியங்களிலே சில அலுவலர்களை நியமித்து அவர்கள் மூலமாக வசூல் செய்தால் நலமாக இருக்கும் என்று நம்புகிறேன். காரணம் ஜாதி இரண்டொழிய வேறில்லை என்றெல்லாம் சொல்கிறோம். ஜாதி மத பேதமில்லாத சமூகத்தை உருவாக்குவோம் என்று சொல்கிறோம். ஆனாலும் ஜாதிச் சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறோம். அதைக் கட்டாயப்படுத்தாமல் புறக்கணிக்கின்ற வகையில் இருக்க வேண்டும். புதிதாக ஒன்றும் ஜாதிச் சான்று கொடுக்கப்போவதில்லை. ஏற்கனவே இருந்த சான்றினைத்தான் கொடுத்து விடுகிறார்கள். இதனால் பல மாணவர்கள் அவதிப்படுகிறார்கள். எனவே, இதற்கு விதிவிலக்கு அளிக்க பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புயல் வெள்ள நிவாரணம் என்கிற அடிப்படையில் பல இடங்களில் எவ்வளவோ நிவாரணப் பணிகள் செய்திருந்தாலும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கொடிக்கால் விவசாயிகள் ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது பற்றி ஏற்கனவே இந்த அரசுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக், கணக்கு முறையாக வைக்கப்படாமல், எந்தெந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு சரியாக வைக்கப்படவில்லை என்று ஒரு கருத்து இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையை உணர்ந்து எந்த அளவுக்கு இந்த மாவட்ட கொடிக்கால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று உணர்ந்து அவர்களுக்கு புயல் வெள்ள நிவாரணத்தின் கீழ் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டம் பலப்பல வகைகளில் இருக்கின்றன. குடிசை மாற்று வாரியம் என்று சொல்கிறார்கள். அரிசன பழங்குடியினர் என்று இருக்கிற நேரத்தில் இந்த அரசு அவர்களுக்காக இன்னொரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்து இருப்

பதை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். ஒரு விவசாயி ஊரிலே கட்டினாலும் சரி, நிலத்திலே கட்டினாலும் சரி, 2 செண்ட் நிலத்தில் கட்டினால் ரூ. 5,000 கடன் தருவதாகச் சொல்லி இருப்பதை நான் வரவேற்கிறேன். இதனால் விவசாயிகள் பெரிதும் பயன் அடையும் நிலை இருக்கிறது. என் தொகுதியில் கிருஷ்ணகிரி வட்டத்தில் 200 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ அந்த 200 வீடுகள் கட்ட இருப்பவர்களுக்கு கடன் அளிக்க இருப்பதை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன்.

நிலவரி என்று சொல்கிறபோது, நிலவரி எப்படி நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, சில சங்கடங்கள் இருக்கின்றன. பாசனத்திற்குப் பாசன வரி, நிலத்திற்கு நில வரி என்று இப்படி பல இடங்களில் பல விதத்தில் இருக்கிறது. கிருஷ்ணகிரி அணைத் தேக்கத்தில் இருந்து நீரைப் பயன்படுத்தும் ஆயக்கட்டுதாரர்களுக்கு போட்டு இருக்கும் வரி 1382-க்கு, ரூ. 30, 1383-க்கு ரூ. 60, 1384-க்கு ரூ. 120, 1385-க்கு ரூ. 240 என்று வரி போடப்பட்டு இருக்கிறது. இப்படி வரி வசூல் செய்யப்பட்டு இருந்தாலும், இந்த வரிவிதிப்பு முறையில் ஒரு சீரமைப்புத் தேவை என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். இந்த வரிப் பிரச்னையானது ''நித்திய கண்டம் பூரண ஆயுசாக'' இருக்கிறது. இந்த நிலையைப் போக்க வேண்டும். அவர்களுக்கு எப்போதும் இவ்வளவுதான் வரி என்று ஒரு சீரமைக்கப்பட்ட வரியாக மாற்றியமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு ஏற்படுகிற பிரச்னையான, விவசாயம், பாசனம், கடன், மின்சாரம், உற்பத்தி, கொள்முதல், விற்பனை ஆகிய இவைகளை ஒன்றோடொன்று இணைத்து வைக்க வேண்டும். ஒரு பிரச்னை தீர்ந்தால் மற்ற பிரச்னைக்கு, அவர்கள் எவ்வித சிரமமும் இல்லாமல் அப்போது தான் செல்ல முடியும். அப்போது தான் விவசாய உற்பத்தி அதிகரிக்க இயலும். நிலவரி என்பது கிராம வரிதான். நிலம் எல்லாம் கிராமத்தில்தான் இருக்கிறது. ஆட்கள் வேண்டுமானால் நகரத்தில் இருக்கலாம். இந்தப் பிரச்னைகளையெல்லாம் அவர்கள் தனித்தனியாக கவனிக்க வேண்டியிருப்பதால் மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கிறது. ''பூவை வைத்துக் கொள்ளலாம். ஆனால், மொட்டையடித்தே ஆக வேண்டும்'' என்று சொன்னால் என்ன செய்வது? ஆகவே, விவசாயிகளின் இப்படிப்பட்ட நிலையைப் போக்க அவைகளை ஒன்றோடொன்று இணைத்து வைத்து, இதற்கு நல்லதொரு முடிவு கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: சீக்கிரம் முடியுங்கள், இன்னும் இந்தப் பக்கம் 10 உறுப்பினர்கள், அந்தப் பக்கம் 10 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம் : மாவட்ட நிர்வாகத்தைப் பற்றிச் சொல்கிறபோது, கிருஷ்ணகிரி வட்டத்தை ஒரு கோட்டமாக மாற்ற வேண்டும் என்று பல காலமாக அங்கே இருக்கும் மக்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்த கிருஷ்ணகிரி வட்டத்தை ஒரு கோட்டமாக, ஒரு டிவிஷனாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தருமபுரி மாவட்டத்தில் 8 பிர்க்காக்கள் கொண்டதாக உள்ள கிருஷ்ணகிரியிருந்து காவேரிப் பட்டணத்தை ஒரு தனி வட்டமாக மாற்ற வேண்டும் என்று பணிவோடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் மலைவாழ் பகுதி மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். (கொத்தளம், குண்டாங்காடு, மார்வாடி, மத கேரி, போர்டர்ஹள்ளி போன்ற பகுதிகளில் வாழும் மக்களுக்கு மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின் கீழ் நல்லதொரு முன்னேற்றம் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் தலைமை அலுவலகங்கள் எதுவும் இல்லை. மற்ற மாவட்டங்களில் அவைகள் இருக்கின்றன. சி.இ.ஓ. ஆபீஸ் இல்லை. கூட்டுறவு ஜாயிண்ட் ரிஜிஸ்டிரார் உபீஸ் இல்லை டிஸ்டிரிக்ட் அக்ரிகல்சரல் ஆபீசர் அலுவலகம் இல்லை. கால் நடைடெபுடி டைரக்டர் அலுவலகம் இல்லை. ஆகவே, இந்த நிலைமைகளை ஆராய்ந்து, தருமபுரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட தலைமை அலுவலகங்கள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களாக, கோட்டாட்சி தலைவர்களாக நியமிக்கும் மாவட்ட அரசு அலுவலர்கள் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் தமிழ் நன்கு தெரிந்தவர்களாகவும் உள்ளவர்களை நியமிக்க அரசு வழி வகுக்க வேண்டும்.

(மணி யடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.

[முற்பகல் 11–00]

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த மானியக் கோரிக்கைகளிலே என்னுடைய சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

ஜில்லா நிர்வாகம் இதற்கு முன்னால் எப்படி இருந்தது, இனி மேல் எப்படி இருக்க வேண்டும் என்பதை நாம் கவனிக்க வேண்டும். இதற்கு முன்னால் இவ்வளவு போர்ட்போலியோஸ் இப்போது இருக்கக்கூடிய செக்ரட்டரிகளுக்கு இல்லை ; அமைச்

சர்களுக்கும் இல்லை. இப்போது பார்த்தால் ஒவ்வொருவருக்கும் 3, 4 போர்ட் போலியோஸ் இருக்கிறது. இந்த நிலையில் ஜில்லா நிர்வாகத்தை நாம் மாற்றி அமைக்க வேண்டுமென்பது எங்கள் கருத்து.

இதற்கு முன்னால் ‘டாடன்ஹாம் ஸ்கீம்’ என்ற முறையை அரசாங்கம் பின்பற்றி வந்திருக்கிறது. நான் சொன்னதைப் போல் இப்போது இருக்கக் கூடிய சூழ்நிலைக்கு, இந்த மாறி வரக் கூடிய ஒரு நிலைமைக்கு இந்த ‘டாடன்ஹாம் ஸ்கீம்’ அன்றைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற ‘அட்மினிஸ்ட்ரேஷனில்’ அது எடுத்துக் கொள்ள முடியாத சூழ் நிலையில் இருக்கிறது.

இந்த ‘அஃபிஷியல் ஹைரார்க்கி’ என்பதில் கீழே இருந்து கணக்குப்பிள்ளை, மணியக்காரர் முதல் மேலே கலெக்டர் வரை அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒரு காரியத்தைப் போய் நாம் செய்ய வேண்டுமென்றால், உதாரணமாக, நிலத்திற்கு ஒரு அசைன் மென்ட் வாங்க வேண்டுமென்று வைத்துக் கொண்டால், ஒரு ஏழை நிலத்திற்கு அசைன்மென்ட் வாங்க வேண்டுமென்றால், கீழே கணக்குப்பிள்ளை, மணியக்காரர் முதல் மேலே கலெக்டர் வரை பேப்பர் போய் வர வேண்டியிருக்கிறது. டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸுக்கு 20 தடவை போய்வர ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது. அந்தக் கஷ்டத்தைப் போக்க வேண்டும். இந்த ‘ரெட் டேப்பிசம்’ அரசாங்கத்திலிருந்து எடுக்கப்பட வேண்டும்.

ஏதாவது ஒரு காரியத்திற்காக பேப்பர் போகிறது என்றால் அதற்கு ஒரு ‘டைம் ஷெட்யூல்’ வைத்துக் கொள்ள வேண்டும். இத்தனை நாளைக்குள் அந்த இலாகாவிலிருந்து உரிய பதிலுடன் திரும்பி வந்துவிடவேண்டும் என்ற ஒரு கொள்கையை சட்ட மாக வைக்க வேண்டும். சும்மா சொல்வதில் பயனில்லை. இரண்டு நாள் செய்வார்கள். மூன்றாம் நாள் பழைய கதையாகத்தான் இருக்கும். அதை மறந்து விடுவார்கள். ஆகவே, அதற்கு ஒரு டைம் ஷெட்யூல் வைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அதிகாரிகளுக்கு. அதாவது தாசில்தாரி லிருந்து மேலே கலெக்டர் வரைக்கும் இருக்கக்கூடிய அதிகாரி களுக்கு இன்னும் அதிகமான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். அசைன்மென்ட் செய்ய வேண்டுமென்று சொன்னால் தாசில்தாருக் குப் போய், ஆர். டி. ஓ.-க்குப் போய், டி.ஆர்.ஓ.-க்குப் போய் கலெக்டர் வரை போக வேண்டியிருக்கிறது. இதில் ஒரு சில அதிகாரங்களை தாசில்தாருக்கு அல்லது இன்னின்ன அதிகாரங்கள் தாசில்தாருக்கு, இன்னின்ன அதிகாரங்கள் ஆர்.டி.ஓ.-வுக்கு என்று கொடுத்து விட்டால் இருக்கின்ற சிக்கல்கள் குறைந்துவிடும் ; அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான்]
[1978 மார்ச் 21

அடுத்து, ஒரு காலத்தில் ரெவின்யு போர்டு இருக்க வேண்டியதில்லை என்ற வாதத்தை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எங்களைப் பொறுத்தவரை ரெவின்யு போர்டு இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். இந்த நேரத்திற்கு எப்படி இருக்க வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம் என்றால் இப்போது ரெவின்யு போர்டை தலைநகரிலே வைத்திருக்கிறோம்; அதனால் ஒவ்வொரு காரியத்திற்கும் இங்கு வர வேண்டியிருக்கிறது; கலெக்டர்கள் எது வேண்டுமானாலும் இங்கேதான் கேட்க வேண்டியிருக்கிறது.

எங்களுடைய கருத்து என்னவென்றால் 4 மாவட்டங்களுக்கு ஒரு ரெவின்யூ போர்டு மெம்பரை, நான்கு மாவட்டங்களுக்கும் பொதுவான ஒரு இடத்தில் நியமித்து, அந்த மாவட்டங்கள் பற்றிய காரியங்களுக்கு அங்கே போனால் போதும் என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான்.

அதோடு அவருக்கு அதிகமான அதிகாரங்களையும் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஜில்லா நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 4 ஜில்லாக்களுக்கு ஒரு ரெவின்யூ போர்டு மெம்பரை நியமிக்கும்போது, அவரும் இங்கே வந்துதான் உத்தரவு பெற்றுக் போகக்கூடிய நிலை இருக்கக் கூடாது; அவருக்கு பூரண அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். அப்பீல் காரியங்கள் தவிர, மற்ற காரியங்களைச் செய்வதற்கு அவருக்கு பூரண அதிகாரத்தைக் கொடுத்து, கலெக்டரும் அவரும் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் ஜில்லா நிர்வாகம் ஒரு நல்ல நிர்வாகமாக, ரெட்டேப்பிசம் என்கிற சிவப்பு நாடாமுறை இல்லாமல் இருக்கும் எனபதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு போலீஸ் நிர்வாகம் இருக்கிறது. அதிலே டி.ஐ.ஜி. என்று ஒருவரைப் போட்டு அவருக்கு கீழே 4 எஸ்.பி. அல்லது 5 எஸ்.பி. என்று போட்டு வேலைகளைப் பகிர்ந்து கொடுத்துக்கிறார்கள். அது மிகவும் சிறப்பானதொரு முறையில் இருக்கிறது. அதேபோன்று ரெவிவின்யூ தரப்பிலேயும் செய்து கொடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல புதுக்கோட்டை புது ஜில்லாவாக ஆகி வருஷங்கள் கூட ஆகவில்லை. அங்கே ஒரு பெரிய கட்டடத்தை வாங்கி அதிலே இப்போது எல்லா ஆபீஸ்களையும் அங்கு வைத்திருக்கிறார்கள். நூறு ஏக்கர் இருக்கக்கூடிய அந்த காம்பவுண்டுக்குள்ளேயே எல்லா இலாக்காக்களையும் வைத்தால் அங்கே இருக்கக்கூடிய பொது மக்களுக்கு அது உதவியாக இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு ஒரு ஆபீஸிலேயிருந்து மற்றொரு ஆபீஸுக்கு போக வேண்டுமென்றால் கிட்டதட்ட 4 மைல் அல்லது

1978 மார்ச் 21]
[திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான்]

5 மைல் நடந்து போக வேண்டி இருக்கிறது. கார் வசதி உள்ளவர்கள் காரிலே போய்விடலாம். நடந்து போகிறவர்களுக்கு மிகவும் கஷ்டமான நிலை இருக்கிறது. அந்தக்காலத்திலே அதற்கு நிதி ஒதுக்கீடு செய்ததாக நான் கேள்விப்பட்டேன். அந்த நிதி ஒதுக்கீடு செய்திருந்தால் அதன் மூலமாக அந்த 100 ஏக்கர் காம்பவுண்டுக்குள் ரெவின்யூ அல்லாத, எஜுகேஷன், போலீஸ் போன்ற மற்ற இலாக்காக்களையும் அதற்குள்ளேயே வைத்துக் கொடுத்தால் அங்குள்ள பொது மக்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் ஜில்லாவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று வெகு காலமாக கேட்டுக்கொண்டு வருகிறார்கள். இப்போது இராமநாதபுரம் ஜில்லாவிலே இருக்கக்கூடியவர்கள் மதுரைக்கு வரவேண்டும். அங்கு கடைப் பகுதியில் இருக்கின்றவர்கள் கூட மதுரைக்கு வந்துதான் தங்களுடைய காரியங்களைச் செய்யக் கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே அந்த இராமநாதபுரத்தை இரண்டாகப் பிரித்து கிழக்கு இராமநாதபுரம் என்றும், மேற்கு இராமநாதபுரம் என்றும் ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால் அங்குள்ள மக்களுக்கு பெருதவியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது, நான் சொல்லக்கூடிய டிராட் அஃபெக்டட் ஏரியாஸ்.

அடுத்து, சிவகெங்கை திருவாடானை, பரமக்குடி, திருப்பத்தூர், போன்ற சிறிய தாலுக்காக்களை ஒன்றாகச் சேர்த்து அதை ஒரு ஜில்லாவாக அதாவது தனி ஜில்லாவாக அமைக்கவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது இந்த கம்பவுண்டிங் சிஸ்டம் பற்றி. நீங்கள் முற்போக்குத் திட்டம் கொண்டு வந்தீர்கள். அதை நான் வரவேற்கிறேன். விவசாய வருமான வரிக்கு கம்பவுண்டிங் முறை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்திலே 10 ஏக்கர், 5 ஏக்கர் 2 ஏக்கர் நிலங்களை வைத்திருக்கக் கூடியவர்களையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கொடைக்கானல், போடிநாயக்சனூர் போன்ற இடங்களிலே இருக்கின்றவர்கள் தங்களுடைய குடும்பத்திலேயுள்ள சொந்த ஆட்களை வைத்துக் கொண்டு வேலை செய்து வருகிறார்கள். 10 ஏக்கர், 5 ஏக்கர், 2 ஏக்கர் என்ற அளவிலே பயிரிட்டு வருகின்ற அவர்களுக்கு கணக்கு வைக்கின்ற நிலை இருக்காது. ஆகவே அந்தப் பத்து ஏக்கருக்கு கீழே வைத்துக்கொண்டிருக்கக்கூடியவர்களுக்கும் கம்பவுண்டிங் சிஸ்டத்தை கொண்டு வந்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைக் கொண்டு வந்தது தவறு என்று நான் சொல்லவில்லை. அது நிச்சயமாக முற்போக்குத் திட்டம். ஆனால் பெரிய நிலச் சுவான்தார்களுக்கு இந்த நிலையை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்திலே சிறிய நிலச்சுவான்தார்களையும் நாம் பார்க்க வேண்டும். அவர்களுக்கும் இந்தத் திட்டத்தை கொண்டு வந்து உதவவேண்டும்.

கடைசியாக இந்த ஃப்ளட் சம்பந்தப்பட்ட வேலை குறித்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த வேலைகள் புதுக்கோட்டை, இராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி போன்ற ஜில்லாக்களிலே மிகத் தீவிரமாக நடைபெற்று வந்தது. முதலில் தீவிரமாக நடந்த வேலைகள் இப்போது கொஞ்சம் நடக்காமல் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சில பாலங்கள் அப்படியே கட்டப்படாமல் வேலைகள் நின்றுவிட்டன. அதையெல்லாம் அரசாங்கம் பார்த்து சீக்கிரம் கட்டுவதற்கு, வேலைகள் நடைபெறுவதற்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஃப்ளட் அஃபெக்டட் ஏரியாஸ்க்கு வரி வஜா பண்ணுவதாகச் சொல்லப்பட்டது. அதை நல்ல முறையில் அமுல்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

*திரு. எம். அண்ணாமலை : பேரவை துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை மானியக் கோரிக்கையின் பேரில் உழைக்கும் மக்களது வருவாயைப் பெருக்கும்படியான ஆலோசனையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் முன் வைக்கிறேன்.

நில உச்ச வரம்பு சட்டத்தை அமல்படுத்தவேண்டும். ஒரு குடும்பத்திற்கு ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் என்ற நிர்ணயத்தைக் கொண்டு வந்து நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் சிறு விவசாயிகளுக்கும் நிலம் கிடைக்கும் வரையில் கோவில், மடம், அறநிலையங்கள் போன்ற ஸ்தாபனங்களுக்கு எந்தவிதமான விலக்கும் இல்லாமல் அவை எடுக்கப்பட்டு இந்த நிலங்களை நிலமற்றவர்களுக்கு விநியோகிக்க வேண்டும். அரிசனங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குத்தகை வாரப் பதிவு என்பது பெயரளவில் தான் உள்ளதே தவிர 75 சதவீதம் அளவிற்குக்கூட இன்றைக்கு பதிவு செய்யப்படாமல் அது வெறும் பினாமி பெயர்களில் இருந்து

வருகிறது. ஆகவே இந்த பதிவை உடனடியாக வாய்மூல விசாரணை செய்து பதிவு செய்வதோடு குத்தகை வாரத்தின் வரம்பு 75—25 என்ற வார அடிப்படையில் நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூலிச் சட்டத்தை அமலாக்குவதைப் பொறுத்தவரையில் இன்றும் பெயரளவில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே தவிர அது எங்கே அமல்படுத்தப்பட்டது என்பதற்கு இதுவரையில் எந்தவிதமான நடைமுறையும் காணப்படவில்லை. மாறாக இன்றைக்கு மேற்கு வங்காளம். கேரளா போன்ற மாநிலங்களில் ரூ. 10, 12 என்று கூலி பெறக்கூடிய காலகட்டத்தில் இன்று நம் மாநிலத்தில் உள்ள விவசாயிகள் விவசாயத் தொழிலாளர் சங்கங்கள் ரூ. 8 ரூ. 9 போன்ற கூலிப் பிரச்னையை முன் வைக்கிறார்கள். இதை உடனடியாக அமுல் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்கள் குத்தகைப் பாக்கிகளை எந்த ஒரு விவசாயியின் குத்தகை பாக்கிக்காக கோர்ட்டுக்கு செல்லக்கூடாது. குத்தகைப்பாக்கிகளை ஒரு ஆண்டு ஒத்தி வைக்க வேண்டுமென்று கடந்த சட்ட மன்ற கூட்டத் தொடரில் சட்டம் நிறைவேற்றியும் அது இன்று ஜனாதிபதியின் அங்கிகாரத்தைப் பெறவில்லை என்ற தாமதத்தைக் காட்டி தஞ்சையில் உள்ள கோர்ட்டுகளில் 'தஞ்சை கோர்ட், 4 ரெவன்யூ கோர்ட் உள்பட கோர்ட்டுகளில் எல்லாம் இன்று தீவிரமாக அந்தப் பாக்கிகளை வசூல் செய்யக் கூடிய நடவடிக்கைகளுக்கு இன்று உத்தரவுகள் போட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆகவே ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறும்படியான ஒரு நிர்பந்தத்தை அரசாங்கம் உடனடியாக செய்ய வேண்டும் என்பதோடு இந்த குத்தகை பாக்கிக்காக எடுக்கப்படக்கூடிய கோர்ட் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடன் நிவாரணச் சட்டம். இந்த கடன் நிவாரணச் சட்டம் இன்றைக்கு அவசியம். இன்று பாடுபடக்கூடிய ஏழை, நடுத்தர விவசாயிகள் மீளமுடியாத ஒரு சூழலில் இன்று சிக்குண்டிருக்கிறார்கள். ஆகவே கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்து அதை மூன்று பகுதிகளாக வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்று, மூன்று ஏக்கர் வரையில் உள்ள நிலங்களுக்கு முழுமையாக கடனை ரத்து செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, ஐந்து ஏக்கர் வரை உள்ள விவசாயிகளுக்கு அவர்களால் ஏற்கனவே செலுத்தப்பட்ட வட்டியைக் கணக்கிட்டு அசலுக்கு வரவு செய்து அந்தக் கடன்களை ரத்து செய்ய வேண்டும்.

[திரு. எம். அண்ணாமலை] [1978 மார்ச் 21

மூன்றுவதாக பத்து ஏக்கர் வரை உள்ளவற்றிற்கு அவர்களால் செலுத்தப்பட்ட வட்டிகளை தள்ளிவிட்டு மீதியை நீண்ட காலமாக பத்து அல்லது பதினைந்து ஆண்டு தவணையில் வசூலிக்க வேண்டுமென்ற முறையில் அந்தக் கடன்களைர்ண நியிக்கவேண்டும். இயற்கையின் சதியால் பாதிக்கப்பட்ட கடன் தொகைகள் அனைத்தும் ரத்து செயய்ப்பட வேண்டும் என்பதோடு இந்த விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட தனியார் கடனில் வருமான வரிவிதிப்பிற்கு கீழ் உள்ள தனியார் கடனை அரசே திருப்பிக் கொடுக்க வேண்டும்.

அதோடு பல்வேறு அமைப்புக்களில் கடன் பெறுவது என்ற நிலையை மாற்றி, கடன்களை ஒருமுகப்படுத்தி, தேவையின் அடிப் படையில் ஒரே இடத்தில் கடன் வாங்கும்படியான ஒரு நிலையை உருவாக்கினுல்தான் இன்றைக்கு விவசாயிகளை அவர்கள் விவசாயம் செய்யமுடியாத ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிற நிலையி லிருந்து அவர்களுக்கு ஒரு சிறிய பாதுகாப்பாவது அளிக்கமுடியும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உச்சவரம்பு மிச்ச நிலம் என்கின்ற அளவில் இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருப்பது, 1977 நவம்பர் 30-ம் தேதிவரை 50,567 பேர்களுக்கு 85,998 ஏக்கர் நிலம் வினி யோகம் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக் கிறது. இது வெறும் ஏட்டுக் கணக்குத்தான் என்பதை இரண்டு உதாரணங்கள் மூலம் சொல்ல விரும்புகிறேன்.

அரூர் வட்டத்தில் சாம்பசிவ ரெட்டியார் என்பவரிடம் 147 ஏக்கர் 82 சென்ட் நிலம் உச்சவரம்பு மிச்ச நிலம் என்று எடுக்கப் பட்டு, அதில் தாமே 30 ஏக்கர் நிலத்தை மேய்ச்சல் நிலமாக வைத்துக்கொண்டிருக்கிருர்கள். மேலும் அங்கு வாழ்ந்துவந்த 20 சாதாரண ஏழை குடும்பங்களை வெளியேற்றிவிட்டு, மீத முள்ளதை தமது சொந்தக்காரர்களுக்கும், ஏற்கெனவே நிலம் உள்ளவர்களுக்கும் 117 ஏக்கர் நிலத்தைப் பட்டா போட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை ஆட்சேபித்து பல மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதே போன்று பழனி தாலுகாவில் நெய்க்காரப்பட்டி என்ற இடத்தில் நிலப்பட்டாதாரரே தனக்கு வேண்டியவர்களுக்கு பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பட்டா செய்து கொடுத்து வைத்துக்கொண்டிருக்கிருர்கள். இதை ஆட்சேபித்து கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்கின்ற நிலைமையை எல்லாம் பார்க்கும்போது இங்கு கொடுக் கப்பட்டிருக்கிற கணக்கெல்லாம், எடுக்கப்பட்ட நிலங்கள் எல்லாம் பினுமி நிலங்களாக இருந்தும் அந்தந்த நிலச்சுவான்தாரர்களே வைத்துக்கொண்டிருக்கிருர்கள் என்பதற்கு நான் சொன்ன

1978 மார்ச் 21] [திரு. எம். அண்ணாமலை]

இரண்டு உதாரணங்களே மேற்கோளாக இருக்கிறது. இந்த விநியோகத்தில் சர்வ கட்சி மக்கள் குழு அமைத்து இந்த உபரி நிலங்களை விநியோகம் செய்வதற்கு அரசு முயற்சி எடுக்க வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிலப்பட்டா. இந்த நிலப்பட்டா ஆட்சிகள் பல மாறியும் பட்டா கொடுக்கப்பட்டு முடிக்கப்பட்டதாக இது வரை இல்லை. கடந்த கால அனுபவம் என்னவென்று சொன்னுல், அமைச்சர்கள் வரும்போது, பட்டா வழங்கும் விழாக் களை வைத்துக்கொண்டு, அங்கு ஒன்றும், இங்கு ஒன்றுமாக கொடுக்கப்படுவதுண்டு, உண்மையிலேயே நிலத்தில் பயிர் செய்பவனுக்கு பட்டா கொடுக்கப்படாமல் நகரத்தில் எதுவும் ஓட்டாமல் இருப்பவர்களின் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. இதனுல் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

தர்மபுரி மாவட்டத்தில், ஊத்தங்கரை, அரூர் வட்டத்தில் நிலத்தில் பாடுபடக்கூடியவர்களுக்கு பட்டா கொடுக்காமல், எந்தவித பாடும் படாதவர்கள் பெயரில் பட்டாக்கள் கொடுக் கப்பட்டிருக்கின்றன. இது போன்ற நிலைமைகளை அனுமதிக்கா மல் யார் நிலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிருர்களோ அவர் களுக்கே பட்டா போட்டு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 30, 40 ஆண்டுகளாக நிலத்தை ஓட்டிக் கொண்டிருப்பவர்கள், தென்னை, மா, பலா என்றெல்லாம் போட்டு வைத்து இருப்பவர்களுக்கு ஆண்டு தோறும் பி. மெம்மோ-க்களைத்தான் போட்டுக் கொடுக்கின்ற கொடுமை களை நிறுத்த வேண்டும். இவ்விதம் விவசாயிகளை கசக்குவதை நிறுத்துவதற்கு, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வீட்டுமனைப் பட்டா. வீட்டுமனை பட்டாவை பொறுத்தவரையிலும், ரெவின்யூ கணக்கில், ஊர் நத்தம், புறம்போக்குகள் இருந்தும் பட்டா கோரி மனுக்கள் கொடுத்தும் வீட்டுமனை பட்டா கொடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கை யும் இதுவரை எடுக்கவில்லை. இது தவிர தனியார் நிலங்களில் குடிசைகளைப் போட்டுக்கொண்டு வாழக்கூடியவர்கள் பல்வேறு இடங்களில் இன்னும் எந்தவிதமான பட்டாவும் பெருமல், நிலச்சுவான்தாரர்களுக்கு அடிமை வேலை செய்து கொண்டு, குறைந்த கூலிகளைப் பெற்றுக் கொண்டு வெறும் கொத்தடிமை களாக வாழ்கின்ற நிலைமை கிராமம் கிராமமாக இருந்து கொண்டிருக்கிறது. மாநிலம் முழுமைக்கும் இந்தப் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது.

திருத்துறைப்பூண்டி தாலுகாவில் 15 கிராமங்களில் ஏழை அரிசன விவசாயத் தொழிலாளிகள், தங்களுக்குப் பட்டா தேவையில்லை என்று நிலச்சுவான்தாரர்களின் நிர்பந்தத்தின்

காரணமாக சொல்லக்கூடிய நிலைமையில் — அவர்கள் அடிமைகளாக அங்கே உள்ள தேங்காய்களையும் ஓலைகளையும் பொறுக்கி ஒப்படைக்க வேண்டும் என்ற நிர்பந்தத்திற்கு ஆளாகி வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் உடனடியாக, நேரடியாக கண்டு அறிந்து இவர்களுக்கெல்லாம் பட்டா போட்டு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிலவரி. இப்படி நில்வரி, தண்ணீர் வரி, சர்சார்ஜ் என்றெல்லாம் இருப்பதை கைவிட்டுவிட்டு, ஒருமுனை வரியாக, வருமான வரியாக போட்டு அந்த வரியை வசூலித்தால், கூடுதலான வரியையும் பெறலாம், அது சிக்கலற்ற வரியாகவும் இருக்கும் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11—20]

அடுத்து, விவசாய வருமான வரியைப் பற்றியது. நமது அரசு இன்றைக்கு விவசாயத்திலே வருமான வரி விதிவிலக்கு கொடுத்திருக்கிறது. இது தேவையற்றது. எனவே, இதை அரசு ரத்து செய்து, அதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதியோர் பென்ஷன். இன்றைக்கு இந்த முதியோர் பென்ஷனைப் பற்றிச் சொல்வதற்குகூட அருவருப்பாக இருக்கிறது. 100 பேர்கள் பென்சன் வாங்குபவரில் ஒருவர் இறந்தால்தான் நாம் மற்றவர்களுக்கு பென்ஷன் கொடுப்போம் என்று சொல்கிறோம். அவர்கள் மற்றவர்கள் செத்தால்தான் நமக்குப் பென்ஷன் கிடைக்கும் என்று சொல்லக்கூடியது மிகவும் கசப்பான பதமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பென்ஷனைப் பொறுத்தவரை முதியோர்கள் அனைவருக்கும் பென்ஷன் கிடைக்கக்கூடிய அளவிற்கு இதை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராம அதிகாரிகளைப் பற்றி. இந்த கிராம அதிகாரிகளுடைய அமைப்பு பழைய பிரபுத்துவ காலத்திலே இருந்ததே இப்போதும் இருந்து வருகிறது. இவற்றைத் தவிர்க்கின்ற முறையிலே, இவர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக்கி, அரசாங்கத்திலே பணிபுரிகின்றவர்களுக்கு கொடுப்பதுபோல் இவர்களுக்கும் ஊதியம் வழங்கப்படுகின்ற நிலையிலே இந்த முறையையும் மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மனு நீதி திட்டம். இந்த மனு நீதி திட்டம் பெயரளவிற்குத்தான் இருக்கிறது. இந்த மனு நீதி திட்டத்திலே இன்றைக்கு இருக்கக்கூடிய அனுபவரீதியான உண்மை என்னவென்றால், அதிகாரிகள் தப்பித்தால் போதும் என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. மக்களது கோரிக்கைகளை பெறுவதற்காக சில மணி நேரம் ஒதுக்கப்பட்டு, அப்படி அறிவித்துவிட்டு, மனுக்களைப் பெறுகின்றபோது தப்பித்தால்போதும் என்கின்ற நிலைமைதான் இன்றைக்கு கண்கூடான நிலைமையாக இருக்கின்றது. அதற்குக் காரணம், மனுக்களைப் பெற்றுக்கொண்டு அப்படி விசாரிப்பதோடு சரி. அந்த விசாரணைக்குப் பின் , அந்தப் பிரச்னைகளுக்கு வேறு எந்தவிதமான தீர்வும் இல்லை.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். கலெக்டரிடம் இந்த மனுவைக் கொடுத்தால், அந்த மனுவில் கடன் கேட்டிருந்தால், கலெக்டர் வங்கியை அணுகுங்கள் என்றும், வேலை வேண்டுமென்று கேட்டால், வேலை வாய்ப்பு ஸ்தாபனத்தை அணுகுங்கள் என்றும் ஒரு நோட்டீஸ் அனுப்புகிறார். அந்த நோட்டீஸை வைத்துக்கொண்டு, அங்கும் இங்கும் அலைந்து, கடைசியில் ஏமாற்றத்தோடு திரும்பி வருகின்ற நிலைதான் இன்றைக்கு இருக்கிறது.

இதை மாற்றியமைப்பதற்கு, மக்கள் பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழுவை வைத்து, அவர்கள் அவற்றில் வருகின்ற பிரச்னைகளை ஆராய்ந்து, எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைக்கு ஏற்ற முறையில் உதவக்கூடிய முறையிலே இதை மாற்றியமைத்தால் நலமாக இருக்கும். எனவே, அந்த முறையிலே இந்த மனு நீதி திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மறு சர்வே பற்றி இதிலே பெரும்பாலும் நிலத்தின் எல்லை எது அல்லது முட்டுக்கல் எது என்று தெரியாத நிலையில் கிராமங்களிலே இருந்துள்ளது என்பதோடு பினாமி பெயரில் நிலம் மறைக்கப்பட்டும் வருகிறது. மேலும் பல பெரும் சிக்கலாக இன்றைக்கு இருக்கிறது. இந்தப் பிரச்னையை மாற்றுவதற்கு மறு சர்வே செய்ய ஏற்பாடு செய்வது நல்லது. இப்படி இந்தச் சிக்கல், பெரும்பாலும் மாநிலம் முழுவதும் உள்ளது என்பதோடு அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இந்த ரிசர்வ நிலங்கள்கூட இன்றைக்கு வசதிபடைத்த பெரிய நிலச் சொந்தககாரர்களிடம், அவர்களின் ஆதிபத்தியத்தில் இருக்கின்றது என்ற நிலைதான் உள்ளது. ஆகவே, இந்த விவரங்களை எல்லாம் அறியும் பொருட்டு மறு சர்வே செய்து இந்தச் சிக்கலைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட அபிவிருத்தி மன்றம். இந்த மாவட்ட அபிவிருத்தி மன்றம் பெயரளவிற்குத்தான் இருக்கிறது. இதிலே நான் ஒன்றைக் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன. இந்த மாவட்ட அபிவிருத்தி மன்றம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்டு நடைபெறுகின்றது. அதில் இருக்கக்கூடிய முடிவுகள் மாவட்டத்திலே உள்ள பல்வேறு பிரச்னைகள் நேரடி அனுபவத்தில் இருந்து எடுக்கப்படுவதால் என்றும் நடைமுறைப்படுத்த முடியாத நிலைதான் இருக்கிறது. எனவே, குழு எடுக்கும் முடிவை சட்ட பூர்வமானதாக்க வேண்டும்.

அடுத்து, மாவட்டத்தைப் பொறுத்தவரை நிர்வாகத்தினுடைய சிக்கலைப் போக்குகின்ற வகையிலே, பொதுமக்கள் பாதிப்புகளை நீக்குகின்ற வகையிலே சில மாவட்டங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. குறிப்பாக, மதுரையிலுள்ள திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட மாவட்டம் ஒன்றும், அதேபோல் திருவண்ணாமலையைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளா எழுப்பப்பட்டு இருக்கின்றன. இதுபோன்ற நிர்வாகத்தினுடைய நடைமுறைக்கு அனுகூலமாக இருக்கின்ற மாவட்டங்களை உடனடியாகப் பிரிப்பதற்கு முன் வர வேண்டும். அதேபோல், இன்றைக்கு தாலூக்காக்களிலே பல ரெவின்யூ பிர்க்காக்கள் நீண்ட தூரத்திற்கு உள்ளன. அவ்வளவிற்கும் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போடப்பட்டு, அவர் ஒரு கடைசி பகுதியிலே இருப்பதால், ஒரு ஆண்டு காலமானாலும் மக்களுக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டா யார் என்று தெரியாத நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, ரெவின்யூ பிர்க்காக்களை அதிகப்படுத்தி அதிகப்படியான ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் போட்டு, மக்களுடைய குறைகளை எல்லாம் உடனடியாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்ற வகையிலே, இந்த அமைப்பை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அவுசிங் போர்டைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) இதைப்பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். சேலம் மாவட்டத்திலே அழகாபுரம், ரெட்டியூர் போன்ற இடங்களில் அவுசிங் போர்டு கூட்டுறவு நெசவாளர் காலனிக்காக நில ஆர்ஜித நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கிறோம் என்று சொல்லியும் இந்த இடத்தைத்தான் எடுக்கவேண்டுமென்று ஆலோசனை செய்து அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு' வழங்கப்படக்கூடிய பணம் கூட 7,000 ரூபாய் என்ற அளவில்தான் இருக்கிறது. அதே நேரத்தில் தனியார் ஒருவர் பிளாட் போட்டு விற்கப்படுவது ஏக்கர் ரூ. 45 ஆயிரம் ஆகிறது. இதைப் பரிசீலிக்க வேண்டும்.

(மணி அடிக்கப்பட்டு திரு. கே. பி. நாச்சிமுத்து பேச அழைக்கப்பட்டார்).

<u>திரு. கே. பி. நாச்சிமுத்து :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது நிதியமைச்சர் அவர்கள் முன்பு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். இப்போது மாவட்ட ரீதியில் வருவாய்த் துறை மானியத்தை அளித்திருக்கிறார்கள். இதன் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் டி.டி.சி. மீட்டிங்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த மூன்று நான்கு மாதங்களாக அதை விட்டு விட்டார்கள். மாவட்ட ரீதியில் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் எல்லாம் நல்ல முறையிலே அவர்கள் கீழ் உள்ள அதிகாரிகளை எல்லாம் கண்காணித்தால்தான் நாம் பொதுமக்களுக்கு நல்ல முறையில் நன்மை செய்ய முடியும்.

எனது தொகுதியான மேட்டூரில் ஏழைகளுக்கு நிலம் கொடுப்பதற்காக லே அவுட் செய்யப்பட்டது. இப்போது ரெவின்யூ அதிகாரி அவர்கள் அதை நிறுத்தி விட்டார்கள். அந்த லே அவுட் செய்யப்பட்டு வீடு இல்லாத ஏழைகளுக்கு வீட்டு மனை கொடுக்கும்படி நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நேரத்தில் ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் விவசாயிகள் இருக்கிறார்கள். மேட்டூரில்தான் மின்சாரம் உற்பத்தியாகிறது என்றாலும், விவசாயிகளுக்குச் சரிவரக் கிடைப்பதில்லை. அதிகாரிகளிடம் கேட்டால் ஏதோ 800 அடி தேவை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, அரசு கவனம் செலுத்தி அந்தப் பகுதி விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஏணைமதி என்ற ஏரித் திட்டத்தையும், கல்முடிவு என்ற ஏரித் திட்டத்தையும் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அவற்றை முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கூம்புரான், ரெட்டியார் கிராமம் கரூப்பு ரெட்டியார் கிராமம் ஆகிய பகுதிகளில் தண்ணீர் இல்லாமல் பொது மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் கெம்ப்ளாஸ்ட் நிறுவனத்தினர் கழிவு நீரை விடுவதன் காரணமாக, ரசாயனம் கலந்த நீரை விடுவதன் காரணமாக நிலத்தடி நீர் கெட்டுவிட்டது. ஆழக் குழாய் கிணறுகள் போட்டும் நல்ல தண்ணீர் இல்லாமல் பொதுமக்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். சேலத்திற்கு செல்லும் மெயின் லைன் பைப்பிலிருந்து தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ரீதியில் வருவாய்த் துறையில் பல்வேறு குறைகள் இருக்கின்றன. எனது மேட்டூர் நகரத்தில் 15 ரூபாய் 20 ரூபாய் வரி செலுத்தியவர்களுக்கு இப்போது 500 ரூபாய் 600 ரூபாய் என்று வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அங்கிருப்பவர்கள் சிறு சிறு கடைகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள். ஆகவே அந்த வரியைக் குறைத்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்தான் மேட்டூர் நகரியத்திற்கு சேர்மனாக இருக்கிறார்கள். அவர்களிடத்தில் நேரடியாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்த வரியைக் குறைத்துக் கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11–30]

தேயிலைமீது போடப்பட்டிருக்கிற விவசாய வருமான வரியினால் சிறிய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பழைய முறையிலேயே கூடுதலாக ஒரு ஏக்கருக்கு எவ்வளவு என்ற முறையிலே வரியைச் சேர்ப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பல திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்பு என்னுடைய தொகுதிக்கு வந்தார்கள். அந்த நேரத்திலே எனது சொந்த ஊரான குளத்தூருக்கும் வந்திருந்தார்கள். அங்கே 30 ஆண்டுகளாக தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்காத நிலைமை. மேட்டூர் அணைக்கும் என் ஊர்போன்ற அந்த கிராமங்களுக்கும் 7 மைல் தான் இருக்கிறது. அப்படி இருந்தும்கூட குடிநீர் கொடுப்பதற்கு எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படாமல் இருந்தது.

ஆனால் நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே. எஸ். இ. யிடம் அதே இடத்திலே சொல்லி குறைகளை எல்லாம் தீர்த்துக்கொடுங்கள் என்று ஆர்டர் போட்டார். அதன் காரணமாக அந்தத் தொகுதியிலே உள்ள மக்கள் எல்லாம் மகிழ்ச்சியடைகின்ற வகையிலே அவர்கள் நடந்தே வந்து அந்தப் பகுதிகளைப் பார்த்து மக்களுக்கு உற்சாகத்தை ஊட்டினார்கள், அதற்காக நான் என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலே அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவுக்கு அமைச்சர்கள் ஊர்ஊருக்கு வந்து அந்தப் பகுதிகளை எல்லாம் பார்த்தால் ஆங்காங்கே உள்ள குறைகளைத் தீர்க்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே அதிகமாக விவசாயிகள் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே வறட்சியான நிலைமை தான் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் மேட்டூர் அணை இருந்தாலும்கூட அந்தப் பகுதிக்கு தண்ணீர் கிடைப்பதில்லை. திருச்சி, தஞ்சை மாவட்டங்களுக்குத்தான் அந்தத் தண்ணீர் பயன்படுகின்ற நிலைமை இருக்கிறது. காரணம், என் தொகுதியில் எந்தக் கால்வாயும் வெட்டப்படவில்லை, ஆகவே என்னுடைய தொகுதியிலே வறட்சிப் பகுதி என்ற முறையிலே வறட்சி நிவாரண நிதியிலிருந்து தொகை ஒதுக்கி சிறு சிறு கால்வாய்களை வெட்டிக் கொடுக்கவேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்னும் எனது தொகுதியிலே இருக்கின்ற இதுமாதிரியான குறைகளை நம்முடைய அரசு தீர்த்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கூந்தகுடி ச. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சார்பாக மதிப்பிற்குரிய சபையின் முன்னவர் நிதியமைச்சர் அவர்கள் ஏற்கனவே ஒரு அறிக்கையை புத்தக வடிவமாக இங்கே வைத்திருக்கிறார். அதிலே இப்போது விவாதிக்கப்பட இருக்கிற மானியக் கோரிக்கைகள் இரண்டில் ஒன்று நில வருவாய், இரண்டு மாவட்ட நிர்வாகம், அறிக்கைகளிலே கொடுக்கப்பட்டு இருக்கிற கருத்துக்களைப் பற்றி விவாதிப்பதற்கு முன்பு நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

வருவாய்த் துறை மானியமும், மாவட்ட நிர்வாக மானியமும் இங்கே இரண்டு அமைச்சர்களால் முன்மொழியப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதை முதலில் சொல்வதற்குக் காரணம் மாவட்ட நிர்வாக மானியத்தை முதலமைச்சர் அவர்களும், நிலவரி மானியத்தை சபையின் முன்னவர் அவர்களும் மொழிய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். நான் ஒரு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு துறையில்

இருக்கக்கூடிய ஒரு தொடர்புள்ள இலாகா ஒரு குறிப்பிட்ட அமைச்சரிடத்திலே இருப்பதுதான் நல்லது. நிச்சயமாக இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் நிதியமைச்சர் அவர்களே இங்கே சேர்ந்து கொண்டு வந்திருப்பது அதற்காக ஆரம்பம் என்று நான் எடுத்துக்கொண்டு மேற்கொண்டு அதைப்பற்றி விமரிசனம் செய்யாமல் அது நல்லது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலவரி என்று எடுத்துக்கொண்டால் அரசியல் கட்சிகள் தேர்தல் நேரத்திலே பொதுக்கூட்டங்களிலே மக்களிடத்திலே வாளாவப் பேசுவது இயற்கை. 5 ஏக்கருக்கும் அதற்குக் கீழே இருக்கும் நிலத்திற்கு வரியை ரத்து செய்வோம் என்று கூறியிருக்கிறோம். ஆகவே, முதலிலே நான் சொல்வது 5 ஏக்கருக்கும், அதற்குக் கீழே இருக்கும் நிலத்திற்கும் நிலவரியை நஞ்சை விவசாயிகளுக்கு ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே இருந்த புஞ்சை நில வரியை தி. மு. க. அரசாங்கம் ரத்து செய்தது உங்களுக்கு நினைவு இருக்கலாம். அந்த முறையிலே கூடாதென்று கருதுகிறேன். புஞ்சைக்குப் பத்து அணாவிலிருந்து ஒன்றரை ரூபாய் வரையில் ஒரு ஏக்கருக்கு நிலவரி என்று இருந்தது. அதை ரத்து செய்துவிட்டு சர் சார்ஜ் செஸ் என்று போட்டதுபோல் இல்லாமல் இன்றைக்கு இதை ரத்து செய்யும் பொழுது கீழே உள்ள விவசாயிகள் பலன் அடையும் வகையில் ரத்து செய்ய வேண்டுமென்று முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரி சம்பந்தமாக நடக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறியாக வேண்டும். அண்மையிலே வசூல் முறையிலே கையாளப்படக்கூடிய நிர்ப்பந்தங்களும், கெடுபிடிகளும் கிராம விவசாயிகள் மத்தியிலே இந்த அரசாங்கத்தின்மீது ஒரு அதிருப்தியை ஏற்படுத்துகின்ற விதத்தில் இருக்கிறது. ஏனென்றால் இந்த ஆட்சியைத் தேர்ந்தெடுத்தவர்கள் கிராமப்புரத்திலுள்ள பெருவாரியான மக்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இப்பொழுது நடக்கின்ற கெடுபிடி வசூலைப்பற்றி நான் சொல்கின்றபொழுது நிச்சயமாக,

"வேலொடு நின்றான் இடுவென்றது போலுங்
கோலொடு நின்றான் இரவு"

என்று ஏற்கனவே பலமுறை பேசிப் பழக்கப்பட்ட அல்லது இங்கே அமர்ந்திருக்கின்ற பல்வேறு அமைச்சர்கள் எடுத்துக் காட்டிய நல்லெண்ணம் படைத்த அமைச்சர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இம்மாதிரி வரி வசூல் செய்கின்ற முறை அரசாங்கக் கொள்கையா என்று தெரிந்து கொள்ள

வேண்டும். ஏனென்றால் மாவட்ட ஆட்சித் தலைவரோடு பேசும் போது இந்த ஆண்டு விளைந்த நிலங்களில்தான் வசூல் செய்கிறோமே தவிர பழைய பாக்கிகளை வசூல் செய்யவில்லை என்று கூறுகிறார். ஆனால் கீழே உள்ளவர்கள் போலீசோடு ஜீப்பிலே சென்று பழைய பாக்கிகளையும் கேட்கிறார்கள், பாக்கிகளைத் தரா விட்டால் ஜப்தி செய்யப்படுகிறது. எங்கள் மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொண்டாலும் இரண்டு உதாரணங்களை நான் சொல்ல முடியும். முதலாவதாக, வெள்ளகுடி என்ற இடத்தில்–அது திருவாடானை தாலுக்காவில் இருக்கிறது. அங்கே ஏற்கனவே பெரிய தவறு செய்த அதிகாரி என்று எண்ணி மணியார்டர் மூலம் பணத்தை அனுப்பி இருக்கிறார்கள். அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளாமல், அந்த விவசாயி மீறி அறுத்துக் கொண்டு போனதாகச் சொல்லி கைது செய்யப்பட்டிருக்கிறார். இப்படி மணியார்டர் மூலம் அனுப்பிய பணத்தையும் திருப்பி அனுப்பிவிட்டு தவறான முறையிலே நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளைப் பற்றி ரிப்போர்ட் செய்யப்பட்டும் மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது சம்பந்தப்பட்டவர்களோ நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்க வேண்டுமென்ற நிலை வருகிறது. அப்படி அரசாங்கத்தின் கொள்கை அல்ல என்றால், இப்படிப்பட்ட தவறான முறைகளைக் கையாளுவது அதிகாரிகள்தான் என்றால் அவர்கள்மீது ஆட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிச் சொல்லும் போது இது ஒன்றிரண்டு இடத்தில் மட்டும் நடப்பது அல்ல, பரவலாக நடக்கின்ற நிகழ்ச்சி, அதை ஏராளமாகச் சுட்டிக் காட்ட முடியும்.

மற்றொரு உதாரணத்யைும்த சொல்லமுடியும். உங்களுக்குத் தெரியும், கடும் புயலினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில். ஆறு அணாவிற்குக் கீழ்ப்பட்ட மட்டங்களில், வசூல் செய்யக் கூடாது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் பரவலாக புஞ்சைப் பயிர் பாதிக்கப் பட்டிருக்கிற இடங்களில் வரிக் குறைப்பு இல்லை என்று சொல்லி சர்சார்ஜையும், லோகல் செஸ் சார்ஜையும் நிர்ப்பந்தமாக வசூலிக்கின்ற நிலைமை எங்கள் மாவட்டத்தில் நடக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளைக் கட்டாயமாக தடுத்து நிறுத்த அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தமாதிரி நில வரி வசூல் செய்யும் முறையிலே இந்த ஆண்டில் விளைந்தவற்றிற்கு வரி கேட்பதில் ஆட்சேபணையில்லை. வரி சம்பந்தமான ஒரு கொள்கையில் விளைந்த இடத்திலே வசூல் செய்வதில் ஒத்துழைக்கத் தயார், அதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் ஐந்தாண்டுக் காலமாக கடுமையான வறட்சிக்குப் பிறகு பழைய பாக்கிகளை நிர்ப்பந்தப்படுத்தி வசூல் செய்வது யார்? அரசாங்கம் என்றால் அதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அதிகாரிகள் அவ்வாறு செய்கிறார்கள் என்றால் அதைப் பற்றித் தெளிவாக்க வேண்டும்.

நிலவரி சம்பந்தமாக ஜமாபந்தி முறை கூடாது என்ற ஒரு கருத்து இருக்கிறது. ஏனென்றால் இந்தக் கருத்தைச் சொல்லும் பொழுது, ஆண்டு தோறும் கிராம அதிகாரிகள், மற்ற அதிகாரிகள் வரை வசூலிக்கும் ஏற்பாடாக இருக்கிறது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஜமாபந்தி என்று சொல்லி எல்லா இடங்களிலும் 500 ரூபாய், 1,000 ரூபாய் என்ற அளவிற்கு கிராமம் கிராமமாக வசூல் செய்து, ஒட்டுமொத்தமாக குத்தகை நடப்பது போலவே இருக்கிறது. இந்த முறை நிறுத்தப்பட வேண்டும். கணக்கு எழுதுவதற்காக நடக்கிறது என்ற முறையில் ஆண்டு தோறும் தொடர்ந்து வசூல் செய்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் 500 ரூபாய், 1,000 ரூபாய் என்று வசூல் செய்து பிரித்துக் கொள்ளும் போக்கு இருக்கிறது. கிராம அதிகாரிகளிலிருந்து மற்ற அதிகாரிகள் வரை, இப்படி இருக்கிறது, யார் யார் என்று நான் சொல்லவில்லை. எனவே, இந்த முறை நிறுத்தப்பட வேண்டும். நிச்சயமாக கிராமப்புற மக்களின் மிகப் பெரிய செல்வாக்கோடு இந்த ஆட்சி வந்திருக்கிறது, ஆகவே இந்த அரசு நல்ல முறையில் செய்யும் என்று அந்த மக்கள் நம்புகிறார்கள். இதைப் பரிசீலனை செய்து அந்தத் தடங்கலை அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலவரி சம்பந்தமாக இங்கே பல்வேறு விஷயங்களை நான் இன்னும் வைத்திருக்கிறேன். அதையெல்லாம் பற்றிப் பேசினால் இருபது நிமிஷங்கள் போதாது. எனவே, அவற்றை அமைச்சரவர்களிடத்தில் தனியாகக் கொடுத்து விடுகிறேன்.

நிலவரி சம்பந்தமான பல்வேறு விவகாரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் இதைச் சொல்லும்பொழுது கிராம அதிகாரிகளை பகுதி நேர ஊழியர்கள் என்ற பெயரால் வைத்திருக்கிறோம் என்றால் அவர்கள் இலஞ்சம் வாங்கிக் கொள்ள அனுமதிக்கிறோம் என்று அர்த்தம்.

[முற்பகல் 11–40]

பகுதிநேர ஊழியர்கள் என்றால், அவர்களுக்கு சம்பளம் குறைவு; அவன் சாதாரண குடும்பத்திலே இருப்பான். அப்படிப்பட்ட சாதாரண குடும்பத்திலே இருப்பவன், பகுதி நேர ஊதியம் வாங்கினால்–தமாஷாகச் சொல்வார்கள், நான் சிறையிலே இருக்கும்போது, வார்டர்கள் சம்பளம் வேண்டும் என்று கேட்டபொழுது, பழைய அமைச்சர் ஒருவர் சொன்னார்—நான் பெயரை சொல்லக்கூடாது—ஐயா, நீங்கள்தான் எனக்கு சிகரெட்டு வாங்கி வந்தால் காசு வாங்குகிறாய், வெளியிலிருந்து சாமான்கள் வாங்கினால் காசு கேட்கிறாய். ஆகவே சம்பளம் வாங்க வேண்டாம் என்று சொன்னார். அதுபோல் இருக்கிறது இதுவும். அதுபோல் பகுதி நேர ஊழியன் வேறு வழியில் சம்பாதித்துக் கொள்வான் என்பதுபோல் இருக்கிறது. இலஞ்ச ஊழலைத் தவிர்க்கவேண்டுமானால், அவர்களை முழு நேர ஊழியர்களாக்கி, அவர்களுக்கு

குறைந்தபட்ச சம்பளம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க வேண்டும் என்ற அந்தப் பிரச்சினைக்குள் நான் நுழைய விரும்பவில்லை. ஆனால் குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால், கிராம அதிகாரிகள் கணக்கு மாற்றுவதானாலும் சரி, பெயர் மாற்றுவதானாலும் சரி, அல்லது வசூல் செய்கின்ற பணத்தையே கையாடல் செய்யாத முறையில் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், திருப்பத்தூரில் சிதம்பரம் என்ற கிளார்க், கோர்ட்டில் தண்டனை வாங்கியிருக்கிறார். இருக்கிற காசு பூராவும். இலட்சக்கணக்கான ரூபாயை ஜோபியிலே போட்டுக் கொண்டார்—எல்லாம் முடிந்துவிட்டது. யாரிடம் வசூல் செய்வது இப்பொழுது? ஆகவே இலஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்றால், கீழே இருந்து வசூலிக்கப்படுகின்ற பணம் முறையாக அரசாங்கத்திற்கு வருகின்ற வகையில் கீழ்மட்டத்திலேயே ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சி நிர்வாகம் பற்றிச் சொல்லும்போது என்னுடைய சொந்தக் கருத்தல்ல, என்னுடைய கட்சியின் கருத்தாகச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, மாவட்ட ஆட்சி நிர்வாகம் சுறுசுறுப்பாக இல்லை, வேலைகளிலே தயக்கம் அல்ல, சுணக்கமாக இருக்கிறது. மாவட்ட நிர்வாகம்தான் அரசாங்கத்தின் பிரதானமான அங்கம். அந்த மாவட்ட ஆட்சியில் காரியங்கள் நடைபெறவில்லை. எல்லாக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் போய்ச் சொன்னாலும் அங்கு வேலைகள் நடைபெறுவதில்லை. முறையான சிபாரிசாக இருந்தாலும் கூட, அவர்கள் கேட்டுக்கொள்வதில்லை. எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. மாவட்ட ஆட்சியிலே உள்ளவர்கள், இந்த ஆட்சி வந்த பிறகு, வேலை தாமதமாக நடக்கிறது; சுணக்கமாக நடக்கிறது, ஆகவே, அரசுக்குத் தகுதியில்லையென்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறார்களோ, என்னவோ, எனக்குத் தெரியாது - நீங்கள்தான் பரிசீலிக்க வேண்டும். அப்படி, அரசாங்கத்தில் பிரதானமாக இருக்கிற மாவட்ட ஆட்சி நிர்வாகத்திலே உள்ளவர்கள் எப்படிக் காரியங்களைச் செய்யவேண்டுமோ, மிக விரைவாகச் செய்யவேண்டுமோ, துரிதமாகக் காரியங்களைச் செய்யவேண்டுமோ அந்த அளவு துரிதமாக, வேகமாகச் செய்யக்கூடிய அப்படிப்பட்ட ஆட்களை நியமனம் செய்வது இந்த ஆட்சிக்கு நல்ல பெயர் ஏற்படுத்தும் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு உதாரணங்களை நான் சொல்ல முடியும். ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், இரண்டு வருஷத்திற்கு முன்பு எட்டயாபுரத்திலே ஜமீன் நிலத்தை பட்டா கொடுத்தாகிவிட்டது. ஆனால், இதுவரையில் எந்த நிலம் என்று விவசாயிக்குத் தெரியாது. ஏனென்றால், சர்வே பண்ணி கொடுக்கவில்லை. விவசாயி, பட்டா வாங்கி வைத்திருக்கிறானே தவிர, அவனுக்கு நிலம் எங்கே இருக்கிறது என்று தெரியாது.

நாங்கள் தமாஷாகச் சொல்வது - திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, திருப்பத்தூர் தாலூகாவிலே, மழை பெய்தால் தெரியும் மாதவன் கொடுத்த பட்டா என்று. ஏனென்றால், மழை வந்தால், எல்லாம் ஒரே நிலமாகக் காட்சியளிக்கும். நாங்கள் தமாஷாகச் சொல்வோம், மழை வந்தால் தெரியும் மாதவன் கொடுத்த பட்டா என்று. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில், கொடுக்கப்பட்ட பட்டாக்களுக்கான நிலங்களை விரைவில் சர்வே செய்து சீக்கிரமாக மாவட்ட நிர்வாகம் அறிவிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ஜனநாயக மரபுகள் என்று சொல்லும்போது, சில அதிகாரிகள் அவற்றைத் தவிர்க்கிறார்கள். வளர்ச்சி மன்றக் கூட்டங்களைக் கூட்டுவதையே தவிர்க்கிறார்கள் பல மாவட்ட ஆட்சித் தலைவர்கள். ஏனென்றால் அக்கூட்டத்தில், கூட்டு ஆலோசனை வந்தால் தங்களுக்கு ஆபத்து என்ற மனப்போக்கு பல பெரிய அதிகாரிகளிடம் இருக்கிறது. ஆகவே, கடுமையாக உத்தரவு போடவேண்டும். குடி ஒன்றும் முழுகிவிடாது. மாதம் ஒருமுறை வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கட்டாயமாகக் கூட்டவேண்டுமென்று உத்தரவு போடவேண்டும். அங்கு கொண்டு வரப்படுகின்ற காரியங்களைப் பைசல் செய்கின்ற முறையிலே, காரியம் நடக்கவேண்டும். அப்படியில்லையென்றால் யாரையோ, எங்கோ, நீக்கியது மாதிரித்தானிருக்கும்.

ஒரு உதாரணம் சொல்கிறேன், உள்ளாட்சித் துறை அமைச்சர் இரண்டு அறிவிப்புகளைச் சொன்னார். ஊராட்சிகளில், கீழே ஒரு அறை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் என்று. அத்தோடு, இரண்டு நாள் ஜீப் அளிக்கப்படும என்றும் சொன்னார்கள். அறை ஒதுக்கப்பட்டிருப்பது இருக்கட்டும். ஜீப் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், அங்கே ஜீப் கொடுக்கப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர் பின்னாலே போனாலே தனக்கு ஆபத்து என்று கருதுகிற பி.டி.ஓ.க்கள் இருக்கிறார்கள். கேட்டால், உத்தரவு வரவில்லையென்று கூறுகிறார்கள். அந்த அளவு ஜனநாயக மரபுகள் மீறப்படுகின்ற போக்கு இருக்கிறது. (குறுக்கீடு) எல்லா கட்சி உறுப்பினர்களுக்கும் சொல்கிறேன், [illegible] [illegible]ார்த்திருக்கலாம். இன்று வந்திருக்கக்கூடிய ஆட்சி, எந்த [illegible]ப்பிரிட்டிலே ஆட்சிக்கு வந்திருக்கிறதோ, அந்த அளவில், வேக[illegible]ாக ஒழுங்குபடுத்தாவிட்டால், துரிதப்படுத்தாவிட்டால், [illegible]ச்சயமாக இந்த ஆட்சிக்கு நல்ல பெயர் இருக்காது என்று [illegible] எச்சரிப்பது என்னுடைய கடமையாக இருக்கிறது. ஆகவே [illegible] மாவட்ட ஆட்சி சம்பந்தமாக பல்வேறு விஷயங்களை [illegible] எடுத்துக் கூற விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொன்னால் இதுமாதிரி மாவட்ட அமைப்பு நிர்வாகம்சம்பந்தப்பட்ட வரையில், நீங்கள் எடுத்துக் கொண்டால், பல்வேறு நேரங்களில் மாவட்ட ஆட்சி தலையீட்டுக் குட்பட்டுத்தான் இருக்கிறது. வருவாய்த் துறை மட்டும் இல்லை, எல்லாத் துறைகளும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம்தான் இருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலைகளும் விசேஷமாக முடுக்கிவிடப்பட்டு வந்திருக்கின்றன.

பல்வேறு உறுப்பினர்களுடைய அபிப்பிராயம் ரெவின்யூ போர்டுதான் முட்டுக்கட்டை போடுகின்ற துறை என்று சந்தேகம். ரெவின்யூ போர்டுதான் முட்டுக்கட்டைப் போடுகிறதோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி ஆராயவேண்டியது அரசாங்கம்தான். இதை ஒழுங்குபடுத்துவதற்காக இந்தத் துறை பற்றிய பரிசீலனை தேவை.

ஒரு சந்தேகம். உங்களுக்குத் தெரியும். இந்த ரெவின்யூ போர்டு உறுப்பினரை மாற்றுவதற்கு இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லையா?. இந்த ஆட்சிக்கு இல்லையா?.

அவரை கீழே இறக்கவோ மாற்றவோ அதிகாரம் இல்லாத சூழ்நிலையில் சில நேரங்களிலே முட்டுக்கட்டை வருகிறதோ என்கிற அச்சம் இந்த அரசுக்கு வந்துவிடுகிறதோ என்று இருப்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆட்சி சம்பந்தப்பட்ட மட்டிலே கொள்கை அறிவிக்கும் போது நிர்வாகத்தை தூய்மைப்படுத்தினால் மட்டும் போதாது. தூய்மை என்ற பேரில் காரியங்கள் நடக்காத நிலைமை வரக்கூடாது. ஒரு காரியம் நடப்பதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். ஊழலைத் தடுக்கிறபோது காரியம் நடக்காமல் நிற்குமானால், நடைபெறாமல் போகுமானால், நிச்சயமாக ஊழல் நடந்தாலும் பரவாயில்லை, காரியம் நடக்கும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். அது சரியில்லை என்றாலும் கூட அப்படி ஒரு எண்ணத்தை ஏற்படுத்துகிறது. உதாரணம் சொல்லவேண்டுமானால் 5 ரூபாய் கொடுத்தால் ஒரு சான்றிதழ் கிடைக்கும் என்பதை விட்டுவிட்டு எம்.எல்.ஏ.விடம் யார் 10 நாட்கள் அலைவார்கள். எம்.எல்.ஏ. விடம் போவதைவிட காசு கொடுத்தால் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு வருகிறது. தூய்மை என்ற பெயரால் வேலைகள் நடக்காது என்ற நிலைமை இருக்கிறது.

மற்ற விவரங்களுக்குள் போகவில்லை. ஆனால் வருவாய்த் துறையிலே 1, 11 மானியக் கோரிக்கைகளிலே மட்டும்தான் பேச வேண்டும் என்ற காரணத்தால் போகவில்லை. இல்லாவிட்டால் நில வெளியேற்றம் பற்றிப் பேசலாம். புயல் நிவாரணப் பணிகளைப் பற்றி சொல்லி இருக்கலாம். (குறுக்கீடு) குடியிருப்புகளில் இருந்து

[திரு. கூத்தகுடி. ச. சண்முகம்] [1978 மார்ச் 21

வெளியேற்றுவது கூட உதாரணமாக பட்டா வழங்குவது என்று சொன்னால் ஒரு வரையறை வேண்டும். எவ்வளவு காலத்திற்குக் குடியிருக்க மனை இல்லாதவருக்கு பட்டா கொடுக்கப்போகிறோம்? சட்டம் இருக்கிறது. 20, 25 வருடம் இருப்பவனுக்கு அந்த மனையை பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் அதை அமல்படுத்த இயலாத சூழ்நிலை இருக்கிறது.

பட்டுக்கோட்டையில் கோபாலசமுத்திரத்திலே புறம் போக்கிலே இருந்த அழகான ஒரு வீட்டை இடித்துவிட்டார்கள். படம் கூட இருக்கிறது. அப்படியானால் 20 வருஷம் குடியிருப்பவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இப்படி பல இடங்களைச் சொல்லமுடியும். எத்தனை ஆண்டு களில் குடியிருப்பவர்களுக்கு மனைப்பட்டா கொடுக்கப்போகிறீர் கள்? மூன்று ஆண்டுகளா? எந்த வகையிலே கொடுக்கப் போகிறீர்கள்.? இவை பற்றி திட்டம் இடவேண்டும். அப்படி இல்லாமல், 20, 25 வருடம் குடியிருந்த ஒருவன் வீடு இடிக்கப் படுமானால் இந்த அரசாங்கத்தைப் பற்றி என்ன எண்ணம் ஏற்படும். பரவலாக இம்மாதிரி நடைபெறுகிறது. இதைப் போக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

ஒன்றை மாத்திரம் நினைவுபடுத்தி முடிக்கிறேன். பஞ்சா யத்துத் தேர்தல் வரயிருக்கிறது. அப்படி ஒரு காலகட்டம் வரவிருக்கிறது. கிராமப்புற மக்கள்தான் உங்களை ஆட்சியிலே அமர்த்தினார்கள். ஆனால் உங்கள் ஆட்சியின் மீது கிராமப்புற மக்களின் அதிருப்தி வந்துகொண்டிருக்கிறது. இந்நிலை தொடர்ந்தால் நாட்டுக்கு நல்லதல்ல என்பதை கவனத்திலே கொண்டு காரியங்களை ஆற்றுமாறு கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11-50]

*திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் துணைத் தலைவரவர் களே, நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம், ஆகிய துறைகள் பற்றிய மானியக் கோரிக்கைமீது ஒருசில கருத்துக்களைக் கூறிக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் நெருக்கடி நிலை அமலில் இருந்தபோது அன்றைய ஆளுநர் ஆட்சி விவசாயிகள்மீது தாங்கொணு வரியை, குறிப்பாக நில வரியைச் சுமத்தியது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஆளுநர் ஆட்சிக்கு முன்னால் ஒரு ஏக்கருக்கு சுமார் ரூ. 7, ரூ. 8 கட்டிக் கொண்டு இருந்தால், இன்று சுமார் ரூ. 120 வரியாக அவர்கள் கட்டவேண்டிய நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

1978 மார்ச் 21] [திரு. பொ. விஜயராகவன்]

அதிலும் குறிப்பாக, கல்குளம், விளவங்கோடு தாலுகாக் களில் ஹெக்டேர் ஒன்றுக்கு தீர்வை ரூ. 37.98, லோகல் செஸ் 25 சதவீதம், ஸ்பெஷல் செஸ் ரூபாய்க்கு ரூ. 2.10 ஆக, அடிஷனல் சார்ஜ் என்கின்ற வகையில் 45 சதவீதம், 1981-ம் பசலிக்குப் பின்னால் அடிஷனல் வரி 45 சதவீதம் என்றும், ஸ்பெஷல் வரி ஹெக்டேருக்கு ரூ. 50 என்ற வகையிலும் வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. சுமார் 18, 20 மடங்கு அதிகம் ஆகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தண்ணீர்த் தீர்வையைப் பொறுத்தவரையில் நெல்லுக்கு ஹெக்டேருக்கு ரூ. 50, தென்னைக்கு ஹெக்டேருக்கு 37.50, வாழைக்கு ஹெக்டேருக்கு ரூ. 37.50 என்று வசூலிக்கப்படு கின்றன. இப்படி வசூலிக்கப்பட்ட பின்னரும் தென்னையைப் பொறுத்தவரையில் ஒன்றை உணர்ந்து தீரவேண்டும். அந்த தென்னம்பிள்ளைக்கும் ரூ. 37.50 வசூலிக்கிறார்கள். இது மிக அதிகம். இந்த இரண்டிற்கும் உள்ள விகிதாசாரத்தை எண்ணிப் பார்த்து, அதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாழைக்கு ரூ. 37.50 வசூலிக் கிறார்கள்.

வாழைபற்றிச்சொல்லும்போது, ஒரு பழமொழி சொல் வார்கள், வாழை மனிதனை வாழவும் வைக்கும், தாழவும் வைக்கும் என்று. அதை மனதில் வைத்து அந்த வாழைக்கும், தென்னம் பிள்ளைக்கும் இருக்கும் தீர்வையைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெய்யாறு இடதுகரைச் சானல், சிற்றாறு—பட்டணங்கால் பாசனத்திற்குட்பட்ட பகுதிகள் இருக்கின்ற நிலை மட்டுமல்லாமல், உண்மையிலேயே நீர் தரப்பட்டு பயிரிடாத நிலங்களுக்கும் கூட, மேற்கண்ட பாசனத்துக்குட்பட்ட தரிசு நிலங்களுக் குக் கூட தண்ணீர் தீர்வை வசூலித்திருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டாப் புத்தகத்தைப் பொறுத்தவரையில், தமிழகம் முழுவதும் பட்டாப் புத்தகம் புதுக்கோட்டை, கன்யாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் வழங்கும் பணி முடிவுற்றுள்ளது. ஆனால் வழங்கப் பெற்ற பட்டாப் புத்தகங்களில் பல தவறுகள் இருக்கின்றன. வாக்காளர்கள் பட்டியலில் எப்படி செத்தவர்கள் பெயர்கள் கூட இடம் பெற்று விடுகிறதோ அதைப் போல் காலமானவர்கள் பெயரும் அந்தப் பட்டாப் புத்தகங்களை விட்டு அகலாமல் இருக்கின்றன என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. கூட்டுப் பட்டாக்கள் வைத்திருப்போர் எண்ணிக்கையும், அதை அனுபவித்து வருவோர் எண்ணிக்கையும் பின்னிப் பிணைந்து இருக்கின்றன. இதனால் அரசுக்கும் தீராத

தொல்லை, உண்மை பட்டாதாரர்களுக்கும் மிகவும் தீராத தொல்லை. இதனால் ஆக்கிரமிப்பாளர்கள் புத்திசாலித்தனமாக கஷ்டப்படாமல் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலையைத் தவிர்க்க விரைவில் ரி-சர்வே செய்து ரீ-செட்டில் மெண்ட் செய்வது தான் முறையாக இருக்கும்' என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குமரி மாவட்டம் இதர மாவட்டங்களிலிருந்து மிகவும் மாறுபட்ட நில அமைப்பினைக் கொண்டது. நிலங்கள் 3, 5 செண்டுகளாக குறைந்த விஸ்தீரணங்களைக் கொண்டுள்ளது. இதில் அவ்வப்போது பெயர் மாற்றங்கள் உட்பிரிவுகள் போன்றவை நடைபெறாவிட்டால் பின்னால் அது குழப்பத்தை ஏற்படுத்துவதும், பாமரமக்கள் நீதிமன்றங்களில் காத்துக் கிடக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி விடுவதாக இருக்கிறது. இந்நிலையில் கூட்டுப் பட்டாவாக இருப்பதைப் பிரித்து பெயர் மாற்றிக் கொடுக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். ஆகவே இதனை நிவர்த்தி செய்ய ஏற்கனவே பிற மாவட்டங்களில் நடைபெற்று வந்த பட்டா மாற்றுத் திட்டத்தை இம்மாவட்டத்தில் செயல்படுத்தினால் இந்தச் சூழ்நிலையினை நிவர்த்தி செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்தில் சர்வே கற்கள் பெரும்பாலான இடங்களில் காணப்படவில்லை. கற்கள் அந்தந்த இடங்களில் நடப்பட வேண்டியது மிக முக்கியமான காரியமாகும். கற்கள் இல்லாமல் இருப்பது ஆக்கிரமிப்பை தூண்டிவிடுவதாகவும், விவகாரங்களை விளைவிக்க ஏதுவாகவும் இருக்கிறது. ஆகவே தேவையான இடங்களில் சர்வே கற்கள் நடப்படவேண்டும். பிற மாவட்டங்களில் இருப்பது போல், கூடுதல் பணியாளர்களை நியமித்தாவது இந்த வேலையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 4 நகரங்கள் இருக்கின்றன. பத்மநாபபுரம், நாகர்கோவில், குளச்சல், குழித்துறை ஆகிய 4 நகரங்களில் சர்வே செய்யப்பட்டு, ஆவணங்கள் சரிவர பராமரிக்கப்படாததால் இன்றைக்கு புகைப்பட நகல்கள் கேட்டால் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே நகர ஆவணங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதைப் பரிசீலனை செய்து, கேட்கின்ற ஆவண நகல்கள் கிடைப்பதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னால் 14 துணை ஆட்சியாளர்களை நியமித்து, 30-6-75-லிருந்து வந்த மனுக்களை பரிசீலித்தார்கள். அந்த மனுக்களில் பெரும்பாலானவற்றை அவர்கள் தள்ளுபடி செய்து விட்டார்கள். இவையெல்லாம் முடிந்த பிறகும் இன்றைக்கு சுமார் 5,000 மனுக்கள் பரிசீலனையில் உள்ளன என்று அதிகாரிகள்

சொல்கிறார்கள். இந்த மாவட்டத்தில் சர்வே செய்வதற்கும் செட்டில்மெண்ட் செய்வதற்கும் பிற மாவட்டங்களிலிருந்து வந்த அதிகாரிகள் என்பதாலோ என்னவோ அவர்கள் இந்த மனுக்கள் எல்லாம் முடிந்துவிட்டவை என்று தள்ளுபடி செய்திருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. [illegible] பரிசீலனையை முடித்துவிட்டால் தங்கள் மாவட்டத்திற்குப்போய் விடலாம் என்ற எண்ணத்தில் தள்ளுபடி செய்திருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழை எளிய மக்கள், விவசாயிகள் பயனடையும் வகையில் பட்டா மாற்றுவதற்கு தாலுக்கா அலுவலகத்தில் கூடுதல் சர்வேயர்களை நியமிக்க வேண்டும். அதுவும் பிற மாவட்டங்களிலிருந்து நியமிப்பதை விட அங்கே உள்ளவர்களைக் கொண்டே நியமித்தால் நலமாக இருக்கும். எப்படியாயினும் ஏழை எளிய விவசாயிகள், பாமர மக்கள் நன்மை பெறுகின்ற வகையில் சுலபமாக பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மை வருமான வரியைப் பொறுத்தவரை, அங்கே சிறிய விவசாயிகள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மலைத்தோட்ட விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் சரியாக கணக்கு வைத்துக் கொள்வது என்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு 'கம்பவுண்டிங்' முறையை நீக்கியது சரியல்ல, சிறிய விவசாயிகளுக்கும், மலைத்தோட்ட விவசாயிகளுக்கும் 'கம்பவுண்டிங்' முறையை மீண்டும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுமனை நில ஒப்படைப் போன்ற விவகாரங்களில் பல இடங்களில் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. சென்னை புளியந்தோப்பில் ஆதி ஆந்திரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் நேரத்தில் அந்தப் பேர்களுக்கும் வழங்காமல் செட்டிக்காரர்கள் என்ற அடிப்படையில் அங்கே பட்டா வழங்கப்பட்டதாக புகார் வந்திருக்கிறது. அந்த நிலைமை இல்லாமல் பொதுவாக எல்லோருக்கும் அந்த வீட்டு மனை நில ஒப்படை செய்ய வேண்டுமென்ற முறையில் பரிசீலனை செய்து, எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்னால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் பட்டாக்களை வழங்கினார்கள். அந்தப் பட்டாக்கள் நிலம் இல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் என்று எண்ணினோம். ஆனால் உண்மையில் அங்கு தவறு நடந்திருக்கிறது. பெட்ரோல் பங்க் வைத்திருப்பவர் கூட நிலப் பட்டா பெற்றிருக்கிறார். அதுமட்டுமல்ல. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அனுதாபி என்று சொல்லக்

கூடிய ஒருவர் குடும்பம் நிலம் வைத்திருந்தும், அவருக்கு நல்ல வசதி இருந்தும், அவருக்கு நிலப்பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை இதில்கூட அரசியல் சித்து விளையாட்டு நடந்திருக்குமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அதையெல்லாம் அரசு மறு பரிசீலனை செய்து, இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருந்தால் அவைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு அரசு நிலங்களில் குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் தொல்லைக்குள்ளாக்கப்படுகிறார்கள். குறிப்பாக 'பேரன்ட் வாரண்ட்ஸ்' காட்டு நிலங்களுக்குப் பக்கத்தில் இருக்கிற ரெவின்யூ நிலங்களை, அங்கே இருந்து காட்டை கழனியாக்கியிருக்கிற ஏழை எளிய விவசாயிகள் மிகுந்த தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். கரடு முரடாக இருந்த காட்டு நிலங்களைத் திருத்தி கழனியாக்கி சாகுபடிக்குக் கொண்டு வந்த விவசாயிகள் காட்டு இலாகாவினரால் இன்றைக்கு தொல்லைப்படுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு இந்த ரெவின்யூ டிபார்ட்மெண்ட், வருவாய்த்துறை நிர்வாகம் பாதுகாப்பு அளித்து, அவர்களுக்கு அந்த நிலங்களை பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. புறம்போக்கு நில குத்தகைதாரர்கள், அன்றைக்கு காடாக இருந்த நிலங்களை எல்லாம் இன்றைக்கு கழனியாக மாற்றி இருக்கிறார்கள். அவர்களுக்கு விதிக்கப்படுகின்ற வரி விதிப்பு மிகவும் அதிகமாக இருக்கிறது. அவர்கள் தாங்கமுடியாத அளவுக்கு வரி விதிப்பு இருக்கிறது. மரங்களுக்குக் கூட வரி விதிக்கப்பட்டிருக்கிறது. தென்னை மரத்திற்கு 4 ரூபாய், கமுகு மரத்திற்கு 2 ரூபாய் என்று வரி விதிக்கிறார்கள். வாழை மரம் கறிவேப்பிலை மரங்களுக்குக் கூட வரி விதித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நன்றாகப் பரிசீலித்து, அவர்களுடைய நிலைமைக்கேற்ப அவர்கள் வருவதற்கு முன்னால் அந்த நிலங்கள் எப்படி இருந்தனவோ அந்த அடிப்படையில் வரி விதிக்கப்பட்டால் போதும். அவர்கள் மிகுந்த சிரமப்பட்டு, பாடுபட்டு, காடுகளையெல்லாம் திருத்தி கழனியாக்கியிருக்கிறார்கள். ஆகவே இப்போது இருக்கின்ற நிலைமையைப் பார்க்காமல், அவர்கள் நிலமற்ற ஏழை விவசாயிகள் என்ற அடிப்படையில் அவர்கள் தொல்லைப்படாமல், அந்த வரிவிதிப்பை சீரமைத்து, அந்த நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பத்துகாணி, ஆறுகாணி போன்ற புறம்போக்கு இடங்களில் வெகு காலமாக இருந்து வரும் குத்தகை விவசாயிகளுக்கு அவற்றைப் பட்டா செய்து

கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே இன்னும் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் அந்தக் காட்டுப் பகுதியிலே இருக்கக்கூடிய எஸ்டேட் ஓனர்களுக்கு, பெரிய நிலப்பிரபுக்களுக்கு வெகு எளிதில் இந்த நிலப்பட்டா கிடைத்துவிடுகிறது. இவர்கள் பக்கத்திலே இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளின் நிலத்தை கபளீகரம் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலையில் அதிகாரிகளும் செயல்பட்டு வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே பலர் இதுபற்றிய விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்து, குமரி மாவட்டத்தில் கல்குளம் வட்டத்தில் கருணாவோடு கிராமத்தில் சிலர் பல வருடங்களாக வீடு கட்டிக்கொண்டு குடும்பத்தோடு வசித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களைச் இன்றைக்கு வெளியேற்றுகின்ற முயற்சிகூட நடந்து வருவதாக சொல்கிறார்கள். சொந்தமாக நிலம் இல்லாத அவர்களுக்கு அந்த நிலத்தை பட்டா செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் பரிவோடு பார்த்து அவர்களுக்கு அந்த நிலங்களை பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். வில்லேஜ் ஆபீஸர்கள் இன்றைக்கு கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில் அலுவலகத்தை நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு வேலைப் பளுவும் அதிகமாக இருக்கிறது. இந்த வில்லேஜ் ஆபீஸ்களைப் பிரித்து அதிகப்படுத்தவேண்டும். அங்கே கிராம முன்சீப், கர்ணம் போன்ற வேலைகளுக்கு, படித்து விட்டு வேலையில்லாமல் இருப்பவர்களை பெருவாரியான அளவில் அமர்த்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்ந்த நிலையில் இருக்கக்கூடிய நிலவரித்துறையை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் ஒருசில கருத்துக்களை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் மாதம் ஒருமுறை இருக்க வேண்டுமென்று இங்கே பல உறுப்பினர்கள் வற்புறுத்தினார்கள். உண்மையிலேயே அது பாராட்டவேண்டிய ஒரு செய்தி. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்றைக்கு தலைமைப் பொறுப்பிலே இருப்பதை விட மக்களின் பிரதிநிதிகள் தலைமை வகிக்கின்ற நிலையை ஏற்படுத்துவதற்கு வழிவகைகளை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிப்பதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. நிர்வாக வசதிக்கேற்ப மாவட்டங்களைப் பிரித்து நிர்வாகம் நல்லமுறையில் நடந்தால் அது இந்த நாட்டு மக்களுக்கு நல்லது என்பதை நாங்கள் உணர்ந்து அந்த வகையில் பெரிய மாவட்டங்கள் பிரிக்கப்படுவதை வரவேற்கிறோம். அப்படிப் பிரிக்கின்ற நேரத்தில் ஒன்றை இங்கே சுட்டிக்காட்டி கோரிக்கையாக இந்த அரசுக்கு வைக்க விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்ற கோரிக்கை பல வருடங்களாக இந்த அரசுக்கும் இதற்கு முந்தைய அரசுகளுக்கும் வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றைப் பரிசீலித்து இரண்டாகப் பிரிக்கின்ற நேரத்தில், ஆந்திராவில் மிகப்பெரிய தலைவராக இருந்த பிரகாசம் பெயரால் ஒரு மாவட்டம் அமைந்திருப்பதைப்போல—பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வாழ்ந்த விருதுநகர் உள்ளடங்கிய மாவட்டத்திற்கு காமராஜ் மாவட்டம் என்று இந்த அரசு பெயரிட்டு அறிவிக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்கிறேன்.

அதுமட்டுமல்ல. குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கல்குளம் தாலுக்கா பெரிய தாலுக்காவாக இருக்கிறது. அந்த கல்குளம் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை பல நாட்களாக எழுப்பப்பட்டு வருகிறது. அந்த கல்குளத்தை இரண்டாகப் பிரிக்கின்ற நேரத்தில் இரணியல் தாலுக்கா என்றும் கல்குளம் தாலுக்கா என்றும் இரண்டாகப் பிரித்து அறிவிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

அடுத்து, விளவங்கோடு தாலுக்காவுக்கு கருங்கல் சப் தாலுக்கா அமைத்தால் மிக நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது நிர்வாக வசதிக்கு மிகவும் ஏதுவாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நில உச்சவரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இன்று பல குறைபாடுகள் இருக்கின்றன என்று பலர் பேசிக்கொள்கிறார்கள். உண்மையில், நிலம் அதிகப்படியாக வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தை எடுக்க வேண்டியதுதான். அதைப் பொறுத்த வரையில் நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். ஆனால் இன்றைய சூழ்நிலையில் நகரப்புற நிலத்தைப் பொறுத்த வரையில் கட்டடம் கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, அந்நிலையில் அந்தத் தொழிலில் இருப்பவர்களின் கஷ்டங்களை உணர்ந்து இந்த அரசு அந்தச் சட்டத்தை பரிசீலிக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதை விரைவில் பரிசீலித்து நல்லபடியான விதத்தில் சட்டத்தை மாற்றி எல்லோரும் பயன் பெறும் வகையில் அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன்.

*திரு. நா. கிருஷ்ணன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாகம் மானியக் கோரிக்கைமீது எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிபற்றிய சில கருத்துக்களை இங்கே நான் கூற முன்வருகிறேன். என் தொகுதி பெரியதொரு பின்தங்கிய தொகுதியாகும். என் தொகுதிக்கு இதுவரையில் எந்த அரசும் எந்தவித முன்னேற்றமும் செய்ததாகத் தெரியவில்லை. நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் நான் என் தொகுதியை சுற்றிப் பார்க்கும்போது அங்குள்ள நிலையை நன்கு காண்கிறேன்.

என் தொகுதியைப் பொறுத்தவரையில் அங்குள்ள மக்களில் 75 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். அப்படிப்பட்ட மக்களைக்கொண்ட என் தொகுதியைச் சுற்றிப்பார்க்கும்போது அங்கே பாதைவசதி சரியாக இல்லை. தண்ணீர் வசதி சரியாக இல்லை. நான் சென்று பார்க்கும்போதெல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இயங்கும் இந்த ஆட்சி ஏழைகளுக்காக, கிராமப்புற மக்களுக்காக, கிராமப்புற மக்களின் முன்னேற்றத்திற்காக நல்ல முறையில் செயல்படுகிறது என்பதைக் கண்டு என் தொகுதி மக்கள் பாராட்டுகிறார்கள், நானும் பாராட்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் என் தொகுதியில் உள்ள சில கிராமங்களில் சில பட்டாக்கள் கொடுக்கும்போது டெம்பரரி பட்டாக்கள் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்டு ஒரு ஊரை குறிப்புக் காட்டி பேசுகிறேன். மாகாளியம் அழகூர் என்ற கிராமங்களுக்குச் சென்று போக பாதையே கிடையாது. நான் வாக்குகள் கேட்கப்போகும்போது நிலங்களில் வரப்புகளின் மேல்தான் நடந்து சென்றேன். இப்போதும் அதேபோல்தான் இருக்கிறது. அதுபற்றி எந்த அரசும் அந்தக் கிராம மக்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்கு அதைச் செய்யாமல் இருந்து விட்டதைக் கண்டு வருத்தப்படுகிறேன். ஆகவே அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு அந்த அரசுகள் செய்யாததுபோல் நம் அரசும் இருக்க வேண்டாம் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. என் தொகுதியில் நெசவுத் தொழில் பொறுத்து குன்றத்தூர், படப்பை என்ற இரண்டு கிராமங்களில் தான் நெசவாளர்கள் இருக்கிறார்கள். மீதியெல்லாம் விவசாய மக்கள் வாழக்கூடிய பகுதிகளாகும். ஆகவே அந்தப் பகுதிகளில் உள்ள ஏரிகளை எல்லாம் ஆழப்படுத்திக்கொடுக்க வேண்டும்.

அதோடு, அங்கெல்லாம் போக்குவரத்துச் சாலைகளையும் சரிப்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று இந்த அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10.)

திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது, குறிப்பாக, நான் மிகவும் பாதிக்கப்பட்டவன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஏன் அதைச் சொல்லுகிறேன் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பேசக்கூடாது என்று நினைத்தாலும் அதைப்பற்றி பேச்வேண்டாம் என்று என்னால் இருக்க முடியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த பொழுது இதே அவையில் இப்போது சட்டப்பேரவை தலைவராக இருக்கும் அண்ணன் அவர்கள் எதிர்கட்சி தரப்பில் இருந்தபோது என்னுடைய நிலத்தில் அறுவடை செய்து அதைக் கொண்டு வந்து களத்து மேட்டில் போட்டதை 20 ஆட்களுக்கு மேல் ஆட்களைக் கொண்டு வந்து ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அடித்து எடுத்துக் கொண்டு போய்விட்டார். அதைப்பற்றி அருமை அண்ணன் அவர்கள் இந்த சட்டமன்றத்தில் கேட்டபோது முன்னால் இங்கே அவையில் முதல்மந்திரியாக இருந்தவர், இப்போது எதிர்கட்சி தலைவராக இருக்கக் கூடியவர், அன்றைக்கு அளித்த பதில், ' நான் இதை விசாரித்து சொல்லுகிறேன் ' என்று சொன்னார்கள். அதற்கு ஒரு நாளும் கேட்டார்கள். நானும் பார்வையாளர் இடத்திலிருந்து பார்த்துக்கொண்டு இருந்தேன். இதற்குப் பின்னால் கொடுத்த பதில் அது "பொம்பிளை தகராறு" என்று இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடியவர் அன்றைக்குச் சொன்னார்கள். அதுபற்றி பேசவேண்டுமென்று நினைத்தால், நடந்தவைகளை எல்லாம் சொல்லவேண்டும், இது எங்கள் கிராமத்தில் மட்டுமல்ல, அருமைத் தாய்மார்கள் வருத்தப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் ஊருக்குப் பக்கத்திலுள்ள கிராமத்தில் * * * * * ஆனால் இன்றைக்கு அதன் காரணமாக பல சட்டமன்ற உறுப்பினர்கள் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்க கழக சார்பில் வந்திருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் :</u> உறுப்பினர் அவர்களது பேச்சில் * * * * என்று பேசியதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

<u>திரு. நா. கிருஷ்ணன் :</u> நான் சொன்னது இங்கே நீக்கப்பட்டது என்றாலும் சந்தோஷப்படுகிறேன். அதனால் நான் வருந்தப்படவில்லை. இதை என்னுடைய கிராமத்து மக்கள் மட்டுமல்ல என்னுடைய தொகுதி மக்கள் எல்லாம் தெரிந்துகொண்டிருப்பார்கள். இதைப்பற்றி திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த அருமை நண்பர்களுக்கும் தெரியும், இதை இத்துடன் விட்டு விடுகிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி சில குறைபாடுகளை சொல்ல விரும்புகிறேன். குன்றத்தூருக்கும் அனகாபுத்தூருக்கும் போகும் பாதை, பாலம் மிக மோசமாக இருக்கிறது. இந்த பாதையில் கொஞ்சம் தண்ணீர் வந்தாலும் ஆவடி, அம்பத்தூர் போகின்ற பஸ்கள் எல்லாம் நின்று விடுகின்றன. தாழ்த்தப்பட்ட தொகுதியாக இருக்கின்ற இந்த இடத்தில் நல்ல பாதை போட்டு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பழந்தண்டலம் செல்லும் பாதை மோசமாக இருக்கிறது. இதிலும் நல்ல பாதை போட்டு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பக்கத்தில் செம்பரம்பாக்கம் ஏரி இருப்பதால், அடிக்கடி தண்ணீர் வந்துவிடுவதால், அந்த வழியாக போகின்ற பஸ்கள் நின்று விடுகின்றன. ஆகவே இதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இங்கு பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. ஜெயவேலு :</u> தலைவர் அவர்களே, இங்கே நண்பர்கள் எடுத்துக் கூறியவகையிலே, என்னுடைய மாவட்டமாகிய வட ஆற்காடு மாவட்டத்தைப் பேரறிஞர் அண்ணா மாவட்டமாக, எப்படி ஆந்திராவிலே பிரகாசம் மாவட்டம் என்றிருக்கிறதோ, அதைப்போல் என்னுடைய மாவட்டத்தின் பெயரை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், ஆற்காட்டிற்கும், அந்தத் தலைநகரத்தின் பெயரான வேலூருக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை.

அடுத்து, இன்னொரு கோரிக்கை இருக்கிறது, வட ஆற்காடு இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. அப்படி பிரிக்கப்படுகின்ற நேரத்திலே இன்னொரு மாவட்டத்தின் பெயர் திருவண்ணாமலையாக இருக்கும். அப்படி அந்த மாவட்டத்திற்குப் பெயர் வைக்கின்ற நேரத்திலே, ' திரு. அண்ணா ' மாவட்டம் என்று வைத்துக் கொள்ளலாம் அல்லது ' மலை ' என்று சொல்லுவதற்குப் பதிலாக ' அண்ணா ' என்று சொல்லை அதற்குக் கடைசியிலே சேர்த்துக்கொண்டு, அந்த மாவட்டத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அந்தப் பகு

திக்கு பெயர் மாற்றப்படுகின்ற நேரத்திலே, அந்த 'திருவண்ணா' என்று சொல்வதற்குப் பதில், 'திரு அண்ணா' மாவட்டம் என்று பெயர் வைக்கவேண்டுமென்றும், அது என்னுடைய ஆசை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கையைப் பொறுத்த மட்டிலும், இதிலே மற்றக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்த நேரத்திலே போட்டியாக அவர்களுடைய தலைவர்களுடைய பெயரை வைக்க நினைக்காமல், இதை என்னுடைய முதல் கோரிக்கையாக ஏற்று, அதை மாற்றியமைக்கவேண்டும் என்று நான் இந்த அரசை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, தமிழகத்திலே இன்றைக்கு மனு நீதிச் சோழன் ஆட்சி நடைபெறுகின்றது. என்னுடைய தொகுதியாகிய காட்பாடியிலே, ரயில்வே மேம்பாலம் பழுதடைந்திருக்கிறது. அதைப் புதுப்பித்துத் தரவேண்டுமென்று முதல்வர் அவர்களிடமும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொன்ன நேரத்திலே, உடனடியாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்து பாலத்தின் மீது நடந்து அதைப் பார்வையிட்டார்கள். அது மட்டுமல்லாமல், முதல் அமைச்சர் அவர்களும் பாலத்தின்மீது நின்று, அந்தப் பாலத்தின் தன்மையை நேரடியாக உணர்ந்து அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

பொதுமக்களுக்கும் உதவியாக உள்ள அந்தப் பாலத்தைக் கட்ட வேண்டுமென்று ஒத்துக் கொண்டார்கள். அதற்காக, உண்மையிலேயே நான் இந்த நேரத்திலே என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்

கிராம உத்தியோகஸ்தர்களாக இருக்கின்றவர்களுடைய நிலைமையைப் பற்றி நான் சென்றக் கூட்டத் தொடரிலேகூட சொன்னேன். அவர்கள் யார் யார் உண்மையில் கடனைத் திருப்பிக் கொடுக்க வசதியுள்ளவர்கள் என்பதை அறிந்து அதிகாரிகளுக்குச் சொல்லாமல், ஏமாந்தவர்களைப் பற்றி சொல்லிவிட்டு, வசதி படைத்தவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்காதபடி செய்கிறார்கள். அதிகாரிகளை தவறான வழிக்கு இட்டுச் செல்கிறார்கள். ஆகையினாலே, கடனை திருப்பி வசூல் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. உண்மையிலேயே இதனால் பணம் தேவைப்படுகின்றவர்களுக்கு பணம் கிடைக்காமல் போகின்றது.

இதைப்போலவே, கிராமங்களிலே இடைத்தரகர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் அடிக்கடி இங்கே கூறியிருக்கிறேன். அது மட்டுமல்ல, ஆக்கிரமிப்பு செய்வதற்கு அவர்கள் உடந்தையாக இருக்கிறார்கள். அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று, அதற்கு நிலம் வேண்டுமென்று கேட்கின்ற நேரத்திலே, அவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுடைய நிலத்தைக் காண்பிக்காமல், அரிசனங்களுக்கு மிகவும் தேவைப்படுகின்ற நிலத்தைக் காண்பிக்காமல், அங்கே இருக்கின்ற ஏமாந்தவர்களுடைய ஏழைகளுடைய நிலத்தைக் காண்பிக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையை மாற்றி, இந்த அரசு அப்படி உதவியாக இல்லாத கிராம உத்தியோகஸ்தர்களை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். அப்படி மாற்றுகின்ற நேரத்திலே யாக, இந்த மாற்றத்தைப் படிப்படியாக நிறைவேற்ற வேண்டும். மிகவும் எச்சரிக்கை ஏனென்றால், உடனடியாக இதைச் செய்தால், இப்போது சாதாரணமாக 22, 25 வயதான இளைஞர்களை அந்தப் பதவியிலே அமர்த்துகின்றபோது, அவர்களால் வசூல் செய்யமுடியாது. 'தோற்றம் இல்லான், துணிவு இல்லான்' என்று சொல்வார்கள் அதேபோல் இந்தப் பதவிக்கு கவுரவம் தேவைப்படுகிறது. உண்மையானவர்கள், படித்தவர்கள், ஒழுக்கமானவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. தாழ்த்தப்பட்டவர்களையும் கிராம உத்தியோகஸ்தர்களாக நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அதிகாரம் குவிந்து கிடக்கிறது. power makas a man blind and mad al o ஆகவே, இந்த டீ.டீ.சி. போன்றவற்றிற்கு தலைமை வகிக்கின்ற பொறுப்பை, மற்ற வட மாநிலங்களிலே உள்ளதைப்போல், பொது மக்களிடத்திலே அன்பாக இருக்கின்றவர்கள், சமூக சேவை செய்கின்றவர்கள் போன்ற அதிகார சார்பற்றவர்களை இதற்குப் போட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12–20]

விவசாயிகள் வரிகொடா இயக்கத்தை நடத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசாங்கம் நன்றாக உணரும். நாஞ்சிலார் அவர்கள் அவருடைய நிதிநிலைமையை நன்றாக உணர்ந்து ஏழை எளிய விவசாயிகளுக்கு என்ன சலுகைகளைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வார்கள் என்றாலும் அவரை நீங்கள் நெஞ்சிலாறாக ஆக்கிவிட வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிஜன் வெல்பேர் டிப்பார்மெண்டில் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தாசில்தார் போடவேண்டும். ராஜா தோப்பு அணைக்கட்டு பற்றி என்னுடைய கருத்தை வற்புறுத்தியிருக்கிறேன். அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலூரில் இருக்கும் கலெக்டர் அலுவலகத்திற்குச் சொந்தமான இடம் இல்லை. மத்திய அரசு இடத்தில் இருக்கிறது. அதற்காக தனி இடம் பார்த்திருக்கிறார்கள். அந்த இடத்தை ஒதுக்கித் தரவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துரைமுருகனை ஏதோ விட்டு விட்டார்கள் என்று கூறினார்கள். திரு.

துரைமுருகன் அவர்கள் எப்போதும் காட்பாடி அலுவலகத்திலேயே காணப்படுகிறார், ராணிப்பேட்டைக்கு வருவதில்லை என்று மக்கள் கருதுகிறார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் விட்டு விட்டார் என்று கருதுகிறேன் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

(திரு. துரை முருகன் எழுந்தார்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உங்களைப் பற்றித் தப்பாக ஒன்றும் சொல்லவில்லை.

<u>திரு. துரை முருகன் :</u> பர்சனல் எக்ஸ்பிளனேஷன். ஒரு தொகுதியில் ஒரு எம்.எல்.ஏ. அங்கே இருக்கிறார், இங்கே இருக்கிறார், இங்கே என்று சொல்லுவது சரியல்ல. உதாரணத்திற்குச் சொன்னால் ஜெயவேலு காட்பாடியில் இல்லை. வேலூரில் தான் இருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் அருப்புக்கோட்டையில் இல்லை, மெட்ராசில்தான் இருக்கிறார். நிதியமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டையில் இல்லை, மெட்ராசில்தான் இருக்கிறார். நான் என் பெயரை ஏன் போடவில்லை." ஏன் அழைப்பு அனுப்பவில்லை என்று கேட்டதற்குத் தாங்கள் அதுபற்றிக் கவனிப்பதாகச் சொல்லியிருக்கும்போது ஜெயவேலு பதில் சொல்லுவது சரியா ?

<u>திரு. கே. உச்சி :</u> தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1955 ஆம் ஆண்டு அமலாக்கப்பட்ட விவசாய வருமான வரிச் சட்டம் கிராம மக்களுக்கு சலுகையாக காம்பவுண்ட் கிளாசாக அந்த நில உச்சவரம்பு இல்லாமல் சலுகை தரப்பட்டது. 1955 ஆம் ஆண்டில் இருந்துவந்த சலுகை 1978–79 ஆம் நிதி ஆண்டில் நீக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்தச் சலுகை 5,009 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் வரை உள்ள வருமானத்திற்கு வரி விலக்கு அளிக்க அரசு முன்வந்துள்ளது. ஆனால், பொதுவாக கிராமம், கிராமம் என்று சொல்லக்கூடிய இந்த அரசு. கிராமத்தில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் வரை பூமி வைத்துக் கொண்டு அதுவும் மலைப் பயிர் செய்கிறவர்கள் தங்களுடைய வருமானத்திற்குக் கணக்கு வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். கணக்கு வைக்கக்கூடிய வகையில் அவர்களுடைய நிலைமை இருக்கிறதா என்றால், கிராம மக்கள் சரியான படிப்பறிவு இல்லாதவர்கள். அதுவும் நீலகிரி மாவட்ட மக்கள் மிகவும் பின்தங்கிய பகுதியைச் சேர்ந்தவர்கள். அங்குள்ள மக்கள் அனைவரும் ஏழை எளியவர்கள்; மிகவும் பின் தங்கியவர்கள், எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், அவர்கள் வருமான வரிக்காக எப்படி கணக்கு வைத்துக்

கொள்ள முடியும்? ஆகவே, அதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1972-ல் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை சலுகை என்று இருந்தது, 50 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரால். அது இப்போது 1978–879-ல் குறைக்கப்பட்டுள்ளது. 100 ஏக்கர், 200 ஏக்கர், ஆயிரம் ஏக்கர் உள்ள தோட்டங்களில் அந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரலாம். அதனால் போதுமான அளவு நல்ல வருவாயும் கிடைக்கும். நீலகிரி மாவட்டத்தில் படகர் சமுதாயத்தில் உள்ளவர்கள் பல இடங்களில் கால் ஏக்கர், அரை ஏக்கர் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மலைப் பயிருக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த நேரத்தில் 10 ஆயிரம் ரூபாய் வரை வருமான வரி விலக்களிக்கப்பட்டது. 10 ஆயிரம் ரூபாய், 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வைத்து இருக்கிறவர்களுக்கு, வருமானம் கிடைக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து 20 ஏக்கர் வரையில் உள்ள தேயிலையை அரைப்பதற்காக நீலகிரி மாவட்டத்திலே 11 கூட்டுறவுத் தொழிற்சாலைகளும், 25 தனியார் தொழிற்சாலைகளும் உள்ளன. ஆனால், இலையின் விலை நிர்ணயம் ஒரே மாதிரியாக இல்லை. ஒரு தொழிற்சாலையிலே வாரக் கடைசியிலே விலை கொடுக்கப்படுகிறது. சில தொழிற்சாலைகளிலே மாதக் கடைசியிலே தான் விலை கொடுக்கப்படுகிறது. இதன் காரணமாக விவசாயிகளுடைய பொருள்களுக்கு சரியான வருமானக் கணக்கு வைத்துக் கொள்ள முடியவில்லை. மேலும், அவர்கள் உரம், பூச்சிக் கொல்லி மருந்து ஆகியவைகளை கம்பெனிகளிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது, ஏனென்றால், சொஸைடிகளிலிருந்து குறித்த நேரத்திலே குறிப்பிட்ட விலைக்கு அவைகள் எல்லாம் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே எந்தவிதமான கணக்கும் சரியாக வைத்துக் கொள்ளமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே, கணக்கு வைத்துக்கொள்ளவேண்டுமென்ற ஏற்பாட்டை, சிறிய விவசாயிகளுக்காவது, அதாவது 10 ஏக்கருக்குக் குறைந்த அளவு நிலம் உள்ள விவசாயிகளுக்காவது, அமல்படுத்தாமல் இருக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கூடலூர் பகுதியிலே கோயிலக பூமி இருக்கிறது, அது ஜமீன் பூமியாக இருக்கிறது, அங்கே உள்ளவர்களுக்கு அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஜமீன் அபாலிஷன் சட்டத்தைக் கொண்டுவந்தது. அங்கே சிலோனிலிருந்தும், பர்மாவிலிருந்தும் வந்த தமிழர்கள் பெரும்பாலும் இருக்கிறார்கள், அவர்களுக்கு கூலிவேலை

[திரு. கே. உச்சி] [1978 மார்ச் 21

கூட கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த நிலங்களிலே இருந்து கிடைக்கும் வருமானத்தை அவர்கள் பெறமுடிவதில்லை. ஆகவே, அந்த நிலங்களை ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மசினைக்குடியில் 45 ஆண்டுகளுக்கு மேலே, ரெவின்யூ பூமிகள் அங்கே உள்ளவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கப்படாமல் இருக்கின்றன. அதன் காரணத்தினால் அங்கே அவர்கள் பம்புசெட்டுகள் வைக்கவோ அல்லது அரசாங்கக் கடனைப் பெறவோ முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அதைத் தடுப்பதாக உள்ள வனவிலங்கு சரணாலயச் சட்டத்தை தகுந்த முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம் ஒரு மலைப் பிரதேசம் நிறைந்த மாவட்டமாக இருக்கிறது. மேட்டுப்பாளையத்திலிருந்து, அதற்குப் பின்னால் கிழக்கே பரவலாறு வரைக்குத்தான் நீலகிரி மாவட்டம் என்று சொல்லப்படுகிறது. அது சரியல்ல, மேற்குப் பகுதியில் உள்ள மலைப் பகுதிகள் வரையிலும் நீலகிரி மாவட்டம் ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஆக்கி, அந்த மலைப் பகுதிகளிலே உள்ள கிராம மக்களை அரசு வாழ வைக்க திட்டங்களை வகுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே நீரேற்றுத் திட்டத்தை, லிப்ட் இரிகேஷன் திட்டத்தையும் பரவலாக நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 12.30)

* THIRU A. EAKAMBARA REDDY: Mr. Speaker, Sir, I rise to speak on Demand No. 1—Land Revenue Department which has a plan outlay of Rs. 4,41,48,000 and Demand No. II—District Administration which has a plan outlay of Rs. 16,04,56,000. In case of natural calamities where the land revenue is remitted for the fasli 1387, the collection of arrears of land revenue, water cess and also arrears and current instalments of takkavi loans are postponed to subsequent fasli 1388. On account of this postponement, the Government should be kind and generous enough not to collect the interest accruing thereon. I request this suggestion of mine may kindly be considered for favourable orders.

Regarding assignment of lands to landless poor, landless agricultural labourers, there is wast extent of land still available in the villages for assignment; also some extends of land are enjoyed by

1978 மார்ச் 21] [Thiru A. Eakambara Reddy]

poor agricultural, Harijan labourers and also labourers belonging to other weaker sections, they having encroached some lands belonging to Forest Department.

They have been enjoying the same for several years in the past. They have been booked and they are paying 2A charges and kist. In such lands which have been encroached and which are being enjoyed by these poor people, the lands might be withdrawn from the Forest Department and assigned to these poor people. I request the Hon. Revenue Minister and also the Hon. Chief Minister to consider kindly the genuine requests of these labourers, poor agricultural labourers, who are in occupation of these lands, and issue orders withdrawing the lands from the Forest Department and assigning them in favour of these poor people who belong to the weaker sections and who are enjoying the lands at present.

The present method of assignment is a very slow process; that should be simplified and the process should be expedited in such a way that patta is given within a maximum period of three months.

With regard to issue of pattas to houseless Harijans I am glad that there is a proposal with the Government to delegate powers to the Collector to notify and acquire private lands for Harijan housing. At the same time, I request Government to kindly bring in legislation early so as to speed up the matter. I request the Hon. Minister for Land Revenue to kindly see that the proposal is expedited so as to speed up the matter of providing house-sites to houseless Harijans and other weaker sections by the end of 1978.

In this connection I wish to point out that during President's Rule in Tamil Nadu, there was strict enforcement of the issue of pattas to Harijans and other sections. Collectors were assigned targets and I am very happy to note that in a short time, thousands of house-site pattas were given to Harijans. Because such targets were assigned to revenue authorities, such quick progress was possible then. I request for the kind consideration of Government to prescribe certain targets to revenue authorities in regard to issue of pattas to all the house-less Harijans and other weaker sections, by the end of 1978-79.

[Thiru A. Eakambara Reddy] [1978 மார்ச் 21]

Regarding supply of patta pass-books to ryots, I want to state that this scheme was introduced in the year 1972 to enable the pattadar to know the details of his holdings. Though it was a long felt need of the ryot, it did not deliver the expected goods. It was not maintained properly. The Karnams are not taking interest in filing up the columns so as to enable the patta pass-book holder to know the important details required by him.

Joint pattas cannot be entered in the pass-book. Action should be taken to sub-divide the joint patta by ordering survey to measure the extent of land owned by the joint pattadars by collecting sub-division fees thus making it a full field. Then only the actual extent owned by one could be entered in the pass-book which will enable him to secure loans and obtain power connection. I request Government to expedite action on this so that joint pattas do not exist at all.

As per the Tamil Nadu Estate Abolition and Conversion into Ryotwari Act of 1948, the Government lastly ordered in 1971 the issue of pattas to the persons who have been in continuous possession and enjoyment of land prior to and on the notified date. Even after extension of time-limit there are still so many cases. I request Government to kindly extend the time-limit, by giving one more extension. Wide publicity may be given to that so that eligible persons might apply and get the benefit.

Lastly, a word about the Mass Contact Programme. Though it is a boon to the agriculturists, it did not deliver the requisite goods. The long-felt needs and so many problems still remain to be solved. Strictly speaking, such a programme does not exist. Hereafter Mass Contact Programme should be done as far as possible at village level, at panchayat level, so that some useful purpose is served by implementing this programme.

A word about village officers. Their present pay is not enough when considered to the present high cost of living. The Hon. Chief Minister was kind enough to announce on 11th March 1978 some interim relief to the non-gazetted government servants. Though the question of emoluments of village officers had been referred to the Pay Commission, I request that the Government may issue orders sanctioning interim relief (as had been done to NGOs) to village officers also.

1978 மார்ச் 21] [Thiru A. Eakambara Reddy]

Regarding upgrading of Pallipat sub-taluk into main taluk and opening of sub-treasury at Pallipat, I wish to state that Pallipat sub-taluk is more or less equal to any of the main taluk in area and land revenue demand. Proposals were sent to Government for upgrading Pallipat sub-taluk into main taluk and opening of a sub-treasury at Pallipat. I request the Hon. Minister for Revenue and the Chief Minister to kindly consider this genuine request and order for upgrading Pallipat sub-taluk into main taluk and to open sub-treasury at Pallipat at least to take effect from 1st July 1978.

With these words, I conclude my speech.

* <u>திரு. வே. இரா. ஜெயராமன் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியத்தினை வரவேற்று, எனது கருத்துக்களை இந்தப் பேரவையின் முன் வைக்கிறேன்.

வெள்ளம், புயல் பணிகளிலே நமது அரசு சிறப்பாக நல்ல பணிகளைச் செய்து துயருற்ற மக்களுக்கு நல்ல உதவிகளைச் செய்திருக்கிறது. கரும்பு விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். அவர்களுக்கும் அந்த வெள்ளம், புயலிலே ஏற்பட்டிருக்கிற நிவாரணப் பணிகள் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கேட்டு கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே பணப் பயிர்கள் மீது சில வரி விலக்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த மழை, புயல் இவற்றால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு 37 பைசாவுக்கும் குறைவாக, ஒரு அணாவாரி சான்றிதழை வாங்கிக் கொடுத்தால், அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் வரிகளைக் குறைப்பதும், கடன்கள் ஒத்தி வைக்கப்படுவதும். அந்த சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்க இருக்கின்றன.

அதே நேரத்திலே, பயிர்களுக்கு, 'பெஸ்ட்ஸ் அட்டாக்' ஏற்படுகிற நேரத்திலே, எந்த நிவாரணமும் கிடைக்காமல் போகிறது. ஆகவே, மழை, புயல் இவற்றோடு, பெஸ்ட்களால் ஏற்படுகிற தொல்லைகளிலிருந்து அந்தப் பொது மக்களுக்கும்—அந்தப் பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போடி, கொடைக்கானல், பண்ணைக்காடு போன்ற பகுதிகளிலே சிறு விவசாயிகளுக்கு Compourcing முறையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேனி தொகுதியிலே, குறிப்பாக, கண்டமனூர் ஜமீன் ஏரியாவை எடுத்துக்கொள்ளும் பொழுது, செட்டில்மென்ட் எடுத்து, சர்வே செய்தபொழுது பல தவறுகள் நடந்திருக்கின்றன. அந்தக்

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1978 மார்ச் 21

கண்டமனூர் ஜமீன் பகுதியை மறுபடியும் ரீ-சர்வே செய்து, புதிய செட்டில்மெண்ட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காட்சிமாபுரம் மற்ற பகுதிகளிலே கடந்த ஆண்டு பெய்த மழையினாலே, அங்கே உள்ள கிணறுகளில் நீரூற்றுகளால் ஓரளவு விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது. 84, 85, 86, 87 பசலிகளுக்கான வரி தள்ளி வைக்கப்பட்டு, அனைத்து பசலிகளையும் ஒரே முறையில் கட்டும்படி அங்கே கெடுபிடி செய்கிறார்கள். அவர்களுக்குத் தவணை கொடுக்குமாறு இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டி.டி.சி. மீட்டிங்குக்கு நான் - அஃபிஷியலை தலைவராகப் போடவேண்டும். குறிப்பாக ஆர்.டி.ஓ. ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தால் அவரே டி.டி.சி. மீட்டிங்குக்கு வந்து விடுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் இருக்கிற காரணத்தால்.

[பிற்பகல் 12-40]

அவர்கள் ஆட்சித் தலைவரின் கீழே உள்ள அதிகாரிகளை அனுப்பிவிடுகிறார்கள். அதேபோல தமிழ்நாட்டிலே உள்ள கார்ப்பரேஷனில் பணியாற்றுகின்ற எம்.டி.க்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள். அவர்கள் இந்த டி.டி.சி. கூட்டங்களுக்குத் தங்களுக்கு கீழே உள்ள அதிகாரிகளை அனுப்பித் அதைப் புறக்கணிக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ரெவின்யூ போர்டு என்பது ஒரு பெரிய கிண்டம் ஆக இருந்து கொண்டு மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலே உள்ள இடைவெளியை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த ரெவின்யூ போர்டை மாற்றுவதற்கும், ஜமாபந்தி முறையை அறவே ஒழிப்பதற்கும் மாஸ் காண்டாக்ட் முறையை ஏற்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, விவசாய நிலங்களுக்கு போடப்பட்டிருக்கிற வரி 1976-க்குப் பின்னால் அதிகமாக வசூலிக்கப்படுகிற நிலையை அடைந்திருக்கிறது. அதை கிராமங்களில் இருக்கிற விவசாயிகள் தங்கள் மேல் திணிக்கப்பட்டிருக்கும் பெரிய பளுவாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்; இந்த வரிகளை எல்லாம் விவசாயிகளுக்குப் பளுவாக தோன்றாமல் இருப்பதற்கு, வரிவிதிப்பு முறைகளை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த வரிகளின்

1978 மார்ச் 21] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

பெயர்களைப் பார்த்தாலே பயமாக இருக்கிறது. நிலவரி, தண்ணீர் மேல்வரி, உள்ளூர்/வரி, கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, சிறப்பு நன்செய் தீர்வை, சிறப்புத் தண்ணீர் மேல் வரி இப்படி எண்ணிறந்த வரிகளைப் போட்டு—இதிலே ஜனவரி, பிப்ரவரியையும் சேர்த்துக் கொள்ளலாம்—அந்தக் காலத்திலே பேசுகின்றபோது ஜனவரி, பிப்ரவரி தவிர மற்ற அத்தனை வரிகளையும் காங்கிரஸ் அரசு போட்டாச்சு என்று பேசுவோம்.

மக்களுக்கு எளிதாக இருக்கிற வரிகளைப் போடுங்கள். தேவையானால் ஏக்கருக்கு 30 அல்லது 40 ரூபாய் வரி விதித்தால் கூட சங்கடம் இருக்காது. ஆனால் இம்மாதிரியான வரிகளைப் போட்டு விவசாயிகளுக்குத் தொல்லைக் கொடுக்காதீர்கள். எனக்குக் கட்டபொம்மன் சினிமா இப்போது நினைவுக்கு வருகிறது. அதிலே சொல்வார்கள் 'வானம் பொழிகிறது பூமி விளைகிறது. உனக்கேன் கொடுக்கவேண்டும் வரி' என்று சொல்வார்கள். கட்டபொம்மன் வீர முழக்கம் எழுப்பியதாக வரலாறு கூறுகிறது. ''வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, உனக்கேன் வரி'' என்று இப்போது விவசாயிகள் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். இதனால்தான் விவசாயிகள் போராட்டம் என்றெல்லாம் வருகிறது. தண்ணீர் வரி போடக்கூடாது.

எங்கள் மாவட்டத்திலே பேச்சுப்பாறை என்ற இடத்தில் அணைக்கட்டும்போது தண்ணீர் தீர்வை விதித்தார்கள். அந்தத் தண்ணீர் தீர்வையை பேச்சுப்பாறை அணைக் கட்டுவதற்கு எவ்வளவு நிதி செலவழித்திருக்கிறோமோ அது வரையிலும் நாங்கள் வசூலிப்போம் என்று—இப்போது பாலம் கட்டினால் வரி போடுகிறோமோ—அதைப்போல எவ்வளவு பணம் செலவழித்தோமோ அவ்வளவு நிதியைப் வசூலிப்போம் என்று சொன்னார்கள். அவைகளை பராமரிப்புக்குக் கொஞ்சம் வரி போடலாம். தண்ணீர் வரி, அதற்கு மேல் வரி, அதற்கு மேல் செஸ் வரி, இதெல்லாம் அதிகமாக இருக்கிறது. அதை மாற்றி அமைக்க வேண்டும்.

அடுத்து ஜமாபந்தி முறையைப் போட்டால்தான் விவசாயிகள் நன்மை பெறுவார்கள் என்று குறிப்பேட்டில் காணப்படுகின்றது. அதற்கு வேறு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஜமாபந்தி மூலமாகத்தான் கணக்குகளைப் பரிசிலிக்க வேண்டும். அங்கே வருகிற விவசாயிகளிடம் இருந்து குறைகளைப் பெற வேண்டும் என்று இல்லாமல் வேறு முறைகளை காணுவதுதான் முறை. இது வெள்ளைக்காரன் காலத்திலே போடப்பட்ட முறை. இந்த ஜமாபந்தி இருப்பது இப்போதும் வெள்ளைக்காரன் ஆட்சி இங்கே இருப்பதைப்போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. ஆகவே அந்த முறையை மாற்றி அமைத்து வேறுவிதமாக மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, ஏக்கருக்கு 40 ரூபாய் கூட பரவாயில்லை என்று சொன்னார்கள். இதுதான் ஜனதாவின் கொள்கையா ?

திரு. ஏ. சுவாமிதாஸ்: கொள்கை ஒன்றும் இல்லை. ஜனதாவின் கொள்கை வரியே இருக்கக்கூடாது என்பதுதான். அதாவது ஒரே வரியைப் போடுங்கள். விவசாய வருமானத்திற்கு வரிபோடுவதற்கு ஆட்சேபனை கிடையாது. அதற்காக தண்ணீர் தீர்வை, இந்த வரிகள் எல்லாம் வேண்டாம் என்பதுதான் ஜனதாவின் கொள்கை.

அடுத்து, (கன்னியாகுமரி) மாவட்டத்திலே கிராம பணியாளர்கள் நிரந்தரமான ஊழியர்கள் இருக்கிறார்கள். கிராம அதிகாரிகள் அக்கவுண்டண்டுகள் என்று பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் பார்ட் டைம் ஊழியர்கள், பகுதி நேர ஊழியர்கள் இல்லை. ஆனால் இப்போதுதான் வெட்டியான், கர்ணம், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்று இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் மாற்றி ஒரு அக்கவுண்டண்டு, கிராம அதிகாரி இப்படி தமிழ்நாடு பூராவும் ஏற்படுத்தி நிரந்தரமாக நல்ல சம்பளம் கொடுத்து அவர்கள் இயங்கக் கூடிய முறையிலே மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புற நில உச்ச வரம்புத் திட்டத்தைப் புகுத்தி இருக்கிறார்கள். இதனால் நன்மை, தீமை இரண்டும் இருக்கின்றன. இங்கே சின்னச்சின்ன வீடுகளைக் கட்டி, அவற்றை விற்பனை செய்து கொண்டு பல வியாபாரிகள் இருந்து கொண்டு இருந்தார்கள். பெரிய பெரிய நிலங்களை சிறு சிறு துண்டுகளாகப் பிரிவினை செய்து அவற்றை தவணை முறையில் பணம் வசூல் செய்து கொண்டு விற்றுக்கொண்டு இருந்தார்கள். இந்த புதிய சட்டத்தின் காரணமாக வியாபாரிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

வியாபாரிகள் பாதிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், தங்களுக்கு ஒரு மனை சொந்தமாகும் என்ற எண்ணத்தில் தவணை முறையில் பணம் கட்டிக்கொண்டு இருந்தவர்கள் தற்போது பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சிலர் ஒரு தவணை கட்டி இருக்கிறார்கள். ஒருவர் 4—5 தவணை கட்டியிருக்கிறார்கள. ஒரு சிலர் 10 தவணை கூட கட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பணத்தையும் திரும்பப் பெறமுடியவில்லை, நிலத்தையும் அடைய முடியவில்லை. வியாபாரிகளும் பணத்தைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

குறிப்பாக, என்.ஜி. ஓவினர் தான் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, ஏற்கனவே பணம் கட்டியிருப்பவர்களுக்கு மட்டும் அந்தச் சட்டத்தில் இருந்து விதி விலக்கு அளித்து, புதிதாக வேண்டுமானால் சலுகை அளிக்காமல் இருக்க

லாம், அப்படிப்பட்ட வீட்டு வசதியை அவர்கள் அடைய நிச்சயமாக அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாவட்ட ஆட்சியைப் பற்றிச் சொல்லுகிறபோது, சில மாவட்டங்களில் அலுவல் சுறுசுறுப்பாக இல்லை. மந்தமான நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எங்கள் மாவட்டம் சுறுசுறுப்பாக இருக்கிறது. காரணம் அது சின்ன மாவட்டம். ஆகவே, எளிதாக அதிகாரிகள் வேலை செய்கிறார்கள். ஆகவே, அங்கே கலெக்டர், ஆர்.டி.ஓ.க்கள் மிகவும் சுறுசுறுப்பாக பணியாற்றுகிறார்கள். ஆகவே, பெரிய மாவட்டங்களாக இருப்பதை சிறிய மாவட்டங்களாக மாற்றி, அந்த மாவட்ட ஆட்சி முறையை சுறுசுறுப்புள்ளதாக நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு ப.உ. சண்முகம்: தலைவரவர்களே, வருவாய்த் துறை, நிலவரி, மாவட்ட ஆட்சி மன்றம், ஆட்சித் துறை ஆகியவற்றைக் குறித்து கோரப்பட்டு இருக்கும் மானியங்கள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள நான் முன் வருகிறேன்.

அளிக்கப்பட்டு இருக்கின்ற இந்த குறிப்புகளைப் பார்த்தபோது எனக்கு எழுந்து இருக்கின்ற சில சந்தேகங்களை மாமன்றத்தின் தங்கள் மூலம் அரசுக்கும், அமைச்சருக்கும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அனுவாரி சான்றிதழ் வாங்கிக்கொடுத்தால்தான் எல்லா விதமான வரிகளையும் தள்ளுபடி செய்யலாம் என்று குறிப்பிலே கூறப்பட்டு இருக்கிறது. அனுவாரி சான்றிதழ் என்பது (ஆர்.டி.ஓ.விடத்தில்) கோட்டாட்சித் தலைவரிடத்தில் போய் ஒரு விவசாயி வாங்கவேண்டும். அது எளிதான காரியம் என்று நான் கருதவில்லை. நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று எந்தெந்த பகுதிகளை அரசு அறிவிக்கிறதோ அந்தந்தப் பகுதிகளில் இந்த அனுவாரி சான்றிதழ் தேவை இல்லை என்று அறிவிக்கவேண்டும். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி என்று எந்தப் பகுதி அறிவிக்கப்பட்டு இருக்கிறதோ, அந்தந்தப் பகுதிகளில் இந்த சான்றிதழ் இல்லாமலேயே வரிகளைத் தள்ளுபடி செய்யலாம் என்று அரசு ஆணை பிறப்பித்தால் உழவர்களுக்கும் நன்மையாக இருக்கும். விவசாயிகளுக்கும் உதவியாக இருக்கும். அரசாங்க அதிகாரிகளுக்கும் தொல்லை இல்லாமல் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1978 மார்ச் 21

இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் நிலம் ஒப்படை செய்
தைப் பற்றிப் பேசினார்கள். வீட்டு மனை மதிப்பீடு பற்றிப்
சினார்கள். உழவர்களுக்கு நிலம் கொடுப்பதைப் பற்றி
சினார்கள். ஏற்கனவே இருந்த கழக அரசு விவசாயிகளைப்
பாறுத்தவரையில் ஒரு சட்டத்தை இயற்றி இருக்கிறது.

இயற்றப்பட்டிருக்கும் சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்
றது என்றால், விவசாயக் கூலியாக வேலை செய்யும் ஒருவன்,
வலை செய்யும் அந்த இடத்தில் ஒரு குடிசை போட்டுக்கொண்டு
ருந்தால், அரசாங்க நிலமாக இருந்தாலும் சரி அந்த மண்
வனுக்குச் சொந்தம் என்று அன்றே சட்டம் போட்டாகிவிட்டது.
னிமேல் பட்டா கொடுப்பது என்பது ஒரு சம்பிரதாயமே
பிர, அந்த சட்டம் போட்ட உடனேயே அந்த மண்ணுக்குச்
சாந்தக்காரன் என்று சட்டத்திலேயே போட்டு விட்டோம்.
வசாயிகளுக்கு மட்டுமல்ல, விவசாயிகளுக்குத் தேவையான
கரணங்கள், கருவிகள் செய்து கொடுக்கும் தொழிலாளர்
நக்கும் வீட்டு மனைப்பட்டா கொடுக்கவேண்டும் என்று இன்
றாரு சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். அரசாங்கம்
த்துள்ள குறிப்பிலேயே அதைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.
தற்காக, நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்போது நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிற யோசனை
ானவென்றால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் வேண்டு
று சொன்னால், ஒரு குறிப்பிட்ட பகுதிகளை அவர்கள்
பார்களேயானால் அந்தப் பகுதிகளை அரசாங்கம் விலைக்கு
கி இலவசமாக பிரித்துக் கொடுக்கவேண்டும். கிராமத்தில்
கிற ...ிற்பட்ட மக்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்ய
...ல், அந்த கிராமத்து மக்கள் அவர்களுக்கு வீட்டுமனை
...ற்று தாசில்தாரிடம் அல்லது ஆர்.டி.ஓ விடம், அல்லது
ஆட்சித் தலைவரிடம் ஒரு குறிப்பிட்ட பகுதியை
...டி மனு கொடுப்பார்களானால், அந்த நிலத்தை
...செய்து, அது தனிப்பட்டவர்கள் நிலமாக இருந்தால்
...ரயம் கொடுத்தாவது ஆக்குவிசிஷன் செய்து மக்களுக்கு
மனை ...துக்கவேண்டும். வீட்டு மனை வாங்கிக்கொடுக்க
...ும் எ... ஒரு புதிய யோசனையை நான் தெரிவிக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்களை இனமாகக் கொடுக்
ும். ஆனால் விவசாயிகள் வீடு கட்ட நிலம் இல்லை;
...த் தாருங்கள் என்று கேட்டால் உழுகிற நிலம் என்றாலும்
அரசாங்கம் அதை வாங்கி, வாங்கிய விலைக்கே விவசாயி
க்குக் கொடுக்கலாம். அப்படிக் கொடுப்பதன் மூலம் வீட்டுப்
ச்சினை தீரும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு
விரும்புகிறேன்.

1978 மார்ச் 21] [திரு. ப. உ. சண்முகம்]

அடுத்து, நிலம் ஒப்படை செய்தல் என்று குறிப்பில் கூட
பட்டிருக்கிறது. நிலமற்ற ஏழைகளுக்கு—யார் யாருக்கு ஒப்
செய்யலாம் என்ற நீண்ட பட்டியல் இருக்கிறது. நில
ஒப்படை செய்து விட்டால், நிலம் சொந்தமாக்கப்
விட்டால், அந்த நிலத்தை வைத்து கடன் வாங்கலாம் எ
குறிப்பிலே இருக்கிறது. சட்டமும் அப்படித்தான் இருக்
ஆனால் இதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. அனுபவ ரீதியாக
கண்ட உண்மையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அ
கத்தின் சார்பில் ஏழைகளுக்கு நிலத்தை ஒப்படை செய்
அதை அடமானம் வைத்து, கடன் வாங்கலாம் என்று சட்ட
இருக்கிறது. அடமானம் வைத்து கடன் வாங்கலாம்
சொல்லும்போது ஒருவன் நில வள வங்கியில் அடமானம் வ
கடன் வாங்குகிறான். நான் இதை குறிப்பிடும்போது
இடங்களிலும் ஊழல் நடக்கிறது என்பதாகச் சொல்ல
சில இடங்களில் தவறு நடந்து கொண்டிருக்கிறது என்பதற்
சொல்லுகிறேன். நிலவள வங்கியில் அடமானம் வை
கிணறு வெட்ட என்று சொல்லி, முதல் தவணை பணம் வ
தும் கொஞ்சம் கிணறு வெட்டுவதுபோல் வெட்டி, பின் இரண்
தவணையும் வாங்கிவிட்டு, கிணறும் வெட்டாமல், வாங்கிய
யும் திருப்பிக் கட்டாமல் வங்கியிலிருந்து வாங்கிய
முழுவதையும் அப்படியே எடுத்துக்கொள்ளுகிறான். பணம் தி
கட்டாவிட்டால் அடமானம் வைத்த நிலத்தை நிலவள
யினர் நடவடிக்கை எடுத்து, ஜப்தி செய்து அரசாங்கம் கொ
நிலத்தை தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆக வருவ
துறை நிலம், புறம்போக்காக இருக்கும் நிலம் நிலவள வங்
சேர்ந்ததாக இருக்குமே தவிர, வாங்கியக் கடனை திருப்பிப்
முடியாது. அதற்கு சட்டத்தில் ஏதோ கோளாறு இருக்
இந்தக் கோளாறுக்கு பரிகாரம் காண வேண்டும். அ
என்ன செய்வது. அப்படி நிலத்தை யாராவது அடம
செய்தால், நிலவள வங்கி கடன் கொடுப்பதை விட்டுவிட்டு
தாய கிணறு—கம்யூனிட்டி வெல் வெட்டிக் கொடுங்கள்
சாங்கச் செலவில், இல்லையென்றால் சுற்றுவட்டார விவச
ஒப்புக்கொண்டால் மொத்த நிலத்திற்கும் சேர்த்து "போர்
போட்டு, பாசன வசதி செய்து கொடுங்கள். கிணற்றுக்கு
செலவானதோ அதை அவர்களிடமிருந்து வசூல் செய்து
ளுங்கள். அவர்கள் பணம் செலுத்தவில்லை என்று
நிலத்தையும் கிணற்றையும் சேர்த்து எடுத்துக்
அது அல்லாமல் நிலவள வங்கியில் பணம் வாங்கிவிட
பணத்தைத் திருப்பிக் கொடுக்காமலிருந்து, அதற்காக
நிலத்தையே ஜப்தி செய்து எடுத்துக்கொள்ளும் முறை
என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்பு...

...மையப்படுத்தி முறைபற்றி இங்கே பேசப்பட்டது. ...
இருக்கவேண்டுமா அல்லது வேண்டாமா என்பதுபற்றி ...
காலத்தில் பரீட்சார்த்தமாக ஒரு மாவட்டத்தில் ஒரு வட்ட...

எடுத்துக்கொண்டு வேறொரு முறையை—ஆடிட் — தணிக்கை முறையைப் புகுத்தினோம்; அந்த முறை எப்படி செயல் படுகிறது என்று அதிகாரியிடம் குறிப்பு கேட்டபோது சரியாக வரவில்லை என்று சொல்லி, மீண்டும் ஜமாபந்தி தேவை என்பதை ஏற்றுக்கொண்டுவிட்டோம்.

ஜமாபந்தி இருந்தால்தான் கணக்கு பைசல் ஆகும். விவசாயி களும் அதிகாரிகளும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். அப்படி யானால் ஜமாபந்தியில் தவறு இல்லையா என்று கேட்டால், சில தவறுகள் இருக்கின்றன. அதை களைவதற்கு என்ன வழி? அதைத் தடுப்பதற்கு என்ன வழி? என்று யோசிக்க வேண்டுமே தவிர ஜமாபந்தியை ஒழித்துவிட்டு, கணக்குப்பிள்ளை, மணியக்காரரிடம் பொறுப்பை ஒப்படைக்கக்கூடாது. சில நேரங்களில் கிராம அதிகாரிகள் பணத்தைப் பெற்றுக்கொண்டு ரசீது கொடுத்திருப் பார்கள். ரசீது இருக்கலாம், ஆனால் பணம் கஜானாவுக்குப் போகாது, இன்னும் சில இடங்களில் ரசீதே இருக்காது. இப் படிப்பட்ட தவறுகள் எல்லாம் ஏற்படுகின்ற காரணத்தால் ஜமா பந்தி முறை தொடர்ந்து இருக்கவேண்டும்; அதே நேரத்தில் அந்த முறையில் இருக்கிற சில தவறுகளை, சில குறைகளை நீக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர் களே, ஜமாபந்து முறை இருந்தால்தான் ஆண்டுக்கு ஒரு முறை யாவது தங்களது குறைகளைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் அனுபவத்திலே ஜமாபந்து முறை மூலமாக எத்தனை ஆயிரம் பேர்களைச் சந்தித்து குறை களைக் கேட்டறிந்து நிவாரணம் அளிக்கப்பட்டது. விளக்கம் தேவை.

திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, ஆண்டுக்கு ஒரு முறை அதிகாரிகள் அதாவது மாவட்ட கலெக்டரோ அல்லது கோட்டாட்சித் தலைவரோ ஜமாபந்தி நடத்துகிறார்கள். அப்படி ஜமாபந்தி நடத்துகின்ற நேரத்தில் அந்த ஆண்டுக்கு ஒரு முறையாவது விவசாயப் பெருங்குடி மக்கள் ஏழை எளிய மக்கள் தங்களுடைய குறைகளை எடுத்து வைக்கிறார்கள். அதைத் தவிர அவர்களுக்கு வேறு வாய்ப்பு இருக்க நியாயம் இல்லை.

இந்த முறையினால் விவசாயிகள் தாங்கள் கட்டிய பணம் சென்று சேர்ந்ததா இல்லையா என்பதைப் பார்க்க முடிகிறது. அந்த வாய்ப்பு இருக்கிறது. பணம் கட்டுவதற்கு ரசீது கொடுக் கிறார்கள். கணக்கர் அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு ரசீது தருகிறார். அந்தப் பணம் அரசாங்கத்திற்கு சென்று சேர்ந்ததா என்பது தெரியாது. இந்த ஜமாபந்தி மூலமாக

கணக்கு பார்க்கும்போது விவசாயிகள் இவ்வளவு பணம் என் பதைத் தெரிந்துக் கொள்கிறார்கள். தான் கட்டிய பணம் பெறப்பட்டது என்பதையும் அறிய முடிகிறது. அதேபோல் தங்களுடைய குறைகள் ஏதாவது இருந்தால் அதையும் எடுத்து அதிகாரிகளிடம் கூறுவதற்கு முடிகிறது. இந்த ஜமாபந்தி மூல மாக ஏதாவது குறைகள் இருந்தால் அதைத் தவிர்க்கலாம். அது ஜமாபந்தி தர்பார் முறையாக இருக்கக்கூடாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

அந்த ஜமாபந்தி முடிந்தவுடனே விவசாயிகள் மகாநாடு நடக்கிறது. அப்போது விவசாயிகள் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. ஜமாபந்தி முறையிலே அவர்கள் உட்கார்ந்து விவசாயிகள் தங்கள் மனுக்களைக் கொடுத்து குறையை நிவர்த்தி செய்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையில் உள்ள குற்றம் குறைகளை நீக்க ஒரு சட்டம் மூலமாக செயல்படுத்த வேண்டுவது அரசாங்கத்தின் கடமை என்பதை வலியுறுத்திச் சொல்கிறேன்..

நிலச் சீர்திருத்தச் சட்டம். இந்தத் துறை நிர்வாகத்தின் கீழ் ஏராளமான சட்டங்களைக் கொண்டு வந்து இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தைச் செய்திருக்கிறார்கள். இந்த நிலச் சீர்திருத்தத்தின் மூலம் நிர்வாகத்தை எந்த முறையில் நிர்வகிப் பது என்பதற்கு பல புள்ளி விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே சிலவற்றைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அதன் 13-வது பக்கத்தில் உபரி யாக அறிவிக்கப்பட்ட பரப்பளவு 94,112 ஏக்கரா என்றும், அனுபோகத்தில் எடுத்துக் கொண்ட பரப்பளவு 90,546 ஏக்கரா என்றும் வழங்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு 85,998 ஏக்கரா என்றும் இதிலே பயனடைந்த ஹரிஜனங்களின் எண்ணிக்கை 17,438 பேர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பரப்பளவு 27,970. பயனடைந்த பழங்குடியினர் ஏனையோ ரின் எண்ணிக்கை பட்டியலில் 33,112 பேர். பரப்பளவு 57,982. இவையெல்லாம் கழக அரசு காலத்தில் கொடுத்தது போல் கொடுக்கப்பட்டிருக்கிறது. கழக அரசு காலத்திலும் இவ்வாறு கொடுக்கப்பட்டது என்பதற்கு இது நல்ல சான்றாக அமைத்துக் கொடுத்ததற்கு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய வழிகாட்டிக் கொள்கையை எடுத்துக்கொண்டு புதிய முறையில் நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப்போகிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் தங்கள் மூலமாக அரசாங் கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். தேசிய வழிகாட்டிக்

கொள்கை என்ன என்பதை விளக்கப்படவில்லை. அது விளக்கப்பட்டால்தான் அது பற்றி விளக்கம் சொல்ல முடியும். ஆகவே, அதனை விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொ... என்...

அதே மாதிரி வடஆர்க்காட்டில் நவலாக் என்ற ஒரு இடம் இருக்கிறது. 'இட் இஸ் நாட் லவ், பட் நவ்' இந்த இடத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகனுடைய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதற்குள் போக விரும்பவில்லை. நவ்லாக் என்ற இடத்தில் 9 லட்சம் பழ மரங்கள் 9 லட்சம் பழ தோட்டங்கள் இருந்ததாகவும் அங்கே இரண்டு அணு கொடுத்துவிட்டு உள்ளே போய்விட்டால் அங்கே நிறைய பழங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்றும் இருந்ததாம். ஆனால் வெளியே எடுத்துவரக்கூடாது. உள்ளேயே இருந்து எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்று எல்லாம் சொல்லிக் கொள்கிறார்கள். அது முன்னால் ஆற்காட்டு நவாப்பிடம் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இப்போது அந்த இடம் கோவிந்த நாராயணதாஸ் அவர்களிடம் ப்ரீ ஹோல்ட் லான்டாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

(முற்பகல் 1-00)

அது 'ப்ரீ ஹோல்ட் லான்டாக' இருந்து கொண்டிருக்கிறது. அது ரயத்துவாரியாக இல்லை. நில வரி கட்டுவதில்லை. அங்குள்ள விவசாயிகள் கடன் வாங்க வேண்டுமென்றால் வாங்க முடியாது. அது 1,300 ஏக்கர் என்று நினைக்கிறேன். சரியான அளவு நினைவில்லை. ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருக்கிறது.

இந்தப் பூமி அரசாங்கத்திற்குச் சொந்தம் இல்லாமல் அரசாங்கம் உரிமை கொண்டாட முடியாமல், அரசாங்கம் வரி வசூலிக்காமல் இருந்து கொண்டிருக்கிறது. இதை ரயத்துவாரியாக மாற்ற வேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் இன்னும் அமலாக்கப்படவில்லையென்று கேள்விப்படுகிறேன். என்ன காரணத்தால் ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது அதை ரயத்துவாரியாக மாற்ற வேண்டும். அப்படிச் செய்தால்தான் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் முழுப்பலனையும் அங்குள்ள விவசாயிகள் அனுபவிக்க முடியும். அங்குள்ள குத்தகைக்காரர்களை வெளியேற்றாமல் தடுக்க வேண்டுமென்றால், அவர்கள் வைத்திருக்கிற நிலத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், ரயத்துவாரி அடிப்படையில் அதை மாற்றினால்தான் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை கொண்டுவந்து புகுத்த முடியுமே தவிர வேறு வழி இல்லை. ஆகவே, அதை ரயத்துவாரியாக மாற்ற வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

...டுத்து. நீலகிரியில் உள்ள ஜன்மி ஒழிப்புச் சட்டம் பற்றி ...ப் புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதில் எனக்கு சில சந்...ங்கள். ஜன்மி ஒழிப்புச் சட்டத்தின் அரசியல் அமைப்புச் ...த்தின் ஒன்பதாவது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டு விட்டதாக ...பு. ஒரு வேளை நான் சொல்வது தவறாக இருந்தால் அதைத் ...டுக் கொள்ள நான் தயாராகயிருக்கிறேன். சேர்க்கப்பட்டு ...து என்று இருக்கும்போது எப்படி சுப்ரீம் கோர்ட்டுக்குப் ... ஸ்டே வாங்கியிருக்கிறார்கள்—ஸ்டே வாங்கியிருக்கிறார்கள் கூறப்பட்டிருக்கிறது—என்பது எனக்குப் புரியவில்லை. ...ஒழிப்புச் சட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொண்டு ...ட்டு கழக ஆட்சிக் காலத்தில் எப்படியும் அதை எடுத்துக் ...ள வேண்டுமென்று அரசால் முயற்சி எடுத்துக் கொள்ளப் ...கடைசியில் அதை ஒன்பதாவது ஷெட்யூலில் சேர்க்க வேண்டு...று வலியுறுத்திக் கேட்டு சேர்க்கப்பட்ட பிறகு சுப்ரீம் ...ட்டில் ஸ்டே கொடுத்திருக்கிறது என்று படித்தேன்.— ...ப் படிக்கும் போது எனக்கே குழப்பமாக இருக்கிறது. ...மாக இருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் ...கையாக எடுத்துக் கொள்ள வேண்டாம். அதை ஒன்ப...து ஷெட்யூல்லில் சேர்த்ததற்குப் பிறகு அரசியலமைப்புச் ...ந்தில் பாதுகாப்பு கொடுத்ததற்குப் பிறகு நீதி மன்றத்தில் எப்படி ஸ்டே வாங்கமுடியும் என்று எனக்குப் புரியவில்லை. ...ம் எல்லாவற்றையும் தெரியவேண்டும் என்று கேட்டுக் கொள்கி...மை...

...தேயிலைத் தோட்ட நீலகிரியில் மலைப்பகுதியில் உள்ள நிலங்களுக்கு ...ரை ...ல் (லுண்டிங் டாக்ஸ் என்று வைத்திருந்தோம். அந்த ...ண்டிங் டாக்ஸை இப்போது ரத்து செய்துவிட்டு முன் ...ந வைக்க வேண்டும் என்ற முறையை கொண்டு வந்து ...செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்...ள். இப்போதும் தெரிவித்திருக்கிறார்கள். நான் பெரிய ...ாந்தார்களுக்காக வாதாடவில்லை. அவர்கள் கணக்கு ... வேண்டும். ஏற்கனவே மலைப் பகுதியில் உள்ள ...பயிர்களுக்கு 30 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் வரை ...ண்டிங் செய்து கொள்ளலாம் என்று சட்டம் இருந்தது. ...து அதை ரத்து செய்திருக்கிறோம். நான் தெரிவித்துக் ...ு சிறு சிறு நிலம் வைத்திருப்பவர்கள்—என்னிடத்தில் ...பட்டிருக்கிற புள்ளிவிவரங்களின்படி ஆதிவாசிகள்' ... கிழக்குப்பட்டி ஆதிவாசிகள், வேறு சில சிறுபான்மை ...பட்டியலைத் தந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் நிலம் ...ருக்கிறார்கள். ஏழை எளியவர்கள். அவர்களை கணக்கு ... என்று கேட்பது சரியான முறையாக இருக்கமுடியாது. ... அவர்களெல்லாம் கணக்கு எழுதுகிற முறையை தவிர்க்க ...டும். வேண்டுமானால் 30 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்...த 20 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று குறையுங்கள் ...15 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று குறையுங்கள். ஆனால்

கம்பவுண்டிங் சிஸ்டத்தை ஏழை எளிய மக்களிடம் கொண்டு வாருங்கள். பணக்காரர்களுக்கும் கம்பவுண்டிங் சிஸ்டத்திற்கும் சம்பந்தமில்லை. ஏற்கனவே கழக அரசு அனுமதி கொடுக்க வில்லை. பணக்காரர்களுக்காக நான் வாதாடவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, பட்டா பாஸ் புத்தகம் பற்றி ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். இதில் ஒரு சின்ன விளக்கம் எனக்குத் தெரிய வேண்டும். 1977-ஆம் ஆண்டு வருவாய்த் துறை மானியக் கோரிக்கைமீது அமைச்சர் அவர்கள் அளித்த குறிப்புப் புத்தகம் என் கையிலிருக்கிறது. இப்போது 78க்காக அமைச்சர் அவர் கள் படித்திருக்கிற அந்தப் குறிப்புப் புத்தகமும் என் கையில் இருக்கிறது. 1977-ல் கொடுத்த குறிப்புப் புத்தகத்தில் பத் தாவது பக்கத்தில்—அமைச்சர் அவர்களிடத்தில் வேண்டுமானால் இதைத் தருகிறேன்—குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுவரை வழங் கப்பட்ட பட்டா பாஸ் புத்தகங்கள் 1,00,50,056 என்று போடப் பட்டிருக்கிறது. இதில் வசூலான பணம் ரூ. 71,78,639 என்று இதிலே போடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தில் பட்டா பாஸ புத்தகங்கள் அதிகமாக கொடுத்திருப்பதற்கான விவரங் களைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் குறைந்து காணப் படுவது வேடிக்கையாக இருக்கிறது.

இன்னொன்றை பார்த்தால் இன்னும் வேடிக்கையாக இருக்கும் இந்த ஆண்டு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த் தால், 99,07,880 பட்டாப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன என்ற குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சென்ற ஆண்டு கொடு கப்பட்டது ஒரு கோடி புத்தகங்கள். ஆனால் இப்போது 99 லட்ச கொடுத்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது....(குறுக்கீடு)ஆம் மொத்தம் தான், சென்ற ஆண்டு அதாவது ஏற்கனவே ஒரு கோ கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி விட்டு, இப்போது 9 கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மீதியுள் லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மீதியுள் பட்டா புத்தகங்களை அதிகாரிகள் திரும்பப் பெற்றுக் கொண் விட்டார்களா? அல்லது அதிகாரிகள் தந்திருக்கின்ற புள் விவரம் தவறாக இருக்கிறதா? இப்படிப் பட்ட முக்கியமா விஷயத்தில் தவறு ஏற்படுவதற்கு என்ன காரணம்? இத்தகை பெரிய ரெவன்யூ போர்டு இருந்தும், இப்படிப்பட்ட புள்ளி விவர கள் தவறாக இருக்குமானால், இதைப்பற்றி அரசு மிகத் தீவிரமா கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அமைச்சர்கள் கூட, இப்படிப்பட்ட குறிப்பு புத்தகங்கள் வைக்கும்பொது, சென்ற ஆண்டு கொடுக்கப்பட் குறிப்பு புத்தகங்களில் என்னென்ன புள்ளி விவரத்தை கொடுத் ருக்கிறோம் என்பதையும், இந்த ஆண்டு கொடுக்கப்படும் குறிப் களோடு ஒப்பிட்டுப் பார்ப்பார்களேயானால் இப்படிப்பட்ட தவ கள் வருவதற்கு நியாயமிருந்திருக்காது. இது சாதாரண தவ அல்ல.

இன்னும் வேடிக்கை என்னவென்றால், சென்ற ஆண்டு ஒரு கோடிக்கு மேல் புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று புள்ளி விவரத்தைக கொடுத்து, 71 லட்சம் ரூபாய் வசூலாகியிருக் கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு குறிப்பிட்டிருப்பது 99 லட்சம் தான், ஆனால் 88 லட்சம் ரூபாய் வசூலாயிருக்கிறது. புத்தகத்தின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது, பணம் அதிகமாகியிருக்கிறது. இது வேடிக்கையாக இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையிலேயே தவறு ஏற் பட்டிருக்கிறது என்றால், இப்படிப்பட்ட தவறுகளுக்கு யார் காரண மாக இருந்திருக்க வேண்டும் என்று கண்டறிந்து இனிமேலாவது இப்படிப்பட்ட தவறு இல்லாமல் இருக்கும்படியான அளவில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மற்றும் ஒன்று, இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். கழக அரசு கலைக்கப்பட்டு, நடைபெற்ற குடி யரசுத் தலைவர் ஆட்சியில் தமிழ் இன மக்களுக்கு, ஏன் திராவிட சமுதாயத்திற்கே தீங்கு இழைக்கின்ற வகையில் போடப்பட்டி ருக்கின்ற அரசாங்க உத்தரவை நான் இப்போது அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். கழக அரசு இருந்த காலத்தில் என்ன உத்தரவு இருந்தது என்றால், பப்ளிக் சர்விஸ் கமிஷனில் ஆட்களை எடுக்கும்போது பிற்பட்ட ஜாதியினர் என்றிருந்தால் 30 வயது வரையிலும் எடுக்கலாம் என்றிருந்தது, தாழ்த்தப்பட்ட மக்கள், மற்றும் மலைஜாதியினர் அதாவது 'ஹில்ட்ரைப்ஸ்' என்றிருந்தால் வயது வரம்பே கிடையாது என்றும் இருந்தது. ஆனால் 1976 ஏப்ரல் 22-ஆம் தேதியில் அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. என்ன உத்தரவு போட்டிருக்கிறது என்றால் நேரமில்லாததால், நான் தமிழிலேயே அதை விளக்கி சொல்லி விடுகிறேன், பிற்பட்ட வகுப்பினருக்கும், மலைஜாதியினருக்கும், அரிசன மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்க களுக்கும் உயர்ந்த பட்ச வயது வரம்பு வைக்கப்பட்டிருந்தது, அதை எடுத்துவிட்டு 1976-ல் அரசின மக்களுக்கும், தாழ்த்தப் பட்ட மக்களுக்கும், மலைஜாதி மக்களுக்கும் வயது வரம்பு 31 என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இது கவர்னர் ஆட்சி காலத்தில், கவர்னர் ஆலோசகரால் போடப்பட்ட உத்தரவு இது. இது தாழ்த்தப்பட்ட மக்களையும் மலைஜாதி மக்களையும் எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை இந்த அவைக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று, மலைஜாதி மக்களுக்கு என்று, அரிசன மக்களுக்கு என்று காலாகாலம் இருந்துவந்தது—வயது வரம்பின்றி—சர்விஸ் கமிஷனுக்கு போகலாம் என்றிருந்தது

இப்போது அதற்கு 31 வயதுவரை தான் என்று போட்டிருப்பது சரிதானா? நியாயம் தானா? திராவிட சமுதாயத்திற்கே இழைக்கப்பட்ட அநீதி என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உரிமை இந்த உத்தரவால் பறிக்கப்படுகிறது. இந்த உத்தரவை முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். (முதலமைச்சர் அவர்களிடம் உத்தரவின் நகலைக் கொடுத்தார்..) இதிலுள்ள சாராம்சத்தை எந்த விதத்திலும் பறிக்காமல் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்த உரிமைகளை பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது போட்டிருக்கின்ற இந்த உத்தரவின்படி தாழ்த்தப்பட்ட மக்களோ, அரிசன மக்களோ, மலைஜாதி மக்களோ 31-வயதுக்கு மேல் பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்குப் போக முடியாது. இப்படிப்பட்ட இந்த உத்தரவு கொஞ்சமும் சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒரு வார்த்தை. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் மேல் திருத்தச் சட்டம் வரும் என்று நமது அமைச்சர் அவர்கள் பொது விவாதத்திற்கு பதில் அளித்தபோது இறுதியாக சொன்னார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஒரு சட்டம் வரும் என்ற அறிகுறி எதையும் இதில் என்னால் பார்க்க முடியவில்லை.

[முற்பகல் 1-10]

ஒருவேளை அப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வரப்படும் என்று சொன்னால், அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், நிலம் வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலப் பிரபுகளுக்காக நான் வாதாடவில்லை. நகர்ப்புறத்திலே சொத்து அதிகமாக வைத்திருப்பவர்களுக்காக நான் வாதாடவில்லை. இந்த நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் என்று சொல்கின்றபோது, இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதற்கே ஒரு நீண்ட கதை இருக்கிறது. இந்த முழு வரலாறுக்கும் காரணமாக இருந்தது இந்த கழக அரசுதான் என்பதை இருக்கின்ற பைல்களைப் பார்த்தாலே தெரியும். நேரம் இல்லாத காரணத்தால் தொடர்ந்து சொல்வதற்கு முடியவில்லை.

இங்கிருந்து சென்ற குறிப்பை வைத்துக் கொண்டுதான், மத்திய அரசாங்கம் சட்டம் செய்தது. மொத்தமாக 5 லட்சத்திற்குமேல் ஒருவருக்கு சொத்து இருக்கக்கூடாது என்று முதலில் மத்திய அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டது. அப்படி ஒரு உத்தரவு போட முடியாது, என்று, இங்கே ஒரு குழு, இப்போது பொதுப்பணித்துறை செயலாளராக இருக்கும் விஜயராகவன் என்ற அதிகாரியைக் கொண்ட கமிட்டி ஒன்று அவர் தலைமையில் அமைக்கப்பட்டு, அந்தக் குழு ஆராய்ந்து ஒரு அறிக்கை தயார் செய்து, அந்த அறிக்கை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி,

இந்தச் சட்டத்திலே என்ன சங்கடம், என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் விளக்கியதற்குப்பிறகுதான் இந்த நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் நோக்கம் பெரும் பணக்காரர்கள் பெரும்பகுதியான நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, அதிக விலைக்கு விற்க முடியாது. இன்னும் இலவசமாக, தேவையில்லாத நிலங்களை அவர்கள் வைத்திருக்கக் கூடாது என்று இதுபோன்ற நோக்கத்திற்காக வந்ததே தவிர, ஏழை மக்களின் வாழ்வை பாதிக்கக்கூடிய வகையிலே, ஏழைத் தொழிலாளர்களை பாதிக்கக்கூடிய வகையிலே இது கொண்டு வரப்படவில்லை. இன்றைக்கு கட்டடம் பழுது பார்க்கின்றவர்கள், கட்டுகின்றவர்கள் ஏறக்குறைய இரண்டு லட்சம் பேர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் காரணமாக, கட்டடம் கட்ட அனுமதி கொடுப்பதில்லை. கட்டட அனுமதி கொடுக்கப்படாததால், கட்டட வேலை நடைபெறுவதில்லை. இந்த அனுமதியைக் கொடுக்காததால், இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் ஏழைகளே தவிர, பணக்காரரர்கள் அல்ல. ஆகவே, இந்த ஏழைகளின் வாழ்வின் நலனைக் கருதி, இந்தச் சட்டத்திலே எத்தகைய திருத்தங்கள் கொண்டு வரலாம் என்பதைப்பற்றி விரைவிலே இந்த அரசாங்கம் முடிவு செய்து, இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொண்டு, இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன் நன்றி வணக்கம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை மானியக் கோரிக்கையின் மேல் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பேசிய ஒவ்வொருவரும் கூறிய கருத்துக்களுக்கு பதில் சொல்லிக் கொண்டிருப்பதானால், நேரம் அதிகமாகும் என்ற காரணத்திற்காக குறிப்பாகவும், சிறப்பாகவும் எழுப்பிய பிரச்னைகளுக்கு மட்டும் நான் பதில் கூறி அமரலாம் என்று கருதுகிறேன்.

இங்கே பேசிய சில உறுப்பினர்கள் அரசு சட்டம் பிறப்பித்ததற்குப் பிறகும், ஏழை விவசாயிகளிடமிருந்தும், நொடிந்து போனவர்களிடமிருந்தும், இயற்கையின் சீற்றத்தினால் அனைத்தையும் இழந்து நிற்பவர்களிடமிருந்து வரி வசூலிக்கக் கூடாது என்று ஆணை பிறப்பித்ததற்குப் பிறகும், அந்தக் காரியத்தில் இன்னும் கெடுபிடி நடக்கிறது என்றும், ஜப்தி செய்கின்ற முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது என்றும், அந்தக் கொடுமையிலே இருந்து விடுபட முடியாமல் தவிக்கிறார்கள் என்றும், கூத்தகுடி சண்முகம் அவர்கள் இங்கே பேசும் போது எடுத்துச் சொன்னார்கள்

எந்தெந்தப் பகுதிகளில் அப்படி நடைபெறுகின்றன என்பதைப்பற்றி அவர்கள் அரசின் கவனத்திற்குத் தெளிவாகவும், குறிப்பாகவும் தகவல் தருவார்களானால் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை நான் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு கூத்தகுடி சண்முகம் அவர்கள் பேசும்போது ஜமாபந்தி என்ற ஒரு அமைப்பு வெள்ளைக்காரன் காலத்தில் உருவாக்கப்பட்ட அமைப்பு என்றும் அந்த அமைப்பு தொடர்ந்து நடப்பது ஏதோ வெள்ளைக்கார ஆட்சி இங்கே இருக்கிறதோ என்ற உணர்வை மக்கள் மத்தியில் உருவாக்க உறுதுணையாக அமைந்து போகும் என்ற அச்சத்தை வெளியிட்டு "எதற்காக இந்த ஜமாபந்தி?" என்று கோபத்தோடு கேட்டார். ஒரு சண்முகம் அப்படிச் சொன்னார்.

அதற்குப் பதில் சொன்ன ப.உ. சண்முகம் அவர்கள் "ஜமாபந்தி முறையில் தவறுகள் இருக்கக்கூடும்; ஆனால் அந்த முறை நியாயமான ஒன்றுதான்; நல்ல அமைப்புதான்; அந்த அமைப்பிலே தவறுகள் நடைபெற்ற காரணத்தாலே தவறுகளைக் களைவதற்குப் பதிலாக அமைப்புகளையே அழிக்க முற்படுவது நியாயமாக இராது" என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். சென்ற சட்டமன்றக் கூட்டத்திலும் இந்த ஜமாபந்தி முறை அழிக்கப்பட வேண்டும், ஒழிக்கப்பட வேண்டுமென்று காரசாரமாக உறுப்பினர்கள் விவாதித்தார்கள்.

தி.மு.க. ஆட்சிக் கட்சியாக இருந்தபோது ஒரு டெஸ்ட் கேசாக ஜமாபந்தி முறையை ஒழித்தார்கள். அதற்குப் பிறகு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன என்று தெரிந்ததற்குப் பிறகு மீண்டும் அந்த அமைப்பு முறை இருக்கட்டும் என்ற கருத்தில் ஜமாபந்தி முறைக்கு மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டது. இரு தரப்பினர் பேசிய கருத்துக்களையும் கேட்டு எப்படிப்பட்ட முறையில் நாம் இந்தப் பிரச்சினைகளை அணுகலாம் என்பதைப் பற்றி பரிசீலிக்கும் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய கூத்தகுடி சண்முகம் அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். வரியே போடக்கூடாது என்று கூடச் சொன்னார்கள். எந்தெந்தப் பகுதிகளில் வரியே போடக்கூடாது என்பதற்கு விளக்கம் சொன்னார்கள். கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வரி வசூலிக்கக்கூடாது என்று சொன்னார்கள்.

அதைப்போல் சுவாமிதாஸ் அவர்கள் பேசும்போது இந்த நிலவரியே கூடாது.—இதுதான் எங்கள் ஜனதா அரசின் கொள்கை என்று குறிப்பிட்டார். உறுதியாக அந்தக் கருத்தைத் தெரிவித்ததற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்

பட்டிருக்கிறேன். என்றாலும் ஜனதா அரசு எங்களைப் பார்த்து கேட்டுக் கொள்வதெல்லாம் விவசாயிகளுக்கு குறைந்த அளவு விலையில் உரம் தருகிறீர்கள், விதை தருகிறீர்கள், போதுமான கருவிகளை வழங்குகிறீர்கள்; இத்தனையும் அவர்களுக்கு வழங்கி விட்டு அவர்களில் அதிகமாக தாங்குகிற சக்தி படைத்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு நீங்கள் ஏன் வேளாண்மை வருமான வரி விதிக்கக்கூடாது என்று எங்களை மத்திய சர்க்கார் கேட்கிறது என்பதை நான் "நிலவரியே கூடாது, இது எங்கள் உறுதியான கொள்கை" என்று சொல்லுகிற சுவாமிதாஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். சுவாமிதாஸ் அவர்கள் ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள் என்று நம்புகிறேன்.

<u>திரு. ஏ. சுவாமிதாஸ்</u> : நானும் அதைத்தான் சொன்னேன். விவசாய வருமான வரியைப் போடலாம், மற்ற வரிகளை எடுத்து விடலாம் என்றுதான் சொன்னேன்.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்</u> : நில வரியே கூடாது என்ற கருத்தை நான் சொல்லவில்லை. ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ள நஞ்சை நிலங்களுக்கு நில வரியை ரத்து செய்ய வேண்டும் என்றுதான் சொன்னேன். நில வரியே போடக்கூடாது என்று சொல்லவில்லை.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : கூத்தகுடி சண்முகம் அவர்கள் பேசும்போது சொன்னதை நான் எழுதி வைத்திருக்கிறேன். குறிப்பேட்டில் கூட இருக்குமென்று கருதுகிறேன். நில வரியே கூடாது என்று நீங்கள் பேசவில்லை என்றால் நல்லது.

அப்படிப்பட்ட கருத்துக்கள் இங்கே பேசப்பட்டன. இங்கே வெட்டுப் பிரேரணைகளின் பேரில் பல மெம்பர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நான் சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசன நல மான்யக் கோரிக்கையின்மீது பேசும்போது இங்கே ஒரு கருத்தைச் சில பேர்கள் எடுத்து வைத்தார்கள் என்று என்னிடம் தகவல் தரப்பட்டது.

[பிற்பகல் 1-20]

அது என்னவென்றால் கர்ணமாக இருப்பவர்களோ அல்லது கிராம அதிகாரிகளோ அரிசன வகுப்பைப் பொறுத்தவரையில் இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் என்னிடம் வந்திருக்கிற குறிப்பு அவர்களும் அந்தப் பொறுப்பிலே இருக்கிறார்கள் என்ற குறிப்பு தரப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு இங்கே ரெவின்யூ போர்டு நிர்வாகத்தைப் பற்றிக் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அப்படி ஒரு ரெவின்யூ போர்டு இருக்க வேண்டுமா ? அப்படி ஒரு போர்டு இருப்பதனுல் என்ன லாபம் ? அதுவும் ஜமாபந்தியைப் போல வெள்ளைக்காரர்களால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்புதானே? ஆகவே, அதை எடுத்துவிட வேண்டும் என்று சில கருத்துக்கள் வெட்டுப் பிரேரணைகள் மூலம் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே உணர்வோடு நம்முடைய ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த அரசு கெய்வார் அவர்களின் தலைமையில் ஒரு குழுவைப் போட்டு, ரெவின்யூ போர்டை திருத்தி அமைப்பதா அல்லது அடியோடு எடுத்துவிடுவதா என்பதைப்பற்றி ஆலோசனை சொல்வதற்காக—ஒன் மென் கமிஷன் என்ற அளவுக்கு—ஒரு குழு அமைக்கப்பட்டது. நான் சுருக்கமாகச் சொல்லிவிட விரும்புகிறேன். அதற்குக் கொடுக்கப்பட்ட டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸில் கொடுக்கப்பட்டு இருப்பது :

Terms of Reference:

(1) To examine legal, administrative and financial implications of the abolition of the Board of Revenue;

(2) To suggest feasible alternative arrangements for attending to various functions which are currently being attended to by the Board of Revenue:

(3) To examine incidentally related matters and to make suitable recommendation.

என்பதுதான்.

அந்தக் குழு தெரிவித்த கருத்து, இந்த அமைப்பு அப்படியே இருக்கலாம் என்று தெரிவித்துவிட்டு, அது இருக்க வேண்டியது இல்லை என்ற உணர்வு ஆட்சிக்கு இருக்குமானுல் அதற்கு ஆல்டர்னேடிவ் சஜ்ஜஷன்ஸ் ஆக சில கருத்துக்களை அந்தக் குழு தெரிவித்து இருக்கிறது. நான் அவற்றை எல்லாம் விவரமாகப் படித்துக்கொண்டிருக்க விரும்பவில்லை. ரீஜினல் கமிஷனர்ஸ் போடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பாலிஸியின் ஆல்டர்னேடிவ் அரேன்ஜ்மென்ட்ஸ் செய்வார்களேயானுல் ரெவின்யூ போர்டை அடியோடு எடுத்துவிடுவது என்பது சாத்தியக் கூறுன காரியம் என்று கெய்வார் அவர்கள் தெரிவித்து இருக்கிருர்கள் என்று சொல்லி, இந்த அரசு, ரெவின்யூ போர்டை அடியோடு எடுத்துவிடுவதா அல்லது வைத்துக் கொண்டிருப்பதா என்ன முடிவு எடுக்க இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்கு

இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் ஆர்வம் காட்டுவார்களானுல் இது குறித்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றுல் அதைப்பற்றிப் பேசிய அத்தனை பேர்களும், ஜமாபந்திப் பற்றிப் பேசிய சண்முகம் அவர்கள் ஜமாபந்தி முறையே வேண்டாம் என்று ஆவேசமாகப் பேசுவார் என்று கருதிய நேரத்திலே அந்த முறை இருக்க வேண்டுமென்று அவர் வாதிட ஆரம்பித்திருக்கிருர் என்று நினைக்கிறபோது, எப்படிப்பட்ட கவனத்தோடு நாம் இப்படிப்பட்ட பிரச்சினைகளை அணுக வேண்டும் என்பதை திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பேசியதிலிருந்து நான் புரிந்து கொண்டிருக்கிறேன். திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்களுக்கு அதிலே குறைபாடுகள் இருக்கிற காரணத்தால் அவைகள் பல முட்டுக்கட்டைகளை உருவாக்குகின்றன. ஆகவே எடுத்துவிட வேண்டும் என்று அவர் கூறுவதில் அவருக்கு என்று சில நியாயங்கள் இருக்கக்கூடும் என்பதை நான் மறுக்கவில்லை. அதை எடுத்ததற்குப் பிறகு எப்படிப்பட்ட சூழ்நிலை அமையும் என்பதை சண்முகம் அவர்கள் எடுத்துச் சொல்லி, தவறுகளைப் போக்க வேண்டுமே தவிர, அமைப்பையே எடுத்துவிடக் கூடாது எனற இந்த இரண்டுக்கும் மத்தியிலே ஆந்திர அரசு அப்படிப்பட்ட உணர்வோடு அதை ஏன் அபாலிஷ் செய்யக்கூடாது என்று ஆராய்வதற்காக ஒரு குழுவைப் போட்டு, அது நான் ஏற்கனவே எடுத்துச் சொன்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறது.

இந்த அரசைப் பொறுத்தவரையில் அதை ஆராய்ந்துகொண்டிருக்கிறது என்பதை மட்டும் மெத்தப்பணிவன்போடு உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். இதை அப்படியே விட்டு விடலாம் என்று மாரிமுத்து அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிருர்கள். அவர்களின் கருத்தை அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதையும் மாரிமுத்து அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப்பிறகு இங்கே பொது மக்கள் தொடர்புத் திட்டம் பற்றிப் பேசப்பட்டது. நமது எதிர்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்த பொழுது மனுநீதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அவர்கள் செயல்படுத்தினுர்கள். கிராம மக்களின் குறைகளை அந்தந்த இடங்களிலேயே தீர்த்து வைப்பது 'on-the-spot decision' எடுத்துக் குறைகளைத் தீர்த்து வைப்பது எனற முடிவில் அவர்கள் அந்தத் திட்டத்தை கொண்டு வந்தார்கள். நல்ல திட்டங்களைக் கொண்டுவரும்பொழுது பாராட்ட வேண்டும், நல்ல திட்டங்களாக அது அமையாமல் போகும்பொழுது சுட்டிக்காட்ட வேண்டும், நல்ல திட்டங்களே அல்ல என்று கருதுகிறபொழுது அதைக் கைவிட்டு விடுங்கள் என்று கேட்டுக்கொள்ளவதும் மரபு. இயற்கை. அந்த அடிப்படையில் நான் தெரிவித்துக் கொள்கிறேன், 1977-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் முடிய பெறப்பட்ட மனுக்கள் 76,561. அந்த மனுக்களில் முடிவுகள் எடுக்கப்பட்டவை

60,490 மனுக்கள்மீது. இதுவொரு சாதாரண சாதனையாக நான் கருதவில்லை. நல்ல சாதனையாக நான் கருதுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் உண்மையிலேயே நல்ல ஒரு திட்டம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதற்குப்பிறகு இங்கே ப. உ. சண்முகம் அவர்கள் ஒன்றை எனக்குச் சொன்னார்கள். அது என்னவென்றால், போன கொள்கைக் குறிப்பேட்டில் கிராம அதிகாரிகளுக்கு விநியோகத்திற்குக் கொடுக்கப்பட்ட புத்தகங்கள், பட்டா பாஸ் புத்தகம், ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து ஐம்பத்தாறு என்று சொல்லி விட்டு, ஆனால் இந்தத் தடவை தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்று எண்பது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே, இது எவ்வளவு பெரிய தவறு என்று சொல்லிவிட்டு, வழக்கம் போல் அவர்கள் சொல்லுகின்ற வார்த்தைகளைச் சொன்னார்கள், அதிகாரிகள் இப்படியெல்லாம் தவருகப் புள்ளி விவரங்கள் கொடுக்கலாமா, இது என்ன நியாயம் என்று கேட்டார்கள். அதிகாரிகளின் நோக்கத்தை சண்முகம் அவர்கள் சந்தேகிக்கிருர்கள் என்று நான் நிச்சயம் கருத மாட்டேன். ஆனால் தவறு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் நிச்சயமாகத் தெரிவிக்க விரும்புகிறேன், ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன். எப்படி அது தவருக ஆயிற்று என்றால், விநியோகத்திற்காகக் கொடுக்கப்பட்ட பட்டா பாஸ் புத்தகங்கள் ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து ஐம்பத்தாறு, கிராம அதிகாரிகளுக்கு. ஆனால் இந்த ஆண்டு கொடுத்த புள்ளிவிவரம் விவசாயிகளுக்குக் கொடுத்து முடிக்கப்பட்ட பட்டா விவரம் தான் (குறுக்கீடு) அந்த வரி இல்லை, ஆனால் அது தானே தவிர மற்றபடி புள்ளி விவரங்கள் துள்ளி வருகின்றன என்பதை சண்முகம் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு சண்முகம் அவர்கள் என்று நான் கருதுகிறேன், இன்னொன்றையும் சொன்னார்கள். அதைச் சொல்லும் பொழுது கொஞ்சம் ஆவேசத்தோடு சொன்னார்கள். குடியரசுத் தலைவர் ஆட்சி அமலிலே இருந்தபொழுது ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் இவர்களுக்கெல்லாம் வயது வரம்பு இல்லை என்றும், ஆனால் குடியரசுத் தலைவரின் ஆட்சி நடத்துகொண்டிருந்த பொழுது என்று சண்முகம் அவர்கள் பேசிக்கொண்டிருக்க, பக்கத்திலேயிருந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆர். வி. சுப்பிரமணியம், ஆர். வி. சுப்பிரமணியம் என்று அதைச் சுட்டிக் காட்டி (குறுக்கீடு) ஆலோசகர் ஆர். வி. சுப்பிரமணியம் என்று சொல்லி, நான் கூடக் கேட்டேன், "ப்ராம்ப்டர்"-ஆக இருக்கிருர்களா என்று கேட்டேன், சண்முகம் மறந்துவிடக்கூடாது என்பதற்காக அதைச் சொன்னார்கள்.

நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புவது, சண்முகம் அவர்கள் ஒத்துக்கொள்கிருர்களோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை, வயது வரம்பு இல்லை என்று வையுங்கள், 42 அல்லது 45 வயதில் வருகிருர்கள் என்று வையுங்கள், அவர்கள் தங்களது பதவிக் காலம் முடிவடையும் பொழுது ஐந்து அல்லது ஆறு வருஷம் என்ற அளவிற்கு வரும்பொழுது, பெறுகின்ற நல்ல வாய்ப்புக்களை அவர்கள் பெற முடியாமல் ஒரு குறிப்பிட்ட எல்லைக் கோட்டோடு அவர்கள் ஆயுள் முடிந்து விடுகிறது, பதவி முடிந்து விடுகிறது என்பதை அருள்கூர்ந்து மறந்து விடக் கூடாது. ஆகவே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கின்றேன்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆகையினாலே 31 வயது என்று இருந்தால், கிட்டதட்ட 19 வருஷங்கள் அவர்களது கைவசம் இருக்கும். அதிலே அவர்கள் பதவி உயர்வு பெறுவதற்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். அந்த வாய்ப்பை, இப்படிப்பட்ட வயது வரம்பு முறை இல்லாமல் போனால், நிச்சயமாக அவர்களுக்கு, மற்ற வாய்ப்புக்களை இழக்கக்கூடிய நிலைமை வரும் என்பதை நான் சண்முகம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, வயது வரம்பு பிற்பட்ட ஜாதியினருக்கு 30 என்று ஏற்கெனவே இருந்தது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் வயதுவரம்பு, இல்லாமல் இருந்தது. அந்த வயது வரம்பு இல்லாமல் இருந்த காலத்திலே யாரும் 50 வயதிலே சர்வீஸ் கமிஷன் போய்விடவில்லை, தேர்வுக்கு வரவில்லை. 33, 35 வயதில்தான் வருஷா, வருஷம் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தினார்கள். அந்த வரம்பு இல்லாத வகையில், இதுவரையிலே இருந்த உரிமையை, குடியரசுத் தலைவர் ஆட்சியிலே, பறித்து விட்டார்கள். வயது வரம்பு இல்லாமலிருக்க வேணடுமென்று நல்ல நோக்கத்தோடு சொன்னேனே தவிர, வேறு நோக்கத்தோடு அல்ல.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அந்த உரிமை இப்பொழுது கொண்டு வந்திருக்கிற இந்த ஜி. ஓ. மூலம் எந்தக் காரணத்தைக் கொண்டும் அழிக்கப்பட முடியாது என்பதையும் ஏனென்றால் அப்பொழுது 31 வயது போட்ட பொழுது பெரும்பாலும் வந்தவர்கள் அந்த வயது படைத்தவர்களாகவே அதிகமாக இருந்தார்கள்என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஏதாவது ஆபத்தான சூழ்நிலை கிளம்பு

மானால், அதுபற்றி ஆலோசிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் சண்முகம் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நிதியமைச்சர் அவர்கள் ஆலோசகருடைய பெயரைக் கூடக் குறிப்பிட்டார்கள். மறைந்து கிடக்கின்ற புதை பொருளை நான் இங்கே வெளியாக்க விரும்பவில்லை. அதனால் எந்த ஆபத்தும் ஏற்பட்டு விடாதுஎன்று சொன்னார்கள். ஆட்களைப் பொறுத்தல்ல, தி.மு.க. ஆட்சியோ, அல்லது அ.தி.மு.க. ஆட்சியோ இருக்கிற நேரத்தில் ஆபத்து வராமல் காப்பாற்றப் படலாம். இப்பொழுதே நாம் அதற்கு ஒரு வழி முறை செய்து, ஏற்பட்டு விட்ட ஆபத்தை நாம் குறைத்துக் விட்டால்தான் எதிர்காலத்திலே நாம் இருக்கிறோமோ, இல்லையோ, அந்தச் சமுதாயத்திற்கு ஆபத்து வராமல் காப்பாற்ற வேண்டும். எனவே, 1976-ஆம் ஆண்டு போடப்பட்ட அந்தத் திடீர் உத்தரவு வேறு நோக்கத்தோடு போடப்பட்டது என்பதைப் புரிந்துகொண்டு, அதை ரத்து செய்வதுதான் முறையாக இருக்கும் என்பதை முதலமைச்சரவர்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நல்ல நோக்கத்தொடு கூறினாலும், தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் திராவிட இயக்கம்தான் தொன்று தொட்டு ஆளப் போகிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படியே ஒருவேளை மாறினால், வந்தவர்கள் அதை மாற்றுவதற்கு வெகு நேரம் ஆகாது. ஆகவே, இப்படி நாம் செய்தாலும், அந்த எண்ணத்தைப் படைத்தவர்கள், ஒத்துக்கொள்ள மனம் இல்லாதவர்கள், ஆட்சிக்கு வருவார்களானால், நிச்சயமாக மாற்றப்படும். ஆகவே, இருக்கிற உத்திரவாதத்தை நம்பி, எங்களை நம்பி, சந்தேகத்தை அவர்கள் விளக்கியிருக்கிறார்கள் என்றும், அந்த வாக்குறுதியை அவர்கள் நம்புவார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: சர்வீஸ் கமிஷன் விவகாரம் இது. அவர்கள் இப்பொழுதிருக்கிற ஆணையைக் காட்டித் தப்பித்துக் கொள்ள முயல்வார்கள். ஏனென்றால், சர்வீஸ் கமிஷனில் அரசாங்கம் நேரடியாக தலையிட முடியாது. எனவேதான் எதிர்காலத்தில் அப்படி சட்டம் போடமாட்டார்கள் என்று விட்டு விடாமல் அந்த ஆணையை நாம் மாற்ற வேண்டும். அப்படி யாராவது போட்டால், அப்பொழுது ஒரு போராட்டமே நாமெல்லாம் சேர்ந்தே கூட நடத்தி, அதை மாற்றி விட முடியும் என்று அவர்களுக்கு உறுதியை அளிக்கிறேன். ஆகவே, எதிர்காலத்திலே வராது என்று நம்பியிராமல் இப்பொழுதே வாய்ப்பைப் பயன்படுத்தி மாற்ற என்ன சங்கடம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சங்கடம் யாருக்கும் இல்லை, சஞ்சலம் இருக்கிறது. ஏனென்றால், 31 வயது என்று சொல்லும்போது, இன்னும் கொஞ்சம் அக்கறையோடு, வேகமாக வந்து சேர்வார்கள். இதிலே அவர்கள் உன்னிப்பாக ஆர்வத்தோடு, அலட்சிய மனப்பாங்கற்று, வேகத்தோடு வந்து சேருவார்கள் என்ற அவசிய நோக்கத்தோடுதான் இதைக் கொண்டு வருகிறோமே தவிர, சர்வீஸ் கமிஷனில் நாம் ஏற்படுத்தித் தருகிற விதிமுறைகள் அவர்கள் செயல்படுத்தும்போது, அதிலே தலையிட முடியாது என்றாலும், நிதி அமைச்சரவர்கள் சொல்லியதைப் போல், அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும்போது, நிச்சயமாக இந்த அரசு மாற்றும் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியபோது எப்படி இருந்தாலும் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் தமிழகத்தை ஆளமுடியும் என்று உறுதியாக சொன்னார்கள். திராவிட இயக்கம் என்பது தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழர்களா, அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களா, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவா அவர்களே, திராவிடர்கள் என்பது தாழ்த்தப்பட்டவர்கள் என்று தொடங்கி, ஆதிதிராவிடர்கள் என்று மாறி இன்று தமிழர்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற பூர்வ குடிகள் என்று ஆகிவிட்டிருக்கிறது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலிருந்து இந்த விவாதம் வருகிற போது மிகப் பெரிய கேடு திராவிடர் இயக்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்று ம.உ.ச. ஆரம்பித்தார். நான் என்ன சொல்கிறேன் என்றால மலை சாதியினரும், அரிசனங்களும்தானா திராவிடர்கள். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகம் வருகிறது. ஆகவே மலை சாதியினரும், அரிசனங்களும்தான் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மற்றவர்கள் எல்லாம் திராவிடர்கள் இல்லாததுபோல் கருத்தோட்டம் வந்தது. அதில் கட்டாயம் எல்லோரும் சேர்ந்திருக்கிற காரணத்தால் தயவு செய்து பின்தங்கியவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் என்று சொல்லலாமே தவிர, திராவிட இயக்கம் என்று சரடு ஓட்டம் வரக் கூடாது என்பது என்னுடைய கருத்து, அதற்காக விளக்கம் தேவை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் தங்களை திராவிடர் இல்லாதவர் என்று கருத மாட்டார் என்று நம்புகிறேன். திராவிட இயக்கம் ஒரு இலட்சியக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்ட

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 21

இயக்கம், என்பதை தயவு செய்து தெரிந்து கொள்ள வேண்டும். இந்த தாழ்த்தப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், மலைசாதியினர்கள், பூர்வ குடிகள் என்று ஒதுக்கப்படக் கூடாது என்ற தத்துவத்தின் அடிப்படையில் எல்லோரும் சமம் என்று சொல்லுகின்ற இயக்கம் திராவிட இயக்கம்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> நான் இந்தப் பிரச்னையில் மேலும் புக விரும்பவில்லை, அதற்கு ஒரு முற்றுப் புள்ளியை முதலமைச்சர் அவர்கள் வைத்துவிட்ட பிறகு.

இங்கே வெட்டுப் பிரேரணையில் ஒரு சிலர் மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று, நிர்வாக வசதிக்காக பிரிக்க வேண்டும் என்று கேட்டார்கள். பெரிய மாவட்டங்களை நிர்வாக வசதிக்காக பிரிக்கும் பணி அரசின் நிதி வசதிக்குட்பட்டு 7, 8 ஆண்டுகளில் பரவலாக செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்று. இந்த விஷயத்தைப் பற்றி ஏற்கனவே நிர்வாக சீர்திருத்தக் குழு நமது அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. அதற்கொப்ப இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவும் அதற்கான தலைநகரங்களைத் தேர்ந்தெடுக்கவும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மக்கள் வசதியையும் நிர்வாக வசதியையும் கருத்தில் கொண்டு புதிய கோட்டங்கள்—தாலுக்காக்கள் உருவாக்கப்படுகின்றன. ஏற்கனவே உள்ள துணை தாலுகாக்களை முழு தாலுகாக்களாக தரம் உயர்த்தி உள்ளது. 1971-லே கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தரம் உயர்த்தப்பட்ட 14 தாலுகாக்களோடு இன்னும் 29 துணைத் தாலுகாக்கள் தரம் உயர்த்தப்படல் வேண்டும்.

திரு. சாமிதாஸ் கவனத்திற்காகச் சொல்லுகிறேன் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1978—79-ல் பத்மநாபபுரம் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒரு புதிய கோட்டம் உருவாக்கவும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள குன்னூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒரு புதிய வட்டத்தை உருவாக்கவும், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோவில் துணை வட்டத்தை முழு வட்டமாக தரமுயர்த்தவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு இங்கே பிரச்சினைகளைக் கிளப்பியவர்கள், கிராம அதிகாரிகளைப் பற்றிச் சொன்னார்கள். அதிகாரிகளாக நியமிக்கும் தகுதி உடையவர்களைப் பற்றிச் சொன்னார்கள்

1978 மார்ச் 21] [திரு. கி. மனோகரன்]

நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் அப்படிப்பட்ட அதிகாரிகளில் தமிழ்நாட்டில் 43 பெண்கள் கர்ணங்களாகவும் 21 பெண்கள் கிராம முன்சீப்புகளாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தற்போது தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த சிலரே கிராம அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே நான் அதைப்பற்றி இங்கே தெரிவித்திருக்கிறேன்.

அதற்குப் பிறகு இங்கே பேசியவர்கள் நிலச் சீர்திருத்தம், மற்றும் குத்தகை உரிமையைப் பற்றித் தங்களது கருத்துக்களைச் சொன்னார்கள்;

[பிற்பகல் 1—40]

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை சாகுபடி செய்வதற்கு வேளாண்மைத் துறைக்கு உரிமை வழங்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. மேற்படி நிலங்களை . . . .

<u>திரு. மா. மணிமாறன் :</u> மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, கிராம உத்யோகஸ்தர்களாக சிலரை நியமித்து இருப்பதாகச் சொன்னார்கள். ஆயிரம் பேர் இருக்கும் இடத்தில் 50 பேர் கூட இல்லை. ஆகவே, புதிதாக நியமிக்கும்போது, கோட்டா முறையில் எத்தனை பேர் வர வேண்டுமோ அவர்களை நியமிக்க அரசு முன் வருமா ? இப்போது எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதைச் சொன்னால் நலமாக இருக்கும்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். போதுமான இடங்கள் காலியாகும்போது அந்த காலி இடங்களில் நியமிக்க அரசு நிச்சயமாக முற்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களைச் சாகுபடி செய்யும் உரிமை வேளாண்மைத் துறைக்கு கொடுக்கப்போவது இல்லை. அரசாங்கப் பண்ணை நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு வேண்டுமானால் சாகுபடி செய்து விடலாம். அப்படிச் செய்கிற போது சமய நிறுவனங்களுக்குத் தேவையான பொருள் கிடைக்காமல் பாதிக்கப்படக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, எடுத்த எடுப்பிலேயே, முதல் நோக்கத்திலேயே ஏற்கக்கூடியது அல்ல என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு இங்கே எல்லோரும் அந்தக் கருத்தைத்தான் திருப்பித் திருப்பி வற்புறுத்தி இருக்கிறார்கள். கம்பவுன்டிங் பற்றி சொன்னார்கள். நான் பெரிய நிலத் திமிங்கலங்களுக்காகப் பேசவில்லை என்று ப.உ.ச. கூறினார். அவர் சொல்லும்போது, அந்த கம்பவுன்டிங் இருக்கிற காரணத்தாலே சிறிய சிறிய அளவிற்கு நிலம் வைத்துக் கொண்டு இருப்பவர்கள், நீலகிரி மலைப் பகுதி

யிலும், கொடைக்கானல் மலைப்பகுதியிலும் இருப்பவர்கள் பெரும்பாலும் எழுத்தறிவு அற்றவர்கள் என்றும், ஆகவே, கணக்குகளை எழுதி வைத்துக் கொண்டு இருக்க முடியாது என்றும், அது பெரிய பெரிய நிலப் பிரபுக்களின் பிரச்னை அல்ல என்றும், சிறு விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும் ஒன்று என்றும் எடுத்துச் சொன்னார்கள்.

அந்த இரண்டு தரப்பிலிருந்தும் ஆட்கள் என்னிடம் வந்து கோரிக்கைகளை எடுத்துச் சொன்னார்கள். கொடைக்கானல் பகுதியிலே இருந்து அந்தச் சிறு விவசாயிகளைச் சேர்ந்தவர்களும் வந்தார்கள், ஊட்டியிலே இருப்பவர்களும் வந்தார்கள், அவர்கள் தெரிவித்த கருத்து, கம்பவுண்டிங் லெவி இருக்கட்டும், வேண்டுமானால் அதிகமாக நீங்கள் வரிகளைப் போட்டுக் கொள்ளுங்கள். நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம். அந்தச் சிக்கலில் எங்களை மாட்டி வைக்காதீர்கள் என்று சொன்னார்கள். என்னிடத்தில் கேட்டார்கள். நான் அதைப் பற்றி நிச்சயம் பரிசீலித்து, ஏற்கனவே அவர்களுக்கு இருந்த பழைய முறையைக் கையாள முடியுமா என்பதைப் பற்றி முடிவு எடுத்து, அப்பிராபிரியேஷன் பில்லில் பேசுகிறபோது இந்த அரசின் கொள்கை என்ன என்பதை அறிவிக்கிறேன் என்று தெரிவித்து இருப்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் இப்போது நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதற்குப் பிறகு, கடைசியாக நான் சொல்ல விரும்புவது வில்லேஜ் ஆபிசர்ஸ்-கிராம அதிகாரிகளாக இருப்பவர்கள் இது வரை பெறாத ஒரு சலுகையை இப்போது அவர்கள் பெற இருக்கிறார்கள். வெள்ளம்-புயலால் பாதிக்கப்பட்டபோது, மற்றவர்களுக்கு ரூ. 200 என்ற அளவிற்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. நான் மகிழ்ச்சியோடு இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. "[illegible] அட்வான்ஸ்" ஆக அவர்களுக்கு ரூ.100 வழங்குவது என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, கிராம அதிகாரிகள் இப்போது கிளர்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே 4-5 மாவட்டங்களில் அவர்கள் ஆரம்பித்து விட்டார்கள் என்றும், அது தொடர்கதையாக மாறிக் கொண்டு இருக்கிறது என்றும் தெரிவித்து இருக்கிறார்கள். நான் மெத்த பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் உறுப்புகளாக இருப்பவர்கள் இப்படிப்பட்ட காரியங்களில் ஒவ்வொருவராகத் தொடர்ந்து ஈடுபட ஆரம்பித்தால் நிர்வாக இயந்திரங்கள் எப்படி இயங்கும் என்பதை பொறுப்புணர்ச்சியுடன் சிந்தித்து பார்க்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிரச்னைகள் என்பது எல்லோருக்கும் உண்டு. அவைகள் எப்போதும் போடப்பட்டிருக்கின்ற வெறும் இரும்புத் துண்டாக இருக்காது. அது ரப்பரைப் போன்று இழுக்க இழுக்க வந்து கொண்டே இருக்கும். பிரச்சனைகளும் அத்தகையது தான். தேவைகள் வளர வளர வாங்குகிற சக்தி ஒரு வேளை குறைவதால், அதிகமான பணம் எங்களுக்குத் தேவை என்று மனோபாவம் வளர்வது இயற்கை நான் மறுக்கவில்லை. ஆனால் அதைக்கேட்பதற்குக் கூட இப்படிப்பட்ட பொறுப்பான பதவியில் இருப்பவர்களுக்கு சில வரம்பு முறைகள் இருக்கின்றன. அந்த வரம்பு முறைகள் மீறப்பட்டால் எந்த அரசும் இயங்காது. ஒரு அரசு இயங்கவில்லை என்றால், ஒரு அரசை உருவாக்கி, அதை இயங்க வைத்து, அவர்களுக்குத் தேவையான நல்ல காரியங்களைச் செய்து தரும் மக்களுக்கு நாம் துரோகம் இழைத்தவர்களாக ஆவோம் என்பதை மற்றவர்கள் மறந்து விடக்கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம அதிகாரிகளை நான் இந்த சபையின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக கேட்டுக்கொள்வது உடனடியாக உங்களுடைய கிளர்ச்சியைக் கைவிடுங்கள்; பேசுவதற்கு நீங்கள் தயாராக வாருங்கள்; நல்ல முடிவை உங்களுக்குத் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தக் காரணத்தாலும் கிளர்ச்சியை கைவிடமாட்டோம், தொடர்ந்து நடத்துவோம்; நீங்கள்தான் அடிபணிய வேண்டும் என்று நீங்கள் மிரட்டினால் இந்த அரசு பணியாது என்பதை கிராம அதிகாரிகளுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து நீங்கள் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள்; உங்கள் குறைகளை அனுதாபத்தோடு இந்த அரசு கவனிக்கும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு இங்கே திரு. சுவாமிதாஸ் அவர்கள் சொன்னதாக ஞாபகம், கன்னியாகுமரி மாவட்டத்தில் இல்லை என்று சொன்னார்கள்: தலையாரி, வெட்டியான், தோட்டி, நீர்கண்டி— இவைகள் எல்லாம் கேட்பதற்கே அருவருப்பாக இருக்கின்றன: இவ்வளவு விஞ்ஞான வளர்ச்சி அடைந்திருக்கும் இந்தக் காலத்திலும், நாகரீக முன்னேற்றம் அடைந்திருக்கும் இந்தக்காலத்திலும் காட்டுமிராண்டித்தனமான இந்தப் பெயர்கள் எல்லாம் இருக்க வேண்டுமா என்று அவர்கள் மட்டுமல்ல; எல்லோரும் கேட்டார்கள். ஆகையால் அரசின் சார்பில் இப்படிப்பட்ட சில பெயர்களை மாற்றியமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது. அந்த முடிவின்படி இனி தலையாரி என்பதற்குப் பதிலாக கிராம காவலர், வெட்டியான் அல்லது தோட்டி என்பதற்குப் பதிலாக கிராம பணியாளர், நீர்கண்டி என்பதற்குப் பதிலாக பாசனக்காவலர் என்று இருக்கும். இது நாகரீக வளர்ச்சி யடைந்த விஞ்ஞான

யுகத்திற்கு ஏற்ற பெயர்களாக இருக்கும் என்று நம்புகிறேன், இந்த அரசு அதைச் செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு நான் தெரிவிக்க விரும்புவது, அரசாங்கத்திலே பணியாற்றுகிற ஊழியர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசாங்க நிலங்கள் வழங்கக்கூடாது என்று உறுதியாக இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, நான் குறிப்பிட்டது, இந்தமாதிரி பதவிகள் தேவைதானா என்று. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கனவே வில்லேஜ் ஆபீசர்ஸ், அக்கவுண்டண்ட்ஸ் என்ற நிலையில்தான் அமைப்பு இருந்தது. அது சரியான அமைப்பு. இந்தப் பதவிகள் எல்லாம் தேவைதானா? இவைகளை எடுத்துவிட்டால் என்ன? என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: திரு. சுவாமிதாஸ் அவர்கள் பேசுகின்ற பழைய கன்னியாகுமரி மாவட்ட உணர்விலேயே பேசுகிறார்கள். மாறிய சூழ்நிலைக்கேற்ப அவர்கள் தமிழ்நாட்டை கொஞ்சம் பார்க்க வேண்டும். மெர்ஜர் ஆகி எத்தனையோ ஆண்டுகள் போனபிறகும் இன்னும் பழைய கன்னியாகுமரி உணர்வோடுதான் பேசியிருக்கிறார்கள்.

இப்போது அவர்களுடைய பதவியை ஒழித்துவிடுங்கள், இந்த பதவிகள் தேவையில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டால், எப்படிப்பட்ட ஒரு ஆபத்தான சூழ்நிலை உருவாகும் என்பதை எண்ணிப்பார்த்து, இந்த ஆபத்தான யோசனையை ஏற்கும் இக்கட்டான சந்தர்ப்பத்தை அவர்கள் ஏற்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

அதற்குப் பிறகு பேசியவர்கள் 'அர்பன் லாண்ட் சீலிங்' என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். திரு. சண்முகம் அவர்கள் கேட்டதாக ஞாபகம். நில சீர்திருத்தத்தைப்பற்றியும் கேட்டார்கள்.

திரு. ப.உ. சண்முகம்: நிலச்சீர்திருத்தம் தேசியக் கொள்கை அதைப்பற்றிக் கேட்டேன். அர்பன் என்று சொன்னீர்கள்; லாண்ட் சீலிங் சட்டம் வருவதாகச் சொன்னீர்கள்; எப்போது வரும் என்று கேட்டேன்?

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: 'ப்ராட் தேஷனல் கைட் லைன்ஸ்' என்று நான் குறிப்பிட்டதற்குக் காரணம் லாண்ட் சீலிங்கில் அவர்கள் சில முறைகளை வைத்திருக்கிறார்கள். அந்த முறை நமக்கு ஒத்துவருமா என்று பார்க்க வேண்டும். ஒட்டு மொத்தமாக இந்தியா என்ற அளவுக்கு கணக்குப் போட்டு, சில முறைகளை வைத்திருக்கிறார்கள். அந்த முறைகள் நமக்கு ஒத்து

வருமானால் ஏற்றுக்கொள்ளலாம், ஒத்துவரவில்லை என்றால் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இந்த நேரத்தில அவர்களுக்குத் தெரிவித்து, லாண்ட் ரீ பார்ம்ஸ் ஆக்ட் இந்த தொடர் கூட்டத்திலே— மனனிக்க வேண்டும்; அர்பன் லாண்ட் சீலிங் ஆக்ட் இந்த தொடர் கூட்டத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும், எவ்வளவு விரைவில் தாக்கல் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் தாக்கல் செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அதன்மூலம் இதுவரை ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு பரிகாரம் காணும் வகையில் இது அமையும் என்பதையும் சூசகமாக நண்பர் அவர்களுக்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள் விரும்பிக்கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பசிக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே இந்த அளவுக்கு நான் தெரிவித்த கருத்துக்களை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் வாங்கி, இந்த மானியங்களை நிறைவேற்றித் தருப்படி கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-50)

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: பேரவைத் தலைவரவர்களே, அந்த உதவித்தொகை புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மாத்திரமா அல்லது தமிழ்நாடு முழுவதுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மட்டும்தான்.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவரவர்களே, கூடலூரைப் பொருத்தவரை இருக்கிற ஜென்மி லேண்ட் அபாலிஷன் ஆக்டைப் பற்றி அரசு என்ன முடிவு எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, அது கோர்ட்டுக்கு போய் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் ப.உ. சண்முகம் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அது பற்றி பரிசீலித்ததற்குப் பிறகு இந்த சபைக்கு அந்தக் கருத்தைத் தெரிவிக்கிறேன், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குத்தகைப் பாக்கியை வசூலிப்பதில் கோர்ட் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பது பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். அதுபற்றி இந்த அவையிலேயே மசோதா நிறைவேற்றப்பட்டு இன்னும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக காத்திருப்பதாகச் சொல்லப்பட்டது. அது எப்போது வரும்? இதற்கிடையில் கோர்ட் நடவடிக்கையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கி.மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே உறுப்பினர் குறிப்பிட்டதற்கு பதில் சொல்ல வேண்டுமென்று நான் கருதினேன். விரைவில் குடியரசுத் தலைவர் ஒப்புதல் தருவார் என்று தெரிய வந்துள்ளது. அது விரைவிலே வரும்.

குடியரசுத் தலைவரின் ஒப்புதல் வந்தாயிற்று. ஆக இந்த அச்சம் இனிமேல் இருக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: பேரவைத் தலைவரவர்களே, ...லாக் ப்ரீ லான்டை ரெவின்யூ வேண்டாக மாற்றுகிற உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவரவர்களே, நிலவரி மிகவும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அடிசனல் வரி போன்ற வரிகள் குறைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இப்போது அதுபற்றி உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 1-க்கு திருவாளர்கள் எஸ்.ஜே.சாதிக்பாட்சா, திரு.ஓ.சுப்பிரமணியம், வி.கே. கோதண்டராமன், ஏ.சுவாமிதாஸ், பொ. உத்திராபதி மற்றும் எம்.ஏ.லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— " மானியக் கோரிக்கை எண். 1- நிலவரித்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,41,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 11-க்கு திருவாளர்கள் செஞ்சி. ந. இராமச்சந்திரன், சோ. பாலகிருஷ்ணன், எம். அண்ணாமலை, மு.ஆறுமுகம், செ. சிவசாமி, எம்.ஏ. லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி " மானியக் கோரிக்கை எண். 11 மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,04,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவை தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-55 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

*148. நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறைக்கான மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் உரை—1978-79 (தமிழ்).

*149. நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையின் 1978–79 ஆம் ஆண்டின் வரவு-செலவுக்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

**150. நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையின் 1978–79 ஆம் ஆண்டின் வரவு செலவுக்கான சாதனைத் திட்டம் (தமிழ்).

**151. நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை பற்றிய 1977–78 ஆம் ஆண்டுக்கான ஆய்வுரை (ஆங்கிலம், தமிழ்).

---

*18-3-1978 அன்று அனுப்பப்பெற்றன.

**19-3-1978 அன்று அனுப்பப்பெற்றன.

இணைப்பு I

நிலவரித்துறை.

[459ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

இயற்கையின் சீற்றங்கள்.

தீ, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றங்கள் நேர்கின்ற போது நிவாரண நிதியுதவி வழங்குவதற்காக உடனடி நடவடிக் கைகள் எடுக்கப்படுகின்றன ; மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, இருப்பிடம் ஆகியவையும் வழங்கப்படுகின்றன. தீ, வெள்ளம் போன்ற நேர்வுகளில், வீடுகளைப் புதுப்பித்துக்கொள் வதற்காக வீடு ஒன்றுக்கு அறுபது ரூபாய் ரொக்க மானியமும், உடைகளுக்காக குடும்பம் ஒன்றுக்கு இருபது ரூபாய் ரொக்க மானியமும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது. கீழே காட்டப்பட்டுள்ள தொகைக்கு மேற்படாமல் ரொக்க மானியம், உடை மானியம் ஆகியவை குறித்து ஆகும் மொத்தச் செலவிற்குக் கீழ்க்கண்டவாறு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப் பட்டுள்ளன:—

	ரூபாய்
வருவாய் வாரியம்	20,000
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்	10,000
வருவாய் கோட்ட அதிகாரிகள்	5,000
தாசில்தார்கள், தனித் துணைத் தாசில்தார்கள் ..	1,000
துணை வட்டங்களுக்குப் பொறுப்பாகவுள்ள தனித் துணைத் தாசில்தார்கள்.	500

2. தீ, வெள்ளம், ஏனைய இயற்கையின் சீற்றங்களால் பாதிக்கப் பட்டவர்களுக்குத் தகுந்த சொத்து அல்லது மற்றொரு நபரின் பிணையத்தின்பேரில் வீடுகளைப் புதுப்பித்துக் கொள்வதற்காக 1933 ஆம் ஆண்டு நில மேம்பாடு-உழவர் கடன்கள் (பொது) விதிகளில் கண்டுள்ள விதித்துறைகளின்கீழ், ரூ.1,000 வரை கடன்கள் வழங்கப்படுகின்றன. அரிசனங்களுக்கு மேற்சொன்ன கடன் வட்டியில்லாமல் வழங்கப்படுகிறது. வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கத்திற்குட்பட்டு, தாசில்தார்களும், தனித் துணைத் தாசில்தார்களும் இக்கடன்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளனர்.

பொதுவாக, தீ, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றங்களா உயிரிழந்த ஏழைக் குடும்பங்களுக்கு அல்லது ஏவாமையுற்றவ களுக்கு (அந்த இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டவர் குடும்பத்தைக் காப்பாற்றுபவராக இருக்கும் நேர்வில்) முத மைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உயர்ந்தளவு ஆயிர ரூபாய் வரை ரொக்க மானியம் அரசால் அளிக்கப்படுகிறது

3. நவம்பர் 1977-ல் நாகப்பட்டினத்தைப் புயல் மிகவும் கடுமையாகத் தாக்கியதின் விளைவாக, தமிழகம் எங்கும் வெள்ளம் ஏற்பட்டது. குறிப்பாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக் கோட்டை, இராமனுதபுரம், மதுரை, தென்னுற்காடு மாவட்டங் களில் மிகவும் சேதமேற்பட்டது "வெள்ள நிவாரணம், வெள்ளை யறிக்கை " ஒன்று டிசம்பர் 1977—ஜனவரி 1978-ல் நடை பெற்ற சட்டமன்றப் பேரவையிலும், சட்ட மன்றத்திலும் வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. வெள்ள நிவாரணப் பணிக்கு மத்திய அரசிடம் ரூ. 128 கோடி உதவி கோரப்பட்டது, மத்திய அரசு ரூ. 33.91 கோடியை தமிழ்நாட்டிற்கு ஒதுக்கியது. (குறுகிய காலக் கடனாக அளிக்கப்பட்ட ரூபாய் 2 கோடியும்,உணவு தானிய வினியோக வகையில் தரப்பட்ட ரூபாய் 2.6 கோடியும் இதில் அடங்கும்.) இம்மாநிலத்திற்கு 1977-ம் வருடம் நவம்பர் 27-ம் தேதி முதல் டிசம்பர் 2-ம் தேதி வரை வருகை தந்த மத்தியக் குழு மறுமுறையும் கூடி விரைவில் இம்மாநிலத்திற்கு வருகை தந்து புயல் மற்றும் வெள்ள நிவாரண பணிகளின் முன்னேற்றம் பற்றி ஆய்வு நடத்தி பரிந்துரை வழங்கும். மத்திய அரசு நமது தேவையை, முழுமையாக இல்லாவிடினும், கணிச மான அளவிற்குப் பூர்த்தி செய்யும் என நாம் நம்புகிறோம்.

சமீபத்தில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில், புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிகப்பட்ட பகுதிகளில் குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்று வதற்கு வருவாய்த் துறை அதிகாரிகள் வழங்கும் அனுவாரி சான்றிதழின் அடிப்படையில் 6 அணுவும் (37 பைசா) அதற்கு கீழும் விளைச்சல் இருந்தால் நிலவரி, தண்ணீர் மேல்வரி, உள் ளூர் மேல்வரி, கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, சிறப்பு நன்செய் தீர்வை, சிறப்புத் தண்ணீர் மேல்வரி, பணப்பயிர்களுக்கான வரி முதலியவற்றை முழு வதும் தள்ளுபடி செய்வதென அரசு அனுமதித்துள்ளது. எங்கெங்கு நிலவரி தள்ளுபடி செய்யப்படுகிறதோ அங்கு உள்ளூர் மேல்வரி மீதான மிகு வரியையும் (Local cess Surcharge) அதே அடிப்படையில் தள்ளுபடி செய்ய வேண்டு மென பஞ்சாயத்து ஒன்றியங்களைக் கேட்டுக்கொள்ளப்படும்.

எங்கெங்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதோ அங் கெல்லாம் நிலவரி, தண்ணீர் மேல்வரி, உள்ளூர் மேல்வரி, கூடு தல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி ஆகிய வற்றிற்கான பழைய பாக்கிகளையும், பாக்கி மற்றும் நடப்பு தக்காவி கடன் தவணைகளையும், 1387-ம் பசலியில் வசூலிப்பதை 1388-ம் பசலிக்கு ஒத்தி வைத்து அரசு அனுமதித்துள்ளது. இது போல் பஞ்சாயத்து யூனியன்களை உள்ளூர் மேல்வரி மீதான மிகு வரியின் (Local cess Surcharge) பழைய பாக்கிகள் வசூ லிப்பதைத் தள்ளி வைக்க கேட்டுக்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணிகள் பற்றிய குறிப்பு.

4. 1977–78 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தமிழ் நாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் வறட்சி நிலைமை நிலவியது. சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் வறட்சி நிலைமையே இல்லை. இவ்வரசு 1977–78 ஆம் ஆண்டில் வறட்சி நிலைமை குறித்து எடுக்கவேண்டிய தேவைகளை ஆராய்ந்து ரூபாய் 862'59 இலட்சத்திற்கான திட்டங்களை ஏற்றுக்கொண்டது. அத்திட்டங்கள் செயலாக்கும் பணி வெவ்வேறு நிலைகளில் வளர்ந்திருந்தது. இந்நிலையில் 1977 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் வீசிய புயல்களால் கடும் மழையும் வெள்ளமும் ஏற்பட்டது. அதன் விளைவாக தற்போது தமிழ்நாட்டிலுள்ள எந்த மாவட்டத்திலும் வறட்சி நிலைமை இல்லை.

நிலமற்ற ஏழை மக்களுக்கு சாகுபடி செய்வதற்காக தரிசு நில ஒப்படை பற்றிய குறிப்பு.

5. அரசின் கொள்கையின்படி விலைமதிக்கப்படாத நிலம், நேரடி சாகுபடியில் ஈடுபடும் நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகிறது. ஐந்து அல்லது அதற்குக் குறைவான நபர்களைக் கொண்டுள்ள குடும்பத்தையுடைய திங்கள் ஒன்றுக்கு ரூ. 200 அல்லது அதற்குக் குறைவான வருமானமுடைய ஒருவரும், ஐந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தையும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 அல்லது அதற்கு குறைவான வருமானத்தையும் உடைய ஒருவரும் 'ஏழை' என்று கருதப்படுகிறார்.

கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யக்கூடிய நிலத்தின் உச்ச அளவுப் பரப்பு, அவர் நிலம் ஏதேனும் வைத்திருப்பின் எல்லா நிலத்தின் பரப்பும் சேர்ந்து புன்செய் நிலமாக இருந்தால் 3 ஏக்கர் அல்லது நன்செய் நிலமாக இருந்தால் 1–1/2 ஏக்கராகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்கள் மிகவும் மதிப்புள்ளவையாதலால் ஒருவருக்கு ஒப்படை செய்யக்கூடிய நிலப்பரப்பில் உச்ச அளவு வரம்பு புன்செய் நிலமாக இருப்பின் 1 ஏக்கர் என்றும் நன்செய் நிலமாக இருப்பின் 1/2 ஏக்கர் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுக் காலத்திற்குள் நிலம் சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட வேண்டும். இந்நிலம் பத்தாண்டு காலத்திற்கு விற்கப்படவோ அல்லது உடைமை மாற்றம் செய்யப்படவோ கூடாது. இந்நிலம், ஒப்படை பெற்றவரால் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களால் அல்லது கூலி

ஆட்களால் சாகுபடி செய்யப்பட வேண்டும். வேறு வகையில் சாகுபடி செய்யப்படக்கூடாது. கடன்கள் வாங்குவதற்காக அத்தகைய நிலங்களை அவர்கள் வங்கிகளில் அடமானமாக வைக்கலாம்.

6. பயிரிடும் காரியத்திற்காக நிலம் ஒப்படை செய்வதற்கான முன்னுரிமை வரிசை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(1) போரில் இறந்துவிட்ட அல்லது ஏலாமை நிலை அடைந்த எல்லைப் பாதுகாப்புப் படைப் பணியாளர், வட்டார இராணுவப் பணியாளர் உட்பட இராணுவப் பணியாளரின் குடும்பங்கள் ;

(2) நிலமற்ற அரிசன, பழங்குடி மக்கள் ;

(2-ஏ) அடிமைத்தளையிலிருந்து விடுபட்ட தொழிலாளர்கள் [1976 ஆம் ஆண்டு கொத்தடிமை தொழில் முறை (ஒழிப்புச்) சட்டத்தின் (மத்திய சட்டம் 17/1976)] கீழ் ;

(3) எல்லைப் பாதுகாப்புப் படைப் பணியாளர் உட்பட தற்போது இராணுவப் பணியிலுள்ள நபர்கள் ;

(4) முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படைப் பணியாளர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் ;

(5) பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள் ;

(6) தங்கக் கட்டுப்பாடு ஆணை காரணமாக வேலையிழந்த பொற்கொல்லர்கள் ;

(7) முன்னாள் கள் இறக்குவோர் ;

(8) நிலமற்ற பிற ஏழை மக்கள்.

7. ஒப்படைக்குப் பெருமளவு நிலம் இருக்கும் கிராமங்களில் வருவாய்க் கோட்ட அலுவலர் எல்லா மாவட்டங்களிலும் அரிசனங்கள், பழங்குடியினருக்கு ஒப்படை செய்வதற்காக குறிப்பட்ட பகுதியை ஒதுக்குகிறார். அரிசனங்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்படும்போது ஒப்படை நிலம் பத்தாண்டுக்கு உடைமை மாற்றம் செய்யப்படவோ அல்லது விற்கப்படவோ கூடாது என்ற சிறப்பு நிபந்தனையும் பத்தாண்டுகளுக்குப் பின்னர் அந்நிலம் அரிசனங்களுக்கு மட்டுமே உடைமை மாற்றம் செய்யப்படலாம் அல்லது விற்கப்படலாம் என்ற சிறப்பு நிபந்தனையும் விதிக்கப்படுகின்றன. மேற் கூறிய நிலங்களின் நேர்வில் மேற் சொன்ன நிபந்தனைகள் மீறப்பட்டால் இழப்பீடு இன்றி அந்நிலங்கள் மீட்பதற்குட்பட்டவையாகும்.

தமிழ் நாட்டில் 1977 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல் டிசம்பர் மாதம் முடிய ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் பரப்பும், அதனுல் பயனடைந்தவர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஒப்படை செய்யப் பட்ட நிலத்தின் பரப்பு.	பயனடைந்தவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
ஏ. செ.	
26,736-42	22,416

8. பழங்குடியினர் நலன்: பழங்குடியினர் வைத்து வரும் நிலங்கள், அரசு ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள், தனியார் நிலங்கள், என்ற இரு வகைகளின் கீழ்வரும். அரசு ஒப்படை செய்த நிலங்களின் தேர்வில் பிரச்சனை ஏதுமில்லை. ஏனெனில், பழங்குடியினர் அல்லாதவர்களுக்கு உடமை மாற்றம் செய்யப் படுவதைத் தடுப்பதற்கு விதிமுறை உள்ளது. இந் நேர்வுகளில், எல்லா ஒப்படைகளையும் 100 சத விதமாக முழுவதும் ஆய்வு செய்தும், ஏற்கனவே பழங்குடியினர் அல்லாதோருக்கு விதிகளுக்குப் புறம்பாக உடைமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை மீண்டும் பெறுவதற்கு வருவாய் நிலை ஆணை எண். 1,5-40-ன் கீழ் நடவடிக்கை மேற் கொள்வதும் அவசியமாகும். அரசின் சமூக நலத்துறையிலிருந்து எல்லா மாவட்ட ஆட்சியாளர்களையும் இது பற்றி ஆய்வு செய்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

வீட்டு மனை ஒப்படை.

9. அரசு புறம்போக்கு நிலங்கள் அல்லது தரிசு நிலங்கள் வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு மனைகளாக இலவசமாக ஒப்படை செய்யப்படுகின்றன. சென்னை, மதுரை, மாநகரங்களிலும், கோயம்புத்தூர், திருச்சி நகராட்சிகளிலும் 750 சதுர அடி வரையிலும் மாநிலத்தின் பிற பகுதிகளில் 3 சென்ட் வரையிலும் வீட்டு மனைகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஏழை நபரை வரையறுப்பதற்கான பண வரம்பும் முன்னுரிமை வரிசையும் பயிரிடும் காரியத்திற்கு ஒப்படை செய்வதற்காக உள்ளது போலவே வீட்டு மனை ஒப்படைக்கும் பொருந்தும்.

கிராம நத்தம், மற்றும் அரசு புறம்போக்கிலுள்ள ஆட்சேபணைக்குட்படாத குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதின் மூலம் பெருமளவு வீட்டு மனைகள் ஒப்படை செய்யப் படுகின்றன;

10. குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்டதன் விளைவால் குடிசை மாற்று வாரியத்திற்கு அரசு நிலங்கள், தேவைப்படுவதை முன்னிட்டு சென்னை மாநகருக்குள் உள்ள அரசு நிலங்கள் சென்னை மாநகரின் 20 மைல் எல்லைக்குள் அமைந்துள்ள அரசு நிலங்கள், மதுரை மாநகர எல்லைக்குள், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் நகரங்களிலுள்ள அரசு நிலங்கள் எதுவும் ஒப்படை செய்யப்படக் கூடாது என்ற தடை 1971 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. பின்னர் 1973 ஆம் ஆண்டில் குடிசை மாற்று வாரியத்தின் இசைவிற்குட்பட்டு 1972 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் நாள் அன்று உள்ளபடி ஆட்சேபணைக்குட்படாத ஆக்ரமிப்புகளைப் பொறுத்த மட்டில் இத்தடை தளர்த்தப்பட்டது. எனினும் சென்னை பெரு நகர் வளர்ச்சி அதிகார மன்றத்தின் இசைவையும் இத்தகைய தேர்வுகளில் பெற வேண்டியுள்ளது.

சென்னை மற்றும் மதுரை மாநகரங்களிலும் கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய பெரிய நகரப் பகுதிகளிலும், மாநகர எல்லையோரப் பகுதிகளாக உள்ள செங்கல்பட்டு மாவட்டப் பகுதிகளிலும் 1977-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் நாள் அன்று உள்ளபடி வீடற்ற ஏழை மக்களால் குடிசைகள் மூலம் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள், அவை வருவாய்த்துறை நிலங்களில் அல்லது பொதுப் பணித் துறை நிலங்களில் மற்றும் மாநில நெடுஞ்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகளைச் சேர்ந்த நிலங்களில் அமைந்திருப்பினும், அகற்றப்படக் கூடாது என்றும் விதிகளுக்கு ஏற்ப அவை முறைப்படுத்தப்படலாம் என்றும், அரசு தற்பொழுது முடிவு செய்து அதற்கிணங்கக் கட்டளை பிறப்பித்திருக்கிறது.

இம் மாநிலத்திலுள்ள பிற பகுதிகளைப் பொறுத்த மட்டில் 1977-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் நாள் அன்று உள்ளபடி வீடற்ற ஏழை மக்களால் வீடுகள் கட்டிக் கொள்வதன் மூலம் அந்த ஆக்கிரமிப்பு இருந்தால், அத்தகைய ஆக்கிரமிப்புகளிலிருந்து அவர்களை வெளியேற்ற வேண்டாமென மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

எனினும் அரசால் கையகப்படுத்தப்பட்ட பட்டா நிலங்களிலும் (Acquired Land) அரசுத் துறைகளுக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு நகராட்சிக் கழகம் முதலியவை போன்ற இணைக்கப்பெற்ற ஸ்தாபனங்கள் (Corporate Bodies) குறிப்பான திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படக்கூடிய புறம்போக்கு நிலத்திலும், வீடற்ற ஏழை மக்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அதற்கு மேலே குறிக்கப்பட்ட ஆணையின் விதிகள் பொருந்தா.

11. குடியிருப்புப் பகுதிகளின் ஆட்சேபனைக்குட்படாத ஆக்கிரமிப்பை முறைப்படுத்தும் பணி மன நிறைவளிக்கும் வகையில் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது. வீட்டு மனை ஒப்படைப் பணியை விரைவு படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிற இடங்களிலெல்லாம் அவ்வப்போது மாவட்டங்களில் சிறப்புப் பணியாளர்களை நியமிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆட்சேபிக்கப்படாத ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துகின்ற வகையில் நிதி ஆண்டு 1976-77-இல் அரசு நிலங்களில் அமைந்திருந்த 1,65,567 வீட்டு மனைகள் ஒப்படை செய்யப்பட்டன. 1977-ஆம் ஆண்டில் ஏப்ரல் திங்கள் முதல் டிசம்பர் திங்கள் இறுதி வரை 30,540 வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

12. சென்னை மாநகரில் ஆதி ஆந்திர மக்கள் ஆக்ரமிப்பு செய்துள்ள நிலங்களை அவர்களுக்கு ஒப்படை செய்து முறைப் படுத்துதல்.—

பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ள ஆதிஆந்திர மக்களில் பெரும்பாலோர் சென்னை மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களாக வேலை செய்து வருகின்றனர். அவர்கள் அரசு நிலங்களிலும், சென்னை மாநகராட்சியிடம் உள்ள அரசு நிலங்களிலும், வீடுகளையும் குடிசைகளையும் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். அவர்கள் ஆக்கிரமிப்பிலுள்ள நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக ஒப்படை செய்ய வேண்டும் என்று கோரினர். அரசு அவர்கள் கோரிக்கைக்குப் பரிவுடன் இசைந்து, சென்னை மாநகரில் நிலத்தின் மதிப்பு அதிகமாக உள்ளதால் ஆதி ஆந்திர மக்கள் உடைமையில் இருக்கும் நிலங்களை 750 சதுர அடி வரை, ஒரு மனைக்கு 3,000 ரூபாய் வீதமும் 750 சதுர அடிக்குமேல் இருக்கும் நிலங்களுக்கு மனை ஒன்றுக்கு 6,000 ரூபாய் வீதமும் நிலக் கிரயம் கொடுக்கப்பட்டால் இந்த நிலங்களுக்கு பட்டா வழங்கலாம் என்று ஆணையிட்டது. ஆதி ஆந்திர மக்கள் சுலபமாக நிலக்கிரயத்தைக் கட்ட, நிலத்தின் விலையில் 15 சத வீதத்தை முன்பணமாக ஒரே தொகையாகவும், மீதத் தொகையை 10 மாதத் தவணைகளில் கட்டலாம் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

பட்டாப் புத்தகம்.

13. பட்டாதார் தம்முடைய நிலங்கள் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு பட்டாப் புத்தகத்தை வழங்குவதற்கான ஒரு திட்டத்தை 1972-ஆம் ஆண்டில் அரசு கொண்டுவந்தது. பட்டாப் புத்தகத்தில் பட்டதாரருடைய நிலம் தொடர்பான அதிகார பூர்வமான, விரிவான விவரங்கள் அடங்கியிருக்கும். அவையாவன: நில அளவைப் புல எண், பரப்பு வகைப்பாடு, நிலவரி செலுத்தியது. அரசிடமிருந்து அல்லது ஏனைய நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன், அதற்கான தொகைகளைத் திருப்பிச் செலுத்தியது ஆகியன. இத்தத் திட்டம்

செங்கை, நீலகிரி ஆகிய இரண்டு மாவட்டங்கள் நீங்கலாக, மாநிலம் முழுவதும் செயலில் இருக்கிறது. அந்த இரண்டு மாவட்டங்களில் மட்டும் சில தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக இத் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்படவில்லை.

பட்டாப் புத்தகத்தின் விலை 1 ரூபாயாகும். உழவர்களுக்கு பட்டாப் புத்தகங்களை வழங்கும் பணி புதுக் கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில் முடிவுற்றுள்ளது. இந்த மாவட்டங்களில் இந்தப் பணி நடைபெற்று வருகிறது.

இதுவரை 99,07,880 பட்டாப் புத்தகங்கள் பட்டாதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்ட பட்டாப் புத்தகங்களின் விலை ரூ. 99,07,880 ஆகும். இத் தொகையில் இதுவரை ரூ. 83,03,005.75 வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய ரூ. 16,04,861.25 வசூலிக்கப்படவில்லை. பூதான வாரியத் தலைவருக்கு 13 பட்டா புத்தகங்கள் இலவசமாக வழங்கப் பட்டிருக்கின்றன.

14. பட்டாப் புத்தகம் வழங்கும் திட்டத்தைப் பற்றிய மதிப்பீட்டாய்வு அறிக்கையின் மீது தொடர் நடவடிக்கை குறித்து விவாதிப்பதற்காக 1977-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் நாளில் நடைபெற்ற கூட்டத்தில் செய்யப்பட்ட முடிவுகளையொட்டி பட்டாப் புத்தகம் வழங்கு திட்டம் குறித்த எல்லாக் கருத்துக்களையும் ஆய்வு செய்து இத் திட்டத்தை மேம்படுத்துவது பற்றி பரிந்துரை அளிப்பதற்காக நில வருவாய் (முதன்மை) ஆணையாளர் தலைமையின்கீழ் 5 உறுப்பினர்கள் கொண்ட குழு வொன்றை வருவாய் வாரியம் (நிலவரி) அமைத்துள்ளது. இக் குழுவின் பரிவுரைகள் வரப்பெற்றதும், அவற்றைப் பரிசீலனை செய்து பட்டாப் புத்தகம் வழங்கு திட்டம் செயல்படுவதை எந்த அளவுக்கு மேம்படுத்த இயலும் என்பதைப் பற்றி அரசு முடிவெடுக்கும்.

தண்ணீர்த் தீர்வை விதங்கள்.

15. இம் மாநிலத்திலுள்ள நிலங்கள் பொதுவாக "நன்செய்" "புன்செய்" என்று இரண்டு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. நன்செய், புன்செய் நிலவரிகள், மண்ணின் இயல்பு, வேளாண்மை விளைபொருளின் விலைகள், பாசன வாயில்களுக்கு அருகாமையிலிருத்தல் ஆகியவற்றை ஒட்டி, மறு நிலவரி ஏற்பாட்டின்படி வரையறுக்கப்படுகின்றன. நன்செய் நிலங்களுக்கு வரையறுக்கப்படும் நிலவரியில் ஒருபகுதி தண்ணீர்த் தீர்வையாக விதிக்கப்படுவதாகும். புன்செய் நிலங்களைப் பொறுத்தவரையில் அரசுப் பாசன வாயில்களிலிருந்து தண்ணீர் பெறப்பட்டால் அந்த புன்செய் நில வரி விதிப்புக்குக் கூடுதலாகத் தண்ணீர்த் தீர்வை என்னும் தனிப்பட்ட கட்டணம் கூடுதலாக விதித்து

வசூலிக்கப்படுகிறது. தண்ணீர்த் தீர்வை தர நிலை வீத ஏற்பாட்டின்கீழ், தரநிலை வீத அளவீட்டின்படி வரையறுத்த தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுகிறது. இந்தத் தண்ணீர்த் தீர்வை பாசன வாயில்களின் வகைக் கேற்ப மாறும். பெரிய, சிறிய பாசனத் திட்டங்கள் தொடர்பாகவும், சிறுபாசன சிறப்புத் திட்டப் பணிகள் தொடர்பாகவும் தனிப்பட்ட தண்ணீர்த் தீர்வை விதங்கள் செயலில் உள்ளன.

16. தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை சட்டத்தைத் திருத்தி இயற்றப்பட்ட தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி—கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டம், 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1ம் நாள் செயலுக்கு வந்தது. இம் மாநிலத்திலுள்ள அரசுப் பாசன வாயில்களைப் பேணுவதற்காகவும் பொருள் இழப்பினைக் குறைப்பதற்காக என்றே இச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச் சட்டத்தின்கீழ் நிலங்கள் முதல்வகை, இரண்டாவது வகைப் பாசன வாயில்களின் மூலம் பாசனம் பெறுமாயின் அவற்றில் நன்செய் வரிக்குட்பட்ட நிலங்களின் மீது தனி நிலவரி ஒன்று செலுத்தப்பட வேண்டும். தண்ணீர்த் தீர்வைக்குட்பட்ட நிலங்களின்மீது தனித் தண்ணீர்த் தீர்வை செலுத்தப்பட வேண்டும். இத் தீர்வைகள் யாவும் ஏற்கனவே செலுத்தப்படத்தக்கதாயுள்ள நிலவரி, மேல்வரி, கூடுதல் நிலவரி அல்லது கூடுதல் தண்ணீர் வரி, ஆகியவற்றிற்கு மேல் இவற்றுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டியனவாகும்.

1386 ஆம் பசலி ஆண்டில் பருவ நிலைகள் மோசமாக இருந்ததையொட்டி இந்த வரி விதிப்பைத் தள்ளி வைக்க வேண்டுமென கோரிக்கைகள் வந்ததற்கிணங்க வரி வசூல் நிறுத்தி வைக்கப்பட்டது. 1386 பசலிக்கான தனி நன்செய் தீர்வை மற்றும் தனித் தண்ணீர் மேல்வரியை வசூலிக்க வேண்டாமென்றும் 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதி முதல் மேற்படி வரி வீதங்களை பின்வருமாறு குறைப்பதெனவும் அரசு முடிவு செய்துள்ளது :—

(i) முதல் தர பாசன ஆதாரங்களிலிருந்து பாசனம் பெறுதல்.	(அ) " துபசல் " பயிர் நீங்கலாகப் பிற பயிர் ஒவ்வொன்றுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 12-லிருந்து ரூ. 10 ஆகவும்.
	(இ) " துபசல் " பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 18-லிருந்து ரூ. 15 ஆகவும்.

(ii) இரண்டாம் தர பாசன ஆதாரங்களிலிருந்து பாசனம் பெறுதல்.	(அ) " துபசல் " பயிர் நீங்கலாக பிற பயிர் ஒன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 10-லிருந்து ரூ. 8 ஆகவும்.
	(இ) " துபசல் " பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 15-லிருந்து ரூ. 12 ஆகவும்.

மேலும், சில குறிப்பிட்ட திட்டங்களினால் பயன்பெறும் பாசனத்திற்கு, முதல் வகை அல்லது இரண்டாம் வகைப் பாசன வாயில்களிலிருந்து பயன்பெறும் பாசனத்திற்கு விதிக்கப்படும் வீதங்களுக்கு இணையான வீதங்களில் தனித் தண்ணீர் தீர்வை விதிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

தனி நன்செய் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி விதிப்பில் சில மாற்றங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்க வேண்டி தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய் தீர்வை மற்றும் தனித் தண்ணீர் மேல்வரி (திருத்தம்) சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

17. பணப் பயிர்கள் நிலவரி விதிப்பு.—இம்மாநிலத்தின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு பணப்பயிர்கள் நிலவரி விதிப்புச் சட்டம் 1976 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் [illegible] திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் சில பணப் பயிர்கள் வளர்க்கப்படுகின்ற நிலங்களின்மீது பணப்பயிர் நிலவரி கீழ்க்காணும் வீதங்களில் விதித்து வசூலிக்கப்பட்டது :—

(அ) திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலைக் கொடி, மஞ்சள் ஆகிய பயிர்களைப் பொறுத்தவரை ஆண்டிற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 20.

(இ) புகையிலை, மிளகாய், பாசனம் பெற்று பயிரிடப்படும் பருத்தி, நிலக்கடலை ஆகியவற்றிற்கு ஆண்டிற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 12·50.

1386 ஆம் பசலி ஆண்டில் இம் மாநிலம் முழுவதும் பருவ நிலைகள் மோசமாக இருந்ததையொட்டி 1976 ஆம் ஆண்டு பணப் பயிர்கள் நிலவரி விதிப்புச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படத்தக்க பணப்பயிர் வரி விதிப்பை அரசு தள்ளுபடி செய்துள்ளது. மேலும் திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றிற்கு பசலி ஆண்டு 1387 முதல் இவ்வரியை ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு 20 ரூபாயிலிருந்து 15 ரூபாயாகக் குறைத்துள்ளது. புகையிலை, மிளகாய்,

பாசனப் பருத்தி, பாசன நிலக்கடலை ஆகியவற்றின் மீதான வரியை 1387 ஆம் பசலியிலிருந்து (1977 ஜூலை 1ஆம் நாளிலிருந்து) அறவே நீக்கியுள்ளது.

நிலச் சீர்திருத்தங்கள்.

நில உச்சவரம்பு.

18. தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு வரையறுத்தல்) சட்டத்தின்கீழ் (அவ்வப்போது திருத்தப்பட்டவாறு) ஒரு குடும்பத்திற்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ற ஒரு மொத்த உச்சவரம்பிற்கு உட்பட்டு 5 பேர் அடங்கிய ஒரு குடும்பத்திற்கு அனுமதிக்கப்படத்தக்க மொத்த உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்களாகும் (ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பது பாசனம் அளிக்கப்பட்ட நல்ல தரமான 0·8 சாதாரண ஏக்கர் நிலத்திலிருந்து பாசன வசதியற்ற மோசமான தரமுள்ள நிலத்தின் 4 சாதாரண ஏக்கர் நிலம் வரை தரத்திற்கேற்ப அமையும்). இச்சட்டத்தில் சில விலக்குகளுக்கும் சலுகைகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை நில உச்சவரம்புச் சட்டத்தினை செயல்படுத்துவதில் 1977 நவம்பர் 30-ம் நாளன்று உள்ளபடி ஏற்பட்ட முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	(ஏக்கர்கள்.)
(i) உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பளவு ..	94,112
(ii) அனுபோகத்தில் எடுத்துக்கொண்ட பரப்பளவு.	90,546
(iii) வழங்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு ..	85,998

(iv) பயனடைந்தோரின் எண்ணிக்கை —

	எண்ணிக்கை.	பரப்பளவு (ஏக்கர்கள்).
(a) அரிசனங்கள் ..	17,438	27,970
(b) பழங்குடியினர் ..	17	46
(c) ஏனையோர் ..	33,112	57,982
மொத்தம் ..	50,567	85,998

சட்டத்தை தேசிய வழிகாட்டி கொள்கைகளுக்கிணங்க விளங்கச் செய்வதற்காகவும், இதன் நடைமுறைகளை எளிமைப்படுத்தி சீர்மைத்துச் செயல்படுவதற்காகவும் எதிர்மாறான நீதிமன்ற

தீர்ப்புகளிலிருந்து எழக்கூடிய சட்ட சம்பந்தமான இடர்பாடுகளிலிருந்து விடுபடுவதற்காகவும், இச்சட்டத்தை திருத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் இச்சட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றின் செல்திறன் குறித்து சட்டப்படிக்கான நடவடிக்கைகள் எதனையும் நீதிமன்றத்தில் எடுப்பதிலிருந்து இவைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

குத்தகை உரிமம்.

19. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகளைப் பதிவு செய்தல்) சட்டத்தின் கீழ் குத்தகைதாரர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்காக குத்தகை உரிமை சீர்திருத்தங்களின்கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1977 நவம்பர் திங்கள் 30-ம் நாளன்றுள்ளபடி பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களின் எண்ணிக்கை 4,08,497. நிலத்தின் பரப்பளவு 6,14,709 ஏக்கர்கள்.

தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 1969) நியாய ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள பகுதிகள் நீங்கலாக பிற பகுதிகளில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின்கீழ் 1976-ம் ஆண்டில் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு 19-வது சட்டம் கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தின் ஏழு வட்டங்களில் (அதாவது மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி, நன்னிலம், நாகப்பட்டினம், திருவாரூர்) செயலில் உள்ளது. சாகுபடிக் காலத்திலும் அறுவடைக் காலத்திலும் வேளாண்மைத் தொழிலாளர்களில் ஆண், பெண் இருபாலர்க்கும் கொடுக்க வேண்டிய ஊதியங்களுக்கு இது வகை செய்கிறது. ஒரே மாதிரியான பணிக்கு அல்லது ஒரே மாதிரித் தன்மை கொண்ட பணிக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும், சமமான ஊதியம் அளிக்கப்படுவதற்கும், பணியாளர்களுக்குத் தகுந்தவாறு அதிகாரம் அளிப்பதன் மூலம் நியாய ஊதியங்கள் வழங்குவதை மேலும் தீவிரமாக அமுல்படுத்துவதற்கும் 1969 ஆம் ஆண்டு 19-வது சட்டத்தைத் திருத்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

20. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களின் பாதி அளவை நிலத்தின் சொந்தக்காரர் தன் சொந்த சாகுபடிக்கு திரும்பப் பெற்றுக்கொள்ள வகைசெய்த 4-ஏ-வது பிரிவை நீக்குவதற்காக 1976-ல் திருத்தப்பட்டது. இதனால் பயிரிடு குத்தகைதாரர்களுக்கு குத்தகையின் நிரந்தரத் தன்மை கிடைக்க உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த பயிரிடு குத்தகைதாரர்களை, குத்தகைத் தொகை செலுத்தத் தவறினாலும், நிலத்திற்கோ அல்லது

அதில் உள்ள பயிர்களுக்கோ கேடு விளைவிக்கக்கூடிய அல்லது பாதகம் விளைவிக்கக்கூடிய கவனமின்மைக்காகவும், நிலத்தைப் பயிரிடாமல் விட்டுவிடுவதற்காகவும், நிலத்தை வேளாண்மை அல்லது தோட்டப் பயிர் தவிர பிற காரியங்களுக்குப் பயன்படுத்தினாலும், நிலத்தின் சொந்தக்காரருக்கு உள்ள நில உரிமையை வேண்டுமென்றே மறுத்தாலும், மட்டுமே அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்ற முடியும்.

21. 1976ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதியுடன் முடிவடையும் பசலி ஆண்டுக்கும் (1385ஆம் பசலி ஆண்டு) அதற்கு முந்திய யாதொரு பசலி ஆண்டுக்கும் நிலச்சொந்தக்காரர்களுக்குச் செலுத்தவேண்டிய குத்தகை பாக்கிக்காக பயிரிடும் குத்தகைக்காரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்குத் தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு) திருத்தச் சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 4/1977) மூலம் திருத்தம் செய்யப்பட்ட தமிழ்நாடு 1976ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 36/1976) வகை செய்கிறது. 1978 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் தேதி உட்பட்ட அந்நாள் வரை செயலிலிருந்த இச்சட்டம் மீண்டும் 1978ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் 3-ன்படி, 1978ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15ஆம் தேதி உட்பட்ட அந்நாள் வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

22. மாநில சட்ட மன்றம் 1977 டிசம்பர், 1978 ஜனவரியில் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், தமிழ்நாடு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரணம்) மசோதாவை நிறைவேற்றியது. புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைத்தாரர்களை அவர்கள் 1978ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் நாளுடன் முடிவடைகிற பசலி ஆண்டுக்கான (பசலி 1387) குத்தகைத் தொகையை அல்லது முந்திய பசலி ஆண்டுகளுக்கான நிலுவைகளைச் செலுத்தாத காரணத்திற்காக. அவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றம் செய்வதையும், குத்தகைத் தொகையை வசூலிக்கும் நடவடிக்கைகளிலிருந்தும், 1979ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் தேதி வரை, பாதுகாக்க வகை செய்துள்ள இம் மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது.

குடியிருப்பு.

23. தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமம் வழங்கல்) சட்டம், 1971ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் தேதிப்படி குடியிருப்பு ஒன்றில், குடியிருப்புதாரர்களாகவோ, உரிமைதாரர்களாகவோ உழவுத் தொழிலாளர்கள் இருப்பின், சொந்தம் கொண்டாட உரிமை வழங்குகிறது. இந்தச் சட்டப்படி இதுவரை 1,75,258 பட்டாக்கள் வழங்கப்

பட்டுள்ளன. இதில் அரிசனங்களுக்கு வழங்கிய 1,02,423 பட்டாக்களும், பின் தங்கிய வகுப்பினருக்கு வழங்கிய 40,616 பட்டாக்களும், ஏனையோருக்கு வழங்கிய 32,219 பட்டாக்களும் அடங்கும், 1971ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் தேதிப்படி குடியிருப்புத்தாரர்களாகவோ, உரிமைதாரர்களாகவோ குடியிருப்பில் உள்ள மலைத் தோட்டமல்லாத உழவர்களும், உழவுத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில், 1977ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் தேதி முதல் இந்தச் சட்டம் இம்மாநிலத்திலுள்ள மலைத்தோட்ட பகுதிகளுக்கு விரிவாக்கப்பட்டது. சென்னை மாநகர் நீங்கலாகவும், தஞ்சாவூர், நீலகிரி மாவட்டங்கள் தவிர, இதர மாவட்டங்களில் உள்ள நகராட்சிகள், நகரியங்கள் நீங்கலாகவும் இம்மாநிலம் முழுவதற்கும் இச்சட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. இது, மலைத் தோட்டங்களுக்கும் மலைத் தோட்ட தொழிலாளர்களுக்கும் பொருந்தாது.

24. தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமம் வழங்கல்) சட்டத்தை மாதிரியாகக் கொண்டு அதேமுறையில் இயற்றப்பட்ட தமிழ்நாடு 1976ஆம் ஆண்டு கைவினைக் கலைஞர்கள் (குடியிருப்பு உரிமம் வழங்கல்) சட்டம், கிராமக் கைவினைக் கலைஞர்களுக்கு 1975ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதி, குடியிருப்புதாரர்களாகவோ, உரிமைதாரர்களாகவோ அனுபோகத்தில் இருக்கும் குடியிருப்புகளின் உரிமையை வழங்குகிறது. இந்தச் சட்டம் சென்னை, மதுரை மாநகர்கள் நீங்கலாகவும், நகராட்சி அல்லது நகரியம் ஒன்றில் உள்ள பகுதிகள் நீங்கலாகவும் இம்மாநிலம் முழுவதற்கும் பொருந்தும். இந்தச் சட்டப்படி ஏறத்தாழ 15,000 கிராமக் கைவினைக் கலைஞர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடையாட்களை ஒழித்தல்.

25. அரசு மேற்கொண்ட வேளாண்மைச் சீர்திருத்த நடவடிக்கைகளில் முக்கியமானது ஜமீன், இனம், கீழ்க்குத்தகை எஸ்டேட்டுகளில் உள்ள உழவர்களுக்கும் அரசுக்கும் இடையே உள்ள இடையாட்களை ஒழித்ததாகும். அண்மை ஆண்டுகளில் இது குறித்து கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு கணிசமான அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது—

	எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	பரப்பளவு சதுர கிலோ மீட்டரில்.
(அ) தமிழ்நாடு 1948ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் ;		
1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை	5,134	29,931,21

	எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	பரப்பளவு சதுர கிலோ மீட்டரில்.
2. 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி	5,134	29,931,21
3. எஞ்சியவை :		
(ஆ) தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல் சட்டம்).		
1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை	2.091	4,149.26
2. 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி	2,044	3,401.96
3. எஞ்சியவை	47	747.30
(இ) தமிழ்நாடு, 1963ஆம் ஆண்டு சிறு இனும்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் ..		
1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை	13,562	4,048.04
2. 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி	13,557	4,042.37
3. எஞ்சியவை	5	5.67
(ஈ) தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு குத்தகைக் கிராமங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல் சட்டம்)		
1. எடுத்துக்கொள்ளப்பட்ட பகுதி	13	83.20
2. நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி	13	83.20
3. எஞ்சியவை	..	..

மேலே குறிப்பிட்டுள்ள, தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் ரயத்துவாரி நிலவரி ஏற்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டிய எஞ்சியுள்ள 47 இனும் எஸ்டேட்டுகளில் 40 இனும் எஸ்டேட்டுகள், உயர்நீதி மன்றம், மற்றும் பிற சிவில் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் தடை ஆணைகளின் கீழ் வருகின்றன. நீதி மன்றங்களால் இந்தத் தடை ஆணைகள் ரத்து செய்யப்பட்ட பிறகே இந்த எஸ்டேட்டுகளில் நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள முடியும்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சித்தூர் கிராமம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள இளவங்கார்குடி கிராமம் ஆகிய இரண்டு இனும் எஸ்டேட்டுகளிலும் நிலவரித் திட்டப்பணி நடந்து கொண்டிருக்கிறது.

கல்ராயன் ஜாகீர் இனும்கள் :—

26. மீதியுள்ள ஐந்து ஜாகீர் எஸ்டேட்டுகள் 671.73 சதுர கிலோ மீட்டர்கள் மொத்த பரப்பளவுள்ள 140 கிராமங்களைக் கொண்டிருக்கின்றன. அவையாவன : தென் ஆற்காடு மாவட்டத்தில் (1) ஆரியக்கவுண்டன் ஜாகீர், (2) குறும்பக் கவுண்டன் ஜாகீர், (3) ஜடையக் கவுண்டன் ஜாகீர், சேலம் மாவட்டத்தில், (1) பெரிய கல்ராயன் மேல்நாடு, (2) பெரிய கல்ராயன் கீழ் நாடு. தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின்கீழ், ஜாகீர்தார்கள் தாங்கள் தொடுத்த வழக்குகளை 1976-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் திரும்பப் பெற்றதால் மேற்சொன்ன ஜாகீர் கிராமங்களை அரசு கைப்பற்றியது.

இந்த எல்லா ஜாகீர்களிலும், ஜாகீர்தார்களால் கிராமக் கணக்குகள் எதுவும் வைத்து வரப்படவில்லை. அவர்கள் அந்த நிலங்களை சுவாதீனத்தில் வைத்திருந்ததற்கும், உரிமை உடைமைக்கும் சான்றாக, நிலவரி ரசீதுகள் பட்டா முதலியவை ஏதுமில்லை. மலைச் சாதியினர் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றுச் சாகுபடி முறையை பின்பற்றியுள்ளனர். எனவே, சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். இப்பணியாளர்களைக் கொண்டு நிலத்தை அனுபோகத்தில் வைத்துள்ள உழவர்களின் பெயர், நிலத்தின் பரப்பு முதலியவைகளைக் காட்டக் கூடிய வகையில், ஆங்காங்குள்ள உண்மை நிலைமைகளையொட்டி, கிராம நிலப்பதிவேடுகள் துரிதமாகத் தயாரிக்கப்பட்டன. இந்த பகுதிகளுக்குப் பொருந்துகின்ற வரி மதிப்பீடு வீதங்களை முடிவு செய்வதற்காக நேரில் சென்று நிலஅளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டன. தனி அளவைத் தொகுப்பினர்களால் இந்த ஜாகீர் கிராமங்களில் நிலஅளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகள் நடந்தேறி வருகின்றன.

1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 -ஆம் நாளன்றுள்ளபடி மொத்த பரப்பளவான 671·73 சதுர கிலோ மீட்டரில் 517·62 சதுர கிலோ மீட்டர் பொறுத்தமட்டில் நில அளவைப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

இதற்கிடையில், மலைஜாதியினர், அவர்களுடைய அனுபோக உரிமையை உறுதிபடுத்துவதற்குத் தேவையான ஆவணங்களைப் பெற்று, அவற்றின் மூலம் மேம்பட்ட வேளாண்மை முறைகள் வாயிலாக அவர்கள் தங்களது முன்னேற்றத்தைத் தேடிக் கொள்வதற்கான வங்கிகளிலிருந்து உதவி பெறுவதற்கு உதவும் வகையில் தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் தேவையான விசாரணைகளை விரைவாகச் செய்ய அரசு கட்டளையிட்டுள்ளது.

நாற்பத்தி ஒன்பது கிராமங்கள் அடங்கிய 14, 192-92-5 ஹெக்டரில், சட்டப்பூர்வ விசாரணைப் பணிகள் முடிந்துள்ளன.

பட்டா அளிக்கப்பட்டு பயன் அடைந்தவர்கள் :

27—பல்வேறு இனாம் ஒழிப்புச் சட்டங்களின் விதித்துறைகளின் கீழ் ரயத்துவாரி பட்டாக்கள் வழங்கப்பெற்ற நபர்களின் எண்ணிக்கையைப் பின்வரும் விவர அறிக்கை காட்டுகிறது :—

சட்டத்தின் பெயர்.	பயனடைந்தோரின் எண்ணிக்கை.	ஒதுக்கப்பட்ட பட்டா நிலத்தின் பரப்பளவு (ஹெக்டேரில்).
(1)	(2)	(3)
தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம்	23,33,798	18,17,105.00.00
தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம்	3,36,289	11,44,122·93.00
தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகை கிராமங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் ..	6,003	5,605.91.50
தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்	5,10,820	3,22,625.00.00
1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் எஸ்டேட் ஒழிப்புச் சட்டம்	2,602	1,860.00.00
மொத்தம் ..	31,89,512	32,91,318.83·50

எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டத்தின் செயல் வரம்புக்குப் புறம்பாக பட்டா வழங்குதல்.

28. தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம் செயலுக்கு வந்து பட்டா வழங்குவதை எளிதாக்க நிர்வாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகும், கூட, ஏராளமானவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளில் பல ஆண்டுகளாக நிலங்களைத் தமது சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றும், மேற்சொன்ன சட்டத்தின் கீழ் பட்டா வழங்குவதற்கான தகுதியுள்ள இனத்தின்கீழ் அல்லது அரசு வழங்கிய ஆணையின்கீழ் அவர்கள் வராததால் அவர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றும் கண்டறியப்பட்டது. ஆகவே, அறிக்கையிடப்பட்ட நாளன்றும், அதற்கு முன்பும் நிலத்தைத் தொடர்ச்சியாக அனுபோகத்தில் வைத்து வருவோர்க்கு பட்டாக்கள் வழங்குமாறு, 1971 இல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இனாம் ஒழிப்பு சட்டங்களின் செயல்வரம்பிற்குப் புறம்பாகப் பட்டா வழங்குமாறு மனுச் செய்து கொள்ள இயலும் வகையில், அதற்கான கால வரம்பை அரசு அவ்வப்போது நீட்டியுள்ளது.

இந்நாள் வரை, 10,508 பேர்கள் பயனடைந்துள்ளனர். பட்டா நிலமாக இதுவரை வழங்கப்பட்ட மொத்த பரப்பு 9,895.58.00 ஹெக்டேர்கள்.

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம் எஸ்டேட்டுகள் ஒழிப்பு.

29. நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் பெருமளவில் நிலங்களை வைத்து வருகின்ற ஜென்மிகள் சாகுபடி செய்யும் உரிமையுடன் குத்தகைக்காரர்களை அங்கிருக்க அனுமதித்தனர். 1929 ஆம் ஆண்டு மலபார் குத்தகைக்காரர் சட்டத்தின்கீழ் அந்த குத்தகை உரிமை அங்கீகரிக்கப்பட்டது. குத்தகைக்காரர்களுக்கு சாகுபடி செய்து கொள்வதற்குரிய உரிமைகள் நிரந்தரமாக வழங்கப்பட்டுள்ளன. குத்தகைக்காரர்களுக்கு அனுபோக உரிமைகளை வழங்குவதற்காக 1969-ஆம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (24/1969) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் 1974-ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் தேதி முதல் செயலுக்கு வரத் தொடங்கியது. 324.24 சதுர கிலோமீட்டர் பரப்பளவு அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு நில அளவைப் பணி முடிவுற்றது. சிலஜென்மிகள் தங்கள் நிலங்களுக்கு, இச்சட்டத்தின் பொருத்தம் பற்றி எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களை தாக்கல் செய்தனர். இந்த ரிட் மனுக்கள் 1976-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டன. இருந்தபோதிலும் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து தடையாணைகள் பெற்றுள்ளனர். தடையாணை பிறப்பிக்கப்பட்ட பரப்புகளைத் தவிர்த்து கூடலூர் வட்டத்தில் நிலவரித்திட்ட வேலைகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியில் நிலவரித்திட்ட களப்பணி 197.43 ச.கி. மீட்டருக்கும், விசாரணை 85.76 ச.கி. மீட்டருக்கும் முடிந்துள்ளது. 1,860-00-00 ஹெக்டேர் பரப்பளவிற்கு ரயத்துவாரி பட்டா அளிக்கப்பட்டுள்ளது.

வருவாய்த்துறையின் தொடர்பணிகள் :

30. இம்மாநிலத்தில் உள்ள சில பகுதிகளுக்கான முதலில் தயாரிக்கப்பட்ட நில அளவை அமைப்பு காலங்கடந்து விட்டதன் காரணமாகவும் தற்போதுள்ள நில அளவைப் பொருள்களையொட்டி அதனைப் பராமரித்து வர இயலாத காரணத்தாலும் அப்பகுதிகளில் மறு நில அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து பதிவுகளை நாளது தேதி வரையில் கொண்டு வருவதற்காகவும் பராமரிக்க இயலும் வகையிலும் வருவாய்த் துறை தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கோவை மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு வட்டங்களிலும் தென்னாற்காடு மாவட்டம் கடலூர் வட்டத்திலும் இப்பணி

முடிக்கப்பட்டுள்ளது. தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தில் இப்பணி நடந்தேறி வருகிறது. இவ்வாறாக, 213 கிராமங்களில் 868.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் இப்பணி முடிந்துள்ளது.

பொதுமக்கள் தொடர்புத் திட்டம்.

31. பொதுமக்கள் தொடர்புத் திட்டம், மனுநீதித் திட்டம் என்பதாகும். இத்திட்டம் அலுவலர்கள் குழு அவ்வப்போது கிராமங்களுக்குச் சென்று கிராமத்தினர் குறைகளைக்கேட்டு அந்த இடத்திலேயே முடிவு எடுக்கும் வாய்ப்பை அளிக்கிறது. இத் திட்டத்தின் கீழ் 31-12-1977 தேதி முடிய வரப்பெற்றுள்ள 76,561 மனுக்களுள் 31-12-1977 முடிய 60,490 மனுக்கள் மீது முடிவு எடுக்கப்பட்டுள்ளது. முடிவு செய்த மனுக்களின் எண்ணிக்கை 79 சத விதம் ஆகிறது.

ஜமாபந்தி.

32. பரிட்சார்த்த அடிப்படையில் 1379 ஆம் விளைச்சல் ஆண்டு முதற்கொண்டு மாவட்டத்திற்கு ஒரு வட்டத்தில் ஜமாபந்தி முறையை நீக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக, ஜமாபந்தி நீக்கப்பட்ட வட்டங்களில் கிராம வட்டக் கணக்குகளைச் சரிபார்க்க தணிக்கை முறை புகுத்தப்பட்டது. 1381 ஆம் விளைச்சல் ஆண்டிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே ஜமாபந்தி நீக்கிய வட்டத்தை உள்ளடக்கிய வருவாய் கோட்டமொன்றுக்கு ஜமாபந்தி இயங்காத் திட்டம் விரிவாக்கப்பட்டது.

தணிக்கை முறை செயல்படுவது குறித்து சில மாவட்ட ஆட்சியாளர்களின் அறிக்கைகளை ஆய்வு செய்த பின்னர், வருவாய் வாரியம் (நிலவரி) எல்லா வருவாய் வட்டாரங்களிலும் ஜமாபந்தி முறையை மீண்டும் செயலுக்குக் கொண்டு வரலாம் என்று பரிந்துரைத்தது.

33. ஜமாபந்தி முறையை மீண்டும் கொண்டு வருவது குறித்த வருவாய் வாரியத்தின் பரிந்துரையை அரசு பரிசீலித்து, ஜமாபந்தி முறையை மேம்படுத்துவது குறித்து இதில் பற்றுடைய நபர்களிடமிருந்து குறிப்பாக விவசாயிகளிடமிருந்து, ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளைக் கேட்டது. ஜமாபந்தி முறையை ஆதரித்தும் எதிர்த்தும் வரப்பெற்ற கருத்துக்களை அரசு ஆய்ந்து பார்த்தது. ஜமாபந்தி முறை எல்லா வகையான கிராமக் கணக்குகளையும் முழுவதும் சரிபார்ப்பதற்கு வகை செய்வதோடு, அதிகாரிகளை கிராமத்தினர் சந்திக்கவும், அதிகாரிகள், அவசியப்பட்டால், ரயத்துகளுக்கு விதிக்கப்படும் தீர்வைகள், வரி விதங்கள், அபராதங்கள் முதலியவற்றைச் சரிபார்த்து உடனுக்குடன் திருத்தி அமைக்கவும் வாய்ப்பளிக்கிறது என்று அரசு கருதியது. தணிக்கை

முறையைப் பரீட்சார்த்தமாகப் பின்பற்றியதில் காலதாமதமும், வேலை முடக்கமும் ஏற்படுவதுடன் ஜமாபந்தி முறையில் உள்ள சில அனுகூலங்களை மறுக்கும் வகையிலும் அமைந்துள்ளது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட சில பகுதிகளில் பின்பற்றிய இந்தப் பரீட்சார்த்த முறை கைவிடப்பட்டு 1386 ஆம் விளைச்சல் ஆண்டு முதல் வருவாய் வட்டாரங்கள் அனைத்திலும் ஜமாபந்தி முறையை மீண்டும் செயலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று அரசு கருதியது. எனவே, 1386 ஆம் விளைச்சல் ஆண்டிலிருந்து ஜமாபந்தி முறைக்குப் பதிலாக தணிக்கை முறையை அறிமுகப்படுத்திய எல்லா வட்டங்களிலும் மீண்டும் ஜமாபந்தி முறையை செயலுக்குக் கொண்டு வருவது என முடிவு செய்யப்பட்டது.

வருவாய் வாரியமும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், ஜமாபந்தி முறையை ஊழல் குறைபாடுகளுக்கு இடங்கொடாமல் நடத்திடவும், ஊழல் சம்பவங்கள் காணப்பட்டால் மிகவும் கடுமையாக நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

34. 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்களில் நடைபெற்ற சட்டமன்றப் பேரவை வரவு-செலவு கூட்டத் தொடரில் உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களின்பேரில், ஜமாபந்தி முறையை தொடர்ந்து செயல்படுத்துவதா, வேண்டாவா என்பது குறித்து அரசு மீண்டும் ஆய்வு செய்து வருகிறது.

வேளாண்மை வருமான வரி.

35. அவ்வப்போது திருத்தப்படும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின்படி, வரி விதிப்புக்குரிய ஆண்டுக்கு முந்திய நிதி ஆண்டில் பத்து ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு அதிகமாக நிலமும் வேளாண்மையின் மூலம் வருமானமாக ரூ. 5,000 உடைய நபர்கள் வேளாண்மை வருமான வரி செலுத்த வேண்டியவராவர். மலைத்தோட்டப் பயிரைப் பொறுத்த மட்டில், 50 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வரி இணக்கம் செய்ய உரிமை உண்டு. அதற்கு மேற்பட்ட நிலையில், வரி செலுத்தும் நபர் தரும் வருமான விவர கணக்கு அடிப்படையில் உண்மையான வருமானம் எதுவோ அதன்மீது வரி செலுத்த வேண்டும், மலைத் தோட்டமல்லாத பயிரைப் பொறுத்து இணக்கம் செய்து கொள்வதற்கு அவர் பெற்றுள்ள நிலத்திற்கு வரம்பு அளவு ஏதுமில்லை.

வருவாயின் அடிப்படையில் வரி விதிப்பு விதங்கள் ரூபாயில் 15 காசிலிருந்து ரூபாயில் 55 காசுவரை பல அளவுகளில் உள்ளன. ஒவ்வொரு கம்பெனியையும் பொறுத்தவரையில் மொத்த வேளாண்மை வருமானம் முழுவதற்கும் ரூபாயில் 55 காசு

என்ற பேரளவு வீதத்தில் வேளாண்மை வருமானவரி விதிக்கப்படுகிறது. பல்வேறு நிலைகளுக்கு இணக்கக் கட்டண விதங்கள் ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ரூ. 15-லிருந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ரூ. 120 வரையுள்ளது. ஒவ்வொரு கம்பெனியையும் பொறுத்த வரையில் இணக்கக் கட்டணம் ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒன்றுக்கு பேரளவு இணக்கக் கட்டண வீதம் ரூ. 120 விதிக்கப்படுகிறது.

1970–71 ஆண்டு முதல் வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, வரி மூலம் கிடைத்த தொகை ஆகியவை பின் வருமாறு :—

ஆண்டு.	வரி விதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை.	மொத்த வசூல் (தொகை ரூபாய்களில்).
(1)	(2)	(3)
1970–71	93,497	1,93,83,147
1971–72	86,342	2,15,37,777
1972–73	1,10,856	2,25,95,303
1973–74	1,55,771	2,25,37,167
1974–75	90,724	2,17,78,412
1975–76	92,927	2,39,50,000
1976–77	93,366	2,44,51,577
1977-78 (31–12–77 வரை.)	89,461	4,33,88,000

1978-79-ம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறையைச் சரிகட்டும் நடவடிக்கையாக வேளாண்மை வருமான வரி அமைப்பில் சில திருத்தங்களைச் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. இத்திருத்தங்கள் பற்றி 1978-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய நிதி நிலை அறிக்கை உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அவை பின் வருமாறு :

வருமானக் கணக்குகள் அடிப்படையில் விவசாய வருமான வரி செலுத்துவோருக்கு வரி விலக்கு வரம்பு 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், கீழ்க்கண்ட வருமானங்கள் மீதான வரியைக் குறைக்கும் வகையில், 10,000 ரூபாய்க்குமேல் 15,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்கு 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும், 15,000 ரூபாய்க்கு மேல் 20,000 வரையிலான வருமானங்களுக்கு 30 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும், 20,000 ரூபாய்க்கு மேல் 25,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்கு 35 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகவும், 25,000 ரூபாய்க்கு மேல்

30,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்கு 45 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகவும் விவசாய வருமான வரி விதங்கள் குறைக்கப்படும். 30,000 ரூபாய்க்கு மேல் 50,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்கு 45 சதவீதம் வரி விதிக்கப்படும். தற்போது 50,000 ரூபாயும் அதற்கு மேலும் உள்ள வருமானங்களுக்கு 55 சத வீதம் வரி விதிக்கப்படுகிறது. இந்த வரிவீதம் 50,000 ரூபாயிலிருந்து 70,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்குத் தொடரும். கூடுதல் வருமானம் உடையோருக்கு, ஓரளவு வரியைக் கூட்டும் முறையில் 70,000 ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரை உள்ள வருமானங்களுக்கு 60 சத வீதம் என்ற அளவிலும், ஒரு இலட்சத்திற்கு மேல் உள்ள வருமானங்களுக்கு 65 சத வீதம் என்ற அளவிலும் வரி விதிக்கப்படும். நாம் கொண்டுவரும் மற்றுமொரு முக்கிய மாறுதல் மலைத் தோட்டப் பயிர்களுக்கான இணைக்க (Compounding) வசதியை நீக்குவதும், பிற பயிர்களுக்கு அந்த வசதியை 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை நிறுத்திக் கொள்வதும் ஆகும். இணைக்க முறையில் வரி செலுத்துவோருக்கு ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குரிய புதிய விதங்கள் வருமாறு :—

10 முதல் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு 30 ரூபாய்.
15-க்கு மேல் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு 50 ரூபாய்.
20-க்கு மேல் 25 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு 70 ரூபாய்.
25-க்கு மேல் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு 90 ரூபாய்.

ஸ்டாண்டர்டு ஏக்கரைக் கணக்கிடும் முறை திருத்தி அமைக்கப்பட்டு எளிதாக்கப்படும். இந்த மாறுதல்கள் 1979-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்று முடிவடையும் வரி விதிப்பு ஆண்டு முதல் அமுலுக்கு வரும்.

இம் முடிவுகளைச் செயல்படுத்துவது குறித்தான மசோதா சட்டசபையின் நடப்புக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

கிராமப் பணியாளர் நிர்வாகம்.

36. கிராம அலுவலர்கள் முழுநேர அரசு ஊழியர்களல்ல; அவர்கள் பகுதி நேர ஊழியர்களே. இவர்கள் கோட்டாட்சித் தலைவர் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரியின் எழுத்து மூலம் முன் அனுமதி பெற்று, தனது அரசு பணிக்கு குந்தகம் ஏற்படா வண்ணம் பிற பகுதி நேர வேலைகளில் ஈடுபடலாம். இவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தில் 15-9-1977 முதல் ரூபாய் [illegible] உயர்த்தப்பட்டுள்ளது. மற்றும், இவர்களுக்கு வழங்கப்படும் ஒருங்கிணைந்த வருடாந்திர பயணப்படி 1-10-1977 முதல் 20 சத வீதம் உயர்த்தப்பட்டுள்ளது. மற்றும் இவர்களுக்கு வழங்கும்

விழாக்கால முன்பணம் ரூபாய் 100-லிருந்து ரூபாய் 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் குறித்து ஆய்வு செய்து பரிந்துரைக்க மூன்றாவது சம்பளக் குழுவை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

37. தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடமிருந்து கிராம அலுவலர்கள் பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்வோரின் எண்ணிக்கையை உயர்த்தும் பொருட்டு அரசு ஒரு திட்டத்தை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், கிராம அலுவலர்கள் பதவிக்கு தேவையான சிறப்புத் தேர்வு எழுதுவதற்குத் தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த சிறப்புப் பயிற்சி நிலையங்கள் தஞ்சாவூர், மதுரை, சேலம் மற்றும் கடலூர் ஆகிய நான்கு இடங்களில் 2-1-1978 முதல் மூன்று மாதங்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் கிராம அலுவலர்கள் பதவிக்கு முன்வர தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைப்பதில் ஏற்படும் பற்றாக்குறையை நீக்குவதோடல்லாமல், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் கிராம அலுவலர்கள் பதவிகளுக்கு போட்டியிட பெரிதும் உதவுகின்றது.

நகர்ப்புற நிலவரி.

38. 1966-ம் ஆண்டின் நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின்படி நகர்ப்புற நிலவரி சில பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்களின் மீது செலுத்த வேண்டியுள்ளது. நகர்ப்புற நிலவரி ரயத்துவாரி வரி விதிப்பு, விதிவரி, மனைவரி முதலியவற்றிற்குப் பதிலாக உள்ளது. இச்சட்டம் சென்னை மாநகரில் 1-7-1963-லிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகராட்சிகளிலும் மதுரை மாநகரிலும் 1-7-1971-லிருந்து இச் சட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது.

39. சென்னை மாநகரில் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் தொடங்கியதிலிருந்து, 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி அன்றுள்ள நிலத்தின் அங்காடி மதிப்பு 0·4 சதவீதத்தின்படி நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. இச்சட்டம் அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட்டது. சென்னை மாநகரையும் அதனைச் சுற்றி அமைந்துள்ள எல்லைப் பகுதிகளையும் சேர்த்து அப்பகுதிகளுக்கு இச் சட்டத்தை நீட்டித்து 1975-ல் இச்சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்காக 1971-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதியன்று நிலவிய அங்காடி மதிப்பு பின்பற்றப்பட்டது. வரி விகிதத்தின்படி நில 0·5 சதவீதத்திலிருந்து 1 சத வீதமாக உயர்த்தப்பட்டது. குடியிருப்புக்கான அல்லது குடி

யிருப்புக்கு அல்லாத நகர்ப்புற நிலங்களுக்கிடையே வேறுபாடு கொண்டுவரப்பட்டு வெவ்வேறு விதமாக வரிவிதங்கள் பொருத்தப் பட்டன. இதனால் வரி அதிக அளவுக்கு உயர்வதாயிற்று.

1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தை 1975-ல் திருத்தியதன் விளைவாக நகர்ப்புற நிலவரி கூடியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தனி நபர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் தொடர்ந்து முறையீடுகள் வரப்பெற்றதற்கு அரசு செவி மடுத்து, 27–12–1976 நாளிட்ட 2625 எண்ணுள்ள தமது ஆணையில் சட்டத்தில் அதற்கென அமைந்த திருத்தங்கள் செய்யப்படும் வரை பல சலுகைகளை வழங்க சமயம் கிடைத்தது.

இப்போது குறிப்பிடப்பட்டுள்ள வரி விதப்படி நிலை கீழ்க்கண்டவாறு உள்ளது:—

சென்னை எல்லையோரப் பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் உள்ள அனைத்து நகர்ப்புற நிலங்கள்.			சென்னை எல்லையோரப் பகுதியில் உள்ள எல்லா நகர்ப்புற நிலங்கள்.		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1 முதல் 2 கிரவுண்டுகள்.	இல்லை.		முதல் 3 கிரவுண்டுகள்.	இல்லை.	
2 மொத்தப் பரப்பு 5 கிரவுண்டுகளுக்கு மேற்படாமலிருந்தால்.	விற்பனை மதிப்பில் 0·7 சதவீதம்.		மொத்தப் பரப்பு 7 கிரவுண்டுகளுக்கு மேற்படாமலிருந்தால்.	விற்பனை மதிப்பில் 0·7 சதவீதம்.	
3 மொத்தப் பரப்பு 5 கிரவுண்டுகளுக்கு மேற்பட்டு 10 கிரவுண்டுகளுக்கு மேற்படாமலிருந்தால்;	விற்பனை மதிப்பில் 1 சதவீதம்.	இரண்டு கிரவுண்டுகளுக்கு மேற்பட்டுள்ள பரப்பளவின் மீது.	மொத்தப் பரப்பு 7-க்கு மேற்பட்டு 10 கிரவுண்டுகளுக்கு மேற்படாதிருந்தால்.	விற்பனை மதிப்பில் 1 சதவீதம்	மூன்று கிரவுண்டுகளுக்கு மேற்பட்டுள்ள பரப்பளவின் மீது.

சென்னை எல்லையோரப் பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் உள்ள அனைத்து நகர்ப்புற நிலங்கள்.			சென்னை எல்லையோரப் பகுதியில் உள்ள எல்லா நகர்ப்புற நிலங்கள்.		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
4. மொத்தப் பரப்பு 10 கிரவுண்டுகளுக்கு மேற்பட்டு 20 கிரவுண்டுகளுக்கு மேற்படாமலிருந்தால்.	விற்பனை மதிப்பில் 1·5 சதவிதம்.	இரண்டு கிரவுண்டுகளுக்கு மேற்பட்டுள்ள பரப்பளவின் மீது.	மொத்தப் பரப்பு 10-க்கு மேற்பட்டு 20 கிரவுண்டுகளுக்கு மேற்படாமலிருந்தால்.	விற்பனை மதிப்பில் 1·5 சதவிதம்.	மூன்று கிரவுண்டுகளுக்கு மேற்பட்டுள்ள பரப்பளவின் மீது.
5. மொத்தப் பரப்பு 20 கிரவுண்டுகளுக்கு மேற்பட்டால்.	விற்பனை மதிப்பில் 2 சதவிதம்		மொத்தப் பரப்பு 20 கிரவுண்டுகளுக்கு மேற்பட்டால்.	விற்பனை மதிப்பில் 2 சதவிதம்.	

1975-ல் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டபோது மொத்த வரி வசூல் ரூ. 7·7 கோடி என்று மதிப்பீடு செய்யப்பட்டது. பின்னுல் நியாயமானதும் போதுமான அளவும் சலுகைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வரி வசூல் வருடத்திற்கு ரூ. 2·5 கோடி என்று மதிப்பிடப்படுகிறது. 1977 78-க்கான வரி வசூல் ரூ. 2·4 கோடி எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்ப்புற நில உச்சவரம்பு.

40. குடியாட்சித் தலைவரின் சட்டமான, 1976ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலச் (நில உச்சவரம்பும், முறைப்படுத்தலும்) சட்டம் தமிழகத்தில் 3—8—1976 முதல் செயலுக்கு வரத் தொடங்கியது. நில உச்சவரம்பிற்கு மேல் அதிகமாக உள்ள நிலத்தை எடுத்துக்கொள்ளுவதற்கும் அவ்வாறு எடுத்துக்கொண்ட நிலங்களில் கட்டடங்கள் கட்டுவதை முறைப்படுத்துவதற்கும், அது தொடர்பான விவரங்கள் குறித்து செயல்படுவதற்கும், மேலும் ஒருசில நபர்களிடையே நகர்ப்புற நிலங்கள் குவிவதை தடுக்கும் நோக்கத்துடனும் அந்த நபர்கள் ஆழ்ந்த வரவு செலவு நோக்கத்துடன் அதிக லாபம் பெறுவதைத் தடுக்கும் பொருட்டும் பொதுமக்களின் பொதுநலத்தைக் கருத்திற்கொண்டு, நகர்ப்புற கூட்டுப் பகுதிகளிலுள்ள நிலங்களைச் சமமாகப் பகிர்ந்தளிக்கும் நோக்கத்துடன், நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகளிலுள்ள காலி இடங்களுக்கு நில உச்ச வரம்புச் சட்டம், அமுலுக்கு வரத் தொடங்கியது. தொடக்கத்தில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புறக்கூட்டுப் பகுதிகளின் புற எல்லைகளில் இச்சட்டம் செயலுக்கு வரத் தொடங்கியது.

நகர்ப்புறக் கூட்டுப்பகுதியின் பெயர்.	புற எல்லையின் பரப்பு.	மாநகராட்சி.	நகராட்சி.	பஞ்சாயத்து.	தென் பிராந்திய இரயில்வே நிர்வாகம்.	நகரியம்	பாளையம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	(கி.மீ.)							
1. சென்னை ..	8	1	4	399	..	4	1	409
2. சேலம் ..	5	..	2	118	..	..	..	120
3. கோயம்புத்தூர்.	5	..	2	99	1	1	..	103
4. மதுரை ..	5	1	..	191	..	1	..	193
5. திருச்சி ..	5	..	2	91	1	..	..	94
6. திருநெல்வேலி	1	..	3	52	..	1	..	56

ஒரு நபருக்கான நில உச்ச வரம்பு சென்னை நகர்ப்புறக் கூட்டுப் பகுதிக்கு 500 சதுர மீட்டரும், சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகளுக்கு 1,500 சதுர மீட்டரும், திருநெல்வேலி நகர்ப்புறக் கூட்டுப் பகுதிக்கு 2,000 சதுர மீட்டரும் ஆகும்.

இச்சட்டம் அமுலுக்கு வரத் தொடங்கியது முதல் நில உச்ச வரம்பிற்கு மேல் அதிக அளவு நிலம் வைத்திருப்பவர் ஒவ்வொரு வரும், அந்த நபருக்குரிய நிலத்தின் பேரில் சட்ட அதிகாரம் உடைய அதிகாரியிடம் அதுபற்றி விவரங்கள் குறித்த வாக்கு மூலம் கொடுக்கவேண்டும். வாக்குமூலம் கொடுப்பதற்கான கடைசி தேதி 30—11—1976 ஆகும். இத்தேதி அடிக்கடி ஒத்திப் போடப்படுகின்றது. இறுதியாக ஒத்திப்போடப்பட்ட தேதி 31—3—1978 ஆகும். 14—1—1978 ஆம் நாள் வரை இச் சட்டத்தின் 6 (1)-வது பிரிவின்கீழ் 6 கூட்டுப் பகுதிகளிலும் தாக்கல் செய்யப்பட்ட மொத்த விவர அறிக்கை 9,062 ஆகும்.

41. உச்சவரம்பிற்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள் அவ்வாறு தாம் அதிகப்படியாக வைத்துள்ள நிலங்கள் குறித்து சட்டத்தின் 6-வது பிரிவின்கீழ் விவர அறிக்கை ஒன்றைக் கொடுத்து அது சட்டத்தின் 10-வது பிரிவு (1) உட்பிரிவின் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தால் ஒழிய, அத்தகைய நிலத்தை அல்லது அதன் ஒரு பகுதியை, விற்பனை, அடமானம், நன்கொடை, குத்தகை அல்லது வேறு வகையில் எவரும் மாற்றக்கூடாது. நில உச்சவரம்பிற்கு உட்பட்ட அளவு நிலம் வைத்திருப்பவர்கள் நிலத்தை மாற்றுவதையும், கட்டடங்களுடன் கூடிய நிலங்கள் மாற்றப்படுவதையும் இச்சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது. விற்பனை மூலம் மாற்றம் செய்யப்படும் நேர்வில், காலி இடம் அல்லது கட்டடங்களுடன் கூடிய நிலம் அல்லது வேளாண்மை நிலங்களை வாங்கும் முதல் விருப்ப உரிமை அரசுக்கே.

42. இச்சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள விதித் துறைகள், மத்திய, மாநில அரசுகள், அரசு நிறுவனங்கள், அட்டவணையி லுள்ள வங்கிகள், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள், சமய அறக் கட்டளை நிறுவனங்கள் ஆகியவற்றின் நிலங்களுக்குப் பொருந்தாது. பொது மக்கள் நன்மையைக் கருதியும், மற்றும் யாருக்காவது தேவையற்ற சங்கடங்கள் ஏற்படுமானால் இச்சட்டத்தின் 19-வது பிரிவின் கீழ் விதிவிலக்கு அளிக்க அரசுக்கு அதிகாரமுண்டு.

43. இச்சட்டத்தைச் செயல்படுத்துவது வருவாய் வாரியத் திடம் (நகர்ப்புற நில உச்சவரம்பு) ஒப்படைக்கப்பட்டுள்ளது. வருவாய் வாரியத்தின் உறுப்பினர் (நகர்ப்புற நில உச்சவரம்பு) இச்சட்டத்தின் 12-வது பிரிவின்படி நடுவர் மன்ற நடுவர் ஆகவும் 33-வது பிரிவின்படி மேல்முறையீட்டு அதிகாரியாகவும், நியமிக்கப்

பட்டுள்ளார். நகர்ப்புற நில உச்சவரம்பு இயக்குநர், தம் அலுவல் முறையால் வாரியத்தின் செயலாளராக இருந்து வாரியத்திற்கு இது தொடர்பான எல்லா விஷயங்களிலும் உதவிபுரிகிறார்.

44. நகர்ப்புற நில உச்சவரம்பு வேலையைக் கவனிக்க 24 பொருத்தமான அதிகாரிகள் உள்ளனர். இவர்களோடு கூட சென்னை வட்டத்தின் இராணுவ எஸ்டேட் அதிகாரி, செயிண்ட் தாமஸ் மௌண்ட்—பல்லாவரம் பாளையத்தின் நிர்வாக அதிகாரி ஆகியவர்களும் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கீழ் உள்ள சில அதிகாரிகளும் அவர்களுடைய எல்லைக்குள் பொருத்தமான அதிகாரிகளாக செயல்பட்டு வருகிறார்கள். வருவாய் வாரியம் (நகர்ப்புற நில உச்சவரம்பு), நகர்ப்புற நில உச்சவரம்பு இயக்குநர் ஆகியோரின் கட்டுப்பாட்டின் கீழ் இந்தப் பொருத்தமான அதிகாரிகள் செயல்படுகின்றனர்.

இச்சட்டத்தின் 6 (1)-வது பிரிவின் கீழ் விவர அறிக்கை பதிவு செய்யப்படுவதற்கான காலம் 31—3—1978-ஆம் நாள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. உபரியாகக் கிடைக்க இருக்கும் காலி நிலங்களைக் குறித்து உறுதியாக மதிப்பிடுவது இந்த நிலையில் இயலவில்லை.

சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி நகர்ப்புற கூட்டுப் பகுதிகளுக்கு என்று மாநகரப் பெருந்திட்டங்கள் எதுவும் இல்லை. எனவே, இந்த நகர்ப்புற பகுதிகளின் வேளாண்மைப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் எல்லா நிலங்களையும் பொறுத்தவரை அவற்றின் உரிமையை மாற்றுவதற்கு வகை செய்யும் இச்சட்டத்தின் 26 (7)-வது பிரிவு மட்டுமே அவற்றுக்குப் பொருந்துவதாக உள்ளது. மற்ற எல்லா விதித்துறைகளும் அந்த வகை நிலங்களுக்குப் பொருந்தச் செய்யப்படவில்லை. பெருநகர்த் திட்டத்தைக் கொண்டிருக்கும் சென்னை நகர்ப்புற பகுதியின் நேர்விலும் கூட அரசு, வேளாண்மை நோக்கிற்காக பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்களாக உள்ள எல்லா நிலங்களுக்கும் இச்சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கவும், அந்த நிலங்களைப் பெற்றிருப்போர் அந்நிலங்களை வேளாண்மை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் வரை அல்லது அந்த நிலங்கள் பொதுமக்கள் நோக்கங்களுக்காகத் தேவைபடாதவரை அவர்களே தொடர்ந்து வைத்திருக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. ஒரு நகர்ப்புற பகுதிக்குள் வேளாண்மை நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற நிலங்களின் உரிமையாளர்கள் நேர்வில் பெருநகர்த் திட்டம் செயலில் இருக்கின்ற காரணத்தால் அந்நிலம் நகர்ப்புற நிலம் என்று கருதப்படுவதால், அப்படிப்பட்ட நிலங்களை வைத்துள்ளவர்கள் எளிமையான முறையில், உச்சவரம்பிற்கு மிகையாக உள்ள காலி நிலங்களை வைத்திருப்பது பற்றிய தங்கள் விவர அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. மேலும், வேளாண்மைக் காரியத்திற்காகப் பயன்படுத்தி வருகின்ற வரையில் அப்படிப்பட்ட நிலங்களை அவர்கள் தங்கள் உரிமையிலேயே வைத்திருப்பதற்கான விதிவிலக்கு அளிப்பதற்கும் அரசு முடிவு செய்துள்ளது. வேளாண்மை நில உடைமையாளர்கள், தங்கள் நிலங்களை அடமானம் வைத்து கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும், மற்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும் வளர்ச்சிக் கடன்களைப் பெறுவதற்கு அவர்களுக்கு ஏற்பட்டிருந்த இடர்ப்பாடுகளையும் அரசு நீக்கியுள்ளது. வேளாண்மைக் காரியத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படும் வேளாண்மை நிலங்களின் உண்மையான விற்பனையை அரசு அனுமதித்துள்ளது.

45. குடியிருப்பு, குடியிருப்பு அல்லாத கட்டடமும், அதனைச் சார்ந்த நிலமும் மாற்றம் செய்ய, அதனோடு உச்சவரம்பிற்கு மிகையான காலி நிலம் வைத்திருந்தாலும், சில காப்புகளுக்குட்பட்டு அதனை மாற்றுவதற்கு அனுமதி வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. நகர்ப்பகுதி நிலங்களின் சொந்தக்காரர்கள், உச்சவரம்புச் சட்டத்துக்கு மிகையாக இருக்கின்ற நகர்ப் பகுதி நிலங்கள் தங்கள் கட்டிடங்கள், தங்கள் உடனடித் தேவைகளின் பொருட்டு அடமானம் வைத்து பணம் பெற அனுமதித்தும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவ்வாறு அவற்றை அடமானம் வைத்துப் பணம் கொடுப்பவர் இந்தச் சட்டத்தின் கீழ் மிகையாக உள்ள நிலங்களை அரசு பின்னால் ஓர் ஆணையை பிறப்பித்து மேற்கொள்ளுவ்தற்கு தமக்கு தடையேதுமில்லை என்று ஓர் உறுதிமொழியை எழுதிக் கொடுக்க வேண்டும்.

46. அரசு விதிவிலக்கு அளித்தல் முடிவு செய்யப்படா நிலையில் குடியிருப்பு கட்டடங்களுக்கான கட்டட வரைபடத் திட்டங்களுக்கும், நகர்ப் பகுதி நில உச்சவரம்பளவிற்கு மேல் 50 சதுர மீட்டருக்கு மேற்படாதுள்ள மனையிடங்களைக் கட்டுவதற்கும் ஏற்பளிப்பு வழங்க நகரமைப்புத் திட்ட அதிகார மன்றங்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. சென்னை நகரக் கூட்டுப் பகுதியில் உச்சவரம்பிற்கு மேல் 50 சதுர மீட்டருக்கு மேற்பட்டும் இந்த மாநிலத்தில் உள்ள மற்ற எல்லா நகர கூட்டுப் பகுதிகளில் உச்சவரம்பிற்கு மேற்பட்டிருந்தாலும், கட்டடத்திற்கான வரை படத்திற்கு இசைவளிக்கப்படலாம். ஆனால், கட்டடம் உச்சவரம்பிற்குள் உள்ள நிலத்தில் கட்டப்பட்டு, மிகுதியான காலிமனையை அதிகாரிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யுமானால், அவ்வாறு எடுத்துக் கொள்வதற்கு ஏதுவாக அந்தக் காலி மனை அப்படியே விடப்பட்டிருக்க வேண்டும். தொழில் நிறுவனங்களாலும், ஏனையோர்களாலும் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு அல்லாத கட்டடங்களை பொறுத்த மட்டில், அந்த நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிப்பதன் மூலம் காலிமனைகளை உச்சவரம்பிற்கு அதிகமாக வைத்துக் கொள்ளும் வகையில் அக்கட்டடங்களைக் கட்டிக் கொள்வதற்கு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 3-8-1976ஆம் ஆண்டிற்கு முன்பு குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கான வரைபடத் திட்டத்தை அளித்தவர்களுக்கு, மனை

உச்சவரம்பிற்கு மேற்பட்ட காலி நிலத்தை வைத்துக் கொள்வதற்கு விதிவிலக்களிப்பதென அரசு உத்திரவிட்டுள்ளது. அவ்வாறு நகரத் திட்ட அதிகார மன்றத்திற்கு வரைப்படத் திட்டம் அனுப்பப்பெற்று முடிவு பெறாமல் உள்ளவர்களுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.

47. இச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பெற்ற, மிகுதியாக உள்ள நிலங்களில் தொழில் தொடங்குவதற்காகவோ, தொழிலாளர் குடியிருப்புகளுக்காகவோ ஒப்படை செய்வதற்கு இந்தச் சட்டம் அரசுக்கு அதிகாரமளித்துள்ளது. அரசு தம் விருப்பம் போல், பொது நலத்திற்காகவும் இந் நிலங்களை ஒதுக்கித் தரலாம்.

48. இச்சட்டத்தின் விதித்துறைகளை நடைமுறைக்கு ஏற்ற வகையிலும், இடர்ப்பாடுகளையும், கஷ்டங்களையும், நீக்கி திருத்தியமைக்கும் பொருட்டு அரசு ஆய்ந்து வருகிறது. அப்படி திருத்தப்பட்ட பிரிவுகளை சேர்த்து அரசு ஒரு புதிய சட்டத்தை தக்க சமயத்தில் இயற்ற இருக்கின்றது. புதிய சட்டம் இயற்ற முடிவு பெறாத நிலையில், சட்டத்தின் 6 (1)-வது பிரிவின்கீழ் விவர அறிக்கைகள் ஏற்கனவே தாக்கல் செய்திருந்தால், சட்டத்தின் 8 முதல் 10-வது பிரிவுகளின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று அரசு கட்டளையிட்டுள்ளது.

மாவட்டச் செய்தி களஞ்சியங்கள்

49. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை நிலையினை முறையாகத் தருகின்ற மாவட்டச் செய்திக் களஞ்சியங்களைத் தயாரிப்பது அரசின் நோக்கமாகும். இந்த மாவட்டச் செய்திக் களஞ்சியங்கள், கூடுமான வரையில், மத்திய அரசு நாடு முழுவதற்கும் தயாரித்து வரும் செய்திக் களஞ்சியத்திற்கு வரையறுத்துள்ள அமைப்பு முறைகளுக்கேற்ப தயாரிக்கப்படுகின்றன. பல்வேறு உள்ளூர் ஆய்வுகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும், அடிப்படையாக அமைவன என்ற வகையில் மாவட்ட செய்திக் களஞ்சியங்கள் உயர்ந்த மரபும், பயன்பாடும் உடையனவாகும். இம்மரபினையும், பயன்பாட்டையும் சிறந்த முறையில் பேணிவருவதில் அரசு மிகுந்த நாட்டம் செலுத்தி வருகிறது. மக்களின் வரலாறு, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவை பற்றிய முழு அறிவை உருவாக்கி வளர்த்திடும் பயனுள்ள சாதனமாகத் துணைபுரியும் வகையில் மாவட்டச் செய்திக் களஞ்சியங்கள் விளங்க வேண்டுமென அரசு விரும்புகிறது. மேலும் செய்திக் களஞ்சியங்கள் மாவட்டத்தின் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நிலைகள் ஆகியவையும் உள்ளடக்கி இருக்க வேண்டுமென கருதப்படுகிறது.

50. இத்திட்டம் முதன் முதலில் 1954ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பின்னர் 1958ஆம் ஆண்டில் இத்திட்டம் மத்திய அரசின் உதவிபெறும் திட்டமாக ஆகியது. இதுவரை

தஞ்சாவூர், மதுரை, தென்னாற்காடு, கோயம்புத்தூர், சேலம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் குறித்த செய்திக் களஞ்சியங்கள் வெளியிடப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டம் குறித்த செய்திக் களஞ்சியம் அச்சில் உள்ளது. 1977–78-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, சென்னையைத் தவிர ஏனைய மாவட்டங்களுக்கான செய்திக் களஞ்சியங்களைத் தொகுக்கும் பணிக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மாவட்டச் செய்திக் களஞ்சியங்கள் எழுதும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

தற்போதைய பணி முடிந்த பின்னர், சென்னை மாவட்டச் செய்திக் களஞ்சியத்தை தயாரிப்பதாக உள்ளது. பின்னர், தமிழ்நாடு மாநில செய்திக் களஞ்சியம் ஒன்றினைத் தொடங்கும் பணியையும், ஏற்கனவே வெளியிடப்பட்ட மாவட்டச் செய்திக் களஞ்சியங்களுக்கான துணை வெளியீடுகள் தயாரித்து வெளியிடும் பணியினையும் மேற்கொள்ள அரசு கருதியுள்ளது.

இணைப்பு II.

[459-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

265—A. ஏனைய நிர்வாகம் பணிகள் என்னும் தலைப்பில் 11 ஆம் கோரிக்கைக்குரிய கொள்கை விளக்கக் குறிப்பு.

(1)" AC. ஹைதராபாத், இந்திய நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் சங்கத்திற்குத் தொகையளித்தல் "

குறிப்புரை :

ஹைதராபாத், இந்திய நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் சங்கத்தில் இம்மாநில அரசு சாதாரண உறுப்பினராக இருக்கிறது. அரசு, பல்வேறு நிலைகளிலுள்ள அதிகாரிகளை இந்நிறுவனம் நடத்தும் பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெறுவதற்காக மேற்படி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கிறது. இச்சங்கத்தின் உறுப்பினர் சந்தா ஆண்டொன்றுக்கு ரூ. 2,000. அதன்படி 1978–79-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) "AG. சென்னையில் திர்வாகப் பயிற்சி நிறுவனத்தை அமைத்தல்." பற்றிய குறிப்பு:

வேளாண்மை, பாசனம், மின்சக்தி, போக்குவரத்து ஆகிய நிர்வாகத் துறைகளின் தேவையை நிறைவு செய்ய நிர்வாகப் பயிற்சி நிறுவனம் ஒன்றை சென்னையில் அமைப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. இடைநிலைப்பட்ட அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் 12 பேர் பெங்களூர் இந்திய நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தில் 1975 டிசம்பர் முதல் 1977 டிசம்பர் வரை இரண்டாண்டு பயிற்சியை முடித்துள்ளனர். இவ்வதிகாரிகள் இந்த நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தில் பல்வேறு துறைகளுக்குத் தலைமைப் பொறுப்பேற்பர், இந்நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவேறும் தறுவாயில் உள்ளன.

'சம்பளங்கள்' 'அலுவலகச் செலவுகள்' என்னும் ஒவ்வொரு தலைப்பின்கீழும் ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(iii) "AH. பவானிசாகரில் சிவில் பணிப் பயிற்சி நிறுவனம்" குறிப்புரை :

கோயம்புத்தூர் மாவட்டம், பவானிசாகரில் சிவில் பணிப் பயிற்சி நிறுவனம் ஒன்று 1975-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய் அதிகாரி பதவித் தரத்தில் ஒருவர் இந்நிறுவனத்தின் முதல்வராக இருக்கிறார். இவருக்கடுத்தபடியாக ஆசிரியர் பொறுப்பில் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் 16 பேர் உள்ளனர். இவர்கள் தலைமைச் செயலகம், வருவாய்த் துறை கருவூலம், ஊரக வளர்ச்சித்துறை ஆகிய துறைகளிலிருந்து வந்தவர்களாவர். உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவரும் நிலைப் பணிக்கு அவசியமான பணியாளர்களும் இந்நிறுவனத்தில் உள்ளனர். இந்நிறுவனம் பின்வரும் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது :—

(1) நேரடியாகப் பணிக்கு எடுக்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சிக்கால அளவு இரு திங்கள்—முழு நேரம்.

(2) வருவாய்த்துறை, வணிகத்துறை, கூட்டுறவுத்துறை முதலிய நிர்வாகத் துறைகளில் பணிக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கும், பதவி உயர்வு அளிக்கப்படுபவர்களுக்கும் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளுக்கும் அடிப்படைப் பயிற்சி—பயிற்சிக்கால அள்வு இரு திங்கள்—முழு நேரம்.

(3) வேளாண்மைத்துறை, கால்நடை வளர்ப்புத்துறை, கல்வித்துறை போன்ற சில துறைகளில் அரசிதழ் பதிவு பெற்ற பணிக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கும், பதவி உயர்வு அளிக்கப்படுபவர்களுக்கும் அடிப்படைப் பயிற்சி—பயிற்சிக் கால அளவு மூன்று வாரங்கள்—முழு நேரம்.

(4) வணிகவரித்துறை போன்ற துறைகளிலுள்ள அதிகாரிகளுக்கு தனிப்பட்ட பயிற்சி வகுப்புகள்.

இப்பயிற்சிகள் யாவும் நிறுவனத்தில் தங்கியிருந்து பயிற்சி பெறும் பயிற்சிகளாகும்.

சிவில் பணிப் பயிற்சி நிறுவனம் 1975-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதிலிருந்து 4,294 இளநிலை உதவியாளர்களுக்கும், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் 158 பேருக்கும் அடிப்படைப் பயிற்சி அளித்துள்ளது. வணிகத் துறைக்காக உள்ள தனிப்பயிற்சி வகுப்பில் 338 இளநிலை உதவியாளர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் பயிற்சிப் பிரிவு 1976-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ஆம் தேதி அன்று தொடங்கப்பட்டது

தற்போது 244 ஆடவரும் 93 மகளிரும் ஆக மொத்தம் 337 இளநிலை உதவியாளர்கள், அரசிதழ் பதிவு பெற்ற 17 அதிகாரிகள் ஆகியோர் பயிற்சி பெற்று வருகின்றனர். மேற்படி நிறுவனத்தை நடத்துவதற்காக 1978–79-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் 3,97,000 ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 21

பணியாளர் நிர்வாக சீர்திருத்த (பயிற்சித்) துறை.

"265—A. ஏனைய நிர்வாகப் பணிகள் என்னும் தலைப்பின்கீழ் 43-ஆம் எண் கோரிக்கைக்குரிய கொள்கை விளக்கக் குறிப்பு பயிற்சி நிறுவனங்கள்பற்றிய குறிப்பு :

புதுடில்லியிலுள்ள இந்திய பொது நிர்வாகக் கழகத்தில் இம் மாநில அரசு இணைக்கப்பட்ட உறுப்பினராக உள்ளது. அன்றியும், இந்திய பயிற்சி மேம்பாட்டுச் சங்கத்திலும் பயிற்சி நிறுவனச் சார்வு உறுப்பினராக இம்மாநில அரசு உள்ளது. புதுடில்லியிலுள்ள இந்திய பொது நிர்வாகக் கழகத்திலும், இந்தியப் பயிற்சி மேம்பாட்டுக் சங்கத்திலும் உறுப்பினராக இருப்பதற்கு ஒவ்வொன்றுக்கும் முறையே ரூபாய் 500, ரூபாய் 50 ஆண்டுக் கட்டணம் ஆகும். இந்த இரு நிறுவனங்களும் நடத்துகின்ற பயிற்சி வகுப்புகள், திட்டங்கள் ஆகியவற்றில் கலந்து கொள்வதற்காக தனது அதிகாரிகளைத் தெரிந்தெடுத்து இம்மாநில அரசு அனுப்பி வைக்கிறது.

2. மேலும், இந்திய பொது நிர்வாக கழகத்தில் உறுப்பினராகவுள்ள மாநில அரசுப் பணியாளர்களின் சம்பளம் திங்களுக்கு ரூபாய் 1,200-க்குக் (சிறப்புச் சம்பளம் நீங்கலாக) குறைவாக இருந்தால் அவர்களுடைய உறுப்பினர் கட்டணத்தில் பாதியான ரூபாய் 2,000-ஐ மானியமாக மாநில அரசு செலுத்துகிறது.

3. அதற்கிணங்க, புதுடில்லியிலுள்ள இந்திய பொது நிர்வாகக் கழகத்திற்கு மானியமாக வழங்க ரூ. 3,000 நிதி ஒதுக்கீடும், புதுடில்லியிலுள்ள இந்தியப் பயிற்சி மேம்பாட்டுச் சங்கத்திற்கு ரூ. 1,000 நிதி ஒதுக்கீடும் 1978-79-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பெற்றுள்ளன.

4. இவை தவிர, மேற்சொன்ன நிறுவனங்கள் நீங்கலாக வேறு நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்குவது தொடர்பாக, செலவு செய்ய வேண்டியிருப்பின் செலவினைப் பற்றெழுத மாநில அரசுக்கு இயலும் பொருட்டு, "AK. ஏனைய பயிற்சி மானியங்கள்" என்னும் தலைப்பின்கீழ் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

———

புதன்கிழமை, 1978 மார்ச் 22.

———

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்— விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சிதம்பரம் வட்டத்தில் நிலத் தீர்வை வசூல்.

*4 குறுகிய கால வினா. திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு நிதி அமைச்சர்— கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு கண்டு முதலை அடிப்படையாக வைத்து நிலத்தீர்வை ரத்து செய்யப் பட்டுள்ளதாக அரசு அறிவித்திருந்தும் சிதம்பரம் வட்டத்தில் அதிகாரிகள் கெடுபிடி செய்து நிர்பந்தமாக தீர்வையை வசூல் செய்வது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் 341 கிராமங்கள் அடங்கியுள்ளன. அவைகளில் 110 கிராமங்கள் மட்டுமே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவை என்று அரசால் அறிவிக்கப்பட்டவையாகும். அந்தக் கிராமங்களில் அரசு அறிவித்திருந்த நிலத் தீர்வை தள்ளுபடி சம்பந்தப்பட்ட சலுகைகள் கிட்டும். மற்ற கிராமங்களுக்கு இச் சலுகைகள் பொருந்தா. அந்த கிராமங்களில் அரசுக்கு சேரவேண்டிய நிலவரி வசூலில் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுவது நியாயமே. உறுப்பினர் அவர்களின் வினாவில் எந்த கிராமத்தின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. வினா பொதுவாக உள்ளது. புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட கிராமங்கள் என்று அறிவிக்கப்பட்ட கிராமங்களில் அலுவலர்கள் கெடுபிடி செய்து நிர்பந்தமாக தீர்வையை வசூல் செய்கின்றனர் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு சி. கோவிந்தராசன்: 110 கிராமங்கள் தவிர இதர கிராமங்களுக்கு இந்த விதிவிலக்கு கொடுக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அமைச்சர் அவர்களுக்கு

நன்கு தெரியும். அவர்கள் அந்த இடங்களுக்கு விஜயம் செய்து பார்த்திருக்கிறார்கள். அநேகமாக சிதம்பரம் தாலூகா முழுவதும், ஒரு பக்கம் கொள்ளிடக்கரை பிரதேசம்; மறு பக்கம் சமுத்திரக்கரை பிரதேசம் என்று இருக்கும்போது 110 கிராமங்கள் அல்ல: 300, 400 கிரமங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது ஒரு விஷயம்.

இரண்டாவதாக, இந்த 37 பைசா கண்டு முதலானதற்கு விதிவிலக்கு என்றிருக்கிறது. இதை நிர்ணயிப்பது யார்? அதற்கு வேண்டிய உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா?

அடுத்து, இதை நிர்ணயம் செய்யாமலேயே அந்த இடங்களுக்குச் சென்று தீர்வை வசூல் செய்வதில் கெடுபிடி, நிர்பந்தம் காட்டுகிறார்கள். ஆகவே இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? எவ்வளவு கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணை வினாக்களைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மேற்கொண்டு பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இருக்குமானால் அதுபற்றி அரசுக்கு எழுதியனுப்பலாம். 37 பைசா என்பது வருவாய்த் துறை அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு: வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவித்து பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் அப்படி அறிவிக்கப்படாமலேயே நடவடிக்கைகள் சென்னையில் கூட, ஆவடிப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் பிராவிடண்ட் பண்ட், வி.டி. போன்றவற்றிலிருந்து பணம் கொடுத்திருக்கிறார்கள். அப்படி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிக்காமலேயே கொடுத்திருக்கிறார்கள். அவைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்படவில்லை. ஏற்கனவே வேண்டுகோள் விடுத்தும் அரசாங்கம் கருதுகிறதே தவிர அறிவிக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எந்தெந்தப் பகுதிகளை நோட்டிபிகேஷன் செய்ய வேண்டுமென்பதற்கான அதிகாரம் சட்டத்திலே இருக்கிறது. அரசாங்கம் அறிவிக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் பாதிக்கப்படவில்லை அந்தப் பகுதிகள் என்று கருதுவதால் இருக்கலாம்.

திரு. இ. கோவிந்தராசன்: முன்னமேயே கூறினேன். 110 கிராமங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள் எவ்வளவு கிராமங்கள் என்று கேட்டால் எழுதித் தர

தயாராயிருக்கிறேன். எவ்வளவு கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அரசு பிரகடனப்படுத்த வேண்டும். அந்த இடங்களில் கெடுபிடி வசூல் நடக்கிறது. 17—3—1978ல் கூட பலயிடங்களில் விவசாயிகள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அந்த அடிப்படையில் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக அந்த உண்ணாவிரதம். ஆகவே எந்தெந்த கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று பிரகடனப்படுத்தப்படுமா? அதோடு கூட இந்த கெடுபிடி வசூலை உடனடியாக நிறுத்தி வைக்க அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்ற தகவல் தெரியுமா என்று கேட்டார்கள். எனக்கு அந்தத் தகவல் தெரியாது. சிதம்பரம் வட்டத்தைப் பொறுத்த வரையில், 341 கிராமங்கள் மொத்தம் இருக்கின்றன. அவற்றில் 110 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவையென்று அரசு அறிவிப்பு செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கருத்து சொல்கிறார்கள். அதை, பொதுவாகச் சொல்வதை விட எந்தெந்த கிராமங்கள் என்று குறிப்பாகச் சொல்வார்களேயானால் அது அரசுக்கு நல்லது. கெடுபிடி வசூல் அல்ல, மற்றக் கிராமங்களில் ஏற்கனவே விதிக்கப்பட்ட நிலவரி அதற்கு மேல் தண்ணீர் வரி போன்றவைதான் வசூலிக்கப்படுகிறது.

திரு கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்கள் என்று பல்வேறு இடங்களில் அறிவிக்கப்பட்டிருந்தும், கடன்கள் தள்ளுபடி செய்யவோ, ரத்து செய்யவோ செய்யப்படவில்லை என்பதும் இப்போது சம்பா, தாளடிக்கு முன்பாக ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்ற அதிகாரிகள் கடனை வசூலிப்பதற்கு கெடுபிடி செய்கிறார்கள். ஆகவே இது பற்றி மறு பரிசிலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தால் அங்கெல்லாம் அதற்கென்று இருக்கின்ற சலுகைகள் கிடைப்பதற்கு வழி ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைப் பற்றி கேட்கிறார்கள். அது பற்றி தனியாக விவரத்தைக் [illegible] பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

[1978 மார்ச் 22

வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டி வசூல்.

6. குறுகிய கால வினா. திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்-கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை, போளூர், துரிஞ்சாபுரம் நிலவள வங்கிகளில் கடன் பெற்றுள்ள விவசாயிகளிடத்தில் வறட்சியின் காரணமாக அரசு உத்தரவுப்படி ஒத்திவைக்கப்பட்ட கடன்களுக்கு தற்சமயம் அபராத வட்டி வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில். அபராத வட்டி வசூலிப்பதை தள்ளுபடி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : (அ) தள்ளி வைக்கப்பட்ட கடன் தவணைகளைக் குறித்த தேதியில் திருப்பிச் செலுத்தும் கடன்காரர்களிடம் அபராத வட்டி வசூலிக்கப்படவில்லை. குறித்த தேதியில் திருப்பிச் செலுத்தாதவர்களிடம் மட்டுமே அபராத வட்டி வசூலிக்கப்படுகிறது.

(ஆ) இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே ஏற்கனவே அங்கு நான்கு ஆண்டுகளாக இருந்து வருகின்ற வறட்சியின் காரணமாக தள்ளி வைக்கப்பட்ட கடன்களை வசூலிப்பதில அபராத வட்டியை கணக்கிட்டு வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி பல்வேறு விவசாயிகளும் எனக்கு ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி தீர விசாரித்து தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்ற கடனுக்கு அபராத வட்டி வசூலிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : வட்டியைத் தள்ளி வைக்கின்ற உத்தேசம் அரசிடம் இல்லை.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன்களை தவணை முறையில் வசூல் செய்து வருகிறார்கள். இந்த நிலையில் எங்கள் தொகுதியில் விவசாய சங்கம் என்று ஆரம்பித்து அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயிகளிடம் சென்று கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடன்களுக்கு தவணை முறையில் பணம் கட்டவேண்டாம் என்று பிரச்சாரம் செய்து வருகிறார்கள், பிரச்சாரம் செய்வதோடு மட்டு

1978 மார்ச் 22]

மல்ல. கூட்டுறவு சங்க அதிகாரிகள் வசூலுக்காக கிராமங்களுக்கு செல்லும்போது அவர்களிடமிருந்து கணக்குப்புத்தகங்களைப் பிடுங்கி வைத்துக் கொண்டு மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். புத்தகத்தையும் கொடுப்பதில்லை. காவல்துறை அதிகாரிகளின் உதவியினால் பின்னால் கணக்கு புத்தகங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதன்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்! விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள கடன்களை தவணை முறையில் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இப்பேர்ப்பட்ட தகவல் வரவில்லை. வருகின்ற நேரத்தில் அதைப்பற்றி விசாரித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. உ. சண்முகம் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது, ஒத்தி வைக்கப்பட்ட கடன்களுக்கு அபராத வட்டி வசூலிப்பதில்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒத்தி வைத்த கடன்களுக்கு அபராத வட்டி விதித்து வருவதாக நண்பர் திருவேங்கடம் கூறி, அதை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று வலியுறுத்திக் கேட்டார்கள். அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது ஒத்தி வைக்கப்பட்ட கடன்களுக்கு அபராத வட்டி வசூலிக்கப்படமாட்டாது என்ற ஒரு உத்தரவாதத்தை கொடுக்கின்ற முறையில் உத்தரவு அனுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் அளித்த பதிலைத்தவறாகப்புரிந்து கொண்டார்கள் என்று நினைக்கிறேன். நான் திரும்பவும் அதை படிக்கிறேன். "தள்ளி வைக்கப்பட்ட கடன் தவணைகளைக் குறித்த தேதியில் திருப்பி செலுத்தும் கடன்தாரர்களிடம் அபராத வட்டி வசூலிக்கப்படவில்லை. குறித்த தேதியில் திருப்பிச் செலுத்தாதவர்களிடம் மட்டுமே அபராத வட்டி வசூலிக்கப்படுகிறது" என்று தான் பதிலில் சொன்னேன் ; குறித்தநேரங்களில் தவணையைச் செலுத்துகிறவர்களிடமிருந்து அபராத வட்டி வசூலிக்க மாட்டார்கள்.

திரு. ப. உ. சண்முகம் : நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இவ்விதம் அபராத வட்டி வசூலிக்கக்கூடாது என்றும், அப்படி வசூலித்திருந்தால் அது திருப்பித் தரப்படும் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்கும் என்ற உத்தரவாதத்தை அறிவிக்க முடியுமா என்பது தான்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: குறித்த காலத்தில் என்று சொல்லும்போது, அந்த குறிப்பிட்ட கால வரம்பிற்குள் தள்ளி வைக்கப்பட்ட கடன்களுக்கு தவணையை செலுத்தியிருப்பார்களேயானால் நிச்சயமாக அவர்களிடமிருந்து அபராத வட்டி வசூலிக்கப்பட மாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 22

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைக்கப்பட்ட கடன்களுக்கு தவணையை குறித்த காலத்தில் செலுத்தி விட்டால் அபராத வட்டி வசூலிப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். குறித்த காலத்திற்கு மேல் செலுத்தினால் அந்த கால அளவுக்கு, மட்டும் அபராத வட்டியை வசூலிப்பதை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் , குறிப்பிட்ட காலத்தில் செலுத்தவில்லை என்பதற்காக பூரா காலத்திற்கும் அபராத வட்டி வசூலிக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. அதை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஏற்கனவே மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் கேட்ட கேள்வியைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இப்போது கேட்கிறார்கள். ஏற்கனவே. நான் இதற்கு பதில் அளித்துவிட்டேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, வறட்சியின் காரணமாக வழங்கப்பட்ட கடன்கள் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால்; இப்படி தள்ளி வைக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தவில்லை என்றால் அபராத வட்டி வசூலிக்கிறார்கள். தவணை செலுத்த இயலாது என்ற காரணத்திற்காகத்தான் கடன் வசூல் தள்ளி வைக்கப்பட்டது. ஆகவே, வட்டியை சஸ்பென்ஷன் செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : வட்டியை வசூலிக்காமல் இருப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை. இதில் ரிசர்வ் வங்கி ஒத்துழைத்தால் அரசு இதைச் செய்யலாம்.

[முற்பகல் 9-10]

திரு. சோ அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே. இப்போது ஒத்தி வைக்கப்பட்ட காரணங்கள் விளைச்சல் இல்லை, மழை, புயல், வெள்ளம் போன்ற விபத்துக்களால் இந்த கடன் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒத்திவைக்கப்பட்ட கடனை வசூலிப்பதே நியாயம் இல்லை. அப்படி இருக்கும் போது அதற்கு வட்டி என்றும், அபராத வட்டி என்றும் இப்போது வசூலிக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். நாம் இப்படிக் கடனை ஒத்தி வைத்தாலும், அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, ரிசர்வ் பாங்கு என்று சாக்குச் சொல்லாமல், இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கும் இதனால் சற்று லாபம் குறையுமே தவிர, பாதகம் ஏற்படாது என்பதால், இந்த அரசு இப்படி ஒத்திவைக்கப்பட்ட கடன்களுக்கு நிச்சயமாக, அறவே வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ரிசர்வ் பாங்கு என்று சாக்குச் சொல்லாதீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். இந்த ரிசர்வ் பாங்கியிடமிருந்து பணம் பெற்றுத்தான் இந்தக் கூட்டுறவுத் துறையின் மூலம் பணம், கடன் வழங்கப்படுகின்றது என்பது. எவ்வளவு காலத்துக்கு இதைத் திருப்பிச் செலுத்துவதிலே காலதாமதம் ஏற்படுகிறதோ, அந்த காலத்திற்காக வட்டியும் சேர்த்து ரிசர்வ் பாங்கிற்கு கட்ட வேண்டியிருக்கிறது என்பதை அவர் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

கல்லல் பஞ்சாயத்துக்குச் சொந்தமான பம்ப்செட்.

* 7. குறுகிய கால வினா— திரு. ஒ. சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கல்லல் பஞ்சாயத்திற்குரிய பம்ப் செட்டை நரியங்குடி பஞ்சாயத்திற்கு விற்றுவிட்டு களவு செய்யப்பட்டதாக புகார் செய்யப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து —

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், கல்லல் பஞ்சாயத்திலே ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருப்பவர் ஒன்றியத் தலைவராகவும் இருந்தார். அதன்காரணமாக நரியங்குடி பஞ்சாயத்திற்கு, கல்லல் பஞ்சாயத்தைச் சேர்ந்த இந்த பம்பு செட்டை விலைக்கு விற்று, அது நரியங்குடி கிராமத்திலே இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே விஜயம் செய்தபோது, இந்த கிராமத்து மக்கள் அவருக்குக் காண்பித்தார்கள். அப்படி இருக்கும்போது இதைப் பற்றி தகவல் இல்லை என்று சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே, அந்தக் கிராம மக்கள் புகார் செய்திருக்கின்ற காரணத்தாலே, இனியேனும் தீர விசாரித்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கல்லல் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் 18—12—1977-ல் பார்வையிட்டபோது அதற்கான அறையில் மின்மோட்டார், இதர

சாதனங்கள் இல்லாததால், கல்லல் ஊராட்சி மன்றத் தலைவரை இதுபற்றி அறிக்கை கோரப்பட்டது. அறிக்கை உடன் கிடைக்கப் பெறாததால் இதுபற்றி கல்லல் காவல் நிலையத்திற்குப் புலனாய்வு செய்ய புகார் கொடுக்கப்பட்டது. ஆனால், இதற்கிடையில் அதை நரியங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் தவசியேந்தல்பட்டி அரிசனங்கள் விவசாயத்துக்குத் தங்கள் செலவில் மராமத்து செய்து மாத வாடகை ரூ. 30க்கு 15—6—1977-ல் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதற்குப்பிறகு, இந்த பம்பு செட்டு இருக்கும் விவரம் தெரிந்த காரணத்தால், போலீஸ் மூலம் எடுக்கும் நடவடிக்கையை வாபஸ் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இந்தக் குறைபாடு ஊராட்சித் தலைவர் அவர்கள் மேல் இருக்கின்ற காரணத்தால், அவர் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஒ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ஒரு பஞ்சாயத்தைச் சேர்ந்த பம்பு செட்டை எந்தவிதமான அதிகாரமும் இன்றி, வாடகைக்கு கொடுப்பதற்கோ, விற்பதற்கோ அதிகாரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது தவறு என்ற காரணத்தால்தான் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நாங்குநேரி வட்டத்தில் அணைக்கட்டுத் திட்டங்கள்.

*653 வினா— திரு. மு. ஜான் வின்சென்ட் திரு. மு. ஆறுமுகம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நெல்லை மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில், கொடுமுடி அணைத்திட்ட வேலைகள் தற்சமயம் நடைபெறாதது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால், அதற்கான காரணம் என்ன ?

(இ) இத் திட்டப்பணிகளை முடிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இத் திட்டம் மறுபரிசீலனையில் உள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதற்கும் பதில் சொல்லிவிட்டால் நல்லது.

*654. வினா— திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நாங்குநேரி வட்டத்திலுள்ள கொடுமுடியாறு மற்றும் பச்சையாறு திட்டங்கள் எந்த நிலையில் உள்ளன ?

(ஆ) அவைகளை உடனடியாக நிறைவேற்ற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) ; இத் திட்டங்கள் மறு பரிசீலனையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 655.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நான் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறேனே, அது தங்கள் கண்ணில் படவில்லையா ? நான் கேள்வி கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபாநாயகரைக் கேள்வி கேட்கக்கூடிய நிலை இந்த அவையிலே இருக்கக் கூடாது. என் கண்ணில் படவில்லை. பேச வேண்டுமென்றால் பேசலாம். திரு. அழகர்சாமி.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நான் தங்களை கேள்வி கேட்கவில்லை. நான் கையைத் தூக்கியது தங்கள் கண்ணில் படவில்லையா என்றுதான் கேட்டேன்.

தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முக்கியமானத் திட்டம். நாங்குநேரி வட்டத்தில் ஏறக்குறைய நூற்றுக் கணக்கான ஏக்கருக்கு பாசனத்திட்டமாகும். இந்தத் திட்டம் ஒரு பெரிய மனிதரின் தலையீட்டால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதனால் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அங்கே ஊர்வலம், உண்ணாவிரதம், போராட்டம், மறியல் எல்லாம் செய்தார்கள். அதற்கு 30, 40 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு தனி நபருடைய தடங்கல் காரணமாக இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, பல்லாயிரக்கணக்கான நிலம் லாபமடையக்கூடிய இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டத்துக்கு 166 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டு உத்தரவிடப்பட்டது. ஆனால், மீண்டும் ஆய்வு

[1978 மார்ச் 22

செய்தபோது அதனுடைய மதிப்பீடு 223 லட்சம் ரூபாய் ஆகு மென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் வறட்சி நிவா ரணப் பணியின்கீழ் 1966 ஆம் ஆண்டு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கி வள்ளியூரில் ஒருஅலுவலகத்தைத் திறந்து குடியிருப்பையும் கட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனல் இந்தத் திட்டத்தைப் பற்றி போர்டு மெம்பர் (புட் ப்ரொடக்ஷன்). சீஃப் எஞ்சினியர் ஆராய்ந்தபோது இந்தத் திட்டம் சிக்கனமாக இராது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக் கிறது. இருப்பினும், இந்தத் திட்டத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்து மீண்டும் அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று தலைமைப் பொறியாளருக்கு (பாசனம்) உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை கைவிடப்பட்டது என்று எண்ணத் தேவையில்லை. பெரிய மனிதர் தலையீடு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். என்னிடத்தில்கூட சிலர் சொன் ஞர்கள். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல் அவர் பெயரை இணைத்துச் சொல்கிருர்களே தவிர. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. க. அன்பழகன் : இந்த அணை கட்டுவதற்காகப் போடப் பட்ட மதிப்பீட்டின அளவு விரிவடைந்து விட்டதன் காரணமாக இடையில் நிறுத்தப்பட்டது என்று சொன்ஞர்கள். முதலில் பரிசீலனை நடைபெற்று எல்லா விதமான விவரங்களும் சேகரிக்கப் பெற்று, அலுவலகம், குடியிருப்பு போன்றவை கட்டி முடிக்கப் பட்டு விட்டன என்று சொன்ஞர்கள். அலுவலகம், பொறி யாளர்களுக்கு வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்டுவிட்ட பிறகு நிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்ன உண்மையாகவே காக்கை உட்கார்ந்ததா? பனம்பழம் விழுந்ததா!

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி அல்ல. 223 லட்சம் ரூபாயைச் செலவழித்தும் அதிலே பெரும் பயன் இல்லாமல் போய்விடும். அப்படிப் பயன் இல்லாத ஒன்றை 223 லட்சம் ரூபாய் செலவுசெய்து நிறைவேற்றினல் 223 லட்சம் போய்விடும். இப்போது கைவிட்டால் 25 லட்சம்தான் போகும். ஆகவேதான், அந்தத் திட்டத்தைப் பற்றி நன்ருக ஆராய்ந்து எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அரசு ஆலோசனையை வழங்கி யிருக்கிறது.

New anicuts in Periyakulam talk

Q. No. 655 Thiru. K. KANDASAMY. Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) Whether action has been taken to construct Sothup- parai Anicut and Kuppombarai Anicut in Per yakulam taluk Madurai district, and

(b) if so, the details thereof?

1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை கிராமத் தின் அருகே வராக நதியின் குறுக்கே அமைக்க திட்டமிடப் பட்டுள்ள சோத்துப்பாறை அணைக்கட்டு திட்டம் விரிவான ஆய்வு நிலையில் உள்ளது.

குப்பம் பாறை அணைத் திட்டம், பெரியகுளம் வட்டம், மதுரை மாவட்டம், வடகரை கிராமத்தின் அருகே அமைக்க தயாரித்த மதிப்பீடு சிக்கனமாக அமையாத காரணத்தால் கைவிடப்பட்டது.

திரு. கே. பண்ணை சேதுராம் : இந்த சோத்துப்பாறை அணைக் கட்டுத் திட்டம் நீண்ட நெடுங்காலமாக ஆய்வில் இருந்து வரு கிறது. காலதாமதத்திற்குக் காரணம் என்ன? 1974-ம் ஆண்டில் அந்தத் திட்டம் மூன்றரைக் கோடி ரூபாய் செலவில் கட்ட உத் தேசிக்கப்பட்டு அப்போது அது வருமானம் வரக்கூடிய திட்டமல்ல —Not a beneficial Scheme என்ற அடிப்படையில் தள் ளப்பட்டது. தற்சமயம் பரிசீலனை செய்யப்பட்டு 5½ கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. காலதாமதம் ஆக ஆக தடங்கள் ஏற்படும் காரணத்தால் இதனை விரைவுபடுத்தி அணைக்கட்டு கட்டுவது உடனடியாகச் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சோத்துப்பாறை திட்டத்தைப் பொறுத்தவரை 451 லட்சம் ரூபாய் செலவிடப்படு மென மதிப்பிடப்பட்டுள்ளது. 451 லட்சம் ரூபாய் என்பது மிகவும் கூடுதலான தொகை. அந்த அளவுக்குச் செலவு செய்தால் அந்தத் திட்டம் ஆதாயமாக இருக்காது என்பதுதான் உண்மை. அதே நேரத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற வகையில் மதிப்பீடு தயாரிக்கின்ற துறையினர் இன்னும் எந்த அளவுக்குச் செலவைக் குறைத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என் பது பற்றி மீண்டும் ஆராய வேண்டுமென்று அரசு உத்தர விட்டிருக்கிறது. செலவும் குறைய வேண்டும், அதே நேரத்தில் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்ற வகையில் வழி வகைகள் காணவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. திட்ட மதிப்பீடு முடிந்த பிறகு திட்டம் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : மதுரை மாவட்டத்தில் சோத்துப் பாறைத் திட்டம் போல் குதிரையாறு திட்டம் என்ற திட்டம் பல வருஷங்களுக்கு முன்பே பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமாகும். நமது அரசு புதிதாகப் பதவியேற்று போன ஆண்டு நிதி அறிக்கையில் இதைப்பற்றி குறிப்பிட்டிருந்தார்கள். இந்த ஆண்டு அதைப்பற்றிய பிரச்சினையே தெரியவில்லை. அது கைவிடப் பட்டு விட்டதா அல்லது பரிசீலனையில் இருந்து வருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1975 ஆம் ஆண்டு குழுவில் ஏற்றுக் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டம். பட்டியலில் அது இடம் பெற்றுள்ளது. எந்நிலையில் இருக்கிறது என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

பாலாறு படுகை விதிகள்.

* 656 வினா. திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :—

பாலாறு படுகை விதிகளை ரத்து செய்வது பற்றி அரசு முடிவு ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

(முற்பகல் 9·20)

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, இந்த பாலாறு படுகை விதிகளின்கீழ் விலக்கு சான்று வாங்க வேண்டு மென்று கட்டாயப்படுத்தப்படுகிறது. குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே, அந்த சான்றிதழை கலெக்டரிடத்திலே வாங்கிய பிறகும்கூட நிலத்தடி நீர் சான்று வாங்க வேண்டுமென்ற அடிப்படையிலே பம்பு செட்டுகளுக்கு பெர்மிஷன் ரத்து செய்யப் படுகின்றன. இப்படிப்பட்ட இரண்டு விலக்கு சான்றுகளை வாங்கவேண்டியிருப்பதால் வட ஆற்காடு மாவட்டத்திலே யாருமே பம்புசெட் போடமுடியாத நிலை இருக்கிறது. ஒன்று பாலாறு படுகை விலக்கு சான்று வாங்கவேண்டுமென்று சொல்ல வேண்டும். அல்லது நிலத்தடி நீர் சான்று வாங்க வேண்டும் என்று சொல்ல வேண்டும், ஏதாவது ஒன்றின்கீழ் விலக்கு சான்று பெற்றால் போதும் என்ற நிலைமை இல்லாமல் இரண்டையும் சேர்த்து கொடுக்க வேண்டுமென்று விவசாயிகளைக் கட்டாயப் படுத்துவது சரிதானா? அந்த மக்களை, இப்படிப் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாட்டிலே வட ஆற்காடு மாவட்டத்திலேதான் அதிகமாக பம்புசெட்டுகள் இயங்கிவருகின்றன. வட ஆற்காடு மாவட்டத்திலே மட்டும் 1 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பம்பு செட்டுகள் இயங்குகின்றன. இந்த பாலாறு பாசன விதிகள் என்பது ஏற் கெனவே பாசனம் பெறும் பகுதிகளுக்கு பாதகம் வந்து விடக் கூடாது என்ற முறையிலே சில விதி முறைகள் வகுக்கப்படுகின்றன. அந்த அடிப்படையிலே, மேற்கொண்டு கிணறுகள் தோண்ட வேண்டுமென்றாலோ அல்லது மின்சாரம் வேண்டுமென்றாலோ அந்தச் சான்று பெறவேண்டியிருக்கிறது. ஆனால், நிலத்தடி நீர் சான்று என்பது தமிழ்நாட்டுக்கே பொதுவானது. ஏற்கெனவே சாங்ஷன் செய்யப்பட்ட பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங் கும்போது நிலத்தடி நீர் சான்று தேவையில்லை என்று தெரிவிக்கப் பட்டு இருக்கிறது. ஆனால், பாலாறு பாசன விதிகளைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட விலக்கு சான்று வாங்கித் தரவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே. வட ஆற் காடு மாவட்டத்திலேதான் அதிகமான மின்சார மோட்டார்கள் ஓடுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக அதிகமாக நெல் உற்பத்தியை செய்கிற மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம்தான். பாலாறு பாசன விதிகள் என்ற அடிப்படையில் சில கிராமங்களைத்தான் பாதிக்கப்பட்ட கிராமங்கள் என்றும் சில கிராமங்கள் அதற்கு அப்பாற்பட்ட கிராமங்கள் என்றும் வகைப்படுத்தியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட கிராமங்களிலே உள்ளவர்கள் ஒவ்வொரு முறை யும் அதற்காக மனுச்செய்து கொண்டு ஒவ்வொரு முறையும் அதி காரி சென்று பார்த்து சான்றிதழ் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட முறையில்லாமல், மொத்தமாக பாதிக்கப்பட்ட கிராமங்களையெல்லாம் அதிகாரிகள் பார்வையிட்டு எந்த எந்தப் பகுதிகளிலே பாதிக்கப்பட்ட சர்வே நிலங்கள் இருக் கின்றன, எந்த எந்தப் பகுதிகளிலே அதற்கு அப்பாற்பட்ட சர்வே நிலங்கள் இருக்கின்றன என்பதை மொத்தமாக சர்வே செய்து பார்த்து முடிவு செய்து விட்டால் இப்படி ஒவ்வொரு முறையும் விவசாயிகள் மனுச் செய்து கொண்டு இருக்க வேண்டிய நிலைமை ஏற்படாது அல்லவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, இந்த பாலாறு படுகை விதிகளின் அடிப்படையிலே விலக்குச் சான்றுகள் ஏற்கனவே கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர் களும் நிலத்தடி நீர் சான்று வாங்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். ஆகவே, பாலாறு படுகை விதிகளின் கீழ் சான்றிதழ் பெற்றவர்கள் நிலத்தடி நீர் சான்றிதழ் வாங்கித் தர வேண்டியதில்லை என்ற உத்தரவை அரசு பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பாலாறு படுகை விதிகளிலிருந்து விலக்குச் சான்று பெறுவது என் பது ஏற்கெனவே பாசனம் பெறுகின்ற ஆயக்கட்டுக்கள் பாதிக் காமல் இருக்க வேண்டுமென்றுதான் ஆனால் நிலத்தடி நீர் சான்றிதழ் என்பது பொதுவாக நீர்மட்டம் கீழே குறைந்து போய் விடக்கூடாதே என்ற முறையிலேதான் பெறவேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இரண்டும் தேவை தான்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் வட ஆற்காடு மாவட்டத்திலே சிறு விவசாயிகள் என்ன கதியானாலும் பரவாயில்லை என்ற அடிப்படையிலே வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சி இருந்த காலத்திலே செங்கற்பட்டு மாவட்டத்திலே உள்ள மிட்டா மிராசு களுடைய நலனைக் கருதி இந்த விதிகள் கொண்டுவரப்பட்டது என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அன்று முதல் இன்று வரையில் மைசூர் மாநிலத்தைச் பொறுத்த வரையிலும் இப்படிப்பட்ட

விதி கிடையாது. அதைப்போலவே ஆந்திராவிலிருந்து தமிழ் நாட்டிலே சேர்ந்துள்ள பகுதிகளிலே அன்று முதல் இன்று வரையிலே இந்த விதிகள் கிடையாது. தமிழ்நாட்டில் சிறு விவசாயிகள் நல்லபடியாக இருக்க வேண்டும் என்ற எண்ணமுள்ள இந்த அரசு உடனடியாக பாலாறு பாசன விதிகளை ரத்து செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பாலாறு விதிகளுக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லை. வெள்ளைக்காரர்கள் காலத்திலே இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டன. அது செங்கற்பட்டிலே உள்ள நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக இருக்கிறது என்ற திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களின் கருத்து என்னைப் பொறுத்த மட்டில் புதிய தகவல்.

ஆனால், இதுபற்றி சுதந்திரம் கிடைத்த பிறகு கூட பல்வேறு கமிட்டிகள் நியமிக்கப்பட்டு அவர்களெல்லாம் சென்று பார்த்திருக்கிறார்கள். பாலாறு பகுதியில், சாதாரணமாக ஐந்து ஏக்கர்கள் ஒரு எம்.சி.எஃப். டி.க்கு இருக்க வேண்டும், ஆனால், இப்பொழுது பாலாற்றைப் பொறுத்தவரையில் எட்டு ஏக்கர்கள் ஒரு. எம்.சி. எஃப். டி-க்கு இருக்கிறது.

ஆகவே, ஏற்கனவே அதிகமான அளவிற்கு ஆயக்கட்டுகள் பாசன வசதியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இருக்கின்ற தண்ணீரின் அளவையும் பாசனம் பெறும் நிலப் பரப்பின் அளவையும் பார்க்கும்பொழுது நிலப்பரப்பின் அளவு அதிகமாக இருக்கிறது. ஆகவே, பாலாற்றில் இருக்கும் ஊற்று நீர் நாளாவட்டத்தில் வற்றிப்போகும் நிலையும், எல்லா பாசன வசதிகளும் கெட்டுப்போகும் நிலையும் ஏற்பட்டால் சிறு விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள், பெரிய விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள் என்ற கருத்துக்களின் அடிப்படையிலேதான் இந்த விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, பெரும்பாலும் இந்தச் சான்றிதழைப் பெற்றுவிடுகிறார்கள், சான்றிதழைப் பெற்று மின்சாரத்தையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சான்றிதழைப் பெறுவதற்கு விவசாயிகள் மெத்த சிரமப்படுகிறார்கள். இந்தச் சிரமத்தைப் போக்குகின்ற வகையில் இந்தத் திட்டம் கைவிடப்படுமா? இந்தத் திட்டத்தினால் எத்தனை விவசாயிகள் சான்றிதழ் பெற முடியாமல் மின்சாரம் கிடைக்கப் பெறாமல் தடைப்பட்டிருக்கிறார்கள் என்ற கணக்கை அமைச்சரவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எந்த விதிகளுக்கும் விலக்குகள் உண்டு. அதே போல இந்த விதிக்கும் பல்வேறு விலக்குகள் 1963-ஆம் ஆண்டிலே போட்டிருக்கிறார்கள். அவற்றைப் பயன்படுத்தும் கெட்டிக்கார விவசாயிகள்

உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த விதிகள் பொதுவாக அந்த பாலாறுபாசனப்பகுதிகளைப் பொறுத்தவரையில் தேவையானது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் அதே நேரத்தில் எந்த அளவிற்கு எத்தனை பேர்களுடைய மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

மீனவர்களுக்கு இயந்திரப் படகுகள் வழங்கல்.

657 வினா— திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை* அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976–77-ல் முப்பத்தொரு இலட்ச ரூபாய்க்கு மீன்பிடி இயந்திரப் படகுகள் கட்டி, தவணைக் கொள்முதல் முறையில் மீனவர்களுக்கு விற்பனை செய்வதற்காக கடன்கள் வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டத்திற்கு, யார் யாருக்கு வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:

(அ) மீனவர்களுக்கு 202 படகுகள் 1976–77-ல் தவணைக் கொள்முதல் முறையில் வழங்கப்பட்டன. மீனவர்கள் ஏற்றுக் கொண்ட 5 சதவீதத் தொகை போக அதில் மீதம் 95 சதவீதத் தொகையான ரூ. 2,41,59,340.33-க்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சென்னை, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாநில முழுதும் விசைப்படகு பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல்* அவையின் முன் வைக்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விசைப் படகுகளை இனி வருங்காலத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அவர்களுக்கே அளிக்கப்படும் என்ற கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதா? அப்படியென்றால் வருங்காலத்தில் அதை அமல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அரசின் வருங்காலத் திட்டம், முதலில் மீனவர் கூட்டுறவு சங்கங்களை சீரமைத்து, அப்படி சீரமைக்கப்பட்ட பின்னாலே மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக மீனவர்களுக்கு விசைப்படகுகள் வழங்குவது பற்றி இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

*[702-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

திரு. எம். வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, மீன்பிடி இயந்திரப்படகுகள் கட்டி தவணைக்கொள்முதல் முறையில் மீனவர்கள் அல்லாத தனி நபர் குத்தகைக்காரர்களுக்கு விற்பனை செய்ய கடன் வழங்கப்பட்டதா? அப்படியென்றால் எந்த அடிப்படையிலே வழங்கப்பட்டது? அவர்கள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரமான குறிப்புகள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் சேகரித்துத் தருகிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சமீபத்தில் ஜப்பானுக்குச் சென்றபொழுது மீனவர்களுக்கு உதவி செய்ய ஜப்பான் மீன் பிடி கிரேனின் என்ஜின்களை இறக்குமதி செய்ய வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி இறக்குமதி செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசின் அனுமதியோடு ஜப்பானிலே 'யமாஹா' என்ஜின் நிறுவனத்திலிருந்து தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குத் தேவையான எஞ்சின்களை வாங்குவதற்குண்டான ஒப்பந்தம்பற்றி நமது அரசு தீவிரமாகப் பரிசீலிக்கிறது. 200 எஞ்சின்களை வரவழைப்பதற்கு மத்திய அரசின் அனுமதியை இந்த அரசு பெறவிருக்கிறது.

(முற்பகல் 9—30)

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற இந்த விசைப்படகுகள் கூட்டுறவு முறையில் கடன் மூலமாக வழங்கப்படுகின்றது. அந்தக் கடன் தீருவதற்கு முன்னால் அந்த விசைப் படகுகளை அவர்கள் வேறு நபருக்கு விற்பனை செய்ய உரிமை உண்டா? இல்லையெனில், விற்பனை செய்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, விற்பனை செய்வதற்கு அவர்களுக்கு நிச்சயமாக உரிமையில்லை. அப்படி விற்பனை செய்பவர்களைக் கண்டு பிடித்து அவர்களிடமிருந்து அந்தப் படகுகளை அரசாங்கமே அபகரித்துக் கொள்வதற்குச் சட்டங்களை கொண்டு வரலாமா என்று இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, மீனவர்களுக்கு இயந்திரப் படகு வழங்கும் திட்டத்தில் மீன் பிடிப்பதையே முழுவதும் தொழிலாகக் கொண்டவர்களுக்கு இயந்திரப்படகு வழங்கப்படுமா? மீன் பிடிப்பதை தொழிலாகக் கொண்டில்லாதவர்களுக்கு இயந்திரப் படகு கொடுப்பதை இந்த அரசு தடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : வருங்காலத்தில் இந்த முறை நிச்சயமாகக் கையாளப்படும்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே மண்டபத்தில் இந்தோ நார்வீஜியன் பிராஜக்ட் அடிப்படையில் விசைப்படகுகள் தயாரிக்கப்படுகின்றன. இப்பொழுது திடீரென்று ஜப்பானிடம் ஒப்பந்தம் செய்யவேண்டிய அவசியம் என்ன வந்தது? ஏன் நார்வேயிலேயே வாங்கப்பட முடியாதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள், அவர்கள் படகுகளைத்தான் செய்கிறார்கள் என்று. நாம் வாங்குவது படகுகளை ஓட்டுவதற்கான இயந்திரங்கள், 'இன்ஜின்கள்'. ஜப்பானில் தயாரிக்கப்படுகின்ற இன்ஜின்களை மண்ணெண்ணெயிலே ஓட்டமுடிகிறது. ஆகவே மீனவர்களுக்கு மிகக் குறைந்த செலவிலேயே இந்தத் தொழிலிலே ஈடுபட வாய்ப்பும் வசதியும் இருக்கிற காரணத்தாலேதான் ஜப்பானிலே வாங்க முடிவெடுத்திருக்கிறோம்.

திரு. சி.மு. வாசன் : தலைவரவர்களே, மீன் பிடிப்போர் சங்கங்களில், மீன்பிடி தொழிலில் இல்லாதவர்கள் தலைவராக இருப்பதை இந்த அரசு அனுமதிக்காமலிருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இப்பேர்ப்பட்ட தவறுகளைத் தடுப்பதற்கு இந்த அரசு கூடிய விரைவில் சட்டம் கொண்டு வர இருக்கிறது.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, சமீபத்தில் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் ஜப்பான் சென்று வந்தார். அங்கேயும் மீன் பிடி படகுகளுக்கு இன்ஜின்கள் தயாரிக்கப்படுகின்றன. அதைப் போல் நம்முடைய நாட்டிலேயும் தயாரிக்கப்படுகிறது. அந்த இரண்டு இன்ஜின்களுக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? இங்கே தயாரிக்கப்படுவதை விட, அங்கே தயாரிக்கப்படுவது தரம் உயர்ந்ததா? இரண்டுக்கும் வித்தியாசம் என்ன என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்தியாவிலே அகமதாபாத்திலுள்ள ஒரு நிறுவனம் இத்தாலிய நாட்டு தனிப்பட்ட நிறுவனத்தினுடைய கூட்டோடு அங்கே இயந்திரம் செய்கிற தொழிற்சாலையை நடத்தி வருகிறார்கள். ஜப்பானிலிருந்து இயந்திரம் வாங்கப்போவது பற்றிய செய்தியைப் பத்திரிகைகளிலே பார்த்து அறிந்தவுடன், நேற்றுகூட அவர்கள் வந்து என்னிடம் பேசினார்கள். துரதிருஷ்டவசமாக, அவர்களுடைய இயந்திரம் பெட்ரோலிலே இயங்குவது என்பதோடு, ஜப்பான் இயந்திர விலையை விட அதிகமான விலையாக இருக்கிறது என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்.

*658 வினா.—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடந்த ஐந்து வருடங்களாக எந்தவித வரவு-செலவும் வைத்துக் கொள்ளாத மீனவர் கூட்டுறவு சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்: (அ) இருபத்தைந்து.

(ஆ) நீர் நிலைகளில் தண்ணீர் இல்லாமல் இருந்த காரணத்தினாலும், போதிய நிதி வசதிகள் இல்லாமையினாலும், பெரும்பான்மை சங்கங்களின் உறுப்பினர்கள் பிழைப்பை நாடி வெளியூர்களுக்குச் சென்றுவிட்டனர்.

சென்னையிலுள்ள பள்ளிகளின் நேரம்.

*659 வினா—திரு. மு. அரங்கநாதன்:
திரு. சோ. அழகர்சாமி:
திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா:
திரு. அ. புருஷோத்தமன்:
திரு. துவா முத்துசாமி:

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —:

சென்னை மாநகரத்தில் உள்ள பள்ளிகளின் துவக்க நேரத்தை மாற்றி அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இப்போது பள்ளி துவக்க நேரங்கள் மிக அதிகாலையிலே இருப்பதாகவும், அப்பொழுது குழந்தைகள் போவதற்குச் சிரமப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. அது உண்மையா? இப்பொழுது காலையிலும், மாலையிலும் இரு ஷிப்டுகள் நடத்தப்படுகின்றனவா? காலையிலே எத்தனை மணிக்கு பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றன? அதேபோல், மாலையிலே எத்தனை மணிக்கு ஆரம்பிக்கப்படுகின்றன? இதுபற்றி, பெற்றோர்கள் சார்பிலே, பள்ளிகள் சார்பிலே மாறுதல் செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் வந்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தென் சென்னை பள்ளிகள் காலை 8–30 மணி, வட சென்னை பள்ளிகள் காலை 9 00 மணி, சென்னை கல்லூரிகள் காலை 9–00 மணி என்று மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாறு பள்ளிகள்

துவங்கும் நேரத்தை மாற்றியமைத்ததை எதிர்த்துப் பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து முறையீடுகள் வந்தன. அம்முறையீடுகளை பரிசீலனை செய்து, பள்ளிக் கல்வி இயக்குனர் பள்ளிகள் துவங்கும் வேலை நேரத்தைக் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கலாம் என்கிற கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளார். தென் சென்னை பள்ளிகள் காலை 9–30 மணி, வட சென்னை பள்ளிகள் காலை 10–00 மணி. பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் சென்னை நகர பஸ்களில் நெரிசல் இன்றி சௌகரியமாகப் பிரயாணம் செய்வதற்கு போக்குவரத்துத் துறையினர்தான் வசதி செய்து கொடுக்கமுடியும். அந்தத் துறையினரோடு தொடர்பு கொண்டு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரத்தை மாற்றுவது பற்றிய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், 9½ மணிக்கு தென் சென்னை பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்று. அந்தக் கருத்தை உடனடியாக நிறைவேற்ற என்ன தடை இருக்கிறது? போக்குவரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஹைஸ்கூல்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. லோயர் ஸ்கூல், ஹையர் எலிமெண்டரி ஸ்கூல், எலிமெண்டரி ஸ்கூல் போன்றவைகளை அடுத்த ஆண்டு பள்ளிகள் ஆரம்பிப்பதிலே இருந்து இந்த உத்தரவை இட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதற்குள் முடிவெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்.

*660 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அனைத்தையும் அரசே ஏற்றுக் கொள்ளும் யோசனை பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கிராமங்களில் தனியார் பள்ளிகளை வைத்துக் கொண்டு சரியாக நிர்வாகம் செய்யாமல் பல்வேறு ஊழல்கள் நடக்கின்றன. அந்த ஊழல்களைக் களைவதற்கு தேசிய மயம் ஆக்குதல் என்ற அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற எல்லாப் பள்ளிகளையும் ஏற்றுக் கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது அப்படி ஒரு யோசனை இல்லை.

[1978 மார்ச் 22

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை அரசு ஏற்க இயலாது என்றால் மக்கள் குழு அமைத்து அந்தப்பள்ளிகள் சரியாக இயங்குகின்றனவா என்று அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே ஒவ்வொரு பள்ளியிலும் பெற்றோர்—ஆசிரியர் சங்கம் இருக்க வேண்டும் என்று இப்போது நாம் வலியுறுத்தி வருகிறோம். அது அமைந்து செயல்பட்டாலே நாம் சொல்லுகின்ற சில குறைபாடுகள் நீங்கி பள்ளிகள் நல்லமுறையில் நடக்க வாய்ப்பு இருக்கும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ஒன்றியப் பெருந் தலைவர்கள் நிர்வகிக்கக் கூடிய வழியிலே இருப்பதால் பெருந் தலைவர்களுடைய கருத்துப்படி தான் பெரும் தவறுகள் நடப்பதாகக் கருதப்படுகிறது. எனவே, அந்தப் பள்ளிகளைக் கொண்டு ஒரு கல்வி வாரியம் தனியாக அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் நல்ல முறையில் இயங்குவதற்கு அவர்களுக்கு ஆய்வாளர்களை வைத்திருக்கிறோம். ஆகவே நிர்வாகத்திலே ஒருவர் இருக்கின்றார் என்ற காரணத்தாலே நாம் இந்தக் குற்றங்களைச் சொல்ல முடியாது. குறைகளைக் களைய போதுமான பாதுகாப்புகள் இருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையில் நாம் பரிசீலனை செய்கிறோம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் தரம் மிகவும் குறைந்திருக்கின்றன என்பது தெரிந்திருந்தும் அந்தக் கிராமாந்திர பள்ளிகளில் தரத்தை உயர்த்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடுகள் போக வேண்டுமானால், பெற்றோர்கள் அதிகமான அளவுக்கு பள்ளிகளுக்கு வந்து ஆர்வம் காட்ட வேண்டும் என்றுதான் நாம் எதிர்பார்க்கிறோம்.

*661 வினா—திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மாண்புமிகுகல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பஞ்சாயத்து யூனியன் பள்ளியின் கல்வித்தரத்தை உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, பள்ளிகளில் இப்போது கல்வியின் தரம் மிகவும் குறைந்து இருக்கிறது. அதைப் போக்குவதற்கு பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கும், கமிஷனருக்கும் சரியான அதிகாரம் இல்லாமல் இருப்பதால் தான், இந்தப் பள்ளிகளில் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது அதை மனதிற்கொண்டு பள்ளிகளை சரியாக நிர்வகிக்கக் கூடிய அதிகாரங்களைப் பஞ்சாயத்துத் தலைவருக்கும் கமிஷனருக்கும் கொடுக்க அரசு முன் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது கல்வித் துறை ஆய்வாளராக பஞ்சாயத்து யூனியன் அதிகாரி ஒருவர்தான் இருக்கிறார்கள். இப்போது இருக்கிற அதிகாரங்களை வைத்துக் கொண்டு தரம் உயர்த்த நடவடிக்கை எடுப்பதற்கு பெருந்தலைவருக்கும், கமிஷனருக்கும் அதிகாரம் இருக்கிறது.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இங்கிலீஷ் மீடியம் போதிக்கப்படுகிறதா ? இல்லையென்றால் அந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது இல்லை. அப்படி ஒரு யோசனையும் இல்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இப்போது பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தின் கீழ் இருப்பதன் காரணமாகப் பஞ்சாயத்துத் தலைவர் அவர்கள் அதிலே பெரிய அதிகாரம் செலுத்துகிறார்கள். அதை வைத்துக் கொண்டு ஆசிரியர்களைக் கூட அடித்துத் துன்புறுத்துகிறார்கள். எனவே, இந்த யூனியனிலே இருக்கிற அதிகாரத்தை அரசாங்கமே ஏற்றுக் கொண்டு அரசுப் பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்று ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பெருந் தலைவர்கள் ஆசிரியர்களை அடித்தால் அவர் மீது ஐ.பி.சி. சி.ஆர்.பி.சி. போன்றசட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இங்கே கொடுத்திருக்கிற ஆங்கில கேள்வித்தாளில் 'whether it is proposed to improve the standard of Education in the Panchayat Union Schools......'

என்றிருக்கிறது. அதற்கே இல்லை என்று சொல்லுகிறாரே அமைச்சர். அப்படி என்றால் எதற்கு அரசாங்கம், எதற்கு கல்வி இலாகா. அதுதான் எனக்குச் சந்தேகம் வந்திருக்கிறது. அதுதான் ஒழுங்குப் பிரச்சினை.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே. புதிதாக ஒரு திட்டமும் இல்லை என்று அதற்குப் பொருள்.

திரு. க. சுப்பு : இங்கிலீஷ் டிரான்சலேஷன் தப்பா ? அது ரிக்கார்டில் இருக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். புதிதாக ஸ்கீம் இல்லை என்று சொல்லிவிட்டார், உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : இங்கிலீஷில் என்ன போட்டு இருக்கிறார்கள் என்றால் 'whether it is proposed to improve the standard of Education in the Panchayat Union Schools ......' என்று கேள்வி. ஸ்டான்டர்ட் ஆப் எஜிகேஷன் இம்புரூவ் செய்ய ஸ்கீம் இல்லை என்றால் என்ன பொருள், அப்புறம் சர்க்கார் எதற்கு?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்ட கேள்வியோடு நிறுத்துங்கள். மீண்டும் மீண்டும் அதே கேள்வியைப் போட்டு, கிளாரிபிகேஷன் கேட்டுக் கொண்டே இருக்கக் கூடாது. உட்காருங்கள்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, ஊராட்சிப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களின்கீழ் இருந்தும், கல்வி இலாகாவை சேர்ந்த துணை ஆய்வாளர்கள் அடிக்கடி தலையிடுவதால் அவைகளில் கல்வியின் தரம் குறைகிறது. ஆகவே, அவற்றை ஒன்றியத்தின் முழு நிர்வாகத்தில் கொண்டு வர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, துணை ஆய்வாளர்கள் அடிக்கடி போய்ப் பார்ப்பார்களானால் நிச்சயம் கல்வியின் தரம் உயரும்.

சென்னை மாநகராட்சி.

* 662. வினா—திரு. சு. முத்துசாமி கரையாளர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு, சென்னை மாநகராட்சி விஷயங்களைக் கவனிக்க மேல்நிலைக் குழுவை நியமித்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் பரிந்துரையின் நகல் ஒன்று பேரவை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) பரிந்துரை வரவில்லை. வந்தபின் அவசியமானால் வைக்கப்படும்.

திரு. சு. முத்துசாமி கரையாளர் : தலைவரவர்களே, அந்தக் கமிட்டியில் அங்கத்தினர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அந்த அறிக்கை எப்போது வரும் என்பதை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அந்தக் குழுவின் உறுப்பினர்கள் 5 பேர். 31-5-1978-க்குள் அவர்கள் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அரசு கோரியுள்ளது.

திரு. மு. அரங்கநாதன் : சார். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் குழு பற்றி பதில் வந்தாகி விட்டது. அதை ஒட்டித்தான் மற்ற கேள்விக்கும் பதில் வரும். உட்காருங்கள்.

சென்னை மாநகராட்சிக் கணக்குத் தணிக்கை.

* 663. வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகராட்சியில் 1977–78-க்கான ஆண்டுக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு விட்டதா ?

(ஆ) ஆம் எனில், தணிக்கை அறிக்கைகளின் நகல் ஒன்று பேரவை முன் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியின் வரவு செலவுகளைத் தணிக்கை செய்வது பற்றி நான் கேள்வி கேட்டு இருக்கிறேன். ஒரு ஆடிட்டும் அங்கே நடைபெறுவதாகத் தெரியவில்லை. அங்கே தணிக்கை செய்யப்பட்டு இருக்கிறதா என்று நான் கேட்டு இருக்கிறேன். இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். வரவு-செலவுகளைத் தணிக்கை செய்யாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

[1978 மார்ச் 22

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, 1977–78-ம் நிதி ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை 1978, நவம்பர் மாதத்திற்குள் முடிவு பெற வேண்டும். 1977–78 நிதி ஆண்டு முதல் அரையாண்டின் தணிக்கை அறிக்கை தற்போது தணிக்கையாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியில் 1977–78-ம் ஆண்டில் தணிக்கை செய்யப்பட்டிருக்கிறதா என்று மட்டும் உறுப்பினர் கேட்டு இருக்கிறார். 1973-ம் ஆண்டிற்குப் பிறகு செய்யப் பெற்றுள்ள ஒவ்வொரு ஆண்டின் தணிக்கை அறிக்கையும் இந்த அவையில் வைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அவைகள் எல்லாம் முடிவு செய்யப்பட்டுவிட்டன. தேவைப்பட்டால் பேரவையில் வைப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

தாராசுரம் பஞ்சாயத்து.

*664. வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலுக்கா, தாராசுரம் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி பஞ்சாயத்துக் கூட்டத்தைக் கூட்ட மறுத்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) மேற்படி பஞ்சாயத்திற்குட்பட்ட மீன் வளர்ப்பு குளங்களை பாதுகாக்க விதிமுறைக்கு புறம்பாக தன் விருப்பத்திற்கிணங்க நபரை நியமித்தது சம்பந்தமாக அரசுக்கு ஆட்சேபங்கள் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) பேரூராட்சித் தலைவருக்கும், நிர்வாக அதிகாரிக்கும் சுமுக உறவு இல்லாததால் இத்தகைய நிலை ஏற்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவரை மாற்றிவிட்டார்.

(ஆ) நிர்வாக அதிகாரிக்கு இதில் ஒன்றும் தொடர்பு இல்லை எனவும், மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, தலை மூளையை அரித்ததைப் போல், வேலியே பயிரை மேய்ந்தது என்று சொல்வது போல், பஞ்சாயத்து அதிகாரியே பஞ்சாயத்தைக் கூட்டவில்லை என்றால் அது சரிதானா, முறைதானா, வரும் காலத்தில் இப்படிப்பட்ட முறை இல்லாமல் தவிர்க்கப்படுமா?

1978 மார்ச் 22]

*மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மன்றக் கூட்டத்திற்கான பொருட் குறிப்பு பற்றி மன்றத் தலைவருக்கும், நிர்வாக அதிகாரிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஆகஸ்ட், செப்டம்பர் 1977 ஆகிய இரு மாதங்களில் மன்றக் கூட்டம் கூட்டப் பெறவில்லை. எனினும் அதற்குப் பிறகு அக்டோபர், நவம்பர், டிசம்பர் 1977 ஆகிய மாதங்களில் மன்றக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஆகவே, வேலி பயிரை மேயவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, இந்த தாராசுரம் ஊராட்சியில் எப்போதிலிருந்து மன்றக் கூட்டங்கள் நடைபெறவில்லை? அதற்கு முன்னால் நடைபெற்றுக் கொண்டிருந்தன என்றால், பின்னால் ஊராட்சிக் கூட்டங்கள் நடைபெறாமல் போனதற்கு என்ன காரணம்? தலைவருக்கும், அந்த நிர்வாக அதிகாரிக்கும் இருந்த தொடர்பு அறுபட்டுப் போக வேண்டிய அவசியம் என்ன வந்தது? அவர்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு என்ன? அங்கே பல்வேறு ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, 1977ஆம் ஆண்டு பிப்ரவரி, ஏப்ரல், மே, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களைத் தவிர மற்ற மாதங்களில் நடைபெற்றுள்ளன. பஞ்சாயத்துத் தலைவரால் 1977ஆம் ஆண்டு பிப்ரவரி, ஏப்ரல் ஆகிய இரு மாதங்களில் மன்றக் கூட்டத்தைக் கூட்ட விண்ணப்பங்கள் செய்யப்படவில்லை. மே மாதத்தில் கூட்டப்பட்ட மன்றக் கூட்டம், உறுப்பினர் எண்ணிக்கைக் குறைவின் காரணமாகத் தள்ளிப் போடப்பட்டது. மற்றவைபற்றித் தகவல் இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, இதுபோன்ற ஊராட்சி மன்றங்களில் தலைவர், உறுப்பினர்கள் மட்டுமல்ல; மக்கள் குழு என்ற பெயரால் நியமிக்கப்பட்ட சிலரும் இதுபோன்று நிர்வாகத்தில் தலையிடுவதால் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை அரசு அறியுமா? அதைத் தவிர்க்க மக்கள் ஆலோசனைக் குழு கலைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மக்கள் குழு நியமிக்கப்பட்டது இப்போதுதான் ; அதாவது 1977-ஆம் ஆண்டில்தான். இதில் சிக்கல் ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களின் கோரிக்கைகளை ஏற்றுதான் மக்கள் குழு அமைக்கப்பட்டது.

நீர் வழங்கு திட்டங்கள்.

*665 வினா— திரு. கே. உச்சி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூடலூர், கோவை, ஈரோடு, மேட்டுப்பாளையம், உதகை, குன்னூர், கோத்தகிரி ஆகிய பகுதிகளில் தண்ணீர் தட்டுப் பாட்டைப்போக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கோவை நகர், மற்றும் 18 சுற்றுப்புற நகரங்கள், 9 வழியோரக் கிராமங் களுக்கான சிறுவாணி குடிநீர்த் திட்டம், ஈரோடு, குன்னூர் நகராட்சிகளுக்கான குடிநீர் மேம்பாடு திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேட்டுப்பாளையம், உதகமண் டலம் நகராட்சிகள் மற்றும் கோத்தகிரி பேரூராட்சிக்கான குடிநீர் மேம்பாடு திட்டங்கள் முடிக்கப்பட்டுவிட்டன. கோவை நகரின் தாற்காலிக குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க 1976–77 நிதியாண்டில் ரூ.5,07,000 செலவில் 16 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன.

ஊரகக் குடிநீர் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களில் இதுவரை 690 குடி யிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டு (1977–78) இறுதிக்குள் மேலும் 207 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்படவுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம், கோத்தகிரி, கூடலூர், குன்னூர் ஊராட்சி ஒன்றியங்களில் 45 குடியிருப்புகளுக்கு நடப்பு நிதியாண்டுக்குள் ரூ. 5 இலட்சம் செலவில் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, கூடலூர் பகுதியில் எப்போதும் தண்ணீர்ப் பற்றாக்குறை உண்டு என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, பக்கத்தில் உள்ள ஓவாலி மலைப் பகுதியில் நீர்த்தேக்கம் கட்டி, தண்ணீர் பற்றாக்குறையை என்றென்றும் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி ஆகிய பேரூராட்சிகளுக்குக் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க வறட்சி நிவாரணப்பணிகளின்கீழ் எந்தப்பணியும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும் நடப்பாண்டில், 1977–78-ல் இந்தப் பேரூராட்சிகளில் 45 குடியிருப்புகளுக்குக் கிராமக் குடி நீர்த்திட்டத்தை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. போ. கோபாலன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத் தில் • பெரும்பாலும் மலைச்சாரலில் ஓடும் சிற்றாறுகளி லிருந்துதான் குடி தண்ணீர் எடுக்கிறார்கள். அந்தச் சிற்றாறு களின் கரையோரங்களில் வன இலாக்காவிலிருந்து ஏராளமாக யூகலிப்டஸ் மரங்களை நடுகிறார்கள். அந்த மரங்கள் பெரும் பாலும் நீரை உறிஞ்சிக் குடித்துவிடுகின்றன. அதனால் வறட்சி ஏற்படுகிறது. ஆகவே, இனிமேல் சிற்றாறுகளின் ஓரங்களிலும் அதை ஒட்டிய பகுதிகளிலும் அந்த மரங்களை நடாமலிருக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதுபற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, கூடலூர் பகுதிகளிலும் மற்ற சில பகுதிகளிலும் தண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்க புதிய திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் புதிய திட்டம் எவ்வளவு ரூபாய்க்கான திட்டம் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நிறைவேற்ற இருக்கும் கிராமக் குடிநீர்த் திட்டம் 10 லட்சம் ரூபாய்க்கும் குறைவாக இருந்ததால் இப்பணியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பொறி யாளர்களால் நிறைவேற்றப்படுவதைவிட வட்டார வளர்ச்சி அலுவலரிடம் ஒப்படைத்து நிறைவேற்றுவதே சிறந்தது என்று முடிவு செய்யப்பட்டது. இம்முறையில் நிறைவேற்றப்படுவதன் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலகப் பணியாளர்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவர்.

திரு. ஞா. ரமணி : தலைவரவர்களே, கோவை மாநகராட்சி யில் இணைந்துள்ள சிங்காநல்லூர் நகராட்சியில் மிகுந்த தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்தது. தனியார் கிணறுகளிலிருந்து நூற்றுக்கணக்கான வண்டி தண்ணீரை வெளியே இருந்து கொண்டுவரப்படவேண்டிய கஷ்டம் இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்க அங்கே மேல் நிலை நீர்த்தொட்டி கட்டி, அதிலிருந்து குழாய்கள் மூலம் வார்டுகளுக்குத் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதுபற்றித்தனிக் கேள்வி போட வேண்டும். இருப்பினும் சிறுவாணித் திட்டத்தின் பலனை அடையும் 18 ஊர்களைச் சொன்னேனே, அதில் சிங்காநல்லூரும் ஒன்று.

முந்திரி ஆலைத் தொழிலாளர்கள்.

* 666வினா.—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு தொழிலாளர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கச்சா முந்திரிப் பற்றாக்குறையினால் குமரி மாவட்டத்திலுள்ள முந்திரி ஆலைகள் மூடப்பட்டு 50 ஆயிரத்துக்கு மேல் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளார்களா?

(ஆ) இது சம்மந்தமாக அரசு தரப்பில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) குமரி மாவட்டத்தில் கச்சா முந்திரிப்பற்றாக் குறையினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் தற்போதைய மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ ஏழாயிரத்து அறுநூறு (7,600) ஆகும்.

(ஆ) கச்சா முந்திரி பெருமளவில் உற்பத்தி செய்வதனால் முந்திரி தொழிற்சாலைகள் தடையின்றி இயங்க வாய்ப்பு உண்டு எனக் கருதி தீவிர கச்சா முந்திரி உற்பத்திக்கு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9—50)

திரு. தே. ஞானசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே 50 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்யும் 160 ஃபாக்டரிகள் இந்தத் தொழிலைச் செய்து வருகின்றன. அங்கே வருடம் பூராவும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப் போதுமான கச்சா முந்திரி கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஆமெனில் தமிழகத்தின் கோட்டாவை 17 சதவீதமாக அதிகரித்துக் கொடுக்கும்படி மத்திய அரசை வற்புறுத்த நமது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் மொத்தம் 137 முந்திரித் தொழிற்சாலைகள் உள்ளன. அவைகளில் 127 கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கின்றன. இப்போது நமக்குக்கிடைக்கும் கச்சா முந்திரி 10 ஆயிரம்டன், 19 ஆயிரம் டன் இறக்குமதி செய்யப்பட்டு இந்திய முந்திரிக் கழகத்தின் மூலமாகப் பெறுகிறோம். நம்முடைய மொத்தத் தேவை 1,24,000 டன். மீதியுள்ள 95,000 டன் கச்சா முந்திரியைப் பெற்றால்தான் முந்திரித் தொழிற்சாலைகள் எந்தவிதத் தடங்கலுமின்றி இயங்க முடியும் என்பதை அறிந்து உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, மத்திய முந்திரிக் கார்ப்பரேஷனிலே தமிழ்நாட்டுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆமெனில் தமிழ்நாட்டுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கும்படி மத்திய அரசிடம் வற்புறுத்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதைப்பற்றித் தகவல் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற முந்திரி ஆலைகள் பெரும்பாலும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. கேரள மாநிலத்திலிருந்து கச்சா முந்திரி கொண்டு வருவதற்குத் தடை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் பல தொழிற்சாலைகள் அங்கே மூடப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் 1970ஆம் ஆண்டுக்குப்பின் தொடங்கப்பட்ட முந்திரி ஆலைகளுக்கு முந்திரிக் கார்ப்பரேஷனிலே இருந்து கச்சா முந்திரி கிடைப்பதில் ஏற்பட்டிருக்கின்ற தடையும் மற்றொரு காரணமாகிறது. ஆகையால் மத்திய அரசை அணுகி 1970ஆம் ஆண்டுக்குப்பின் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கும் கச்சா முந்திரி கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, கேரள அரசால் பிறப்பிக்கப்பட்டிருக்கிற கேரள கச்சா முந்திரி நடமாட்டக் கட்டுப்பாடு உத்தரவை ரத்து செய்யுமாறு அவர்களைக் கேட்டு இருக்கிறோம். அதோடு இந்திய முந்திரிக் கழகத்திலிருந்து மேலும் கச்சா முந்திரி வாங்க பேச்சு வார்த்தைகள் நடத்தி எளிதில் தடையை நீக்கவும், இந்திய முந்திரிக் கழகத்திலிருந்து அதிகமாக முந்திரி பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உற்பத்தியாகும் முந்திரியைத் தனியார்கள் சிலர் கொள் முதல் செய்து வெளி மாநிலத்திற்குக் கொண்டு செல்கின்றனர். தமிழகத்தில் முந்திரியை அரசே கொள்முதல் செய்து தமிழகத்தில் இருக்கின்ற முந்திரித் தொழிற்சாலைகளுக்குச் சப்ளை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழுத் தகவல் சேகரித்துத் தருகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, கச்சா முந்திரி தென் ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. அது தடைப்பட்டிருக்கின்ற காரணத்தால் இந்த முந்திரித் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆகவே தமிழ்நாட்டிலே முந்திரி பயிரிடுவதை ஊக்குவிக்கும் அடிப்படையில் சென்ட்ரல் காஷ்யூ கார்ப்பரேஷனிடமிருந்து தமிழ்நாட்டுக்கு இரண்டு கோடி முதல் நான்கு கோடி வரை பணம் தரப்படுவதாகச் சொல்லப்பட்டது. அந்தப் பணம் எந்த அடிப் படையில் செலவழிக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். அடுத்து தென் ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யும் ஏற்பாட்டை மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி நடைமுறைப்படுத்தி இறக்குமதி செய்வதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் கச்சா முந்திரியை இந்திய முந்திரிக் கழகம் மாநில வாரியாகப் பங்கிடுகிறது. அதில்தான் 19,000 டன் நமக்குக் கிடைக்கிறது என்று சொன்னேன். நமது அரசைப் பொறுத்த வரையில் தமிழக வேளாண்மைத் துறை மத்திய அரசு உதவியுடன் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கச்சா முந்திரி தரத்தை உயர்த்தவும் இந்தத் திட்டங்களில் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் பல திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவியையும் கோருவதாகயிருக்கிறது.

பின்தங்கியோர் நலன் பற்றிய குழுவின்
பரிந்துரைகள்.

*667 வினா—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சட்டநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட பின்தங்கியோர் நலன் பரிந்துரைக் குழு கொடுத்த அறிக்கையின்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1969ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நியமிக்கப்பட்ட திரு. சட்டநாதனைத் தலைவராகக் கொண்ட பிற்பட்டோர் நலக்குழு 110 பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கையினை 1971ஆம் ஆண்டு சனவரித் திங்களில் அரசுக்கு அளித்தது. இவற்றில் பல பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. சில பரிந்துரைகள் நிதிநிலை காரணமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திரு. ரா. மார்க்கபந்து : அந்தப் பரிந்துரைகளில், குறிப்பாக மிகவும் பின் தங்கியோர் பட்டியலை அங்கீகரிக்க வேண்டும் என்று ஒரு பரிந்துரை இருக்கிறது. அது அங்கீகரிக்கப்பட சட்டச் சிக்கல் எதுவும் இல்லை என்று அட்வக்கேட்-ஜெனரல் அவர்களின் லீக்ல் ஒப்பினியனும் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்கப் பட்டிருந்தும் அதை அங்கீகரிப்பதில் தாமதம் ஏன் ? அதை அங்கீகரிப்பதில் நிதிநிலை இடம் தரும் என்று நினைக்கிறேன். எனவே அது அங்கீகரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மிகவும் பின் தங்கியோர் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டு அரசால் ஆணையிடப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு கேள்வியை எண்ணத்தில் வைத்துக் கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மருதாசலம்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர்கள் வரிசையில் இருப்பவர்கள் மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நான் திரு. மருதாசலம் அவர்களின் பெயரைச் சொல்லிவிட்ட பிறகு தாங்கள் எழுந்து நின்று கேட்கக்கூடாது. பிறகு சந்தர்ப்பம் தருகிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, சட்டநாதன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் முக்கிய பணிகள் என்ன ? அந்தப் பணிகள் இப்போது எந்த நிலையில் இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பின் தங்கிய இனத்தவருக்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அவர்கள் முன்னேற்றத்திற்கு எந்த அளவு திறம்படச் செயல்பட்டு வருகின்றன என்பதை ஆய்ந்து குறிப் பாக கல்வி நிலையிலும், அரசுப் பணிகளில் நியமனம் பெறுவதிலும் அவர்கள் நிலை என்ன என்பதனை ஆய்வு செய்வதும் இக் குழுவின் பணி. மேலும், மிகவும் பின்தங்கியோருக்காக கல்வி மற்றும் பிற வகைகளில் அளிக்கப்பட்ட உரிமைகள், சலுகைகள் ஆகியனபற்றி மதிப்பிடுதல் கல்வி அரசுப் பணிகளில் ஒதுக்கீடு, கிராமப்புறங்களில் கடன் வசதி, கூட்டுறவு வணிகம், தொழில், வீட்டு வசதி, மானியங்கள், சமூக வளர்ச்சி ஆகிய துறைகளில் பின்தங்கியோர், மிகவும் பின்தங்கியோர் ஆகிய இரு சாராரின் முன்னேற்றத்திற்கு அரசுக்குப் பரிந்துரை செய்வதும் இக்குழுவின் பணியாகும்.

[1978 மார்ச் 22

திரு. ரா. மார்க்கபந்து : அமைச்சர் அவர்கள் 1972-ம் ஆண்டில் மிகப் பின்தங்கியோர் பட்டியலை அங்கீகரித்திருக்கிறார்கள் என்ற தேனினும் இனிய செய்தியைச் சொல்கிறார்கள். அதில் தேன் இருக்கிறதே தவிர ருசி இல்லை. காரணம், கல்விச் சலுகைகள்தான், ரூ. 2,500 வரை வருமானம் வருகிறவர்களுக்குத்தான் கல்விச் சலுகை தரப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் பார்க்கிறபோது அரசாங்க ப்யூனாக வேலை செய்கிறவர்களின் மகன்களுக்குக்கூட அந்தச் சலுகை கிடைக்காது என்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே, கல்விச் சலுகைகள் கிடைப்பதோடு கூட, மற்றும் ஜாப் ஆப்பர்சூனிட்டீஸ் அட்மிஷன் டு ப்ரொபஷனல் காலேஜஸ் இவற்றிலும் ஒதுக்கீடுகள் செய்து தர முடியுமா? அந்த வாய்ப்புகள் அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை சிறிது நேரத்திற்கு நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. தேன் இருக்கிறது ருசி இல்லை என்று சொன்னார்கள். தேனைப் பார்த்தால் மட்டும் ருசி தெரியாது. தொட்டுச் சுவைத்தால்தான் தேன் ருசிக்கும். அந்த காலம் வரும் வரையிலும் காத்திருக்குமாறு வேண்டுகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, குழு அறிக்கையில் வலையர் சமூகத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. செட்டிநாட்டில் வலையர் சமூகத்தினர் மலை ஜாதியினரைப்போல் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே இவர்களை மலைஜாதியினர் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு வழங்கப்படும் எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மலைஜாதியினர் பட்டியலில் சேர்ப்பதற்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. அதற்கு மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும். ஆகவே இதுபற்றி இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. பாக்கூர் க. உ. சுப்பிரமணியம் : சட்டநாதன் குழு பரிந்துரைகளில் நிதிநிலை காரணமாகச் சில பரிந்துரைகள் அங்கீகரிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். நிதிநிலை காரணமாக எவை எவை அங்கீகரிக்கப்படவில்லை என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, எவை எவை என்று படிக்க ஆரம்பித்தால் இந்த அவையை விடிய விடிய நடத்த வேண்டியிருக்கும்.

திரு. மு. செல்வராஜ் : இப்போது இருக்கின்ற முறை, உத்தியோக விஷயங்களில் பிற்பட்டோருக்கு 31 சதவிகிதமும், தாழ்த்தப்பட்டோர் இனத்தவரைச் சேர்ந்தவர்களுக்கு 18 சதவீதமும் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இதை இன்னும் மேற்கொண்டு உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். இப்போது 31 சதவீதம் பிற்பட்டோருக்கு இருப்பதை 35 ஆகவும், தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவீதம் என்றிருப்பதை 25 சதவீதம் என்று உயர்த்துவதற்கும், அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்காக மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்ற முறையில், இந்தச் சட்டமன்றத்தில் இதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, சட்டநாதன் அவர்களின் தலைமையில் போடப்பட்ட குழு 33 சதவீதத்தைப் பின்தங்கியோர் பட்டியலில் உள்ளவர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறது. அன்றைக்கு இருந்த அரசு இதை 31 சதவீதமாக ஆக்கியது. மேலும் இதில் சட்ட சிக்கல் இருப்பதாலும், சுப்ரீம் கோர்ட் இதை ஆட்சேபித்து இருக்கிற காரணத்தினாலும் இது செயல்படுத்த முடியாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(1) ஒழுங்குப் பிரச்சினை.

விசாரணைக் கமிஷன் முன்னுள்ள பொருள் பற்றி முதல்வர் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து.

திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா : பாயிண்ட் ஆப் ஆர்டர், தமிழ்நாடு சட்டமன்ற விதிமுறைகளைப்பற்றிய முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றி எழுப்ப விரும்புகிறேன். சென்னை நகரத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அது

எந்த விதத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்கின்ற விவரத்திற்குள் நான் போக விரும்பவில்லை. நமது சட்டமன்றத்தில் எதை வேண்டுமானாலும் உறுப்பினர்கள் பேசலாம் என்ற உரிமை நமக்குத் தரப்பட்டிருக்கிறது என்றாலும், அரசியல் சட்டத்தில் 194-ல்— "Subject to the prov sions of this Constitution and to the rules and standing orders regulating the procedure of the Legislature, there shall be freedom of speech in the Legislature of every State" என்று கூறப்பட்டுள்ளது. சட்டமன்ற விதிமுறைகளுக்கு உட்பட்டுத் தான் பேச வேண்டும் என்றும் இருக்கிறது. எல்லாவற்றையும் நினைத்ததையெல்லாம் பேசிவிட முடியாது. நம்முடைய லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளி ரூல்ஸில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், ஒரு விஷயம் விசாரணையில் இருக்கிறது என்றால், அந்த விஷயத்தைப்பற்றி எதை வேண்டுமானாலும் பேசிவிட முடியாது என்று இருக்கிறது..........

Rule 31 (9) says:

"it must not relate to any matter which is under adjudication by any Court of Law or to the conduct of a Judge of the Suprem Court or of a High Court in his judical capacity."

அதேபோல்............

Rule 59 (v):

"It shall not relate to any matter which is under adjudication by a Court of Law having Jurisdiction in any part of India."

Rule 67 A member, while speaking must not—

Clause (i) give his opinion about or refer to any matter on which a judicial decision is pending.

Rule 68 (viii): It shall not relate to any matter which is under adjudication by a court of law having jurisdiction in any part of India.

ரூல்ஸ் 143, 156–12 இவைகளிலும் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. – போதும்

அசெம்பிளி ரூல்ஸ் 68— கிளாஸ் 5-ல் கமிஷனில் விசாரணையில் இருக்கும் எந்த விஷயத்தைப்பற்றியும் குறிப்பிடக்கூடாது என்று இருக்கிறது. 156 கிளாஸ் 12-லும் இதேதான் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவ்விதம் தெரிவித்த கருத்துக்கள் இந்த விதிமுறைகளுக்கு எந்த விதத்தில் பொருத்தமாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. இதனால் கமிஷனின் நடவடிக்கைகள் எந்த அளவு பாதிக்கும் என்பதைப்பற்றி நான் விவரத்திற்குள் போக விரும்பவில்லை. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்கள் விதிகளுக்கு முரணாக இருக்கிறது. இது சட்டமன்ற நடைமுறை விதிகளுக்குப் புறம்பாக இருக்கும் என்ற முறையில், இங்கு சொல்லப்பட்டிருப்பது முறை தானா என்பதைத் தான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் நீண்டநாள் உறுப்பினர். சட்டமன்ற விதிமுறைகளைப்பற்றியும், இங்கு கூறப்பட்ட சில கருத்துக்கள் பற்றியும், அரசியல் சட்ட விதிகளைப் பற்றியும் விளக்கமாக இவ்விதம் கூறும்போது, இதையெல்லாம் எழுத்து மூலமாக என்னிடம் முன்பு எழுதிக் கொடுத்துவிட்டு இதைப் பற்றி விவாதித்து இருக்கலாம். அப்படி எழுதிக் கொடுக்காமல் இதை எடுத்து ஒழுங்குப் பிரச்னையாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இவற்றைப் பற்றி பரிசீலனை செய்து தான் பதில் சொல்ல முடியும். ஆகவே, இவற்றையெல்லாம் எழுத்து மூலமாகத் தந்தால் இதைப் பற்றிப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) தகவல் கோரல்.

ஆபாசப் படங்கள் வெளியிடுவோர் மீது எடுக்கவிருக்கும் நடவடிக்கை பற்றிய செய்திக் குறிப்பு குறித்து.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சட்டப்பேரவை நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் பத்திரிகைகளுக்கெல்லாம் அரசாங்கத்தின் சார்பாக திடீரென்று ஓர் உத்தரவு சென்றிருப்பதாக ஏடுகளில் செய்தியைப் பார்த்தேன். வானொலியிலும் இச்செய்தி ஒலிபரப்பப்பட்டது. ஆபாசமான படங்களை வெளியிட்டால் பத்திரிகை ஆசிரியர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்று அந்த செய்திக் குறிப்பில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆபாசம் என்று எதை அளவிட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஆபாசப் படங்கள், ஆபாசச் சித்திரங்கள் இவைகளைப்பற்றி ஏற்கனவே அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், இது பற்றி இந்த அவையிலும் மேலவையிலும் குறிப்பிடுகின்ற நேரத்தில், "இது அவரவர்களின் மன நிலையைப் பொறுத்தது என்றும், எந்த அளவுக்கு என்று அளவிட்டுக் கூற இயலாது" என்று அண்ணா அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 22

இதற்கு இன்றைக்கும்கூட எந்த அளவுக்கு இருந்தால் ஆபாசம் என்று விளக்க முடியாத நிலைமை இருக்கிறது. அதற்கெல்லாம் விளக்கம் தரவில்லை. அப்படி விளக்கம் தரப்படாமல், பத்திரிகை களிலே ஆபாசப் படங்கள் வெளியிடக் கூடாது என்று சொல்லி, அப்படி வெளியிட்டால், அந்த பத்திரிகைகளின் ஆசிரியர்கள் கைது செய்யப்படுவார்கள் என்கிற அளவிற்கு ஒரு உத்தரவு சட்ட மன்றம் நடந்துகொண்டிருக்கும் போது போயிருப்பது, வேடிக்கை யாகக் கூட இருக்கிறது.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதற்கான சட்டத்தை இங்கே கொண்டு வர இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இதற்கிடையே இப்படி ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளுக்கு மாத்திரமல்ல, இன்னும் சாலைகளில் செல்லு கின்ற நேரத்தில் திரைப்பட விளம்பரங்கள் கூட, பத்திரிகைகளிலே வருவதைவிட அதிகமான மக்கள் பார்க்கின்ற வகையில் காட்சி யாக வைக்கப்படுகின்றது. இவைகளுக்கும் இந்த உத்தரவு பொருந்துமா என்று தெரியவில்லை. இதைப் பற்றிய விளக்கத்தை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி-சுற்றுலாத் துறையிலே இந்த அறிவிப்பு வெளி யிடப்படவில்லை. பொது உள்துறை இதனை வெளியிட்டிருக்கும் என்று கருதுகிறேன். இந்த அறிவிப்பு ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தின் விதியை யொட்டிய அறிவிப்பாக இருக்கிறதே தவிர, புதிய அறிவிப்பு எதுவும் அதிலே இருப்பதாகத் தெரியவில்லை. நடைமுறையை அறிவித்திருக்கிறார்கள். மேலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல், முன்னாலே குழு அமைத்து எவை எவை ஆபாசம் என்று முடிவுகள் எடுத்திருக்கிறார்கள். அந்த முடிவுகளை அமல்படுத்துகின்ற அறிவிப் பாக இது இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

(அ). சேலம் மத்திய சிறைச்சாலையில் ஒரு நக்சலைட் கைதியின் உண்ணாவிரதம் குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : "சேலம் மத்திய சிறைச் சாலையில் தம்பியார் என்ற நக்சலைட், அரசியல் கைதிகள் அனை வரையும் உடன் விடுதலை செய்யுமாறும், சிறைச்சாலை சீர்திருத்தம் குறித்து அமைச்சர்கள் மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ஆகியோர் கொடுத்த

1978 மார்ச் 22] [பேரவைத் தலைவர்]

வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரியும் சென்ற 15—3—1978 முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டிருப் பதால் எழுந்துள்ள கொந்தளிப்பான சூழ்நிலை குறித்து விவாதிக்க''— இப்பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று,

(1) திரு. க. சுப்பு,
(2) திரு. கூத்தக்குடி ச. சண்முகம்,
(3) திரு. ஏ. ஆர். மாரிமுத்து,
(4) திரு. துரை முத்துசாமி,
(5) திரு. சி. கோவிந்தராசன்,
(6) திரு. மு. ஆறுமுகம்,
(7) திரு. வி. கே. கோதண்டராமன்

ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும் படிக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : பாயின்ட் ஆப் ஆர்டர், 41-வது விதியின்கீழ் நானும், திரு. சந்திரனும் ஒரு தீர்மானம் கொடுத் திருக்கிறோம். அதுவும் இது சம்பந்தமானதுதான். அதையும் இதோடு சேர்த்துக்கொள்ள....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இது 42-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்ட தீர்மானம், தாங்கள் கொடுத்தது 41—வது விதியின் கீழ். ஆகவே, 42-லே வேண்டுமென்றால் சேர்த்துக் கொள்ளலாம். ஆகவே, தாங்கள் எழுப்பியது ஒழுங்குப் பிரச்சினை யாகாது. இது 42, ஆனால் தாங்கள் கொடுத்தது 41.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : தலைவர் அவர்களே, நானும், சந்திரன் அவர்களும் கொடுத்த தீர்மானத்தைச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் இது சம்பந்தமாக 41—வது விதியின் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை நானாகவே 42-ஆக மாற்றி, அவர்கள் பெயரையும், திரு. சந்திரன் அவர்கள் பெயரை யும் இந்தத் தீர்மானத்தோடு இணைத்துக் கொள்கிறேன்.

<u>திரு. மு. ஆறுமுகம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இம் மாதிரி 41-வது விதியின் கீழ் வருங்காலத்தில் ஒரு தீர்மானம் கொடுத்தால், சந்தர்ப்பத்தை அனுசரித்து இப்படி 42—வது விதியின் கீழ் அது மாற்றப்படுமா என்பதை நான் இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1978 மார்ச் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைத் தலைவருக்கு நீங்கள் வழி காட்ட வேண்டியதில்லை. அவைத் தலைவர் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, சில சந்தர்ப்பத்தில் மாற்றம் செய்வார். எல்லாம் உங்கள் நன்மைக்காகத் தான் இருக்கும் என்று நம்புங்கள்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே உள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இந்தியாவிலுள்ள எல்லா அரசுகளும் பேசி, இந்தியா முழுவதிலும் உள்ள அரசியல் கைதிகள், நக்சலைட்டுகள் உட்பட எல்லா அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டுமென்று சொல்லி விட்டார்கள். ஆனால் நமது மாநிலம், தமிழகத்திலே மட்டும்தான் இன்னும் சில கைதிகள் இங்கே சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இன்றைய தினம் இந்த நக்சலைட் கைதிகள் எல்லாம் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் சிறையிலே இன்றைக்கு போராட்டம், உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

[முற்பகல் 10-10.]

அப்போது மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள் அந்தக் கைதிகளைச் சந்தித்து கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்தார்கள். அதற்குப் பிறகு கோவை மத்திய சிறையில் கைதிகள் உண்ணாவிரதம் இருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். தேர்தல்கால வாக்குறுதி போல் இல்லாமல் இது நிறைவேற்றப்பட வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயம். சிறை சீர்திருத்தங்கள் பற்றியெல்லாம் அமைச்சர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். பொய் வழக்குகள் போடப்பட்டதெல்லாம் வாபஸ் பெறப்படும் என்றெல்லாம் தேர்தல் காலத்தின் போது வெளியிலே பேசப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே அதிக அக்கறை காட்டினார்கள்.

இன்றையதினம் அவர்கள் எல்லாம் புரட்சிக்காரர்கள் என்ற காரணத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள், முழுப் புரட்சி என்று சொன்ன ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களை அண்மைக் காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சந்தித்திருக்கிறார்கள், இன்னும் பலரும் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் கூட முழுப் புரட்சி தேவை என்பதை ஜெயப்பிரகாஷ் நாராயணன் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்.

அரசியல் கருத்து மாறுபாடு காரணமாக தண்டனை கொடுத்த பிறகு எதிர் வழக்காடவில்லை; தண்டனையை ஏற்று சிறைச்சாலை ஏகிய நக்சலைட் என்று சொல்லப்படுகிறவர்களை விடுவிக்கின்ற காரியத்தில் தமிழகம் முன் மாதிரியாக இருந்து உடனடியாக அவர்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்பியார் என்ற பெயரைப் பார்த்து வேறு மாதிரி நினைக்க வேண்டாம். கலியப்பெருமாள் மகன் நம்பியார். புரட்சி இயக்கத்தின் வாத்தியார் என்று அழைக்கப்படுகிற கலியபெருமாள் உள்ளே இருக்கிறார். அவருடைய இன்னொரு மகன் வள்ளுவன் உள்ளே இருக்கிறார். மாசிலாமணி, ராஜமாணிக்கம் உள்ளே இருக்கிறார்கள். ஆறுமுகம் உள்ளே இருக்கிறார். காங்கிரஸ் எம்.எல்.ஏ. வாக இரண்டு கால கட்டத்தில் பத்தாண்டு காலம் இருந்த விஸ்வநாதன் மனைவி ஆனந்தநாயகி 60 வயதானவர் சிறையில் எட்டாண்டு காலமாக இருக்கிறார். காங்கிரஸ்காரரின் மனைவி இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லி 60 வயதானவரை உள்ளே வைத்திருக்கிறார்கள். வள்ளலார் அனாதை இல்லம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்கோ விவாதம் போகிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. க. சுப்பு : வள்ளலார் அனாதை இல்லத்தை நடத்தி வந்த அந்த 60 வயது ஆனந்தநாயகி அம்மையார் அவர்கள் எட்டாண்டு காலமாக சிறையில் இருக்கிறார்கள். அனாதை இல்லம் நடத்துவதே குற்றமா? உடனடியாக அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை நியாயமான கோரிக்கை, பூட்டோவை விடுதலை செய்ய வேண்டுமென்று அங்கு மாணவர்கள் கோரிக்கை விடுகிறார்கள். முஜிபூர் ரகுமான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து பிரச்சினைக்கு வாருங்கள். உலகம் எல்லாம் போய்க் கொண்டிருக்க வேண்டாம். இவர்களைப் பற்றி மட்டும் பேசி சுருக்கமாக முடியுங்கள்.

திரு. க. சுப்பு: அரசியல் காரணமாக கைது செய்யப்பட்டவர்களை பொறுத்து ஆங்காங்கு நடைபெற்று வருகிற வரலாற்று உண்மைகளைச் சொல்லத்தான் முற்பட்டேன். அனைத்துக் கட்சிகளும் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றன. நாளைக்குக்கூட சென்னை நகரத்தில் மார்க்கபந்து உட்பட, அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்பதற்காக பெரிய இயக்கம் நடத்த இருக்கிறார்கள்.

15ஆம் தேதியிலிருந்து உண்ணாவிரதம் இருந்து வரும் நம்பியார் என்ற இளைஞனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட விலைமதிப்பற்ற உயிர், சுயநலமற்ற தியாகியின் உயிர் பறிக்கப்படுவது இந்த ஆட்சியில் இருக்க வேண்டாம், உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், உண்ணாவிரதத்தை நிறுத்தச் செய்ய வேண்டும். இது பற்றி விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கைதிகள், நக்சலைட்டுகள் அனைவரையும் இன்றைக்கு விடுதலை செய்ய வேண்டுமென்ற பொதுவான உணர்வு அனைத்துக் கட்சியினருக்கும் இருக்கிறது என்பதை ஆளும் கட்சியும் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். நான் இப்படிக் கூறுகிறபோது உங்களுக்கெல்லாம் தெரியும் * * * * இப்படிப் பட்ட சூழ்நிலையில்...............

மாண்புமிகு பேரவைத்தலைவர்: தயவுசெய்து மத்தியில் இருக்கும் அமைச்சர்களைப் பற்றியெல்லாம் * * * குறிப்பிட வேண்டாம். (குறுக்கீடு) * * *

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தயவுசெய்து கவனிக்க வேண்டும். நான் ஜாக்கிரதையாகத் தான் சொல்கிறேன். யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. அரசாங்கம் இதை நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டும். நக்சலைட் குழு இன்றைக்கு பலாத்காரத்தை கைவிட்டுவிட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்தலிலே அவர்கள் ஈடுபடக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் பலாத்காரம் பூதாகாரமாக உரு வெடுத்து அரசாங்கத்திற்கு அபாயகரமான நிலைமை வந்துவிடும் என்று எண்ண வேண்டாம்.

இதைப்போன்று காரைக்குடியிலே கலியபெருமாள் குடும்பமே இருக்கிறது. இப்படிப்பட்ட முறையிலே அந்தக் குடும்பங்கள் எல்லாம் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் பலாத்காரத்தை கைவிட்டு விட்டோம் என்று அறிவித்துவிட்ட நிலையில், இரண்டு மாநிலங்களிலே அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பிறகு தமிழக அரசு அவர்களை வைத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, இதையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து அவர்களை விடுதலை செய்யவேண்டும். அந்த முறையிலே இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மத்திய அமைச்சர் பெயரை குறிப்பிட்டு நான் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறும்.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, 15—3—1978 முதல் இன்று வரையில் நம்பியார் என்ற நக்சலைட் சிறையிலே உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அவர் விடுதலை செய்யப்பட

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப் பெற்றது.

வேண்டுமென்ற முறையிலே அதைப்பற்றி விவாதிக்கப்பட வேண்டும் என்றும் அதற்காக சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டும் என்றும் எங்கள் கட்சியின் சார்பாக ஒத்தி வைப்புத்தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

15—3—1978ஆம் தேதி முதல் இன்றைய தினம் வரையிலே அவர் உண்ணாவிரதம் இருந்து இன்றைக்கு மோசமான நிலைமையிலே இருக்கிறார். நக்ஸலைட்டுகள் மட்டுமல்ல, அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற முறையிலே விடுதலை செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் இவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்படவில்லை. இப்படி ஒவ்வொன்றிற்கும் ஆர்ப்பாட்டம் கிளர்ச்சி என்று நடத்தினால் தான் அவைகள் நிறைவேற்றப்படும் என்ற நிலைமை வருமானால் நாட்டிலே சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகும். அப்படிப் பட்ட நிலைமை வருங்காலத்திலே ஏற்படாத நிலைமையை ஏற்படுத்த இந்த நம்பியார் என்பவரையும் மற்றவர்களையும் விடுதலை செயயவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தைப் பலப்படுத்தக்கூடிய அளவிற்கு அரசியல் சூழ்நிலை மாறிவருகிறது. நக்ஸலைட்டுகளின் கொள்கை மாறி அவர்கள் தேர்தலிலே பங்கு கொண்டிருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலே நக்ஸல்பாரி மாவட்டத்திலே தான் இந்த இயக்கமே தோன்றியது. அங்கே தான் ஏராளமான ஆயிரக்கணக்கான நக்ஸலைட்டுகள் உண்டு. அங்கே தண்டனைபெற்ற நக்ஸலைட்டுகளைக் கூட, அந்த அரசு விடுதலை செய்திருக்கிறது. இன்னும் பல மாநிலங்களிலும் அரசியல் கைதிகள் இந்தக் கால கட்டத்திலே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால், தமிழ்நாட்டிலே இன்னும் அந்த நிலைமை ஏற்படவில்லை. இது குறித்து மத்திய உள்துறை அமைச்சரிடம் கேட்ட போது, அவர் இது மாநில அரசு செய்யவேண்டிய விஷயம் என்று கூறுராக அறிவித்து விட்டார். மதுரைச் சிறைச்சாலையிலே, லெனின் ரெங்கசாமி என்பவரும், திருச்சி சிறையிலே தியாகராஜன் என்பவரும் அரசியல் கைதிகள் விடுதலை கோரி இப்படி உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்போது அதைப்பற்றி எங்கள் கட்சித் தலைவர்கள் மாண்புமிகு முதலமைச்சரோடு பேசியபோது அவர்கள் அது குறித்துப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே நாங்கள் அவர்கள் தொடங்கிய உண்ணாவிரதத்தை எல்லாம் கைவிடச் சொன்னோம். ஆனால். இதுவரையில் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 மார்ச் 22

இன்றைக்கு நம்பியார் உண்ணாவிரதம் இருக்கிறார், அவருடைய குடும்பமே பல ஆண்டுகளாக அலைக்கழிக்கப்பட்டிருக்கிறது. யார், யார் எல்லாம் இப்படிப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்ற விவரத்தையெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய திரு. கப்பு அவர்கள் சொன்னார்கள். இது ஒரு முக்கியமான பிரச்னை.

நக்ஸலைட்டுகள் இன்றைக்கு தேர்தலிலே பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள், தண்டனை பெற்றவர்கள் கூட பல மாநிலங்களிலும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள், இந்த நிலையில் நம்பியார் என்பவர் உண்ணாவிரதம் இருக்கிறார். ஏற்கெனவே லெனின் ரங்கசாமி இருந்த உண்ணாவிரதம் முதலமைச்சரின் வாக்குறுதியின் அடிப்படையில் கைவிடச் செய்யப் பட்டது. இன்றைக்கு நம்பியார் என்ற வாலிபன், அவருக்கு 24 வயது தான் இருக்கும் என்று கருதுகிறேன். அவர் இந்தப் பிரச்னைக்காக உயிரையே விட வேண்டிய நிலைமை வந்து

[முற்பகல் 10-20]

இருக்கிறது. இது முக்கியமான பிரச்னை. எனவே, அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, அண்மைக் காலத்தில் இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் நக்சல்பாரிகளை, அரசியல்ரீதியாகக் கைது செய்யப்பட்ட அரசியல் வாதிகளை விடுதலை செய்ததை இந்த நாடே அறியும். அப்படிப்பட்ட நிலைமையிலிருக்கும்பொழுது தமிழ்நாட்டில் மட்டும், குறிப்பாக அதிதீவிரவாதிகள் என்று சொல்லப்படும் நக்சல்பாரிகளை மட்டும் சிறையிலே இன்றைக்கும் வைத்திருக்கிறது. இந்தியாவின் மற்ற மாநிலங்களில் செயல்படக்கூடிய அதே வழியைப் பின்பற்றி நம்முடைய அரசும் ஏன் நக்சல்பாரிகளை விடுதலை செய்யக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

மேலும், கலியபெருமாள் என்ற ஆசிரியருடைய குடும்பம் இருக்கிறது. ஆண்கள்தான் அதி தீவிரமாக ஈடுபட்டு நக்சல்பாரிகளாக மாறினாலும் பெண்களைக் கூட அந்த இயக்கத்தில் ஈடுபடுத்தி பழிவாங்கும் அடிப்படையில் அவர்கள் சிறையிலே வாட்டி வதைக்கப்படுகிறார்கள். அதுவும் சேலம் சிறைச்சாலை சுதந்திரப் போராட்ட வீரர்களை நசுக்குவதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட கறுப்புக் குல்லாய்ச் சிறை என்று சொல்லப்படக் கூடிய அளவிற்கு இருந்தது. அப்படிப்பட்ட சேலம் மத்திய சிறையில் உயிர் ஊசலாடும் நிலையில் உள்ள [illegible] வயதுள்ள இன்றைய நம்பியார் என்பவரைக் காப்பாற்றுவதற்காக அரசு உடன [illegible]

1978 மார்ச் 22] [திரு. மு. ஆறுமுகம்]

டியாக அவரை விடுதலை செய்யாவிட்டாலும் முதலில் பரோலிலாவது விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பிறகு வேண்டுமானால் கொள்கை ரீதியாக அரசு முடிவெடுத்து அவர்களை விடுதலை செய்வதற்கு தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும், அண்மைக் காலங்களில் நாடு முழுவதும் உள்ள நக்சல் பாரிகளின் கொள்கையிலே மாறுதல் ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். அரசியல் சட்டவிதிகளுக்கு உட்பட்டு, ஜனநாயக வரம்பிற்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய அளவிற்கு மனமாற்றம் ஏற்பட்டிருப்பதாக அறிவதால் அரசு இந்த நக்சல்பாரி அரசியல்கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சபையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, கலியபெருமாள் குடும்பத்திலே இருப்பவர்கள் ஆண், பெண், குழந்தைகள் அத்தனைபேரும் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது உண்ணாவிரதம் ஏற்றிருக்கின்ற அந்தத் தம்பிக்கு ஏறக்குறைய 25 வயது இருக்கும். இரண்டு முறை ஆபரேஷன் செய்யப்பட்டிருக்கிறார். இன்றைக்கு எட்டாவது நாளோ, ஒன்பதாவது நாளோ அவர் உண்ணாவிரதம் இருக்கின்ற காரணத்தாலே அவருடைய நிலைமை மிகவும் மோசமாகி, ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, உயிர் இன்னும் இரண்டு மூன்று நாளில் பிரிந்துவிடக்கூடுமோ என்ற அபாயகரமான நிலைமையிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையிலே இதை நாடு தழுவிய பிரச்சனையாக, குறிப்பாக நக்சல்பாரிகள் தங்களை மாற்றிக்கொண்டு நாட்டுக்குச் சேவை செய்ய ஒப்புக் கொண்டிருக்கிற நிலையிருக்கிறது. குடும்பத்திலே இருக்கின்ற அனைவரையும் வழக்கிலே சம்பந்தப்படுத்தி பாளையங்கோட்டை, வேலூர், சேலம் இன்னும் மற்ற பல ஜெயில்களிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்வதன் மூலம் இந்த அரசுக்கு நல்ல பெயர் வரும் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கைதிகள் பொய்யான வழக்குகளின்மூலம் ஆட்படுத்தப்பட்டிருக்கின்ற வழக்குகளை வாபஸ் செய்வதன் மூலம், அவர்களை விடுதலை செய்வதன் மூலம் இந்த அரசுக்கு நல்ல பெயர் வரும். அதே நேரத்தில் கொள்கையளவில் இருக்கின்ற கட்சிக்கு எதிர் மாறான கொள்கையுடையது அல்ல இந்த ஆட்சி என்பதை நிலைநாட்டும் வகையிலேயும் இருக்கும்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச் 22

ஒரு குடும்பம் அழிந்து விடாத நிலையில் அந்த உயிரைக் காப்பாற்ற வேண்டிய நிலைமையிருக்கிறது. உயிர் பிரிந்து விட்டால் அது நாட்டுக்கு ஆபத்தாகி, நமக்கு சங்கடங்களை விளைவிக்கும் என்ற அச்சத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இதுபற்றி இந்தச் சபையை அதற்காக ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> தலைவரவர்களே, ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்பொழுது சென்னை மத்திய சிறைச்சாலைக்கு நான் சென்றிருந்ததாகக் குறிப்பிட்டார்கள். சென்றிருந்தது உண்மை. ஆனால், அங்கேயிருந்த நக்சல்பாரி கைதிகள் தங்களை விடுவிக்க வேண்டுமென்று என்னைக் கேட்கவும் இல்லை, நான் எந்த உறுதியும் அளிக்கவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. க. சுப்பு:</u> தலைவரவர்களே, அவர்கள்' விளக்கம் சொன்னார்கள். அதைப்பற்றி நான் சொல்லி விடுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தயவுசெய்து உட்காருங்கள்.

<u>திரு. க. சுப்பு:</u> அவர்கள் தன்னிலை விளக்கம் சொன்னார்கள். நான் அதற்குச் சொல்லி விடுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நீங்கள் உட்காருங்கள். தன்னிலை விளக்கத்தோடு சரி. மறுபடியும் நீங்கள் சொன்னால் திரும்பவும் அவர்கள் விளக்கம்கொடுப்பார்கள். எனவே, உட்காருங்கள்.

<u>மாண்மிகு திரு. ப. குழந்தை</u>வேலு: பேரவைத் தலைவரவர்களே, நான் இங்கே ஒரு தன்னிலை விளக்கத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு சுப்பு அவர்களும், மற்று முன்ன மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே கோவை மத்திய சிறைச்சாலையிலே இருந்தகைதிகளை நான் பார்த்து அவர்களிடத்தில் ஏதோ வாக்குறுதி கொடுத்ததாகச் சொன்னார்கள். அங்கே குறிப்பாக நக்சல்பாரி கைதிகள் என்னை யாரும் வந்து சந்திக்கவில்லை என்றும் அவர்களுக்கு நான் எந்த வாக்குறுதியையும் கொடுக்கவில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. க. சுப்பு:</u> தன்னிலை விளக்கம். வேறொன்றும் இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> விளக்கம் கிடையாது. நீங்கள் கேட்டதற்கு விளக்கம் சொன்னார்கள்.

1978 மார்ச் 22]

<u>திரு. க. சுப்பு:</u> தன்னிலை விளக்கம் அவர்கள் சொன்னார்கள், எனக்கு இல்லையென்றால் எப்படி?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இல்லை, உட்காருங்கள்.

<u>திரு. க. சுப்பு:</u> அவர்களுக்கு அனுமதி கொடுத்தால், எனக்கு அனுமதி இல்லையா? நான் சொன்னது வேறு, அவர் சொல்வது வேறு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நான் சொல்கிறேன், உட்காருங்கள்.

<u>திரு. க. சுப்பு:</u> இது அநியாயமான தீர்ப்பு. You are going beyond the limit. நான் சொல்வதற்கு முன்பே உட்கார் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

(ஒரு குரல்: உட்காருடா?)

<u>திரு. க. சுப்பு:</u> உட்காருடா என்று சொல்லலாமா? அது காது கேட்க வேண்டாமா? உங்களுக்கு? அப்படிச் சொல்லலாமா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இனி நீங்கள் பேசலாம். பேசிக் கொண்டேயிருங்கள், ரெக்கார்டாகட்டும். பேசுங்கள், இல்லை என்றால் உட்காருங்கள்.

<u>திரு. க. சுப்பு:</u> நீங்கள் உட்கார்ந்தால் தானே நான் பேச முடியும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நீங்கள் உட்காருங்கள், நான் நிற்கும்போது.

<u>திரு. க. சுப்பு:</u> நான் 'வாக் அவுட்' பண்ணுகிறேன், சார். திரு க. சுப்பு வெளிநடப்பு செய்தார்).

<u>The Hon. Thiru K. Narayanaswamy Mudaliyar:</u> Mr. Speaker, Sir, Thiru Nambiyar was convicted for life for an offence under Section 302 I.P.C., that is, the offence of murder. He is undergoing imprisonment in the Central Prison, Salem. He submitted a memorandum to the Prime Minister and a copy of the memorandum to the Chief Minister, demanding among other things, release of all Naxalite prisoners, withdrawal of cases filed against his family members, and for more amenities for the prisoners. He stated that he will undertake a fast unto

death, if his demands are not complied with. He undertook a fast from 15-3-1978. He is being taken due care of by the prison authorities and by the Medical Officers. He was admitted in the headquarters hospital, Salem on the afternoon of 16-3-78. He is being looked after very well by the Medical Officers and his health condition is reported to be satisfactory. No tense situation prevails because of his fast.

The demands put forth by him will be considered by the Government.

There is, therefore, no need, Mr. Speaker, Sir, to adjourn the other business of the House to discuses this incident.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

(5) கவன ஈர்ப்புகள்.

(அ) கொடைக்கானல் மலைப் பகுதியில் முடிக்கொத்து நோயால் வாழை விவசாயம் பாதிப்பும், கட்டாய வணிகப் பயிர் வரி வசூலால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்தும்.

திரு. கே. பன்னை சேதுராம்: தலைவரவர்களே, கொடைக்கானல் மலைப்பகுதியில் வாழை விவசாயம் "வாழை முடிக்கொத்து நோயால்" பாதிக்கப்பட்டு எட்டு ஆண்டுகளாக வாழை வருமானம் இல்லாத இப்பகுதியில் வாழைக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் வணிகப் பயிர் வரி செலுத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதால் அவ்விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாளிலிருந்து, தமிழகத்தின் வருவாயினைப் பெருக்கும் பொருட்டு, ஒரு சில பணப்பயிர்கள் விளைவிக்கப்படுகின்ற நிலங்களின் மீது பணப்பயிர் வரி விதிக்க தமிழ்நாடு பணப்பயிர் வரிச்சட்டம் 1976-ம் ஆண்டில் இயற்றப்பட்டது. இந்த பணப்பயிர் வரிச் சட்டத்தின் படி, 1—7—76லிருந்து பணப்பயிர் விளைவிக்கப்படும் நிலங்களின் மீது கீழ்க்கண்ட விகிதாசாரப்படி வரி விதிக்கப்பட வேண்டும்:

(அ) திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகிய பணப்பயிர் விளைவிக்கும் நிலங்களின் மீது ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 20.

(இ) புகையிலை, மிளகாய், பாசனப் பருத்தி, பாசன நிலக்கடலை ஆகிய பணப்பயிர்கள் விளைவிக்கும் நிலங்களின் மீது ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 12.50.

பசலி ஆண்டு 1386ல் மாநிலம் முழுவதும் பருவ நிலைகள் மோசமாக இருந்ததையொட்டி இந்த வரிகள் விதிப்பைத் தள்ளி வைக்க வேண்டுமென அரசு முடிவு செய்தது. மேலும், குறைந்த காலப் பயிர்களான புகையிலை, மிளகாய், பாசனப் பருத்தி, பாசன நிலக்கடலை ஆகியவற்றின் மீதான ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு 12.50 ரூபாய் என்ற அளவிலுள்ள வரியை அறவே நீக்கவும், திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றிற்கு பசலி ஆண்டு 1387 முதல் இவ்வரியை ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு 20 ரூபாயிலிருந்து 15 ரூபாயாகக் குறைக்கவும் அரசு முடிவு செய்தது.

மேற்படி சட்டத்தின் 6(1) பிரிவின் கீழ் எந்த பசலி ஆண்டிலாவது பருவநிலை காரணமாகவோ அல்லது இயற்கை இடர்பாடுகளினாலோ வரிவிதிப்பிற்குட்பட்ட பணப்பயிர்கள் பலனளிக்காமல் முழுவதும் பாழாகிவிட்டால் நிலச் சொந்தக்காரர் அல்லது குத்தகைதாரர் அல்லது ஆக்கிரமிப்புதாரர் மனுச்செய்து கொள்வதின் பேரில் வருவாய் வாரிய நிலையாணைகளின் கீழ் வரியைத் தள்ளுபடி செய்ய தாசில்தாரர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எந்தப்பகுதியிலேனும் பணப்பயிர்களின் விலைச் சரிவினாலோ, அல்லது வேறு தக்க காரணத்தாலோ வரி முழுவதுமோ அல்லது பகுதியாகவோ தள்ளுபடி செய்ய வேண்டுமென அரசு திருப்தி அடைந்தால் அவ்வாறு முழுவதுமோ அல்லது பகுதியாகவோ வரியைத் தள்ளிக் கொடுக்க மேற்படி சட்டத்தின் 6(2) பிரிவின்கீழ் அரசுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

கொடைக்கானல் மலைப்பகுதியில், வாழை விவசாயம் "வாழை முடிக்கொத்து நோயால்" பாதிக்கப்பட்டு இருப்பதால், வாழை மீது ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டொன்றிற்கு ரூ. 15 விதம் செலுத்த வேண்டிய பணப்பயிர் வரியை தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையைக் கொண்ட மனுக்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து ஏற்கனவே கிடைக்கப்பெற்று அவற்றின் மீது அறிக்கை ஒன்று வருவாய் வாரியம் (உணவு உற்பத்தி) மூலமாக அனுப்பும்படி மதுரை மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதன் காரணமாக மாவட்ட ஆட்சியர்

அறிக்கை அனுப்புவதில் தயக்கமேற்பட்டுள்ளது. பொதுவாக கொடைக்கானல் பகுதியில் முடிக்கொத்து நோயால் வாழை பாதிக்கப்பட்டுள்ளதெனத் தெரியவந்தபோதிலும் அது பற்றிய முழு விவரங்கள் தெரிந்தபின் மேற்கொண்டு நடவடிக்கை மேற்சொன்ன சட்ட விதிகளுக்கேற்ப எடுக்கப்படும்.

[முற்பகல் 10-30.]

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, சட்டத் துறை அமைச்சர் என்ன சொன்னார் என்று தெரியாமலேயே நான் உட்கார்ந்திருக்கிறேன். ஆகவே தயவுசெய்து ஒன்று அவர் சொல்லுகிற ஆங்கிலத்தை தமிழிலாவது சொன்னால் எனக்கு புரியும். ஏனென்று கேட்டால் விவரம் புரியாமல் நான் உட்கார்ந்திருப்பதைவிட என்ன சொன்னார் என்று தெரிந்துகொண்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே இந்தக் குறைகளைச் சொல்லியிருக்கிறீர்கள். அமைச்சர் தமிழிலேயே சொல்லியிருக்கலாம், ஆனாலும், ஆங்கிலத்திலே சொல்வதாக முன்பே சொல்லியுள்ளார்கள்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : இது மிக முக்கியமான விஷயம். உயிர்ப்பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுபடியும் அமைச்சரிடம் பேசிப் பார்க்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : அமைச்சர் ஆங்கிலத்திலே சொன்னதை வேறு யாராவது தமிழில் சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

*திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்ததற்காக நன்றி. ஆனால், பணப்பயிருக்குப் போடப்படுகிற கமர்சியல் டாக்ஸ், தரைப்பகுதியில் இருக்கிற நிலங்களில் எல்லாம் கிணறு தோண்டிப் பாசனம் செய்யும் வசதி இருக்கிறது. கிணறு தோட்டங்கள் மற்றும் பணப் பயிர்களுக்கு வரி போட்டால் மக்களும் ஆட்சேபனை செய்வதற்கில்லை. ஆனால், கோடைக்கானலில், ஏர்க்காடு, ஊட்டி போன்ற பகுதிகள் மானம் பார்த்த பூமியாக இருக்கிறது. மழை பெய்தால்தான் வாழை வளர முடியும் என்ற நிலை இருக்கிறது. ஆனால், பல ஆண்டுகளாக முடிக்கொத்து நோய் ஏற்பட்டு வாழை விளைச்சல் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 3,800 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் கூட......................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு மேற்கொண்டு ஏதாவது தகவல் வேண்டுமானால் கேளுங்கள். நீங்கள் பேசிக் கொண்டே இருக்கக் கூடாது. சுருக்கமாக கேளுங்கள்.

திரு. கே. பண்ணை சேதுராம் : எனவே அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்கான ஆக்கபூர்வமான வேலைகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வரி விதிக்கப்பட்டது பயிர்களின் அடிப்படையிலே தவிர, பாசனத்தின் அடிப்படையிலே அல்ல. வாழையைப் பொறுத்த வரையில் தனியாகவும் பயிரிடப்படுகிறது. காப்பி தோட்டங்களில் வாழையும் ஆரஞ்சும் நிழல் மரங்களாகவும் பயிரிடப்படுகின்றன. எந்தப் பகுதி உண்மையில் பாதிக்கப்படுகிறது என்று விவரமாகப் பரிசோதிக்கப்படுகிறது. தனியாகப் பயிரிடப்படுகின்ற பகுதிகளிலே மட்டும் தான் நிவாரணம் அளிக்க வாய்ப்பிருக்கிறது. எனவே, அது பற்றிய விவரங்களைச் சேகரித்த பிறகு தான் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) குமரி மாவட்ட பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தியாகும் உபரி பாலை மதுரையில் விநியோகம் செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். வின்சென்ட், அடுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு வருவார்கள்.

திரு. எம். வின்சென்ட் : தலைவரவர்களே, "குமரி மாவட்ட பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கத்தில் தினமும் 3,000 லிட்டர் பால் விற்பனை இல்லாத விற்பனையாளர்களிடம் வாங்க முடியாத நிலை ஏற்பட்டதால் ஒரு ஆண்டிற்கு ரூ. 2,50,000 வரை இழப்பு வருவதை நிவர்த்தி செய்யவும் அந்தப் பாலை தேவை அதிகமாயிருக்கும் மதுரைக்கு விநியோகம் செய்ய குமரி மாவட்ட பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இழப்பு வராமல் நடைமுறைகளை அமல்படுத்த அரசு முன் வருமா என்ற நிலை குறித்து" என்ற பிரச்னையை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, குமரி மாவட்ட பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தியாகும் உபரிப் பாலை, மதுரையிலுள்ள தமிழ்நாடு

[திரு. ப. குழந்தைவேலு] [1978 மார்ச் 22

பால் வள நிறுவனம் பெற்றுக் கொள்வதில் எவ்விதப் பிரச்னையும் பால் வள நிறுவனத்திற்கில்லை. ஒரு வாரத்திற்கு முன் குமரி மாவட்ட பால் வினியோகக் கூட்டுறவுச் சங்கத்தால் தினசரி உற்பத்தி செய்யப்படும் 500 முதல் 1000 லிட்டர் உபரிப்பாலை மதுரையிலுள்ள தமிழ் நாடு பால் வள நிறுவனம் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.80 என்ற விலையில் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. தமிழ் நாடு பால் வள நிறுவனம் எல்லா இடங்களிலும் கீழ்க்கண்ட 8.5 சதவிகிதம் கொழுப்பற்ற திண்மைப் பொருள் அடங்கிய பாலைக் கொள்முதல் செய்கிறது. பசும் பாலிலுள்ள கொழுப்புச் சத்து, இதர திடப் பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் கொழுப்புச் சத்துக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 10.50 என்றும், எருமைப் பாலிலுள்ள கொழுப்புச் சத்துக்கு ஒரு கிலோவிற்கு ரூ. 23.00 என்றும் கொள்முதல் செய்யப் படுகிறது.

மேற்கண்ட அடிப்படையில் இக்கூட்டுறவு சங்கம் விற்கக் கூடிய பாலின் விலை ஒரு லிட்டர் ரூ. 1.53 ஆகிறது. இவ்விலையை தமிழ் நாடு பால் வள நிறுவனம் எல்லா இடங்களுக்கும் ஒரே சீராக நிர்ணயித்துள்ளது. இக்கூட்டுறவுச் சங்கம் கேட்கும் விலையான ரூ. 1.80, இதைவிட 27 பைசா கூடுதலாகிறது. இவ்விலை நிர்ணயித்ததிலிருந்து விதி விலக்களித்து, லிட்டர் ரூ. 1.80 விலையில் வாங்குவது இயலாது. எனவே, குமரி மாவட்ட பால் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் பால் வள நிறுவன விலை நிர்ணய விதிகளை அனுசரித்துப் பாலை விற்பனை செய்தால், எந்த அளவுப் பாலையும் நிறுவனம் ஏற்றுக் கொள்ளும்.

தரத்தின் அடிப்படையில் இல்லாமல் அளவின் அடிப்படையில் இச்சங்கம் தரக் குறைவான பாலை அதிக விலை கொடுத்து வாங்குவதால் தான் இந்நிலைமை உருவாகியிருக்கிறது. அளவு அடிப்படையில் அன்றி தமிழ் நாடு பால் வள நிறுவனமும் மற்ற கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களும் கொள்முதல் செய்வது போல் பாலை தரத்தின் அடிப்படையில் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்தால் இச் சிக்கலைத் தவிர்க்கலாம் என்று ஆணையர் பால் வழங்குத் துறை இச்சங்கத்திற்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்.

திரு. எம். வின்செண்ட் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்ட பால் வினியோகக் கூட்டுறவுச் சங்கத்தில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் பால் 9,000 லிட்டர். இதில் 2,000 —3,000 லிட்டர் விற்பனை இல்லாமல் இருக்கிறது. அருகில் இருக்கும் கேரள மாநிலத்திற்கு தினசரி 3,500 லிட்டர் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து போவதாகத் தெரிகிறது. இது எப்போது வேண்டுமானாலும் தடை செய்யப்படலாம். ஏனென்றால் கேரள அரசு பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் 7,000 லிட்டர்

1978 மார்ச் 22] [திரு. எம். வின்செண்ட்]

பால் உற்பத்தி செய்ய இருக்கிறது. இப்போது லிட்டர் பால் 1.75 என்று விலை ஆகிறது. பாலைப் பதப்படுத்த 8 பைசாவும், போக்குவரத்து செலவு 4 பைசாவும் சேர்த்து லிட்டர் ஒன்றுக்கு 1.87 ஆகிறது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாக விளக்கம் கேளுங்கள். படித்துக் கொண்டே போகக் கூடாது. விளக்கம் கேட்பது எப்போதும் சுருக்கமாக இருக்க வேண்டும்.

திரு. எம். வின்செண்ட் : தமிழ் நாடு பால் வள நிறுவனம் குமரி மாவட்டத்தில் இருந்து பாலை ரூ. 1.70 க்கு எடுத்துக் கொண்டால் மீதமுள்ள 17 காசை பால் உற்பத்தியாளர்களும், பிரைமரி சொசைடிகளும் யூனியன்களும் பங்கிட்டுக் கொள்வதாகச் சொல்கிறார்கள். அதற்குத் தயாராக அவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் அந்த விலைக்கு வாங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அளவின் அடிப்படையில் இல்லாமல், தரத்தின் அடிப்படையில் தான் பால் வள நிறுவனம் பாலை வாங்கிக் கொண்டு இருக்கிறது. மேலும் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து ரூ. 1.70க்கு வாங்கினாலும் தரமான பாலைப் பெறமுடியாது. ஏனென்றால் கொழுப்புச்சத்தின் அடிப்படையில் தான் வாங்கிக்கொண்டு இருக்கிறோம். நான் ஏற்கனவே சொன்னதுபோல், எருமைப் பால் என்று சொன்னால் ஒரு கிலோ கொழுப்புச் சத்திற்கு ரூ. 23ஆகும். அதே போல் பசும்பால் என்று சொன்னால் கொழுப்புச் சத்து, இதர திடப் பொருள்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கிலோ ஒன்றுக்கு ரூ. 10.50 என்று வாங்கிக்கொண்டு இருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல் நாம் வாங்கும் பாலின் விலை ரூ. 1.38 பைசா. பதப்படுத்த செலவு 15 பைசா. ஆகவே, மொத்தம் ரூ. 1.53 தான் ஆகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ரூ. 1.70 க்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்கிறார். ரூ. 1.53 காசுக்கு நாம் எடுத்துக் கொண்டு இருக்கிற நிலைமை இருக்கிற போது ரூ. 1.70க்கு எடுத்துக் கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அ. ரகுமான் கான் : மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே சட்டமன்ற உறுப்பினர் சுப்பு அவர்கள் தன்னிலை விளக்கம் கொடுக்கிறபோது, ஆளும் கட்சித் தரப்பிலிருந்து ஒரு உறுப்பினர் 'உட்காருடா' என்று சொல்கிறார். இந்தச் சபையின்

கண்ணியம் காக்கப்பட வேண்டிய பொறுப்பு உங்களுக்கும் இருக்கிறது. எங்களுக்கும் இருக்கிறது. அது குறித்து தாங்கள் தீர்ப்பு வழங்காமல இருக்கிறீர்கள். அது எப்படி முறையாகும் ? அல்லது, அதே முறையை நாங்களும் பின்பற்ற வேண்டுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10–40].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இதற்கு ஒழுங்குப் பிரச்சனை எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் அந்த வார்த்தை கேட்ட போது வேண்டுமானால் ஒழுங்குப் பிரச்சனை எழுப்பியிருக்கலாம். அதோடு, நீங்கள் ஒழுங்குப் பிரச்சனை எழுப்பலாமே தவிர, அவர் அப்படி சொன்னாரே நானும் அப்படி நடந்துகொள்ளட்டுமா என்று கேட்பது கூடாது. ஒழுங்குப் பிரச்சனையை எழுப்பி விட்டு, நானும் அப்படி நடந்து கொள்ளட்டுமா என்று கேட்பது ஒரு உறுப்பினரின் கடமை உணர்ச்சியாகாது.

நான் அப்போதே சொல்லியிருக்கிறேன், யாரும் அப்படிச் சொல்லக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். எந்த உறுப்பினர் அப்படிச் சொன்னார் என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே, பொதுவாக அப்படிச் சொல்லக்கூடாது என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆகவே, மீண்டும் அதுபற்றிக் கேட்கவேண்டாம்.

அடுத்து, திரு. கூத்தக்குடி ச. சண்முகம் அவர்கள் பேசும்போது சில வார்த்தைகளைச் சொன்னார்கள்.

* * *

என்று சொன்னது அவசியமில்லை. ஆகவே, அந்த வார்த்தைகளை அவை குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். (திரு கூத்தக்குடி ச. சண்முகம் எழுந்தார்) தயவு செய்து உட்காருங்கள். விளக்கம் வேண்டாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது "உட்காருடா" என்று இந்தத் தரப்பிலிருந்து பேசினார் என்று குறிப்பிட்டார். அது அவைக் குறிப்பிலே வேண்டுமா என்பதைப்பற்றித் தங்கள் முடிவை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையேதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒழுங்குப் பிரச்சனையாகக் கிளப்பினார்கள். அவர்கள் இன்னார் சொன்னார் என்று குறிப்பிட்டுச் சொல்ல

* *மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வில்லை. இன்னார்தான் சொன்னார் என்றால் அதுபற்றி தீர்ப்புச் சொல்லலாம். மொத்தத்தில் சொன்னார் என்று கூறினார். யார் சொன்னார் என்பது அவருக்கும் தெரியாது ; எனக்கும் தெரியாது.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அன்றைய தினம் சுப்பு அவர்கள் குறிப்பிட்ட "வெளியே வாருங்கடா, பார்த்துக் கொள்ளலாம்" என்று குறிப்பிட்ட வார்த்தைகள் அவைக்குறிப்பில் இருக்கின்றன. இன்றைக்கு ஆளும்கட்சித் தரப்பிலிருந்து "உட்காருடா" என்று கூறியதை நானும் கேட்டேன். தாங்களும் அதுபற்றி அறிவுரை கூறினீர்கள். இப்போது அந்த வார்த்தை அவைக்குறிப்பில் இடம்பெறலாமா என்று கேட்கிறார்கள். அன்று திரு. சுப்பு அவர்கள் கூறிய வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருக்கும்போது இதுவும் இருந்தால்தான் பொருத்தமாக இருக்கும் ; தங்களுடைய அறிவுரை இதற்கும் இருந்தால்தான் பொருத்தமாக இருக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, நேற்று சுப்பு அவர்கள் எங்களைப்பற்றி பேசும்போது நான் எழுந்து கூறியது அவைக் குறிப்பில் இடம்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் குறிப்பிட்டது ஏற்கனவே இடம் பெற வேண்டுமென்றுதான் நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே, மீண்டும் அதைப்பற்றி இங்கே ஒன்றும் சொல்ல வேண்டாம். நீங்கள் உட்காருங்கள்.

6. 1978–79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 24- தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,66,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, தனியாரிடமுள்ள பெருந் தொழில்களை எல்லாம் நாட்டுடைமையாக்க வேண்டியதன் தேவையைச் சுட்டிக்காட்டி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,66,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டம், கல்ராயன் மலையில் பேப்பர் தொழிற்சாலை அமைப்பது குறித்து விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,66,61,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, வாசுதேவநல்லூரில் சர்க்கரை ஆலை நிறுவாமல் இருப்பது பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 24. தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,66,61,00-ல் ரூ. 1000 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, சேலத்திலுள்ள அரசு நிதி உதவிப் பெற்ற சௌத் இந்தியா கிளாஸ் பேக்டரி 1½ வருடமாகச் செயல்படாமல் மூடிக்கிடப்பது பற்றியும், அரசுத் தரப்பில் எடுத்து நடத்துவது பற்றியும் விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 24-தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,66,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, முகவை மாவட்டம் மண்டபத்தில், ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,66,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, to discuss about the need to start a separate Backward Classes Industrial Development Corporation, I move—

"That the allotment of Rs. 3,66,61,000 under Demand No. 24—Industries, be reduced by Rs. 100."

வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் முன் வந்து, தலையிட்டு சுமுகமான தீர்வைக் கண்டு, அங்கேயிருக்கும் விவசாயப் பெருமக்கள் மகிழ்கிற அளவிற்கு அந்தப் பிரச்னையைத் தீர்வு கண்டதற்காக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அதே நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தகாலத்தில் காஞ்சிபுரத்தில் ஒரிக்கை, பொன்னேரி போன்ற இடங்களில் சிறு தொழில்களை நிறுவ வேண்டுமென்று இருந்தார்கள். அதைப் போன்று அங்கே பட்டு நூல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். காஞ்சிபுரம் பட்டுக்கு பேர் போன இடம்; இந்தியத் துணைக் கண்டத்திலேயே பேர் போன இடம். அங்கே பட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் கண்ட கனவை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் நனவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இந்த நாட்டில் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பவர்கள் தொழிலாளர்கள். அதனால், தொழில் தகராறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். தொழிலாளர்கள் அல்லது முதலாளிகள் தகராறுக்கு காரணமாக இருந்தாலும், தொழில் தகராறுகள் ஏற்படுகின்ற நேரத்தில் அதற்கு தக்க முறையில் தீர்வு காணுகின்ற வகையில் அனைத்துக் கட்சியினரும் செயல்பட வேண்டும். வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என்பது இப்போது சாதாரணமாகிவிட்டது. இந்த அரசு தொழில் அமைதியை ஏற்படுத்துவதில் மிகுந்த அக்கரை எடுத்து வருகிறது அதற்கு மாற்றுக்கட்சி நண்பர்களும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவரவர்களே, அவைமுன் விவாதத்திற்கு வந்திருக்கிற தொழில்துறை மானியங்களின்மீது எங்களுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த 30 ஆண்டு காலமாக மத்திய-மாநில அரசுகள் கையாண்டு வந்த கொள்கையை சற்று மாற்றி இப்போது, புதியதோர் கொள்கையை பார்க்கிறபோது உண்மையிலே தேசத்தின் தேவை என்ன என்பதை உணர்ந்து அரசுகள் செயல்பட தொடங்கிவிட்டன என்பது மகிழ்ச்சிகரமான செய்திதான். இதுவரையில் பெரிய கனரகத் தொழில்களை ஆரம்பிப்பது என்ற கொள்கை அதிலும் குறிப்பாக அவற்றையெல்லாம் நகரப்புறங்களில் ஆரம்பிப்பது என்ற கொள்கை இருந்து வந்தது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 22

நம்முடைய நாட்டை எடுத்துக்கொண்டால், வேலையில்லாத் திண்டாட்டம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது சுதந்திரம் பெற்றும் இந்த நாட்டிலிருந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க எந்தத் திட்டமும் தீட்டப்படவில்லை என்பதை உணர்ந்துதான் ஆக வேண்டும், ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவேதான், வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றவேண்டும், கிராமப்புறங்களில் தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும் என்ற கொள்கையை மத்திய அரசு வகுத்திருக்கிறது. அதை மாநில அரசும் ஏற்று செயல்படுகிறது என்பதை இந்த நாடு வரவேற்கிறது.

ஏற்கனவே, இந்தக் கொள்கையின் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது மட்டுமல்ல; தனிநபர் வருவாயைப் பார்க்கும்போது நகரப் பகுதியில் வாழும் மக்களுக்கும் கிராம பகுதியில் வாழும் மக்களுக்கும் இருக்கிற வித்தியாசம்—பெர் காபிட்டா இன்கம்—பெருத்த மாறுதல் அடைந்திருக்கிறது. ஆரம்பத்தில் 1 : 2 அதாவது கிராமப் பகுதியில் ஒன்று ஆகவும் நகரப் பகுதியில் 2 ஆகவும் இருந்த நிலை மாறி தற்போது 1 : 4 என்ற அளவுக்கு வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அந்த அளவுக்குக் கிராமப்புற மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். இந்த நிலைமாற வேண்டும். அதற்காக கிராமப்புறங்களில் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். அதிலும் கனரகத் தொழில்களை ஆரம்பிப்பதற்குப் பதிலாக சிறுதொழில்களை கிராமத் தொழில்களை, குடிசைத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும்; அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும் என்று மத்திய-மாநில அரசுகள் திட்டங்களை வகுத்திருக்கின்றன என்பதை உணர்கிறோம்.

இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த அரசு எந்த அளவுக்கு இந்தக் கொள்கைகளை அமுல்படுத்த திட்டங்களை வைத்திருக்கிறது என்று பார்த்தால் நிச்சயமாக இதற்கு முன்னதாக இந்த அவையில் வைத்த நிதிநிலை அறிக்கையிலும் அது குறிப்பிடப்படவில்லை; ஒரு வேளை இன்று தொழில்துறை மானியங்களின்மீது அந்தத் திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்தேன். இந்தக்கொள்கை விளக்க அறிக்கையில் கூட அது பற்றிய குறிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அந்தக் கொள்கைகளை நிறைவேற்ற எந்தவிதமான திட்டமும் இந்த அரசிடம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது என்பதைக் கண்டுமிகுந்த வேதனைப்படுகிறேன்.

ஒரு கொள்கையை எடுத்துக் கொண்டால் உடனே அந்தக் கொள்கையை செயல்படுத்துவதற்குத் திட்டமும் வகுத்தாக வேண்டும். இந்த நிலையைப் பார்க்கின்றபோது அரசு கொள்கையை எடுத்துக் கொண்டிருந்தாலும் இலக்கா அதனைச் சரிவர செயல்படுத்த இயலுமா என்பதில் ஐயப்பாடு எனக்குத்

1978 மார்ச் 22] [திரு. ஜே. ஜேம்ஸ்]

தோன்றுகிறது. காரணம் இதுவரையில் இருந்த நிலைமையை மாற்றும்போது இலாக்காக்களும் நிச்சயமாக மாற்றியமைக்கப் பட்டுத்தான் ஆகவேண்டும். அரசு ஏற்ற கொள்கையை அதிகாரிகளும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். அதற்குத்தக்கபடி நிலைமைகளை மாற்றித் திட்டங்களை வகுப்பதற்கு வழிமுறைகளை பல்வேறு தொழில் துறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இலாக்காக்கள் வகுத்தாகவேண்டும் என்பதை அரசு கண்டிப்பாக உத்தரவிட்டாகவேண்டும். ஒரு ஆண்டு காலத்திற்கு இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டோமென்றால் அந்த ஆண்டு முடியும்போது நாம் எந்த அளவிற்கு இந்தக் கொள்கையை நிறைவேற்றி இருக்கிறோம் என்று கணக்குப் பார்க்கும்போது நிச்சயமாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு கொள்கை கிராமப்புறப் பகுதியிலே உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

எந்த அளவிற்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கிறது என்று கணக்குப் பார்க்கின்ற போது அது நமக்குச் சந்தோஷத்தை அளிக்க வேண்டிய நிலையில் இருக்கவேண்டுமென்றால் அதிகாரிகளும் இந்த இலாக்காக்களும் தேர்ந்தெடுத்த கொள்கைக்கு ஏற்ற முறையில் செயல்படுவதற்கு தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமது நாட்டைப்போல், இதுபோன்ற நிலையிலுள்ள பல்வேறு வெளி தேசங்களை எடுத்துக்கொண்டால் அங்கேயும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற தேசங்களிலேயும் இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, ஜப்பான் தேசத்தை எடுத்துக்கொண்டால் அது இன்றையதினம் உலகத்தில் தொழில்துறையில் முன்வரிசையில் இருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் இன்றையதினம் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற லேபர் ஓரியன்டெட் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படும் அதே கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டதுதான் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, 180 பொருள்களை சிறுதொழில், கிராமத்தொழில், குடிசைத் தொழில்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்ததற்கு பதிலாக இன்றையதினம் ஏறத்தாழ 504 பொருள்களை இந்தத் துறைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தப் பொருள்களை எந்த முறைகளோடு நாம் சிறு தொழில்களுக்குப் பயன்படுத்த இருக்கிறோம் என்ற விவரங்கள் இங்கே சுட்டிக்காட்டப்படவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் அதிகக் காலதாமதம் இல்லாமல் இதற்கான செயல்முறைகளில் அரசு தீவிரம் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] 1978 மார்ச் 22

அடுத்து, சிறு தொழில் தொடங்க ஆலோசனைத் திட்டங்கள் அளிப்பதற்காக ஏதோ மத்திய அரசின் கொள்கைப்படி ஏழு மாவட்டங்களுக்கு மையங்களை அமைப்பதற்கான திட்டத்தை ஏற்று ஏழு மாவட்டங்களுக்கு இந்த சென்டர்களை வழங்கி இருக்கிறீர்கள். இதைத் தேர்ந்தெடுக்கின்றபோது தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களாக எடுப்பதற்கு பதிலாக ஏற்கெனவே தொழில் துறையில் சற்று அபிவிருத்தி அடைந்திருக்கின்ற சில மாவட்டங்களை அரசியல் காரணமாக எடுத்திருக்கிறீர்கள் என்ற ஐயப்பாடு தோன்றுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் அது எந்த அளவிற்கு தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம் என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களில் நாங்கள் எடுத்துக்கூறி இருக்கிறோம். இதுவரையிலும் அரசு எந்தத் திட்டங்களையுமோ அல்லது தொழில் வாய்ப்புகளையோ அந்தப் பிரதேசத்திற்குச் செய்து கொடுக்க முன்வரவில்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இப்போதாவது இந்த ஏழு சென்டர்களிலே ஒன்றை கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே நான் கேட்டிருந்தேன். அப்போது இசைவு அளிக்கவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொண்டு கேட்டுக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் பல்வேறு பின்தங்கிய மாவட்டங்கள் இருக்கின்றன. இந்த சென்டர்களை அமைப்பதற்கு ஏழு மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்ததற்குப் பதிலாக இரண்டு மாவட்டத்திற்கு ஒரு சென்டராகக் கொடுத்திருந்தால் நன்றாக இருக்கும். அது ஒரு மாவட்டத்திற்கு மட்டும் பயனளிப்பதற்குப் பதிலாக இரண்டு மாவட்டங்களுக்குப் பயன் அளிக்கக்கூடியதாக அமைந்திருக்கலாம். ஆகவே, ஒரு சென்டருக்கு ஒரு மாவட்டம் என்று இருந்தாலும் செயல்முறையில் வருகின்றபோது இரண்டு மாவட்டத்திற்கு ஒரு சென்டராக இணைத்துக் கொள்ளலாம் என்று அரசுக்கு ஆலோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–40)

சிறு தொழில்களை விஸ்தரிக்கிறபோது அதற்குத் தேவை, தேவையான மூலப் பொருள்களும், தேவையான நிதியும்தான். சிறு தொழில்கள் பொறுத்து இப்போதுள்ள நிலைமை என்னவென்றால் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள் இவற்றினால் உற்பத்தியாகிற பொருள்களை வாங்குவதற்கு ஆள்கள் கிடைப்பார்களா, விற்பனை செய்ய வாய்ப்பில்லாமல் இந்தத் தொழில்கள் அழிந்து போகக்கூடுமோ என்ற ஐயப்பாடு ஆங்காங்கு இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட ஐயப்பாடு இருப்பதால் சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்குப் பலர் தயக்கம்

1978 மார்ச் 22] [திரு. ஜே. ஜேம்ஸ்]

காட்டக்கூடும். ஆகவே, அதற்காக அரசு முன்வந்து சிறு தொழில்கள் அல்லது கிராமத் தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை வாங்குவதற்கு அரசாங்கம் ஒரு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

சிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் மூலம் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களோடு ஓப்பன் மார்க்கட்டில் விற்பனைக்குப் போட்டியிடும்போது சிறுதொழில்கள் வழி உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் ஈடு கொடுக்கமுடியுமா என்று ஆலோசிக்க வேண்டும். ஆகவேதான், மத்திய அரசாங்கம் இதற்காக ஸ்டாட்யூட்டரி ப்ரொட்டக்ஷன், சட்டரீதியான பாதுகாப்பு கொடுக்க வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதேபோன்று மாநில அரசின் சட்டரீதியான பாதுகாப்பு இந்தத் தொழில்களுக்குக் கிடைக்கவேண்டும். குறிப்பாக, கைத்தறி நெசவாளர்களுக்கு இப்படிப்பட்ட சட்டரீதியான பாதுகாப்பு இல்லாததால் பல்வேறு கஷ்டங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதை அரசு உணரும்.

அடுத்து, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும் என்று நான் ஏற்கனவே கூறினேன். எங்கள் மாவட்டம் தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டம் என்று மத்திய அரசு அறிவிப்பதற்கு இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும் பல்வேறு மாவட்டங்களை தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று மத்திய அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது. மாநில அரசுகள் எநெந்த மாவட்டங்கள் தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்கள்எனத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்கிறதோ அவற்றைத் தான் மத்திய அரசாங்கம் தேர்ந்தெடுக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தைத் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம் என அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே பல்வேறு மூலப் பொருள்கள் கிடைக்கின்றன. அரசு உதவி செய்தால், பல்வேறு மூலப் பொருள்கள் அங்கு கிடைப்பதால் பல தொழில்கள் அங்கு வளர வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் ரப்பர் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவது கன்னியாகுமரி மாவட்டத்தில்தான். அந்த ரப்பரைக் கொண்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு ரப்பர் பாக்டரி ஆரம்பிப்பதற்கு ஒரு ப்ராஜெக்ட் ரிப்போர்ட் தயார் செய்யப்பட்டு ஒரு தனி நபருக்கு ஒரு லைசென்ஸ் வழங்கப்பட்டது. ஆனால், இன்றுவரை அந்த பாக்டரி ஆரம்பிக்கப்படவில்லை. அது ஏன் என்றுதெரியவில்லை. அதற்குப் பதிலாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கத் துறையில் மத்திய அரசின் உதவியோடு ரப்பர் பாக்டரி ஒன்றை ஆரம்பித்தால் அதற்கான மூலப் பொருள் அங்கே கிடைக்கிறது. அதோடு தேவையான மற்ற

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 22

எல்லா வசதிகளும் அங்கேயேயிருக்கிற காரணத்தால், ரப்பர் ப்பாக்டரி அமைப்பதற்கான சூழ்நிலை இருப்பதால், அங்கே ஒரு ரப்பர் பாக்டரியை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அங்கே ஏறத்தாழ 150 காஷ்யூ பாக்டரிகள் உள்ளன. அதற்கான மூலப்பொருள் அண்டி இல்லாததன் காரணமாக இன்று பல பாக்டரிகள் அங்கே மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த அரசாங்கம் அதற்கான மூலப்பொருள்களை மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான வகையில், ஒரு தனி கார்ப்பரேஷன் தமிழ்நாட்டில் அமைக்க வேண்டும். அப்படி ஒரு தனிக் கார்ப்பரேஷன் அமைத்தால்தான் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டுக்கு பிரத்தியேக கோட்டா வழங்கமுடியும். இப்போது தமிழ்நாட்டுக் கோட்டாவை கேரளா மாநிலம் வாங்கிக் கொண்டிரு டிருக்கிறது.

காரணம், தமிழ்நாட்டில் இருக்கிற பல பாக்டரிகள் கேரளா மாநிலத்திலுள்ள முதலாளிகளால் லைசென்ஸ் பெற்று நடத்துகிற காரணத்தால் அவர்கள் மத்திய அரசிடமிருந்து கோட்டா வாங்கி கேரளா மாநிலத்தில் இருக்கிற பாக்டரிகள் நல்ல முறையில் செயல்படுகின்றன. அதன் காரணமாக நம் மாநிலத்தில் பாக்டரிகள் வேலையில்லாமல் இன்று மூடப்பட்டுக் கிடக்கின்றன. ஆகவே, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இங்கே ஒரு தனிக் கார்ப்பரேஷன் அமைத்து மத்திய அரசாங்கத்தைக் கேட்டு நம் மாநிலத்திற்குத் தேவையான கோட்டாவைத் தனியாகப் பெற்றுக் கொள்ள முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாம்கர் இன்டஸ்ட்ரி அங்கே தழைத்து வளர வாய்ப்புகள் இருக்கின்றன. பனை நார் போன்ற மூலப் பொருள்களைக் கொண்டு சிறு தொழில்கள் ஆரம்பிக்க அங்கே வாய்ப்பு இருக்கிறது. பாம்கர் கொண்டு ஷுகர் பாக்டரி ஒன்று அமைக்கவும் அங்கே வாய்ப்பிருக்கிறது. இதுபோன்று ஒரு பாக்டரி அமைத்திருப்பதாக நினைக்கிறேன். ஆகவே அதேபோல் எங்கள் மாவட்டத்திலும் அப்படிப்பட்ட ஒரு பாக்டரியை அமைப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் மாவட்டத்தில் தென்னை நார் மிகுதியாகக் கிடைக்கின்றன, இதற்காக இதனைப் பயன்படுத்தி பொருட்கள் செய்யக் கூடிய பல கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ 10 ஆயிரம் தொழிலாளர்கள் இந்தத் தொழிலால் பயன் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த நிலையில், சிலோன் அகதிகளாக வருகின்றவர்களுக்குத் தொழில் வாய்ப்புகொடுக்கின்ற முறையில் இந்தத் தொழிலில் அமர்த்துகிறார்கள். ஆனால்

1978 மார்ச் 22] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அவர்கள் இந்தத் தொழிலைச் செய்வதற்கு மறுக்கின்றார்கள். காரணம் அவர்கள் ஏற்கனவே தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து பழக்கப்பட்டவர்கள் எங்களுக்கு தேயிலைத் தோட்டங்களில்தான் வேலைசெய்து பழக்கம், இந்தத்தொழிலில் எங்களுக்குப் பழக்கம் இல்லை என்றும் கூறுகின்றார்கள்.

ஆகவே, அவர்களைத் தேயிலை தோட்டங்களுக்கு அனுப்பிவிட்டு இந்த கயிறு தயாரிக்கும் தொழில் லோக்கலாக இருக்கின்ற தொழிலாளர்களுக்கு வாய்ப்பு அளிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கயிறுத் தொழிற்சாலையை கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர் பெரிய அளவில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதை மெதுவாக கேரளத்திற்குக் கொண்டு போவதற்காக வேண்டிய முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார். இதற்கு ஆரம்பமாக சிறிய சிறிய மெஷின்களை எடுத்துக் கொண்டு போவதற்கு முயற்சிக்கிறார்கள். இந்த பாக்டரியை அப்படியே மாற்றினால் இதில் வேலை செய்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே நிச்சயமாக இதை மாற்றுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆயிரக்கணக்கான தாய்மார்கள் எம்ப்ராய்ட்டரி வொர்க்கில் ஈடுபட்டிருக்கிறார்கள். பல ஸ்தாபனங்கள் இந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கின்றன. இதன்மூலம் தயாரிக்கப் படுகின்ற பொருட்கள் ஆயிரக்கணக்கான அளவில், லட்சக் கணக்கான அளவில், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற தேசங்களுக்கு எக்ஸ்போர்ட் ஆகிறது. பலர் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதற்கு அரசின் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. இப்போது நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கையின் அடிப்படையில் குடிசைத் தொழிலாக இருந்து வருகின்ற இந்தத் தொழிலுக்கு நல்ல ஊக்கம் கொடுக்க வேண்டும். இந்தத் தொழிலை ஊக்குவிப்பதின் காரணமாக ஆயிரக்கணக்கான தாய்மார்களுக்கு வேலை வாய்ப்பு இதன்மூலம் இருக்கின்றது என்பதை இச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அப்பளத் தொழிலைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே அரசு பிறப்பித்த ஒரு ஆணையின் படி 1975-முதல் நாளது வரை இருக்கின்ற ' அரியர்ஸ் ஆஃப் டாக்ஸ் ' அத்தனையும் கொடுக்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதிலுள்ள வரி பாக்கிகளை எல்லாம் கொடுக்க முடியாமல் இதிலுள்ளவர்கள் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போதுள்ள 8 சதவிகிதம் வீதம் வரி கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே இதில் அரியர்ஸை எல்லாம் கேட்காமல் இருக்கும் அளவில் குடிசைத் தொழில் என்றஅளவில் இதற்கு பிரத்தியேக விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 22

அதேபோன்று மண்பாண்டத் தொழிலும் ஒரு குடிசைத் தொழிலாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களும் பல இடங்களில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் என்ற முறையில் இருக்கின்ற விறகு போதிய அளவு குறைந்த விலையில் கிடைப்பதில்லை. இவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் விறகு போன்றவை குறைந்த விலையில் கிடைக்கச் செய்யவும், இவர்களுக்குத் தேவைப்படும் களிமண் எடுப்பதற்கு புறம்போக்கு நிலங்களைக் கொடுப்பதற்கும் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சேலத்தில் இதுவரை செயல்பட்டு வந்த கிளாஸ் பாக்டரி நமது மாநிலத்தில் இருக்கின்ற ஒரே ஒரு கிளாஸ் பாக்டரி இதுதான். ஏறத்தாழ 500 தொழிலாளர்கள் இதில் வேலை செய்கின்றார்கள். இது தற்போது மூடப்பட்டிருப்பதால் 500 தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்தத் தொழிலை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் பிரிண்டிங் பிரஸ் இருக்கிறது. வார்னிஷ் வொர்க்கும் அதிகமாக இருக்கிறது. இந்தத் தொழிலைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஸ்பிரிட் வாங்குவதற்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. இப்படி கொடுக்கப்படுகின்ற ஸ்பிரிட் தவறான வழிகளில் உபயோகப்படுத்தப்பட்டு விடும் என்பதற்காக பல ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் — தடைகள் — இருக்கின்றன. உண்மையிலேயே இந்தத் தொழிலுக்கு ஸ்பிரிட்டை பயன்படுத்துகின்றவர்களுக்குத் தேவையானஅளவு ஸ்பிரிட்கிடைப்பதற்கான அனுமதியை வழங்கவேண்டும் என்று ரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சிவகாசியில், தற்போது தீப்பெட்டித் தொழிலுக்கு பல இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அரசு பிறப்பித்துள்ள ஆணையின்படி, டவுனில் ஐந்து கிலோ மீட்டருக்கு உட்பட்டு இருக்கின்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு க்ளோரைட் லைசென்ஸ் வழங்க முடியாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நகரத்திற்கு ஐந்து கிலோ மீட்டருக்குஉள்ளேயே இருக்கின்றன. பலதீப்பெட்டிதொழிற்சாலைகள் இந்த ஆர்டரினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த உத்தரவை மாற்றி, எல்லாத் தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கும் க்ளோரைட் லைசென்ஸ் கிடைக்கும்படியான அளவில் உத்தரவு பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 22] [திரு. ஜே. ஜேம்ஸ்]

கடைசியாக, பீடித் தொழிலில் இன்றைக்கு பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன, இவற்றையெல்லாம் தீர்த்து வைப்பதற்காக பல போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தத் தொழில் பாதிக்கின்ற அளவுக்கு சூழ்நிலையை மாற்றி, இந்தத் தொழில் அழிந்து போகாமல் இருப்பதற்கு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, நான் ஏற்றுக்கொண்டிருக்கின்ற தொழில் கொள்கையின் அடிப்படையில் கொள்கைகளை செயல்படுத்துவதற்கும், அதிகக்காலதாமதம் இல்லாமல் நடவடிக்கைகளை எடுப்பதற்கும், வேலை நிறுத்தங்களை ஒழிப்பதற்கும் அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதைக் கூறி அமருகிறேன்.

[பிற்பகல் 12-50]

திரு. சௌ. வே. வரதராஜன: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்த அவையிலே வைக்கப்பட்டுள்ள தொழில்களுக்கான இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது தொழில் துறையிலே சேலத்திற்கு அருகிலேயே உள்ள சாக் மலைப்புறத்தில் குத்தகைக்கு விடப்படாதிருக்கும் நிலத்தில் மேக்னிசைட் உள்ளதா என்று ஆராய்ச்சி நடத்துவது சேலம் மாநகரத்தின் தொழில் முன்னேற்றத்திற்கு ஒரு சிறந்த அறிகுறி என்பதனை வரவேற்று, அதே நேரத்தில் சேலத்தில் கனிம ஆய்வுக்கூடத்தை நிறுவி, டான்சியிடமிருந்து பெற்ற படிகல் தூளாக்கும் தொழில் நிறுவனத்தின் அக்கூடத்தை, புதிதாக நிறுவ இருக்கும் கனிம ஆய்வுக் கூடத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றியமைக்க இருப்பது, அந்தத் தொழில் வளர்ச்சியுற மிகவும் உதவியாக இருக்கும் என்பதால், அதை நான் வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், சேலத்திலே பட்டுப்பூச்சி மூலம் பட்டு தயாரிக்கும் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்திருபதையும், மின் சக்தி, மின்னணு தொழிற்பேட்டை அமைக்க இருப்பதையும் நான் மிகவும் வரவேற்கிறேன். மேலும், பரவலாக மக்கள் கையில் செல்வம் சேரும் பொருட்டு தொழிற்சாலைகள் பெருமளவில் சிற்றூர்களிலும், 10 லட்சம் ஜனத்தொகைக்கு மேற்படாத சிறு நகரங்களிலும் அமைக்கவேண்டும் என்ற மத்திய அரசின் கொள்கை மாநில அரசின் கொள்கைக்கு ஒத்திருப்பதாக அறிவித்து, முன்னிலும் அதிகமான பொருட்களை உற்பத்தி செய்ய சிறுதொழில், குடிசைத் தொழில், கிராமத் துறைத் தொழில்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசிற்குப் பரிந்துரை வழங்கி இருப்பதை வரவேற்கிறேன்.

மேலும். சிறு தொழில் துறையில் தயாரிக்கப்படும் பட்டியலில் முன்பு ஒதுக்கியிருந்த இனம் 180 என்றும், அந்த எண்ணிக்கை தற்மசயம் 504-ஆக இந்திய அரசு செய்துள்ளது வரவேற்கத்தக்க ஒன்றாகும். மேலும், சிறுதொழில் தொடங்குவோருக்கு தக்க ஆலோசனைகள் கூறி, உற்பத்தியாகும் பொருட்களின் விற்பனை வசதி, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி வசதி பெற வழிகாட்டுதல் போன்ற வசதிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் நோக்கத்துடன் மாவட்டந்தோறும் மாவட்ட தொழில் மையங்களை அமைக்க இருப்பதையும் வரவேற்கிறேன்.

மேலும், மாநிலம் முழுவதும் கிராமப்புற, நகர்ப்புறப் பகுதிகளில் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்போருக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் விதத்தில், சிறுதொழில், குடிசைத் தொழில், சிறு வணிகம், மற்றப் பணிகளில் சொந்த தொழில் வாய்ப்புகளுக்கு வழிவகுப்பதே அரசின் கொள்கை என அறிவித்திருப்பதையும் நான் வரவேற்கிறேன்.

ஆனால், அதே சமயம் மற்ற மாநிலங்களில் சிறு தொழில்களுக்குக் கொடுத்துள்ள சலுகைகளைப் பார்த்தால் இவைகள் மட்டும் இந்த சிறு தொழில்கள் வளர உதவாது என்பது நிச்சயம். ஆகவே, இந்த மாநிலங்களைப் பின்பற்றி அதாவது மகாராஷ்டிரா, அரியானா, உத்தரப் பிரதேசம் போன்றவைகளில் நடுத்தர, பெரிய தொழில்களுக்கு முதல் 6 வருடங்களுக்கு விற்பனை வரி கட்டுவதற்கு கடன், மேலும் 200 கிலோ வாட் மின்சாரம் உபயோகிக்கும் சிறிய தொழில்களுக்கு 7 வருடமும், பெரிய தொழில்களுக்கு 5 வருடங்களுக்கும் மின்சக்தியில் சலுகைக் கட்டணம் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் வரி விலக்கு, பின்தங்கிய சிறிய தொழில்களுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு, மேலும் கிராமப்புறங்களில் நகரப் புறங்களில் தொழில் தொடங்க எவ்வித லைசென்ஸ் முறையும் தேவையில்லை. மின் ஜெனரேட்டர் வாங்க 50 சத விகிதம் மானியம், சிறிய தொழில் தொடங்குபவர்களுக்கு 10 வருடங்களுக்கு செல்வ வரி விலக்கு, மூலப் பொருள்கள் வாங்க 50 சத விகிதம் கடன், மேலும் 25 கிலோ வாட் மின்சக்தி வரை சிறிய தொழில்களுக்கு 11.5 காசுகளும், மற்றத் தொழில்களுக்கு 12 காசுகளும் — இதைப் போன்ற சலுகைகளை இங்கே நமது மாநிலத்திலும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் என்னதான் கிராமப்புற, நகர்ப்புற ஏழை எளிய மக்களை மேம்படுத்தும் திட்டங்களைத் தீட்டினாலும், அதை அமுல்படுத்தவிருக்கும் அரசாங்க அதிகாரிகளின் கெடுபிடி, அந்த ஏழை எளிய நடுத்தர மக்களைத் தொல்லை கொடுக்கா வண்ணம் இருந்தால்தான் அரசாங்கம் கொண்டுவரும் திட்டம் நல்லபடியாக நடைபெற ஏதுவாக இருக்கும். இதற்கு உதாரணமாகக் கூறவேண்டுமானால், சிறு தொழில்களுக்கு வைத்திருக்கும் லைசன்ஸ் முறையை, ஏழை

எளிய, நடுத்தர மக்கள் நடத்தும் சிறு தொழில்களுக்கு குறைந்த பட்சம் 5 ஹார்ஸ் பவரிலிருந்து 10 ஹார்ஸ் பவர்வரை எந்த விதமான கட்டுப்பாடும் இன்றி, விண்ணப்பம் கொடுத்தவுடன் கொடுக்க ஏற்பாடு செய்தால், சிறு தொழில்கள் வளர மிக்க ஏதுவாக இருக்கும். மேலும், அதனால் தொல்லையுறும் அப்பாவி ஏழை எளிய நடுத்தர மக்கள் அதிகார வர்க்கத்தின் தொல்லைகள் இல்லாமல் தொழில்களை போட்டிபோட்டு வளர்ப்பதற்கும் ஏதுவாக இருக்கும். மேலும் இத்திட்டத்தின் மூலம் அந்த லைசென்ஸ் முறையில் உள்ள ஊழலை அடியோடு ஒழித்து, ஏழைமக்களை அந்த லைசென்ஸ் வாங்கப்படுவதற்கு ஆகும் கடன் தொல்லையிலிருந்து காப்பாற்றியவர்கள் ஆவோம். இதைச் சபையில் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக பேசியது என்று நினைக்காமல், இதை முழுமையாக அமுல் நடத்தினால் நடுத்தர, ஏழை மக்கள் இதனால் பலன் பெற்று, நம் அரசை மனமார என்றென்றும் வாழ்த்துவார்கள். அந்த நிலைமையில் இந்த லைசென்ஸ் முறையில் ஊழலும், அதிகார பயமுறுத்தலும் உள்ளது என்பது இதில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் தெரிந்ததே.

ஆகையால் இந்த வேண்டுகோளை அனைவரும் வரவேற்பார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இதை அவசியம் பரிசீலித்து சிறு தொழில்களை உண்மையிலேயே ஊக்குவிக்க வேண்டுமென்றால், வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்த வேண்டுமென்றால் 5 கிலோ வாட், 10 கிலோ வாட்வரை உள்ள சிறு தொழில்களுக்கு லைசென்ஸ் முறையைக் கண்டிப்பாக எடுத்து விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் உண்மையிலேயே சிறு தொழில்களுக்கு நன்மை செய்தவர்களாவோம். மேலும் இந்தத் துறையில் மற்ற மாநிலங்களோடு போட்டி போடும் அளவுக்கு தமிழகத்தில் சிறு தொழில்கள் வளர வாய்ப்பாக இருக்கும்.

பஞ்சாலைகளில் வட மாநிலங்களில் கதிர்களை அதிகப்படுத்த ஊக்கமளிக்கிறார்கள். அங்கே கதிர்கள் அதிகமாக அதிகமாக இங்கே உள்ள பஞ்சாலைகளில் இருந்த நூலைப் பெற்று அவர்கள் துணி தயாரிப்பது குறைந்துவிடும். அதனால் நம்முடைய நூல்கள் வெளி மாநிலங்களுக்கு வட மாநிலங்களுக்குச் செல்வது குறைந்துவிடும். ஆகவே, நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய நூல்களை இங்கே உபயோகப்படுத்தக்கூடிய திட்டங்களைத் தீட்ட வேண்டும். மில் துணிகளைப் போன்று துணிகளைத் தயாரிக்க கைத்தறிக்கும் ஊக்கம் கொடுப்பதோடு மட்டுமல்லாது, ஏழை நெசவாளர்களுக்குச் சலுகைகள் கொடுப்பதோடு படித்த வாலிபர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும் வகையில் விசைத்தறிகளுக்கும் சில சலுகைகள் கொடுக்கவேண்டும். மில்களுக்குப் போட்டியாக துணிகளைத் தயாரித்தால் இங்கே தயாராகும் நூல்களை முழு அளவில் பயன்படுத்த வாய்ப்பாக இருக்கும்.

[திரு. சௌ. வே. வரதராஜன்] [1978 மார்ச்சு 22

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மதுரைப் பகுதியில் கைத்தறியில் தயாராகும் ஜமுக்காளத் தொழிலுக்கு வாக்ஸ் மிகவும் தேவையாக இருக்கிறது. அதனை தொழில் துறை சரியாக வழங்குவதில்லை. ஜமுக்காளத் தொழிலை காப்பாற்றி ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு வாழ்வு தர தேவையான வாக்சை தீப்பெட்டித் தொழிலுக்கு வழங்காமல் இதற்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் இரும்புத் தொழிற்சாலை அழுகிற பிள்ளைக்கு வாழைப் பழம் காட்டுவது போல் மத்திய அரசு சேலம் இரும்புத் தொழிலைப் பொருத்தவரை இருக்கிறதே தவிர வேறல்ல. ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி அல்லது இரண்டு கோடி என்று மட்டும் கொடுத்து வருகிறார்கள். நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி இந்தத் திட்டத்தை முழு அளவில் தொடங்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப் பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே தொழில், தொழில் வளர்ச்சி பற்றிய மானியங்களின்மீது பேச வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். காலையில் இருந்து பத்து பேர்களுக்கு மேல் இந்த மானியங்களின்மேல் பேசியிருக்கிறார்கள். ஆனால் தொழில் துறை ஒருவேளை முக்கியமில்லை என்று இந்த அரசு கருதியோ என்னவோ ஒரு அமைச்சர் கூட இது சம்பந்தமாக தங்கள் கவனத்தைத் திருப்பியதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காலையில் பேச ஆரம்பித்ததிலிருந்து யாராவது ஒரு அமைச்சர் குறிப்பெடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சர்கள் கவனிக்கவில்லை என்று சொன்னார்கள். அவரை எப்படிக் கவனிக்க வேண்டுமென்று விளக்க வேண்டுகிறேன்.

திரு. துரை முத்துசாமி: பேசியதைக் குறிப்பெடுக்கவில்லை என்று தான் சொன்னேன்.

தொழில் வளர்ச்சி பற்றிய கொள்கைக் குறிப்பில் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் போன்றவற்றில் ஒத்த கருத்தைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

1978 மார்ச்சு 22] [திரு. துரை முத்துசாமி]

அதே நேரத்தில் மத்தியிலிருக்கும் ஜனதா ஆட்சியில் இருக்கிற தொழிலமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் சமீபத்தில் கோவை மாநாட்டில் விம்கோ தீக்குச்சித் தொழிற்சாலை இயந்திர மயமாக்கப்பட மாட்டாது. ஏழை எளியவர்கள் செய்கிற குடிசைத் தொழிலாகத்தான் இருக்கும் என்று சொன்னார்கள்.

ஆனால் பாராளுமன்றத்தில் பேசும்போது, கயிறு திரிக்கும் தொழில் கிராமத் தொழிலாக, குடிசைத் தொழிலாக இருக்கிறது. அதை இயந்திரமயமாக்க இருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு மத்திய அரசு நிரந்தரமல்லாத, நிலையில்லாத கொள்கைகளைக் கொண்டதாக இருந்து கொண்டிருக்கிறது* பொதுக்கூட்டங்களில் பேசும்போது ஒன்றாகவும், பாராளுமன்றத்தில் பேசும்போது வேறு முறையில் பேசுகிற நிலையில் ஜனதா கட்சி, ஜனதா அரசு இருந்து கொண்டிருக்கிறது. அதைத்தான் இந்த அரசும் பின்பற்றுகிறதா என்ற கேள்வியைக் கேட்க

(பிற்பகல் 1-00)

ஆசைப்படுகிறேன். தமிழக அரசின் டான்சி போன்ற நிறுவனங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்களானது எந்தப் பொருளாக இருந்தாலும் அதிக விலையைக் கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் அதே பொருளை தனியார் செய்தால் குறைந்த விலையில் கிடைக்கிறது..................

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ***என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். மத்திய அரசைக் குறை கூறி சொன்ன கருத்துக்கள் குறிப்பேட்டிலே ஏறுவது சரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. துரை முத்துசாமி: என்னுடைய முழுப் பேச்சையும் அவர் கேட்டிருந்தால் இப்படி எழுப்பியிருக்கமாட்டார். அவருக்கு வேண்டுமென்றால் நான் தனியாகவும் சொல்கிறேன். மீண்டும் ஒரு முறை இங்கேயே வேண்டுமானாலும் சொல்கிறேன். கோயம்புத்தூர் மாநாட்டில் பேசும்போது குடிசைத் தொழில்களுக்கு விம்கோ போன்ற தீக்குச்சி செய்கின்ற தொழிற்சாலைகளை குடிசைத் தொழில்களாக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பாராளுமன்றத்திலே பேசுகின்றபோது கயிறு திரிக்கும் தொழிற்சாலை, அந்தத் தொழிலிலே லட்சக்கணக்கான மக்கள் ஈடுபட்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, நடைமுறைக் கொள்கைகளைப் பற்றிப் பேசும்பொழுது இதுபோன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் தவறு இல்லை. தனிப்பட்ட மனிதர்களைப்பற்றி விமர்சனம் செய்யும்பொழுதுதான் தவறாகக் கருதப்படுமே தவிர அரசினுடைய கொள்கைகள் தவறு என்று விமர்சிப்பதற்காகச் சொல்லுகிறோமே தவிர..........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, விவாதத்தில் வெற்றி காண்பது என்பது வேறு, உண்மையை ஏற்றுக்கொள்வது என்பது வேறு. ஒரு அரசியல் கட்சி தீர்மான வடிவத்திலே உருவாக்குகின்ற யோசனைகளையெல்லாம் அப்படியே அந்த அரசியல் கட்சியைச் சேர்ந்த அவர்களால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை ஏற்று நிச்சயமாகச் செயல்படும் என்று எதிர்பார்க்கும்பொழுது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஏமாற்றத்திற்கு ஆளாக வேண்டியிருக்கிறது என்பதை நண்பர் மறுக்க மாட்டார் என்று கருதுகிறேன்.

ஆகவே, இந்தப் பிரச்சனையை விவாதித்துக் கொண்டுபோய், இதற்குமுன் இருந்த அரசு, மத்திய அரசு தமிழ்நாட்டிலே இருந்த அரசு என்று விரிவான முறையில் விளக்கி வேறுபட்ட கருத்துக்களை உருவாக்குவதற்கு இடம் கொடுக்க வேண்டாமென்றுதான் அப்படிச் சொன்னேன். மற்றவர்கள் அப்படிப் பேச ஆரம்பித்தால் இப்பொழுதிருக்கின்ற நல்ல சூழ்நிலைகள் கெட்டுவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள விளக்கம் கொடுத்த பிறகு நான் குறுக்கிடுவதால் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தவறாகக் கருதக் கூடாது......

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். பிரச்னையை அதிகமாக்கி, விவாதத்திலே சூடேற்றி, வேறுவித கருத்துக்கள் இங்கே சொல்லப்படுகின்ற சூழ்நிலை இங்கே வேண்டாம். அதை உருவாக்க வேண்டாமென்றுதான் சொன்னேன். அப்படியில்லை என்று உறுப்பினர் விவாதத்திற்குச் சூடேற்ற விரும்பினால், அதன் விளைவாக இந்த அவையின் நேரத்தை வீணாக்க வேண்டுமென்று விரும்பினால் அப்படிப்பட்ட வார்த்தைகளைத் தந்திரமாகவும், சாமர்த்தியமாகவும் சொல்ல அனைவருக்கும் தெரியும். அப்படிச் சொல்லிக்கொண்டே போனால் நன்றாக இராது. இன்னும் சொல்கிறேன், மாநில அரசு-தமிழக அரசு * * * போடவில்லை,

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தேவையில்லை, மக்களை ஏமாற்றி எந்தவித இலாபத்தையும் பெறுவதற்காக நாங்கள் இங்கே வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : தலைவரவர்களே......

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நீங்கள் உட்காருங்கள். உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள்.

திரு. ஏ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவாக, தீர்ப்பின்மேல் பேசுவது என்பது, அதுவே முதலில் மரபு இல்லை, ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். அவர் அன்-பார்லிமெண்ட்ரியா என்று கேட்டார்.*** என்று அம்மாதிரி சொன்னால் அந்த வார்த்தை அன்-பார்லிமெண்ட்ரி என்றும் இருக்கிறது. அந்த சென்சிலேதான் சொன்னீர்கள். விவாதம் சூடாக இல்லாமல் ஒழுங்கான முறையில் நடக்க வேண்டுமென்று அந்தக் கருத்திலே சொன்னேன் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்களும் விளக்கம் சொல்லிவிட்டார்கள். ஏற்கெனவே நான் தீர்ப்பளித்துவிட்டேன். அந்த வார்த்தைகளையும், அதற்குப் பின்னால் தொடர்ந்து வந்த வாதங்களையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, விவாதத்தைச் சூடாக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதே தொழில் துறை அமைச்சர் அவர்கள் கோயம்புத்தூரிலே ஒருவிதமாகப் பேசுகிறார், பார்லிமெண்ட்டிலே ஒருவிதமாகப் பேசுகிறார், இப்படி நிரந்தரம் இல்லாத கொள்கையாக இருக்கிறது. அதையே இந்த அரசு பின்பற்றுகிறதா என்றுதான் நான் பேசினேனே தவிர, வேறொன்றுமில்லை.

[பிற்பகல் 1-10]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மத்திய தொழில் துறை அமைச்சரவர்கள் கோயம்புத்தூர் மாநாட்டில் ஒன்று கூறினார், பாராளுமன்றத்தில் ஒன்றைக் கூறினார் என்று திரும்பத் திரும்ப நண்பர் அவர்கள் கூறிக்கொண்டே இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> தயவுசெய்து அந்தப் பிரச்சனையைவிட்டுவிடுங்கள். அவர் பேசலாம். ஏற்கனவே, முதலமைச்சர் சொன்ன மாதிரி, கட்சிகளுடைய எண்ணங்களைக் கட்சி மாநாட்டில் பிரதிபலிக்கிறார்கள். சிலவற்றைச் செய்யலாம், சிலவற்றைச் செய்ய முடியாது என்று முதலமைச்சரவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அவர் விளக்கத்திற்குப் பிறகு தொடர்ந்து விவாதிப்பது தேவையில்லாதது.

<u>திரு. துரை முத்துசாமி :</u> பேரவைத் துணைத்தலைவரவர்களே, தமிழக அரசு நிறுவனமாகிய டான்சியிலே பல பொருள்களைச் செய்கிறார்கள். ஆனால், அப்பொருள்களின் விலை அதிகமாக இருக்கிறது. தனியார்களிடம் வாங்கினால், தனியார்கள் செய்கிற அதே பொருள், விலை குறைவாக இருக்கிறது. அதற்கடுத்தாற்போல், குறித்த காலத்திற்குள்ளாக அந்தப் பொருள்கள் கிடைக்கவில்லை. அடுத்தது, தரமானவைகளாகவும் டான்சியிலே செய்யப்படுகிற பொருள்கள் இல்லை. ஆனால், டான்சியிலே செய்யப்படுகிற பொருள்களைத்தான், ஊராட்சி ஒன்றியம் போன்றவற்றிலும், அரசாங்கம் நடத்துகிற அலுவலகங்களிலும் வாங்க வேண்டுமென்று, கொட்டேஷன் கூடத் தேவையில்லையென்று வைத்திருக்கிறார்கள். ஆனால், கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே பார்க்கும்போது, டான்சி, பல இலட்சம், கோடிக்கணக்கான ரூபாய்கள் நஷ்டத்திலே நடக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, டான்சி ஏன் நஷ்டத்திலே ஓடுகிறது. தரம் இல்லாத பொருள்கள் ஏன் அதனால் உற்பத்தி செய்யப்பட்டு, விற்கப்படுகிறது, ஏன் காலதாமதம் ஆகிறது என்பதை ஆராய்வதற்காக ஒரு குழுவை இந்த அரசாங்கம் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாக்டரி ஆக்ட் வைத்திருக்கிறோம். பொதுவாக, பருத்தித் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய அலுவலகங்களிலேயிருக்கிற பெண்களை மாலை 5 மணிக்கு மேல் வேலைக்கு வைத்திருக்கக் கூடாது, அனுப்பிவிட வேண்டுமென்ற விதி இருக்கிறது. இருந்த போதிலும், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களிலே, பாக்டரியிலே வேலை செய்கிற பெண்கள், இரவு 7 மணியிலிருந்து 12 மணி வரையில் வேலை செய்கிறார்கள். அப்படி வேலை செய்விக்கிற சம்பந்தப்பட்ட முதலாளிகள் மீது, வழக்கு தொடர்ந்தால், ரூ. 30, ரூ. 50 மட்டும் அபராதம் விதிக்கிற நிலைமையிருக்கிறது. அப்படியிருப்பதால், மறுநாளே, பெண் தொழிலாளிகளை, இரவு 7 மணி முதல் 12 மணி வரை வேலை செய்ய வைக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வழியில்லாமலிருக்கிறது.

பாக்டரி ஆக்ட் இருக்கின்றதேயொழிய, பெண்கள் இரவிலே வேலை செய்கின்ற அவல நிலை இருக்கிறது. அதைத் தடுக்க ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். இதை ஏன், குறிப்பிடுகிறேன் என்றால், முதலாளிகள்மேல் வழக்கு

போட்டால், அபராதம் கட்டிவிட்டால் போதும் என்ற அளவிலே மறுநாளே, அந்தப் பெண்களை இரவிலே வேலையில் அமர்த்துகிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்த பிறகும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்ற நிலைமையிருக்கிற காரணத்தால், இதற்குக் கடுமையான சட்டம் கொண்டு வந்து, அப்படி பெண்களிடம் இரவில் வேலை வாங்குகிற முதலாளிகள் பேரில், கடுமையான சிறை தண்டனை கொடுக்கச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், கம்பல்சரி டெபாசிட் பணத்தை எம்.எல்.ஏக்கள் கையெழுத்துப்போட்டால் திருப்பிக்கொடுக்கலாம் என்றிருந்தும், கோயம்புத்தூர், சென்னை போன்ற இடங்களில், இன்னும் கம்பல்சரி டெபாசிட் தொகை திருப்பிக் கொடுக்கப்படவில்லையென்ற அவல நிலையிருக்கிறது. அதற்குக் காரணகர்த்தாக்களாக உள்ளவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எம். எல். ஏ-க்கள் கையெழுத்து போட்டால் போதும் என்றிருக்கிறது, அரசு சொல்கிறது, சட்டம் இருக்கிறது. இருந்த போதிலும், எம். எல். ஏ. கையெழுத்து போட்ட பிறகும் காலந்தாழ்த்துகிற அதிகாரிகள் எதற்காகக் காலந் தாழ்த்துகிறார்கள், ஏன் காலந் தாழ்த்துகிறார்கள் என்பதை அறிந்து, அதற்குக் காரணமானவர்கள் யார் என்று அறிந்து, அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத்தான் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். காலதாமதத்தால், இலட்சக்கணக்கானவர்கள் அவதிப்படுகிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, தென்னாற்காடு மாவட்டத்திலே, கள்ளக்குறிச்சியிலே, பொம்மை செய்வதும், சிலை செய்வதும் தொழிலாக இருக்கிறது. கள்ளக்குறிச்சி, சின்ன சேலம் போன்ற பகுதிகளில், இத்தொழில்கள் பிரபலமாக இருக்கின்றன, ஏழை, எளிய மக்கள் மத்தியில். அந்தப் பகுதியில், கிராமத் தொழிலாக இருக்கிற இத்தொழிலுக்குக் கடனாகவும் மானியமாகவும் உதவி கொடுத்தால், ஏழை எளிய மக்கள் திறமையை வெளிக்காட்டவும் வழி வகுக்கும், வாழ்க்கைக்கும் வழி வகுத்ததாக இருக்கும். ஆகவே, கடனும் மானியமும் வழங்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், தொழில்பேட்டை எங்கு பார்த்தாலும் அமைக்கிறார்கள். எங்கள் தென்னாற்காடு மாவட்டத்திலே, கடலூரிலே மட்டும் தான் தொழில்பேட்டை இருக்கிறது. பிற்பட்ட பகுதிகளிலே கள்ளக்குறிச்சி மிக முக்கியமானது. அங்கும் தொழில்பேட்டை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல செஞ்சி, புதுக்கோட்டை, திருமயம் போன்ற இடங்களில் தொழிற்பேட்டை அமைப்பதன் மூலமாக படித்து வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தாலே படித்துவிட்டு அவர்கள் விரும்பும் வேலையைச் செய்யவும் அரசாங்கம் கடனுதவியும் மானியமும் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, கள்ளக்குறிச்சிக்கருகில் கடலூர் துறைமுகம் இருக்கிறது. இங்கிருந்துதான் நெய்வேலி நிலக்கரி, சிமின்ட் போன்றவைகளை ஏற்றுமதி செய்கிற கட்டாயம் இருக்கிற காரணத்தால் இந்தத் துறைமுகம் இன்னும் சீர்செய்யப்படாமல் இருக்கிறது. கடலூர் துறைமுகத்தைச்சீர்செய்து கொடுத்துவிட்டால் குறைந்த கட்டணத்திலே டிரான்ஸ்போர்ட் செலவாகும் என்ற காரணத்தினாலே அந்தத் துறைமுகத்தைச் சீர்செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடலூரிலே ஆயிரக்கணக்கானவர்கள் மீன்பிடி தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். விசைப்படகாளர்கள் அல்ல, கன்ட்டிரி போட் வைத்திருப்பவர்கள். அந்த ஏழைகள் தங்கள் கையிலே இருக்கிற கன்ட்டிரி போட்டைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களிலே 3,000 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் இந்தத் தொழிலைச் செய்ய முடியாமல் இருக்கிறது. அவர்களுக்குக் கடனும் மானியமும் கொடுத்தால் அவர்கள் வாழ்வதற்கு வழிகாட்டியாக இருக்கும். அவர்களுக்கு உதவ வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள விருத்தாசலத்தில் பீங்கான் தொழிற்சாலை இருக்கிறது. இப்போது அங்கு தேக்க நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதிகமாக விற்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஏன் அவைகளை வெளி நாடுகளுக்கு அனுப்பி லாபம் அடையக்கூடாது. அரசு ஒரு குழுவை அமைத்து, பீங்கான் இப்போது எப்படி செய்கிறார்கள், எவ்வளவு செலவாகிறது, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அன்னிய செலாவணி எவ்வளவு கிடைக்கும் என்பதை எல்லாம் பரிசீலித்து வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனுக்காக ஆயிரக்கணக்கான நிலங்கள் எடுத்திருக்கிறார்கள். ஆனால், அப்படி எடுத்த இடங்களில் விதைப் பண்ணையையும், முந்திரித் தோப்பையும் வைத்திருக்கிறார்கள். எந்த நோக்கத்தோடு அதை எடுத்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. மாறாக விதைப்பண்ணையை வைத்திருக்கிறார்கள். எந்த நோக்கத்திற்கு எடுத்தார்களோ அந்த நோக்கத்திற்குத்தான் பயன்படுத்த வேண்

டும் என்று லாண்டு அக்குசிஷன் சட்டத்திலே இருக்கிறது. நெய்வேலியில் எடுக்கப்பட்ட நிலங்களில் இன்னும் விதைப் பண்ணைகளை அமைக்க இருக்கிறார்கள். இந்த அரசு என்ன பொருள் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. மு. ஆறுமுகம் : உறுப்பினர் அவர்கள் சொல்லும் போது நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் எடுத்த நிலங்களில் அரசு விதைப் பண்ணை வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அரசினுடைய கொள்கை தெளிவாக இல்லை என்றும் சொன்னார்கள். எந்த அரசு என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். 11 ஆண்டுகாலம் ஆண்டது யார் ?

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். இது என்ன பாயின்ட் ஆப் ஆர்டரா, உட்காருங்கள்.

திரு. துரை முத்துசாமி : அதே போல நெய்வேலி பகுதியில் ஏராளமான பேர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அதிலே எவ்வளவு சதவிகிதம் பேர்கள் அந்தத் தொழிற்சாலையிலே வேலையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். எவ்வளவு பேர்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்பதற்குக் கணக்குக் கூட இல்லை. அவர்கள் தங்களுடைய விவசாயத் தொழிலைக் கூட செய்ய முடியவில்லை. காரணம் 150 அடி ஆழத்திலிருந்து தண்ணீரை வெளிக் கொண்டு வருவதால் அவர்களுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட அபாயம் அங்கிருக்கிறது. அப்படி வெளியேற்றப்பட்டவர்கள் யார், யார், அவர்கள் என்னென்ன தொழில்கள் செய்கிறார்கள் என்றெல்லாம் தெரியவில்லை. ஆகவே இதைக் கவனிக்க ஒரு குழு போட்டு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலே ஏராளமான மெழுகு தொழிற்சாலை இருந்து வருகிறது. அவர்களுக்கு அதற்காக மூலப் பொருள்கள், கச்சாப் பொருள்கள் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அவதியைப் போக்குகின்ற வகையிலே தேவையான பொருள்களைக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

திருமயம் தொகுதியில் குளுகோஸ் பாக்டரி அமைக்க திட்டம் இருந்தது. அதை நிறுவ பல பணக்காரர்கள் தயாராக இருந்தார்கள். ஆனால் அது இன்னும் நிறுவப்படவில்லை; அதைப் போல் பணக்காரர்கள் பாக்டரி அமைக்க முன்வரும்போது. வசதி படைத்தவர்கள் முன் வரும்போது, அவர்களுக்கு அனுமதி

[திரு. துரை முத்துசாமி] [1978 மார்ச் 22

கொடுத்தால் அந்தப் பகுதியில் வேலை இல்லாமல் இருக்கும் வாலிபர்களுக்கு வேலை கொடுக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அந்த குளுகோஸ் பாக்டரியை அங்கே அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், அந்தப் பகுதியில் யூகலிப்டஸ் அதிகமாகக் கிடைப்பதால், அங்கே ஒரு பேப்பர் தொழிற்சாலை ஏற்படுத்தித் தர வேண்டும்.

சிக் மில்லைப் பற்றிப் பேசினார்கள். சேலம் எனமல் பாக்டரி தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களை கைது செய்து இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அந்தத் தொழிலாளர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய குறைகளைப் போக்க வேண்டும். கைது செய்தவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் 20 நிமிடம் பேசிவிட்டீர்கள். முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. துரை முத்துசாமி : 'நவமணி' பத்திரிகை இரண்டாண்டு காலமாக மூடப்பட்டு இருக்கிறது. அங்கே வேலை செய்து கொண்டிருந்த 60 தொழிலாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். மூடப்படும் போது 1 வருஷம் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு உடனடியாக சம்பளம் வழங்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். திரு. துரைமுத்துசாமி நீங்கள் 20 நிமிடம் பேசிவிட்டீர்கள்.

திரு. துரை முத்துசாமி : இன்னும் ஒரு பாயின்ட் தான். முடித்து விடுகிறேன். நிறைய இன்டரப்ஷன் இருந்தது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதிக நேரம் ஆகிவிட்டது. நடுவில் இன்டரப்ஷன் 5 நிமிடம் ஆகியிருந்தாலும், 15 நிமிடம் பேசி இருக்கிறீர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடம் தான். உட்காருங்கள்.

திரு. துரை முத்துசாமி : கடைசியாக, சைதாப்பேட்டையில் ....

(மணியடிக்கப்பட்டு, திரு. அய்யாச்சாமி பேச அழைக்கப்பட்டார்.)

1978 மார்ச் 22]

திரு. ரா. அய்யாச்சாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த தொழில் மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(திரு. துரை முத்துசாமி எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. துரை முத்துசாமி, நீங்கள் 20 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சிக்கு எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டுமோ அவ்வளவு நேரம் ஒதுக்கியிருக்கிறேன். (குறுக்கீடு) ஜனதா கட்சிக்கு ஒதுக்கிய நேரம் உங்கள் கட்சிக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. அய்யாச்சாமி : என்னுடைய தாராபுரம் தொகுதியில் தொழில் வளர்ச்சி இல்லை. என் தொகுதியில் ஏழைகள், விவசாயப் பெருங்குடி மக்கள் நிறைய இருக்கின்றனர்........

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இங்கே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு நண்பர் * * * என்று தங்களைப் பார்த்துக் கேட்டார். அது சபைக் குறிப்பில் இருக்கலாமா ? அப்படி இருந்தால் நீக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் உட்கார்ந்து கொண்டே பேசியதால், சபைக் குறிப்பிலோ, பத்திரிக்கையிலோ வராது.

திரு. ஏ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர். சார். * * * என்று கேட்டார். அதை அனுமதிக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது வராது என்று சொல்லியிருக்கிறேன். * * * * எல்லோருக்கும் ஒரே நீதி தான் கொடுத்துக் கொண்டு இருக்கிறேன். உட்காருங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான் : தலைவரவர்களே............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. ஏ. ரகுமான் கான் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : முதலில் நீங்கள்
உட்காருங்கள். நான் பேசிய பிறகு நீங்கள் பேசுங்கள். ஒரு
உறுப்பினர் பேசும் போது உங்களைப் பற்றியோ அல்லது அவ
ருடைய பேச்சில் ஏதாவது வித்தியாசம் இருந்தாலோ நீங்கள்
பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, ஒழுங்குப் பிரச்சனை
எழுப்பலாம்.

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> : The Deputy Speaker is
oxpected to go through the rules. I am raising a point of
erder.

பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கும் போது, அதற்கு அனுமதி
அளிக்க வேண்டுமென்று விதிமுறைகளில் தெளிவாக இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : நீங்கள் உட்காருங்
கள். விதிமுறைகளைப் படிக்க வேண்டுமென்பதை நான் ஏற்றுக்
கொள்கிறேன். அறிவுரை கூறியதற்கு நன்றி. ஏற்கெனவே
நான் விதிமுறைகளைப் படித்து விட்டுத்தான் இங்கு வந்திருக்
கிறேன். அதிகமாக ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் என்
னுடைய அறையில் வந்து சொல்லுங்கள். நான் ஏற்கெனவே
சொன்ன மாதிரி ஒரு உறுப்பினர் பேசும் போது இன்னொரு
உறுப்பினரைப் பற்றிப் பேசினால் அல்லது அவருடைய பேச்சில்
ஏதாவது முரண்பாடு இருந்தால் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப
உரிமை இருக்கிறது. அந்த மாதிரி எதுவும் இல்லாமல் 'நான்
ஒழுங்குப் பிரச்சனை எழுப்பிக் கொண்டிருப்பேன், நீங்கள் அனு
மதிக்க வேண்டும்' என்று சொன்னால் எப்படி முடியும் ? உங்க
ளுடைய ஒழுங்குப் பிரச்சனை சரியல்ல என்று சொல்லிவிட்டு,
உறுப்பினரைத் தொடர்ந்து பேசச் சொல்லிவிட்டேன். மீண்
டும் அதே ஒழுங்குப் பிரச்சனையை அனுமதிக்க வேண்டுமென்று
எந்த விதியிலும் இல்லை.

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> : ஒழுங்குப் பிரச்சனை என்று
கேட்டால் அதற்கு அனுமதி அளிக்க வேண்டும். ஒழுங்குப்
பிரச்சனை எழுப்ப உரிமை இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : நீங்கள் ஒழுங்குப்
பிரச்சனை எழுப்புவதாகத் தோன்றவில்லை. வேண்டுமென்றே
'ஒழுங்குப் பிரச்னை, ஒழுங்குப் பிரச்னை' என்று தொடர்ந்து
சொல்லி, இந்த சபையின் நேரத்தை வீணடிக்க வேண்டுமென்ற
நோக்கத்தில் உங்களுடைய பேச்சு இருக்கிறது. தயவு செய்து
உட்காருங்கள்.

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> : என்னுடைய பேச்சுக்கு நீங்கள்
நோக்கம் கற்பிக்கிறீர்கள். நான் ஒழுங்குப் பிரச்சனை எழுப்பும்
போது, அதற்கு நோக்கம் கற்பிப்பது சரியல்ல. அதை நீங்கள
வாபஸ் வாங்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : நீங்கள் உட்காருங்
கள். உங்களுடைய ஒழுங்குப் பிரச்சனையை நான் அனுமதிக்க
வில்லை. திரு. அய்யாச்சாமி, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

<u>திரு. ரா. அய்யாச்சாமி</u> : தலைவரவர்களே, என் தொகுதி
ஏழை விவசாயிகள் நிறைந்த பகுதி. அதுமட்டுமல்ல ; அரிசன
மக்கள் நிறைந்த பகுதி. ஆகவே, அங்கே ஒரு கூட்டுறவு
ஸ்பின்னிங் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் ஆட்சியிலே என்
னுடைய தாராபுரம் தொகுதி புறக்கணிக்கப்பட்டது. அது
மட்டுமல்ல. இன்றைக்கு நிர்வாகத்திலே இருப்பவர்கள் லஞ்சம்
வாங்கினார்கள் என்று சொன்னால் அந்த லஞ்சத்திற்கு அடிப்
படையை வகுத்துக் கொடுத்தவர்களே காங்கிரஸ் காரர்கள்தான்
என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மேலும் 9 ஆண்டு
காலம் காங்கிரஸ்காரர்கள் தான் லஞ்சம் வாங்குவதற்கும் லஞ்சம்
பெறுவதற்கும் உடந்தையாக இருந்தார்கள் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

<u>திரு. துரை முத்துசாமி</u> : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காங்கிரஸ் ஆட்சி காலத்தில்
தான் லஞ்சம், ஊழல் என்று சொல்கிறார்கள். அவர்கள் அதற்கு
ஆதாரம் வைத்திருக்கிறார்களா ? ஆதாரத்தோடுதான் அப்படிப்
பேசுகிறார்களா ?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : இதில் பாயிண்ட்
ஆப் ஆர்டர் இல்லை. அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல
வில்லை. மொத்தமாக, பாலிசியைப் பற்றி கிரிட்டிசைஸ் பண்ணி
சொல்கிறார். அதற்கு ஆதாரம் இருக்க வேண்டுமென்ற அவ
சியம் இல்லை.

<u>திரு. ரா. அய்யாச்சாமி</u> : தாராபுரம் தொகுதி மிகவும்
பின்தங்கியப் பகுதியாக இருப்பதால் அங்கு பல தொழில்களை
ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்
கிறேன்.

கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக நம்முடைய புரட்சித்
தலைவர் அவர்கள் நல்ல பல திட்டங்களைத் தீட்டித் தந்திருக்கிறார்
கள். அந்த வகையிலே என்னுடைய தொகுதியில் ஒரு கூட்டுறவு
ஸ்பின்னிங் மில்ஸ் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

[திரு. ரா. அய்யாச்சாமி] [1978 மார்ச் 22

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் காட்டு இலாகா பூமி சுமார் 400 ஏக்கர் உள்ளது. அதில் செலவு ஆண்டுக்கு 7,000 ரூபாய் ; வரவு 1,000 ரூபாய்தான். அது விவசாயத்திற்கு ஏற்ற நிலமாக இருப்பதால் தலா 2 ஏக்கர் வீதம் அந்த பூமியை விவசாயிகளுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும், அரிசன மக்களுக்கு குடி நீர் திட்டம், வீட்டு வசதி திட்டம், கல்வித் திட்டம், தொழில் வளர்ச்சித் திட்டம் ஆகிய பல் வேறு திட்டங்களை நம் தமிழக அரசு செயல் படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இது வரையில் அங்கே எந்த அரசும் நல்ல திட்டங்களைச் செய்யவில்லை. தாராபுரத்திலிருந்து சங்கராபாளையம் போவதற்கு ஒரு ரோடு இருக்கிறது. அந்த ரோடு அமைக்கப்பட்டு 50 ஆண்டு இருக்கும். அது பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அப்படியும் அந்த ரோட்டை செப்பனிடவில்லை.

(பிற்பகல் 1-30.)

நானும் கிட்டத்தட்ட 8 மாத காலமாக இந்த ரோடு பற்றி பஞ்சாயத்து யூனியனில் எடுத்துச் சொல்லியும் இன்னும் சீரமைக்கப்படவில்லை. அதே நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசு இந்த ரோட்டை செப்பனிட உடனடியாக ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தாராபுரத்திலேயிருந்து பழனிக்குச் செல்லும் பாதையின் குறுக்கே அமராவதி ஆறு இருக்கின்றது. இந்த அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைந்திருக்கின்றது. இந்தப் பாலம் பழைய நிலையிலேயே உள்ளது. பஸ்கள் போகும்போது அது ஆட்டம் கொடுக்கின்றது. இந்தப் பாலத்தை உடனடியாக நம்முடைய தமிழக அரசு புதியதாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மைசூரிலிருந்து சாம்ராஜ்நகர், சத்தியமங்கலம் வழியாக பழனிக்குச் செல்வதற்கு ஒரு இரயில் போக்குவரத்து வசதி செய்கின்ற திட்டத்தை தமிழக அரசு மத்திய அரசிடம் சொல்லி அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்......

(திரு. ரகுமான்கான் ஏதோ சொல்ல விரும்பினர்.)

நான் சொல்கிறேன் சார். எங்களுக்கும் விதி தெரியும். தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் பேசுவது விதிக்கு உட்பட்டதல்ல. உங்களை இரண்டு முறை அனுமதித்து விட்டேன். உங்களை இனிமேல் அனுமதிக்க இயலாது. தயவு செய்து அமருங்கள்.

(8) அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 21-3-1978 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவுப்படி பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் :—

23—3—1978 வியாழக்கிழமை.	ஏற்கனவே அறிவிக்கப்பெற்றுள்ளவாறு நடைபெறும்.
24—3—1978 வெள்ளிக்கிழமை.	தூய வெள்ளிக் கிழமை—விடுமுறை
25—3—1978 சனிக்கிழமை.	கேள்வி நேரம் இல்லை. மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். 7. மாநில சட்ட மன்றம். 8. தேர்தல்கள்; 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள். தேவையிருப்பின், பேரவை மாலையிலும் கூடும்.
26—3—1978 ஞாயிற்றுக்கிழமை.	விடுமுறை.
27—3—1978 திங்கட்கிழமை. 28—3—1978 செவ்வாய்க்கிழமை.	ஏற்கனவே அறிவிக்கப்பெற்றுள்ளவாறு நடைபெறும்.
29—3—1978 புதன்கிழமை.	1. நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகள் மீது விவாதமும் அவற்றை நிறைவேற்றலும். 2. மற்ற அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வும் நிறைவேற்றலும்.

1978 மார்ச் 22]

30—3—1978 வியாழக்கிழமை. 31—3—1978 வெள்ளிக்கிழமை. 1—4—1978 சனிக்கிழமை.	..	அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வும்நிறைவேற்றலும், மற்றும்அரசினர் அலுவல்கள் ஏதேனும் இருப்பின்.
2—4—1978 ஞாயிற்றுக்கிழமை.	..	விடுமுறை.
3—4—1978 திங்கட்கிழமை. 4—4—1978 செவ்வாய்க்கிழமை.	..	அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வும், நிறைவேற்றலும் மற்றும் அரசினர் அலுவல்கள் ஏதேனும் இருப்பின்.
5—4—1978 புதன்கிழமை.	..	மாண்புமிகு நீதிபதி திரு. இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம்.

பேரவை வழக்கம் போல் காலை 9 மணி முதல் கூடும்.

இம்மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நாளையும் தொடரும். பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.35 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

317. வேளாண்மைத் துறையில் 2-3-1972 ஆம் தேதியன்று வெளியாகி, 26-4-1972 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II, பிரிவு 1, பக்கங்கள் 452-454-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II-1-1872/1972 ஆம் எண் அறிவிப்பில் (இது பின்னர் திருத்தப்பெற்றுள்ளது) திருத்தமொன்று செய்வது குறித்து, வேளாண்மைத் துறையின் 3-2-1978 ஆம் தேதியிடப்பெற்ற 166 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விலை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959] 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

318. சிம்லாவில் உள்ள இந்திய நிதித் துறையின் (மத்திய வருவாய்) 5-5-1925-ஆம் தேதியிடப்பெற்ற C-63, முத்திரைத் தாள்/25 ஆம் எண் அறிவிப்பில் வெளியானதும், தமிழ்நாட்டில்

1978 மார்ச் 22]

செயலில் உள்ளதுமான, 1925 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள், அறக்கட்டளைகள் துறையின் 24-11-1977 ஆம் தேதியிடப் பெற்ற 1936 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 2/1899) 75-A (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

319. தமிழ்நாடு கைத்திறப் பொருள் மேம்பாட்டு நிறுவனத்தின் (பூம்புகார்) 1974-75 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டு அறிக்கையும் தமிழ்நாடு அரசின் ஆய்வுரையும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

* வெட்டுத் தீர்மானங்கள் தனியே அனுப்பப் பெற்றுள்ளன.

இணைப்பு I.

[591ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 657க்கான விடையைக் காண்க].

பெயர் பட்டியல் விவரம்

சென்னை மாவட்டம்.

30' அளவைப் படகுகள்.

வரிசை எண்.	மீன்பிடி விசைப்படகு எண்.		மீன் விசைப் படகு வழங்கப்பட்ட மீனவர்க் குழுத் தலைவர்.		படகின் விலையில் 95சதவீதம் கடன் வழங்கப் பட்ட தொகை.
(1)	(2)		(3)		(4)
1	ஐபி.	229	டி, ராஜமாணிக்கம்	..	1,03,540.00
2	ஐபி.	196	எம். தாமோதரன்	..	1,11,670.00
3	ஐபி.	216	என். ராமகிருஷ்ணன்	..	95,737.25
4	ஐபி.	60	அப்துல் கபூர்கான்	..	83,975.00
5	ஐபி.	63	எஸ். எம். சதகதுல்லா		88,031.63
6	ஐபி.	240	என். முனியப்பன்	..	88,055.00
7	ஐபி.	247	எஸ். பாலு ..	..	88,935.00
8	ஐபி.	151	ஏ. கே. நக்கீரன்	..	1,11,670.00
9	ஐபி.	193	எம். நந்தகோபால்	..	1,11,670.00
10	ஐபி.	206	வி. ராஜு ..	..	1,02,565.00
11	ஐபி.	161	பி. ஜெயராமன் ..	..	1,11,670.00
12	ஐபி.	162	எஸ். அஞ்சப்பன்	..	1,02,565.00
13	ஐபி.	219	எம். பிச்சைக்கண்ணு	..	1,11,670.00
14	ஐபி.	166	எம். வி. கோபால்	..	1,07,060.00
			மொத்தம் 14	..	14,18,813.88

சென்னை மாவட்டம்— தொடர்ச்சி.

32' அளவைப் படகுகள்.

வரிசை எண். (1)	மீன்பிடி விசைப்படகு எண். (2)		மீன் விசைப் படகு வழங்கப்பட்ட மீனவர்க் குழுத் தலைவர். (3)	படகின் விலையில் 95 சதவீதம் கடன் வழங்கப் பட்ட தொகை (4) ரூ. பை.
1	எஸ்.டி.பி.	128	கே. சுப்பராமன் ..	1,61,360.00
2	,,	127	கே. ராமச்சந்திரன் ..	1,69,770.00
3	,,	130	ஏ. நற்குணம்	1,69,770.00
4	,,	104	பி. பரமசிவம் ..	1,77,265.00
5	,,	114	பி. குப்புசாமி	1,78,960.00
6	,,	123	வி. எக்ஸ் அந்தோணி .	1,69,770.00
7	,,	126	குட்டியாண்டி	1,78,960.00
8	,,	129	டி. சுதர்சன் ..	1,78,960.00
9	,,	146	டி. உதயகுமார் ..	1,64,830.00
10	,,	90	ஆர். பஞ்சநாதன் ..	1,22,161.40
11	,,	293	எம். தேவேந்திரன் ..	1,23,742.00
12	,,	144	கே. மணி	படகு இன்னும் பெறவில்லை.
			மொத்தம் 12 ..	17,95,548.40

செங்கல்பட்டு மாவட்டம்.

30' அளவைப் படகுகள்.

வரிசை எண். (1)	மீன்பிடி விசைப் படகு எண். (2)		மீன் விசைப் படகு வழங்கப்பட்ட மீனவர்க் குழுத் தலைவர். (3)	படகின் விலையில் 95 சதவீதம் கடன் வழங்கப் பட்ட தொகை. (4) ரூ. பை.
1	ஐபி.	242	ஆர். கோவிந்து ..	94,940.00
2	ஐபி.	223	பி. தாமோதரன் ..	1,03,540.00
3	ஐபி.	241	வி. தாண்டவமூர்த்தி ..	99,585.00
4	ஐபி.	154	கே. குமார்	1,02,565.00
5	ஐபி.	155	கே. அழகப்பன் ..	1,02,565.00
6	ஐபி.	156	வி. ராஜு	1,02,565.00
7	ஐபி.	220	எம். நாராயணமூர்த்தி	1,02,565.00
8	ஐபி.	71	எஸ். வெள்ளைச்சாமி	87,983.47
			மொத்தம் 8 ..	7,96,308.47

செங்கல்பட்டு மாவட்டம்— தொடர்ச்சி.

32 அடி அளவைப் படகுகள்.

வ. எண் (1)	மீன்பிடி விசைப் படகு எண். (2)		மீன் விசைப் படகு வழங்கப்பட்ட மீனவர்க் குழுத் தலைவர். (3)	படகின் விலையில் 95சதவீதம் கடன் வழங்கப் பட்ட தொகை (4) ரூ பை.
1	எஸ்.டி.பி.	96	எஸ். பழனிவேலு ..	1,77,265.00
2	,,	134	கே. முத்துகிருஷ்ணன் ..	1,68,300.00
3	,,	141	ஏ. தனபால்	1,59,110.00
4	,,	138	என். அருளப்ப கவுண்டர்	1,78,960.00
5	,,	106	பாண்டியன்	1,78,960.00
6	,,	132	ஜி. கலியபெருமாள் ..	1,78,960.00
7	,,	136	பி. சுப்பிரமணி ..	1,26,320.00
			மொத்தம் 7 ..	11,67,875.00

தென்னாற்காடு மாவட்டம்.

30 அடி அளவைப் படகுகள்.

1	ஐபி.	167	வி. கோவிந்த பிள்ளை ..	97,955.00
2	ஐபி.	159	எம். அய்யாசாமி ..	1,02,565.00
3	ஐபி.	157	எம். சுந்தரராஜன் ..	1,02,565.00
4	ஐபி.	163	எஸ். பெருமாள் ..	1,02,565.00
5	ஐபி.	222	எஸ். குப்புசாமி ..	1,03,540.00
6	ஐபி.	224	வி. முத்துகுமாரசாமி ..	1,03,540.00
7	ஐபி.	225	என். கிருஷ்ணன் ..	1,03,540.00
8	ஐபி.	226	எம். சத்தியமூர்த்தி ..	1,03,540.00
9	ஐபி.	228	கே. ஆறுமுகம்	1,03,540.00
10	ஐபி.	230	என். முருகேசன் ..	1,03,540.00
11	ஐபி.	238	பி. பால்ராஜ்	1,03,540.00
12	ஐபி.	237	வி. காளியப்பன் ..	99,357.04
13	ஐபி.	245	எம். கனகு	1,03,540.00
14	ஐபி.	212	பி. பெருமாள்	87,391.34
15	ஐபி.	195	வி. கோவிந்து	87,532.47
16	ஐபி.	86	பி. கோவிந்தசாமி ..	1,02,325.00
17	ஐபி.	160	ஈ. அருணாசலம் ..	1,02,565.00
18	ஐபி.	194	வி. கோவிந்தசாமி ..	98,610.00
19	ஐபி.	243	எஸ். ஆறுமுகம் ..	1,03,540.00
			மொத்தம் 19 ..	19,15,290.85

தென்னாற்காடு மாவட்டம்— தொடர்ச்சி.

32 அடி அளவைப் படகுகள்.

வ. எண்.	மீன்பிடி விசைப் படகு. எண்.		மீன்விசைப் படகு வழங்கப்பட்ட மீனவர்க் குழுத் தலைவர்.		படகின் விலையில் 95 சதவீதம் கடன் வழங்கப் பட்ட தொகை.
(1)	(2)		(3)		(4)
					ரூ. பை.
1	எஸ்.டி.பி.	124	வி. ரத்தினசாமி	..	1,66,480.00
2	,,	102	எம். ஜெயபாலன்	..	1,77,265.00
3	,,	125	எஸ். பாலகிருஷ்ணன்		1,78,960.00
4	,,	135	என். ஏழுமலை	..	1,78,960.00
5	,,	147	ஐ. சந்திரன் குரூஸ்	..	1,31,260.00
6	,,	93	எம். வைத்தியநாதன்	..	1,34,099.90
7	,,	95	பி. பாவாடை	...	1,31,653.02
8	,,	94	எம். சுப்பிரமணி	..	1,34,099.90
9	,,	142	என். வல்லாதன்	..	1,58,683.30
			மொத்தம் 9	..	13,91,461.12

தஞ்சாவூர் மாவட்டம்.

30 அடி அளவைப் படகுகள்.

1	ஐபி.	143	கே. நாமகோடி	..	86,180.00*
2	ஐபி.	144	பி. குப்புசாமி ..	..	86,180.00*
3	ஐபி.	145	ஏ. குப்புமுத்து	..	86,180.00*
4	ஐபி.	147	ஆர். நாராயணசாமி	..	86,180.00*
5	ஐபி.	148	கே. சந்திரன் ..	..	86,180.00*
6	ஐபி.	169	ஏ. சாமிக்கண்ணு	..	1,02,565.00
7	ஐபி.	168	எம். கலியபெருமாள்	..	1,02,565.00
8	ஐபி.	170	கே. ராஜாங்கம்	..	1,02,5650.0
9	ஐபி.	171	வி. எஸ். மாணிக்கம்		1,02,565.00
10	ஐபி.	173	எம். சிவபெருமாள்	..	1,02,565.00
11	ஐபி.	174	எம். கலியபெருமாள்	..	1,02,565.00
12	ஐபி.	179	எம். முனுசாமி ..	..	1,02,565.00
13	ஐபி.	177	எம். பஞ்சவர்ணம்	..	1,02,565.00
14	ஐபி.	181	என். ஆறுமுகம்	..	1,02,565.00
15	ஐபி.	182	என். கலியபெருமாள்	..	1,02,565.00
16	ஐபி.	175	எல். நடுகாட்டான்	..	1,02,565.00
17	ஐபி.	178	ஐ. அப்பரசு	..	1,02,565.00
18	ஐபி.	191	எம். கலியபெருமாள்	..	1,02,565.00
19	ஐபி.	186	கே. சந்திரசேகரன்	..	1,02,565.00

தஞ்சாவூர் மாவட்டம் —தொடர்ச்சி.

30 அடி அளவைப் படகுகள்—தொடர்ச்சி.

வ. எண்.	மீன்பிடி விசைப்படகு எண்.		மீன் விசைப் படகு வழங்கப்பட்ட மீனவர்க் குழுத்தலைவர்.		படகின் விலையில் 95 சதவீதம் கடன் வழங்கப்பட்ட தொகை.
					ரூ. பை.
(1)	(2)		(3)		(4)
20	ஐபி.	190	எம். மாணிக்கசாமி	..	1,02,565.00
21	ஐபி.	188	சி. சித்திரவேல்	..	1,02,565.00
22	ஐபி.	189	எஸ். செல்லையன்	..	1,02,565.00
23	ஐபி.	185	ஈ. சந்திரன்	..	1,02,565.00
24	ஐபி.	184	கே. சந்திரன்	..	1,02,565.00
25	ஐபி.	172	வி. சுப்பிரமணி	..	1,02,565.00
26	ஐபி.	180	எம். தம்பிராஜன்	..	1,02,565.00
27	ஐபி.	183	டி. குட்டியாண்டி	..	1,02,565.00
28	ஐபி.	176	வி. குஞ்சிப்பிள்ளை	..	1,02,565.00
29	ஐபி.	213	அஞ்சி. சப்பன்	..	86,180.00*
30	ஐபி.	214	வீரமுத்து	..	86,180.00*
31	ஐபி.	146	டி. சுப்பையன்	..	78,670.00*
32	ஐபி.	149	எஸ். டி. சுப்பையன் செட்டியார்.		78,670.00*
33	ஐபி.	150	கே. நடராஜன்	..	78,670.00*
34	ஐபி.	187	வி. பூவலி நாடார்	..	1.02,565.00
35	ஐபி.	44	எஸ். சுப்பையன்	..	88,935.00
36	ஐபி.	46	ஆர். லஷ்மணன்	..	88,935.00
37	ஐபி.	48	ஜி. செல்வராஜ்	..	88,935.00
38	ஐபி.	192	சதகதுல்லா	..	98,610.00
			மொத்தம் 38	..	36,66,245.00

32 அடி அளவைப் படகுகள்.

1	எஸ்.டி.பி	116	ஜி. தங்கராஜ்	..	1,69,770.00
2	,,	122	கே. கிருஷ்ணமூர்த்தி	..	1,77,265.00
3	,,	430	சி. சேகுமதிறு	..	1,16,526.35
			மொத்தம் 3	..	4,63,561.35

* 20- சதவீதத் திட்டத்தின் அடிப்படையில். — இத் தொகை வங்கி மூலம் மீனவர்க்குழுவுக்கு படகின் விலையில் 80 சதவீதம் வழங்கப்பட்டது. படகின் விலையில் மீதம் 20 சதவீதம் மீனவர் குழுவினர் செலுத்தியுள்ளனர். வங்கி வழங்கிய 80 சதவீதத் தொகைக்கான வட்டியை குழுவினரே கட்டுகின்றனர்.

[1978 மார்ச் 22

இராமநாதபுரம் மாவட்டம்.

30 அடி அளவைப் படகுகள்.

வ. எண்.	மீன்பிடி விசைப்படகு. எண்.		மீன் விசைப்படகு வழங்கப்பட்ட மீனவர்க் குழுத் தலைவர்.	படகின் விலையில் 95 சதவீதம் கடன் வழங்கப் பட்ட தொகை
(1)	(2)		(3)	(4)
				ரூ. பை.
1	ஐபி.	83	எம். எட்வர்ட் ..	76,357.00
2	ஐபி.	56	எஸ். முருகேசன் ..	88,008.11
3	ஐபி.	45	எஸ். முஹம்மத்கனி ..	88,458.31
4	ஐபி.	64	ஒய். காசிம் முகமது ..	87,609.94
			மொத்தம் 4 ..	2,40,433.36

32 அடி அளவைப் படகுகள்.

1	எஸ்.டி.பி.	117	எம். ராஜு ..	1,57,290.00
2	,,	120	எ. அருள் பெர்ணாண்டோ	1,62,230.00
3	,,	118	எ. இருதயராஜ் பெர்ணாண்டோ.	1,62,230.00
4	,,	121	பி. பங்கராஜ் ..	1.62,230.00
5	,,	133	என். செசுலியான் ..	1,68,300.00
6	,,	137	டி. சைமன் ஜெபமாலை தாசன்.	1,68,300.00
7	,,	19	எம். ஜெயபாலன் ..	1,12,794.07
8	,,	25	வி. மரியரோசரி ..	1,12,794.07
9	,,	99	பி. கறுப்பையா ..	1,62,230.00
10	,,	109	கே. எஸ். ஜெயராஜ் ..	1,59,110.00
11	,,	110	ஜே. சார்லஸ்பிரிமியர் ..	1,62,230.00
12	,,	131	என். குருஸ் பெர்ணாண்டோ	1,59,110.00
13	,,	145	எஸ். வேலுசாமி ..	96,107.00
14	,,	86	சந்தியாகு ஜெபமாலை	1,24,191.30
15	,,	82	லாஸர் பூபாலராயர் ..	1,24,689.76
			மொத்தம் 15 ..	21,93,836.20

1978 மார்ச் 22]

திருநெல்வேலி மாவட்டம்.

30 அடி அளவைப் படகுகள்.

வ. எண்	மீன் பிடி விசைப் படகு எண்.		மீன் விசைப் படகு வழங்கப்பட்ட மீனவர்க் குழுத் தலைவர்.	படகின் விலையில் 95 சதவீதம் கடன் வழங்கப் பட்ட தொகை.
(1)	(2)		(3)	(4)
				ரூ. பை.
1	ஐபி.	164	இ. அல்போன்ஸ்	1.11,670.00
2	ஐபி.	165	ஜே. பிளாரன்ஸ் வில்லவராயர்.	98,610.00
3	ஐபி.	197	டிபுர்டியன் பெர்ணாண்டோ	98,610.00
			மொத்தம் 3 ..	3,08,890.00

32 அடி அளவைப் படகுகள்.

1	எஸ்.டி.பி.	103	ஜே. செல்வராஜ் ..	1,69,795.00
2	,,	119	டி. துரைராஜ் ..	1,66,480.00
3	,,	140	ஜூலியன் வில்லவராயர்.	1,68,300.00
4	,,	101	எஸ். செந்தில் பெர்ணாண்டோ.	1,71,420.00
5	,,	105	எ. ஜெயராஜ் ..	1,57,290.00
6	,,	97	கே. எஸ். சிலுவை கிறிஸ்டோபர் பெர்ணாண்டோ.	1,77,265.00
7	,,	98	கே. எஸ். ஊர்துசாமி பெர்ணாண்டோ.	1,77,265.00
8	,,	107	எ. அலெக்ஸ் சமாதானம்.	1,78,960.00
			மொத்தம் 8 ..	13,66,775.00

[1978 மார்ச் 22

கன்னியாகுமரி மாவட்டம்.

30 அடி அளவைப் படகுகள்.

வ. எண்.	மீன்பிடி விசைப்படகு.		மீன் விசைப் படகு வழங்கப்பட்ட மீனவர்க் குழுத் தலைவர்.	படகின்விலையில் 95 சதவீத கடன் வழங்கப் பட்ட தொகை.
(1)	(2)		(3)	(4)
				ரூ. பை.
1	ஐபி.	202	கே. பர்னபாஸ் ..	1,07,060.00
2	ஐபி.	203	எம். வியாகப்பன் ..	1,07,060,00
3	ஐபி.	204	ஜி. லூயிஸ் ..	1,07,060.00
4	ஐபி.	208	ஆர். பங்கராஜ் ..	1,07,060.00
5	ஐபி.	210	ஜே. லதீஸ்லாஸ் ..	1,11,670.00
6	ஐபி.	211	எஸ். மானுவேல் ..	1,11,670.00
7	ஐபி.	215	எ. கர்லூஸ் ..	1,12,730.00
8	ஐபி.	152	ஜான் சூசை ..	1.02,565.00
9	ஐபி.	153	கே. அகஸ்டின் பெர்ணண்டோ.	1,02,565.00
10	ஐபி.	218	எம். கமலியாஸ் ..	1,12,730,00
11	ஐபி.	227	எஸ். தாசன் ..	1,03,540.00
12	ஐபி.	231	எஸ். சூசை நாயகம் ..	1.12,730.00
13	ஐபி.	234	எ. கான்சல் ..	1,12,730.00
14	ஐபி.	209	ஜே. லூர்க்காஸ் ..	98,610.00
15	ஐபி.	244	எஸ். ஸ்டனிஸ்லாஸ் ..	1,11,410.00
16	ஐபி.	235	ஜே. பீட்டர் ..	98,895.00
17	ஐபி.	236	ஏ. வென்செஸ்லாஸ்	98,895.00
18	ஐபி.	239	எஸ். எம். துரைராஜ்	1,08,085.00
19	ஐபி.	246	ஜே. பெர்க்கமன்ஸ் ..	1.08,085.00
20	ஐபி.	108	எ. ஜோசப் ..	1,01,995.00

1978 மார்ச் 22]

கன்னியாகுமரி மாவட்டம்—தொடர்ச்சி.

30 அடி அளவைப் படகுகள்—தொடர்ச்சி.

(1)	(2)		(3)	(4)
				ரூ. பை.
21	ஐபி.	102	எ. எட்வர்ட் பெர்ணண்டோ.	92,679.00
22	ஐபி.	80	எஸ். அந்தோணி பிள்ளை	77,483.93
23	ஐபி.	201	பி. அந்தோணி அடிமை	77,399.06
24	ஐபி.	217	வி. லீலியன் ..	1,03,540.00
25	ஐபி.	232	எஸ். யாதர்கோஸ் ..	1,12,730.00
26	ஐபி.	233	எஸ். எஸ். சோரீஸ் ..	1,12,730.00
27	ஐபி.	49	எ. கிரிஹரி ..	88,935.00
28	ஐபி.	57	எஸ். வேலப்பன் ..	88,816.36
29	ஐபி.	58	எம். கிருஸ்துதாசன் ..	889,35.00
30	ஐபி.	61	சவுரிமுத்து ..	96,983.00
31	ஐபி.	65	டி. எ. சேவியர் ..	96,983.00
32	ஐபி.	200	எஸ். ஜோசபாத் ..	96,983.00
33	ஐபி.	207	சி. வின்செண்ட் ..	88,935.00
34	ஐபி.	205	பி. அந்தோணி பிள்ளை ..	1,11,670.00
35	ஐபி.	158	வி. தாஸ்நாவிஸ்	1,02,565.00
36	ஐபி.	221	கே. சேசு	1,03,540.00
37	ஐபி.	198	டி. லிகோரி	1,07,060.00
38	ஐபி.	199	எ. ஞானபிரகாசம்	1,07,060.00
			மொத்தம் 38 ..	38,92,172.35

32 அடி அளவைப் படகுகள்.

(1)	(2)		(3)	(4) ரூ. பை.
1	எஸ்.டி.பி.	111	டி. மெல்கியஸ் ..	1,71,420.00
2	,,	113	ஜேசுமலை அடிமை	1,71,420.00
3	,,	139	எஸ். பானிபிச்சை ..	1,68,300.00
4	,,	32	ஆரோக்கியதாஸ் லியோன்	1,12,794.07
5	,,	24	வி. ஆம்ப்ரோஸ் ..	1,30,421.39
6	,,	112	எ. புஷ்பநாயகம் ..	1,68,300.00
7	,,	108	எம். கொன்சீஸ் ..	1,45,800.00
8	,,	100	சி. சேசுராஜன் ..	1,77,265.00
9	,,	115	எம். ராயப்பன் பெர்ணன்டோ.	1,78,960.00
10	,,	143	ஜே. ஜெரோன்ராஜ்	1,64,830.00
11	,,	81	சி. சிலுவை பிள்ளை ..	1,34,368.00
12	,,	76	பி. குரூஸ் பிதியலிஸ்	1,31,790.00
13	,,	92	எம். லூர்தயன் ..	1,31,456.35
14	,,	83	எ. நிகோலஸ் ..	1,30,095.31
15	,,	28	எம். சவரியபிச்சை ..	1,32,972.54
16	,,	78	எ. மைக்கேல் ..	1,32,972.54
17	,,	80	எஸ். ராஜய்யா ..	1,32,972.54
18	,,	91	டி. சூசை மரியன் ..	1,30,083.05
19	,,	85	பெர்ணண்டஸ் ..	1,36,739.00
20	,,	84	எஸ். ஜெரோம் ..	1,31,790.00
21	,,	89	எஸ். அந்தோணிப்பிள்ளை	1,31,658.80
22	,,	26	கே. ரோனிமஸ் ..	1,31,790.00
23	,,	79	சோரிஸ் மைக்கேல் ..	1,31,790.00
24	,,	29	எ. சிலுவை பிள்ளை	1,32,140.76
			மொத்தம் 24 ..	34,42,129.35

சுருக்கம்.

மாவட்டம்.	1976-77-ல் தவணைக் கொள்முதல் முறையில் கடனாக வழங்கப்பட்ட மீன்பிடி விசைப் படகுகள். 30' அளவை படகுகள்.	32' அளவை படகுகள்.	கடனாக வழங்கப்பட்ட தொகை. ரூ. பை.
சென்னை	14	..	14,18,813.88
	..	12	17,95,548.40
	மொத்தம் 26	..	32,14,362.28
செங்கல்பட்டு ..	8	..	7,96,308.47
	..	7	11,67,875.00
	மொத்தம் 15	..	19,64,183.47
தென்னாற்காடு ..	19	..	19,15,290.85
	..	9	13,91,461.12
	மொத்தம் 28	..	33,06,751.97
தஞ்சை	38	..	36,66,245.00
	..	3	4,63,561.35
	மொத்தம் 41	..	41,29,806.35

சுருக்கம்—தொடர்ச்சி.

மாவட்டம்.	1976-77-ல் தவணைக் கொள்முதல் முறையில் கடனுக வழங்கப்பட்ட மீன்பிடி விசைப் படகுகள். 30' அளவை படகுகள்.	32' அளவை படகுகள்.	கடனுக வழங்கப் பட்ட தொகை. ரூ. பை.
இராமநாதபுரம்	4	..	3,40,433.36
	..	15	21,93,836.20
	மொத்தம் 19	..	25,34,269.56
திருநெல்வேலி ..	3	..	3,08,890.00
	..	8	13,66,775.00
	மொத்தம் 11	..	16,75,665.00
கன்னியாகுமரி ..	38	..	38,92,172.35
	..	24	34,42,129.35
	மொத்தம் 62	..	73,34,301.70
மொத்தம் ..	124	78	2,41,59,340.33
	மொத்தம் 202	..	2,41,59,340.33

280 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

தொழில்துறை கொள்கை விளக்கக் குறிப்பு

தொழில் வளர்ச்சிக் கொள்கை

கடந்த இருபது ஆண்டுகளாக இந்நாட்டில் தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை, 1956-ம் ஆண்டு தொழில் கொள்கைத் தீர்மானத்தை ஒட்டி அமைந்துள்ளது. இந்தக் கொள்கைத் தீர்மானத்தில் பல கூறுகள் இன்றுகூட செல்திறன் உள்ளவையாக இருந்தபோதிலும், இக்கொள்கை, சமூகநீதி, பொருளாதார வளம் மக்களிடையே பரவலாக்குதல் போன்ற நோக்கங்களை முழுவதும் எய்தவில்லை என்று உணரப்பட்டது. தொழிற்சாலைகளை பெருமளவில் சிற்றூர்களிலும், சிறு நகரங்களில் பரவலாக அமைப்பதற்கும் பெருவாரியான மக்களின் கையில் செல்வம் போய்ச் சேருவதற்கும் வழிகோலும் நோக்கத்தோடு அண்மையில் மத்திய அரசு புதிய தொழில் கொள்கையை அறிவித்தது. குடிசைத் தொழில், சிறுதொழில், கிராமத் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதே இப்புதிய கொள்கையின் தலையாய நோக்கமாகும். மாநில அரசின் தொழிற்கொள்கையும் மத்திய அரசின் கருத்துக்களோடு பொதுவாக ஒத்திருக்கின்றது. முன்னிலும் அதிகமான பொருட்களை உற்பத்தி செய்வதை சிறுதொழில், குடிசைத் தொழில், கிராமத் தொழில் துறைக்கு ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரிவுரை செய்யப்பட்டது. மத்திய அரசு, அண்மையில் மொத்தம் 504 உற்பத்திப் பொருட்களை சிறு தொழில், கிராமத் தொழில், குடிசைத் தொழில் துறைக்கு ஒதுக்கும் தனது கொள்கையை அறிவித்தபோது, தமிழ்நாடு அரசின் பரிவுரைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறு தொழில், கிராமத் தொழில் துறைகள் வளர்ச்சி மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகையில், பெரிய தொழில்கள் வளர்ச்சியைப் புறக்கணித்துவிட முடியாது. பெரிய தொழில்கள் சிறிய தொழில்களுக்குத் துணைத் தொழில்கள் (ancillaries) என்ற முறையில் ஆதரவு தரமுடியும்; மேலும் அவை அடிப்படைப் பொருட்கள், தொழிற்சாலை கச்சாப் பொருட்கள், மூலப் பொருட்கள், உயர்தொழில் நுட்பம் வாய்ந்த பொருட்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து உற்பத்தி செய்து சிறு தொழில்கள் அவற்றைப் பயன்படுத்தவும் உதவுகின்றன.

பெரும் நகர்களில் மேலும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படுவதை தடுப்பதற்கும், தொழிற்சாலைகளை மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக ஏற்படுத்த இயலுவதற்கும் வழிவகுக்கும் பொருட்டு, 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாகவுள்ள பெருநகர்களில் தொழிற்சாலைகளைப் புதிதாக ஏற்படுத்துவதற்கு உரிமங்கள்வழங்கலாகாது என்றும் மத்திய அரசு தீர்மானித்துள்ளது. பல்வேறு கட்டுப்பாடுகளையும் கடுமையான நடைமுறைகளையும் தளர்த்தும் நோக்கோடு, தற்போதுள்ள நடைமுறைகளை எளிதாக்குவதற்கும், உரிமங்கள் வழங்குவதிலுள்ள இடர்பாடுகளை நீக்குவதற்கும், ஏற்றுமதி, இறக்குமதி கம்பெனி விவகாரங்கள் ஆகியவை குறித்தும் கருத்துரை வழங்க பல குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது. உரிமம் வழங்கும் துறைகளையும், நிதி வழங்கும் நிறுவனங்களையும் சிறந்த முறையில் ஒருங்கிணைத்தல், குறிப்பிட்ட காலக் கடன்களை வழங்க அரசு நிதிவழங்கு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரங்களை அளித்தல், உரிமங்களையும், அனுமதிக் கடிதங்களையும் தொடர்ந்து ஆய்வு செய்தல், உரிமம் வழங்கப்படவிருக்கும் நிறுவனத்தின் திறனை மதிப்பிடுவதில் வங்கிகளும், நிதிவழங்கு நிறுவனங்களும் இணைந்து செயல்படுதல், சிறுதொழில்களுக்கு விற்பனை வசதி உதவியைச் செய்து கொடுக்கும் மாநில அரசின் கழகங்களை சப்ளைஸ்-டிஸ்போஸல்ஸ் தலைமை இயக்குநர் அலுவலகம் தாமாகவே பதிவு செய்து கொள்ளுதல் ஆகியவை குறித்து இந்த அரசு கருத்துரை வழங்கியுள்ளது. ஏற்றுமதி-இறக்குமதி பற்றிய விதிமுறைகள் தளர்த்தப்பட்டு சிறுதொழில்கள் மாவட்ட அளவிலும், பெரிய தொழில்கள் மாநில அளவிலும் வேண்டிய அனுமதிகள் பெற ஏற்ற முறையில் விதிமுறைகளைத் திருத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு கருத்துரை வழங்கியுள்ளது. பெருவாரியான மக்களுக்குச் சுய வேலை வாய்ப்புக்கான ஆதாயந்தரத்தக்க வழிகளுக்கு வகை செய்யும் சிறுதொழில்களும், கிராமத் தொழில்களும் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. 6,400-க்கு மேற்பட்ட சிறு கைத்தொழில்களும், 8,600-க்கு மேற்பட்ட சொந்தத் தொழில் நடத்துவோரும் ஜுலை 77 முதல் டிசம்பர் முடிய உள்ள 6 மாத காலத்தில் வணிக வங்கிகளின் உதவி பெற்றனர். மொத்தம் 27 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட இந்த உதவியினால் 49,000 பேர்களுக்கு மேல் வேலை வாய்ப்பு பெறுவார்கள் என்று நம்பப்படுகின்றது.

சிறுதொழில் துறையில் தயாரிக்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பட்டியலில் முன்பு உள்ள சுமார் 180 இனங்களின் எண்ணிக்கையை 504 ஆக இந்திய அரசு உயர்த்தியுள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள கூடுதல் இனங்களை உற்பத்தி செய்யக்கூடிய முறைகள் குறித்து ஆய்வு செய்யவும், அத்தொழில்களைத் தொடங்குவதில் அக்கறை காட்டும் தொழில் முனைவர்களுக்கு உதவி புரிவதற்காக திட்ட விவரங்களைத் தயாரிக்கவும், தொழில் வணிகத் துறையும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வர். சிறு தொழில் தொடங்குவோருக்கு தக்க ஆலோசனைகள் கூறி அவர்கள் வாங்கவேண்டிய இயந்திரங்கள், விற்பனை வசதி பற்றிய விவரங்கள் ஆகியவற்றை எடுத்துரைத்து, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்றுத்தருவது போன்ற எல்லா வசதிகளையும் ஒருங்கிணைத்து செயல்படும் நோக்கத்துடன் மாவட்டங்கள் தோறும் மாவட்ட தொழில் மையங்களை அமைக்க எண்ணியுள்ளோம். வரும் ஆண்டில் செங்கற்பட்டு, தென்னாற்காடு, தருமபுரி, சேலம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இவை அமைக்கப்படும். சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வணிகத்துறை, கதர் கிராமத் தொழில் வாரியம் போன்ற அமைப்புகளின் அலுவலர்களை ஒரே இடத்தில்கொண்டதாக இந்தமையங்கள் உருவாக்கப்படும்.

தொழில் துறையில், தொழிற்சாலையை உருவாக்குவது, மேம்படுத்துவது, அதற்கு வேண்டிய நிதிக்கு வகை செய்வது, அடிப்படைத்தேவைகளை மேம்படுத்துவது ஆகியவையே அரசின் முக்கியமான பணிகளாகும். இத்தகைய நோக்கங்களை எய்துவதற்கு அரசுக்குச் சொந்தமான தொழில் மேம்பாட்டு அமைப்புகள் பல அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அமைப்புகளில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மிகவும் முக்கியமான ஒன்றாகும். சிறு தொழில் வளர்ச்சிக்கான எல்லா உதவிகளையும் இது அளிக்கிறது. மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டி.ஐ.ஐ.சி.) சிறு தொழில் திட்டங்களுக்கும், நடுத்தரத் தொழில் திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்கும் நிறுவனமாகும். தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) நடுத்தர, பெருந்தொழில் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதோடு அடிப்படைத் தேவைகளை உருவாக்கி திட்டங்களை நிறைவேற்றுவதில் எல்லா உதவியையும் அளிக்கிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத் துறை நிறுவனங்களை நிர்வகிப்பதுடன் கூட்டுத்துறை நிறுவனங்களையும் ஊக்குவிக்கிறது.

[1978 மார்ச் 22

1975ஆம் ஆண்டு தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் (அடிப்படை ஆண்டு 1970-100) 137·66 ஆக இருந்தது. இது 1977 செப்டம்பரில் 142·9 ஆக (தற்காலிகமானது) இருந்தது.

கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் பதிவு செய்யப்பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கையையும், அத்தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் கீழே உள்ள விவர அட்டவணை காட்டும்:—

ஆண்டு.	தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.	தொழிலாளர்களின் எண்ணிக்கை.
1973	6,816	4,83,000
1974	6,985	4,98,804
1975	7,408	4,99,47[illegible]
1976	8,196	5,04,8[illegible]
1977	8,508	5,23,[illegible]

தொழில்களின் வளர்ச்சி பெரும்பாலும் மின் உற்பத்தி வளர்ச்சியைச் சார்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் தொழிற்சாலைகள் பயன்படுத்திய மின் சக்தியின் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளது:—

ஆண்டு.	மில்லியன் யூனிட்டுகள்

1978 மார்ச் 22]

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் பதிவு செய்யப் பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையிலிருந்து தெரிய வரலாம் :—

ஆண்டு.	நிறுவனங்களின் எண்ணிக்கை.		அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம். (ரூபாய் இலட்சத்தில்.)	
	அரசுத் துறை.	தனியார் துறை.	அரசுத் துறை.	தனியார் துறை.
1972-73	20	166	1,381	11,616
1973-74	37	210	3,342	1,926
1974-75	32	268	3,599	3,706
1975-76	29	184	2,748	1,808
1976-77	13	173	691	1,578
1977-78	12	145	533	1,152

தொழில் முதலீடுகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் மூலம் நடப்பாண்டில் சிறு தொழில்கள் பெருமளவில் பயனடைந்தன. 1976-77-ல் 156 சிறு தொழில்களே பயனடைந்து ரூ. 38·83 இலட்சம் பெற்றன. ஆனால் 1977-78-ல் 233 சிறு தொழில்களுக்கு ரூ. 57·34 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் செயலாக விவரங்கள் இணைப்பு 9-ல் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் 1977-78-ல் ரூ. 99·08 இலட்சம் விற்பனை வரிக்கடனாக 18 தொழில்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் முந்தைய ஆண்டில் ரூ. 79.44 இலட்சம்தான் விற்பனைவரிக் கடனாக 15 தொழில்களுக்கு வழங்கப்பட்டது. இத்தகைய தொழில் வளர்ச்சி 1978-79-லும் தொடரும் என்று கருதப்படுகிறது. விற்பனை வரிக்கடன் திட்டத்தினை விரிவுபடுத்த சில மாற்றங்களை செய்யவும் அரசு பரிசீலித்து வருகிறது.

[1978 மார்ச் 22

1975ஆம் ஆண்டு தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் (அடிப்படை ஆண்டு 1970-100) 137·66 ஆக இருந்தது. இது 1977 செப்டம்பரில் 142·9 ஆக (தற்காலிகமானது) இருந்தது.

கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் பதிவு செய்யப்பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கையையும், அத்தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் கீழே உள்ள விவர அட்டவணை காட்டும்:—

ஆண்டு.	தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.	தொழிலாளர்களின் எண்ணிக்கை.
1973	6,816	4,53,000
1974	6,985	4,98,804
1975	7,408	4,99,672
1976	8,196	5,04,899
1977	8,508	5,23,233

தொழில்களின் வளர்ச்சி பெரும்பாலும் மின் உற்பத்தி வளர்ச்சியைச் சார்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் தொழிற்சாலைகள் பயன்படுத்திய மின் சக்தியின் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளது:—

ஆண்டு.	மில்லியன் யூனிட்டுகள்.
1972-73	2,463.469
1973-74	2,338.625
1974-75	2,402.284
1975-76	3,059.252
1976-77	3,051.354

1978 மார்ச் 22]

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் பதிவு செய்யப் பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையிலிருந்து தெரிய வரலாம் :—

ஆண்டு.	நிறுவனங்களின் எண்ணிக்கை.		அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம். (ரூபாய் இலட்சத்தில்.)	
	அரசுத் துறை.	தனியார் துறை.	அரசுத் துறை.	தனியார் துறை.
1972-73	20	166	1,381	11,616
1973-74	37	210	3,342	1,926
1974-75	32	268	3,599	3,706
1975-76	29	184	2,748	1,808
1976-77	13	173	691	1,578
1977-78	12	145	533	1,152

தொழில் முதலீடுகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் மூலம் நடப்பாண்டில் சிறு தொழில்கள் பெருமளவில் பயனடைந்தன. 1976-77-ல் 156 சிறு தொழில்களே பயனடைந்து ரூ. 38·83 இலட்சம் பெற்றன. ஆனல் 1977-78—ல் 233 சிறு தொழில்களுக்கு ரூ. 57·34 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் செயலாக விவரங்கள் இணைப்பு9-ல் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் 1977-78-ல் ரூ. 99·08 இலட்சம் விற்பனை வரிக்கடனுக 18 தொழில்களுக்கு வழங்கப்பட்டது. ஆனல் முந்தைய ஆண்டில் ரூ. 79.44 இலட்சம்தான் விற்பனைவரிக் கடனுக 15 தொழில் களுக்கு வழங்கப்பட்டது. இத்தகைய தொழில் வளர்ச்சி 1978-79-லும் தொடரும் என்று கருதப்படுகிறது. விற்பனை வரிக்கடன் திட்டத்தினை விரிவுபடுத்த சில மாற்றங்களை செய்யவும் அரசு பரிசீலித்து வருகிறது.

[1978 மார்ச் 22

தொழில்-வணிக இயக்குநரகப் பணிகள்

பொதுவாக தொழில்களேயும் குறிப்பாக, சிறு தொழில்
களேயும் வளர்ப்பதற்கான அரசுத் திட்டங்களேத் தயாரித்துச்
செயல்படுத்துவதற்கு-தொழில் வணிக மாநில இயக்குநர்
அலுவலகம் முகவரமைப்பாகச் செய்யப்பட்டுள்ளது. மத்திய
அரசு, மாநில அரசு, வங்கிகள், ஏனைய முகவரமைப்புகள்
ஆகியவற்றிலிருந்து நிதி உதவி, ஏனைய உதவிகள் ஆகிய
வற்றை சிறு தொழில்கள் பெருவதற்கேற்ப, அவற்றைப்
பதிவு செய்தல், தொழில் நுட்பத் தகவல் அளித்தல், நிதி
உதவி, பயிற்சி, பழுதுபார்க்கும் வசதிகள் ஆகியவற்றை
தனது பல்வேறு பிரிவுகள் மூலம் அளித்தல், தொழில்களேத்
தொடங்குவதற்கான திட்ட அறிக்கைகளேத் தயாரித்தல்,
தொழில் கூட்டுறவுச் சங்கங்களே அமைத்தல், அத்தகைய
தொழிற் கூட்டுறவுகளுக்கு நிதிஉதவி, அங்காடி வசதி, ஏனைய
வசதிகள் ஆகியவற்றை அளித்தல், வெளிநாடுகளிலிருந்து
இயந்திரங்களேயும் மூலப் பொருட்களேயும் இறக்குமதி
செய்ய " இன்றியமையாமை சான்றிதழ் " வழங்குதல்
மாநிலத்தின் கனிவளத்தை ஆய்வு செய்தல், மாநிலத்தில்,
பெரிய உப்புத் தொழிற்சாலேகளே ஏற்படுத்துவதற்காக
உப்பு—அதனேச் சார்ந்த பொருட்களுக்கான தொடக்க ஆய்வு
களே நடத்தல், கிராமப் பகுதிகளில் சிறு தொழில்களே
வளர்ச்சியடையச் செய்வதற்காக மத்திய அரசு பொறுப்
பேற்கும் கிராம தொழில் திட்டத்தைச் செயல்படுத்துதல்
முதலியவற்றை தொழில்—வணிக மாநில இயக்குநர்
அலுவலகம் கவனித்து வருகிறது.

தொழில் நுட்பத் தகவல் வழங்கும் பணி

2. தொழிலதிபர்களுக்கும், தொழில் முனேவர்களுக்கும்
தொழில் நுட்ப நூலகங்கள் மூலம் தகவல் வழங்குவதற்காக,
நூலகத்துடன் கூடிய தொழில் நுட்பப்
பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. கிண்டியிலுள்ள தொழில்
நுட்பத் தகவல் வழங்கும் பிரிவில், தேவையான புத்தகங்கள்
அடங்கிய நூலகம் ஒன்றும், நூல் வெளியீடு பிரிவு ஒன்றும்,
மொழி பெயர்ப்புப் பிரிவு ஒன்றும், தொழில் நுட்பத்
திரைப்படங்களேத் திரையிடுவதற்கும், கூட்டங்கள்
நடத்துவதற்கும் அரங்கு ஒன்றும் உள்ளன. கிண்டி,
தொழில் நுட்பத் தகவல் வழங்கும் பிரிவின் துணேப்பிரிவாக
செய்திச் சுருள் பிரிவு ஒன்றும் நிலேயான பொருட்காட்சி

1978 மார்ச் 22]

ஒன்றும் இயங்கி வருகின்றன. மதுரை, பேட்டை, அம்பத்
தூர், காட்பாடி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம்
ஆகிய ஊர்களிலுள்ள தொழில் நுட்பத் தகவல் வழங்கும்
பிரிவுகள், அவற்றோடு இணேந்துள்ள நூலகங்கள் மூலம்,
தொழிற்பேட்டைகளிலும் அவற்றைச் சுற்றிலும் உள்ள
தொழிலதிபர்கள், தொழில் முனேவர்கள் ஆகியோருக்கு மேற்
சொன்ன அதே வசதிகளேச் செய்து கொடுக்கின்றன. இப்
பிரிவுகள் அனேத்திலும், நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும்
தொழில் நுட்பம் குறித்து வெளியிடப்பட்ட வெளியீடுகள்
உள்ளன. மேலும் இந் நூலகங்களில் 'சிப்காட்' 'சிட்கோ'
போன்ற அரசு நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்த
பத்திரிக்கைகளும் சிறு வெளியீடுகளும், தொழில் முனேவர்களுக்
கான திட்ட அமைப்பு, செய்தி அறிவிப்பு ஆகியவைகளும்
உள்ளன.

தொழில் நுட்பப் பயிற்சி நிலேயம், கிண்டி.

3. பொறியியலில் பட்டமும், தகுதிப்பட்டயமும் பெற்றவர்
களுக்கும், தொழில் பயிற்சி நிலேயங்களில் பயிற்சி பெற்றவர்
களுக்கும் சிறப்புப் பயிற்சியை இந் நிலேயம் அளிக்கிறது.
வார்ப்புரு வடிவமைப்பு, அச்சுவார்ப்பு, கருவிகள் செய்தல்
உலேக்களத்தில் உருக்கைக் காய்ச்சி அடித்தல், இயந்திரங்களே
இயக்குதல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பட்ட
தாரிகளுக்கும், தகுதிப் பட்டயதாரர்களுக்கும் முறையே
திங்கள் ஒன்றுக்கு 200 ரூபாயும், 75 ரூபாயும் பயிற்சி உதவித்
தொகை அளிக்கப்படுகிறது. பட்டதாரிகளுக்கும், தகுதிப்பட்
டயதாரர்களுக்கும் இப்பயிற்சிக் கால அளவு ஒவ்வொரு
தொகுதியினருக்கும் 12 மாதங்களாகும்; தொழில் பயிற்சிநிலேய
சான்றிதழ்தாரர்களுக்கு 18 மாதங்களாகும். புதிதாக குளிர்
பதனம், சீர்வளிபொறியியல் பாடமுறை 15 மாணவர்களேக்
கொண்டு 1976ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் தொடங்
கப்பட்டது. மின் அணுவியல் கருவிகள் தயாரிப்பு பாடமுறை
1977ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் தொடங்கப்பட்டது.
1977–78 ஆம் ஆண்டில் பல்வேறு தொழில்களில் மொத்தம்
90 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

கருவிகள் வார்ப்புரு தயாரிப்பு பயிற்சி நிலேயம், திண்டுக்கல்.

4. பல்வேறு பொறியியல் பிரிவுகளுக்குத் தேவைப்படும்
கருவிகள், வார்ப்புக்களே, குறிப்பாக, பூட்டுக்களே வடிவமைத்
துத் தயாரிப்பதில், ஒவ்வோர் ஆண்டும் மூன்று

தொகுதியினருக்கு தொகுதி ஒன்றில் 22 மாணவர்களுக்கு புத்தகக் கல்வி, செய்முறைப் பயிற்சி ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சியை இந்நிலையம் அளித்து வருகிறது. பயிற்சிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். இப்பயிற்சி நிலையத்தில் சேருவதற்குத் தேவையான குறைந்த அளவு கல்வித் தகுதி பள்ளியிறுதித் தோச்சியாகும். இதுவரையில் 189 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

கருமார், தச்சர் தொழிற்பிரிவு, அரக்கோணம்.

5. இத் தொழிற் பிரிவு அரக்கோணத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கருமார், தச்சுத் தொழிலில் பயிற்சி அளிப்பதோடு பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வசதிகளையும் அளிக்கிறது.

மின்சார—மின் அணுவியல் பிரிவு.

6. மின்சார, மின் அணுவியல் தொழில்களின் வளர்ச்சியோடு தொடர்புடைய நடவடிக்கைகள் அனைத்தும் இப்பிரிவில் கவனிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவு, 1972 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. மிகு நேர்த்தியான பொருட்களைத் தயாரிக்க சிறந்த தகுதி பெற்ற விஞ்ஞானிகளும், பொறியாளர்களும் சிறிய தொழிற்பிரிவுகளில் தயாரிக்க இப்பிரிவு தக்க ஆலோசனை வழங்கி உதவி வருகின்றது.

7. **சோதனையிடுவதற்கான வசதிகள்.**— (அ) காக்கலூரில் அமைக்கப்பட்டுள்ள மத்திய மின்சார ஆய்வுக்கூடம், மின்சாரப் பொருட்கள், இணைபொருட்கள், துணைப் பொருட்கள், துணைமுறைகள்ஆகியவற்றை ''தயாரித்தபிறகு'' சோதனையிடு வசதிகளைச் செய்துகொடுக்கிறது. சோதனைச்சான்றிதழ்களை வழங்குவதற்காக இந்த ஆய்வுக்கூடம் இந்திய தர நிர்ணய நிறுவனத்தாலும், ரயில்வேயாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மின் விசிறிகளைச் சோதனையிடும் அறைகளைக் கொண்ட இது இந்நாட்டிலுள்ள சோதனையிடு ஆய்வுக்கூடங்களில் சிறந்த ஒன்றாகும். 1977–78ஆம் ஆண்டில் 30-11-1977 ஆம் நாள் வரையில் 318 மாதிரிகள் முழுவதும் சோதனையிடப்பட்டு தேவையான சோதனையிடு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவற்றின்மூலம் சோதனையிடு கட்டணமாக ரூபாய் 32,488 வருவாய் கிடைத்தது.

(இ) மின்அணுவியல் தொழிற்பிரிவுகளுக்கான சோதனையிடு வசதிகளுடன் கூடிய சோதனைச் சான்றிதழ்—உற்பத்தி வளர்ச்சி மத்திய ஆய்வுக்கூடம் ஒன்று அடையாறு மின் அணுவியல் கருவிகள் தொழிற்பேட்டையில் உள்ளது. சோதனையிடு சிறப்புக் கருவிகளை வாங்குவதற்காக 15·91 இலட்சம் ரூபாயை மத்திய அரசைச் சேர்ந்த மின் அணுவியல் துறை வழங்கியுள்ளது.

மின்சார மின்னணுவியல் தொழில் குறித்த புள்ளி விவரங்கள் தொகுப்பு நிலையம்.

8. இம் மாநிலத்திலுள்ள மின்சார, மின்னணுவியல், கருவிகள் தயாரிப்புத் தொழில்கள் குறித்த தகவலைச் சேகரிப்பதற்கான புள்ளி விவரத்தொகுப்பு நிலையம் ஒன்று அடையாறு, மின்னணுவியல் கருவிகள் தயாரிப்புத் தொழிற்பேட்டையில் (Instronics) அமைக்கப்பட்டுள்ளது. இது இத்துறைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள், இன்றியமையாத அடிப்படை வசதிகள், பொதுவான வசதிகள் ஆகியவை குறித்துத் திட்டமிடுவதற்கான தகவலை அளிக்கும் நிலையமாகச் செயல்படுகிறது. எல்லாத் துறைகளையும் சேர்ந்த 1,800-க்கும் அதிகமான தொழிற் பிரிவுகளிலிருந்து ஏற்கனவே தகவல் சேகரிக்கப்பட்டு, அவற்றை வழங்குவதற்காகத் தொகுக்கப்பட்டுள்ளன.

மின்சார—மருத்துவக் கருவிகளுக்கான பணி நிலையங்கள்.

9. மின்சார—மருத்துவக் கருவிகளைச் செப்பனிடுவதற்கான பணி நிலையம் ஒன்று கிண்டியிலும், தஞ்சாவூர், மதுரை ஆகிய ஊர்களில் துணை நிலையங்கள் இரண்டும் மொத்தம் சுமார் 16·00 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளன. தஞ்சாவூரிலுள்ள துணை நிலையம், 1976–77 ஆம் ஆண்டில் ஒப்புதல்அளிக்கப்பட்டுள்ளதிட்டத்தின்கீழ் மேலும்விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இப்பணி நிலையங்கள், இம் மாநிலத்திலுள்ள மருத்துவ, கால்நடை மருத்துவ ஏனைய நிலையங்களின் 20,000-க்கு மேற்பட்ட கருவிகளை இதுவரையில் பழுதுபார்த்துள்ளன. இந்த வகையில் 23·98 இலட்சம் ரூபாய் மொத்த மதிப்புள்ள பழுதுபார்க்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டன. கோயம்புத்தூரிலுள்ள பிறிதொரு நிலையம் கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ள நிலையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இதோடு, இதேபோல் ஒரு நிலையத்தைத் திருநெல்வேலியில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின்னணுவியல் கருவிகளைச் சோதனையிடுதல், சான்றளித்தல் உற்பத்தி வளர்ச்சி ஆகியவற்றிற்கான நிலையம், மதுரை—நடைமுறையில் உள்ள தரங்களுக்கு இணங்க "உற்பத்திக்குப் பிறகு" சோதனையிடுதல், சான்றளித்தல், உற்பத்தி வளர்ச்சி ஆகியவற்றிற்காக, மதுரை, தொழிற்பேட்டையில் மின்னணுவியலுக்கான ஆய்வுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனை கப்பலூர் தொழிற்பேட்டைக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையம் இதுவரையில் 31-12-77 முடிய 50 மாதிரிகளைச் சோதனை செய்துசான்றளித்துள்ளது.

தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம்.

10. இம் மாநிலத்தில் மின் அணுவியல் தொழில்கள் வளர்ச்சியடைவதை விரைவுபடுத்தும் நோக்கோடு தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மேற்கொள்ளவேண்டிய பணிகள் பற்றி, மின்னணுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுடன் கலந்து பேசப்பட்டது. அரசுத்துறைக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள பொருட்களைஉற்பத்திசெய்வதைஇந்நிறுவனம்மேற்கொள்வது நலம் பயக்கும் என்று கூறப்பட்டது. தொழில் கல்வி அறிஞர்கள் இந்நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் மற்ற தொழில் அறிஞர்களுடன் கலந்துபேசி, ஒரு சில சிறப்புப் பொருட்களை உற்பத்தி செய்யலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். வரும் ஆண்டில் இதற்கான நடவடிக்கைகள் மேற்காள்ளப்படும்.

மின் அணுவியல் சிறு தொழிற் பிரிவுகள்.

11. இந்த நிதியாண்டில் தமிழ்நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, அல்லது விரிவுபடுத்தப்பட்ட மின் அணுவியல் சிறுதொழில்கள் எண்ணிக்கை 46 ஆகும். 1978-79ஆம் ஆண்டு முடிவில் மின்அணுவியல் சிறுதொழில்களின் உற்பத்தி ரூ. 8 கோடியளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1979-80 ஆம் ஆண்டிற்குள் மேற்கண்ட மின்னணுவியல் சிறுதொழில்களில் 1,585 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும். மேலே குறிப்பிட்டவைகளைத் தவிர, 35 நுண்திறம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டங்கள் ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு, அவைகளுக்கான தொழிற் பிரிவுகள் அமைக்கும் தருவாயில் உள்ளது. இதனால் 1978-79 ஆம் ஆண்டுமுடிவில் 500 பேர்களுக்கும்1979-80ல் மேலும் 500 பேர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இரசாயன சோதனை பகுப்பாய்வு அறிவியல் ஆய்வுக் கூடங்கள்.

12. கிண்டி, கோவை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள இரசாயன சோதனை—பகுப்பாய்வு அறிவியல் ஆய்வுக் கூடங்கள், பல்வேறு வகை மூலப்பொருட்கள், உற்பத்தியான பொருட்கள் ஆகியவற்றைச் சோதனையிட்டு இரசாயன, உலோக, பொறியியல் தொழில்களின் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றன. சிறுதொழில் பிரிவுகளுக்குச் சோதனைக் கட்டணங்களில் 50 சதவீதம் சலுகையளிக்கப்படுகிறது. இந்திய தர நிர்ணய சான்றிதழ் அடையாளக் குறியீடு திட்டத்தின்கீழ் சான்றிதழ் பெறும் தொழிற்சாலைகளுக்கு 33.1/3 சதவீதம் சலுகை அளிக்கப்படுகிறது. இந்த ஆய்வுக் கூடங்கள் 1977–78ஆம் ஆண்டில் 31–12–1977 வரையில் 4,173 மாதிரிகளைச் சோதனையிட்டு பகுப்பாய்வு செய்துள்ளன. இதன் மூலம் கட்டணமாக 1,46,400 ரூபாய் பெற்றுள்ளன. சேலத்தில் உள்ள சவ்வரிசி ஆராய்ச்சிஆய்வுக்கூடம்தரமானசவ்வரிசிஸ்டார்ச்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உதவி புரிகிறது. இந்திய தர நிர்ணய நிலையத்தின் வரையறைகளின் படி, ஸ்டார்ச், சவ்வரிசிஆகியவற்றைப் பகுப்பாய்வுசெய்வதற்கான சோதனையிடு வசதிகளையும் அளிப்பதோடு, பல்வேறு மாதிரிகளைச் சோதனையிடும் பணியையும் மேற்கொள்கிறது. இந்த ஆய்வுக் கூடம்1977–78ஆம் ஆண்டில் 31–12–1977ஆம் நாள்வரையில் 370 மாதிரிகளை பகுப்பாய்வு செய்து அவற்றின்மூலம் சோதனைக் கட்டணமாக 3,490 ரூபாயை ஈட்டியுள்ளது.

தூத்துக்குடியிலுள்ள உப்பு—கடல்படு இரசாயனப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம், உப்பு உற்பத்தியை அளவிலும்தரத்திலும் உயர்த்துவதில்உப்புத்தொழிற்சாலைக்கு உதவுகிறது. பவநகர், மத்திய உப்பு—கடல்படு இரசாயனப் பொருட்கள் தொழிற்சாலையில் நெருங்கிய உடனுழைப்புடன்தூத்துக்குடி, உப்பு—கடல்படு இரசாயனப்பொருட்கள் மாநில ஆராய்ச்சி நிலையத்தை நடத்தக் கருதப்பட்டுள்ளது.

13. இரசாயனத் தொழில்கள் குறித்த புள்ளி விவரங்களையும் தொழில்நுட்பத் தகவல்களையும் சேகரிப்பதற்காக கிண்டியில் புள்ளி விவரத்தகவல் தொகுப்பு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. 1977, டிசம்பர் வரையில், இந்நிலையம் 484 இனங்கள் குறித்தும் 33 திட்ட அமைப்புகள் குறித்தும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கியுள்ளது.

14. இரசாயனப் பிரிவு, பராபின் மெழுகு, தீக்குச்சி மெழுகு பொருட்களைக் கொள்முதல் செய்வதில் சிறு தொழில்களுக்கு அவசியமான உதவி செய்கிறது. இப்பிரிவு, இரசாயனத் தொழில்களைத்தொடங்குவதற்குத் தொழில் முனைவர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை நல்குகிறது. மேலும், தொழிற் சாலைகள் குறிப்பாகக் கேட்டுக் கொள்வதன் பேரில் இப் பிரிவு இரசாயன தொழிற்சாலை முன்னோடி ஆய்வுகளையும் மேற்கொள்கிறது. சிறு தொழில் பிரிவுகள், தங்களது உரிமங்களையும், உள்நாட்டுத் தயாரிப்பாளர்களிடமிருந்து மூலப்பொருள் ஒதுக்கீட்டையும் பெறவியலும் வகையில் இந்த இரசாயன பிரிவு பூச்சிக் கொல்லிமருந்து உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது.

மட்பாண்டப் பயிற்சி நிலையம்.

15. விருத்தாசலம், மட்பாண்டத் தொழிற் பயிற்சி நிறுவனம், மட்பாண்டத் தொழில் நுட்ப நிறுவனம் என்று மாற்றி பெயரிடப்பட்டது. இந்நிறுவனம் 15 மாணவர்களுக்கு நான்காண்டுக் காலப் பயிற்சி வகுப்பு நடத்துகிறது. வணிகத் தொழில் பிரிவுகளில் அளிக்கப்படும் ஓராண்டு பயிற்சியும் இப்பயிற்சிக் காலத்தில் அடங்கும். முதல், இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 75-ம், மூன்றும், நான்காம் ஆண்டு மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100-ம் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பிற மாநில அரசுகள், மட்பாண்டத் தொழிற்சாலைகள், மீட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வரும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றோருக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஐந்துஇடங்கள் உட்பட, பயிற்சி உதவித்தொகை இல்லாமல் பயிற்சி பெறுவதற்காக மேலும் பத்து மாணவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். மூலப்பொருட்களையும் வேலை நிறைவுபெற்றபொருட்களையும் சோதித்துப் பார்ப்பதற்காக எல்லா வசதிகளுடன் கூடிய ஆய்வுக்கூடம் ஒன்று இந்நிறுவனத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

கண்ணாடித் தொழிற் பயிற்சி நிலையம்.

16. கிண்டியிலுள்ள அரசு ஆய்வுக்கூட கண்ணாடித் தயாரிப்புப் பயிற்சி நிலையத்தில் ஆய்வுக்கூட கண்ணாடி சாதனம் தயாரிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இது வரையில் 26 தொகுதியினருக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரிலுள்ளகண்ணாடிக் கருவிகள் தயாரிப்புக்கான பயிற்சி — உற்பத்தி நிலையம், கோயம்புத்தூரிலும்

அதனைச் சுற்றிலுமுள்ள கல்வி நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இந்நிலையத்திலும் ஆய்வுக்கூட கண்ணாடி சாதனம் தயாரிக்கப்படும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்தொழிற் பிரிவில் தயாரிக்கப்படும் கண்ணாடி பொருட்களுக்கு நல்ல விற்பனை உள்ளது.

சிறு தொழில்களைப் பதிவு செய்தல்.

17. இயந்திரங்கள் தளவாடச் சாமான்கள் இவற்றில் மொத்த முதலீடு பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் உள்ளவை சிறு தொழில்களாகக் கருதப்படும். பெரிய தொழிற் சாலைகளுக்குத் துணைத் தொழில்களாக அமையும்போது இத் தகைய முதலீடு 15 இலட்சம் ரூபாய்வரை இருப்பினும் சிறு தொழிலாகக் கருதப்படுகின்றன. தற்போதுள்ள பதிவு நடைமுறையின்கீழ், முதலில் புதிய தொழில்களுக்குத் தற் காலிகச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ் 6 திங்களுக்குத்தான் செயல் திறனுடையதாகும். இது முதலில் 6 திங்களுக்கு மேலும் புதுப்பிக்கப் படலாம். ஆய்வுக்குப் பின்னர், மேலும் 2 அரையாண்டுக் காலத்திற்கும் புதுப்பிக்கப்படலாம். சிறு தொழில் அமைக் கப்பட்டதைக் கண்டறிந்தபின்; நிலையான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. மாவட்டங்களிலுள்ள தொழில் வணிக துணை இயக்குநர்கள் இந்தச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் பெற்றவர்கள்.

சிறு தொழில்கள், குறிப்பாக, படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்போருக்குப் பெருமளவு சுய வேலைவாய்ப்பை அளிக்கின்றன. மாநிலம் முழுவதும் கிராமப் பகுதிகளிலும் ஓரளவு நகர்ப்புற பகுதிகளிலும் தொழில் வளம் பெருகுவதற்கு வகை செய்வதும் சிறுதொழில், குடிசைத் தொழில், வணிகம் மற்றப் பணிகள் ஆகியவற்றில் சொந்தத் தொழில் வாய்ப்புகளுக்கும் வழி வகுப்பதே மாநில அரசின் உறுதியான கொள்கையாகும்.

1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 ஆம் நாள் அன்றுள்ளபடி மாநிலத்தில் சுமார் 40,000 பதிவு செய்யப் பட்ட சிறு தொழில்கள் இருந்தன. இவை சுமார் 4 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு நல்கின. சிறுதொழில் குறித்து மாவட்டவாரியான விவரங்கள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள இணைப்பு V-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 50,000 பேர்களுக்கு வேலை அளிப்பதற்காக ஓராண்டுக்குள் 10,000 சிறுதொழில் பிரிவுகளைத் தொடங்குவதற்கு, தொழில் வணிக

இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் (சிட்கோ) ஒத்துழைப்புடன் அவசியமான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. இம் மாநிலத்தில் பல்வேறு சிறு தொழில்களைத் தொடங்குவது சம்பந்தப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான வளர்ச்சிப் பணி அமைப்புகளாக தொழில்-வணிகத் துறை இயக்குநரையும், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தையும் (சிட்கோ) அரசு குறிப்பிட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பகுதியிலும் பொறியியல், இரசாயனம், உணவு, செய்முறைப் படுத்தல், தோல், மட்பாண்டத் தொழில், மின்னணுவியல், கைவினைப் பொருட்கள் முதலியவற்றில் ஒவ்வொரு துறை குறித்தும் ஆய்வு செய்து வெவ்வேறு பகுதிகளுக்குச் சாதகமாயுள்ள தொழில் குறித்து கண்டறியப்படும். குறிப்பிட்ட இடங்களில் தொழில் முனைவோரைத் தெரிந்தெடுப்பதற்கு கூட்டங்களும் நடத்தப்படும்.

புள்ளி விவரத் தகவல் சேகரிப்பு.

18. பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சிறுதொழில் பிரிவும் ஒவ்வொராண்டின் இறுதியிலும் உற்பத்தி குறித்த விவர அறிக்கையை வரையறுக்கப்பட்ட படிவத்தில் தொழில்-வணிக இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்பக் கடமைப் பட்டுள்ளது. இந்தப் புள்ளி விவரங்கள் 'கார்டெக்ஸ்' முறைப்படி வகைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றன. 31–12–1977 அன்றைய நிலையின்படி சிறு தொழில்கள் பற்றிய ஆண்டுக் குறிப்பேடு ஒன்றை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை தொழில்-வணிக இயக்குநர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

சிறு தொழில் பற்றிய தேசியப் புள்ளி விவரம்.

19. அனைத்திந்திய அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சிறு தொழில் பற்றிய தேசீயப் புள்ளி விவரம் தொடர்பாக தொழில்—வணிக இயக்குநர் அலுவலகம், பதிவுபெற்ற சிறு தொழிற்சாலைகள் பற்றி, தயாரிப்பு வகை, வேலைக்கமர்த்தப் பட்டுள்ள தொழிலாளர் எண்ணிக்கை, முதலீடு செய்யப் பட்ட மூலதனம், எந்திரங்களின் மதிப்பு, பயன்படுத்தப் படும் மூலப்பொருட்களின் மதிப்பு, தரம், உற்பத்தியின் மதிப்பு, ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களை உற்பத்தி வாரியாகச் சேகரிக்கிறது.

மையப் பிரிவு :

20. சிறுதொழில் புள்ளிவிவரக் கணக்கெடுப்பின் தொடர் நடவடிக்கையாக ''மையப்பிரிவு'' ஒன்று இயக்குநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் பணிகளாவன:—

(1) சிறுதொழில் துறையில் உற்பத்திக் குறியெண்ணைத் தயாரிப்பதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களைத் தயாரிக்கும் சிறுதொழில் பிரிவுகளிலிருந்து மாதாந்திர உற்பத்தி அறிக்கைகளைச் சேகரித்தல்.

(2) புள்ளிவிவரக் கணக்கெடுப்பின்போது 20 சதவிகித உற்பத்தித் திறனுக்குக் குறைவாக செயல்படுவதாகக் கண்டறியப்பட்ட சுமார் 1,300 சிறு தொழில்கள் குறித்த பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவை நன்முறையில் செயல்படும் நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(3) புள்ளிவிவரக் கணக்கெடுப்பின்போது மூடப்பட்டதாகக் கண்டறியப் பட்ட அல்லது எங்கு உள்ளன என்று கண்டுபிடிக்க இயலாத சுமார் 10,000 சிறுதொழிற் பிரிவுகள் குறித்து பரிசீலனை செய்தல்.

சிறுதொழில்களுக்கு மின்சக்தி, குடிநீர், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, சாலை வசதிகள் முதலிய வசதிகளுடன் நன்கு திட்டமிட்ட இடவசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் மாநில முழுவதும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்ட தொழிலுக்குரிய தொழிற்பேட்டைகள், தோல், மின்சாரம், மின்னணுவியல் போன்ற சிறப்புவகை தொழில்களின் தேவைகளை மட்டுமே நிறைவு செய்கின்றன. நவீன சிறந்த வகைத் தொழில்களின் வளர்ச்சிக்காக, குறிப்பிட்ட தொழிலுக்குரிய கீழ்க்காணும் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

(1) மின் தொழிற் பேட்டை, காக்கலூர்.

(2) டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்ட்ரானிக்ஸ் எஸ்டேட், அடையாறு.

(3) மின்னணுவியல் தொழிற் பேட்டை, திருச்சிராப்பள்ளி.

(4) மின்னணுவியல் தொழிற் பேட்டை, ஓசூர்.

(5) மின்னணுவியல் தொழிற் பேட்டை, சேலம்,

மின் அழுத்த மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்கள்), ஸ்விட்ச்கியர்கள், கண்ட்ரோல்கள் (controls) ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக அடையாறு மின் அணுவியல் துணைத் தொழிற்பேட்டை சென்னையிலுள்ள 'இன்ஸ்ட்ரானிக்ஸ்' வளாகத்திற்கு மிக அருகில் அமைக்கப்பட்டுள்ளது. திருவொற்றியூர், கோயம்புத்தூர், தூத்துக்குடி, பொள்ளாச்சி, சிவகாசி, வியாசர்பாடி, சேலம் ஆகிய இடங்களில் தனியார் கூட்டுறவு தொழிற்பேட்டைகள் உள்ளன.

மேம்படுத்தப்பட்ட மனைகள்:

21. சென்னைக்கருகில் மின்சார மின்னணுவியல் கருவித் தயாரிப்பு தொழிற்சாலைகளுக்காக மேம்படுத்தப்பட்ட மனைகள் கொண்ட தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. 100 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது. 23 தொழில் முனைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, அரை ஏக்கர் முதல் இரண்டு ஏக்கர் வரை அவர்களுக்கு மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:

22. பல்வேறு சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், கைத்திறன் பணியாளர்கள் ஆகியோரின் நன்மைக்காக தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை தொழில்-வணிகத் துறை தொடங்கியுள்ளது. பாய்முடைதல், பிரம்பு, மூங்கில் தொழில்கள், ஏனைய குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள் போன்ற வற்றில் ஈடுபட்டுள்ள சுமார் 100 சங்கங்கள் கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளன. 31–12–1977 அன்றையபடி ரூ. 255 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தையுடைய 294 சங்கங்கள். சுமார் 23,000 பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்பை அளித்து வந்தன. 1–4–1977–லிருந்து 31—12—1977 வரையிலான கால அளவில் இச்சங்கங்கள் ரூ. 1,053 இலட்சம் மதிப்புள்ள பொருட்களைத் தயாரித்து ரூ. 1,297·48 இலட்சத்திற்கு விற்பனை செய்தன.

தொழிற்சாலைகளுக்கு அரசு உதவியளிக்கும் சட்டத்தின் கீழ்க் கொடுக்கப்படும் உதவி.—தமிழ்நாடு 1922 ஆம் ஆண்டு தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1923) கீழ் புதிய தொழில்கள் அமைத்தல் அல்லது தற்போதுள்ள தொழில்களை விரிவு படுத்துதல்,

தொழிற்சாலைகளுக்காக நிலம் வாங்குதல், புதிய தொழிற்சாலைக் கட்டிடங்கள் கட்டுதல் அல்லது தொழிற்சாலையின் தற்போதைய கட்டிடத்தை மாற்றியமைத்தல், தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குதல் ஆகியவற்றுக்காகவும், நடைமுறை மூலதனத்திற்காகவும், சிறு தொழில், குடிசைத் தொழில் செய்பவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படலாம். இச் சட்டத்தின்கீழ் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படக்கூடிய உயரளவு தொகை ரூ. 2 இலட்சம் ஆகும். இச் சட்டத்தின்கீழ், கடன் வழங்குவதற்காக, 1977–78 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிற் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களுக்கு தொழில்–வணிக இயக்குநர் பங்கு மூலதனக் கடன் வழங்கும் பொருட்டு இத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 31–12–1977 வரையில் ரூ. 8,54,000 பங்கு மூலதனக் கடனாகக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையான ரூ. 1,46,000 31–3–1978-க்கு முன்னதாக வழங்கப்படும்.

கீழ்க்கண்ட வகைக் கடன் உதவிகளை தொழில்–வணிகத் துறை தொடர்ந்து அளித்து வருகிறது :—

(1) பங்கு மூலதனம் செலுத்துவதற்காகத் தொழில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கடன் ;

(2) தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனக் கடன்;

(3) கிராமத் தொழில்கள் திட்டப் பணித்திட்டத்தின கீழ் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களுக்கும் ஏனையோருக்கும் கடன்கள் ;

(4) தென்னை நாரிலிருந்து இயந்திரத்தால் கயிறு உற்பத்தி செய்யும் தொழில் பிரிவுகள் உட்பட தென்னை நார்த் தொழில்களின் வளர்ச்சிக்குக் கடன்கள்.

கடந்த ஒன்பதாண்டுகளில் தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள், உதவி பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை ஆகியவை குறித்த விவரங்கள் இணைப்பு XX-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தோல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

23. வேலை நிறைவு செய்யப்பட்ட தோல் பொருட்களை உற்பத்தி செய்வதில் தேவையான இன்றியமையாத அடிப் படை வசதிகளை வழங்குவதன் மூலம், தோல் தொழிலுக்கும் குறிப்பாக சிறு அளவில் தோல் பதனிடுபவர்களுக்கு உதவி புரிவதற்கென்று வாணியம்பாடியில் தோல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. தோல் பதனிடுபவர்கள் பெருவாரியாக இருக்கும் பகுதிகளில் கூட் டுறவுத்துறையில் மேலும் சில பணி நிலையங்களை அமைக்க வேண்டியதன் தேவை உணரப்பட்டு வருகிறது. அரசு வணிக நிறுவனம் அளித்துள்ள ரூ. 25 லட்சம் மதிப்புள்ள இயந்திரங்களுக்குச் சமமான ரொக்கத் தொகையைத் தொடக்க மூலதன தேவையாகக்கொண்டு மேலும் நான்கு பணி நிலையங்களைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. தோல் தொழிற்சாலைகள் இம் மாநிலத்தில் முழு அளவில் வளர்ச்சி பெற்று பெருக வேண்டும் என்பதே இவ் வரசின் குறிக்கோளாகும். தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் 1976–77, 1977–78-ம் (ஜனவரி 1978 வரை) ஆண்டில் தோல் வளர்ச்சிக்கு வழங்கிய நிதியுதவியைப் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

விவரங்கள்.	1976–77. (ஏப்ரல்— மார்ச்சு.)	1977–78. (ஏப்ரல்— ஜனவரி.)
1. தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை.	25	19
	(ரூ. இலட்சத்தில்.)	ரூ. இலட்சத்தில்.)
2. வழங்கிய தொகை	2,24.31	1,69.55
3. அவற்றில்—		
(அ) தொழில் வளர்ச்சி நிறுவனம்-உலக வங்கிகளின் கீழ் அன்னிய நாணயமாகக் கடன் வழங்கப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை	11	8
	(ரூ. இலட்சத்தில்.)	(ரூ. இலட்சத்தில்.)
(ஆ) அன்னியச் செலாவணிக் கடன்கள்	61.77	72,44

விவரங்கள்.	1976-77. (ஏப்ரல்- மார்ச்சு.)	1977-78 (ஏப்ரல் ஜனவரி-
	(ரூ. இலட்சத்தில்.)	(ரூ. இலட்சத்தில்.)
4. திட்டங்களின் மொத்த மதிப்பீடு	4,90.55	3,56.47
5. எதிர் பார்க்கும் வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை	11,90	840
6. எதிர்பார்க்கும் வருட உற்பத்தியின் மதிப்பீடு ..	1,744.74 இலட்சம்.	1,564.44 இலட்சம்.

கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்.

24. தமிழ்நாட்டில் பதினொன்று தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. இத்தொழிற்சாலைகள் எல்லாம் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளன. நட்டத்தில் செயல்பட்டுவந்த ஒரே தொழிற்சாலையான கைகாட்டி தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை, முந்திய ஆண்டு களின் நட்டத்தை ஈடு செய்துவருகிறது. இந்தத் தொழிற் சாலைகள் ரூ. 18.27 இலட்சத்துக்கு மேம்பாட்டு ஒதுக்க நிதி, தேய்மான ஒதுக்கநிதி ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளன. 1976—77-ல் தயாரிக்கப்பட்ட தேயிலை ரூ. 440.00 இலட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்தத் தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் மூலம் 5,099 சிறு தேயிலைச் சாகுபடியாளர்கள் பயனடைகின்றனர். இவர்கள் சுமார் 11,400 ஏக்கர் தேயிலைத் தோட்டங்களைச் சொந்தத்தில் உடையவர்களாவர்.

அரசு அளிக்கும் பங்கு மூலதன உதவி, தேயிலை வாரியம் அளிக்கும் கடனுதவி தவிர, தொடக்க நிலையில் நிர்வாகப் பணியாளர்களின் இலவசப் பணிகள், தவணை கொள்முதல் முறையின்கீழ் இயந்திரங்களை வாங்குவதற்கு அரசு உத்திரவாதம் ஆகியவையும் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கி, இந்தத் தொழிற்சாலைகளின் நடைமுதல் மூலதனத் தேவைகளுக்கு வகைசெய்கிறது. தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற் சாலைகள் அனைத்திற்குமான மத்தியப் பணிச்சங்கம், தொழிற் சாலைகள் அனைத்தின் அலுவல்களை ஒருங்கிணைக்கிறது.

சிறு தேயிலைச் சாகுபடியாளர்களுக்கு தேவைப்படும் எருவை மொத்தமாகக் கொள்முதல் செய்கிறது. தேயிலைக் கிடங்கு நடத்துகிறது. தேயிலை விற்பனையில் உதவுகிறது. ஏனைய பணி வசதிகளைச் செய்து தருகிறது. இச்சங்கம் ஆதாயத்தில் செயல்பட்டு வருகிறது.

25. கூட்டுறவுத் தீப்பெட்டிச் சங்கங்கள்.

25. தமிழ்நாட்டில், 13 சிறு தொழில் தீப்பெட்டி உற்பத்தி செய்வோர் பணித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவை மூலப்பொருள்களைக் கொள்முதல் செய்தல், உற்பத்தியான தீப்பெட்டிகளை விற்பனைசெய்தல் ஆகியவற்றில் தயாரிப்பாளர்களுக்கு உதவிபுரிந்து வருகின்றது. இவற்றில் ஐந்து சங்கங்கள் 1975-ம் ஆண்டுக்கு முன்பே தொடங்கப்பட்டன. 1975 ஆம் ஆண்டுக்கு பிறகு பதிவு செய்த 6 சங்கங்கள் இன்னும் நல்ல விற்பனையை எட்டிப்பிடிக்கவில்லை. எஞ்சிய இரு புதிய சங்கங்கள் இன்னும் விற்பனையைத் தொடங்கவில்லை. 1976–77-ல் இச்சங்கங்களின் ஆண்டு மொத்த வியாபாரத் தொகை 354.00 இலட்ச ரூபாயாகும். 1977–78 ஆம் ஆண்டில் (31–1–78 முடிய) தீப்பெட்டி விற்பனை ரூ. 344 இலட்சமாகும் மேற்படி சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து தமிழ் மாநிலத் தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவு சங்கக் கூட்டமைப்பை அமைத்துள்ளன. ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்புப் பெருக்கத்திட்டம் ஆகியவற்றின்கீழ், வேலையற்ற பொறியியலாளர்கள், பட்டயதாரர்கள் தொழிற்பயிற்சி நிறுவனச் சான்றிதழ்ப் பெற்றவர்கள், ஏனைய தகுதிபெற்றவர்கள், ஆகியோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டு, மூன்றுவகை தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்றவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 115 பொறியியல் பட்டதாரிகள், 39 பட்டயதாரர்கள், 169 தொழிற்பயிற்சி நிறுவனச் சான்றிதழ் பெற்றவர்கள், ஏனைய தகுதி பெற்ற 303 பேர் ஆகியவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்களுக்கான 14 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் மாநில அரசு பங்கு மூலதன முதலீடு செய்வதற்காக 25.77 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புப் பெருக்கத்திட்டம்,

சுய வேலை வாய்ப்புத்திட்டம் ஆகியவற்றின் கீழ் 22 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு, 561 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற பின்னர், 137 பேர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். 396 பேர்கள், வெவ்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி.

26. தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கென்றே 1961 ஆம் ஆண்டில் ஒரு தலைமை வங்கி தனியாக ஏற்படுத்தப்பட்டது. இந்த வங்கியில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 64.03 இலட்சம். இதில் ரூ. 38.30 இலட்சம் அரசினால் வழங்கப்பட்டது. 31–12–77 ஆம் நாள் நிலவரப்படி 357 சங்கங்களுக்கு இவ்வங்கி நிதி உதவி அளித்தது. இந்த வங்கியினால் வழங்கப்படும் கடன் அளவும் படிப்படியாக உயர்ந்து வருவதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம் :—

ஆண்டு.	வழங்கப்பட்ட கடன் (ரூபாய் இலட்சத்தில்.)
1967–68	24.61
1968–69	16.83
1969–70	18.85
1970–71	41.81
1971–72	39.00
1972–73	97.95
1973–74	130.84
1974–75	153.06
1975–76	155.56
1976–77	173.13
1977–78 (31–12–77 வரை).	129.90

[1978 மார்ச் 22

இவ்வங்கியின் நிதி உதவியைப் பெற்றுவரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் மிக முக்கியமானவை நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளாகும். இக்கூட்டுறவு வங்கியை ஒரு தலைமை வங்கியாக ரிசர்வ் வங்கி அங்கீகரிக்கவில்லை. அதனால் ரிசர்வ் வங்கியினால் கொடுக்கப்படும் மறுநிதி உதவி வசதிகளையும் மற்ற கடன் உத்தரவாத வசதிகளையும் இந்த வங்கி பெற முடியவில்லை.

கைத்திறத் தொழில்கள்.

27. தென்காசியில் உள்ள நார் தயாரிப்பு நிலையம், கிருஷ்ணகிரியில் உள்ள கருங்கல் மெருகேற்றும் நிலையம் ஆக இரண்டு உற்பத்தி நிலையங்கள் தற்போது தொழில் வாணிகத் துறையில் உள்ளன. நார் தயாரிப்புப் பிரிவானது கலப்பு நார் மூலம் மெத்தைகள் தயாரித்து, மருத்துவ மனைகளுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து வருகிறது. இப்பிரிவு 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை 58 டன் கலப்பு இழையைத் தயாரித்துள்ளது. 65 டன் கலப்பு நார் இழையை விற்பனை செய்துள்ளது. கிருஷ்ணகிரியில் உள்ள கருங்கல் மெருகேற்றும் நிலையத்தை தருமபுரி மாவட்ட வளர்ச்சி நிறுவனத்திற்கு மாற்றி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பல்வேறு கைத்திறப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைத்திறப் பணியாளர்கள் குறித்த புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்காகவும் கைத்திறத் தொழிலை மேம்படுத்துவதற்காகவும் விவரங்களைத்திரட்ட கைத்திறத் தொழில் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கைத்திறத் தொழிற்பிரிவுகளை பதிவு செய்கின்றனர். மூன்று ஆண்டுகள் கால அளவுவரை இவற்றிற்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் வரை 17,705 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. 16,794 தொழிற் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு, பதிவு ஆகியவை குறித்த பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தென்னை நார்த் தொழில்.

28. தமிழ்நாட்டில் தற்போது பத்து தென்னை நார்த் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு மத்திய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

1978 மார்ச் 22]

ஆகும். ஒன்று மாநில நார் விற்பனை மையத் தொழிற்
கூட்டுறவுச் சங்கம் ஆகும். தென்னை நார் கூட்டுறவுத்
தொடக்கச் சங்கங்களும் சங்க உறுப்பினர்களும் உற்பத்தி
செய்யும் நார்ப் பொருள்களை தென்னை நார் விற்பனை மத்திய
தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்கின்றன.

ஈத்த மொழியில் செய்யப்பட்ட தென்னை நார்ப்பள்ளி
யின் சொத்து உடைமைகளை மேற்கொண்டு, நாகர்
கோயில் மாவட்ட தென்னை நார் விற்பனை மத்திய தொழிற்
கூட்டுறவுச் சங்கம் பெரிய அளவில் தென்னை நார்
எடுக்கவும், நார் விரிப்புகள், தேயிலைக் கோணிகள், தூசு
மிதியடிகள் ஆகியவற்றைத் தயாரிக்க வகை செய்யும்
திட்டமொன்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்
திட்டத்திற்கு வேண்டிய பணியாளர்கள் தந்துள்ளதோடு
1976 ஜனவரித் திங்களில் 45,000 ரூபாய் அரசின்
பங்கு மூலதனமாக இச்சங்கத்திற்கு வழங்கப்
பட்டது. இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து
தாயகத்திற்கு திரும்பியவர்களுக்கு இச்சங்கம் பயிற்சி
அளிக்கும். பயிற்சிக்குப் பின்னர், இச்சங்கத்தின் உற்பத்திப்
பிரிவில் அவர்களைப் பணியில் அமர்த்தும். அகதிகள் கூட்டுறவு
நிதி வளர்ச்சி வங்கி, இத்திட்டத்திற்கென 3·35 இலட்சம்
ரூபாய்க்கு உதவி செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது. இது
வரையில் இவ்வங்கி 77,500 ரூபாய் தந்துள்ளது. ஐம்பது
அகதிகள், இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர்.
மாநில அரசின் 0·10 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம்
உட்பட, 1.46 இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்ட பங்கு
மூலதனம் கொண்ட தமிழ்நாடு மத்திய தென்னை நார்
விற்பனை தொழிற் கூட்டுறவுச் சங்கம், 36 உறுப்பினர்
களுடன் தஞ்சையைத் தலைமையிடமாகக்கொண்டு செயல்
பட்டு வருகின்றது. உறுப்பினர்கள் அனைவரும், இயந்திர
முறையில் நாரெடுக்கும் தொழிற் பிரிவுகளின் உரிமையாளர்
களாவர். தமிழ்நாட்டில் இயந்திர முறையில் நாரெடுக்கும்
தொழிற் பிரிவுகள் 110 உள்ளன. இத்தொழிற் பிரிவுகளின்
உரிமையாளர்கள் அனைவரையும் இச்சங்கத்தின் உறுப்பினர்
களாக பதிவு செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு
வருகின்றன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம்
நாள் நிலவரப்படி மேற்படி தமிழ்நாடு மத்திய தென்னை
நார் விற்பனை தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்தி
விற்பனையின் அளவு ரூ. 1·38 இலட்சத்தை எட்டியது.
இதன் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், அதிக அளவில்
பழுப்பு நிற கயிறு நார்களைப் பெறவும் ரூ. 6.65,
இலட்சம் செலவில் இச்சங்கத்தில் கருட்டப்பட்ட நார்

[1978 மார்ச் 22

உற்பத்திப் பிரிவு ஒன்றை தொடங்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு புதுக்கோட்டையிலுள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா நிதி உதவி செய்யும். மேற்சொன்ன பிரிவைத் தொடங்க இச்சங்கத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட்டுப்புழு வளர்த்தல்.

29. மேம்பட்ட முசுக்கட்டை இனங்களின் ஒட்டுப் பதியன்களை வழங்கும் பொருட்டு, இம்மாநிலத்தில் வெவ்வேறு பகுதிகளில் பத்து முசுக்கட்டை நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1976–77ஆம் ஆண்டில் வடஆர்க்காடு, மதுரை மாவட்டங்களில் புதிதாக இரண்டு முசுக்கட்டை பண்ணைகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த முசுக்கட்டை பண்ணைகள் புதிய ரக முசுக்கட்டை மர இனங்களைப் பெருக்கியும் பட்டுப்புழு வளர்ப்போர் பாசன முறையில் பயிரிட விதைப் பொருள்களை வழங்கியும் வருகிறது. மேலும் சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் தீவிர பட்டுப்பூச்சி வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இரண்டு மாவட்டங்களில் முசுக்கட்டை மரம் வளர்க்கப்படும் பகுதிகள் 825 ஏக்கருக்கு மேல் உள்ளன. தளி, பேரிகை, வாணியம்பாடி, கோயம்புத்தூர், பழனி ஆகிய 5 இடங்களில் அமைந்துள்ள பட்டுப்புழுக்கூடு விற்பனை நிலையங்கள், பட்டுப்புழு வளர்ப்போர் தாங்கள் உற்பத்தி செய்த பட்டுப்புழுக்கூடுகளை விற்பனை செய்து உடனடியாக பணம் பெற உதவிபுரிந்து வருகின்றன. இந்த ஐந்து பட்டுப்புழுக்கூடு விற்பனை நிலையங்கள் ரூ. 15·00 இலட்சம் மதிப்புள்ள சுமார் 1,00,000 கிலோ கிராம் பட்டுப் புழுக் கூடுகளை விற்பனை செய்துள்ளது.

ஓசூர், கொலட்டி, சேலம், வாணியம்பாடி, சத்யமங்கலம், மதஹள்ளி ஆகிய இடங்களிலுள்ள ஆறு துணை நிலையங்கள் புதிய இனங்கள் எவ்வாறு வளர்ச்சி அடைகின்றன என்பதை நேரடியாகக் கண்டறிந்து குறிப்புகளை எடுத்து குன்னூரிலுள்ள ஆராய்ச்சி விஸ்தரிப்பு நிலையத்திற்குக் கொடுத்து வருகின்றன.

தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் தீவிர அபிவிருத்தி திட்டமொன்று, மத்திய பட்டுவாரிய உதவியுடன் 1977–78 மற்றும் 1978–79 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் ரூ. 52.63 இலட்சம் செலவில் செயல்பட்டு வருகின்றது.

1978 மார்ச் 22]

இத்திட்டத்தின் விவரமாவது :—

1. முசுக்கட்டை பயிர் நிலப்பரப்பை விரிவாக்குதல்.

2. பட்டுப்புழு வளர்ப்பு, விற்பனை மற்றும் விற்பனை பயன்களை ஏற்படுத்துதல்.

3. மற்றும் நிர்வாகம்.

1977–78-ம் ஆண்டிற்கு ரூ. 3 இலட்சங்களை நிர்வாகம் மற்றும் அலுவலர்கள் செலவினங்களுக்காக வரையறை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும்பொழுது ஏற்கனவே உள்ள 12,000 ஏக்கரா தவிர சுமார் 12,000 ஏக்கரா அதிகப்படியாக விரிவடைவதுடன் அதிகப்படியாக ஆண்டுக்கு 25 லட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி அதிகரிக்கும்.

பட்டு நூற்பு ஆலைகள் திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்படின் கூடுதல் 2¼ இலட்சம் கிலோ பட்டு உற்பத்தி ஆவதுடன் இம்மாநில பட்டுத் தேவையினை 35 சதவிகிதம் பூர்த்தி செய்யும். சுமார் 48,000 கிராமவாசிகளுக்கு இத்தொழிலில் வேலைவாய்ப்பு ஏற்படும். தமிழ்நாடு மாநிலத்தில் தற்போது முசுக்கட்டை மரங்கள் பயிரிடப்படும் பகுதி சுமார் 13,000 ஏக்கர்கள் ஆகும். இது 1978–79 ஆம் ஆண்டுக்குள் 15,000 ஆக உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1978–79ஆம் ஆண்டில் வட ஆற்காடு, சேலம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 20 பட்டிழை கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் இவைகளைத் தொடங்க, அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இதன் தொடர்பாக, தொழில்–வணிக இயக்குநர் இடங்களைத் தெரிந்தெடுத்து அரசுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். தமிழ்நாட்டில் மொத்தப் பட்டுப் புழுக்கூடு உற்பத்தி 1,200 மெட்ரிக் டன்களாகும். ஆனால் தமிழ்நாட்டிலேயே பட்டிழை எடுப்பது 231 மெட்ரிக் டன் மட்டுமே. எனவே பட்டிழை எடுப்பதற்கான வசதிகளைப் பெருக்கி வருகிறோம்.

[1978 மார்ச் 22

கிராமத் தொழில் திட்டம்.

30. பொதுவசதி நிலையங்கள், துறை உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றைத் தொடங்குதல், உள்ளூரிலுள்ள பரம்பரைக் கைத்திறப் பணியாளர்களுக்கு கிராமத் தொழில்களில் பயிற்சி அளிக்கும் திட்டம் ஆகியவை கிராமத்தொழிலில் திட்டப் பகுதியில் செயல்படுத்தப்பட்ட திட்டத்தில் அடங்கும். கிராமத் தொழில் திட்டத்தின் ஏனைய நடவடிக்கைகளில் அடங்கியவை—

1. பல்வேறு கிராமத் திட்டங்களில் தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

2. சிறுதொழில் பணிநிலையம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் போன்ற நிதி உதவி நிறுவனங்கள் ஆகிய முகவரமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

3. தேவைப்படும் நேரத்தில் தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் பற்றிய அறிக்கைகளை நிதி உதவி நிறுவனங்களுக்கு அளித்தல்.

4. புதிய தொழில்களை அமைக்க தொழிலதிபர்களுக்கு உதவுதல்.

5. விரிவாக்கப் பணிகள் செய்தல்.

6. தொழில் துவங்க, தொழில் முனைவர்களைத் தெரிந்தெடுத்தல்.

7. திட்ட அளவிலான குழுக் கூட்டங்களைக் கூட்டுதல், தொழிலதிபர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

8. தனிப்பட்ட தொழில் துவங்குபவர்களுக்குக் கடன் வழங்குதல்.

9. பிற நடவடிக்கைகள்.

தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின்கீழ், கிராமத் தொழில் திட்ட மைய நிதியிலிருந்து, ஆண்டொன்றுக்கு 7½ சதவீதம் என்ற குறைந்த அளவு வட்டிக்கு தனியார் தொழில் பிரிவுகளுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

1978 மார்ச் 22]

தமிழ் நாட்டில் கனிவளம்.

31. பெரும்பாலான தொழில்களுக்குக் கனிப்பொருள்கள் அடிப்படையாக அமைந்து இருப்பதால், கனிவளங்களை ஆய்வு செய்வதற்கான நவீன, சிறந்த முறைகளைப் பயன்படுத்தி, புதிய கனிவளப் படிவங்களைக் கண்டுபிடிப்பதில் தமிழக அரசு தன் கவனத்தைச் செலுத்தியுள்ளது. அரசு, புதிய கனிவளத் தொழில்களைத் தொடங்குவதற்கான பகுதிகளையும், ஏற்கெனவே செயல்பட்டுவரும் கனிவளத் தொழில்களை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புக்களையும் கண்டறிந்து வருகிறது. தமிழ்நாட்டில், பூமியின் மேற்பரப்பில் காணப்பட்ட கனிப்பொருட்கள் ஏற்கெனவே கண்டறியப்பட்டு எடுக்கப்பட்டு விட்டன. எனவே, பூமிக்கடியிலுள்ள கனிவளப் படிவங்களைக் குறிப்பாக மூலக்கனிப் பொருள்கள், கதிர் இயக்கக் கனிப் பொருள்கள், ஏனைய தொழில் கனிப்பொருள்கள் ஆகியவற்றைக் கண்டெறிய புதிய முறைகளில் கவனம் செலுத்தப்படுகிறது. சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும், தீவிர ஆய்வுகள் செய்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருச்சி மாவட்டம், அரியலூர், நகரத்தில் கிழக்குப் பகுதியில் சுண்ணாம்புக்கல் படிவங்கள் ஆய்வு செய்யப்பட்டதன் விளைவாக, அரியலூரில் அரசு தமிழ்நாடு சிமிட்டி நிறுவனம் மூலம் ஒரு சிமிட்டி தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது. கல்லாற்றின் தெற்குப் பகுதிகளிலும், மேற்கொண்ட ஆய்வுகள் தொடர்ந்து நடத்தப்பட்டன. அப்பகுதியில் சிமிட்டிக்கேற்ற 50 மில்லியன் டன் சுண்ணாம்புக் கற்கள் (75 சதவீதம் முதல் 95 சதவீதம் வரை சுத்தமான) இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் தி நகாமலை, சித்தேரி மலைப்பகுதிகளில் மின்னணுத் தொழிலுக்கேற்ற உயர்ரக மாக்னசைட் ஆய்வு செய்யும் ஆரம்பப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கண்ணாடி தொழிலுக்குப் பொருத்தமான சிலிகா மணல் கிடைப்பது பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தென்னார்க்காடு மாவட்டம் மரக்காணம் அருகே 10 மில்லியன் டன் சிலிகா மணல் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டும் பணிகள் நிறைவேறி வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடங்கப்பட்ட ஆய்வுகள், செங்கீரைசெட்டிப்பட்டி, எருச்சி முதலிய பகுதிகளுக்கருகில் சுடு செங்கலுக்குரிய களிமண் கிடைப்பதை வெளிப்படுத்தியது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விமானம் மூலம் நில அமைப்பின் ஆய்வு செய்ததன் அடிப்படையில் நில அமைப்பு முரண்பாடு பகுதிகளில் தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தகைய ஒரு ஆய்வு, பவானி அருகே மாரப்பன்பாளையம் கிராமத்தில் செம்பு கிடைப்பதை வெளிப்படுத்தியது. அது போலவே தர்மபுரி மாவட்டம், சாமல்பட்டி அருகே மோட்டு

[1978 மார்ச் 22

சூலக்கரையில், ஏற்கனவே இரசாயன ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளபடி, செம்பு இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய துளையிடும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அம்பத்தூரில் முன் னோடித் திட்ட அடிப்படையில் நிறுவப்பட்ட வெர்மிகுலைட் சிம்பு தயாரிக்கும் தொழிற்சாலை சிம்புப்பொருட்களை வெற்றி கரமாக தயாரித்து வருகிறது. சேலத்தில் கனிவளச் சோதனைக் கூடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

கனிவளத்தை முறையாக மதிப்பீடு செய்யும் நோக்கத் தோடு திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங் களில் மூன்று கனிவள வட்டார சிறு குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. இத்தகைய குழுக்கள் மிகவும் பயனுள்ளனவாய் இருக்கின்ற காரணத்தால் மேலும் மூன்று வட்டார குழுக்களை அமைப்பதற்கு 1978–79ஆம் ஆண்டு புதிய திட்டத்தில் தேவை யான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புவியியல் அமைப்புக் குறித்து முக்கிய கூறுகளைக் கண்டறியும் பொருட்டு, அகமதபாத் இந்தியா விண்வெளிஆராய்ச்சி நிறுவனத் தின் ஒத்துழைப்புடன் வட்டார அளவில் ஆராய்ச்சி நடத்துவதற் கான திட்டம் ஒன்றை மேற் கொண்டுள்ளது. புவியியல் அமைப்பு நில உருவாக இயல் கூறுகள், கனிவளப் படிவங்கள், நில நீர் ஆகியவற்றை எடுப்பது குறித்து தகவல் அளிக்கக்கூடிய பயனுள்ள புள்ளி விவரங்கள் ஆகியவை பற்றிய விரிவான ஆய்வுப்பணி சேலம், தருமபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங் களில் 10,000 சதுர கிலோ மீட்டர் பரப்பில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கருங்கல் ஒரு சிறு கனிப்பொருளாகும். இது தற்போது மாநில சுரங்க விதிகளின்கீழ் தனிப்பட்ட தொழில் முனைவோருக்கு குத்தகைக்கு விடப்படுகிறது. பெருமளவு ஆதாயத்துடன் ஜப் பான் நாட்டுக்கு இதனை குத்தகை எடுப்பவர்கள் ஏற்றுமதி செய் கின்றனர். தனிப்பட்ட தொழில் முனைவோருக்குக் குத்தகை கைக்கு விடுவதை நிறுத்தி விடுவதற்கும், இக்கனிப்பொருளையும், ஏனைய கனிப்பொருட்களையும், வெட்டியெடுக்கும், பணியை அரசு முகவரமைப்பு ஒன்றிடம் ஒப்படைப்பதற்கும், அரசு எடுத்துள்ள கொள்கை முடிவைத் தொடர்ந்து அரசு ''தமிழ்நாடு கனிவள நிறுவனம்'' என்ற பெயரில் கனிவள மேம்பாட்டு நிறுவனத்தை அமைத்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட் டத்தில் இந்நிறுவனத்திற்குப் பங்கு மூலதனமாக ரூபாய் 20·00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் செலவை ஏற்பதற்காக 1977–78-ல் ரூ. 7·5 இலட்சம் (பங்கு மூலதனமாக) அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசின் முடிவை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் தனிப்பட்டவர் தொடுத்த வழக்கு ஒன்று நடந்து வருகின்றது.

1978 மார்ச் 22]

தமிழக அரசு நிறுவனமான டான்சிக்கு கடந்த ஆண்டு தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள குன்னம் கிராமத்தில் 81·52 ஏக்கர் நிலப்பரப்பில் கருப்புக் கல் வெட்டி எடுக்கும் குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. இந்நிறுவனம், கருப்புக்கல் வெட்டி எடுக்கும் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. டோக்கி யோவில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு, 1,000 கன மீட்டர் அளவுள்ள கருப்புக் கல் தேவை ஆணையை 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் நிறைவு செய்யும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

32. தொழில் வணிக இயக்குநரது பொறுப்பின்கீழ் 1978–79 ஆம் ஆண்டில் மேற்கொள்ள இருக்கும் சில முக்கிய புதிய திட்டங்கள் வருமாறு:—

1. விசையேற்றங்கள் (pumpsets) சோதனை செய்வ தற்கான வசதிகளைச் செய்து தருவதற்கு கோயம்புத்தூர் வட்டார சோதனை ஆய்வுக்கூடத்தை விரிவு படுத்துதல்.

2. திருச்சிராப்பள்ளி வட்டார அறிவியல்-தொழில் ஆய்வுக் கூடம் ஒன்றை அமைத்தல்.

3. தற்போதுள்ள வட்டார சுரங்கப் பிரிவு அலுவலகங்களை விரிவுபடுத்தல், வட்டார சுரங்கப் பிரிவு அலுவலகங்களைப் புதிதாக அமைத்தல்.

4. தமிழ்நாடு கனிவளங்கள் நிறுவனத்திற்கு பங்கு மூலதன உதவி.

5. இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங் களில் சிறு தீப்பெட்டித் தயாரிப்பாளர்கள் பணி-தொழிற் கூட்டு றவுச் சங்கங்கள் இரண்டு அமைத்தல்.

6. இருபது பட்டிழை சுற்றும் தொழிற் கூட்டுறவுச் சங்கங் களை நிறுவுதல்.

7. விரிவுப் பணித் திட்டத்திற்காக நீலகிரி மாவட்டத் தில் ஆறு தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் பங்கு மூலதனம் அளித்தல்.

8. இராமநாதபுரத்திலும் திருநெல்வேலியிலும் 50 தீப் பெட்டித் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

இந்த நிறுவனம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :—

(1) தொழில் முனைவர்களுக்குத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் கொட்டகைகளைக் கட்டித் தருதல்.

(2) சிட்கோ-டிஐஐசி கூட்டுத் திட்டத்தின் கீழ் சிறு தொழில். பிரிவுகளுக்குத் தேவைப்படும் இயந்திரங்களை தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குதல்.

(3) சிறுதொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும், இன்றியமையாத மூலப் பொருட்களை கொள்முதல் செய்து வழங்குதல்.

(4) சிறுதொழில் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களது விற்பனைக்கு உதவுதல்.

(5) "ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் வேலை வாய்ப்பு" பெருக்கத் திட்டத்தின்கீழ் தொடக்க மூலதனத் தொகையை வழங்குதல்.

(6) பின் தங்கிய பகுதிகளில் உள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு மத்திய மூலதன உதவித் தொகையை வழங்குதல்

(7) சிறு தொழில் பிரிவுகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி உதவி.

(8) தொழிற்பேட்டைகள், சீர் செய்த மனைகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசின் சார்பில் நிர்வகித்தல்.

(9) புதிய கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் சிறு தொழில்களுக்குக் கடன்கள் வழங்குதல்.

(10) அகதிகள் கூட்டுறவு நிதி—வளர்ச்சி வங்கியின் ஒத்துழைப்புடன் சிறு தொழில்களுக்கு கடன்கள்.

பணிக் கொட்டகைகள் கட்டுதல்.

2. 1978-ம் ஆண்டு ஜனவரி திங்கள் முடிய தவணைக் கொள் முதல் முறையில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் ரூ. 319 இலட்சம் மதிப்புள்ள பணிக் கொட்டகைகளை 347 தொழில் முனைவர்கள் பெற்றுள்ளனர். மேலும் 1977—78ஆம் ஆண்டில், அம்பத்தூர், ஹோசூர், ராணிப்பேட்டை, திருப்பூர், மாத்தூர், திருச்செங்கோடு, நாமக்கல், கிருஷ்ண கிரி, வடலூர் ஆகிய இடங்களில் ரூ 205 இலட்சம் மதிப் பீட்டுச் செலவில் மேலும் 200 கொட்டகைகளைக் கட்ட சிறு

தொழில் வளர்ச்சிக் கழகம் கருதி உள்ளது. இதனால் சுமார் 2,050 பேருக்கு கூடுதலாக வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் 1,070 பேர் கிராமப் பகுதிகளிலும், 980 பேர் நகர்ப்பகுதிகளிலும் வேலை வாய்ப்பு பெறுவர். அம்பத்தூர், கிண்டி, சேலம், திண்டுக்கல் போன்ற இடங்களில் உள்ள சின்னஞ்சிறு தொழிற் பிரிவுகள் தேவையை நிறைவு செய்ய கொட்டகை ஒன்றுக்கு 5,900 ரூபாய் செலவில் 14 இலட்சம் மொத்தச் செலவில், மேலும் 200 கொட்டகைகளைக் கட்டவும் கருதப்பட்டுள்ளது உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் 1977—78 முதல் 1979—80 வரை ரூ 220 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 120 பணிக்கொட்டகைகள் கட்டவும் கருதப் பட்டுள்ளது.

சிறு தொழில்களுக்கு இயந்திரங்கள் வழங்குதல்.

3. 1970 அக்டோபர் முதல் 1974-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை 1,201 தொழில் முனைவர்களுக்கு ரூ. 531 இலட்சம் மதிப்பிற்கு "சிட்கோ" உதவியுள்ளது. இதனால் சுமார் 15,600 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது 1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் "சிட்கோ" இயந்திரங்களுக்கான கடன் உதவியை நேரடியாக வழங்குவதை நிறுத்தியுள்ளது. தற்போது, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்—சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 1,686 இலட்சம் மதிப்பிற்கு இயந்திரங்கள் வாங்குவதற்காக 1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1978-ம் ஆண்டு ஜனவரி திங்கள் இறுதி வரை 1,050 சிறு தொழில் முனைவர் களுக்கு "சிட்கோ" உதவியுள்ளது.

4. மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்து வழங்குதல்.

இரும்பு, உருக்கு, சுட்ட நிலக்கரி, எரிசோடா, மாமிசக் கொழுப்பு, தீப்பெட்டி, மெழுகு, பொட்டாசியம் குளோரைடு ஆகிய மூலப்பொருள்களை ரூ. 2,910 இலட்சம் மதிப்பிற்கு 1970 அக்டோபர் முதல் 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய "சிட்கோ" வழங்கியது. மேலும் இதே காலவரையில், அதாவது, 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்களுடன் முடிவடைந்த கால அளவிற்கு ரூ. 321 இலட்சம் மதிப்பிற்கு ஏஜென்சி அடிப்படையில் அந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. 1975—76 லிருந்து இரும்பு உருக்குப் பொருள்களின் விற்பனையில் ஏற்பட்ட மந்த

நிலையின் காரணமாக, "சிட்கோ" முன்னெச்சரிக்கையுடன் அதன் செயல் திட்டங்களை மாற்றி அமைத்ததின் மூலம், இதர மூலப்பொருட்களை சிறுதொழில் அமைப்புகட்கு கிடைக்க வழிவகை செய்துள்ளது.

தமிழ்நாட்டில் சிறு தொழில்களுக்கு தேவையான கச்சாப் பொருட்கள் குறிப்பாக வத்தி மெழுகு, தீப்பெட்டி மெழுகு, பொட்டாசியம் குளோரைட், இரும்பு முதலியன தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் மூலம் விநியோகம் செய்யப் படுகின்றன. குறிப்பாக பாரபின் மெழுகு நமது தேவைக்கு சுமார் 10,000 டன்களும், தீப்பெட்டி மெழுகு 6,000 டன்களும் ஆண்டொன்றுக்குத் தேவைப்படுகின்றது. ஆயினும் இந்திய சர்க்காரிடமிருந்து இரண்டும் சேர்ந்து நமக்குக் கிடைப்பது சுமார் 6,600 டன்கள்தான். இது நமது தேவையில் 41 சதவீதமே ஆகும். ஆகவே தேவையான அளவு மெழுகு சிறு தொழில்களுக்கு வழங்க இயலவில்லை. இதை ஒட்டி சுத்திகரிக்கப்படாத மட்ட மெழுகு தனியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளது. இதனை சுத்திகரிப்பதற்கான தொழில்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. விரைவில் இவை செயல்படத் தொடங்கும் போது, நிலைமை சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் சென்னையிலுள்ள பெட்ரோலியம் எண்ணெய் ஆலையினர் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் அமைக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

5. சிறு தொழில் பிரிவுகளுக்கு விற்பனை வசதியை ஏற்படுத்தி தருதல்.

சிறு தொழில் உற்புத்திப் பொருள்களுக்கு விலை முன்னுரிமையை அளிக்கும் அரசின் முடிவையொட்டி, தொழிற்பிரிவுகளின் உற்பத்திப் பொருள்களை பெரிய அளவில் விற்பனை செய்ய 'சிட்கோ' விரும்பியது. இந்த ஆய்வாண்டில், தொழில் நுட்ப கைவினைப் பொருட்கள் பிரிவு தயாரித்த சீலிங் மின்விசிறியை விற்பனை செய்வதில் 'சிட்கோ' உதவியுள்ளது. பாலிதின் பைகள், தார்வர்ணச் சாயம், ஆட்டோமொபைல் புஷ்ஸ் போன்றவற்றிற்கு ஆணைகளைப் பெற்றுத் தருவதிலும் 'சிட்கோ' உதவியுள்ளது.

6. மத்திய மூலதன உதவித் தொகை வழங்குதல்

1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ம் நாள் வரை மத்திய முதலீட்டு உதவித் தொகை திட்டத்தின் கீழ் 639 புதிய பிரிவுகளுக்கு

(ஆ) கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

"மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,71,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, திருவண்ணாமலை, போளூர், செங்கம் ஆகிய வட்டாரங்களைத் தொழிலில் பின்னடைந்த வட்டாரங்களாக நிர்ணயித்துத் தொழில் ஆரம்பிப்பவர்களுக்குச் சலுகை தரக் கோரி விவாதிக்க —

"மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 5,71,38,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சர்க்கரை ஆலைகளில் வாங்கும் கரும்பின் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க —

"மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 5,71,38,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, நிறுவன ஊழியர்கள் மீது செலவிடப்படும் நிதியைக் குறைப்பதுபற்றி விவாதிக்க —

"மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 5,71,38,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க —

"மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 5,71,38,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நிகழ்ச்சி நிரலில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மானியக் கோரிக்கையைப் பிரேரேபிப்பார் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வரவில்லை. நிதியமைச்சரவர்கள்தான் பிரேரேபித்து உள்ளார். அட்லீஸ்ட் ஃபார் திரிப்ளை-க்காவது அவர்கள் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் நீண்ட காலமாக இந்த அவையிலே இருக்கிறார்கள். முதலமைச்சர் வருவாரா வரமாட்டாரா என்பதற்கு நான் பதில் சொல்வதற்கில்லை. முதலமைச்சர் என்று போட்டு விட்டு நிதியமைச்சர் பிரேரேபிக்கலாமா என்று கேட்டார்கள். அமைச்சரவையில் யார் வேண்டுமானாலும் முன்மொழியலாம். அதில் ஒன்றும் தவறு இல்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வருவதும் வராததும் தற்போதைய நிலையில் எனக்குத் தெரியாது. மானியக் கோரிக்கையை நடத்திச்செல்வோம். பிறகு பார்க்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, எந்த அமைச்சரானாலும் மானியக் கோரிக்கையை இங்கே வைக்கலாம். இருந்தாலும், முதலமைச்சரவர்கள் இங்கே வராததற்குக்காரணம் என்ன ? பதில் கூறுவதற்காவது வருவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, தொழில் வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக்குறிப்பு* ஒன்று இங்கே இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதை நான் படித்ததாக........

திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, முதல் அமைச்சரின் சார்பாக..........

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : முதலமைச்சரின் சார்பாக நான் படித்ததாக எடுத்துக் கொண்டு அவைக் குறிப்பிலே*இடம் பெறக் கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பிறகு அருமை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்கிறேன். முதல் அமைச்சரவர்கள் அவைக்கு பதில் கூற இருக்கிறார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

*திரு. துரை முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே முதல் அமைச்சர் சார்பிலே நம்முடைய நிதியமைச்சரவர்களால் இம்மன்றத்தில் வைக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்லிக் கொள்ள விழைகின்றேன்.

---

*715-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது

..தொழில் வளர்ச்சி குறித்து இந்த அரசு ஒரு முடிவான கொள்கையை இந்த நாட்டு மக்களுக்கு அறிவிக்கின்ற தருணம் வந்திருக்கிறது. ஆனாலும், இன்னும் எங்களுடைய கொள்கை இதுதான் என்று திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறாமல், குடிசைத்தொழில் சிறுதொழில், கிராமத் தொழில், ஆகியவைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதே இப்புதிய கொள்கையின் நோக்கமாகும் என்றும் மாநில அரசின் தொழில் கொள்கையும் மத்திய அரசின் தொழில் கொள்கையும் பொதுவாக ஒத்திருக்கின்றது என்றும் சொல்லி இருக்கிறார்கள். '' மத்திய அரசின் தொழில் கொள்கையும் மாநில அரசின் தொழில் கொள்கையும் இரண்டும் ஒன்றாக இருக்கிறது. ஆகவே எங்களுக்கு இடையிலே பேதம் இல்லை' என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

இப்போது மத்தியிலே இருக்கிற தொழில் கொள்கை குடிசைத் தொழில்களை விரிவுபடுத்துவது. இப்போது மினி குடிசைத் தொழில்கள் மூலமும் மேன்மேலும் விரிவுபடுத்துவது என்ற கொள்கையினை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு முறையில் அது வரவேற் கத்தக்கது. ஆனால் ஒரு நாட்டிலே தொழில் மட்டும் வளர்ந்திருக்குமானால் அந்த நாடு வெறும் உலைக்கூடமாகத் தான் காட்சியளிக்கும். ஒரு நாட்டில் பொருளாதாரம் மட்டும் வளராமல் இருக்குமானால் அந்த நாடு வெறும் மலையும் காடும் நிறைந்த பகுதியாகக் காட்சியளிக்கும். ஒரு நாட்டில் உளவியலும், அறிவியலும் மட்டும் வளருமானால், அந்த நாடு வெறும் அறச்சாலையாகத்தான் காட்சியளிக்கும். எனவே மூன்றும் ஒரு சேர வளரவேண்டும் என்ற தத்துவத்தை நான் ஒத்துக் கொள்கிறேன்.

குடிசைத் தொழில்கள் பெருக வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் போக வேண்டும் என்று இந்திய அரசு அறிவித்திருக்கின்ற கருத்தில் எனக்கு மாறுபாடில்லை. குடிசைத் தொழில் வளரவேண்டும். கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று தத்துவத்தைச் சொல்லிவிட்டு நடைமுறையிலே பார்க்கிறபோது வெறும் அறிக்கையாகத்தான் இருக்கிறதே தவிர நிறைவேற்றுகிற நிலை இல்லை.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். ஒரு தொழிற்சாலையில் 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மெஷினரி இருக்குமானால் அது சிறு தொழிலிலே வராது.

[முற்பகல் 10-50]

அது மீடியம் செக்டாருக்குப் போய்விடும். எனவே மெஷினரியின் விலை பத்து இலட்சம் ரூபாய் என்று சொல்வது இந்தக் காலத்தில் அவ்வளவு உயர்ந்ததல்ல. ஆகவே பத்து இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு மெஷினரீஸ் இருந்தால் அது சிறு தொழில் என்பதி

லிருந்து எடுபட்டு மீடியம் செக்டாருக்குப் போய்விடுகிறது. அப்படி மீடியம் செக்டாருக்குப் போய்விடுமானால் அதற்கு லைசென்ஸ் தருகின்ற அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து லைசென்ஸ் வாங்குவது என்றால் குதிரைக் கொம்பு வாங்குவது போலாகும், அவ்வளவு கஷ்டங்கள் அதில் உள்ளன என்பது தொழிலில் அதிகமாக ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

எனவே, ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்-க்கு முக்கியத்துவம் அளிக்கிற வகையில் 10 இலட்சம் ரூபாய் மெஷினரீஸ் என்றிருப்பதை விட அதை 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மெஷினரீஸ் இருந்தால் அது ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸாகத்தான் கருதப்படும் என்று இந்த அரசு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றும் கூற விரும்புகிறேன். அப்படியே சிறு தொழில் மீடியம் செக்டாருக்குப் போகிறது என்று நாம் வைத்துக் கொள்வோம். உடனே அதை ப்ரைவேட் லிமிடெட் கம்பெனி என்று மாற்ற வேண்டும் என்று சொல்கிறார்கள். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸை மீடியம் செக்டாருக்கு மாற்றுவது என்றால் உடனடியாக ஐ. டி. பி. ஐ. க்காரர்கள் ப்ரைவேட் லிமிடெட் கம்பெனியாக மாற்ற வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி ப்ரைவேட் லிமிடெட் கம்பெனியாக மாற்றுவதற்கு ஐ. டி. பி. ஐ. க்காரர்கள் சில நிபந்தனைகளை விதிக்கிறார்கள். காரணம் என்ன? நமக்கு 9 சதவீதம் வட்டியில் அவர்கள் பணம் கொடுக்கிறார்கள். பாங்கில் என்றால் 17 சதவீதம் வட்டி வாங்கி விடுகிறார்கள். ப்ரைவேட் லிமிடெட் கம்பெனியா இல்லையா என்று பார்ப்பதில்லை. புதிய கம்பெனி என்பதால் யாரும் பங்குத்தொகை வாங்க முன்வருவதில்லை. பார்ட்னர்ஷிப் கம்பெனியாக வைத்துக் கொள்கிற அளவில் சட்டத்திலேயே ஐ. டி. பி. ஐ. யை வற்புறுத்த வேண்டும்.

சமீபத்தில் நான் எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் பல்வேறு வட மாநிலங்களுக்குச் சென்று பார்த்தேன். அங்கே தொழில் வேகமாக வளர்ந்து வருகிறது. ஹரியானா, பஞ்சாப், லுதியானா போன்ற இடங்களில் தொழில் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்திருப்பதற்குக் காரணம் என்ன என்றால் சில கட்டுப்படுத்தப்பட்ட சட்டங்கள் அங்கே ஏட்டில் இருக்கின்றன. ஆனால் நாட்டில் இருப்பது கிடையாது.

லுதியானா சென்று பார்த்தால் அங்கே பல சிறுதொழில்கள் உள்ளன. ஒரே வீட்டில் வீட்டின் முற்பகுதியில் தொழில் செய்கிறான். பிற்பகுதியில் குடியிருக்கிறான். ஆனால், அவர்களிடம், இதை உங்கள் முனிசிப்பாலிட்டி ஒத்துக் கொள்கிறதா என்று கேட்டால்—எங்கள் ஊரில் ஒரு தொழிலை நடத்துவது என்றால் இவ்வளவு அடி நீளம் வேண்டும், இவ்வளவு அடி அகலம் வேண்டும் ஜன்னல்கள் இவ்வளவு உயரத்தில் இருக்க வேண்டும் கதவுகள் இருக்க வேண்டும் என்றெல்லாம் சட்டதிட்டங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்களே என்று சொன்னால்—எங்கள் மாநிலத்திலும் அப்படிப்பட்ட சட்டங்கள் இருக்கின்றன, ஆனால், தொழில்கள் வளர வேண்டும் என்ற ஆசையின் அடிப்படையில் அவற்றையெல்லாம் இங்கே அமல்படுத்துவதில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவேதான் அங்கே தொழில் வளர்ச்சி இருக்கிறது.

மகாராஷ்டிராவில் கூட, பார்த்தேன். விதர்பா கார்ப்பரேஷன் என்றிருக்கிறது. அது என்னவென்றால், ஒரு மாவட்டத்தை எடுத்து அந்த மாவட்டத்தின் தொழில் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். வட ஆற்காடு மாவட்டம் அல்லது இராமநாதபுரம் மாவட்டம் என்றால் அந்த மாவட்டத்தில் இருக்கிற மூலப் பொருள்களைக் கொண்டு தொழிற்சாலை துவங்குவதற்கு முக்கியக் கவனம் செலுத்துகிற வகையில் ஒரு தனிக் கார்ப்பரேஷன் மாவட்டந்தோறும் அமைத்துத் தருவதாகும். அப்படி அமைத்தால்தான் இங்கே வேகமான முறையில் தொழில் வளர்ச்சி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு ஸீட் காப்பிட்டல். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இதுவரையில் கிட்டத்தட்ட ஆறு பேர்கள் அதற்காக அப்ளை செய்திருந்தும் ஒருவருக்குக்கூட ஸீட் காபிட்டல் கிடைக்கவில்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஸீட் காப்பிட்டல் கிடைக்க வேண்டுமென்றால், அந்தத் தொழிற்சாலையில் இருக்கின்ற முதலாளி டெக்னிக்கலி க்வாலிபைட்—ஆக இருக்க வேண்டும் அல்லது பத்து ஆண்டு எக்ஸ்பீரியன்ஸ் இருக்கவேண்டும். இது முதல் கண்டிஷன். இரண்டாவது கண்டிஷன் The unit should be in the backward area; மூன்றாவது கண்டிஷன் The unit should go from small-scale sector to medium sector. நான்காவது கண்டிஷன், It should earn foreign exchage. இந்த நான்கு க்ரைட்டீரியா இருக்குமானால் அவற்றிற்கு ஸீட் காப்பிட்டல் தரலாம் என்று சொல்கிறார்கள். ஒருவர் 60 இலட்சம் ரூபாய் முதலீட்டில் ஒரு தொழிலைத் துவக்குவதாக என்று வைத்துக் கொள்வோம். 15 சதவீதம் ப்ரமோட்டர் கொடுக்க முன்வரவேண்டும். கிட்டத்தட்ட 9 இலட்சம், இண்டரஸ்ட் ப்ரீலோன் 10 சதவீதம் தருகிறார்கள் அதாவது 6 இலட்சம் ஒன்பதில் ஆறு போக மூன்று இலட்சம் ரூபாய் கட்ட வேண்டியிருக்கும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஐ. டி. பி. ஐ. ஸீட் காப்பிட்டல் இதுவரை யாருக்கும் தரவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், கன்ஸர்வேட்டிவ் முறையில் நினைப்பவர்கள் நிறைந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

[திரு. துரைமுருகன்] [1978 மார்ச் 22

ஸிப்காட், டீ.ஐ.ஸி.ஸி. டிட்கோ இவற்றிலிருந்து ஒரு அப்ளிகேஷன் கேட்டுப் பெற்றால் அது 200 பக்கங்கள் இருக்கும், அதை பில்அப் செய்து கொடுப்பதற்குள் தொழிலே வேண்டாம் என்று போய் விடுகிறார்கள். ஸிப்காட்டில் அப்ளிகேஷன் வாங்குகிறார்கள், விவரங்கள் கேட்கிறார்கள். எல்லாவற்றையும் சாங்க்ஷன் செய்வது கிடையாது. ஸிப்காட்டில் ஒரு அப்ளிகேஷன் போனால் அதை உடனடியாக எடுத்துக்கொள்வது என்ற நிலை அங்கே உருவாகவில்லை. SIDCO என்று இருப்பது சிறு தொழிலுக்காக? அதன் மூலம் அப்ளிகேஷன் வாங்கி, சரிபார்த்து ஸ்டேட் கமிட்டிக்கு சிப்காட்டிற்கு அனுப்புகிறார்கள். சிப்காட் என்பது மீடியம் அண்டு லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்டிரீக்காகத்தான். எனவே சிட்கோவிடம் இருந்து வரும் அப்ளிகேஷனை சிப்காட் மாற்றாந்தாய் மனப்பான்மையில்தான் மதிக்கிறது. எனவே, சிட்கோ, தனித்து இயங்க வேண்டும். சிறுதொழில் வளர்ச்சிக்காக நமக்கு சப்ஸிடியாக 15 சதவீதம் கொடுக்கிறார்கள். அது ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸாக இருந்தாலும் சரி, மீடியம் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸாக இருந்தாலும்சரி இந்த சப்ஸிடி கொடுக்கப்படுகிறது. ஆனால், சிறிய தொழில் செய்கின்றவர்கள் இந்த சப்ஸிடியை வாங்க முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

அடுத்து, என்னுடைய ராணிப்பேட்டை பகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. முன்பெல்லாம் எக்ஸ்போர்ட் பண்ணுவதில் செமி—லெதர் குட்ஸ் என்று இருக்கும். அதை எக்ஸ்போர்ட் செய்து கொண்டிருந்தார்கள். முன்பெல்லாம் ரூ100-க்கு மதிப்புள்ள தோல் ஏற்றுமதி செய்வதாக இருந்தால், 25 ரூபாய் எக்ஸ்போர்ட் ட்யூட்டியாக கட்ட வேண்டும். முன்பு செமி லெதர் என்று இருக்கும் போது அதிகமான அளவில் மெஷின்கள் தேவையில்லை, ஆட்கள் தான் தேவை இருந்தது. மூலதனமும் குறைவு. ஆனால், இப்போது மத்திய சர்க்கார் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. புதியதாக ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றால் ''பினிஷ்டு லெதர்'' ஆக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பினிஷ்டு லெதர் ஏற்றுமதி செய்தால் 25 ரூபாய் எக்ஸ்போர்ட் ட்யூட்டி கட்ட வேண்டிய தேவையில்லை. இது தவிர இன்சென்டிவ் என்ற முறையில் 13·6 சதவீதம் என்று அளிக்கப்படுகிறது. மொத்தம் ஊக்கம் என்ற முறையில் கொடுக்கப்படுவதையும் சேர்த்துக் கொண்டால் 38·6 சதவீதம் மத்திய அரசாங்கத்திற்கு வரி போகாமல் நின்று விடுகிறது. ஆகவே, ஏற்றுமதி செய்வதில் செமி லெதர் என்பதும் இருக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சமீபத்தில் அரசாங்கம் இந்தத் தொழிற்சாலைகளுக்கு ஓர் உத்தரவை அனுப்பியிருக்கிறார்கள். ராணிப்பேட்டை பகுதியில் 8க டானரீஸ் இருக்கின்றன. அதாவது வட ஆற்காடு மாவட்ட சுகாதார அதிகாரி இதை அனுப்பியிருக்கிறார். தோல் பதனிடும்

1978 மார்ச் 22] [திரு. துரை முருகன்]

தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீரை அகற்றுதல் சம்பந்தமாக உத்தரவை அனுப்பியிருக்கிறார்கள். அந்த உத்தரவு எப்படியிருக்கிறதென்றால், தென் இந்திய தோல் பதனிடுபவர்கள் வியாபாரிகள் சங்கம் அனுப்பியிருக்கிறது. வட ஆற்காடு மாவட்ட சுகாதார அதிகாரி அவர்கள்தோல் ஷாப்பு கழிவு நீர் சுத்தம் செய்து வெளியேற்றும் விஷயமாக— 31—3—1978-ஆம் தேதிக்குள் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு, தோல் ஷாப்பு கழிவு நீரை வெளியேற்ற தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால், உரிமங்களை (லைசன்ஸ்) ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதாவது இந்த மாதத்திற்குள் இந்தக் கழிவு நீரை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால் உரிமங்கள் ரத்து செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 48 தொழிற்சாலைகளில் கிட்டத்தட்ட 35 ஆயிரம் அரிசத்ன தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றார்கள். இதில் 100 கோடி ரூபாய் அளவுக்கு மூலதனம் முடங்கிக் கிடக்கிறது. 31—3—1978-க்குள் கழிவு நீரை அகற்றுவதற்கு மாற்றுப் பரிகாரம் செய்யாவிட்டால், தொழிற்சாலைகளை மூடிவிடுவோம் என்று அறிவித்திருப்பதால் இதில் என்ன ஏற்படும் என்றால், 35 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போகும், 100 கோடி ரூபாய் மூலதனம் முடக்கப்பட்டுவிடும். 48 தொழிற்சாலைகளும் மூடப்படும். இருக்கின்ற தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால் பெரிய தொழிற்சாலையாக ஒரேஒரு பெரிய தொழிற்சாலைதான் இருக்கிறது இதிலுள்ளவர்கள் மத்திய சர்க்காரிலிருந்து 2 லட்சம் ரூபாய் மானியம் வாங்கியிருக்கிறார்கள். ஸ்டேட் கவர்ன்மெண்டிலிருந்தும் கடன் ஏதாவது வாங்கியிருப்பார்கள். இவர்கள் மட்டும் இதற்குத் தனியாக டாங்க் கட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கழிவுநீரைப்பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து போகின்ற கழிவுநீரால் பயிர்கள் நாசமாகின்றன என்பது உண்மை தான். இருந்தாலும் 31ஆம் தேதி என்று காலக்கெடு கொடுக்காமல், காலத்தை இன்னும் நீட்டி ஒரு குழு அமைத்து ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பட்டு உற்பத்தியைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அரசு இதில் வேகமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதற்காக நான் அரசைப் பாராட்டக் [illegible]ருக்கிறேன். இதில் ஈடுபாடு உடையவன் என்ற கா[illegible] விரைவாக செயல்பட்டு வரும் அதிகாரிகளையும் [illegible] — தவற மாட்டேன்.

ஆனால், இந்த பட்டு நூலை உற்பத்தி செய்கின்றோமே தவிர அந்த நூலை யார் வாங்குவது? பட்டு நூல் தறிகளை மட்டும் எடுத்துக்கொண்டால் 25 ஆயிரம் ஹாண்ட் லூம்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் எங்கிருந்து பட்டு நூல்களை வாங்குகின்றன

என்றால் மைசூரில் போய் வாங்குகிறார்கள். காஞ்சிபுரத்தில் மட்டும் 14 கூட்டுறவு சொஸைட்டிகள் இருக்கின்றன. இந்த அரசாங்க கூட்டுறவு சொஸைட்டிகள் கூட எங்கே தங்களுக்கு தேவைப்படும் பட்டு நூலை வாங்குகிறார்கள் என்றால் மைசூரில் தான் போய் வாங்குகிறார்கள். காரணம், அங்கே கொஞ்சம் கமிஷன் கிடைக்கும், அங்கே போகின்றவர்களுக்கு லாட்ஜிங் வசதி போன்றவைகளைச் செய்து கொடுப்பார்கள். இதன் காரணமாக அங்கே போய் வாங்குகிறார்கள். தமிழ்நாட்டில் உற்பத்தி செய்கின்ற பட்டு நூலுக்கு விலையில்லாமல், இவைகளை எல்லாம் நேரடியாகக் கூட கொண்டுபோக முடியாமல், திருட்டுத்தனமாக மைசூருக்குக் கொண்டுபோய் விற்க வேண்டிய நிலைமை பட்டு உற்பத்தியாளருக்கு ஏற்பட்டிருக்கிறது. அரசு இதற்கு செய்ய வேண்டியதெல்லாம் உடனடியாக ஓர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். சொஸைட்டிகள் பூராவும் இங்கேயே தமிழ்நாட்டிலேயே உற்பத்தியாகின்ற பட்டு நூலை வாங்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கவேண்டும். நமக்கு ஏழு லட்சம் கிலோ தேவையிருக்கிறது. நாம் உற்பத்தி செய்வதோ 25 ஆயிரம் கிலோ மட்டும்தான். அப்படியிருந்தும் விலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அது மட்டும் அல்ல. இண்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மெண்ட் பட்டை உற்பத்தி செய்கின்றது. ஆனால் இதை வாங்க வேண்டியது கைத்தறி இலாகா. இப்படி இரண்டு வெவ்வேறு இலாகாக்கள்.

[முற்பகல் 11-00]

ஆகவே, இந்த இரண்டையும் ஒன்றாக இணைத்து ஒரு தனி இலாகாவாக மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி இந்த பட்டு உற்பத்தியிலும், அரசாங்க அதிகாரிகள், ரீலர்ஸ், வீவர்ஸ் போன்றவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்த்து, மைசூரிலே இருப்பதைப்போல் ஒரு பெடரேஷன் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறன்.

அடுத்து, சர்க்கரை ஆலையைப்பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு விவசாயிகள் ஆண்டு முழுவதும் உழைத்து கரும்பை உற்பத்தி செய்கிறார்கள். அப்படிக் கரும்பை உற்பத்தி செய்கிறபோது, 'கட்டிங் ஆர்டர்' எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் செருக்கிறார்க்கிறார்கள். அப்போதுதான் அங்கே உள்ள மில் மூடப்டுக்ஸ்போது. அப்படி வேலூரிலே உள்ள மில் மூடப்படுவதால், செய்யாற்றிலே உள்ள விவசாயிக்கு அந்தக் கரும்பை ஆம்பூர் மில்லுக்கு எடுத்துச் செல்லுமாறு சொல்லப்படுகின்றது. அப்படி அந்த விவசாயி அந்தக் கரும்பை எடுத்துச் செல்ல நினைக்கும்போது, அந்த மில்லும் மூடப்படுகிறது. இதற்கெல்லாம் லாரி சார்ஜ் யார் கொடுப்பார்கள்? ஆம்பூரிலும் மில் ஸ்டிரைக் ஏற்படுகிறது. உடனே, அந்தக் கரும்பை திருப்பத்தூருக்குக் கொண்டுபோகும்படி, செய்யாற்றிலே உள்ள விவசாயிக்குச் சொல்லப்படுமானால், அந்த விவசாயி கரும்பை

திருப்பத்தூருக்குக கொண்டு செல்வதற்கு எவ்வளவு லாரி சார்ஜ் கொடுக்க வேண்டியிருக்கிறது? இப்படிப்பட்ட நிலைமையைப்போக்க வேண்டுமானால், அந்த லாரி சார்ஜை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும். இது ஒன்று.

இரண்டாவது, இந்தக் கரும்புக்கு டன்னுக்கு விலை குறைவாகக் கொடுக்கப்படுகிறது. இதை உயர்த்திக் கொடுக்கவேண்டும். இதற்குக் காரணம், லாபத்தைக் காட்ட வேண்டுமென்று கருதுகிறார்கள். இப்படி லாபத்தைக் காட்டுவதால், மத்திய சர்க்காருக்கு இன்கம்-டாக்ஸாகக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இப்படி அதிக விலை கொடுத்தால் நஷ்டம் வந்தால் என்ன செய்வது என்று கேட்டால், ஷேர்கள் இருக்கிறது, அதைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளலாம். எனவே, கரும்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே போளூரிலே ஒரு சர்க்கரை ஆலை துவங்குவதாக இருந்தது. வெகு நாட்கள் ஆகியும் இன்னும் துவக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக போளூரிலே ஒரு சர்க்கரை ஆலையைத் துவக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சந்தன ஆலை ஒன்றை ஜவ்வாது மலையில், ஜமுனாமத்தூரிலே ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னார்கள். அதையும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்றும், அதேபோல், அரசாங்கத் துறையிலே ஒரு காகித ஆலை ஒன்றும் தொடங்க வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, போளூர், செங்கம், திருவண்ணாமலை ஆகிய இந்தப் பகுதிகளை இண்டஸ்ட்ரியலி பேக்வேர்ட் ஏரியாக்கள் என்று அறிவிக்குமாறும் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடைசியாக ஒன்றை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட் என்ற ஒரு கம்பெனி மேட்டூரிலே இருக்கிறது. அந்தக் கம்பெனி பி.வி.சி. பொருளைத் தயாரிக்கின்றது. அதற்கு மூலப் பொருள்களாகத் தேவைப்படுவது ஆல்கஹாலும், குளோரினும் ஆகும். இந்தக் கம்பெனிக்கு 1975லிருந்து எக்சைஸ் டூட்டி 10 பைசா என்றும், காலனேஜ் 10 பைசா என்றும் அரசாங்கம் விதித்து இருந்தது. அதன் மூலம் இந்தக் கம்பெனி நாள் ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு 16,000 ரூபாய் கொடுக்க வேண்டும். அதாவது மாதம் ஒன்றுக்கு 4.8 லட்சம் ரூபாய் இந்தக் கம்பெனியிலிருந்து அரசாங்கத்திற்கு வந்தது. ஆனால், இப்படி வந்து கொண்டிருக்கிற நேரத்தில், திடீரென்று அப்போது இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு கவர்னர்

[திரு. துரை. முருகன்] [1978 மார்ச் 22

அவர்கள் ஆட்சி ஏற்பட்டு, அவர்களுக்கு ஆலோசனை சொல்வதற்காக அரிய பெரியவர்கள் இரண்டு பேர்கள் வந்தார்கள். அதிலே ஒருவர் ஆர். வி. சுப்பிரமணியம் என்பவர். அவருக்கும் இந்தக் கம்பெனியின் முதலாளியாக இருக்கின்ற ஒரு நாராயணன் என்பவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அப்படி இருந்தது மட்டுமல்ல, அவருடைய காரிலே தான் இந்த ஆர். வி. சுப்பிரமணியம் திருப்பதிக்குப் போவார். அந்தக் காரின் எண், அந்தக் காரை ஓட்டியவர் யார் என்ற விவரங்களைத் தரவும் தயாராக இருக்கிறேன். அவர் ஏ. ஐ. சி. சி. சோவினியருக்கு (மலர்) இந்தக் கம்பெனியிடத்திலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் பணம் வாங்கியிருக்கிறார். அதற்குப் பிறகு என்ன நடந்தது, அவர் பணம் வாங்கினாரா என்ற கேள்விகளுக்குள் எல்லாம் நான் போகத் தயாராக இல்லை; அது தேவையற்றதும்கூட. ஆனால் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் கம்பெனிக்கு ஏதாவது சலுகைகள் செய்யவேண்டுமென்று ஆர். வி. சுப்பிரமணியம் நினைக்கிறார். அப்படி நினைத்த பிறகு என்ன செய்கிறார் என்றால், ஜீ.ஓ. எண்.எம்.எஸ். 168, தேதி 6–6–1977-ல் ஒரு ஆர்டர் போடுகிறார். ஏற்கெனவே, 10 பைசா எக்சைஸ் டூடி என்றும், 10 பைசா காலனேஜ் சார்ஜ் பர் லிட்டர் என்று இருந்ததை மாற்றி காலனேஜ் சார்ஜ் 10 பைசா Denatured Spirit-க்கு என்று மட்டும் போட்டுவிடுகிறார். அப்படி போடுவதன் விளைவு என்ன ஆயிற்று? அந்த டிஸ்டிலரி கம்பெனிக்காரர்கள் Toluence என்ற additive-ஐ டிஸ்டிலரிக்கே அனுப்பி அதை Rectified Spirit டோடு கலந்து விடுகிறார்கள். எனவே, அவர்கட்கு Denatured Spirit கிடைத்துவிடுகிறது.

இதனால் கம்பெனிக்கு லாபம் தினசரி 10,000 ரூபாய் கிடைக்கிறது; அரசுக்குப் பத்தாயிரம் ரூபாய் நஷ்டம் வருகிறது. கம்பெனிக்கு மாதம் 3 இலட்சம் ரூபாய் லாபம் கிடைக்கிறது என்றால் அரசாங்கத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கம்பெனிக்கு இப்படி ஒரு சலுகையை ஆர். வி. சுப்பிரமணியம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். ஒரு வேளை கம்பெனி நஷ்டத்தில் ஓடியிருக்கும், அதற்காகச் செய்திருப்பார்கள் என்று சொல்லக்கூடும். கம்பெனி நிதிநிலை நன்றாக இருந்திருக்கிறது. 1975–76 ஆம் ஆண்டு நிகர லாபம் 47 லட்சம் ரூபாய்; 1976–77-ல் நிகர லாபம் 68 லட்சம் ரூபாய். அந்தக் கம்பெனி அந்த அளவிற்கு லாபத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

உங்கள் ஆட்சி வந்தபிறகு, இது ஏன் இப்படி இருக்கிறது என்று பார்த்து, 1975-ஆம் ஆண்டு எங்கள் ஆட்சி இருந்த நேரத்தில் எந்த அளவில் அவர்கள் அரசுக்குத் தொகை செலுத்த வேண்டுமென்று உத்தரவு போட்டிருந்தோமோ அந்த அடிப்படையில் ஆர். வி. சுப்ரமண்யம் போட்டதை மாற்றி உத்தரவு பிறப்பித்தது. ஆனால் என்ன நிலைமை

1978 மார்ச் 22] [திரு. துரை முருகன்]

தெரியுமா? அந்த முதலாளி நேராக வந்தார். இங்கிருக்கிற சில பேரைப் பார்த்தார்; இதெல்லாம் நியாயமா என்று கேட்டார். அப்படிக் கேட்ட பிறகு நிலைமை திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறது. எப்படி மால்கோ கம்பெனிக்காரர் கட்டவேண்டிய 9½ கோடி ரூபாய்க்கு ஸ்டே வாங்கி கோர்ட்டுக்குப் போயிருக்கிறாரோ அதே மாதிரி கோர்ட்டுக்குப் போகிறார்கள்.

மால்கோ கம்பெனிக்காரர் ஸ்டே கோரி கோர்ட்டுக்கு சென்ற நேரத்தில் அரசாங்கத்தின் சார்பிலுள்ள அட்வகேட் ஜெனரல் கோர்ட்டில் ஆஜராகவில்லை. இப்போது அந்த கம்பெனிக்காரர் அப்சல்யூட் ஸ்டே வாங்கியிருக்கிறார். அதை எதிர்த்து அட்வகேட் ஜெனரல் வாதாடவில்லை. அதைப்போலவே, இந்த கம்பெனிக்காரரும் வந்திருக்கிறார். கோர்ட்டுக்குப் போங்கள், ஸ்டே வாங்குங்கள் என்று கூறுகின்ற நிலைமைதானா? அல்லது இந்த கம்பெனிக்காரரையாவது நீங்கள் எதிர்க்கப்போகிறீர்களா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன். மால்கோ விவகாரத்தில் எதிர்க்காமல் இருந்தது போல் இந்தக் கம்பெனி விவகாரத்திலும் எதிர்க்காமல் இருந்துவிடுவீர்களோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதுபற்றி இந்த சபைக்கு எடுத்துக்கூற வேண்டுமென்று கூறி, இந்த வாய்ப்பை அளித்தமைக்காக நன்றிகூறி விடைபெறுகிறேன்.

*திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் அவையில் இன்று வைக்கப்பட்டிருக்கின்ற தொழில், தொழில் மேம்பாட்டு வளர்ச்சி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய எண்ணக் கருத்துக்களையும் இணைத்துக் கொள்ளுவதை என்னுடைய கடமையாகக் கருதி களிப்பெய்துகிறேன்.

தொழில், தொழில் வளர்ச்சி மேம்பாடு பற்றிய கொள்கை விளக்கம் அவையில் வைக்கப்பட்டிருக்கிறது. அருமை மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். திட்டங்கள் எல்லாம் இல்லையா, திட்டங்கள் காணப்படவில்லையே என்றார்கள். திட்டங்கள் எல்லாம் இதய நாடியாக இதிலே இழையோடி இருப்பதைக் காண முடிகிறது. மைய அரசு கொண்டுவந்திருக்கிற திட்டங்களோடு மாநில அரசு தொழில் கொள்கையில் அவற்றை நடைமுறைப் படுத்தும் போது இடர்பாடுகள், அல்லல்கள், இடையூறுகள் இருந்தால் அவற்றை அவ்வப்போது களையும் பணியும், அதற்கு ஆவன செய்யும் முறைகளும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் காணப்படுகிறது என்பதைஅவர்களுடைய கவனத்திற்குக்கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

''ஆலைகள் வைப்போம், கல்விச்சாலைகள் வைப்போம்' என்று புரட்சிக்குயில் பாரதியாரின் எண்ணக் கருத்துக்களுக்கு உருவம் கொடுக்கும் வண்ணமும், உயிர்கொடுக்கும் வண்ணமும்

[திரு. எஸ். வி. இராமசாமி] [1978 மார்ச் 22

உழைப்பே உயர்வு, உழைப்புக்கேற்ற, தேவைக்கேற்ற வேலைகள் நாட்டிலே தேவை. பொருளாதார வளம் கிராமத்திலே பரவலாக இருக்க வேண்டும், டி-சென்ட்ரலிசேஷன் என்று சொல்லுகிற தத்துவப்படி பொருளாதார விஞ்ஞான கருத்துக்களுக்கேற்ப, ஜப்பான், ஜெர்மனி போன்ற வாழ்விழந்த நாடுகள் எல்லாம் வளம் பெற்ற வரலாற்றினை பின்னணியாகக் கொண்டு அந்த வரலாற்றைப் படைக்கும் வரலாற்றுப் பின்னணியில் அந்த வரலாற்றைப் படைக்கும் வண்ணம் கிராமங்களில் ஆலைகள் வேண்டும், சங்கொலிக்கவேண்டும்; அதனால், உழைப்பாளிகள் வளம் பெறவேண்டும் என்ற தத்துவப்படி கொடுக்கப்பட்டிருக்கின்ற மானியக்கோரிக்கை விளக்கக் குறிப்புகள் அமைந்திருக்கின்றன என்பதை அறிய மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

[முற்பகல் 11-10]

அருமை உறுப்பினர் துரை முருகன் கூறியதைப் போல் சிறிய தொழில்களையும் நடுத்தரத் தொழில்களையும் அவைகளை எடுத்து நடத்துகிறவர்கள் முனையும்போது முடிக்கும் பொழுது வருகின்ற இடர்பாடுகளை — அவைகளை எல்லாம் நானும் என்னுடைய அனுபவத்தின் வாயிலாக அறிந்திருக்கிறேன்.— அவர்கள் கடன்கள் பெறுவதிலிருந்து, உரிமங்கள் பெறுவதிலிருந்து சந்திக்கின்ற இடர்பாடுகளைக் களைவது மிகவும் சாலச் சிறந்ததாகும் என்பதை இந்தச் சபையிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய பெரம்பலூரில் நாம் எல்லாம் பூரிக்கும் வண்ணம் பெரிய ஆலை, சர்க்கரை ஆலை, அரசின் ஆலை இருந்தபோதிலும், அங்கே வேறு எந்தவிதமான தொழிற்சாலையும், சிறிய தொழிற்சாலையோ, நடுத்தர தொழிற்சாலையோ, கிராமத் தொழிற்சாலையோ கூட இல்லை என்பதை மெத்த வருத்தத்தோடு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அங்கே பரவலாக தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்ற முறையிலே என்னுடைய சில கருத்துக்களை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அரும்பாவூர் என்ற ஊரிலே, வண்ண வண்ண வேலைப்பாடுகளை, சித்திர வேலைப்பாடுகளை மரக்கட்டைகளிலே, சந்தனக் கட்டைகளிலே செய்து—நானே அவைகளையெல்லாம் கண்ணுற்று அகமகிழ்ந்து இருக்கிறேன். அங்கே ஏழைத் தொழிலாளர்கள் சிறிய மூலதனத்தைக் கொண்டு அவர்களுடைய உழைப்பாலே தென்னகத்தினுடைய கலை நுட்பத்தை அதிலே எல்லோரும் காணத்தக்க அளவிற்கு, அத்தகைய வேலைப்பாடுகளை அவர்கள் செய்தும் அரசு அவைகளுக்கு ஆதரவு கொடுக்காத நிலையில் அந்த ஏழைத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டு டெல்லி மாநகரத்துக்கு எடுத்துச் சென்று தங்களுடைய சிற்பங்களை

1978 மார்ச் 22] [திரு. எஸ். வி. இராமசாமி]

விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. தொழிலாளர் துறை இயக்குனர் அவர்களும் இதை அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அரும்பாவூரிலே இருக்கின்ற அந்த ஏழைத் தொழிலாளர்களை ஊக்குவிக்கவும் சிப்காட் நிறுவனத்தின் மூலமாக உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து அதை விரிவு படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்னமங்கலம், கிருஷ்ணாபுரம் ஆகிய ஊர்களிலும், சுற்றுப் புற ஊர்களிலும் பட்டுப்பூச்சி வளர்ப்பு—என்னுடைய தொகுதியை நான் சுற்றிப் பார்த்த போது கண்டிருக்கிறேன்— அங்கே முசுக்கொட்டை என்ற மரங்கள் இருப்பதால் அவைகளை வளர்க்கிறார்கள், தீவிர பட்டுப்பூச்சி வளர்ப்பு நடவடிக்கையின் பெயராலே அதை ஊக்குவித்து கிராமத் தொழிற்சாலை என்ற பெயரிலே அதற்கு வாய்ப்புக் கொடுத்து, அதற்கு ஆக்கம் கொடுத்து விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி மாநகரத்திலே அநேகர் அறிந்திருப்பார்கள், அங்கே செயற்கை வைரம், ஜாபர்ஷா தெருவிலே பெரிய தொழிற்சாலை போன்று அங்கே தனியார்கள், சேட்ஜி என்று சொல்லப்படுகிறவர்கள் தொழிலாளர்களுடைய ரத்தத்தை உறிஞ்சி பெரிய லாபத்தைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. நான் அரசுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக அவைகளை நாட்டுடைமையாக்கும் வகையில் நடுத்தர தொழிற்சாலை ஆக்கி, செயற்கை வைரத் தொழிற்சாலையை உருவாக்கினால் அதன் மூலமாக அங்கே உள்ள தொழிலாளர்களுக்கும் அது நலம் பயக்கும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். நம்முடைய அரசின் வருவாயும் பெருகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உப்பிலியாபுரம், வரகூர், தொட்டியம் போன்ற பகுதிகளிலே தொழிற்சாலைகளே கிடையாது. அந்தப் பகுதியிலே காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்துகின்ற முறையிலே அதற்கு வேண்டிய மூலப்பொருட்கள், கச்சாப் பொருட்கள், அங்கே உள்ள பச்சை மலையிலிருந்து கிடைக்கின்ற மூங்கில்கள், மரங்கள், சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கின்ற கரும்புச் சக்கைகள், பேட்டைவாய்த்தலை சர்க்கரை ஆலையிலிருந்து பெரம்பலூர் சர்க்கரை ஆலையிலிருந்து, மோகனூர் சர்க்கரை ஆலையிலிருந்து வருவதற்கு சாலை வசதிகள் இருக்கின்றன. இணைப்புச் சாலைகள், குளித்தலை மூலமாக, முசிறி மூலமாக வசதிகள் இருக்கின்றன. ஆகவே, பெரம்பலூரில் அதை மையமாக வைத்து ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். வி. இராமசாமி] [1978 மார்ச் 22

அடுத்து, துறையூரில் உள்ள கண்டசாரி தொழிற்சாலை உயிரற்று இருக்கிறது, செயல்படாமல் இருக்கிறது. தொழிற் கருவிக் கூடங்களைக் கொண்ட தொழிற்சாலையை அமைக்க இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

துறையூரிலுள்ள பெரிய பிரச்னை என்னவென்றால் தொழிலாளர்கள் பிரச்னைதான். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அண்மையிலேகூட அவர்கள் போராடினார்கள். அவர்களுடைய தொழிலை மேம்பாடு செய்வதற்கான வசதியற்ற நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, மேஜர் ப்ராஜக்ட் என்று மாஸ்டர் வீவர்ஸ் வருகிறார்கள். துறையூரிலே அமைத்தால், துறையூருக்கு அருகாமையில் பல நெசவாளர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு ஒருங்கிணைந்த தொழிற்சாலையை உருவாக்குவது மிகவும் தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தரிசு நிலங்களாக இருக்கின்ற விவசாய நிலங்களை ஒன்றாகச் சேர்த்து சிறு வசதி படைத்தவர்களுக்கு மேலும் வசதி செய்து, தரிசு நிலங்களை ''வேளாண்மைத் தொழிற்சாலை'' யாக உருவாக்குவது பலன் உள்ளதாக இருக்கும் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, முனைப்புடன் இந்த மானியக்கோரிக்கையின்மீது சொல்லிக்கொள்வது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். பெரம்பலூரிலே பண்டித ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை உண்மையிலேயே திருச்சி மாவட்டத்திற்குப் புகழைத் தருவதாக, திருச்சி மாவட்டத்திற்கு மகிழ்வு தருவதாக அமைந்திருக்கிறது என்பதை வல்லமை படைத்த பெருமையுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். வல்லமை படைத்த உயர் அதிகாரிகளின் உழைப்பால் உண்மையிலேயே மிகவும் சீராக, சிறப்பாக நடைபெறுவதை நானே நேரில் பார்த்தேன். அருமையான சர்க்கரை, கரும்பு அரைவை, கரும்பு சேதாரம் இல்லாத நிலைமை இருக்கிறது. அங்கேயுள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன், சீராகவும், சிறப்பாகவும் அது வளர்ந்து வருவதற்குப் பாராட்டாகச் சொல்லிக்கொள்கிறேன். அங்கே அது மேலும் மேலும் வளர்வதற்கு வேண்டுமானால் இரண்டு பெரும் குறைகளைக் களைவது அரசினுடைய தலையாய கடமை என்பதாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்வேன்.

முதலாவதாக, சாலை பராமரிப்பு. அங்கே சாலை அபிவிருத்தி தேவை. கிராமத்திலேயிருக்கின்ற கரும்புகளைக் கொண்டுவருவதற்கும், ஆலைகளிலே உற்பத்தியாகின்ற சரக்குகளை வெளியில் கொண்டு செல்லவும் சாலைகளை மிகவும் சீர்திருத்தம் செய்ய வேண்டும். கீழமாத்தூரிலிருந்து 9 கிலோ மீட்டர் தூரமுள்ள ஓகளூர் வரை செல்லும் சாலை, 11 கிலோ மீட்டர் தூரமுள்ள கீழமாத்தூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து

1978 மார்ச் 22] [திரு. எஸ். வி. இராமசாமி]

வாலிசௌந்திர சோழபுரம் செல்லும் சாலை, 5 கிலோ மீட்டர் தூரமுள்ள பெரியாக்குறிச்சியிலிருந்து மாத்தூர் இரயில்வே ஸ்டேஷன் செல்லும் சாலை, 11 கிலோ மீட்டர் நீளமுள்ள திட்டக்குடி பார்டரிலிருந்து சன்னாசி நல்லூர் செல்லும் சாலை ஆகிய இந்தச் சாலைகளை உடனடியாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். கரும்பு கொண்டு வருவதற்கு கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் தேவை. எனவே, இருக்கின்ற சாலைகளை உடனடியாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். செம்மையாக அந்த ஆலை இருக்க வேண்டுமென்றால், நல்ல முறையில் அதன் செயல் ஓங்க வேண்டுமானால் அங்குள்ள வளர்ச்சியைப் பெருக்க வேண்டுமென்பதற்கு இந்தச் சாலைகள் மிகவும் தேவை.

வயலப்பாடியிலிருந்து எரையூர் வரை செல்ல வேண்டுமென்றால், 30 கிலோ மீட்டர் அதிகமாகச் சுற்றி வருவதைத் தவிர்க்க வேண்டுமென்றால், வயலப்பாடியிலிருந்து எரையூருக்கு நேரடியாக ஒரு பாதை தேவை. அவ்வாறு செய்தால் அரியலூர் தாலூகாவிலேயிருந்து மாத்தூர், செந்துரை பிர்க்காக்களிலிருந்து கரும்புகளைக் கொண்டு வருவதற்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்தவரையில், சில ஆலைகளின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் நீர்ப்பாசன வசதி மிகவும் தேவை. சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்படி 1977–78 ஆம் ஆண்டில் அரசு ஆணை 1708, தேதி 14—11—77 இன் பேரிலே இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையான சுமார் இரண்டரை கோடி ரூபாய். அதிலே சுத்தமல்லி நீர்ப்பாசனத் திட்டத்திற்காக 25 இலட்சம் ரூபாய் செலவிடப்பட வேண்டியது செலவழிக்கப்படவில்லை. உடனடியாக அரசு அதைக் கண்ணுற்று சுத்தமல்லி நீர்ப்பாசனத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் உடையார்பாளையத்தில் அதிகமான அளவில் கரும்பை விளைவிக்க முடியும்.

அந்தப் பகுதியிலே பூலாம்பாடி, பாண்டகபாடி, தேனூர், சிறுவாச்சூர், வேப்பந்தட்டை, புதுநவேலூர், தொரமங்கலம் போன்ற ஏரிகளுக்கு அருகிலே இருக்கும் ஓடைகளில் அணை கட்டுவதற்கு, அதற்கான மதிப்பீடு சென்ற அரசு ஆணையிலே இருப்பதால் அந்த மதிப்பீட்டின்படி உடனடியாக அணை கட்டவும், நீர்ப்பாசனத்தைப் பெருக்கவும் ஆவன செய்தால் அந்தத் தொழிற்சாலை மிகவும் நல்லமுறையில் இயங்கி நம்முடைய தமிழ் மக்களும், நாடும் வியக்கும் வண்ணம் வளரும், செழிக்கும் என்று சொல்லிக்கொள்வது என்னுடைய தலையாய கடமை என்று கூறி என்னுடைய இந்தக் கருத்துக்களை வைத்து அமர்கிறேன்.

[முற்பகல் 11–20].

7. அமைச்சரின் அறிக்கை.

பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கைகள் மீது அரசு எடுத்த முடிவுகள் குறித்து கல்வி அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் விதி 82-ன் கீழ் மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பேரவையின் விதி 82-ன் கீழ் பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் கோரிக்கைகள்மீது அரசு எடுத்திருக்கிற முடிவினை அறிக்கையாக வைக்கிறேன்.

1977 செப்டம்பர் திங்களில் வெளியிடப்பட்ட கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்து வழங்கப்பட்ட ஆணைகள் குறித்து கல்லூரி ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீடுகள்மேல் அரசு கவனமாகப் பரிசீலித்த பின்னர் கீழ்க்கண்ட முடிவுகளை மேற்கொண்டுள்ளது.

(1) அரசு ஆணை எண், 2106, கல்வி, தேதி 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் நாள், 2107, கல்வி. தேதி 21—9—1977 மற்றும் 2159, கல்வி, தேதி 26—9—1977 ஆகிய ஆணைகளில் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் 1—4—1976 முதல் நிர்ணயிக்கப்பட்டு 1—1—1977-ல் இருந்து பணப்பயன் அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. இதற்குப் பதிலாக 1—1—1974-ல் இருந்து இவ்வாசிரியர்களின் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டு 1—1—1977-ல் பணப்பயன் வழங்கப்படும் என்று அரசு இப்போது முடிவு செய்துள்ளது. மேலும் தற்பொழுது மாற்றியமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தின்கீழ் ஆசிரியர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்பட்ட பிறகு அடுத்த கட்ட ஊதிய உயர்வு பழைய ஊதிய விகிதத்தில் இவ்வாசிரியர்கள் எத்தேதியில் பெற்று இருப்பார்களோ அதே தேதியிலிருந்து புதிய ஊதிய விகிதத்தில் ஊதிய உயர்வு அளிக்கப்படும்.

அரசுக் கல்லூரிகளிலும் தனியார் கல்லூரிகளிலும் உள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர் பதவிகள் படிப்படியாக நீக்கப் பெறுதல் வேண்டும் என்ற முடிவினை ,அரசு மேற்கொண்டுள்ளது. வருங்காலத்தில் கல்லூரிகளில் பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் நியமிக்கப்படமாட்டார்கள். தற்பொழுதுள்ள பட்ட மேற்படிப்பு தகுதியுள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் 5 ஆண்டு பணி முடிவுற்றவுடன் உதவி பேராசிரியர்களாக நியமிக்கப் பெறுவர் என்று அரசு ஆணை எண் 2659, நாள் 28—12—1977-ல்

ஆணைகள் வழங்கப்பட்டு இருந்தன. இதனை மாற்றி வருங்காலத்தில் பட்ட மேற்படிப்பு தகுதியுள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் 3 ஆண்டு பணி நிறைவெய்தும்பொழுது உதவி பேராசிரியர்களாக நியமிக்கப்படுவர் என்று அரசு தற்பொழுது முடிவு செய்துள்ளது. தனியார் கல்லூரிகளில் வரவிருக்கும் உதவி பேராசிரியர்களுக்கான காலி இடங்கள் அக்கல்லூரிகளில் கல்வி தகுதியுள்ள விளக்குநர் மற்றும் பயிற்றுநர்களைக் கொண்டே நிரப்பப்படுதல் வேண்டும் எனவும் அத்தகைய விளக்குநர் மற்றும் பயிற்றுநர்கள் கல்லூரியில் இல்லாமல் இருக்கும் சூழ்நிலையில் மட்டிலுமே புதிய உதவி பேராசிரியர்களை வெளியிலிருந்து நியமிக்க வேண்டும் என்று இத் தனியார் கல்லூரிகளின் நிர்வாகத்தினர் கோரப்படுவர். இந்த ஆணை அமுல்படுத்துவதை ஒரு நிபந்தனையாகக் கொண்டு அரசினர் மானியம் வழங்குவது நிர்ணயிக்கப்படும்.

பட்டப்படிப்பு விளக்குநர் மற்றும் பயிற்றுநர்கள் பட்ட மேல் படிப்பு தகுதி பெற்றவுடன் பதவி உயர்வு அளிக்கவும் அங்ஙனம் அவர்கள் பட்ட மேல்படிப்பு தகுதி பெறும் வரை திருந்திய அமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தின்படி ஊதிய உயர்வு பெற அனுமதிக்கப் பெறுவர்.

உதவிப் பேராசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் ரூ. 700—1,600 ஊதிய விகிதம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்கிறது. . பேராசிரியர்களுக்கும், துறை தலைமைப் பேராசிரியர்களுக்கும் தனியாக படி வழங்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

1978 ஜுன் முதல் நடைமுறையில் வரவிருக்கும் 10+2+3 என்ற புது முறை கல்வித் திட்டத்தினாலும் 1979 ஜுன் திங்கள் முதல் கல்லூரிகளிலுள்ள புகுமுக வகுப்பு நீக்கப்பெற இருப்பதினாலும் கல்லூரி ஆசிரியர்கட்கு வேலை இழப்பு ஏதும் இராது என்ற ஏற்கெனவே வழங்கிய உறுதியினை அரசு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது. இவ்வுறுதி மொழியினை நிறைவேற்றும் பொருட்டு பல்கலைக் கழகங்களுடன் கலந்தாலோசித்து கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கான பணித் திட்டம் மாற்றியமைக்கப்படும். தனியார் கல்லூரிகளில் பணி பளு குறைப்பினால் 31—3—1977 அன்று பணியிலிருந்த ஆசிரியர்கள் எவரும் பணியிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் என்றும் அரசு உறுதி அளிக்கிறது.

விதி 10 (எ) (1)-ன்கீழ் நியமிக்கப்பட்ட தற்காலிக ஆசிரியர்கள் குறித்து அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்கும்.

நேர்முக சம்பள பட்டுவாடா செய்ய வேண்டுமென்ற தனியார் கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கையை கொள்கை அளவில் அரசு ஏற்று கொள்கிறது. இங்ஙனம் நேரடியாக ஊதியம் வழங்குவது சம்பந்தமான நடைமுறைகள் குறித்து அரசு விரைவில் ஆணைகள் பிறப்பிக்கும்.

தமிழ்நாடு குடும்ப சேம நல நிதித்திட்டம் தனியார் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்கட்கும் அளிக்கப்படும்.

தனியார் கல்லூரி சட்ட விதிகள் குறித்தும் இக் கல்லூரிகளில் நியமனம் தகுதிக்கான பருவம் பணியில் உறுதி செய்தல் மற்றும் பதவி உயர்வு, மருத்துவ விடுப்பு வசதிகள் அளித்தல் போன்ற பணி முறைமைகள் குறித்தும் ஆய்ந்தறிய அரசு, தனியார் கல்லூரிகளின் நிர்வாகிகள் தனியார் கல்லூரி ஆசிரியர்கள் போன்றவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவினை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. மேற்படி பொருள்கள் குறித்த பரிந்துரைகளை இக்குழு அமைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படும்.

கல்லூரிகளிலுள்ள உடற்பயிற்சி இயக்குநர், நூலகர்கட்கு பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைப்படி ஊதிய விகிதம் நன்மைப் பெறுவர்.

(6) 1978–79-ம் ஆண்டுக்கான மானிய கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

*திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் மற்றும் தொழில் வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் மானியத் தொகை 24-வது மானியக் கோரிக்கையில் 3,66,61,000 ரூபாயும், 51-வது கோரிக்கையின்கீழ் 5,71,38,000 ரூபாயும் மானியம் கேட்கிற இந்த இரண்டு கோரிக்கைகளும் இந்த அவையில் வைக்கப் பட்டிருக்கின்றன.

குறிப்பாக பரந்து கிடக்கின்ற இந்த தமிழகத்தில் 5-ம் 3-ம் சேர்த்து 8, 9 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிற இந்தத் தொகை, கடலிலே கரைத்த பெருங்காயம்போல் ஆகிவிடுகிறது என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இந்தத் தொழில் வளர்ச்சி அறிக்கையிலே மத்திய சர்க்காரின் கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கிராமப் புற வளர்ச்சி என்ற கோஷம் பொதுவாகவே பயனற்றுப் போயிருக்கிறது. 1944 ஆம் ஆண்டிலே பிர்லா. டாட்டா போன்றவர்களைத் தொடர்ந்து அகர்வால் என்பவர் அளித்த திட்டத்தின் அடிப்படையில் இந்தத் திட்டங்கள் இன்றைக்கு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கிராமப் புற வளர்ச்சிக்கு முக்கியத்துவம் என்று பெயரளவில் பெரிய தொழில்களை முடமாக்கும் நடைமுறை இன்றைக்கு உருவாகியிருக்கிறது என்பது இதன் மூலம் காணப்படுகிற உற்பத்தியை பெருக்குவதன் மூலமாகத் தான் செல்வாதாரம் பெருகவேண்டும். செல்வாதாரம் பெருக உற்பத்தியை நவீனப் படுத்தவேண்டும். நமது நாட்டில் ஜனத்தொகை அதிகம். வேலைவாய்ப்பு என்பது மிகவும் குறைவு. அத்தகைய நிலையில் பெரிய தொழில்கள், சிறிய தொழில்கள், கிராமத் தொழில்கள் இவற்றை ஒருங்கிணைத்த முறையில் வளர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்காமல் கிராமத் தொழில் வளர்ச்சி என்கிற கோஷம் நடைமுறைக்கு சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உற்பத்தி மூலம்தான் செல்வாதாரம் பெருக முடியும். செல்வாதாரம் பெருகுவதற்கு கனரகத்தொழில் திட்டங்களை போட்டால்தான் வேலை வாய்ப்பு அதிகரிக்க முடியும்.

பஞ்சாலைத் தொழில் பெருகினால்தான் கைத்தறி தொழில் வளர முடியும். அதேபோல சர்க்கரைத் தொழிலுக்கு இன்றைக்குத் தேவையான கரும்பு உற்பத்தியைப் பெருக்க முடியும். உற்பத்தியாகிற கரும்பு அனைத்தும் சர்க்கரை ஆலைக்கு வந்து சேருகிற முறையில் கொள்கையை அனுஷ்டிக்கப்பட வேண்டும். கரும்பின் விலையையும், சர்க்கரை விலையையும் உயர்த்த மத்திய சர்க்காரோடு நமது அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும். உதாரணமாக, இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறபடி கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் 29 சதவீதம் தான் சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. காரணம் என்ன? கட்டுப்படி ஆகக்கூடிய விலை இல்லை என்ற உடன் கரும்பு விவசாயிகள் வெல்லம் காய்ச்ச ஆரம்பித்தார்கள். வெல்லத்தின்மீது கட்டுப்பாடு விதித்தது மத்திய அரசு. வெல்லத்தின் விலை வீழ்ந்தது. எனவே வெல்லம் காய்ச்சுகிறவர்கள் மீண்டும் சர்க்கரை ஆலைக்குச் செல்லும் நிலை வந்தது.

காதிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற நிலை வந்தாலும் கை சர்க்கா பயனற்றுப் போய், அம்பர் சர்க்கா இன்றைக்கு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. நவீன போக்குவரத்துச் சாதனங்களை

நாம் தவிர்க்க முடியாது. பஸ்ஸை விட்டு விட்டு நாம் கட்டை வண்டியிலே போக முடியாது. ரயிலை விட்டு விட்டு நாம் குதிரை வண்டியிலே போகமுடியாது. அதைப் போல பெரிய. தொழிலை வளர்த்தால்தான் சிறிய் தொழில்கள் வளர முடியும் என்பதை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 11.30]

குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரை மலை வளம் கடல் வளம், கனி வளம், நில வளம் இவற்றைப் பற்றி தெளிவாக ஆராய்வதற்காக நீண்டகால பார்வையோடு ஒரு குழுவை அமைக்கவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளைக்காரர்கள் காலத்தில் ஜியாலாஜிகல் சர்வே நடந்தது. அது அத்தோடு நிறுத்தப்பட்டது. 7-8 ஆண்டுகளுக்கு முன்பு இன்னொரு சர்வே நடந்தது. அப்படியிருந்தும் கூட அது முறையாக கணிப்பு எடுக்கவில்லை. அண்மையில் ஜியாலாஜிகல் சர்வே சென்னையில் இருந்து கத்திப்பாராவரையில் செய்யப் பட்டு, சென்னையில் இருந்து மகாபலிபுரம் வரை ஜியாலாஜிகல் சர்வே நடத்தப்பட்டு 11 இடங்களில் ஆழ் குழாய் கிணறுகள் தோண்டப்பட்டு, குடிப்பதற்கான தண்ணீரை சென்னைக்குத் தரும் அளவிற்கு அவைகள் இருந்து இருக்கின்றன. அதற்கான இயந்திரங்கள் சோவியத் யூனியனில் இருந்து கொண்டு வரப் பட்டு, உபயோகப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

அந்த இயந்திரங்களை இப்போது விஜயவாடாவிற்குக் கொண்டு செல்ல முயற்சி நடக்கிறது. ஒவ்வொரு ஆழ்குழாய் கிணறு களில் இருந்து, ஒரு மணி நேரத்தில் 20,000—30,000 காலன் தண்ணீர் வெளியே வருகிறது. இப்படி 11 ஆழ்குழாய் கிணறு அங்கே தோண்டப்பட்டு இருக்கின்றன. அந்தந்தத் தண்ணீரைக் கொண்டு சென்னைக்குக் குடிநீர் வழங்க முடியும் ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஜியாலஜிகல் சர்வேபற்றி நேரடியாக கவனம் செலுத்தி, அந்த இயந்திரங்களை விஜயவாடா கொண்டு செல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அந்தத் தண்ணீரை சென்னை நகரத்திற்கு குடிநீராகப் பயன் படுத்த வேண்டும் என்றும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இன்று போக்குவரத்து வசதிகள் பெருக்கப் பட்டால்தான் தொழில் துறை வளர முடியும். அத்தகைய முறை யில் போக்குவரத்து வசதிகளை பிரானமாக சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கு அந்த இரண்டும் இந்தியாவிலேயே உள்ள கடலோர மாநிலங்களில் இரண்டு பெரிய துறைமுகங்கள்— இந்தியாவிலேயே மிகப் பெரிய துறைமுகங்கள்— பிராட்கேஜ் ரயில் வசதி இல்லை. இந்தியாவில் உள்ள 10 மேஜர் போர்டுகளில் தூத்துக்குடி ஒன்றுக்குத்தான் பிராட்கேஜ் இணைப்பு இல்லை. மற்ற 9 போர்டு

களும் பிராட்கேஜோடு இணைக்கப்பட்டு இருக்கிறது. தூத்துக் குடிக்கு மட்டும் இல்லை. எனவே, நம்முடைய தமிழக அரசாங்க கம் மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு, மதுரை- தூத்துக்குடிக்கும், மதுரை-கோயம்புத்தூருக்கும் இடையே பிராட் கேஜ் ரயில்பாதை அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவேண்டும் என்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து வசதி சீராக இருந்தால்தான் தொழில் துறை என்பது பெருக முடியும். நீண்டகால திட்டத்தின் அடிப்படை யில் இதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். திருவனந்த புரத்திற்கு மீட்டர் கேஜ் இருந்ததை நீக்கிவிட்டு, பிராட்கேஜ் போட கேரள அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியில் அவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள். ஆகவே, தூத்துக் குடிக்கு பிராட்கேஜ் இணைப்புக்கொடுக்கும் முயற்சியில் நாம் வெற்றிபெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகலாமாக தொழில் துறையில் ஒரு தேக்கம் ஏற்பட்டு இருக்கிறது. புதிய தொழிலைப் பற்றி இன்று சிந்திக்கும் முன் பழைய தொழிலைப் பற்றி, அதில் உள்ள நிர்வாக சீர்கேடுகள் பற்றி, நிதித்துறைச் சங்கடங்களைப் பற்றி ஆராயவும், அவைகள் மூடப்பட்டு இருக்கின்றனவா அல்லது முழுமையாக செயல்படாமல் இருக்கின்றனவா என்றும் பார்க்க வேண்டும். இன்றைக்கு முழுமையாகச் செயல்படாமல் பல இருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகளில் இன்றைக்கு முதலா ளிகள் தொழிலாளர்களைப் பணிய வைக்கும் முறையிலும், சில நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பதை நான் குறிப் பிட்டுச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தில் இருக்கும் தொழிற்சாலைகளில், சேலம் கண் ணாடித் தொழிற்சாலை 10-12-1976 முதல் மூடப்பட்டுக் கிடக் கின்றது. கிட்டத்தட்ட அதிலே 500 தொழிலாளர்களுக்கு மேல் பணியாற்றிக்கொண்டு இருந்தார்கள். நேற்றைய தினம் 27 ஆண் களும், 5 பெண்களும், ஆக 32 பேர் அந்தத் தொழிற்சாலை திறக்கவேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் என்பதற்காக கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேலம் கண்ணாடித் தொழிற்சாலை பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு அதைத் தீர்க்கவும், நேற்றைய தினம் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய் யவும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

இதைப்போல், பைலட் பேனா கம்பெனி, ஜப்பான் முதலாளி ளோடு தமிழக முதலாளிகள் சேர்ந்து நிறுவிய நிறுவனம், அதிலே 300 தொழிலாளர்களுக்கு மேல் கடந்த 5 மாத காலமாக ஊதியம் அளிக்கப்படவில்லை. அந்த கம்பெனி லாக்அவுட்

[திரு. மு. அம்பிகாபதி] [1978 மார்ச் 22

செய்யவும் இல்லை, மூடப்படவும் இல்லை, திறந்து இருக்கிறது என்றும் தெரியவில்லை, லே-ஆப் இல்லை. கம்பெனி திறந்து இருக்கிறது. தொழிலாளர்கள் உள்ளே போகிறார்கள். வேலை இல்லை. அதனால் அந்த 300 குடும்பங்கள் பட்டினியால் வாடுகின்றன. 2 பேர் இறந்து இருக்கிறார்கள். இதன் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ''நவமணி'' இரண்டாண்டு காலமாக வரவில்லை. அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய ஊதியம் கொடுக்கப்படவில்லை. இதன் மீதும் அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலைகளைப் பொறுத்த வரையில், குறிப்பாக சீதை மில்ஸ்; அதைத் தொடர்ந்து பல்வேறு தொழிற்சாலைகளில் சிக்கலான நிலைமை உருவாகியிருக்கிறது. இவைகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சிக்கு துறைமுகங்கள் பிரதானமாக இருக்கின்றன. நமக்கு கடல் வளம் மிகப்பெரும் வாய்ப்பாக இருக்கிறது. மீன், சங்கு, முத்து, கடல் உப்பு, உப்பிலிருந்து தயாரிக்கப்படும் பல்வேறு ரசாயனப் பொருட்கள் கிடைக்கின்றன. வேதாரணியம் பகுதியில் கடற்கரையில் ''மரையின்ஸ் காம்ப்ளக்ஸ்'' தொழில் ஆரம்பிக்கப்படுவதற்காக சர்வ நடந்தது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் மோட்டார் படகு விட பிர்லாவுக்கு கூட லைசென்ஸ் கிடைத்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் செட்டியார், நாடார் என்று பட்டியல் இருக்கிறது. மோட்டார் படகுகளை அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கே அளிக்க வகை செய்ய வேண்டும்; மற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடாது.

இன்றைக்கு கடலோர மாவட்டங்களில் மாவட்டத்தில் 2 அல்லது 1 வீதம் மீன்பிடித் துறைமுகங்களை உருவாக்க வேண்டும். சென்னை, பரங்கிப்பேட்டை, பாலருக்கவாய், கூடலூர், தரங்கம்பாடி, நாகப்பட்டிணம், கோடிக்கரை, மல்லிப்பட்டிணம், கீழக்கரை, தூத்துக்குடி, புன்னக்காயல், தொண்டி குளச்சல் போன்ற இடங்களில் நவீன மீன்பிடித் துறைமுகங்களை அமைக்கலாம். கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய்க்கான கடன் செல்வத்தை நாம் பெறுவதற்கான வாய்ப்பு அதனால் ஏற்படும். அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 22] [திரு. மு. அம்பிகாபதி]

கடல் வளத்தில் நாம் முழுமையாகக் கவனம் செலுத்தினால் தமிழகக் கடல் செல்வம் மூலம் கிட்டத்தட்ட ஆண்டுக்குநமக்கு சுமார் 1,500 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். தமிழ் நாட்டில் விவசாயத்தின் மூலம் சுமார் 1,600 கோடி ரூபாய் கிட்டத்தட்ட வருமானம் கிடைக்கிறது. தொழில் துறையின் மூலம் சுமார் 1,700 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அதைப்போல கடல் செல்வம் மூலம் சுமார் 1,500 கோடி ரூபாய் வருமானம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதற்கு கடல் பகுதியில் நம்முடைய கவனத்தைச் செலுத்த வேண்டும். மீன் பிடித்தல். முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

உப்பு உற்பத்திக்கு உலகத்திலேயே சிறப்பான, இயற்கையான சீதோஷ்ணநிலை அமைந்திருக்கும் இடம் தமிழ்நாடு தான். வேறு எங்கும் ஆண்டு முழுவதற்கும் இங்கே இருப்பதைப்போல் வெயில் கிடையாது. கேரளத்தில் மழை, ஆஸ்திரேலியாவில் கடுமையான மழை. ஆக, உப்பு உற்பத்திக்கு மிகச் சிறப்பான சீதோஷ்ணநிலை அமைந்த இடம் தமிழ்நாடுதான். ஆகையால் உப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உப்பளங்களை நவீனப்படுத்த வேண்டும். அதிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் கொண்டு புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். இன்றைக்கு உப்பிலிருந்து பல கெமிக்கல்ஸ் எடுக்கிறார்கள்.

அப்படி புதியத் தொழிற்சாலைகளை அமைக்கும்போது அந்த தொழிற்சாலைகள் ஒழுங்காக நடைபெறுவதையும் பார்த்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு மேட்டூர் கெமிக்கல்ஸ்—வேதாரணியத்தில் போராட்டம் ; சாதாரண போராட்டமல்ல , சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் பல சர்க்கரை ஆலைகளை நிறுவலாம். அதிலிருந்து கிடைக்கிற சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம். குறிப்பாக, தொழிலில் 'ரீப்ரொடக்ஷன்' இருக்க வேண்டும். கரும்பு சக்கையிலிருந்து காகிதம், சர்க்கரையிலிருந்து மிட்டாய் இப்படி ரீப்ரொடக்ஷன் செய்யக்கூடிய அளவுக்கு தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் உருக்காலையிலிருந்து கிடைக்கும் இரும்பை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக பில்லட்டுகளாக செய்து ஏற்றுமதி செய்யும் திட்டம் இருக்க வேண்டும்.

குறிப்பாக, நெய்வேலி இரண்டாவது சுரங்கம் தமிழ்நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்று.

[திரு. மு. அம்பிகாபதி] [1978 மார்ச் 22

கல்பாக்கம் அணுமின் நிலையம் திட்டத்திற்கு 400 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்படும் என்றார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது, எப்போது செயல்படும் என்று தெளிவாக ஒன்றும் தெரியவில்லை.

அதைப்போல திருநெல்வேலியில் இரண்டாவது அனல்மின் நிலையம் ஏற்படுத்துவதற்காக ராதாபுரம் பகுதியில் சர்வே செய்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதையெல்லாம் துரிதப்படுத்த வேண்டும்.

இன்றைக்கு இருக்கிற நிலைமைகளில் மின்உற்பத்தியில் நமக்குப் பெரிதும் பயன்படும் திட்டங்கள்—ஒன்று நெய்வேலி, மற்றொன்று கல்பாக்கம், அடுத்தது இராதாபுரம். இவைகளில் தீவிர கவனம் செலுத்தி, துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு, கேரளம், மைசூர்—இந்த மூன்று மாநிலங்களிலும் இணைந்த ஒரு திட்டத்தை செயல்படுத்துவதற்கான முறையில் நம்முடைய அணுகுமுறை இருக்க வேண்டும்.

நிர்வாகத்தில் காலதாமதம், லஞ்சம் பரவலாக இருக்கிறது. அதைப்போல பெர்மிட் வழங்குவதிலும், லைசென்ஸ் வழங்குவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்டத் தவறுகளைப் போக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில், மத்திய அரசினுடைய பொதுத் துறை 400 கோடி ரூபாய்க்குமேல் மூலதனம் போட்டிருக்கிறது. அந்த மூலதனத்திலிருந்து கிட்டத்தட்ட சுமார் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய்க்கு மேல் லாபம் வருகிறது. அது சுமார் என்று வைத்துக்கொள்ளலாம் ; எத்தனை கோடியாக இருந்தாலும் சரி.

[முற்பகல் 11-40]

தமிழகத்தில் நிறுவப்பட்டிருக்கும் தொழிலில் இருந்து கிடைக்கின்ற இலாபத்தில் 50 சதவிகிதம் தமிழகத்திற்கு வேண்டுமென்று கேட்டு நாம் பெறவேண்டும்.

குறிப்பாக, விவசாயத் துறைக்கு இன்றைக்கு மிகப் பெரிய வாய்ப்பிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 12 இலட்சம் ஏக்கர் நதி நீர்பாசனம், அதேபோல் மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் 8 இலட்சம் ஏக்கர் நதிநீர்ப் பாசனம். மொத்தம் 20 இலட்சம் ஏக்கர் நதி நீர்ப்பாசனம். இது போக கிட்டத்தட்ட 8½ இலட்சம் மின்சார பம்ப் செட்டுகள் 3 இலட்சம் ஆயில் இன்ஜின்கள் இருக்கின்றன. இரண்டு இலட்சம் பம்ப் செட்டுகளுக்கு

1978 மார்ச் 22] [திரு. மு. அம்பிகாபதி]

அப்ளிக்கேஷன் பெண்டிங் இருக்கிறது. இவைகளைப் பார்க்கும் போது தமிழகத்தில் கிட்டத்தட்ட 12 இலட்சம் கிணறுகள் இருக்கின்றன. ஒரு கிணற்றுக்கு ஐந்து ஏக்கர் என்று வைத்துக் கொண்டாலும் 60 இலட்சம் ஏக்கரில் தமிழகத்தில் கரும்பு, பருத்தி, கடலை இவற்றை விளைவிக்க முடியும்.

பம்புசெட்டுகளைப் பொறுத்தமட்டில் நவீனப்படுத்தப்பட்ட பம்பு செட்டுகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் தமிழகத்திலேதான் அதிகம். இந்தத் தொழிலைப் பெருக்குகின்ற முறையில் நம்முடைய நடவடிக்கைகளை வலுவாக்குவதோடு மின்சார இணைப்பு துரிதமாக கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பம்ப் செட் உள்ள பகுதிகளிலேதான் கரும்பு, பருத்தி, கடலை போன்றவை அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இவைதான் பஞ்சாலைக்கும் வனஸ்பதி தயாரிக்கவும், சர்க்கரை ஆலைக்கும் தேவையான ரா மெட்டீரியல்ஸ் ஆகும். இதைக் கவனத்தில் கொண்டு அந்தத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான முறையில் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை, முகவை மாவட்டங்கள் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்கள். ஆகவே, அங்கே ஒரு சர்க்கரை ஆலை அமைக்கப்பட வேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

சிவகெங்கை வட்டத்தில் படிவங்கள் எடுக்கப்படுவதால் அந்தப் பகுதியிலும் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும்.

திருப்பத்தூரில் ரப்பர் பாக்டரி கட்டப்பட்டு பின்பு நிறுத்தப் பட்டிருக்கிறது. அதையும் கவனத்தில் கொண்டு உடனடியாக செயல்படுத்துவதற்கான முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்திலே விவசாயத்துறை, தொழில் துறை கடல் வளம் இவற்றைப் பயன்படுத்தினால் வரியே இல்லாமல் ஆட்சி நடத்தக் கூடிய நிலைமை வரும் என்பதை நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஜியாலாஜிக்கல் சர்வே செய்யப்பட்டு நிறுத்தப்பட்டு இருப்பதை மீண்டும் மகாபலிபுரம் பகுதியில் அதைத் தொடர்ந்து செய்ய வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த யோசனைகளை நான் அரசுக்கு கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழில் வளர்ச்சிக் கொள்கை விளக்க மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ரா. கு. பெருமாள்] [1978 மார்ச் 22

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரின் ஆறு மாதகால ஆட்சியில் என்ன மாறுதல் ஏற்பட்டது என்று கேட்பவர்களுக்குச் சிறு தொழில்கள் வளர்ச்சிக்காகவும், சிறு கைத் தொழில்கள் வளர்ச்சி பெற்று சிறந்த பங்கினைப் பெறவும்— குறிப்பாக கிராமங்களின் தொழில் வளர்ச்சி பெருகிட சுமார் 6,400 க்கு மேற்பட்ட சிறு கைத்தொழில்களும், 8,600க்கு மேற்பட்ட சொந்த தொழில் நடத்துவோரும் ஜூலை 1977 முதல் டிசம்பர் முடிய உள்ள அந்த 6 மாத காலத்தில் பயன் பெற்றனர். மேலும் 27 கோடிக்கு மேற்பட்ட இந்த உதவியினால் சுமார் 49,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிட இந்த அரசு செயல்திட்டத்தை வகுத்துள்ளது. இத் திட்டத்தை அளித்த புரட்சித் தலைவரை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் கனி வளத்தைப் பொறுத்த அளவில், பூமிக் கடியில் இருப்பதை அறிந்து, அவற்றை வெளியே கொண்டு வந்து தமிழகத்தின் சிறப்புகளுக்கு ஒப்பாக நம் கனிவளத்தைப் பாரெங்கும் பரப்பிட நம் புரட்சித் தலைவர் அரசு எண்ணியதால் இந்தத் திட்டத்திற்கு 1976-77-ஐ விட சுமார் 25.73 இலட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கி மேலும் கனி வளத்தைப் பெருக்கிட முயன்றுள்ளது. இதற்காக நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

நீர் அபிரகம் 1976-77-ல் கிடைத்ததைவிட நடப்பு ஆண்டில் 282 மெட்ரிக் டன் அதிகமாக வெட்டி எடுக்கப்பட்டு அதன் மதிப்பு மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

அடுத்து தமிழ்நாடு, சிறு தொழில் நிறுவனமான டான்சியின் பங்கு, தமிழகத்தொழில் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கின்றது. இந்த டான்சியின் உற்பத்தி மதிப்பு கடந்த ஆண்டுகளைவிட நடப்பு ஆண்டுகளில் கூடுதலாகக் காட்டியுள்ளது. மற்ற பல நிறுவனங்களுடன் போட்டியிட்டு வருவதால், சில இழப்புகளை அடைந்தாலும், டான்சி, டாடா போன்ற தனியார் நிறுவனத்திற்கு ஒப்பாக பெரிய நிறுவனமாக ஆக வாய்ப்புகள் உள்ளன.

மேலும், இந்த நிறுவனம் மொபெட்ஸ், ஸ்கூட்டர்கள் தயாரிப்பிலும் இயந்திரக் கருவிகள் தயாரிப்பிலும், கருங்கல் படிகங்கள் ஏற்றுமதி மூலம் ஜப்பானிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. அதற்காக ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் உழைத்துவரும் அதிகாரிகள், தொழில் நுட்ப வல்லுனர்கள் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருப்பதினாலும் புரட்சித் தலைவரின் எண்ணங்களைப் புரிந்து கொண்டு செயலாற்றக்கூடிய வல்லுநர்கள் இருக்கின்றார்கள் என்பது நாம் கண்டறிந்த உண்மை. அப்படிப்பட்டவர்களுக்கு நாம் ஊக்கம் கொடுத்தால், டாடா போன்றதொழில் நிறுவனத்தைவிட டான்சியைச் சிறந்த முறையில்

1978 மார்ச் 22] [திரு. ரா. கு. பெருமாள்]

தமிழகத்தின் ஒப்பற்ற தொழில் மயமாக்குவார்கள் என்று நம்புகிறேன்.

மேலும், சிட்கோ, டாசல், டிட்கோ, டான்செம், சிப்காட், போன்றவைகளும் தற்சமயம் சிறப்பாக இயங்கி தமிழகத்தின் தொழில்வளர்ச்சிக்கு பெரிதும் உதவிகரமாக இருந்து வருகின்றன. இவைகளின் செயல்திட்டத்தை மேலும் விரிவாக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புகள் கொடுக்கும் வண்ணம் 50 தீப்பெட்டி தொழிற் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், இரண்டு பணித் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் நெல்லை, முகவை போன்ற பின் தங்கிய பகுதிகளில் தொடங்கயிருப்பதை வரவேற்கிறேன்.

அதே நேரத்தில், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சுமார் ஆயிரம் பேர்களுக்கு பயிற்சி கொடுத்து அந்தப் பயிற்சிக் காலம் மூன்று மாதம் கழிந்தவுடன் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏதுவாகும். இந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிமங்களும், மூலப்பொருள்களும் பெறுவதற்கு முன்னுரிமை கொடுக்க அரசு வழிவகை செய்ய உத்தரவினைப் பிறப்பிக்க வேண்டுகிறேன்.

மேற்படி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடத்தப்படும் தொழில்களுக்கு மத்திய அரசின் கலால் வரியை 10,000 பண்டில் தீப்பெட்டிகளுக்காவது கலால் வரி விதிப்பதை குரோஸ் ஒன்றுக்கு தற்சமயம் மத்திய அரசு அறிவித்துள்ள ரூ. 3.35 வீதம் கொடுக்குமாறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி செய்யுமாறுமத்திய அரசை மாநில அரசு கேட்டுப்பெற்றுத் தரவேண்டும்.

மேற்படி சிறிய தீப்பெட்டித் தொழிற் சாலைகளுக்கு ப்ளூ பேப்பர் டஜன் பேப்பர், போன்றவைகளுக்கு விற்பனை வரி விதிக்கிறார்கள். அவ்வாறு விதிக்கும் பட்சத்தில் சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, அவைகளுக்கு வரி விலக்கு அளிக்க தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சிறுதொழில்கள் தொடங்குவதற்கு உரிமங்களும், கடன்களும், அரசு மானியமும் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் சிறு தொழில் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டன. சுமார் 10,000 சிறுதொழில் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததாகவும், மேலும் அவைகள் எங்கிருந்தன எனக்கண்டறிய முடியாத நிலை உருவாகியுள்ளது. அரசு இதனைக் கண்டறிந்து தவறுகள் செய்தவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சுமார் 1,300-க்கும் மேற்பட்ட சிறு தொழில் நிறுவனங்களின் உற்பத்தித்திறன் 20

சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே இது போன்ற நிறுவனங்களுக்கு உரிமங்களை ரத்து செய்து நல்லமுறையில் உற்பத்தியைப் பெருக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் ஆதரவு தரும்படி அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம வளர்ச்சியே ஒரு நாட்டின் மிகப் பெரிய வளர்ச்சி என காந்தியடிகள், பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதுபோல் புரட்சித் தலைவர் அவர்கள் கிராம வளர்ச்சிக்கும், கிராமத் தொழில்களை மேம்படுத்தவும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து, கிராமத் தொழில் திட்டங்களுக்கு கடன் உதவிகளையும், முதலீடுகளையும் அதிகரித்து தொழில் வளர்ச்சிக்குச் சிறந்த ஆக்கம் கொடுத்துவருவதைப் பாராட்டுகிறேன்.

சிறு விவசாயிகள் ஓய்வு நேரத்தில் கைத்தொழில்கள் தொடங்குவதற்கும் சிறு தொழில்கள் தொடங்குவதற்கும் அரசு கணிசமான உதவித் தொகை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு, மருந்து தயாரிப்பு, மருந்து உணவு தயாரிப்பு ஆகிய தயாரிப்புகளில் மாநில அரசைக் கட்டுப்படுத்துகிறது. இதனால் தமிழக அரசின் மருத்துவ வளர்ச்சி குறிப்பாக மருத்துவ அதிகாரிகளின் அறிவு வளர்ச்சியையும் நிர்வாக வளர்ச்சியையும் கட்டுப்படுத்தி குறுகிய எல்லைக்குள் வைத்துக்கொள்கிறது. 22 ஆண்டுக் காலமாக மத்திய அரசின் தலையீடு இல்லாமல் இருந்தது. தற்சமயம் தலையிடுவதால் தமிழ்நாட்டு மருத்துவ வியாபாரிகளும் மருத்துவ வியாபாரச் சந்தையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மருந்து தயாரிப்பாளர்களும் இதனால் பாதிக்கப்பட்டதோடு மட்டுமின்றி விஞ்ஞானிகளின் நெஞ்சம் புண்படும் அளவிற்கும் உள்ளது. எனவே இது விஷயமாகத் தமிழக அரசு தலையிட்டு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாகக் குறிப்பாக சென்னையில் சுமார் எழுபது மருந்துக்கடைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் மருந்து தயாரிப்பாளர்கள் கர்நாடகம், ஆந்திரா போன்றயிடங்களுக்கு மாற்றி விடுகிறார்கள். இதனால் நம் அரசுக்கு வருமானம் சுமார் ரூபாய் மூன்று கோடி அளவிற்குப் பாதிக்கப்படும். எனவே அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி மாநில அரசுக்கே பூரண உரிமை பெற வேண்டுகிறேன்.

அடுத்து, என் தொகுதிப்பற்றிக் கூற விரும்புகிறேன். என் தொகுதியில் 300-க்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். அங்கே டான்ஸி, சிப்காட் மூலம் தொழிற் கூடங்கள் அமைத்துத் தந்து அந்தக் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும். அது மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். ஆகவே, மத்திய அரசாங்கத்தின் உதவி பெற்று நம் அரசாங்கம் அங்கு தொழில்கள் வளருவதற்கும், அங்குள்ள மக்கள் வேலைவாய்ப்புகள் பெறவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

திரு. என். சங்கரய்யா : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மான்யத்தின் மீது மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பின் வரும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தொழில் துறையைப் பற்றி அரசாங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில், இந்த அரசினுடைய தொழில் கொள்கை ஏறத்தாழ இன்றைய மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ள தொழில் கொள்கை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கிராமப்புறத் தொழில் வளர்ச்சி, கிராமத் தொழில் வளர்ச்சி, சிறு தொழில் வளர்ச்சி இவைகளில் ஒன்றுதான் உடன்பாடு என்றால், அதில் நாங்களும் உடன்படுகிறோம். இன்றைய மத்திய அரசு ஏற்கனவே இருந்து வந்த மத்திய அரசு கொண்டிருந்த தொழிற் கொள்கையைப் பொறுத்த அளவில், மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, அன்றுள்ள மத்திய அரசின் தொழிற் கொள்கை இந்த நாட்டில் தொழில் வளத்தை பெருக்குவதற்கு உகந்தது அல்ல என்று குறிப்பிட்டிருக்கிறது.

இப்போது இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், இன்றைக்கு நாட்டிலிருக்கின்ற தொழில் துறையில் உற்பத்தியாகின்ற பொருட்களுக்கு மார்கெட் இல்லை. சந்தையில்லை, இந்திய நாட்டிலுள்ள பெரும் தொழிலாக இருந்தாலும் சரி, சிறு தொழில்களாக இருந்தாலும் உள்நாட்டில் சந்தையில்லாததின் காரணமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதில் போட்டி போடுகின்ற நிலைமையும் ஏற்படுகிறது. 62 கோடி மக்கள் வாழக்கூடிய இந்த நாட்டில் உற்பத்தியாகின்ற பொருட்களுக்கு உள்நாட்டு மார்க்கட் இல்லை. இந்த நாட்டிலுள்ள விவசாய பெருங்குடி மக்களுக்கு மட்டும் வாங்கும் சக்தி இருந்தால், இந்த நாட்டில் எத்தனை பெரும் தொழில்கள் இருந்தாலும் சரி, எத்தனை சிறு தொழில்கள் இருந்தாலும் சரி, எத்தனை குடிசைத் தொழில்கள் இருந்தாலும் சரி, இவைகளில் உற்பத்தியாகின்ற பொருட்களுக்கு வெளிநாட்டு மார்க்கெட்டை எதிர்பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

ஆனால், இன்றைக்கு நிலைமை அப்படியில்லாமல் உற்பத்தியாகின்ற பொருட்களை உள்நாட்டில் விற்பனை செய்ய முடியாது என்றால் அதற்குக் காரணம் என்ன? நாட்டிலுள்ள மக்களிடத்தில் வாங்கும் சக்தியில்லை, மக்கள் மத்தியில் போதிய வாங்கும் சக்தி இல்லை என்பதும், நாட்டிலுள்ள சில ஏகபோக முதலாளிகள்,

[திரு. என். சங்கரய்யா] [1978 மார்ச் 22

வர்த்தக சூதாடிகள், சுரண்டல், கடத்தல் பேர்வழிகள் இவர்களிடம் பணம் எல்லாம் போய்ச் சேருகின்ற காரணத்தால், உள்நாட்டில் உற்பத்தியாகின்ற பொருட்களுக்கு விற்பனையாகாத அளவில் மார்க்கட்டைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டிருப்பதின் காரணமாக, பொருட்களுக்கு தேக்கம் ஏற்படுகின்றது. இதன் காரணமாகத் தொழில் போட்டியே உருவாகின்றது.

அது மட்டுமல்ல, தான் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் மட்டும் தான் விற்பனையாகவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதன் காரணமாகப் பொருட்களை உற்பத்தி செய்கின்றவர்கள் வெளிநாட்டு மார்க்கெட்டை எதிர்பார்க்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலைமை மாற்றப்படாவிட்டால், நமது தேசீய விடுதலைக்கு மட்டுமல்ல, சுதேசித் தொழில்களும் பாதிக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அயல்நாட்டிலுள்ள தனியார் வியாபார நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் எல்லாம் தங்களுடைய ஏகபோக முதலாளித்துவம், தங்களுடைய ஏகபோக அதிகாரம் இந்தியாவில் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்று பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், இதை அனுமதிக்கக்கூடாது என்று நாங்கள் கருதுகிறோம். அவ்வாறு அனுமதிக்கப்பட்டால், உள்நாட்டில் நிச்சயமாக நமது தொழில்களை வளர்க்கவும் முடியாது, தொழில் வளர்ச்சியையும் நாம் காண முடியாது.

அது மட்டுமல்ல, இந்திய நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் அத்தனையும் பாதிக்கப்படும். அரசாங்கத்திற்கு அரசாங்கம் தொழில் துறையில் உதவி செய்வது என்பது வேறு, தொழில் துறைகளுக்குக் கடன் கொடுப்பது என்பது வேறு விஷயம். ஆனால் உலகத்தில் உள்ள ஏகாதிபத்திய சக்திகள் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை முதலீடு செய்யும் போது இந்தியா போன்ற நாடுகள் அதை எதிர்த்து நிற்பதற்குச் சக்தியற்ற நிலையில், வெளியார்களுடைய மூலதனம் பெருகுமானால், தேசத்தினுடைய பொருளாதாரத்திற்கே, பொருளாதாரம் மட்டுமல்ல, தேசத்தினுடைய சுதந்திரத்திற்கே ஆபத்து ஏற்படும். எனவே அயல்நாட்டு பெரும் தொழில்களை எல்லாம் நாட்டுடைமையாக்கவேண்டும் என்ற கொள்கையை மத்திய அரசு பின்பற்றவேண்டும், அதற்கு மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டும், அப்போது தான் நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த நிலைமை ஏற்படாவிட்டால் இந்தியாவில் இருக்கின்ற அத்தனை தொழில்களும், அத்தனை சிறிய தொழில்களும், குடிசைத் தொழில்களும் பாதிக்கப்படும் என்பதையும் இதன் காரணமாக ஆயிரக் கணக்கான லட்சக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக் கப்படுவார்கள் என்பதையும் சிறு தொழில்கள் அடியோடு நசிந்து போய் விடும் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

1978 மார்ச் 22] [திரு. என். சங்கரய்யா]

கடந்த காலத்தில் commanding heights of economy இந்திய நாட்டில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய அளவில் இருக்கும் தொழில் கொள்கையை அப்படிப்பட்ட ஒரு தேசீயக் கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

பொதுத்துறையில் இந்த நாட்டில் தங்களுடைய முழு ஆதிக்கத்தையும் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தில் வைத்துக்கொண்டிருக்கும் இருபது ஏகபோக தொழில்களை நாட்டுடைமையாக்கினால்தான் நாட்டில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் சிறு தொழில்களை வளர்க்க முடியும். குடிசைத் தொழில்கள் போன்றவைகளைப் பாதுகாக்க முடியும், இல்லையென்றால், இந்த நாட்டிலுள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் எல்லாம், அதன்மூலம் கிடைக்கின்ற லாபம் எல்லாம் ஒரு சிலரின் கையில் மட்டும் சிக்கிக் கொண்டால் மக்களின் வாங்கும் சக்தி எப்படிப் பெருக முடியும்? ஆகவே, அயல்நாட்டிலுள்ள பெரும் முதலாளிகள் வைத்திருக்கின்ற பெரும் தொழில்களை எல்லாம் நாட்டுடைமையாக்குவது என்ற ஒரு தொழில் கொள்கையை இந்திய அரசு பின்பற்ற வேண்டும். அதன் அடிப்படையில் மாநில சர்க்கார் தன்னுடைய தொழில் கொள்கையை வகுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதேபோல் இன்றைக்கு, நம் மாநிலம் தொழிற் துறையிலே சிறந்து விளங்க வேண்டுமென்றால், அதற்காக நிதி வசதி வேண்டியிருக்கிறது. ஆகவே, மறுபடியும் இதிலே மத்திய சர்க்கார் மாநில சர்க்கார் உறவுப் பிரச்னை வருகிறபோது, இதிலே நிதி பிரிவினையின் பிரச்னையும் வருகிறது. இன்றைக்கு நாட்டிலே இதைப்பற்றி விரிவாக விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இன்றைக்கு மத்திய சர்க்கார் பிற மாநில அரசுகளுக்கு அதற்கான நிதி வசதி செய்து கொடுத்தால்தான். அந்தந்த மாநிலங்கள் தொழில் துறையிலே அதிக வளர்ச்சி உள்ளதாக ஆக முடியும்.

ஆகவேதான், இன்றைய தினம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பதோடு, நிதி வசதி உதவியும் விரிவாக அளிக்கப்பட வேண்டுமென்ற பிரச்னையும் ஏற்படுகிறது. ஆகவே, இதையும் இந்தத் தொழிற் கொள்கையோடு சேர்த்து மத்திய அரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, இதர மாநிலங்களோடு இந்த மாநிலமும் தொழிற் துறையிலே போட்டி போடுவதற்கு, மத்திய அரசாங்கத்திற்கு நிதி உதவி அதிகம் தேவை என்பதை எடுத்துக் காட்டி, அதைப் பெறுவதற்கு வற்புறுத்தவேண்டுமென்றும், அதற்கான பெருமுயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மற்றொரு பிரச்னை. கூட்டுத் தொழில் அதாவது ஜாயிண்ட் செக்டார் பற்றியது. இந்தக் கூட்டுத் தொழில் இன்றைக்கு எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். உதாரணத்

திற்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஸ்பிக் என்ற நிறுவனம் தூத்துக்குடியிலே இருக்கிறது. இந்த சதர்ன் பெட்ரோ கெமிகல்ஸ் என்ற நிறுவனம் அமைக்கப்படுகின்றபோது, முன்பிருந்த ஆட்சி 10 வருஷ காலத்திற்கு தனியார் துறையிடம், தனியார் துறையைச் சார்ந்த ஒருவருக்கு மானேஜிங் டைரக்டர் பொறுப்பை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் அப்படிச் செய்யப்பட்டது. ஆனால் அவர் போட்ட முதலீடோ 2 கோடி ரூபாய்க்கும் குறைவுதான். ஆனால் 62 கோடி ரூபாய் முதலீட்டில் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், நிதி வழங்குகின்ற சங்கங்கள் அதாவது பப்ளிக் இன்ஸ்டிடியூஷன் ஆகியவைகள் எல்லாம் சேர்ந்து போட்டது. இறுதியாகப் பார்த்தால் அதிலே இந்திய நாட்டு மக்களின் பணம், தமிழ்நாட்டு மக்களின் பணம் எல்லாம் அதிலே போடப்பட்டுள்ளது. அதிலே 60 கோடி ரூபாயை மத்திய சர்க்காரும், மாநில அரசும், நிதி வழங்குகின்ற சங்கங்களும் கொடுத்திருக்கின்றது. ஆனால் மானேஜிங் டைரக்டர் பதவி தனியார் துறையிலே ஒரு தனிப்பட்ட முதலாளிக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் போட்ட மூலதனமோ 2 கோடிக்கும் குறைவு. இன்றைக்கு என்ன நிலைமை இருக்கின்றது என்பதைப் பார்க்கவேண்டும்.

அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தூத்துக்குடியிலே ஆல்ககால் கெமிகல் நிறுவனம் ஒன்றை நிறுவ முடிவு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு 34 கோடி ரூபாய் மூலதனம் வேண்டியிருக்கிறது. இந்த மூலதனத்திற்கு யாரை நம்ப வேண்டியிருக்கிறது. அந்த முதலாளியை நம்ப வேண்டியிருக்கிறது. அந்தத் தூத்துக்குடி ஸ்பிக் உரத் தொழிற்சாலையில் எந்த விதமான லாபமும் சம்பாதிக்க முடியவில்லை என்ற நிலைமை இருக்கிறது. எனவே, இந்த ஆல்ககால் கெமிகல் நிறுவனம் அங்கு வருவது என்பது ஒரு பிரச்னையாகி விட்டது, அது கைவிடப்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

62 கோடி ரூபாய் மூலதனம் போட்ட பிறகு, கூட்டுத் துறையிலே நடை பெறுகின்ற இந்த நிறுவனத்தை, தனியார் துறையிலே, அவர்கள் கையிலே அது விடப்பட்டிருக்கிறது. எனவே, அரசாங்கம் இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும். பெருமளவிலே மூலதனம் போட்டுள்ள மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் ஆகியவைகளின் பொறுப்பிலே இந்தத் தொழிலை ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்போது நல்ல லாபம் சம்பாதிக்க முடியும்; பொது மக்களுக்கும் அதன் மூலம் சிறந்த சேவை செய்ய முடியும்; தொழில் வசதியையும் நல்ல முறையிலே அபிவிருத்தி செய்ய முடியும். அதன் மூலம் அங்கே இந்த ஆல்ககால், கெமிகல் நிறுவனத்தை அந்த ஒரு உப தொழிலை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாக இருக்கும்.

இந்த கூட்டுத் துறை எப்படி இருக்க வேண்டுமென்றால், முதலாளி அதிலே எந்த அளவுக்கு பங்கு போட்டிருக்கிறாரோ, அந்த அளவுக்கு நிர்வாகத்திலேயும் அவருக்குப் பங்கு இருக்கவேண்டும்

என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்யாமல், மத்திய சர்க்கார், மாநில அரசு, மற்றும் நிதி வழங்குகின்ற கழகங்கள் சேர்ந்து பெருமளவிற்கு மூலதனத்தைப் போட்டுவிட்டு, தனியார் கையிலே கொடுப்பது என்றால், தனியாரை, முதலாளித்துவத்தைப் வளர்ப்பதற்கு உதவி செய்வதாக ஆகிறது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போடப்பட்ட முதலீட்டிற்கு ஏற்ப, மத்திய மாநில அரசு இந்தத் தொழிலை ஏற்று நடத்தக் கூடியதாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே உற்பத்தியாகின்ற மின்சாரத்தில் 40 சதவிகிதம் மின்சாரம் இன்றைக்குத் தொழில் துறைக்குப் பயன்படுகிறது. அந்த அளவிற்கு இன்றைக்கு மின்சாரம் தேவைப்படுகின்றது. எனவே, நெய்வேலியில் ஆரம்பிக்க இருக்கும் இரண்டாவது சுரங்கத்தை மிகவும் விரைவிலே கட்டி முடிப்பதற்கும், தூத்துக்குடியிலே ஏற்பட இருக்கின்ற தெர்மல் ஸ்டேஷனை நல்ல முறையில் சீக்கிரம் பூர்த்தி செய்வதற்கும், அதே போல் கல்பாக்கத்திலே இருக்கும் அணுமின் நிலையத்தைத் துரிதமாக பூர்த்தி செய்வதற்கும் நாம் உரிய முயற்சிகளை எடுத்துக் கொண்டால், தொழில் துறை வளர்ச்சி தமிழ்நாட்டிலே மேலும் பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் உருக்காலைப் பிரச்னை நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கிறது. 2 கோடி, 3 கோடி செலவழிக்கப்பட்டு, இன்னும் 10, 13 கோடி ரூபாய்கள் அதற்குச் செலவழிக்கப்பட இருக்கிறது. அதன் மூலம் ஒரு வகையான ஸ்டீல், விசேஷ உருக்கு உண்டாக்குவதற்கான திட்டம் போடப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி மிகவும் இன்றியமையாதது. ஆகவே சேலம் உருக்காலையை விரைவிலே உருவாக்குவதற்கு மத்திய சர்க்காரை அதிக நிதி ஒதுக்கும்படி வற்புறுத்தி அதை ஆண்டுதோறும் நல்ல முறையிலே பெற்று இந்தத் தொழிற்சாலையை உருவாக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[நண்பகல் 12-00]

அதேபோல் இன்றைக்குப் போக்குவரத்து இருக்கிறது. அந்த மானியத்திலே பேசுகிற நேரத்திலே ரோடுகளைப் புதுப்பிப்பதன் மூலம் எவ்வாறு பொருளாதாரத்தை வளர்க்கமுடியும் என்பதற்குச் சில வகை ரோடுகளைப் போடுவதாக அரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறது. அதேபோல் ரயில் பாதைகளைப் பொறுத்து கரூரிலிருந்து தூத்துக்குடிக்கு அகலப் பாதை போட வேண்டுமென்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கோவை, சத்தியமங்கலம், சாம்ராஜ் பேட்டைக்கு அதேபோன்று ரயில் பாதை போடப்பட்டால் பம்பாயிலிருந்து நேராக வரமுடியும். அதன் மூலம் புதிய பகுதியில்

[திரு. என். சங்கரய்யா] [1978 மார்ச் 22

மார்க்கட்டை விஸ்தரிக்க முடியும். தொழிற் துறைக்குப் பல
விதமான வசதிகள் கிடைக்கும். ஆகவே, அந்த ரயில் பாதை
குறித்தும் மத்திய சர்க்காரை மாநில சர்க்கார வற்புறுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி அதிகப்படியான மக்களுக்கு வேலை வாய்ப்பு
அளிக்கும் திட்டங்களைப்போட வேண்டுமென்று ஒரு பக்கத்தில்
கூறுகிறார்கள். ஆனால் முரண்பட்ட நிலையில் அவர்களுக்கு நிர்ப்
பந்தங்கள் இருந்து வருகின்றன. அந்தக் கொள்கை நிறைவேற
முடியுமா? தமிழ்நாட்டில் ஐந்தரை லட்சம் கைத்தறிகள் இருக்
கின்றன. அதிலே ஒரு லட்சம் கைத்தறிகள்தான் கூட்டுறவுத்
துறையில் இருக்கின்றன. மீதி நாலரை லட்சம் கைத்தறிகள்
வெளியே இருக்கின்றன. இந்த நிலைமை ஏன்? கைத்தறியாளர்
களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் மேற்கொண்டு இரண்டு
லட்சம் கைத்தறிகளைக் கூட்டுறவுத் துறையில் கொண்டு வரவும்,
அதற்கான மூலதனத்தையும், பங்கு மூலதனத்தையும் கொடுத்து
உற்பத்தியாகக்கூடிய சரக்குகளை விற்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
இதற்காக அரசு பணத்தைச் செலவழித்தால் நன்றாக இருக்கும்.
ஆனால் நிலைமை என்ன? ஹாண்ட்லூம் பினான்ஸ் ட்ரேடிங் கார்ப்ப
ரேஷன் என்று இருக்கிறது, எதற்காக? பெரிய முதலாளிகள்,
ஏராளமான அளவுக்கு இருக்கக் கூடிய கைத்தறித் துணியை
உற்பத்தி செய்யக் கூடிய அந்த முதலாளிகளுக்குக் கடன் கொடுக்
கிறார்கள். அந்தப் பணத்தைக் கொண்டு வந்து கைத்தறித்
துறையில் உள்ள லட்சக்கணக்கான கைத்தறிகளைக் கூட்டுறவுத்
துறைக்குக் கொண்டுவர முயற்சி செய்தால் எவ்வளவு நலமாக
இருக்கும்.

கைத்தறி அமைச்சர் அவர்கள் பல சமயங்களில் கூறுகிறார்கள்.
தமிழ்நாடு பூராவும் கைத்தறித் துணித் தேக்கம். "நீங்கள்
கூட்டுறவு விற்பனைச் சங்கம் என்று போட்டிருக்கிறீர்கள். ஆகவே
விற்பனைப் பொறுப்பை நீங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்"
என்று சொல்லுகிறார்கள். அவர்கள் எப்படி விற்பனை செய்ய
முடியும்? தனியார் முதலாளிகள் வியாபாரிகளுக்கு ஆறு மாத
காலம் அவகாசம் கொடுக்கிறார்கள், கமிஷன் கொடுக்கிறார்கள்.
இப்படியெல்லாம் இவர்கள் செய்ய கூட்டுறவு சொசைடி
களின் விதிகள் இடம் கொடுக்கவில்லை. மற்ற வியாபாரிகள்
போல் இவர்கள் செய்ய முடியாது.

மதுரையில் கோடம்பாக்கம் வெரைட்டி சேலைகள் உற்பத்தி
யானதில் கைத்தறி சொசைடிகளில் மட்டும் ஒரு கோடிரூபாய்க்கு
ஸ்டாக் இருக்கிறது. நான்கு சொசைடிகளில் 70 லட்சம் ரூபாய்
ஸ்டாக் இருக்கிறது. ஐந்தரை லட்சம் கைத்தறியாளர்களின்
பிழைப்பைப் பாதுகாக்க முடியுமா என்பதுதான் முக்கியம்.
விற்பனை செய்ய வேண்டிய பொறுப்பை அரசாங்கம் எடுத்துக்
கொள்ளவேண்டும்.

1978 மார்ச் 22] [திரு. என். சங்கரய்யா]

தமிழ்நாட்டில் கைத்தறித் துணியும் விற்பனை ஆகவில்லை.
பஞ்சாலைத் துணியும் விற்பனை ஆகவில்லை. இன்று கைத்தறித்
தொழிலாளியை எப்படி முன்னேற்றமுடியும் என்று பார்க்க வேண்
டும். கைத்தறித் துணியை விற்பனை செய்யும் பொறுப்பை மாநில
அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும். ஹாண்ட்லூம் பினான்ஸ்
டிரேடிங் கம்பெனிக்குக் கொடுக்கும் பணத்தை கைத்தறியாளர்
களுக்காகப் பயன்படுத்த வேண்டும். கூட்டுறவு சொசைடிகளுக்குப்
பயன்படுத்த வேண்டும். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தையும்
திறமையான முறையில் செயல்படச் செய்யவேண்டும்.

காலையில் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது பிஷரீஸ்
கோவாப்பரேட்டிவ்ஸ் 25 சொசைடிகள் மூடப்பட்டு விட்டன
என்று சொன்னார்கள். பிழைப்பு இல்லாத காரணத்தால் ஊரை
விட்டு வெளியே போய்விட்டார்கள். போகாமல் என்ன செய்
வார்கள்? மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தும்போது
முதலிலிருந்து கடைசி வரை பாதுகாத்து பராமரித்து நல்ல
முறையில் இயங்குவதற்கு, உத்தரவாதப்படுத்த இலாகாதான்
பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

இன்று நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் கூட
பல்வேறு இலாக்காக்கள் தொழில்களை நடத்துகின்றன. இதிலே
ஒரு கொள்கை தேவை, மாறுதல் தேவை. ஜப்பானில் போய்
மெஷின் வாங்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். அகமதா
பாத்தில் ஒருவர் அத்தகைய மெஷின்களை நாங்களே தருகிறோம்
என்று சொல்லுகிறார்கள். ஆனால் இது பெட்ரோலில் இயங்குவது;
அது மண்ணெண்ணெயில் இயங்குவது. நம்முடைய நாட்டின்
பொருளாதார வளத்தைப் பெருக்க பெட்ரோலில் ஓடுகின்ற
இயந்திரங்களை அகமதாபாத்திலிருந்து வாங்காமல், மண்ணெண்
ணெயில் ஓடுகிறது என்ற காரணத்திற்காக ஜப்பானிலிருந்து
இயந்திரங்களை வாங்க வேண்டுமா? அப்படியானால் நம்முடைய
நாட்டு இயந்திரங்களை யார் வாங்குவார்கள்?

இது ஒரு முக்கியமான கொள்கைப் பிரச்சினை. ஒரு நாட்டி
னுடைய பொருளாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால்,
தொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் இந்தச் சிறுஅம்சௌ
கரியத்தை சகிக்காமல் இன்றைக்கு ஜப்பானிலே இருந்து 200
இயந்திரங்கள் வாங்கவேண்டுமென்ற முடிவு, அகமதாபாத்திலே
செய்யப்படுகிற இயந்திரங்கள் பெட்ரோலிலே ஓடுகின்றன என்ற
ஒரு காரணத்திற்காக, தேசத்தினுடைய சுயசார்புத் தன்மைக்கு
உகந்ததா என்பதையும், நம் நாட்டிலேயே கிடைக்கிற பொருளை
வாங்காமல் வெளிநாட்டிலே வாங்குவது தேசத்தின் பொருளா
தாரம் வளருவதற்கு உதவி செய்யுமா என்பதையும் சிந்தித்து
அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டும்.

[திரு. என். சங்கரய்யா] [1978 மார்ச் 22

இன்றைக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். தொழிற் கொள்கையைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே, மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையிலே கன ரகத் தொழில்கள் வேண்டும். மத்திய ரகத் தொழில்கள் வேண்டும். சிறு தொழில்கள் வேண்டும். குடிசைத் தொழில்கள் வேண்டும் என்பது தான். ஆனால் இன்றைக்கு நாட்டிலே வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய காரியங்களை நாம் செய்தால் எதிர்காலத்திலே சமுதாய பொருளாதார நெருக்கடியை நாம் முற்றவைக்கிறோம் என்பதுதான். ஒரு பக்கம் வேலை வாய்ப்பு என்று சொல்கிறோம். இப்படிச் செய்துகொண்டு போனால், சமுதாய நெருக்கடி பொருளாதார நெருக்கடி ஆகிய வற்றை நாம் முற்றவைக்கிறோம் என்பதுதான்.

இன்றைக்கு மீனவர்களுக்குப் படகுகள் வழங்கப்படுவது பற்றிச் சொல்லப்படுகிறது. நாங்கள் சுற்றுப்பயணம் செய்த போது எங்களிடத்திலே அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் எல் லாம் மீனவர்கள், நாங்கள் மட்டுமல்ல இன்றைக்கு சென்னை யிலிருந்து தூத்துக்குடி வரையிலே உள்ள பல ஆயிரக்கணக்கான மீனவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்தத் துறையிலே உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டுமென் றால், இன்றைக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக படகுகளைக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் உற்பத்தி பெரு கும், அதே நேரத்திலே மீனவர்களுக்கும் தொழில் கிடைக்கும். எனவே, தொழில் ஏற்படுத்துவது என்பது முக்கியமல்ல. அதன் மூலம் பயன் யாருக்குச் சேருகிறது என்பது தான் முக்கியம்.

இன்றைக்கு டான்சி, சிட்கோ, சிப்காட், டிட்கோ, டாஸ்கோ, டி.ஐ.ஐ.சி., டான்செம், எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் மற்றும் இதுபோன்ற ஸ்தாபனங்கள் எத்தனையோ அமைக்கப்பட்டிருக் கின்றன. இவைகளை எல்லாம் ஒருமுகப்படுத்தி, அதற்கு சில பொதுவான கோட்பாடுகள் வைக்கப்பட வேண்டுமென்ற அடிப் படையிலே, செயல்பட ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இந்த ஸ்தாபனங்களைப் பற்றி அசஸ்மென்ட் இருக்கிறதா? எவ்வளவு வேலைவாய்ப்பு இவைகளிலே ஏற்படுத்தப்பட்டன என்ற புள்ளி விவரங்கள் இருக்கின்றனவா ? எவ்வளவு உற்பத்தி ஆயிற்று, அதனுடைய உண்மையான நிலை என்ன என்பதையெல்லாம் மாநில அரசாங்கம் அசஸ் செய்திருக்கிறதா ? இவ்வளவு பணம் மூலதனமாகப் போட்டு எவ்வளவு பிரயோஜனம் ஏற்பட்டிருக் கிறது என்று பார்க்கப்பட்டதா ? இந்தத் துறையிலே கவனம் செலுத்தப்படவேண்டும். இவைகளையெல்லாம் கண்காணிக்கின்ற நிர்வாகச் செலவுகளுக்காகவே இந்தப் பணத்தையெல்லாம் செலவு செய்தால் தொழில் துறையை மேம்படுத்த முடியாது.

ஆகவே, இந்த ஸ்தாபனங்களையெல்லாம் பரிசீலனைசெய்து ஒருமுகப்படுத்த வேண்டும். இவைகளிலே என்ன என்ன தொழில் கள் துவக்கப்பட்டன. எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டது என்பதையெல்லாம் பார்த்து ஒரு தீர்வான முடிவை எடுக்க வேண்டும்

1978 மார்ச் 22] [திரு. என். சங்கரய்யா]

அடுத்து, இரசாயனப் பிரிவு என்ற பகுதி இருக்கிறது. இங்கே சில தொழில்களை உருவாக்குவதற்காக முயற்சியெடுத்து இருக்கிறார்கள். அவைகளை நாங்கள் வரவேற்கிறோம். நான் ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தொழில் துறையில் உண்மையான வளர்ச்சி வேண்டும். 1976-77ல் தொழில் துறை குறிப்பிலே ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகஸ்ட் 1976-க்குள் டிரைவ் செய்யவேண்டும். அப்போது அவசர காலம் இருந்தது. 19-11-1976-க்குள் 5.900 புதிய யூனிட்கள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது எப்படி முடியும் ? ஆகஸ்டிலே இருந்து நவம்பர் மாதத்திற்குள் 5,900 புதிய யூனிட்டுகள் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமென்றால் முடியுமா? ஆனால் அந்த காலத்திற்குள் 10,509 புதிய யூனிட்டுகள் ரிஜிஸ்டர் பண்ணிவிட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் இன்றைக்கு 10 ஆயிரம் தொழில்கள் நடக்கிறதா ? எவ்வளவு தொழிலாளர்கள் அவைகளிலே ஈடுபட்டிருக் கிறார்கள் ? என்ன உற்பத்தி ஆயிற்று ? இரண்டு மடங்கு யூனிட்டுகள் புதிதாகப் பெருகியிருக்கிறது என்றால் அதன் உற்பத்தியும் இரண்டு மடங்கு அதிகரித்து இருக்கவேண்டுமே.

(பிற்பகல் 12-10)

அதன் விளைவாக வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டுமே. இந்த சிறு யூனிட்டுகள் இன்றைக்கு எப்படி இருக்கின்றன ? இதில் அரசாங்கம் யதார்த்தமாகப் பரிசீலித்து சரியான முடிவுக்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ்ஸ் என்ற கருத்தை வளர்க்க வேண்டும். இந்த ரிப்போர்டைப் படிக்கும் பொழுது நீலகிரி மாவட்டத்தில் 11 டீ பேக்டரிகளைப்பற்றிக் கூறியிருப்பது மகிழ்ச்சியளிக்கக்கூடியதாக இருக்கிறது. சிறு தொழில உற்பத்தியாளர்களுக்கு உரம் போன்றவற்றை இந்த ஸ்தாபனம் வாங்கித் தருகின்றது என்பதைப் பார்க்கும்பொழுது மேலும் இதை விஸ்தரிப்பதன் மூலம் உண்மையிலேயே உற்பத்தி யாளர்களுக்கு நன்மை செய்யவேண்டும்.

அதைப்போல தீப்பெட்டித் தொழிற்சாலை அமைப்பதற்காக கூட்டுறவு இன்டஸ்டிரியல் சொசைட்டி, அதற்காக சம்மேளனத் தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டிலுள்ள எல்லாயிடங்களிலும் தீப்பெட்டித் தொழில் இருப்பவர்கள். கோவாப்பரேடிவ் இயக்கத்திலே இருப்பவர்கள் இலட்சக் கணக்கிலே, பல்லாயிரக்கணக்கிலே வேலை செய்கிறார்கள். அவர் களை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கயிற்றைப் பொறுத்தவரையிலே மத்திய ஃபெடரேஷன் வைத்திருக்கிறார்கள். ஆனால் அதை மெக்கனைசேஷன் என்று போட்டிருக்கிறார்கள். அப்படி இயந்திர மயமாக்கினால் அதனால் பிரயோசனம் ஒன்றுமில்லை. இந்தத் தொழிலே கைதொழிலார்

களுக்கு வேலைகொடுக்க வேண்டுமென்று இருக்கும்பொழுது அதை மறுபடியும் இயந்திரத்திற்குக் கொண்டு சென்றால் என்ன அர்த்தம்? இதன் விளைவாக விபரீதமான விளைவுகள் ஏற்படும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குமரி மாவட்டத்திலே கயிறு ஸ்தாபனங்கள் இருக்கின்றன, தஞ்சாவூர் மாவட்டத்திலேயும் இருக்கிறது. அவர்கள் தங்கள் உடல் உழைப்பை ஈடுபடுத்த அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குமரி மாவட்டத்தில் சுமார் 20,000 பெண்கள் வலை பின்னுகிறார்கள். அதை மற்றவர்கள் வாங்கி மீன்வலைகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள். அப்படி 20,000 பெண்கள் அந்த வேலையைச் செய்து வரும்பொழுது, மணவாளக்குறிச்சிஎன்ற இடத்தில் நைலான் வலை பின்னுகின்ற கம்பெனி வரப்போவதாகத் தெரிகிறது. இவ்வாறு கம்பெனி வந்தால் 20,000 பெண்கள் வலை பின்னுகின்ற வேலைவாய்ப்பு அழிந்து விடும். இதனால் அவர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். நைலான் முதலாளி தொழில் நடத்துவதற்கு வாய்ப்பு கொடுத்துவிட்டு இதுவும் தொழில் வளர்ச்சி என்று பார்ப்பது, இந்தக் கால கட்டத்தில் இந்தியாவில் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை மறுப்பதாக ஆகும். ஆகவே, இன்றைக்கு அப்படிப்பட்ட வேலைவாய்ப்பை மறுக்கின்ற காரியத்தைச் செய்யக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்திரித் தொழிலைப் பாதுகாக்க வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முந்திரி போர்டில் தமிழ் நாட்டிற்குப் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கிறது, அதில் பிரதிநிதித்துவம் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

குமரி மாவட்டத்தில் ரப்பர் பேக்டரியில் உயர்ந்த ரக ரப்பர் உற்பத்தியாகின்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தியன் ரப்பர் போர்டிலும் தமிழ்நாட்டிற்குப் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கிறது. அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டு உற்பத்தி பல தாலூக்காக்களில் செய்கிறார்கள். 13,000 ஏக்கர்களில் பட்டு நூலுக்கான முசுக்கட்டை மரங்கள் வளர்க்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அது நல்ல பயனுள்ள காரியம். அதையும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கனி வளங்களை ஆராய்ச்சி செய்யும் முறைகளை அரசாங்கத்தில் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இது டெலிகேட் மேட்டர், ஸ்டிரேடஜிக் மேட்டர். கனிவளம் இருக்கிறது என்பது முக்கியமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய விஷயம். இந்த நிலையிலே ஜியாலஜிகல் இலாக்கா, அதாவது பூகர்ப இலாக்காதான் இந்த முயற்சியில் ஈடுபட்டுச் செய்வது நல்லதே தவிர இம்மாதிரி பிரச்சினையிலே பிறரை அனுமதிப்பது தவிர்க்கப்பட வேண்டும். அது தவிர்க்க முடியாதது என்ற நிலையிருந்தாலொழிய பொதுவாக இது தவிர்க்கப்பட வேண்டும். நம்முடைய கனிவளம் நம்முடைய மாநில சர்க்காருக்குத் தெரியும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இதில் அடங்கியுள்ள கருத்தைப் புரிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன்.

மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட் காரணமாக இரட்டை ஏடு சுருட்டு கம்பெனி மூடப்பட்டிருக்கிறது. காரணம், அதற்கு எக்சைஸ் வரி 100 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார்கள். அதனால் அதை நடத்த முடியாது என்று மூடிவிட்டார்கள். ஆகவே, இதைப்பற்றி அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மோட்டார் பம்பு உற்பத்தி கோயம்புத்தூரில் ஏராளமாக செய்யப்படுகிறது. அரசாங்கம் வழங்கும் கடன்களைக் கொண்டு வாங்கும்பொழுது இந்த 12 கம்பெனிகளில்தான் வாங்க வேண்டுமென்பது என்ன அவசியம் ?

அப்படியானால், மற்ற கம்பெனிகள் என்ன ஆவது ? நான் ஒன்றை ஏற்றுக் கொள்கிறேன், அதற்காக ஒரு குவாலிட்டி கன்ட்ரோல் வையுங்கள். இவ்வாறு, உற்பத்தி பண்ணக்கூடிய பம்புகள் நல்ல தரம் உள்ளவைதானா என்று சோதிப்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. அதற்குப் பிறகு, இந்த 12 கம்பெனிகளிடம்தான் வாங்க வேண்டுமென்று சொல்வது, மற்ற கம்பெனிகளைப் பொறுத்த வரையில், அவர்களுடைய தொழிலுக்குக் குந்தகமாக இருக்காதா ? ஆகவே, தரம் உள்ளவைதானா என்று பார்க்க வேண்டுமே தவிர, இம்மாதிரி 12 கம்பெனிகளிடம்தான் வாங்க வேண்டுமென்று சொல்லக் கூடாது.

அடுத்து, ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல், தோல் பதனிடும் தொழிலை இயந்திரமயமாக்கக்கூடாது. ஏனெனில், இந்தத் தோல் பதனிடும் தொழிலில் அதிகமாக ஈடுபட்டுள்ளவர்கள் அரிசனங்கள். அவர்களில் பெரும் பகுதியினர் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். நான் ஒன்றே ஒன்று சொல்லுகின்றேன், இயந்திரமயமாக்கக்கூடாதா என்றால், ஆக்கலாம். ஆனால், இப்பொழுது கூடாது. வேறு சமுதாய மாற்றங்களைக் கொண்டு வந்த பிறகு, தீவிரமான நிலச் சீர்திருத்தத்தைச் செய்த பிறகு, விவசாயிகள் நில உடமையாளர்களாக மாறி, தங்கள் சொந்தப் பொறுப்பிலே நிலம் வைத்து விவசாயம் செய்கிற நிலையில், அவர்களுடைய வாங்கும் சக்தி அதிகமாகிற காலத்திலே, படிப்படியாக மாற்றம் கொண்டு வரலாம். எங்கள்

[திரு. என். சங்கரய்யா] [1978 மார்ச் 22

கட்சியின் சார்பாக நான் சொல்கிறேன், நீங்கள் கொள்கையை அமுல்படுத்த முடியவில்லை. நிலச் சீர்திருத்தம் செய்ய முடியவில்லை, நிலப் பிரபுக்கள் நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு நிலம் இல்லை, முழங்காலைக் கட்டி உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே, இயந்திர மயமாக்கினால், அவர்கள் நிலை என்ன ஆவது ?

அதே போல், ''ஹார்வஸ்டர் கம்பைன்ஸ்'' உபயோகப்படுத்துகிற இந்த ஐடியா, இப்பொழுது வந்து கொண்டிருக்கிறது. அறுவடை செய்வதற்கே, ''ஹார்வஸ்டர் கம்பைன்ஸ்'' என்றால், அத்தொழிலாளிகளின் கதி என்ன ஆவது ? ஏற்கனவே டிராக்டர்கள் வந்ததனாலே, குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே, பலர் பாதிக்கப்பட்டு, அங்கே 'டென்ஷன்'— நெருக்கடி வராமல் என்ன செய்யும் ? இயந்திரங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், இன்றைய காலகட்டத்தில், சோஷலிசம் வந்த பிறகு, ஏகபோக தொழிலை எடுத்த பிறகு, வெளிநாட்டுத் தொழிலை எடுத்த பிறகு, பொதுவுடைமையைக் கொண்டு வந்த பிறகு, நாம் மாறுதலைச் செய்தால், அதில் மாறுபாடு கிடையாது. ஆகவே அரசாங்கம் அந்த மாற்றத்தைக் கொண்டுவந்த பிறகு, இந்த மாறுதலைச் செய்ய வேண்டும். இதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரே ஒரு விஷயத்தை, உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது, 'ஆட்டமாடிக் லூம்ஸ்', 'பவர் லூம்'களே, கைத்தறியைப் பாதிக்கிறது என்று இப்பொழுது பெரிய கிளர்ச்சி இருக்கிறது. ஏற்கனவே, 13,000 லூம்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இல்லீகலாக, 10,000 லூம்கள் வைத்திருக்கிறார்கள். அதை நியாயப்படுத்த வேண்டுமென்று ஏற்கனவே இருந்த அரசாங்கம் கேட்டிருக்கிறது. அந்த 10,000 லூம்களைச் சேர்த்து, மொத்தம் 23,000 லூம்கள் இருக்கும்போது, கைத்தறி நெசவாளர்கள் என்ன ஆவார்கள் ? இங்கே, நாம் கவலைப்படுகிறோம், கைத்தறி நெசவாளருக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்று.

மதுரையிலிருக்கிற, மதுரா கோட்ஸ், மற்றும், பி.அண்டு சி. மில் இரண்டிலும், 'ஆட்டமாட்டிக் லூம்கள்' ஓடுகின்றன. இது எப்படி பாதிக்கிறது என்றால், 4 பவர் லூம்களைக் கவனிக்க ஒரு தொழிலாளி என்றால், இந்த ஆட்டமாட்டிக் லூம்கள் ஓடுமானால், 24, 25 ஆட்டமாடிக் லூம்களுக்கு, ஒரு தொழிலாளி தேவைப்படுகிறார். இதனால், தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு ஏற்படாது. ஆகவே, அரசாங்கம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

1978 மார்ச் 22] [திரு. என். சங்கரய்யா]

கடைசியிலே, ஒன்றிரண்டு அவசரமான பிரச்னைகள். காவிரி மில்துயர் துடைப்பு சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட மில். அந்த மில்லில், வேலை இழந்துள்ள தொழிலாளர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஆயிரத்து சொச்சம் தொழிலாளர்களுக்கு 15 நாட்கள்தான் வேலை கிடைக்கிறது, இதனால், நூல் தேக்கம் ஏற்பட்டு இருக்கிறது. 17—3—1978 முதல் நிலைமை மேலும் மோசம் அடைந்திருப்பதால், அரசாங்கம் அதி ல தலையிட்டு, அத்தொழிலாளர்களுக்குக் கடன்கள் வழங்கி, அவர்கள் முழு வேலை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், சக்தி பைப்ஸ். அந்த நிறுவனமும் இன்றைக்கு அரசால் எடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்தத் தொழிற்சாலை வேலை செய்யவில்லை என்று நான் அறிகிறேன். முக்கியமாகத் தொழில் நுணுக்கமுள்ள தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அதைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலியில் வாசுதேவநல்லூரிலே, சர்க்கரை ஆலை ஒன்றை ஏற்படுத்த, இலட்சக்கணக்கான ரூபாயை வசூல் பண்ணினார்கள். வட்டியும் கொடுக்கவில்லை, எப்பொழுது தொழிற்சாலை வரும் என்றும் தெரியவில்லை. ஏற்கனவே, தண்ணீர் வளம் இருக்கிறதா, கரும்பு உற்பத்தி இருக்கிறதா என்று பார்த்துத்தான் ஷேர் காப்பிட்டல் வசூல் செய்திருக்கிறார்கள். அந்த ஆலையைக் காலா காலத்தில் திறக்காமல் போனால், மத்திய அரசு உதவி கிடைக்காமல் போகும். ஆகவே, இதில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட பகுதிகளைப் பற்றி மாநில சர்க்கார் பரிசீலனை செய்யும்போது, இராமநாதபுரம் மாவட்டம், மதுரையிலே பழனி தாலுக்கா ஏன் சேர்க்கப்படவில்லையென்று தெரியவில்லை. இராமநாதபுரம் மாவட்டம் பூராவும் இன்றைக்குப் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. ஆகவே, தொழில் வளர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்றால், அவற்றை பின் தங்கிய பகுதிகளாக அறிவித்து, எல்லா உதவிகளையும் அளிக்கவேண்டும்.

அடுத்து, முக்கியமான ஒன்று. சர்க்கரை ஆலைகளிலே காலா காலத்திலே பாலன்ஸ் ஷீட் தயாரிப்பதில்லை. உதாரணமாக, கள்ளக்குறிச்சி பாக்டரியிலே, பாலன்ஸ் ஷீட் இன்னும் தயாரிக்கப்படவில்லை. அதனால், தொழிலாளர்களது போனஸ் பிரச்னை தீர்க்கப்படவில்லை. ஆகவே, காலாகாலத்தில் பாலன்ஸ் ஷீட் தயாரிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரே ஒரு பிரச்னை. தொழில் வளரவேண்டுமென்றால், தொழில் உறவுகள் முக்கியமானது, தொழிலாளர்கள் மனத் திருப்தி முக்கியமானது. பாடி தொழிற்சாலையிலே பழி வாங்கப்பட்ட—வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களை

மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். கடந்த காலத்திலே, சிம்சன் தொழிற்சாலையிலே தகராறு வந்தபொழுது, அன்றைக்கிருந்த அரசாங்கம் கூட, வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலையில் அமர்த்த ஆவன செய்தது. இப்பொழுது, டி.வி.எஸ். தொழிற்சாலையில் 15 பேரை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். மேலும் பலரை நீக்க இருக்கிறார்கள். இதை அரசாங்கம் அனுமதிக்காமல், தொழில் அமைதியை ஏற்படுத்துவதன் மூலம், உழைப்பாளர்களைத் திருப்தி படுத்துவதன் மூலம், தமிழகத்திலே தொழில் வளர்ச்சியை அதிகரிக்க முடியும், உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று கூறி, என்னுடைய பேச்சை முடிக்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12-20]

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் துறை மானியத்தின் மீது கலந்து கொண்டு பல்வேறு கருத்துக்களைச் சொல்லுகின்ற வாய்ப்பினைப் பெற்றதற்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே புரட்சித் தலைவர் தலைமையிலே அமைந்திருக்கிற இந்த தமிழக அரசு பல தொழில் நிறுவனங்களை நிறுவி குறிப்பாக கிராமப்புற மக்களின் நலனைக் கருதி செயல்பட முனைந்திருப்பது அனைவரும் நன்றாக அறிவார்கள். இந்தத் திட்டத்தின் கீழே இந்த நிதிநிலை அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. என்ன திட்டங்களை வைக்கவேண்டும் என்று கோடிட்டுக் காண்பித்திருக்கிறார்கள். தொழிற் புரட்சியை ஏற்படுத்தி தொழில் வேகமாக வளரவேண்டும் என்று நினைக்கிற அதே நேரத்தில் அதற்குரிய பொருளாதார கொள்கையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பொருளாதாரம் போதுமானதாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொன்னதைப்போல ஏராளமான உற்பத்தித் திறன் வந்தால் உற்பத்தி செய்கின்ற பொருள்கள் யாவையும் எப்படி விற்பனை செய்வது என்று சாத்தியக் கூறு உருவாகும் என்ற ஐயப்பாட்டுடன், தொழிலைப் பெருக்குகின்ற திட்டத்தைப் கைவிட்டுவிடுவது என்று எண்ணிப்பார்க்கிற நிலை உருவாகும் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போக்கினை மாற்றி அமைக்கிற வகையிலே இந்த அரசு செயல்பட முனைந்து இருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

கடந்த 20 ஆண்டுகாலமாக இந்த நாட்டின் தொழில் வளர்ச்சி 1956ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட அந்தக் கொள்கையின் அடிப்படையிலே அந்தத் தீர்மானத்தை ஒட்டி அமைந்துள்ளது. இந்தக் கொள்கைத் தீர்மானத்தில் பல கூறுகள் செல்திறன் உள்ளவையாக இருந்தாலும் இன்றைய சூழ்நிலையிலே அவை முழுமை எய்தவில்லை என்பது கண்கூடு.

மாநில அரசின் கொள்கை கிராமப்புறங்களில் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்று. அப்படி அமைத்து கிராமப்புறங்களில் உள்ளவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு பல திட்டங்களை செம்மைப் படுத்தித் தரவேண்டிய அளவிலே மத்திய சர்க்காரும் அனுமதித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

504-க்கும் மேலாக பல தொழிற்சாலைகளை கிராமப்புறங்களிலே சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழிலுக்கும் ஒதுக்கும் திட்டங்களை மத்திய அரசு அறிவித்திருப்பது, தமிழக அரசினுடைய பரிந்துரைகளையும் மனதிலே கொண்டு அறிவித்திருக்கும் என்ற இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். சிறு தொழில் வளர்ச்சியும், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு பெறுகின்ற, எண்ணுகின்ற அதே நேரத்தில் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு, சிறிய தொழில்கள் இருந்தால்தான் அதாவது சப்சிடிரி இன்டஸ்டிரீஸ், அதாவது அலைட் பாக்டரிஸ் கன்சர்ன்ஸ், என்கின்ற வகையிலே இங்கே இருக்கிற பெரிய தொழிற்சாலையை ஒட்டினாற்போன்று அதற்கு வேண்டிய உபகரணங்கள் தயாரிக்கின்ற வகையிலே, உப பாகங்கள் தயாரிக்கின்ற வகையிலே, பல சிறிய நிறுவனங்கள் நிறுவப்படும். ஆகவே இதை இந்த அரசு மையமாகக் கொண்டு மத்திய அரசை அடிக்கடி பரிந்துரை வழங்கிக் கொண்டிருப்பதை நாம் அனைவரும் சேர்ந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் மத்திய அரசு பெரிய பெரிய தொழில்களை ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் நகர் புறங்களில் அமைக்க உரிமங்கள் வழங்கக்கூடாது என்று மாநில அரசுக்குத் தடை விதித்து இருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த உரிமங்கள் வழங்க வேண்டிய நிலையில் பல சிரமங்கள் இருந்தாலும் உரிமங்கள் வழங்கும் நேரத்தில் காலதாமதம் ஆகிறது. சில நேரங்களில் ஒரு வருஷம் இரண்டு வருஷம் ஆகிறது. ஆகவே, மத்திய அரசும், மாநில அரசும் ஒத்துக்கொண்டு, அந்த உரிமங்கள் வழங்கும் காலதாமதத்தைக் குறைக்கும் வகையில் பல குழுக்கள் அமைத்து அந்தக் குழுக்களின் மூலம் பரிந்துரை கேட்டு, செயல்பட, அந்தக் குழுக்கள் அமைத்து இருப்பதை நாம் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

வெளிநாடுகளில், மேல் நாடுகளில் உற்பத்தித் திறன் பெருகி இருக்கிறது என்றால், அங்கே ஒட்டுமொத்தமான கருத்தின் அடிப்படையில், அங்கேயுள்ள தொழிலாளர்கள் சுறுசுறுப்பாகப் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். நம் நாட்டில் அதைப் போல், குறிப்பாக தமிழகத்தில் இன்றுள்ள நிலையைப் பார்க்கிற போது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பல்வேறு சூழ்நிலையில் நல்லவிதமாக இயங்கிவரும் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலை

[திரு. பாக்கூர். சு. சுப்பிரமணியம்] [1978 மார்ச் 22

உருவாக்கும் செயலில் நாம் முனைந்து இருக்கிறோம். அதை விடுத்து, நாமும், தமிழக மக்களும், குறிப்பாக எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும், இந்த அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தால், தமிழ் நாட்டில் தொழில்மயமான எதிர்காலம் இருக்கும். தொழில் வளர்ச்சியில் தன்னிறைவு பெற்று, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நல்ல வகையில் தமிழகம் அமையும் என்றால் அது மிகையாகாது.

மேலைநாடுகளில் ஸ்ட்ரைக் போன்றவற்றை தவிர்க்க, வேலை நிறுத்தத்தைத் தவிர்க்க, ரெட்பாட்ஜ் அணிந்து, சிகப்பு பாட்ஜ் அணிந்து, நீண்ட நேரம் வேலை செய்து, உற்பத்தியைப் பெருக்கி, அந்த அதிக உற்பத்தியின் மூலம் நம் விற்பனை பாதிக்கப்பட்டு விடுமோ என்று அந்த தொழில் அதிபர் பயந்து விடுகிற அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கி, அதன் காரணமாகத் தங்கள் கோரிக்கைகளை வைக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலோ 100-க்கு 90 நாள் தடுக்கி விழுந்தால் ஸ்ட்ரைக் என்றும், அதைக் காரணம் காட்டி அரசியல் ஆதாயம் பெறுவதற்கு என்று சிலரும் இருக்கின்ற சூழ்நிலையை நாம் காண்கிறோம். (மணியடிக்கப் பட்டது) நேரம் அதிகமாகிவிட்டால், குறிப்பாக என் தொகுதியைப் பற்றி ஓரிரண்டு சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

செங்கை மாவட்டத்தில் திருவொற்றியூர் பகுதி, தொழிற் பேட்டை பகுதியாகும். அந்த பகுதியில் இருக்கிற தொழில்கள் வளர, மேலும் தீவிரம் அடைய, அந்த திருவொற்றியூர் பகுதியில் ஒரு பாலிடெக்னிக்கும், ஒரு ஐ.பி.எம். பள்ளியும் இந்த நடப்பு ஆண்டில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எண்ணூரர் பகுதியில் ஒரு மீன்பிடி துறைமுகம் கட்டித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். தென்னை நார் தொழிற்சாலை திட்டத்தின் கீழ் அச்சரப்பாக்கம் பகுதியில் ஒரு தொழிற்சாலை நிறுவவேண்டும். இதனால் இங்கே வாழ்கிற பனையேறும் தொழிலாளர்களுக்கும், வேலைவாய்ப்பு இல்லாத மக்களுக்கும் வேலை கிடைக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த, உத்திரமேரூர் தொகுதியில், வாலாஜாபாத்தில் பாலூர் ஸ்பின்னிங் மில்ஸ் ஏறத்தாழ பல ஆண்டுகாலமாக மூடிக்கிடக்கிறது. அதனால் ஏராளமான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மதுராந்தகம் தொகுதியைச் சேர்ந்த கூட்டுறவு சர்க்கரை ஆலை உற்பத்தித் திறனை 1,750 டன்னாக உயர்த்தி இருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அங்கே வேலை நிறுத்தம் ஏற்பட்டு பெரும்பாலான விவசாயப் பெருங்குடி மக்கள் தவித்த நேரத்தில், அரசு முன்வந்து, நமது மாண்புமிகு

1978 மார்ச் 22]

கீழ்க்கண்டவாறு உதவித் தொகை இந்த நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது:—

	1974–75.	1975–76.	1976–77.	1977–78.
	(ரூபாய் இலட்சங்களில்.)			
எண்ணிக்கை ..	105	145	156	23[illegible]
ஒப்பளிக்கப்பட்டவை.	11·69	40.31	38.86	57.34
கொடுக்கப்பட்டவை.	3.59	22.44	35.22	30.68

7. ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தின் கீழும், வேலை வாய்ப்பு பெருக்கத் திட்டத்தின் கீழும் தொடக்க மூலதனத் தொகையை வழங்குதல்.

இத் திட்டத்தின்கீழ், 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய தொழில் நுட்பவினைஞர்கள் உட்பட படித்து வேலையற்றிருப்பவர்களுக்கு ரூ. 250 இலட்சம் அளவிற்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 1,407 பேர் பயனடைந்தனர்.

8. ஏற்றுமதி/அதிக அளவில் இறக்குமதி செய்ய சிறுதொழில் பிரிவுகளுக்கு உதவி.

ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட மின்னணு பாகங்களையும், ஜிப் பேசனர்கள் (Zip Fastners) இறக்குமதியை செய்ய 'சிட்கோ' சிறு தொழில் பிரிவுகளுக்கு உதவியுள்ளது. மூக்குக் கண்ணாடி பிரேம்கள், சாவி பட்டுக் குஞ்சங்கள், கைக்குட்டைகள், கைவினைப் பொருள்கள் ஆகியவற்றை ரூ. 1,10,252 மதிப்பிற்கு 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய நேரடியாக அது ஏற்றுமதி செய்துள்ளது. ஏற்றுமதி விற்பனைமீது ரூ. 3,861 ஊக்கத் தொகையை 1976–77-ல் இந்திய அரசிடமிருந்து இந்த நிறுவனம் பெற்றுள்ளது.

9. தமிழக அரசின் சார்பில் தொழிற்பேட்டைகள் மற்றும் சீரமைக்கப்பட்ட மனைகள் பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல்.

தமிழகத்தில் உள்ள தொழிற்பேட்டைகளையும், சீரமைக்கப்பட்ட தொழிற்கூட மனைகளையும் அரசின் சார்பில் நிர்வகிக்கும்பொறுப்பு 'சிட்கோவிற்கு' அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி 33 தொழிற்பேட்டைகளும், 6 சீரமைக்கப்பட்ட மனைப்பேட்டைகளும் 'சிட்கோ' ஏற்று நடத்துகிறது. அரசுத் தொழிற்பேட்டைகளை மேலாண்மை செய்யும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முகமைப் பணிகள் பின்வருமாறு:—

(1) அரசுச் சொத்தை வாங்குதலும் விற்பனை செய்தலும் சம்பந்தப்பட்ட பணிகள்.

(2) புதிய அமைப்புக்களை விரிவுபடுத்துவதற்கு முதற் பொருள் செலவு செய்தல் பற்றியவை.

(3) 'தொழிற்பேட்டைகளை பராமரித்தல்.

இதன்படி 783 தொழிற் கூடங்களையும், குறைந்த வாடகை தொழில் வீட்டு வசதி திட்டத்தின்படி கட்டப்பட்ட 1,117 தொழிலாளர் குடியிருப்புக்களையும் 1974ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் 'சிட்கோ' நிர்வகித்து வருகிறது. மற்றும் தமிழக அரசின் சீரமைக்கப்பட்ட தொழிற்கூட மனைகளை நிர்வகிக்கும் பொறுப்பும் சிட்கோவிற்கு அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

10. அகதிகள் கூட்டுறவு நிதி வள வங்கியின் உதவியுடன் சிறுதொழில்களுக்குக் கடன்கள்.

1978 ஜனவரி முதல் தொடங்கப்பட்ட இத் திட்டம், நிரந்தரமாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள அகதி ஒருவருக்கு ரூ. 10,000 என்ற வீதத்தில், அகதிகள் கூட்டுறவு நிதிவள வங்கி, அனுப்பிய அகதிகளை வேலைக்கமர்த்திய சிறு தொழில் பிரிவுகளுக்குக் கடன்கள் வழங்க வகை செய்கிற .

11. வருங்காலத் திட்டம்.

1978–79 ஆம் ஆண்டுக்கான 'சிட்கோவின்' திட்டத்தில், சிறு தொழில்களுக்கான பணிக்கொட்டகை கட்டுதல், தவணைக் கொள்முதல் அடிப்படையில் தொழிற் சாலைக் கொட்டகை கட்டுதல் ஆகியவை அடங்கும். இன்றியமையாத வசதிகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றிற்கான முதலீடு ரூ. 354 இலட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

	(ரூபாய் இலட்சங்களில்.)
சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள் கட்டுதல் ..	23.60
தவணை முறைத் திட்டத்தின்கீழ் தொழிற்கூடங்கள்.	250.00
மத்திய மூலதன மானியம்	30.00
சிட்கோ அகதிகள் மறுவாழ்வு மற்றும் கூட்டுறவு நிதி வள வங்கி திட்டத்தின்கீழ் உதவி	50.00
நிர்வாகப் பயிற்சி	0.45
மொத்தம் ..	354.05

இத்துடன் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சிட்கோ திட்டப் பணிக்காகத் தனியாக ரூ 40 இலட்சம் கடனாக அரசால் வழங்கப்படும். நிதி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து ரூ. 37 இலட்சம் திரட்டப்படும். தொழில் முனைவர்களிடமிருந்து ரூ. 9 இலட்சம் பெறப்படும். இவ்வாறாக, மொத்தச் செலவு ரூ. 86 இலட்சமும் சரிக்கட்டப்படும். இந்த நிறுவனம் ரூ. 1,672 இலட்சம் வியாபாரத் தொகை காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 21,822 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். இதில் 11,661 பேர் கிராமப் பகுதியிலும், 10,161 பேர் நகர்ப்புறப் பகுதியிலும் இருப்பர்.

தொழிற் பேட்டைகளில் உள்ளனவும், சிட்கோ உதவி பெறுவனவுமான சிறு தொழில் அமைப்புகளில் நலிவடைந்த அமைப்புகளை இனங்கண்டு அவற்றிற்கு மறுவாழ்வு வழங்கிட வசதியாக பொது மதிப்பாய்வு நடத்திட 'சிட்கோ' உத்தேசித்துள்ளது. விரிவான முறையில் அமைந்த ஆலோசனைப் பிரிவும் ' சிட்கோவில்' ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி).

அரசு 1965-ம் ஆண்டு தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தை (டான்சி) அமைத்தது. தொழில் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 65 தொழிற் பிரிவுகளை வணிக அடிப்படையில் நடத்தும் நோக்கத்துடன் அரசு, இந் நிறுவனத்திற்கு மாற்றியது. 1—12—1965 அன்றையபடி டான்சிக்கு மாற்றப்பட்ட இருப்புக்களின் மதிப்பு ரூ. 989 இலட்சமாகும். இத் தொகையில் ரூ. 400 இலட்சம் பங்கு மூலதனமாகவும் எஞ்சிய தொகை அரசிடமிருந்து பெறப்பட்ட கடனாகவும் கருதப்பட்டது.

2. நிறுவனம் மேற்கொண்ட புதிய திட்டப் பணிகளின் நிலையான மூலதனச் செலவை (இயந்திரங்கள் முதலியன வாங்குவதற்காகும் செலவு ஏற்பதற்காக பங்குத்தொகையாகவும் கடனாகவும் அரசு உதவி அளித்து வருகிறது. ரூ. 150 இலட்சம் கடன் தொகையை பங்கு மூலதனமாக மாற்றுவதன் மூலம் நிறுவனத்தின் கடன் பங்குத் தொகை விகிதம் (Debt Equity Ratio) மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

3. இந்த நிறுவனத்தில் தற்போது 57 உற்பத்திப் பிரிவுகள் உள்ளன. கீழே குறிப்பிட்டுள்ளவாறு அவற்றை ஒன்பது தொகுதிகளாகத் தொகுக்கலாம்:—

1. கட்டுமானப் பட்டறைகள்
2. கருவிப் பட்டறைகள்
3. வார்ப்படச்சாலை
4. பொறியியல் பிரிவுகள்
5. 'பேப்ரிகேஷன்' பிரிவுகள்
6. தச்சுத் தொழில்கள்
7. தோல் தொழில்கள்
8. கண்ணாடிப் பொருள்
9. பல்வகை/சிறப்புவகைப் ,?

4. இந்த நிறுவனத்தின் பிரிவுகளில் உற்பத்தி மதிப்பு கடந்த ஆண்டுகளில் அதிகரித்து வந்துள்ளது. இது 1965—66-ல் ரூ. 389 இலட்சமாக இருந்தது. 1976—77-ல் ரூ.1,062 இலட்சமாக அதிகரித்துள்ளது. 1976—77-ல் விற்பனை ரூ. 1,022 இலட்சமாக இருந்தது. 1977—78-ல் (1977 டிசம்பர் முடிய) உற்பத்தி அளவு ரூ. 650 இலட்சமாக உள்ளது. பல்வேறு ஆண்டுகளில் இந்த நிறுவனத்தின் பிரிவுகள் வேறுபட்ட ஆதாய, விரய விவரங்களைக் காட்டுகின்றன. முன்பு இந்த நிறுவனம் ஆதாயத்தை ஈட்டிய போதிலும் கடும் போட்டி காரணமாக கடந்த சில ஆண்டுகளில் இது இழப்பு அடைந்துள்ளது. போதுமான அளவுக்கு உற்பத்திக்கான கோரிக்கைகளை இந்த நிறுவனம் பெற முடியவில்லை; கிடைத்தவற்றிலும் பெற்ற பண வீதங்கள், நிறுவனம் முன்னர் பெற்ற வீதங்களைக் காட்டிலும் குறைவாகவே இருந்தன. வணிக வகையில் தனித்தியங்கும் உற்பத்தி நிலையங்களாக் இப்பிரிவுகளை நடத்த இந்த நிறுவனம் முயற்சிகளை எடுத்து வருகிறது.

5. ''டான்சி'' தனது நடவடிக்கைகளை பலதிறப்படுத்தியுள்ளது. 'தமிழ்நாடு மொபெட்ஸ் லிமிடெட்' என்றழைக்கப்படும் புதிய துணை நிறுவனம் மூலம் 'மாயூரம்' என்ற விற்பனைப் பெயரில் மொபெட்ஸ் ஸ்கூட்டர்களை தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. பெங்களூர், ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் தயாரிப்பு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இராணிப்பேட்டையில் இயந்திரக் கருவிகள் தயாரிப்பது மற்றொரு திட்டமாகும். இத்திட்டத்திற்கான கட்டிடங்கள் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. தென்னார்க்காடு மாவட்டம் குன்னம் கிராமத்தில் உள்ள தனது கல் உடைக்கும் தொழிற்சாலையில் வணிக முறையில் வெட்டியெடுப்பதற்காக 'டான்சி' கருங்கல் படிகங்களை வெட்டியெடுக்கத் தொடங்கியுள்ளது. கருங்கற்களை (Hand dressed granites) ஏற்றுமதி செய்வதற்காக ரூ. 36 இலட்சம் அளவிற்கு புகழ் பெற்ற ஜப்பானிய நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. அண்மையில் ரூ. 17·4 இலட்சம் மதிப்புள்ள கற்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

பெங்களூர், ஹிந்துஸ்தான் இயந்திரக்கருவிகள் தயாரிப்பு நிறுவனம் வழங்கிய பாகங்களைக் கொண்டு கடிகாரம் செய்வதற்கான திட்டம் ஒன்று டான்சியால் செயல்படுத்தப்படுகிறது. உதகமண்டலத்தில் உள்ள இத்தொழிற்

சாலைக் கட்டிடங்கள் முடிவுற்று 21 பேர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் தேதி முதல் ஆரம்ப கட்ட உற்பத்தி தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்

இம்மாநிலத்தில் உள்ள கைத்திறப் பொருள் விற்பனைக்கு உதவ, அவற்றை உருவாக்கும் திறனை வளர்க்க, அவற்றை உருவாக்குபவர்களுக்கு வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தர தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 1-ம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

2. அதற்கு முன்பு தொழில் வணிகத் துறையின் பொறுப்பில் இயங்கி வந்த விற்பனை மற்றும் உற்பத்தி பயிற்சி நிலையங்களின் இருப்புகளையும், பொறுப்புகளையும், சென்னை மாநில கைத்திறப் பொருட்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வியாபார இருப்புகளையும் நிறுவனம் மேற்கொண்டது.

3. விற்பனை நிலையங்களின் தோற்றத்தை மேம்படுத்தவும், வெளி நாடுகளில் நடைபெறும் பொருட்காட்சிகளில் பங்கு கொள்வதை மேம்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டதன் காரணமாக, அந்நிய நாடுகளில் கைத்திறப் பொருட்களில் வியாபாரம் செய்துவருபவர்கள் நிறுவனங்களிடமிருந்து இந்த நிறுவனம் தற்போது பல தேவை ஆணைகளைப் பெற்று வருகிறது. விரைவில் இந்த நிறுவனம் கணிசமான அளவுக்கு அந்நிய செலவாணியை ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. பயிற்சி நிலையங்களை நடத்துவதற்காக, பங்கு மூலதனத்திற்கு தொகை அளித்தல், கடன்கள், உதவித் தொகை கொடுத்தல் ஆகியவை மூலமாக இந்த நிறுவனத்திற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள தனது விற்பனை நிலையங்களை ரூ. 4·50 இலட்சம் செலவில் நவீனமாக்கவும், கன்னியாகுமரியில் சுமார் ரூ. 2·00 இலட்சம் செலவில் புதிய விற்பனை நிலையம் ஒன்றை திறக்கவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. கைத்திறப் பணியாளர்கள் புதிய வடிவமைப்புகளை உருவாக்க

அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக சென்னையில் இந் நிறுவனத்தின் வடிவமைப்பு நிலையம் ஒன்று உள்ளது. இங்குள்ள கைத்திறப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க கேரளா, ஆந்திரப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய இடங்களிலிருந்து கைத்திறப் பொருள் வல்லுநர்களை அழைத்து வரவும், இப்பொருட்களின் தொழில் நுட்ப உத்திகளையும் உற்பத்தி நடைமுறைகளையும் அவர்கள் அறிந்து கொள்ள இயலும் வகையில் அகில இந்திய கைத்திறப் பொருட்கள் வாரியம், பிற நிறுவனங்கள் நடத்திவரும் பல்வேறு வடிவமைப்பு நிலையங்களுக்கு பணியாளர்களை அனுப்பவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் இலாப, நட்ட விவரங்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன :—

	(+) இலாபம்	(—) நட்டம்
	ரூ.	ரூ.
1973–74 ..	(+) 2,748	..
1974–75 ..	..	(—) 33,399
1975–76 ..	..	(—) 8,49,475

இந் நிறுவனத்தின் விற்பனை பற்றிய புள்ளி விவரங்கள் பின்வருமாறு :—

[ரூபாய் இலட்சத்தில்]

1973–74	52.63
1974–75	1,33.60
1975–76	1,53.60
1976–77	1,50.85
1977–78	1,51.00
1978–1979 (எதிர்பார்க்கப்படுவது)	1,85.50

தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம் (TACEL)

தமிழ்நாட்டில் அரசினரால் நடத்தப்பட்ட பல்வேறு மட்பாண்டம் பொருள் உற்பத்திப் பிரிவுகளை ஒருங்கிணைத்து அவற்றின் அலுவல்களை வணிக அடிப்படையிலேயே அமைக்க ''தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட்'' என்ற நிறுவனத்தை அரசு 1977 டிசம்பர் திங்கள் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 2.00 கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 98.54 இலட்சமாகும். மேலும் அரசு ரூ. 98.56 இலட்சம் கடனுதவி வழங்கியுள்ளது. இந்நிறுவனம் தொழில்-வணிக இயக்குநர் அலுவலகத்திடமிருந்தும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திடமிருந்தும் (TANSI) 8 தொழில் பிரிவுகளை எடுத்துக் கொண்டு 1974 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. இவற்றில் 3 பிரிவுகள் வணிக அடிப்படையிலானவை. ஏனையவை வளர்ச்சி நோக்கமானவை.

வளர்ச்சியும் செயலும்—

தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட்டின் மூன்று வணிகப் பிரிவுகள் அதாவது விருத்தாசலம், 'டாசெல்' பீங்கான் தொழிற்சாலை, டாசெல் கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம், டாசெல் இயந்திரச் தொழிற்சாலை, திருமழிசை ஆகியவை வரும் ஆண்டுகளில் தங்களுடைய செயல் திறனை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. விருத்தாசலத்திலுள்ள பீங்கான் பொருட்களுக்காக குறிப்பிட்ட தொழிற்பேட்டை பொது வசதி பணி நிலையம் ஒன்று உள்ளது. விருத்தாசலத்தில் உள்ள இத்தொழிற் பேட்டையில் 35 தொழிற் கொட்டகைகள் உள்ளன. ரூ. 3,000-லிருந்து ரூ. 5,000 வரை உள்ள ஆதாரத்துடன் கைவினையர்களுக்கும், சிறிய தொழில் முனைவருக்கும் 12 தொழிற் கொட்டகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ரூ. 25,000-லிருந்து ரூ. 50,000 வரையிலான ஆதாரத்துடன் ஏனைய 23 கொட்டகைகளை சிறு தொழில் அதிபர்கள் எடுத்துக்கொண்டுள்ளனர். தொழிற்பேட்டையில் உள்ள அடிப்படை இன்றியமையாத வசதிகளில், பதப்படுத்தப்பட்ட பொருள்கள் வழங்குதல், பொது உலையில் சுட்டுத்தருதல் ஆகியவை அடங்கும்.

அடித்தள மக்களுக்கு வேலை வாய்ப்பு

இத் தொழிற்பேட்டையில் உள்ள தொழில் முனைவர்கள் சுமார் 600 பேருக்கு, முக்கியமாக சமூகத்தின் அடித்தள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றனர். அவர்களுடைய உற்பத்தி மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20·00 இலட்சமாகும். சிறிய தொழில் முனைவர்களுக்கு பெரிய அளவில் உதவும் தனது முயற்சியின் ஒரு பகுதியாக, இந்த நிறுவனம். பணிநிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு 1,200 டன் உற்பத்தித் திறனுள்ள இயந்திரச் சூளை ஒன்றை நிறுவி வருகிறது. தொழில் முனைவர்கள் தங்களிடம் உள்ள வேலைவாய்ப்பு வசதியை இரட்டிப்பாக்க உதவுவதுடன், ஆண்டு ஒன்றில் உற்பத்தி மதிப்பை ரூ. 50·00 இலட்சமாக அதிகரிக்கவும் இம்முயற்சி உதவும். 1977–78-ல் இந்த பொதுப்பணி வசதி நிலையம் ரூ. 9.25 இலட்சம் அளவுக்கு பணிவசதி செய்துள்ளது. வரும் நிதியாண்டில் இது ரூ. 14·00 இலட்சமாக கூடுதலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விருத்தாசலத்திலுள்ள கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையமும் பெரம்பூரிலுள்ள கலைப் பொருட்கள் நிலையமும் பயிற்சி உற்பத்தி இரண்டும் இணைந்த நிலையங்களாகும். இவற்றில் முறையே ஆண்டொன்றுக்கு 15 பேருக்கும் 10 பேருக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியாளர்களுக்கு மாதமொன்றுக்கு 50 ரூபாய் பயிற்சி உதவித்தொகை கொடுக்கப்படுகிறது. பழைய பண்பாடு நவீன பண்பாடுகளுக்கு உகந்த வகையில் பீங்கான் கலைப்பொருட்களை உற்பத்தி செய்வதில் இந்த இரு பிரிவுகளும் தனிக் கவனம் செலுத்துகின்றன. சென்னை, பம்பாய், டில்லி முதலிய ஊர்களில் கலையுணர்வுள்ள மக்களிடையே இரு நிலையங்கள் உருவாக்கிய பொருட்கள் நன்கு பிரபலமாயுள்ளன. இப்பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக சென்னை, பெங்களூர், கொச்சி முதலிய இடங்களில் இந்த நிறுவனம் விற்பனைக் காட்சிக் கடைகளை ஏற்படுத்தியுள்ளது. ஹைதராபாத்திலும் இக் கடை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

கிராமப் பகுதிகளை மேம்படுத்தும் தனது முயற்சியில் சேலம் மாவட்டம் ஓமலூரில், சிறிய பீங்கான் தொழிற் பிரிவு ஒன்றை 'டாசெல்' நடத்தி வருகிறது. அதனால் அருகில் உள்ள கிராமப்பகுதிகளைச் சேர்ந்த ஓரளவு படித்த இளைஞர்களை சுமார் 50 பேருக்கு இப்பிரிவு வேலைவாய்ப்பு

அளிக்கின்றது. தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் கீழ்க்கண்ட 3 திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1978–79 ஆண்டுத் திட்டத்தில் ரூ. 10 இலட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

எதிர்காலத் திட்டம்

		(ரூபாய் இலட்சத்தில்.)
1.	விருத்தாசலத்தில் உள்ள தொழிற்பேட்டையில் கூடுதலாக மூன்று கொட்டகைகள் கட்டுதல்.	6.00
2.	விருத்தாசலத்தில் உள்ள பணிநிலையத்தை விரிவுபடுத்துதல்.	2.40
3.	ஓமலூரில் கூடுதல் கொட்டகை கட்டுதலும், விரிவுத் திட்டமும்.	2.25
	மொத்தம் ..	10.65

இத் திட்டங்களால் கூடுதலாக 100 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் உள்ள மத்திய அரசு நிறுவனங்கள்.

இம்மாநிலத்தில் உள்ள மத்திய அரசு துறைத் திட்டங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்.

2. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் கீழ்க் காணும் நான்கு பெரும் பிரிவுகள் அடங்கியுள்ளன. அவை யாவன :—(1) பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் (2) அனல் மின் நிலையம் (3) உரத் தொழிற்சாலை (4) நிலக்கரித் தூளைக் கரிக் கட்டிகளாக்கும் தொழிற்சாலை. நிலக்கரிச் சுரங்கத்தின் முதலாவது கட்டத்தில், ஆண்டொன்றுக்கு 3·5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்க வேண்டுமென திட்டமிடப்பட்டது. ரூபாய் 87 கோடி செலவில்ஆண்டு ஒன்றுக்கு

6·5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் வகையில் தற்போதுள்ள பழுப்பு நிலக்கரி சுரங்கத்தின் திறனை உயர்த்துவதற்கான ஒரு திட்டத்திற்கும் உரத் தொழிற்சாலையில் பழுப்பு நிலக்கரியை எரி பொருளாக பயன்படுத்துவதை விட்டுவிட்டு அதற்குப்பதிலாக ரூ. 12.57 கோடி செலவில் எரியெண்ணெயைப் பயன்படுத்துவதற்கான ஒரு திட்டத்திற்கும் இந்திய அரசு ஏற்பளித்துள்ளது. 30–9–1977-ல் அன்றுள்ளவாறு இந்த நிறுவனம் 16,735 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது.

இரயில் பெட்டித் தொழிற்சாலை, சென்னை,

3. இந்திய அரசு, இரயில்வே அமைச்சகத்தின் கீழ் உற்பத்தி தொழிற்சாலையாக இயங்கிவருகிற இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, நடப்பாண்டில் தொடர்ந்து ஏற்றுமதி ஆணைகளை நிறைவேற்றி வந்தது. இத்தொழிற்சாலை, தைவான், பர்மா, ஜாம்பியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற பல நாடுகளுக்கு இரயில் பெட்டிகளையும், உதிரிப் பாகங்களையும் வழங்கி வந்துள்ளது. 1–4–1977 முதல் 31–12–1977 வரை உள்ள கால அளவில், இது 491 பெட்டிகளைத் தயாரித்துள்ளது. இத்தொழிற்சாலை தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31–12–1977 வரை இது உற்பத்தி செய்துள்ள வண்டிக்கூடுகள் 12,996 ஆகும். இவற்றில் 10,296 வண்டிக் கூடுகள் முழுமையான இரயில் பெட்டிகளாக தயாரிக்கப்பட்டு வெளிவந்தன. இந்த தொழிற்சாலை 13,147 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

இந்திய எண்ணெய் நிறுவனத்தின் மசகெண்ணெய் தொழிற்சாலை.

4. இந்திய எண்ணெய் நிறுவனத்தின் மசகெண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 1.4 இலட்சம் டன் மசகெண்ணெய் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. இத்தொழிற்சாலை ரூ. 88.89 இலட்சம் மூலதன முதலீட்டுடன் இயங்கி வருவதுடன், 180 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கிறது. இத்தொழிற்சாலையில் 1977 ஏப்ரல் முதல் 1977 டிசம்பர் வரை 63,056 கிலோ லிட்டர் மசகெண்ணெய் (மதிப்பு ரூ. 19 கோடி) உற்பத்தி செய்யப்பட்டது.

சென்னையிலுள்ள எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை.

5. இந்த எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை இப்பொழுது முழு உற்பத்தித் திறனில் இயங்கி வருகிறது. 1977 ஆம் ஆண்டில், ரூ. 254 கோடி மதிப்புள்ள 2.46 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டது. கீழ்க்கண்ட இனங்களைப் பொறுத்த மட்டில் 1976 ஆம் ஆண்டினை உற்பத்தியின் அளவுடன் ஒப்பிடுகையில், 1977 ஆம் ஆண்டில் உற்பத்தியின் அளவு உயர்ந்துள்ளது.

உற்பத்தி.	1977.	1976.
	('000 டன்களில்)	
விமான எரியெண்ணெய் ..	142	89
உயர்வேக டீசல் எண்ணெய் ..	540	530
தார்	189	180
மசகெண்ணெய் அடிப்படை ..	161	147

ஆண்டொன்றுக்கு சுமார் 20,000 டன் பாரபின் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலையை 4.54 கோடி ரூபாய் செலவில் அமைப்பதும், 30,000 டன் லீனியர் அல்கையல் பென்சின் (Linear Alkyl Benzene) தயாரிக்கும் தொழிற்சாலையை 31.6 கோடி ரூபாய் செலவிலும் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சென்னையிலுள்ள எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலையில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 593.

சென்னை உரத் தொழிற்சாலை.

6. மணலியில் நிறுவப்பட்டுள்ள உரத் தொழிற்சாலை, 1971 நவம்பரில் உற்பத்தியினைத் தொடங்கியது. இது 1,079 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. இந்நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அமோனியா; யூரியா, போன்றவைகளாகும். இந்நிறுவனம், திருவாளர்கள் அம்கோ இந்தியா இன்கார்ப்பரேட்டட் நிறுவனத்துடன் தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஒன்றைச் செய்து

கொண்டுள்ளது. திருவாளர்கள் அம்கோ இன்கார்பரேட்டட் நிறுவனம், சிகாகோவிலுள்ள அம்கோ அனைத்து நாட்டு எண்ணெய்க் கம்பெனியின் துணை நிறுவனமாகும்.

இத்தொழிற்சாலையின் நிறுவப்பட்ட திறனும், 1977 ஆம் ஆண்டின் உற்பத்தியும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

	நிறுவப்பட்ட திறன்.	1977 ஜனவரி முதல் டிசம்பர் வரை உற்பத்தி.
	(மெட்ரிக் டன்.)	(மெட்ரிக் டன்.)
அமோனியா	347,500	194,329
யூரியா	292,000	242,928
என்.பி.கே.	544,500	418,725

கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி.

7. போர்க் கவசவண்டிகள் மற்றும் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான பிற வண்டிகளை உற்பத்தி செய்வதற்காக, புது டெல்லியிலுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு உற்பத்தித் துறையின் கீழ் நிறுவப்பட்ட துறையின் தொழிற் பிரிவாகும்.

படைக்கலத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

8. இத்தொழிற்சாலை, பாதுகாப்புக்குத் தேவைப்படுகின்ற சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்கிறது. 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளன்றுபடி இத்தொழிற்சாலையில், இந்திய அரசு, ரூபாய் 971.04 இலட்சம் மூலதன முதலீடு செய்துள்ளது. இத் தொழிற்சாலையில் தற்போது, 2,344 அதிகாரிகள், தொழிலாளர்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

[1978 மார்ச் 22

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், சென்னை.

9. இத்தொழிற்சாலை, தொலை அச்சுப் பொறிகள் (Teleprinters). மின் தட்டச்சுப்பொறிகள், முத்திரைத்தாளை இரத்து செய்யும் தானியங்கு இயந்திரம், தொலைபேசி, தொலை தட்டெழுத்து (Telex) தொடர்பகங்களுக்கான மின்விசைப் பொறிகள், தொலை செய்தியை பதிவுசெய்து மீண்டும் வழங்கும் தானியங்கிப் பொறிகள் (regenerative repeaters) ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை ரூ. 256.77 இலட்சம் மதிப்புள்ள 3,734 தொலையச்சுப் பொறிகளும், துணைக் கருவிகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலை 1,944 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது.

இந்துஸ்தான் நிழற்படச்சுருள் தொழிற்சாலை, உதகமண்டலம்.

10. இத்தொழிற்சாலையில் திரைப்படச் சுருள்கள், ஊடுகதிர் படச்சுருள்கள், நிழற்படச்சுருள்கள் முதலியன உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. 1977 ஆம் ஆண்டில் ரூபாய் 3,561·45 இலட்சம் மதிப்புள்ள 9.150 மில்லியன் சதுர மீட்டர் அளவிற்குப் பலவகைப்பட்ட நிழற்படப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இந் நிறுவனம் 2,400 பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. இந்நிறுவனம் உற்பத்தி செய்த பொருள்களின் விவரங்கள் பின்வருமாறு:—

உற்பத்தி.	1977 ஜனவரி முதல் டிசம்பர் வரை உற்பத்தி. (சதுர மீட்டரில்.)	மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.)
திரைப்படச் சுருள் பாசிட்டிவ்.	21,00,206	495.30
திரைப்படச் சுருள் (கலர்) பாசிட்டிவ்.	20,12,251	906.61
திரைப்பட ஒலி	4,42,245	115.44
நிழற்படம் எடுக்கும் தாள் ..	21,20,724	498.01
மருத்துவ ஊடுகதிர்த்தாள்	18,49,008	1,019.95
நிழற்படச் சுருள் ..	4,79,967	403.47
ஏனையவைகள்	1,45,634	122.67
மொத்தம் ..	91,50,035	3,561.45

1978 மார்ச் 22]

வருங்கால வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, 'கிராபிக் ஆர்ட்ஸ்', ஊடுகதிர் படச்சுருள்களை மாற்றுவதற்காக, சென்னையில் உள்ள அம்பத்தூரில் மாற்று வசதியை அமைக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்கு ரூபாய் 2 கோடி முதலீடு செய்யவும், சுமார் 150 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கவும் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்திற்கு இந்திய அரசிடமிருந்து இறுதி ஏற்பளிப்பு எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஏற்பளிப்பு வந்தவுடன் ஒரு வருடத்திற்குள் தொழிற்சாலை உற்பத்தியினைத் தொடங்கும்.

மருத்துவ அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, கிண்டி, சென்னை.

11. நடப்பாண்டில், இத் தொழிற்சாலை ரூ. 50·81 இலட்சம் மதிப்புள்ள மருத்துவ அறுவை சிகிச்சைக் கருவிகளை ரூ. 1 கோடி மூலதனத்தில் மருந்துகள் தயாரித்துள்ளது. கலந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலை (Formulation Plant) ஒன்றிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் தொழிற்சாலையின் உற்பத்தி, அடுத்த நிதியாண்டு தொடக்கத்தில் தொடங்கும். சென்னை தொழிற்சாலை பிரிவில் அண்மையில் தொடங்கப்பட்ட கருவிகள் இணைப்புப் பிரிவு (Fabrication Unit) இந்திய மருந்துகள்-இரசாயன மருந்துப் பொருள்கள் தயாரிப்பு (IDPL) நிறுவனத்தின் துணை நிறுவனங்களுக்காக செய்முறைக் கருவிகள், கொள்கலன்கள் இவற்றைத் தயாரித்து வருகிறது.

பாரத் கனரக மின்சாரக் கருவிகள் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

12. அனல் மின் நிலையங்கள் முதலியவற்றிற்குத் தேவைப்படும் கனரக கொதிகலன்கள், ஏனைய சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக நிறுவப்பட்டுள்ள மத்தியத் துறையைச் சேர்ந்த ஒரு பெரிய தொழிற்சாலையாகும். இத் தொழிற்சாலை 2,500 மெகாவாட் அல்லது 87,000 மெட்ரிக் டன் கொதிகலன் கூட்டுறுப்புகளின் திறன் கொண்டதாகும். இத் தொழிற்சாலையில் 37 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 11,000 பேர்கள் பணிபுரிகின்றனர். 1977-78 ஆம் ஆண்டில் இத் தொழிற்சாலையின் உற்பத்தி, ரூ. 161·50 கோடி மதிப்புள்ள 81,620 மெட்ரிக் டன்களாகும். 1976–77 ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி ரூ. 152·6 கோடி மதிப்புள்ள 75,000 மெட்ரிக் டன்களாகும்.

சேலம் உருக்காலை.

13. சேலத்தில் கீழ்க்காணும் கலவைக்கான பொருட்களைக் கொண்டு தனி உருக்காலை ஒன்றை நிறுவுவதற்காக முதலீடு செய்வது பற்றிய முடிவினை 1972 ஆம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசு எடுத்தது.

தகடுகளும் துண்டுகளும். (1)	ஓராண்டிற்கு உற்பத்தி அளவு. (2)
	(டன்களில்.)
வெப்பமூட்டாமல் உருட்டி அடிக்கப்பட்டது ..	65,000
வெப்பமூட்டப்பட்டு உருட்டி அடிக்கப்பட்டது..	5,000
சிலிகான் உருக்கு—வெப்பமூட்டாமல் அடிக்கப்பட்டது	75,000
ஏனைய சிறப்பு உருக்குகள்-வெப்பமூட்டப் பட்டு உருட்டி அடிக்கப்பட்டது ..	50,000
மொத்தம் ..	1,95,000

இத்திட்டத்தை நிறைவேற்ற, சேலம் உருக்காலை என்ற பெயரில் நிறுவனம் ஒன்றை 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இந்திய அரசு நிறுவியது. சேலம் உருக்காலையின் விரிவான திட்ட அறிக்கை 1977 மே திங்களில் இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத் தொழிற்சாலை இரண்டு நிலைகளில் செயல்படுத்தப்படும். ரூ. 126·81 கோடி முதலீடு செய்து 40,000 டன்கள் வெப்பமூட்டப் பட்டு அடிக்கப்பட்டச் சுருள்களைப் பயன்படுத்தி 32,000 டன் கருக்காத உருக்குத் தகடுகளும் துண்டுகளும் உற்பத்தி செய்வதற்கான, வசதிகளை செய்யும் வகையில், முதற்கட்டப்பணி உடனடியாக மேற்கொள்ள ஏற்பளிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட பணியுடன் தொடர் புடைய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேலத்தில் துருப்பிடிக்காத எஃகு தகடுகளை வெப்பமூட் டாமல் உருட்டி அடிக்கப்படுவதற்கான தொழில்நுட்ப பணிகளையும், தகவல்களையும் வழங்குவதற்காக பிரான்ஸில் உள்ள திருவாளர்கள் பெகோட் லாயருடன் (M/S. Peugeot

Loire, France) 1978 ஜனவரியில் நிறுவனம் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. இத்தொழிற்சாலை 1981 ஆம் ஆண்டிற்குள் உற்பத்தியினைத் துவங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. தொழிற்சாலைக்கும், தொழிற்சாலை யுடன் தொடர்புடைய ஏனைய பல்வேறு திட்டங்களுக்கும் தேவைப்படும் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு உருக்காலை நிறுவனத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO) ஆலங்குளத்தில் சிமிட்டி தொழிற்சாலையை அமைப்பதற் காகவும், அரக்கோணத்தில் ஒரு தொடர் வார்ப்பட உருக்காலையை (இப்பொழுது தமிழ்நாடு உருக்காலை என்றழைக்கப்படுகிறது) அமைப்பதற்காகவும் 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பின்னர் தனியார் தொழில் முனைவர்களின் உடனுழைப்புடன் கூட்டுத் துறையில் தொழில் நிறுவனங்களை அமைக்கும் வகையில் அதனுடைய செயல் வரம்பு விரிவுபடுத்தப்பட்டது. சிறிது காலத்திற்கு, அதாவது 1969–71-ல் டிட்கோ பல நலிந்த நிறுவனங்களுக்கு அவற்றின் பங்கு மூலதனத்தில் பங்கு ஏற்பதுடன் அவைகளுக்குக் கடனும் வழங்கியது. சுமார் 400 கோடி ரூபாய் மொத்த மூலதனத்துடனும், சுமார் 21,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்குடனும் 40 திட்டங்களை அமைக்க வேண்டும் என்ற குறிக்கோள் அளவுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தற்போது மாநில அரசின் ஒரு முக்கிய நிறுவனமாகவும், நாட்டிலுள்ள மாநிலத் தொழில் வளர்ச்சி நிறுவனங்களிடையே முக்கியமான தொரு நிறுவனமாகவும் ஆகிவிட்டது.

2. 1977–78 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் அனுமதி பெற்ற மூலதனம் ரூபாய் 17 கோடியிலிருந்து ரூபாய் 25 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின்

பங்கு மூலதனம், கடன் முதலிய தொகைகளைத் தவிர இந்நிறுவனம் கடனீட்டுறுதி ஆவணங்களை வெளியிடுவதன் மூலமும்; பொது மக்களிடம் வைப்புத் தொகைகளை பெற்றுக்கொள்வது மூலமும், தன்னுடைய நிதிவாயில்களை பெருக்கியுள்ளது. 31–12–1977 அன்றுள்ளபடி, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 17·27 கோடி ஆக இருந்தது. அதன் பிறகு மூலதன வாயில்கள் ரூ. 16.91 கோடி; ஆகமொத்தம் ரூ. 34.18 கோடி.

3. 31–3–1977, 31–12–1977 தேதிகளின்படி பல்வேறு பொதுத்துறை, கூட்டுத்துறை நிறுவனங்களில் செய்யப்பட்ட பணமுதலீடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

விவரங்கள்.	31–3–1977-ன் படி முதலீடுகள்.	31–12–1977-ன் படி முதலீடுகள்.
	(ரூபாய் கோடியில்.)	
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்.	10·57	12·65
தமிழ்நாடு ஸ்டீல்ஸ்—உருக்கு பாளங்கள் திட்டம், அரக்கோணம்.	9.25	9.31
ஏனைய பொதுத்துறைத் திட்டங்கள்	..	0·16
கூட்டுத்துறை நிறுவனங்கள், நலிந்த தொழிற்சாலைகளுக்கான முதலீடும், கடனும்.	8·83	9·34
	28·65	31·46
இதுவரை சேர்ந்து வந்துள்ள இழப்பும், நடை முறை மூலதனமும்.	2·62	2·72
மொத்தம் ..	31·27	34·18

4. கூட்டுத்துறை நிறுவனங்கள், நலிந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றில் 31–12–1977-ன் படி முதலீடு விபரங்கள் பிற்சேர்க்கை X-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 1978–79-ன் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி நிதி ஒதுக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

பொதுத்துறை நிறுவனங்கள் :—

	(ரூபாய் கோடியில்.)
அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை ஆலங்குளம் சிமிட்டி தொழிற்சாலை ஆஸ்பெஸ்டாஸ் சிமிட்டித் தகடுகள் தயாரிப்பு தொழிற்சாலை.	.. 9.99
தமிழ்நாடு ஸ்டீல் அண்ட் ரோலிங் மில்ஸ் தொழிற்சாலை, அரக்கோணம்.	.. 1.25
தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் லிமிடெட்	.. 2·00
கூட்டுத்துறை நிறுவனங்கள்.	
கூட்டுத் துறை நிறுவனங்களுக்கு முதலீடும் கடனும்.	.. 3·88
மொத்தம் ..	17·12

இந்நிறுவனத்தின் தோற்றம் முதல் 31–3–1977 வரையிலான காலத்தில் நிதி வாயில்கள், செலவுகள் ஆகியவற்றைக் காட்டும் அறிக்கை இணைப்பு XI-ல் உள்ளது.

பொதுத்துறை நிறுவனங்கள்.

5. தற்போது பொதுத்துறையில் ஐந்து திட்டப்பணிகளை டிட்கோ மேற்கொண்டுள்ளது. இரண்டு திட்டப் பணிகளில் உற்பத்தி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று திட்டப் பணிகளும் பல்வேறான நிலைகளில் செயல்படுத்தப்பட்டும், பரிசீலிக்கப்பட்டும் வருகின்றன. இவை ஒவ்வொன்றிலும் உள்ள முன்னேற்றம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது. அரியலூரில் சிமெட்டித் தொழிற்சாலைத்

திட்டத்தையும், ஆலங்குளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சிமிட்டித் தகடுகள் தொழிற்சாலைத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்காகவும், ஆலங்குளத்தில் ஏற்கெனவேயுள்ள சிமிட்டித் தொழிற்சாலையை நிர்வகிப்பதற்கும், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற பெயரில் துணை நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலை:

6. ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலை ஆண்டுக்கு 4 இலட்சம் டன் சிமெண்டை உற்பத்தி செய்யும் திறன் உள்ளது. இதில் நாளொன்றுக்கு 1,200 டன் சிமிட்டி உற்பத்தி செய்யும், ஈரத் தயாரிப்பு முறையுடைய சுழற் சூளைகள் இரண்டு உள்ளன. இத்தொழிற்சாலை 1970 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சிமெண்ட் உற்பத்தி செய்து விற்பனை செய்யத் தொடங்கியது. பின் தங்கிய பகுதி ஒன்றில் அமைந்துள்ள இந்தத் தொழிற்சாலை 1,450 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

இந்தத் தொழிற் பிரிவில் 1975–76 முதல் 1977–78 ஆண்டு வரையிலான சிமிட்டி உற்பத்தி, விற்பனை விவரம் பின்வருமாறு :—

காலம்.		உற்பத்தி.		சிமிட்டி விற்பனை (டன்களில்).
		அளவு. (டன்களில்.)	நிறுவத் திறனளவு (சத வீதத்தில்.)	
1975–76	..	2,62,729	66	2,58,052
1976–77	..	3,38,445	85	3,33,294
1977–78 (திருத்த மதிப்பீடு)	..	3,30,000	83	3,35,000

7. 1976–77ல் இந்த தொழிற்சாலையின் சாதனை பாராட்டத் தக்கதாக இருந்தது. தற்கால அறிவியல் முறைகளில் சுரங்கங்கள் அடைந்துள்ள வளர்ச்சியாலும், மேலும் நவீன முறைகள் கையாளப்படுவதாலும் தகுந்த முறையில் திட்டம் இயற்றுவதாலும் இத்தொழிற்சாலையானது, மின்வெட்டு இருந்த போதிலும் கூட (இதன் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்களாகும்), 3,38,445 டன்

உற்பத்தி செய்து வியந்தகு சாதனை புரிந்துள்ளது. விற்பனையும் சுமார் 3,33,294 டன் அளவிற்கு எட்டியுள்ளது. இந்த ஆண்டு 65,320 டன் சிமிட்டி ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. முந்திய ஆண்டில் ரூ. 405.00 இலட்சமாக இருந்த விற்பனை இந்த ஆண்டு ரூ. 742.02 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்தொழிற்சாலை 1976–77ஆம் ஆண்டில் ரூ. 1.99 இலட்சம் ஆதாயம் ஈட்டியுள்ளது. சூளை ஒன்றில் பழுது பார்க்கும் வேலைகள் மேற்கொண்டிருந்ததால் அது சுமார் மூன்று திங்கள் கால அளவிற்கு பயனற்றதாக இருந்தது; மேலும் முதல் மூன்று மாத கால அளவிற்கு மின் வெட்டு இருந்தது. இத் தடைகள் இருந்த போதிலும் இத்தொழிற்சாலை 1977–78 ஆம் ஆண்டில் 3,30,000 டன் சிமிட்டி உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. 1978–79ஆம் ஆண்டில் இத் தொழிற்சாலை அதன் முழு உற்பத்தித் திறனை அடைந்து விடத் திட்டமிட்டுள்ளது.

அரியலூர் சிமெண்டு ஆலை:

8. அரியலூரில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன்கள் திறனுள்ள சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான தொழில் உரிமம் ஒன்று பெறப்பட்டு உள்ளது. இந்த தொழிற்சாலை உலர்ந்த முறைப்படி சிமெண்ட் தயாரிக்கும். இத்திட்டத்திற்கான மூலதனச் செலவு ரூ. 29.00 கோடி ஆகும். திருவாளர்கள் ஹோல் டெக் இஞ்சினியர்ஸ் (பி) லிமிடெட் என்ற நிறுவனம் இத் திட்டத்திற்கான பொறியியல் ஆலோசகர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். பெரிய உற்பத்தியாளர்களிடம் பெருமளவு இயந்திரங்களையும் சாதனங்களையும் பெறுவதற்குரிய தேவைக் குறிப்புப் பட்டியல்கள் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன; அவற்றில் சில ஏற்கெனவே வந்து விட்டன. கட்டட நிர்மாணப் பணி, 1977ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தொடங்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள் நிறுவும் பணி 1977ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டு உள்ளது. ஆண்டொன்றுக்கு 2.5 இலட்சம் டன் உற்பத்தி செய்யும் திறனுள்ள முதல் சூளை, 1978ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 1977ஆம் ஆண்டு இறுதி வரை, ரூ. 9.01 கோடி செலவிடப்பட் டுள்ளது. இரண்டாவது சூளை இயக்கப்பட்ட பின், 1979ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்குள், இந்த தொழிற் சாலை ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் என்ற

முழு உற்பத்தித் திறனளவை எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டப்பணி முடிவடையும் போது, 1,100 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் திட்டம்:

9. ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறன் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடு தொழிற்சாலை ஒன்று ரூ. 1.66 கோடி மதிப்பீட்டுச் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதிக் கடிதம் பெறப்பட்டுள்ளது. இத் திட்டம் 1978–79ஆம் ஆண்டில் விரைவில் செயலாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டப்பணி முடிவடைந்த பின்னர் இது சுமார் 270 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

தமிழ்நாடு சிமெண்ட் கார்பரேஷன் லிமிடெட். (TANCEM.)

10. தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஒரு துணைக் கம்பெனியாக தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் டான்சம்நிறுவப்பட்டது. இரண்டுசிமெண்ட் தொழிற்சாலைகள், அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடு தொழிற்சாலை ஆகியவற்றின் நிர்வாக பொறுப்பினை இது மேற்கொண்டுள்ளது.

இந் நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 கோடி ஆகும். 1977ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் நாள் நிலவரப்படி அதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 5·87 கோடியாகும். 'டிட்கோ' நிறுவனத்தைச் சேர்ந்த இந்த இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகளின் சொத்துக்களின் மதிப்பு ரூ. 8·11 கோடியாகும். டிட்கோ 1—4—76-ல் இவற்றை இந் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

தமிழ்நாடு உருக்குத் தொழிற்சாலை, அரக்கோணம்:

11. வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை தொடர் வார்ப்பட தொழில் முறையை பயன்படுத்தி உருக்கு பாளங்களைத் தயாரிப்பதற்கு இரும்புத் துகள்களை பயன்படுத்தி வருகிறது. இந்தியாவில் பொதுத் துறையில் முதன் முறையாக நிறுவப்பட்டுள்ள சிறு

உருக்குத் தொழிற்சாலை இதுவேயாகும். ஒரே ஒரு மின் ஒளி உலையும், 100 ச.மி. மீட்டர், 75 ச.மி. மீட்டர் அளவுள்ள உருக்குப் பாளங்கள் தயாரிப்பதற்கான செங்குத்தான தொடர் வார்ப்பு இயந்திரம் ஒன்றும் தற்போது நிறுவப்பட்டுள்ளன. இதனால் கிடைக்கக்கூடிய திறன் ஓர் ஆண்டுக்கு 40,000 டன் ஆகும். இது சுமார் 600 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. 1977ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31ஆம் நாள் வரை இத்திட்டத்திற்கான மூலதனச் செலவு ரூ. 6.78 கோடி ஆகும்.

12. இந்த தொழிற்சாலை 1—7—1972-ல் வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இத்தொழிற்சாலையில் 1975-76 முதல் 1977-78 வரை செய்துள்ள உற்பத்தி விற்பனை குறித்த விபரம் பின்வருமாறு :—

காலம்.	உருக்குப் பாளங்கள் உற்பத்தி. அளவு (டன்னில்).	நிறுவத் திறனளவு (சதவீதத்தில்).	கிடைக்கக் கூடிய திறனளவு (சதவீதத்தில்).	விற்பனை (டன்னில்).
(1)	(2)	(3)	(4)	(5)
1975–76	12,272	25	31	10,114
1976–77	28,948	58	72	33,554
1977–78 (திருத்த மதிப்பீடு).	25,100	50	63	28,000

1977–78 முதல் மூன்று திங்கள் கால அளவிற்கு மின் வெட்டு இருந்தும், 9—9—1977 முதல் 9—10—1977 வரை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தும், இத் தொழிற்சாலை இவ்வாண்டில் 25,100 டன் பாளங்களை உற்பத்தி செய்யும் என்றும், ரூ. 6.19 கோடி மதிப்புள்ள 28,000 டன் பாளங்களையும் உருட்டியடிக்கப்பட்ட பொருள்களையும் விற்பனை செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1977-78ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படியும் 1978-79ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் படியும் முறையே ரூ. 78 இலட்சம், ரூ. 59 இலட்சம் நிகர இழப்பு இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

உருக்கு உருளை ஆலைத்திட்டம்:

13. தமிழ்நாடு உருக்கு உற்பத்திப் பொருள் ரகங்களை பல ரகப்படுத்தவும் அதை மேலும் ஆதாயம் ஈட்டும் வகையில் செயல்படச் செய்யவும் தனி உருக்கு பாளங்களை மீண்டும் உருட்டியடிக்கும் வசதிகளுடன் கூடிய உருளை ஆலை ஒன்றை ரூ. 8 கோடி மூலதனச் செலவில் நிறுவுவது குறித்துத் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பரிசீலித்து வருகிறது. இத்திட்டம் 1978-79 ஆம் ஆண்டில் செயல் படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

14. நிதி வசதிகளும் தேவையான தொழில் நுட்ப அறிவும் கொண்டுள்ள தொழில் முனைவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து கூட்டுத் துறையில் திட்டங்களை நிறுவுவதிலும் 'டிட்கோ' நிறுவனம் முனைப்பான பங்கேற்றுள்ளது. இதுவரை பங்கு மூலதனத்தில் 'டிட்கோ' நிறுவனம் 26 சதவீதமும், தனிப் பட்ட தொழில் முனைவர்கள் 25 சதவீதமும், எஞ்சிய 49 சதவீதம் பொதுமக்களிடமிருந்து பெற்றும் கூட்டுத்துறை நிறுவனங்களை 'டிட்கோ' அமைத்து வந்துள்ளது. கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தியின் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறையில் நாள் ஒன்றுக்கு 30 டன் பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலையை டிட்கோ 15 சதவிகிதம் பங்கு மூலதனம் போட்டு நிறுவுவதற்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித் துள்ளது. தென்ஆற்காடு மாவட்டத்தில் அமைய இருக்கும் இத்தொழிற்சாலையின் மூலம் 300 பேர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பும், 1,000 பேர்களுக்கு மறைமுகமாக வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

15. மாநில அரசு பிறப்பித்துள்ள வழி முறைகளின்படி ரூ. 100 லட்சத்திற்கு மேல் செலவு மதிப்புடைய திட்டங்கள் மட்டுமே டிட்கோவால் மேற்கொள்ளப் படுகின்றன. கூட்டுத் துறையில் 33 திட்டங்கள் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன. அவற்றில் 21 கம்பெனிகள் ஏற்கனவே கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ளன; அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள

கம்பெனிகளில் 12 கம்பெனிகள் ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கி உள்ளன. 9 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எஞ்சிய 12 திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. உற்பத்தி செய்து வருகின்ற 12 கூட்டுத் துறை நிறுவனங் களின் மொத்த விற்பனை 1-4-77 முதல் 31-12-77 முடிய ரூ. 67·75 கோடி ஆகும்; மேலும் இவை சுமார் 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன. இதுவன்றி, கூட்டுத் துறையில் மேலும் உருவாக்கப்பட்டு வருகின்ற 9 நிறுவனங்களின் மொத்த மூலதனச் செலவு ரூ. 47·45 கோடி ஆகும்; இறுதியாக அவை சுமார் 3,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். இந்த 33 திட்டங்கள் குறித்த விபரங்களை பிற்சேர்க்கை X-ல் காணலாம்.

16. ரேயான் கிரேடுபல்ப் பைபர் திட்டம்.

ரேயான் இழைத் திட்டத்தை ரூ. 40 கோடி செலவில் செயல்படுத்துவது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனம், நாள் ஒன்றுக்கு 50 டன் ரேயான் கிரேடு கூழ்ப் பொருள்களையும் 40 டன் விஸ்கோஸ் பாலினுசிக் இழைகளையும் உற்பத்தி செய்யும்.

17. தூத்துக்குடி ஆல்கலிகெமிக்கல்ஸ் நிறுவனம்,

தூத்துக்குடி கடற்கரையோரப் பகுதிகளில் கிடைக்கும் உபயையும் சதர்ன் பெட்ரோகெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் (ஸ்பிக்) நிறுவனத்திடமிருந்து உபரியாகக் கிடைக்கும் அமோனியாவையும் கொண்டு சோடியம் கார்ப னேட் (Na_2CO_3), அமோனியம் குளோரைடு தயாரிப்பதற் காக இந்நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தூத்துக்குடியில் ஸ்பிக் தொழிற்சாலைக்கு அருகாமையில் அமைக்கப்படும். ரூ. 34 கோடி மூலதனச் செலவில் அமைக் கப்படும் இந்த நிறுவனம், ஆண்டொன்றுக்கு 70,000 டன் சோடியம் கார்பனேட்டும் 70,000 டன் அமோனியம் குளோ ரைடும் உற்பத்தி செய்யும். இந்நிறுவனம் சுமார் 480 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். ஸ்பிக் நிறுவனத் துடன் கூட்டாகச் சேர்ந்து செயல்படுத்தும் பொருட்டு முதற் கண் இந்நிறுவனம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிறு வனத்திற்கு முதலீடு செய்யப் போதிய அளவு உபரி நிதிக்கு ஏற்பாடு செய்ய ஸ்பிக் நிறுவனத்திற்கு இயலாமற்போனதன் காரணமாக இத்திட்டத்தைச் செயல்படுத்துவது தாமத மடைந்துவருகிறது. எனவே, இந்த நிறுவனத்தை விரைவில் செயல்படுத்த தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆய்வு செய்து வருகின்றது.

[1978 மார்ச் 22

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) 1971 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமான வரையறுக்கப்பட்ட ஒரு பொது நிறுவனமாக, ரூபாய் 5 கோடி அதிகாரம் பெற்ற மூலதனத்துடன், தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும், விரிவடைவதற்கும், இதுவரை இம்மாநிலத்தில் பின்தங்கியுள்ள பகுதிகளைத் துரிதமாகத் தொழில் மயமாக்குவதற்கும் அமைக்கப்பட்டதாகும். இந்நிறுவனம் 31–12–1977 வரை பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ. 21.4 கோடி உதவி வழங்க ஒப்புதலளித்ததுடன், இதன் மூலம் ரூ. 163 கோடி முதலீட்டை ஊக்குவித்து, 21,000 பேருக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பை நல்கியுள்ளது. இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமாகக் கருதக் கூடியது, ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டில் பெரும்பகுதி இம்மாநிலத்தில் பின் தங்கிய பகுதிகளிலே உள்ளது என்பதாகும். அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகையில் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 1,971.33 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ. 151 கோடிக்குமேல் முதலீடு, இம்மாநிலத்தின் பின்தங்கிய மாவட்டங்களில் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. 22,500 பேருக்குமேல் வேலை வாய்ப்பினை உருவாக்கித் தந்துள்ளது.

2. சிப்காட் உதவியுடன் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் பின்வருமாறு :—

1. ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டம்.

(I) சாத்தியக்கூறு ஆய்வுகளுக்கு (Feasibility Study) உதவித் தொகை.

ஆதாயமளிக்கும் தொழில் திட்டங்களைக் கண்டறிவதற்காக சாத்தியக்கூறு பற்றிய ஆய்வுகளை சிப்காட் தொடங்கியுள்ளது. இந்த ஆய்வுகளை தொழில் முனைவோர்க்கு சலுகை விலையில் அளிக்கிறது. 31—12—1977 முடிய 35 சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 27 அறிக்கைகள் தொழில் முனைவோருக்கு ஒப்படைக்கப்பட்டு வழங்கப்பட்டன.

1978 மார்ச் 22]

2. வட்டியில்லா விற்பனை வரிக் கடன்

"ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டத்தின் முக்கிய பகுதியாக வட்டியில்லா விற்பனை வரியினை மாநில அரசின் முகவராமைப்பாக சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் தொகுதியிலும் குன்னத்தூர் வட்டாரத்திலும் உள்ள நடுத்தர, பெரிய தொழில்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றன. விவரம் இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதி திட்டத்தின்கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்குத் தொழிலை விரிவுபடுத்தும் போதோ அல்லது பொருத்தமான பகுதிகளில் வேறு பிரிவுகளாகப் பெருக்கும் போதோ இச்சலுகை கிடைக்கும். அத்தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்துகொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கு அமைக்க இருக்கும் தொழிற்சாலையின் நிலையான இருப்புக்களில் 25 சதவீதம் அல்லது ரூபாய் 15 இலட்சம் இவற்றில் எந்த தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் தொகை அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 12 ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் 3 ஆண்டு சம தவணைகளில் வட்டியின்றி இந்தக் கடன் தொகை திருப்பி செலுத்தப்படத்தக்கதாகும். இரண்டாம் பகுதித்திட்டத்தின்கீழ் புதிய தொழிற்பிரிவு, அந்த ஆண்டில் செலுத்திய விற்பனை வரிக்கு இணையான ஒரு தொகையை, உற்பத்தி ஆண்டின் முதல் ஆறு ஆண்டுகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் பெறும், நிறுவப்பட்ட தொழில் நிறுவனத்தில் நிலையான இருப்புகளில் 8 சதவீத அளவுக்கு மேற்படாமல் இத்தொகை அளிக்கப்படும். இந்தக் கடன் மூன்று திங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட 18 ஆண்டுகளுக்குப் பிறகு, மூன்று ஆண்டு சம தவணைகளில் வட்டி எதுவுமின்றி திருப்பிச் செலுத்தப்படத்தக்கதாகும். இத் திட்டம், பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஒரு சக்தி வாய்ந்த தூண்டுகோலாக அமைந்துள்ளது என்பதை நிரூபித்துள்ளது.

[1978 மார்ச் 22

3. நிலையான இருப்புகள் மீது உதவித் தொகை.

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தமிழ் நாட்டில் செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின் தங்கிய வட்டங்களில் ஏதாவதொன்றில் நிறுவப்படும், தொழிற் பிரிவு, அதன் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டிடங்கள், சாதனங்கள், இயந்திரங்கள் முதலியன உட்பட) 15 சதவீத நேரடி மானியம் அல்லது உதவித் தொகை பெற தகுதி உடையதாகும். முன்னேற்றமடைந்த பகுதியிலிருந்து மேற் குறிப்பிடப்பட்ட பின் தங்கிய வட்டங்களில் ஒன்றிற்குத் தங்களது சாதனங்களையும் இயந்திரங்களையும் மாற்றக்கூடிய தொழில் பிரிவுகளும்கூட 15 சதவீத உதவித்தொகை பெற உரிமையுள்ளவையாகும். அந்த 33 வட்டங்களின் பெயர்கள் இணைப்பு VII-ல் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொழிற் பிரிவையும் பொறுத்தமட்டில், உயரளவு உதவித் தொகை ரூபாய் 15 இலட்சம் என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகையில் 85 சதவீதம் உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாகவும், எஞ்சிய தொகை உற்பத்தி தொடங்கிய பின்னரும் வழங்கப்படும்.

4. உயர் அழுத்த விநியோகத்திற்கு சலுகைவீத மின் கட்டணம்.

தமிழகத்தில் நிறுவப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு முதல் ஐந்தாண்டுகளுக்குச் சலுகை வீதங்களில் மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆறாவது ஆண்டிலிருந்து மட்டுமே கீழ்க் கண்டவாறு அத்தொழிற்சாலைகள் முழு மின்சக்திக் கட்டணத்தை செலுத்த வேண்டும். விவரம் வருமாறு :—

(1) முதல் 3 ஆண்டுகளுக்கு..	சாதாரண உயர் அழுத்த மின் சக்திக் கட்டணத்தில் 66⅔ சதவீதம்.
(2) நான்காவது ஆண்டுக்கு..	சாதாரண உயர் அழுத்த மின் சக்திக் கட்டணத்தில் 80 சதவீதம்.
(3) ஐந்தாவது ஆண்டுக்கு ..	சாதாரண உயர் அழுத்த மின் சக்திக் கட்டணத்தில் 90 சதவீதம்.

1978 மார்ச் 22]

இவை தவிர, இம்மாநிலத்தில் பின்தங்கிய வட்டங்களைத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள வட்டம் எதிலும் (செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர், குன்னத்தூர் வட்டாரம்) உட்பட நிறுவப்படவிருக்கும் புதிய தொழில்கள் மின் சக்திக் கட்டணத்தில் மேலும் 15 சதவீதச் சலுகை பெறத் தகுதியுடையவைகளாகும். இந்தச் சலுகைபெறத் தகுதி பெற்ற பின்தங்கிய வட்டங்களின் பெயர்ப்பட்டியல் இணைப்பு VIII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தண்ணீர் உரிமைக் கட்டணத்தில் சலுகை.

இம்மாநிலத்தின் பின்தங்கிய மாவட்டங்கள் ஏதாவது ஒன்றில் நிறுவப்பட்டுள்ள புதிய தொழில்கள், ஆண்டுக்கு ரூபாய் 300 என்ற வரையறுத்த கட்டணத்தை தண்ணீர் உரிமைக் கட்டணமாக செலுத்திவிட்டு, பொது நீர்வாயில்களிலிருந்து எவ்வளவு அளவு வேண்டுமானாலும் தண்ணீர் எடுத்துக் கொள்ள தொடக்கத்தில் முதல் ஆறு ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சென்னை மாநகரத்திற்கு அருகில் செங்கற்பட்டு மாவட்டத்தில், மறைமலை நகரிலும் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த குன்னத்தூர் வட்டாரத்திலும் அமைக்கப்பட்ட தொழில் பிரிவுகளும் இச் சலுகையைப் பெறத் தகுதியுடையவைகளாகும்.

11. தொழில் வளர்ச்சி நிலையங்கள்.

இம்மாநிலத்தில் பின்தங்கிய மாவட்டங்களில், சிப்காட் இரண்டு தொழில் வளர்ச்சி நிலையங்களை உருவாக்கியுள்ளது வட ஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையிலும், தருமபுரி மாவட்டம் ஓசூரிலும் இவை அமைந்துள்ளன.

(அ) வட ஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் தொழில் வளர்ச்சி நிலையம்.

வட ஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் சிப்காட், உருவாக்கியுள்ள முதலாவது தொழில் வளர்ச்சி நிலையத்தை தமிழ்நாடு அரசு கையகப்படுத்தி, 'சிப்காட்' நிறுவனத்திடம் ஒப்படைத்த 712 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இத்தொழில் தொகுதியில் உள்ள 85 மேம்பாடு செய்யப்பட்ட மனைகளில், 431·4 ஏக்கர் பரப்புள்ள 55 மனைகள். 47 தொழிற் பிரிவுகளுக்கு (31-12-1977 வரை) ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில், 19 தொழிற் பிரிவுகள் உற்பத்தியை தொடங்கிவிட்டன. 12 தொழிற் பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கும் நிலையில் உள்ளன. சிறு தொழில்களுக்காகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 71 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (SIDCO), ஒதுக்கப்பட்டுள்ளது. 119·8 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட வேண்டியுள்ளது.

நாளது தேதிவரை உதவி பெற்று வந்த எல்லா பிரிவுகளுக்குமாக ரூபாய் 40 கோடிவரை மொத்த முதலீடு ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 4,600 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பு கிட்டும்.

தருமபுரி மாவட்டம் ஒசூரிலுள்ள தொழில் வளர்ச்சி நிலையம்.

1974 ஆம் ஆண்டில், சிப்காட் தருமபுரி மாவட்டத்தில் ஓசூரில் இரண்டாவது பெரிய தொழில் தொகுதியை, மேம்பாடு செய்வதற்காக எடுத்துக்கொண்டது. இத்தொகுதியில், 755·87 ஏக்கர் பரப்புள்ள 131 மனைகள், தொழிற் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படலாம்.

31-12-1977 வரை, 329·80 ஏக்கர் பரப்புள்ள, 54 மனைகள், 45 தொழிற் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 34 தொழிற்பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. தொழிற்பிரிவுகள் கட்டிடங்கள் கட்ட தொடங்கியுள்ளன.

III. நிதி உதவி

இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) யின் மறு நிதியுதவி பெறத் தகுதியுடைய இரண்டாவது மாநில அளவு நிதி நிறுவனமாக சிப்காட்டை, இந்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. குறைந்த வட்டி வீதத்திலும், நீண்ட காலத் தவணைகளுடனும் சிப்காட் நிதி உதவுவதற்கு இது வகை செய்கிறது. நிதி உதவும் துறையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (TIIC) இந்திய தொழில் நிதி நிறுவனம் (IFCI), இந்திய தொழில் கடன் முதலீட்டு நிறுவனம் (ICICI), இந்திய தொழில் வளர்ச்சி வங்கி

(IDBI), வர்த்தக வங்கிகளுடன் சிப்காட் நெருக்கமாக ஒத்துழைத்து வருகிறது. இம்மாநிலத்தின் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதித் தேவைகள் முழுவதும் இந்த நிறுவனங்களின் கூட்டு முயற்சியின் மூலம் நிச்சயமாகக் கிடைக்க வேண்டும் என்பதே இவ்வாறு செயல்படுவதன் நோக்கம்.

(3) ரூபாய் 90 இலட்சத்திற்கு அதிகமாகக் கடன் தேவைப்படாத தொழில் நிறுவனங்கள், அகில இந்திய அளவில் அமைந்துள்ள நிதி நிறுவனங்களை அணுகாமல், இம் மாநிலத்திலேயே உள்ள, சிப்காட், டி.ஐ.ஐ.சி. வர்ந்தக வங்கி ஒன்றிலிருந்து நிதியுதவி பெற முடியும்.

(4) பெரிய, நடுத்தரத் தொழில்களுக்கு, சிப்காட், அடியிற் கண்டவகை நிதியுதவிகளை அளிக்கிறது.

(1) இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (!DBI) யின் மறு நிதியுதவியளிக்கும் திட்டத்தின் கீழ் தவணைக் கடன்.

(2) இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (I BI) யின் ஆரம்ப மூலதன நிதியுதவி.

(3) மூலதன கடன்களுக்கு உத்தரவாதமளித்தல்.

(4) வர்த்தக வங்கிகளிலிருந்து பெறும் கடன்களுக்கு உத்தரவாதம்.

(5) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் இதுவரை 69 திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 836·24 இலட்சம் தவணைக் கடனாக வழங்கியுள்ளது. நடப்பாண்டில் 11 தொழிற் பிரிவுகளுக்கு ரூ. 241·78 இலட்சம் தவணைக் கடன் வழங்கப்பட்டது.

(6) மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்ட தொழில்களுக்கு மட்டுமே பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்குகளை வாங்குவது மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 67·20 இலட்சத்திற்கு பங்குகளை வாங்க அனுமதி வழங்கப்பட்டிருப்பினும் ரூபாய் 61·86 இலட்சம் பெறுமானமுள்ள பங்குகளை பொதுமக்களே வாங்கியுள்ளனர். எஞ்சியுள்ள ரூ. 5·34 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் நிறுவனத்தால் வாங்கப்பட்டது. அதில் ரூ. 3·84 இலட்சம் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

14-3-1978 வரை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) அளித்த நிதியுதவி IX இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(8) 1978-79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசு சிப்காட்டிற்கு கீழே விவரித்துள்ளவாறு ரூ. 225 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

	(ரூபாய் இலட்சத்தில்)
விற்பனை வரிக் கடன்	150
தவணைக் கடன்	50
பங்கு மூலதனம்	25
மொத்தம் ..	225

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்

இந்தியாவில் மாநில அளவில் அமைந்துள்ள நிதியுதவும் நிறுவனங்களில் முன்னோடியாகத் திகழ்வது தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகும். இது தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் தலையாய நோக்கத்துடன், இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 1949 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதனைக்கருத்தில் கொண்டு, இந்நிறுவனம், தொழில்நிறுவனங்களுக்கு முக்கியமாக நிரந்தர சொத்துக்களான நிலம், கட்டிடங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு நீண்டகால, நடுத்தரக்கால கடன்களை வழங்குகிறது. தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டுப்பத்திரங்கள் இவைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. மேலும், தவணை முறையில் இயந்திரங்கள் வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கு உத்திரவாதம்/எதிர் உத்திரவாதம் அளிக்கிறது. இந்நிறுவனம், கிராமப் பகுதிகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும், போக்குவரத்து வாகன உரிமையாளர்களுக்கும் ஓட்டல் உரிமையாளர்களுக்கும் உதவி புரிகின்றது.| தொழிற்சாலைகளை புதிதாக

ஆரம்பிப்பதற்கு மட்டும் அல்லாமல், ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும், நவீன முறையில் மாற்றி அமைக்கவும், தொழில்களை பல்திறப்படுத்துவதற்கும் நிதி உதவி அளிக்கிறது. அண்மையில், இது, தனது பணிகளை விரிவுபடுத்தி, அவற்றை பல்திறப்படுத்தியுள்ளது. இதன்மூலம் சிறுதொழில் நிறுவனங்களுக்கும், பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் தொழிற் பிரிவுகளுக்கும், தொழில் வினைஞர்களுக்கும் தொழில் நுட்ப முனைவோர் திட்டம் என்னும் சிறப்புத் திட்டத்தின்கீழ் அதிக நிதியுதவி அளிக்கிறது. தொழில் நுட்ப உத்திகள், இயந்திரப் பாகங்கள், உதிரிப் பாகங்கள் முதலியவை உட்பட இயந்திரங்களையும் சாதனங்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், உலக வங்கியின் மூலமாக அந்நியச் செலாவணி கடன் உதவியும் வழங்குகிறது.

2. பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு அல்லது ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு உயரளவு ரூபாய் முப்பது இலட்சம் வரையிலும், பங்குதாரர்கள் உரிமை நிறுவனம் அல்லது ஒரே உரிமையாளர் நிறுவனத்திற்கு ரூ. 15 இலட்சம் வரையிலும் கடன் உதவி செய்கிறது. மேலும், காலம் தாழ்த்திக் தொகையளிக்கும் அடிப்படையில் உயரளவு முப்பது இலட்சம் ரூபாய் வரை கடன் பெறவும் இந்தொழில் நிறுவனங்களுக்கு உத்தரவாதம் அளிக்க வகையுண்டு. மேலும், இருபத்தைந்து இலட்சம் ரூபாய் அல்லது தொழிலை உருவாக்குவோர் அளிக்கும் தொகைக்குச் சமமான ஒரு தொகை அல்லது பொதுமக்களின் பங்கு மூலதனத்தில் 25 சதவீதம், இவற்றில் எது குறைவான தொகையோ அதை இந்நிறுவனம் கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்குக் கடன் பத்திரங்களாகவும், நேரடிப்பங்குகளாகவும் வழங்கப்படலாம். பொதுவாக எந்த ஒரு நிறுவனத்திற்கும் ரூ. 60 இலட்சத்திற்கு மேல் நிதி உதவியளிக்கப்படுவதில்லை. இந்நிறுவனத்தால் அளிக்கப்படும் நிதி உதவியின் குறைந்த பட்ச அளவு ரூபாய் 10,000.

3. இந்நிறுவனம் தமிழ்நாட்டிலும், மத்திய அரசின் நேரடிப்பொறுப்பிலுள்ள பாண்டிச்சேரியிலும் பெருவாரியான தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. இந்நிறுவனம் ஆரம்ப காலத்தில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் தொழில் உருவாவதற்குத் தேவைப்படும் மூலதனம் மிகவும் பற்றாக்குறையாக இருந்த காலத்தில் தொழில் நிறுவனங்களின் பங்கு மூலதனத்திற்கு ஏராளமாக

நிதியுதவி அளித்தது. பின்னர் அண்மைக் காலத்தில் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் இந்நிறுவனம் தனது பணியைப் பலவகையிலும் விரிவுபடுத்தியுள்ளது.

4. தொடங்கியதிலிருந்து 31–12–1977 வரையில், பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு இந்நிறுவனம் அனுமதித்த, வழங்கிய கடன்தொகை பற்றிய விவர அறிக்கை இணைப்பு XIII-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் கடந்த பத்தாண்டுகளில் தொழிற்சாலைகளுக்கு தொழில் வாரியாக அனுமதி அளித்த தொகைகள், வழங்கிய தொகைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு XIV-ல் கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளாக பங்குகளுக்கு உத்தரவாதமளித்தல், காலம் தாழ்த்தித் தொகை கொடுப்பதற்காக இந்நிறுவனம் அளித்துள்ள உத்தரவாதம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து இந்நிறுவனம் பெற்ற மறுநிதி உதவித் தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் முறையே இணைப்பு XV, XVI-ல் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில், கடன் மனுக்களை அனுமதித்தல், வழங்குதல் ஆகிய இரு பணிகளிலும் இந்நிறுவனம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

5. 1977–78–ம் ஆண்டில் (ஏப்ரல் 1977-1978 ஜனவரி) இந்நிறுவனம் அனுமதித்த கடனுதவி பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(ரூபாய் இலட்சத்தில்)

கடன்கள்—

ஒப்புதல் அளிக்கப்பட்டது		வழங்கப்பட்டது	
நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
314	10,89·20	282	7,32·27

பின்தங்கிய பகுதிகளுக்கு உதவி—

ஒப்புதல் அளிக்கப்பட்டது		வழங்கப்பட்டது.	
நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
171	6,04·32	127	4,80·69

சிறுதொழில் பிரிவுகளுக்கு உதவி—

ஒப்புதல் அளிக்கப்பட்டது		வழங்கப்பட்டது	
நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை.
(ரூபாய் இலட்சத்தில்)		(ரூபாய் இலட்சத்தில்)	
266	4,96·24	239	2,91·25

சிறப்புத்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட உதவி—

	அளிக்கப்பட்ட தொகை.	நபர்கள் எண்ணிக்கை.
	(ரூபாய் இலட்சத்தில்)	
1. அன்னியச் செலாவணிக் கடன்	2,24·85	17
2. தொழில் நுட்ப வினைஞர்கள்	38·13	32
3. பேருந்து உரிமையாளர்கள்	0·40	1
4. ஜெனரேட்டர் செட்கள்	33·94	18

இந்நிறுவனம், தொழில் நுட்ப வினைஞர்கள் கிராமங்களில் உள்ள மருத்துவர்கள், போக்குவரத்து வாகன உரிமையாளர்கள், உணவகங்களின் உரிமையாளர்கள் ஆகியோருக்குத் தாராளமாக நிதி உதவி அளிக்க பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. கடந்த மூன்றாண்டுகளில், இச்சிறப்புத் திட்டங்களின்கீழ், இந்நிறுவனம் அனுமதி வழங்கிய தொகை, கொடுத்த தொகைகள் இணைப்பு XVII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு தனது பங்கு மூலதனமாக அரசு, 1978–79 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1 கோடி ஒதுக்கியுள்ளது.

[1978 மார்ச் 22

தொழில்களுக்கு நிதி உதவி—

7. தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கவேண்டி, கடந்த இரு பதாண்டுகளில் மாநில அரசுத்துறைகளிலும், மத்திய அரசுத் துறையிலும் பல கடனுதவி நிறுவனங்கள் அமைக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந் நிறுவனங்களின் செயல்முறை பற்றிய ஆய்வு கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI)—

8. மத்திய நிறுவனமான இவ்வங்கி பங்குத் தொகைகளுக்கு உத்திரவாதமளித்தல், கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கு உத்திரவாதமளித்தல், தொழில் பிரிவுகளுக்கு காலக் கடன்களை வழங்குதல், ஆகியவற்றை மேற்கொண்டுள்ளது. எனினும் இவ்வங்கியின் முக்கிய நோக்கம், மாநில நிதி உதவி நிறுவனங்களின் அலுவல்களை ஒருங்கிணைத்து அவை கடன் வழங்க மறுநிதி உதவி செய்வதே ஆகும்.

இவ்வங்கி தொடங்கியது முதல் 1977 டிசம்பர் இறுதி வரை தமிழ்நாட்டிலுள்ள தொழிற் பிரிவுகளுக்கு நேரடியாக ரூ. 275·23 கோடி நிதி உதவி அளித்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தொழில்களுக்கு 1976 ஜூலைத் திங்கள் முதல் 1977 ஜூன் வரையில் அனுமதியளிக்கப்பட்ட தொகை ரூ. 72·50 கோடியாகும்.

இந்தியத் தொழில் கடன்–முதலீட்டு நிறுவனம் (ICICI)—

9. இந்நிறுவனம் தனியார் துறையில் அமைக்கப்பட்ட மற்றுமொரு வளர்ச்சி வங்கியாகும். தொழில்களுக்கு வெளி நாடுகளிலிருந்து கடன்களைப் பெற்றுத் தருவது இதன் நோக்கமாகும். தவிர பங்குத் தொகைகளுக்கும் கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கும் உத்திரவாதமளித்தல் போன்ற பிற உதவிகளையும் அளிக்கிறது. இந்நிறுவனம், இந்தியா முழுவதிலுமுள்ள தொழில்களுக்கு 1977-ல் அளித்த நிதி உதவி ரூபாய் 10,277 இலட்சமாகும். தமிழ்நாட்டிலுள்ள தொழில்களுக்கு அளித்த நிதி உதவி ரூ. 597 இலட்சமாகும்.

இந்திய தொழில் நிதி உதவி நிறுவனம் ( )—

10. நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் 1948 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்நிறுவனம், பொதுவாகத் தொழில் பிரிவுகளுக்கும், குறிப்பாக நெசவாலைத் தொழிலுக்கும், சர்க்கரைத் தொழிலுக்கும் நீண்ட கால, நடுத்தரக் காலக்

1978 மார்ச் 22]

கடன்களை வழங்குகிறது. வட்டியில்லா பங்குகளுக்கும் முன்னுரிமைப் பங்குகளுக்கும் உத்திரவாதம் அளிக்கிறது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்குக் காலம் தாழ்த்தி தொகை செலுத்துவதற்கு உத்திரவாதமளிக்கிறது இந்நிறுவனம்.

இந்நிறுவனம் தமிழ்நாட்டில் 9 திட்டங்களுக்கு 1—7—77 முதல் 31—12—1977 வரை மொத்தம் ரூ. 8,76·13 இலட்சம் நிதியுதவி (நிகரம்) அளித்தது.

இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் (LIC)—

11. தொழில் வளர்ச்சியில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்தின் பணி குறிப்பிடத்தக்கதாகும். மக்களில் பெரும்பான்மையோரின் நீண்டகாலச் சேமிப்புகளை ஒருங்கு திரட்டுவதோடு, கவனமாகவும் திட்டமிட்டும் முதலீடு செய்வதன் மூலம் இந்த நிதி வாயில்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரிகிறது.

1976-77-ஆம் ஆண்டில் தென் மாநிலங்களில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் பிரிமியமாக வசூலித்த வகையில் (மாநில வாரியாக) கிடைத்துள்ள வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

மாநிலம்.	தொகை. (ரூபாய் இலட்சத்தில்)
கருநாடகம்	4,243·23
ஆந்திரப் பிரதேசம்	4,343·25
தமிழ்நாடு (பாண்டிச்சேரி உட்பட) ..	5,166·73
கேரளம்	2,289·15
	16,042·36

இந்நிறுவனம், 1976-77-ல் தமிழ்நாட்டில் தொழில்களில் முதலீடு செய்த தொகை ரூ. 539·54 இலட்சமாகும்.

[1978 மார்ச் 22

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி அளிக்கும் உதவி—

12. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி கூட்டுறவுத் துறையில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கும், குறிப்பாகத் தொழில் துறையில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும், கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் நிதி உதவி அளித்து வருகிறது.

கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் இவ்வங்கி வழங்கிய காலக் கடன்களையும், திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை குறித்த விவரங்களையும் இணைப்பு XVIII-ல் உள்ள அட்டவணையில் காணலாம். மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி வழங்கிய நடைமுறை மூலதனக் கடன்கள் பற்றிய விவரங்களை இணைப்பு XIX-ல் உள்ள அட்டவணையில் காணலாம்.

சர்க்கரைத் தொழில்

சர்க்கரைத் தொழில் வேளாண்மை சார்ந்த ஒரு தொழிலாக இருப்பதால் கிராமப் புறங்களில் வாழும் உழவர்களின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது முக்கியத்துவம் உடைய இத்தொழில் தமிழ்நாட்டில் கடந்த இருபதாண்டுகளில் நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 1950 முதல் 1960 வரையிலான பத்தாண்டு காலத்தில் சர்க்கரை உற்பத்தித் துறையில் கூட்டுறவியக்கம் அடியெடுத்து வைத்தது. அடுத்த பத்தாண்டு காலத்தில் அதைத் தொடர்ந்து வளர்ச்சி பெறலாயிற்று. சர்க்கரை உற்பத்தித் தொழில், குறிப்பாகக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உரிய முறையில் வளர்ந்து செயல்படுவதைத் தொடர்ந்து கவனித்து வரும் பொருட்டு தமிழ்நாடு அரசு, சர்க்கரைத் தொழில் இயக்குநர் அலுவலகத்தை 1969 அக்டோபரில் தோற்றுவித்தது. சர்க்கரைத் தொழில் தொடர்பான அனைத்து பணிகளையும் கவனிப்பது இந்த இயக்குநர் அலுவலகத்தின் பணியாகும். இந்த இயக்குநர் அலுவலகம், குறிப்பாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஒருங்கிணைந்து செயல்படச் செய்வது, மேற்பார்வையிடுவது ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது. இதற்காக தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அனைத்தின் தொடர்பாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருடைய அதிகாரங்கள் அனைத்தும் சர்க்கரைத் தொழில் இயகுக்நருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

1978 மார்ச் 22]

2. இந்த ஆய்வில், 1976–77 ஆம் சர்க்கரைத் தொழில் ஆண்டின் (1976ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய) சாதனைகள், முந்திய ஆண்டான 1975–76 இல் நிகழ்த்தப் பெற்ற சாதனைகளுடன் ஒப்பிட்டு விளக்கப்படுகின்றன. மேலும், 1977–78ஆம் சர்க்கரைத் தொழில் ஆண்டின் திட்டங்கள் பற்றிய சுருக்கக் குறிப்பும் தரப்படுகின்றது. ஆய்வுக்குரிய ஆண்டில் தமிழ்நாட்டில் 21 சர்க்கரை ஆலைகள் இருந்தன. அவற்றுள் 10 ஆலைகள் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவை ; 9 ஆலைகள் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஆகும். எஞ்சிய இரண்டும் பொதுத் துறையைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகள் ஆகும். இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித்திறன், நிறுவிய நிலை உற்பத்தித் திறன் ஆகியவை குறித்த விவரங்கள், பின்னுல் இணைப்பு XXI-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

கரும்பு பயிரிடல்.

3. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட, தமிழ்நாடு சர்க்கரைத் தொழில் துறைக்குப் புதியதுதான், என்றாலும் இத்துறையில் இம்மாநிலம் படிப்படியாக முன்னேறி வருகின்றது. இந்தியாவில் பெருமளவில் சர்க்கரை உற்பத்தி செய்கிற மாநிலங்களுடன் ஒப்பிட, தமிழ்நாட்டின் சாதனை ஊக்கமளிப்பதாக உள்ளது. தமிழ்நாட்டில் கரும்பு பயிரிடப் படும் பரப்பளவைப் பொறுத்தவரை, ஆண்டுதோறும் அதே அளவிற்குக் குறையாமல் பார்த்துக் கொள்வது மட்டுமின்றி. சில ஆண்டுகளில் பரப்பளவில் அதிகமாகவும் பயிரிடப் படுகிறது. தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் சிறந்த சாதனையைப் புரிந்திட உதவிய அம்சங்கள் பின் வருவன : இந்திய அரசு வரையறுத்த சட்டபூர்வ விலைக்குச் சற்றுக்கூடுதலாகவே அமைந்த விலை கரும்புபயிரிடுவோருக்கு உடனுக்குடன் வழங்கப்படுகிறது; சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்புபயிரிடுவோருக்குமிடையே பொதுவாக நல்லுறவு நிலவுகிறது. கரும்பு பயிரிடுவதற்காக ஆலைகள் கணிசமான ஊக்க உதவித் தொகைகள் வழங்குகின்றன. 1974–75 முதல் 1976–77 வரையில் கரும்புக்கு இந்திய அரசு வரையறுத்த விலை, தமிழ்நாடு அரசு பரிந்துரைத்த விலை, இறுதியாக சர்க்கரை ஆலைகள் வழங்கிய விலைகள் ஆகியன இணைப்பு XXII-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில், கரும்பு பயிரிடப்பட்ட பரப்பு, கரும்பு உற்பத்தி, சர்க்கரை ஆலைகள் பிழிந்த கரும்பு ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.		கரும்பு பயிரிட்ட பரப்பு. (1000 ஹெக்டேரில்).	விளைவித்த கரும்பின் அளவு. (1000 டன்களில்).	ஆலைகள் பிழிந்த. கரும்பின் அளவு. (1000டன்களில்.)	மொத்த உற்பத்தியில் ஆலைகள் பிழிந்த அளவு சதவீதம்.	ஹெக்டேருக்கு சராசரி விளைச்சல். (டன்களில்).
(1)		(2)	(3)	(4)	(5)	(6)
1968-69	..	172	14,024	4,169	30	81·53
1969-70	..	139	10,916	3,656	34	78·53
1970-71	..	114	9,391	3,326	35	82·38
1971-72	..	117	10,357	3,236	31	88·52
1972-73	..	144	12,113	4,008	33	84·12
1973-74	..	186	18,183	5,287	29	97·76
1974-75	..	160	14,593	4,556	31	91·21
1975-76	..	128	11,936	1,969	17	93·25
1976-77	..	133	13,162	3,791	29	98·96

சர்க்கரை ஆலைகளின் சாதனை.

4. தமிழ்நாட்டில், நான்காவது ஐந்தாண்டுத்திட்டகாலம் முழுவதும், குறிப்பாக 1973-74ஆம் ஆண்டில், சர்க்கரைத் தொழில் குறிப்பிடத்தக்க சிறந்த சாதனையைப் புரிந்திருந்தது. ஆனால், மாநிலம் முழுவதும் முன்னொரு போதும் கண்டிராத அளவு வறட்சி நிலவிய காரணத்தினால் 1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளில் இத்தொழில் பின்னடைவு கண்டது. 1974-75 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பிழிந்த அரவைத் திறன் (Capacity Utilisation) 88·15 சதவீதம் ஆகும்; இந்த சதவீதம் 1975-76-ல் 44·02 சதவீதமாகக் குறைந்தது. 1976-77-ல் கரும்பு வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து எடுக்கப்பட்ட ஒருமித்த முயற்சி காரணமாக அரவைத்திறன் கணிசமான அளவு (70·83 சதவீதம்) முன்னேற்றமடைந்தது. 1974-75 ஆம் ஆண்டு முதல் 1976-77 ஆம் ஆண்டுவரையில் சர்க்கரை ஆலைகளின் சாதனைகளைக்காட்டும் விவரங்கள் இணைப்பு XXIIIஇல் கொடுக்கப்பட்டுள்ளன.

கரும்பு விலை.

5. இந்திய அரசு தற்போது கரும்புக்கு வரையறுத்துள்ள குறைந்த அளவு விலையானது இம்மாநிலத்தில் கரும்பு பயிரிடுவோரை ஊக்குவிப்பதாக அமையவில்லை. கரும்பு பயிரிடுவதற்காகவும் செலவு உயர்ந்துள்ளதையொட்டி கரும்பு பயிரிடுவோருக்கு ஆதாயமளிக்கக் கூடியதாக இருக்கும் வகையில், கரும்புக்கு நடப்புக்கொத்த விலைகளை வரையறுக்குமாறு மாநில அரசு, வேளாண்மை விளை பொருள் விலைகள் குழுவிற்கும் இந்திய அரசுக்கும் பரிவுரை செய்துள்ளது. 1976-77-ல் சர்க்கரைச் சத்து 8·5 சதவீதம் அளவுள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு விலை ரூ. 125 அளிக்கலாம் என்று மாநில அரசு பரிந்துரைத்திருந்தது. ஆனால், இந்திய அரசு டன் ஒன்றுக்கு விலை ரூ. 85 மட்டுமே என வரையறுத்தது. கரும்புக்குப் போட்டியாகப் பயிரிடப்படுகின்ற வாழைக்கும் நெல்லுக்கும் அளிக்கப்படும் விலையுடன் கரும்பிற்கு அளிக்கப்படும் விலையை ஒப்பிட்டால், கரும்பு பயிரிடுவோருக்குக் கிடைக்கும் ஆதாயம் குறைவு என்பதால் இந்த விலை போதுமானதல்ல என்று கருதப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டிலும், சர்க்கரைச் சத்து 8·5 சதவீதம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு விலை ரூ 125 அளிக்கலாம் என்று மாநில அரசு பரிவுரை செய்தது. இந்திய அரசு 1977-78 ஆம் ஆண்டுக்கும்

(முந்திய ஆண்டில் வரையறுத்த) அதே குறைந்த அளவு விலையை, அதாவது டன் ஒன்றுக்கு ரூ. 85 என வரையறுத்தது. ஆனால், அதே சமயத்தில் கரும்பு பயிரிடுவோரின் நலனைப் பாதுகாக்க, 1977–78 ஆம் ஆண்டில் கரும்புக்கு கொடுக்கப்படும் விலை ஏறத்தாழ முந்திய ஆண்டில் கொடுத்த விலையின் அளவிற்கே இருத்தல் நலம் என்று தனது கொள்கையை இந்திய அரசு அறிவித்துள்ளது. எனினும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கரும்பிற்கு இந்திய அரசு வரையறுத்த விலைக்குக் கூடுதலாகவே கவர்ச்சிகரமான விலைகளைக் கொடுத்து வருகின்றன. இது பற்றிய விவரங்களை இணைப்பு XXII இல் காணலாம்.

சர்க்கரை விலை.

6. இந்திய அரசு ஆண்டுதோறும் சர்க்கரைக்குரிய விலையை வரையறுக்கிறது. இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் 3 (3-C) பிரிவில் விதித்துள்ள விதிகளுக்கு ஒத்த வகையில் சர்க்கரை விலை வரையறுக்கப்பட வேண்டும், அவ்வாறு வரையறுக்கையில் கீழ்க்காணும் கருத்துக்களைக் கருதிப்பார்த்து வரையறுக்க வேண்டும் :—

(அ) கரும்புக்கு வரையறுக்கப்பட்டுள்ள குறைந்த அளவு விலை ;

(இ) சர்க்கரை உற்பத்திச் செலவு ;

(உ) அதற்குச் செலுத்தப்பட்ட, செலுத்தப்படத் தக்க தீர்வை அல்லது வரி இருப்பின் அது ;

(எ) சர்க்கரை உற்பத்தித் தொழிலில் முதலீடு செய்யப்பட்ட முதலுக்கு நியாயமான ஆதாயத்தைப் பெறுதல்.

இவை தவிர, கரும்பு பயிரிடும் காலம், சர்க்கரை தயாரிப்புக்காலம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு விலைகள் நிர்ணயக் குழு (Tariff Comm'ssion) தயாரித்த செலவு விவர அட்டவணையும் (Cost Schedule) கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பெரும்பாலும் ஒவ்வோராண்டும் தமிழ்நாட்டுக்குக் குறைந்த விலையே அளிக்கப்பட்டு வந்துள்ளது. ஊதியம், வரி, எரிபொருள், உதிரிப் பாகங்கள், சாக்கு இவற்றின் விலை, வட்டி வீதம், கரும்பின் விலை ஆகிய ஒவ்வொரு இனமும் உயர்ந்துள்ளபடியால் சர்க்கரை உற்பத்திச் செலவு உயர்ந்துள்ளது. எடுத்துக்காட்டாக, 1975–76ஆம் ஆண்டுக்கு இறுதியாக வரையறுக்கப்பட்ட விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 178·13 ஆகும். 1976–77, 1977–78 ஆகிய ஆண்டுகளுக்கும்கூட அதே விலைதான் வரையறுக்கப்பட்டது. விலையை வரையறுப்பது குறித்து இந்திய அரசு பின்பற்றுகிற முறைகளுக்கிணங்க வரையறுத்தாலும்கூட 1977–78 ஆம் ஆண்டுக்குரிய விலை குவிண்டால் ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 214·91 ஆக இருக்க வேண்டும். சர்க்கரைக்கு இது போல ஆதாயமளிக்காத விலைகளை வரையறுத்த காரணத்தால், எல்லா சர்க்கரை ஆலைகளுக்கும் பெருமளவில் நட்டம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ; இதனால், அவை கரும்புக்கு ஆதாயமளிக்கக்கூடிய விலையை அளிக்கும் திறனும் கூட மோசமாகப் பாதிக்கப்படும். இத்தகைய நிலைமை தொடருமானால் தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் வளர்ச்சி பெறுவது இயலாது. இது பற்றி மாநில அரசு தொடர்ந்து மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி வருகின்றது. தனியார் ஆலைகள் சிலர் இது பற்றி வழக்கு மன்றம் சென்றுள்ளதாகவும் தெரிகின்றது.

சர்க்கரை ஆராய்ச்சி நிலையம்.

7. சர்க்கரை ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க சம்பந்தப்பட்ட தொழில் முனைவர்களுடன் கலந்து பேசி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

8. 1975–76, 1976–77 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வறட்சி நிலவியதன் காரணமாக சர்க்கரைத் தொழிலின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டது. அதன் பிறகு இத்தொழில் முன்னேற்றமடைந்து வந்தது. ஆனால் மறுபடியும் தமிழ்நாட்டில் 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இதுவரை கண்டிராத அளவில் புயல், வெள்ளம் வந்து சின்னாபின்னப் படுத்தி விட்டது. 1976–77-ல் கரும்பு பிழிந்த அளவு

[1978 மார்ச் 22

சர்க்கரை உற்பத்தியின் அளவுகளும், 1977-78-ல் எதிர் பார்க்கப்படும் இவற்றின் அளவுகளும் கீழே தரப்படு கின்றன:—

	1976-77-ல் பிழியப்பட்ட கரும்பின் அளவு.	1977-78-ல் பிழிய எதிர் பார்க்கப்படும் கரும்பின் அளவு
	(லட்சம் டன்களில்.)	
கூட்டுறவுத் துறை ..	14·86	20·70
தனியார் துறை	22·65	21·55
அரசுத் துறை	0·40	2·20
மொத்தம் ..	37·91	44·45

	1976-77-ல் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு.	1977-78-ல் உற்பத்தி செய்ய எதிர்பார்க் கப்படும் சர்க்கரையின் அளவு.
	(லட்சம் டன்களில்.)	
கூட்டுறவுத்துறை ..	1·33	1·82
தனியார்துறை	1·85	1·73
அரசுத்துறை	0·04	0·19
மொத்தம் ..	3·22	3·74

1978 மார்ச் 22

விரிவுபடுத்தும் திட்டமும் புதிய ஆலைகளைத் தொடங்குவதும்

9. தற்போதுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 5 ஆலைகள் சாறு பிழியும் திறனளவை விரிவுபடுத்திக்கொள்ள உரிமம் பெற்றன. அதன் விவரம் வருமாறு:—

கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பெயர்.	ஆரம்பத்தில் திறன்.	விரிவு படுத்தப் படும் திறன்.	தோராய செலவு (ரூபாய் லட்சத்தில்.)
(1)	(2)	(3)	(4)
	(நாள் ஒன்றுக்கு டன்களில்)		
1. அமராவதி ..	1,250	2,000	275
2. மதுராந்தகம் ..	1,000	1,750	250
3. கள்ளக்குறிச்சி ..	1,250	2,000	285
4. சேலம்	1,750	2 500	140
5. நேஷனல் ..	1,000	1,[illegible]00	195

நேஷனல் சர்க்கரை ஆலை தவிர மற்ற எல்லாக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் 1977–78 ஆம் ஆண்டிலிருந்து விரிவுபடுத்தப்பட்ட திறனளவில் சாறு பிழியத் தொடங்கியுள்ளன. நேஷனல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1978–79 ஆம் ஆண்டிலிருந்து விரிவுபடுத்தப்பட்ட திறனளவில் சர்க்கரை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. புதிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளான வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும், 1976–77-ல் சோதனை முறையில் சாறு பிழியத் தொடங்கின. இவை ஒவ்வொன்றும் நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பை பிழியும் திறன் கொண்டவை யாகும்.

தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனம் (TASCO)

10. சர்க்கரை ஆலைகள் பொதுத்துறையில் நிறுவவேண்டு மென்று, அரசு 1974 ஆம் ஆண்டில் எடுத்த முடிவின்படி, தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனம் அமைக்கப்பட்டது; தஞ்சாவூர், பெரம்பலூர், சங்கரன்கோயில், திருக்கோயிலூர், சிவகங்கை ஆகிய பகுதிகளில் 5 சர்க்கரை ஆலைகள் அமைக்க இந்நிறுவனம் உரிமங்களைப் பெற்றது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைப்ப

தற்கான உரிமம் தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனத்திற்கு மாற்றப்பட்டது. தஞ்சாவூர் அருகில் அமைக்கப்பட்ட ஆலை 1976–77 ஆம் ஆண்டில் சோதனை முறையில் சாறு பிழியும் பணியைத் தொடங்கியது. திருச்சி மாவட்டம் பெரம்பலூரில் அமைக்கப்பட்ட இரண்டாவது ஆலையில் இயந்திரங்கள் நிறுவப்பட்டு 2—2—1978–ல் சோதனை முறையிலான சாறுபிழியும் பணியைத் தொடங்கியது.

புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுதல்.

11. 1974-ல் பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகளை அமைக்க அரசு முடிவு செய்தது. 1977-ல் இம்முடிவினை அரசு மறு பரிசீலனை செய்து, கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகளை அமைப்பதில் உள்ள கீழ்க்கண்ட சாதகங்களைக் கருத்தில் கொண்டு, இனி புதிதாக நிறுவவிருக்கும் சர்க்கரை ஆலைகளை கூட்டுறவுத் துறையில் மட்டுமே நிறுவ வேண்டுமென்று அரசு முடிவு செய்தது.

(1) பொதுத்துறையில் அமைக்கப்படும் சர்க்கரை ஆலையைவிட, கூட்டுறவுத் துறையில் நிறுவப்படும் சர்க்கரை ஆலைகளில் அரசின் பங்காகிய நிதி ஒதுக்கீடு குறைந்த அளவில் மட்டுமே தேவைப்படும். இது தவிர தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து கடன் பெறலாம்.

(2) கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு கரும்பு பயிரிடுவோரிடமிருந்து பெற வேண்டிய 10 சதவிகிதம் பங்குத் தொகையை எளிதாகப் பெறலாம்.

(3) கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சிறிய விவசாயிகளும் நேரடியாகப் பங்கு கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. அதன்படி, தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் பெரிய செவலை கிராமத்தில் ஒரு புதிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலை 1979–80 ஆம் ஆண்டு சர்க்கரை கிடைக்கும் காலத்தில் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆலையில் அரசின் பங்கு மூலதனத்திற்காக 1977–78 ஆம் ஆண்டில் ரூ. 160 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்ய 1978–79 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 162 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மிகவும் பின் தங்கிய பகுதியொன்றில், மொத்தம் ரூ. 145 லட்சம் முதலீட்டைக் கொண்டு 5,566 ஏக்கர் பரப்பில், மாரியூர்-வாலிநோக்கம் உப்பளம் அமைக்கப்படுகிறது. இத் திட்டத்தைச் செயற்படுத்தும் பொருட்டு, முதற்கண் ரூ. 50 லட்சம் அதிகாரமளிக்கப்பட்ட முதலீட்டுடன் தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஜூலைத் திங்கள் 22-ம் நாளில் நிறுவப்பட்டது. இந்த உப்பளத் தொகுதியில் 500 உப்பளங்களும் (Crystallisers) அவற்றுடன் உப்பு நீர்த் தேக்கங்களும் உப்புப் பாத்திகளும் (Condenser areas) இருக்கும். 1978 ஆம் ஆண்டில் இங்கு ஏறத்தாழ 20,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உற்பத்தியளவு 1984 ஆம் ஆண்டில் 2,40,000 டன்னாக உயரக்கூடும். இத் திட்டத்தின்கீழ் மொத்தம் 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

2. தமிழ்நாடு அரசு இதுவரை இந்த நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் ரூபாய் 30 லட்சம் முதலீடு செய்துள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்ட கடன் ரூபாய் 30 லட்சத்தில் இதுவரை ரூ. 18·75 லட்சம் பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திடமிருந்து ரூ. 2·50 லட்சம் உதவித் தொகையாகப் பெறப்பட்டுள்ளது.

3. உப்பளப் பகுதி முழுமைக்கும் எல்லை வரையறுக்கப்பட்டு, 24 கி. மீ. நீளத்துக்கு ரூ. 13 லட்சம் செலவில் அந்தப் பகுதியைச் சுற்றிலும் வரப்புகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது. 18 உப்பளங்கள் உப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. 4ஆவது 5ஆவது தளங்களில் அமைந்துள்ள 165 ஏக்கர் நிலப்பரப்பும் சமன்படுத்தப்பட்டு உப்பளப் பாத்திகள் கட்டப்பட்டுள்ளன. மூன்று உப்பு நீர்த் தேக்கங்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 1977 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 4,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. களப்பணி அலுவலகம், ஆய்வுக் கூடக் கட்டிடம், வானிலை ஆராய்ச்சிக் கூடம், தற்காலிக வண்டிக்கொட்டகை, நன்னீர் கிணறுகள் ஆகியவற்றைக் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன. கடலிலிருந்து பெருமளவில் உப்பு நீரைக் கொண்டுவருவதற்கு அவசியமான

விசையேற்றங்களும் இடைநிலை விசையேற்றங்களும் டிராக்டர்கள், இணைப்பு வண்டிகள் முதலியவையும் வாங்கப்பட்டுள்ளன. இந்நிறுவனம் இதுவரையில் இத் திட்டத்திற்காக சுமார் ரூ. 48 லட்சம் செலவிட்டுள்ளது:

4. உப்பு நிறுவனம் கீழ்க்காணும் பணிகளைச் செய்யக் கருதியுள்ளது—

(1) பெரிய, நடுத்தர அளவிலான உப்பு தொடர்பான பணிகளை நிறுவுவதற்கான தகுந்த இடங்களைக் கண்டுபிடித்தல், உப்பு, உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனப் பொருட்கள் மற்றும் எல்லாவிதமான கடல் சார்புள்ள இரசாயனப் பொருட்கள் இவற்றினை உற்பத்தி செய்தல்.

(2) சிறு உப்பு உற்பத்தியாளர்களுக்கு அவர்களது பகுதிகளின் உப்பு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருத்தல், கடல் நீர் வழங்குதல், மேம்படுத்தல், உப்பு விற்பனைக்கு வசதிகள் செய்தல், கடன் வசதிகளைப் பெருக்குதல் போன்றவைகள்.

(3) உப்பு நிறுவனம் ஏனைய சிறு உப்பு உற்பத்தியாளர்களும் தயாரித்த உப்பை விற்பனை செய்தல்.

(4) உப்பு உற்பத்தியாளர்களுக்கு உப்பைப் பற்றியும் கடல் சார்புள்ள இரசாயனப் பொருட்களைப் பற்றியும் செய்திகள் கிடைக்குமாறு செய்ய ஒரு ஆலோசனை நிலையத்தை நிறுவுதல்.

நலிவுற்ற தொழிற் பிரிவுகள்

தொழிற் பிரிவுகள் தவறான நிர்வாகத்தாலோ, நிதி நெருக்கடியினாலோ, தொழில் நுட்பச் சிக்கல்களினாலோ நலிவுற்றிருப்பின், இயன்ற அளவுக்கு உதவி செய்வது தமிழ்நாடு அரசின் கொள்கையாகும். வேலை வாய்ப்பு இழப்பை தடுத்தல், பொது நிதி நிறுவனங்கள் செய்துள்ள முதலீடுகளுக்குப் பாதுகாப்பு அளித்தல், நிறுவுத்திறன் பயனற்றுப் போவதிலிருந்து தடுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக அரசு நலிவுற்ற ஆலைகளுக்கு உதவியளிக்கிறது. இதற்காக 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகிற நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) சட்டத்தை அரசு இயற்றியது. வேலை வாய்ப்பின்மையை தடுக்க, அல்லது நிவாரணம் அளிக்க, நலிவுற்ற தொழிற் பிரிவை நடத்துவது இன்றியமையாதது எனக் கருதினால், தொழில் நிறுவனங்கள் தொடர்பான தொழில் நல்லுறவுகள், நிதிக் கடப்பாடுகள், இது போன்ற ஏனையவற்றைப் பொறுத்தவரையில் நலிவுற்ற ஆலைகளுக்குக் குறிப்பிட்ட காலத்திற்கு அரசு பாதுகாப்பு அளிக்க இதனால் ஏதுவாகிறது.

2. இந்த சட்டத்தின் விதித் துறைகளை பின்வரும் நிறுவனங்களுக்கு இந்த அரசு பொருந்துமாறு செய்துள்ளது :—

(1) சதர்ன் ஸ்டரக்சரல்ஸ் லிமிடெட், சென்னை.

(2) சக்தி பைப்ஸ் லிமிடெட், சென்னை.

(3) டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர்.

(4) டிராக் இண்டஸ்டிரீஸ் அண்டு காம்போனென்ட்ஸ் லிமிடெட், சென்னை.

(5) லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட், தொட்டம்பட்டி, தருமபுரி.

(6) பிரிமியர் பெர்டிலைசர் லிமிடெட், தென் ஆற்காடு.

(7) இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை.

(8) சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட், சென்னை.

(9) சௌத் இந்தியா கிளாஸ் அண்டு எனுமல் ஒர்க்ஸ் லிமிடெட், சேலம்.

(10) காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், புதுக்கோட்டை.

(11) ஜெனார்தன மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(12) ரவீந்திரா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(13) மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(14) ஸ்ரீ மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.

(15) பிரகாஷ் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(16) கோயம்புத்தூர் கமலா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(17) சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், முத்தனேந்தல், இராமநாதபுரம் மாவட்டம்.

3. 1977–78 ஆம் ஆண்டில் இவைகளில் ஏழு கம்பெனிகள் முதல் முறையாக நிவாரண உதவி பெறுகிற நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டன. (அவை தொடர் எண் 8, 9, 12, 13, 15, 16, 17). ஒரு நிறுவனம் மீண்டும் தனித்தியங்கும் அளவிற்குப் புத்துயிர் பெறுவதற்கான திட்டம் அதனிடம் இருப்பதாகவும் பாதுகாப்பு வழங்கப்படும் காலத்தில் பழைய நிலைமைக்கு வர முடியும் என்பதை அந்த நிறுவனம் எடுத்துக்காட்டுவதைப் பொறுத்து நிறுவனத்திற்கு இந்தப் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது.

4. அரசு பின்வரும் நிறுவனங்களுக்கு இயந்திரங்கள் வாங்கவும், நடைமுறை மூலதனத்திற்காகவும் கடன்கள், வழி வகை முன்பணங்கள் அளித்துள்ளது.

(1) சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் லிமிடெட், சென்னை.
(2) சக்தி பைப்ஸ் லிமிடெட், சென்னை.
(3) டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர்.
(4) லோட்டஸ் மில்ஸ், கோயம்புத்தூர்.

பவானி மில்ஸ் (ரூ. 25 லட்சம்), நாகம்மாள் மில்ஸ் (ரூ. 37.5 லட்சம்) ஆகியவைகளுக்கு வங்கி கடன் கொடுப்பதற்காக உத்திரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால் அந்த ஆலைகள் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆகவே, உத்திரவாதம் அளித்து பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் ரத்து செய்யப்பட்டன.

5. பின்வரும் நிறுவனங்களுக்கு, அவற்றின் நடைமுறை மூலதனத்திற்காக, வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது:—

		(ரூபாய் இலட்சத்தில்).
(1)	மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், கோயம்புத்தூர்.	34.33
(2)	ரவீந்திரா மில்ஸ், கோயம்புத்தூர்.	15.00
(3)	ஜனார்தனா மில்ஸ், கோயம்புத்தூர்.	50.00
(4)	ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ். ..	30.00
(5)	கோயம்புத்தூர் கமலா மில்ஸ், கோயம்புத்தூர்.	30.00
(6)	பிரகாஷ் மில்ஸ், கோயம்புத்தூர் ..	45.00
(7)	பின்னி லிமிடெட் (பி அன்டு சி மில்ஸ்).	100.00
(8)	லோட்டஸ் மில்ஸ், கோயம்புத்தூர்.	75.00
(9)	காவேரி ஸ்பின்னிங் அன்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை.	57.71
(10)	இந்தியா மீட்டர்ஸ்	47.00

6. நலிந்த தொழிற்பிரிவுகள், விற்பனைவரி பாக்கிகளையும், பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலபத் தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத் தொழிற்பிரிவுகள் உற்பத்திசெய்யும் பொருட்களை மத்திய அரசு, மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு எழுதி கேட்டு விற்பனை செய்யவும் அரசு உதவி செய்கிறது.

7. நலிவுற்ற பஞ்சாலைகள் கட்டவேண்டிய வைப்புநிதி, தொழிலாளர் ஈட்டுறுதி, கூடுதல் அகவிலைப்படியின் கட்டாய சேமிப்பு பாக்கிகளை ஓராண்டு காலத்திற்கு ஒத்தி வைக்க அனுமதி வழங்குமாறு மத்திய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது. வருமான வரிப்பாக்கிகள் கட்டுவதை ஒத்திப் போடுவதற்கு அனுமதி அளிக்குமாறு சென்னை வருமானவரி ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

8. மின்சார மீட்டர்கள், மின்சார சாதனங்கள், மின்னழுத்த மாற்றிகள் முதலியவற்றை தயாரிப்பதற்காக இம்மாநிலத்தில் அமைக்கப்பட்ட இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் நிர்வாகச் சீர் கேடுகளினால் 3 ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டிருந்தது. வேலைவாய்ப்பு இழந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தவும் செயல்படத் துவங்கிய பிறகு நல்ல முறையில் நிறுவனம் தொடர்ந்து நடக்கும் என்ற நம்பிக்கையாலும் இந்நிறுவனத்தை மீண்டும் செயல்பட புனரமைப்புத் திட்டம் வகுக்க மத்திய அரசு, நிதி நிறுவனங்கள், பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் ஆகியோருடன் நடந்த பேச்சு வார்த்தைகளில் இந்த அரசு முக்கிய பங்கேற்றது. இந்நிறுவனம் மீண்டும் 8–12–1977 முதல் செயல்படத் துவங்கியது. ஒப்புக்கொள்ளப்பட்ட புனரமைப்புத் திட்டத்தின்படி, பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மின் வாரியம் இந்நிறுவனத்திடமிருந்து முதலாண்டில் 50,000 மீட்டர்களும், அடுத்த நான்காண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு 1,00,000 மீட்டர்களும் 25 சதவீதம் விலைச் சலுகையில் வாங்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதுவரை இந்நிறுவனம் ஏறக்குறைய 22 ஆயிரம் மீட்டர்கள் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்கி இருக்கிறது. மேலும், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் நடந்த பேச்சு வார்த்தை

களில் 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் மொத்தம் 475 தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப இதுவரை 389 தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு எடுந்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

9. சக்தி பைப்ஸ் லிமிடெட் நிறுவனத்தை பொறுத்த மட்டில் அதனை மாற்றி அமைத்து அதற்குப் புத்துயிர் அளிப்பது பற்றி மத்திய அரசுத் தொழில் துறை அமைச்சகம் பரிசீலித்து வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1978 மார்ச் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேர வைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் — அவர்களே....

குறிப்பு:— த்ர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடம்பெற் றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என் பதைக் குறிக்கும்.]

1. ஒழுங்குப் பிரச்னைகள்.

(அ) முதல் ஒரு மணிநேரத்தில் வினாக்கள்-விடைகள் எடுத் துக்கொள்ளாமல் வேறு அலுவல்களை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, இந்த அவையில் முதலில் கேள்வி நேரம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதற்கு பிறகுதான் மற்ற காரியங் யங்களை எடுத்துக்கொள்வதானால் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, முதலில் ஏன் கேள்விகளை எடுத்துக்கொள்ளாமல் முன்ன வர் அவர்களை அறிக்கை அளிக்க அழைக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அனுமதியோடுதான் இதைப் படிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) அரசினர் தீர்மானம்

விதி 22ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக் கள்—விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்." என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(அ) முதல் ஒருமணி நேரத்தில் வினாக்கள்-விடைகள் எடுத்துக் கொள்ளாமல் வேறு அலுவல்களை எடுத்துக் கொள்வது குறித்து

(1) ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். க்வஸ்டின் ஹவர் இல்லாமல், கேள்விகளை எடுக்காமல் முன்னவர் அவர்களை அறிக்கை அளிக்க அழைத்தற்கு முதலில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினேன். இப்போது நான் எழுப்பக் கூடிய ஒழுங்குப் பிரச்னை, முதலில் கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பிற்குதான் மற்றவைகளை எடுப்பது. இப்படி கேள்வி நேரத்தை ஒத்திவைப்பது. என்பது இந்த அவைக்குத் தருகிற உரிமையை நீங்கள் பறிக்கிறீர்கள், என்று தான் பொருள். உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டியவற்றைத் தெரிந்து கொள்ளமுடியாமல் போய்விடுகிறது இதன் காரணமாக.

ஆகவே, இந்த அமைச்சரவை இனிமேல் இப்படிச் செய்யக் கூடாது. வினாக்கள் நேரம் என்பது முக்கியமான ஒன்றாகும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கலந்து கொண்டுதான் செய்கிறேன் என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கலந்துகொள்ளவில்லை என்பது தான். நான் சொல்கிறேன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கலந்து கொண்டு இதைச் செய்யவில்லை என்று. அதைத்தான் நான் இங்கு சொல்லவிழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று மாண்புமிகு உறுப்பினர் ப.உ.ச. அவர்களிடம்—எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவையிலே இல்லாததால்—நானே சொன்னேன், கலைஞர் அவர்களைப் பார்த்து இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கிறோம் என்று சொல்லுங்கள் என்று சொன்னேன், அவர்களிடம் சொல்லிவிட்டுத்தான் போனேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்போது அவையில் இல்லாததால் ப.உ.ச. அவர்களிடப் சொன்னேன். ஏற்கனவே நம் அஜெண்டாவில் அரசினர் தீர்மானம் என அச்சிடப்பட்டு வந்திருக்கிறது. கேள்விகள் வந்திருந்து அது திடீரென்று நிறுத்தப்பட்டிருந்தால் தாங்கள் எழுப்புகிற பிரச்னை சரி. இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் தீர்மானம் என்று போட்டுத்தான் அது அனுப்பப்பட்டிருக்கிறது. கேள்விகள் என்று போட்டு அனுப்பி அது நிறுத்தப்பட்டிருக்குமானால் நீங்கள் கேட்கிறது சரி, ஆனால் இப்போது அந்தக் கேள்வியே இல்லை. கேள்வி நேரம் என்ற பிரச்னையே இன்று எழுவதற்கு இல்லை, காரணம் கேள்விகள் என்று அச்சிட்டதாள் உங்களுக்கு வரவில்லை.

திரு. துரை முருகன் : ப.உ.ச. அவர்களிடம் சொல் கலைஞரிடம் சொல்லச் சொன்னேன் என்று சொல்கிறீர்கள். முன்னவரே பேசியிருக்கலாம் அல்லது தாங்களே பேசியிருக்கலாம் கலைஞர் அவர்களிடம். மெட்ராசில் என்ன டெலிபோன் இல்லையா

என்று கேட்கிறேன். ஒருவரிடம் சொல்லி அவர் இன்னொருவரிடம் சொல்லி, அவர் சொல்லி, இவர் சொல்லி என்று போவது எதிர்க்கட்சித் தலைவருக்கு நீங்கள் தருகிற மரியாதை அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் யாரிடம் சொன்னாலும், கூட்டுப் பொறுப்பு இல்லை; ஆகவே யாரிடமும் இனி சொல்லவேண்டாம், அவர்களிடம் மட்டும் சொல்லுங்கள் என்று சொல்கிற அறிவுரையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை கலந்து ஆலோசித்திருக்க வேண்டும். முக்கியமான பிரச்னைகளை போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போனால் அது எதிர் கட்சித் தலைவருக்குத் தருகிற மரியாதை அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ப.உ.ச. அவர்களிடம் சொன்னதை போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போனதாகச் சொல்லக் கூடாது என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். 'ப. உ. ச. அவர்கள் பொறுப்புள்ளவர்கள் என்று கருதித் தான் சொன்னேன். அப்படிச் சொல்லக்கூடாது. கலைஞரிடம்தான் சொல்லவேண்டும் என்றால் இனிமேல் திருத்திக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: எங்களுக்குள்ளே பேதம் மூட்டி விடக் கூடாது. அது தலைவருக்கு அழகல்ல. என்னிடம் சொல்லலாம், நானும் பொறுப்புள்ளவன்தான். ஒருவரிடம் சொல்லி அவர்களிடம் சொல்லச் சொல்வது நியாயமா என்பதை தயவு செய்து தலைவர் அவர்கள் யோசிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எனக்கு கற்றுக் கொடுக்க வேண்டாம்.

திரு. துரை முருகன் : எனக்கும் தெரியும், நானும் ஐந்தாண்டுகளாக இருக்கிறேன். எனக்கும் முறைகள் தெரியும். எனக்கும், ப.உ.ச.வுக்கும் பொறுப்புண்டு. எங்களுக்குள் சிண்டு முடிச்சு விடுவது அவையின் தலைமைப் பதவியில் உள்ள உங்களுக்கு அழகல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் அத்துமீறி பேசினால் அவற்றை நீக்கவேண்டியிருக்கும்.

திரு. துரை முருகன் : இது எங்களுக்குப் பழக்கப்பட்டது. எங்கள் கருத்துக்களை சொல்லாமல் இருக்கமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றையும் சொல்லி விட முடியாது. நீங்கள் சொல்வது, இனிமேல் யாரிடமும் சொல்ல வேண்டாம், அவர்களிடம் மட்டும்தான் சொல்ல வேண்டும் என்பதுதான். சரி, அவர்களிடம் மட்டுமே சொல்கிறேன், மற்றவர்களிடம் சொல்லப் போவதில்லை. தங்கள் அறிவுரையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நண்பர் துரைமுருகன் அவர்கள் 'சிண்டு முடிகிற வேலை' என்று தலைவரைப் பற்றி கூறியிருக்கிறார்கள். மேலும் கேள்வி நேரம் ஒத்தி வைப்பதைக் குறித்து ஒழுங்குப் பிரச்னை கிளப்பியிருக்கிறார்கள். ஆனால் இதே போன்ற ஒரு ஒழுங்குப் பிரச்னை முன்பு சுப்பு அவர்கள் எழுப்பினார்கள். அப்போது இங்கு இருந்த எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கலாம், இதில் ஒழுங்குப் பிரச்னை ஒன்றும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அன்றைக்கு நீங்களும் இதைப் பற்றி முடிவு சொல்லியிருக்கிறீர்கள். இதன் மீது ஒரு நாள் ஒழுங்குப் பிரச்னை கிளப்பி அதற்கு முடிவு சொல்லிவிட்ட பிறகு திரும்பியும் மறுபடியும், மறு படியும் இப்படி கேட்டுக்கொண்டிருப்பது ஒழுங்குப் பிரச்னைக்கு உட்பட்டதா என்பதை தலைவர் அவர்கள் எனக்கு தெரிவிக்க வேண்டுகிறேன். அடுத்தது, அவர்கள் குறிப்பிட்ட 'சிண்டு முடிகிற வேலை' என்பது சபை குறிப்பேட்டில் இருக்கலாமா என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப் பற்றித் தனியாக எழுதிக் கொடுங்கள், பின்னால் அதைப்பற்றி பார்க்கலாம். திரு. துரைமுருகன் இதைப் பற்றி வலியுறுத்துகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. துரை முருகன் : ஆம், வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட மன்ற விதி 244-ல் சொல்லப்பட்டிருப்பது....

'Any member may, with the consent of the Speaker move that any rule may be suspended in its application to a particular motion before the House and if the motion is carried by three-fourths of the total number of members present and voting at the meeting, the rule in question shall be suspended for the time-being'

என்று விதி 244-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் பேரவை முன்னவர் அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

விதி 22-ஐத் தளர்த்தல்—தொடர்ச்சி :

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற விதி 244-ன் அடிப்படையில், நான,

"சட்ட மன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

Thiru DuraiMurugan : I am pressing for a division Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் முடிந்தாகிவிட்டது already finished தயவுசெய்து உட்காருங்கள்.

(5) 1977–78-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள் அளித்தல்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 121.41 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 34.09 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 87.32 கோடி ரூபாய் மூலதன, கடன் கணக்குகளிலும் வரும். மொத்தக் கோரிக்கையில் 121.27 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட இனங்களின் கீழும், 0.14 கோடி ரூபாய் சாட்டப்பட்ட இனங்களின் கீழும் அடங்கும். இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியமான செலவு விவரங்களை மட்டும் குறிப்பிட முற்படுகிறேன்.

துணை மானியக் கோரிக்கையில் மிக அதிகமான நிதி ஒதுக்கீடு, கடன்களும் முன் பணங்களும் என்பதன்கீழ் 70.34 கோடி ரூபாய் அளவுக்கு அமைந்துள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள், கழகங்கள் ஆகியவற்றிற்குக் கொடுக்கப்படுகிற வழி வகை முன் பணம் ஆகிய 55.71 கோடி ரூபாய் இதில் அடங்கும். தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கொள்முதல்

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 23]

நடவடிக்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு நில வள வங்கிக்கு உதவித் தொகையாக 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள் அடுத்த ஆண்டுக்குரிய தங்களது திட்டங்கள் குறித்து முன் நடவடிக்கை எடுப்பதற்காக ஏனைய வழிவகை முன் பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வழிவகை முன் பணங்கள் 1978–79 ஆம் ஆண்டில் ஈடு செய்யப்படுமாதலால், நடப்பாண்டையும் அடுத்த ஆண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது இதனால் அரசுக்கு நிகரச் செலவு எதுவும் இருக்காது.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய அரசுத் துறைத் திட்டங்கள், தன்னாட்சி உரிமையுள்ள நிறுவனங்களின் நிதி உதவித் திட்டங்கள், நிதி உதவி செய்யும் நிறுவனங்களிடமிருந்து தொகை பெற்று மேற்கொள்ளப்படும் திட்டங்கள் ஆகியவற்றிற்கு 14.41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை நிறுவனங்களுக்கு மாற்றப்பட்ட அரசுச் சொத்துக்களைக் கடனாகவும், பங்கு மூலதனமாகவும், மானியமாகவும் கருதும் வகையில் 13.00 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கிடைத்துள்ள 1.94 கோடி ரூபாயைப் பின் தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காகத் தமிழ் நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்குக் கொடுத்துள்ளோம். இவற்றாலும் நம் மாநில அரசுக்கு நிகரச் செலவுப் பொறுப்பு எதுவும் இருக்காது.

துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய முக்கியமான நிதி ஒதுக்கீடுகளாவன : மதுரைக்கும் கோயம்புத்தூருக்கும் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்கள் (2.96 கோடி ரூபாய்), பண்டிகை முன்பணம் கொடுக்கும் தொகை அளவை உயர்த்தியதன் காரணமாகக் கூடுதல் நிதி ஒதுக்கீடு (2 கோடி ரூபாய்), உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியங்கள் (2 கோடி ரூபாய்), கைத்தறி, கதர் விற்பனை மீது தள்ளுபடிக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு (1.51 கோடி ரூபாய்), மாவட்டச் சாலைகளையும் கிராமச் சாலைகளையும் பராமரிப்பதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு (1.50 கோடி ரூபாய்). 1977 ஜூலையில் அறிவித்த கூடுதல் இடைக்கால நிவாரணம் வருவாய்க் கோரிக்கைகளின் கீழ் நிதி ஒதுக்கீடு உயர்ந்திருப்பதற்கு ஒரு காரணமாகும். சம்பளம் கொடுப்பதற்காக, ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கும், நகராட்சிகளுக்கும், பொது நூலகங்களுக்கும் கொடுக்கப்படத்தக்க உயரளவு மானியங்களை முன்னிட்டு, கல்வி மானியக் கோரிக்கையின்கீழ் 9.00 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். முதல் துணை மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள 8.80 கோடி ரூபாய்க்குக் கூடுதலாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேதமடைந்த குடிசைகளுக்கு ஈட்டுத் தொகை கொடுக்க 1.50 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.

1978 மார்ச் 23] [திரு. கி. மனோகரன்]

இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களுக்குச் செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகளைக் குறிப்பிட்டுள்ளேன். இவற்றின் விவரங்கள் அவையில் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன. இத்துடன் 1977–78 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகளை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமருகிறேன்.

4 1970–71 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்—அளித்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, 1970–71 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். அந்த ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியுள்ளது.

1974–75 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1970–71 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளைச் சட்டப் பேரவை முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்கு ஆய்வுக்குழு, பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே, 1970–71 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 5.31 கோடி ரூபாயாக இருக்கிறது. இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராமப் பணிகள் வேலைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, ‘31. பஞ்ச நிவாரணம்’ என்ற மானியக் கோரிக்கையின்கீழ் 1.42 கோடி ரூபாயும், முந்தைய ஆண்டுக் கணக்குகளில் செலவுகள் தவறாக வகைப்பாடு செய்யப்பட்டிருப்பதைச் சரிப்படுத்துவதற்கு மானியக் கோரிக்கை ‘47. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்’ என்பதன்கீழ் 1.57 கோடி ரூபாயும் இவ்வகையில் பெரிய செலவினங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

1970–71 ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம்மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

5 1978–79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்.

(ஆ) கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1978–79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கைகள் 24, 51 ஆகியவற்றின் மீதுள்ள வெட்டுத் தீர்மானங்களின் பேரில் விவாதம் தொடரும்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, 1956 ஆம் ஆண்டு தொழில் கொள்கையை அடிப்படையாக வைத்து அண்மைக்காலம் வரையில் நம்முடைய மத்திய, மாநில அரசுகள் தம்முடைய தொழில் மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்து வந்தன. மத்தியிலும், மாநிலத்திலும் ஏறக்குறைய 25 ஆண்டுகள் ஒரே கட்சி ஆட்சியில் இருந்த காரணத்தால் ஆங்காங்கு மாநிலங்களுக்குத் தேவையான மேம்பாட்டு அபிலாஷைகளுக்கு ஒப்ப நம்முடைய 1956 ஆம் ஆண்டு தொழில் கொள்கையிலே மாறுதல் செய்யப்படவில்லை. மத்திய அரசு தீட்டுகின்ற திட்டத்தின் அடிப்படையிலேதான் மாநில அரசுகள் தம்முடைய திட்டங்களை, தொழில் முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற நிலையில் இருந்தன என்பதை நாம் நன்றாக உணர்வோம். இதனால் சில பெரிய தொழிற்சாலைகளை உருவாக்கி நாட்டினுடைய தொழில் அடிப்படையைப் பலப்படுத்தினாலும் ஆங்காங்கு கிராமங்களில், குடிசைத் தொழில்களும், சிறு தொழில்களும், கிராமத் தொழில்களும் போதிய அளவு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் பெறவில்லை என்பதையும் அதன் காரணமாக தொழில் அடிப்படை பரவலாக்கப்படாமல் பலவிதமான சிக்கல்கள் ஏற்பட்டன என்பதையும் நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம்.

ஆனால் இப்போது புதிதாக மைய அரசு இந்தத் திட்ட அடிப்படையை, திட்டக் கொள்கையை முழுமையாக மாற்றிவிட வேண்டுமென்ற ஒரு தத்துவத்தின் அடிப்படையிலும், 'ரோலிங் பிளான்' என்ற அடிப்படையிலும் மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தும் கிராமங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்ற அடிப்படையிலும், புதிய தொழில் கொள்கையை அறிவித்திருக்கிற காரணத்தால் வருங்காலத்திலே கிராமங்களுக்குத் தொழில் மேம்பாட்டில் உரிய பங்கு கிடைக்குமென்று நாம் எதிர்பார்க்கலாம். அதே நேரத்தில் இந்த நல்ல கொள்கையை நம்முடைய மாநில அரசும் ஏற்றுக் கொண்டு

மத்தியில் அவர்கள் என்ன கொள்கையை வகுத்தாலும் அதற்கு மாறுபட்டுத்தான் செயல்படுவோம் என்ற வகையில் இல்லாமல், எது நாட்டுக்கு நல்லதோ, அதை யார் செய்தாலும் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று நம்முடைய மாநில அரசு முன்வந்து கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையான கொள்கையை, நாட்டுக்குத் தேவையான கொள்கையை இந்த அரசு ஏற்று அறிவித்திருப்பது மெத்தவும் சாலச் சிறந்தது, வரவேற்கக் கூடியது, அதற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

ஒரு நாட்டில் தொழில் முன்னேற வேண்டுமென்றால் அந்த நாட்டில் அடிப்படையான தொழில் முன்னேற்ற உணர்வு இருக்க வேண்டும். இப்படி தொழில் முன்னேற்ற உணர்வுகள், தொழில் ஏற்படுத்த வேண்டிய உணர்வுகள் நாட்டு மக்களுக்குப் பரவலாக இல்லாத சூழ்நிலையில் தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய அடிப்படையான அனுபவங்கள், அடிப்படையான மூலாதாரங்கள் இல்லாத ஒரு சூழ்நிலையில் நாட்டிலே இருக்கிற அரசுதான் பொதுமக்களுக்கு வழிகாட்டியாக, அவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கக்கூடிய வகையில் திட்டங்களைத் தீட்டி அவர்களை உற்சாகப் படுத்தக்கூடிய ஒரு நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. அதற்கு நம்முடைய பல்வேறு கொள்கைகள் உறுதுணையாக இருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

நம்முடைய வரிக் கொள்கைகள் நாட்டினுடைய தொழில் முன்னேற்றத்திற்கு அடிப்படை அமைக்கக் கூடியதாகவும், அமைந்து விடுகிறது. அவ்வாறு எந்தெந்த வகையில் எந்தெந்த இடத்தில், எந்தெந்தச் சூழ்நிலையில் எந்தெந்த அளவுக்கு நாம் வரிகளை விதிக்கிறோமோ அந்த அளவுக்கு அவைகள் எல்லாம் தொழிற் துறையில் முன்னேற்றம் ஏற்படுகிறது, வளர்ச்சி ஏற்படுகிறது. தளர்ச்சி ஏற்படுகிறது என்ற நிலைமைகளை உருவாக்கக்கூடிய ஒரு தத்துவமாக அமையும் என்பதை நான் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்கிறேன்.

(முற்பகல் 9–20.)

மக்களிடத்தில் வரி விதிக்கும்பொழுது அவர்களிடத்திலேயிருக்கின்ற அதிகமான அல்லது தேவைக்கு அதிகமான பணம் சர்க்காருடைய கஜானாக்களுக்கு வந்து அல்லது அவர்கள் அதிகமாகப் பெறுகின்ற வருமானம் மிச்சப்பட்டு வங்கிகளுக்குச் செல்வதன் வாயிலாக நம்முடைய நாட்டில் வருமானம் அதிகமாகி விட்டது என்று கூறலாம். ஆனால் அப்படி மிச்சப்படுத்துகின்ற சூழ்நிலையில் இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் இருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. அன்றாடத் தேவைக்கேகூட அவர்களுக்கு வருமானம் போதவில்லை என்ற நிலையில் பொது மக்க

ளிடத்திலேயிருந்து அதிகமான பணம் மிச்சப்படுத்தப் பட்டு சேவிங்க்-ஸில் வந்தால் அது முதலீட்டுக்குப் போகும் என்று நம்முடைய நாட்டில் எதிர்பார்க்க முடியாது.

ஆகவே, நம்மிடத்திலேயிருக்கின்ற மூலதனத்தை வைத்து கிராமங்களுக்கு எந்தெந்த வகைகளிலே நிதியுதவி செய்ய வேண்டுமென்றும், எந்தெந்த இடங்களிலே வரி போட்டால் கிராமங்களிலே மக்களுக்குரிய காரியங்களைச் செய்ய முடியும் என்பதையெல்லாம் கணக்குப் 'பார்த்துத்தான் நாம் நம்முடைய வரிக்கொள்கையை அமைத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம், கிரெடிட் ஃபெசிலிட்டி, பேங்கிங் பாலிசியைக் கூட அமைத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம்.

இன்றைக்கு பேங்கிங் பாலிசி மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது என்று மாநில அரசு மெத்தனமாக இருக்க முடியாது. எந்தெந்த வகையிலே நாம் நம்முடைய வரிக்கொள்கையை அல்லது பேங்கிங் கிரெடிட் பாலிசியை அமைத்துக் கொண்டால் நம்முடைய கிராமப் பகுதிகளில் முதலீடு செய்ய வாய்ப்பு ஏற்படும் என்று ஆங்காங்கு மாநிலங்களிலேயிருக்கின்ற சூழ்நிலைகளை நன்கு ஆராய்ந்து அந்த அடிப்படையில் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் வாய்ப்பும், உரிமையும் மாநில அரசுகளுக்கு இருக்க வேண்டும்.

ஏனென்றால் இப்பொழுது மூலாதாரமான ஒரு மாறுதலை நாடு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறது. நம்முடைய தொழில் வளர்ச்சியெல்லாம் நகரங்களிலே இருந்துவந்த காரணத்தினால் கிராமப்புறங்களிலே தொழில் வளர்ச்சிக்கான உணர்வு இது வரையில் இல்லாமல் இருந்து வந்திருக்கிறது.

இப்பொழுது கிராமங்களுக்கு நாம் தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்த முடிவு செய்திருக்கிறோம். அது வரவேற்கக்கூடிய முடிவு. அது நல்ல செம்மையான விளைவுகளை' ஏற்படுத்த வேண்டுமென்றால் தொழில் துறையில், ஆரோக்கியமான திருப்பம் ஏற்பட வேண்டுமென்று நாம் நம்முடைய நாட்டிலே வருமானத்தைப் பெருக்கவும், பெறுகின்ற வருமானம் சேமிக்கப்படுவதற்கும், அப்படி சேமிக்கப்படும் வருமானம் நல்ல முறையில் முதலீடு செய்யப்படுவதற்கும், அந்த முதலீடு செய்யப்படுவதற்கும் சேமிப்புகள் ஏற்படுவதற்கும் வங்கிகள் தங்கள் கொள்கைகளை அதற்கேற்ப வகுத்துக் கொள்வதற்கும் மாநில அரசுகள் கூட மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

நம்முடைய வங்கிகளையெல்லாம் நாம் தேசிய மயமாக்கினோம். தேசியமயமாக்குவது என்ற தத்துவத்திற்காக தேசியமயமாக்கப்படுவதில்லை. தேசியமயமாக்குவதன் வாயிலாக நாட்டு மக்களுக்கு ஒட்டுமொத்தமாக என்ன நன்மைகள் கிடைக்கின்றன என்பதை எதிர்பார்க்க வேண்டும். நாட்டிலே புழங்கப்படும் பணம் ஒருசில இடங்களில் மட்டும் தேங்கி விடாமல் புழங்குகின்ற நேரத்தில் ஒட்டுமொத்தமான சமுதாய, பொருளாதார விளைவுகளை நல்ல முறையில் ஏற்படுத்துகின்ற வகையில் அந்தப் பணம் செலவழிக்கப்பட வேண்டும், அந்தப் பணம் கையாளப்பட வேண்டுமென்பதற்காகத்தான் தேசியமயமாக்கினோமே தவிர ஏதோ ஒரு சில அரசியல் கட்சிகளினுடைய சித்தாந்தத்தை, அதை ஒரு புரட்சிகரமான சித்தாந்தம் என்று நாட்டுக்கு அறிவிக்கிறோம் என்று அந்த அரசியல் கட்சிகளின் திருப்திக்காக மட்டும் பேங்க் நேஷனலைசேஷன் என்று செய்துவிட்டு அதனால் நாட்டு மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை என்றால் இது வறட்டு சித்தாந்தமாகத்தான் இருக்குமே தவிர இது அரசியல் காரியமாகத்தான் இருக்குமே தவிர நாட்டிலே நாம் எதிர்பார்க்கின்ற ஜீவாதார அடிப்படையான சமுதாய, பொருளாதார சமூக மாறுதல்களை, புரட்சிகளை எதிர்பார்க்க முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

நம்முடைய குறிப்புகளிலே கொடுத்திருக்கிறார்கள். எத்துணை சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும், கிராமத் தொழில்களுக்கும் அவைகளின் வாயிலாகத் தம்மிடத்திலே தேக்கப்பட்டிருக்கின்ற பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் மிகவும் ஏமாற்றம் அடையக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. தயவு செய்து அதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட நம்முடைய வணிக வங்கிகளிலிருந்து சிறு தொழில்களை நடத்துபவர்கள், கிராமங்களிலேயிருக்கும் மக்கள் நிலையான பணம் பெறவும், குடிசைத் தொழில்களை மேம்பாடு செய்யவும் அந்தப் பணத்தை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் அந்த வங்கிகளை நடத்தக் கூடியவர்களுக்கு அறிவுரை வழங்கவும், அதற்கேற்ற முறையிலே மைய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை வழங்க வேண்டும். நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் அப்பொழுதுதான் நாம் எதிர்பார்க்கின்ற விளைவுகள் ஏற்பட முடியும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

நான் மற்ற விஷயங்களுக்கெல்லாம் போக விரும்பவில்லை. ஆனால், நான் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த தோல் தொழிலைப் பற்றி முதலிலே குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்குத் தோல் தொழில், இந்தத் தொழிற்சாலைகள், இந்த மாநிலத்தினுடைய மிக முக்கியமான one of the prem er Industries

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 23

of the country என்று கூடச் சொல்லலாம். இந்த நாட்டிலே, மிக முக்கியமான தொழிற்சாலைகளாக, தோல் தொழிற்சாலைகள் இருந்து வருகின்றன. இன்றைக்குக் கிராமத் தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டும், decentralisation of industrial base என்று சொல்லக்கூடிய வகையில், இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய தொழில் பரப்பளவை கிராமங்களுக்கு விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், ஏக போக உரிமைகளிடம் இந்தத் தோல் தொழிலை ஒப்படைக்கின்ற சூழ்நிலைதான் ஏற்படுகிறதே தவிர, சிறு சிறு தொழில்களாக, குடிசைத் தொழில்களாக நடைபெற்றுக் கொண்டிருந்த இந்தத் தோல் தொழில்கள், மைய அரசின் கொள்கை காரணமாக, அதிகமான முதலீடு செய்தால்தான் இந்தத் தொழிலை நடத்தமுடியும்.

பெரிய தொழிற்சாலையை வைத்தால்தான் இந்தத் தொழிலை நடத்த முடியும். அதுவும் ஏற்றுமதி செய்தால்தான் இந்த தொழிலை நடத்த முடியும் என்ற அளவில், வடபுலத்திலே ஆக்ரா, கான்பூரிலே இருக்கிற சில வெஸ்டட் இன்டரஸ்ட்ஸ், மைய அரசைக் கட்டாயப்படுத்துகின்ற காரணத்தால், அவர்களுடைய கட்டாயத்திற்கு ஆட்பட்டு, மைய அரசு சில முடிவுகளை எடுத்திருக்கின்றது.

தோல் ப்ராடக்ட்ஸ், ஃபினிஸ்ட் ப்ராடக்ட்ஸ் ஆகத்தானிருக்க வேண்டும் ; அதுவும் ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு இருக்க வேண்டுமென்ற கொள்கையை அறிவித்திருக்கிறது, இதனால், சிறிய தொழில்கள் இந்தத் தொழிலிலிருந்து தாமாகவே வெளியேற்றப்படுகின்ற நிலைமை இருந்து வருகிறது. இந்தத் தொழிலிலே, இன்றைக்கு மனோபலி ஏற்பட்டு வருகிறது. இதை மைய அரசும் மாநில அரசும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மைய அரசு சொல்லியிருக்கிறது, கிராமத் தொழில்களை வளர்க்க வேண்டும், குடிசைத் தொழிலை வளர்க்க வேண்டுமென்று. அப்படி சொல்லிக் கொண்டு, இந்தத் தோல் பதனிடும் தொழிலை நசுக்கி விடக்கூடிய முறையிலே அவர்களுடைய கொள்கை அமைந்திருக்குமானால், அது நாட்டுக்கு நல்லதல்ல. அவர்கள் கொண்டிருக்கிற கருத்துக்கு முரணானது, சொல்வதொன்று, செய்வதொன்றாகும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆக, மைய அரசு இதிலே அதிக அளவு கவனம் செலுத்தி, சிறிய தொழில்கள் நல்ல முறையில் நடைபெறும் வகையில், ஏற்கெனவே மைய அரசு வகுத்துள்ள கொள்கையிலே அடிப்படையான மாறுதலைக் கொண்டுவந்து, இந்தத் தொழில் வளரும் வகையில் மைய அரசு முடிவெடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதோடு, ஒரு முறையைக் கூடக் கையாளலாம். சிறிய தொழிற்சாலைகளிலே, ரூபாய் 2 இலட்சம், ரூபாய் 3 இலட்சம்,

1978 மார்ச் 23] [திரு. எம். ஏ. லத்தீப்]

ரூபாய் 5 இலட்சம் முதலீடு வைத்து செய்யக் கூடிய சாதாரண தோல் தொழிற்சாலைகளிலே, அவர்கள் செமி ஃபினிஸ்ட் கூட்ஸ் செய்யலாம் ; அதே நேரத்தில், ஃபினிஸ்ட் கூட்ஸ் செய்யக் கூடிய டானரீஸ், செமி ஃபினிஷ்ட் கூட்ஸ் செய்யக் கூடாது என்ற நிலைமையை உருவாக்கி, இந்த கருத்துக்களுக்கொப்ப, சிறிய தொழிற்சாலை அதிபர்கள், செமி ஃபினிஸ்ட் கூட்ஸ் தான் செய்ய வேண்டுமென்றும், பெரிய தொழிற்சாலை அதிபர்கள் ஃபினிஷ்ட் பிராடக்ட்ஸ் செய்ய வேண்டுமென்றும் கடுமையான வரையறையை வைத்தால், அவர்களும் காப்பாற்றப்படுவார்கள், இவர்களும் காப்பற்றப்படுவார்கள், ஏற்றுமதியையும் வளர்க்கும், இங்கே இருக்கின்ற சிறு தொழில்களும் தழைத்தோங்கும். அதற்கான முடிவுகளை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு இன்னொன்று, மற்ற தொழிற்சாலைகளுக்குப் போக விரும்பவில்லை, உப்பு தொழிற்சாலையைப்பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். உப்பளம் இன்றைக்கு மிக முக்கியமான, ஒரு மூலாதாரமான இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையாக இருந்து வருகிறது. இந்த உப்புத் தொழிற்சாலையில், வாலிநோக்கம் முக்கியமான பகுதி. அது இயற்கையான துறைமுகம் ஏற்படக்கூடிய அமைப்பு கொண்டிருக்கிற பகுதி. அந்தப் பகுதியிலே, உப்பளம் ஏற்படுத்தி, சிறந்த மீன்பிடி துறைமுகமாக மாற்ற வேண்டுமென்று பல்வேறு நேரங்களிலே இந்த அவையிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் கூட, பொதுக் கணக்காய்வுக் குழு தலைவனாக இருந்தபொழுது, பரிந்துரைகள் வழங்கப்பட்டிருப்பது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அந்த நோக்கத்தில்தான் வாலிநோக்கத்திலே உப்பளம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கே என்ன நடக்கிறதென்றால், ரேவண்ணா என்ற ஒரு அதிகாரி இருக்கிறார். அவர்கள் கன்னடத்தைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கிறேன்.

[முற்பகல் 9.30]

இந்த ரேவண்ணா அவர்கள் இந்த உப்பளத்தை முழுமையாக அதனுடைய வளர்ச்சியைத் தடுத்து விடவேண்டுமென்று செயல்படுகின்றாரோ என்று கூட இந்த நேரத்தில் எனக்கு சந்தேகம் வருகிறது. உதாரணமாக இன்றைக்கு வெளி மார்க்கெட்டிலே ஒரு டன் உப்பு 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், இந்த அதிகாரி என்ன, செய்து கொண்டிருக்கிறார் என்றால் 32 ரூபாய்க்கு தூத்துக்குடியிலே ஒரு தனியாரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு வெளியிலே 80 ரூபாய்க்கு விற்கப்படுகிற ஒரு டன் உப்பை 32 ரூபாய்க்கு விற்கிறார்கள்.

அது மட்டும் அல்ல. அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இந்த உப்பு உற்பத்தி தடை செய்யப்பட்டிருக்கிறது என்று அங்குள்ள மக்கள் பேசிக்கொள்கிறார்கள். சென்ற ஆண்டு 700 டன் அளவு

உற்பத்தி நடந்த அந்த இடத்தில் இந்த ஆண்டு உற்பத்தி நடக்கவில்லை. சுமார் 20,0000 டன் உற்பத்தியாகக்கூடிய சூழ்நிலை இருந்தும் அவர்கள் உற்பத்தியைத் தடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு அவர் மீது சொல்லப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, இப்படித்தான் வேப்பிலோடை என்ற உப்பளம் அரசாங்கத்திடம் இருந்தது அந்த உப்பலோடையை அரசாங்கம் சரியாக நடத்தவில்லை என்று உற்பத்தியைக் குறைத்து தனியாருக்குக் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினார்கள். அதே சூழ்நிலையை இதிலே உற்பத்தி இல்லை என்று சொல்லி இந்த வாலிநோக்கம் உப்பளத்தை அந்த அதிகாரி ஏற்படுத்தியிருக்கிறார்கள். தனியாரோடு ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு 80 ரூபாய்க்கு விற்கிற உப்பை 32 ரூபாய்க்கு குறைத்து அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த உற்பத்தியைக் குறைத்து காட்டவேண்டும் என்பதற்காகவே குறைத்துக் காட்டி, இந்த உப்பளத்தைத் தனியாருக்குக் கொடுக்க வேண்டும் என்று திட்டம் இட்டு செய்கிறார்கள். இது பப்ளிக் சீக்ரெட் என்று சொல்லப்படுகிற, பொதுமக்கள் எல்லாம் பேசப்படுகின்ற ரகசியமாக இருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இந்த உப்பளத்தைக் காப்பதற்கும் அதனுடைய வளர்ச்சியை மேன்மேலும் ஓங்கச் செய்வதற்கும் அந்த தொழிலிலே கிடைக்கின்ற உப்பை அடிப்படையாகக் கொண்டு மற்ற ரசாயன தொழில்களைத் துவங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குள்ளாக இந்த ரேவண்ணா என்கிற அதிகாரியைப் பற்றி விசாரணை செய்ய வேண்டும். அவரை இங்கிருந்து மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன் (மணி அடிக்கப்பட்டது).

கடைசியாக, சேலத்திலே சூரமங்கலம் கிராமத்திலே கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை இருக்கிறது. தமிழ்நாட்டிலேயே கயிறு தயாரிக்கும் தொழில் முக்கியமான தொழிலாக இருந்து வருகிறது. அதற்கு மூலப் பொருள் கேரளாவிலிருந்துதான் வர வேண்டும் என்று சொல்லுகிறார்கள் ஆனால் கேரள அரசாங்கம் அந்த நாரை இறக்குமதி செய்வதற்குத் தடை விதித்திருக்கிறது என்று சொல்கிறார்கள். சேலம் பகுதிகளிலும், மற்றப் பகுதிகளிலும் ஏராளமான பேர்கள் வேலைகளை இழக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

நாகர்கோவிலிலே 1973 ஆம் ஆண்டிலே மெக்கனைஸ்டு காயிர் இன்டஸ்டிரி ஏற்படுத்தத் திட்டம் இட்டார்கள். ஆனால் அது நடைபெறவில்லை. அண்மையிலே கேரள சட்டசபையிலே இதற்கு விரோதமாக ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். நாகர்கோவிலிலே தொழிற்சாலையை

நிறுவக்கூடாது என்று அவர்கள் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி நாம் அக்கறை எடுத்துக் கொள்வதிலே நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நம்முடைய மக்களைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, அரசாங்கம் இந்த காயிர் இன்டஸ்டிரி அமைப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, தொழில், தொழில் வளர்ச்சி மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழ் நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதற்குக் காரணம், கடந்த ஆண்டிலே தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மந்த நிலை தான் என்பதை மன்றத்தில் உள்ள அனைவரும் ஒப்புக்கொள்கிற ஒரு கருத்தாக இருக்கிறது என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. இந்த அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள் எதையும் இங்கே அறிவிக்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தின் பொருளாதாரம் பின் தங்கிய நிலையில் இருப்பதை சீர் செய்ய வேண்டுமானால் கிராமப்புரத்தில் தொழில் துவக்குவதன் மூலம் கிராமப் பொருளாதாரத்தை நிச்சயம் சீர் செய்ய முடியும் என்பதை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

படித்தவர்கள், தொழில் பயிற்சி பெற்றவர்கள், இன்றையதினம் தொழில் துவங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் நிலையில் இந்த அரசாங்கம் சில திட்டங்களை அறிவித்தால் நிச்சயம் தொழில் நுட்ப வல்லுநர்களை இந்த மாநிலத்தில் நாம் அதிகமாகக் காணமுடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் இருக்கும் நிலைமை என்ன என்றால், தொழில் நுட்ப பயிர்ச்சி பெற்றவர்கள் எல்லாம் வேலை தேடி அரபு நாடுகளுக்குச் செல்லும் அவல நிலைமையை நாம் காண முடிகிறது. எனவே, தமிழக அரசு இது போன்ற தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு ஏதாவது மானியம் வழங்கி அவர்களாகவே ஏதாவது சிறு தொழில் செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இன்றையதினம் தமிழகத்தில் ஆர்வத்துடன் இருக்கும் படித்த தொழில் வல்லுநர்கள் எல்லாம் டிட்கோ போன்ற நிறுவனங்களை அணுகினால், அந்த நிறுவனங்களில் உள்ளவர்கள் தொழில் துவங்க

வருபவர்களிடம் என்ன கேட்கிறார்கள் என்றால், உங்களுக்கு ரா மெட்டிரியல்ஸ், மின்சாரம் தடையின்றி கிடைக்குமா என்பது தான். ரா மெட்டிரியல்ஸ், மின்சாரம் இவற்றிற்கு ஏதாவது வழி வகையை இந்த அரசு செய்து இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. அங்கே எளிதான முறையில் கடன் பெறும் வசதிகளை ஏற்படுத்தித் தந்து இருக்கிறதா என்றால், அதையும் அங்கே காணமுடியவில்லை. எனவே, டிட்கோ போன்ற நிறுவனங்கள் கிராமங்களில் தொழில் நுட்ப வசதிகளை அளித்து அவர்களுக்கு தொழிற்சாலைகள் துவங்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் முனைவர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் தகவல் தருவதற்காக தகவல் வழங்கும் பணிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆனால் அதைக்கூட தமிழக அரசு நடத்துகின்ற 'தமிழ் அரசு' பத்திரிகை மூலம் வரும் விளம்பரங்களில் போட்டால், கிராமங்களில் இருக்கும் வாலிபர்கள் தொழில் துவங்க வசதியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இன்றையதினம் திருச்சியில் இருக்கும் 'சின்தடிக் ஜெம்' போன்ற கூட்டுறவுத் தொழிற்சாலைகள் எல்லாம் சரியான வகையில் இயங்கவில்லை என்று புகார் கூறப்படுகிறது. அவற்றை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும். அங்கே தயார் செய்யப்படும் செயற்கை வைரத்திற்கு வெளி நாடுகளில் நல்ல கிராக்கி இருப்பதாகவும், அந்நியச் செலவாணி ஈட்டலாம் என்றும் தெரிகிறது. ஆகவே, தமிழக அரசு இது போன்ற தொழிற்சாலைகள் வளரக்கூடிய வகையில் முயற்சி எடுத்தால், தொழில் துறை வளர வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே பணிபுரியும் 'சின்தடிக் ஜெம்' கட்டிங் தொழிலாளர்களுக்கு சரியான முறையில் உழைப்புக்கு ஏற்ற ஊதியம், வருமானம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதுவும் கூட்டுறவுத் துறை என்ற அடிப்படையில் அங்கே செயல்படும் அந்தத் தொழிற்சாலையை அரசாங்கம் நல்ல முறையில் நிர்வாகம் செய்தால் அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு, நல்ல முறையில் பலன் கிட்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு எந்தவிதமான திட்டங்களையும் அறிவிக்காமல் ஒத்தி வைத்து இருக்கிறது என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் தஞ்சை மாவட்டம் விவசாயத்தையே நம்பி வாழ்கிறது. குறிப்பாக, இன்றையதினம் காவிரியில் தண்ணீர் வரவில்லை என்பதால், தஞ்சை மாவட்ட விவசாயிகளின் நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு,

அந்த விவசாயத்தையே நம்பி இருக்கும் மக்களுக்கு ஒரு மாற்றுத் தொழில் செய்கிற வகையில் அங்கே சில தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால், தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் மக்களின் வாழ்வுக்கு நிரந்தரமான பரிகாரத்தைக் காணமுடியும் என்று நான் நம்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் விவசாயிகளுக்குத் தேவையான விவசாயக் கருவிகளை அதே தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலை துவங்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் உரத் தொழிற்சாலை, பூச்சு மருந்து உற்பத்தித் தொழிற்சாலை ஏற்படுத்தினால், அந்த மாவட்டத்திற்குத் தேவையான உரம், பூச்சி மருந்து எளிதாகக் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய தொகுதியான திருவிடைமருதூரில் பட்டு நெசவுத் தொழிலை மேற்கொண்டவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எல்லாம் தேவையான பட்டு நூல், போரா போன்றவைகளையெல்லாம் கருநாடக மாநிலத்திற்குச் சென்று வாங்கி வரவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த அரசு கூட்டுறவுத் துறையில் அதை விநியோகம் செய்தால், தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் பட்டு நூல் நெசவு செய்பவர்கள் நல்ல பலன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–40.)

என்னுடைய தொகுதியில் நரசிங்கன்பேட்டை என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கே நாதஸ்வர கருவிகளை தயாரிக்கும் கலைஞர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இந்தியாவிலேயே அந்த ஒரே ஒரு ஊரில்தான் இந்த நாதஸ்வர கருவிகளை மிகச் சிறப்பான முறையிலே செய்கிறார்கள். அங்கு செய்யப்படும் இந்தக் கருவிகளுக்கு இந்தியா முழுவதும் நல்ல வரவேற்பு இருக்கிறது. ஆகவே, அந்தக் கலைஞர்களை ஊக்குவித்து, இந்தத் தொழிலுக்கு மேலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அங்கே தொன்னை செய்தல், பாய் முடைதல் போன்ற குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருப்போர் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி, நிதி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. இராமலிங்கம்] [1978 மார்ச் 23

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சிறு தொழில் செய்கின்றவர்கள் கடன் பெறவேண்டுமென்றால் அவர்களுக்குக் கடன் எளிதில் கிடைப்பதில்லை. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் சிறுதொழில் தொடங்குவோருக்கு கடன் கொடுக்கப்படும், உதவி செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் சிறு தொழில் தொடங்குவதற்கு கடன் கேட்கப் போனால் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மேலும் கடன் கேட்பவருடைய தொழில் திட்டத்தை வைத்து கடன் வழங்குவதில்லை. மூன்றாம் நபரிடமிருந்து காரண்டி சர்டிபிகேட் அல்லது செக்யூரிட்டி கொடுத்தால்தான் கடன் வழங்க முன்வருகிறார்கள். அதுவும் காலந்தாழ்த்தி வழங்குகிறார்கள். அந்த மாதிரியான சிரமங்களை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் தொடங்குவதற்கு பெருமளவில் இயந்திரங்கள், மின்சாரங்கள், மூலப் பொருள்கள் இவைகளையெல்லாம் அரசே வழங்க முன்வந்தால் தமிழ் நாட்டில் குறிப்பாக கிராமப் புறங்களில் தொழில் வளர்ச்சியடையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் தொழிலில் பல சங்கடங்கள் இருக்கின்றன. பருவ மாறுதல்களை ஒட்டி, கைத்தறித் துணி தேங்கி விடுவதால் அவர்கள் சரியான முறையில் நிரந்தர வாழ்வு வாழ வழியில்லை. எனவே, கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் அந்த பகுதியில் பவர்லூம் இன்டஸ்டிரீஸ் தொடங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இன்றையதினம் தமிழ் நாட்டில் இருக்கிற, குறிப்பாக கிராமங்களில் இருக்கிற பொருளாதார சீர்கேட்டை மாற்றியமைக்க வேண்டுமானால் இந்த அரசு உடனடியாக கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கூறி, விடைபெறுகிறேன்.. வணக்கம்.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியங்களின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பின்னால் தொழில் துறையில் புதிய புரட்சிகளை உண்டாக்க வேண்டுமென்ற ஆர்வம் இந்த ஆட்சிக்கு இருக்கிறது. இதனுடைய பல்வேறு அறிகுறிகள் இந்த அறிக்கை மிகத் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றன என்பதை முதலில் யில் எடுத்துச் சொல்ல விரும்புகிறன்.

197.8 மார்ச் 23] [திரு. எஸ். ஆர். இராதா]

தொழிலைப் பொறுத்தவரையில், மிகப்பெருமளவிற்கு தமிழகத்தை தொழில் நகரமாக மாற்ற வேண்டுமென்பதே இந்த ஆட்சியின் விருப்பம் என்பதை அறிக்கைகள் தெளிவாக விளங்குகின்றன. ஏறத்தாழ 6,400 சிறு தொழில்களைத் தொடங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதும், 8,600 தொழில்கள் தனியார் துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்ற அறிவிப்பும் இதிலே காணப்படுகின்ற நேரத்தில், எந்த அளவுக்கு இதிலே ஆர்வம் காட்டப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து, நாம் பாராட்டியே ஆகவேண்டும்.

1977 டிசம்பர் முடிய 6 மாத காலத்தில் ஏறத்தாழ 27 கோடி ரூபாய் பல்வேறு தொழில் துறைக்கு உதவி செய்யப்பட்டிருக்கிறது என்பதோடு, அதனால் பயன்பெறுகின்றவர்கள் 49,000 பேர் என்ற கணக்கும் இருப்பது உள்ளபடியே பாராட்ட வேண்டிய ஒன்று ஆகும்.

சிறு தொழில் துறைக்கு மட்டும் 180 தொழில்கள் தான் என்று அனுமதிக்கப்பட்டிருந்த நிலைமை இன்றைக்கு மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக 504 சிறு தொழில்கள் சிறு தொழில் துறைக்கு என்று செய்திருப்பது மிக மிக வரவேற்கத்தக்க ஒன்று என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சிறு தொழில் துறை வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் இந்த அரசு எந்த அளவுக்கு ஆர்வம் காட்டுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டுதான். 180 சிறு தொழில்கள் என்றிருந்ததை, 504 தொழில்கள் சிறு தொழில் துறைக்கு என்று இன்றைக்கு மாற்றியிருப்பதை நாம் வரவேற்று ஆகவேண்டும்.

நான் அதை வரவேற்கின்ற அதே நேரத்தில் அரசினுடைய கவனத்தில் ஒன்றை வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். சிறு தொழில்கள் தயாரிக்கின்ற பல்வேறு பொருள்கள் அரசுத் துறையிலே இருந்தாலும் சரி, தனியார் துறையிலே இருந்தாலும் சரி ,அதை வாங்க வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தியாக வேண்டும் சில நேரங்களிலே பார்த்தால் தனியார் துறையிலே தயாரிக்கப்படுகின்ற பொருள்கள் விலை குறைந்திருக்கின்றது என்ற ஒரே காரணத்திற்காக வாங்கப்படுகிறது. ஆனால், சிறு தொழில் மூலமாக தயாரிக்கப்படுகின்ற பொருள்களை அரசுத் தொழிலாக இருந்தாலும் அந்தப் பொருள்களை அரசு துறையிலே கூட வாங்க மறுக்கின்ற நிலைமை இருப்பதை நாம் உடனடியாகக் கவனித்து, அதை மாற்றவேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த நண்பர் இராமலிங்கம் அவர்க்ள் மிகவும் குறையாகச் சொன்னார்கள். என்னுடைய மாவட்டம் அதிகமான அளவிற்கு

கவனிக்கப்படவில்லை என்பதை எடுத்துச் சொன்னார்கள். நம் மாவட்டம் என்ற அளவில் நான் அதை முழுமையாக வரவேற்க முடியவில்லை என்றாலும், அதிலே தஞ்சை மாவட்டத்திற்கு என்று இதுவரையிலும் எதுவுமே இல்லாத நிலைமாறி இன்றைக்கு தஞ்சை மாவட்டமும் கவனிக்கப்படுகிறது என்பதற்கு அறிகுறியாக ஒன்றிரண்டு இடங்களில் தஞ்சை மாவட்டத்திற்கு என்றும் சில தொழில் திட்டங்கள் வந்திருப்பதை நண்பர் இராமலிங்கம் பார்க்கவில்லை என்று நான் சொல்ல மாட்டேன். அவர் வேண்டாமென்று விட்டிருக்கிறார் என்றுதான் நான் நினைக்கிறேன்.

அவரும் நானும் சேர்ந்திருக்கின்ற குடந்தையிலேதான் ஏறத்தாழ 60 இலட்ச ரூபாயில் முசுக்கொட்டை நாற்றங்கால் பயிரிடுவதற்கு ஒரு பண்ணை ஆரம்பிப்பதற்கு இன்றைக்கு அரசு முன்வந்திருப்பது பாராட்ட வேண்டியதாகும். ஏறத்தாழ ஒரு 30 ஆண்டுகாலமாகப் பார்த்தால் அரசுத் துறையிலே தொழில் என்பது இல்லாத அந்தப் பகுதியிலே இன்றைக்கு ஏதோ ஒரு தொழில் வருகின்றது என்ற அந்த உணர்வு இருக்கிறது. அதை நாம் வரவேற்கவேண்டும்.

ஆனால் விவசாயத்தை நம்பி இருக்கின்ற எங்களுடைய மாவட்டத்தில் பல்வேறு தொழில்கள் ஆரம்பித்தால்தான் நிச்சயமாக விவசாயத்தை மட்டும் நம்பி இருக்கின்ற அந்த மாவட்டத்தை முன்னேற்ற முடியும் என்பதை நான் இர்த நேரத்திலே சொல்லிக் கொள்வேன்.

நான் இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று நினைக்கிறேன். மத்திய அரசு தருகின்ற உதவித் தொகை பல மாவட்டங்களிலே கிடைக்கின்ற நேரத்தில், தஞ்சை மாவட்டத்திற்கு அது வழங்கப்படவில்லை என்று நினைக்கின்ற நேரத்தில், அது ஒரு வகையிலே கொஞ்சம் வருத்தமாகத் தான் இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களை இந்த உதவித் தொகை எங்கள் மாவட்டத்திற்கும் கொடுக்க வழி செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்வேன்.

அதேபோல, இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே அதிகமாக நெல் மட்டும் பயிரிடப்பட்டு வந்த நிலைமை மாறி அதிகமாக பருத்தியையும் பயிரிடுகின்ற நிலைமை வந்திருக்கிறது. எங்கள் மாவட்டத்திலே தயாரிக்கப்படுகின்ற அந்தப் பருத்தி இன்றைக்கு எங்கள் மாவட்டத்திலேயே பயன்படுத்தப்படவில்லை. கோவை மாவட்டத்தை நம்பித்தான் நாங்கள் வாழவேண்டிய நிலைமை இருக்கிறது. கோவை மாவட்டத்திலே இருக்கின்ற வியாபாரி என்றைக்கு வருவார், என்றைக்குத்தான் உற்பத்தி செய்

யப்படுகின்ற அந்தப் பருத்தி விற்பனை ஆகும் என்றிருக்கும் நிலைமையை உடனடியாக மாற்றியாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலை அங்கே ஆரம்பிப்பதற்கு வழிவகை இருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலே ஏராளமான நிலங்களிலே பயிரிடப்பட்டு இன்று கோடிக்கணக்கான ரூபாய்க்கு கோயம்புத்தூருக்கு எடுத்துச் செல்லப்படுகின்ற அந்தப்பருத்தியை தஞ்சை மாவட்டத்திலேயே பயன்படுத்தினால் மிகவும் அதிகமான அளவிற்கு ஏழை எளிய விவசாயிகளுக்கு வாழ்வு கிடைக்கும் என்பதை நான இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வேன்.

அதேபோல ஈச்சங்கொட்டையில் கோடிக்கணக்கான ரூபாய்க்கு வெளி நாட்டிலேயிருந்து மாடுகள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாடுகளை வைத்துக்கொண்டு ஏராளமாக பால் உற்பத்தி செய்வதற்கு வசதி இருக்கிறது. இந்தப் பாலைக் கொண்டு ஒரு நவீன தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு வழிவகை அங்கே இருக்கிறது. அதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல குருங்குளம் சர்க்கரை ஆலையில் கழிவுப்பொருள்கள் ஏராளமாக வீணாகிக்கொண்டிருக்கிறது. அவ்வாறு வீணாகின்ற அந்தக் கழிவுப்பொருளை எடுத்துக்கொண்டு அந்தப் பகுதியிலே ஏராளமாக தரிசு நிலங்கள் இருக்கின்றன, ஒரு அருமையான காகித ஆலையைத் துவக்குவதற்கு வழி இருக்கிறது. இன்றைக்கு கோடிக்கணக்கான ரூபாயிலே காகித ஆலைகளை அமைப்பதற்கு இந்த அரசுமுன் வந்திருக்கின்ற இந்த நேரத்தில் நான் பணிவோடு மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வேன், எங்கள் மாவட்டத்தையும் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். நீங்களும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் விவசாயத்தை மட்டும் நம்பி இருக்கின்ற எங்களது மாவட்டத்தைக் கொஞ்சம் முன்னேற்ற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்வேன்.

நான் இதையெல்லாம் சொல்கின்ற நேரத்தில் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 9-50.)

இன்றைக்கு எங்களுடைய மாவட்டம் எந்தளவிற்கு பின்தங்கியிருக்கிறது என்பதை நாங்கள் பல்வேறு நேரங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதனை மாற்றி விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிற மாவட்டமாக இல்லாமல் தொழில் துறையில் முன்னேறுகிற அளவிற்கு ஒரு நிலையை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1978 மார்ச் 23

இந்த அரசு தொழில் துறையில் காட்டுகிற ஆர்வத்தைப் பாராட்டுகிற அதேநேரத்தில் ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். நம் பழைய அரசால் தொழில் துறையில் எவ்வளவு ஆர்வம் காட்டப்பட்டிருக்கிறது என்பதை ஒரே ஒரு உதாரணத்தை வைத்து எடுத்துச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

ஒரு நேரத்தில், தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று அனுமதி கேட்பதற்கு விண்ணப்பிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்ட நேரத்தில் பழைய அரசு ஒரு நல்ல காரியத்தைச் செய்தது ஒரு தொழிற்சாலைக்கு விண்ணப்பமே கேட்காமல், விண்ணப்பதாரரே கேட்காமல் ஒரு தொழிலுக்கு ஒரு அனுமதி வழங்கப்பட்டது. அது எந்தத் தொழில் என்று நீங்கள் கேட்கலாம். மிகுந்த ஆர்வத்தோடு தொழில் வளர்ச்சியில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்று நினைக்கலாம். எந்தத் தொழில் என்று சொன்னால், பீர் தயாரிப்பதற்கு விண்ணப்பம் இல்லாமல், விண்ணப்பதாரர் இல்லாமல் ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அந்த அனுமதிபற்றி இந்தத் தொழில் துறை இலாகாவில் இருக்கிற பல்வேறு விவகாரங்களுக்கு—நான் அந்த விவரங்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். இதே விவகாரம் பற்றித்தான் இதற்கு முன்னால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டார்கள். நான் அதைச் சொல்வதற்குக் காரணம், அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் இந்த விவகாரத்தில் கடைசியில் இருக்கிற ஒரு வரியை மட்டும்தான் படித்துச் சொன்னார்கள். அவர்கள் சொல்கிற நேரத்தில் ஒன்றைப் பேசினார்கள். ஆதாரம் இல்லாமல் சொல்கிறார்கள், அந்தக் குற்றச்சாட்டுக்கு எந்தவகையிலும் ஆதாரம் இல்லை என்று.

அவர்கள் சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டு ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னவுடன் பார்த்தேன், எப்படி இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது, ஆதாரம் இல்லாமல் சொல்கிறார்கள் என்று சொல்கிறார்களே என்று பார்த்தேன். அதில் மிகத் தெளிவாக இருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். அது பீர் தயாரிக்கிற தொழிற்சாலைக்கு அனுமதி வழங்குவதற்காக ஏற்பட்ட விவகாரம். இதே சட்டமன்றத்தில் நமது புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருந்த மகஜர் மீது குடியரசுத் தலைவர் அவர்கள் விளக்கம் கோரப்பட்டிருக்கிறது. இதே மன்றத்தில் அன்றைக்கு இருந்த அரசு, விலாஎலும்பை முறிக்கிற, முதுகெலும்பை முறிக்கிற பதில் என்ற வகையில் ஒரு புத்தகத்தைத் தயாரித்து அத்தனை பேர்களுக்கும் வழங்கப்பட்டது. இந்த மன்றத்தில்

1978 மார்ச் 23]. [திரு. எஸ். ஆர். இராதா]

கூட தெரிவிக்கப்பட்டது. அந்தப் புத்தகத்தில் மிகத் தெளிவாகச் சொல்லியிருந்தார்கள். பீர் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்படுவதற்கு விண்ணப்பித்துக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் திரு. ஏ. எல். சீனிவாசன் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதே வார்த்தை, சட்டமன்றத்தில் தெரிவித்த இந்த வார்த்தை பின்னால் விசாரணைக்கு வருகிற நேரத்தில், சர்க்காரியா அவர்கள் விசாரிக்கிற நேரத்தில் அவர்கள் விண்ணப்பித்துக்கொண்டார்களா என்பதற்கு—சர்க்காரியா அவர்கள் விசாரித்தார்கள், விசாரிக்கிற நேரத்தில் சர்க்காரியா அவர்கள் ரிப்போர்ட்டில், அவர்களுடைய முதல் ரிப்போர்ட்டில் 244-வது பக்கத்தில் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

Mr. A. L. Srinivasan was not one of the 30 applicants. விண்ணப்பதாரர்களில் ஏ. எல். சீனிவாசன் ஒரு விண்ணப்பதாரர் அல்ல என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் ஏ. எல். சீனிவாசனைப் பற்றி சர்க்காரியா ரிப்போர்ட்டில் 246-வது பக்கத்தில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"Mr. A. L. Srinivasan was not a person of sound financial standing and the suggestion of his name for being invited for discussion when he had not even applied, certainly smacks of favouritism." என்று இதில் 'பேவரிட்டிஸம்' செய்யப்பட்டிருக்கிறது என்று அந்த ரிப்போர்ட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கலைஞர் அவர்கள் கடைசியில் இருக்கிற ஒரு வார்த்தையை மட்டும் சொல்லி நான் இதில் குற்றவாளி அல்ல என்று சொன்னார்கள்.

ஆனால் சர்க்காரியா அவர்களின் ரிப்போர்ட்டில் பல்வேறு யிடங்களில் அந்தக் குற்றச்சாட்டுக்கான ஆதாரங்கள் இருக்கின்றன என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இன்று சொல்கிற ஒவ்வொரு குற்றச்சாட்டும் ஆதாரம் இல்லாமல் நாங்கள் சொல்கிறோம் என்று எடுத்துச் சொல்கிறவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வேன். நீங்கள் முழு உண்மைகளையும் சொல்ல வேண்டும். அப்படியானால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் ஒரு பகுதியைச் சொல்லி மற்றப் பகுதிகளை விட்டு விட்டு நாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று சொல்கிற நேரத்தில்தான் எங்கள் உணர்வுகள் என்ன, அப்படி நாங்கள் என்ன தவறு செய்து விட்டோமா என்ற உணர்வு வருகிறது.

இன்றைக்கு இருக்கிற நிலைமை என்ன? குற்றச்சாட்டுகள் ஏராளமாக இருந்தன. அந்தக் குற்றச்சாட்டுகளை சொல்லுகின்ற நேரத்தில் பல்வேறு மெம்பர்களுக்கு கோபம் வருகிறது.

கோபம் வருகிற நண்பர்களுக்குச் சொல்லுகிறேன். நாங்கள் குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறபோது அதற்கு ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பாருங்கள்.

உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்லுகிறேன். நான்கு நாட்களுக்கு முன் புகைவண்டியில் சென்று கொண்டிருந்தேன். பத்து பேர்கள் செங்கற்பட்டில் ஏறினார்கள். அவர்கள் என்.ஜி.ஓ.க்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். என். ஜி. ஓ.க்கள் என்று சொல்லுகின்ற இவர்கள் புகை வண்டியில் பேசிக்கொள்கின்ற நேரத்தில் யாரைப்பற்றி பேசுகிறார்கள். எங்களுடைய முதலமைச்சர் அவர்களைப்பற்றி பேசுகிறார்கள். என்ன பேசுகிறார்கள் தெரியுமா ? தரக்குறைவான வார்த்தைகளினால் பேசுகிறார்கள், கேவலமான வார்த்தைகளினால் பேசுகிறார்கள். அதைக் கூட நான் அனுமதிக்க தயாராக இருக்கிறேன். ஆனால் அவர்கள் அதிகமாகப் பேசிக்கொண்டது, அவர்களுடைய இனத்தைப் பற்றி, ஜாதியைப்பற்றி கேவலமாகப் பேசுகின்ற நேரத்தில் எங்களுக்கெல்லாம் கோபம் வருகிறது. இனத்தைப்பற்றிச் சொல்லுவதற்கு அல்லது ஜாதியைப்பற்றிச் சொல்லுவதற்கு ஏதாவது யோக்கியதை இருக்கவேண்டும். யோக்கியதை இழந்தவர்கள் இதைப்பற்றி பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது ? இந்தப் பிரச்சினையை கிளப்பி நாட்டில் ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்படி நினைக்கின்றவர்களுக்கு சொல்லுவேன், நிச்சயமாக தமிழ் நாட்டில் அந்தக் குழப்பம் வராது என்பதை மனதார வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்வேன்.

இன்றைக்கு என். ஜி. ஓ.க்களாக இருக்கின்றவர்களுக்கு இவ்விதம் பேசுவதற்கு எப்படி துணிவு வருகிறது என்று சொன்னால், இதையெல்லாம் யார் தூண்டி விடுகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அவர்களைத் தூண்டிவிட்டு இப்படியெல்லாம் பேசுவதின் மூலமாக நாட்டு மக்கள் மாறி விடுவார்கள் என்று கருதுகிறார்கள். மக்களைப் பொறுத்தவரையிலும், ஏழை எளிய மக்களுக்குத்தான் இந்த அரசு இருந்து வருகிறது என்பதை நாம் இன்றைக்குப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

எந்தப் போராட்டமாக இருந்தாலும் சரி, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, இந்த அரசு நல்லெண்ணத்தோடு, நாணயத்தோடு நடந்து கொள்கிறது என்பதற்கு பல்வேறு எடுத்துக் காட்டுகளை நாம் சொல்லியாக வேண்டும். அந்த அளவில் சிறப்பாக பணியாற்றி வருகின்றது என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அந்த முறையில் இந்த நாட்டு மக்கள் அரசைப் பாராட்டுகிறார்கள். இந்த அரசை வாழ்த்துகிறார்கள்.

அந்த அளவில் தொழில் துறையில் ஒரு புதிய புரட்சியை உண்டாக்குவதற்கான பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் எல்லாம் ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு, தமிழ் நாட்டை ஒரு சிறந்த தொழில் நகரமாக மாற்றுகின்ற அளவில் இந்த அரசு செயல்படும். அவ்வாறு செயல்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தொழில்துறை மான்யத்தில் பேசுகின்ற காலத்தில் சென்ற முறை கூட நான் சொன்னேன். குறிப்பாக தொழில் துறை என்பது அரிசன சமுதாய மக்கள், பின்தங்கிய சமுதாய மக்கள், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் இவர்களுக்கு எட்டாக் கனியாக இருந்து வருகிறது என்று சொன்னேன். அதன் அடிப்படையில் இப்போது பேச இருக்கிறேன்.

குறிப்பாக, தொழில்துறை சம்பந்தப்பட்ட வரையில், லைசன்ஸ்கள் வழங்குவது, பெர்மிட் வழங்குவது இவைகளில் இந்த சமுதாய மக்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும், அப்படிச் செய்வதின் மூலமாக, எந்த நலிந்த மக்களை முன்னேற்ற வேண்டும் என்று நாம் கொள்கைகளை வைத்திருக்கின்றோமோ அந்தக் கொள்கைகளுக்கு மேலும் வலியூட்டுகின்ற வகையில் முன்னுரிமை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக, தொழில் துறையில், கிராமங்கள் எல்லாம் தொழில் நகரமாக மாற வேண்டும்......

"It is to be decentralised to the backward areas"
என்று சொல்லக்கூடிய அளவுக்கு பின்தங்கிய பகுதிகளில் தொழில்கள் எல்லாம் டீ-சென்ட்ரலைஸ் செய்யவேண்டும், அந்தவிதத்தில் மாற்றப்பட வேண்டும்.

குறிப்பாக, ஒரு மாவட்டத்திற்கு ஒரு தொழிற்சாலையாவது இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரும் பெரும் தொழிற்சாலைகள் எல்லாம் தனியாரிடத்தில் இருப்பதைவிட, அந்தப் பெரும் தொழிற்சாலைகள் எல்லாம் தேசீய உடைமையாக்கப்பட்டு, இந்த நாட்டில் தொழிலுக்கு முக்கியத்துவம் தருகின்ற வகையில், இப்படிப்பட்ட தொழில்களை எல்லாம் தேசீயமயமாக்குவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். குறிப்பாக, கிராமப் பகுதிகளுக்கும், மற்றபடி முனிசிபாலிட்டி, ஸிட்டி பஞ்சாயத்துக்கள் என்று சொல்லப்

படுகின்ற நகரப் பஞ்சாயத்துக்களுக்கும், தொழில்களுக்கு லைசன்ஸ் தருகின்றபோது, சில விதிகளை சில கட்டுப்பாடுகளை வைத்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-00)

பில்டிங் பிளான் இப்படித்தான் இருக்க வேண்டும், கட்டடங்கள் இப்படித்தான் அமைக்கப்பட வேண்டும், அது இண்டஸ்ட்ரியல் ஏரியாவாக இருக்க வேண்டும், இன்னும் இதுபோன்ற விரிவான கட்டுப்பாடுகளையெல்லாம் விதித்து இருக்கிறார்கள். இந்தக் கட்டுப்பாடுகளை வேண்டுமானால் நகர்ப்புறங்களிலே அமல் ஆக்கலாம். ஆனால் கிராமப் பகுதிகளிலேயும், முனிசிபாலிடி பகுதிகளிலேயும் உள்ள இடங்களிலே உரிமங்கள் தொழில்களுக்காக தருகின்றபோது இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது சாலச் சிறந்ததாக இருக்கும்.

ஆந்திர மாநிலத்திற்கு நாங்கள் எஸ்டிமேட் குழுவின் மூலமாகச் சென்ற போது அங்கே டெக்னோகிராட்ஸ், படித்த பட்டதாரிகளுக்கு எப்படி இங்கே நாம் ஒரு இடத்தை இண்டஸ்ட்ரியல் யூனிட் என்று வைத்து இருக்கிறோமோ—அதைப்போன்று அங்கே படித்தவர்கள் ஆங்காங்கே சிறு சிறு தொழில்களை, உதாரணமாக சைக்கிள் செய்கின்ற தொழிற்சாலைகள் அல்லது ஸ்பேர் பார்ட்ஸ் செய்கின்ற தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு தனியாக உத்திரவுகளை வழங்கி, அரசாங்கம் அதற்காக உதவிகளைச் செய்து குறைந்த வாடகையிலே டென்ட்களைப் போட்டு தொழில்களை ஏற்படுத்துகிறார்கள்.

அந்த முறையிலே தமிழகத்திலேயும் தனிப்பட்டவர்கள் எஞ்சினியர்கள், படித்தவர்கள் சாதாரணப் பட்டதாரிகள் தொழில்களை நடத்துவதற்கு வேண்டிய தொழில் கூடங்களை ஏற்படுத்துவதன் மூலமாக அந்தப் பகுதிகளுக்கு பிரத்தியேகமான சலுகைகளை தருவதன் மூலமாக படித்தவர்களிடத்திலே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற அதே நேரத்திலே தொழில்களை அதிகமாக்கக்கூடிய முறையிலே, பாலிடெக்னிக்குகள், ஐ.டி.ஐ.-க்கள் போன்றவைகளை அதிகமாக ஆரம்பித்து அவைகளிலே படிக்க விரும்புகின்ற மாணவர்களைச் சேர்ப்பதன் மூலமாக—அவர்கள் தன் காலால் நிற்கக்கூடிய அளவிற்கு—தொழில்களைத் தெரிந்து கொள்வதற்குத் தக்கவாறு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் எல்லாம் அரசாங்கத்திலே தங்களுக்கு வேலை வேண்டும் என்று நிர்ப்பந்திக்காத

முறையிலே வேலை வாய்ப்புப் பெறுகின்ற வகையிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

எங்கள் வட ஆற்காடு மாவட்டத்திலே வாட்டர் பொல்லுஷன் என்று சொன்னோம். அங்கே அநேக டேனரிஸ் இருப்பதால் அந்தத் தண்ணீர் சுத்தப்படுத்தப்படாத காரணத்தால் அது தாராளமாகப் பூமியிலே ஊறிவிடுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அந்தத் தண்ணீரினுடைய தன்மை கெடுகிறது, அதன் காரணமாக நிலத்தினுடைய தன்மை கெடுகிறது, இதற்கு முன்னாலே அமைச்சர் அவர்கள் தனியாக உத்திரவைப் போட்டு ஜரூராக வேலைகள் நடந்தன. ஆனால் இப்போது அது தயக்கம் காட்டிக் கொண்டிருக்கிறது. மேலும் அது விரிவாகாமல் இருப்பதற்கு உடனடியாக அந்த முயற்சிகளை மேற்கொண்டு அதைக் கட்டுப்படுத்தி நிலத்தினுடைய தன்மையை, தண்ணீருடைய தன்மையை கெடாதவாறு பாதுகாக்கவேண்டும்.

அடுத்து, கரும்பு விலை வீழ்ச்சியாலே விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். வெல்ல உற்பத்தியானது மோசமான நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது விவசாயிகள் மத்தியிலே. ஆகவே, அதிகப்படியான சர்க்கரை ஆலைகளைத் துவக்குவதன் மூலம் ஏழை விவசாயிகளுடைய நிலைமையிலே முன்னேற்றம் காண முயற்சி செய்ய வேண்டும். அரசாங்கமே வெல்லத்தைக் கொள் முதல் செய்து விற்பனை செய்ய வேண்டும்.

வட மாநிலங்களிலே பனை மரத்திலிருந்து எண்ணெய் தயாரிக்கிறார்களாம். அந்த முறையிலே தமிழகத்திலேயும் செய்யக் கூடிய சாத்தியக் கூறு இருக்கிறதா என்பதை அரசு பரிசீலிக்கலாம். அப்படிச் செய்வதன் மூலமாக ஏராளமான பனைகள் தாமாகவே வளரக் கூடிய முறைகள் இருக்கின்றன; அது சாத்தியப்படுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே—திருவண்ணாமலைப் பகுதியிலே ஜியாலஜிஸ்ட் பரிசோதனை செய்து பார்த்து அங்கே இரும்பு கனிவளம், மற்ற கனிவளங்கள் ஏராளமாக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே பத்திரிகையிலே வந்திருக்கிறது, தகவல்களும் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியிலே உள்ள இயற்கையாகக் கிடைக்கக் கூடிய கனிவளங்களைத் தோண்டி எடுக்க வேண்டிய முயற்சிகளை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும்.

வட ஆற்காடு மாவட்டத்தின் சார்பாக பல காலமாக இங்கே வற்புறுத்திக் கொண்டு வந்த கோரிக்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டு அங்கே சந்தனத் தொழிற்சாலையை அமைக்கப் போகிற அந்த தேனினும் இனிய செய்தியை அவர்கள் வரவேற்று இருக்கிறார்கள். அதற்காக தமிழக அரசுக்கு நாங்கள் எங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அப்படி ஆரம்பிக்கப்படும் என்று சொல்கின்றபோது, சந்தனத் தைலம், ஊதுபத்தி ஆகியவைகள் தயாரிப்பதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். அதோடுகூட, சந்தனச் சோப்பு தயாரிக்கும் தொழிலையும் நீங்கள் இதிலே சேர்த்துக் கொள்வது நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் வடஆற்காடு மாவட்டத்திலே குறிப்பாக 3 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அதிலேயிருந்து வேஸ்டாக கரும்புச் சக்கைகள் கிடைக்கின்றன. இதைத் தவிர, அங்கே கருவேல மரங்கள் இருக்கின்றன. மூங்கில் இருக்கிறது. ஏற்கெனவே, தமிழகத்திலே வடஆற்காடு மாவட்டத்தில்தான் அதிகமான சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஏற்கெனவே, செங்கம் அதாவது சாத்தனூர் அணைப் பகுதியிலே பேப்பர் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற்கான அறிக்கை, தமிழக அரசாங்கத்திற்கு வந்திருப்பதாக அறிகிறேன். அந்தப் பேப்பர் தொழிற்சாலையை வட ஆற்காடு மாவட்டத்திலே அமையுங்கள். அப்படி அமைக்கின்ற போது திருவலம் பகுதி இந்தச் சர்க்கரை ஆலைகளுக்கு மையமாக இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே அமைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்கின்ற என்கருத்தை இங்கே எடுத்துவைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்திலே, குடியாத்தம்—பகுதியில் கைத்தறித் துணிகள் அதிகமாக தயாரிக்கப்படுகின்றது. ஆனால், அப்படித் தயாரிக்கின்றபோது பவர் லூமிலே அந்தத் துணிகள் தயாரிக்கப்பட்டு, அவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. சமீபத்திலே வெளியிடப்பட்ட ஷா கமிஷன் அறிக்கையிலே கூட சஞ்சய் காந்தியின் மாமியார் அவர்கள் கூட கைத்தறித் துணிகளுக்குப் பதிலாக பவர் லூமிலே தயாரிக்கப்பட்ட துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், அதனால் ஏறக்குறைய 13 அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்தது. இது மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த விஷயமாக இருந்தாலும் சரி, இதுபோன்ற நிலைமைகள் தமிழகத்திலேயும் பரவலாக இருக்கின்றது. ஆகவே, கைத்தறித் துணிகள் என்ற பெயரிலே பவர் லூமிலே தயாரிக்கப்பட்டத் துணிகள் ஏற்றுமதி செய்யக்கூடியச் சாத்தியக்கூறுகள் இருப்பதாலே, இந்தத் துணிகளைத்தான் அவர்கள் தயார் செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாட்டை விதித்து, அவைகளை பரிசீலனை செய்து, இது போன்ற தவறுகள் ஏற்படாத வகையில் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், காட்பாடியில் 500 ஏக்கர் நிலம் எவர்சில்வர் தொழிற்சாலைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு, 10, 15 ஆண்டுகளாக அந்தத் தொழிற்சாலை அங்கே ஏற்படாமல் இருக்கிறது.

இந்த நிலம் காட்பாடி ரயில்வே நிலையத்திற்கு அருகாமையிலேயே எடுக்கப்பட்டுள்ளது. எனவே, அங்கே இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், குடியாத்தம் பகுதியிலே மாட்ச் பாக்டரிகள் அதிகம் இருக்கின்றன. அதற்கான மூலப் பொருட்கள், ராமெடிரீயல்ஸ் கிடைக்காத காரணத்தால், இன்றைக்குப் பல பாக்டரிகள் மூடப்படுகின்றன. இதனால் அங்கே ஏறக்குறைய 10,000 ஆயிரம் பேர்களுக்கு மேலாக வேலை இழந்திருக்கிறார்கள். இதே போன்று டானரியிலும், புது விதமான மெஷின்கள் இன்டர்டியூஸ் செய்திருப்பதன் காரணமாக, அதிலே ஈடுபட்டுள்ள 7,000, 8,000 பேர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் குறிப்பாக, லுங்கி தயார் செய்யப்படுகின்றது. இதிலே இன்றைக்கு பவர் லூமில் தயாரிக்கப்படுகின்ற காரணத்தினாலே, அந்தப் பகுதியிலே உள்ள கைத்தறி நெசவாளர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு தொழில்கள் ஆரம்பிக்கும்போது, இந்த சிறு தொழிற்சாலைகளில் இந்த இந்த பொருட்களைத்தான் தயாரிக்கலாம் என்று செய்தால் ஒழிய, பெரிய தொழிற்சாலைகளோடு, அவர்கள் தயாரிக்கக்கூடிய பொருள்களோடு இவர்கள் போட்டி போட முடியாது. ஆகவே, சிறு தொழில்களில் இன்னென்ன பொருள்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்றும் கட்டுப்பாடு செய்தால் ஒழிய, அவர்களால் பெரிய தொழிற்சாலைகளோடு போட்டி போட்டுக் கொண்டு, மார்க்கெட்டைப் பிடிக்க முடியாது. இதனால் இந்தச் சிறு தொழில் நசிந்து வரக்கூடிய நிலைமை ஏற்படுகின்ற காரணத்தினால், சிறு தொழிற்சாலைகளில் இந்த இந்தப் பொருள்களைத் தயாரிக்கப்பட வேண்டுமென்ற ஒரு நியதியை, கட்டுப்பாட்டை ஏற்படுத்தியாக வேண்டும்.

அதேபான்று விலையைக் கட்டுப்படுத்துவதற்கும் தமிழக அரசாங்கம் முன்வர வேண்டும். இந்த இந்த பொருள்கள் இன்னின்ன விலைக்கு விற்கப்பட வேண்டுமென்று இருக்க வேண்டும். குறிப்பாக, எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாத காரணத்தால், தொழிற்சாலைகளிலே தயாரிக்கப்படுகின்ற, உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு அவர்கள் நினைத்ததுபோல் விலையை நிர்ணயம் செய்கிறார்கள். ஆனால், விவசாய மக்களோ தாங்கள் பயிரிடக்கூடிய பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யக்கூடிய உரிமை அவர்களுக்கு இல்லை. உற்பத்தி செய்யப்படுவதற்கும் குறைவான விலையிலே விற்கக்கூடிய நிலைமை, ஏக்கம் அவர்களுக்கு

இருக்கிறது. எனவே, தொழிற்சாலைகளிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை அதிக விலை கொடுத்து விவசாயிகள் வாங்கக்கூடிய நிலைமை இருப்பதாலே, அவர்களுக்குப் இந்தப் பொருள்கள் குறைந்த விலைக்கு கிடைப்பதற்கு விலைக் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தால் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லி, எங்களுடைய உழைப்பாளர் முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கின்ற ஏக்கம் எல்லாம் நலிந்த மக்களுக்குப் பாதுகாப்புத் தாருங்கள், அவர்களுக்கு உதவி தாருங்கள், அப்படித் தருவதன் மூலமாக அவர்களுடைய வாழ்வு மலரும், முன்னேறும், அப்போது தமிழகத்தினுடைய பெருமை வானளாவச் சிறக்கும் பறக்கும் என்று கூறி, என்னுடைய நன்றி அறிதலைத் தமிழக அரசுக்குத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 10–10)

(1) ஒழுங்குப் பிரச்சனைகள்—தொடர்ச்சி.

(ஆ) வினக்கள்-விடைகள் நேரத்தை நிறுத்திவைப்பதற்கான தீர்மானத்தைப், வாக்கெடுத்து நிறைவேற்றியதாக அறிவித்த, தீர்ப்பை மாற்றி ஒருமனதாக நிறைவேற்றியதாக அறிவிப்பது குறித்து.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பாயிண்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் ஆரம்பிக்கிறபோது சபாநாயகர் அவர்கள்கூட என்னைப் பேசச் சொன்னார்கள். இருந்தாலும் வேண்டாமென்று அமர்ந்து விட்டேன். சபையினுடைய மரபைக் காப்பதற்காக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கேள்வி நேரத்தை ஒத்தி வைத்ததை ஏகமனதாகச் செய்வது நல்லது என்பதற்காகச் சொல்லுகிறேனே தவிர, தவறாகக் கருதக்கூடாது. சபையின் கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமென்றால் சபை ஏகமனதாக முடிவு செய்ய வேண்டுமென்று 22 விதி கூறுகிறது. அப்படிச் செய்யாமல் ஓட்டெடுத்து முடிவு செய்திருப்பது தவறான முடிவாகும். அது வேண்டாம் என்பதால்தான் மதிப்பிற்குரிய துரைமுருகன் அவர்களையும் நான் கேட்டு அவர்களும் அதை வற்புறுத்தவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, ஓட்டெடுத்து முடிவு செய்ததாக இல்லாமல் அவ்வாறு நடந்ததை நீக்கிவிட்டு ஏகமனதாக நிறைவேறியதாகப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பாயிண்ட் ஆப் ஆர்டர். அஜெண்டாவில் இல்லாத பொருளைப் பற்றி அவை முன்னவர் எப்படி தீர்மானத்தை முன்மொழிய முடியும்? அது சரியில்ல என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : Rule 22: "The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. The Speaker may, in his discretion extend the time for Questions.", அவ்வளவுதான். எக்ஸ்டென்ட் பண்ணலாமே தவிர, கேள்வி நேரத்தை ஒத்திவைக்க முடியாது. ஒத்திவைக்க வேண்டுமென்றால் சபை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, நான் கேட்டுக் கொள்கிறேன், இது முடிந்துவிட்ட விவகாரம். துரைமுருகன் அவர்கள் வற்புறுத்தவில்லை என்று கூறுகிறார்கள். சபையின் மரபு கெடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

(இ) வினக்கள்-விடைகள் நேரம் நிறுத்திவைக்கப்பட்டது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர். ஒரு ஒழுங்கு பிரச்சனையைக் கிளப்புகிறேன். இந்தச் சபையினுடைய விதிகள் பின்பற்றப்படாமல் இருந்தால், முரண்பாடு இருந்தால் ஒழுங்குப் பிரச்சனை கிளப்பலாம் என்ற அந்த அடிப்படையில் இந்த ஒழுங்குப் பிரச்சனையைக் கிளப்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் கேள்வி நேரத்தை நீக்கிய முறை தவறானது என்பதற்கான பிரிவை எடுத்து வாசித்தார்கள். ஆகவே, தவறான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. தீர்ப்பு இரண்டு விதிகளுக்கு புறம்பாக இருக்கிறது. விதிகளில் மிகத் தெளிவாக இருக்கிறது :—

Rule 22 "The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. The Speaker may, in his discretion extend the time for questions.;'

அவருக்கு டிஸ்க்ரிஷனரி பவர் இருக்கிறது. அதே நேரத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்க வேண்டுமென்றும் இருக்கிறது. 244வது விதியில்:

',Any member may with the consent of the Speaker move that any rule may be suspended in its application to a particular motion before the House and if the motion is carried by three-fourths of the total number of members present and voting at the meeting, the rule in question shall be suspended for the time being.

சபாநாயகருக்கு அதிகாரம் இருக்கிறது. நான்கில் மூன்று பங்கு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டால் எந்த விதியையும் தளர்த்தலாம் என்று இருக்கிறது.

அதே நேரத்தில் 242-வது விதி தெளிவாகச் சொல்லுகிறது—
All matters not specifically provided for in these Rules.

''குறிப்பிட்டுச் சொல்லாமல் இருந்தால்'' என்று தெளிவாக இருக்கிறது. எனவே, தவறான தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது. விதிகளுக்குப் புறம்பான தீர்ப்பு என்று ஒழுங்குப் பிரச்சனை கிளப்புகிறேன். ஆகவே, நீங்கள் உங்கள் தீர்ப்பைக் குறித்து தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏகமனதாக தீர்மானத்தினால் கேள்வி நேரத்தை ஒத்திவைக்கலாம் என்பது 22-வது விதி, அதனாலேதான் எதிர்க்கட்சிகளோடு கலந்து கொண்டு அப்படி அறிவிப்பது மரபு. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார்கள். ஆகவே, அதை ஏகமனதாக நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு 22-வது விதியின் கீழ் இல்லை. ஆனால், 244-வது விதியின்படி, இந்த விதிகள் அடங்கிய புத்தகத்திலே உள்ள எந்த விதியை வேண்டுமானாலும் சஸ்பெண்ட் செய்வதற்கான உரிமையை வழங்குகிறது. அப்படிப் பட்ட தீர்மானம் நிறைவேற்றுவதற்கு இந்த அவையிலே தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும். அந்தத் தீர்மானத்தை நான்கில் மூன்று பகுதியினர் ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்றால் அந்த விதியைத் தளர்த்தலாம். அது தான் 244-வது விதியின்கீழ் சொல்லப்படுகிறது. ஆகவே, அவை முன்னவர் அவர்கள் 244 வது விதியின் கீழ் 22-வது விதியைத் தளர்த்தக்கூடிய தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். ஆகவே, அதை பேரவைத் தலைவர் அவர்கள் வாக்கெடுப்பிற்கு விட்டு ஏகமனதாக நிறைவேறியது என்று தீர்ப்பளித்து 22-வது விதியைத் தளர்த்தியிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தீர்ப்பில் தவறு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் அவர்கள், 22-வது விதியைச் சுட்டிக்காட்டி அதே போல் 244-வது விதியையும் சுட்டிக் காட்டி, அதில் இருக்கிற விதிகளின்படி தாங்கள் அளித்த தீர்ப்பு தெளிவாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அதை ஒப்புக்கொள்கிறன். அந்த விதிகளிலே யுனானிமஸ் ஆக ஏற்றுக்கொண்டால் தான் முடியும் என்று இருக்கிறது. ஆனால், 244 வது விதியில் நான்கில்மூன்று பங்கு இருந்தால் போதும். ஆனால் 242-வது விதியில் அதை தயவு செய்து பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மிகத் தெளிவாக வே:

All matters not specifically provided for in these rules.
என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்பெஸிபிக் ஆக சொல்லப்படவில்லை என்று சொல்லுகிறபோது 244-வது விதியைக் பயன்படுத்தலாம். 22-வது விதி ஸ்பெஸிபிக் ஆகப் போடப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் 244-வது விதியைப் பயன்படுத்தி அதன் கீழ் கொடுக்கப்பட்டிருக்கின்ற தங்களுடைய தீர்ப்பு சரி என்று சொல்ல முடியாது. ஆகவே, தாங்கள் இந்தச் சபையின் விதிகளுக்குப் புறம்பான தீர்ப்பைத் தந்திருக்கிறீர்கள். அப்படித்தர முடியாது என்பதுதான் என்னுடைய வாதம்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்–தலைமை]

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதை நீட்டிப்பதற்காகவோ இந்த வாதம் அதிகமாக வேண்டுமென்பதற்காகவோ நான் இதைச் சொல்லவில்லை. தாங்கள் அந்தத் தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விடுகிறபோது தீர்மானத்தை ஆதரிப்போர் அதிகம், எதிப்போர் குறைவு என்று தான் முடிவு எடுத்தீர்கள், நான்கில் மூன்று பங்கு என்று பார்க்கவில்லை. நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை, திரு. துரைமுருகனைக் கூட நான் கேட்டுக் கொண்டேன், அவரும் ஒத்துக் கொள்வதாகச் சொன்னார். இப்படிப்பட்ட தீர்மானங்களை இந்தச் சபையிலே ஏகமனதாக நிறைவேற்றக்கூடிய மரபு இருக்கிறது. ஆதரிப்போர் எதிர்ப்போர் என்று கேட்டு, ஆதரவு அதிகம் என்று தான் தீர்ப்புச் சொன்னீர்களே தவிர, நான்கில் மூன்று பங்கு பார்க்கவில்லை. இதிலே கௌரவம் எதுவும் பார்க்காமல் தாங்கள் இந்தச் சபையின் மரபுகளுக்கு ஏற்றவாறு ஏகமனதாகச் செய்வது நல்லது அந்த முறையிலே தாங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும், இதோடு விஷயத்தை முடித்துவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ஒத்துக்கொண்டு பலபேர்கள் இப்போது பேசியாகிவிட்டது. திரு. ரகுமான்கான் அவர்கள் இப்போது வந்திருக்கிறார்கள், புதிதாக இதை எழுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றி விவாதித்து ஏற்கனவே வாய்ஸ் ஓட்டுக்கு விட்டு மெஜாரிட்டி இருக்கிற காரணத்தால் ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறோம். நிறைவேற்றிய பிறகு காலம் கடந்து இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறீர்கள், உட்காருங்கள் என்று சொல்லி அவர்களும் உட்கார்ந்துவிட்டார்கள். ஆகவே தீர்ப்பிலே ஒன்றும் தவறு இல்லை. பேரவைத் தலைவர் தவறு செய்தால் அல்லது அவரது போக்கிலே ஏதாவது தவறு இருக்குமானால் அதைப்பற்றி பல முறைகளிலே கொண்டுவரலாம், விதிகள் தனியாக இருக்கின்றன, ஆகவே இத்தோடு இதை விட்டுவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, அருள் கூர்ந்து என்னை மன்னிக்கவேடும், தவறாக நான் சொல்லவில்லை. இந்தச் சபையினுடைய விதிகளுக்குப் புறம்பாக இருக்குமானால் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம், அந்த வகையிலே நான் எழுப்ப அனுமதி தந்திருக்கிறீர்கள், அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கன்டென்ஷன் எல்லாம் 242-வது விதி இங்கே மீறப்பட்டிருக்கிறது என்பது தான். விதிகளையொட்டித்தான் தீர்ப்புத் தரவேண்டும், உங்களை நான் குறை சொல்லவில்லை. 242-வது விதிக்குப் புறம்பான தீர்ப்பு சரிதானா என்பதைத்தான் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 242-வது விதியில் ஸ்பெஷல் பவர்ஸ், எனக்கு சில பிரத்தியேக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 10-20]

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தங்களுடைய தீர்ப்பை மறுக்க வேண்டுமென்றோ அல்லது மாற்ற வேண்டு மென்றோ கேட்டுக்கொள்வது என்னுடைய நோக்கம் அல்ல. ஆனால் இந்தப் பிரச்சினையில் அதனுடைய அடிப்படையை அவைத் தலைவரவர்களே அவையிலே இருக்கின்ற உறுப்பினர் கள் உணரும்படியாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கேள்விநேரம் என்பது அவையின் முக்கியமான ஒரு பகுதி என்பதுகூட அல்ல, எதிர்க்கட்சியின் முதல் உரிமை எதிர்க்கட்சியின் முதல் உரிமையாக இருக்கின்ற அந்தக் கேள்வி நேரத்தை எதிர்க்கட்சியினுடைய சம்மதத்தைக் கேட்டு நீக்க வேண்டுமென்பதற்காகத்தான் 'யுனானிமஸ்லி' என்ற வார்த்தை அங்கே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சி களும் ஒத்துக்கொண்டு சில அவசியமான நேரங்களில் கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கலாம் என்பதற்காகத் தரப்பட்டிருக் கின்ற விதி அது. ஆனால் ஆளுங்கட்சிக்கு உள்ள பெரும் பான்மையைக் கொண்டு எதிர்க்கட்சியைத் தோற்கடித்து கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கலாம் என்ற முறையில் இருந்தால் எந்த நேரத்திலும் ஆளுங்கட்சி நினைத்தாலும் கேள்விநேரத்தைத் தூக்கியெறிந்து விடலாம். எனவே பெரும் பான்மை, சிறுபான்மை என்ற அடிப்படையில் கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கும் முறை இதுவே கடைசி தடவையாக இருக்க வேண்டும் என்றும், இனி அந்த முறையைக் கையாளக்

கூடாது என்றும், எதிர்கட்சியின் இசைவு இருந்தால்தான் கேள்வி நேரத்தைக் கைவிடலாம் என்றும், அந்த இசைவை அவைத் தலைவர் முன்கூட்டியே கேட்டுக்கொள்ள வேண்டு மென்றும், இந்த விதிமுறைகளுக்கு உள்ளே புகுந்துகொண்டு கேள்வி நேரத்தைத் கைவிடுகின்ற முறை இனி கூடாது என்றும் அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, அதற்குள் நான் போகவில்லை. நான்தான் அந்தப் பிரச்சினை யைக் கிளப்பினேன். எதிர்க் கட்சிகளைக் கலந்துகொண்டிருக் கிறார்கள், ஆனால் கலந்துகொண்டதை முறையாகக் கலந்து கொள்ளவில்லை என்பதுதான் ஆட்சேபணையே தவிர, கலந்து கொள்ளவில்லை என்பது அல்ல. ஆனால் நான் சொல்வது, அந்த மரபு பின்பற்றப்பட வேண்டும், அவரே தயாராக இருக்கின்றபொழுது, துரைமுருகன் அவர்களே வற்புறுத்த வில்லை என்று கூறும்பொழுது, அவர் கிளப்பிய பிரச்சினையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கும்பொழுது, நாங்கள் சொல்லிவிட்டோம் என்று இதில் அழுத்தமாக இல்லாமல், குறிப்பிலே ஏகமனதாக என்று மாற்றி விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். மேற்கொண்டு, எதிர்காலத்தில் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒன்றை நான் சொல் கிறேன், நான் எச்சரிக்கையாகத்தான் இருந்தேன், கனம் உறுப்பினர் அவர்களும் இருக்கையில் இல்லை, கலைஞரும் இருக்கையில் இல்லை, அப்பொழுது ப. உ. சண்முகம் அவர்களைக் கேட்டு, எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், தலைவருக்குச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். ப. உ. சண்முகம் அவர்கள் வந்திருந்தார்கள், அவரை அழைத்து என்னுடைய நாற்காலிக்குப் பக்கத்தில் சொல்லவைத்தேன். இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுப்பப்படும் என்று தெரிந்திருந்தால் இன்னும் எச்சரிக்கையாக ஏற்பாடு செய்திருப்பேன். கனம் உறுப்பின ரவர்கள் 'எஸ்' என்று சொன்னார்கள். அதை வைத்துச் சொன்னேன். ஆகவே, எந்த உறுப்பினரின் உரிமையையும் பறிக்கின்ற வகையிலே அவைத் தலைவர் செய்ய மாட்டார் என்ற வாக்குறுதியை, நம்பிக்கையை நான் தெவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, நான் காலையிலே கிளப்பிய பிரச்னை நியாயமான பிரச்னை என்பதை இந்த அவை ஒத்துக்கொண்டதாலும், தாங்களும், மதிப்பிற்குரிய அங்கத்தினர்

கூத்தகுடி சண்முகம் அவர்களும், எங்கள் கட்சித் துணைத் தலைவரவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதை நான் வற்புறுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாங்கள் எழுப்பிய நியாயமான பிரச்சினை என்று மறுபடியும் அவைத் தலைவரைச் சொல்ல வைக்க வேண்டுமென்று..........

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இன்றையதினம் மாலையில் அவை கூடுவதாக இருக்கும் என்ற சந்தேகம் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் இன்று 'மாண்டி தர்ஸ்டே' கிறித்தவர்களுக்கு அதுவொரு முக்கியமான நாள், ஆகவே, எக்காரணத்தைகொண்டும் 'மாண்டி தர்ஸ்டே' வாகிய இன்றைய தினம் மாலை வேளையில் சபை கூடக்கூடாது. அப்படிக் கூடினால் மைனாரிட்டிக்கு நாம் கொடுக்கின்ற வாய்ப்பாக இருக்காது என்பதைத் தலைவரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல்வேறு அங்கத்தினர்களை நான் கலந்தாலோசித்தேன். ஆக, எக்காரணத்தைக் கொண்டும் இன்றைய தினம் மாலை வேளையில் சபை கூடுவது பொருத்தமாக இருக்காது என்பதை அவைத் தலைவரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மைனாரிட்டி சமூகத்தினரின் நன்மையை விரும்பித்தான் நாளைக்கு முழு நேரமும் விடுமுறை. நான் சொல்வது இன்றைய தினம், வெள்ளிக் கிழமை அல்ல, வியாழக்கிழமை மாலை. எதிர்க்கட்சிகள், தாங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டால்..........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இன்னும் நேரமிருக்கிறது. ஒன்றரை மணிக்குள்ளாக விவாதம் முடிந்தால் நாம் மாலை நேரத்தில் வைத்துக்கொள்ள வேண்டியதிருக்காது. மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொன்ன கருத்தும் ஆராயத்தக்கது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

5 1978-79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய விவாதத்தைத் தொடங்குவதற்கு முன்னாலே, நண்பர் ஜேம்ஸ் அச்சப்படுவது போல், நீண்டநேரம் இந்தத் தொழில் மானியக் கோரிக்கை

விவாதம் நடைபெறாது என நான் நம்புகிறேன். அவர்கள் மாலை மகிழ்ச்சியாக மாதா கோவிலுக்குச் சென்று தன்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

நம்முடைய முதலமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தொழில், தொழில் மூலதனம் மானியக் கோரிக்கைகள் மீது சுமார் ரூ. 10 கோடி கேட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது, என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னாலே, நம்முடைய மாண்புமிகு இராதா அவர்கள் மிகவும் வருத்தப்பட்டார்கள், தஞ்சை மாவட்டத்திலே தொழில்கள் ஆரம்பிக்கவில்லையே என்று. தஞ்சை மாவட்டம் மிகவும் பின் தங்கிய நிலையிலே இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும், தமிழக மக்களுக்கு உணவளிக்கின்ற மாவட்டமாக தஞ்சை மாவட்டம் இருந்து வருகிறது என்பது. உண்டி கொடுத்தோரே, உயிர் கொடுத்தோர் என்று சொல்வது போல், உயிர் கொடுக்கின்ற தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் அப்படி வருத்தப்படத் தேவையில்லையென்றுதான் நான் கருதுகிறேன். தொழில் துறையிலே பெருக வேண்டியதுதான்.

ஏற்கனவே, தஞ்சை மாவட்டத்திலே சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மன்னார்குடியிலே உரத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தஞ்சை மாவட்டம் புறக்கணிக்கப்படவில்லை. அவரது கோரிக்கை, தஞ்சாவூர் மாவட்டத்திலே இன்னும் அதிகமான தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டிருப்பார் என்று கருதுகிறேன். அவரோடு நானும் சேர்ந்து, தஞ்சாவூர் மாவட்டத்திலும், இன்னும் பல மாவட்டங்களிலும் புதிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தொழில் மானியத்தின்மீது, கடந்த ஆண்டு அதற்குப் பிறகு இரண்டாம் தடவையாக இப்பொழுது, இடைக்காலத்திலே தொழில் துறையைப்பற்றி, பல்வேறு பிரச்னைகள் குறித்து, கேள்விகளைக் கேட்டு, அந்தக் கேள்விகளுக்கு முதலமைச்சர் மூலமாகப் பதில் கிடைக்குமானால், பல விஷயங்களைத் தெளிவுபடுத்த முடியும் என்று நான் நம்புகிறேன். எனவே, கேள்விகள் தொழில் துறையைப் பொறுத்தவரையிலே கேட்கப்பட்டும், கடந்த சில மாதங்களாக, பதில் கொடுக்காத நிலைமை ஏற்படுகிறது. அந்த நிலைமை ஏற்படாமல்,

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1978 மார்ச் 23

ஆண்டுக்கொரு முறை என்று சொல்கிற நிலைமையில்லாமல், அடிக்கடி கேள்விகள், மற்ற விதிகளுக்குட்பட்டு, சட்ட விதிகளுக்குட்பட்டு, இந்த இலாகாபற்றி கேள்விகள் கேட்கப்படுவதற்குப் பதில் கொடுக்கப்படுகிற நிலை நடைபெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் சொல்கிற கருத்து, எந்த அளவுக்கு நடைமுறைப் படுத்தப்படுகிறது, எந்த அளவுக்கு ஏற்கப்படுகிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால், சில வேளைகளில் நாங்கள் சொல்கிற கருத்து, நாங்கள் சொல்கிற நோக்கை முறியடிப்பதாக முடிந்து விடுகிறது. நாங்கள் ஒரு பிரச்னையைக் கிளப்பினால், நாங்கள் ஒரு விஷயத்தைச் சொன்னால், ஏதோ நாங்கள் சொல்கிறோம் என்று, அந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காணுவதற்குப் பதிலாக, மாறுபட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதை நான் பார்க்கிறேன். நம்முடைய முதலமைச்சரை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இங்கே சொல்லக்கூடிய கருத்துக்கள், அவசியத்தின் அடிப்படையிலும், பிரச்னைகளுடைய முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் தான் சொல்லப்படுகின்றனவே தவிர, வேறல்ல. எனவே, பிரச்னைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நேற்றைக்கு விவாதம் இங்கே நடைபெற்றபோது, ஒன்றை நாம் பார்த்தோம். இந்த அரசாங்கம் பின்பற்றுகிற கொள்கையைப்பற்றி விவாதித்தார்கள். மத்திய அரசாங்கத் தொழில் கொள்கையைத்தான் இங்கே இந்த அரசு பின்பற்றுகிறது என்ற வாதத்தினை இங்கே வைத்தார்கள். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கிருக்கிற ஜனதா அரசு தன்னுடைய தொழில் கொள்கையைப் பாராளுமன்றத்திலே அறிவித்து, அந்த இன்டஸ்ட்ரியல் பாலிசியினுடைய அடிப் படையிலே காரியங்களைச் செய்கிறார்கள். அந்தக் கொள்கையை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதா அல்லவா என்பது பிரச்னை அல்ல. அவர்கள் மத்திய அரசிலே இருப்பவர்கள், தங்களுடைய அரசாங்கத் தொழில் கொள்கையை விளக்கமாக எடுத்துச் சொல்லி, அந்த அடிப்படையில் காரியம் ஆற்றுகிறார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நம்முடைய அரசின் சார்பாகவும், திட்டவட்டமான அளவுக்குத் தொழில் கொள்கையை அறிவித்து, அதன் அடிப்படையில் காரியம் நடைபெறுகிறதா என்று பார்ப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

1978 மார்ச் 23] [திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இந்தக் குறிப்புகளைப் பார்க்கும்போது, நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கையிலே தெளிவு இல்லையென்ற நிலைமையை நான் சுட்டிக் காட்டாமலிருக்க முடியாது. சிலவற்றிலே பார்க்கும்போது குழப்பமான கொள்கை இருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

(முற்பகல் 10-30)

உதாரணத்திற்கு இரண்டு பிரச்சினைகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஒரு பிரச்சினை தொழில்களைத் தேசிய மயமாக்கும் பிரச்சினை ஆகும். தேசிய மயமாக்கும் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்தினுடைய திட்டங்கள், கொள்கைகள் என்ன என்பது விளக்கமாக எடுத்துச் சொல்லப்படவில்லை என்கின்ற நிலைமைதான் இருக்கிறது.

பொதுவாக பெரிய தொழில்கள், சிமெண்ட் தொழிற்சாலை, சர்க்கரை தொழிற்சாலை போன்ற பெரிய பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் தேசிய மயம் ஆக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டு திடீரென்று இந்த மன்றத்திலே இந்த 'பிளாக் கிரானைட்' கருங்கல் தொழிற்சாலையைத் தேசிய மயம் ஆக்கவேண்டுமென்று அறிவித்தார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆனால் அந்த பிளாக் கிரானைட் தொழிற்சாலையைத் தேசிய மயம் ஆக்கிய பிறகு, தொடர்ந்து பெரிய தொழிற்சாலைகளோ, அல்லது தொடர்ந்து வேறு தொழிற்சாலைகளோ தேசிய மயமாக்கப்பட்டதாக அறிவிப்பு எதுவும் வரவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கருங்கல் தொழிற்சாலையிலே 20,000 தொழிலாளர்கள் வேலை செய்து வந்தார்கள். நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை காரணமாக அந்த 20,000 தொழிலாளர்களும் வேலையிழந்துவிடும் நிலைமையை நாம் பார்க்கிறோம்.

அதுமாத்திரமல்ல. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் இந்தக் கருங்கல் தொழிலிலே ஈடுபட்டு வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டு வியாபாரத்தைத் தொடங்குகிறார்கள். மொத்தமாக நாம் பார்க்கும்போது இன்றைக்கு 700 குவாரிகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இதிலே முதலீடு செய்வதானால் 23 கோடி ரூபாய் வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது நாம் கனி வள கார்ப்பரேஷன் ஆரம்பித்திருக்கிறோம். இந்தக் கார்ப்பரேஷனுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 25 இலட்சம் ரூபாய். இந்த 25 இலட்சம் ரூபாயைக் கொண்டு இந்தத் தொழிலை நடத்த முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கைதான் நம்முடைய கொள்கை என்று குறிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை சிறுதொழில்களைப் பொறுத்து நாம் பார்க்கும்போது ''மேலும் சிறுதொழில்களைத் தேசிய மயமாக்குவது இல்லை என்பது மத்திய அரசின் கொள்கை. மேலும், சிறு கனிபொருள் போன்ற கருங்கல் தொழில்களைத் தேசிய மயமாக்குவதோ அல்லது அரசாங்கத்தினுடைய ஏகபோகமாகவோ ஆக்கக்கூடாது என்று இந்திய அரசாங்கத்தின் திட்டக்குழு முடிவு செய்திருக்கிறது''.

அப்படி இருக்கும்போது இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் தேசிய மயமாக்காமல் தமிழ்நாட்டில் மட்டும் ஆக்கப்பட்டிருக்கிறது. இந்தநிலைமை ஏன் என்பதைநாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு ஆந்திர மாநிலத்திலே, கர்நாடக மாநிலத்திலே, கேரள மாநிலத்திலே கூட இந்தத் தொழில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்கே இருப்பவர்கள் தனிப்பட்ட முறையிலே இந்தத் தொழிலை நடத்தி வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளும்போது நம்முடையை இலாகா மூலமாக தொழில் நடத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

இவைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது நம்முடைய தொழில் நசிந்து விடுமோ என்கிற நிலைமைதான் ஏற்படுகிறது. அதுவும் குறிப்பாக தென்னுப்பிரிக்க நாட்டில் ஏற்றுமதி செய்வதாகச் சொல்கிருர்கள். அதுவும் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் ஒரு குவாரியை எடுத்து அதை வெட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, கிட்டத்தட்ட ஒன்பது மாத காலமாகும் என்று சொல்கிருர்கள். எனவே, இதை ஆலோசிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கமும் தொழில் நடத்தலாம். தனிப்பட்டவர்களும் தொழில் நடத்தலாம். நம்முடைய அரசாங்கம் சில குவாரிகளை எடுத்துக் கொண்டு எவ்வளவு முடியுமோ அந்தக் குவாரிகளிலே கவனம் செலுத்துமானுல் நான் நம்புகிறேன் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும் அரசாங்கமும் தொழில் வளர்ச்சியிலே முன்னேறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த பிரச்சினை கொள்கை தெளிவாக இல்லாததாகும். இங்கே ஜாயின்ட் செக்டார் முறையில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருக்கிறது. ஜாயின்ட் செக்டாரில் காகிதத் தொழில் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்

கிறது. பக்கம் 73—லே—''நிதி வசதிகளும் தேவையான தொழில் நுட்ப அறிவும் கொண்டுள்ள தொழில் முனைவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து கூட்டுத் துறையிலே திட்டங்களை நிறுவுவதிலும் 'டிட்கோ' நிறுவனம் முனைப்பான பங்கேற்றுள்ளது. இதுவரை பங்கு மூலதனத்தில் 'டிட்கோ' நிறுவனம் 26 சதவிகிதமும், தனிப்பட்டதொழில் முனைவர்கள் 25 சதவிகிதமும் எஞ்சிய 49 சதவிகிதம் பொதுமக்களிட்மிருந்து பெற்றும் கூட்டுத் துறை நிறுவனங்களை 'டிட்கோ' அமைத்து வந்துள்ளது.''

1 இன்னொன்று, இப்படிப் பார்க்கிறபோது, கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தியின் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறையில் நாள் ஒன்றுக்கு 30 டன் பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலையை டிட்கோ 15 சதவிகிதம் பங்கு மூலதனம் போட்டு நிறுவுவதற்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொள்கை அடிப்படையில், டிட்கோ 26 சதவிகிதம்முதலீடு செய்யப்பட வேண்டும். ஆனுல், 15 சதவிகிதம் பங்கு மூலதனம் தான் போடுவதாகச் சொல்கிருர்கள். ஆகவே, இந்தக் கூட்டுத் துறை முயற்சியில் மாறுபட்ட கருத்து இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதில் எல்லாம் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தக் கொள்கை அறிவிப்பைப் பார்த்தாலும் சரி, கொள்கை அடிப்படையில் கொடுக்கப்பட்டு இருக்கிற விவரங்களைப் பார்க்கிற போதும் சரி, எந்தவிதமான புதிய புரட்சிகரமான திட்டங்களும் அவற்றில் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒன்றிரண்டு தொழிற்சாலையைத் தவிர, அதிலும் குறிப்பாக காகிதத் தொழிற்சாலை தவிர, சந்தனத் தொழிற்சாலை பாரஸ்ட் டிபார்மென்டில் வருவதால் இதில் குறிப்பிடவில்லை என்று கருதுகிறேன். புதிதாகத் திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை.

இப்போது அறிவித்துள்ள திட்டங்கள், குறிப்பிலே செயல்படுவதாகக் குறிப்பிடும் திட்டங்கள் ஏற்கெனவே 1975-ம்ஆண்டுக்கு முன்னுலே போட்ட திட்டங்கள் இன்றைக்கு தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புள்ளி விவரங்களைப் பார்த்தால் தெரியும். 1974–75-ம் ஆண்டு புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது, நம்முடைய தமிழ் நாட்டில் அதிகமான அளவிற்குத் தொழில் துறை முன்னேற்றம் காணப்பட்டு இருக்கிறது. தொழில் துறை முன்னேற்றத்திற்கு நிதி ஒதுக்கீடு, கடன்உதவி, தொழில் ஆரம்பிக்கும் எண்ணிக்கை போன்றவைகள் எல்லாம் 1974–75-ம் ஆண்டில் அதிகமாக இருக்கிறது. அதிகமான தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

(திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) [1978 மார்ச் 23

இன்றைக்குப் பரவலாகப் பேசப்படுவது, ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரியல் செக்டார், இன்னும் அதிலே டைனி செக்டார் என்று கூடப் பேசப்படுகிறது. இந்தச் சிறிய தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு எந்த அளவிற்குக் காரியங்கள் நடைபெறுகிறது என்றால், நாம் பேசப்படுகிற அளவிற்கு ஸ்மால்ஸ்கேல் செக்டாருக்கு அதிகமான முதலீடு ஒதுக்கப்படவில்லை என்றும், அதிகமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதும் புரியும்.

''சாதனைத்திட்டம் 1978-79 ''தொழில்கள்'' என்ற புத்தகத்தைப் பார்த்தால் 8-வது பக்கத்திலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. முதல் காலம் 520 தொழிலில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இவற்றின் மீதான மூலதனச் செலவு, வரவு-செலவுத் திட்டம் 1977—78-ல் மொத்தம் 2,98,01 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1977-78 திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலே இதே தொகை செலவிடப்படுள்ளது. ஆனால், 1978-79 வரவு செலவுத் திட்டத்திலே 207.03 லட்ச ரூபாய் தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

ஆகவே, 1977-78-ல் 298.10 லட்ச ரூபாய் என்று ஒதுக்கப்பட்டு இருந்தது, 1978-79-ல் 207.03 லட்ச ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்து இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், முதல் காலம் 521-கிராம, சிறுதொழில்களின் மீதான மூலதனச் செலவு வரவு-செலவு திட்டம் 1977-78-ல் 97.39 லட்சம் ரூபாய். திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டம் 1977-78-ல் 239.74 லட்சம் ரூபாய். ஆனால் வரவு-செலவுத் திட்டம் 1978-79-ல் அது 74.78 லட்ச ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்து இருக்கிறது. அந்த அளவிற்குத்தான் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அளிக்கப்பட்டு இருப்பதைவிட பிறகு குறைக்கப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். முதல் காலம்—698—கூட்டுறவுப் பிரிவுக்குக் கடன்கள் என்ற தலைப்பில் வரவு-செலவுத் திட்டம் 1977-78-ல் 4.01 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டம் 1977-78-ல் 67 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டம் 1978-79-ல் 0.02 லட்சம் ரூபாய் என்ற அளவிற்குத்தான் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்

1978 மார்ச் 23] (திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா)

அதேபோல், முதல் காலம்-721—கிராம சிறு தொழில்களுக்கு கடன்கள் என்ற தலைப்பில் வரவு—செலவுத் திட்டம் 1977-78-ல் 86,03 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டம் 1977-78-ல் 61.21 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வரவு—செலவுத் திட்டம் 1978-79-ல் 69.02 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, 1977-78-ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திலே ஒதுக்கப்பட்ட ரூ. 86.03-யை விட 1978-79-ல் 69.02 லட்சம் என்று குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40.)

எனவே, பொதுவாக சிறு தொழில்களைப் பற்றிப் பேசினாலும் ஒதுக்கீடுகள் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டு சொல்லப்பட்டது. 10,000 சிறு தொழில்கள் ஆரம்பிக்கிறோம் என்று சொன்னார்கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களைப் பார்த்தால், அரசு குறிப்பிலும் சரி, நான் புரிந்து கொண்டதும் சரி—10,000 சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்படவில்லை. ஆரம்பிப்பது என்றால் அரசாங்கமே ஆரம்பிப்பது என்று பொருள். ஆனால், இங்கே அப்படியல்ல, தனியார் ஆரம்பிக்கிறார்கள், அதை ரெஜிஸ்டர் செய்கிறார்கள். அப்படியாவது 10,000 சிறு தொழில்களை ரெஜிஸ்டர் செய்திருக்கிறார்களா என்று பார்த்தால் அதுவும் இல்லை, என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்குப் பல காரணங்கள் உண்டு, சிறு தொழில்களுக்கு எந்த அளவுக்கு மூலப் பொருட்கள், கடன் உதவி கிடைக்கவேண்டுமோ அந்த அளவுக்குக் கிடைப்பதில்லை. முக்கியமாக மூலப்பொருள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சிறு தொழில் வளர்ச்சிக்கு திறமை மிக்க அதிகாரிகள் இல்லை என்று நான் சொல்லமாட்டேன். திறமை மிக்க அதிகாரிகள், அனுபவம் உள்ள அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அப்படியானால் வேறு என்ன காரணம் என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் கூறியதாக நினைக்கிறேன். ஒருவர் ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு 10 சென்ட் நிலம் கொடுக்கப்பட்டு, அவர் விண்ணப்பம் போட்டார். விண்ணப்பம் போட்டு ஒன்றே முக்கால் வருடம் ஆகியும் இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல;

அந்த இடத்திற்கு இதுவரையில் இண்டஸ்டிரியல் இன்ஸ்பெக்டர்ஸ் போய் இன்ஸ்பெக்ஷன் செய்யவில்லை. இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

சிறு தொழில்களை ஆரம்பிக்க முக்கியமாகத் தேவைப்படுவது கடன் உதவி. பினான்ஷியல் இன்ஸ்டிடியூஷன் உதவி நிரம்ப இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக டி.ஐ.ஐ.சி., சிட்கோ போன்ற நிறுவனங்கள் செய்கின்ற உதவி போதுமானதாக இல்லை. டி.ஐ.ஐ.சிக்குப் போய் அதிகாரியைப் பார்க்க வேண்டுமென்றால் மிகவும் சிரமம் இருப்பதாகச் சொல்கிறார்கள். முதலமைச்சரைக் கூடப் பார்த்து விடலாம்; ஆனால் அந்த அதிகாரியைப் பார்க்க முடியாது என்று சொல்கிறார்கள். ஒருவர் மூன்று மாதமாக இங்கே தங்கியிருந்தும் அந்த அதிகாரியைப் பார்க்க முடியாமல் திரும்பியிருக்கிறேன் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார். அவர் சேலத்திலிருந்து வந்தவர். 3 மாதங்கள் இருந்தும் பார்க்க முடியவில்லை என்றால் என்ன அர்த்தம்? இப்படி இருந்தால் எப்படி தொழில் வளர்ச்சி ஏற்படும்? டி.ஐ.ஐ.சி. நிறுவனம், சிட்கோ நிறுவனம்ஆகிய இந்த நிறுவனங்களுக்கு விண்ணப்பம் வந்தால் உடனடியாகக் கவனித்து, கடன் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நல்லமுறையில் காரியங்கள் நடக்க வேண்டும். டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் ஒருவர் இருக்கிறார். அவருக்கு வேலைப் பளு மிகவும் அதிகமாக இருக்கிறது. அவருடைய பளுவைக் குறைக்க வேண்டுமென்றால் ஸ்மால் ஸ்கேல் ப்ராஜெட்டுகளைக் கவனிப்பதற்கு என்று தனியாக ஒரு அடிஷனல் டைரக்டரை அல்லது ஒரு ஜாயின்ட் டைரக்டரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, சிறு தொழில்களுக்கு நேஷனலைஸ்ட் பாங்க்ஸ் அல்லது கமர்சியல் பாங்க்ஸ் கடன் கொடுக்கலாம் என்று திட்டம் இருக்கிறது. நம்முடைய லத்தீப் அவர்கள் கூடச் சொன்னார்கள். நேஷனலைஸ்ட் பாங்க்ஸ் என்று சொல்லும்போது அவர்கள் 'ஸ்வீக்கர் செக்ஷன்ஸ்' என்று சொல்கிற அடிப்படையில் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸுக்கு உதவி செய்வதில்லை. ஸ்மால் ஸ்கேல் செக்டார், வீக்கர் செக்ஷன் என்று சொல்லப்படுகிறதே தவிர அதற்குத் தேவையான உதவிகளைச் செய்வதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால் நம்முடைய இலாகா அதிகாரிகள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் அமைப்பதற்குக் கடன்உதவி, மற்ற உதவிகளைச் செய்வதற்கு கமர்சியல் பாங்குகளுடன் தொடர்பு கொண்டு, அந்த உதவிகளைப் பெற்றுத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த கனி வளங்களைப் பொறுத்தவரையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். செப்பரேட் கார்ப்பரேஷன் அமைக்கலாம் என்று சொன்னார்கள். கடந்த ஆண்டு கூட நான் இதைப்பற்றி சொன்னேன். தமிழ் நாட்டில் கனிவளத்தை நல்ல முறையில் கவனித்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க டைரக்டர் ஆப் ஜியாலஜி என்று ஒரு தனி அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். மீண்டும் அதையே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில், தொழில் துறைக்கு பெரிய ஆபத்து வந்திருக்கிறது. என்ன ஆபத்து என்று கேட்டால் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். மின்சார உற்பத்திக்கு மத்திய அரசு போட்டிருக்கிற வரியின் மூலம் மின்சார வாரியத்தை ரீஆர்கனைஸ் செய்வது கஷ்டமாக இருக்கும் என்று சொன்னார்கள். இன்றைக்கு மின்சார வரி போட்டால், மின்சார உற்பத்திக்கு வரி போட்டால் மின்சார கட்டணம் உயரும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக தொழில்களைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு மின்சாரம் கிடைக்கிறதோ அந்த அளவுக்குத்தான் நாம் தொழில் துறையில் வளர்ச்சி காண முடியும் என்பதைப் பார்க்கிறோம்.

மின்சாரம் இன்றைக்கு அத்தியாவசியமான தேவையாக அமைந்திருக்கிறது. மின்சார வள்ர்ச்சியில் நாம் அதிகமாகக் கவனம் செலுத்தினாலும்கூட மின்சாரக் கட்டணம் அதிகமாகின்றபோது தொழில் அதிபர்கள் மற்ற மாநிலங்களுக்குப் போகின்ற நிலைமை வருகின்றது. இன்றைக்கு கேரள மாநிலத்திலும், கர்நாடக மாநிலத்திலும், ஆந்திர மாநிலத்திலுமிருந்து கொடுக்கப்படுகின்ற விளம்பரங்களையெல்லாம் பார்க்கிறோம். அவர்கள் 'சலுகைகள் கொடுக்கிறோம்', 'இலவச இடம் கொடுக்கிறோம்' என்று பல்வேறு விளம்பரங்களைக் கொடுத்து இங்கே இருக்கின்ற தொழில்களை எல்லாம் அவர்கள் அட்ராக்ட் பண்ணுகிறார்கள்.

எனவே, இன்றைக்கு இங்கே இருக்கின்ற தொழில்கள் எல்லாம் வேறு மாநிலங்களுக்குப் போகின்ற ஒரு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே தொழிலதிபர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து அவர்களுக்குப் பல சலுகைகளை அளித்து எந்தெந்த முறையிலே தொழில் வளத்தை அதிகப்படுத்த முடியுமோ அவைகளிலே விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1978 மார்ச் 23

இன்றைக்கு நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கின்ற எம்ப்ளாய்மென்ட் எக்செஞ்சிலே போய்ப் பார்த்தால் ஏராளமான பேர் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்ற நிலைமை நன்கு தெரிகிறது. அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு ஏற்படுத்துகின்ற முறையிலே, தொழில்துறை காரியங்களை ஆற்றுகின்றது என்று சொன்னாலும் கூட போதிய அளவு வேலைவாய்ப்பு அவர்களுக்குக் கிட்டவில்லை என்பதை நாம் பார்க்கிறோம்.

இன்றைக்கு மத்திய கிழக்கு, அரேபிய நாடுகளுக்கு அங்கே வேலை வாய்ப்பு அதிகமாக இருப்பதாகச் சொல்லி பலபேர்கள் போகிறார்கள். அதிலே கூட ஒரு கோரிக்கையினை வைக்க நான் விரும்புகிறேன். பலபேர் வேலை செய்வதற்கு தயாராக இருந்தும் தேவையான டெக்னிகல் குவாலிஃபிகேஷன் எல்லாம் இருந்தும் கூட வறுமையின் காரணமாக அவர்களால் பணம் செலவழித்து பாஸ்போர்ட் எடுத்துக்கொண்டு போக முடியாத நிலைமை இருக்கிறது. நான் என்னுடைய நண்பர்கள் சிலரைப் பார்த்துக் கேட்டேன். 'நீங்கள் ஏன் இங்கே இருந்து கஷ்டப்படுகிறீர்களே, அரபு தேசத்திற்குப் போகக்கூடாதா' என்று கேட்டதற்கு அவர்கள் 'ஒரு பாஸ்போர்ட்" வாங்கவேண்டுமென்றாலும் 50 ரூபாய், 100 ரூபாய் செலவழிக்கவேண்டியதிருக்கிறது. அந்தப் பணம் கூட எங்களால் செலவழிக்க முடியாத நிலையில் இருக்கிறோம்' என்று சொல்கிறார்கள். ஆகவே, அவ்வாறு போக விருப்பமுடைய ஏழைகளுக்கு கடனுதவி அளித்து பாஸ்போர்ட் போன்றவை கிடைப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஒரு கருத்தினை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல இன்றைக்கு அங்கே நல்ல வேலை வாய்ப்பிருப்பதாக பலபேர்கள் போகிறார்கள். ஆகவே, அரசாங்கமே ஒரு நிறுவனத்தை ஏற்பாடு செய்து உண்மையாக அங்கே வேலை வாய்ப்பு இருக்கிறதா அங்கே போனால் வசதியாக இருக்கின்றதா நிலைமைகள் இருக்கின்றனவா என்பதை ஆராய வேண்டும். அது மாத்திரமல்ல பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் முன்பு அங்கே சென்றிருந்தவர்கள் அகதிகளாகத் திரும்பி வந்த மாதிரி அப்படி ஒரு நிலைமை ஏற்படாமல் இந்த அரசாங்கம் கவனித்துக்கொள்ளும் வகையில் அவர்கள் அங்கே பெறுகின்ற ஊதியத்தைப் பெற்று சேகரித்து வைத்து பிற்காலத்தில் அவர்கள் திரும்பி வரும்போது அவர்களுக்கு வழங்குவதற்கு நல்லதொரு ஏற்பாட்டினைச் செய்யவேண்டுமென்ற கருத்தையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வேறுமாநிலங்களிலேஇது மாதிரி செய்கிறார்கள். ஆகவே, நாமும் வாய்ப்பு இருக்கும்போது விட்டுவிடாமல் தக்க ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 23] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

அதுமாத்திரமல்ல, இன்றைக்கு படித்தவர்களும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். படிக்காதவர்களும், வேலை இல்லாமல் இருக்கிறார்கள். படித்தவர்கள் வேலை இல்லாமல் இருப்பது ஆபத்து என்று அண்ணா அவர்கள் கூடச் சொன்னார்கள். ஆகவே, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற விதத்தில் கேரளம், வெஸ்ட் பெங்கால் மற்றும் மகாராஷ்டிரத்தில் இருப்பது போல் அன் எம்ப்ளாய்டு கேரன்டீ ஸ்கீம் என்ற அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட தொகை அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஸ்டேட் இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேடிவ் பாங்குகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா கூடச் சொன்னார்கள். இன்னும் அதிகமான அளவுக்கு இந்த பாங்குகளை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். பாய் முடைபவர்களுக்கும் கூடை முடைபவர்களுக்கும் இந்த இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் மூலம் உதவி அளிக்கும் அடிப்படையில் இருக்கவேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு ஆரம்பிப்பதற்குப் போதுமான பண வசதி இல்லை என்று சொல்லப்பட்டது. அதில் இருக்கின்ற முறை என்னவென்று சொன்னால் இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் பாங்கு கடன் உதவி செய்கிறது. ஆனால் அப்படிக் கொடுக்கின்ற அந்த கடனுதவிக்கு ரிசர்வ் பாங்கு மூலமாகவும், ஸ்டேட் பாங்கு மூலமாகவும் ரீஃபைனான்ஸிங் செய்வதற்கு எந்தவிதமான உதவியும் இல்லை. அதிகமான பணம் கொடுக்க வேண்டுமென்றாலும் கூட அவர்கள் கொடுத்ததாக விவரம் கிடையாது.

[முற்பகல் 10-50]

எனவே, இன்டஸ்ட்ரியல் கோவாபரேடிவ் பாங்க் கொடுக்கிற கடனுக்கு ரீஃபைனான்ஸிங் பெஸிலிட்டீஸ் கொடுக்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். இது பல ஆண்டுகளாக இருக்கிறது. நான் அமைச்சராக இருந்தபோது கூட சுப்பிரமண்யம் அவர்களைப் பார்த்துச் சொன்னேன், பை அவர்களைப் பார்த்து சொன்னேன். ஆனால் காரியம் நடைபெறவில்லை. இப்போது முதல் அமைச்சர் அவர்களுக்கு சுமுகமான உறவு இருப்பதன் காரணமாக இந்தக் காரியத்தை வெற்றிகரமாக நடத்தித் தரும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன். இது ஒரு முக்கியமான கார்ப்பரேஷன். இன்று மின் துறையும் எலக்ட்ரானிக் துறையும் வேகமாக வளர்ந்து வருகின்றன. எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் ஒன்று ஆரம்பிப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு சொன்னார்கள். அந்த எலக்ட்ரானிக்

கார்ப்பரேஷன் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்து அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த எலக்ட்ரானிக் கார்ப்பரேஷனுக்காக அட்ஹாக் ரூல்ஸ் தயாரித்திருப்பதாக தெரிகிறது. சர்வீஸ் கண்டிஷன்ஸ் பொறுத்தவரையில் அட்ஹாக் ரூல்ஸ் தயாரித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அதிலே ஒரு காட்டிகரியிலிருந்து மற்றொரு காட்டிகரிக்கு, ஜே. ஈ. யிலிருந்து ஏ.ஈ., ஏ.ஈ.யிலிருந்து ஈ. ஈ., ஈ.ஈ.யிலிருந்து எஸ்.ஈ., அஸிஸ்டெண்ட் டைரக்டரிலிருந்து டெப்டி டைரக்டர், டெப்டி டைரைக்டரிலிருந்து ஜாயின்ட் டைரக்டர் என்று போகப் போக படிப்பு முதல் வகுப்பு (பர்ஸ்ட் க்ளாஸ்) இருக்க வேண்டுமென்ற நிபந்தனை விதிப்பதாகத் தெரிகிறது. ப்ரமோஷன் என்று வரும்போது பர்ஸ்ட் க்ளாஸில் பாஸ் செய்தவர்களுக்கு மட்டும்தான் கொடுக்க வேண்டும் என்ற ஒரு விதிமுறை தயாரிப்பதாகச் சொல்கிறார்கள். இது வேறு எந்தக் கார்ப்பரேஷனிலும் கிடையாது. அப்படி முதல் வகுப்பு உள்ளவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தால் அதனால் அதிகமாக பாதிக்கக்கூடியவர்கள் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்பதை முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, இந்த அறிக்கையில் சக்தி பைப்ஸை எடுத்து நல்ல முறையில் நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் சார்பாக அதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் முதல் அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன். இந்த சக்தி பைப்ஸில் பணியாற்றி வந்த தொழிலாளர்கள், அந்த ஆலை மூடப்பட்ட காரணத்தால் வேலையில்லாமல் கஷ்டப்படுகிற நேரத்தில் அவர்கள் ஒரு போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தில் 500-க்கு மேற்பட்ட தெர்ழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள், தாய்மார்கள் உட்பட. இன்றைய அறிவிப்பின் அடிப்படையில் நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அந்தத் தொழிலாளர்களின் மேல் போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கோவை லஷ்மி மெஷின் வொர்க்ஸ், அங்கும் வேலை நிறுத்தம் நடைபெற்றது. முதல் அமைச்சர் அவர்களின் தலையீடு காரணமாக அந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. அதிலும் ஏராளமான தொழிலாளர்கள் வழக்குகளில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களின் மேல்

உள்ள வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை நிச்சயம் முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்னை, அதைச் சொல்லிவிட்டு என் உரையை முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். அதிகமாகப் பேசப்படுகிற பிரச்னை மால்கோ பிரச்னை. இந்த மால்கோ பிரச்னையைப் பொறுத்தவரையில் அந்த நிறுவனத்திடமிருந்து ஒன்பது கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த ஒன்பது கோடி ரூபாயை வசூல் செய்வதற்கு முன்னால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய்விட்டார்கள். நான் வழக்கிற்குள் போகவிரும்பவில்லை. எங்களுக்குத் தெரிய வருகிறது. அவர்கள் தொடர்ந்து ஸ்டே கேட்பது முறையாக ஆட்சேபனை செய்யாத காரணத்தால்,— தவறாக நினைக்கக்கூடாது— அட்வகேட் ஜெனரல் அவர்கள் சரியாக கோர்ட்டுக்குப் போகாத காரணத்தால்தான் என்று சொல்கிறார்கள், அந்த ஸ்டே அப்சல்யூட் ஆகிவிட்டது. இன்று அரசின் சார்பாக, மின்சார இலாகா சார்பாக கவுண்டர் ஸ்டேட்மெண்ட் போடப்படவில்லையென்று சொல்கிறார்கள்.

இதேமன்றத்தில் ஒரு கேள்வியை எழுப்பியபோது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எக்படீஷியஸ் டிஸ்போஸலுக்காக பெட்டிஷன் போடுவோம் என்று கருத்து சொன்னார்கள். இப்போது அது எந்தளவில் இருக்கிறது என்று தெரியவில்லை. முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், இந்த மால்கோ விவகாரம் பற்றி தெளிவு படுத்த வேண்டும்.

டி.ஐ.ஸி.யைப் பொறுத்தவரையில் ஈக்விட்டி அன்ட் ப்ரபரன்ஸ் ஷேர்ஸ் ரூ. 1,47,00,000 வழங்கியிருக்கிறது. எல். ஐ. ஸி. ரூ 59,75,000, யூனிட் ட்ரஸ்ட் ரூ. 76,53,000, இன்டஸ்ட்ரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ரூ. 27,90,000 வழங்கியிருக்கிறது. அதிலே 'Dividend on equity-prefeesnce shares' 1970-லிருந்து கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. இந்த நிலைமைகளை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ் நாட்டில் பல்வேறு சர்க்கரைத் தொழிற்சாலைகள், சிமின்ட் தொழிற்சாலைகள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. இந்த நிலையில் அரசாங்கத்தினிடத்தில் மினி சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கான குறிப்பு இருந்தது. இதற்கான எல்லாக் குறிப்புகளும் அரசாங்கத்தினிடத்தில் இருக்கின்றன என்று அறிகிறேன். இப்படிப்பட்ட மினி சர்க்கரை ஆலை

[திரு. எஸ். ஜே. சாதிக்க பாட்சா] [1978 மார்ச் 23

ஆரம்பிப்பதின் மூலமாக சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்காக கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு செய்வதை தவிர்க்க முடியும் என்றும், அதே நேரத்தில் சிறு சிறு தொழிற்சாலைகளை வளர்க்கவும் முடியும். இப்படிப்பட்ட மினி சர்க்கரை ஆலை ஒன்றை நமது புலவர் (கோவிந்தன்) அவர்கள் செய்யாறில் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக சொல்லியிருந்தார்கள். அதையும் முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மினி சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதைப்போலவே மினி சிமின்ட் ஆலையையும் துவக்கலாம் என்ற கருத்தும் இருந்து வந்தது, அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கையாடல் போன்றவைகளுக்கு கண்டிப்பான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லும்போது, அது எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரியாக அமைந்திட வேண்டும். உடுமலைப்பேட்டையிலுள்ள அமராவதி சர்க்கரை ஆலையிலுள்ள கான்டீனில் 4,000 ரூபாயும் கையாடல் செய்ததற்காக மூன்று பேர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருந்தார்கள். பின்னால் என்ன நடைபெற்றதோ தெரியவில்லை, இரண்டு மாதங்களுக்கு முன் எந்த வித விசாரணையுமின்றி மீண்டும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது நியாயம் தானா? என்று கேட்கின்ற நேரத்தில், அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையில் இது போன்ற நிலைமையில் சிலரை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. அங்கு ஒரு நடவடிக்கையும் இங்கு ஒரு நடவடிக்கையும் என்றிருப்பது சரிதானா என்பதையும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, தொழில்துறையில், ஒரு மந்தமான நிலை, ஸ்டாக்னேஷன் இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு அதிகாரிகள் பொறுப்பல்ல, நம்முடைய தொழில் துறையைப் பொறுத்தவரையில், நல்ல திறமையான, சுறுசுறுப்பாக செயல்படக் கூடிய அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களை நல்ல முறையில் இயக்குவதின் மூலம், அவர்களை வேகப்படுத்துவதின் மூலம் நல்ல முன்னேற்றம் காண முடியும். வேறு அல்ல. இந்த அறிக்கையில் எதிர்பார்த்த அளவுக்கு எந்தவித புரட்சிகரமான புதிய திட்டங்களையும் காண முடியவில்லை. இன்னும் சொல்லப்போனால், ஒரு மாணவன் ஒரு பள்ளியில் படிக்கும் போது, பரிட்சை முடிந்தபின்னால், ரிக்கார்டு ஷீட் கொடுப்பார்கள். அதில் சில பாடங்களில்—அதாவது பாஸ் செய்திருக்கின்ற பாடங்களில் பாராட்டியும், 'பெயில்' லாகியிருக்கின்ற பாடங்களில் குறையாகவும் சொல்லப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட ஒரு ரிக்கார்டு ஷீட் போல் தான் இந்த அறிக்கை இருக்கிறது. இதில் கொள்கை தெளிவு இல்லை என்பதை கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

1978 மார்ச் 23]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மான்யக் கோரிக்கையின் மீது மாமன்றத்தைச் சேர்ந்த பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தினை எடுத்து வைத்திருக்கிறார்கள். சிறந்த யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் கடமை உணர்வோடு நன்றி கூற முன் வருவது இயற்கை என்பதை ஏற்றுக்கொள்வார்கள். கொள்கை, லட்சியம் என்பதைப்பற்றி நான் சொல்லித் தெரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு இங்கு உறுப்பினர்கள் இல்லை என்பதை அறிந்தாலும் தன்னிலை விளக்கம் என்பது போல் என்னுடைய கருத்தினை வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

லட்சியம், கொள்கை என்பது ஒரு மனிதனுடைய உள்ளத்தில் உருவாகி, அது வரிவடிவமாகி திட்டங்களாக விதிமுறைகளாகச் செயல்படும்போது அது உயிரோட்டம் பெற்று சரியாகப் பயன்படும்போது அந்த லட்சியம் தன்னுடைய குறிக்கோளை நோக்கி நடைபோடுகிறது என்று கொள்ளலாம். ஒரு மனிதனுடைய உள்ளத்தில் தோன்றுகின்ற எண்ணங்கள் பலரால் ஏற்றுக்கொள்ளப்படும்பொழுது, அந்த லட்சியம் மக்களுடைய தேவையின் எதிரொலியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அது திட்டமாக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்ற அளவுக்கு, பெரும்பான்மையினருடைய வற்புறுத்தலும் கட்டளையும் அங்கு உயிர் பெறுகிறது.

(முற்பகல் 11-00)

ஆனால் கொள்கையை ஏற்றுக்கொண்டு பலர் ஒன்றுகூடி இதை எப்படி நிறைவேற்றுவது என்கிற வகையில் தங்களுடைய ஆசைகளை எடுத்துச் சொல்லி, அந்தக் கொள்கையை நிறைவேற்றுகின்ற வழிமுறைகளை, வாய்ப்புக்கேற்ப வசதிக்கேற்ப பயன்படுகின்ற அளவில் செயல்படும்போது, பாராட்டும் கிடைக்கும், சில சமயம் அதற்குக் குறைபாடுகள் உண்டு என்கிற முறையில் கண்டிப்பும், கண்டனமும் கிடைக்கும். இது தவிர்க்க முடியாத ஒன்றாகும் என்பதில் நான் கருத்து வேறுபாடு கொள்ள விரும்பவில்லை. ஏனென்றால், முற்றும் தெரிந்தவர்கள், முழுதும் தெரிந்தவர்கள் யாரும் உலகத்தில் இன்னும் பிறந்துவிடவில்லை என்பதுதான் வளருகின்ற, வளர்ந்து கொண்டிருக்கின்ற இயற்கைத் தத்துவத்தின் அடிப்படையில், காலமாற்றத்தின் கட்டளையில் இது நியாயம் என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்ற காரணமாக இருக்கிறது.

எங்களைப் பொறுத்தவரையில், தொழில் துறையில் கூட்டுறவுத் துறை, தனியார் துறை, பொதுத் துறை அதாவது நாட்டுடைமையாக்குகின்ற கொள்கை என்றெல்லாம் நாங்கள் கொள்

கையை வகுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லும்போது, முன்னாலே இருந்த பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும், இப்படிப்பட்ட கொள்கைகளைச் சொல்லாமல் இல்லை, செயல்பட முன்வராமல் இல்லை என்பதை நான் சொல்லியாக வேண்டும். ஆனால், இங்கே கூறப்பட்ட குறைபாடுகளைப் போல், பல்வேறு குறைபாடுகளை பல ஆண்டுகளாக இங்கே மட்டுமல்ல, பல மாநிலங்களிலே, பல வெவ்வேறு நாடுகளிலேகூட சொல்லப்பட்டு கொண்டிருக்கின்றன, வந்திருக்கின்றன. இன்னும் சொல்லப்படலாம். ஒவ்வொரு மனிதனுடைய அறிவும், ஆற்றலும் எந்த அளவுக்குத் தீவிரமாக வளரக்கூடிய வாய்ப்பு பெறக்கூடிய மக்களாக அமைகின்றார்களோ, அதற்கு ஏற்ப அவர்கள் புதிய புதிய கருத்துக்களைச் சொல்ல முடியும். ஒருவருக்குப் புரட்சி என்று தோன்றுவது, ஒருவருக்கு மருட்சியாக இருக்கலாம். அல்லது வறட்சியாக, அதிலே ஒன்றும் அதிகமில்லை என்றும் இருக்கலாம். அதிலே நான் மாறுபட்டு பேச விரும்பவில்லை.

புதுமை என்பதிலும், எங்கிருந்தோ கிராமப்புறத்திலிருந்து ஒருவர் வருகிறார். அவர் நகரத்தைப் பார்க்கும்போது, இங்குள்ள மின்சார அலங்காரத்தை, மின்வெட்டுகளைப் போன்ற பல அமைப்புகளைப் பார்க்கும்போது, அவருக்கு அவைகள் புதுமையாக இருக்கும். ஆனால் நகர்ப் புறத்திலே உள்ளவருக்கு, அதிலே புதுமை தெரியக் காரணம் இருக்காது. அதுபோல் எங்களுடைய மானியக் கோரிக்கை, எங்கள் திட்டங்கள் எல்லாம், பல திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று நம்புகிறவர்களுக்கு புதுமையாக இருக்காது; புரட்சியாகவும் இருக்காது. அதிலும், அதிக நம்பிக்கை எங்கள் மீது வைத்து, ஒரு ஆறு மாதங்களுக்குள் அல்லது ஒரே ஆண்டிற்குள் பல ஆண்டுகளாகத் துவங்கியவற்றையெல்லாம் செய்து முடித்துவிடக் கூடியவர்கள் என்ற பெருநம்பிக்கை வைத்திருக்கிறவர்களுக்கு, இது குறைபாடு உள்ளதாகத் தோன்றலாம். அவர்கள்மீது குறைபடுவதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. ஆனால் நடைமுறையில் பேசும்போது, இங்கே ஒவ்வொரு மானியக் கோரிக்கையின் பேரிலும் பேசும்போது ஒன்றைச் சொல்ல பல நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் தவறவில்லை. அதிலும் குறிப்பாக, இன்றைய தினம் பிரதான எதிர்க் கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்கள், எப்போதும் ஒன்றைச் சுட்டிக்காட்ட அவர்கள் விரும்புகிறார்கள். அது அவர்களுடைய உரிமை. ஆனால் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மிகப் பெரிய திட்டங்கள், கனரகத் தொழிற்சாலைகள் போன்ற திட்டங்கள் எல்லாம் தொடங்கிய ஆறு மாதங்களுக்குள் முடிந்துவிடக்கூடியவை அல்ல என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ள

வேண்டும். அப்படிப்பட்ட திட்டங்கள் தொடங்கப்பட்டு, குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்பட முடியவில்லை என்கிற ஒரே காரணத்திற்காக, வேறு எந்த அரசாவது மாறி பொறுப்பை ஏற்கும்போது செலவு செய்துள்ளதைத் தூக்கி எறிந்துவிட முடியாது, ஒதுக்கிவிட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஆகவே, அதைத் தொடருகின்ற நேரத்தில் , இந்தத் திட்டம் நாங்கள் உருவாக்கியது தானே என்று சொல்வதும், இந்தத் திட்டம் ஐந்தாண்டுகளுக்கு முன்பு போடப்பட்டதுதானே என்று சொல்லுவதும் பெருமை தரக்கூடியதாக அவர்களுக்கு இருந்தாலும், நாங்கள் அதைக் கெடுக்காமல் அவைகளுக்கு ஒரு புது வடிவம் கொடுத்தோ அல்லது மக்களுக்குப் பயன்படும் வகையில் அதை எப்படியும் நிறைவேற்றுவதற்கு வழிவகை காண வேண்டுமென்ற ஆர்வத்தில் தொடருவது தவறு என்று கூறமாட்டார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, பல்வேறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையாமல் இருக்கின்ற நிலையில் ஆறாண்டுத் திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டங்கள், பத்தாண்டுகளிலேயே முடிக்கக்கூடிய வகையில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் போன்றவைகளை எல்லாம் திட்டங்கள் அமைத்து உருவாக்கிய பிறகு அதை முடித்துவிடக்கூடிய வாய்ப்பு இல்லாமல் இருந்துவிட்ட திட்டங்களை முன்னால் பொறுப்பிலே இருந்தவர்களுக்கு, அவைகளைத் தொடர வேண்டுமென்ற எண்ணம் இருக்காது என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

அந்த வகையில் சிலவற்றை நாங்கள் ஏறத்தாழ முழுமையும் என்று கூட சொல்லலாம். தமிழக மக்களின் வரிப் பணத்தை செலவு செய்து திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்டதிலே குறைபாடுகள் இருப்பதாக இருந்தாலும் அவற்றைச் சீர்படுத்துவது தொடர்ந்து மக்களுக்காகப் பயன்படும்படியான வகையில் அதை நிறைவேற்றவேண்டுமென்று நாங்கள் விரும்புவதை தவறு என்று கருதமாட்டார்கள் என்று நம்புகிறேன். அதோடு மட்டுமல்ல, அதைக் குறிப்பேட்டில் வைப்பதோ அல்லது பட்ஜட்டில் மானியக் கோரிக்கையில் சேர்ப்பதோ அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வார்கள் என்பதிலே நான் நம்பிக்கை கொள்கிறேன்.

இந்தக் குடிசைத் தொழில்கள், பிற்பட்ட, தொழிற்துறையிலே வாய்ப்பு கிடைக்காத வாழ்க்கையிலே சிறிதளவு கூட நல்ல வாழ்க்கை அமைப்பைப் பெற முடியாத நிலைமையில் இருக்கிற கிராமப்புற மக்களுக்கு நல்ல வகையில் ஏதாவது ஒரு சிறப்பான மிக சிறப்பான வாழ்க்கையை அமைத்து கொடுக்க முடியா விட்டாலும் குறைந்த அளவுவாழ்க்கை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டு

மென்ற நோக்கம் எங்களுக்கு இருக்கிறது. என்பதிலே யாருக்கும் அவநம்பிக்கை இல்லை என்பதை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பேச்சிலிருந்து தெரிந்து கொண்டதற்காக உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பேசிய ஒவ்வொருவரும் எங்கள் நோக்கத்தைக் குறை கூற வில்லை என்பதை எண்ணிப்பார்க்கும்போது உண்மையிலேயே நான் மன நிறைவு கொள்கிறேன். அதுமட்டுமல்ல. நாங்கள் ஏற்படுத்தி தர இருக்கிற திட்டங்கள், அவைகளின் மூலமாக வெளியிடப்பட்டிருக்கிற குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பது போன்ற செலவினங்கள் மட்டுமல்லாமல் ஒவ்வொருவருடைய உள்ளத்திலே இருந்து எழுந்த அது ஒரு எழுச்சிக் குரலாகவும, சில சமயம் போர்க்குரலாகவும், சில சமயம் கண்டனக் குரலாகவும் அந்த கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டாலும் அவர்கள் எங்கள் மேல் வைத்திருக்கிற நம்பிக்கைக்கு நான் நன்றி கூற மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பட்ட பகுதிகளிலே இருக்கிற மக்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டுமென்பதிலே இந்த மன்றத்திலே இருக்கிற யாருக்கும் ஒருவருக்குக்கூட மாறுபட்ட கருத்து கிடையாது என்பது எனது திடமான நம்பிக்கை. அதற்கு மாருக யார் சொன்னுலும் அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை.

ஆனுல் நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லை என்று சொல்லப்படுகிற கண்டனத்தை நான் கொஞ்சம் சிந்தித்து பார்க்கிறேன். என்ன சொன்னேம்? எவை எவைகளைச் செய்ய முற்பட்டோம் என்பதைநான் நீண்டபிரசங்கமாக இதற்கு முன்னுல் வைக்கப்பட்ட மானியக்கோரிக்கையின் மீது முழுமையாக பேச முடியாமல் இரண்டரை மணி நேரத்திற்குள் பேச்சைக் குறுக்கிக்கொள்ளும் நிலைமைக்கு ஆளானேன்—இல்லாமல், நீண்ட பேச்சாக சொல்லாமல் குறிப்பேட்டில் ஆய்வுரையில் அவர்களே படித்து தெரிந்திருப்பார்கள். நான் குறிப்பிட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சாதிக் பாட்சா போன்றவர்கள், சங்கரய்யா போன்றவர்கள், மாண்புமிகு துரை முருகன் போன்றவர்கள் அதிலே ஓரளவிற்குத் தெரிந்திருப்பதை நான் வரவேற்கிறேன் என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-10)

கிராமப்புற மக்களுக்கு என்ன என்ன காரியங்களைச் செய்வோம் அவைகளைச் செய்வோம் என்று சொல்லி ஒரு பட்ஜெட் வந்து, அதிலே ஒன்றும் இல்லை என்று சொல்லும்பொழுது, நான் கொஞ்சம் நினைத்துப்பார்க்க ஆசைப்படுகிறேன். அதிலே ஒன்றைச்

சொன்ஞர்கள் முன்பு இருந்ததைவிட இப்போது ஒன்றும் அதிகமாகச் செய்யவில்லை,- கொள்கைகளிலிருந்து வழுவுகிருர்கள் என்ற நிலையில் இங்கே திட்டங்கள் தரப்படுகின்றன என்று கூட குறை கூறப்பட்டது.

நான் ஒன்றைச் சொல்வேன். 1972-73 ஆம் ஆண்டில் தனியார்கள் 166 என்று இருந்தது. நான் வரிசையாக அவைகளைப் படித்துக்கொண்டுபோக நேரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இப்போது எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதை எப்படி அதிகமாக, 1974இல் 210 ஆகி, 1975ல் 268 ஆகி பிறகு 1975-76-ல் 184 ஆகி மீண்டும் 1976-77ல் 173 ஆகி 1977-78-ல் 145 ஆக ஆகியிருக்கிறது. ஆகவே தனியார் துறைக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிரேும் என்ற குற்றச் சாட்டு ஒரு பக்கம்.

ஆனுல் அதே சமயத்தில் அதே கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிருர்கள். கனரக தொழிலுக்கு தனியார் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொல்கிருர்கள். மால்கோவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் இங்கே சொன்ஞர்கள். அதே போல் மாண்புமிகு உறுப்பினர் திரு சாதிக் பாட்சா அவர்களும் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். இந்த வழக்கு ஏன் போடவில்லை, ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்பது இங்கே இருக்கின்ற மாமன்றத்திலே இருக்கின்ற அனைவருடைய உரிமை என்பதை நான் மறுக்கவில்லை. இன்னும் இந்த மாமன்றத்திலே இருக்கின்ற பொறுப்பு வாய்ந்த உறுப்பினர்கள் கேள்விகள் கேட்டிருக்கிருர்கள்.

நான் எல்லாவற்றையும் சொல்லி நேரத்தை வீணுக்காமல் ஒன்றிரண்டை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஒரே கட்சியிலே இருக்கிறவர்கள் என்ன சொல்லியிருக்கிருர்கள் என்பதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றை திரு சாதிக்பாட்சா அவர்கள் தயவுசெய்து கூறவேண்டும். அவர்கள் ஆட்சியிலிருந்த போது எத்தனை முறை இந்த மால்கோ நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்தார்கள் என்று சிந்தித்துப் பார்த்தால் அப்படி வழக்குத் தொடரப்பட்டதா என்ருல் சரியான பதிலை தனக்குள்ளேயே அவர்கள் சொல்லிக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னுடைய பாயின்ட், நீங்கள் வழக்குத் தொடர்ந்தீர்கள், ஆனுல் ஒழுங்காக நடவடிக்கை தொடரவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஒரு கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது என்று சொல்கிறீர்கள், கடந்த காலத்திலே நடவடிக்கை எடுக்கவில்லை, நாங்கள் எடுக்கிரேும்

என்று சொன்னீர்கள், ஆனால் கோர்ட்டிலே போய் சரியான நடவடிக்கையை எடுக்கவில்லை என்பது தான் எங்களுடைய வருத்தம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவர்கள் ஆட்சியிலே வழக்குத் தொடரவில்லை, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு வழக்குத் தொடர முயற்சித்தோம் என்பதை அறிவித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்பது இப்போதுள்ள குற்றச்சாட்டு. அவற்றைப்பற்றி விரிவான விளக்கத்தை நான் பெறுவதற்குரிய வகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை மட்டுமல்ல, எனக்குத் தெரிந்த வரையில் சிறிய அனுபவம் பெற்றவன் என்ற முறையிலே தெரிவித்துக் கொள்கிறேன், எந்த நிறுவனமாக இருந்தாலும் இரண்டு இயக்குநர்களுக்கு மேல் அனுமதித்ததாக நான் கேள்விப் பட்டதில்லை, பல இடங்களிலே இருக்கலாம், இவ்வளவு பெரிய தொழிற்சாலையில் அண்ணன், தம்பி நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டு செயல் பட்டிருக்கிறார்கள்.

நாங்கள் வந்தபிறகுஒருவருடையபணிக்காலம் முடிந்துவிட்டது. இன்னொருவர் தானாக இராஜினாமா செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தினோம். அதுமட்டுமல்ல, மேட்டூர் பகுதியிலிருந்த மேனேஜிங் டைரக்டரை அந்தப் பதவியே இல்லாமல் நீக்கிவிட்டோம். மேலும் அதை நாங்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்து கொண்டிருக்கிறோம். பெனால்ட்டியின் விளைவாக 9 கோடி ரூபாய் ஆயிற்று என்பதையும், இதைவிட அதிகமாக நாங்கள் போட வேண்டுமென்று யாரும் விரும்ப மாட்டார்கள் என்றும் கருதுகிறோம்.

இந்த மால்கோ விஷயத்தைப் பொறுத்த வரையில் அவர்களுடைய அந்தப் பங்குதாரர்கள் இருக்கிறார்களே அவர்கள் ஒவ்வொருவரும் போட்ட மூலதனம் எவ்வளவு என்று எண்ணிப் பார்த்தால் கொஞ்சம் வேடிக்கையாகவும் இருக்கும், ஆனால் அவைகளை எப்படி அனுபவித்து வந்தார்கள் என்பதை, குறையாகக் கூற விரும்பவில்லை, எப்படியாவது நல்ல ஒரு தொழிற்சாலை வர வேண்டுமென்ற ஆர்வத்தில் அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கலாம். ஆனால் பயன்படுத்தியவர்கள் தவறு செய்தார்கள் என்ற நிலையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை அரசுக்கு இருக்கிறது என்பதால் முயன்று கொண்டிருக்கிறோம், கடமையை ஆற்றுவதில் அரசு முனைந்திருக்கிறது. எந்தக் காரணத்தைக்கொண்டும், எதற்காகவும், தமிழக அரசு இப்படிப் பட்ட நிலைமைகளுக்கு அனுதாபம் காட்டுவதோ, இரக்கம் காட்டுவதோ, விட்டுக் கொடுப்பதோ என்கின்ற நிலையில் இருக்

காது என்பதையும், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சந்தேகப் படுகின்ற அளவிற்கு அங்கே நிலைமைகள் வழக்கு மன்றத்திலே நடந்து இருக்குமேயானால் யாராயிருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்களே மால்கோ விவகாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்போம் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். யார் டைரக்டர்களாக இருந்தார்கள் என்பது பிரச்னை அல்ல. நாங்கள் எழுப்புகின்ற பிரச்னை என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் அதைத் தேசீய மயமாக்கிற்று. அந்தத் தொழிற்சாலையை நேஷனலைஸ் செய்தபிறகு மத்தியசர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லை. 9 கோடி ரூபாயைக் கட்ட வேண்டுமென்ற பொழுது அவர்கள் ஸ்டே வாங்கப் போகிறார்கள். அப்பொழுது அட்வகேட்-ஜெனரல் நின்று எதிர்த்து வழக்காடியிருக்க வேண்டும். ஆனால் முதன்முறை அவர் வழக்கு மன்றத்திற்கே போகவில்லை. அடுத்தாற்போல் 'அப்சல்யூட் ஸ்டே'-க்குப் போகின்ற பொழுது, அப்பொழுது அதே நிலைமை நடந்தது என்று தெரிகிறது. அரசு தரப்பிலேயிருந்து 9 கோடி ரூபாய்க்காக எதிர் வழக்காட ஏன் கோர்ட்டுக்கு அவர் போகவில்லை. இதற்கு அட்வகேட் ஜெனரல் வர வேண்டியதில்லை என்று கூறினால், $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் கட்ட வேண்டிய வழக்கிற்கு, அட்வகேட்-ஜெனரல் அவர்கள் சிட்டி சிவில் கோர்ட்டுக்கு வந்திருக்கிறார் அலையோசை மீது வழக்கு நடந்த பொழுது அட்வகேட் ஜெனரல் அவர்களே சிட்டி சிவில் கோர்ட்டுக்கு வந்திருக்கிறார்களே, அப்படியிருக்க அவர்கள் ஏன் ஹைகோர்ட்டுக்குப் போகவில்லை. அப்படிப் போகாமல் இருந்தால் தவறு என்று ஒத்துக்கொண்டு அட்வகேட்-ஜெனரல் மீது நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால், யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, யாரார்க இருந்தாலும் நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னதிலிருந்து இங்கே வேறுபட்ட கருத்து இருக்காது என்பதை மாண்மிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்வார்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். அதோடு எப்படி விட்டுக் கொடுத்து விட்டோம், அங்கே என்ன தீர்ப்பு ஆகியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். ஜனவரி 1-ஆம் தேதியிலிருந்து அவர்கள் தர வேண்டிய, மத்திய அரசு என்ன

கட்டணம் விதித்திருந்தாலும், தமிழக அரசிலே இருக்கின்ற மின்சார போர்டு எந்தக் கட்டணத்தை விதித்திருக்கிறதோ அதைக் கொடுக்க வேண்டுமென்ற கட்டணத்தை நம் வழக்கு மன்றத்தில் பெற்றிருக்கிறோம். ஆகவே ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து அவர்கள் அந்தப் பணத்தைக் கட்டமாக வேண்டுமென்ற செய்தி எனக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வகையில், வாங்காமலேயிருந்து தள்ளிப்போன நிலைமை மாறி, ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து கண்டிப்பாக அவர்கள் விதிக்கின்ற கட்டணத்தைக் கட்டியே ஆக வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, பழைய கட்டணத்தையும் சேர்த்தா, புதிதாகப் போடப்படும் கட்டணத்தையா ? பெனல்டி போட்டிருக்கிறார்கள். அதையும் சேர்த்தா ? அல்லது இனிமேல் எலக்ட்ரிசிட்டி போடும் கட்டணத்தை மட்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்பதை முறையாக எழுந்து கேட்கவேண்டும். மைக் இல்லை, நீங்கள் பேசிக்கொண்டே போகிறீர்கள் ?

[முற்பகல் 11.20]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, அவரே சொன்னார், நான் சிறுவன், இளைஞன். ஆகவே, நான் துடிப்போடு இருக்கிறேன் என்று அவர் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, கொஞ்சம் வேகமாகப் பேசுவதிலே அவர் அக்கறை காட்டும்போது நாம் ஒத்துக்கொள்வோம் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லை, எனக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்ட சபையிலே, எல்லாம் ஒன்றுதான், வயதைப் பொறுத்ததல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தயவு செய்து உங்கள் தம்பிக்கு (திரு. துரை முருகனுக்கு)ச் சொல்லுங்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, எனக்குப் பெயரே முருகன், அப்பன் சாமி என்று பெயர்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவருடைய செயலிலேயிருந்து புரிகிறது என்று பேரவைத் தலைவருக்குத்

தெரிவித்துக் கொள்கிறேன். அப்பன் சாமி அல்ல, தகப்பன் சாமி என்று சொல்வார்கள். பழமொழியிலே, பழக்கத்திலே உள்ள வார்த்தைகளைச் சொல்கிறேன்.

இந்த நிலைமைகளெல்லாம் நாங்கள் எவ்வளவு அக்கறையோடு, கவனத்தோடு செய்ய முயலுகிறோம் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்கிறேன். மேலும், அதைப்பற்றி, எந்த வகையில் வழக்கைத் தொடருவது, தமிழக அரசுக்கு வரவேண்டிய பணத்தைப் பெறுவது என்பதிலே நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சொன்னவைகளையெல்லாம் நீங்கள் காப்பாற்றவில்லை என்பது போல் இங்கே பேசப்படுகிறது. நான் நிறைய பேச வேண்டுமென்று விரும்பவில்லையென்றாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், 1977 ஜூலை நிதிநிலை அறிக்கையில், வருகின்ற 12 மாத காலத்தில் 10,000 புதிய சிறு தொழில்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. முதல், 6 மாதங்களில், அதாவது டிசம்பர் 1977 முடிய 6,400 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன.

1977, ஜூலை நிதிநிலை அறிக்கையில் சிறிய தொழில்களிலும், சொந்தத் தொழில்களிலும் வருகின்ற 12 மாத காலத்தில் 1 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படும் என்று அறிவித்திருந்தோம். முதல் 6 மாத காலங்களில், அரசின் வேண்டுகோளின் அடிப்படையில், வணிக வங்கிகள் சிறு தொழில்களுக்கும் சொந்தத் தொழில்களுக்கும் ரூ. 27 கோடி அளவிற்குக் கடன் உதவி அளித்தன. அதன் மூலமாக, டிசம்பர் முடிய 49,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அது போக, புதிய அறிவிப்புகள் எதுவுமே இல்லையென்று சொன்னார்கள். ஒன்றிரண்டை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். 50,000 பேருக்கு மேற்படாத மக்கள் தொகை கொண்ட பகுதியில் ரூ. 1 இலட்சம் மூலதனத்துடன் தொடங்கப்படும் சின்னஞ்சிறு தொழில்களுக்கு 'டைனி செக்டார்' 10 சதவிகிதம் மூலதனம் வரை 4 சதவிகிதம் வட்டியில் சலுகைக் கடன் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. விவரங்கள் விரைவில் வெளியிடப்படும்.

இங்கே சொன்னார்கள், மாக்னீசியம் உலோகத் தொழிற்சாலை
ஆரம்பிக்கவில்லையே, அது வீணாகிறதே என்று சொன்னார்கள்.
அந்த வகையில், உப்புக் கரிசலை அடிப்படையாகக் கொண்டு
மின்சாரத்தின் மூலம், மாக்னீசியம் உலோகம் உற்பத்தி செய்யும்
தொழிற்சாலை சுமார் ரூ.3 கோடி செலவில் தமிழ் நாடு தொழில்
வளர்ச்சி நிறுவனமும் மத்திய அரசின் ஆராய்ச்சி நிலையங்களும்
சேர்ந்து நிறுவுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இப்படி, கனரகத் தொழிற்சாலைகள் என்கிற வகையில்
எங்களுடைய கடமையைச் செய்து கொண்டிருக்கிறோம் என்
றாலும் கிராமப் புறங்களிலே நீங்கள் என்ன செய்தீர்கள் என்ற
கேள்வி இருக்கிறது. அதற்குப் புள்ளி விவரங்கள் தரப்பட்டிருக்
கின்றன என்ற காரணத்தால், அதைப்பற்றி நான் நீண்ட
பேச்சை இங்கே பேச விரும்பவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

நமது மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள், 7 மாவட்டங்களில்
நீங்கள் இப்படிப்பட்ட அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்
கிறீர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்த்துக் கொள்ளக்
கூடாதா என்று கேட்டார்கள். அதையும் சேர்த்துக் கொள்ள
முடிவு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு
கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இரப்பர்
தொழிலைப் பற்றி இங்கே நிறையப் பேசினார்கள். நாகராஜன்
என்பவர், அவர் எவ்வளவு மூலதனம் போடுவதாகச் சொன்
னாரோ அந்த அளவுக்கு அவரால் பணம் சேர்க்க முடியவில்லை.
ஆனால் தமிழக அரசே 60 லட்சம் ரூபாய் அதற்காக செலவிட்
டிருக்கிறது. அதை எப்படி சரி செய்வது என்பதைப் பற்றி
இன்னும் மூன்று மாதத்திற்குள் எனக்கு முடிவான தகவல்
தெரிவிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட நபர்களை
ஏற்பாடு செய்து அந்தப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்
திருக்கிறோம். அது விரைவிலே வரும். அதற்குப் பிறகு முறை
யாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படும்.
சட்ட மன்றம் நடைபெறாமல் இருந்தால் பத்திரிகைகள்
வாயிலாக வெளியிடப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்
கொள்கிறேன்.

10 ஆண்டுத் திட்டம் தீட்டப்பட வேண்டும் என்று, மாண்பு
மிகு உறுப்பினர் அம்பிகாபதி என்று கருதுகிறேன், அவர்கள்
குறிப்பிட்டிருந்தார்கள் என்று நான் கவனித்தேன். 5 ஆண்டு
திட்டங்கள் தீட்டி, 5 ஆண்டுகள் முடிந்த பிறகு நாம் நினைத்தது
நிறைவேறவில்லையே, இத்தனை ஆயிரம் கோடி ரூபாய்கள் செல
வழித்தும் நாம் யாருக்காக செலவழிக்க வேண்டும் என்று எண்ணி
னோமோ அது அந்த மக்களுக்குப் போகவில்லையே என்று
தொடர்ந்து சில புதிய புதிய திட்டங்களை மாற்றி, மாற்றி
அமைக்கின்ற நிலைமைகளுக்கு மாறாக, ஐந்தாண்டுத் திட்டங்களைப்
போட்டாலும் அதை ஓராண்டு முடிந்த உடன், பரிசீலனை செய்து
அது சரிவர செயல் பட்டிருக்கிறதா, ஐந்தாண்டுகளுக்கு நாம்
திட்டம் போட்டு செயல்படுத்தப் போகிறோமே அது ஓராண்
டிற்குள் என்ன பலனை உருவாக்கி இருக்கிறது என்பதைப் பரிசீலனை
செய்து அதையே தொடரலாமா, அல்லது இந்த அனுபவங்களைப்
பயன்படுத்தி இரண்டாண்டுகளுக்குப் பிறகு, 3-வது ஆண்டு,
4-வது ஆண்டு, 5-வது ஆண்டு என்கிற நிலைமைக்கு மாற்றி
அமைக்க வேண்டாமா என்பதைப் பரிசீலனை செய்கிற முறையை
நாம் ஏற்றுக் கொள்வதிலே தவறு இல்லை? தெரிவித்துக் கொள்
வதிலே நான் உண்மையிலேயே நம்பிக்கை வைத்திருக்கிறேன்.
அந்த வகையிலே செயலாற்றும் போது ஏமாற்றங்கள் குறை
வதற்கும் தவறுகள் அதிகமாக நிகழாமல் இருக்கவும் அது உதவும்
என்பதிலே இந்த அரசுக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதை நான்
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பற்றியும், அது எப்படி நடை பெற
வேண்டும் என்பதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் சங்க
ரய்யா அவர்கள் இங்கே அவர்களுடைய எண்ணங்களை, கருத்
துக்களை வெளியிட்டார்கள். அதிலே குறிப்பாக அவர் எடுத்துச்
சொன்னதில் ஜப்பானிலிருந்து அந்த இயந்திரம் வாங்கப்பட
வேண்டுமா, இங்கே பெட்ரோலிலே பயன்படுத்துகிற வகையிலே
படகை ஓட்டுவதற்கு அந்த இயந்திரம் கிடைக்கிறது. ஆகவே,
அதை ஜப்பானிலே போய் டீசல் என்பதற்காக ஏன் வாங்க
வேண்டும். நமது பணம் அங்கே போக வேண்டுமா, இங்கே
மாற்றம் செய்கிற வரையில் இங்கேயே வாங்கக் கூடாதா என்ற
நல்ல கருத்தை அவர்கள் வெளியிட்டார்கள். ஒன்றை நான்
சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசு அதில் எந்த விதமான
முடிவும் எடுக்கவில்லை என்றும் அதைப் பற்றிச் சிந்தித்து எது
சரி, எது தமிழகத்திற்கு நல்லது, எது தமிழக மக்களுடைய
வரிப் பணத்திற்குச் சேதம் விளைவிக்காமலும், நஷ்டம் ஏற்படுத்
தாமலும் இங்கே பயன்படுத்தும் முறையில் பயன்படும் என்பதை
சீர் தூக்கிப் பார்த்து நிபுணர்களைக் கலந்து அதற்குப் பிறகுதான்
அது பற்றி முடிவு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்
சங்கரய்யா அவர்களுக்கும் மற்றுமுள்ள பேர்களுக்கும் இங்கே
நான் உறுதி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11—30)

அதைப் போல, அந்தக் காகிதத் தொழிற்சாலையை டிட்கோ நிறுவனத்தின் உதவியோடு, அவர்கள் 15 சதவிகிதம், டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி என்பவர் 25 சதவிகிதம், ஐடிபி, பொது மக்கள் பலர் என்ற வகையில் 60 சதவிகிதம் போடுகிறார்கள். அந்த நிர்வாகத்தின் தலைவராக டிட்கோவின் தலைவர் இருந்து பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள்கூட கேட்டார்கள். தனியார் 26 சதவிகிதம் போடுகிறார்கள். அரசு 25 சதவிகிதம் போடுகிறது. (குறுக்கீடு) மக்களும் மற்றவர்களும் சேர்ந்து அதிகமாகப் போடுகிறார்கள். நிர்வாகம் மட்டும் அவர்களிடம் இருக்கிறதே என்ற அடிப்படையிலே கேட்டார்கள். இந்த அரசு அதைப் பற்றி ஆழ்ந்து யோசித்துக் கொண்டு இருக்கிறது. இதனால் சில தொழிற்சாலைகள் தொடங்க கால தாமதம் ஏற்படுகிறது. இங்கே தொழில் மந்தம் என்று சொல்கிறார்கள். எனக்கு உண்மையிலேயே அது புரியவில்லை. தொழிலாளர்கள் இத்தனை பேர், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் போது, அவர்கள் செய்த உழைப்பால் உற்பத்திப் பொருள்கள் வெளியே வராமல் இருக்க முடியுமா என்றும், அந்த உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு, அங்கே பணிபுரியும் அத்தனை பேரும் வந்த லாபத்தில் போனஸ் கேட்டு, அந்த வகையில் பலன் அடைந்து வரும்போது, தொழில் மந்தம் எப்படி இருக்கும் என்பது எனக்குப்புரியவில்லை.

சிலர் குறிப்பிட்டார்கள், சர்க்கரை ஆலையைப் பற்றி. எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. நாட்டுடைமையாக்குவதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக கனரகத் தொழிற்சாலை இன்னும் பிற இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகளையும் அரசுடைமையாக்குவதில் முழு நம்பிக்கை கொண்டு இருக்கிறது என்பதை நான் மீண்டும் ஒரு முறை இங்கே கூறவிரும்புகிறேன்.

தனியார் துறையால் நடத்தப்படுகின்ற சர்க்கரை ஆலைகளில் 8.33 சதவிகிதம் போனசாக அங்கே இருக்கும் தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் நாம் 10 சதவிகிதம் கொடுத்தாலும் அவர்கள் ஏற்றுக்கொள்வது இல்லை. இது என்ன நியாயம் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தனியார் துறைக்கு ஒரு சலுகையும் நாட்டுடைமையாக்கப்பட்ட ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அரசிடம் அதிகமாகக் கோருவதும் எப்படி நியாயம் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நாட்டுடைமையாக்குவது என்பதில் இரண்டு பொருள்கள் இருக்கின்றன. அந்த எண்ணம் வருவதற்குக் காரணம் என்ன என்று எனக்குத் தெரிந்த வகையில், நான் அறிந்து கொண்ட வகையில், புரிந்து கொண்ட முறையில், காரணம் இது தான் தொழிலாளர்களைப் போன்றவர்கள் ஆயிரக்கணக்கில் உழைப்பதும், யாரோ ஒரு தனியார், ஓரிருவர் அதிலே பங்குதாரர்களாக இருப்பதன் வாயிலாக லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான லாபம் வருவதை எடுத்துக் கொண்டு செல்வதும் நியாயமற்றது. அந்த உழைப்பு, லாபம் நாட்டு மக்களுக்குப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்திலே தான், அந்த அடிப்படைக்கருத்து உருவாகியிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, நாட்டு மக்களின் வரிப்பணம், அல்லது நாட்டு மக்கள் கொடுக்கும் பணம், அந்தப் பொருள்களை அவர்கள் வாங்குவதற்கு செலவழிக்கும் பணம் எந்த ஒரு தனி மனிதனுக்கோ எந்த ஒரு குடும்பத்திற்கோ, ஒரு சில நபர்களுக்கோ சொந்தமாக்கி விடக்கூடாது. அந்த மொத்த லாபமும் அரசுக்குச் சொந்தமாக்கப் படவேண்டும். அந்த லாபத்தின் மூலம் வேறு சில பணிகளை ஆரம்பித்து, புதிய தொழிற்சாலைகள் ஆரம்பித்து, அந்த வகையில் அவைகளைச் செய்வதற்கு வாய்ப்பு வசதிகொடுத்து அந்த வகையில் மக்களுக்கு அவை உபயோகமாக இருக்கும் என்ற அடிப்படையில் தான் அந்த எண்ணம் உதித்து இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

ஆனால் நடைமுறையில் நாட்டுடைமையாக்கப்பட்ட பல தொழில்கள் நஷ்டத்தில் நடக்கின்றன. நிர்வாக சீர்கேடு இருக்கலாம். அதை கவனிக்கிற அதிகாரிகள் சிலர் செய்கிற தவறாக இருக்கலாம். எப்படி இருந்தாலும், தனியார் துறையில் மட்டும் லாபம் வருகிறது. அங்கே லாபம் வந்தாலும் கொடுக்கிற பணத்தை சட்டப்படி பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் நாட்டுடைமையாக்கப்பட்ட ஆலைகளில் லாபம் வந்தாலும், நஷ்டம் வந்தாலும், அவர்களுக்கு அதிகமான போனஸ் வேண்டுமென்று கேட்பார்களானால் அது என்ன நியாயம் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த நேரத்தில் என்னைப் போன்றவர்கள் எந்த அடிப்படையில் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்று சொல்கிறோமோ அல்லது கருதுகிறோமோ அதற்கு மாறாக நடக்கிறது என்று சொல்லும்போது மக்களுடைய பணம், எந்த வரிப் பணத்தை வைத்து பஸ்களை வாங்குகிறோமோ, எந்த ஆலையைக் கட்டுகிறோமோ எந்த மக்களுடைய உழைப்பிலிருந்து கிடைக்கும் பணம் வரும் என்று வங்கியில் கடன் வாங்குகிறோமோ அவைகளை எல்லாம் சிந்தித்து தொழில்களை உருவாக்கும்போது அந்த தொழிலிலே நஷ்டம் ஏற்பட்டாலும் போராட்டங்கள் நடத்துவதும், நஷ்டம் வந்தாலும் உரிமைப் பிரச்சனைக்கு வருவதும் நியாயமா

என்பதை நான் கேட்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன் என்பதை எண்ணி என்னை நானே வருத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நேரத்தில் யாருக்கும், பொறுப்பிலே இருக்கிற யாருக்கும் சில எண்ணங்கள் தோன்றும். நாம் பொறுப்பை ஏற்றுக் கொள்வது ஏற்றுக்கொண்டிருப்பது நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்காக. அந்த நன்மைகள் நாட்டிலே பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்க வேண்டும். வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்களே, படித்தும் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்களே, ஏதோ ஊர்களுக்கெல்லாம் இங்கிருந்து வேலை தேடி வெளியே செல்கிறார்கள் என்று சொன்னார்களே, அந்த மக்களுக்கு நன்மைகள் கிடைக்க வேண்டும். ஆனால் இந்த 7 மாதங்களில் என்ன செய்திருக்கிறீர்கள் என்று இங்கே கேட்டார்களே அதை எண்ணிப் பார்க்கும்போது ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிலைமைகள் இருக்கிற சூழ்நிலையில் நாட்டுடைமைப்படுத்துவது நாட்டுக்கு நன்மை செய்வதற்கு; தனியார் துறையிலே இருக்கிற அமைப்புகளுக்கு லாபம் போகக் கூடாது; லாபம் அரசுக்குவர வேண்டும் என்ற இந்த நோக்கமே அடித்துச் செல்லப்படுமானால், இந்த நோக்கமே தோல்வியடையுமானால் அதற்கு அடுத்த வழி என்ன? நாட்டு மக்களின் பணத்தை எப்படி பாதுகாப்பது? லாபத்தை எப்படி சேர்த்து கொடுப்பது? என்று சிந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு எந்தப் பொறுப்பிலே இருக்கிறவர்களும் தள்ளப்படுவார்கள் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்காது.

நிர்வாகத்தில் ஏதாவது கோளாறு இருந்தால் அதை மாற்றியாக வேண்டும்; நிர்வாகத்தில் கோளாறு இல்லாமல் நடைமுறையில் கோளாறு இருந்தால் அதை மாற்றியமைக்க வேண்டும். அப்படியும் இல்லாமல், நாட்டுடைமையாக்கப்பட்டதன் பலன் நாட்டு மக்களுக்கு கிடைக்காது என்ற நிலை வருமானால் நாட்டுடைமையைப் பரிசீலனை செய்ய வேண்டுமா என்பதை இங்கே என்னைவிட அறிவார்ந்தவர்கள், நல்ல அனுபவம் பெற்றவர்கள் எதிர்க்கட்சியில் பல தலைவர்கள் இருக்கிறார்கள்; அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவர்களோடு கலந்து பேச நான் ஆசைப்படுகிறேன். நான் சில நாட்களாக அல்ல; ஒருசில மாதங்களாக இதுபற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

இங்கே பலர் பேசினார்கள். பஸ்களை எடுத்துக் கொண்டாலும் சேரனையோ, சோழனையோ, பாண்டியனையோ எடுத்துக் கொண்டாலும் அங்கே லாபம் வருகிறது என்று கேட்டால் கொடுக்க முடியும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதே நேரத்தில் பல்லவன் போக்குவரத்தில் நஷ்டம் வருகிறது என்றால் அங்கும் அதேமாதிரி பங்கு கொடுக்க வேண்டும் அல்லது போனஸ் கொடுக்க வேண்டும்; சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டால் அதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. அங்குள்ள நிலைமைகளைப் பரிசீலனை செய்து, எந்த கொள்கையை செயல்படுத்தலாம் என்கின்ற வழிமுறைகளை ஆராய்ந்து பார்த்து செயலாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்கேற்ற வகையில் பல தலைவர்களைச் சந்தித்துப் பேசி, அதற்கு ஒரு நல்ல முடிவு காணவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

இப்படி பல்வேறு பிரச்சனைகளை இங்கே பேசியிருக்கிறார்கள். இன்னொன்று மானியக் கோரிக்கைக்கும் நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இங்கே புள்ளி விவரங்கள் ஏராளம் இருக்கின்றன. கிராமங்களுக்கு என்ன செய்யப்போகிறோம் என்று கேட்டார்கள்.

திரு கு. ரமணி: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியமயமாக்குவது சம்பந்தமாக மிக முக்கியமான ஒரு கொள்கையைப்பற்றிச் சொல்கிறார்கள் என்பதை உணர்கிறோம். தேசியமயமாக்கிய ஒரு தொழிலில் நஷ்டம் வந்தாலும் அதற்கு குறைந்தபட்ச போனஸ் கொடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்று கேட்கிறார்கள். அவர்களுடைய எண்ணத்தைப் புரிந்துகொள்கிறோம்; அதை ஏற்றுக் கொள்ளலாம் ஆனால் அவர்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை வைத்துச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். ஒரு குறிப்பிட்ட சர்க்கரை ஆலையில் ஸ்டிரைக் கிடைக்கிறது. அதுதான் அவர்களுடைய மனதில் இருக்கின்றது என்று கருதுகிறேன். அதில் சில விஷயங்கள் இருக்கின்றன.

[முற்பகல் 11-40]

அதிலே நஷ்டம் வந்தால் குறைந்த பட்சம் 8 1/3 சதவிகிதம் போனஸ் கொடுத்திருந்தால் தொழிலாளர்கள் நிச்சயமாக மறுத்திருக்க மாட்டார்கள். ஆனால் உற்பத்தி திட்டத்தை உருவாக்க அதை அமலாக்குகிற மாதிரி பல சர்க்கரை யூனிட்டுகளில் பொதுவாக ஒப்பந்தம் செய்து இந்த யூனிட்டில் அமுலாக்கவேண்டுமென்று சொல்லும் போது அதிக உற்பத்தி அதிக உழைப்பு என்றதன்படி போனஸ் கொடுக்கப்படவேண்டும். நஷ்டம் வந்தால் தொழிற்சாலைதான் ஏற்றுக்கொள்ள வேண்டும். உற்

பத்தித் திட்டம் வந்தவுடனே அதிக போனஸ் கிடைக்கும். யூனிட் லாப அடிப்படையில் எடுத்தால் நஷ்டம். உற்பத்தி அதிகரித்தது என்றாலும் தொழிலாளர்கள் ஒப்புக்கொண்ட அல்லது இப்படி வருகிற அந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலானது. இதை அரசோடு விவாதிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். நியாயமான முறையில் தொழிலுக்கும் பாதிப்பு ஏற்படாமல், தொழிலாளிக்கும் பாதிப்பு ஏற்படாமல் சரியான கொள்கையை வரையறுக்க அரசோடு விவாதிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்த வாக்குறுதிக்கு நான் தமிழக அரசின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்மையில் மத்திய அரசு புதிய தொழில் கொள்கையை அறிவித்தது. குடிசைத் தொழில், சிறுதொழில் கிராமத் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதே இப்புதிய கொள்கையின் தலையாய நோக்கமாகும். மாநில அரசின் தொழில் கொள்கையும் மத்திய அரசின் கருத்துக்களோடு பொதுவாக ஒத்திருக்கிறது. மத்திய அரசு அண்மையில் மொத்தம் 504 உற்பத்திப் பொருள்களை சிறு தொழில், கிராமத் தொழில் குடிசைத் தொழில் துறைக்கு ஒதுக்கியுள்ளது.

ஏற்றுமதி இறக்குமதி பற்றிய விதி முறைகள் தளர்த்தப்பட்டு, சிறு தொழில்கள் மாவட்ட அளவிலும் பெரிய தொழில்கள் மாநில அளவிலும் வேண்டிய அனுமதிகள் பெற ஏற்ற முறையில் விதி முறைகளைத் திருத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு கருத்துரை வழங்கியுள்ளது.

6,400-க்கு மேற்பட்ட சிறு கைத்தொழில்களும், 8,600-க்கு மேற்பட்ட சொந்தத் தொழில் நடத்துவோரும் ஜுலை 1977 முதல் டிசம்பர் முடிய உள்ள 6 மாத காலத்தில் வணிக வங்கிகளின் உதவி பெற்றனர் என்பதையும் மொத்தம் 27 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட இந்த உதவியினால் 49,000 பேர்களுக்கு மேல் வேலை வாய்ப்பு பெறுவார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒதுக்கப்பட்டுள்ள கூடுதல் இனங்களை உற்பத்தி செய்யக் கூடிய முறைகள் குறித்து ஆய்வு செய்யவும் அத்தொழில்களைத் தொடங்குவதில் அக்கறை காட்டும் தொழில் முனைவர்களுக்கு உதவி புரிவதற்காக திட்ட, விவரங்களைத் தயாரிக்கவும்

தொழில் வணிகத் துறையும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் சிறு தொழில் தொடங்குவோருக்கு தக்க ஆலோசனைகள் கூறி அவர்கள் வாங்க வேண்டிய இயந்திரங்கள், விற்பனை வசதி பற்றிய விவரங்கள் ஆகியவற்றை எடுத்துரைத்து நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்றுத் தருவது போன்ற எல்லா வசதிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படும் என்பதையும் அந்த நோக்கத்துடன மாவட்டங்கள் தோறும் மாவட்டத் தொழில் மையங்களை அமைக்க எண்ணியுள்ளோம் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இவற்றைச் சொல்லும்போது நான் மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழில் பிரச்சினையில், நாட்டுடைமையாக்கும் கொள்கைக்கு சாதகமாக உதவி செய்யும் வகையில் ஒத்துழைக்க நாங்கள் ஆதரவு கொடுப்போம், ஒத்துழைப்போம், அதுபற்றி விவாதிப்போம் என்று கூறியதை நான் மிகப் பெரிய உதவியாக எடுத்துக் கொள்கிறேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் சில குறிப்புகளை எல்லாம் படித்துக் காண்பித்தார்கள்.

<u>திரு. மு. கருணாநிதி</u> : தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் மத்திய அரசினுடைய தொழில் கொள்கைக்கும் மாநில அரசினுடைய தொழில் கொள்கைக்கும் எந்தவிதமான கருத்து ஒற்றுமை இருக்கிறது என்பதை இங்கு படித்த குறிப்பிலே முதலிலே குறிப்பிட்டார்கள்.

மத்திய அரசினுடைய தொழில் கொள்கையைப் பொறுத்து அண்மையில் பேசிய மத்திய அமைச்சர் அவர்கள் கோவையில் நிருபர்களிடம் பேசும்போது விம்கோ தொழிற்சாலை மூடப்பட்டு விட்டு, கிராமத்தில் அந்தத் தொழிலைப் பரவலாகச் செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி விம்கோ தொழிற்சாலை மூடி, 15,000 பேர்கள் வேலையிழப்பதுபற்றி கவலையில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி மூடிய தொழிற்சாலையை அரசே ஏற்றுக்கொண்டு அந்த 15,000 பேர்களுக்கும் வேலை தந்து— அதுபோன்ற தொழில்களை கிராமங்களில் பரவலாகச் செய்வது சரியாக இருக்குமா அல்லது விம்கோ போன்ற பெரிய தொழிற்சாலையை மூடிவிட்டு அந்த 15,000 பேர்களின் வயிற்றில் அடித்துவிட்டு கிராமங்களில்தான் தொழில்களை நாம் உற்பத்தி செய்வோம் என்று கூறுவது பொருத்தமாகயிருக்குமா என்ற அந்தக் கருத்தைப் பொறுத்தவரையில் மாநில அரசு என்ன கருதுகிறது ?

[1978 மார்ச் 23

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு தொழில் அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் சொன்ன கருத்தை இங்கே தெரிவிக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் எதிர்கட்சியைச் சார்ந்தவர்களானாலும் சரி மற்றவர்களானாலும் சரி சில சமயங்களில் தங்கள் கொள்கைகள்பற்றி வெளியிடும்போது அதை அதிகாரபூர்வமான கொள்கை என்று ஏற்றுக்கொள்ளவேண்டுமானால் அந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு அந்தத் தாக்கீது வந்தால்தான் அதை அரசாங்கத்தினுடைய நேரடிக் கொள்கை என்று நாம் எடுத்துக்கொண்டு அதற்குப் பதில் சொல்லவேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்படுகிற நிலைமை ஏற்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். விம்கோ தொழிற்சாலையை எடுத்துக் கொள்வது என்பதும் அதற்கு எவ்வளவு மூலதனம் தேவைப்படுகிறது என்பதும் பரிசீலித்துப் பார்த்துவிட்டுத்தான் நான் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும் என்பதையும் ஆனால் அதுபோன்ற தீப்பெட்டித் தொழிற் சாலைகள், சிறு சிறு தொழிற் சாலைகளாக, குடிசைத் தொழிலாக இப்போதும் இருக்கின்றன என்பதையும் அது பரவலாக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு அக்கறை இருக்கிறது என்பதையும், மெழுகு கிடைக்கவில்லை என்கிற குறைபாடு உள்ளது என்பதற்கு அதுபற்றி நாங்கள் மத்திய அரசுக்கு எழுதியுள்ளோம் என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையில் எங்களாலான கடமையை எந்தெந்த வகையில் மக்களுக்கு நிறைவேற்ற முயலமுடியுமோ அந்தந்த வகையில் முழு முயற்சியையும் நாங்கள் மேற்கொள்வோம் என்பதை அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறபோது விம்கோ தொழிற்சாலையை மூடுவதால் 15,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டால் கூட கவலையில்லை என்று மத்திய அமைச்சர் கூறியதாகக் கூறினார்கள். நேற்றைய தினம் அது சம்பந்தமாக மத்திய அரசு கூறியிருக்கிறது. தொழிலாளர்களைப் பாதுகாப்பது சம்பந்தமாகத்தான் கவலைப்படுகிறோம், ஆகவே அந்தப் பிரச்னையை நாங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அதை மறுபரிசீலனை செய்வதாக அறிவித்திருப்பார்களேயானால் மகிழ்ச்சியடைகிறேன்.

1978 மார்ச் 23]

திரு. மு. அம்பிகாபதி : ஸயண்டிபிக் அன்ட் டெக்னலாஜிக்கல் ரெவல்யூஷன் என்று இன்று உலகத்தில் சகலமும் விஞ்ஞான அடிப்படையில் முன்னேறுகிறது. விம்கோ தொழிற்சாலையை மூடிவிட்டு கிராமங்களுக்குப் போய் தொழிற்சாலைகளை நடத்துவோம் என்றால், தக்ளியால் நூற்று இந்த நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியுமா ? மத்திய அரசின் தொழிற்கொள்கை வளர்ந்துவருகிற விஞ்ஞான முன்னேற்றத்திற்கு பொருத்தமுடையதல்ல என்பதை தமிழக அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் அண்ணாவிற்கு தம்பியாக வந்ததே அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பணத்தோட்டம் என்றபுத்தகத்தை படித்துத்தான். அதிலே இந்தத் தொழில் கொள்கை பற்றி அமரர் அண்ணா அவர்கள் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். எத்தனை கஜம் துணி நமக்குத் தேவை, இந்தத் தக்ளியால் நூற்று, ராட்டை சுற்றி அதனால் ஏற்படுகிற உற்பத்தி செய்யப்படுகிற துணி நாட்டுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா என்பதையெல்லாம் கூறி அப்போது இங்கே இறக்கப்பட இருந்த கதிர் எல்லாம் அப்போது முதல் அமைச்சராக இருந்த பிரகாசம் அவர்கள் வேண்டாமென்று சொன்னதால் அதை ஆர். கே. ஷண்முகம் செட்டி அவர்கள் கொச்சிக்கு எடுத்துச் சென்று அங்கே அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதும் நமக்கு நன்கு தெரியும்.

[முற்பகல் 11-50]

ஒன்றை நான் சொல்லுகிறேன். எனக்கு என்னவென்று புரியவில்லை. சங்கரய்யா அவர்கள் சொல்லுகிறார்கள். நமது நாட்டில் மனித சக்தி ஏராளமாக இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு அதிகமான வேலைவாய்ப்புகளை மக்களுக்குக் கொடுக்க வேண்டும், டிராக்டர் போன்றவைகளை கொண்டு வந்தால் வேலை வாய்ப்பு போய்விடும் என்கிறார்கள். அம்பிகாபதி அவர்கள் என்ன சொல்லுகிறார் என்றால், இது விஞ்ஞான உலகம், விஞ்ஞான முயற்சிகளை எல்லாம் எடுக்காமல், வெறும் தக்ளியை வைத்துக் கொண்டிருந்தால் எப்படி தொழில் முன்னேற்றம் ஏற்படும் என்று கேட்கிறார்கள். அப்படி அல்ல. பொருளாதாரம் என்பது மனித சக்தியையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும், விஞ்ஞான அறிவையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எதற்கு எதைஎதை பயன்படுத்த வேண்டுமோ, அவற்றைப் பயன்படுத்தி நம்முடைய நாட்டிலிருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டும் என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது.

(திரு. எம். ஜி. இராமச்சந்திரன்) [1978 மார்ச் 23

அந்த முறையிலே நல்ல வழிகளை காணவேண்டும் என்பது தான் நம்முடைய குறிக்கோள், எல்லாவற்றையும் இணைத்து வைத்துக்கொள்வது என்பதோ அல்லது எல்லா முறைகளும் நமக்கு பொருந்தாது என்று ஒதுக்கி வைப்பதோ நம்முடைய எண்ணம் அல்ல. அந்த வழியில்தான் கைத்தொழில் என்று வரும்போது, மத்திய அரசின் கொள்கையோடு உடன்பாடு என்று சொல்வதில் எல்லாவற்றுக்கும் என்று போடாமல் பொதுவாக என்று போட்டிருக்கிறோம். அப்படியில்லாமல் விளக்கமாக பிரிவுகளாக எடுத்துக்கொண்டு அதையெல்லாம் ஆதரிக்கிறோம் என்று நாங்கள் சொல்லவில்லை.

ஒட்டுமொத்தமாக பின்தங்கிய மாவட்டங்கள், பின்தங்கிய பகுதிகள் இவைகளில் இருக்கின்ற மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கும், எதை எதைப் பயன்படுத்தி எந்தெந்த தொழிலை உருவாக்க முடியும். அங்கங்கே கிடைக்கின்ற மூலப்பொருட்களைக் கொண்டு என்னென்ன செய்ய முடியும் என்பதை அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞானத்தையும் தேவைக்குத் தகுந்தபடி பயன்படுத்திக்கொண்டு அதே சமயத்தில் மனித சக்தியையும் பயன்படுத்திக்கொண்டு எவை எவை எங்கெங்கு தேவையோ அவைகளை எடுத்துக்கொள்வது என்பதை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதில் நாம் முயன்று கொண்டிருக்கிறோம்.

திரு. ர. ஜெபமணி: தக்ளி என்றும் ராட்டை என்றும் இங்கு, அதைப்பற்றி விவரம் தெரிந்து சொன்னார்களோ அன்று விவரம் தெரியாமல் சொன்னார்களோ தெரியாது. ஒரு நாட்டினுடைய பொருளாதாரம் எப்படியிருக்க வேண்டும் என்பதைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பாக சொன்னார்கள். ஆனால் தாங்கள்தான் தீவிரவாதிகள் என்று நினைத்துக்கொண்டிருக்கின்ற சிலர், 60 கோடி மக்கள் இருக்கின்ற இந்த நாட்டில் அவர்களுக்கு எப்படி சாப்பாடு போடுவது என்பதை சிந்தித்துப் பார்க்காமல், நாங்கள் ஏதோ ராக்கட் வேகத்தில் போகிறோம் என்று சொல்லுகிறவர்கள் அவர்கள் ராக்கட் வேகத்தில் போய்க் கொண்டிருப்பதைப் பற்றி நமக்கு கவலையில்லை. ஆனால் அவர்கள்தான் கைத்தறி தொழிலைப்பற்றியும் பாராட்டுகிறார்கள்.

ஏற்கனவே நாட்டிலுள்ள நூற்பு ஆலைகள் மூலம் ஏதோ இப்போது கைத்தறிக்கு நூல் கிடைக்கிறது என்றிருந்தாலும், இவைகளை எல்லாம் மூட்டைக்கட்டி அனுப்பி விட்டால், இந்த தக்ளியும் ராட்டையும் அரைவயிற்றுக்கு சாப்பாட்டையாவது போடும் என்பதை கனம் மெம்பர் அவர்கள் உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 23]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பெரியவர் நெல்லை ஜெபமணி அவர்கள் இங்கே தன்னுடைய கருத்தை தெரிவித்தார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அண்ணாவின் தம்பியாக வருவதற்கு முன்பு காங்கிரஸ்காரனாக இருந்தேன் என்பதையும், தக்ளியில் எப்படி நூல் நூற்கவேண்டும் என்பதையும் ராட்டையில் எப்படி சுற்றி நூல் நூற்கவேண்டும் என்பதையும் ஓரளவு கற்றுக் கொண்டிருக்கிறேன் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில குடும்பங்கள் இதை வைத்துக்கொண்டு இன்னும் பலர் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். பல குடும்பங்களில் தாய்மார்கள், வயதான பெண்கள், வாலிபர்கள் கூட— இதை வைத்துக்கொண்டு ராட்டையில் நூல் சுற்றி தங்கள் வாழ்க்கையை ஏதோ ஓரளவுக்கு நடத்திச் செல்ல முற்படுகிறார்கள். என்கிற வகையில் அந்தக் கருத்தை அண்ணா அவர்கள் சொல்லியிருந்தாலும், அண்ணா அவர்கள் பதவி ஏற்ற பின், கதர் தொழிலுக்கும், கிராம கைத்தறித் தொழிலுக்கும் மிகவும் அக்கரை செலுத்தி வந்தார்கள் என்பதையும், எங்கெங்கு யார் யாருக்கு என்னென்ன விதத்தில் வேலைவாய்ப்பை அளிக்க முடியுமோ அவைகளை பயன்படுத்திக் கொள்வதுதான் நமது கொள்கை என்ற அளவில் இவற்றுக்கெல்லாம் ஆதரவு காட்டி வந்தார்களே தவிர, இவர்களை எல்லாம் பட்டினி போட்டு விட்டு, புதிய வேலைகளை துவக்கவேண்டும் என்று நிச்சயமாக அண்ணா அவர்கள் விரும்பவில்லை என்று சொல்லும் போது—அந்த வகையிலே நாங்கள் முயற்சி எடுத்திருக்கிறோம் நாங்கள் அதைப் பின்பற்ற விரும்புகிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய கொள்கையில் பல்வேறு தொழில்களில் கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவது. கதர், கைத்தறி, மகளிர்க்கு வேலை— இந்த வாய்ப்புகளை எல்லாம் அளிக்கக்கூடிய சிறுதொழில்களில் ஈடுபடுவதன் மூலமாக நலிந்த பிரிவினருக்கு சொற்ப உதவி அளிப்பதும், 1978–79 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், அரசும், அரசு நிறுவனங்களும் பயன்படுத்தும் பல்வேறு பொருட்களை சிறு தொழில், கிராம, குடிசைத் தொழில்கள் ஆகியவற்றில் உற்பத்தியாகின்ற பொருள்களை கூடுமானவரை வாங்குவோம் என்ற முக்கியமான முடிவை அறிவித்திருக்கிறோம்.

இந்த நிலையில் நாங்கள் செயல்பட முன்வந்திருக்கின்ற இந்த நேரத்தில், நான் ஒரு பிரச்சினைக்குப் பதில் சொல்லியாக வேண்டியிருக்கிறது. இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வந்திருக்கின்ற காரணத்தால், இரண்டு நாட்களுக்கு

முன்பு ஒரு பிரச்சினை ஏற்பட்டு, அதிலே மலைவாழ் பகுதி மக்கள், பிற்பட்ட சமூகத்தினர் என்று அழைக்கப்படுகின்ற அந்த தாழ்த்தப்பட்டவர்கள் என்றாலும், அப்பேர்பட்ட சமூகத்தினருக்கு இந்த அரசு ஏதோ கடுமையான, கொடுமையான வகையில் முடிவெடுத்திருப்பதாக அன்றையத்தினம் கருத்து வெளியிடப்பட்டதும், திராவிடர் யார் என்ற பிரச்னைக்கெல்லாம் அது கொண்டுபோய் விட்டது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

நான் இங்கே ஒரு செய்தியை, தகவலைத் தரவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். 'இன்றையதினம் இது இந்த மானியச் சம்பந்தப்பட்டதில்லை என்றாலும், அப்படிப் பட்டவர்களுக்கு நாங்கள் நன்மை செய்கிறோம், அப்படிப்பட்ட அமைப்புகளுக்கு நாங்கள் திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறோம் என்ற காரணத்தால், ஒன்றை நான் இங்கே முன்பு முதல் அமைச்சராக இருந்த, நமது பிரதான எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அவர்கள் ஆட்சிக் காலத்தில் எத்தனை வயது வரையில் என்கிற ஒரு வரையறை இல்லாமல் இருந்ததை, நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த நேரத்தில்தான் அதை 30 வயது என்று ஆக்கினார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விழைகிறேன். ஆகவே, வரையறை ஏற்படுத்தியதே இப்போது இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் என்பதையும், குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலம் வந்த பிறகு அது 31 வயது என்று மாற்றப்பட்டது என்பதையும்.......................

திரு. மு. கருணாநிதி: 76 ஆம் ஆண்டு, ஆளுநர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த ஜி.ஓ. ஆணையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்குமுன்பு வயது வரம்பு இல்லையென்றும், இனி வயது வரம்பு வைக்கப்படும் என்றும் அந்த ஆணையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஒரு கோப்பை எதிர்க் கட்சித் தலைவரிடம் கொடுத்தார்கள்)

(நண்பகல் 12-00.)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆகவே, நான் எல்லோரையும் வேண்டிக் கேட்டுக்கொள்வது— எப்போதோ ஏதோ நடந்திருக்கலாம். எல்லோருக்கும் அது நினைவில் இருக்குமென்று சொல்ல முடியாது; நினைவில் இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் சரியல்ல என்பது என்னுடைய எண்ணமாகும்.

நானே பத்தாண்டுகளுக்கு முன்னால் சொல்லியதை இன்று கேட்டால் படித்துப் பார்த்தால்தான் என்னாலேயே சொல்ல முடியும்.

ஆகவே, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து இதுபோன்ற விஷயங்களில்—இப்போது நாங்கள் ஆட்சியில் இருந்தாலும் எந்தப் பிரச்சினையைப் பற்றி எந்தக் கோப்புகளைப் பார்க்க வேண்டுமென்று இங்கிருக்கின்றவர்கள் தகவல் கேட்டால், எந்தக் கட்சித் தலைவர் கேட்டாலும் நான் மறுக்கத் தயாராக இல்லை. எதை எதைக் காண வேண்டுமென்றாலும் அந்தக் கோப்புகளை எல்லாம் தாராளமாகப் பார்த்து பரிசீலனை செய்து கொள்ளலாம் என்று சொல்லுவதில் நான் தயக்கம் காட்டமாட்டேன். குறிப்பிட்ட கட்சியின் தலைவர்கள் அதை நன்கு தெரிந்து கொண்டு பேச வாய்ப்புக் கிடைக்கும்.

ஆகவே, என்னைப் பொறுத்த வரையில் சொல்லுகிறேன்— 30 வயது என்பது 31 வயதாக உயர்த்தப்பட்டிருக்கிறது. நாங்கள் எது நியாயம் என்று கருதினாலும் அதை ஏற்றுக் கொள்ளுகிறோம். தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள் மீது நாங்கள் அக்கறை காட்டவில்லை என்பதோ, அலட்சியப் படுத்தும் நிலைமை இருந்தது என்பதோ ஏதும் இல்லை. அந்த உத்தரவு அப்படியே இருக்கட்டும். அதிலே தவறு இல்லை என்றுதான் சொன்னோம். மேலும், அதைப் போட்டது திரு. தாவே— திரு. சுப்பிரமணியம் அல்ல. சுப்பிரமணியம் என்று சொல்லும்போது வேறு பிரச்சினைகள் வந்து விடுகின்றன; தாவே என்று சொல்லும்போது வேறு பிரச்சினையாகிறது. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினைகளில் எல்லாம்—பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன் யாரையும்—குற்றம் சாட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் சொல்லவில்லை என்பதையும், பிரச்சினையை அதிகமாக்கிவிட்ட காரணத்தால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

தவறுகள் என்று ஒன்றும் இல்லை. நல்லெண்ணம் இருக்கிறது, எல்லோருக்கும் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும், மலைவாழ் பகுதி மக்களாக இருந்தாலும் யாராக இருந்தாலும் அனைவருக்கும் தொண்டு செய்யத்தான் வந்திருக்கிறோம். உயர்வு தாழ்வு என்பது உழைப்பவர்கள், உழைக்காமல் இருப்பவர்களுக்கிடையே இருக்கும் போராட்டமே தவிர, சாதியிலோ, மதத்திலோ இல்லை என்பதை நிச்சயமாகச் சொல்ல விரும்புகிறேன். நான் அதிகமான நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

கண்ணாடித் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றி மூன்று வாரத்திற்குள் எங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த நிர்வாகியை நம்பி யாரும் பணம் கொடுக்கத் தயாராக இல்லை. நாங்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னாலும் அந்த நிர்வாகியை நம்பி வங்கிகளும் பணம் கொடுக்கத் தயாராக இல்லை. அதற்கு யாரை நியமிப்பது, எப்படி நியமிப்பது என்பதைப் பற்றியெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். அந்த வழிமுறைகளைப் பற்றியெல்லாம் சொல்ல வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இது மூனறு வாரத்திற்குள் கிடைக்கும். அது வரையில் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டு வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : அவசர கால நிலையின்போது அந்த வயதை 31-ஆக உயர்த்தினார்கள் என்று கூறப்பட்டது. அந்த ஜி.ஒ.-வை அவையில் படிக்கவேண்டும். அவசர கால நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஒதுக்கப்பட்ட மக்களுக்குச் சலுகை கொடுக்கும் வகையில் வயது வரம்பு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அந்த விவரத்தைப் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைக்கும் இந்த விஷயத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால் அதைப் படிக்கலாம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : அவையிலே அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு விட்ட பிறகு, முதலமைச்சர் அதுபற்றிக் கூறிய பிறகு சம்பந்தம் இல்லை என்று சொல்லுவது சரியல்ல.........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதைப் படிக்கிறேன்—'........அந்த வரம்பு இரு சாராருக்கும் பொதுவாய் இருப்பதே நல்லது. ஆகவே, வாரிய உறுப்பினர் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மட்டுமென்று பரிந்துரைத்துள்ள 30 வயது வரம்பை, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பழங்குடிகள் உட்பட), பிற்பட்ட வகுப்பினர் இரு சாராருக்கும் பொருந்துமாறு ஆணையிடலாம்.'

கா. திரவியம் அவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள் ; சபாநாயகம் அவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள் ; மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள்

மாண்புமிகு கலைஞர் அவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள் 23—11—1974-ல் இதைச் சொல்வதால் அதை நீக்கவேண்டுமென்று சொன்னால்கூட அதைப்பற்றி நான் கவலைப்படமாட்டேன். ஏனென்றால் அதிலே எனக்குப் பிடிவாதமோ அல்ல யாரையாவது மனவருத்தம் அடையச்செய்ய வேண்டுமென்றோ அல்லது தலைகுனிவை ஏற்படுத்தவேண்டுமென்றோ எண்ணம் இல்லை. என்ன இருந்தாலும் எத்தனையோ லட்சக்கணக்கான கோப்புகளில் கையெழுத்துப் போடுகிறோம், உத்திரவுகளைப் போடுகிறோம் எல்லாவற்றையும் மனப்பாடமாக வைத்திருப்பது என்பது யாருக்கும் இயலாத காரியம், நான் எதிர்க்கட்சித்தலைவரை மட்டுமல்ல, அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன், யார் வேண்டுமானாலும் எந்த சந்தேகம் வேண்டுமானாலும் என்னைக் கேட்கலாம்.

காவல் துறைக்கு—அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள், நானே சொல்கிறேன் — யார் மீது வழக்குப் போடுவது என்பது பற்றி எனது கையெழுத்துக்கள் சரியாகப் புரியாமல் அவர்கள் தவறாக எழுதிவிட்டார்கள். அதை உடனே வாபஸ் பெறவேண்டுமென்று சொன்னார்கள், ஐ.ஜி.யிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னேன். இதையெல்லாம் மிகப் பெரிய பிரச்சினையாக எடுத்துக்கொள்ளவில்லை, யார் வெற்றிபெறுகிறார்கள், தோல்வியடைகிறார்கள் என்ற எண்ணம் இல்லை.......

திரு. மு. கருணாநிதி : அந்த போலீஸ் துறை உத்திரவு சம்பந்தமாக அவர்கள் பைலை என்னிடத்திலே கொடுத்தார்கள், நான் படித்துப் பார்த்தேன். அதிலே அப்படியே காப்பி எடுக்கப்பட்டிருக்கிறது. பைலை கொடுத்து விட்டதால் அதைப்பற்றி விளக்கவேண்டாம் என்று நினைத்தேன், ஆனால் பைலைப்பற்றிய பிரச்சினை இங்கே வந்துவிட்டதால் இப்போது பைலைப்பற்றிப் பேசுகிறேன். அந்த பைலில் முதலமைச்சர் அவர்கள் கையெழுத்துப் போட்ட அந்த விஷயம் ஆணையாக ஹோம் டிபார்ட்மெண்டிலே பிறப்பிக்கப்பட்டு பிறகு ஐ.ஜி. யால் உத்திரவிடப்பட்டிருக்கிறது. அதிலே, குடித்துவிட்டு வன்முறையிலே ஈடுபடுகிறவர்களைத் தவிர மற்றவர்கள் மீது உள்ள மதுவிலக்கை மீறிய வழக்குகளை வாபஸ் பெறவேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. எனக்குத் தரப்பட்ட அந்த பைலில் வரிபிளந்து ஒரு ஆரோமார்க் போடப்பட்டு வழக்குகளில் சந்தேகத்தின் பேரால் தொடரப்பட்ட வழக்குகள் தவிர மற்றவைகள் என்று வரிபிளந்து எழுதப்பட்டு இருக்கிறது. என்னிடம் அப்படியே காப்பி எடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அப்படி எழுதப்பட்டதா என்ற சந்தேகம் கூட எனக்கு ஏற்பட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அந்தக் கோப்பை நாளையே கொண்டுவந்து காண்பிக்கிறேன், அவர் கொண்டுவந்த கடிதத்தையும் காண்பிக்கட்டும், நான் எழுதியிருப்பது, முதல் பகுதியில் எழுதப்பட்டிருக்கிறதா முக்கால் பகுதியில் எழுதப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்கு இங்கே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலே எழுதப்பட்டிருப்பதால், இருக்கின்ற வார்த்தைகள், எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் சொன்ன அந்தக் கடிதத்திலே அந்த வார்த்தைகள் இருக்கின்றன என்பதை அவர்கள் அவசரப்படாமல் படிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து தான் சொல்லுகிறேன். எப்போது கோப்புகள் பேச ஆரம்பிக்கின்றனவோ (குறிக்கீடு) அது தான் நடந்து கொண்டிருக்கிறது, நமக்கு வேறு ஆதாரம் இல்லை, யாரையும் சாட்சிக்கு அழைக்கமுடியாது, கையெழுத்து தான் ஆதாரம். அதைத்தான் பேசுகிறோம், அதைத்தான் ஆதாரம் காட்டுகிறோம். கையால் எழுதப்படுகிறவைகள் கோப்புகளின் மூலமாக ஆணையிடுகிறபோது அது உத்திரவாகிறது. பைல் பேசுகின்றது. அது தான் ஆதாரம். நான் பொய்சொல்லிவிட்டு அதைச் சேர்த்துவிட்டேன் என்று சொல்வது நிச்சயமாக நமக்கு எல்லாம் பொருத்தமல்ல. எனக்கு அப்படிப்பட்ட தேவையே இல்லை. மேலே குறியிட்டு எழுதப்பட்டிருக்கின்ற வார்த்தைகளிலே முக்கால் பகுதி உங்கள் கடித்தத்தில் இருக்கிறது. தயவு செய்து அவசரப்படக் கூடாது. ஆத்திரப்படக் கூடாது. யாரையும் குற்றம் சுமத்தவேண்டுமென்றோ, களங்கப்படுத்தவேண்டுமென்கிற காரணத்தாலோ அவர்கள் இப்படிச் செய்து விட்டார்கள் என்று சொல்வதன் மூலமோ எனக்கு எந்தவித லாபமும் கிடையாது. அதைவிட அவர்களுடைய வேறு யோசனைகள் பயன். உள்ளதாக இருக்கும் என்ற முறையிலே தான் நான் பேசுகிறேன்.

[பிற்பகல் 12-10].

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அன்றை தினம் நான் கேட்டதெல்லாம் தாங்கள் இட்ட ஆணைக்கு எதிராக அதிகாரி தவறாக ஒரு ஆணையிட்டு இருப்பாரேயானால் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னீர்களே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றுகூடக் கேட்கவில்லை, அந்த ஆணை திரும்பப் பெறப்பட்டு விட்டதா என்றுதான் கேட்டேன். ஏனென்றால் அது ஆபத்தான ஆணையாக இருக்கிறது. மது விலக்கு வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்ற வகையிலே அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 3, 4 மாத காலமாக அந்தஆணை புழக்கத்திலே இருக்கிறது. ஆபத்தான ஆணை ஆயிற்றே, திரும்பப் பெறப்பட்டு விட்டதா என்றுதான் கேட்டேன். பைலைக் கொடுங்கள் என்றோ, பைல்

டேம்பர் ஆகிவிட்டது என்றோ, திரும்பக் கொடுங்கள் என்று நான் கேட்கவில்லை. அவர்களே பைலைக் கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த பறகுதான் இப்பொழுது இந்தப் பிரச்னையைக் கிளப்பினேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கிளப்பியபொழுது நீங்களே சொன்னீர்கள், மானியக் கோரிக்கைக்குச் சம்பந்தம் இல்லாத பிரச்னையை உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னீர்கள். முதலமைச்சர் சொன்ன பிறகு தான் நான் தலையிட்டேன். இப்பொழுது சம்பந்தம் இல்லாத பிரச்னையினமீது விவாதம் நடைபெற்று இருக்கிறதே, அதைக் குறிப்பேட்டிலேயிருந்து நீக்கி, நாளைக்கு வைத்துக்கொள்ளும்படி..............

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதை எதற்காகப் பேசினேன் என்றால், இன்றுகூட கலைஞர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினரவர்கள், எழுதியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இந்த நிலையில் இது பெரிய பிரச்னையாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். இதுபோன்ற திட்டங்களில், கிராமப்புறத் தொழிலை நிவைவேற்றயிருக்கிறோம், அதை நிறைவேற்றும்பொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கு அநியாயம் செய்துவிட்டோம் அல்லது வேறு ஜாதியினர், பிரிவினர், மதத்தினருக்கு நாங்கள் எதிராக இருக்கிறோம் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட நியாயமான காரணங்கள் இருந்தால் ஒழிய அந்த நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இந்தப் பிரச்னையைக் கொண்டு வந்தேன் என்று கூறி, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்றுக்கொண்டு என்னுடைய மானியக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு அவையிலே இருக்கின்ற அத்தனைபேர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர்வர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போதும், இன்னொரு மானியக்கோரிக்கை இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : ஒரு விஷயம் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதைப்பற்றி ?

திரு. எம். ஏ. லத்தீப் : மானியக் கோரிக்கையின் மீது,

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசிவிட்டீர்களே, மானியக்கோரிக்கையின் மீதான விவாதம் முடிந்துவிட்டது, நீங்கள் பேசிவிட்டீர்களே.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் மால்கோ. குறித்துப் பேசும்பொழுது அட்வகேட்-ஜெனரல் அவர்கள் குறிப்பிட்ட அந்த வழக்கில் கலந்துகொள்ளவில்லை, அரசாங்கத்திற்காக வாதாடவில்லை என்று சொல்லியதில், அதிலே ஏதோ உள்நோக்கத்தோடு அப்படி வாதாடவில்லை என்பது போல் இந்தச் சபைக்குறிப்பில் இடம் பெற்றிருக்கிறது. அப்படிப் பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்களால் எல்லோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரு பதிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசியலமைப்புச் சட்டப்படி இந்த அவையில் அட்வகேட்-ஜெனரல் விளக்கம் தரலாம். இப்படிப்பட்ட குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறதே, அட்வகேட்-ஜெனரல் இந்தச் சபைக்கு வந்து அந்தச் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டிய கடமையும், உரிமையும் இருக்கிறது. அவரை அழைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அப்படி விதியிருந்தாலும் கண்டிப்பாக வரச்சொல்லித்தான் ஆக வேண்டுமென்று விதி இல்லை.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவரவர்களே, நான் சொல்வது..

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> நான் அதற்குப் பதில் சொல்கிறேன். அவர்கள் வந்து பதில் சொல்லலாம். அல்லது அவர்கள் சார்பில் அமைச்சர் பதில் சொல்லலாம். முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டார். எனவே, அவர் உள்நோக்கம் கற்பித்துப் பேசியதாக வராது. இதில்ஒழுங்குப் பிரச்னை இருப்பதாகத் தெரியவில்லை.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவரவர்களே, இது முக்கியமான பிரச்னை. அட்வகேட்-ஜெனரல் என்பதற்குக் கான்ஸ்டிடியூஷன் படி சில கடமைகள் உண்டு......

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் குறிப்பிட்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு கவனிக்க வேண்டும். தவறு செய்திருந்தால் யாராக இருந்தாலும் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லியிருக்கிறேன், எந்த நடவடிக்கை என்பதை

இப்பொழுது நான் சொல்லவில்லை, அது பிறகு தெளிவாக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்? ஏதாவது 'ஹின்ட்ஸ்' கொடுங்கள், எதைப்பற்றி என்று.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> சேலம் கிளாஸ் பாக்டரியைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்ததற்கு ரொம்ப நன்றி. அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் : அவர்களை விடுதலை செய்யவும், அறிவித்து, லட்மி மெஷின் ஒர்க்ஸில் 45 பேர் மேல் வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்குகளை வாபஸ் பெற அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், வேறொன்றுமில்லை.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நானே காவல் துறை இலாகாவையும் அந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருப்பதால், இந்த மானியக் கோரிக்கைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் சொல்லவேண்டிய கடமையின் விளைவாகச் சொல்கிறேன், நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம், வன்முறையிலே ஈடுபட்டவர்களைத் தவிர மற்றவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இன்று காலை மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் சொன்னார்கள், அதைப்பற்றியும் நிச்சயமாக கவனித்து நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> விவாதம் முடிவுற்றது. அடுத்து வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 24-க்கு திருவாளர்கள் சு. பாலன், ரா. கிருஷ்ணன், மு. ஆறுமுகம், செ. சிவசாமி, எம். ஏ. லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. துரை முத்துசாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,66,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 51-க்கு திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், வி. கே. கோதண்டராமன், மு. ஆறுமுகம், எம். ஏ. லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,71,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண். 18—மருத்துவம்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 50,40,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

<u>திரு. கோ. இளங்கோவன்</u> : தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி எல்லைக்குள் அமைந்த அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டியது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ, 50,40,92,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>திரு. ஒ. சுப்பிரமணியன்</u> : தலைவர் அவர்களே, பெரிய நகரங்களைத் தவிர்த்து கிராமப்புறப் பகுதிகளில் Specialists' கள் சேவை தேவையென்பதைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 50,40,92,000-இல் ரூ. 100குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>திரு. கு. ரமணி</u> : தலைவரவர்களே, அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் டாக்டர்கள் தனியார் மருத்துவ மனைகளில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பணி செய்வதும், பணம் பெறுவதும் உறுதியாகத் தடுக்கவும், அரசின் கீழ் பணிபுரியும் டாக்டர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் வாழ்க்கைக்குப் போதுமான ஊதிய விகிதங்களைக் கொடுக்கவும்; தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 50,40,92,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>Thru. M. Arumugam</u>: Mr. Deputy Speaker, Sir, to discuss about the use of sleeping pills or drug addiction by students of educational institutions and the need to take preventive steps before the situation turns alarming.

I move

"that the allotment of Rs, 50,40,92,000-under demand No. 18 Medical, be reduced by Rs.00.

<u>திரு. செ. சிவசாமி</u> : தலைவரவர்களே, முகவை, இளையான்குடியில் கடந்த 3 வருடங்களாக புதிய ஆஸ்பத்திரி துவங்க பங்குத் தொகை ரூபாய் ஒரு லட்சம் கட்டியும் இன்னும் ஆரம்பிக்காமலிருப்பது சம்பந்தமாக விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 50,40,92,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1978 மார்ச் 23

Thiru M.A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, to discuss about the need to start a 100 bed hospital at Alangayam in the Vaniyambadi taluk

I move

"that the allotment of Rs. 50,40,92,000- under demand No. 18-Medical, be reduced by Rs.100.

(பிற்பகல் 12-20)

(ஈ) கோரிக்கை எண். 19—மக்கள் நல்வாழ்வு.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்

"மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,84,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, சென்னை மாநகரத்தில் கொசு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த வகையான ழபாத்தியான் போன்ற மருந்துகள் நிறுத்தி விட்டதை கண்டித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 19—மக்கள் நல்வாழ்வு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,84,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், காரையூரில் உள்ள மருத்துவ மனை (ஆரம்ப சுகாதார நிலையம்) க்கு கூடுதலாக மருந்துகள் அளிக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,84,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1978 மார்ச் 23]

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, ஒன்றியங்களில் உள்ள மருத்துவ மனைகளுக்குப் போதுமான மருந்துகள் வழங்க போதுமான நிதி ஒதுக்காததால் கிராம மக்கள் அவதிப் படும் நிலைமை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,84,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. ARUMUGAM: Mr. Deputy Speaker Sir, to discuss about the unhealthy conditions of the Buckingham Canal in Madras, causing gave injury to public health and the need to take preventive action,

I move--

"that the allotment of Rs. 31,84,47,000- under demand No. 19-Public Health, be reduced by Rs. 100.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, (முகவை மாவட்டம், இளையான்குடியில் துப்புறவு தொழிலாளர்களின் சம்பளப் பட்டுவாடா, "அடடா" பணங்கள் பிடித்தம் இன்னும் கடன்கள் பிடித்தத்தில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் சம்பந்தமாக விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,84,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir to discuss about the need to provide the taluk and industrial headquarters, Vaniyambadi with a 200 bed public hospital with all connected departments with modern facilities,

I move--

"that the allotment of Rs. 31,84,47,000- under demand No. 19-Public Health, be reduced by Rs. 100.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் நல்வாழ்வுத் துறை மருத்துவத் துறை சம்பந்தமான குறிப்புகள்* இங்கே மாண்புமிகு

* 916—1024ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதை நான் படித்ததாக பதிவேட்டிலே ஏற்றிக் கொண்டு வெட்டுத் தீர்மானங் கள் கொண்டு வந்தவர்கள் தங்களுடைய ஆலோசனைகளைக் கூறவேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, மார்கழி மாதங்களில் மூடுபனி போலக் கொட்டுகின்ற சென்னையிலே இருக்கிற மின்சாரம் உற்பத்தி செய்கின்ற பவர் அவுஸ் மூலமாகக் கொட்டுகின்ற கரித்துகள்களாலும், அந்தச் சாம் பலினாலும் அந்தப் பகுதி மக்கள் காச நோயாலும், கண் எரிச்ச லும் கொண்டு கண்ணின் ஒளி இழந்து, வயிற்றுப் புண்ணாலும் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் சார்பாக, மக்களுடைய நல்வாழ்வு பற்றி இந்த மன்றத்திலே என்னுடைய கருத்தினை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இன்றைய தினம் அப்படி சென்னையிலே இயங்குகின்ற அந்த மின்சார நிலையத்திலே இருந்து கொட்டுகின்ற அந்தச் சாம்பலினால் அங்கே அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் எல்லாம் பாதிக்கப் பட்டு, குறிப்பாகத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, அப்படி பாதிக்கப்பட்டதன் காரணமாக மருத்துவமனைக்குச் சென்றால் அங்கே சரிவர மருந்துகள் கொடுப்பது கிடையாது. இதன் காரணமாக ஒரு உதாரணத்தைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேற்கு சென்னை பகுதியிலே இருக்கிற இ.எஸ்.ஐ. மருத்துவ மனையிலே 3 மாதங்களுக்கு முன்னால் பல தொழிலாளர்கள் மருந்துகள் தவறாக செலுத்தப்பட்டதன் காரணமாக இறக்க நேரிட்டது என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம். ஒரு தொழிலாளிக்கு மருந்து சரியாகக் கொடுக்கப்படாததன் காரணமாக அந்த ஊசி போட்டதன் காரணமாக அவர் இறந்து விட்டார் என்பதற்காக சர்வ கட்சி கூட்டங்கள் நடத்தி ஊர் வலங்கள் நடத்தி அந்தக் கண்டனக் கூட்டத்தின் வாயிலாக அர சுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரைக்கும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை இந்த மன்றத்திற்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் அப்படி நடந்தது. அங்கே அந்த மருந்துகளை கொடுப்பதால் அங்கே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு, ஏழைத் தொழிலாளர்களுக்கு, சரியாக மருந் துகள் கொடுக்காததற்குக்காரணம் அந்த மருந்துகள் வாங்கு வதிலே பல முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன.

ஐ.டி.பி.எல். என்று சொல்கிற ஒரு நிறுவனத்தில் வாங்கிய தால் அந்த மருந்துகள் சரியாக இருக்கிறதா இல்லையா என்பதைப் பரிசீலிக்க மருத்துவர்கள் தவறிவிட்டிருக்கிறார்கள். ஐ.டி.பி.எல்.

என்ற அந்த நிறுவனம், வேறு மாநிலத்தில் இருந்தாலும் அரசுக்கும் மற்றும் குறிப்பிட்ட சிலருக்கும் சொந்தமான லிமிடெட் கம்பெனி யாக இருப்பதால் அந்த நிறுவனத்திலிருந்து வருகிற மாத் திரை அல்லது இன்ஜக்ஷன் என்கிற அந்த மருந்துகளையும் சரிவர சோதித்துக் கவனிப்பது கிடையாது. அதன் காரணமாக ஏழைத் தொழிலாளர்கள் சாகிறார்கள் என்பதையும் அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, ஏழைத் தொழிலாளர்கள், அடித்தட்டிலே வேலை செய்கிற தொழிலாளர்கள், அல்லது பவர் அவுசிலே கரித்துகள்களை தங்கள் வாயிலே போட்டு போராடுகிற தொழிலாளர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

ஆகவே, அந்த மருந்துகளை வாங்குவதில், மாத்திரைகளை வாங்குவதில் சற்று கவனமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு, ஜெனரல் மருந்துகளை வாங்குவதை விட, பொதுவாக கம்பெனிகளில் இருந்து அவர்கள் பெயரை மாத்திரம் போட்டு மருந்துகளை வாங்கினால் தவறு நடக்காமல் இருக்கும். போலி மருந்துகள் வாங்குவதும் தடுக்கப்பட்டு விடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மருந்துகளை வாங்குவதற்கு கொடேஷன்கள், டென்டர்கள் கோரப்படுகின்றன. அப்படி மருந்து சப்ளை செய்வதற்கான கொடேஷன்கள், டென்டர்கள் வந்த பிறகு, தரமான மருந்துகள் கிடைக்கும் நிலைமை இருந்தாலும், விலை குறைவாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு மூன்று கம்பெனிகளுக்கு ஏகபோக உரிமை கொடுத்து சப்ளை செய்யும் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. அதன் காரணமாக மருத்துவ மனையில் நல்ல மருந்துகள் கிடைக்க வழி இல்லாமல் போய் விடுகிறது. இதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கும் கொடுமையான நிலைமை என்னவென் றால், இந்த மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு சரியானபடி ஊக்கம் தரப்படவில்லை. சென்னையில் இருக்கும் சிறு தொழில் மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு அரசு ஊக்கமும், ஆக்கமும் தரவேண்டும். இதற்கு முன்பு நடந்த மானியக் கோரிக்கை விவாதத்திலே, சிறு தொழில் துவங்குவதில் இருக்கும் இடைஞ்சல்களையும், அதற்கு வாய்ப்பு வசதி இன்மையையும் இங்கே எடுத்துக் கூறினார்கள். ஆகவே, மருந்துகள் வாங்கு வதிலும் சிறு தொழில்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை பல ஆரம் பிக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. மருந்து தயாரிப்பவர்கள் தவறு செய்தால், அதை அரசு கண்டிக்கவும் வாய்ப்பு இருக்கிறது.

(திரு. தீ.சு. நல்லதம்பி) [1978 மார்ச் 23

ஐ.டி.பி.எல். போன்றவைகளை நாம் கண்டிக்க முடியாது என்று நினைக்கிறேன். அந்த அளவிற்கு அவற்றிற்கு ஏகபோகம் இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டும்.

பொதுவாக, கிராமத்தில் இருக்கும் மருத்துவ மனையில் சரிவர மருந்துகள் கிடைப்பது இல்லை. டாக்டர் இல்லாமலேயே சில மருந்தகங்கள் இருந்து வருகின்றன. இந்த மானியக் கோரிக்கை மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தில், எனது தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள்.

பெண்ணாடம் பகுதியில் ஒரு மருத்துவ மனை இடிந்த நிலையில் இருக்கிறது. அதிலே மரங்களும், செடிகளும் முளைத்து இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் பல்வேறு கோரிக்கைகளை விடுத்து இருக்கிறார்கள். அந்த மருந்தகத்தைப் புதுப்பிப்பதற்கு அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தங்களுடைய காணிக்கையாக பணம் தந்து உதவி செய்ய முன் வரத் தயாராக இருக்கிறார்கள். அரசு அதை சீர் செய்து தர முன் வந்தால், அதற்குப் பண உதவி செய்ய செல்வராஜ் மூலமாக மக்கள் தயாராக இருக்கிறார்கள். அருணா சுகர்ஸ் பாக்டரி நிறுவனமும் அந்த மருந்தகத்தைக் கட்டிக் கொடுக்க பண உதவி செய்ய முன்வரத் தயாராக இருக்கிறார்கள். அந்த மருந்தகம் எப்படி இடிந்த நிலையில் இருக்கிறது என்பதையும் அதிலே எந்த அளவிற்கு மரங்கள் முளைத்து இருக்கின்றன என்பதையும் புகைப்படம் எடுத்து இருக்கிறோம். அந்தப் புகைப் படத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில், எங்கள் கட்சியின் தலைவர் மூலம் கொடுக்க இருக்கிறோம் என்பதையும் நான் தெரிவிக்கக் கட்மைப்பட்டு இருக்கிறேன்.

கிராமங்களுக்கு அதிகமாகச் சலுகை தருகிறோம் என்று சொல்கிறார்கள். சென்னை நகரத்தில் இருக்கும் மக்களுக்கு அதிகச் சலுகை இல்லாவிட்டாலும், ஏழை எளிய மக்கள் வாழ்கிற நகர்ப் பகுதியில், பெண்ணாடம் போன்ற பகுதிகளில், மருத்துவ வசதி செய்து தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சென்னை நகரத்தில் இருக்கும் மக்கள் எந்த அளவிற்கு சுகாதாரக் கேடான நிலையில் வாழ்கிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பேசின்பிரிட்ஜ் பகுதியில் கரித்தூள் விழுவதால் மக்கள் காச நோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்தப் பவர் ஹவுசிலிருந்து விழும் கரித்தூள் தடுக்கப்பட வேண்டும். அந்தக் கரித்தூள், இன்று தான் விழுகிறதா, நீண்ட காலமாக இல்லையா என்று கேட்கலாம். நீண்ட காலமாக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில்

1978 மார்ச் 23] (திரு. தீ.சு. நல்லதம்பி)

இருந்த காலத்தில், அந்தக் கரித்தூள் போக்கியில் 22 துளைகள் வைத்து, அந்த ஸ்கிரின் மூலமாக அந்தக் கரித்தூளை வரவழைத்து, செங்கல் செய்வதற்கும், ஸ்லம் போர்டில் செய்யும் செங்கல் உற்பத்திக்கும் அதைப் பயன்படுத்தினோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

ஆனால் இன்றைய தினம் ஆறு மாதமாக அந்தக் கரித்தூளை அப்படிச் செய்யாமல் புகைபோக்கி மூலமாக வெளியேற்றுவதன் காரணமாக ஏறத்தாழ 4 மைல் தூரம், சுகாதாரத்திற்குப் பெருத்த கேடு ஏற்பட்டிருக்கிறது ; அதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட குறைகளை எல்லாம் உடனடியாகப் போக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கின்ற முறையில், பிற்பட்ட சமுதாய மாணவர்களுக்கு 140 மார்க் என்றும் முற்பட்ட சமுதாய மாணவர்களுக்கு 155 மார்க் என்றும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வைத்திருந்தோம். ஆனால் இன்றைய தினம் கவர்னர் ஆட்சிக் காலத்திலும், அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் பிற்பட்ட சமுதாய மாணவர்களுக்கு 140 மார்க் என்றிருந்ததை 145 மார்க்காக மாற்றிவிட்டார்கள். ஆனால், முற்பட்ட சமுதாய மாணவர்களுக்கு அதே 155 மார்க் என்று வைத்து விட்டார்கள். ஏன் இந்த மாற்றம் என்று தெரியவில்லை. அதனால் பிற்பட்ட சமுதாய மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னொன்று. மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் நெருக்கடி இருக்கிறது. அப்படி இருந்தும் இன்றைக்குச் சுமார் 10 சீட்டுகள் காலியாக இருக்கின்றன ; முதலமைச்சர் அவர்கள் ஒருவேளை சொல்லக்கூடும் ; நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருக்கிறது என்று. ஒரு வழக்குதான் இருக்கிறது. ஆனால் 10 சீட்டுகள் காலியாக வைக்கப்பட்டு இருக்கின்றன. அப்படியானால் இந்த நாட்டின் பொருளாதாரம் எந்த அளவுக்குப் பாதிக்கும், எதிர் காலத்தில் 10 டாக்டர்கள் உருவாகும் சூழ்நிலையைத் தடுத்து, அவர்களை எந்த அளவுக்குப் பாதிக்கச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது மருத்துவக் கல்லூரியில் 10 இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொன்னார்கள். அதை அவர்கள் ஆதாரத்தோடுதான் சொல்கிறார்களா ?

[1978 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். அவர்கள் பொதுவாகத்தான் சொல்கிறார்கள். நேரம் இல்லை ; திரு. நல்லதம்பி, தொடர்ந்து பேசுங்கள்.

திரு. தீ. சு. நல்லதம்பி : இப்படிப்பட்ட குறைகளைச் சுட்டிக் காட்டும்போது, ஆளும் கட்சிக்காரர்களுக்கு ஆத்திரம் வரக் கூடாது. குறைகளைச் சுட்டிக்காட்டவேண்டும் ; மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்றுதான் நாங்களும் வந்திருக்கிறோம் ; நீங்களும் வந்திருக்கிறீர்கள்.

இன்றைய தினம் சென்னையில் ஒரு குழந்தைகள் நல மருத்துவமனை இருக்கிறது. அங்கே காலையில் குழந்தையைக் கொண்டுச் சென்றால் ஏறக்குறைய இரண்டு மணிக்குத்தான் திரும்பக்கூடிய அவல நிலை இருக்கிறது. ஏனென்றால் அங்கே இருக்கிற மக்கள் கூட்டம், நோயாளிகள் அதிகம். அதனால் அது ஒரு சந்தைக் கடை மாதிரி காட்சி அளிக்கிறது. அவ்வளவு நோயாளிகள் அங்கே வருவதுதான் அதற்குக் காரணம். இந்த அவல நிலையைப் போக்க என்னுடைய தொகுதியாகிய பூங்கா நகரில் ஒரு குழந்தைகள் நல மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டும். அது அங்குள்ள மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகவும் இருந்து கொண்டிருக்கிறது.

பூங்கா நகரில் பெத்தநாயக்கன்பேட்டையில் காசிவிஸ்வநாதர் கோயில் இருக்கிறது. அங்கே கோயில் குளம் ஒன்றும் இருக்கிறது. இந்தி எதிர்ப்புப் போராட்ட ஊர்வலம் அங்கு இருந்துதான் புறப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்த இடம் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். அந்தக் குளம் இப்போது பெருத்த சுகாதாரக் கேடு விளைவிப்பதாக இருக்கிறது. அதனால் அந்த இடத்தில் ஒரு நல்ல குழந்தைகள் நல மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்பது அங்கே இருக்கிற அத்தனை ஸ்தாபனங்களுடையவும் அனைத்துக் கட்சிகளுடையவும் விருப்பமாக இருக்கிறது. அறநிலையத்துறையில்தான் அந்தக் குளம் இருக்கிறது. அங்கே மருத்துவமனை அமைப்பதில் சிரமம் இருக்காது ; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, பெண்ணுடம் பகுதியில் இருக்கிற, மருத்துவமனையைப் போல் இருக்கிற அத்தனை மருத்துவமனைகளையும் மாற்றி அமைத்து, எல்லா மருத்துவமனைகளிலும் எந்த நேரத்திலும் மருந்து இல்லை ; டாக்டர்கள் இல்லை என்ற குறை இல்லாமல் எல்லாவிதமான மருத்துவ வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 23] (திரு. தீ. சு. நல்லதம்பி)

இன்றைக்கு 200 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்கள்தான் இலவச மருத்துவம் பெறும் வாய்ப்பு இருக்கிறது. அதை மாற்றி வருமானம் 400 ரூபாய் வரையில் உள்ளவர்களும் இலவச மருத்துவம் பெறும் வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். 10 நிமிடங்களுக்கு மேல் பேசி இருக்கிறீர்கள். இன்னும் பல உறுப்பினர்கள் பேசி, இறுதியில் பேராசிரியர் பேச வேண்டியிருக்கிறது.

திரு. தீ. சு. நல்லதம்பி : இப்போதுதான் பேசுவதற்கே ஆரம்பித்திருக்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

அதைப் போல இன்றைய தினம் என்.ஜி.ஓ. வினருக்கு எந்த அளவுக்கு மருத்துவ வசதி தரப்படுகிறதோ அந்த அளவுக்கு சென்னை மாநகராட்சியில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கும் மருத்துவ வசதி செய்துதர வேண்டும்.

சென்னை மாநகராட்சியிலே பணியாற்றினாலும் அவர்களும் என்.ஜி.ஓ.வினரைப் போன்றவர்கள்தான். என்.ஜி.ஓ.வினரைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் முன்பணம் கட்டிய பிறகுதான் மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. இந்த நிலையைப் போக்கி, என்.ஜி.ஓ.வினருக்கு அளிக்கப்படுவதைப் போன்ற எல்லா வசதிகளும் அவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு இன்றைய தினம் குழந்தைகளுக்கு வருகின்ற இளம்பிள்ளை வாத நோய்க்கு அளிக்கப்படுகின்ற சிகிச்சையாகிய பின் தடுப்பு முறைகள் மருத்துவ மனைகளில் இப்போது இல்லாமல் இருக்கிறது. முன்பு இது மாதிரி குழந்தைகளுக்கு வருகின்ற வியாதியாகிய இளம்பிள்ளை வாதம், கக்குவான் போன்ற வியாதிகளுக்குத் தற்காப்பாக தடுப்பு ஊசி போடுவார்கள். இன்றைய தினம் இங்கே எந்த மருத்துவ மனைக்குச் சென்றாலும் இது போன்ற வியாதிகளுக்கு மருந்தே கிடையாது என்று டாக்டர்கள் சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மருத்துவ மனையிலும் இப்படி மருந்துகள் இல்லாமல் இருக்கின்ற அவல நிலையை போக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு இன்றைய தினம் இந்த மானியக் கோரிக்கையைத் தந்திருக்கின்ற நேரத்தில் முதலீட்டுக் கணக்கிலே 1976-77-ல் இருந்ததைக் காட்டிலும் இங்கே நமது மாண்புமிகு நிதியமைச்சர் தந்த அறிக்கையிலே 26-வது பக்கத்தில் ஏறக்குறைய முதலில்

1974-75-ல் 2.69 ஆக இருந்தது. இன்றைய தினம் அந்த நிலை போய் 1.98 ஆக ஆகியிருக்கின்றது. ஆக மூலதனத்தில் இல்லாமல் இருக்கின்ற நேரத்தில் எந்த அளவுக்கு நாம் கொடுக்கின்ற வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது என்பதை தயவு செய்து நமது முதலமைச்சரவர்களும் இந்த அரசாங்கமும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்ற நேரத்தில் சென்னையில் மக்கள் நல்வாழ்வு என்பது எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது நன்கு தெரிகிறது. சென்னையில் இவ்வாறு இருக்கின்ற நேரத்தில் இன்னும் புறநகர்ப் பகுதிகளில் இதைவிட மோசமான நிலைமை இருக்கிறது. சுகாதாரக் கேடு நிறைந்திருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள்கூடச் சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கையை பானையிலே சோறு இருக்கிறதா என்பதே தவிர யானைக்குப் பெரிய கவுன் போடுவதல்ல. அதே போல் சென்னையில் 120 டிவிஷன்களையே நம்மால் கவனிக்க முடியவில்லை. அதிக ஆசை வைத்திருப்பதால் மட்டும் எல்லாப் பொது மக்களுக்கும் எல்லா நன்மைகளையும் இந்த அரசு செய்ய முடியவில்லை என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை அதாவது சுகாதாரச் கேடாக இருக்கின்ற துர் நாற்றங்களைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசினுடைய கொள்கையைப் பார்க்கின்ற நேரத்தில் மலேரியா பற்றி எந்தவிதமான செயற் குறிப்பும் இல்லை. கொசுத் தொல்லைகளை ஒழிப்பது குறித்து எதுவும் கோடிட்டுக் காட்டப்படவில்லை. இதனைத் தேசியத் திட்டம் என்று நமது முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிடக் கூடும். இது தேசியத் திட்டம்தான் என்றாலும் நமது அரசு மத்திய அரசிலே இருந்தும் வாங்கும் மானியத்தைச் சற்று அதிகமாக வாங்க வேண்டும். மானியத்தை அவர்கள் மருந்தாகத் தருகிறார்கள். அந்த மருந்து வெறும் பவுடர் கலக்கப்பட்ட தண்ணீரே தவிர வேறல்ல. அது கொசுக்களை ஒழிப்பதாகத் தெரியவில்லை. கொசுக்களை மேலும் உற்பத்தி செய்கின்ற அளவிலே அது இருக்கின்றது. ஆகவே, மருந்து வாங்குவதற்குப் பதிலாக மானியத்தைப் பணமாகப் பெற்று நல்ல மருந்து நாமே வாங்கிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு இந்தக் கரித்தூள் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் எங்களை மட்டும் பேசவில்லை. எல்லோரையும் தங்கள கஷ்டம் தாளாமல் பேசுகிறார்கள். பழி வாங்குகிறார்களே என்று பேசுகிறார்கள்.

சில நாட்களுக்கு முன்பு நம்முடைய மத்திய அமைச்சர் சத்திய மூர்த்தி பவனுக்கு வந்திருந்தார். அப்போது கூட அவருக்கு ஒரு மகஜர் கொடுக்கப்பட்டது. அதிலே அமைச்சர் வந்த பிறகு தான் இந்தக் கரித்தூள் அதிகமாகக் கொட்டப்படுகிறது என்று கூறப்பட்டது. பொது மக்கள் அரை மணி நேரம் கூட இருக்க முடியாமல் இந்தக் கரித்தூளினால் மிகவும் தொல்லைக்கு ஆளாகிறார்கள். இவ்வளவு கஷ்டங்களை அவரிடம் எடுத்துச் சொல்லியதும் அவர்கள்கூட வருத்தப்பட்டுக் கொண்டார்கள். ஆகவே தயவு செய்து கேட்கிறேன். பொதுமக்களைப் பழி வாங்காதீர்கள். வேண்டுமானால் எங்களைப் பழி வாங்குங்கள்.

[பிற்பகல் 12-40]

முந்தைய அரசு காலத்தில் மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கு ஒரு வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மாணவர்களைச் சேர்ப்பதில் தவறான பாதையைக் கடைபிடித்திருகிறார்கள். பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்குச் சலுகைகள் கிடைப்பதில்லை முற்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்கள் 3 பேர்கள் அதிகாரிகளாக இருப்பதால் முற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சலுகைகள் தந்திருக்கிறார்கள் என்பதை நான் புள்ளி விவரங்களோடு எடுத்துச் சொல்லமுடியும்.

ஆகவே, பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களுக்கும் அதாவது ஹரிஜனங்களுக்கும் இந்த மருத்துவக் கல்லூரியானாலும் சரி, என்ஜினியரிங் கல்லூரியானாலும் சரி அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறி எனக்கு பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>திரு. ஒ. சுப்பிரமணியன் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மருத்துவம் என்ற தலைப்பில் பட்ஜெட் எஸ்டிமேட்டில் மொத்தம் ரூ. 56,19.61 லட்சம் இன்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் சம்பளம் அலவன்ஸ் வகையறாக்களுக்காக ரூ. 31,77.04 லட்சம், மருந்துக்காக ரூ. 11,58.88 லட்சம் என்றும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாக்கி அனைத்துக்கும் ரூ. 12,73.69 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக மருந்துதான் அதிகமாக மக்களுக்குத் தேவைப்படுகிறது. நிர்வாகமும், டாக்டர்களும் அவசியமாக இருந்தாலும்கூட இந்த வைத்தியசாரத்தை அவசியம் உயர்த்தியாக வேண்டும்.

கருத்தை வைத்துக்கொண்டிருக்கின்ற நமது முதலமைச்சர் அவர்களே இந்தத் துறைக்கும் பொறுப்பு வகிப்பதால், இதில் விசேஷ கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன். இந்த ஆண்டு Provincialisation of Municipal and Panchayat Union Dispensaries வகைக்கு 42 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னையைத் தவிர பிற இடங்களில் மனநோய் மருத்துவ நிலையம் கிடையாது. தென் ஜில்லாக்களில் ஒரு இடத்தில் இப்படிப்பட்ட மனநோய் மருத்துவ நிலையத்தை ஏற்படுத்தினால் அங்குள்ள மக்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏறக்குறைய எல்லா ஸ்பெஷலிஸ்டுகளும் சென்னையில் தான் இருக்கிறார்கள். மற்ற ஜில்லாக்களில் இருக்கின்றவர்களுக்கு அந்த வசதி வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆகவே இவர்கள் மற்ற மாவட்டங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து, பிற இடங்களில் உள்ளவர்களுக்கும் வைத்திய வசதி கிடைக்கத் தகுந்த வழியில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்லக்கூடும். இப்போது கண் சிகிச்சை முகாம்கள் அங்கங்கே நடைபெறுகின்றன. அதைப்போல் நோயாளிகள் அருகாமையிலேயே வைத்திய வசதி பெறக் கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியாக பல மருத்துவர்கள் கன்னியாகுமரியிலிருந்து கல்கத்தா, பம்பாய், டெல்லி இந்த இடங்களுக்கு எல்லாம் சென்று சிகிச்சை நடத்துகிறார்கள். தனியார்கள் இவ்விதம் நடத்த முடியும் என்றால் அரசாங்கம் ஏன் செய்ய முடியாது என்று கேட்க விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சோமநாதபுரத்தில் நடந்து வருகின்ற டி.பி. சென்டரில் இன்னும் அதிகமான வசதிகள் ஏற்படுத்தவேண்டும், படுக்கை வசதிகளை அதிகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கலெக்டர்கள் தலைமையில் உள்ள குழு, தங்கள் வசமுள்ள பணத்தைக்கொண்டு 'மொபைல் எக்ஸ்ரே யூனிட்' நடமாடும் எக்ஸ்ரே கருவி வாங்க தீர்மானித்திருந்தது. ஆனால் இன்று வரையிலும் எதையும் வாங்கினதாகத் தெரியவில்லை. இன்னும் காலம் தள்ளாமல் இதை உடனடியாக வாங்கினால் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள நோயாளிகளைச் சோதனை செய்ய வசதியும் வாய்ப்பும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை, மதுரை போன்ற பெரிய ஆசுபத்திரிகளில் புதியவர்கள் சென்றால், யார் யார் எங்கே இருக்கிறார்கள், யாரைப் பார்க்கவேண்டும் என்று கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பெரிய ஆசுபத்திரிகளில் வருகின்றவர்

களுக்கு உதவியாக வழிகாட்டிகளை—கைட்களை — நியமித்தால், கிராமத்திலிருந்து வருகின்றவர்களுக்கு, அறியாதவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவ அதிகாரிகள் சிப்பந்திகள் இவர்களைப் பொறுத்த வரையில் சில முக்கிய விஷயங்களைப் பரிசீலிக்க வேண்டும். சர்க்கார் ஆசுபத்திரிகளில் இருக்கும் டாக்டர்கள் தனியாக வைத்தியம் செய்ய அனுமதி உண்டா இல்லையா என்பது தீர்மானமாக சொல்லப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கௌரவ டாக்டர்கள் என்பது நீடிக்குமா என்பதையும் தெரிவிக்க வேண்டும். வேலை நேரத்தைப் பொறுத்தவரை மாறுதல் மிகவும் அவசியம். குறிப்பாக பிரசவ ஆசுபத்திரியில் வேலை செய்கின்ற டாக்டர்கள் காலை 7 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை இருக்க வேண்டும். அதோடு அவருக்கு இரவு டூட்டி இருக்குமானால் தொடர்ந்து மறுநாள் பிற்பகல் 2 மணி வரை இருக்க வேண்டும். இப்படி 31 மணி நேரம் வேலை பார்க்க வேண்டியிருக்கிறது. மனித உயிர்களுடன் பழகும் இவர்களுக்கு, குறிப்பாக பிரசவித்த தாய்மார்கள், பச்சைக் குழந்தைகள் ஆகியவர்களுடன் அதிகமான கவனத்துடன் இருக்க வேண்டியவர்களுக்கு கவனத்துடன் இவர்கள் சிகிச்சை செய்ய வேண்டி இருப்பதால்— இவர்களுக்குப் போதுமான ஓய்வு கொடுக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து இவர்களுக்கு அதிகமான ஓய்வு கொடுக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சில ஆசுபத்திரிகளில் ஷிப்ட் ஸிஸ்டம் இருக்கிறது. இதை எல்லா ஆசுபத்திரிகளுக்கும் விரிவுபடுத்தினால் நல்லது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பதவி உயர்வு கொடுக்கின்ற விஷயத்தில் சீனியாரிட்டியை மட்டும் கணக்கில் எடுக்காமல் திறமையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பதவி உயர்வு கொடுக்கலாம் என்கின்ற என் கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

எல்லாச் சாதாரண நோய்களுக்கும் பெரிய ஆஸ்பத்திரிக்குச் செல்வதைத் தடுக்கவும், பெரிய டாக்டர்களை அணுக வேண்டுமென்ற நிலையைக் குறைக்கவும் கிராமப் புறங்களில் சித்த வைத்திய மருந்தகங்களை அதிகப்படுத்த ஊக்குவிக்க வேண்டும், அதற்கான வசதிகளைச் செய்துத் தரவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

பேர்புட் டாக்டர்ஸ் (Bare foot Docters) என்ற சாதாரண மருத்துவர்களுக்கும் நாம் வசதியும், வாய்ப்பும் கொடுக்க வேண்டும். இப்படிச் சொல்லுகின்ற நேரத்திலே, இதைப்பற்றி

[திரு. ஓ. சுப்பிரமணியன்] [1978 மார்ச் 23

நேற்று மேல் சபையிலே அது இயலாதென்று அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி மறு பரிசீலனை செய்து, அதன் அவசியத்தை உணர்ந்து, இதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், புதுக்கோட்டை மாவட்ட அரசினர் மருத்துவ மனையில் சில நாட்களுக்கு முன்பு திருமயம் நமணசமுத்திரத்தைச் சேர்ந்த ஒரு ஏழைத் தொழிலாளிக்கு குளுகோசிற்குப் பதிலாக மண்ணெண்ணையை ஏற்றியதன் காரணமாக மரணம் அடைந்த சம்பவம் மிகவும் வேதனையளிக்கிறது. அப்படி மரணம் அடைந்தவரின் குடும்பத்திற்கு முதல் அமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து உதவித் தொகை வழங்க வேண்டும். அதற்குக் காரணமாக இருந்தவரின்மேல் நடவடிக்கை எடுக்கப்படுவதாக இருந்தாலும், அந்தக் குடும்பத்திற்கு நிவர்த்தி இருக்காது என்பதால், அந்தக் குடும்பத்தினருக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், காரையூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டிடம் கட்டுவதற்காக நிதி கேட்டிருக்கிறார்கள். அவர் கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக சிகிச்சை அளிக்க மறுக்கப்படுகிறது. அதே போல், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த நற்சாந்துபட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் சுமார் 7 பணியாளர்கள் மீது பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. குற்றம் செய்யாதவர்கள் மீதும் வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. அந்த நிரபராதிகள் மீது உள்ள வழக்குகளை திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ராயபுரம் கிராமத்தில், அங்கே காலியாக உள்ள அரசுக் கட்டிடத்தில் மருத்துவ மனை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு மக்கள் தங்கள் பங்குத் தொகையை அளிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

திருமயம் தாலூகாவில் உள்ள வலையப்பட்டி, பாப்பாயி அரசு மருத்துவ மனையில், எக்ஸ்ரே, மற்றும் ரத்த பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். காரணம் இன்றைக்கு அது மக்களுக்கு மிகவும் தேவையாக இருக்கிறது. 15, 20 மைல்கள் வட்டாரத்தில் இந்த வசதி இல்லாமல் இருக்கின்ற காரணத்தால், இந்த எக்ஸ்-ரே, ரத்தப் பரிசோதனை வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியனிலே இருந்து ஆங்காங்கே பலரிடம் நன்கொடை வாங்கியோ அல்லது பொது மக்களிடம் வசூல் செய்தோ சில ஆஸ்பத்திரிக் கட்டிடங்களைக் கட்டியிருக்கிறார்கள். ஆனால்,

1978 மார்ச் 23] [திரு. ஓ. சுப்பிரமணியன்]

தகுந்த டாக்டர்கள் கிடைக்காத காரணத்தால், இன்னும் அந்த மருத்துவமனைகள் இயங்காமல் இருக்கின்றன. இந்த நிலைமையை மாற்ற, அந்த மருத்துவ மனைகளுக்கு டாக்டர்களை சீக்கிரமே நியமித்து, கிராம மக்கள் வைத்திய வசதி பெறுவதற்கு வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நான் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும் சில முக்கியமான கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

ஆஸ்பத்திரி வசதிகள், அதிலும் மக்களுக்குப் போதிய அளவுக்கு வைத்திய உதவி கிடைக்கும்படியான நிலையில் ஏற்பாடு செய்வது ஒரு பெரிய சேவை என்பதால் அரசு அதற்குச் சுமார் $82\frac{1}{4}$ கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். இந்த மிக முக்கியமான கவனத்திற்குரிய துறையில், எந்தவிதமான ஊழலுக்கும் இடம் இல்லாமல் சேவை செய்ய வேண்டும் என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்ந்திருக்க வேண்டும்.

மாவட்ட ஆஸ்பத்திரிகளிலே இன்று பார்த்தால் ஏராளமான கூட்டங்கள் நிறைந்து கொண்டிருக்கின்றன. ஏழைகளுக்குக்கொஞ்சம் விசேஷமான வைத்தியப் பரிசோதனை கிடைக்கக் கூடிய இடம் மாவட்ட ஆஸ்பத்திரிகள்தான். அங்கே டாக்டர்கள், பணியாளர்கள் அதிகமாக இருக்க வேண்டியது மிக அவசியமாகும். ஆனால் இன்றைக்கு இது மிகமிகக் குறைவாக இருக்கிறது. எனவே அங்கே டாக்டர்களையும், பணியாளர்களையும் அதிகப்படுத்த வேண்டும். இன்றைக்குப் பல மணி நேரம் காத்திருந்தாலும், பொது மக்களுக்குப் போதுமான அளவுக்கு வைத்திய வசதி கிடைக்காத நிலைமை இருக்கிறது. அதனால், மக்களுக்கு வெறுப்பும், ஆத்திரமும் ஏற்படுகிறது, உருவாகிக் கொண்டு வருகிறது.

அதே மாதிரி ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்களும் அதிகமாகத் தேவைப்படுகின்றார்கள். அப்படி அவர்கள் அங்கே இல்லாவிட்டால் தனியார் மருத்துவ மனைகளை நாடி, ஏராளமான பணத்தைச் செலவு செய்கின்ற நிலைமைக்கு ஏழை மக்கள் தள்ளப்படுகிறார்கள். எனவே, இந்த வசதிகளை அங்கே செய்து கொடுக்க வேண்டும்.

அதே மாதிரி, தாலூகா தலைநகரம், நகரசபை போன்ற இடைத்தரமான ஆஸ்பத்திரிகளிலே இன்றைக்கு எக்ஸ்-ரே பரிசோதனை செய்வதற்கோ, ரத்தப் பரிசோதனை செய்வதற்கோ வேண்டிய ஏற்பாடுகளும், அதே போல் வியாதி, சரும சம்பந்தமான ஸ்கின் டெஸ்ட் போன்ற ஏற்பாடுகளுக்கோ குறைந்தபட்சம் இந்த வசதிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதே போன்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்துகள் கொடுப்பது, ஊசி போடுவது போன்ற அளவுக்காவது ஏற்பாடுகளைச் செய்தால் நிச்சயமாக மக்களுடைய கூட்டம் அதிகமாக மாவட்ட ஆஸ்பத்திரிகளில், பெரிய ஆஸ்பத்திரிகளில் குவிவது குறையும். அந்தக் கூட்டத்தைக் குறைப்பதற்காக பஞ்சாயத்து யூனியன்களிலே டாக்டர்கள் மற்றப் பணியாளர்கள் கொண்ட மொபைல் யூனிட்டை ஏற்படுத்தி அந்த வாகனங்கள் கிராம சென்டர்களுக்குச் சென்று மருத்துவ வசதி அளிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இவற்றை எல்லாம் செய்தால் மாவட்ட அளவிலுள்ள பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு கிராம மக்கள், ஏழை மக்கள் பல மைல் தூரம் சென்று மருத்துவ வசதி பெற வேண்டுமென்ற நிர்பந்தம் இருக்காது.

மேலும் அங்கே தேவையான மருந்துகள் கொடுக்கப்படுவது இல்லை. நீங்களே பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். பல ஏழை மக்களால் அவ்வாறு மருந்துகள் வாங்க முடிவதில்லை. ஆகவே, எல்லா மருந்துகளையும் வாங்கி வைப்பதற்கு அதிகப்படியான பணம் ஒதுக்க வேண்டும். இந்த மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள பணம் போதாது. எனக்கு முன்னால் பேசிய சுப்பிரமணியன் அவர்கள் சொன்னது போல் மையத்தில் இருந்து மருந்துகளை விநியோகம் செய்யும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இ. எஸ். ஐ. போன்ற ஸ்தாபனங்களில் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன. அது போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தனிப்பட்ட ஏஜண்டுகளிடமிருந்து, கம்பெனிகளிடமிருந்து அதிகப்படியான மருந்துகள் வாங்காமல் இருப்பது பொருத்தமாக இருக்கும்.

மருந்து உற்பத்தி விஷயத்தில் இந்த நாட்டில் அந்நிய நாட்டு ஏகபோகக் கம்பெனிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. அப்படிப்பட்ட கம்பெனிகளை அப்புறப்படுத்திவிட்டு இந்திய நாட்டில் இருக்கும்படியான அறிவுத் திறனைக் கொண்டு, மூலிகைகளைக் கொண்டு, இந்தியாவிலேயே அந்நிய முதலீடு இல்லாத நிலையிலே மருந்துகளை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்ய மத்திய சர்க்காரை வற்புறுத்த நம்முடைய சர்க்கார் முன்வரவேண்டும். மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையிலே தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்தினால் தான் இது சாத்தியப்படும். தமிழக மக்களும், தமிழக அரசும் இதற்கு முன் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல் இந்திய நாட்டு வைத்தியமான ஆயுர்வேதம், சித்தம், ஓமியோபதி, யுனானி—ஓமியோபதி, யூனானி இந்திய நாட்டு வைத்தியம் என்று பரிபூரணமாகச் சொல்ல முடியாது—பல இடங்களில் பயன்படுத்தப்படுகிறது—இந்த வைத்திய முறைகளை வளர்க்கவேண்டும். இந்த வைத்திய முறைகளில் விஞ்ஞான முறையில் கருவிகள் பயன்படுத்தும் நிலைமை ஏற்படவில்லை. இப்போதுதான் முன்னுக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆயுர்வேத வைத்தியம் பற்றி உலக சுகாதார ஸ்தாபனம் (டபிள்யூ. எச். ஓ) மூலமாக ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டும். இந்திய மருத்துவ கவுன்சில் கூடப் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

வேத வைத்தியம் பற்றி உலக சுகாதார ஸ்தாபனம் (டபிள்யூ. எச். ஓ.) மூலமாக ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டும். இந்திய மருத்துவ கவுன்சில் கூடப் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும். ஆயுர்வேத காலேஜ் கூட தமிழ்நாட்டில் அமைக்க வேண்டுமென்று அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். ஆயுர்வேதம் வளர்ச்சியடைய ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் உண்டாக்கக்கூடிய அரிஷ்டம் போன்ற மருந்துகளுக்கு 30 சதவிகிதம் வரி போடுகிறார்கள். அந்த வரியைக் குறைக்க வேண்டும். மக்களுக்கு உபயோகப்படக்கூடிய மருந்துகள் அவை. கள்ளத்தனமாகச் செய்யப்படுகிற மதுகாசம் போன்றவற்றுக்குக் கட்டாயமாகத் தடை செய்யவேண்டும்.

அதேபோன்று சித்தா கல்லூரி பாளையங்கோட்டையில் இருக்கிறது. அதையும் வளர்க்க வேண்டும். எல்லா ஆஸ்பத்திரிகளிலும் ஆயுர்வேத, சித்த முறைகளைப் பயன்படுத்தும் பிரிவுகளை ஏற்படுத்த வேண்டும். எல்லா டாக்டர்களும் இதிலே பயிற்சி பெற்று, இந்த வைத்திய முறையில் தேர்ச்சி பெற்று வைத்தியம் செய்ய வழி செய்ய வேண்டும்.

தற்போது வைத்தியம் செய்யக்கூடிய சித்த, ஆயுர்வேத வைத்தியர்களுக்கு பட்டமோ, சர்ட்டிபிகேட்டோ இல்லாதவர்களுக்கும் வாய்மொழியாகத் தேர்வு நடத்தி சர்ட்டிபிகேட் கொடுக்கும் முறை கையாளப்பட்டது. அது என்ன ஆயிற்று? அது தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். அவர்களைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

ஆஸ்பத்திரிகளுக்கும், மருந்துகளுக்கும் மட்டும் ஏற்பாடு செய்து விட்டால் போதாது, அதிலே சேவை செய்யக்கூடிய மருத்துவர்கள் மன நிறைவோடு நன்கு சேவை செய்யக்கூடியவர்களாக இருக்கவேண்டும். மிகப் பெரிய கஷ்டம் ஒன்று இருக்கிறது. கவுரவ டாக்டர்கள் என்ற முறை அமலில் இருக்கிறது. கவுரவ டாக்டர்களுக்குக் கட்டுப்பாடு இல்லை. அவர்களுக்கு நேரம் காலம் ஒன்றும் கிடையாது. அவர்கள் உயர் பதவியில் நல்ல செல்வாக்கோடு இருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக இருக்கிற அரசு டாக்டர்களைக் கட்டுப்படுத்தும் முறையில் இருக்கிறார்கள். இது ஒரு முரண்பட்ட நிலையாக இருக்கிறது. இந்த முரண்பட்ட நிலையினால் தகராறுகள் ஏற்படுகின்றன. மன நிறைவு இல்லாமல் போகிறது. நிரந்தர ஊழியர்களைக் கொண்டு அரசு ஆஸ்பத்திரிகளில் எல்லாம் பணிகள் நிறைவேற்றப்படவேண்டும். கவுரவ டாக்டர்கள் முறையை எடுத்துவிடவேண்டுமென்பது எங்களுடைய கருத்து.

(பிற்பகல் 1–00)

காரணம், இது சகலவிதமான கட்டுப்பாடற்ற போக்குக்கும், டாக்டர்கள் அரசு ஊழியர்களாக சேவா உணர்ச்சியோடு செயல்படுகின்ற டாக்டர்களை தப்பான வழிக்குக் கொண்டு

போகிறது. அரசுத் துறையிலே பணிபுரிகின்ற டாக்டர்களுக்குத் தகுந்த சம்பளமும் படிகளும் கொடுக்கப்படவேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட வில்லையென்றால் அவர்களைக் குறை கூறிப் பிரயோஜனம் இல்லை.

அவர்கள் கடுமையாக உழைக்கின்றவர்கள்; அவர்கள் எத்தனை மணி நேரம் உழைக்கிறார்கள் என்பதையெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் கூறினார்கள். கிராமங்களுக்கு அவர்கள் போகவேண்டும், அவர்களுக்குப் போக்குவரத்து வசதிகள் தந்துவிட்டு, வீட்டுவசதிகள் ஏற்படுத்திக் கொடுத்துப் போகச் சொல்ல வேண்டும். அப்படியில்லாமல் சும்மா நீ கிராமத்திற்குப் போ என்று படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்களைச் சொல்வது, எந்தவிதமான உத்திரவாதமும் இல்லாமல் போவதற்கு அவர்களுக்குக் கஷ்டம் இருக்கிறது. ஆகவே இவைகளையெல்லாம் அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும்

அரசு ஊழியர்களாக இருக்கின்ற டாக்டர்கள் வெளியே தனியாக எத்தனையோவிதமான காரியங்களைச் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக சேவை உணர்ச்சி குறைந்து அக்கறையற்ற நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. பிரத்தியேகமாக அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்காவிட்டால் ஆனரரி டாக்டர் என்ற முறையிலே இருந்துகொண்டு அவர்கள் வெளியே பணியாற்றுகிறார்கள், இதன் மூலமாக நிறையப் பணம் சம்பாதிக்கிறார்கள். மருத்துவ மனைக்கு வரச் சொல்லிவிட்டு, பிறகு வெளியே தங்களிடம் வரச்சொல்லி வெளியே பணம் சம்பாதிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைக்கு இடம் கொடுக்கக்கூடாது. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டும். அவர்களுக்கு நான்-பிராக்டிஸிங் அலவன்ஸ் கொடுக்கவேண்டும். சம்பளத்தில் பாதியை அவர்களுக்கு நான்-பிராக்டிஸிங் அலவன்ஸ் ஆகக் கொடுத்தால்தான் இந்த விதமான தவறுகளைத் தடுக்கமுடியும். இல்லாவிட்டால் அவர்களுடைய வாழ்க்கை நிலைக்கு வருவாய் போதவில்லை என்ற பிரச்சினை ஏற்படும்.

அடுத்து, அடி மட்டத்திலே இருக்கின்ற மக்களுடைய சுகாதாரப் பிரச்சினையைக் கவனிப்பது முறையாக இருக்கும். நகர சபைகள், முனிசிபாலிட்டிகள், பஞ்சாயத்துக்கள் இவைகளிலே பணியாற்றுகின்ற நகரசுத்தித் தொழிலாளர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நேரடியாக இந்த மருத்துவத் துறைக்குத் தொடர்புடையவர்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும் அவர்கள் சுகாதாரத்திற்கு ஆதாரமாக இருக்கக்கூடியவர்கள், அவர்களுக்கே சுகாதாரமில்லை என்ற நிலைமை இருக்கிறது. அவர்களுக்காக பென்ஷன் திட்டம் அறிவித்

தார்கள், அது வாபஸ் பெறப்பட்டுவிட்டது. இனி என்ன செய்யப் போகிறது அரசு? அவர்களுக்கும் பென்ஷன் திட்டம் கொண்டுவரப்படவேண்டும்.

அடுத்து, மலேரியா ஊழியர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் 5,000 பேர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அடிமட்டத்திலே இருக்கிறவர்கள். எப்படி தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்று பொருளாதாரத்திலே வேறுபாடு இருக்கிறதோ அதைப் போன்று அவர்களும் அடித்தட்டிலே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் மனிதர்கள்தான். அவர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று இவ்வளவு செய்யவேண்டும் என்று கோட்டா வேறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சுவற்றிலே கையெழுத்துப் போடக்கூடிய அவல நிலைமை இருக்கிறது. அவர்கள் சுவற்றில் கையெழுத்து போடவேண்டும், குறிப்பு எழுதவேண்டும். ஆனால் வீட்டுக்குச் சொந்தக்காரர் மறுத்தால் அவர்களே கையிலே இருந்து பணம் போட்டு அட்டை வாங்கி எழுதிவைக்கவேண்டும். இப்படிப்பட்ட மோசமான நிலைமையெல்லாம் இருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டும்.

அதிகப்படியான மலேரியா ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். இப்படிப் பல பொதுவான நடவடிக்கைகளை மருத்துவ விஷயத்திலே நான் அரசுக்குத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய தொகுதியைப் பற்றிய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே உள்ள 8 மருத்துவக் கல்லூரிகளிலே என்னுடைய தொகுதியிலே கோவையிலே உள்ள மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அங்கே தினசரி 4 ஆயிரம் நோயாளிகள் வந்து போகிறார்கள். அந்த அளவிற்கு அவுட்பேஷண்டுகள் வந்து வைத்தியம் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. 1969 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் 805 படுக்கைகள் தான், ஒரு படுக்கைகூட அதிகமாக்கப் படவில்லை. அங்கே இன்பேஷன்ட் என்ற முறையிலே 1,500 பேர்கள் படுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மற்ற நோயாளிகள் பாய், அல்லது தரையிலே படுத்துக் கொண்டிருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டு 28 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டப் பட்டது. ஆனால் அங்கே இன்னும் கட்டில்கள், பெஞ்ச், நாற்காலி இவைகள், மற்ற சாமான்கள் எல்லாம் போடப்படவில்லை. அதுமட்டுமல்ல. அதற்கு ஊழியர்களும் இல்லாமல் அது உபயோகப்படாமல் இன்றைக்கு இருந்து வருகிறது.

அடுத்து ஆக்ஸிடெண்ட் யூனிட் ஒன்று கட்டப்பட்டது, அதற்கும் ஸ்டாஃப் இல்லையென்ற பெயரால் செயல்படாமல் இருக்கிறது. மொபைல் சர்ஜிகல் யூனிட் ஆரம்பிக்கப்பட்டு 3

மெடிக்கல் ஆஃபீசர்கள் போடப்பட்டார்கள். ஆனால் அதற்கு வேண்டிய வேறுவிதமான ஸ்டாஃப் இல்லை, பாரா மெடிகல் போன்ற ஸ்டாஃப் கொடுக்கப்படாமல் இருக்கிறது, வாகனம் கொடுக்காமல் இருந்தால் எப்படி மொபைலிட்டி இருக்கும்? எப்படிச் சுற்றிப் பார்க்க முடியும், ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது.

நியூரோ சர்ஜிகல் வார்ட், பிளாஸ்டிக் சர்ஜரி ஆகியவைகள் கிடையாது. இப்படிப்பட்ட ஏற்பாடுகள் கோவை மருத்துவ மனையில் இல்லை. சென்னையிலும், மதுரையிலும் இவைகள் இருக்கின்றன. ஆனால், கோவையில் இது இல்லை. இப்படிப் பட்ட விசேஷ வைத்திய வசதிகள் வேண்டுமென்றால் சென்னைக்குப் போகவேண்டும் அல்லது மதுரைக்குப் போக வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும்.

ஸ்டாஃப் அதிகமாக ஆக்கப்பட்ட வேண்டும். சானிடரி ஓர்க்கர்ஸ் அதிகமாக ஆக்கப்படவேண்டும். நர்சிங் அசிஸ்டண்ட்ஸ் அதிகமாக ஆக்கப்படவேண்டும். ஆஸ்பத்திரியில் பொதுவான வேலைக்கு இருப்பவர்கள் அதிகமாக ஆக்கப்பட வேண்டும். அவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இதன்மூலம் பொருளாதாரத்தைச் சரிக்கட்டிவிடலாம் என்று ஊழியம் செய்பவர்களைக் குறைத்துவிட்டால் மிகப் பெரிய கஷ்டம் ஏற்படும். மக்களிடத்தில் மன நிறைவு ஏற்படுவதற்குப் பதிலாக எதிர்ப்புதான் ஏற்படும் என்பதை அரசுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

டயாபெடிக் வார்டு கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அதுபோலவே சைக்யாட்ரிக் வார்டு, அதாவது மனநோயாளிகளுக்குகான வார்டு கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது.

மெட்டர்னிட்டி பிளாக் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது. அங்கே ஏராளமான பிரசவ கேஸ்கள் கொண்டு வரப்படுகின்றன.

அடுத்து ஸ்டோர்-கம்- தியேட்டர் ப்ளாக் கட்டப்பட வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. இவைகளுக்கான ஆலோசனைகள் பல அரசுக்குக் கொடுக்கப்பட்டும் நடக்கவில்லை.

இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் ஸ்டீம் லாண்டரி கட்ட ஆலோசனை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் நடக்கவில்லை. தற்பொழுது ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய்கிறார்கள். எனவே, இன்னும் ஒரு இலட்சம்தான் இதற்கு அதிகமாகும். எனவே ஸ்டீம் லாண்டரி கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ரேடியாலஜி டிபார்ட்மெண்டைப் பொறுத்த வரையில் இரண்டு எக்ஸ்ரே மெஷின்கள் இருக்கின்றன. 1930 மாடல் ஒன்று இருக்கிறது. இது 100 மில்லி ஆம்பியர்ஸ்தான் வேலை செய்யும். இன்னொன்று 1960 மாடல், இது 150 மில்லி ஆம்பியர்ஸ்தான் வேலை செய்ய முடியும். இந்த இரண்டும் பழைய மெஷின்கள். ஆனால், மதுரையிலும் சென்னையிலும், 1970 மாடல் 500 மில்லி ஆம்பியர்ஸ், 700 மில்லி ஆம்பியர்ஸ் மெஷின்கள் இருக்கின்றன. ஆனால் இவ்வளவு பெரிய மருத்துவ மனையில், அதுவும் மெடிகல் கல்லூரி இருக்கும் மருத்துவ மனையில் இப்படிப் பழைய மெஷின்கள் இருந்தால் என்ன நிலைமை ஏற்படும் என்பதை அரசும் முதலமைச்சரவர்களும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சுகாதாரம் இல்லாத படுமோசமான நிலைமை இருக்கிறது. 17—2—1978 ஆம் தேதியன்று நானும் அந்த மெடிகல் சூப்பரிண்டெண்ட்டும் சேர்ந்து மெயின் வார்டுக்குக் கீழேயுள்ள பகுதிகளைப் பார்த்தோம். 50 படுக்கைகள் கொண்டதாக ஆரம்பத்தில் கட்டப்பட்டது அந்த வார்டு. ஆனால், இன்றைக்கு 120 பேர்கள் அங்கே இருக்கிறார்கள், படுக்கைகளின் வசதியும் அதிகப் படுத்தப்படவில்லை. இதற்கு 6 கக்கூஸ் அறைகள் இருக்கின்றன. ஆனால் அதில் 3 கக்கூஸ்கள் பூட்டப்பட்டிருக்கின்றன. தண்ணீர் சப்ளையும் சரிவர இல்லை. மேல் நிலைத் தொட்டியிலிருந்து தண்ணீர் சப்ளை வருவதில்லை. பக்கெட்டிலேதான் தண்ணீர் கொண்டு வந்து ஊற்ற வேண்டும். இதனால் நாற்றம் தாங்க முடியவில்லை. மெடிக்கல் சூப்பரிண்டெண்ட்டே அருவருந்தார். பைப் தண்ணீர் இல்லாத நிலையில் இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட ஏற்பாடு செய்யப்போவதாக மானியக் கோரிக்கையிலே ஒரு குறிப்பிலேயிருந்து நான் புரிந்து கொண்டேன்.

நோயாளிகளுக்காக இருக்கிற கட்டடம் போதாது. 50 பேர் இருக்கக்கூடிய இடத்தில் 120 பேர்கள் படுத்தால் என்னவாகும்? ஒரு நோயாளிக்கு ஒரு உதவி ஆள் என்று இல்லாவிட்டாலும் 5 நோயாளிகளுக்கு ஒரு உதவியாள் என்றால்கூட அவர்களுக்கு இடம், இன்னும் மாணவர்களுக்கு இடம் ஆக இவ்வளவு பேர்களுக்கு இடம் வேண்டும்.

ஆறு கக்கூஸ்களிலே 3 கக்கூஸ்கள் மூடப்பட்டிருக்கின்றன. தண்ணீர் வசதியும் இல்லை. மேலும் செப்டிக் டாங்குகள் வழிகின்றன. பைப்புகளில் தண்ணீர் போக வழியில்லை. சாக்கடைத் தண்ணீர் தேங்கியிருக்கின்ற நிலைமை. பி. டபிள்யூ. டிக்குச் சொல்லி அந்த அதிகாரிகள் ரிமைண்டர் அனுப்பியதைப் பார்த்தால் நூற்றுக் கணக்கில் இருக்கும் என்று ஃபைலிலிருந்து தெரிகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் கொஞ்சம்கூட சரியில்லை. இந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டும்.

[திரு. கு. ரமணி] [1978 மார்ச் 23

காம்பவுண்டிற்குப் பக்கத்தில் இருக்கும் ரோடுக்கு தார் அல்லது மெட்டலிங் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டும் இன்னும் அவ்வாறு செய்யப்படவில்லை. மூன்றாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அங்கே புல் முளைத்துக் கிடக்கிறது. அதைச் சுத்தப்படுத்துவதாகத் தெரியவில்லை.

அடுத்து நோயாளிகளின் கஷ்டத்தைப் பொறுத்தவரையில் பார்த்தால், விலை உயர்ந்த மருந்துகள் தரப்படுவதில்லை. எழுதிக் கொடுத்து வாங்கச் சொல்கிறார்கள். பாதிக்கும் அதிகமானோர் தரையில் படுத்திருக்கிறார்கள். நோயாளிக்கு உரித்தான டாக்டர் நிர்ணயிக்கின்ற உணவு கிடைக்க வேண்டுமென்றால் கைக்கூலி கொடுக்க வேண்டும். இல்லையென்றால் நல்ல உணவு வராது. நடக்க முடியாமல் ஸ்டிரச்சரில் தூக்கிச் செல்லப்பட வேண்டியவர்களாக இருந்தால் அதற்கும் காசு கொடுக்க வேண்டும். இல்லையென்றால் ஸ்டிரச்சரில் படுத்துக்கொண்டு மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டும்.

நோயாளிகளுக்கு இட்லி கொடுக்கப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்குக் காரணம் மாவு அறைக்கும் மெஷின் கெட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். அதை ரிப்பேர் செய்வதற்கு இண்டர்நேஷனல் காண்ட்ராக்ட்டுக்குக் கொடுக்க வேண்டுமா ? அதை ரிப்பேர் செய்வதற்கு அங்கேயுள்ள ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்கு உரிமையில்லையா ? இதன் காரணமாக நோயாளிகள் மத்தியில் மிகப் பெரிய அதிருப்தி ஏற்படுகிறது.

ஓ. பி. பிரிவில் நீண்ட க்யூ வரிசை நிற்கிறது. அந்த க்யூவில் போவதற்கு 12 மணி, 1 மணி, 2 மணி வரைக்கும் ஆகிறது.

[பிற்பகல் 1–10]

அவர்கள் ஸ்பெஷல் சிகிச்சைப் பெறுவதற்கு முதலிலே ஒரு டாக்டர் பரிசோதித்து, இன்ன, இன்ன ஸ்பெஷல் சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்காக, பல இடங்களுக்குச் சுற்ற வேண்டியிருக்கிறது. அதனால் நோயாளிகள் வெறுப்படைகிறார்கள். நாம் இத்தனை பிரிவுகளை ஒரே இடத்தில் வைக்கப்போகிறோம், 5 மாடிக் கட்டிடம் வரும், 6 மாடிக் கட்டிடம் வரும் என்று காகிதத்திலேதான் திட்டமே தவிர, அது நடைமுறையிலில்லை. இதனால், பொதுமக்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அரசு இதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

ஹவுஸ் சர்ஜன்ஸ் அங்கே இருக்கிறார்கள். அதாவது டாக்டர் படிப்பு படித்துவிட்டு டாக்டர் வேலைக்குப் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்களுக்குக் கட்டி வைத்திருக்கிற இடத்தை நான் பார்த்தேன். அங்கு சுகாதார வசதி கிடையாது. தண்ணீர்

1978 மார்ச் 23] [திரு. கு. ரமணி]

கிடையாது, ஒரு ரூமிலே பலபேர் இருக்கிறார்கள். அந்த ரூமில் நாற்காலி கிடையாது, கட்டில் கிடையாது. ஆகவே, அவர்களுக்குப் போதிய சுகாதார வசதியும் கொடுக்கவேண்டும். தண்ணீரும் கொடுக்கவேண்டும், தேவையான வசதிகளைத் கொடுக்க வேண்டும்.

சாப்பாடு மெஸ்ஸில் ரூ. 20,000 காணாமல் போய்விட்டது. எப்படி போய்விட்டது என்று இதுவரையில் கண்டு பிடிக்க முடியவில்லை, காசும் வரவில்லை, மெஸ்ஸும் வரவில்லை. ஆகவே, நிர்வாகத்தில் முக்கியமான சீர்திருத்தம் தேவை. அந்த மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியிலே நிர்வாகச் சீர்திருத்தம் தேவை. அங்கே, தலைமை டாக்டராக, சூப்பரிண்டெண்டாக போவதற்கு நல்ல திறமையான டாக்டர்களைக் கூப்பிட்டால் வருவதற்கே தயங்குகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையிருக்கிறது. காரணம், அவ்வளவு மோசமான நிலைமையிருக்கிறது. அதைச் சீர்திருத்தியாக வேண்டும். அதற்காகத்தான் நான் இரண்டு மூன்று தரம் முதலமைச்சரை வேண்டிக் கேட்டுக் கொண்டேன்—கடிதம் எழுதினேன். நீங்கள் ஒரு தரம், அந்த மருத்துவக் கல்லூரிக்கு விஜயம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளேன். அவர் விஜயம் செய்ய வேண்டுமென்று சொல்வது, அந்தக் கொடுமைகளைப் பார்ப்பதற்கு அல்ல. அங்கே இந்த நிலையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற, சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற நல்ல மருத்துவர்களை ஊக்குவிக்க, ஊழியர்களை ஊக்குவிக்க என்ற ஒரே காரணத்தினால், அவர் போய் . பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் அங்கேயிருக்கிற நிலைமைகளை நாம் புரிந்து கொள்ள முடியும். இங்கே நாம் விவாதித்துக் கோருவது நடைமுறையில்—

" Pratice is the criterion of truth"

உண்மை என்பது நடைமுறையின் சாரம். நாம் எடுக்கிற உண்மையான முடிவுகள் எப்படி நடைமுறையில் கொண்டு வரப்படுகிறது என்பதைப் பார்ப்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். இங்கே நாம் மானியக் கோரிக்கை நிறைவேற்றுகிறோம். ஆனால், நடைமுறையில் எப்படியிருக்கிறது என்று பார்க்கவேண்டும்.

அங்கே கோவையில், பெண்களுக்குத் தனி ஆஸ்பத்திரி கிடையாது. அங்கே, பெண்களுக்குத் தனியார் ஆஸ்பத்திரி இருக்கிறது. அதற்கு நாம் மானியம் கொடுக்கிறோம். அது போதாது. அங்கு அரசு ஆஸ்பத்திரி ஒன்று தனியாக வேண்டும், பெண்களுக்காக.

அரசு ஆஸ்பத்திரியிலே வேலை செய்யும்படியான அதிகாரிகளுக்குப் போதிய அந்தஸ்து இல்லை, அதிகாரமும் இல்லை. ஏனென்றால், அவர்கள் சர்டிஃபிகேட் கொடுக்கவே கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. டாக்டர்கள் என்ற முறையில் அவர்கள் சேவை

செய்ய, உத்தியோகம் மற்றும் பல விதத்திலே, நிர்வகிக்க போதிய அந்தஸ்து வேண்டும், அவர்களை மாற்றக் கூடாது என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு நெல்லை மாவட்டத்தில், புளியங்குடி நகராட்சியில் 60,000 மக்களுக்கு மேலிருக்கிற நகராட்சியில், அரசினுடைய மருத்துவ மனைகள் அங்கே இல்லை. அதாவது, படுக்கை வசதியோடு கூடிய ஆஸ்பத்திரியில்லை. அது கட்டப்படவேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகள் மருத்துவ மனைகளிலே இருந்துவருவது கஷ்டமான சூழ்நிலைகளை உண்டாக்கும். மக்கள் மத்தியிலே அதிருப்தியை உண்டாக்கும். ரூ. 82 கோடி செலவழிக்க மானியம் நிறைவேற்றுகிறோம். ஆனால், மக்கள் கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

மருந்து திருடப்படுவதை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆஸ்பத்திரி மருந்துகள் திருடப்பட்டு, கடை வீதிகளிலே விற்கிற ஷாப்புகளையே உருவாக்கியிருக்கிறார்கள். இதை அரசு கண்டு பிடிக்கவேண்டும். இந்த அளவுக்குத்தான் நான் இப்பொழுது சொல்கிறேன். இதற்குள்ளே புகுந்து பார்த்தால், இன்னும் பல கிடைக்கும். சிலர் தங்களுடைய வீடுகளிலே படுக்கைகளை வைத்து, ஆஸ்பத்திரியில் தன்னுடைய உத்தியோக நிலையை வைத்து, வீட்டிற்கு நோயாளிகளைக்கொண்டு வந்து, பணம் சம்பாதிக்கிறார்கள். இது சேவாதரத்தைக் குறைத்து விடுகிறது. மக்கள் மத்தியிலே அதிருப்தியை நிலவச் செய்கிறது.

நாம் இவ்வளவு திட்டம் போட்டு, செலவு செய்து, கெட்ட பெயர் ஏன் வாங்கவேண்டும்? ஆகவே, தவறுகிறவர்கள் மீது கறாராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

இந்த நிலையில், மாவட்ட மருத்துவ மனைகளிலெல்லாம் தகுந்த முறையில், அதிகப்படியான டாக்டர்களும், ஊழியர்களும் பணிபுரிய வசதி ஏற்படுத்தவேண்டும். அதே போல், தாலுகா தலை நகரங்களிலேயுள்ள மருத்துவ மனைகளை அப்கிரேட் செய்யவேண்டும். உத்தியோகங்களை அதிகரிக்கச் செய்யவேண்டும்.

ஹானரரி முறையில்லாமல் செய்யவேண்டும்.

அரசு டாக்டர்கள் தனியார் மருத்துவமனைகளில் பணிபுரிந்து வசதியைப் பெருக்கிக் கொள்ளாமல்செய்யவேண்டும். அப்பொழுது தான் தரம் சரியாக இருக்கும், சேவை சரியாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, முதலமைச்சரவர்கள் நிச்சயமாக கோவை மருத்துவக்கல்லூரிக்கு ஒருமுறை விஜயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ர. ஜெபமணி : சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

கிராமப்புறங்களில் சுகாதார வசதிக் குறைவாக இருப்பதால்தான் மிகவும் நோய்வாய்ப்படுகிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். கிராமப்புறங்களிலே உள்ள சாக்கடைகள் எல்லாம் வாய்க்கால்களிலும், ஆறுகளிலும் கலக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அங்கே எந்தவிதமான சாக்கடை வசதியும் செய்யப்படவில்லை. மக்களும் அந்த ஆற்றிலேதான் அந்தக் குளத்திலேதான் குளிக்கிறார்கள். ஊர்களிலே உள்ள கிணறுகளைச் சுற்றிலும் நாம் பார்த்தால் ஒரே சாக்கடை மயமாகத்தான் இருக்கும். அது பொது சுகாதாரத்திற்குக் கேடு என்று பொதுமக்களுக்குத் தெரிந்தாலும் கூட அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்கள். அதை அரசு கவனத்திலே கொண்டு சுகாதார அதிகாரிகளை வைத்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆலைகளிலும், பெரிய தொழிற்சாலைகளிலும் உள்ள கழிவுகள் எல்லாம் குடிக்கும் தண்ணீரோடு கலந்து விடுவது மிகச் சர்வ சாதாரணமாக இருக்கிறது. அத்துடன் மாத்திரம் அல்லாமல் மலஜலம் கழிப்பதிலே எல்லாம் அவர்களுக்கு விஞ்ஞான வளர்ச்சியும் சரியான வாய்ப்பும் வசதியும் செய்ய முடியாமல் இருக்கிறோம்.

நோய் வருவதற்கு முன்னால் தடுப்பது மிகமிக அவசியம் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். நோய் வரக் காரணமாக இருக்கிற பல காரியங்கள் மிகச் சாதாரணமாக நடந்து கொண்டு வருகின்றன. அதன் காரணமாகத்தான் திடீரென்று கொள்ளை நோய் வந்து பூண்டோடு அள்ளிக்கொண்டு போகிறது என்பதை நாம் அறிவோம். எப்போதும் வருமுன் காப்பதை நம்முடைய கொள்கையாக ஏற்றிருக்கிற நமது சர்க்கார் அதைத் திறம்பட செய்வதற்கு நிதி வசதி போதவில்லை என்று சொல்லாமல் ஆரம்பத்திலேயே நோய் வராமல் தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அத்துடன் கிராமங்களிலே எல்லாம் நிறைய இடங்களிலே பைத்தியம் பிடித்தவர்கள் அலைகிறார்கள். அவர்களை நாம் போலீஸ் அதிகாரிகளிடம் சொல்லி, நீங்கள் எப்படியாவது அவர்களை மனநோய் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று சொன்னால் இதுதான் எங்களுக்கு வேலையா என்று சொல்லுகிறார்கள். நாம் எந்தவிதத்திலாவது அவர்களைச் சேர்க்கவேண்டும் என்று முயற்சித்தால் நாமே மனநோய்க்கு ஆளாகி விடுவோமோ என்கின்ற நிலை இருக்கிறது. இதை அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் சுற்றிக்கொண்டு இருக்கிற பைத்தியங்கள் அந்த ஊர்களுக்குக் களங்கமாக இருப்பதை நன்றாக கவனித்து, அந்த ஊர்களிலே பைத்தியங்களே இல்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு அவர்கள் மருத்துவ மனைகளில் இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, நம்முடைய நாட்டிலே தொழுநோய் என்று ஒரு நோய். பெருநோய் என்றும் சொல்வார்கள். அந்த நோயாளிகளை கண்டாலே இங்கே இருக்கிற மக்களுக்கு அருவருப்பு. காரணம் என்னவென்றால் நமக்கும் வந்துவிடுமோ, நம் பரம்பரைக்கும் வந்து விடுமோ என்று ஒரு பயம். பள்ளிக்கூடங்களில் சோதிக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. கிராமப்புறங்களில் தனக்குத் தொழுநோய் என்று சொல்லி யாரும் மருந்து கேட்க வரமாட்டார்கள். அப்படி தொழுநோய் பிடித்தவர்கள் என்று தெரிந்துகொண்டாலே அது குடும்பத்திற்கு அவமானம் வந்துவிடும் என்று கருதி அதை மூடி மறைக்கிறார்கள். மூடினால் ரோகம், பாடினால் ராகம் என்பார்கள்.

அப்படி மூடிய காரணத்தாலே அந்த நோய் முற்றிவிடுகிற தன்மையை நாம் பார்க்கிறோம். தோல் வியாதி சம்பந்தமாக மருந்து கொடுக்கிற இடங்களிலே இவர்களுக்கும் மருந்து கொடுத்தால் எல்லோரையும் போல அவர்களும் மருந்து வாங்க முடியும். அப்படியில்லாமல் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு தொழுநோய் பிடித்தவர்களைக் கூட்டிக்கொண்டு வாருங்கள் என்று சொன்னால் ஒருவரும் அங்கே வரமாட்டார்கள். யாருக்கடா தொழுநோய், எனக்கா என்று கோபம் வருவதாலே யாரும் வருவது இல்லை.

காரணம் என்னவென்றால், தொழுநோய் பிடித்து விட்டது என்று ஊரிலே தெரிந்தால் அந்தக் குடும்பத்திலே பெண் கொடுப்பவரும் கிடையாது, பெண் எடுப்பவரும் கிடையாது. அந்தக் குடும்பமே அழிந்து விடுமோ என்ற அச்சம் இருக்கிறது.

அப்படி சமுதாயத்திலே மற்றவர்களால் அருவெறுக்கப்படுகிற, மக்களால் வெறுக்கப்படுகிற இந்த நோய் கருவறுக்கப்பட வேண்டும். மனதிலே எவ்வித அறுவெறுப்பும் ஏற்படாமல் ஐயயோ, இந்த நோய் வந்துவிட்டதே என்ற ஏக்கம் ஏற்படாமல் அவர்களுக்கு நாம் உதவி செய்யவேண்டும்.

(பிற்பகல் 1—20)

அதைத் தடுக்கும் வகையில், அந்தத் தொழுநோய் சம்பந்தப்பட்டவர்களும் மொத்தமாக எல்லோருடனும் வந்து மருந்து வாங்கிக் கொண்டு செல்வார்களானால் மற்றவர்களும் அவர்கள் ஏதோ ஒரு நோய்க்காக வந்து இருக்கிறார்கள், இதற்காக இல்லை என்று தெரிந்து கொள்வார்கள். அவர்களும் மருந்துகளை வாங்கிச் சாப்பிட்டு அந்த நோயினின்றும் குணம் பெறமுடியும். ஆகவே, அவர்களை தனிமைப்படுத்தாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது கிராமப்புறங்களில் 1 மாதத்திற்கு ஒரு முறை தான் வருகிறார்கள். அதை 15 நாளைக்கு ஒரு முறை என்று மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரியான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டால் அறவே அந்த நோய் கிராமப்புறங்களில் இருந்து களைந்து எறியப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களில் பார்த்தால் தெருக்களில் இன்றும் தொழுநோய் பிடித்தவர்கள் படுத்துக்கொண்டு இருக்கிறார்கள். கோவில் திருவிழாக்கள் நடக்கிற இடங்களில் அவர்கள் அதிகமாகக் காணப்படுகிறார்கள். கோவில் திருவிழாக்கள் நடக்கிற இடங்களுக்குத்தான் மக்கள் அதிகமாக வருகிறார்கள். குழந்தைகள் வருகின்றன. அவர்கள் அங்கே விற்கும் எல்லாப் பண்டங்களையும், பட்சணங்களையும் வாங்கிச் சாப்பிடுகின்றனர். அந்தப் பண்டங்களும், பட்சணங்களும் மூடப்படாமல் திறந்தே வைத்து இருப்பதால் அதன் காரணமாக தொத்துநோய் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அங்கே இருக்கும் சுகாதார அதிகாரிகள் தங்களுடைய வேலையைத் திறமையாகச் செய்யவேண்டும்.

கிராமங்களில் சந்தைகள் கூடுகின்றன. அங்கேயும் அந்த பட்சணங்கள், மூடிவைத்து விற்க நடவடிக்கை எடுக்கவேண்டும். காரணம், கிராமப்புறங்களில் எங்கே பார்த்தாலும் தூசு தும்பு பறந்து கொண்டு இருக்கும். அவைகள் பட்சணங்களின் மேல் போய் படியும். ஆகவே, அவற்றைக் குழந்தைகள் வாங்கிச் சாப்பிடும்போது நோய் பரவுகிறது. ஆரம்ப காலத்தில் இப்படிப்பட்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டால் நாம் நோய் பரவுவதைத் தடுக்க முடியும். நோய் நொடியும் குறையும். மருந்து செலவும் குறையும். ஆகவே, அந்த வகையில் அரசாங்கம் முழுத் தீவிரமாக கவனம் செலுத்தி, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களுக்கு டாக்டர்களை அனுப்புகிறீர்கள். அவர்கள் பட்டணங்களில் வசதியோடு இருந்து படித்து விட்டு, கிராமத்திற்குச் செல்கிறபோது — அவர்கள் கிராமங்களில் பிறந்தவர்களாக இருந்தாலும் கூட — அவர்களுக்கு அங்கே இருப்பதற்கு அருவருப்பாக இருக்கிறது. காரணம், குடியிருக்க அவர்களுக்குச் சரியானபடி வீடுகள் கிடைப்பது இல்லை. கிராமங்களில் வீடுகள்

கிடைக்கவில்லை என்பதால், அவர்கள் கிராமங்களில் வேலை பார்த்தாலும், குடியிருப்பதற்கு பக்கத்தில் இருக்கும் நகரத்திற்குச் சென்று விடுகிறார்கள். ஆஸ்பிடல் இருந்தும், டாக்டர் நகரத்தில் இருப்பதால், மக்களும் நகரத்திற்குச் சென்று அவர்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே, கிராமங்களில் வேலை செய்யும் வைத்தியர்களுக்கு—டாக்டர்களுக்கு அங்கேயே வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு முன் வரவேண்டும். மருத்துவ மனைகள் நிரந்தரமாக அங்கே இருக்க வேண்டும் என்பதால் டாக்டர்களும் அங்கே நிரந்தரமாக இருக்க வேண்டும். அந்த வகையில் அவர்களுக்கு அந்த மருத்துவ மனைக்கு அருகாமையிலேயே வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சந்தோஷமாக வாழ்ந்தால் தான், மக்களுக்கு நல்ல வகையில் சேவை செய்ய முடியும். அவர்கள் 24 மணி நேரமும் அங்கேயே இருந்தால்தான், ஜனங்களின் நோயைக்கவனித்து, நோய் தீர்க்கும் நல்லவர்களாக அவர்கள் வாழ முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல இடங்களில் டாக்டர் இல்லாமல் ஹாஸ்பிடல் இருக்கிறது. என் தொகுதியில், தென்திருப்பேரை என்ற இடத்தில் உள்ள மருத்துவ மனையில் பெண் டாக்டர் இல்லை. நானும், எழுதி எழுதிப் பார்க்கிறேன். இன்னும் அந்த மருத்துவ மனைக்கு பெண் டாக்டர் நியமிக்கப்படவில்லை. கிராமங்களில் இருக்கும் பெண்களைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆண் டாக்டரிடம் மருந்து வாங்க அவர்கள் வர மாட்டார்கள். நோய் இருந்தால் இருக்கட்டும். ஏன் அவர்களிடம் போய் நம் நோயைச் சொல்லி மருந்து கேட்க வேண்டும் என்று அவர்கள் எண்ணுவார்கள். ஆகவே, பெண் டாக்டர்கள் இல்லாமல் இருக்கும் மருத்துவ மனைகளில் உடனடியாக பெண் டாக்டர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைத் தள்ளிப்போடவோ, காலதாமதம் செய்யவோ கூடாது என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

டாக்டர்களை அடிக்கடி மாற்றக்கூடாது. காரணம் என்னவென்றால், அந்த ஊரின் மக்களின் நோய் பற்றி அந்த டாக்டர் நல்லமுறையில் புரிந்து வைத்துக்கொண்டு இருப்பார். அங்குவருகிற மக்களை அவர் அடிக்கடி பார்ப்பதால் அவர்களைக் கண்டவுடனேயே இவருக்கு இன்ன நோய் தான் வரும் என்று அறிந்து அதற்குத் தக்க வகையில் அவர் மருந்து கொடுப்பார். ஆகவே, டாக்டர்களை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஒழிய மாற்றக்கூடாது. அவர் சர்வீஸ் வேறு எங்காவது தேவைப்படுகிறது என்ற நேரத்தில் மட்டும் மாற்றுங்கள் (மணியடிக்கப்பட்டது).

தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் மருத்துவ மனைகள் அமைக்கப்படவேண்டும். சிவகாசி, திருத்தங்கல் பகுதியில் பட்டாசு தயாரிக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதேனும் ஆபத்து, வெடிப்பினால் ஏற்பட்டால் அவர்களுக்கு மருத்துவ வசதி உடனடியாகத் தேவை. ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் எல்லாவிதமான வசதியும் செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. சாத்தான் குளத்தில் உள்ளவர்கள் நோய்வாய்ப் பட்டால் அங்கே மருத்துவம் செய்து கொள்ள முடியாது. பாளையங்கோட்டைக்கோ அல்லது மதுரைக்கோதான் வரவேண்டும். ஆகவே, முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அந்த சாத்தான்குளம் பகுதியில் ஒரு மருத்துவ மனை துவக்க வேண்டும். மருத்துவமனை துவக்கினால் மட்டும்போதாது, மருந்து இருக்கச் செய்ய வேண்டும். மருந்துக் கடை கூட கிடையாது. மருந்து எழுதிக் கொடுத்தால் கூட பாளையங்கோட்டைக்குத்தான் செல்ல வேண்டும். ஆகவே, இதை கவனத்தில் கொண்டு, அங்கே மருத்துவ வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களின் வளர்ச்சிதான் இந்த ஆட்சியின் அடிப்படை கொள்கை என்று இருக்கிற காரணத்தால், அந்தக்கிராம மக்கள் நோய் நொடியின்றி வாழ, அவர்களுக்கு வசதி செய்து தர உங்கள் நிர்வாகத்தில் நல்ல பணி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

<u>திரு. பொ. உத்திராபதி:</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978—79-ஆம் ஆண்டுக்கான மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதும் 82,25,39,000 ரூபாய் கேட்டிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்திலே அதிக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது இந்த இரண்டு மானியங்களுக்கும் தான். ஆனால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையைப் பார்க்கின்றபோது இந்த நிதியே போதாது. இன்னும் 25 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கினாலும் தமிழகத்தில் இருக்கின்ற நோயாளிகளின் நிலைமைகளைப் போக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1978 மார்ச் 23

அடுத்தபடியாக, நமது தமிழ்நாட்டில் நிருபர்கள் எல்லாம் அதிகமாக மக்களுடைய பிரதிபலிப்பை உருவாக்கக்கூடியவர்கள். அவர்களுக்கு இதே சட்ட மன்றத்தில் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அதைப்போல அந்த நிருபர்களுக்கு, அரசு அங்கீகாரம் பெற்ற நிருபர்களுக்கு எல்லாம் அரசாங்க மருத்துவ மனைகளில் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்திற்கும் இலவசமாகப் வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டும். அதைப்போல ஒவ்வொரு அண்டும் 'செக் அப்'— இலவசமாக பரிசோதனை செய்து கொள்ளவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய தமிழகத்தில் மொத்தம் 12,213 படுக்கைகள் இருக்கின்றன. 31—12—1977 அன்றைய கணக்குப்படி உள் நோயாளிகள் 17,715 பேர். அதைப் போல வெளி நோயாளிகள் 1,36,653 பேர் சராசரி ஒரு நாளைக்கு வைத்தியம் செய்து கொள்ள வருகிறார்கள்.

1976–77-ஆம் ஆண்டில் 29,48,900 பேர் வைத்தியம் செய்துகொண்ட உள் நோயாளிகள். அதே நேரத்தில் புற நோயாளிகளின் சராசரி கணக்கு 4,25,63,644. இந்த விபரம் காட்டுவதென்ன? மருத்துவ மனைகளில் போதுமான படுக்கைகள் கிடையாது.

உள் நோயாளிகளின் சராசரி கணக்கு 17,715; ஆனால் படுக்கை வசதி 12,713 தான். அப்படியானால் மீதிப்பேர் தரையில் படுத்துக்கொண்டுதான், வைத்திய வசதி பெற்று வருவதாகத் தோன்றுகிறது. ஒட்டு மொத்தமாக தமிழ் நாட்டில் 29,48,900 பேர் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுகிறார்கள். 4¼ கோடி பேர் வெளியே இருந்து வந்து வைத்திய வசதி பெற்றுச் செல்லுகிறார்கள். அப்படியானால் தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனைப் பேரும் வைத்தியம் பார்க்கும் சூழ்நிலை இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது தமிழ்நாட்டில் இருக்கிற படுக்கைகள் போதாது, மருந்துகள் போதாது; டாக்டர்கள் போதாது. மருத்துவமனைகள் போதாது; ஆகவே, எல்லா வகையிலும் மருத்துவ வசதிகளை விரிவுபடுத்தினால்தான் நோயாளிகளுக்கு ஓரளவாவது சிகிச்சை செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சொல்லப்போனால், மருத்துவ மனைகளில் நாம் கொடுக்கின்ற மருந்துகள் பூராவும் நோயாளிகளுக்குப் போய் சேருகிறதா என்றால் உண்மையில் நோயாளிக்குப் போய்ச்சேருவது மிகக் குறைவுதான். அதனால்தான் இன்றைக்கு இருக்கக்கூடிய சரி பாதி நோயாளிகளுக்குச் சர்க்கார் மருத்துவ மனைகளில் மருந்து

1978 மார்ச் 23] [திரு. பொ. உத்திராபதி]

கொடுக்கிறார்கள், ஊசி போடுகிறார்கள். மீதியுள்ள சரிபாதி பேர்களுக்குச் சீட்டு எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். வசதி படைத்தவர்கள் அதைக்கொண்டுபோய் கடைகளில் கொடுத்து மருந்து வாங்கி சாப்பிட்டு தங்களுடைய நோயைத் தீர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் ஏழை எளிய சாதாரண மக்கள் வெளியிலிருந்து மருந்து வாங்கிச் சாப்பிடவும் வசதி இல்லாமல், ஆஸ்பத்திரியிலும் மருந்து கிடைக்காமல், தனியார் மருத்துவ மனைக்கும் செல்ல முடியாமல் சாகும் எண்ணிக்கை இன்றைக்குத் தமிழ் நாட்டில் பெருகிகொண்டிருக்கிறது. வசதி படைத்தவர்களைப் பற்றி கவலையில்லை; அவர்கள் எவ்வளவு செலவானாலும் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக்கொள்வார்கள். இந்த நிலையைப் போக்க வேண்டுமென்றால் அரசாங்க மருத்துவ மனைகளில் போதிய அளவு மருந்து கொடுக்க வேண்டும். அந்த மருந்து வெளியே போகாமல் பாதுகாக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல தனியார் மருத்துவமனை என்று சொல்லுகிறபோது, இன்றைக்கு அரசு மருத்துவமனைகளைவிட தனியார் மருத்துவ மனைகள்தான் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. அங்கு செல்லக்கூடியவர்கள் எல்லாம் வசதி படைத்தவர்கள் ஏழை எளிய மக்கள் அங்கு செல்ல முடியாது. இதைப் போக்க வேண்டுமென்றால் அரசு உன்னிப்பாக கவனித்து, ஏழை எளிய மக்களின் தேவைகளை அறிந்து, அவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கு வேண்டிய மருந்து வகைகளை அரசாங்க மருத்துவ மனைகளுக்கு வழங்க வேண்டும் : அதே நேரத்தில் அந்த மருந்துகள் அவர்களுக்குக் கிடைக்கிறதா என்பதையும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் நேரத்தை இன்னும் 5 நிமிடங்களுக்கு நீட்டிக்கிறேன்.

[பிற்பகல் 1—30]

திரு. பொ. உத்திராபதி: அடுத்து சித்த வைத்தியம். இன்றைக்கு சித்த வைத்தியம் படித்துவிட்டு கிராமங்களில் ஆயிரக்கணக்கான பேர் வைத்தியம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அவர்களும் சித்த வைத்தியம் செய்வதற்கு தமிழக அரசு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மதுக் கஷாயம். இது உண்மையிலேயே ஒழிக்கப்பட வேண்டும். இன்றைக்குத் தமிழகத்தில் மதுவை ஒழிப்பதைவிட மதுக் கஷாயத்தை முதலில் ஒழிப்பதற்கு அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்குப் புற்றுநோய் தமிழகம் முழுவதும் வெகு அதிகமாகப் பரவி இருக்கிறது. எங்கே இந்த நோயால் பாதிப்பு ஏற்பட்டாலும் காஞ்சிபுரத்திற்கோ அல்லது அடையாறுக்கோதான் வர வேண்டும். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த சிகிச்சைக்கு ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நாய்க்கடி இன்று தமிழகத்தில் பரவலாக இருக்கிறது. நாய்க்கடிபட்டவர்கள் தாலுக்கா மருத்துவமனைக்குச் சென்றால் அங்கே அதற்குரிய மருந்து இல்லை. மாவட்ட மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டும். அங்கேயும் இல்லாவிட்டால் அவர்கள் கிண்டிக்கு எழுத வேண்டும். கிண்டியிலே இருந்து மருந்து வருவதற்குள்ளாக பாதிக்கப்பட்டவர்கள் இறந்துவிடுகிறார்கள். ஆகவே தாலுக்கா மருத்துவமனைகளிலும் அதற்குரிய மருந்தினை வைப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்து அந்த நோயாளிகளைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு டாக்டர்கள் விகிதம் மிகவும் குறைவாக இருக்கிறது. சோவியத் சோஷலிச நாட்டிலே 200 பேருக்கு ஒரு டாக்டர் இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால்தான் அங்கே நூறு வயதுக்கு மேல் எல்லோரும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்திய நாட்டில் 40 வயது ஆனவுடனே இருப்போமா சாவோமா என்ற நிலைதான் இருக்கின்றது. இந்த நிலையைப் போக்க வேண்டுமென்று சொன்னால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஒரு டாக்டர் என்று இருப்பதற்கு பதிலாக குறைந்தபட்சம் 500 பேருக்காவது ஒரு டாக்டர் அமைப்பதற்கு அரசு முன்வந்தால் இன்றைக்கு லட்சக்கணக்கான ரூபாய் போட்டு படித்துவிட்டு வேலை கிடைக்காமல் இருக்கின்ற டாக்டர்களுக்கும் வேலை கிடைக்கும், நோயாளிகளுக்கும் அவர்களது நோயினைத் தீர்த்துக் கொள்வதற்கு வசதி ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு சிறிய மருத்துவமனை அமைத்துக் கொடுத்தால் கிராமப் பகுதி மக்களுக்கு நோயிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும். அவர்களுடைய உடம்பையும் உயிரையும் காப்பாற்ற முடியும் என்ற யோசனையினை அரசுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, எட்டையாபுரம் தமிழகத்தில் உள்ள அனைவருக்கும் தெரியும். அங்கே வாழக்கூடிய மக்களுக்கு சரியான ஒரு மருத்துவமனை இல்லை. மருத்துவ மனைக்கு அங்கீகாரம் கொடுத்துவிட்டு பல மருத்துவமனைகள் ஏற்படவில்லை. அங்கு இருக்கக்

கூடியவர்கள் 15 மைலுக்கப்பால் சென்று வைத்தியம் செய்யக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே உடனடியாக எட்டையாபுரத்தில் ஒரு அரசு மருத்துமனை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கலப்படம். அதுபற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இன்றைக்கு இந்திய நாட்டிலே கலப்படம் செய்கின்றவர்கள் எல்லாம் பெரிய மனிதர்களாக இருக்கிறார்கள். கலப்படத்தினால் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். அதுபற்றி பல புள்ளி விவரங்களை எல்லாம் சொல்கிறார்கள். 1,500 பேரைப் பிடித்து விட்டோம் என்று சொல்கிறார்கள். அவர்கள் சிறிய வியாபாரிகளைத்தான் கலப்படம் செய்ததாகத் தண்டிக்கிறார்கள். ஆனால் பெரிய வியாபாரிகள் பிடிபடுவதில்லை.

நெருக்கடி காலத்தில் இந்திய நாட்டிலே அத்தகைய கலப்படக் கொள்ளைக்காரர்களை ஜெயிலில் அடைத்திருந்தார்கள். அவர்கள் இப்போது வெளியே வந்து அதிகமான கலப்படத்திற்குக் காரணமாக இருக்கிறார்கள். ஆனால் கலப்படம் செய்யும் அந்தப் பெரிய மனிதர்களைத் தமிழக அரசுப் பிடித்து ஜெயிலில் தள்ள வேண்டும் அல்லது அவர்களை அம்பலப்படுத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, கலப்படத்தை நிறுத்தினால்தான் நாம் மக்களைப் பாதுகாக்க முடியும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் வியாதிகள் பரவுவதற்கு கலப்படமும் ஒரு காரணமாகும். கடைசியாக. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். கொடுத்த நேரமாகிவிட்டது.

திரு. பொ. உத்திராபதி : கடைசியாக, இளையான்குடி என்ற ஊரில் இருபது படுக்கைகள் கொண்ட ஒரு அரசு மருத்துவமனைக்கு அங்கீகாரம் பெற்று, ஐந்து லட்சம் ரூபாய் அளவிற்கு திட்டமிட்டு அந்தப் பகுதி மக்கள் ஒரு லட்சம் ரூபாய் பணம் கட்டி மூன்று ஆண்டுகளாகின்றன. அதையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின், இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ம் தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

(பேரவைத் துணைத் தலைவர்,) [1978 மார்ச் 23

இந்த மானியத்தின் மீதான விவாதம் அன்று தொடர்ந்து நடக்கும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—36 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(6) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

320. முன்னாள் தொழில்கள்—தொழிலாளர் நல கூட்டுறவுத் துறையில் 20-8-1956ஆம் தேதியன்று வெளியாகி, 29-8-1956ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் I-ல் கண்ட இணைப்பு விதிகளின் பக்கங்கள் 439—453-ல் (ஆங்கிலத்தில்) வெளியான 34/1956 ஆம் எண் அறிவிப்பில் (இது பின்னர் திருத்தப் பெற்றுள்ளது) வெளியிடப்பெற்ற தமிழ்நாடு 1956ஆம் ஆண்டு சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களுக்குக் கடன்கள்-உதவித் தொகை வழங்குதல் குறித்த விதிகளில், திருத்தமொன்று செய்வது குறித்து 23—7—1976 ஆம் தேதியிடப் பெற்ற தொழில் துறையின் 955 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (ஆங்கிலம்-தமிழ்) [தமிழ்நாடு 1922 ஆம் ஆண்டு தொழில்கள் உதவிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1923) 19 (d) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

321. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகள் இயற்றுவது குறித்த கூட்டுறவுத் துறையின் 28—1—1978 ஆம் தேதியிடப்பெற்ற 54 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 38/1972) 28 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*152. தொழில் வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ்).

*153. தொழில்கள் பற்றிய 1978—79 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (தமிழ்).

*154. கோரிக்கை எண் 21. மீனளத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978—79 (தமிழ்).

*21—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

*155. தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் (மானியக் கோரிக்கை எண் 18-ன் கீழ்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978—79 (ஆங்கிலம்—தமிழ்).

**156. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவிற்கான (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/1978) இணைப்பு.

* 21—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

** 20—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

[881ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண் 18— மருத்துவம் 1978-79

கோரிக்கை எண் 18— மருத்துவம் என்பதின் கீழ் ரூபாய் 50,40,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

I. கொள்கை விளக்கம்.

கிராமப் பகுதிகளில் முன்னிலும் சிறந்த சீரான வசதிகளைச் செய்து கொடுப்பதில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்கிற கருத்திற்கிணங்க, மாவட்ட, வட்டத் தலைமையிடத்திலும் பிறயிடங்களிலுமுள்ள மருத்துவ மனைகள், மருந்தகங்கள் முதலியவற்றில், இந்த நோக்கத்தினை அடைய வசதிகள் படிப்படியாகக் கூடுதலாக்கப்பட்டுள்ளன.

A. மருத்துவக் கல்வி.

II. (i) மருத்துவக் கல்லூரிகள்.

(அ) பட்டப் படிப்பு வகுப்புகள்.

இம்மாநிலத்தில், தமிழ்நாடு அரசு 8 மருத்துவக் கல்லூரிகளை நடத்தி வருகிறது. இவற்றில், மூன்று கல்லூரிகள் சென்னை மாநகரிலும், எஞ்சிய 5 கல்லூரிகள் மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. இந்த 8 கல்லூரிகளில் எம். பி., பி. எஸ்., வகுப்புகளில் ஆண்டுதோறும் மொத்தம் 1,015 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர்.

மருந்தாக்கியல் பட்டப் படிப்பு வகுப்பு சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடத்தப்படுகிறது. இதற்கு ஆண்டுதோறும் சென்னை மருத்துவக் கல்லூரியில் 20 மாணவர்களும், மதுரை மருத்துவக் கல்லூரியில் 26 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பல் நோய்ச் சிகிச்சை பட்டப் படிப்பு (B.D.S. Course) சென்னை மருத்துவக் கல்லூரியில் கற்பிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் இதில் 35 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த செவிலியர் பயிற்சிக் கல்லூரியில், செவிலியர் பட்டப் பாடமுறை நடத்தப்படுகிறது. இது இரண்டரை ஆண்டு காலமாகும். அரசுப் பணியில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள பயிற்சி பெற்ற செவிலியரும், தனிப்பட்டவர்களும் இவ்வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஆண்டுதோறும் செவிலியர் பணியிலிருந்து 10 பேரும், வெளியிலிருந்து 10 பேரும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) பட்ட மேற்படிப்பு வகுப்புகள்.

பல்வேறு துறைகளில் போதுமான அளவுக்கு வல்லுநர்களும் ஆசிரியர்களும் இல்லை. இதனைச் சரிசெய்ய மேற்படிப்பு வெவ்வேறு மருத்துவக் கல்லூரிகளில் பட்ட வகுப்புகளும், பட்டயத்தகுதி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. மேற்சொன்னவாறு நடத்தப்படும் பட்ட மேற்படிப்பு, பட்டயத்தகுதி வகுப்புகள் பற்றிய விவரங்கள் I-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. I-A இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பாடமுறைகள் மருத்துவ மன்றத்தின் இசைவு கிடைக்கப்பெற்ற பின்னர் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியிலும் 1978 ஏப்ரல் முதல் தொடங்கப்படும். II-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பட்ட மேற்படிப்பு வகுப்புகளையும், பட்டயத்தகுதி வகுப்புகளையும் 1978–79 கல்வியாண்டில் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

(இ) புதிய மருத்துவக் கல்லூரியினை இந்திய மருத்துவ மன்றம் ஏற்பளித்தல்.

இம்மாநிலத்தில் உள்ள எட்டு மருத்துவக் கல்லூரிகளில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மட்டும் 1977 ஆம் ஆண்டுவரை ஏற்பளிக்கப்படாமல் இருந்தது. 1977-ல் மருத்துவ மன்றத்தின் ஆய்வுக்கமிஷன் இம்மருத்துவக் கல்லூரியைப் பார்வையிட்டு இதனை ஏற்பளிப்பதற்கான தனது ஒப்புதலைக் குறிப்பிட்டது. புதுடில்லி, இந்திய மருத்துவ மன்றத்திடமிருந்து முறையான ஏற்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) மருத்துவக் கல்லூரிகளுக்கு மேம்பாடுகள்.

1977–78-ல் கீழ்க்கண்ட கட்டிட திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது :—

1. சென்னை மருத்துவக் கல்லூரியில் அறுவை சிகிச்சை, இதய நோய் சிகிச்சை தொகுதிகளில் உள்ள மின் இணைப்பு தொகுதியுடன் இணைப்பதற்காக ரூ. 2,29,300 செலவில் குறைவழுத்த மின் இணைப்புத் தொகுதிக்கு (L. T. Panel Boards) வகை செய்தல்.

2. கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரியில் ரூ. 70,000 செலவில் நீர்த்தொட்டி கட்டுதல்.

3. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் விலங்குப் பிரிவு கட்டிடம் ஒன்றை ரூ. 77,000 செலவில் கட்டுதல்.

4. தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரியின் பின்புற சுற்றுப்புற எல்லையில் ரூ. 2,50,000 செலவில் சுற்றுச்சுவர் கட்டுதல்.

1978–79 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கட்டிடப் பணிகளை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது :—

1. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரியில் நோய் நுண் உயிரியல் துறைக்காக புதிய சமூகநல நோய்த்தடுப்பு மருந்துத் தொகுதிக்கு மேல் ரூ. 5·30 இலட்சம் மொத்தச் செலவில் ஒரு மாடி கட்டுதல்.

2. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் ரூ. 98,000 செலவில் மத்திய விலங்குப்பிரிவு கட்டிடம் கட்டுதல்.

3. சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் ரூ. 3.58 இலட்சம் செலவில் விரிவுரைக் கூடங்கள் இரண்டு கட்டுதல்.

(ii) மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள்.

(அ) படுக்கைகளின் எண்ணிக்கை.

இம்மாநிலத்தில் மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த 19 மருத்துவ மனைகள் உள்ளன. இவை, பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பட்டியல் ஒன்று III-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆக நோயாளி சிகிச்சை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு சில மருத்துவமனைகளில் கூடுதலாக படுக்கைகள் போடப்பட்டுள்ளன. பல்வேறு மருத்துவ மனைகளில் 1976–77, 1977–78 ஆம் ஆண்டுகளில் உள்ள மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை IV-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. மருத்துவ மனைகள் அனைத்திலும் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 1976–77-ல் 13,294 ஆக இருந்தது, 1977–78-ல் 13,471 ஆக உயர்ந்தது என்று மேற்சொன்ன இணைப்பிலிருந்து கண்டறியலாம்.

(ஆ) மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல்.

விபத்துக்குள்ளான, அவசர சிகிச்சை தேவைப்படுகிற நோயாளிகளுக்கு விரைவாக மருத்துவ வசதி அளிக்கும் பொருட்டு சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவ மனையிலும், சென்னை அரசு பொது மருத்துவமனையிலும் 24 மணி நேரமும் செயல்படும் இயங்கும் விபத்து சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. விபத்துப் பற்றிய செய்தி கிடைத்தவுடன் மருத்துவ அதிகாரி சார்பு மருத்துவ அலுவலருடன் ஏனைய வசதிகள் கொண்ட தம்முடைய "வேனில்" விபத்து நடந்த இடத்திற்கு உடனடியாக செல்லுவார். விபத்து நடந்த இடத்திலேயே அவசர சிகிச்சை, தேவைப்படுகிற நோயாளிகளுக்குத் தொடங்கப்பெறும். அதன் பிறகு காயமடைந்தவருக்கு மருத்துவ வசதி அளிப்பதற்கும், சிகிச்சையினைத் தொடர்வதற்கும் அவர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்படுவார்.

(இ) மருத்துவ ஆவணத் துறைகள்.

நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட சிகிச்சையின் முழு விவரத்துடன் கூடிய நோயாளியின் நோய் பற்றிய துல்லியமான அடங்கல் ஆவணங்களை வைத்து வருவதே மருத்துவ ஆவணங்கள் துறையின் பணியாகும்.

கீழ்க்கண்ட மருத்துவ மனைகளில் மருத்துவ ஆவணத் துறை ஏற்கனவே செயல்பட்டு வருகிறது:—

(1) அரசு பொது மருத்துவமனை, சென்னை.

(2) அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.

(3) குழந்தைகள் நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

(4) இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை.

(5) மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

(6) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.

(7) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, திருநெல்வேலி.

1976–77 ஆம் ஆண்டில் சென்னையில் உள்ள அரசு கண் மருத்துவமனையிலும், தஞ்சாவூரில் உள்ள தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் மருத்துவ ஆவணத்துறையை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்துறை, மேற்சொன்ன இரண்டு மருத்துவமனைகளிலும் 1977 ஆம் ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது. மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த ஏனைய மருத்துவமனைகளிலும் படிப்படியாக மருத்துவ ஆவணத்துறையை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

(ஈ) புறநகர் மருத்துவ மனைகள்.

அனுமதியளிக்கப்பட்ட ஐந்து மருத்துவமனைகளில் தற்போது கே. கே. நகரில் உள்ள மருத்துவமனை புற நோயாளி சிகிச்சை வசதியுடன் செயல்படத் தொடங்கியுள்ளது. ரூபாய் 32·34 இலட்சம் செலவில் தண்டையார்பேட்டையில் மருத்துவமனை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. 28·02 இலட்சம் ரூபாய் செலவில் அறிஞர் அண்ணா நகரில் மருத்துவ மனை கட்டி முடிக்கப்பட்டு விட்டது. பெரம்பூரிலும், தென் சென்னையிலும் கட்டத் திட்டமிடப்பட்ட ஏனைய இரண்டு மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில், நிலத்தை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது.

(உ) கே. கே. நகரில் உள்ள மறுவாழ்வு செயற்கை உறுப்புகள் தயாரிக்கும் நிலையங்கள்.

1974 ஆம் ஆண்டில், முட நோயாளிகளுக்கு மறுவாழ்வு செயற்கை உறுப்பு தயாரிப்பு நிலையம் ஒன்றைத் தொடங்கவும், இயற்கை முறை மருத்துவம், தொழில் சார்பாட்டு முறை மருத்துவம், செயற்கை முறை உறுப்பு, உடல் உறுப்புகளை இறுக இணைத்துக் கட்டுதல் (Brace fitting) சமூக-வாழ்க்கைத் தொழில் பயிற்சி மூலம் புனர்வாழ்வு ஆகிய பணிகளை ரூ. 23 இலட்சம் செலவில் அளிக்கவும் அரசு அனுமதித்தது. கட்டடம் கட்டும்பணி முடிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படத் தொடங்கும்.

(ஊ) கட்டடப் பணிகள்.

(i) பின்வரும் புதிய கட்டடங்கள் கட்டும் பணி 1977–78 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. அவை அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு, செயல் படத் தொடங்கியுள்ளன.

1. சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் சீர்வசதிகளுடன் சீரமைத்த பிணவறைத் தொகுதி.

2. ரூ. 8·20 இலட்சம் செலவில், சென்னை, இராயப் பேட்டை அரசு மருத்துவமனையில் ஒரு விபத்து சிகிச்சைத் தொகுதி.

3. சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலும் சென்னை, அரசுப் பொது மருத்துவமனையிலும் (ஒவ்வொன்றும் ரூ. 0·90 இலட்சம் செலவில்) தொழு நோய்ச் சிகிச்சைத் தொகுதி.

4. செங்கல்பட்டில் உள்ள, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ. 6·00 இலட்சம் செலவில் ஒரு புதிய மகப்பேறு தொகுதி.

(ii) பின்வரும் கட்டடங்கள் கட்டும் பணி 1977–78 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. இவை விரைவில் செயல்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:—

(1) இராயப்பேட்டை, அரசு மருத்துவ மனையில் ரூ. 10·02 இலட்சம் செலவில் புற்று நோய் சிகிச்சைத் தொகுதி.

(2) சென்னை, மகளிர்-குழந்தைகள் அரசு மருத்துவ மனையில் ரூ. 10·50 இலட்சம் செலவில் 150 படுக்கைகளுடன் கூடிய மருத்துவப் பிரிவு.

(3) சென்னை, குழந்தைகள் நல நிறுவனம் குழந்தைகள் மருத்துவமனையில் ரூ. 3·50 இலட்சம் செலவில் தாய்மார் கைவினைப் பணி நிலையம்.

(4) சென்னை, அரசு கண் மருத்துவமனையில் ரூ. 2·33 இலட்சம் செலவில், புதிய புற நிலை நோயாளிகள் தொகுதிக்கு மேல் இரண்டாவது மாடி.

(5) காஞ்சிபுரத்திலுள்ள காரப்பேட்டையில் ரூ. 50·72 இலட்சம் செலவில் 250 படுக்கை வசதிகளுடன் கூடிய புற்று நோய் மருத்துவமனை.

(6) திருநெல்வேலியிலுள்ள, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ரூ. 6·40 இலட்சம் செலவில் ஒரு புதிய மகப்பேறு தொகுதி.

(iii) 1977–78 ஆம் ஆண்டில், பின்வரும் கூடுதல் கட்டிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன :—

1. சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் ரூ. 15,000 செலவில் புற நோயாளிகள் தொகுதிக்குத் தனியறைகள் கட்டுதல்.

2. சென்னை, அரசுப் பொது மருத்துவமனை நீராவி சலவைத் தொகுதியைச் சுற்றியுள்ள சுற்றுச் சுவரை ரூ. 15,350 செலவில் உயர்த்துதல்.

3. சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில், மாநகராட்சி வழங்கும் குடி நீரைச் சேமித்து வைக்க ரூ. 1·25 இலட்சம் செலவில் ஒரு கூடுதல் நீர்த்தொட்டி கட்டுதல்.

4. சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் ரூ. 3·35 இலட்சம் செலவில், அவசர அறுவைச் சிகிச்சைக் கூடம் கட்டுதல்.

5. சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் இதய நோய் மும்முர சிகிச்சைப் பிரிவிற்கு (Intensive Coronary Care Unit) அருகே ரூ. 12,000 செலவில் ஓரளவு நிலையான தங்குமிடக் கொட்டகை கட்டுதல்.

6. சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில், ரூ. 70,000 செலவில் இதய நோய் தீவிர சிகிச்சை பிரிவிற்கு (Intensive Cardiac Care Unit) கூடுதல் வசதிகள் செய்து கொடுத்தல்.

7. சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்கு (ப்ளாஸ்டிக் சர்ஜரி) ரூ. 33,600 செலவில் சீர்வளிச் சாதனங்கள் இரண்டை அமைப்பது.

8. சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில் 23,000 ரூபாய் செலவில் பிளட் காஸ் அபரடஸ் (Blood Gas Apparatus) அறையில் சீர்வளிச் சாதனத்தைப் பொருத்துதல்.

9. சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனம் மகளிர், குழந்தைகள் அரசு மருத்துவமனையில் 72,000 ரூபாய் செலவில் ஜெனரேட்டர் ஒன்றைப் பொருத்துவது.

10. சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனம்- மகளிர், குழந்தைகள் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கிற்கு ரூ. 2·70 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டுதல், குளிர்பதன வசதிகள் செய்தல்.

11. சென்னை, ஓட்டேரி, அரசினர் டி.டி.பி. மருத்துவ மனையில் 20,000 ரூபாய் செலவில் உலை எண்ணெயைச் சேமித்து வைப்பதற்காக உறுதிப்படுத்தப்பட்ட காங்கிரீட் கற்கலவை மூடியுடன் கூடிய தொட்டியைக் கட்டுதல்.

12. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி-மருத்துவ மனையில் 25,000 ரூபாய் செலவில் புதிய மகப்பேறு கட்டிடத்திற்கும் அகநோயாளிகள் கட்டிடத்திற்குமிடையே கட்டிடத் தொடர்புத் தாழ்வாரம் கட்டுதல்.

13. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 51,000 ரூபாய் செலவில் ஆண்-பெண் அறுவைச் சிகிச்சை வார்டுக்கு சரிவுப் பாதை கட்டுதல்.

14. தஞ்சாவூர், அரசினர் ராஜா மிராஸ்தார் மருத்துவ மனையில் 16,500 ரூபாய் செலவில் அறையை மாற்றியமைப்பது, முதல் தளத்தில் தாமஸ் கூடத்திலுள்ள அலுவலகத்திற்கு மின் வசதி வழங்குவது.

[1978 மார்ச் 23

(iv) 1978–79 ஆம் ஆண்டில் கட்டக் கருதப்பட்டுள்ள கட்டிடத் திட்டங்கள் :—

1. சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் உளவியல் மருத்துவ சிகிச்சை வார்டின் புறநோயாளிகள் பிரிவுக்கு இடவசதி அளிப்பதற்காக, தற்போதுள்ள புறநோயாளிகள் மருத்துவப் பிரிவிற்கு மேல் 92,000 ரூபாய் செலவில் முதல் மாடி கட்டுதல்.

2. சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் மத்திய ஸ்டெரிலைசேஷன் பிரிவு அமைத்தல்.

3. சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் 36,000 ரூபாய் செலவில் உள்நாக்கு அறுவை சிகிச்சை வார்டுக்கு சீர்வளி வசதி செய்தல்.

4. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு வங்கியின் இரத்தம் எடுக்கும் அறைக்கு 50,000 ரூபாய் செலவில் சீர்வளி வசதி அமைத்தல்.

5. சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி–மருத்துவ மனையில் கைக்காய மருத்துவ சிகிச்சைப் பணிக்கூடத்திற்காக, கைக்காய மருத்துவச் சிகிச்சை வார்டுக்கு மேல் 1.83 இலட்சம் ரூபாய் செலவில் முதல் மாடி கட்டுதல்.

6. சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அறுவை சிகிச்சைக் கூடத்தை அமைப்பதற்காக, தற்போதுள்ள அறுவை சிகிச்சை புதிய கட்டிடத்தில் அடித்தளத்திற்கு மேல் கூடுதலாக மாடிகளை 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுதல்.

7. கே. கே. நகர், புறநகர் அரசினர் மருத்துவ மனையில் சவக்கிடங்குக்கு 1.44 இலட்சம் ரூபாய் செலவில் குளிர்ப் பதன வசதிகளுக்கு வகை செய்தல்.

8. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி–மருத்துவ மனையில் சவக்கிடங்குக்கு 1.65 இலட்சம் ரூபாய் செலவில் குளிர்ப் பதன பொறியை அமைத்தல்.

9. தஞ்சாவூர், ராஜா மிராஸ்தார் மருத்துவ மனையில் 3.00 இலட்சம் ரூபாய் செலவில், தாமஸ் கூடத்தைப் பழுது பார்த்தல், மகப்பேறு புதிய பிரிவைப் பழுதுபார்த்தல், முடநீக்கியல் மருத்துவ புறநோயாளிகள் பிரிவைக் கட்டுதல்.

1978 மார்ச் 23]

10. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தற்போதுள்ள புறநோயாளிகள் கட்டிடத்திற்கு மேல் 2.00 இலட்சம் ரூபாய் செலவில் முதல் மாடி கட்டுதல்.

11. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ரூபாய் 45,000 செலவில் அறுவை சிகிச்சைக் கூடங்கள் இரண்டைக் கட்டுதல்.

12. தோப்பூர், அரசினர் காச நோய் மருத்துவ மனையில் ரூபாய் 45,000 செலவில் கூடுதலாக சமையல் கட்டிடத்தைக் கட்டுதல்.

13. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 1.00 இலட்சம் ரூபாய் செலவில் புறநோயாளிகள் கட்டிடத்திலும், மகப்பேறு கட்டிடத்திலும் சரிவுப்பாதை கட்டுதல்.

14. காஞ்சிபுரம், அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவ மனையில் 2.90 இலட்சம் ரூபாய் செலவில் உயர் அழுத்த மின் சக்தி வழங்கலுக்கு வகை செய்தல்.

(எ) (i) 1977–78-ம் ஆண்டு கீழ்க்கண்ட கருவிகள் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

1. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள ஐ. எம். சி. பிரிவுக்கு ரூபாய் 39,960 செலவில் சிங்கிள் சேனல் பெட் சைடு மானிட்டர்கள் (Single Channel Bedside Monitors) ஹார்ட் ரேட் மீட்டர் அலாரம் (Heart-rate Metre and Alarm) ஆட்டோ ரிக்கார்டர் (Auto-recorder) டிமாண்ட் பேஸ் மேக்கர் (Demand Pace maker) ஆகிய கருவிகள்.

2. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பி. ஐ. ஆர். ஐசோடோப் துறையிலும் (Isotope Department B. I. R. and Cancer) புற்று நோய்ச் சிகிச்சைப்பிரிவிலும் பயன்படுத்துவதற்காக ரூபாய் 45,600 செலவில் துணைக் கருவிகளுடன் கூடிய காமா ரே ஸ்பெக்டோ மீட்டர் (Gamma Ray Spectometer).

3. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பி. ஐ. ஆர். புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவில் பயன்படுத்துவதற்காக 3,41,754 ரூபாய் செலவில் ரெக்டிலைனியர் ஸ்கேன்னர் (Rectilinear Scanner).

4. சென்னை, அரசினர் இராயப்பேட்டை மருத்துவ மனைக்கு பேச முடியாத நிலையிலும் படுத்த படுக்கையாகவும் உள்ள நோயாளிகளின் இருதயத்துடிப்புக்களை தெரிந்து கொள்வதற்கு ரூ. 41,150 செலவில் " சிங்கிள் சேனல் டெலி மீட்ரி யூனிட் ".

5. சென்னை, அரசினர் இராயப்பேட்டை மருத்துவ மனையின் நோய்க்குறியியல் துறையின் அறிவியல் ஆய்வுக் கூடப் பயனுக்காக ரூபாய் 8,750 செலவில் அல்ட்ரா சோனிக் கிளீனர் (Ultra Sonic Cleaner).

6. சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் நரம்பு சிகிச்சைத் துறைக்கு தலையில் ஏற்படும் காயங்கள் காரணமாக உறை குருதியை நீக்குவதற்காகவும், மண்டை ஓட்டை மூன்று நிமிடங்களுக்குள் திறப்பதற்காகவும் ரூபாய் 41,500 செலவில் பினுமேடிக் கிரானியோடொமி (Pneumatic Craniotomy) கருவி.

7. ரூபாய் 1,25,000 செலவில் சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனைக்கு மூச்சுத் திணறல் அவசர சிகிச்சைக்காகவும் சிறு நீர்ப்பை செயல்படாது நின்றுவிடும் நிலையிலும் உபயோகிக்க உயிர்க்காக்கும் கருவிகள்-பென்னெட் ரெஸ்பிரேட்டர் ஒன்று (One Bennet Respirator) ஹேமோ டைலைசர் ஒன்று (One Haemodialyser).

8. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் புதிய அறுவை சிகிச்சை அறைக்கு ரூபாய் 1,83,687 செலவில் கூடுதலாக சில கருவிகள்.

(ii) 1978–79 ஆம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கக் கருதப்பட்டுள்ள சாதனங்கள் :

		(ரூபாய்.)
1	சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பி. ஐ. ஆர். புற்றுநோய் (B. I. R. and Cancer) சிகிச்சைப் பிரிவிற்கு ஆட்டோமாடிக் பிலிம் பிராஸஸர் ஒன்று	1,73,000

2	சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் இருதய நோய் மும்முர சிகிச்சைப் பிரிவில் மத்திய அமைப்புடன் நோயாளிக்குப் பக்கத்தில் இருதயத் துடிப்பு அளவீட்டுக் கருவி ..	1,58,000
3	ஸ்டான்லி அரசினர் மருத்துவமனையில் கோபால்ட் பிரிவு	2,000 (அடையாள நிதி ஒதுக்கம்.)
4	சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனம்—மகளிர், குழந்தைகள் அரசு மருத்துவ மனையில் உயிர் வேதியல் நோய்க்குறியியல் துறைக்கு கருவிகள் ..	2,17,000
5	மதுரை, அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு 200 எம்.ஏ. எக்ஸ்-கதிர் ..	1,60,000

(III) மருத்துவமனைகளில் பல்நலக் கம்மியர் மற்றும் பல்நலக் கோட்பாடு மருத்துவர் பதவிகள்.—திருநெல்வேலி, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் பல்நலக் கம்மியர் பதவி ஒன்றும், பல்நலக் கோட்பாடு மருத்துவர் பதவி ஒன்றும் அரசு ஏற்படுத்தியுள்ளது. சென்னையில் உள்ள அரசு மன நோய் மருத்துவ மனையிலும், அரசு கஸ்தூரிபாய் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையிலும் ஒரு பல்நலக் கோட்பாடு மருத்துவர் பதவியும் ஏற்படுத்தியுள்ளது.

(IV) வெள்ள நிவாரண நடவடிக்கைகள்.—1977, நவம்பர் திங்களில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வரலாறு காணாத புயல், வெள்ளம் காரணமாக பெருமளவில் சமுதாயத்தில் பலவகை சுகாதாரப் பிரச்சினைகள் உருவாகின. பல்வேறு வகைப்பட்ட சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. இவை தவிர, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதற்கு, மருந்துகள் வாங்குவதற்காக மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளுக்கு ரூ. 21 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

புயல், வெள்ளத்திற்குப் பின்னர் கொள்ளை நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பினைக் கருத்திற் கொண்டு தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலியிலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் சிவில் மருத்துவர்கள் பொறுப்பில் மருத்துவப் பணியாளர் குழுக்கள் மருத்துவ உதவி அளிப்பதற்காகவும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டன. தஞ்சாவூரிலிருந்து இப்பணியாளர் குழுக்கள் நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, நாகூர், மன்னார்குடி, முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, சீர்காழி போன்ற பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டன. மதுரை மருத்துவக் கல்லூரியிலிருந்து அனுப்பப்பட்ட மருத்துவக் குழுக்கள், மதுரை மாநகரம், திண்டுக்கல், வேடசந்தூர், ஆகிய பகுதிகளைக் கவனித்துக் கொண்டன. அதுபோன்றே, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலிருந்து 3 குழுக்கள் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலிருந்தும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியிலிருந்தும் மருத்துவப் பணியாளர் குழுக்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவ உதவியை நல்கின.

இந்த மருத்துவ வல்லுநர் குழுக்களைத்தவிர சென்னை மாநகரத்திலிருந்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இம் முகாம்களுக்குச் சென்று மருத்துவப் பணிபுரிவதில் உதவினர்.

மருத்துவ உதவிகள் வழங்குதல், கொள்ளை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளைத் தவிர, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்குப் பல வைட்டமின் சத்து மாத்திரைகளும், 'பி' காம்ப்ளக்ஸ் மாத்திரைகளும் வழங்கப்பட்டன.

(V) பயிற்சி—(அ) செவிலிப்பணி.—பொது நோய்களுக்கான சிகிச்சையில் செவிலியர் பயிற்சி பெறுவதற்காக ஆறு பயிற்சி நிலையங்கள் உள்ளன. பயிற்சி பெற்ற செவிலியர்கள் அதிகம் தேவைப்படுவதை நிறைவு செய்யும் பொருட்டு, செவிலி பயிற்சி வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படும் எண்ணிக்கையை1977—78 முதல் அரசு 200-லிருந்து 250 ஆக உயர்த்தியுள்ளது. செவிலிப் பயிற்சிப் பணிக்கான சான்றிதழ் 1977ஆம் ஆண்டில் 'செவிலிப் பணியில் பட்டயம்' என்று மாற்றி பெயரிடப்பட்டது.

(ஆ) துணைச் செவிலி மகப்பேறு துணைப் பணி.—திருச்சிராப்பள்ளி அரசினர் தலைமையிட மருத்துவ மனையில் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படாத இடங்களின் எண்ணிக்கை 5-லிருந்து 9 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வேலூர், திண்டுக்கல், சேலம் ஆகிய மூன்று பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 5 இடங்கள் வீதம் 15 இடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(v) (அ) மருத்துவ ஆராய்ச்சி.—இம் மாநிலத்திலுள்ள, மருத்துவ நிலையங்கள் அனைத்திலும் எல்லா நிலையங்களிலும், ஆராய்ச்சிப் பணிகளுக்கான வசதிகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

ஆராய்ச்சிக்கு நிதியுதவி வழங்கும் முக்கிய அமைப்புகள் வருமாறு:—

1. மாநில அரசு.

2. இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் போன்ற தேசிய அமைப்புகள்.

3. உலகச் சுகாதார நிறுவனம், யுனிசெப் நிறுவனம் போன்ற உலக நாடுகள் அமைப்புகள்.

(ஆ) தமிழ்நாடு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு.—1944-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு, தமிழ்நாட்டில் மருத்துவம் சார்ந்த அறிவியலில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஊக்கமளிக்கிறது.

ஆராய்ச்சிப் பணிக்கு மானியம் கேட்டு வரும் வேண்டுகோள்களை இக்குழு பரிசிலிப்பதோடு தகுதியுடைய திட்டங்களுக்கு உதவி நல்குகிறது. தற்போது ஆண்டுதோறும் இக்குழுவிடம் மொத்த மானியமாக ரூபாய் ஒரு இலட்சம் நிதி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(vii) கிங் நிறுவனம், கிண்டி.—கிங் நிறுவனம், கிண்டி 1899-ல் தொடங்கப்பட்டு, தமிழ்நாடு அரசால் பராமரிக்கப்படுகிறது. இது பல நாடுகளிடையே பிரசித்திப் பெற்றவிலங்கின் குருதி நிணநீர், அம்மைப்பால் ஆகியவற்றைத் தயாரித்து, பெரும்

பொதுச் சுகாதார ஆய்வுக் கூடமாக வளர்ச்சியடைந்துள்ளது. இது கிழக்கு நாடுகளில் போதனை நிலையமாகவும் ஆராய்ச்சி நிலையமாகவும் விளங்குகிறது.

இந்த கிங் நிறுவனம் பொதுவாக நோயின் தன்மை கண்டறியும் ஆய்வுக் கூடமாகவும் விளங்குகிறது. இது உறைய வைத்து உலரச் செய்த அம்மைப்பால், காலரா, டைபாயிட், ஆட்டோ-க்யுரேட்டிவ் அம்மைப்பால், இசிவு நோய்த் தடுப்பு மருந்து, விலங்குகளின் குருதி நிணநீர் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான நிலையமாகும். இது, இரத்தத் தொகுதிக்கேற்ற நிணநீர் தயாரித்தல், பிளாஸ்மாவை பதப்படுத்துதல், மாநிலத்தில் உள்ள இரத்த சேமிப்பிடங்களை நிர்வகித்தல் ஆகியவற்றிற்கான நிலையமாகும். இது, நோய்க் கிருமிகளில்லாத உப்பு, ஏனைய பாரன்டெரல் (Parenteral கரைசல் ஆகியவற்றைத் தயாரிக்கிறது. இது, உயிரியல் சார்ந்த கட்டுப்பாடு ஆய்வுக்கூடமாக விளங்குகிறது. இது ஆய்வுக்கூட தொழில் நுட்பவியலுக்கான பயிற்சி நிலையமாகும். இது, பாக்டிரியா என்னும் கிருமிகள் பற்றிய ஆராய்ச்சி, மருந்துகள், பகுப்பாய்வு, பொதுச் சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த பாடங்கள் ஆகியவற்றில் பட்ட மேற்படிப்புப் பயிற்சி ஆராய்ச்சி நிலையமாகும்.

தொத்துநோய் பற்றிய ஆய்வு, எங்கும் பரவியுள்ளதும் அசாதாரண கூறுகளுடன் கூடியதுமான நோய்களைப் பற்றி விரிவான கள ஆராய்ச்சி ஆகியவற்றிற்காக நடமாடும் ஆய்வுக் கூடம் ஒன்று செயல்படுகிறது. மக்கள் திரளாகக் கூடும் இடங்களான வர்த்தகப் பொருட்காட்சி, திருவிழாக்கள் ஆகியவற்றிற்கு குழு/பிரிவு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு நோய் பரவுவதைத் தடுப்பதிலும், காலரா போன்ற நோய்கள் மக்களிடையே பரவாமல் தடுக்கும் வண்ணம், அவற்றை விரைவிலேயே கண்டறிவதிலும் இக்குழு உதவி புரிகிறது.

(அ) உறைய வைத்து உலர வைக்கும் அம்மைப்பால் பிரிவு:— உறைய வைத்து உலர வைக்கும் அம்மைப்பால் தயாரிப்பு 1977ஆம் ஆண்டு ஜுன் திங்களிலிருந்து நிறுத்தப்பட்டு வெறி நாய்க் கடியின் நச்சு அகற்றுகிற மருந்தை உற்பத்தி செய்வதற்கான தொடக்கப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது

(ஆ) மத்திய இரத்த சேமிப்பு இடம்: இந்த நிலையத்தின் மத்திய இரத்த சேமிப்பிடம் ஒருவருக்கு இரத்தம் ஏற்றுதல் நினைவிழந்தவர்களை மீண்டும் நினைவு பெறச் செய்து முனைப்பாக மருத்துவ சிகிச்சை அளிக்கும் பணி ஆகியவற்றில் மருத்துவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கிறது உலர வைத்த பிளாஸ்மா

ஈரக்கசிவுள்ள பிளாஸ்மா, நிணநீர் ஆகியவை தயாரிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இரத்த சேமிப்பிடங்களுக்கும், தனியார் நிலையங்களுக்கும், இரயில்வே துறைகளுக்கும், இந்தியாவில் ஏனைய சில மாநிலங்களுக்கும் வழங்கப்படுகின்றன. மாநிலத்தில் அனைத்து இரத்த சேமிப்பிடங்களுக்கும் இன்றியமையாத இரத்த சேமிப்பு சாதனங்கள் வழங்கப்படுகின்றன.

(இ) மூன்று நோய் தடுப்பு ஊசி மற்றும் டெடனஸ் டாக்ஸைட்.— குழந்தைகளுக்கு மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடுவதற்கு இம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்வதற்காக டி.பி.டி., டி.டி., மருந்துகளை உற்பத்தி செய்வது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

(ஈ) வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புப் பணிகள்.— புயல், வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களுக்குப்பின்னர் கொள்ளை நோய் எதுவும் தோன்றிப் பரவா வண்ணம் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படக்கூடிய பெரும் தேவையை சரிக்கட்டும் பொருட்டு, கிண்டியிலுள்ள, ' கிங் ' நிறுவனத்தில் காலரா தடுப்பு ஊசி மருந்து, டைபாய்டு தடுப்பு ஊசி மருந்து ஆகியவற்றின் உற்பத்தி விரைவுபடுத்தப்பட்டது. உடனடியாக தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, செங்கல்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு காலரா தடுப்பு ஊசி மருந்து இருபத்தோரு இலட்சம் பேருக்கு செலுத்தப்படக் கூடிய அளவிற்கு அனுப்பப்பட்டது.

மீண்டும் ஒரு வாரத்துக்குள் மேலும் 10 இலட்சம் பேருக்குப் போடக்கூடிய காலரா தடுப்பு ஊசி மருந்து ' கிங் ' நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டு விமானத்தின் மூலம் மதுரைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தவிரவும், ஹைதராபாத்திலிருந்து, 2½ இலட்சம் பேருக்குப் போடக்கூடிய அளவு காலரா தடுப்பு ஊசி மருந்தும், பம்பாயில் உள்ள ' ஹாப்கின்ஸ் ' நிறுவனத்திலிருந்து 14 இலட்சம் பேருக்குப் போடக்கூடிய அளவு மருந்தும், கௌசாலியிலுள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து 6½ இலட்சம் பேருக்கு போடக்கூடிய அளவு மருந்தும் பெறுவதற்கு கிங் நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்தது. இந்த அளவு மருந்துகளை உரிய காலத்தில் வழங்கியதன் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்

[1978 மார்ச் 23

பட்ட பகுதிகளில் கொள்ளை நோய் எதுவும் தோன்றி பரவாமல் தவிர்க்க முடிந்தது. இந்த குறுகிய காலத்துக்குள் கிங் நிறுவனத்திடமிருந்து மட்டும் ரூ. 6 இலட்சம் பெறுமானமுள்ள தடுப்பு ஊசி மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இதுபோல நாட்டின் வேறு பல நிலையங்களிலிருந்து 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தடுப்பு ஊசி மருந்துகள் பெறப்பட்டன.

B. மருத்துவப். பணிகள் மற்றும் குடும்ப நலத்துறை.

I. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

மாநிலத்தில் 14 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் உள்ளன. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை கீழே விவரித்துள்ளவாறு 90 படுக்கைகள் சேர்க்கப் பட்டுள்ளன:—

மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, நாகர் கோவில்.	60
மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்	30

கீழே உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் கீழ்க்கண்டவாறு படுக்கைகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்கக் கருதப்பட்டுள்ளது:—

மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, நாகப்பட்டினம்	105
மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை	100
மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி	30
மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, உதகமண்டலம்.	40

1978 மார்ச் 23]

II. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கான கட்டிடங்கள் கட்டும் திட்டங்கள்.

1977—78-ல் கீழ்க்கண்ட கட்டிட திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

(1) சேலம் அரசுத் தலைமையிட மருத்துவமனையில் இதய நோய் தீவிர சிகிச்சைப் பிரிவிற்காக ரூ. 1.63 இலட்சம் செலவில் புதிய கட்டிடம்.

(2) ஆம்பூர் கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் அளித்த நன்கொடை மூலம் வேலூர் அரசினர் பென்ட்லண்ட் மருத்துவமனையில் இதயநோய் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு ரூபாய் 55,000 செலவில் எட்டு படுக்கைகள் கொண்ட வார்டு.

1978-79-ம் ஆண்டுக்கான திட்டம்.

காஞ்சிபுரம், தலைமையிட மருத்துவமனையில் ரூ. 50,000 செலவில் கழிவுநீர் அகற்று ஏற்பாட்டிற்கு வகை செய்யக் கருதப்பட்டுள்ளது.

III. வட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

1977ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் மொத்தம் 5,653 படுக்கைகள் கொண்ட 108 வட்ட மருத்துவமனைகள் உள்ளன. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் தேதி வரை கீழே காட்டப்பட்டுள்ளவாறு வட்ட மருத்துவமனைகளில் 96 படுக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

1.	அரசு மருத்துவமனை,	குடியாத்தம்	..	16
2.	டிை	ஏற்காடு	..	2
3.	டிை	கோவில்பட்டி	..	12
4.	டிை	ஓசூர்	..	12
5.	டிை	கிருஷ்ணகிரி	..	12
6.	டிை	ஆத்தூர்	..	12
7.	டிை	ஸ்ரீவில்லிப்புத்தூர்		12
8.	டிை	முதுகுளத்தூர்	..	6
9.	டிை	கரூர்	..	12
		மொத்தம்	..	96

கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் மேலும் 122 படுக்கைகளைச் சேர்க்க கருதப்பட்டுள்ளது :—

1.	அரசு மருத்துவமனை,	குளித்தலை ..	16
2.	டிை	திருவள்ளூர் ..	12
3.	டிை	சிதம்பரம் ..	4
4.	டிை	விழுப்புரம் ..	6
5.	டிை	சங்கரி ..	24
6.	டிை	கூடலூர் ..	40
7.	டிை	ஒரத்தநாடு ..	8
8.	டிை	மணப்பாறை..	12
		மொத்தம் ..	122

IV. வட்ட மருத்துவமனைகளுக்கான கட்டிட திட்டங்கள்.

1977–78ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது:—

(i) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் அரசு மருத்துவமனையில் தண்ணீர் வழங்குவதற்காக ரூ. 33,000 செலவில் நீர் சேமிப்புத் தொட்டியுடன் மேல்நிலை நீர் தொட்டி கட்டுதல்.

(ii) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி அரசு மருத்துவமனையில் தண்ணீர் வழங்குவதற்காக ரூ. 16,800 செலவில் மேல்நிலை நீர் தொட்டி கட்டுதல்.

(iii) மதுரை மாவட்டம், மேலூர் அரசு மருத்துவமனையில் ரூ. 26,000 செலவில் கழிப்பிடம் கட்டுதல்.

(iv) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு மருத்துவமனையில் ரூ. 14,800 செலவில் கூடுதல் நச்சுத்தடை மலத் தொட்டி கட்டுதல்.

(v) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் ரூ. 18,000 செலவில் சமையல் அறை ஒன்று கட்டுதல்.

(vi) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் அரசு மருத்துவமனையில் ரூ. 70,000 செலவில் நவீன சமையல் அறை கட்டுதல்.

(vii) சேலம் மாவட்டம், இராசிபுரம் மருத்துவமனையில் ரூ. 70,000 செலவில் நவீன சமையல் அறை கட்டுதல்.

(viii) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி அரசு மருத்துவமனையில் ரூ. 60,000 செலவில் எக்ஸ்-ரே தொகுதி ஒன்று கட்டுதல்.

(ix) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி அரசு மருத்துவ மனையில் ரூ. 95,000 செலவில் பிண அறுவைக் கொட்டகை கட்டுதல்.

1978-79 ஆம் ஆண்டுக்கான திட்டம்.

1978–79ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது:—

1. மதுராந்தகம், நாங்குநேரி, சீர்காழி, விருத்தாசலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் மொத்தம் ரூ. 2.80 இலட்சம் செலவில் அறுவைச் சிகிச்சை கூடங்கள் கட்டுதல்.

2. தர்மபுரி மாவட்டம், தென்கனிக்கோட்டையில் ரூ. 3.75 இலட்சம் செலவில் புதிய அரசு மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல்.

V. வட்டத் தலைமையிடங்களில் அல்லாத மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

இம்மாநிலத்தில் 106 வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகளும், 5 காசநோய் நலம் பேண் மருத்துவமனைகளும் உள்ளன. இவற்றில் மொத்தம் 2,724 படுக்கைகள் உள்ளன. 1977ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் நாள் முதல் 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் நாள் வரை கீழே காட்டியுள்ளவாறு 54 படுக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன:—

1.	அரசு மருத்துவமனை, காங்கேயம்	10
2.	அரசு மருத்துவமனை, *காட்டுமன்னார்கோயில்.	8
3.	அரசு மருத்துவமனை, மண்டபம் கேம்ப் ..	20
4.	அரசு மருத்துவமனை, இராமேஸ்வரம் ..	16
	மொத்தம் ..	54

* தற்போதுள்ள அரசு மருந்தகம், மருத்துவ மனையாக மாற்றப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம், பெருநாழியில் 4 படுக்கைகளுடன் கூடிய அரசு மகப்பேறு மருத்துவமனை 1978 ஜனவரியில் திறக்கப்பட்டது.

பின்வரும் மருத்துவமனைகளில் 92 கூடுதல் படுக்கைகள் சேர்க்கப்படுகின்றன:—

1.	அரசு மருத்துவமனை, முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.	8
2.	அரசு மருத்துவமனை, உடையார் பாளையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	[illegible]
3.	அரசு மருத்துவமனை, கம்பம், மதுரை மாவட்டம்.	6
4.	அரசு மருத்துவமனை, கொடுமுடி, கோயம்புத்தூர் மாவட்டம்.	20
5.	அரசு மருத்துவமனை, ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.	8
6.	அரசு மருத்துவமனை, சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை மாவட்டம்.	24
7.	அரசு மருத்துவமனை, செய்யூர், செங்கல்பட்டு மாவட்டம்.	20
	மொத்தம் ..	92

1978-79 ஆம் ஆண்டிற்கான திட்டம்.

1978–79ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது :—

1. சேலம் மாவட்டம், மல்லூரில் உள்ள அரசு மருந்தகத்தை ரூ. 27,000 செலவில் 8 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

2. சேலம் மாவட்டம், இடப்பாடியில் உள்ள மருந்தகத்தை ரூ. 45,000 செலவில் 10 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

3. மதுரை மாவட்டம், சாப்தூரில் உள்ள அரசு மருந்தகத்தை ரூ. 26,000 செலவில் 10 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

4. கன்னியாகுமரி மாவட்டம், கொளச்சல் அரசு மருத்துவமனையில், 10 படுக்கைகளுடன் கூடிய மகப்பேறு மற்றும் அறுவைச் சிகிச்சைக் கூடமும் மருத்துவ அதிகாரி குடியிருப்பும் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் கட்டுதல்.

5. புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனையில் ரூ. 80,000 செலவில் 15 படுக்கைகள் கொண்ட கூடுதல் வார்டு கட்டுதல்.

VI. அரசு மருந்தகங்களுக்கு மேம்பாடுகள்.

1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதியில் 157 அரசு மருந்தகங்களில் 236 படுக்கைகள் உள்ளன.

1977–78-ம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம், பர்கூரில் புதிதாகக் கட்டப்பட்ட மருந்தகம், தேவையான பணியாளர்களுடன் செயல்படத் தொடங்கியது.

1978-79-ம் ஆண்டிற்கான திட்டங்கள்—

கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகள் அளிப்பதற்காக 1978–79ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் புதிய மருந்தகங்களைத் திறக்க அரசு கருதியுள்ளது:—

1. பெரியபட்டினம், இராமநாதபுரம் மாவட்டம்.
2. வாலிநோக்கம், இராமநாதபுரம் மாவட்டம்.
3. உச்சிநத்தம், இராமநாதபுரம் மாவட்டம்.
4. கோணபேட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. மேற்பனைக்காடு, புதுக்கோட்டை மாவட்டம்.
6. அனுக்கூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
7. கரடிக்குப்பம், வடஆற்காடு மாவட்டம்.

1978–79ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது:—

(1) கோயம்புத்தூர் மாவட்டம், பர்கூர் அரசு மருந்தகத்தில் ரூ. 70,000 செலவில் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்.

(2) பின்வரும் அரசு மருந்தகங்களில் ஆறு படுக்கைகள் கொண்ட பகுதி, மகப்பேறுக்கான பிரசவ மற்றும் அறுவை அரங்கம், ஒரு சிறிய சமையற்கூடம் ரூ. 6.00 இலட்சம் மொத்தச் செலவில் புதியகட்டிடங்கள் கட்டுதல்:—

1. அரசு மருந்தகம், பள்ளிகொண்டா, வட ஆற்காடு மாவட்டம்.

2. அரசு மருந்தகம், பொங்கலூர் , கோயம்புத்தூர் மாவட்டம்.

3. அரசு மருந்தகம், R. வெள்ளோடு, மதுரை மாவட்டம்.

4. அரசு மருந்தகம், மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.

5. அரசு மருந்தகம், தோகைமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

6. அரசு மருந்தகம், இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்.

VII. எக்ஸ் கதிர் மற்றும் மருத்துவக் கருவிகள்.

கீழ்க்காணும் அரசினர் மருத்துவ நிலையங்கள் பலவற்றிற்கு கருவிகளை வாங்க 1977–78 ஆம் ஆண்டில் அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

1. தருமபுரி, அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு ரூ. 25,000 செலவில் ஒரு 30-எம். ஏ. இயல் எக்ஸ் கதிர் சாதனம்.

2. ஹரூர், அரசினர் மருத்துவமனைக்கு ரூ. 25,000 செலவில் ஒரு 30—எம்.ஏ. எக்ஸ் கதிர் சாதனம் மேலும் ரேடியோகிராபர் பதவி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3. உடுமலைப்பேட்டை அரசினர் மருத்துவ மனைக்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு 100—எம்.ஏ. எக்ஸ் கதிர் சாதனம்.

4. கடலூர், தூத்துக்குடி, புதுக்கோட்டை, சேலம் ஊர்களிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் பத்தாயிரம் செலவில் ஒரு பல் மருத்துவப் பெரும் பிரிவு வீதம் நான்கு பல் மருத்துவப் பிரிவுகள்.

5. கீழ்க்காணும் அரசினர் மருத்துவ மனை ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 செலவில் ஒரு சிறிய பல் மருத்துவப் பிரிவு:—

(1) அரசினர் மருத்துவ மனை, திருப்பத்தூர், வடஆற்காடு மாவட்டம்.

(2) அரசினர் மருத்துவமனை, திண்டிவனம், தென்னாற்காடு மாவட்டம்.

(3) அரசினர் மருத்துவமனை, குன்னூர், நீலகிரி மாவட்டம்.

(4) அரசினர் மருத்துவமனை, பத்மநாபபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.

(5) அரசினர் மருத்துவமனை, ஆத்தூர், சேலம் மாவட்டம்.

(6) அரசினர் மருத்துவமனை, கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம்.

(7) அரசினர் மருத்துவமனை, திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

(8) அரசினர் மருத்துவமனை, மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம்.

(9) அரசினர் மருத்துவமனை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டம்.

(10) அரசினர் மருத்துவமனை, ஆம்பூர், வடஆற்காடு மாவட்டம்.

(11) அரசினர் மருத்துவமனை, கடையநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

(12) அரசினர் மருத்துவமனை, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.

1978—79-ம் ஆண்டிற்கான திட்டம்—

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு 1,05,000 ரூபாய் செலவில் 100—எம். ஏ. எக்ஸ் கதிர் பிரிவு சாதனம் வாங்குதலும், ரேடியோகிராபர் பதவியை ஏற்படுத்துதலும்.

VIII. தனித்துறைகளை ஏற்படுத்துவது.

(1) இரத்தச் சேமிப்பு வங்கி—

மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவ நிலையங்களில் தற்போது 37 இரத்தச் சேமிப்பு வங்கிகள் இயங்கி வருகின்றன. கீழ்க்காணும் மருத்துவமனைகளில் 1977–78-ம் ஆண்டில் 3 இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. அரசினர் மருத்துவமனை, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்: —

2. அரசினர் மருத்துவமனை, அருப்புக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்.

3. அரசினர் மருத்துவமனை, கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

கீழ்க்காணும் இரண்டு மருத்துவமனைகளில் 1978–79-ம் ஆண்டில் 2 இரத்த சேமிப்பு வங்கிகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. அரசினர் மருத்துவமனை, ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.

(2) பல் மருத்துவப் பிரிவு—

மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத கீழ்க்காணும் மூன்று மருத்துவ மனைகளில் பல் மருத்துவப் பிரிவுகளை, 1977–78-ம் ஆண்டில் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது:—

1. அரசினர் மருத்துவமனை, வாலாஜாப்பேட்டை, வடஆற்காடு மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. அரசினர் மருத்துவமனை, சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

கீழ்க்காணும் மருத்துவமனைகளில் 1978–79-ம் ஆண்டு ஐந்து பல் மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. அரசினர் மருத்துவமனை, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, திருத்தணி, செங்கல்பட்டு மாவட்டம்.

3. அரசினர் மருத்துவமனை, சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.

4. அரசினர் மருத்துவமனை, ஒசூர், தர்மபுரி மாவட்டம்.

5. அரசினர் மருத்துவமனை, பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

பல் மருத்துவத்தில் பயிற்சி பெற்ற பணியாளர்களைப் பெறுவதற்கும், பல்வேறு மருத்துவப் பிரிவுகளை நிர்வகிப்பதற்கும், கீழ்க்காணும் மருத்துவமனைகளில் பல் நலக் கம்மியர், பல் நல கோட்பாடு மருத்துவர் பதவிகளை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது :—

தொடர் எண்ணும், மருத்துவமனையின் பெயரும்.	பல் நல கோட்பாடு மருத்துவர்.	பல் நலக் கம்மியர்.
(1)	(2)	(3)
1 மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வேலூர், வட ஆற்காடு மாவட்டம்	1	..
2 மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி ..	1	..

தொடர் எண்ணும் மருத்துவமனையின் பெயரும்.	பல் நல கோட்பாடு மருத்துவர்.	பல் நலக் கம்மியர்.
(1)	(2)	(3)
3 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, சேலம், சேலம் மாவட்டம்	1	..
4 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, கடலூர், தென்னாற்காடு மாவட்டம்	1	..
5 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டம்	1	..
6 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, திண்டுக்கல், மதுரை மாவட்டம்	..	1
7 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, தூத்துக்குடி, திருநெல் வேலி மாவட்டம்	..	1
8 அரசினர் தலைமையிட மருத்துவமனை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்	..	1
9 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, தருமபுரி..	..	1
10 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, ஊட்டி, நீலகிரி மாவட்டம்	..	1

(3) முட நீக்கியல் மருத்துவப் பிரிவு.—

தற்போது ஒன்பது மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் முடநீக்கியல் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1978–79-ம் ஆண்டில் உதகமண்டலம், தலைமையிட மருத்துவமனையில் முடநீக்கியல் மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(4) காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவு—

பதினோரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1978–79-ம் ஆண்டில் தருமபுரி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(5) பால்வினை நோய் மருத்துவப் பிரிவுகள்—

தருமபுரி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் பால்வினைநோய் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் பால்வினை நோய் மருத்துவப் பிரிவுகள் உள்ளன. இதல்லாமல் நான்கு வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் பால்வினை நோய் மருத்துவப் பிரிவுகள் இயங்கிவருகின்றன.

(6) கண் மருத்துவம்—

பதினோரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் 2 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் கண் மருத்துவப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. 1978–79-ம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவு ஒன்றை அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

(7) மனநோய் மருத்துவம்—

பதினான்கு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் 5 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் மட்டுமே மன நோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

கீழ்க்காணும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 1978–79-ம் ஆண்டில் மனநோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தூத்துக்குடி.

2. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை.

3. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, காஞ்சிபுரம்.

4. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்.

5. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, ஈரோடு.

6. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வேலூர்.

8) சிசுநோய் மருத்துவம்—

மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும் தற்போது சிசுநோய் மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

IX. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.—மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் சாதனைகள் பின்வருமாறு :—

1. கூடலூர் பஜாரில் மருந்தகம் ஒன்று.
2. மசினகுடியில் ஒரு மருந்தகம்.
3. களஹட்டியில் ஒரு மருந்தகம்.
4. மஞ்சூரில் ஒரு மருந்தகம்.
5. தொலைவில் உள்ள இடங்களில் மருத்துவ உதவிகளை அளிக்க உதகமண்டலத்தில் மற்றொரு இயங்கும் மருத்துவப்பிரிவு.
6. கூடலூரில் ஆம்புலன்ஸ் ஊர்தி வசதி.

உதகமண்டலம் அரசினர் தலைமையிட மருத்துவமனையில் 40 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு கட்டி முடிக்கப் பட்டுள்ளது. கூடலூரில் 40 படுக்கை வசதிகளுடன் கூடிய வார்டு கட்டும் பணி நடந்தேறி வருகிறது.

X. பழங்குடி மக்கள் நலத் திட்டம்—பழங்குடி மக்கள் நலத் திட்டத்தின்கீழ் கருமான்துறை (சேலம் மாவட்டம்), செங்காட்டுப்பட்டி பச்சைமலை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), ஜவ்வாது மலை (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்கள் ஒவ்வொன்றில் ஒன்றாக மூன்று மருந்தகங்கள்

தற்போது செயல் பட்டு வருகின்றன. இவை, அப்பகுதிகளிலுள்ள பழங்குடியினரின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்கின்றன.

1977–78-ல் இன்னும் மூன்று மருந்தகங்களை சித்தேரி (தருமபுரி மாவட்டம்), புதூர்நாடு (வட ஆற்காடு மாவட்டம்), பச்சைமலை (சேலம் மாவட்டம்) ஆகிய இடங்களில் தொடங்க அரசு அனுமதித்துள்ளது. புதுக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும் வரையில் இந்த மருந்தகங்கள் வாடகைக் கட்டிடங்களில் செயல்படும்.

XI. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்றுதல்.—1968–69-லிருந்து 1976–77 வரையில் 112 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அரசு மருந்தகங்களாக மாற்றப்பட்டுள்ளன. 1977–78-ம் ஆண்டில் V, VI நிதி நிலைத் தரத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்ற அரசு அனுமதி வழங்கியுள்ளது.

XII. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மருத்துவ நிவாரணப் பணி.—புயலால் பாதிக்கப்பட்ட கடற்கரையோர மாவட்டங்களிலும், வெள்ளம் ஏற்பட்ட பல மாவட்டங்களிலும், கிராம மக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, மருத்துவமனைகளுக்கும், மருந்தகங்களுக்கும் போதுமான அளவு இன்றியமையாத மருந்துகள் வழங்கப்பட்டன. இந்த மருத்துவ மனைகள் அனைத்திலுமுள்ள மருத்துவர்களும், துணை மருத்துவப் பணியாளர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துன்புற்ற மக்களுக்குச் சிகிச்சை அளிக்க விரைந்து அனுப்பப்பட்டனர்.

XIII. <u>தொற்று நோய்கள்—(அ) தமிழ்நாட்டில் தொழு நோய்க்கட்டுப்பாடு.</u>—தமிழ்நாட்டில் தொழுநோய் மிக அதிகமான அளவில் பரவியுள்ளது. ஆயிரத்தில் 10 முதல் 40 பேரிடம் இந்நோய் காணப்படுகிறது. தொழுநோய்க்கு ஆளானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதே தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், தேசீய தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் மருத்துவப் பணியாளர்கள் இடம் இடமாக ஊர்திகளில் சென்று, கூடுமான அளவுக்கு நோயாளிகளின் வீடுகளுக்கருகிலேயே

சிகிச்சை அளிக்கின்றனர். இதனுல், நோயாளிகள் தங்களது ஊதியத்தை இழக்காமலேயே முறையாகச் சிகிச்சையைத் தொடர்ந்து பெற முடிகிறது. வேலை தேடியும், தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவும் கிராமப் பகுதிகளிலிருந்து நகர்ப்புறப் பகுதிகளுக்கு தொழுநோயாளிகள் செல்கின்றனர். இதனுல், முக்கியமான நகர்ப்புறப் பகுதிகள் அனைத்திலும் நகர்ப்புற தொழுநோய்ச் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சிகிச்சை அளிக்கப்படுகையில் நோய்க்காக இடையில் ஏற்படும் தொற்று நோய்கள், எதிர் விளைவு அல்லது வெப்பத்தால் ஏற்படும் புண் போன்ற சிக்கல் விளையக் கூடிய நோயாளிக்கு மருத்துவ உதவி அளிப்பதற்கான வசதியைச் செய்ய; 20 நோயாளிகளுக்கு தற்காலிக சிகிச்சை அளிக்கக் கூடிய வார்டுகளைக் கட்டுவதன் மூலம் எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 25 வார்டுகளுக்கு இந்த வகையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 10 வார்டுகள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 3 வார்டுகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. எஞ்சிய வார்டுகள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது.

தொழு நோய்க்கு ஆளானதாக மதிப்பிடப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 7.45 லட்சம்; அவர்களில் நாளதுவரை 5.72 லட்சம் பேருக்குத் தொழுநோய் பற்றியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 4,55,065 பேர்கள் மருத்துவச் சிகிச்சையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டில், பள்ளி செல்லும் மாணவர்களிடையே தொழு நோய் பற்றியுள்ளவர்களைக் கண்டறிய சுகாதார ஆய்வாளர்களின் உதவியோடு பள்ளி மாணவர்கள் மருத்துவ பரிசோதனைத் திட்டத்துக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தச் சுகாதார ஆய்வாளர்களுக்குரிய பயிற்சித் திட்டங்கள் முடிவடைந்துள்ளன. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு பிரிவும் செய்து முடித்த பணிகளின் அளவையும் தரத்தையும் மதிப்பிடுவதற்காக கண்காணிப்பு மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றைத் துறைக்குள்ளேயே அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் குறிப்பிடப்பட்டது போல தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் பணி புரிவதற்கான ஆர்வத்தை மருத்துவர்களிடம் தூண்டுவதற்காக மருத்துவர்கள் 25 பேர் களப்பணிப் பயிற்சிக்காக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே இப்பயிற்சி தொடங்கி நடந்து வருகிறது.

(ஆ) காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்—நோயை கண்டறிதலும் சிகிச்சையளித்தலும்.—மருத்துவ மனைகளில் புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவிற்கு வரும் நோயாளிகள் தங்களுக்கு இந்நோய் கண்டுள்ளதற்கான அறிகுறிகள் உள்ளன எனத் தெரிவிப்பதன் பேரில் இந் நோய் குறித்த விவரங்கள் கண்டறியப்படுகின்றன. மருத்துவ மனையில் சேர்க்கப்படுகின்ற நோயாளிகளுக்கு மூன்று வார காலத்துக்கு மேல் இருமல் தொடர்ந்து இருந்திருந்து எடைக் குறைவோடு விட்டு விட்டுக் காய்ச்சலும் வந்திருந்தால் அவர்களின் சளி சோதனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. சளி சோதனையில் நோய்க்குறி இல்லை என அறியப்படும் நோயாளிகள் எக்ஸ்-கதிர் படமெடுக்க அனுப்பி வைக்கப்படுகின்றனர். சளியிலும் எக்ஸ்-கதிர்ப் படத்திலும் நோய்க் குறிகள் இருப்பதாகத் தெரிய வந்த நோயாளிகளுக்கு அவர்கள் இல்லங்களின் அருகில் உள்ள மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்நோய்க் கண்டவர்களுடன் தொடர்பு கொள்வோருக்கும் இந்நோய் தொற்றலாம் என்று கருதி அவர்களுக்கு பி. சி. ஜி. ஊசி போடப்படுகிறது.

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட காசநோய் மருத்துவ நிலையம் உள்ளது. மாவட்டக் காச நோய் நலம்பேணும் அதிகாரி இதன் தலைவராவார். மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகள், அரசு மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திலும் காச நோய்க் கட்டுப் பாட்டுத் திட்டப் பணிகளை இவர் ஒருங்கிணைப்பதோடு, காசநோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கும் பணியையும் கவனிக்கிருர். தமிழ்நாட்டில் 937 மருத்துவ நிறுவனங்கள் மூலமாகக் காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையிலும் தமிழ்நாட்டில் 7.7 லட்சம் நோயாளிகள் காச நோய்ச் சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

உமிழும்போது சளியுடன் இரத்தமும் வருவதுபோன்ற (Haemoptysis) சிக்கலான நிலைமையில் உள்ள நோய் முற்றிய நோயாளிகளும், முதல் நிலை மருந்துகள் கொடுத்தும்

நோய்க்கட்டுப்படாத நோயாளிகளும், காசநோய் நலம் பேணும் நிலையங்களிலும் காசநோய் மருத்துவமனைகளிலும் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றனர். இவ்வாறு, நோயாளிகள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகின்ற மருத்துவ நிலையங்களில் மொத்தம் 3,534 படுக்கைகள் உள்ளன. 1977–78-ம் ஆண்டில், ஈரோட்டிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட காச நோய்த் தனி வார்டு ஒன்றும், உசிலம்பட்டியில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் 15 படுக்கைகள் கொண்ட காச நோய்த் தனி வார்டு ஒன்றும் நிறுவுவதற்கு அரசு அனுமதி வழங்கியது. மாவட்ட காச நோய் மருத்துவ நிலையங்கள் மட்டுமின்றி மார்புநோய் மருத்துவப் பிரிவுகள் (Chest Clinics T.B.) எனப்படுகின்ற காச நோயைக் கண்டறியும் சிறப்பு நிலையங்கள் பூவிருந்தவல்லி, விழுப்புரம், அருப்புக் கோட்டை, திருவண்ணாமலை, பாளையங்கோட்டை, கோயம் புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பி.சி.ஜி. ஊசி தொடக்க நிலையில் காச நோய் வராமல் தடுத்துக் காக்கின்றது. இருபது வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பி.சி.ஜி. ஊசி போடப்படுகிறது. பி.சி.ஜி. ஊசி போடும் 23 குழுக்கள் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன. இந்தக் குழுக்கள் கிராமங்களில் வீடு வீடாகச் சென்று தடுப்பு ஊசிகளைப் போடுகின்றன. இதுவரை 1,19 இலட்சம் பேருக்கு பி.சி.ஜி. ஊசி குத்தப்பட்டுள்ளது.

காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் பணி புரிவதற்காக ஊக்கத்துடன் ஈடுபாடு கொள்ள பயிற்சி மருத்துவர்கள் 25 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

1978–79-ம் ஆண்டில், கைத்தறி நெசவாளர்கள் பீடித் தொழிலாளர்கள் ஆகியோரிடையே காசநோய் ஏற்பட்டுள்ளதா எனக் கண்டறியும் பொருட்டு ஆய்வுகள் நடத்தக் கருதப்பட்டுள்ளது.

XIV. தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு மானிய உதவி.—தனிப்பட்ட மன்றங்கள், கூட்டமைப்புகள், சங்கங்கள், சமயப்பணி (மிஷினரி) மன்றங்கள் போன்றவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மருத்துவ நிறுவனங்களில் தகுதி

வாய்ந்த நிறுவனங்களுக்கு மானிய உதவி வழங்கப்படுகின்றது. இம்மாநிலத்தில் வழங்கப்படுகின்ற பலவகைப்பட்ட மானியங்கள் பின்வருமாறு :—

(i) தனியார் தொழுநோய் மருத்துவ நிறுவனங்களுக்கு தலைவீத மானியங்கள் (Capitation Grants) அளித்தல்.—தொழுநோயாளி ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 வீதமும் தொழு நோயாளியைச் சார்ந்துள்ள உடல் நலமுள்ள குழந்தை ஒவ்வொன்றுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 12 வீதமும் தனியார் தொழு நோய் மருத்துவ நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. தொற்றும் தன்மையுடைய தொழுநோயுற்ற நோயாளிகளுக்கும், தொழுநோய் குணமாகி உறுப்புகள் செவ்வையான வடிவம் பெறுவதற்காக அறுவை சிகிச்சை பெற்றுவரும் தொழு நோயாளிகளுக்கும், சூட்டினால் ஏற்படக் கூடிய புண்ணுக்கு சிகிச்சை பெறும் பொருட்டு சேர்க்கப்பட்டுள்ள தொழு நோய்த் தோற்றமுடைய ஆனால் தொழு நோய்ச் சார்பிலாத நோயாளிகளுக்கும் (non-lepromatous patients) சிகிச்சையளிக்கும் தனித் தொண்டு நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படத்தக்கதாகும். தமிழ்நாடு அரசிடமிருந்து தலை வீத மானியங்கள் பெறும் தொழு நோய் மருத்துவத் தொண்டு நிறுவனங்களின் தற்போதைய எண்ணிக்கை பதினொன்று ஆகும். சராசரியாக ஆண்டொன்றுக்கு ரூ. 5 இலட்சம் தலை வீத மானியமாக இவற்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, 1976–77-ம் ஆண்டில் ரூ. 4.78 இலட்சம் வழங்கப்பட்டது.

(ii) தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு பேணுதல் மானியங்கள்.—மருத்துவப் பணிகள்–குடும்ப நலத்துறை இயக்குநரின் பரிவுரையின் பேரில் அரசு இம்மானியங்களுக்கு அனுமதி வழங்குகிறது. தணிக்கை செய்யப்பெற்ற கணக்கு விவர அறிக்கையை அளிப்பதன் பேரிலும், இம்மானியங்கள் வழங்கப்படுவதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளதாக ஆய்வு அதிகாரிகள் அறிவித்த பின்னருமே இந்த மானியங்கள் கொடுக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசிடமிருந்து பேணுதல் மானியங்களை 38 நிறுவனங்கள் பெற்று வருகின்றன. 1976–77-ம் ஆண்டில் மானிய உதவியாக ரூ. 21.88 இலட்சம் வழங்கப்பட்டது.

(iii) கட்டிட மானியங்கள்.—மருத்துவப் பணிகளுக்கென கட்டிடங்கள் கட்டுவதற்காக, ஒவ்வொரு கட்டிட பணிக்கும் ஆகின்ற மொத்த மதிப்பீட்டுச் செலவில் பாதியளவுக்கு தனியார் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன ; ஒவ்வொரு கட்டிடத்தைப் பொறுத்தவரையில் வழங்கப்படுகின்ற இம்மானியத் தொகை, அரசு வரையறுத்த குறிப்பிட்ட உயர் அளவிற்கு உட்பட்டே இருக்கும்.

1976–77-ம் ஆண்டில் கீழ்க்காணும் நிறுவனங்களுக்குக் கட்டிட மானியங்கள் வழங்கப் பெற்றன :—

		ரூ.
1	மகளிர் குழந்தைகளுக்கான ஜி. குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனை, கோயம்புத்தூர்	4,90,355.00
2	'வாலண்டரி ஹெல்த் சர்வீசஸ்' நிறுவனம், அடையாறு, சென்னை ..	42,905.75
3	குழந்தைகள் முட நீக்கியல் நிலையம், கோயம்புத்தூர்	1,22,500.00

(iv) கருவிகளுக்கான மானியம்.—1976-77-ம் ஆண்டில், கருவிகளுக்கான மானியம் பெறுவதற்கு தனியார் மருத்துவ நிறுவனம் எதுவும் முன் வரவில்லை.

XV. அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் திட்டம்.—பார்வையிழந்து தவிக்கும் ஏழை மக்களுக்குக் கண் பார்வை அளிக்கும் பொருட்டு, அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் அமைக்கும் திட்டம் 1972-ஜூன் மாதத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயல் படுத்தும்பொருட்டு ஐந்து கண் சிகிச்சை ஊர்த்திப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. அதாவது சென்னையில் 2 பிரிவுகளும், மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 3 பிரிவுகளுமாக மொத்தம் 5 பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள மருத்துவப் பணிகள் குடும்ப நலத்துறை இயக்குநர் இந்த இலவசக் கண் சிகிச்சை முகாம்களுக்கு தலைமைப் பொறுப்பு வகிக்கின்றார். சென்னையிலுள்ள மருத்துவக் கல்வி இயக்குநர், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான உதவிகளைச் செய்கிறார். ஒவ்வொரு கண் சிகிச்சை, ஊர்த்திப் பிரிவுக்கும் ஒரு அரசு மருத்துவம் பொறுப்பு வகிக்கிறார். அவ

ருக்கு உதவி புரிய மூன்று உதவி மருத்துவர்களும் (கண் அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள்), பன்னிரண்டு செவிலியர்களும் பிற மருத்துவப் பணியாளர்களும் உள்ளனர்.

2. வருவாய்-வளர்ச்சி வட்டாரப் பணியாளர்களின் உதவியுடன் பிரிவு மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில், மாவட்ட ஆட்சியர் இலவசக் கண் சிகிச்சை முகாம்களை நடத்துகின்றனர். தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மருத்துவத்துறை இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

3. இக்கண் சிகிச்சை முகாம்களில், விழிவெண்படல அறுவைச் சிகிச்சைகளும் கண்களில் வரும் சிறிய நோய்களுக்கான சிறு அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. இவையன்றி, கண்விழி விறைப்பு நோய், கண்ணிமை அரிப்பு நோய், மாலைக்கண் நோய் ஆகியவற்றுக்கும் இம் முகாம்களில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

4. இந்த முகாம்களில் விழிவெண்படல அறுவை சிகிச்சை பெறும் ஒவ்வொரு நோயாளிக்கும் உணவு முதலியவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பில் ரூ. 44-ம் மருந்துகள் முதலியவற்றை வழங்குவதற்காக மருத்துவத் துறை பொறுப்பில் ரூ. 21 ஆக ரூ. 65 செலவு செய்ய அரசு அனுமதி வழங்குகிறது. அரசு இலவசக் கண் சிகிச்சை முகாமில் நடத்தப்படும் ஒவ்வொரு விழிவெண்படல அறுவைச் சிகிச்சைக்கும், 5 புற நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இக்கண் சிகிச்சை முகாமில் ஒரு புற நோயாளிக்கு சிகிச்சை அளிக்க ஆகும் செலவிற்காக ஐம்பது பைசாவுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

5. கண் சிகிச்சை முகாம் நிதி 1972-ம் ஆண்டு ஜூன் மாதம் சிறப்பாக துவக்கப்பட்டு, இத்திட்டத்திற்காகப் பயன்படுத்தபட்டு வந்தது. இந்த நிதி, 1976-ம் ஆண்டு சிறப்பு நலத் திட்டங்களுக்கான முதலமைச்சர் நிதியுடன் இணைக்கப்பட்டது.

6. அரசு இலவசக் கண்சிகிச்சை முகாம் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்துவதற்காக தற்போதுள்ள திட்டத்தில் பின்வரும் மேம்பாடுகளைச் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

(1) கண்சிகிச்சை முகாமிற்கு சிகிச்சைகாக வரும் நபர்களின் எண்ணிக்கைக்கேற்ப கண் சிகிச்சை முகாமினை ஏழு முதல் பத்து நாட்கள் வரை நடத்துவது ;

(2) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பயனளிக்கும் வகையில் ஆண்டு முழுவதும் கண் சிகிச்சை முகாமினை நடத்துவது ;

(3) ஒரு கண் சிகிச்சை முகாமில் செய்யப்படும் விழி வெண்படல அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 300-க்கு மேற்படாமலும், ஒரு நாளைக்கு செய்யப்படும் விழி வெண் படல அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 150-க்கு மேற் படாமலும் இருக்க வேண்டும். ஒரு மருத்துவரால் செய்யப் படும் விழிவெண்படல அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 30-க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

(4) விழி வெண்படல அறுவைச் சிகிச்சை செய்துக் கொண்ட அனைவருக்கும் தையல் போட வேண்டும்.

(5) விழிவெண்படல அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் மதிப்புடைய நோய்தடுப்பு களிம்பு மருந்தைக் கொடுத்து அதை எப்படி பயன்படுத்துவது என்ற முறையையும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

(6) அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள், வரையறுக்கப்பட்ட தேவையான மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொள்வதற்காக ஆறு வாரங்களுக்குப் பிறகு கண் அறுவை சிகிச்சை மருத்துவரால் பரிசோதிக்கப்படுவர்.

(7) தரமான மூக்குக் கண்ணாடிகளை புகழ் பெற்ற நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த முறையில் வாங்கும் பணியை சென்னை கண் மருத்துவமனையின் கண்காணிப்பாளர் மேற் கொள்வார். விழிவெண்படல அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகளுக்குக் கண்ணாடி வழங்குவதற்காக அவைகளை இவர் பிரிவு மருத்துவ அதிகாரிக்கு அனுப்புவார்.

1972-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31ஆம் நாள் வரை அடைந்துள்ள சாதனையின் விவரம் வருமாறு :—

முகாம்களின் எண்ணிக்கை.	விழிவெண்படல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை.	மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டவர்கள் எண்ணிக்கை.	மறு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டவர்கள்.	புறநோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை.	செலவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
					(ரூபாய்.)
451	1,52,960	1,52,960	1,279	10,14,789	1,45,39,048

அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் திட்டத்தை 1978—79-ம் ஆண்டிலும் செயல்படுத்த ரூபாய் இருபது இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

XVI. ஹோமியோபதி :

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவ முறை-ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டம் இம்மாநிலத்தில் 1972-ம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது. ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒன்று சென்னை மாநகரத்தில் 1975-ம் வருடம் செப்டம்பர் திங்கள் 15-ம் நாளிலிருந்து செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில், ஹோமியோபதி மருத்துவ முறையிலான முதல் அரசினர் கல்லூரி மருத்துவமனை இதுவேயாகும். தற்போது இங்கு பல்வேறு வகுப்புகளில் 123 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

1977-78-ம் ஆண்டில், அரசு திண்டுக்கல்லில் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையுடன் இணைந்த ஹோமியோபதி மருந்தகம் ஒன்றை ஆரம்பித்துள்ளது ; அது 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ஆம் நாள் முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது.

1978–79-ம் ஆண்டிற்கான திட்டம் :

1978–79 ஆம் ஆண்டில் மேலும் ஒரு ஹோமியோபதி மருந்தகத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

XVII. குடும்பநலத் திட்டம் :

குடும்ப நலத் திட்டம் முன்பு எப்போதும் இருந்ததை விட இன்று தனி முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இந்நாட்டில் மக்கள் தொகை அளவு கடந்து பெருகி வருவதைக் கட்டுப்படுத்த மத்திய அரசும், மாநில அரசும் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்து வருகின்றன. பொருளாதார சுதந்திரமும், சமூக மறுமலர்ச்சியும் அடையும் வகையில் முன்னேற்றம் காண விழையும் நமது முயற்சிகளுக்கு இன்றியமையாச் சாதனமாக விளங்கக் கூடியது மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதேயாகும் என்று நமது குடியரசுத் தலைவரும், தலைமையமைச்சரும், மத்திய அரசு மக்கள் நல்வாழ்வு குடும்பநல அமைச்சரும் தத்தம் அறிக்கைகளில் பெரிதும் வற்புறுத்திக் கூறியுள்ளனர்.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தியஅரசு தேசிய மக்கள் தொகைக் கொள்கையை உருவாக்கியுள்ளது. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாளில் நடைபெற்ற அனைத்து மாநிலங்கள், மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளின் மக்கள் நல்வாழ்வு அமைச்சர்கள் மாநாட்டில், மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வு குடும்ப நல அமைச்சர் கொள்கை அறிக்கையை வெளியிட்டார். அண்மையில் 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29 ஆம் நாளில் நடைபெற்ற மக்கள் நல்வாழ்வு குடும்ப நலக் கூட்டுக் குழுக்கள் மாநாட்டிலும் கூட இக்கொள்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. நமது நாட்டில் தற்போதைய பிறப்பு விகிதம் 1,000-க்கு 30 எனவுள்ளது ; இதனை, ஆறுவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் 1,000-க்கு 25 ஆகக் குறைக்க வேண்டும் என்பதே இக்கொள்கை அறிக்கையின் உத்தேசமாகும். இக் குறிக்கோளை எய்துவதற்காக திருமண வயதை உயர்த்துதல், பெண் கல்வி மேம்பாட்டின் மூலம் மக்கள் தொகையில் படித்த பெண்களின் விகிதத்தை உயர்த்துதல் போன்ற சில அடிப்படை நடவடிக்கைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. இக்கொள்கை அறிவிப்பில் இன்றியமையாப் பகுதியாக விளங்குவது, மக்களிடையே, தொழிலாளர் தலைவர்கள், தொழிலதிபர்கள், தனித் தொண்டு நிறுவனங்கள் போன்ற பல் வேறு பிரிவினரையும் ஈடுபடுத்துவதன் மூலம் குடும்ப நலத் திட்டத்தை மும்முரப்படுத்துவதாகும்.

தமிழ்நாட்டில், முந்திய ஆண்டுகளில், குடும்பநல அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்று மக்களைக் கட்டாயப் படுத்தாமலும், நிர்ப்பந்தப்படுத்தாமலும் நடந்தது போல இந்த ஆண்டிலும் எவ்வித நிர்ப்பந்தமோ, கட்டாயமோ இன்றி குடும்பநலத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. அரசுப் பணியாளர்களாக உள்ள பெண்களுக்கு முதல் மூன்று குழந்தைகட்கு மட்டுமே சம்பளத்துடன் பேறுகால விடுப்பு வழங்கப்படும் எனக் கட்டுப்படுத்தியது போல, முன்னர் பிறப்பிக்கப் பட்டிருந்த ஊக்க மறுப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் இவ்வரசு ரத்து செய்துள்ளது.

குடும்ப நலத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் அவரவர் விருப்பத்தின்படி நடக்க உரிமையளிக்கின்ற அணுகுமுறை (Cafeteria approach) பின்பற்றப்படுகிறது. தம்பதிகள் இத் திட்டத்தைப் பின்பற்றத் தாம் விரும்பும் முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மக்கள் தாமாகவே திட்டத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. கிராமப் பகுதிகளில் நாடகம், கதாகாலட்சேபம், இசையரங்குகள் நடத்துதல் ஆகியவற்றின் மூலம் நாட்டுப்புற மக்களைக் கவறுகின்ற நிகழ்ச்சிகள் வாயிலாக குடும்ப நலத்திட்டம் பற்றி மக்கட்கு எடுத்துரைக்கப்படுகிறது ; பிரச்சாரம் செய்யப் படுகிறது. சிறுபான்மையாயுள்ள பிற சமயத்தவரும் எவ்வித நிபந்தனையுமின்றி குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருப்பதுதான் தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் சிறப்பான அம்சமாகும். இவர்களில் மிகப்பெரும் எண்ணிக்கையினர் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு தாமாகவே மனம் ஒப்பிக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள முன் வந்துள்ளனர். கிராமப் பகுதிகளில் குடும்பநலத் திட்டத்தின் இன்றியமையாக நோக்கங்களை மக்களுக்கு அறிவுறுத்தும் பணியைச் செய்கின்ற முக்கிய நிலையங்களாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாமாக மனம் ஒப்பி வருவோருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்தல், பெண்களுக்குக் கருத்தடை வளையம்பொருத்துதல், தாய்-சேய் நலப்பணிகள் ஆகிய பணிகளைச் செய்கின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 10,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை நிலையம் வீதம் துணை நிலையங்கள் உள்ளன. அத்துணை நிலையங்களின் பணிகளை துணைச் செவிலி மகப்பேறு பணியாளர் கவனிக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் பகுதியில் தாய்-சேய் நலப் பணி, குடும்ப நலப்பணி ஆகியவற்றைக் கவனிக்கின்றனர்.

நகரப் பகுதிகளில், குடும்பநலப் பணிகளையும் தாய்-சேய் நலப் பணிகளையும் அங்குள்ள நகர்ப்பகுதி குடும்பநல நிலையங்கள் கவனிக்கின்றன. இவை, அரசாலும் உள்ளாட்சி மன்றங்களாலும் தனியார் தொண்டு நிறுவனங்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

1977–78 ஆம் ஆண்டிற்கான குடும்பநலத் திட்ட உதவி ஏற்பாட்டின்கீழ் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு உடன்படுபவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய ரொக்க உதவித் தொகையும், உணவுச் செலவு, போக்குவரத்துச் செலவு ஆகியவற்றையையும் இந்திய அரசு குறிப்பிட்டுள்ளது. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிற ஒவ்வொரு ஆணுக்கும் ரூ. 100-ம், ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ. 120-ம் ரொக்க உதவித் தொகை வழங்கப்படும் வகையில் இந்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு அரசு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொரு ஆணுக்கும் ரூ. 115-ம், ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ. 145-ம் ரொக்க உதவித் தொகை வழங்கப்படுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் ஆண்டுதோறும் குடும்பநலத் திட்டம் குறித்த சிறப்பு இயக்கங்கள் நடத்தப்படுவது வழக்கம். 1977–78-லும் இதுபோன்ற சிறப்பு இயக்கங்களை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவைச் சிகிச்சைச் செய்து கொள்ளுதல், கருத்தடை வளையம் பொருத்துதல் மரபு முறையிலான கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துதல் .—

மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளுதல், கருத்தடை வளையம் பொருத்துதல் மரபுமுறையிலான கருத்தடை மருந்துகளை பயன்படுத்துதல் ஆகிய [illegible]கீழ்க்காணும் இலக்குகளை 1977–78 ஆம் ஆண்டில் எய்த வேண்டுமென இந்திய அரசு வரையறுத்துள்ளது :—

	இம்மாநிலத்துக்கு வரையறுக்கப்பட்ட இலக்கு.	எய்திய இலக்கு. (20–2–78 வரை.)
மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளுதல்	3,50,000	69,357
கருத்தடை வளையம் பொருத்துதல்	35,500	18,040
மரபு முறையிலான கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துதல்	2,21,800	1,00,749

ஊக்க உதவித் தொகைகள் வழங்குதல் முதலியன குறித்த இந்திய அரசின் ஆணை மிகவும் காலதாமதமாகவே வந்து சேர்ந்தபடியால், குடும்பநலத்திட்ட இயக்கம் 1977 அக்டோபருக்குப் பின்னரே முனைப்பாக நடத்தப்பட முடிந்தது. இந்தச் சூழல்களில் மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்வது குறித்த இலக்கினை இவ்வாண்டில் எய்த வியலாது. எனினும், இது தேசிய அளவில் உள்ள நிலைமையாகும். இருந்த போதிலும் இன்றைய நிலவரப்படி, இந்த நிதியாண்டு இறுதிக்குள், மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்காகக் குறித்துள்ள இலக்கில் தமிழ் நாடுதான் முதலிடம் வகிக்கும் எனத் தெரிகிறது.

தாய்-சேய் நலத் திட்டங்கள் :

இதற்கு முந்திய ஆண்டுகளிலெல்லாம், தாய்-சேய் நலத் திட்டப் பணிகளில் பெரும்பான்மையானவை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் நடைபெற்று வந்தன. அவற்றை அங்கு பணிபுரிந்து வந்த மருத்துவ அதிகாரிகள் உடல் நலப் பார்வையாளர்கள், துணைச் செவிலி மகப்பேறு பணியாளர் ஆகியோர் கவனித்து வந்தனர். 1977–78ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பெரும் பகுதியான தடுப்பூசி மருந்துகள், மாவட்ட சுகாதார அதிகாரிகள் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மாவட்டச் சுகாதார அதிகாரிகள் மூலம் வழங்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், இத்திட்டம் செயல்படும் முறை பற்றி சிறிது காலம் தொடர்ந்து கவனித்து வந்த பின்னர், முன்பு இருந்தது போலவே, இத் திட்டங்களுக்குப் பொறுப்பு வகிப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அதிகாரியை நியமிப்பதென முடிவு செய்யப்பட்டது. அவர் மாவட்டக் குடும்ப நல தாய்-சேய் நல அதிகாரி ஆவார். எனவே, இத்துறையில் ஏற்கெனவே பணி புரிந்து வருகின்ற உடல் நலப் பார்வையாளர்கள், துணைச் செவிலி மகப்பேறு பணியாளர் தவிர, உடல் நல ஆய்வாளர்கள், அம்மைப் பால் குத்துபவர்கள் போன்ற தகுதி வாய்ந்த பணியாளர்கள் அனைவரையும் பயன்படுத்தி தாய்-சேய் நலத் திட்டப் பணியை விரிவுபடுத்துவதற்கான சிறப்பு இயக்கங்களை நடத்துமாறு மாவட்டக் குடும்ப நல தாய்-சேய் நல அதிகாரிகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வகை நலப் பணியின் கீழும் 1978ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் நாள் வரை பயன் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கையினைக் கீழ்க் குறித்த விவர அறிக்கை காட்டும் :—

<u>முத்தடுப்பு ஊசி குத்தப்பட்டவர்கள் :</u>

(தொண்டை அடைப்பான், நரம்பிசிவு நோய், கக்குவான் நோய்— D. P. T.).

பிரைமரி (Primary)	2,82,295
பூஸ்டர் (Booster)	52,006
தொண்டை அடைப்பான், நரம்பிசிவு நோய்த் தடுப்பூசி குத்தப் பெற்றவர்கள் (D.T.) பள்ளிச்சிறுர்கள்	3,50,579
நரம்பிசிவு நோய்த் தடுப்பூசி (T.T.) கருவுற்றிருக்கும் பெண்கள்	1,73,446

<u>தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்துணவின்மையால் ஏற்படும் ரத்த சோகையைத் தடுப்பதற்கான மருந்து.</u>

(இரும்புச் சத்து நிறைந்த மாத்திரைகள்.)

தாய்மார்கள்	2,62,944
குழந்தைகள்	2.63,894

<u>வைட்டமின் 'ஏ' குறைவினல் குழந்தைகளுக்குக் கண் குருடாவதைத் தடுப்பதற்கான மருந்து.</u>

(வைட்டமின் 'ஏ' திரவம்.)

குழந்தைகள் முதலாவது அளவு (Dose) ..	6,21,636
இரண்டாம் அளவு (Dose)	2,53,187

<u>மகப்பேற்றுக்கு பின்னர் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சை (Post Partum Programme).</u>

1969–70ஆம் ஆண்டில், மகப்பேற்றுக்குப் பின்னர் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தின் முதல் கட்டத்தில் தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகள் மூன்று மத்திய அரசினல் தேர்ந்தெடுக்கப்பட்டன. 1971–72ஆம் ஆண்டில், திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் போது இந்தத் திட்டம் தமிழ் நாட்டில் மேலும் 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கும் (தனித் தொண்டு நிறுவனமாக) வேலூரிலுள்ள கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் ஒரு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைக்கும் நீட்டிக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து, இது மேலும் 12 தலைமையிட மருத்துவமனைகளுக்கும் (அதாவது புதிதாக அமைக்கப் பெற்ற புதுக்கோட்டை மாவட்டத்துக்குரிய தலைமையிட மருத்துவமனை நீங்கலாக மற்றவை.) மேலும் ஒரு தனித் தொண்டு நிறுவனத்திற்கும் அதாவது

சென்னையிலுள்ள ஆந்திர மகிள சபாவிற்கும், நீட்டிக்கப்பட்டது. தற்போது, மகப்பேற்றுக்குப் பின்னர் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை 24 நிறுவனங்கள் செயற்படுத்தி வருகின்றன.

<u>பிரிட்டிஷ் உதவித் திட்டம் :</u>

1976–77-ல் இத்திட்டத்தின்கீழ் 6 வட்ட மருத்துவமனைகளும், 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களும் தெரிந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இருக்கின்ற மகப்பேறு அறையைப் புதுப்பித்து அதனை அறுவை சிகிச்சைக் கூடமாக மாற்றி அமைத்தல் பொருட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 10,000 வரை நிதியுதவியளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் அறுவை சிகிச்சைச் சாதனங்கள் வாங்குவதற்காக அவற்றிற்கு ரூ. 10,000 அளிக்கப்பட்டுள்ளது. வட்ட நிலையிலான ஆறு மருத்துவமனைகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 33,000 செலவில் 6 படுக்கைகள் கொண்ட அறுவைச் சிகிச்சைக்கான வார்டு ஒன்றும், சாதனங்களுக்காகவும், படுக்கைகளுக்காகவும், 12,000 ரூபாயும் அனுமதி வழங்கப்பட்டது. இந்த மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக் கூடம் கட்டுவதற்காக 50,000 ரூபாயும், அறுவைச் சிகிச்சைக் கருவிகளுக்காக 10,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய வட்ட நிலையிலான ஆறு மருத்துவமனைகளில் 6 படுக்கைகள் கொண்ட வார்டுகளும், அறுவை சிகிச்சை கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்கெனவே இருந்த மகப்பேறு அறையை அறுவை சிகிச்சைக் கூடமாக மாற்றும் பணியும் முடிவடைந்துள்ளது. இந்த மருத்துவ நிலையங்களுக்கான அறுவைச் சிகிச்சை சாதனங்களும் வாங்கப்பட்டுள்ளன. 1977–78-ல் வட்ட நிலையிலான 9 மருத்துவமனைகளிலும், 12 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்கான வசதிகளை செய்து கொடுக்க இந்திய அரசு அனுமதியளித்துள்ளது. இந்த 12 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், வட்ட நிலையிலான 9 மருத்துவ மனைகளுக்கும் அறுவைச் சிகிச்சைக் கருவிகளை வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கட்டிடங்களும் கூடிய விரைவில் கட்டி முடிக்கப்படும்.

<u>குடும்ப நலத் திட்டப் பிரச்சாரம் :</u>

குடும்ப நலத் திட்டம் பற்றிய விளம்பரங்கள், பெரும் பலகைகள், சுவர்ச் சித்திரங்கள், நாடகங்கள், பாடல்கள் வில்லுப்பாட்டு, கருத்தடை சாதனங்களை விளம்பரப்படுத்தும் உலோகத் தகடுகள், பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் வைத்திருத்தல், திரைப் படங்கள், அகில இந்திய வானொலியில் ஒலி பரப்புதல், செய்தித் தாள்களிலும், வார மாதப் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள், பொருட்காட்சிகள் திரைப்படக்

கொட்டகைகளில் சிலேடுகள் போட்டுக் காட்டுதல் முதலியவை வாயிலாக குடும்ப நலத் திட்டம் பற்றி விளம்பரப்படுத்தப் படுகின்றன.

மானிய உதவி :

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கு நகர்ப் பகுதி குடும்ப நல நிலையங்கள், துணைச் செவிலியர் மகப்பேறு பணியாளர் பயிற்சி நிலையங்கள், மகப்பேறுக்குப் பின் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யும் நிலையங்கள் ஆகியவற்றை நடத்துவதற்காக அரசு மானிய உதவி அளிக்கிறது. இந்த மானியங்கள் இந்திய அரசு நிர்ணயித்துள்ள முறையில் வழங்கப் படுகின்றன. தற்போது 13 தொண்டு நிறுவனங்களும், 19 உள்ளாட்சி மன்றங்களும் இந்த மானிய உதவி பெறுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு மானிய உதவி அளிக் கப்பட்டது :—

ஆண்டு.	மானியந் தொகை (ரூபாய் இலட்சத்தில்.)
1974—75	20.31
1975—76	18.42
1976—77	45.94

1978—79 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு :

1978—79 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப் பீட்டில் 999.45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் ஏற்படக்கூடிய செலவினங்களுக்காக இந்த நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. இதில் இந்திய அரசின் பங்கு ரூ. 924.30 இலட்ச மாகும். மீதமுள்ள 75·15 இலட்சத்தை தமிழக அரசு ஏற்கும். இருந்தபோதிலும், 1978—79 ஆம் ஆண்டிற்கு இந்திய அரசு உதவித் தொகை அளிக்கும் முறையில் மாறுதல் ஏதும் இருந்தால் செலவினங்களில் மாற்றம் செய்ய வேண்டிவரும்.

இந்திய மருத்துவமுறை :

1. கொள்கை—

இந்திய மருத்துவ முறையை, குறிப்பாக தமிழ்நாட்டின் நாட்டு மருத்துவ முறையான சித்த மருத்துவ முறையை ஊக்கு வித்து வளர்ப்பதற்கும், ஆயுர்வேத யுனானி மருத்துவ முறைகளை வளர்ச்சியடையச் செய்வதற்கான வாய்ப்புகளுக்கு வகை செய்யவும் அரசு கடமைப்பட்டுள்ளது.

2. மருத்துவ நிவாரணம் :

(1) அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னை.
இந்திய முறை மருத்துவத்திற்கென தனியாக ஒரு மருத்துவமனை அமைப்பதற்கு 1968 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப் பட்டு, அது 1970-ல் அரும்பாக்கத்தில் அமைக்கப்பட்டது. கீழ்ப் பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்த இந்தியமுறை மருத்துவப் பிரிவு அங்கிருந்து மாற்றப்பட்டு, அரும்பாக்கத்தில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தில் அமைக்கப்பட்டது. இந்த மருத்துவ மனைக்கு " அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனை " என்று பெயரிடப்பட்டது. இம் மருத்துவமனை 100 படுக்கை வசதிகளுடன் 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. ஒரே வளாகத்திற்குள் சித்த, ஆயுர்வேத யுனானி மருத்துவ முறைகளில் புறநிலை நோயாளி களுக்கும், அக நிலை நோயாளிகளுக்கும் மருத்துவச் சிகிச்சை வசதிகளை நல்கும் சிறப்புத் தன்மையை இந்த மருத்துவமனை கொண்டுள்ளது. இந்த மருத்துவ மனையில் புதிதாகக் கட்டப்பட்ட வார்டில் மேலும் 50 படுக்கைகள் 1976—77 ஆம் ஆண்டில் சேர்க் கப்பட்டன.

அரசு பணியாளர்களுக்கு மேற்சொன்ன மூன்று மருத்துவ முறைகளின் கீழ் புற நிலை நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்க இம் மருத்துவமனையில் தனியாக ஓர் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 2 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது.

சித்த மருத்துவ முறையின் கீழ் புற நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள், சென்னை மாநகரில் பின்வரும் இடங் களிலுள்ள அரசினர் மருந்தகங்களில் செய்து கொடுக்கப் பட்டுள்ளன. அம்மருந்தகங்களாவன :—

(i) அரசினர் மருந்தகம், தலைமைச் செயலகம்.

(ii) அரசினர் மருந்தகம், சேப்பாக்கம் அலுவலக வளைவு.

(iii) அரசினர் மருந்தகம், சைதாப்பேட்டை.

(iv) அரசினர் மருந்தகம், திருவல்லிக்கேணி.

இந்த மருந்தகங்கள் சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையோடு இணைக்கப்பட்டுள்ளன.

(2) பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியோடு இணைந்துள்ள மருத்துவ மனை.—பாளையங்கோட்டை யிலுள்ள அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியோடு, மருத்துவமனை ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது 108 படுக்கைகள் கொண்டது. இங்கு சித்த மருத்துவ முறையின் கீழ் சிகிச்சை

அளிக்கப்படுகிறது. இந்த மருத்துவமனையில் மேலும் 100 படுக்கைகளை அமைக்க ரூபாய் 5·95 இலட்சத்தில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு, அது 1977 செப்டம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

ரூபாய் 1.80 இலட்சம் செலவில் 1976, அக்டோபரில் ஒப்பளிக்கப்பட்ட புதிய புற நிலை நோயாளிகள் பகுதி ஒன்று 1977 டிசம்பரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

(3) சித்த மருத்துவப் பிரிவுகள் :

14 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் 49 வட்ட மருத்துவமனைகளிலும் வட்ட நிலையில் அல்லாத பிற மருத்துவமனைகளிலும் தற்போது 63 சித்த மருத்துவப் பிரிவுகள் உள்ளன. இதில் 1977–78-ல் தொடங்கப்பட்ட 4 சித்த மருத்துவப் பிரிவுகளும் அடங்கும், அவை கீழ்க்காணும் வட்ட, வட்ட நிலையில் அல்லாத மருத்துவமனைகளில் உள்ளது :—

(i) அரசினர் மருத்துவமனை, திருப்பத்தூர். வடஆற்காடு மாவட்டம்.

(ii) அரசினர் மருத்துவமனை, மேலூர், மதுரை மாவட்டம்.

(iii) அரசினர் மருத்துவமனை, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம்.

(iv) அரசினர் பாப்பாயி ஆச்சி மருத்துவமனை, வலயப்பட்டி புதுக்கோட்டை மாவட்டம்.

1978–79 ஆம் ஆண்டில் மேலும் 10 சித்த மருத்துவப் பிரிவுகளைத் தொடங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(4) இந்திய மருத்துவ முறை மருந்தகங்கள் :

இம் மாநிலத்தில் இந்திய மருத்துவ முறையில் 13 அரசினர் மருந்தகங்கள் செயல்படுகின்றன. அவை வருமாறு :—

சென்னை மாநகரம்	சித்த மருத்துவ முறை	4
மாவட்டங்கள் ..	சித்த மருத்துவ முறை ..	4
மாவட்டங்கள் ..	ஆயுர்வேத மருத்துவ முறை ..	5

(5) முறையான கிராமப்புற மருந்தகங்கள் :

மேற் சொன்னவற்றைத் தவிர. முறையான கிராமப்புற இதிய மருத்துவ முறை மருந்தகங்கள், நகராட்சிகளாலும் ஊராட்சி ஒன்றியங்களாலும் நடத்தப்படுகின்றன. கிராமப்புற

மருந்தகங்கள் பரம்பரை நாட்டு வைத்தியர்களால் அல்லது மரபு வழியில் பயிற்சி பெற்ற மருத்துவர்களால் பெரும்பாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. முறையான மருந்தகங்கள் இந்திய மருத்துவப் பட்டதாரிகளாலும், பட்டயதாரர்களாலும் நடத்தப்படுகின்றன.

1977–78 ஆம் ஆண்டில் ஆறு கிராம மருந்தகங்கள் கீழ்க்காணும் கிராமங்களில் தொடங்கப்பட்டன :—

(i) கிராம சித்த மருத்துவ மருந்தகம், டி. புதுப்பாளையம், தென் ஆற்காடு மாவட்டம்.

(ii) கிராம சித்த மருத்துவ மருந்தகம், பெர்மந்தூர், தென் ஆற்காடு மாவட்டம்.

(iii) கிரர்ம சித்த மருத்துவ மருந்தகம், கள்ளிப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

(iv) கிராம சித்த மருத்துவ மருந்தகம், சிற்றுவு, மதுரை மாவட்டம்.

(v) கிராம சித்த மருத்துவ மருந்தகம், போண்டி நாயக்கன்பட்டி, சேலம் மாவட்டம்.

(vi) கிராம ஆயுர்வேத மருந்தகம், கீரநத்தம், கோயம்புத்தூர் மாவட்டம்.

3. இந்திய மருத்துவ முறை மருந்துக் கூடங்கள் :

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையுள் மருந்துக் கூடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது மூன்று இந்திய மருத்துவ முறைகளிலும் சிகிச்சை அளிக்கும் 150 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையின் தேவைகளையும், சென்னை மாநகரிலுள்ள சித்த மருந்தகங்களின் தேவைகளையும் நிறைவு செய்து வருகிறது. இந்த மருத்துவக் கூடத்தில் உற்பத்தியாகும் மருந்துகளின் மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 5 இலட்சம் ஆகும். இம் மருந்துக் கூடத்தில் இயந்திரங்களை நிறுவுவதற்கான இவ்வரசின் செயற் குறிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையிலுள்ளது.

பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய மருத்துவ முறை கல்லூரி மருத்துவமனையுடன் மருந்துக் கூடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இந்த மருந்துக்கூடம் மருத்துவ மனைக்குச் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், பாளையங்கோட்டை, இந்திய மருத்துவ முறை

அரசினர் கல்லூரி மாணவர்கள் மருந்துகளைத் தயாரிப்பதில் நடைமுறைப் பயிற்சியை மேற்கொள்வதற்குத் தேவையான பயிற்சி வசதிகளை வழங்குவதற்கும், சித்த முறையில் மருந்துக்களைத் தயாரிக்கின்றது. இந்த மருந்துக் கூடத்திற்காக ரூ. 3.80 இலட்சம் செலவில் ஒரு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அக்கட்டிடம் 1977 நவம்பரில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

4. மூலிகைச் செடிப் பண்ணைகள் :

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையோடும் இந்திய முறை அரசு மருத்துவக் கல்லூரியோடும் இணைக்கப்பட்ட மூலிகைச் செடிப் பண்ணைகள், இந்திய முறை மருந்துப் பொருள்களைத் தயாரிப்பதற்காகச் சம்பந்தப்பட்ட மருந்துக் கூடங்களுக்கு மூலிகைகளையும், மருந்துச் செடிகளையும் தொடர்ந்து அளித்து வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தின் வீரப்புலிகாப்புக் காட்டில் உள்ள மூலிகை செடிப் பண்ணை.

1977–78-ல் ரூபாய் ஒரு லட்சம் செலவில் தொழிலாளர் குடியிருப்புகளைக் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஜீப் வழங்குதல், அணுகு சாலைகளை அமைத்தல் தொடர்பான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

5. மருத்துவக் கல்வி :

மதுரைப் பல்கலைக் கழகத்தின் இந்திய மருத்துவ முறைப் படிப்பியலில் பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவ முறையில் பட்டப் படிப்புப் பாட முறை நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஆண்டொன்றுக்கு 40 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். (அவர்களில் பயிற்சி உதவித் தொகை பெறுபவர்கள் 30 பேர் ஆவர். பயிற்சி உதவித் தொகை பெறாதவர்கள் 10 பேர் ஆவர்). புதுடெல்லி, இந்திய மருத்துவ மத்திய மன்றத்தினால் ஏற்பளிக்கப் பட்டு " பி.எஸ்.எம். அண்டு எஸ். " பட்டம் பெறுவதற்கு வழி கோலும் பாடத் திட்டம் 1977–78 கல்வியாண்டிலிருந்து செயல் படுத்தப்பட்டுள்ளது. புதிய பாடத் திட்டத்தைக் கொண்டு வருவது தொடர்பாக தேவைப்படுபவற்றை நிறைவு செய்ய கல்லூரியில் உள்ள பல்வேறு துறைகள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன கல்லூரியில் திறமையான கல்வி கற்பிக்கும் வசதிகளை அளிக்கும் பொருட்டு 1978–79-ல் ரூ. 3.40 இலட்சம் செலவில், எல்லா வகையிலும் நிறைவு பெற்ற உடற் கூற்றியல் தொகுதி (Anatomy Block) ஒன்றைக் கட்டக் கருதப் பட்டுள்ளது.

இக்கல்லூரியில் பி.எஸ்.எம். அண்டு எஸ். பாடமுறையில் (சித்த மருத்துவம், அறுவைச் சிகிச்சை பட்டப்படிப்பு) உள்ள 40 இடங்களில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக 4 இடங்களை பரிமாற்ற ஏற்பாட்டு அடிப்படையில் அரசு ஒதுக்கியுள்ளது. அதேபோல, கேரளாவில் உள்ள அரசு ஆயுர்வேத கல்லூரிகள் இரண்டில் உள்ள பி.ஏ.எம். அண்டு எஸ். வகுப்பில் (ஆயுர்வேத மருத்துவம், அறுவைச் சிகிச்சை) தமிழ் நாட்டைச் சேர்ந்த 4 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவும் கேரள அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இந்த ஏற்பாடு 1977–78 கல்வியாண்டிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை, அரசினர் இந்திய மருத்துவமுறை, மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவம் (மருந்து), சித்த குணபாடம் ஆகிய இரண்டு பட்ட மேற்படிப்பு பயிற்சி வகுப்புகள் இந்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது. இவ்வகுப்பில் 20 மாணவர்கள் (மருத்துவத்திற்கு 10 மாணவர்களும் குணபாடத்திற்கு 10 மாணவர்களும்) ஆண்டுதோறும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 200 படிப்புதவித் தொகை கொடுக்கப்படுகிறது. இதுவரை 5 தொகுதிகளில் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 16 மாணவர்கள் பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்றுள்ளனர்.

மருந்து தயாரிப்பு முறையில் பட்டயப் படிப்பு.

ஆயுர்வேத, சித்த, யுனானி முறைகளில் மருந்து தயாரிப்பதில் இரண்டாண்டு பட்டயப் படிப்பு சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் 1974–75 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் சித்த முறையில் மட்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1977–78 ஆம் ஆண்டில் மேற்கூறிய வகுப்பில் 21 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு 50 ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

6. இந்திய மருத்துவ முறைகளில் ஆராய்ச்சி.

புதுடில்லியிலுள்ள இந்திய மருத்துவமுறை ஓமியோபதி ஆராய்ச்சிக்கான மத்தியக் குழுவின் ஆதரவுடன் சென்னை மா நகரில் கீழ்க்கண்ட ஆராய்ச்சிப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆராய்ச்சிப் பிரிவுகளுக்கு மாநில அரசு இட வசதியும், படுக்கை வசதிகளும் கொடுத்துள்ளது. ஆராய்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடைய ஏனைய செலவுகள் அனைத்தையும், புதுடில்லியிலுள்ள இந்திய மருத்துவ முறை ஓமியோபதி ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு ஏற்கிறது :—

(i) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் ஆயுர்வேத, சித்த, யுனானி ஆகிய மருத்துவ முறைகளில் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவுகள்.

(ii) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிலையம் (சித்தமுறை).

(iii) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் உள்ள கேப்டன் சீனிவாச மூர்த்தி ஆராய்ச்சி நிலையம்.

(iv) புது டில்லியிலுள்ள இந்திய மருத்துவமுறை ஓமியோபதி ஆராய்ச்சிக்கான மத்திய குழுவின்கீழ் உள்ள மூலிகைச் செடிப் பிரிவு (சித்த முறை) குறித்த ஆய்வு, சித்த மருத்துவ நூல்கள் ஆராய்ச்சிப் பிரிவு (சித்த முறை) குறித்த ஆய்வு ஆகிய இரண்டு ஆராய்ச்சிப் பிரிவுகள், பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய மருத்துவ முறை மருத்துவக் கல்லூரியில் செயல்பட்டு வருகின்றன.

சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவ மனையில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிலைய (சித்த முறை) பிரிவுப் பணிகளுக்காக 2,19,500 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 30 கூடுதல் படுக்கைகளைப் போடுவதற்கு இடவசதி அளிக்கக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கு 1977–78 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

7. சித்த மருத்துவ முறை அறிவியல் மேம்பாட்டுக் குழு.

சித்த மருத்துவமுறை அறிவியல் மேம்பாட்டுக்குழு, 1973 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அமைக்கப்பட்டது. பனை ஓலைச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், அச்சிடப்பெற்ற அரிய நூல்கள் ஆகியவற்றைக் திரட்டுதல், பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படும் பி.ஐ.எம். (B.I.M.) பட்டப்படிப்பு, எம்.டி. (சித்த மருத்துவ முறை) பட்ட மேற்படிப்பு ஆகியவற்றுக்காகவும், சித்த வைத்திய பாட நூல்களை அச்சிட்டு வெளியிடுதல் ஆகியவை இக் குழுவின் பொறுப்பாகும்,

இக்குழு தொடங்கப்பட்ட நாள் முதல் அது ஆற்றிய குறிப்பிடத்தக்க பணிகளாவன :—

அரிய நூல்களைத் திரட்டுதல்—

(i) அச்சிடப்பெற்ற அரிய நூல்கள்	..	561
(ii) பனை ஓலைச் சுவடிகள்	.. .. ..	360
(iii) கையேட்டுப் பிரதிகள்	.. ..	84

அச்சிடப்பெற்ற அரிய 561 நூல்களில், அச்சிடுவதற்காக, முதற்கண் 84 நூல்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. சுமார் 40 நூல்களின் படிகள் எடுக்கப்பட்டு அவற்றிலுள்ள பிழைகள் முதலியவை முறையே நீக்கப்பட்டன. திரட்டப்பட்ட பனை ஓலைச்சுவடிகள், கையேட்டுப் பிரதிகள் ஆகியவற்றை பகுத்தாய்ந்து, மீண்டும் எழுத வேண்டியுள்ளது.

மேற்கூறிய பணிகளைத் தவிர, அச்சிடப்பெற்ற 5 சித்த வைத்திய நூல்களின் நகல்கள் தனியார் வெளியிட்டார்களிடமிருந்து வாங்கப்பட்டு, துறைவாரியாக விற்கப்பட்டு வருகின்றன.

ஒன்பது சித்த வைத்தியப் பாட நூல்கள் இதுவரை அச்சிடப் பெற்றுள்ளன. (1) உடல் கூறுகள், (2) தோற்றக் கிரம ஆராய்ச்சி என்கிற இரண்டு பாட நூல்கள் எழுதி முடிக்கப்பட்டு அரசினர் அச்சகத்தில் அச்சிடுவதற்காகக் கொடுக்கப்பட்டன. மேலும் ஐந்து பாட நூல்கள் இன்னும் எழுதப்பட்டு வருகின்றன.

திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளை அவர்கள் தயாரித்த சித்த மருத்துவ அகராதியில் எஞ்சியுள்ள 4, 5 ஆம் பகுதிகள் தொகுக்கப்பட்டு கோயம்புத்தூரில் உள்ள ஜி. டி. நாயுடு அறக்கட்டளை அச்சகத்தில் இலவசமாக அச்சிடப்பெற்று வருகின்றன. இப் பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது.

திரு. கந்தசாமி பிள்ளை அவர்கள் எழுதியுள்ள ''சித்த மருத்துவ வரலாறு'' என்கிற ஆங்கில நூல் ஒன்று அச்சிடுவதற்காக அச்சகத்திற்கு அனுப்பப்பட இருக்கிறது.

8. தொண்டாற்றும் நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்தல்.

இந்திய மருத்துவ முறையில் இலவச சிகிச்சை அளித்துவரும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானிய உதவி அளிக்கிறது.

[1978 மார்ச் 23

மக்களுக்குத் தொண்டாற்றுகிற இந்த நிறுவனங்களைப் பேணி வருவதற்காகும் செலவில் துண்டு விழும் ஒரு பகுதியை ஈடு செய்வதற்காக இந்த மானிய உதவி வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ் பின்வரும் நிறுவனங்கள் ஆண்டு தோறும் மானிய உதவி பெற்றுவருகின்றன :—

(i) திரு. வெங்கடரமண ஆயுர்வேத மருந்தகம் மயிலை, சென்னை.	ஆண்டு ஒன்றுக்கு	ரூ. 5,000
(ii) ருக்மணி நினைவு மருத்துவமனை, பட்டுக் கோட்டை.	ஆண்டு ஒன்றுக்கு	ரூ. 2,000
(iii) அருள்மிகு இராமநாதசுவாமி தேவஸ்தானம், ஆயுர்வேத மருந்தகம், இராமேஸ்வரம்.	ஆண்டு ஒன்றுக்கு	ரூ. 2,000

9. யோகாசன முறை சிகிச்சை.

யோகாசன முறையை ஒரு சிகிச்சை முறையாக அங்கீகரிக்கலாமா என்பது பற்றி அரசிற்கு ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப்பட்ட முன்னேடிக்குழு இரண்டொரு தடவை கூடி, யோகாசன முறைக்குத் தொடர்புள்ள நிறுவனங்களிடமிருந்தும் தனியார்களிடமிருந்தும் வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் இப்போது தகவல்களைச் சேகரித்து வருகிறது.

10. யோகாசனம் கற்பிக்கும் தனியார் நிறுவனங்களுக்கு அரசு மான்யம் வழங்குதல்.

திருப்பதியில் உள்ள இந்திய யோகாசனத் தொடர்புள்ள அறிவியல்கள் ஆராய்ச்சி நிறுவனம் (பதிவு செய்யப்பட்டது) ஆஸ்துமா, மஞ்சள் காமாலை நோய் போன்ற சிலவகை நோய்களை யோகாசன முறையில் குணப்படுத்துவது பற்றி ஆராய்ச்சி நடத்தி வருகிறது. இந் நிறுவனத்தைப் பேணி வருவதற்காகும் செலவினத்தில் துண்டு விழும் ஒரு பகுதியை பிற மாநில அரசுகளுடன் சரிநிகர் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு ரூ. 3 இலட்சம் என்கிற உச்ச அளவிற்கு உட்பட்டு ஈடு செய்யலாம் என்கிற திட்டத்தை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. 1976–77 ஆம் ஆண்டிற்காக இந்நிறுவனத்திற்கு ரூ. 3 இலட்சம் மானிய உதவி முன்கூட்டியே அளிக்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 23]

இயற்கை முறை மருத்துவம்.

தமிழ் நாட்டில் நோய் சிகிச்சை முறைகளில் 'இயற்கை முறை மருத்துவச் சிகிச்சையும்' ஒன்று என்பதை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. 'இயற்கை முறை மருத்துவ சிகிச்சை' குறித்தும் இந்த வகை கிச்சை முறையை மேம்படுத்துவது குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அது அமைத்துள்ள ஆலோசனைக்குழு இந்த சிகிச்சை முறையில் பயிற்சி அளிப்பதற்காக பாடங்கள்—பாடத் திட்டங்கள் குறித்த வரைவு அறிக்கை ஒன்றை அரசிற்கு அளித்துள்ளது இதனை அரசு ஆய்வு செய்து வருகிறது.

இணைப்பு I.

பட்ட மேற்படிப்பு, பட்டப் படிப்பு பற்றிய விவரங்கள் :

தொடர் எண்ணும் பட்ட மேற்படிப்பும் மற்றும் பட்டயத் தகுதிகளின் பட்டியல்.	இடங்களின் எண்ணிக்கை. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.	மதுரை மருத்துவக் கல்லூரி.	தஞ்சை மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.
(1)	(2)	(3)	(4)	(5)
பட்ட மேற்படிப்பு:				
1. எம்.டி. (பொது மருந்தியல்).	21	29	19	5
2. எம்.டி. (மகப்பேறு மருத்துவ இயல்.).	12	8	5	..
3. எம்.டி. (நோய் குறியியல்	4	..	2	..
4. எம்.டி. (நுண் உயிரியல்).	6	..	2	..
5. எம்.டி. (உடல் அமைப்பியல்).	4	4	4	..
6. எம்.டி. (மருந்தாக்கியல்)	4	..	4	..
7. எம்.டி. (குழந்தை நோய் இயல்.)	17	.	[illegible]	..

[1978 மார்ச் 23

பட்ட மேற்படிப்பு, பட்ட படிப்பு பற்றிய விவரங்கள் தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4)	(5)
8. எம்.டி. (எக்ஸ் கதிர் முறை நோய் அறி இயல்.)	4	..	..	..
9. எம்.டி. (எக்ஸ் கதிர் முறை நோய் சிகிச்சை இயல்).	4	..	..	..
10. எம்.டி. (மயக்கமருந்து இயல்).	5	3	5	..
11. எம்.டி. (தோல் நோய் இயல்).	4	..	..	..
12. எம்.டி. (மேகநோய் இயல்)	4	..	..	..
13. எம்.டி. (உயிர் வேதியியல்)	4	.	..	..
14. எம்.டி. (சமூக தடுப்பு மருத்துவம்).	1	..	..	..
15. எம்.டி. (சட்டஞ்சார்ந்த மருத்துவ இயல்).	2	...	2	..
16. எம்.டி. (உளநோய் இயல்)	2	..	..	..
17. எம்.எஸ். (பொது அறுவைச் சிகிச்சை).	21	20	18	6
18. எம்.எஸ். (முடநீக்கியல் அறுவை சிகிச்சை).	4	..	2	..
19. எம்.எஸ். (கண்நோய் இயல்).	6	..	6	..
20. எம்.எஸ். (காது மூக்கு, தொண்டை இயல்).	6	..	4	..
21. எம்.எஸ். (உடற்கூறு ஆய்வு இயல்).	4	..	2	..
22. எம்.எஸ். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	4	..	..	..
23. எம்.சி.எச். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	..	..	2	..

பட்டயத் தகுதி படிப்பு:

1. டி. ஓ.	8	..	6	..
2. டி. ஆர்த்தோ ..	4	2	2	..
3. டி. எல். ஓ. ..	12	..	6	..

1978 மார்ச் 23]

பட்ட மேற்படிப்பு, பட்டப் படிப்பு பற்றிய விவரங்கள் தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4)	(5)
4. டி. ஜி. ஓ.	18	8	8	..
5. டி. வி.	8	..	..	..
6. டி. டி.	6	..	..	..
7. டி. சி. பி.	[illegible]	..	..	..
8. டி. எ.	6	6	10	..
9. டி. சி எச்.	18	6	6	..
10. டி. எம். ஆர். டி. ..	4	4	6	..
11. டிப்ளமோ இன் பிசிகல் மெடிசின்.	2	..	..	..
12. டி. பி. எம்.	2	..	3	..
13. டி.எம்.ஆர்.டி. (தெரப்பி)	4	..	..	..
14. டி.டி.சி.டி. (ஆண்டொன்றிற்கு).	12	..	..	..

அக்டோபரில் துவங்குவது :

1. டி. ஓ.	8	..	6	..
2. டி. ஆர்த்தோ ..	4	2	2	..
3. டி. எல். ஓ.	12	..	6	..
4. டி. ஜி. ஓ.	18	8	8	..
5. டி. வி.	8	..	..	..
6. டி. டி.	6	..	..	..
7. டி. சி. பி.	[illegible]	..	..	..
8. டி. ஏ.	6	6	10	..
9. டி. சி. எச்.	18	6	6	..
10. டி.எம்.ஆர்.டி. ..	4	4	6	..
11. டிப்ளமோ இன் பிசிகல் மெடிசின்.	2	..	..	..
12. டி. பி. எம்.	2	..	3	..
13. டி.எம்.ஆர்.டி. (தெரப்பி)	4	..	..	..

பட்ட மேற்படிப்பு பட்டயப் படிப்பு பற்றிய விவரங்கள் தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4)	(5)
உயர்நிலை சிறப்புத் துறைகள்:				
1. எம்.டி.எஸ். (ஓரல் சர்ஜரி)	3	..	..	..
2. பி.எஸ்.எஸ்.சி./எல்.பி.எச்.	1+01	..	..	..
3. எம்.சி.எச். (மார்பு அறுவை சிகிச்சை இயல்).	2	..	..	..
4. எம்.சி.எச். (சிசு நோய் அறுவை சிகிச்சை இயல்).	3	..	2	..
5. எம்.சி.எச். (சிறுநீரக அறுவை சிகிச்சை இயல்).	4	..	..	..
6. எம்.சி.எச். (உடல் ஒட்டு அறுவை சிகிச்சை இயல்)	3	..	..	..
7. டி. எம். (நரம்பியல்)	4	..	..	..
8. டி.எம். (இருதய நோய் இயல்).	2	..	..	..
9. எம்.டி.எஸ். (பல்லலி யால் ஏற்பட்டுள்ள வீக்கம்).	3			..
10. எம்.டி.எஸ். (பல் மருத்துவ அறுவை சிகிச்சை இயல்).	2	..		
11. எம்.டி.எஸ். (ஆர்த்தோடென்ஷியா).	4	..	..	
12. டி.எம். (குடல்நோய இயல்).	1	..	..	
13. எம். பார்மஸி ..	..	..	3	
14. பி.எச்.டி.	10 இடங்கள்			

இணைப்பு I-A.

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தொடங்க உள்ள பாடப் பிரிவு கீழ்வருமாறு:—

கல்லூரியின் பெயர். (1)	பாடப் பிரிவின் பெயர். (2)	இடங்களின் எண்ணிக்கை (3)
சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி.	எம்.எஸ். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	2
	டி.டி.	2
	டி.எல்.ஓ.	4
	எம்.டி. (தோல் நோய் இயல்).	2
	எம்.டி. (குழந்தை நோய் இயல்).	2
சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி.	எம்.டி. (பொது மருந்தியல்).	12 ஆண்டு ஒன்றுக்கு.
	எம்.எஸ். (பொது அறுவை சிகிச்சை).	12 ,,
	டி.எல்.ஓ.	2 செஷன் ஒன்றுக்கு.
	டி. ஆர்த்தோ ..	4 ,,
	டி.ஜி.ஓ.	4 ,,
	டி.சி எச்.	4 ,,

ஜூன் 1978 முதல் தொடங்குவுள்ள பாடப் பிரிவு:—

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி.	எம்.சி எச். (உடல் ஒட்டு அறுவை சிகிச்சை இயல்).	2

இணைப்பு II.

கீழே குறிப்பிட்டுள்ள பட்டமேற் படிப்புகள் தகுதி பட்டயங்கள் 1978–79 ஆம் ஆண்டு முதல் தொடங்கக் கருதப்பட்டுள்ளது:—

கல்லூரியின் பெயர்.	பாடப்பிரிவின் பெயர்.
(1)	(2)
சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.	டி. எம். (நெப்ராலஜி).
	மருத்துவ உளவியலில் பட்டயத் தகுதி படிப்பு.
	எம். டி. (காசமும் மார்பு நோய்களும்).
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.	டி.ஓ.
	டி.எல்.ஓ.
	டி.ஜி.ஓ.
	டி.சி எச்.
	டி.ஏ.
	எம். டி. (உயிர் வேதியல்).
கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.	எம். டி. (பொது மருந்தியல்).
	எம். எஸ். (பொது அறுவை சிகிச்சை).
	டி.சி எச்.
	டி.ஜி.ஓ.
	டி.ஏ.

இணைப்பு III.

பயிற்றுவிக்கும் மருத்துவ மனைகளின் பட்டியல்.

1. அரசு பொது மருத்துவமனை, சென்னை-3.
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை-1.
3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை-10.
4. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை-14.
5. அரசு கண் மருத்துவமனை, சென்னை-8.
6. பெண்கள், குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை-5.
7. மகப்பேறு, மகளிர் நோய் இயல் நிறுவனம் மற்றும் பெண்கள் குழந்தைகளுக்கான அரசு மருத்துவமனை, சென்னை-8.
8. இராஜா சர். இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.
9. குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை-8.
10. அரசு திருவொற்றீஸ்வரர் காசநோய் மருத்துவமனை, ஓட்டேரி, சென்னை.
11. அரசு மார்பு நோய் நிலையம், சேத்துப்பட்டு, சென்னை.
12. அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை-10.
13. அரசு காசநோய் நலம் பேண் மருத்துவமனை, தாம்பரம்.
14. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.
15. அரசு இராஜா மிராஸ்தார் மருத்துவமனை, தஞ்சாவூர்.
16. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.
17. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.
18. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.
19. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.

[1978 மார்ச் 23

இணைப்பு IV.

மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் உள்ள மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை.

மருத்துவ மனைகளின் பெயர்.	1976–77.	1977–78.
(1)	(2)	(3)
1. அரசு பொது மருத்துவமனை, சென்னை.	1,572	1,624
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.	1,011	1,021
3. அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனை, சென்னை.	420	420
4. அரசு இராயப்பேட்டை மருத்துவ மனை, சென்னை.	526	620
5. அரசு கண் மருத்துவமனை, சென்னை.	328	328
6. பெண்கள், குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் அரசு மருத்துவமனை, சென்னை.	675	675
7. மகப்பேறு மகளிர் நோயியல் மகளிர்-குழந்தைகள் நல மருத்துவ நிலையம், சென்னை.	534	534
8. இராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.	426	426
9. குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.	250	250
10. திருவொற்றீஸ்வரர் காச நோய் அரசு மருத்துவமனை, ஓட்டேரி, சென்னை.	222	222
11. அரசு மன இயல் மருத்துவமனை, சென்னை.	1,800	1,800

1978 மார்ச் 23]

மருத்துவ மனைகளின் பெயர்.	1976–77.	1977–78.
(1)	(2)	(3)
12. அரசு காச நோய் நலம் பேண் மருத்துவமனை, தாம்பரம்.	750	750
13. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.	1,394	1,394
14. அரசு இராஜா மிராஸ்தார் மருத்துவமனை, தஞ்சாவூர்.	662	612
15. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.	538	589
16. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.	663	663
17. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.	805	805
18. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.	416	416
19. அரசு பெரிடாமோன்னியர் மருத்துவமனை, களக்காடு.	30	30
20. அரசு மருத்துவமனை, சைதாப்பேட்டை.	32	32
21. அரசு காச நோய் மருத்துவமனை, தோப்பூர்.	162	182
22. அரசு தொற்று நோய் மருத்துவமனை, தோப்பூர்.	50	50
23. அரசு காலரா சேகரிப்பு நிலையம், தோப்பூர்.	28	28
மொத்தம் ..	13,294	13,471

* தஞ்சாவூர் அரசு இராஜா மிராஸ்தார் மருத்துவமனையிலிருந்து 50 படுக்கைகள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு ஒரு சிறப்புப் பிரிவு அமைக்கப்பட்டது.

தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்—கொள்கை விளக்கம்.

தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் இடங்களில் பத்து மறுவாழ்வு இல்லங்களை அமைத்துள்ளது :—

	இடம். (1)	மாவட்டம். (2)
1	பரனூர்	செங்கற்பட்டு.
2	உளுந்தூர்பேட்டை	தென் ஆற்க்காடு.
3.	பர்கூர்	தருமபுரி.
4	புதுக்கோட்டை	புதுக்கோட்டை.
5	மனையேரிப்பட்டி	தஞ்சாவூர்.
6	புதுப்பட்டி	மதுரை.
7.	மல்லவாடி	வட ஆர்க்காடு.
8	விண்ணபள்ளி	கோயம்புத்தூர்.
9	தேவியாகுறிச்சி	சேலம்.
10	செல்லியம்பட்டி	தருமபுரி.

பர்கூரிலுள்ள இல்லம் தவிர மற்ற எல்லா இல்லங்களும் தொகுதிகளாகக் கட்டப்பட்டுள்ளன.

ஓர் இல்லத்தின் பரப்பளவு 16 ஏக்கரிலிருந்து 77 ஏக்கர் வரை உள்ளது. ஒவ்வொரு இல்லத்திலுள்ள திறந்த வெளிகள் தோட்டம் போடுவதற்கும், காய்கறிகள் பயிரிடுவதற்கும், பிற உணவுப்பொருள்கள் விளைவிப்பதற்கும் பயன்படுத்தப் படுகின்றன.

முதலமைச்சர் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதியிலிருந்து இத்திட்டத்திற்கு தொடக்கத்தில் நிதியுதவி அளிக்கப்பட்டது. இந்த இல்லங்கள் முழு அளவில் பிச்சைக்காரர்

களைக் கொண்டிருந்தால், ஒவ்வொரு இல்லத்திற்கும் ஆண்டுக்கு ரூ. 6 இலட்சம் தொடரினச் செலவு ஏற்படும்.

தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைக் குணப்படுத்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே இந்த இல்லங்களை அமைத்ததின் தலையாய நோக்கமாகும். அவர்கள் இந்த இல்லங்களை விட்டு வெளியேறும்போது, சமூகத்திற்கோ அல்லது அவர்களது குடும்பத்திற்கோ சுமையாக இராமல், கவுரவமாகவும், சுயமாகவும் தங்களது வாழ்வை அமைத்துக் கொள்ள வகை செய்வதுதான் இதன் குறிக்கோள்.

2. இல்லங்களில் சேர்த்துக் கொள்ளுதல்.

தாமே விரும்பி முன்வரும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை இந்த இல்லங்களில் சேர்த்துக்கொள்வதே இதுவரை அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. எனினும் சட்டத்தின்கீழ், பிச்சை எடுப்பது ஒரு குற்றமாகும். எனவே, பிச்சை எடுத்தலுக்காகத் தண்டிக்கப்படும் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு இந்த இல்லங்கள் அனைத்தும், " காப்பு இல்லங்கள் " என்று அறிவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இவ்வில்லங்களுக்கு வர விரும்பாத தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைக் கண்டு பிடித்துத் தண்டனை வழங்கிய பின்னர் இந்த இல்லங்களில் காலவரம்பின்றி நிறுத்தி வைப்பதற்கு விதித்துறை உள்ளது.

3. இல்லங்களிலுள்ள வசதிகள்.

ஒவ்வொரு இல்லத்திலும் பெரியவர்கள் 400 பேரும் சிறுர் 25 பேரும், தங்குவதற்கு இடவசதி உள்ளது. தம்பதிகளாகயிருந்து ஒருவர் தொழுநோயால் பீடிக்கப்பட்டு பிச்சை எடுத்துக்கொண்டிருந்தால், தம்பதிகள் இருவரும் இல்லத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர். அத்தகைய சமயங்களில் அவர்களது சிறுர்களை அருகிலுள்ள விடுதிகளிலும், பள்ளிகளிலும் சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக அரசு ஒவ்வொரு பிள்ளைக்கும், உடை, பள்ளிப் புத்தகங்கள் முதலியவைகளுக்காக ரூ. 75 அளிக்க அனுமதித்திருக்கிறது. வயது வந்த ஒருவருக்கு அன்றுடம் வழங்கப்படும் உணவுக்கான செலவு ரூபாய் 2.30, சிறுவருக்கு 1.15 ஆகும். இல்லத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் இலவச உணவு, இலவச

மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவதுடன் அவர்களுக்கு இலவச உடை, எண்ணெய், சோப்பு, பல்துலக்கும் பிரஷ் முதலியனவைகளும் அளிக்கப்படுகின்றன.

இவ்வில்லங்களில் பொழுதுபோக்கிற்கு போதிய வசதிகள் உள்ளன. விளையாட்டுகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்காக ஒவ்வொரு இல்லத்திற்கும் அரசு தொடரினச்செலவாக ரூபாய் 200 அனுமதி அளித்துள்ளது. ஒவ்வொரு இல்லத்திற்கும் இரு நாளிதழ்களும், ரூபாய் 250 பெறுமானமுள்ள புத்தகங்களும் வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இல்லத்திலுள்ளவர்களின் இசைக் கலைத்திறனை வளர்க்கும்பொருட்டு, ஒவ்வொரு இல்லத்திற்கும் ரூபாய் 400 மதிப்புள்ள இன்னிசைக் கருவிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இல்லத்திலுள்ளவர்களுக்கு, அவர்களுடைய கல்வி அறிவையும் பொது அறிவையும் வளர்க்கும் பொருட்டு, முதியோர் கல்வியறிவை வளர்க்கும் நூல்களும் வழங்கப்படுகின்றன. பரனூரிலுள்ள இல்லத்தில் ஒழுக்க நெறி பற்றிய சொற்பொழிவுகளும் ஆற்றப்படுகின்றன.

முக்கியத்துவம் வாய்ந்த தேசிய விழாக்களின் போது இல்லத்தில் உள்ளவர்களுக்கு இனிப்புகளுடன், சிறப்பு உணவும் வழங்கப்படுகின்றது. ஆண்டு விழாக்களின் போது இல்ல உறுப்பினர்கள் நாடகங்களும் கதம்பக்கலை நிகழ்ச்சிகளும் நிகழ்த்துகின்றனர்.

4. மருத்துவ வசதிகள்.

இல்லத்தில் உள்ளவர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இல்லத்தில் உள்ளவர்களின் மருத்துவத்தேவைக்காக, ஒவ்வொரு இல்லத்திலும் மருத்துவ அதிகாரிகள் இருவர், செவிலியர் இருவர், துணை மருத்துவச் செவிலியர் ஒருவர் ஆகியோர் உள்ளனர். தொழுநோய்க்கான சிகிச்சை அளிப்பதுடன் பிற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. மருத்துவமனைக்கு அனுப்பப்பட வேண்டிய நோயாளிகள் வார்டுகளில் சேர்க்கப்படுகின்றனர்; அவர்களின் நோய்க்கு ஏற்ற வகையில் தனி உணவு அளிக்கப்படுகின்றது. பர்கூர், உளுந்தூர்ப்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள இல்லங்கள் நீங்கலாக, மற்ற இல்லங்களில் வசதியுடன் கூடிய அறுவை சிகிச்சைக்கூடங்கள் உள்ளன. மேற்

படி அறுவை சிகிச்சைக் கூடங்களில் தொழுநோய்க்கான தனித்தன்மை உடைய கைவளைவு, தொங்கிய பாதங்கள் மற்றும் உடற்கூறு குறைபாடுகளுக்காக அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. கண் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மூக்குக். கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. இத்துடன், அருகிலுள்ள அரசு கண்நோய் மருத்துவமனையிலிருந்து கண்நோய் மருத்துவர் ஒருவர் அடிக்கடி வந்து பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எலும்புருக்கி நோயால் பீடிக்கப்பட்டு வருந்தும் இல்ல உறுப்பினர்களைப் பரிசோதித்து அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் பொருட்டு, மாவட்ட எலும்புருக்கி நோய் மருத்துவர் வந்து செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு இல்லத்திற்கும் உடற்பயிற்சி மருத்துவர் ஒருவர் உள்ளார். இவர் சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான உடற்பயிற்சி சாதனங்கள் அடங்கியபெட்டி அதாவது மின் சாரத்தூண்டு கருவி (Electric Stimulator) மெழுகுக்குளியல் (Wax bath) வழங்கப்பட்டுள்ளது. பரனூர், புதுக்கோட்டை, தேவியாக் குறிச்சி ஆகிய மூன்று இல்லங்களிலும் தொழில் மருத்துவர் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். தொழில் சார்ந்த சிகிச்சை அளிக்கின்ற தலைமைச் சிகிச்சை நிபுணர் காட்டும் வழிமுறைகளுக்கிணங்க, இம்மருத்துவர் அருகாமையிலுள்ள இல்லங்களுக்குச் சென்று, இல்லத்திலுள்ளவர்களுக்குத் தொழிற் சார்ந்த சிகிச்சை மருத்துவத்தின் மூலம் தொழிற் பயிற்சி அளிப்பார்.

5. மறுவாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகள்.

தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மருத்துவச் சிகிச்சை, அறுவை சிகிச்சை ஆகியவை அளிக்கப்பட்ட பின்னர், முதலில் அவர்கள் குணப்படுத்தப்படுவர்; அதே சமயம் வேளாண்மை, நெசவு போன்ற தொழில்களில் அவர்கள் ஏற்கனவே ஈடுபட்டிருப்பாராயின் அவற்றில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். அல்லது புதிய தொழிலில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மறுவாழ்வுப் பணிகளில் முக்கியமாகப் பண்ணைத்தொழில், பாய்முடைதல், தச்சுவேலை, பட்டுபுழு வளர்ப்பு, கயிறு தயாரிப்பு முதலியவை அடங்கும், பத்து மறுவாழ்வு இல்லங்களிலும், மொத்தமாக 138 தறிகள்(16 சட்டத் தறிகள், 120 குழித்தறிகள், 2 விசைத்தறிகள்) இயங்கி வருகின்றன. 77 பாய்த்தறிகளும் இயங்கி

வருகின்றன. பாய்கள் மாவட்ட மருத்துவ மனைகளுக்கும் அரசு நிறுவனங்களுக்கும் விற்கப்படுகின்றன. புதுப்பட்டியில் அண்மையில் தொடங்கப்பட்டுள்ள கிராமப்புற நெசவு நிலையம், மாதந்தோறும் 10,000 நூற் சிட்டங்களை உற்பத்தி செய்கின்றது. உளுந்தூர்பேட்டையிலுள்ள கிராமப்புற நெசவு நிலையம் மாதந்தோறும் 6,000 சிட்டங்களை உற்பத்தி செய்கிறது. புதுக்கோட்டையிலுள்ள " கடித உறை செய்யும் தொழிற்பிரிவு ", 1978 பிப்ரவரி 1-ம் நாள் முதல் செயற்பட்டு வருகிறது. இவ்வில்லங்களில் 34 தையற்பொறிகளும் உள்ளன. காட்பாடியில் உள்ள ஸ்வீடன் நாட்டுச் செஞ்சிலுவைச் சங்க மறுவாழ்வு தொழில் நிறுவனத்தினரால் பரனூரில் உள்ள மறுவாழ்வு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற் பணிக்களரியில் பயிற்சியளிக்கப்பட்ட 7 பேர் திருச்சி காட்பாடி ஆகிய இடங்களில் அவர்களது தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். பத்துப் பேர்கள் கொண்ட இரண்டாவது அணிக்கு. ஓராண்டு காலப் பயிற்சி முடிவடைகின்றது. இப்பணிக்களரியில் அளிக்கப்படும் பயிற்சி, நோயாளிகளுக்கு, தன்னம்பிக்கையையும், ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டுடன் அமைந்த சுதந்திரத்தையும் வளர்க்கின்றது.

பரிசோதனை நடவடிக்கையாக, பரனூரில் உள்ள மறுவாழ்வு இல்லத்தில் பாய்முடைதல், ஆடை நெய்தல் ஆகிய தொழில் நடைபெறும் பணிக்களரி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்பணிக்களரியில், தொழில் சார்ந்த வாழ்க்கைக்கு வழிகாட்டும்மருத்துவ நிபுணர்கள்(Occupational Therapist) இல்லத்திலுள்ளவர்களின் ஆக்கத்திறனை அறிந்து, இப்பயிற்சி மேற்கொள்ளத்தக்கதாக இருப்பின், இல்லத்தை சுற்றி தொழில் செய்யும் பொருட்டு குடிசைகள் அமைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான மூலப்பொருட்களையும் கருவிகளையும் அளிப்பதன் மூலம், இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும். அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊதியம் அளித்து அவை பெற்றுக் கொள்ளப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம், விண்ணபள்ளியிலுள்ள மறுவாழ்வு இல்லத்தில் ஏற்பட்ட நீர் பற்றுக்குறையைப்போக்க துளைக்கிணறு விசையேற்றம், நீரேற்று அறை முதலியவை அமைக்க அரசு அண்மையில் ரூ. 50, 000 அனுமதித்துள்ளது.

6. ஊதியங்களும் வேலைவாய்ப்பும்

மேலே குறிப்பிட்ட மறுவாழ்வுப் பணிகளில் இல்லங்களில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வாரந்தோறும் அவர்கள் செய்யும் பணியின் தன்மையைப் பொருத்து அவர்களுக்கு, ஒரு வாரத்திற்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை ஊதியம் வழங்கப்படுகிறது. இல்லத்தில் உள்ளவர்களுக்கு சுழல் முறையில் வேலை அளிக்கப்படும். அவர்கள் இல்லங்களிலேயே துணை மருத்துவப் பணிகளிலும், சமையல்காரர், சமையல் உதவியாளர் போன்ற பணிகளிலும், திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 முதல் ரூ. 30 வரையில் மொத்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். கால்நடைப் பாராமரிப்பு உதவியாளர்கள் போன்ற சில தொழில் நுட்பப் பதவிகளிலும் திங்கள் ஒன்றுக்கு மொத்தச் சம்பளத்தில் இவர்கள் அமர்த்தப்படுகின்றனர். இதற்கு இவர்கள் பிறவகையில் உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும். இவர்களை இப்பணியில் அமர்த்த வேலைவாய்ப்பகத்தைக் கேட்க வேண்டியதில்லை. குணமடைந்த தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை அவர்களது குடும்பங்களிடம் திரும்பச் சேர்ப்பதற்கு சமூகப் பணியில் கல்வித்தகுதி பெற்ற சமூகப்பணியாளர் ஒருவர் ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கிறார். குணமடைந்த பிச்சைக்காரர்களை அவர்கள் குடும்பத்தினர் திரும்ப சேர்த்துக்கொள்ளும் பொருட்டு சமூகப் பணியாளர் அக்குடும்பங்களுடன் தொடர்பு கொள்வர்.

7. பணியாளர் அமைப்பும் முறையும் நிர்வாகமும்

தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள், சுகாதரப் பணிகள் –– குடும்ப நல்வாழ்வுத் திட்டத் துறை இயக்குநரின் நிர்வாகப் பொறுப்பின்கீழ் உள்ளன. அவருக்கு மறுவாழ்வு இல்லத் தனி அதிகாரி ஒருவரும் உதவித் தனி அதிகாரி ஒருவரும் இளநிலை கணக்கு அலுவலர் ஒருவரும் உதவி செய்வார்கள்.

ஒவ்வொரு இல்லத்திற்கும் கண்காணிப்பாளர் ஒருவர் உள்ளார். இந்தப்பதவிகள் இதற்கு முன்பு சிறைத்துறையின் சீர்திருத்த அதிகாரிகளைக் கொண்டு நிரப்பப்பட்டன. இந்த இல்லங்களைச் செவ்வையாக நிர்வகிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் ஏற்ப அரசு, தற்போது இந்தப் பதவிகளில் வருவாய்த்துறையிலிருந்தும்,

மருத்துவத்துறையிலிருந்தும் முறையே மாவட்டத் துணை ஆட்சித்தலைவர்கள், லே செகரட்ரி-தரம் 1 -பதவித்தரத்திலுள்ள அதிகாரிகளைக் கொண்டு நிரப்புவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு இல்லத்தின் நிர்வாகத்திற்கும் பொறுப்பாக உள்ள, பலதிறப்பட்ட பணியாளர்களின் விவரம் பின்வருமாறு :—

1. இல்லக் கண்காணிப்பாளர்.
2. மருத்துவ அலுவலர்.
3. பயிற்சி முடித்த செவிலியர்.
4. துணை மருத்துவச் செவிலியர்.
5. மருந்தாக்குனர்.
6. செவிலிப்பணி உதவியாளர் (ஆண்).
7. துப்புரவுத் தொழிலாளர் (ஆண், பெண்).
8. ஆய்வுக்கூட தொழில் நுட்பப்பணியாளர்-நிலை 1.
9. சமூகப் பணியாளர்.
10. உடற்கூறு பயிற்சியாளர்.
11. சமையற்காரர்.
12. சமையல் உதவியாளர்.
13. அலுவலகக் கண்காணிப்பாளர்.
14. பண்டகசாலைக் காப்பாளர்—கணக்காளர்.
15. இளநிலை உதவியாளர்—தட்டெழுத்தர்.
16. ஒட்டுநர்—துப்புரவாளர்.
17. தலைமை வார்டர்.
18. வார்டர்கள்.
19. மின் பணியாளர் 2-ம் நிலை.
20. தொழிற் சார்ந்த மருத்துவர் ஒருவர் (மூன்று இல்லங்களில் மட்டும்).

8. சாதனைகள் குறித்த விவரம்

ஒவ்வொரு இல்லத்திலும் உள்ள பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையையும், அந்த இல்லங்களில் நடைபெற்ற பணி முன்னேற்றத்தையும் கீழே உள்ள விவர அட்டவணையில் காணலாம்:—

இல்லத்தின் பெயர்.	10–2–1978 அன்றுள்ளவாறு இல்லத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை.			
	ஆண்.	பெண்.	சிறுர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1. பரனூர் (செங்கற்பட்டு).	226	119	64	409
2. உளுந்தூர்பேட்டை (தென் ஆற்காடு).	354	108	40	502
3. பர்கூர் (தருமபுரி) ..	231	99	40	370
4. புதுக்கோட்டை (புதுக்கோட்டை).	267	106	49	422
5. மனையேரிப்பட்டி (தஞ்சாவூர்).	272	88	38	398
6. புதுப்பட்டி (மதுரை) ..	286	105	48	439
7. மல்லவாடி (வட ஆற்காடு).	278	100	39	417
8. தேவியாகுறிச்சி (சேலம்).	274	130	44	448
9. விண்ணபள்ளி (கோயம்புத்தூர்).	174	77	27	278
10. செல்லியம்பட்டி (தருமபுரி)	205	84	13	302
மொத்தம் ..	2,567	1,016	402	3,985

[1978 மார்ச் 23

பல்வேறு வாழ்க்கைத் தொழில் திட்டங்களில் வேலைக் கமர்த்தப்பட்டுள்ள பிச்சைக்காரர்கள்.

மருத்துவத் துணைப் பணி	62
வேளாண்மையும், தோட்டங்கள் வைத்தலும் ..	246
தையல் வேலை	31
பாத அணி தயாரித்தல்	32
பாய் முடைதல்	58
தச்சுவேலை	6
கைத்தறித் துணி நெய்தல்	107
சமையல் உதவியாளர்கள்	82
அலுவலக உதவியாளர்கள்	11
முறையான பராமரிப்பு, பெருக்குதல் ..	
முடிதிருத்துபவர், சலவைத்தொழிலாளர் ..	72
ஆசிரியர்கள்	14
இல்லப் பணியாளர்கள்	84
கட்டுமானப்பணி	18
கதர் கிராமத்தொழில்களும் பிற வர்த்தக தொழில்களும்.	53
	876
முழு நேர வேலையில் அமர்த்தப்பட்டவர்களும் + 50% சுழற்சி முறைப் பணியமர்த்தப்பட்டவர்களும்.	438
வேலைவாய்ப்பு பெற்றவர்கள் மொத்த எண்ணிக்கை.	1,314

1978 மார்ச் 23]

1977 ஏப்ரலிலிருந்து 1977 டிசம்பர் வரை இந்த இல்லங்களில் உற்பத்தி அளவு குறித்த விவரங்கள்.

முடையப்பட்ட பாய்களின் எண்ணிக்கை	4,877
தைத்த ஆடைகளின் எண்ணிக்கை	5,037
காய்கறித் தோட்டங்களில் பயிரிடப்பட்ட காய்கறிகள்	18,585.389 கிலோகிராம்.
தைக்கப்பட்ட பாத அணிகளின் எண்ணிக்கை.	1,500 ஜோடிகள்.
உற்பத்தி செய்யப்பட்ட புடவைகள், வேஷ்டிகள், துண்டுகளின் எண்ணிக்கை.	6,899
உற்பத்தி செய்யப்பட்ட கட்டுப்போடும் துணிகளின் அளவு.	37,024.5 மீட்டர்கள்.
உற்பத்தி செய்யப்பட்ட காடா துணியின் அளவு.	7,413.25 மீட்டர்கள்
கிராமப்புற நூற்பு ஆலை நெய்த சிட்டங்களின் எண்ணிக்கை.	1,12,208

881 ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.

கோரிக்கை எண். 19.

மக்கள் நல்வாழ்வுத் துறை 1978-79.

மேலவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை 19. மக்கள் நல்வாழ்வுத் துறை என்பதின் கீழ் ரூ. 31,84,47,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென நான் முன்மொழிகிறேன்.

I. கொள்கை

மக்களின் நல்வாழ்வு ஒரு முக்கியமான வளமாகும். ஆகவே, அது நாட்டின் பொதுச் சொத்தாகக் கருதப்படுகிறது. எனவே, இச்சொத்து எல்லா

காலங்களிலும் பாதுகாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க உறுதி கொண்டுள்ள அரசு, மக்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வைப் பராமரித்து மேம்படச்செய்யும் நடவடிக்கைகளை அரசு நிறுவனங்களோ அல்லது பொது நல தொண்டு நிறுவனங்களோ மேற்கொள்ளும்போது அத்தகைய பணிகளை அரசு ஊக்குவிக்கிறது.

இவ்வாறு அளிக்கப்படும் பலவகையான நல்வாழ்வுப்பணிகள் தாய் மற்றும் குழந்தைகளின் உடல் நலனை மேம்படுத்தவும் மக்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்தவும் தொற்றுநோய்கள் பிற நோய்களைத் தடுத்தல், தொற்று நோய்கள் தோன்றுமிடங்களில் அவற்றை அழித்தல், சுற்றுப்புற துப்புரவு மேம்பாடு, உணவுப் பொருள, மருந்துகளில் கலப்படங்களைத் தடுத்தல், மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் வகுக்க பிறப்பு இறப்புப் பதிவு உட்பட சுகாதாரப் புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தொகுத்தல் மற்றும் மக்கள் நல்வாழ்வு, வழிமுறைகள் பற்றி மக்களுக்குக் கல்வி விளக்கம் அளித்தல் முதலியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு விளங்குகின்றன. கிராமப்பகுதிகளில் இப்பணிகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிளை நிலையங்கள் மூலமாகச் செயலாக்கப்படுகின்றன.

II. கிராம நல்வாழ்வுப் பணி.

தமிழ் நாட்டில் 70 சதவீதத்துக்கு மேற்பட்ட மக்கள் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர். கடந்த ஆண்டுகளில் கிராமப் புறப்பகுதிகளை புறக்கணித்துவிட்டு நகரப் பகுதிகளிலேயே நல்வாழ்வுப் பணிகளை மேற் கொள்வதில் நாட்டம் செலுத்தப்பட்டு வந்தது. சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு கிராம மக்களின் உடல் நல முன்னேற்றம் அத்தியாவசியமானதாகும். ஏனெனில் விவசாயிகளின் உடல் நலமின்மையினால் உழைக்கும் நேரம் வீணாவதை அவர்கள் உடல் நலத்தைப் பேணுவதின் மூலம்

குறைக்க முடியும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகவும் கிளை நிலையங்கள் மூலமாகவும் கிராமங்களில் உள்ள மக்களுக்கு மேன் மேலும் அதிக் மருத்துவ வசதிகளை அளிக்க வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணமாகும்.

ஆரம்ப சுகாதார நிலையத்தின் முக்கியமான பணிகளில் மருத்துவ வசதி அளிப்பது ஒன்றாகும், ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகள் சிகிச்சை பெறுவதுடன் உடல் பரிசோதனையோடு மருந்துகளும் தகுந்த அறிவுரைகளையும் பெறுகிறார்கள். நாளுக்கு நாள் வெளிப்புற நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. 130 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் மூன்றாவது மருத்துவர் ஒருவர் பணியாற்றுகிறார். வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதை கருத்தில் கொண்டும் நடமாடும் மருத்துவக்குழு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தவும் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றாவது மருத்துவர் ஒருவரை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்காக ஆண்டிற்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டை ரூ. 12,000-லிருந்து ரூ. 14,000-மாக அரசு 1977–78 ஆம் ஆண்டிலிருந்து அதிகப்படுத்தியுள்ளது.

(i) நடமாடும் மருத்துவப் பணிகள்.

கிராம மக்களுக்கு ஒருங்கிணைந்த நல்வாழ்வுப பணிகளை அளிக்கும் குறிக்கோளுடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டிருந்த போதிலும் ஒரு வட்டாரத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மருத்துவ அலுவலர்கள் சென்று மருத்துவ வசதி அளிக்க முடிவதில்லை. ஆதலால் 1977 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய திட்டமான நடமாடு மருத்துவக் குழுக்களின் மூலம் கிராம மக்களுக்கு மருத்துவ நல்வாழ்வுப் பணிகள் அளிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் மூன்று மருத்துவ அதிகாரிகள் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவ அதிகாரி காலையிலும், மாலையிலும் நிலையத்திலேயே தங்கி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பார். மற்ற இரு மருத்துவர்கள் கிராமப்புற மக்களுக்கு நோய்த்தடுப்பு, நோய்த்தீர்ப்பு, நோய்த்தீர்ப்புக்கு பின் நலம் பேணுதல், ஆகிய பணிகளை அளிப்பார்கள். ஒவ்வொரு குழுவும் ஒரு நாளில் 6 முதல் 8 கிராமங்களுக்குச் செல்லும். அக் குழு குறிப்பிட்ட கிராமத்திற்கு ஒரு குறிப்பிட்ட நாளில் செல்லும். அவ்வாறு ஒரு வாரத்திற்குள் அந்த வட்டாரம் முழுவதும் சென்றுவரும். சிக்கலான நோய் கண்டவர்களை அருகிலுள்ள பெரிய மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பார்கள். கிராம மக்களுக்கும் வருகை தரும் நடமாடும் மருத்துவக் குழுவிற்கும் இடையே உடல் நல ஆய்வாளர்கள் சிகிச்சை சம்பந்தமான ஆதாரப்பணிகளை செய்கிறார்கள். மருத்துவ அதிகாரியும், மருத்துவக் குழுவும் வருவதற்கு முன்னதாக நியமிக்கப்பட்ட நாட்களில் தகுந்த பிணியாளர்களை சிகிச்சைக்காக ஒன்று சேர்ப்பார்கள். மற்ற நாட்களில் வேண்டிய மருத்துவ பணிகளை செய்வார்கள். இவ்வாறாக மக்களுக்கு மருத்துவப் பணிகள் அவர்கள் இருப்பிடங்களிலேயே அளிக்கப்படுகின்றன.

இத்திட்டம் ரூ. 7·16 இலட்சம் செலவில் மூன்றாவது மருத்துவ அதிகாரியுள்ள 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் துவக்கப்பட்டது. இந்தப் புதுமையான திட்டம் துவக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இரண்டு வாகனங்கள் உள்ளன. மருத்துவக் குழுவின் நடமாட்டத்தை மேம்படுத்துவதன் பொருட்டு பெட்ரோல் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 14,000 அல்லாமல் மேலும், ரூ. 10,000 இம்மருத்துவக் குழுக்களின் பணிக்காக அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு மருந்து-கலக்குனர் நியமிக்கப் பட்டுள்ளார்.

1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மத்திய அரசு நாடு முழுவதற்குமான சமுதாய நல பணியாளர்கள் திட்டம் என்னும் ஓர் புதிய திட்டத்தை, பணியாளர்கள் கிராம மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு கிராமப்பணிகளில் ஈடுபடுத்துவதற்காக உருவாக்கியது. இருப்பினும் இவ்வரசு மத்திய அரசுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து இயக்கப்படும் நடமாடும் மருத்துவக்குழு என்னும் ஓர் மாற்று திட்டத்தை தெரிவித்தது. இதன்நோக்கம் தமிழ் நாட்டில் சிறந்த முறையில் இணைப்பு சாலைகளும் மின்சார வசதிகளும் அமைந்து இருப்பதால் நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலமாக சிறந்த மருத்துவ வசதிகளை அளிக்க முடியும் என்பதாகும். மத்திய மக்கள் நல்வாழ்வு அமைச்சர் தங்களது திட்டத்தை 1977 அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி முதல் தமிழக அரசு அமுல் படுத்த வேண்டுமென விருப்பம் தெரிவித்தார். நடமாடும் மருத்துவக் குழுத் திட்டம் மக்களால் பெரிதும் வரவேற்கப்படுவதால், பிரதமருக்கும், மத்திய மக்கள் நல்வாழ்வு அமைச்சருக்கும் மத்திய அரசின் திட்டத்திற்கு பதிலாக மாற்றுத் திட்டமான நடமாடும் மருத்துவக் குழுவின் மூலம் மருத்துவ வசதி அளிக்கும் திட்டத்தை செயல்படுத்த எண்ணியிருக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. பிரதமரும், மத்திய நல்வாழ்வு அமைச்சரும் மாற்றுத் திட்டமான நடமாடும் மருத்துவக்குழு திட்டத்தை தமிழ் நாட்டில் அமுல்படுத்த விருப்பத்தோடு அனுமதி அளித்தார்கள்.

மத்திய அரசின் சமுதாய நலப்பணியாளர்கள் திட்டத்தை நமது மாநிலத்தில் அமுல்படுத்தியிருந்தால், இவ்வரசுக்கு 100 சதவீதம் மத்திய அரசின் உதவித் தொகையான ரூ. 17 இலட்சமும், முதல் படி உதவித் தொகையான ரூ. 2·27 இலட்சமும் கிடைத்திருக்கும். 1977–78 ஆம் ஆண்டில் இந்த உதவித் தொகையான ரூ. 17 இலட்சத்தை அளிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

1978–79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) சிறிய சுகாதார நிலையங்கள்.—கிராம மக்கள் தொகையின் சிறு பகுதிக்குக் கூட்டுறவு அடிப்படையில் சுகாதார பணி புரியும் குறிக்கோளுடன் சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இதில் தொடர்புள்ள முக்கிய அமைப்புகள் மத்திய அரசு; மாநில அரசு ஒரு பொதுநல நிறுவனம் ஆகும். இதில் மொத்தச் செலவு 1 :1 : 1 என்ற விகித அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படும் ஒரு சிறு சுகாதார நிலையம் 5,000 மக்கள் தொகைக்கு ஒருமுகப்படுத்தப்பட்ட நல்வாழ்வுப் பணிகள் புரிய, பொதுநல நிறுவனங்கள் செயல்படும். ஒரு சிறு சுகாதார நிலையத்திற்கு ஆண்டொன்றுக்கு மொத்தம் 18,000 ரூபாய் தொடர் செலவாகும். சிறு சுகாதார நிலையம் ஒன்றில், பகுதி நேர டாக்டர் ஒருவர், முழு நேர ஆண் மற்றும் பெண் பணியாளர் ஒருவர், முதல் உதவியாளர்கள் மூவர் அமர்த்தப்படுவார்கள். 1977–78ஆம் ஆண்டில் அரசு ரூ. 4.86 இலட்சம் செலவில் 54 சிறிய சுகாதார நிலையங்களை ஆரம்பித்துள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக செயலாக்கப்படுவதாலும், பொது மக்களாலும், தனியார் நிறுவனங்களாலும் இத் திட்டம் பெரிதும் வரவேற்கப்படுவதாலும், சில தொண்டு நிறுவனங்களிடமிருந்து வரப்பெறும், மனுக்களை பொறுத்து மேலும் 50 சிறு நிலையங்களை அமைக்க உதவி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iii) பலநோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டம்.

பலநோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டம், கிராம மக்களுக்கு ஒருங்கிணைந்த சுகாதார பணிகளை வழங்குவதற்கான மற்றுமொரு திட்டமாகும்.

' மலேரியா ஒழிப்பு பராமரிப்புத் திட்டம், பெரியம்மை ஒழிப்புத் திட்டம், தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம், முதலான பல்வேறுத் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. ஒவ்வொரு திட்டப்பணிக்கென சுகாதாரப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் தமக்கென வரையறுக்கப்பட்ட திட்டப் பணிகளை, பிறதிட்டங்களுடன் ஒருமைப்பாடின்றி, செய்து வருகின்றனர்.' இவர்கள், திட்டத்தின் தேவையை பொறுத்து 10,000 முதல் 20,000 மக்கள் தொகைக்கு ஒருவர் வீதம் அமர்த்தப்பட்டுள்ளனர். இத்தகைய தனித் திட்டப்பணியாளர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகைக்கு எல்லா திட்டங்களையும் நிறைவேற்றப் பயன்படுத்தப்படுவார்களேயானல் அவர்கள் ஒரு சிறு பகுதிக்கு, சிறிய மக்கள் தொகைக்கு பணிபுரிய வேண்டி வருவதுடன், அந்தந்தப் பகுதி கிராமங்களில் வாழும் குடும்பங்களின் நோய்த் தடுப்பு முறைகளை இரண்டே சுகாதாரப் பணியாளர்கள் கவனித்துக்கொள்ள முடியும்.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும் ஒரு ஆண், மற்றும் ஒரு பெண் சுகாதாரப் பணியாளர் வீதம் அமர்த்தப்படுவார். இப் பணியாளர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள மக்கள் தொகைக்கு சாதாரண நோய்கள் எவையேனும் இருப்பின் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் 5,000 மக்கள் தொகைக்கு மொத்த சுகாதாரப்பணிகளையும் செய்து வருவார்கள். நான்கு ஆண் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒரு ஆண் மேற்பார்வையாளர் வீதமும் நான்கு பெண் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒரு பெண் மேற்பார்வையாளர் வீதமும் அமர்த்தப்படுவார்கள்.

செங்கல்பட்டு, தென்னாற்காடு, மதுரை, சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் முதற்கட்டமாக நிறைவேற்றப்படும் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்படவிருக்கும் பல்வேறு திட்டங்களின்கீழ் ஆண் சுகாதாரப் பணி

யாளர் மற்றும் ஆண் சுகாதார மேற்பார்வையாளர்களாக அமர்த்தப்படுவதற்குத் தேவையானவர்கள், ஏற்கெனவே உள்ள பல்வேறு திட்டங்களில் பணியாற்றி வருகின்றனர். பெண் சுகாதாரப் பணியாளர் மற்றும் பெண் சுகாதார மேற்பார்வையாளரைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு விரைவில் பொறுப்பேற்பார்கள்.

இந்திய அரசு 1981ஆம் ஆண்டிற்குள் இத்திட்டம் தமிழ் நாட்டில் பிற மாவட்டங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளது. அதிகமான மருத்துவச் சார்பற்ற பணியாளர்களுக்கும், துணைச் செவிலி மகப்பேறு பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டியிருப்பதால், பயிற்சியளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கையையும் பள்ளிகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

(iv) மாவட்ட வளர்ச்சி செயல் விளக்கத் திட்டம்.

மதுரை மாவட்டம், திண்டுக்கல் கோட்டத்தில் 10 ஊராட்சி ஒன்றியங்களில் காந்தி கிராம நிறுவனம் ஆத்தூர் வட்டாரத்தில் பின்பற்றிய புதிய முறைகளின்படி ஒருங்கிணைந்த ஒருமுகப்பட்ட சுகாதாரப் பணிபுரிவதற்கென்று, மாவட்ட வளர்ச்சி செயல் விளக்கத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பணியாளர் பயிற்சி நடைபெற்று வருகிறது. பயிற்சி முடிந்த பின்னர் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

III. தாய்-சேய் நலப் பணிகள்.

(அ) மகப்பேறு மற்றும் சேய் நல நிலையங்கள்.

மகப்பேற்றுக்குரிய வயதுடைய மகளிர் (15—45 ஆண்டுகள்) மற்றும் குழந்தைகள் (0—16 ஆண்டுகள் சுகாதாரக் கேடுகளுக்கு எளிதில் இரையாகிறார்கள். அவர்கள் நமது மக்கள் தொகையில் 60 சதவீதத்

தினராக உள்ளனர். அவர்களுடைய சுகாதார மேம்பாட்டுக்காகவும், நோய்த் தடுப்புக்காகவும், அவர்களிடைத் தோன்றும் நோய்களை விரைவில் கண்டறிந்து சிகிச்சையளிக்கவும் எடுத்துக் கொள்ளும் முயற்சி வளமான குழந்தைகள் மற்றும் குழந்தைகள் தாய்மார்களிடையே குறைவான இறப்பு என்ற வகையில் பெரும் பயன் தர வல்லதாகும்.

எனவே, நல்ல தரமுள்ள மகப்பேறு மற்றும் சேய் நலப் பணிகளுக்கான ஏற்பாடு எப்போதும் அரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்ருக விளங்குகிறது.

கிராமப் பகுதிகளில், அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களால் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு மகப்பேறு நிலையங்களின் மூலம் மகப்பேறு மற்றும் சேய் நலப் பணிகள் செய்யப்படுகின்றன. இந்நிலையங்களில் மகப்பேறு உதவியாளர்களின் தொழில் நுட்ப வேலைக்கு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையச் சுகாதாரப் பார்வையாளர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள் வழி காட்டுகின்றனர்.

சாதாரண பிரசவங்களைக் கவனிக்க ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு படுக்கை வசதி உள்ளது. சிக்கலான பிரசவ வேதனையுள்ள மகளிர் சிறந்த வசதிகள் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இந்த மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் 2,983 மகப்பேறு நிலையங்கள் உள்ளன. இவற்றுள் 2,880 நிலையங்கள் அரசு நிதி உதவியுடன் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன.

நகராட்சிப் பகுதிகளில், மகப்பேறு சேய் நலப் பணிகள் நகராட்சி மன்றங்கள் நடத்தும் மகப்பேறு நிலையங்கள் மற்றும் மகப்பேறு இல்லங்களினுல் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டத்துக்காக நகராட்சி மன்றங்கள் 25 சதவீத மானியம் பெறுவதற்கு

உரியனவாகும். நமது மாநிலத்தில் 128 நகராட்சி மகப்பேறு இல்லங்களும், 372 நகராட்சி மகப்பேறு நிலையங்களும் உள்ளன. இத்திட்டத்திற்கு 1976–77-ம் ஆண்டுக்கு ரூபாய் 14.93 இலட்சம் உதவி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) பள்ளிக் குழந்தைகளின் உடல் நலப்பணிகள்.

பள்ளிக் குழந்தைகளின் நலப்பணிகள் திட்டம் 1965-ல் தொடங்கப்பட்டது. தற்போது இத்திட்டம் 53 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 5 நகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஆண்டொன்றுக்கு 6 முதல் 11 வயது வரை உள்ள 2,000 பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது.; நகரப் பகுதிகளில் ஒரு நகராட்சிக்கு, ஆண்டொன்றுக்கு 10,000 பள்ளிக் குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உடல் நலம் குறைவாகத் தோன்றும் மாணவர்கட்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறப்புச் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இக்கல்வி நிறுவனங்களில், எல்லா ஆசிரியர்களும், மாணவர்களும் உடல் நலம் மற்றும் நோய்கள் பற்றிய சில பொது உண்மைகளை அறிந்து கொள்ளவும், அவர்களுடைய உடல் நலனைக் காத்துக் கொள்ளும் வழி முறைகளை அறிந்து கொள்ளவும், இப்பள்ளிகளில் சுகாதாரக் கல்வி அளிக்கப்படுகிறது. 1977 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 72,371 மாணவர்கள் மருத்துவ சோதனை செய்யப்பட்டனர்.

1978–79-ல் மேலும் பத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இத்திட்டத்தினை நீடிக்க கருதப் பட்டுள்ளது.

(இ) மூன்று நோய்த் தடுப்பு ஊசித் திட்டம்.

தமிழ்நாட்டில் மூன்று நோய்த் தடுப்பு ஊசித் திட்டம் 1964-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன்படி, கக்குவான், தொண்டை அடைப்பு, இசிவு நோய் ஆகிய நோய்களைத் தடுக்கின்ற முத்தடுப்பு ஊசி 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகப் போடப் படுகின்றது. ஒவ்வொரு குழந்தைக்கும் 8 முதல் 12 வார இடைவெளியில் இரண்டு ஊசிகள் போடப்பட வேண்டும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிராமப் பகுதிகளில் இத்திட்டத்தை தீவிரமாக நிறைவேற்றுவதற்காக 13 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மாவட்ட பொது சுகாதார செவிலி அமர்த்தப்பட்டார். மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் சுகாதாரப் பார்வையாளர்களும் படிப்படியாக அமர்த்தப்பட்டு வருகின்றனர். இதுவரை 85 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்தகைய கூடுதல் சுகாதாரப் பார்வையாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். 1978–79 ஆம் ஆண்டில் மேலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதலாக சுகாதாரப் பார்வையாளர் ஒருவரை நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் (0—5 வயது) எண்ணிக்கை வருமாறு:—

ஆண்டு.			தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை.
1974–75	..	..	1,18,528
1975–76	..	..	1,86,528
1976–77	..	..	2,62,209
1977–78	..	..	1,59,814 (டிசம்பர் 1977 வரையில்.)

மூன்று நோய்த் தடுப்பு ஊசி மருந்து கௌசாலியிலுள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து மத்திய அரசினரால் வழங்கப்படுகின்றது. 1977-ம் ஆண்டின் பிற்பகுதியில் இம்மருந்து கிடைப்பதில் கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் மூன்று நோய்த் தடுப்பு ஊசி குத்தும் திட்டத்தை செயல்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டன. எனவே, தமிழ்நாடு மற்றும் தேவையானால் மற்ற மாநிலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கிண்டி கிங் நிறுவனத்தில் தடுப்பு ஊசி மருந்தைத் தயாரிக்க இவ்வரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது.

IV ஊட்டச் சத்து மேம்பாடு.

நம் நாட்டு மக்களின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்துதல் முக்கியமான சுகாதார வளர்ச்சி நடவடிக்கைகளில் ஒன்றாகும். இதற்காக மகப்பேறு மற்றும் சேய் நல நிலையங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள், பால்வாடிகள் ஆகிய இடங்களில் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்ட சத்து பற்றிய கல்வி விளக்கம் அளிக்கப்படுகிறது.

தாய்மார்கள், குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை மேம்பாட்டுக்கான சில சிறப்புத் திட்டங்கள் வருமாறு :—

(1) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்.

(2) சேய் கவனிப்பு நிலையங்கள்.

(3) ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் வைட்டமின் ' ஏ ' உயிரின் சத்துக் குறைபாட்டினால் குழந்தைகளிடையே ஏற்படும் பார்வை இழப்பைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப் படுத்தலுக்கான மருத்துவ வசதித் திட்டம்.

(4) மலைவாழ் பழங்குடி மக்கள் வளர்ச்சித் திட்டம்.

(5) ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்.

(6) 'கேர்' நிறுவன உதவியுடன் நடைபெறும் தாய் சேய் நல உணவு வழங்கும் திட்டம்.

(1) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்.—இத்திட்டம் தல்லி வட்டாரம் மற்றும் நிலக்கோட்டை வட்டாரத்திலும், சென்னை நகரில் சில குடிசைப் பகுதிகளிலும் 1976-ல் தொடங்கப்பட்டது. இவ்விரண்டு கிராம வட்டாரங்களிலும் 31,348 பள்ளிக் குழந்தைகள் மற்றும் 20,146 தாய்மார்கள் பரிசோதனை செய்யப்பட்டனர். குழந்தைகளுக்கு காச நோய், பெரியம்மை, தொண்டை அடைப்பு, கக்குவான், இசிவு நோய்களுக்கான தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. சத்துக் குறைபாடுகளை ஈடு செய்வதற்காக உணவுப் பண்டங்களும் கொடுக்கப்பட்டன.

(2) சேய் கவனிப்பு நிலையங்கள்.—சேய் கவனிப்பு முன்னோடித் திட்டம் மதுரை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 கிராமங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புவனம் வட்டாரத்தில் 46 கிராமங்களிலும் திட்டப்பணியில் சேரா திட்டமாக வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப் படுகிறது. இத்திட்டத்தின் பரந்த குறிக்கோள்களாவன:—

(i) ஒவ்வொரு கிராமத்திலும் ஊட்டச் சத்து மறுவாழ்வு நிலையம் ஒன்று வீதம் படிப்படியாகத் தொடங்குதல். மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையின் ஊட்டச் சத்து மறுவாழ்வு நிலையத்தில் குழந்தை ஊட்டச் சத்துத் துறையில் பயிற்சி பெற்ற ஒரு பால சேவிகாவின் பொறுப்பின்கீழ் ஒவ்வொரு ஊட்டச் சத்து மறுவாழ்வு நிலையமும் இருக்கும். ஊட்டச் சத்தில் தொடர்ந்து ஆர்வம் இருக்கும் வகையில் அவர் தாய்மார்களுக்கு அறிவுறுத்துவார்.

(ii) கிராம மக்களுக்கு உணவு வழங்குதல், மற்றும் நிலையம் அமைப்பதற்குத் தேவைப்படும் பிற வசதிகளைச் செய்தலின் மூலம் ஆர்வமுடன் ஈடுபடச் செய்தல்.

(iii) குழந்தைகளின் ஊட்டச் சத்து குறைபாட்டைக் குறைத்தல், மற்றும் 5 வயதுக்கு, குறைந்த குழந்தைகளை சராசரி உயரம் மற்றும் எடைக்குக் கொண்டு வருதல்.

(3) ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் வைட்டமின் 'ஏ' உயிர்ச் சத்துக் குறைபாடு காரணமாக குழந்தைகளிடையே தோன்றும் கண் பார்வை இழப்பைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

செயல்முறை ஊட்டச் சத்து உணவுத் திட்டம் செயல்படாத ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் குழந்தைகளின் கண் பார்வையிழப்பை தடுத்தல் மற்றும் கட்டுப் படுத்துவதற்கான திட்டத்தை சமூக நலத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றுவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்பளித்துள்ளது.

இத்திட்டம் கீழ்க் கண்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. :—

வட்டாரங்கள். (1)	மாவட்டங்கள். (2)
பனைமரத்துப்பட்டி	சேலம்.
பூதலூர்	தஞ்சாவூர்.
நரிக்குடி	இராமநாதபுரம்.
அன்னவாசல்	புதுக்கோட்டை.
அந்தநல்லூர்	திருச்சிராப்பள்ளி.
கணியம்பாடி	வட ஆற்காடு.

வட்டாரங்கள் (1)	மாவட்டங்கள். (2)
திருத்தணி	செங்கற்பட்டு (வடக்கு).
அச்சரப்பாக்கம்	செங்கற்பட்டு (தெற்கு).
பரங்கிப்பேட்டை	தென்னாற்காடு.
கொட்டாம்பட்டி	மதுரை.
கிள்ளியூர்	கன்னியாகுமரி.
உதகமண்டலம்	நீலகிரி.

மேற்குறித்த வட்டாரங்களில் கீரைகள், காய்கறிகள், பழங்கள், முட்டை, பால், மீன் முதலிய வைட்டமின் 'ஏ' சத்துமிக்க உள்ளூரில் கிடைக்கத்தக்க உணவுப் பொருட்களை உட்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குகின்ற ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை, மருத்துவ சார்பற்ற பணியாளர்கள் மற்றும் சமுதாயப் பணியாளர்கள் மேற்கொள்கின்றனர். அவர்கள், சத்துக் குறைப்பாட்டு நோய்களைக் கண்டறிந்து 6 மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' டானிக்குகள் வழங்குகின்றனர்.

(4) மலைவாழ் பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம்.—இம்மலைப் பகுதிகளில் வாழ்கின்ற பழங்குடி மக்களின் சுகாதாரப் பணிகளுக்கென்று கல்ராயன் மலைகளில் ஓர் இயங்கு மருத்துவப் பிரிவை அரசு அமைத்துள்ளது. இப்பகுதி மக்களுக்கு சத்துக்குறை ஈடு செய்யும் உணவுப் பொருட்களும், வைட்டமின் 'ஏ' மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன. இப்பகுதிகளில் கிராமக் கழிவிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

(5) ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம்.—1976ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து, சேலம் நகராட்சியிலும், சேலம் மாவட்டம், கண்ணன் குறிச்சி வட்டாரத்திலும் "கேர்" நிறுவன உதவியுடன் தமிழ்நாடு அரசு, குடும்ப நல முறைகளை ஏற்றுக் கொண்டவர்களுக்காக ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் "கேர்" நிறுவனத்தால் வழங்கப்பட்ட பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட ஊட்ட உணவுகளை வழங்குதல், நோய்த் தடுப்பு ஊசி போடுதல், குடும்ப நல முறைகளை ஏற்றுக் கொண்ட குடும்பங்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட பள்ளி செல்லும் வயதடையா சிறுவர், சிறுமியர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலானோருக்கும் உடல் நலப் பரிசோதனை மற்றும் வைட்டமின் மாத்திரைகள் வழங்குதல் முதலியன மேற்கொள்ளப்படுகிறது.

(6) உணவு வழங்குதல் திட்டம்.—ஏழை மக்களுக்கு குறிப்பாக கிராமப்பகுதிகளிலும் நகரங்களில் குடிசைப் பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களுக்கு உதவுகின்ற வகையில் மகப்பேறு மற்றும் சேய் நல நடவடிக்கைகள், 'பால்வாடி' நடவடிக்கைகள் இவற்றின் ஒரு பகுதியாக சத்துக் குறை நிரப்பு உணவு வழங்குத் திட்டம் நிறைவேற்றப் படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் ஒரு இலட்சத்து பத்தாயிரம் பேர்களுக்கு 3,306 உணவு வழங்கும் நிறுவனங்கள் மூலம், "கேர்" வழங்கும் கூடுதல் உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவோர் கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் நிலையிலுள்ள தாய்மார்கள் அல்லது பள்ளிப் பருவம் அடைந்திராத இளஞ் சிறார்களும் ஆவர்.

V. உணவுக் கலப்படத்தைத் தடுத்தல்.

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தல், கடுமையான சமூகத் தீமைகளில் ஒன்றாகும். சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதாரச் சட்டத்தின் மூலம் இத்தீமையைக் கட்டுப்படுத்த முயற்சி மேற் கொள்ளப்படுகிறது. மக்கள் நம்பத்தக்க தரமுள்ள உணவுப் பண்டங்களை மட்டுமே வாங்குவதன் மூலம் சிறந்த உணவுப் பொருட்கள் விற்பனையை ஊக்குவிப்பதற்கும், உணவுப் பண்டங்கள் தரம் குறைந்

துள்ளன மற்றும் கலப்படம் செய்யப்பட்டுள்ளன என்ற சந்தேகம் எழும்போது அறிவிப்பாளர்களாகச் செயல்படுத்துவதற்கும், கிராமம் மற்றும் நகரப் பகுதிகளில் பணிபுரியும் சுகாதார மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள், பிற சுகாதாரப் பணியாளர்கள், சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள் கின்றனர். கலப்பட உணவு தயாரிப்போர், சேமித்து வைப்போர், விற்பனை செய்வோர் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்காக 1977ஆம் ஆண்டு விற்பனைக்கு வைக்கப் பட்ட உணவுப் பொருள்களில் 22,700 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவற்றுள் 4,300 மாதிரிகளில் சோதனைமூலம், கலப்படம் செய்யப் பட்டதாக கண்டறியப்பட்டது. 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிவரை அபராதமாக விதிக்கப்பட்ட தொகை ரூ. 10.73 இலட்சமாகும். அதிகமாக உணவு மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கு இப்பொழுதுள்ள ஆய்வுக் கூடங்களில் வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. பாளையங்கோட்டையில் ஆய்வுக்கூடம் கட்டப்பட்டு இலாக்காவால் எடுத்துக் கொள்ளப்பட்டது. சேலத்தில் ஆய்வுக்கூடம் கட்டுதல் முடியும் தருணத்தில் இருக்கிறது. இத்துடன் நமது மாநிலத்தில் மொத்தம் 7 (ஏழு) உணவு ஆய்வகங்கள் உள்ளன. இவற்றின்மூலம் ஆண்டொன்றுக்கு 50,000 உணவு மாதிரிகளை பகுப்பாய்வு செய்து அறிக்கை அனுப்பமுடியும்.

உணவுக் கலப்பட தடுப்புச் சட்ட விதிகளைச் செயல்படுத்துவதற்காக சுகாதார மற்றும் துப்புரவு ஆய்வாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1977ஆம் ஆண்டு 121 ஆய்வாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

VI. தொற்று நோய்த் தடுப்பு.

1. வாந்திபேதி (காலரா).—வட ஆற்காடு, தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மாவட்டங்கள் இந்நோய் பரவுதற்குரிய இடங்கள்.

[1978 மார்ச் 23

அரசு போதுமான காலரா தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சுகாதார ஆய்வாளர்கள், காலரா பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற சிறப்புப் பணியாளர்கள், நோய்க்குரிய இம்மாவட்டங்களில் கா ராத் தடுப்புக்காக அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், மாவட்டத் தலைநகரங்களில் 64 தனி கொள்ளைநோய் சுகாதார ஆய்வாளர்கள் உள்ளனர். அவர்கள் வாந்திபேதி, குடல் இரப்பை நோய்கள் அறிவிக்கப்படும் பகுதிகளுக்கு காலராத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுப்பப்படுகின்றனர்.

2. பிளேக். நோய் —தமிழ்நாட்டில் 1965ஆம் ஆண்டுமுதல் பிளேக் நோய் முற்றிலும் இல்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வட ஆற்காடு, தர்மபுரி, கோயம்புத்தூர் முதலான பிளேக் நோய் பரவும் மாவட்டங்களில் பிளேக் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

3. பெரியம்மை. —தமிழ்நாட்டில் 1963ஆம் ஆண்டிலிருந்து தேசீய பெரியம்மை ஒழிப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டபின்னர், 1969ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் பெரியம்மை நோய் இல்லை. 1974ஆம் ஆண்டு வரை வெளி மாநிலங்களிலிருந்து வந்த சிலருக்கு இந்நோய் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. "இந்தியா பெரியம்மையிலிருந்து அறவே விடுபட்டுள்ளது" என்று 1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் தேதியில் உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது இதுகுறித்து நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் இருக்கக்கூடாது என சர்வ தேச பெரியம்மை பற்றிய நிபுணர் குழுவும் இந்திய அரசும் எச்சரித்துள்ளன. உலகம் முழுவதும் பெரியம்மை நோயிலிருந்து விடுபட்டதாக விளம்பும் வரையில் மேற்கண்ட நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்பட வேண்டுமென தெரிவித்துள்ளன:—

(i) புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு முதல் நிலையில் அம்மைப்பால் குத்துதல்;

1978 மார்ச் 23]

(ii) தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலம் பெரியம்மை என ஐயப்படத்தக்க நோய் இருக்கும் பகுதிகளை கண்டறிந்து அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், தவிர ஆய்வுக் கூடங்களில் பரிசோதனை செய்வதற்காக மாதிரிகளை சேகரித்தல்.

இந்த நடவடிக்கைகள் நம் மாநிலத்திலே தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தேசீய பெரியம்மை ஒழிப்புத் திட்ட அலுவலர்கள் மேலே கூறியுள்ள வேலைகளுடன், தடுப்பு ஊசி போடும் விரிவுத் திட்டத்தை நிறைவேற்ற ஈடுபடுவர். தொண்டை அழற்சி நோய், கக்குவான், இசிவு நோய், சின்னம்மை, இளம்பிள்ளைவாதம், காசநோய் ஆகியவற்றின் கண்காணிப்புக்கும் தடுப்பு ஊசி குத்துவதற்கும் இத்திட்டம் ஒருங்கிணைந்து செயற்படும். தற்பொழுது மாநிலத் தலைமை இடத்திலுள்ள தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டப்பிரிவு, மத்திய அரசின் கருத்துரைப்படி 'கொள்ளை நோயியல் நோய்த் தடுப்பு ஊசி குத்தும் பிரிவு' என பெயர் மாற்றம் செய்யப்படும். அலுவலர்கள் உலக சுகாதார நிறுவனத்தின் நிதி உதவியுடன் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கூடுதல் பணிகளை மேற்கொள்ள மறு பயிற்சியளிக்கப்படுவர். தடுப்பு ஊசி மருந்துகளும், அவைகளை சேமித்து வைப்பதற்கா குளிர்பதன இயந்திரம் போன்ற கருவிகளும் இந்திய அரசினரால் வழங்கப்படும்.

4. மலேரியா.—தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றி வந்தது. 1977-ல் இந்திய அரசு தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் திருத்தப்பட்ட செயல் திட்டத்தை எல்லா மலேரியா நோயாளிகளையும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளிப்பதன் மூலமும், மலேரியாவினால் ஏற்படும் நலிவு மற்றும் இறப்புகளை ஒழித்தல் அல்லது குறைத்தல் மற்றும் மலேரியா பரவுதலைக்

குறைப்பதற்காக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் குறிக்கோளுடன் வகுக்கப்பட்டுள்ளது. இத் திருத்தப்பட்ட செயல் திட்டம் 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து தமிழ் நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

நமது மாநிலத்தில் தற்போது சென்னை, சேலம், ஈரோடு, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, வேலூர், தூத்துக்குடி முதலான சில நகர் பகுதிகளிலும், வட ஆற்காடு, தென்னார்க்காடு, தர்மபுரி மாவட்டங்களிலும் பெண்ணையாற்றங்கரையோரக் கிராமப்பகுதிகளிலும் இராமேசுவரம் தீவு உட்பட இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரை கிராமங்களில் மட்டுமே மலேரியா நோய் உள்ளது. நகர்ப்பகுதிகளில் தீவிர நோய் கண்டறிதல் மற்றும் மருந்து வழங்குதல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; இத்துடன் மலேரியா பரப்பும் கொசு உற்பத்தியை குறைப்பதற்கான "புழு ஒழிப்பு பணிகளும்" மேற்கொள்ளப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் மலேரியா காய்ச்சலைக் கண்டறிந்து அவரவர் வீடுகளிலேயே சிகிச்சை அளிப்பதற்காக 15 நாட்களுக்கொருமுறை ஒவ்வொரு குடும்பத்தினரையும் அலுவலர்கள் பார்வையிட்டு வருகின்றனர். மேலும் கிராமங்களில் எல்லா நேரங்களிலும், மலேரியாத் தடுப்பு மருந்துகள் கிடைக்கும் வகையில் ஆர்வமுள்ள கிராமத்தினரின் ஒத்துழைப்புடன் கிராமங்களில் காய்ச்சல் சிகிச்சை நிலையங்களும், மருந்து வழங்கும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 2,625 கிராமங்களில் இத்தகைய மருந்து வழங்கு நிலையங்கள் காய்ச்சல் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மலாதியன் அல்லது டி.டி.டி. பி.எச்.சி. மருந்து தெளித்தல் போன்ற கொசு ஒழிப்பு நடவடிக்கைகளினால் காய்ச்சலைக் கண்டறிதலும் சிகிச்சையளித்தலும் வலுப்படுத்தப்படுகின்றன. இத்தகைய மருந்து தெளிப்பு வேலை இராமேஸ்வரம் தீவிலும்

இராமநாதபுரம் மாவட்டத்தின் சில பகுதிகளிலும் தென்னார்க்காடு, வடார்க்காடு, தர்மபுரி, சேலம் மாவட்டங்களிலும் பெரிய அளவில் செய்யப்படுகிறது.

ஏற்கெனவே மத்திய அரசு திட்டமான நகர்புற மலேரியா திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நகரங்களைத் தவிர, வேலூர், ஈரோடு நகரங்களுக்கும் நகர்ப்புற மலேரியாத் திட்டத்தை அரசு விஸ்தரித்துள்ளது. பெருமளவில் நோய் பரவும் இடங்களான திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி நகரங்களிலும் இத்திட்டத்தை மேற்கொள்ளும்படி இந்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

1977-ம் ஆண்டில் மலேரியா நோய் கண்டுள்ளவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. 1977-ம் ஆண்டில் மொத்தம் பதிவு செய்யப்பட்ட மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை 79,537. ஆனால் 1976-ம் ஆண்டில் மலேரியா கண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 1,03,921 ஆக இருந்தது.

5. யானைக்கால்நோய்.—நமது மாநிலத்தில் க்யூலெக்ஸ் என்றவகை கொசுக்களினால். பரப்பப்படும், யானைக்கால் நோய் இருக்கிறது. இந்த நோய் மிகுதியாகப் பரவும் பகுதிகளில் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தை 1957—58-லிருந்து நாம் நிறைவேற்றி வருகிறோம். நான்காம் ஐந்தாண்டு திட்ட காலங்களில் இதுவரை பதின்மூன்று கட்டுப்பாட்டு யூனிட்டுகள், ஒரு சர்வே யூனிட்டு, மூன்று யானைக்கால் நோய் கட்டுப்பாட்டு கிளினிக்குகள் நிறுவப்பட்டன. மேலும் இரண்டு கட்டுப்பாட்டு யூனிட்டுகளும், பத்து யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுக் கிளினிக்குகளும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளன.

அரசு செயற்படுத்தும் யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்துடன், கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை உதவி மானியத் திட்டத்தின் மூலம் 169 உள்ளாட்சி நிறுவனங்கள் நிறைவேற்றி வருகின்றன.

6. நரம்பு சிலந்திநோய் ;—இத்திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் பின்வருமாறு ;—

(i) நரம்புச் சிலந்தி நோய் கண்டுள்ளவர்களைக் கண்டறிதலும், அவர்களுக்கு சிகிச்சையளித்தலும்;

(ii) இந்நோயைப் பரவச் செய்யும் சைகிலோப் என்னும் ஒரு வகை நத்தையைக் கொல்வதற்காக ஆறு வாரங்கட்கு ஒரு முறை நோய்க் கிருமிகள் உள்ள தண்ணீரில் டி.டி.டி. (D.D.T.) 5 பி.பி.எம். (5 P.P.M.) பூச்சிக் கொல்லி மருந்தை தெளித்தல்.

7. யாஸ் (சரும) நோய்.—யாஸ் (சரும) நோய் ஒழிப்புத் திட்டத்தின் ஒரு யூனிட் திட்டப் பணியாக சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூரில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்த யூனிட் கல்ராயன் மலைகளில் ஆய்வு நடத்தி வருகிறது. 1977–78 ஆம் ஆண்டில், இந்த யூனிட் 176 யாஸ் நோயாளிகளை கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்தது.

8. காலா அஜார் (கருங்காய்ச்சல்) :—காலா அஜார் கட்டுப் பாட்டுத் திட்டம் இராமநாதபுரத்தில் 1977ம் ஆண்டு மே மாதம் வரை செயல்பட்டு வந்தது. அம்மாவட்டத்தில் வேலை முடிந்த பிறகு இப்பிரிவு திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாற்றப் பட்டு விட்டது. இப்பிரிவு காலா அஜார் நோயாளிகளைக் கண் டறியவும் மக்களிடையே இந்நோய் பரப்புகின்ற மணல் ஈக்களின் செறிவையும் இம் மாவட்டத்தில் ஆய்வு நடத்துகிறது. இப்பிரி வினால் 1977 ஆம் ஆண்டில் 48 நோயாளிகள் கண்டறியப் பட்ட னர். கண்டறியப்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்கென்று அருகி லுள்ள மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

VII. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நோய்த் தடுப்பு சுகாதாரப் பணிகள்.

1977 அக்டோபர், நவம்பர் மாதங்களில் சென்னை மாநகரம் மற்றும் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும், மதுரை, இராமநாதபுரம், தென்னார்காடு மாவட்டங் களின் பகுதிகளும் புயலினாலும் பெருமழையினாலும் கடுமையாக பாதிக்கப்பட்டன. சென்னை மாநகரிலும் மாவட்டங்களிலும் தீவிரமான வெள்ளத் துயர் துடைப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. காலராத் தடுப்பு ஊசி மருந்துகள் மற்றும்

தேவையான எல்லா மருந்துகளும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் போதுமான அளவில் வெள்ளம் மற்றும் புயலினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு விரைந்து அனுப்பப்பட்டன. மொத்தம் 60 இலட்சம் காலராத் தடுப்பு ஊசிகள் (வெள்ளம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 51 இலட்சமும், சென்னை மாநகரில் 9 இலட்சமும்) போடப்பட்டன. வெள்ளத் துயர் துடைப்புப் பணிகளில் 1,500 சுகாதாரப் பணியாளர்கள், 44 சுகாதார அலுவலர்களின் மேற்பார்வையில் 8 மக்கள் நல்வாழ்வுத் தடுப்பு மருந்துத் துறை உதவி இயக்குநர்களின் நேரடி மேற் பார்வையின் கீழ் ஈடுபடுத்தப் பட்டனர். இவர்கள் குறிப்பாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். சுகாதாரப் பணி யாளர்கள் காலராத் தடுப்பு ஊசிகள் போடுவதுடன்கூட, இறந்த வர்களின் உடலை அப்புறப்படுத்தல், குப்பைகள் முதலான கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் போன்ற வேலைகளிலும் உதவி செய்தனர். வெள்ளத் துயர் துடைப்புப் பணியின் பகுதியாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மொத்தம் 4·4 இலட்சம் மக்கள் எல்லா வகை நோய்களுக்காகவும் சுகாதாரக் குழுக்களினால் சிகிச்சை அளிக்கப்பட்டனர். மக்கள் நல்வாழ்வு தடுப்பு மருந்துத் துறைப் பணியளார்கள் சரியான நேரத்தில் தடுப்பு நடவடிக்கைகளை இரவு பகல் 24 மணி நேரமும் மேற் கொள்ளாமல் இருந்திருந்தால், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பெரும்பகுதி மக்களின் எண்ணிக்கையையும் நீர் வழி பரவும் நோய்களையும் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது நிலைமை மோசமடைந்திருக்கும். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ளூர்ப் பணியாளர்களைக் கொண்டு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன.

VIII. சந்தைகளும், திருவிழாக்களும்.

சந்தைகளிலும் திருவிழாக்களிலும் செய்யப்பட்டுள்ள துப்புரவு ஏற்பாடுகள் மக்கள் நல்வாழ்வு தடுப்பு மருந்துத் துறைப் பணி யாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகிறது. சில முக்கிய திருவிழாக்களின் தொடர்பாகச் செய்யப்படும் துப்புரவு ஏற்பாடு கள், மக்கள் நல்வாழ்வுத் துறை உதவி இயக்குநரால் நேரடி மேற் பார்வை செய்யப்படுகின்றன. எல்லா சந்தைகளும் மற்றும் திரு விழாக்களும் எந்தவிதக் கொள்ளை நோய்களும் தோன்றாமல் நடந்தேறின.

IX. சுகாதாரக் கல்வி.

சுகாதாரப் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காண்பதற்கு மக்களின் மனமுவந்த ஒத்துழைப்பு தேவையாகும். இந்த

உண்மையை உணர்ந்து மாநில சுகாதாரக் கல்வி கழகம், கீழ்க் கண்ட குறிக்கோள்களுடன் அமைக்கப்பட்டுள்ளது :—

1. மக்கள் தங்களின் சுகாதாரப் பிரச்சினைகளை புரிந்து கொள்ள உதவுதல்.

2. சிறந்த சுகாதாரத் தரங்களை மக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ள உதவுதல்.

3. மக்கள் அவர்களுடைய சொந்த முயற்சி மற்றும் செயல்களின் மூலம் அவர்களுடைய சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொறுப்பு ஏற்பதற்கு உதவுதல்.

4. சுகாதாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் நிறைவேற்றுவதில் மக்களின் ஒத்துழைப்பையும் மனமுவந்த ஈடுபாட்டையும் திரட்டுதல்.

5. சுகாதராக் கல்வி முறைகளில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

இக் கழகம் தென்னார்க்காடு, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய ஏழு மாவட்டங்களுக்கு "யூனிசெப்" நிறுவனத்திடமிருந்து, ஒலி-ஒளிக் காட்சி சாதனங்களைப் பெற்றுள்ளது. திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர், செங்கற்பட்டு (பூந்தமல்லி) மாவட்டங்களில் கிராமக் கழிப்பிட திட்டம் பற்றியும், சுற்றுப் புற துப்புரவு பற்றியும் கல்வி விளக்கம் அளிப்பதற்கு ஆராய்ச்சிச் செயல் திட்ட பிரிவுகள் பணிபுரிந்துவருகின்றன.

இக் கழகம் சுகாதாரக் கல்வி பற்றிய பாடங்களைப் பல்வேறு வகுப்புகளில் பாடத் திட்டத்தில் சேர்ப்பதற்கு உதவி செய்துள்ளது. இதுவரை மாநிலத்தில் பல்வேறு பள்ளிகளில் 579 ஆசிரியர்களுக்கு பள்ளிகளில் சுகாதாரக் கல்வி கற்பிக்க சுகாதாரக் கல்வி முறைகளில் பயிற்சி அளித்துள்ளது. மேலும் இந்திய அரசின் தேசியப் பள்ளிச் சுகாதார திட்டத்தின்கீழ் பள்ளிகளில் சுகாதார கல்வி பழக்கங்களை செயல் விளக்கங்களின் மூலம் நடத்திக் காட்ட 30 பள்ளிகளை மேற்கொள்ள இது கருதியுள்ளது.

தர்மபுரி மாவட்ட ஆரம்ப சுகாதார நிலையப் பணி அலுவலர்கட்கு சுகாதாரக் கல்வித் திட்ட பயிற்சி அளிக்கப்பட்டது.

1977-ம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நோய்க் கிருமிகள் பாதிக்காத முறையில் தூய்மை படுத்திய நீரைக் குடித்தல் முதலியன பற்றி

மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு மக்களிடையே வினியோகிப்பதற்காக மாநில சுகாதாரக் கல்வி அச்சகம் சுவரொட்டிகள், துண்டு அறிவிப்புகள் உட்பட 76 வெளியீடுகளை அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

திரைப்படத் தொகுப்பகம் கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் முதலான இடங்களில் திரையிடுவதற்கென்று 552 படங்களை வழங்கியுள்ளது. மேலும் இக்கழகம் பல்வேறு பொது சுகாதாரப் பொருள் பற்றி 38 திரைப்படக் காட்சிகள், 30 பொம்மலாட்டக் காட்சிகள் நடத்தியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டாரத்தில் யூனிசெப் நிறுவன உதவியுடன் ஒரு சிறப்பு சுகாதாரக் கல்வித் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதற்காக கிராமத்திற்கு ஒருவர் வீதம் 28 உறுப்பினர்கள் அக்கிராமத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்கு தேவைப்படும் துணைச் சாதனங்கள் முதலியன தயாரிக்கப்பட்டு வருகின்றன.

X. பிறப்பு இறப்புப் பதிவு.

பல்வேறு சுகாதாரத திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்த மக்கள் பிறப்பு இறப்பு புள்ளிவிபரங்களைச் சேகரிப்பது இன்றியமையாததாகும். 1899 ஆம் ஆண்டு III-வது சட்டம், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் சென்னை மாநகராட்சி சட்டம், 1919 இவற்றின் கீழ் 30—6—1977 வரை செய்யப்பட்டு வந்த பிறப்பு இறப்புகள் பதிவு 1—7—1977 முதல் 1969-ம் ஆண்டு 18-வது மத்திய சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட சட்டங்களின்கீழ் குடி முறைப் பதிவு முடிவு பெறவில்லை. எனவே சரியான பிறப்பு வீதம் இறப்பு வீதம் முதலியவற்றையும் மக்கள் தொகை வளர்ச்சி வீதத்தையும் அறிவதற்கு மாதிரிப் பதிவு திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது.

XI. மருந்து கட்டுப்பாடு.

மக்கள் நல்வாழ்வு தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் இம்மாநிலத்தின் மருந்து கட்டுப்பாடு அதிகாரி ஆவார். அவருக்கு உதவியாக ஒரு இணை மாநில மருந்து கட்டுப்பாடு அதிகாரியும், இரண்டு உதவி மாநில மருந்து கட்டுப்பாடு அதிகாரிகளும், 59 மருந்து ஆய்வாளர்களும், பத்து முதுநிலை மருந்து ஆய்வாளர்களும் உள்ளனர். மருந்து கட்டுப்பாடு அமைப்பின் முக்கியப் பணிகளாவன :—

(அ) மருந்து மற்றும் வாசனைப் பொருட்கள் தயாரிப்பு, விற்பனை விநியோகம் முதலியவற்றை ஒழுங்கு படுத்துவதன் மூலமாக, மருந்து மற்றும் வாசனைப் பொருட்கள் சட்டத்தை அமுல் செய்வது.

(ஆ) மருந்துப் பொருட்களின் அதிக பட்ச சில்லரை விலை நிர்ணயிக்கும் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட 1970-ம் ஆண்டு மருந்துப் பொருள் (விலைக்கட்டுப்பாடு) ஆணையின் விதித் துறைகளைச் செயல் படுத்தல்.

(இ) 1954-ம் வருடத்திய மருந்து மற்றும் மாந்திரீக நிவாரண (தவிர்க்கப்பட வேண்டிய விளம்பரங்கள்) சட்டத்தை அமுலாக்குதல்.

(ஈ) அபாய மருந்து சட்டத்தின்கீழ், அபாய மருந்துகளை கைவசம் வைத்திருத்தல், தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவைகளை ஒழுங்கு படுத்துதல்.

(உ) மருந்துகள் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்தல், லெவி சர்க்கரையை மருந்து தயாரிக்கும் தொழில்களுக்கு பங்கிடுதல்.

(ஊ) சாராவி மற்றும் போதைப் பொருட்கள் கலந்திருக்கும் மருந்து, உள மயக்கம் தரும் மருந்துகள் மற்றும் வாசனைக் கலவைகளை தவறான வழிகளில் பயன்படுத்துவதை தடுக்க நடவடிக்கை எடுத்தல்.

(எ) பொது மக்களுக்கு அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கின்றனவா என்பதைக் கவனித்து எங்கெல்லாம் மருந்துகளின் பற்றாக்குறை ஏற்படும் என்று தோன்றுகிறதோ அங்கெல்லாம் போதுமான நிவாரண நடவடிக்கைகள் எடுத்தல்.

(ஏ) மருந்துகளின் எதிர் விளைவுகள் பற்றிய முறையீடுகளை புலனாய்தல்.

(ஐ) சோதனை வசதிகள்.

மருந்து ஆய்வாளர்களிடம் இருந்து வரும் மாதிரி மருந்துகள் மற்றும் வாசனைப் பொருட்களை மக்கள் நல்வாழ்வு தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கீழ் உள்ள கிண்டி கிங் நிலையத்திலுள்ள அரசு பகுப்பாய்வு ஆராய்ச்சியாளர் சோதனை செய்கிறார்.

1974-ல் அனுமதி வழங்கப்பட்ட மருந்து ஆய்வுக்கூடம் ரூ. 18 இலட்சம் மதிப்புள்ள புதிய உபகரணங்களுடனும், வசதிகளுடனும் கூடிய சீக்கிரத்தில் செயல்படவிருக்கிறது. அங்காடிகளில் தரமுள்ள மருந்துகள் கிடைப்பதற்கான வழி வகை செய்வதில் இச்சோதனைக் கூடம் மிக உதவியாக இருக்கும்.

போலி மருந்துக்களைப் பற்றி மக்களை எச்சரிக்கும் வகையிலான 250 தொகுப்பு சினிமா சிலேடுகள் (ஒவ்வொரு தொகுப்பிலும் 4 சிலேடுகள் இருக்கும்) தயாரிக்கப்பட்டு சென்னை மாநகர ஆணையாளருக்கும், மாவட்டங்களில் உள்ள பொது சுகாதார அலுவலர்களுக்கும் திரை அரங்குகளில் வெளியிடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன.

ஆயுர்வேதம், யுனானி, சித்த மருந்துகள் தயாரிப்பது மற்றும் விற்பனை செய்வது பற்றிய மருந்துகள் மற்றும் வாசனைப் பொருட்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகளை மருந்து கட்டுப்பாடு நிர்வாகம் 1-6-1977 முதல் அமுல் செய்து வரு

கிறது. அரிஷ்டம், ஆசவம் போன்றவைகளின் தயாரிப்பு மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்த இது உதவுகிறது.

XII. சுற்றுப்புற மாசு கட்டுப்படுத்துதல்.

இம்மாநிலம் வேகமாக தொழில் மயம் ஆக்கப்படுவதால், தொழிற்சாலைகளிலிருந்து வரையறையில்லாமல் வெளியேறும் திட, திரவ; வாயு, கழிவுப் பொருட்கள் சுற்றுப்புறத்தை அசுத்தப் படுத்தி, நிலம், நீர், காற்று ஆகியவைகளை பாதிக்கின்றன. தமிழ்நாட்டில், இத்தகைய சுகாதார சீர்கேட்டை உண்டாக்கும் பெரிய தொழிற்சாலைகள் பின்வருமாறு:—

(1) தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.

(2) சர்க்கரை தொழிற்சாலைகளும், வடிப்பகங்களும்.

(3) காகிதம் மற்றும் காகிதக்கூழ் தொழிற்சாலைகள்;

(4) சிமெண்டு தொழிற்சாலைகள்.

(5) இரசாயன உரத் தொழிற்சாலைகள்.

(6) அனல் மின் நிலையங்கள்.

(7) பெட்ரோல் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள்.

தொழிற்சாலைகள் போதுமான அளவில் கழிவுப் பொருட்களை அகற்ற மாசு தடுப்பு முறைகள் போதிய அளவில் உள்ளனவா என்பதையும், தூய்மைக் கேட்டை விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் தக்கமுறையில் அகற்றப்படுகின்றனவா என்பதையும் கண்டறிய கிங் நிலையத்தில் இருக்கும் அரசு நீர்ப்பகுப்பு ஆய்வுக் கூடம் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை நேரிடை ஆய்வுகளையும் கழிவுப் பொருட்களை அனுப்பு

தல் பற்றியவைகளையும் பரிசோதித்து வருகின்றது. இதுவுமல்லாமல், தொழிற்சாலைகளில் கழிவுப்பொருட்கள், சுற்றுப்புறங்களை பாதிக்கின்றனவா என்று சரிபார்க்க பல வகையான நிலநீர், தரை நீர், பாதுகாக்கப்பட்ட நீர் இவையாவும் பரிசோதிக்கப்படுகின்றன.

தொழிற்சாலைகளால் மேற்கொள்ளப்படுகின்ற கழிவுப் பொருள் வெளியேற்றும் நடவடிக்கைகள் காற்று எந்த அளவுக்கு எந்த விதமாக மாசுபடுத்தப்படுகின்றது என்பதை ஆராய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்கள், புகைகள், தூசுகள் இவைகளால் சுற்றுப்புறம் மாசுபடுதல் ஆராயப்படுகின்றது.

இந்த ஆய்வுக் கூடம், மாநிலத்தில் சுற்றுப்புற சூழல்கள் தூய்மை கேடு அடைவதாகத் தெரியவரும் இடங்களுக்கு பணியாளர்களை நேரடியாக அனுப்பி வைக்கிறது. சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய அந்த இடத்தை சோதித்து அப்பகுதியை ஆய்வு செய்து கழிவுப் பொருட்கள், நீர், காற்று இவைகளின் மாதிரிகளை சேகரித்து சோதனை செய்யப்படுகின்றன.

நம்மாநிலத்தில் தொழிற்சாலைகளை நிறுவ சுகாதார துறையினரால் அனுமதி வழங்கப்படுகிறது. தொழிலின் தன்மை மேற்கொள்ளப்படும் முறைகள் வெளியேற்றப்படக்கூடிய நலக்கேடு விளைவிக்கின்ற திட, திரவ, வாயுப் பொருள்களின் தன்மை மாசுத் தடுப்பு ஏற்பாடுகள், கழிவுப் பொருட்களை வெளிப்படுத்தும் ஏற்பாடுகள், இந்த இடம் தொழிற்சாலைக்கு உகந்ததாயிருத்தல், ஏற்படக்கூடிய புறச் சூழ்நிலை பாதிப்பு முதலியன நன்கு ஆய்வு செய்யப்படுகின்றன. அதன் பின்னர் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ள இடம் ஆராயப்பட்டு அவ்வாறு தொழிற்சாலைகள் நிறுவப்படுவதனுல் சுகாதாரக்கேடு ஏதும் விளையாது என அறிந்த பின்னரே புதிய தொழிற்சாலைகளை தொடங்க அனுமதியளிக்கப்படுகிறது.

பழைய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை தற்போதுள்ள நிலைமையை பரிசோதித்து சுற்றுப்புற மாசு படுத்தலை தவிர்ப்பதற்கு அவசியமாக கையாளும் முறைகளை ஏற்பாடு செய்ய கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

கிண்டியிலுள்ள நீர் பகுப்பாய்வுக் கூடத்தைத் தவிர தனி அலுவலர் (தலைமைப் பொறியாளர்) தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட சுற்றுப்புற சுகாதாரத் துறை, தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருட்கள், பூச்சி கொல்லி மருந்துகள், ரசாயன உரங்கள் பயன்படுத்துவது இவற்றால் ஏற்படும் தூய்மைக்கேடு நிலைகளைப் பற்றி ஆராய்ந்து வருகின்றது. சூழ்நிலை மாசுபடுவது சம்பந்தமாக அரசினாலும் மற்றவர்களினாலும் அனுப்பப்படும் பிரச்சினைகளை இத்துறை ஆராய்ந்து தூய்மை கேட்டைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை கூறுகிறது. இந்திய அரசு 1974-ம் ஆண்டு நீர் மாசு தடுப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்றி நீர் மாசுபடுதலை தடை செய்ய, "மத்திய நீர் மாசுதடுப்பு வாரியம்" ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசின் சட்டத்தை ஏற்பதா அல்லது மாநில மசோதாவை செயல்படுத்துவதா என்னும் பிரச்சினை அரசின் பரிசீலனையில் உள்ளது.

சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக அரசிற்கு ஆலோசனை கூற மேதகு ஆளுநரின் தலைமையில் சுற்றுப்புற சூழல் காப்புக் கழகம் ஒன்றை தமிழக அரசு 1976-ல் அமைத்தது. இக்கழகம் புதிய தொழிற்சாலைகளுக்கு சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு குறித்து அனுமதி வழங்குவதற்காக வழிமுறைகளை அங்கீகரித்துள்ளது. இவ்வாண்டு ஜனவரி திங்களில் மேதகு ஆளுநர் அவர்களைத் தலைவராகவும், முதலமைச்சர் அவர்களை உபதலைவராகவும், கொண்டு இக்கழகம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களினால் சுற்றுப்புற சூழ்நிலைக்கு ஏற்படும் விளைவுகள் குறித்து ஆராய்ந்து,

இக்கழகம் சுற்றுப்புற சூழ்நிலை பாதுகாக்க வேண்டிய முறைகள் பற்றி ஆலோசனை கூறும். சுற்றுப்புற சுகாதாரத்துறை இக்கழகத்தின் அலுவலகமாக பணி புரிகிறது.

சுற்றுப்புறத்தை பெருமளவுக்கு மாசுபடுத்தும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மாசு தடுப்பு ஏற்பாடு குறித்து தக்க நடவடிக்கைகள் 31—3—1978-க்குள் எடுக்க வேண்டுமென்று அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. வடிசாலைகள் ரசாயன காகிதத் தொழிற்சாலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றிற்கு இதுபோன்ற அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கோரிக்கை எண். 19-க்கான குறிப்பு.

1978–79.

கழிவுநீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல்

மதிப்பீடு ரூ. 16,64,00,000.00

அறிமுகம்

கூடிய விரைவில் மாநிலத்தில் உள்ள எல்லா மக்களுக்கும பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியையும் கழிவுநீர் போக்கு வசதியையும் அளித்திட வேண்டும் என்பதே அரசின் நோக்கம் ஆகும். இந்த நோக்கம் நிறைவேற ஏப்ரல் 1971 முதல் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் என்னும் சட்டப்பூர்வமான அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் மகத்தான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. மேலும் தண்ணீர் அதிகமாகத் தேவைப்படும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அவைகளாகவே அதற்கு ஒரு ஏற்பாடு செய்துகொள்ள முடியாத நிலையில் இவ்வாரியம் தகுந்த திட்டங்களை வகுத்து தண்ணீர் வழங்கி வருகின்றது.

குடிநீர் திட்டங்களின் பராமரிப்பு.

தாங்களாகவே ஒரு ஏற்பாட்டை செய்துகொள்ள முடியாத நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அரசாங்கமே சில திட்டங்களை நிறைவேற்றி அவற்றிற்குத் தேவைப்படும் தண்ணீரை வழங்கி வருகின்றது. பயன்பெறுவோரிடமிருந்து

இந்த முதலீட்டுக்கு ஈடு செய்யும் வகையில் முறையான விகிதத்தில் தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. பின்வரும் திட்டங்கள் இப்போது நடை முறையில் உள்ளன :—

வரிசை எண்.	திட்டங்களின் பெயர்.
(1)	(2)
1	பாதுகாப்புத் தொழிற்சாலை, ஆவடி, நீர் வழங்கும் திட்டம்.
2	தூத்துக்குடி மூன்று மில்லியன் காலன்கள் நீர் வழங்கும் திட்டம்.
3	திருவான்மியூருக்குத் தெற்கே கடலோர நீரோட்டத்திலிருந்து சென்னை நகருக்கு நீர் வழங்கும் திட்டம்.
4	திருச்சிராப்பள்ளிக்கு அருகே வெங்கூரில் சிறிய போர்க் கருவி திட்டத்திற்கு நீர் வழங்கும் திட்டம்.
5	தூத்துக்குடி 20 மில்லியன் காலன்கள் நீர் வழங்கும் திட்டம்.
6	உரூர் மத்திய தொழில் நுட்ப மற்றும் இந்திய தொழில் நுட்பப் பள்ளிகளுக்கு நீர் . வழங்கும் திட்டம்.
7	திருச்சி வட்டார பொறியியல் கல்லூரிகளுக்கான நீர் வழங்கும் திட்டம்.

மேலே கூறிய திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன. இவற்றின் பராமரிப்புக்கென 1978—79-ல் ரூ. 31·87 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளனது.

சென்னை பெருநகர் பகுதியில் குடிநீர் வடிகால் திட்டங்களுக்கான முன் முதலீட்டு ஆராய்ச்சிகள்.

சென்னை நகருக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் குடிநீர் போதாது என்பதும் சாக்கடை அமைப்புகள் குறைந்த திறனுடையவை என்பதும் யாவரும் அறிந்ததே. எனவே, உலக வங்கி உதவியுடன் நகருக்கு தேவைப்படும் தண்ணீரை அதிகரிக்கவும் சாக்கடை அமைப்புகளைப் புதுமைப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென ஒரு திட்டத்தை

வகுத்திட பிப்ரவரி 1976-ல் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்ட உதவியின்கீழ் முன் முதலீட்டு ஆராய்ச்சி தொடங்கப்பட்டது. இந்த ஆராய்ச்சியின் பயனுக உடனடி பணிகள் அறிக்கை, முழுமை திட்ட அறிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்படும் திட்டங்களுக்கென 1978—79-ல் ஆரம்ப பொறியியல் வடிவமைப்புகள் தயாரிக்கப்படும். இத்திட்டத்திற்கென மொத்தம் ரூ. 43.60 இலட்சங்கள் செலவிடப்படும். 1976—77 வரை ரூ. 13.60 இலட்சமும், நடப்பு ஆண்டு 1977—78-ல் இது வரை ரூபாய் 7.28 இலட்சமும், இத்திட்டத்திற்கென செலவாகியுள்ளது. ஆக இதுவரை இப்பணிகளுக்கென ரூ. 20·88 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. 1978—79-ல் வரவு-செலவு திட்டத்தில் இதற்கென ரூ. 10 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை நகர் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள்.

தற்போது சென்னை நகரின் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் திட்டங்கள் சென்னை மாநகராட்சியினரால் நிறைவேற்றப்படுகின்றன. உலக வங்கியின் பரிந்துரைக்கிணங்க, சென்னை மாநகரம் உள்ளிட்ட சென்னை புறநகர்ப் பகுதியில் குறிப்பாக பொது சுகாதார பாதுகாப்பு மற்றும் அதன் தொடர்பான நடவடிக்கைகள் ஆகியவற்றை மனதில் கொண்டு, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் பணிகளை முறையாகச் சீர்படுத்தி திறமையாகப் பராமரிக்கவும் திட்டமிட்டு முன்னேற்றம் காணவும் ஒரு தனி அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக ஜனவரி 1978-ல் சட்ட மன்றப்பேரவையில் மசோதா ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம் மசோதா சட்டமாகியதும் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் இவ்வாரியம் சட்டப்பூர்வமாக செயல்பட்டு, சென்னை பெருநகர்ப் பிரிவில் உள்ள குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர்ப் போக்கு தொடர்பான அனைத்து பணிகளையும் பொறுப்பேற்று முன்னேற்ற திட்டங்களை மேற்கொள்ளும். இவ்வாரியத்திற்கென 1977—78-ம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரின் குடிநீர் வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென 1978—79-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 322.29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னைக்கு கிருஷ்ணா-பெண்ணாறு குடிநீர் திட்டம்.

கிருஷ்ணா-பெண்ணாறு குடிநீர் திட்டம் இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது. இத் திட்ட ஆராய்ச்சிக்கென 1978—79ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 23

கிராமப்புற குடிநீர்த் திட்டம்.

கிராமப்புறங்களில் குடிநீர் வழங்குதலின் நிலை குறித்து அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கின்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குடியிருப்புக்கள் (கிராமங்கள்) அவற்றில் உள்ள நீர் ஊற்றுகளின் அடிப்படையில் பின்வரும் ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:—

வகை.	விளக்கம்.	குடியிருப்பு எண்ணிக்கை.	இவற்றின் பணிகளை முடிக்க தேவைப் படும் மொத்த தொகை.
(1)	(2)	(3)	(4)
			(ரூபாய் இலட்சத்தில்)
1	குடியிருப்புக்குள் எவ்வித நீர் ஆதாரமும் இல்லாத குடியிருப்புகள்.	3,566	730·57
2	நீர் ஆதாரங்கள் இருந்தும் அவை குடிநீருக்கு தகுதியற்ற உவர் நீராக மட்டுமே உள்ள குடியிருப்புகள்.	2,217	1,704·63
3	குடிநீர் ஆதாரங்கள் இருந்தும் அவை வற்றாத தன்மை இல்லாதவைகளாக உள்ள குடியிருப்புகள்.	6,487	1,404·29
4	வற்றாத தன்மையுடையதும் குடிநீருக்குப் பயன்படக்கூடியதும் ஆன ஆதாரங்கள் இருந்தும் அவை தனியார் உடமையாகவோ அல்லது பாதுகாக்கப்படாமலோ உள்ள குடியிருப்புகள்.	4,953	1,137·8[illegible]

1978 மார்ச் 23]

வகை.	விளக்கம்.	குடியிருப்பு எண்ணிக்கை.	இவற்றின் பணிகளை முடிக்க தேவைப் படும் மொத்த தொகை.
(1)	(2)	(3)	(4)
			(ரூபாய் இலட்சத்தில்.)
5	குடியிருப்புக்குள்ளேயே குடிநீர் ஆதாரங்கள் இல்லாதன. ஆனால் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் நல்ல குடிநீர் ஆதாரத்தைக் கொண்டுள்ள குடியிருப்புகள்.	1,107	503·49
6	நல்ல குடிநீர் ஆதாரங்களை உடைய குடியிருப்புகள்	36,677	2,177·20
	மொத்தம் ..	55,007	7,658·04

குறிப்பு—மேலே குறிப்பிட்டுள்ளவற்றுள் முதல் நான்கு வகைகளுக்கும் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் குடிநீர் ஆதாரங்கள் இல்லை.

குடிநீர் வழங்கும் திட்டங்கள் எந்த வரிசையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்னும் அடிப்படையில் குடியிருப்புகள் மேலே கண்டுள்ள வரிசையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

முதல் இரண்டு வகைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. 1977–78-ல் வகை 1-ன் கீழ் 8·15 இலட்சம் மக்கட் தொகையைக் கொண்ட 2,500 குடியிருப்புக்களும், வகை 2-ன் கீழ் 0·85 இலட்சம் மக்கட் தொகையைக் கொண்ட 157 குடியிருப்புகளும் குடிநீர் வழங்குதலுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஊரக குடிநீர் வழங்கு விரைவு திட்டத்தின் கீழ் மத்திய அரசும் சிறிது சிறிதாக அடுத்த ஐந்தாண்டுகளுக்கு உதவி அளித்திட முடிவு செய்துள்ளது. 1977–78 இல் இந்திய அரசாங்கம் இத்திட்டத்தின் கீழ் ரூ. 140 இலட்சம் ஒதுக்கியது. மாநில அரசு ரூ. 500 இலட்சம் ஒதுக்கியிருந்தது.

எனவே, இத் திட்டத்திற்காக மொத்தம் ரூ. 640 இலட்சம் ஒதுக்கீடு இருந்தது. முதல் இரண்டு வகைக் குடியிருப்புகளுக்கான பணிகள் பின்வரும் விவரங்களின்படி 1978–79 இல் முடிக்கப்படும்.

வகை.	குடியிருப்புக்களின் எண்ணிக்கை.	பயன்பெறும் மக்கட் தொகை.	உத்தேச செலவு.
(1)	(2)	(3)	(4)
		(இலட்சத்தில்)	(ரூபாய் (இலட்சத்தில்)
1 ..	1,066	3·48	218
2 ..	2,060	11·15	1,582
மொத்தம் ..	3,126	14·63	1,800

மக்களுக்குக் குடிநீர் வழங்குவதில், அதிலும் குறிப்பாக அதிக புளூரைட் கலப்பின் காரணமாக நல்ல குடிதண்ணீர் கிடைக்காத கோயம்புத்தூர் மாவட்டம், அதிக உப்புத்தன்மை காரணமாக நல்ல தண்ணீரே கிடைக்காத இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய பகுதிகளுக்கு நல்ல குடிநீர் வழங்குவதில் அரசு மிகுந்த அக்கரை கொண்டு இயன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. புளூரைட் ஆரோக்கியமான பற்களுக்கு மிகவும் இன்றியமையாது தேவைப்படும் ஒரு தாது உப்பு. ஆனால் புளூரைட் அதிகமாகக் கலந்துள்ள தண்ணீரை நீண்ட காலம் தொடர்ந்து குடித்துவரும் மக்கள், குறிப்பாக குழந்தைகள், புளூரோசில் என்னும் ஒருவகை நோய்க்கு ஆளாகி மூட்டு மற்றும் பல் கோளாறுகளால் பாதிக்கப்பட்டு அவதிப்படுகின்றனர்கள். இத்தன்மையுடைய தண்ணீர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பரம்பிக்குளம் ஆளியாறு பகுதியில் குறிப்பாக ஆளியாறு அருகிலுள்ள அங்காளகுறிச்சி பகுதியில் (ஆனைமலை ஊராட்சி ஒன்றியம்) அதிக அளவில் உள்ளது. இந்த நச்சுத்தாது உப்பு காரணமாக இப்பகுதியிலுள்ள மக்கள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதி மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கி இவ்வியாதியிலிருந்து நிரந்தர நிவாரணம் தர ரூ. 9·59 இலட்சத்தில் ஒரு திட்டம் 1966-ல் தயாரிக்கப்பட்டது. ஆனால், இப்பகுதி பஞ்சாயத்துக்களின் நிதி வசதி இத்திட்டத்தை ஏற்கக்கூடிய அளவிற்கு இல்லாமையால் இத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

தற்போது கிராமக் குடிநீர் திட்டத்தின் மூலம் இத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் திட்டத்தின்படி புளூரைட் அதிகமாக உள்ள கீழ்க்கண்ட 9 கிராமங்களுக்கு சுமார் ரூ. 40·63 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது:—

1 அங்காளகுறிச்சி.

2 வேடசந்தூர்.

3 மஞ்சநாயக்கனூரர்.

4 அரசூர்.

5 குன்வேகவுண்டனூரர்.

6 கம்பளாபட்டி.

7 கோடங்கிபட்டி.

8 பொன்னூடகவுண்டனூரர்.

9 அமரலிங்கபுரம்.

இக்கிராமங்களுக்கு குடிநீர் கொண்டு செல்லும் வழியில் உள்ள மேலும் 5 கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டம் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினல் தற்போதைக்குப் பயன்பெறும் மக்கள் தொகை சுமார் 19,000. இத் திட்டம் விரைவில் தொடங்கி ஓராண்டு காலத்திற்குள் முடிக்கப்படும்.

திட்ட விவரம்.

	ரூ.
1 தலைமைப்பணி நிலையம்	
2 நீரேற்றுக்குழாய்	
3 பிராஞ்ச் மெயின்	
4 தரை மட்ட, உயர் நிலைத் தண்ணீர் தொ	
5 P. S. Charge	
6 Centage	
மொத்தம்	

இவ்விதம்
பும் எடுக்கப்பட
ள். அப்படி
ஒத்தி வைக்கப்
வர்களே, இப்படி
வெப்பது சரியல்ல.
ண்டுமானல் 30-ம்
வைத்துக் கொள்ள
ங்கு அலுவல் ஆய்வுக்
ரித் துறை அமைச்சர்

ரூபா

[1978 மார்ச் 23

இது த... ...லார், குண்டடம், உடுமலைப்பேட்டை காங்கேயம், பெ...ந்...ை, ...ொள்ளாச்சி (தெற்கு) ஆகிய ஊராட்சி ஒன்றியத்தில் ... ...டங்களிலும் புளுரைட் அதிகமாக உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மக்கள் உடல் நலத்தை முக்கியமாகக் கருதி இவ்விடங்களுக்குத் தொலைவில் புளுரைட் அதிகம் இல்லாத இடத்தில் குழாய்க் கிணறுகள் அமைத்து மோட்டார் வைத்துக் தண்ணீர் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு சுமார் ரூ. 30 இலட்சம் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் பயன்பெறும் மக்கள் தொகை சுமார் 15,000.

1978–79-ல் இத்திட்டத்திற்கென ரூ. 600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>தமிழ் நாட்டில் உள்ள உலர்ந்த கழிப்பிடங்களை (Dry Latrines) சுகாதாரக் கழிப்பிடங்களாக (S... ory Latrines) மாற்றுவது.</u>

ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் உலர்ந்த கழிப்பிடங்களை சுகாதார கழிப்பிடங்களாக மாற்றும் ஒரு முன்னோடித் திட்டத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களுக்கு மத்திய மானிய உதவியும் அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பழனி, திருவாரூர், லப்பைக்குடிக்காடு என்னும் மூன்று ஊர்களில் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊரிலும் ஏறத்தாழ 10,000 மக்களுக்குப் பயன்படும் முறையில் ரூ. 14 இலட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. பழனி, திருவாரூர், ஒவ்வொன்றுக்கும் ரூ. 11·58 இலட்சத்திற்கும், லப்பைக்குடிக்காடுக்கு ரூபாய் 10·521 இலட்சத்திற்கும் ஆக மூன்று திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மதிப்பீட்டுத் தொகையில் மீதி செலவை அந்தந்த உள்ளாட்சி நிறுவனங்களே ஏற்கும்.

தேவைப்பட்... வரசு பழனி, திருவாரூர் நகரங்களுக்கு ஒவ்வொன்றுக்
கலந்துள்ள தண்ண்...மும் லப்பைக்குடிக்காடுக்கு ரூ. 0·38 இலட்ச
மக்கள், குறிப்பாக...ு. மேற்கொண்டு மத்திய அரசின் உதவித்
நோய்க்கு ஆளாகி...பார்த்து 1978–79-ம் வரவு-செலவு திட்டத்தில்
பட்டு அவதிப்படு...யாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
கோயம்புத்தூர் ம...
யில் குறிப்பாக ஆனை...
(ஆனை மலை ஊராட்...
நச்சுத்தாது உப்பு...
வழிகளிலும் பாதிக்கப்...

இப்பகுதி மக்களுக்...
இவ்வியாதியிலிருந்து நி...
தில் ஒரு திட்டம் 1966-...
பஞ்சாயத்துக்களின் நி...
அளவிற்கு இல்லாமை...

<u>தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.</u>

சனிக்கிழமை, 1978 மார்ச் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் <u>திரு. முனு ஆதி</u> அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

<u>1. அரசினர் தீர்மானம்.</u>

விதி 22-ஐத் தளர்த்தல்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

"சட்ட மன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்–விடைகள்' என்றுள்ள சட்ட மன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்".

<u>திரு. மு. அரங்கநாதன்</u> : தலைவர் அவர்களே, இன்றைய கேள்வி நேரம் ஏன் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இது அலுவல் ஆய்வுக் குழுவில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒப்புக் கொண்டு முடிவு செய்யப்பட்டுத்தான். அறிவிக்கப்பட்டிருக்கிறது.

<u>திரு. மு. அரங்கநாதன்</u> : தலைவர் அவர்களே, இதைப் பற்றி எங்கள் தலைவரிடத்தில் கேட்டேன். இவ்விதம் ஒத்தி வைப்பது பற்றி எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை என்று என்னிடம் தெரிவித்தார்கள். அப்படியிருக்கும் போது எதற்காக கேள்வி நேரம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது ?

<u>திரு. மு. கருணாநிதி</u> : தலைவர் அவர்களே, இப்படி என்னை தாங்கள் இக்கட்டான நிலையில் வைப்பது சரியல்ல. அங்கு சொல்லப்பட்ட யோசனை, வேண்டுமானால் 30-ம் தேதி 'அப்ராப்பிரியேஷன் பில்லை' தள்ளி வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து கொண்ட பொதுப்பணித் துறை அமைச்சர்

அவர்கள். இனிமேல் வருகின்ற நிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டு வேண்டுமென்றால் 30-ம் தேதி 'அப்பிராபிரியேஷன் பில்' விவாதத்தை தள்ளி வைத்துக் கொள்ளலாம் என்று தான் சொல்லப்பட்டதே தவிர, கேள்வி நேரத்தை இன்றைக்கு ஒத்தி வைக்க வேண்டும் என்று முடிவு எடுத்ததாக எனக்கு நினைவில்லை.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, அன்றைக்கு நமது பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இன்றைக்கு நேரம் இல்லை என்பதை அறிவித்தார்கள். மூன்று நான்கு நாட்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்டு விட்டது, ஆகவே இதைப் பற்றி ஏற்கனவே எதிர்க் கட்சிகளோடு கலந்து தானே முடிவு எடுத்திருக்க முடியும், இப்போது அப்படி முடிவு எடுக்கவில்லை என்ற கேள்வி எப்படி வருகிறது என்று தெரியவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே அன்றைக்கு நடந்த அலுவல் ஆய்வுக் குழுவில், இன்றைக்கு அறநிலையத் துறை, சட்ட மன்றம், தேர்தல்கள் பற்றிய மானியங்கள் எல்லாம் வரவேண்டியிருப்பதால் கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கலாம் என்று சொல்லப்பட்டது. அப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அங்கே இருந்தார்கள். அப்போது எல்லோருக்குமே இன்றைக்கு கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்து இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இன்று மூன்று மானியங்களை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையிருக்கின்ற காரணத்தால், கேள்வி நேரத்தை தவிர்க்கலாம் என்ற கருத்து சொல்லப்பட்டது. அந்த அடிப்படையில் தான் தாங்கள் இந்த முடிவை எடுத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அந்த நேரத்தில் அங்கு இல்லையோ என்று நான் சந்தேகப்படுகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின் அடிப்படையில் தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : எங்கள் கட்சியின் சார்பாக அன்றைய தினம் நடந்த அலுவல் ஆய்வுக் குழுவில் திரு. சங்கரய்யா அவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்களிட

மிருந்து நான் தெரிந்து கொண்டது, கேள்வி நேரத்தை ஒத்தி வைக்க வேண்டும் என்று எல்லோரும் சேர்ந்து முடிவு எடுக்கப்பட்டது என்பதுதான்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைத்தான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். கேள்வி நேரம் பற்றி பேசப்பட்டது உண்மை. ஆனால் இன்றைக்குக் கேள்வி நேரத்தை ஒத்தி வைக்க வேண்டும் என்று எந்த விதமான முடிவும் எடுக்கப்படவில்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். காரணம், முந்தின நாளே மக்கள் நல்வாழ்வுத் துறை மானியம் எடுக்கப்பட்டு முடிவு பெறுவதாக இருந்தது. ஆனால் முதலமைச்சர் அவர்களுடைய மானியங்கள் வருகின்ற நேரத்தில் ஒரு நாள் கழித்து முடிவு பெற வேண்டிய நிலை ஏற்படுவதால், அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப நடைபெறுவதில்லை என்பதை தாங்கள் அறிவீர்கள். இதனால் பலருக்கு பல மானியங்களின் மீது பேச முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்பதையும் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசப்பட்டது. இந்த சூழ்நிலையில், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது—வேண்டுமென்றால் 30-ம் தேதி நிதி ஒதுக்கீடு மசோதாவை தள்ளிவைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

கேள்வி நேரத்தை ஒத்தி வைப்பது குறித்து அன்றைக்கு எந்த விதமான திட்டவட்டமான முடிவும் எடுக்கப்படவில்லை என்றாலும் இப்போது எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் அதை ஏற்றுக் கொள்வதால், நான் இதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். நேற்று முன் தினம் இது பற்றி நடந்த சர்ச்சையில் கூட எங்களுடைய கட்சித் துணைத் தலைவர் சொன்னபோது, இது போன்ற நிலைமைகள் கடைசியாக இருக்கட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கேள்வி நேரம் என்பது எதிர்க் கட்சிகளுக்கு கிடைத்திருக்கக் கூடிய பெரியதொரு வாய்ப்பு. இப்படிப்பட்ட நிலைமைகள் வருவதால் இதை அடிக்கடி இழந்து விடுகிற நிலை ஏற்படுகிறது. இனிமேலாவது அப்படிப்பட்ட நிலை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வது தங்கள் பொறுப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், இரண்டு பஞ்சாலைகள் ஸ்டிரைக் சம்பந்தமாக 41வது விதியின் கீழ், 42-லே அல்ல..........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தைப்பற்றியே இன்னும் முடிவு செய்யவில்லையே, உட்காருங்கள்.

பேரவை முன்னுள்ள கேள்வி—

''சட்ட மன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்—விடைகள்' என்றுள்ள தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

2. தகவல் கோரல்.

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரிலே குமரன் பஞ்சாலை, ராம்நாராயண் பஞ்சாலை ஆகிய இரண்டு பஞ்சாலைகள் 5–3–78, 7–3–78 மூடப்பட்டது பற்றி செக்ஷன் 41-லே ஒருதீர்மானம் கொடுத்திருக்கிறேன். கால் அட்டென்ஷன் நோட்டீஸ், அட்ஜர்ன்மென்ட் மோஷன் அல்ல அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்று நிராகரிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நீண்ட நாள் அனுபவம் உண்டு, மரபும், விதிகளும் தெரிந்தவர். நான் பல முறை சொன்னது போல், நிராகரிக்கப்பட்டது ஏன் என்று கேட்பதே தவறு. அவைத் தலைவரால் அது வேண்டாம், தேவையில்லை என்று நிராகரிக்கப்பட்டது பற்றி இந்த அவையிலே கேட்பது தவறு. ஆகவே, எந்த விதியின்கீழ் அதை அனுமதிக்கவில்லை என்று கேட்கிறீர்கள் என்றுசொன்னால் நலமாக இருக்கும். என் அறையிலே வந்து இதைப்பற்றிக் கேட்டால், எந்த விதியின் கீழ் நிராகரிக்கப்பட்டது என்பதைப் பற்றி நான் விளக்குவதற்கு நலமாக இருக்கும். எனவே அறையிலே வந்து கேளுங்கள். அவையிலே கேட்க வேண்டாம். அவையிலே கேட்டால் நான் எப்படி பதில் சொல்ல முடியும். எனவே தயவு செய்து உட்காருங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவசாயிகள் ரெவின்யூ கோர்ட்டு மூலம் வெளியேற்றப்படுகிறார்கள் என்று 20 ஆம் தேதி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். அன்றைய தினம் மானியக் கோரிக்கையின் மீது பேசலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். எந்த மானியக் கோரிக்கையின் மீது இன்றையத் தினம் பேசலாம் என்பதைச் சொன்னால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கொடுத்தது எந்தப் பிரச்சினையைப் பற்றி, எப்படி எப்போது நிராகரிக்கப்பட்டது என்ற தகவல் தற்போது என் கையில் இல்லை. தாங்கள் மட்டும் கையில் வைத்துக் கொண்டு இந்த அவையில் கேட்டால், அதற்கு நான் எப்படி பதில் சொல்ல முடியும்? எனவே, இதைப் பற்றி என் அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : ரெவின்யூ கோர்ட்டு சம்பந்தமானது. முன்னாலேயே இங்கே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி என் அறையிலே வந்து கேட்க வேண்டும் தாங்கள் கையில் வைத்துக்கொண்டு பேசினால், நான் அதற்கு எப்படி பதில் சொல்ல முடியும்? அறையிலே வந்து கேளுங்கள். அதற்கு விவரம் சொல்லலாம். இங்கே அதைப்பற்றி தயவு செய்து கேட்க வேண்டாம், அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் 42-வது விதியின் கீழ் அறந்தாங்கியைப் பற்றிக் கொடுத்திருந்தேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதே பதில்தான் உங்களுக்கும், உட்காருங்கள். எதிர்க் கட்சியிலே இன்னும் இங்கே யார் யார் இன்று பேச இருக்கிறார்கள் என்பது பற்றி யாரும் எழுதிக் கொடுக்கவில்லை.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, என்னென்ன கோரிக்கைகளை எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள் என்ற தகவலைத் தந்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு நிகழ்ச்சி நிரலில் உள்ள எல்லாமே எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. முதலில், மருத்துவம், பொதுச் சுகாதாரம் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஏ. லத்தீப்.

(3) 1978—79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 18—மருத்துவம் மற்றும்.

(ஆ) கோரிக்கை எண். 19—மக்கள் நல்வாழ்வு—தொடர்ச்சி.

[முற்பகல் 9-10]

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத் துறை மானியங்களைக் குறித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில் மாநிலத்தில் 8 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 8 மருத்துவக் கல்லூரிகளும் ஒரு குறிப்பிட்ட வட்டாரங்களில் அமைந்து இருக்கின்றனவே தவிர மாநிலத்தில் பரவலாக இவை ஏற்படுத்தப்படவில்லை என்ற ஒரு குறை, அந்தக் குறைகளின் வாயிலாக ஏற்பட்டிருக்கின்ற விளைவுகள் இவைகளைப்பற்றி அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 8 மருத்துவக் கல்லூரிகளிலே சென்னை நகரத்தில் 3 மருத்துவக் கல்லூரிகளும் சென்னை நகரத்தை அடுத்துள்ள செங்கற்பட்டிலே 1 மருத்துவக் கல்லூரியும், ஆக 35 மைல்களுக்குட்பட்ட ஒரு வட்டாரத்திலேயே 4 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன.

தென்புலத்திற்குத் தேவையாக மதுரையிலேயும், திருநெல்வேலியிலேயும் மேற்குப் பகுதிக்காக கோயம்புத்தூரிலேயும், திருச்சியிலேயும் மருத்துவக் கல்லூரிகள்

இருக்கின்றன. ஒரு சில இடங்களுக்குத்தான் இவைகள் பயனுள்ளவையாக அமைந்திருக்கின்றனவே தவிர வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்கள் போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் இல்லாமல் இருப்பது ஒரு பெருங்குறையாக இருக்கிறது.

ஆகவே அரசு இதைக் கவனத்தில் கொண்டு வேலூரிலே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உலகப் பிரசித்தி பெற்ற கிறித்துவ மருத்துவக் கல்லூரி இருக்கின்ற வேலூர் நகரத்திலே அரசின் சார்பில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவது மிகவும் பயனுடையதாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தனியார் துறையில் மருத்துவக் கல்லூரி வேலூரில் இருக்கிறது என்று சொல்லப்பட்டால் அது ஒட்டுமொத்தமான சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு இல்லை என்பதை அரசு நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே, அரசு தரப்பிலே வட ஆற்காடு, தர்மபுரி, சேலம் மாவட்டங்களுக்குப் பயன் உள்ள வகையில் வேலூரிலே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத் துறைக்குச் செலவு செய்கின்ற மொத்தத் தொகையில் பெரும் தொகை, சென்னை, சென்னையை அடுத்துள்ள பகுதியிலேதான் செலவழிக்கப்படுவது நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற தத்துவத்திற்கே மாறாக உள்ளது. இது மிகுந்த வருத்தத்திற்கு உரியது. கிராமங்கள் முன்னேற வேண்டும், கிராம மக்களுடைய நிலையில், வாழ்க்கையில் நல்வாழ்வு மலர வேண்டும் ஆங்காங்கு நோயாளிகள் அவதிப்படாமல் அவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சைகள் கிடைப்பதற்கு வாய்ப்புகள் ஏற்பட வேண்டும். கிராம முன்னேற்றத்தின் அடிப்படையிலே தான் நாட்டின் முன்னேற்றமே இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு வருகிற நாம் சென்னை போன்ற பெரு நகரங்களிலேயும் மாவட்டத் தலைநகரங்களிலே நம்முடைய செலவினங்களிலே 90 சதவீதம் செலவழித்துவிடுவோமானால் நிச்சயமாக அது நாட்டிலே பரவலாக ஒரு நல்வாழ்வை ஏற்படுத்துவதற்கு வழி வகுக்காது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மொத்தம் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை இந்த கொள்கை விளக்கப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அடிப்படையில் 13,471 படுக்கைகள் இந்த மாநிலம் முழுவதும் இருக்கின்றன. இந்த 13,471 படுக்கைகளில் சென்னை நகரத்திலே சுமார் 8 ஆயிரம் படுக்கைகளும் மற்ற பெரு நகரங்களிலேயும் மாவட்டத் தலைநகரங்களிலேயும் 600, 700 படுக்கைகள் என்ற வகையிலே இருக்கின்றன. வட்டத் தலைநகரங்களிலே மற்ற, மாநிலத்திலே இருக்கின்ற நகரங்களிலே பேரளவிற்குப் படுக்கைகள் என்ற அளவிற்கு இருக்குமானால் அது நிச்சயமாக நம்முடைய நோக்கம் நிறைவேறுவதற்கு வழி வகுக்காது என்பதை அரசு நினைவுகூர்ந்து வட்டத் தலைநகரங்களிலேயும் பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒன்றியத் தலைநகரங்களிலேயும், ஒன்றியப் பகுதிகளிலேயும் அதிகமான படுக்கைகளின் வாயிலாகத்தான் நம்முடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று இந்த நேரத்திலே சொல்வது என்னுடைய கடமை என்று நான் நினைக்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நவீன முறையில், சோபிஸ்டிகேட்டட் மெத்தட்ஸ் ஆப் ட்ரீட்மென்ட் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நவீன முறையிலே ஏற்பட்டு இருக்கின்ற நவீன மருத்துவ வசதிகள் எல்லாம் சென்னையிலேயும் மதுரையிலேயும் மட்டும் தேக்கப்பட்டிருப்பது மற்றப் பகுதிகளிலே உள்ள மக்கள் நல்ல வாய்ப்புகளை இழக்கச் செய்கிறது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். முக்கியமான ஆப்பரேஷன்கள், கதிரியக்கத்தின் மூலமாகச் செய்யப்படுகிற சிகிச்சைகள் மற்ற வகைகளிலே செய்யப்படுகிற நவீன மருத்துவ வசதிகள் எல்லாம் இந்த நாட்டிலே இருக்கின்ற முக்கியமான கிராமப் பகுதி மக்களுக்குக் கிடைக்க வாய்ப்பு இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்ற நிலைமை ஒரு பெருங்குறையாக இருக்கிறது. அதைத் தான் இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

கிராமங்களிலே மருத்துவ வசதி பரவலாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அவர்களுடைய அந்த எண்ணப்படி கிராம மக்களுக்கு அதிக வசதிகளை ஏற்படுத்தித்தர அரசு முன் வர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு சென்னை நகரத்திலேயிருக்கின்ற படுக்கைகளைப் பார்த்தால், நம்முடைய பொது மருத்துவமனையாக இருந்தாலும், ஸ்டான்லி மருத்துவமனையாக இருந்தாலும் அல்லது நம்முடைய கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை அல்லது இராயப்பேட்டை மருத்துவ மனையாக இருந்தாலும் அங்கே 'ஓவர் கிரௌடட்' என்று சொல்லுமளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. அங்கேயிருக்கின்ற நோயாளிகள் சரியாகக் கவனிக்கப்படாத சூழ்நிலைகள் இருந்து வருகின்றன. அங்கேயிருக்கின்ற பணியாளர்கள் பண்போடும், அன்போடும் நடந்து கொள்ளாமல் நோயாளிகளைக் கடுமையாக நடத்துகின்ற சூழ்நிலைகளெல்லாம் இருந்து வருகின்றன. அவைகளையெல்லாம் அரசு கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமான வியாதிகளுக்கு மருத்துவர்கள் இன்ன மருந்து கொடுக்க வேண்டுமென்று பிரஸ்கிரைப் செய்தால் அந்தத் தேவையான மருந்து மருத்துவ மனைகளில் இல்லை என்று சொல்லுகின்ற சூழ்நிலை அடிக்கடி ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவம் செய்கின்ற அந்த நிலையிலே மருத்துவ மனைகளிலே இருக்கக் கூடிய மருந்துகள்கூட வெளியே சென்று விடுகின்றன, அது நோயாளிகளுக்குக் கிடைப்பதில்லை என்று பொறுப்பிலுள்ளவர்கள்கூட சொல்லும்பொழுது நம் நாட்டினுடைய ஒழுக்கம் எவ்வளவு தூரம் காப்பாற்றப்படுகிறது என்ற கவலை நமக்கு ஏற்படுகிறது. மருந்து தேவைப்படுகின்ற நோயாளிகளுக்குக் கொடுக்கக்கூடிய மருந்துகளையும்கூட பொறுப்பிலே உள்ளவர்கள் வேறு வகைக்குப் பயன்படுத்துகிறார்கள், திருடிக்கொண்டு போகிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, இதைக் கேட்கும்பொழுது உண்மையிலேயே நமக்கெல்லாம் வேதனை ஏற்படுகிறது. இந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நோயாளிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற ' டயட் ' கூட, சாப்பாட்டு வகையிலே அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சாப்பாட்டு இனங்களைக்கூட எடுத்துச் சென்று விடுகிறார்கள். சரியாக அவர்களுக்குக் கொடுக்கப்படாத நிலையிருக்கிறது

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 25

என்று கேள்விப்படும்பொழுது, அப்படிப்பட்ட குறைகள் நம்முடைய காதுகளுக்கு எட்டும்பொழுது நம்முடைய நாட்டிலே எவ்வளவு தூரம் பொறுப்பு பரவலாக்கப்பட்டிருக்கிறது, எந்த அளவிற்குப் பொறுப்புணர்ச்சியோடு நாம் கடமையாற்றுகிறோம் என்று நாம் நினைத்துப் பார்க்கும்பொழுது மெத்த வேதனையடையக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றும்வகையில் பொறுப்பிலுள்ளவர்கள், அரசுப் பணியாளர்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து, நோயாளிகளுக்குத் தரவேண்டிய மருந்துகள் முழுவதும் அவர்களுக்குக் கிடைக்கும் சூழ்நிலையையும், அதைப்போலவே அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உணவு அவர்களுக்கே கிடைக்கக்கூடிய செம்மையான ஏற்பாடுகளையும் செய்வதோடு, நோயாளிகளிடத்தில் அன்போடும், பண்போடும் பழகும் வகையில் அவர்களுக்கு அன்பை முதலிலே கொடுத்து அந்த அன்பின் அடிப்படையில் அவர்களுக்குச் சிகிச்சை செய்ய முடியுமென்ற ஒரு உணர்வை ஏற்படுத்தத் துறையினர் முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்குச் சென்னையிலே இருக்கின்ற ஒரு இடர்பாடு என்னவென்றால், நம்முடைய மருத்துவமனைகளில் இருக்கின்ற நெரிசல்களுக்குக் காரணம் இந்த ரொட்டீன் கேஸ்களுக்குக் கூடப் பெரிய மருத்துவமனைகளிலே சிகிச்சை செய்வது என்பதாகும். இதை அரசு மாற்றியமைக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், காய்ச்சல், தலைவலி போன்ற சாதாரண கேஸ்களுக்குக்கூட ஜெனரல் ஆஸ்பத்திரியிலோ அல்லது மற்ற பெரும் ஆஸ்பத்திரிகளிலோ நாம் சிகிச்சை செய்வதை விட அவைகளையெல்லாம் 'பெ்ரிபரல்கிளினிக்' என்ற மற்ற கிளினிக்குகளுக்கு அனுப்புவதுதான் சிறந்ததாக இருக்கும்.

சென்னையிலே கார்ப்பரேஷனால் நடத்தப்படும் எத்தனையோ மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த மருத்துவமனைகளை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கார்ப்பரேஷனால் நடத்தப்படும் மருத்துவமனைகளை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று ஒரு நெகோஷியேஷன் கூட கார்ப்பரேஷனுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடந்து வந்தது. அது எந்த அளவில் இருக்கின்றது, ஏன் அந்த நெகோஷியேஷன் முடிவடையவில்லை ? அந்த ஆஸ்பத்திரிகளையெல்லாம் அரசே ஏற்றுக்கொண்டு நடத்துவதற்கு என்ன தடங்கல் இருக்கிறது? எப்படி அவைகளை ஏற்று நடத்தினால் செம்மையாக நடை

1978 மார்ச் 25] [திரு. ஏம். ஏ. லத்தீப்]

பெறும் என்று அரசு கவனித்து உடனடியாக கார்ப்பரேஷன் நடத்தும் மருத்துவமனைகளை அரசு ஏற்று சாதாரண ரொட்டீன் கேஸ்களைப் பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பாமல் அவைகளையெல்லாம் சாதாரண கிளினிக்குகளுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே சூழ்நிலைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்திலே இன்றைக்கு 'ஆனரரி மெடிகல் சர்வீஸ்' என்று இருக்கிறது. அதை மேலும் நீடிக்க வேண்டுமா என்று அரசுகூட சிந்தனை செய்து வருவதாக நான் அறிகிறேன். ஏற்கனவே பட்டம் பெற்றவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் வகையில், ஏற்கனவே அந்தத் துறையிலே அரசினுடைய முழு நேர ஊழியர்களாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் இந்த 'ஆனரரி போஸ்ட்'களை வைத்துக் கொள்ள வேண்டுமா என்ற பிரச்னை நம் முன்னே இருந்து கொண்டிருக்கிறது. ஆகையினால் அரசு அதைப்பற்றி ஒரு நல்ல முடிவு எடுத்து, உடனடியாக ஒரு முடிவுக்கு வந்து, அறிவிப்புத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

அதே நேரத்தில், இந்த ஆனரரி டாக்டர்களாக செயல்படக்கூடியவர்கள் பலர் திறமை படைத்தவர்களாகவும் அனுபவம் மிக்கவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அனுப்பிவிட்டு, அவர்களது அனுபவத்தையும் திறமையையும் நாம் இழக்காமல் அவர்களை வேறு எந்த வகையில்பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதையும் அரசு சிந்தித்துப் பார்த்து, அதே நேரத்தில் புதிதாக வருபவர்களுக்கும் வாய்ப்பு வழங்கும் வகையில், நாம் மாறுபாடான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு ரிடையர்மெண்ட் ஏஜ், சாதாரண கல்லூரிகளிலே வேலை செய்கிறவர்களுக்கு 58 என்று வைத்திருக்கிறார்கள். ஆனால், மெடிக்கல் காலேஜிலே 55 என்று வைத்திருக்கிறார்கள். இது, புரிந்துகொள்ள முடியாத நிலைமையாக இருக்கிறது. இவர்களும் ஆசிரியர்களாக இருக்கிறார்கள், ஆசிரியர் தொழிலிலே ஈடுபடுகிறார்கள். மெடிக்கல் காலேஜிலே,

பேராசிரியர் போன்ற பதவிகளில் இருக்கிற ஆசிரியர்களை 55-லேயே ரிடையர் ஆக்கிவிட வேண்டும், மற்ற கல்லூரிகளில், 58-வரை வேலை செய்யலாம் என்று இருப்பது முரண்பாடான கொள்கையாக இருக்கிறது. ஆகையினால் சமூக நீதி கொடுக்க வேண்டுமானால், ஆசிரியர்களுக்கு 58 தான் ரிடையர்மெண்ட் ஏஜ் என்று சொன்னால், எல்லா ஆசிரியர்களுக்கும் அதே ஏஜ்தான் என்ற சூழ்நிலை இருக்க வேண்டும். "Persons situated under similar circumstances must be treated similarly" என்கின்ற அந்த ஈக்விடபிள் கான்சப்டை இங்கே அரசு பயன்படுத்த வேண்டும். இப்பொழுது இருப்பது, அந்த கான்சப்டுக்கு முரண்பாடான கொள்கையாக இருக்கிறது. அவர்களுக்கும் நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்ஜினீயரிங் காலேஜைப்பற்றிச் சொல்கிறார்கள். இன்ஜினீயரிங் காலேஜாக இருந்தாலும், ஆசிரியர் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு 58 தான் என்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கோள்கிறேன்.

இன்னொன்றையும் கேள்விப்படுகிறேன், யூ.ஜி.சி. ஸ்கேல் பற்றி பேசப்படுகிறது. மற்ற கல்லூரிகளிலே வேலை செய்பவர்களுக்குத்தான் யூ.ஜி.சி. ஸ்கேல் கொடுக்கப்படுகிறதே தவிர மெடிக்கல் காலேஜ், இன்ஜினீயரிங் காலேஜ் போன்ற புரபஷனல் காலேஜ்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு யூ.ஜி.சி. ஸ்கேல் இல்லையென்ற சூழ்நிலை கூறப்படுகிறது. அவர்களுக்கு வேறுவகையான வருமானம் இருக்கிறது என்று இருந்தால் அரசு அதைச் சொல்லிவிட வேண்டும். அப்படி சொல்வதாக இருந்தால், அரசு அதைப் போக்க எப்படி வழிவகை செய்கிறது என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கும். ஆகவே, அவர்களுக்கும் யூ.ஜி.சி. ஸ்கேல்ஸ் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

சென்னையிலே சில டாக்டர்கள் இருந்து வருகிறார்கள். அவர்கள் சென்னையிலே சேர்ந்து, சென்னையிலே இருந்து, சென்னையிலேயே ரிடையர் ஆகிறார்கள். எப்படி என்று தெரியவில்லை. எந்த ஆட்சி வந்தாலும், எந்த அமைச்சர்கள் வந்தாலும், அவர்களுக்குச் சொந்த அமைச்சர் என்று சொல்லிக்கொண்டு, எந்த சூழ்நிலையிலும் அவர்கள் ஒரே இடத்தில் இருக்கிறார்கள்.

ஜெனரல் ஆஸ்பத்திரி, அதேமாதிரி, ஸ்டான்லி மருத்துவமனை ஆகியவற்றிலே உள்ள சிலர், சென்னையிலே சர்வீஸை ஆரம்பித்து, சென்னையிலே சர்வீஸை முடித்து, ரிடையர் ஆகிவிடுகிறார்கள். அவர்கள் கிராமப் பகுதிகளுக்குப் போவதில்லை. ஸ்பெஷலிஸ்ட்ஸ் என்று நீங்கள் கருதுவீர்களானால், அவர்களுடைய அறிவும், திறமையும், அனுபவமும் மற்ற பகுதிகளுக்குப் பயன்படக் கூடாதா? அவர்கள் துறைக்காக இருக்கிறார்களா அல்லது துறை அவர்களுக்காக இருக்கிறதா என்பதை அரசு சிந்தித்துப் பார்த்து, யார் வந்தாலும் அவர்களை இன்புளுயன்ஸ் செய்து, ஒரே இடத்தில் இருப்பவர்களை, மாற்ற வேண்டும். அவர்களெல்லாம் அங்கங்கே செல்கின்ற வகையில், வழிவகை செய்ய வேண்டும்.

அதோடு, இன்றைக்கு மெடிக்கல் காலேஜுக்கு வருகிற டாக்டர்கள் எல்லாம் கிராமப்புறங்களுக்குப் போய் வேலை செய்யத் தயாராக இருக்க வேண்டும். அதை கவனத்தில் கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

எங்களுடைய ஜவ்வாது மலைப் பகுதி காட்டுப் பகுதி, நல்ல சாலை வசதியில்லை. நோயாளிகளை மாட்டு வண்டியிலே தூக்கி வரவேண்டும். ஆலங்காயம் தூக்கி வருவதற்குள் அந்த நோயாளி பிழைக்கிறானா, செத்து விடுகிறானா என்ற நிலையிருக்கிறது. பல பேர்கள் செத்து விடுகிறார்கள். அப்பகுதிக்கு மொபைல் யூனிட் வைத்திருக்கிறார்கள். அந்த யூனிட், ஆலங்காயத்திலே காம்ப் செய்து, ஜவ்வாது மலை போக வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், டாக்டர்கள் சரிவரப் போவதில்லை. ஏன் என்று கேட்டால், நாங்கள் என்ன செய்வது? எங்களுக்கு பெட்ரோல் சீலிங் வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக, ஒரு நாளைக்குத்தான் போக முடிகிறது. மற்ற நாட்களுக்குப் போக முடியவில்லை. மற்ற நாட்களுக்கு பெட்ரோல் இல்லாததன் காரணமாகத்தான் போக முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இதை ஆய்வு செய்து, எவ்வளவு நாட்களுக்கு எவ்வளவு பெட்ரோல் என்று பார்த்து, பெட்ரோல் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மொபைல் யூனிட்ஸ் செம்மையாகச் செயல்பட, மேலும் மொபைல் யூனிட்டுகளை மலைப்பகுதிகளுக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஆகவே, அரசு இதைக் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

வாணியம்பாடி ஒரு வட்டத் தலைநகரம். பெரும் தொழில்கள், டேனரி போன்ற தொழில்கள் உள்ள நகரம். பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிற நகரம் தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ்.... (மணி அடிக்கப்பட்டது)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 15 நிமிடம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். எப்போதுமே தாங்கள் அப்படித்தான். வேதனையோடு சொல்லுகிறேன். தயவு செய்து சொல்லுகிற நேரத்தில் முடித்துவிட வேண்டும்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> முடித்து விடுகிறேன். அந்த வாணியம்பாடியிலே குறைந்த பட்சம் ஒரு 150 படுக்கைகள் உள்ள மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும். அங்கே எக்ஸ்-ரே வசதியில்லை. ஆபரேஷன் செய்வதற்கு வசதியில்லை. மற்ற நவீன சிகிச்சைகள் செய்வதற்கும் போதுமான வசதியில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். இலாக்கா செயலாளரிடம் சொன்னேன். ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்திலே பார்க்கும்போது வாணியம்பாடிக்கு ஒன்றுமே இல்லை. எனவே, அது உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறது.

வாணியம்பாடி மட்டுமல்ல. வடார்காடு மாவட்டமே உதாசீனம் செய்யப்படுகிறதோ என்ற உணர்வு அடிக்கடி ஏற்படுகிறது. இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் வடார்க்காடு மாவட்டத்திற்கு ஒன்றுமே இல்லை. ஒரு வேளை இந்த அமைச்சரவையிலே எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த பிரதிநிதி இடம் பெறவில்லை என்ற காரணமோ என்னமோ தெரியவில்லை. அப்படி இருந்திருந்தால் எங்கள் மாவட்டத்திற்கு வேண்டியதைப்பற்றித் தெரிவிப்பார்கள். ஆகவேதான் எங்கள் மாவட்டம் உதாசீனப்படுத்தப்படுகிறது. (மணி அடிக்கப்பட்டது). இல்லை என்று சொன்னால், குறிப்புகள் தந்தால் நான் ஒத்துக் கொள்கிறேன்.

இந்த லால்பேட்டை என்ற ஊர், குமராட்சி ஒன்றியத்தில் உள்ளது. 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்டது. அங்கே ஒரு ஆஸ்பத்திரி இன்றைக்கு இல்லை, பிரைமரி

ஹெல்த் சென்டர் 3,000 பேர்கள் உள்ள ஒரு சின்ன ஊரிலே வைத்திருக்கிறார்களே தவிர, 20,000 மக்கள் வாழ்கின்ற லால்பேட்டைக்கு மருத்துவ மனை வேண்டும் என்று பல்லாயிரம் மக்களுக்கு உதவுகிற வகையில் பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டு, இந்த அளவுக்குப் பேச அனுமதித்த அவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

<u>*திரு. ப. துரைசாமி :</u> தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏழை எளிய மக்கள் நல்வாழ்வு வேண்டும், ஏழை எளிய மக்களுடைய வாழ்வே, தன் வாழ்வு எனக் கருதக்கூடிய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய மருத்துவ மானிய கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து என் உரையைத் தொடங்குகிறேன்.

என்னுடைய சட்ட மன்றத் தொகுதியில் ராசிபுரம் அரசினர் மருத்துவ மனைக்கு சமையல் அறை கட்ட ரூ. 64,000 நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு என் சார்பிலும், என் தொகுதி மக்கள் சார்பிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் ராசிபுரத்தில் ஒரு முன்சீப் கோர்ட்டு ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் இருந்து வந்தது. ஆனால், அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டு உடனடியாக ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்த அனுமதி அளித்து நிதி ஒதுக்கியமைக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. என்னுடைய ராசிபுரத்திற்கு அரசினர் மருத்துவ மனைக்குப் போதிய படுக்கை வசதி கிடையாது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி வார்டுகள் கிடையாது. அதனால் அந்த மருத்துவ மனையை விரிவு படுத்தித் தரவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வெண்ணந்தூரில் மருத்துவ மனையில் போதுமான படுக்கை வசதி இருந்தும் அங்கு சிகிச்சை அளிக்கத் தேவையான மருத்துவத்

வசதிகள் இல்லை. அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வெண்ணந்தூரில் குடிநீர்ப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. அங்கு குடிநீருக்காக உள்ள கிணறுகளில் குடிப்பதற்குத் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கிணறுகளில் அந்த ஊரிலுள்ள சாயப்பட்டறையின் கழிவு நீர் தேங்கி அது கிணற்று நீருடன் கலந்து குடிப்பதற்கு ஏதுவாய் இல்லாமல் போய் மக்கள் நோய்வாய்ப்படுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே அந்தக் கழிவு நீரை அகற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாமகிரிப்பேட்டை ஆரம்பச் சுகாதார நிலையத்தில் போதுமான மருந்து வசதிகள் இல்லை. பிரசவத்திற்காக படுக்கை வசதியும் கிடையாது அதையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வடுகத்தில் பொதுமக்களால் 30,000 ரூபாய் செலவு செய்து நவீன மருத்துவ மனைக்காக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அதற்கு அரசின் அனுமதி கிடைத்தும் கடந்த 4 ஆண்டுகாலமாக மருத்துவ மனை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதால், அப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் இன்னல் அடைகிறார்கள். அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாமகிரிப்பேட்டை பேரூராட்சி மன்றத்திலிருந்து குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு கோரையாற்றுக் குடிநீர் திட்டத்திற்காக 20,000 ரூபாய்க்குப் பணம் கட்டியிருந்தும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் [illegible]]

அதுமட்டுமல்லாமல், [illegible] எங்களுடைய பகுதி மரவள்ளிக் கிழங்கு அதிகமான அளவு பகுதி. மரவள்ளிக் கிழங்குக்கு நிரந்தர விலை இல்லாத காரணத்தால் அங்குள்ள விவசாய மக்கள் மரவள்ளிக் கிழங்கைப் பயிரிடத் தயங்குகிறார்கள். மரவள்ளிக் கிழங்குக்கு நிரந்தர விலை ஏற்படுத்திக் கொடுத்து அங்குள்ள தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். அங்குள்ள மக்களுக்கு வேலை கிடைக்கும் வகையில் மரவள்ளிக் கிழங்குக் கொண்டு

ஒரு க்ளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த மக்கள் நல்ல வகையில் வாழ முடியும். அந்த க்ளுகோஸ் பாக்டரியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதி நெசவாளர்கள் அதிகமாக உள்ள பகுதி. அவர்களுக்கு நிரந்தர வேலை ஏற்படுத்திக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. க. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின் மீதும், மருத்துவத் துறை மானியக் கோரிக்கையின் மீதும் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம் கழக அரசு பொறுப்பு ஏற்று புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முழுமை பெற்ற ஒரு திடமான பல கோணங்களிலும் மக்களுக்காக, குறிப்பாக கிராம மக்களுக்காகவும், ஏழை எளிய மக்களுக்காகவும் மக்கள் நல்வாழ்வுத் துறையிலும், மருத்துவத் துறையிலும் தமிழகம் பூராவிலுமுள்ள இரு துறைகளிலும் பல திட்டங்கள் மூலம் விரிவான செயல்முறைகளுக்காக ஒட்டுமொத்தமாக இவ்வருடம் 82,25,39,000 ரூபாய் ஒதுக்கியிருப்பது சிறப்புமிக்க பாராட்ட வேண்டிய ஒன்றாகும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்தருணத்தில் கடமையுணர்வோடு ஒன்று சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். மக்களின் நல்வாழ்வுக்கும், உடல் நலம் மற்றும் நல்வாழ்வைப் பராமரித்து மேம்படச் செய்யவும், தாய் மற்றும் குழந்தைகளின் உடல் நலனை மேம்படுத்தவும், அரசு இவ்வளவு பெரும் தொகையைச் செலவு செய்கிற போது முறைகேடுகள் ஒழுங்கீனங்கள் இல்லாமல் அதன் முழுப் பலன் மக்களுக்குக் கிடைக்கிறதா சேர்கிறதா என்ற கேள்வி எழுகிற நிலைமை தோன்றுகிறது. காரணம், இவ்விரு துறைகளிலும் சேவை புரிகிறவர்களின் நிலைமையைப் பொறுத்திருக்கிறது. இவ்விஷயத்தில் புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கண்டிப்பான செயல்முறையை செயல்படுத்துவதன் மூலம் பல

கோணங்களில் செயல்பட இருக்கும் திட்டங்களின் முழுப் பலன் தமிழக மக்களுக்குக் கிடைக்கும் என்பதை மன உறுதியுடன் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவ மனைகளில் சேவை புரிகிற டாக்டர்கள், நர்ஸ்கள் ஆகியோர், வருகிற நோயாளிகளிடத்தில் சேவை உணர்ச்சியோடும் பண்பு உணர்வோடும் செயல்படக்கூடிய நிலைமை மையை உண்டாக்குமாறும், அதற்குத் தகுந்த முறையில் படிப்பு முறை ஆரம்ப காலத்திலேயே இருக்கக் கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவ மனைகளில் சேவை புரியும் டாக்டர்களுக்கும் நர்ஸ்களுக்கும் தனித் தனியாகக் குடியிருக்க விடுதி வசதிகள் செய்து கொடுக்குமாறும், அதுவும் மருத்துவ மனை அருகில் இருக்க வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதற்காக நீண்டகாலத் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் குடியிருப்பு வசதி ஏற்படுமானால் பல குறைபாடுகள் ஏற்படாது என்பதோடு படுக்கையில் இருக்கும் நோயாளிகளின் குறைபாடுகளை எளிதில் போக்க வசதியாகவும் பல தரப்பட்ட நோயாளிகளின் ஆபத்தான தன்மையைக் கூடியமட்டும் நிவர்த்தி செய்யக் கூடிய நிலைமையை உண்டாக்கிக் கொள்ள முடியும் எனவும் இச்சமயத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சீபுரத்தில் தலைமை மருத்துவ மனை இருந்தபோதும், பல வசதி குறைபாடுகள் இருக்கின்றன. திறம்பட கூடிய விதத்தில் எக்ஸ்ரே பிரிவு பல தரப்பட்ட நோய்களுக்குப் படம் எடுக்கக்கூடிய விதத்தில் அமைய ஏற்பாடு செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்ளுகிறேன்.

மருத்துவ மனைகளில் ஏற்படுகிற நடக்கிற முறைகேடுகளையும் ஒழுங்கீனங்களையும் நிவர்த்தி செய்யவும் நேர்மையான உயர்மட்ட மக்கள் குழு அமைக்க வேண்டுமெனவும் இத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இச்சமயத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழிக்கு ஏற்ப தமிழகத்தில் மக்கள்

யாவரும், நகரத்திலும், கிராமத்திலும், வீட்டிலும் எங்கும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும் மக்களின்பால் கொண்ட பாசமும் பற்றும் இருக்கின்ற காரணத்தாலும் இந்தப் பொதுச் சுகாதாரம் மருத்துவம் என்ற பொறுப்பு புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுதந்திரம் பெற்று 30 ஆண்டு காலமாகியும் இத்துறை மக்களுக்கு குறிப்பாக, கிராமங்களில் வாழும் எல்லாத் தரப்பட்ட மக்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில் செயல்படவில்லை என்பதை மனவருத்தத்தோடு சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதை உணர்ந்துதான் கிராமப்புறத்தில் வாழும் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பல திட்டங்களையும் மருத்துவ நிலையங்கள் நல்ல முறையில் செயல் படுத்துவதற்காகவும் இதுகாறும் இருந்து வந்த முறைகேடுகளைப் போக்கி கண்டிப்பான முறையில் செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன் முயற்சி எடுத்திருப்பது பாராட்ட வேண்டிய விஷயமாகும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்காகப் பல கோடிக்கணக்கான ரூபாய்களை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருப்பது பாராட்ட வேண்டிய பெரு முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக கிராமங்களில் பகுதிக்குப் பகுதி, ஏன் நகரத்திலும் பகுதிக்குப் பகுதி தொழில்கள் வேறுபடுகின்றன. ஒரு பகுதியில் நெசவுத் தொழிலாளர்களும், மற்றொரு பகுதியில் விவசாயத் தொழிலாளர்களும், பல தரப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களும் வசிக்கின்றார்கள். தொழிலுக்கு ஏற்ப வியாதிகளும் மாறுபடுகின்றன. இதனைப் பரிசீலித்து இதற்கு ஏற்றவாறு மருத்துவ மனைகள் அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் உள்ள தாய்-சேய் நல விடுதிகளில், மகப்பேறு, பெண்களுக்கு ஏற்படும் நோய்கள் கவனிக்க அனுபவம் பெற்ற பெண் மருத்துவ ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதோடு அந்த நிலையம் ஒழுங்கான முறையில் எந்நேரத்திலும் செயல்பட வேண்டும் என சொல்ல விரும்புகிறேன்.

[திரு. க. பாலாஜி] [1978 மார்ச் 25

கிராம மக்களுக்குச் சுகாதாரத்தைப் பற்றியும், உடல் நலத்தைப் பற்றியும் எவ்விதம் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் அறிவுறுத்தும் வகையில் ஒரு நல்ல முறையான பிரச்சார அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இதனை, உடனடியாக செய்ய முடியாது என்றாலும் நீண்டகால அடிப்படையில் இதற்காகத் தனியாக பயிற்சி அளிக்கப்பட்ட ஊழியர்கள் நியமிக்கப்படும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு ஷெட்யூல்டு மருந்துகள் என அழைக்கப்படும் சில அத்தியாவசியமான மருந்துகள் யாவும் கிடைக்கக்கூடிய வகையில் ஒரு திட்டத்தினை உருவாக்க வேண்டுமென புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள மருத்துவ மனைகளிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் உள்ள அமைப்பு சரியான முறையில் ஒழுங்காகச் செயல்படவில்லையெனப் பரவலாகப் பேசக்கூடிய ஓர் பெரிய குறைபாடும் இதனைப் போக்கத்தான் புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதில் இருந்து அதனால் மக்கள் பலவிதத்தில் நன்மை அடைவார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பட்டப் படிப்பு பெற்ற மருத்துவர்களின் செயல்படும் முறையினாலும் அவர்களுடைய போக்கினாலும் கிராமப்புறங்களில் மருத்துவ நிலையங்கள் செயல்படுவது ஓர் குறைபாடான நிலைமை ஏற்பட ஏதுவாகிறது. இக் குறையினைப் போக்குவதற்கு சித்தா, யூனானி, ஹோமியோபதி, ஆயுர்வேதா என்ற வகைகளில் அனுபவம் பெற்ற பட்டம் பெற்றவர்களை தமிழக அரசு எவ்விதத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்த விதத்தில் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு கிராமங்களில் ஏற்படும் குறைபாடுகளைப் போக்கிக் கொள்ள வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியத்தின் மீது பேசவாய்ப்பளித்தமைக்குத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

<u>திரு. சு. முத்துசாமி கரையாளர்</u> : தலைவரவர்களே, இன்றையமானியக்கோரிக்கை மீது என்னுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் சில வார்த்தைகளைப் பேச முற்

1978 மார்ச் 25] [திரு. சு. முத்துசாமி கரையாளர்]

படுகிறேன். 24 ஒன்றியங்களில் நடமாடும் மருத்துவ மனை அமைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும், மேலும் 100 மருத்துவ மனைகள் இந்த ஆண்டிலே ஏற்படுத்தப்படும் என்பதையும் அறிய மிகவும் சந்தோஷம் கொள்கிறேன். இப்போது நாம் ஒரு மருத்துவ மனைக்குச் சென்றால், எந்த ஒரு மருத்துவ மனையையும் குறிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம், அங்கேயுள்ள நோயாளிகள் திருப்தியாக இருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை என்பது இங்கே இருக்கும் அங்கத்தினர்களுக்கும் தெரியும், வந்து இருக்கிற அதிகாரிகளுக்கும் தெரியும். இதற்குக் காரணம் என்ன என்பதை யாவரும் அறிந்து அதற்கு ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டும். இப்போது உதாரணத்திற்காகச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கும் செங்கோட்டையிலே ஒரு வட்டார மருத்துவ மனை இருக்கிறது, அங்கே 32 படுக்கைகள் இருக்கின்றன. ஒரு நாளைக்கு 500-க்கும் மேற்பட்ட அவுட் பேஷன்டுகள் அங்கே வருகிறார்கள். அதற்காக நீங்கள் அறிவித்து இருக்கும் தொகை ரூ. 75,000.

[முற்பகல் 9–40]

ஒரு நாளைக்கு 500 பேர் வருகிறார்கள். ஒரு மாதத்திற்கு 15,000 பேர் வருகிறார்கள். அதைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது 1,60,000 ரூபாய்க்கு மருந்து கொடுத்தால்தான் ஓரளவுக்காவது திருப்தியடைய முடியும். ஆனால் நீங்கள் அனுமதித்திருக்கிற தொகை 75,000 ரூபாய்தான். அது எத்தனை மாதத்திற்குப் போதும் என்பதை நாம் சற்று ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. நமக்கு நிதி இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை என்பது தெரியும். அதற்கு ஒரு வழி என்ன? 75,000 ரூபாய்க்குக் கொடுக்கும் மருந்து அங்கு வருகின்ற நோயாளிகளுக்குச் சரியாகக் கொடுக்கப்படுகிறதா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கெல்லாம் இப்போது 'அட்வைசரி கமிட்டி' என்று ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் ஒரு அட்வைசரி கமிட்டி போட்டிருக்கிறோம். அங்கு நடப்பது என்ன? என்றைக்காவது அந்த கமிட்டி கூடுகிறதா? அந்த கமிட்டி ஏதாவது அறிக்கை சமர்ப்பித்திருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. அட்வைசரி கமிட்டி பெயரளவில் இருக்கிறது. அப்படி பெயரளவில் இல்லாமல் மாதம் ஒரு முறை அவர்கள் கூட வேண்டும்; அங்குள்ள குறைகளை அரசாங்கத்திற்குத் தெரி

[திரு. சு. முத்துசாமி கரையாளர்] [1978 மார்ச் 25

விக்க வேண்டும் என்பதிலே நாம் கண்டிப்பு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாத அட்வைசரி கமிட்டிகளைக் கலைத்துவிட்டு, உடனே மறுபடியும் ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும். அதை அரசாங்கம் உன்னிப்பாகப் பார்த்து, கண்டிப்பாகச் செய்தால் அங்கு நாம் அனுமதித்திருக்கும் மருந்துகளும். நோயாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய உணவுகளும் சரியாகப் போய்ச் சேரும்.

உணவு கிடைக்கிறதா என்று பார்த்தால் நம் யாவருக்கும் நன்றாகத் தெரியும். ஒரு கிளாஸ் பால் கொடுத்தால் அதில் உண்மையான பால் எவ்வளவு இருக்கிறது, தண்ணீர் எவ்வளவு இருக்கிறது என்று கணக்கிட்டுப் பார்த்தால் பாலைக் காட்டிலும் தண்ணீர் கூடுதல் இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். அதையும் அட்வைசரி கமிட்டி சரியாக ஃபங்ஷன் செய்தால் மாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றன. அதை நினைத்துப் பார்த்தாலே உள்ளம் பதறுகிறது. அங்கு மூன்று டாக்டர்கள் இருக்கிறார்கள். சில இடங்களில் இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். அங்கு எப்போதாவது சென்றால், 3 டாக்டர்கள் இருக்கக் கூடிய இடத்தில் ஒரு டாக்டர் கண்டிப்பாக இருப்பார். இரண்டு டாக்டர்கள் இருக்கக்கூடிய இடத்தில் டாக்டரே இருக்க மாட்டார்; டாக்டர் எங்கே என்று கேட்டால் இப்போதுதான் வீட்டுக்குப் போனார் என்று சொல்வார்கள். அந்த நிலைமை மாற வேண்டும். காரணம், அந்த டாக்டர்கள் அங்கே தங்குவது கிடையாது. அது எல்லோருக்கும் தெரியும். அது சம்பந்தமாக அங்கத்தினர்கள் போய்ச் சொன்னாலும், அந்த ஊரில் இருக்கும் மக்கள் சொன்னாலும் அதிகாரிகள் அதை கவனிக்க வேண்டும். ஆனால் அதிலே குறைபாடு இருக்கிறது. நான் போய் ஒரு டாக்டரைப் பற்றிச் சொன்னால் எனது சகோதர அங்கத்தினரே அந்த டாக்டரை மாற்ற வேண்டாமென்று சொல்கிறார், ஆகையால் நாம் என்ன செய்யவேண்டுமென்றால் அந்த பிரைமரி ஹெல்த் சென்டரில் வேலை பார்க்கும் டாக்டர்கள் அங்கேயே தங்கவேண்டுமென்று அவர்களுக்கு கண்டிப்பான உத்தரவு போட வேண்டும். கண்டிப்பான உத்தரவு போட்டு, அதைச் சரியாகக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

1978 மார்ச் 25] [திரு. சு. முத்துசாமி கரையாளர்]

அந்த பிரைமரி ஹெல்த் சென்டர் ஒரு இடத்தில் இருப்பதை, அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே அதை இரண்டாகப் பிரித்து, ஒவ்வொரு டாக்டருக்கும் ஒவ்வொரு மருத்துவ மனையின் பொறுப்பைக் கொடுத்து, மூன்றாவதாக இருக்கும் அந்த லேடி டாக்டர் ஒரு யூனிட்டுக்கு ஒரு நாள் விட்டுவிட்டு செல்ல வேண்டுமென்று அனுமதித்து, அங்கு இருக்கும் வாகனத்தை அந்த லேடி டாக்டர் உபயோகப்படுத்த வேண்டுமென்றும் திட்டமிட்டால் சிறப்பாகச் செயல்பட முடியும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு பஞ்சாயத்து யூனியனில் இருக்கின்ற இத்தகைய பிரைமரி ஹெல்த் சென்டருக்கு நாம் எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஊதியமாகவே 75,000 ரூபாய் செலவழிக்கிறோம். அதே மாதிரி மருந்து வகைகளுக்கு 15,000 ரூபாய்தான் கொடுக்கிறோம். 75,000 ரூபாயை ஊதியமாகக் கொடுத்துவிட்டு, 15,000 ரூபாய்க்கு கொடுக்கும் மருந்தும் சரிவர நோயாளிகளுக்கு போய்ச்சேருகிறதா என்று பார்த்தால் சரியாகப் போய்ச் சேரவில்லை; அங்கே இருக்கிற மருத்துவர்களும் மற்றவர்களும் தங்கள் கடமையைச் சரியாகச் செய்ய வில்லை என்பது தெரிய வருகிறது. அவர்களைப்பற்றி நாம் என்னதான் சொல்வது? அதைப்பற்றி டாக்டரிடம் சொன்னால் அவர்கள் உடனே நம்மிடம்தான் வருத்தம் சொல்கிறார்களே தவிர அவர்களுடைய பொறுப்பை உணருகிறார்களா என்று பார்த்தால் இல்லை. அவர்களுக்கு அந்த எண்ணம் வருவதேயில்லை. அவர்கள் அதை உணர வேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக சென்னையிலே 30 இலட்ச ரூபாய் செலவழித்து கருணாநிதி நகரிலே ஒரு மருத்துவ மனையை நாம் இப்போது கட்டி இருக்கிறோம். அங்குள்ள பொது மக்களைச் சென்று கேட்டால் அது சரியான அளவில் பிரயோசனப்படவில்லை என்று சொல்கிறார்கள். அவ்வளவு தூரம் 30 இலட்ச ரூபாய் செலவழித்துக் கட்டியும் மக்களுக்குப் பயன்படவில்லை என்பதை நாம் உணரவேண்டும்.

அடுத்து, சென்னை நகரிலே விபத்து ஏற்பட்டால் அந்த இடத்திற்கு உடனே செல்வதற்காக ஒரு வாகன வசதி மருத்துவ மனை இருப்பதாக அறிகிறேன். அதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆனால் அதுபோன்ற எல்லா தலை நகரங்களுக்கும் மருத்துவ உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டமான திருநெல்வேலி மாவட்டத்திலே டி.பி. ஹாஸ்பிட்டல் இல்லாத குறை மிகவும் ஜாஸ்தியாக இருக்கின்றது. அந்தக் குறையைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியும் என்னுடைய ஊருமாகிய செங்கோட்டையில் ஒரு மருத்துவ மனை இருக்கிறது. அது அரசாங்கத்தின் மருத்துவ மனை. அங்கே பத்து ஏக்கர் இடம் இருக்கிறது. அது நாங்கள் கேரள இராஜ்யத்திலே இருக்கும்போது கட்டியது. அங்கே மெட்டர்னிட்டி வார்டு இருக்கிறது. அது என்னுடைய தகப்பனார் கட்டிக் கொடுத்தது. அதற்கப்புறம் ஒரு ஆபரேஷன் தியேட்டரும் பொது மக்களால் கட்டிக் கொடுக்கப்பட்டதாகும். ஆனால் அரசாங்கம் அந்த செங்கோட்டையை ஏற்றுக்கொண்டதற்குப் பின்பு அங்கு ஏதேனும் கூடுதலாக வசதியினைச் செய்திருக்கிருக்கிறார்களா என்று எண்ணிப் பார்த்தால் அது இல்லை என்றே சொல்லலாம்.

அடுத்தபடியாக, எங்கள் ஊருக்குப் பக்கத்தில் இருக்கும் தென்காசியில் ஒரு வட்டார மருத்துவ மனை இருக்கிறது. அங்கே வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அதற்கு வேண்டிய வசதியினை அளிக்கவேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக எங்கள் தொகுதியிலுள்ள செங்கோட்டையம் என்னும் ஊரில் இருக்கும் ஜனத்தொகை 20,000 ஆகும். அங்கே ஒரு மருத்துவ மனை கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக உங்களிடம் முக்கியமாக ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மருத்துவ மனை இருக்கக்கூடிய இடத்திலே டாக்டர்கள் இல்லாத நிலை இருக்கின்றது. இவ்வாறு இருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே, இதற்காகவும் ஒரு பரிகாரம் உடனே செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

அடுத்தாற்போல திருச்சி மாவட்டத்திலே இருக்கும் பள்ளப்பட்டி என்ற ஊரிலே போஸ்ட்மார்ட்டம் செய்வதற்கான வசதி இல்லை. அதையும் உடனடியாகச் செய்து

கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர வர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

பொதுவாக இப்போது சமர்ப்பித்து இருக்கக்கூடிய இந்த அறிக்கையிலே கிராமப்புறங்களை நல்லமுறையிலே அபிவிருத்தி செய்யவும் தொழிலாளர்களுக்குத் தேவையான வாய்ப்பினைப் பெருக்கவும் மிக அதிக அளவில், இருக்கக்கூடிய பொருளாதாரத்தை வைத்து படுக்கைகளை அதிகப்படுத்தவும், நூதனக் கருவிகளை இருக்கக்கூடிய சூழ்நிலைக்கேற்ப தேவையான அளவுக்கு பயன்படுத்துவதற்கும் வேண்டிய ஒரு திட்டத்தினை கொண்டுவந்திருப்பதைக் கண்டு உண்மையிலேயே நான் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

[முற்பகல் 9.50]

இன்றிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் இதைவிட வேறு ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறபோது அது இயலாத ஒன்று என்று மக்கள் நினைக்கக்கூடிய அளவிற்கு நல்ல முறையில் ஆலோசித்து, ஆய்ந்து, ஆராய்ந்து திடமானதொரு அறிக்கையைச் சமர்ப்பித்ததற்காக அந்தத் துறையை நான் வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இத்துறையில் மிக நல்லமுறையில் மருத்துவக் கல்லூரி பயிற்சிக்கு வேண்டியவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் நல்லமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு இன்று தமிழக மக்கள் மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டமே பாராட்டக்கூடிய அளவிற்கு இருப்பதை நான் வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் முன்பிருந்த சூழ்நிலைகள் எப்படி இருந்தன என்பதையும், அந்த நேரத்தில் ஏற்பட்ட குற்றங்குறைகளைக் களைய வேண்டியது இந்த அரசின் பொறுப்பு என்ற காரணத்தாலும் நான் ஒருசில கருத்துக்களை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இங்கு சென்னையில் ஏற்கனவே ஹோமியோபதி மெடிக்கல் காலேஜ் என்று ஒன்று இருந்தது. ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி என்று முன்னர் இருந்த அரசு காலத்தில் தமிழ்நாட்டில் இருந்தது. அதற்குப் பெயர் வெற்றிச் செல்வி அன்பழகன் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி என்று வைக்கப்பட்டது. ஆனால் அப்படி ஏற்படுத்தப்பட்ட அந்த மருத்துவக் கல்லூரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை நிர்வாகிகள்—ப்ரபஸர்ஸ்—அந்தத் துறையில் பயிற்சி பெற்ற, பலன்பெற்ற, நல்லமுறையில் பக்குவம் பெற்ற மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு கெஸடெட் ஆபீசரை அந்த மருத்துவக் கல்லூரியில் போட்டிருக்கிறார்கள் என்றால் எந்தளவிலும் தகுதியற்ற ஒருவரை அங்கு நியமனம் செய்திருக்கிறார்கள் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எஸ்.எஸ்.எல்.ஸி. கூட படிக்காத ஒருவரை ஒரு கெஸடெட் ஆபீஸராகப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அந்த மருத்துவ முறைக்கே, ஹோமியோபதி மருத்துவ முறைக்கே இழுக்காகும்.

ஹோமியோபதி மருத்துவ முறை என்பது ஒரு சிறந்த மருத்துவ முறையாகும். அந்த மருத்துவ முறையைக் கண்டுபிடித்தவர் அலோபதியில் முழுமையாகப் படித்துப் பட்டம் பெற்று, பயிற்சி பெற்று அதை அமல்படுத்துகிற நேரத்தில் அது பொதுமக்களுக்கு நல்ல முறையில், தக்க விதத்தில் பயன் அளிக்கவில்லை என்று கருதி புதிய ஒரு மருத்துவ முறையைக் கண்டுபிடித்தார் ஒரு ஜெர்மானிய மருத்துவர். அந்தக் கல்லூரியில் நல்லமுறையில் பயிற்சி பெற்றவர்களை, பட்டம் பெற்றவர்களைப் போடாத காரணத்தால்தான் அந்த மருத்துவ முறையே பயன் அற்றது என்று சொல்லக் கூடிய அளவிற்கு, அந்த முறையே மோசமானது அல்லது நடைமுறைக்கு உதவாதது என்று மக்கள் நினைக்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது. இந்த அமைப்பு முறைகளை மாற்றியமைத்து, அந்த மருத்துவ முறையைச் சீராக்கி அது செவ்வனே நடைபெறக்கூடிய அளவில் திருத்தி அமைக்கவேண்டும் என்றுநான் இந்த அரசைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இப்போது திட்டங்கள் பல போட்டாலும் அந்தத் திட்டங்கள் நடைபெறுவதற்கான வழிமுறைகள் இல்லை என்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு திட்டங்கள் போட்டாலும் திட்டம் போட்டு திருடக் கூடிய கூட்டம் திருடிக் கொண்டேயிருக்கிறது; அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டேயிருக்கிறது; திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்ற தத்துவத்தின் அடிப்படையில் நாடு ஆகிவிட்டதே தவிர அது சீரான முறையில் இல்லை.

மருத்துவத் துறையில் இருக்கக்கூடிய மருந்துகள் காணாமல் போகின்றன என்று புகார்கள் வருகின்றன. மருத்துவத் துறையில் இருக்கக் கூடியவர்கள் பல பல வகைகளில் அவற்றைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு நிலை இருப்பதைச் சீராக்குவதற்கு வேண்டி ஒரு மக்கள் குழு, கண்காணிப்புக் குழு ஒன்றை அரசு நியமிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் செல்பவர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது, சாப்பாடு சீட்டு வழங்கப்படுகிறது. ஆனால் மருத்துவத் துறையில் கொடுக்கக் கூடிய சாப்பாடு பல வகைகளில் வீணடிக்கப்படுகிறது. அதை நோயாளிகள் பயன்படுத்துவது கூட இல்லை.

அதுமட்டுமல்லாமல், இங்கேயும் வாங்கிக் கொண்டு வெளியிலிருந்து சாப்பாடு வரவழைக்கக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. இதைமாற்றி நிச்சயமாக அரசாங்க உணவு தேவை என்று சொல்லக்கூடியவர்களுக்கு மட்டும் சாப்பாடு கொடுத்து மற்றவர்கள் அவரவர்கள் வீடுகளிலிருந்து சாப்பாட்டை, மருத்துவத் துறை ஆலோசனைப்படி உள்ள சாப்பாட்டை மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்லும் வகையில் இப்போதுள்ள முறையை திருத்தியமைக்க வேண்டும்.

இன்று அரசு மருத்துவ மனைகளில் பெருமளவிற்கு செலவு செய்து வருகிறது. அப்படிச் செலவு செய்துங்கூட நாடு எதிர்பார்க்கக்கூடிய அளவிற்குச் சீராக தேவையான சுகாதாரத்தை அடைய முடிகிறதா என்றால் இல்லை. மருத்துவமனைகளுக்

காக ஏராளமான பொருள் செலவு ஆகும்போது அந்தச் செலவு முழுமையாக மக்களுக்குப் பயன்படக்கூடிய நிலை இல்லாதிருந்தது. ஏழை மக்களுக்கு மருத்துவமனைகளில் இலவசமாகச் சிகிச்சை அளிக்கலாம்.

அதே நேரத்தில் தனியார் மருத்துவமனைகளில் பல பல இருக்கின்றன. அரசாங்க மருத்துவமனைகளில் தனியார்களுக்கு என்று—வசதி படைத்தவர்களைச் சொல்கிறேன்—ஒரு யூனிட் ஏற்படுத்தி வசதி பெற்றவர்கள், அரசு மருத்துவமனைகளில் குறிப்பிட்ட தேவையான கட்டணத்தைச் செலுத்தி மருத்துவ வசதி பெறக் கூடிய அளவிற்கு ஒரு அமைப்பை ஏற்படுத்துவது நல்லதாக இருக்கும்.

உதாரணமாக, சி.எம்.சி. மருத்துவமனையில் சேருவோருக்கு அங்கே ஆயிரம் ரூபாய் செலவாகும் என்றால் இங்கே ரூ. 200 அல்லது ரூ. 300 என்றளவிற்குச் செலவாகும் முறையில் சிகிச்சை முறையைக் கொண்டு வருவது என்பது குற்றத்திற்குரியதல்ல. ஆகவே, இன்றைய சூழ்நிலையில் ஏழை மக்களுக்கு இலவசமாகவும், வசதி படைத்தவர்களுக்கு உரிய கட்டணத்தைப் பெற்று மருத்துவ வசதி அளிக்கக்கூடிய முறையிலும் ஏற்படுத்த வேண்டும். ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்று அங்கிருந்து கீழ்பாக்கம் மருத்துவமனைக்கு சென்றால் அல்லது அங்கிருந்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்றால் சிகிச்சைக்கு ஒவ்வொருயிடத்திலும் எக்ஸ்ரே எடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி ஒவ்வொரு இடத்திலும் எக்ஸ்ரே நின்று விடுகிறது இதனால் மிகவும் கஷ்டங்கள் நஷ்டங்கள் ஏற்படுகின்றன. மெடிக்கல் ரிக்கார்டுகள் எல்லாம் ஒரே இடத்தில் இருந்தால், நோயாளிகள் பரிசோதனை செய்து கொள்வதற்கும் வசதியாக இருக்கும் அதே நேரத்தில் அரசுக்கும் பொருள் மிச்சமாகும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அரசுத்துறையில் இருப்பவர்களுக்கு உயர் படிப்பு படிப்பதற்கு வசதியிருக்க வேண்டும். இப்போது அந்த வசதியில்லை, அதே நேரத்தில் பிரைவேட்டாக இருக்கின்றவர்களுக்கு உயர்படிப்பு படிக்கின்றவர்களுக்கு வசதியிருக்கிறது. அதை ஓரளவுக்குக் குறைத்து அரசுத் துறையில் இருப்பவர்களுக்கு மேலும் உயர்படிப்பு படிப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களை அதற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அரசுத்துறையில் பரிசோதனை செய்கின்ற நேரத்தில் அதற்கான சீட்டுகளை அங்கேயே வைத்துக் கொள்கிறார்கள், அப்படியில்லாமல் அதைத் திரும்பக் கொடுத்துவிட்டால், பின்னால் வேறொரு மருத்துவமனைக்கு சிகிச்சைக்குச் சென்றாலும், அதைப் பார்த்து தொடர்ந்து சிகிச்சையை செய்து கொள்ள முடியும், எனவே அதை பெர்மனன்டாக வைத்துக் கொள்ள வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இதில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவத் துறை மான்யக் கோரிக்கைமீது எங்கள் கட்சியின் சார்பாக சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மருத்துவத் துறைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதுமா என்பதை எண்ணிப் பார்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த தமிழக அரசின் வரவு–செலவுத் திட்டத்தின் கல்வித் துறைக்காகவும், மற்றும் பல்வேறு துறைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தைப் பார்க்கும்போது இந்த மருத்துவத்துறைக்குப் போதுமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அது வருந்தத்தக்கதாகவே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவத் துறை என்பது நாட்டுமக்களுக்கு எவ்வளவு அவசியம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலும் கிராமங்களில் இருக்கின்ற மக்களுக்குப் புதிய மருத்துவ வசதிகள் கிடைப்பதில்லை, மருந்து வசதிகள் கிடைப்பதில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

இன்று இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால்கூட, நகரங்களில் பல பகுதிகளிலும், மருத்துவமனைகளிலும் படுக்கை வசதி விஞ்ஞான வசதிகள் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆனால் கிராமங்களிலுள்ள மருத்துவமனைகளை எடுத்துக் கொண்டால் எந்த விதமான வசதியும் கிடையாது. வட்ட தலைநகரங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளில் மட்டும் சில வசதிகள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளில்கூட வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்குப் போதுமான அளவு நிதி வசதியில்லை என்று தெரிகிறது.

சாதாரணமாக கிராமங்களில் இருக்கின்ற மக்கள் 20, 25 மைல் தொலைவில் இருக்கின்ற வட்ட தலைநகரங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளுக்கு வரவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. போக்குவரத்து வசதியற்ற நிலைமையில் தான் கிராமங்களை தமிழகத்தில் நிறையக் காண்கின்றோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒதுக்கப்படுகின்ற நிதியில் கிராமங்களிலுள்ள மக்கள் பயன்படுகின்ற அளவில், பஞ்சாயத்து ஒன்றியங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளுக்கு அதிகமான மருந்து வசதிகளையும், அதிகமான படுக்கை வசதிகளையும் செய்து கொடுத்தால் கிராம மக்கள் நல்லமுறையில் பயன் அடைய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற பல வருடங்களுக்கு முன்னால், கிராமங்களிலுள்ள மக்கள் எல்லாம் பயன் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் மருத்துவர்கள் எல்லா கிராமங்களுக்கும் சென்று சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், ஒன்றியங்கள் தோறும், ஒவ்வொரு மருத்துவ மனை இருக்க வேண்டும் என்று மருத்துவ மனைகள் அமைக்கப்பட்டன. ஆனால் இந்த மருத்துவ மனைகள் எல்லாம் சரியான முறையில் செயல்பட வில்லை என்பதை நாம் நன்றாகத் தெரிந்து இருக்கிறோம். இந்த மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காகப் போனால், அங்கே படுக்கை வசதியும் இல்லை, மருந்துகளும் இல்லை என்றுதான் அதிகமாகச் சொல்லுகிறார்கள். காரணம் அந்தப் பஞ்சாயத்து யூனியன்களில் மருத்துவமனைகளுக்குத் தேவைப்படுகின்ற அளவிற்கு போதுமான பண வசதியில்லை. இதன் காரணமாக போதுமான அளவுக்கு மருந்துகள் வாங்கி வைக்க முடியாத நிலையில், எந்த விதமான மருந்துகள் வசதியில்லாமல், வேறு எந்தவிதமான வசதியும் இல்லாத நிலைமையில்தான் இருந்து கொண்டிருக்கிறது.

[முற்பகல் 10·00.]

உடனடியாக அந்தப் பஞ்சாயத்து யூனியனால் நடத்தப்படுகின்ற மருத்துவ மனைகளை எல்லாம் அரசே நேரடியாக எடுத்துக் கொண்டு, அதற்குப் பணம்ஒதுக்கி, மருந்துகள் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய வேதாரண்யத்திலே ஒரு மருத்துவ மனை பஞ்சாயத்து ஒன்றியத்தாலே நடத்தப்படுகின்றன. ஆனால் அந்த மருத்துவ

மனையைப் போதிய அளவிற்கு அரசு மருத்துவ மனையாக ஆக்குவதற்கான தகுதிகள் எல்லாம் இருந்தும், அதை அரசு மருத்துவமனையாக ஆக்க வேண்டுமென்று பல ஆண்டுகள் பல முயற்சிகள் எடுக்கப்பட்டும், அது இன்னும் முடியவில்லை. இன்றையத் தினம்கூட இந்த மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக ஆக்க வேண்டுமென்று பல பேர்கள் உண்ணாவிரதம் இருக்க, விளம்பரங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மருத்துவமனையில் 3 மருத்துவர்கள் பணியாற்றுகின்றார்கள். படுக்கை வசதிக்கான இடம், கட்டிடம், இன்னும் எல்லாத் தேவைகளும் இருந்தும் கூட, தற்போது வட்ட மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமானால் 25 மைல் தாண்டிச் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்த மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி, அங்கே கரியாபட்டிணம் கிராமத்தில் ஒரு அரசு மருத்துவமனை வேண்டும் என்பதற்காக கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னாலேயே முயற்சி செய்யப்பட்டு, மருத்துவத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லாம் அங்கே வந்து பார்வையிட்டார்கள். அந்தச் சமயத்தில் அதிகாரிகள் பொதுமக்கள் நன்கொடை தந்தால் ஆரம்பிக்கலாம் என்று சொன்னார்கள். அதன்படி, அங்கே கட்டிடங்கள் கட்டியும், போதுமான நிலம் அரசுக்குக் கொடுத்து இருந்தும், இன்றைய தினம் வரையிலும் அங்கே மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளப் படாமல் இருக்கிறது.

அங்கே கட்டப்பட்ட கட்டிடம் அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடம் கட்டப்பட்டு, 2, 3 ஆண்டுகள் ஆகிவிட்டதால் இப்போது ரிப்பேர் செய்யும் நிலைமையில் இருக்கிறது. எனவே, இதையெல்லாம் கவனித்து கரியாபட்டிணத்தில் ஒரு மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு உடனடியாக அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, மருத்துவமனைகளிலே பணியாற்றும் ஊழியர்களுக்கு பெரும்பாலும் அவர்கள் குடியிருப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படவில்லை. சொந்த வீடுகளில் குடியிருக்க வேண்டிய நிலையிருக்கிறது. இது அவர்களுக்கு உடனடியான,

அவசரமான தேவை. அவர்கள் மருத்துவமனைக்கு அருகாமையில் குடியிருந்தால், உடனடியாக வந்து பணியாற்றுவதற்கு வசதியாக இருக்கும். அதையும், இந்த அரசு உடனடியாக கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, துப்புரவு மேற்பார்வையாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்போது அரசுக்குத் தங்களுடைய கோரிக்கைகளை வைத்து, சில குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைகளையும் போக்கி, அவர்களுடைய கோரிக்கைகளை அக்கறையோடு அரசு கவனிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த மருத்துவமனைகளிலே பணியாற்றுகின்ற கம்பவுண்டர்கள் பல பேர்கள், ஓய்வு பெறுகின்றபோதுகூட ஒரு சிலருக்குத் தான் பதவிஉயர்வு கிடைக்கிறது. ஒரு விழுக்காடு, இரண்டு விழுக்காடு கூட சீனியாரிடி முறைப்படி பதவி உயர்வு கிடைக்காமல் அவர்கள் ஓய்வு பெறுகிறார்கள். அரசு அவர்களுக்கு ஏதாவது முயற்சி செய்து பதவி உயர்வு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு வீ. அர்ச்சுனன்</u>: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மருத்துவத் துறை மானியக் கோரிக்கையின்கீழ் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த இந்தச் சந்தர்ப்பத்திலே என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு ஆரணி தொகுதியிலே உள்ள மருத்துவ மனையைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.

அங்கே உள்ள மருத்துவமனை 25 படுக்கை வசதிகள் கொண்டதாக இருக்கிறது. அதிலே இரண்டு டாக்டர்கள் பணியாற்றுகின்றார்கள். ஆனால், அங்கே வருகின்ற நோயாளிகளோ தினமும் 1,300, 1,400 பேர்கள். அங்கே வருகின்ற நோயாளிகளுக்குச் சீட்டுக் கொடுப்பதற்குத்தான் நேரம் இருக்கிறதே தவிர, வருகின்ற நோயாளிகளுக்கு சிகிச்சை கொடுப்பதற்கு நேரம் இல்லை. இதைப்பற்றி அங்கே இருக்கக்கூடிய பெரிய அதிகாரிகளிடத்திலும், இங்குள்ள மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடமும் அங்கே இருக்கின்ற குறைகளைப்

பற்றி மனுக்கள் மூலமாக நான் கொடுத்திருந்தும், இதுவரையிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதே நேரத்திலே அங்கே இருக்கிற டாக்டர்கள் தங்கி இருக்கிற இடத்திற்கும் மருத்துவமனைக்கும் இடையே ஒரு மைல் தூரத்திற்கு மேல் இருக்கிறது. அந்த மருத்துவமனைக்குத் தாய்மார்கள், கர்ப்பஸ்திரிகள் வருகிற நேரத்தில் டாக்டர்களைப் போய் அழைத்து வர காலதாமதமாகிறது. அங்குள்ள அதிகாரிகளிடத்தில் மனுக் கொடுத்து அவர்கள் குடியிருக்க சிப்பந்திகள் இல்லத்தை மருத்துவமனை அருகில் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கை கொடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அங்கே கொடுக்கப்படுகிற உணவு காண்டிராக்டர் மூலமாகக் கொடுக்கப்படுவதால் சரிவர இல்லை. அங்குள்ள பாத்ரூம்கள், கக்கூஸ்கள் நாகரிகமற்ற முறையில், அசுத்தமாக இருக்கின்றன. அங்கு சென்று பார்க்கும்போது அங்கு வருகிற வியாதிஸ்தர்களுக்கு அங்கே உள்ள நிலையிலே நோய் தொற்றிக் கொள்ளும் அளவுக்கு இருக்கிறது.

கண்ணமங்கலத்தைச் சுற்றி 52 கிராமங்கள் இருக்கின்றன. அங்கு ஒரு சிறு மருத்துவமனைகூட இல்லை. அங்கே பத்து படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ மனையைக் கட்டித் தர வேண்டுகிறேன். அங்கு 500-க்கு மேற்பட்ட வியாதிஸ்தர்கள் தினசரி வருகிறார்கள். அவர்கள் ஆரணிக்கு வர பன்னிரண்டு மைல்கள் வர வேண்டியுள்ளது. எனவே அங்கு இந்த வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணியை அடுத்த தேவிகாபுரத்தைச் சுற்றி 62 கிராமங்கள் இருக்கின்றன. ஆரணி டவுனுக்கு வருவது என்றால் 15 மைல் தூரம் வர வேண்டும். ஆகவே, இந்த அரசு அங்கு ஒரு மருத்துவமனையை அமைத்து ஏழை எளிய மக்களுக்கு வசதி செய்து தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி டவுனில் உள்ள மருத்துவமனையில் ஹெட் நர்ஸ் அங்கு * * * * தரக்குறைவாகப் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களால் சில சொற்கள் இங்கே பேசப்பட்டன. தாங்கள் அவர் பேசியதைக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். அது இந்த அவைக் குறிப்பில் இருப்பது நல்லதல்ல. அந்தச் சொற்களைத் தாங்களே பார்த்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் பார்த்து நீக்க வேண்டுமென்றால் நீக்கிவிடுகிறேன்.

திரு. வீ. அர்சுனன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அந்தச் சொற்களை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.

தேவிகாபுரத்திலிருந்து ஆரணி மருத்துவமனைக்கு வருவது என்றால் 15 மைல் தூரம் வரவேண்டியிருக்கிறது. அங்கு ஒரு மருத்துவமனையை அமைத்து பத்து படுக்கைகளையும் இரண்டு டாக்டர்களையும் போட்டு அந்தப் பகுதி மக்களுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

டாக்டர் ஏ. பொன்னுசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் கொண்டு வந்துள்ள இம் மருத்துவ மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களைக் கூறும் முன் மாண்புமிகு புரட்சித் தலைவருக்கும், பெருந்துறைத் தொகுதி மக்களுக்கும் மருத்துவ நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குபேரர்களுக்கோ, கோமான்களுக்கோ, சாப்பிட்ட சோறு செரிக்கலேன்னு சொல்லிட்டு ஏர்கண்டிஷன் ரூமிலே படுத்துப் புரண்டுகிட்டு இருக்கிறவங்களுக்கு மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டங்களைக் கொண்டு வரவில்லை. வாழ்க்கையின் அடிமட்டத்திலே, கிராமத்திலே வாழ்ந்திண்டிருக்கானே, சாப்பிடக்கூட சாப்பாடு இல்லாமே

லட்சோப லட்சம் ஏழை எளிய மக்கள்—அவுங்களுக்காக புரட்சிகரமான திட்டங்கள் பல தந்துள்ள மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இன்னும் அதிகப்படியான மருத்துவர்களை நியமித்து வேலை இல்லாத் திண்டாட்டம் குறைக்கப்படுகிறது. கிராம மக்களுக்குச் சிறந்த தொண்டாற்ற மினி டிஸ்பென்சரி, மொபைல் யூனிட் எல்லாம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. மிக நல்லது. இது மிகவும் போற்றுதற்குரியது. மினி டிஸ்பென்சரி ஒன்றை பெருந்துறை தொகுதியிலே பல்லகவுண்டன் பாளையத்திலே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

[முற்பகல் 10–10.]

இப்போது இருபது ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசாங்க மருத்துவமனைகளாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது நல்லது, அதற்காக நான் நம்முடைய அரசைப் பாராட்டுகிறேன். அதிலே பெருந்துறைப் பகுதியிலே இருக்கின்ற ஊத்துக்குளி மருந்தகத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதையும் சேர்த்து அந்தப் பகுதி மக்களின் வாட்டத்தைப் போக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் ஜெபமணி அவர்கள் பேசும்போது ஒரு பெண் டாக்டர் வேண்டும் என்றார். அது போல நானும் கேட்கிறேன். பெருந்துறையைச் சேர்ந்த திங்களூர் மருந்தகத்திற்கு அந்தப் பகுதியிலுள்ள தாய்க்குலத்தின் நீண்டநாள் வேண்டுகோளுக்கிணங்க பெண் டாக்டர் ஒருவரைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பி.ஹெச்.சி.க்கு மருந்து வாங்குவதற்குப் பணம் என்ற முறையிலே 12 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டு வந்தது, 14 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருக்கிறது, இதுவும் போதாது. காரணம் ஆரம்பத்திலே இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் நோய்த் தடுப்பு நிலையங்களாகத்தான் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் பின்னாலே நோய் நீக்கும் நிலையங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் பணம் மட்டும் போதாது. காரணம், பட்டிக்காட்டிலே பார்மஸி

கிடையாது, அது மட்டுமல்ல, அப்படியிருந்தாலும் கிராம மக்களுக்கு மருந்துகளை வாங்கும் சக்தி கிடையாது. அதனால் இன்னும் அந்தப் பணத்தை அதிகமாகத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'பிரிவென்ஷன் இஸ் பெட்டர் தேன் க்யூர்' என்று சொல்வார்கள். அதனால் தொற்றுநோய்கள் வராமல் பாதுகாக்க வேண்டும். தீ பரவாமல் முன்கூட்டியே அணைக்க வேண்டும். இப்படிச் செய்வதாலே எக்கச்சக்கமான காசு மிச்சமாகும்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், லெப்ரஸி என்ற நோயை ஆரம்பத்திலே கண்டுபிடித்துத் தடுக்கவேண்டும். இல்லாவிட்டால் வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் துன்பப்படவேண்டும். கடைசியில் அவன் பிச்சைக்காரனாக வேண்டிய நிலை உள்ளது. இது ஒரு தொற்று நோய் என்பதாலே இந்தப் பிச்சைக்காரர்களை ரோட்டிலே அலையவிடக் கூடாது. அவர்களை அந்த லெப்ரசோரியம் இல்லத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அடுத்து, போலியோ. இது குழந்தைகளைப் பாதித்தாலும் கூட, குழந்தைகள் மட்டும் பாதிக்கப்படுவதில்லை, ஓடி விளையாடு பாப்பா என மகிழ்ந்த தாயைப் பாதிக்கிறது. பார்பவர்கள் எல்லாம் வேதனைப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது, வருத்தப்பட்டு என்ன லாபம்? போன கால் போனதுதான், போன உயிர் போனது தான். ஆகவே இந்த நோயை பி.பி.டி. போட்டு தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, ரொமேடிக் கண்டிஷன்ஸ். இதை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துக் குணப்படுத்த வேண்டும். அப்படிக் குணப்படுத்திவிட்டால் கடைசியிலே கார்டியாலஜி டிபார்ட் மெண்டிற்குப் போய் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை, அரைகுறையாகக் குணப்படுத்தத் தேவையில்லை.

அடுத்து சோகை நோய். குடல் புழுக்கள் மனித உடலிலே புகுந்து அவனுடைய சக்தியிலே பாதியை உறிஞ்சுகிறது. இதற்குக் காரணமே நமது நாட்டிலே இருக்கின்ற ஓபன் ஏர் லெட்ரின் தான். கிராம மக்கள் எல்லாம் இதனுடைய தீமையை உணருவதில்லை. ஒவ்வொரு

ஊருக்கும் ஒரு ப்ளஷ் அவுட் லட்ரீன் கட்டித்தர வேண்டும். அப்படிக் கட்டித் தந்தால் மட்டும் போதாது, கிராம மக்கள் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் பழக்க வேண்டும்.

அடுத்து, கொசு; பார்ப்பதற்கு சிறிய பூச்சி தான். ஆனால் அது பண்ணுகிற வேலையெல்லாம் பெரிய வேலை. அதற்கு என்ன தான் டி.டி.டி. மருந்து அடித்தாலும் கூட அது அதையே சாப்பிட்டு விட்டு ஏப்பம் விடுகிறது. கொசு உற்பத்திக்குக் காரணமே கழிவுநீர் தேங்குவதுதான். ஆகவே கழிவு நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பெருந்துறையிலே சின்னக் கூவம், சின்னக்கூவம் என்ற இரண்டு கூவம் இருக்கின்றன. அதை சரிசெய்தாலே பெருந்துறை மக்களுக்குப் பெரிய கொசுவலை வாங்கித்தந்த மாதிரி. ஆகவே அரசு அதை கவனத்தில் எடுத்துக் கொண்டு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெருந்துறை என்கிறபோது எல்லோருக்கும் நினைவுக்கு வருவது அங்கே உள்ள சானிடோரியம் தான். காச நோய்க்கு சிகிச்சை அளிப்பதிலே இந்தியாவிலே புகழ் பெற்றது அது தான். காசு நோய் ஆச்சுங்களே அது, காசில்லாதவர்களை குறிப்பாக, நெசவாளர்களை, விவசாயிகளை, தாழ்த்தப்பட்டவர்களைத் தான் தாக்குகிறது.

இப்போது அந்த மருத்துவ மனை காசில்லாமல் நோய் வாய்ப்பட்டுக் கிடக்கிறது. அதனால் அரசாங்கம் அதனை எடுத்து நடத்த முன்வர வேண்டும், அல்லது அதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து தரவேண்டும் என்று சுற்றுவட்டார சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, அங்கே இன்னும் 100 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டும் கட்டித் தர வேண்டும். ஏனென்றால், எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் கேட்கிறார்கள். அவர்களுக்காக இல்லை, அவர்களுடைய தொகுதி மக்களுக்காக.

அடுத்து, ஏர்பொல்லூஷன் அன்ட் வாட்டர் பொலூஷன். இவைகளைக் கண்டிப்பாகத் தடுக்க வேண்டும். இந்தச் சமயத்தில் புகை பிடிப்பதற்குத் தடை விதிக்க

வேண்டுமென்று நினைக்கிறேன். இந்தப் புகைபிடிப்பதால் சாதாரண இருமலில் இருந்து புற்று நோய் வரைக்கும் ஏற்படுகிறது. மதுவை விட இது பல மடங்கு மனிதனுக்குக் கெடுதலை உண்டாக்கக்கூடியதால் இதைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்க் கலவையினால் தான் மனிதனுக்கு நிறைய நோய்கள் வருகின்றன. அதனால் குடிநீர் பாதுகாக்கப்பட்டதாகவும், குழாய் மூலமாகவும் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும்.

எந்த உணவு விடுதியாக இருந்தாலும் சுத்தமாக இருப்பதில்லை. கண்ணாடி டம்ப்ளரில் தண்ணீர் கொண்டுவந்து வைத்தால், எடுத்துப் பார்த்தால் ஜூஸ் மாதிரி இருக்கும், ஏன் என்றால் அவ்வளவு தூசு. ஓட்டலில் சாப்பிட்டுவிட்டால் பேதிக்கு மருந்து சாப்பிட வேண்டியதில்லை. இவைகளையெல்லாம் சரிசெய்ய வேண்டும்.

நிதி இல்லாமல் நீதி கிடைக்குமா? கிடைக்காது, அதனால் பெரிய ஆஸ்பத்திரிகளிலே எல்லாம் ஸ்பெஷல் வார்டுகளிலே பெட் ஸ்டெரங்த்தை அதிகப்படுத்த வேண்டும். ஈவினிங் கன்சல்டேஷன் என்று கொண்டுவரலாம். பணம் கொடுத்துத்தான் வைத்தியம் பார்ப்பேன் என்பவர்களுக்கு இப்போது நல்ல சான்ஸ் இருக்கிறது. அது மட்டும் அல்ல, கரப்ஷன் கொஞ்சம் ஒழியும். டாக்டர்களும் வருமான வரி ஒழுங்காகக் கட்டுவார்கள்.

அடுத்து ஓ.பி. சீட்டுக்கு 10 பைசா போடலாம், ஏன் என்றால் நிறைய செலவு செய்து சோதனை செய்து எக்ஸ்ரே எல்லாம் எடுத்து வைத்தியம் பார்த்து சீட்டு எழுதிக் கொடுத்தனுப்பினால் அதைத் தொலைத்துவிட்டு மறுநாளைக்கு புதுச் சீட்டுக்காக வந்து நிற்கிறார்கள். மறுபடியும் சீட்டு கொடுப்பது என்றால் எவ்வளவு பணம் செலவாகும்? இதை யோசனை செய்யவேண்டும். அனாவசியமாக எக்ஸ்ரே எடுக்கக் கூடாது.

அதிக விலையுள்ள மருந்துகளை அனாவசியமாக உபயோகிப்பதைத் தடுக்க வேண்டும்.

இன்வெஸ்டிகேஷன் செய்வதிலே உள்ள டிலேயைத் தவிர்க்க வேண்டும். 'டிலே இன் ட்ரீட்மென்ட்' தடுக்கப்பட வேண்டும். நோய்த் தடுப்பு முறைகளைத் திறம்பட அமலாக்க வேண்டும்.

நமக்குத் தேவையான மருந்துக்களை நாமே தயாரித்தால், மருந்துக்குப் பணம் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியதில்லை, மருந்துகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம், நமது 'பார்மசிஸ்டு'களுக்கு வேலை கொடுக்கலாம்.

மருத்துவமனை என்பது ஒரு தொடர் இயந்திரம் போன்றது. எல்லாத்தரமான அலுவலர்களும் அவரவர் வேலைகளைச் சரிவரச் செய்யக் கண்காணிப்பு மட்டும் இருந்தால் போதாது, கண்டிப்பும் இருக்க வேண்டும்.

இந்த இடத்திலே மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். பட்டிக்காட்டிலேயிருந்து வருகின்றவர்களுக்குப் பட்டிக்காட்டு மார்க் என்று போட வேண்டும். இல்லையென்றால் பட்டணத்துக்காரன் சமூக நல ஊழியன், விளையாட்டு வீரன், படிப்பிலே புலி, பாய்வதிலே சிங்கம், அதிலே ஆராய்ச்சி, இதிலே ஆராய்ச்சி என்று ஒரு கத்தை சர்ட்டிபிகேட்டைக் காட்டி மயக்கிச் சேர்ந்து விடுவான். இதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

பட்ட மேற்படிப்பு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது மேற்கூறியதோடு கிராமத்திலே ஐந்து வருஷம் வேலை பார்த்தால் அவனை எடுத்துக் கொள்ள வேண்டும். பத்து வருஷமாக இருந்தால் அவனைக் கண்டிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இந்த நகர்ப்புறத்திலே இருப்பவர்கள் கிராமத்திற்கு நகருவார்கள்.

படித்துவிட்டு 3000 டாக்டர்களுக்கு மேல் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டுமென்றால் அட்மிஷனைக் குறைக்க வேண்டும். சென்ற முறையே சொன்னேன், 1,015 சீட்டு என்பதை 800-க்குக் குறைத்தே ஆக வேண்டும். அப்பொழுது தான் நல்ல கவனம் செலுத்தி நல்ல டாக்டர்களை உருவாக்க முடியும்.

வெளிநாடுகளுக்குச் செல்கின்றவர்களை யெல்லாம் ஊக்குவிக்க வேண்டும். கேரளா, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களை எடுத்துக் கொண்டால் ஸ்பெஷல் பிளேன் விடுகிறார்கள். மத்திய அரசிடம் அடித்துப்பிடித்து கோட்டா வாங்கி அரேபியா போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். இதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடிகிறது, வேலைவாய்ப்பைத் தேடித் தர முடிகிறது. அவர்கள் வேலையை இராஜினாமா செய்தால் இங்கே வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு வேலை கொடுக்கலாம். அவர்கள் அங்கே சென்று எல்லாப் பணத்தையும் தாங்களே வைத்துக் கொள்ளாமல் தமிழ்நாட்டிற்கும் அனுப்புவார்கள். அதனால் அந்நியச் செலாவணி நமக்குக் கிடைக்கும். அவர்கள் மேல்நாட்டில் கற்ற கல்வியும், பெற்ற அனுபவமும் நமக்குப் பயன்படும். இதனை அரசு நன்கு யோசனை செய்து 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்பது மாதிரி அரசாங்க டாக்டர்களுக்கு இருக்கின்ற கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது ஒரு இலட்சம் ரூபாய் பாண்டு கேட்கிறார்கள். ஒரு இலட்சம் என்று சொல்கிறபொழுது அவர்களாலே நிம்மதியாக இருக்க முடியார்து. இந்த ஒரு இலட்சம் என்பது நம் நாட்டு மக்களுக்குச் சில ஆண்டுகாலம் சர்வீஸ் செய்துவிட்டு வெளிநாடு போய்விட்டு மறுபடியும் வந்து சர்வீஸ் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்களே அவர்களுக்குத்தான்.

ஆனால் வேலையை ரிசைன் செய்துவிட்டு போகின்றவர்களுக்கு எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. இதைவிட எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., எம்.சி.எச்., போன்ற மேல் படிப்பு படித்துவிட்டு, அரசாங்கச் செலவிலே படித்துவிட்டு தமிழ்நாட்டிற்கு ஒரு நாள்கூட சர்வீஸ் செய்யாமல் வெளிநாடு செல்வதற்கும் எந்தவிதமான கட்டுப்பாடும் கிடையாது. அதை அரசு கவனிக்க வேண்டும். கவனித்து அரசு டாக்டர்கள் வெளிநாடு செல்ல இருக்கின்ற கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 'ஆனரரி சர்ஜன்' தேவையா இல்லையா என்று சர்ச்சை இருக்கிறது. 'ஆனரரி சர்ஜன்' சிஸ்டம் வேண்டுமென்றுதான் தோன்றுகிறது. ஏனென்றால் அவர்கள் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்திலே அரசாங்க

ஆஸ்பத்திரியிலே வேலை செய்யவில்லை. தாங்கள் கற்றது மறந்துவிடாமல் இருக்க வெண்டுமென்பதற்காகவும், தாங்கள் கற்றது மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காகவும், நல்ல அனுபவம் பெற வேண்டுமென்றும் தான் அவர்கள் வேலைசெய்ய விரும்புகிறார்கள். அரசாங்கத்திற்கு இதனாலே எந்தவிதத்திலும் நஷ்டம் கிடையாது இலாபம்தான். சம்பளம் கொடுக்கவேண்டியதில்லை.

'ஆனரரி சர்ஜன்' கள் எல்லாம் சிறந்த மருத்துவர்களாக இருக்கின்றார்கள். பேருக்கு ஆசிரியராக இல்லாமல் உண்மையிலேயே பேராசிரியராக இருப்பதால் மாணவர்களுக்கும் நல்லது, ஆகவே, 'ஆனரரி சிஸ்டம்' இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

இதுபோன்ற நாடு நலம் பெறும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. திட்டம் தீட்டப்பட்டால் மட்டும் போதாது, அது கிராம மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும், சேரும், அப்போது நமது மாண்புமிகு புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலம் ஒரு பொற்காலமாக விளங்க இருக்கிறது என்பது உறுதி என்று கூறி நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ச்சுனன் அவர்கள் பேசும்பொழுது * * * * சொல்லிய அந்த வார்த்தையைச் சபைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

<u>திரு. கே. ஜே. சுப்பிரமணியன் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறும் மருத்துவ, சுகாதார மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. கே. ஜே. சுப்பிரமணியன்] [1978 மார்ச் 25

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். எனவே நோயுற்றவர்களைக் குணப்படுத்துவதே சுகாதாரம், மருத்துவம். இதைச் செயல்முறைப்படுத்தி மக்களுடைய குறைகளைப் போக்குவதே இந்த அரசினுடைய நோக்கமும், புரட்சித் தலைவருடைய ஆசையும் ஆகும்.

இந்தத் திட்டத்தை நல்ல திட்டமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மருத்துவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் கூடுதலாக இருப்பதை யறிந்து பாராட்டுகிறோம். இந்தத் தொகை ஒதுக்கீடு ஏழை எளிய மக்களுக்காக் ஒதுக்கப்பட்ட தொகையாகும். இந்தத் தொகையைச் செம்மையாகவும், நேர்மையாகவும், நியாய மாகவும் செயல்படுத்துகின்ற பொறுப்பு மருத்துவ சுகாதார அதிகாரிகளையே சாரும். ஆகவே, அரசு மருத்துவ அதிகாரி களைக் கேட்டுக் கொள்கிறேன், இந்த அரசுக்கும், மருத்துவத் துறையின் பொறுப்பை ஏற்றிருக்கின்ற எங்கள் மாண்புமிகு முதலமைச்சருக்கும் எந்தவிதமான களங்கத்தையும் கற்பிக் காத வண்ணம் நோய்வாய்ப்பட்டு வருகின்ற மக்களிடத்தில் நல்ல அன்பாலும், பண்பாலும், ஆசையாலும் அணுகி நோயுற்றவர்களுக்குச் சிகிச்சை செய்து அனுப்புவார்களே யானால் அதுவே இந்த அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்ச ரவர்களுக்கும் நல்லதொரு பெருமையைத் தேடித் தரத்தக்க அதிகாரிகளாவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்திலே மாவட்ட மருத்துவமனை வேலூரில் உள்ளது. அந்த மருத்துவ மனையில் படுக்கைகள் மிகவும் குறைவாக உள்ளது. அதனால் வரு கின்ற நோயாளிகளைக் கீழே படுக்க வைக்கின்றார்கள். அதை நான் கண்ணால் பார்த்து, ஏன் இவ்வாறு செய்யப்படுகிறது என்று கேட்டபொழுது, இங்கே போதுமான படுக்கைகள் இல்லை, ஆகவேதான் இந்த நிலைமை ஏற்படுகிறது என்று அந்த மாவட்ட மருத்துவமனை அதிகாரி கூறியுள்ளார்.

[முற்பகல் 10-20]

ஆகையால், வேண்டிய படுக்கைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள் கிறேன்.

1978 மார்ச் 25] [திரு. கே. ஜே. சுப்பிரமணியன்]

மேலும் அந்த மருத்துவ மனையில் பிரசவ விடுதி ஒன்று உள்ளது. ஆனால், விடுதியில் ஆப்பரேஷன் செய்யவேண்டிய கருவிகள் உடனுக்குடன் கிடைக்கவில்லை. ஆப்பரேஷன் கேசுகளை வேறு விடுதிக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருப் பது ரொம்பவும் சிரமமாக உள்ளது. ஏனென்றால், பிரசவ விடுதிக்கும் ஆப்பரேஷன் விடுதிக்கும் கொஞ்சம் இடைவெளி இருப்பதால், உடனுக்குடன் ஆப்பரேஷன் செய்ய முடிய வில்லை. ஆகவே, பிரசவ விடுதியிலே ஆப்பரேஷன் விடுதியும் ஏற்படுத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என் தொகுதியில்—போளூரில்—பிரசவ விடுதி கட்ட முன்னமே விண்ணப்பம் கொடுத்துள்ளோம். இந்த அரசும் ஆவன செய்யும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே போல், கேளூர், கணியம்பாடி, களம்பூர் போன்ற கிராமங் களிலெல்லாம் அரசு மருத்துவ மனைகள் உள்ளன. ஆனால், அந்த மருத்துவ மனைகள் பொதுமக்களுக்குச் சரியான வகை யில் பயன்படாத வகையில் இயங்கி வருகின்றன. ஆகவே, அந்த மருத்துவ மனைகள் நல்ல முறையில் இயங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

வாணியம்பாடி தொகுதியைச் சேர்ந்த திரு. லத்தீப் அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், எங்கள் பகுதிகள் புறக்கணிக்கப் படுகின்றன, வட ஆற்காடு புறக்க ணிக்கப்படுகிறது என்று. செண்பகத் தோப்பு திட்டமும், போளூரிலே சர்க்கரை ஆலை திறக்கும் திட்டமும் நிறுத்தப் பட்டதை அவர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவற்றையும் உடனடியாக நிறைவேற்ற இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இது முதலமைச்சருடைய மானியக் கோரிக்கை என்பதாலே, எனது தொகுதியைச் சேர்ந்த கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்திலே காவல் நிலையம் இல்லாமலிருப்ப தால், அப்பகுதி மக்களுக்கு ரொம்பவும் சிரமமாக இருக் கிறது. 1966-67-ல் ஓ.பி. காவல் நிலையம் அங்கிருந்தது. ஆனால், அதை எடுத்து விட்டார்கள். இப்பொழுது, புதி தாக, ஓ.பி. காவல் நிலையத்திற்குப் பதிலாக, காவல் நிலையம் அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மருத்துவத் துறையைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. கே. ஜே. சுப்பிரமணியன் : கேளம்பூர் காவல் நிலையத்தினருக்கு இல்லங்கள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அதைக் கட்டி முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம், நம்முடைய தமிழகத்தில் முதலமைச்சரும், சுகாதாரத் துறையை தன்னகத்தே வைத்திருப்பவருமான புரட்சித் தலைவர் அவர்களாலே கொண்டு வரப்பட்டிருக்கிற மருத்துவத்துறை, மானிய கோரிக்கையினை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்காக, நான் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையைப் பற்றிச் சொல்லும்போது, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று சொல்வார்கள். அள்ள, அள்ள குறையாத செல்வம், கல்விச் செல்வமாக இருந்தாலும் அதைப்போல் குறையாத செல்வமான நோயற்ற வாழ்வை மனிதனுக்குத் தரவேண்டியது மிக அவசியம் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட இந்தத் துறையில், இந்த மானியக் கோரிக்கையை வெளியிடுகின்றபொழுது பல முன்னேற்றமான கருத்துக்களை மட்டுமல்லாமல், மக்களுக்குத் தேவையான பல திட்டங்களை அறிவித்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, கிராமப்புறங்களிலே யிருக்கிற மக்களுக்கு பெரும்பான்மையான கவனம் செலுத்தப்பட்டிருப்பதை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பப்ளிக் ஹெல்த் சென்டர் என்று சொல்லப்படுகிற ஆரம்ப சுகாதார நிலையங்களில் நீண்ட நாட்களாக இருந்த குறைபாடு, மக்களுக்குத் தேவையான அளவு மருந்துகள் வாங்க, எங்களுக்குப் பணம் ஒதுக்கப்படவில்லையென்ற

நீண்ட நாளைய குறைபாடு, இன்றையதினம் நீக்கப்பட்டிருக்கிறது. 14,000 ரூபாய் அளவு மருந்துகள் வாங்குகின்ற தகுதி அவர்களுக்குத் தரப்பட்டிருப்பதை உள்ளபடியே இந்த நாட்டு மக்கள் பாராட்டுவார்கள் என்று இங்கே நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, பட்ட மேற்படிப்பில், நரம்பியல், தோலியல், நெஃப்ராலஜி போன்ற பிரிவுகளை, தமிழ் நாட்டில் துவங்க இருப்பது, இன்றையதினம் மருத்துவத் துறையில் நாம் முன்னேற்றம் பெற்றிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்ட அது நல்ல சாதனமாக அமையும் என்பதையும் தெரிவித்து, அப்படிப்பட்ட திட்டத்தை இந்த மானியக் கோரிக்கையிலே கூறியிருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், நாம் ஒன்றைப் பாராட்டியேயாக வேண்டும். வெள்ள நேரத்தில், மருத்துவத் துறை தமிழகத்திலே பணியாற்றியதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. வெள்ள நிவாரணத்திற்காக, அவர்கள் பணிகளை ஆற்றிக்கொண்டிருந்த நேரத்தில், அவர்களுக்கு ஊக்கத்தைத் தருகின்ற வகையிலே, எந்த அளவு வேண்டுமானாலும், மருந்துகள் வாங்கிக் கொள்ளலாம் என்று தாராள மனதோடு விலையுயர்ந்த மருந்துகளையும் வழங்க வழிவகை செய்த புரட்சித் தலைவரவர்களுக்கு, இந்த நாட்டிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக, நான் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட வேண்டும். நீண்ட நாட்களாக தமிழக மக்களுக்கு ஒரு குறை இருந்து வருகிறது. சாதாரண மக்களுக்கு விலை உயர்ந்த மருந்துகள் தரப்படுவது இல்லை என்ற குறை இருந்தது. ஆனால் இன்று தமிழகத்திலே உள்ள அத்தனை மருத்துவமனைகளிலும் விலை உயர்ந்த மருந்துகள் சாதாரண ஏழை எளியவர்களுக்கு வழங்கப்படுகின்றது என்பதைப் பார்க்கின்றபோது, ஆஸ்பத்திரிக்கு வருகிற மருந்துகள் எதுவும் பின் வழியாகச் செல்லவில்லை என்கிற நிலைமையை உருவாக்கி வைத்திருக்கிற இந்தத் துறையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்தத் துறையின்மேல் மக்களுக்கு நீண்ட நாட்களாகவே ஒரு குறை இருந்து வருகிறது. அதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தத் துறையிலே இருக்கிற நிர்வாகத்தின் காரணமாகவோ அல்லது அரசு தருகின்ற சலுகைகள் அல்லது உத்தரவுகள் அதைப் பாதிக்கிறதோ என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒன்றினைக் கோடிட்டுக் காட்ட வேண்டும். இங்கே அமைச்சர்களாக வருபவர்களானாலும் சரி, அல்லது இந்தத் துறையின் முதல் அதிகாரிகளாக வருகிறவர்களானாலும் சரி, மருத்துவத்தைப் பற்றி அறியாதவர்களாக இருந்தாலும் அந்தத் துறையினுடைய அதிகாரிகள் அவர்களுக்குச் சரியான விளக்கங்களை அளிப்பதுதான் சிறந்தது. அதுதான் முறையாகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படித் தரப்படாததன் காரணமாகத்தான் பல இடங்களில் குறைபாடுகள் இன்றைக்கு நடைபெறுகின்றன. அதை எடுத்துக் காட்டி யார் தவறு செய்கிறார்கள் என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டும்.

இதை நான் சொல்வதற்குக் காரணம் இந்தத் துறையிலே நல்லவிதமாகப் படித்தவர்கள் இருப்பார்களானால் அது இன்னும் நல்ல முறையிலே இருக்கும் என்பதை இங்கே சொல்வேன். குறிப்பாக, மேற்கு வங்கத்திலேயும், பீகாரிலும் மருத்துவத் துறையிலே அனுபவம் உள்ளவர்கள் இன்றைக்குத் தங்களுடைய கையிலே இந்த இலாக்காவை வைத்திருக்கிறார்கள் என்று பேசிக் கொள்கிறார்கள். ஆகவே அங்கு அந்த இலாக்கா நன்றாக இருக்கிறது என்றும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அதை இந்த அரசு ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் மட்டுமல்ல. டைரக்டர் ஆப் சயின்ஸ் அன்டு டெக்னாலஜி என்ற பதவி மத்திய அரசின் நிர்வாகத்தில் உள்ளது. அதற்கு மேல் அதிகாரியாக யார் இருக்கிறார்கள் என்று பார்ப்போமானால், நல்ல அனுபவம் வாய்ந்த விஞ்ஞானி ஒருவரை நியமித்திருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிப்

பதில்லை. அந்தத் துறையில் அனுபவம் படைத்தவர்கள் இருந்தால்தான் எந்தக் குறைபாட்டை எப்படி நீக்கவேண்டும் என்பதை எண்ணி விரைவாக நீக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மருத்துவத் துறையில் படித்துப் பணியாற்ற பல்வேறு கிராமங்களுக்குச் செல்லுகிறார்கள். மருத்துவத்தில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. கிராமங்களில் இருக்கிற மருத்துவர்களுக்கு அவைகள் எல்லாம் தெரியக்கூட சில நேரங்களில் வாய்ப்பில்லாமல் போய்விடும். அப்படிப்பட்ட நிலையிலே தமிழகத்திலே இருக்கிற மருத்துவர்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு இடத்திலே சந்தித்து இந்த 5 ஆண்டுகளில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன, புதிய மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டன. என்னென்ன புதிய சிகிச்சைகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று ஒரு ரெஃப்ரஷர் கோர்ஸ் போல்வைத்து அதன் மூலமாக அவர்களுக்கு நல்ல திறனை ஏற்படுத்த வேண்டும் என்ற வகையில் இந்த அரசு அறிந்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, இங்கே இருக்கிற மருத்துவர்களுக்கு ஒரு குறை இருக்கிறது. "நாங்கள் நீண்ட நேரம் பணியாற்றுகிறோம். ஆனால் எங்களுக்குச் சரியான சம்பளம் கிடையாது. குறைந்தது உத்தியோக உயர்வும் கிடைப்பதில்லை. அசிஸ்டென்ட் சர்ஜனாகச் சேர்ந்தால் அசிஸ்டென்ட் சர்ஜனாகவே ரிட்டையாராக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. போதுமான அளவுக்குப் பதவி உயர்வு பெறுவதற்கு வசதிகள் இல்லை" என்று சொல்கிறார்கள். இதுவரையிலும் இந்தத் துறையை நிர்வகித்து வந்தவர்கள் முறையாகச் செய்யவில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் எதையும் முறையாகச் செய்து பழக்கப்பட்ட புரட்சித் தலைவர் அவர்கள் இந்தக் குறையையும் முறையாக நீக்குவார்கள் என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க் கட்சியினர் இன்றைக்குப் பேசும்போது குடும்ப நலத் திட்டத்திற்கு ஆட்களைக் கடத்துகிறார்கள் என்று சொன்னார்கள் அவர்கள் இன்னும் பழைய மயக்கத்திலேயே இருக்கிறார்கள். அந்த மயக்கம் இன்னும் தீரவில்லை என்று நான் கருதுகிறேன். இப்படி விடாதே பிடி என்று ஆட்களை கடத்தியவர்கள் அப்படிப்பட்ட அரசைச் சேர்ந்தவர்கள்தான் இப்போது இதைச் சொல்லுகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

நான் இதை விளையாட்டாகச் சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம். கண் சிகிச்சை முகாம் ஒன்று 1973-74-ல் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்றது. இதற்கு பெரிய அளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதில் 100 பேருக்குக் கண்சிகிச்சை செய்தாக வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. கண் தெரிகிறதோ இல்லையோ கண் சிகிச்சை செய்து விட வேண்டும். அந்த 100 ஆட்களை இன்னின்னார் கொண்டு வரவேண்டும் என்றும் அரசாங்கத்திலிருந்து உத்தரவு போடப்பட்டு, அன்றையதினம் கருணாநிதி முதலமைச்சராக இருந்த நேரத்தில் நடந்தது என்பதையும் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைத் தெளிவாக துக்ளக் பத்திரிகையில் கூட போட்டு இருந்தார்கள். அந்த அரசாங்க ஆணையை, ஜி.ஓ.வை போட்டோ ஸ்டெட் காப்பி எடுத்துப் போட்டு இருந்தார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

என்னுடைய தொகுதியில் நீண்டகாலமாக ஒரு குறை இருந்தது. ஸ்ரீரங்கத்தில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. ஸ்ரீரங்கம் ஒரு டூரிஸ்ட் சென்டர். அந்தச் சுற்றுலாப் பகுதியில் நிறைய பேர்கள் வருவார்கள். அப்படியிருக்கும் இடத்தில் இருக்கும் மருத்துவ மனை எந்த நேரத்தில் இடிந்து விழுமோ என்று எண்ணுகிற அளவிற்கு இருந்தது. ஆனால் அது என்ன காரணத்தாலோ கவனிக்கப்படாமல் இருந்தது. சமீபத்தில் நடைபெற்ற வெள்ளச் சேதத்தின்போது புரட்சித் தலைவர் அவர்கள் என்ன காரணத்தாலோ ஸ்ரீரங்கத்திற்கு வர முடியவில்லை.

ஆனால் இப்படி ஒரு குறை அந்த மக்களிடத்திலே இருக்கிறது என்று சொன்ன உடனே, நான் நாளையதினமே கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். இன்றைய தினம் சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் அந்த மருத்துவ மனையைப் புதுப்பிப்பதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, திருவரங்கம் தொகுதி மக்களின் சார்பாக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் பெரிய குற்றச்சாட்டாகச் சொல்லியாகவேண்டும். கட்டப்பட்ட பெரிய மருத்துவமனைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன, பல லட்சக்கணக்கான,

கோடிக்கணக்கான பணம் அங்கே முடக்கப்பட்டு இருக்கின்றது. அதற்குக் காரணம் என்ன என்று கேட்டால், தேவையான, முறையான கருவிகள் வரவில்லை என்று சொல்கிறார்கள். குறிப்பாக, நாகப்பட்டிணம் மருத்துவமனை இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. அதேபோன்று பல இடங்களில் கட்டப்பட்டவைகள் திறக்கப்படாமல் இருக்கிற நிலைமை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கே முடக்கப்பட்டு இருக்கும் பணம், பொதுமக்களுக்குச் சொந்தமான பணம் என்பதை நிருவாகத்தில் இருப்பவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்காக நம்முடைய புரட்சித் தலைவர் நடவடிக்கை எடுப்பார், நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தித் தருவார் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மற்றொன்று, சித்த மருத்துவத்தைப் பற்றி அனைவருக்கும் தெரியும். தமிழகத்தில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு அது மிகவும் தேவையான வழிமுறையாகும். அந்த சித்த மருத்துவத்தைப் பற்றி நிறைய புத்தகங்கள் இருக்கின்றன. நல்ல மருந்துகளைப் பற்றி எத்தனையோ ஏடுகளில் இருக்கின்றன. அவைகள் பல இடங்களில் சிதறிக் கிடக்கின்றன. அவற்றை அரசாங்கம் சேகரித்து அவற்றைப் புத்தகமாக அச்சிட்டு அந்த சித்த வைத்திய முறையை உயிரோட்டமுள்ள முறையாக மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், ஒவ்வொரு கிராமத்திலும் சித்த மருத்துவ மனை ஒன்றை ஏற்படுத்தி அதை நல்ல வகையில் செயல்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, 15,000 பேர் சித்த வைத்திய முறையைப் படித்து விட்டு தமிழகத்தில் இருக்கிறார்கள் என்பதையும் நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சித்த மருத்துவத்திற்கு மத்திய அரசில் சரியான பிரதிநிதித்துவம் தரப்படவில்லை என்ற குறைபாடு சித்த மருத்துவத் துறையில் இருந்துவருகிறது. எல்லாக் குறைகளையும் போக்குகிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர், இந்தக் குறையையும் போக்குவார் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல, அந்த சித்த மருத்துவத் துறையில் இருப்பவர்

களுக்கும் இருக்கிறது. அந்த நம்பிக்கையிலே தான் புரட்சித் தலைவருக்கு எங்கள் நன்றியை நம்பிக்கையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கும் தொட்டியம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. மிகவும் பழமையான கட்டிடத்தில் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அது பேய் பங்களா போன்று காட்சி அளிக்கிறது. அந்த மருத்துவ நிலையம் இருக்கும் அமைப்பைப் பார்த்தால் உயிரே போய்விடும் போல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். தொட்டியம் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க இடம். நெசவாளர் மக்கள் அதிகமாக வாழும் பகுதி. விவசாயிகள் அதிகம் உள்ள பகுதி. என்ன காரணத்தாலோ அந்த மருத்துவமனை முறையாக கவனிக்கப்படவில்லை.

புரட்சித் தலைவர் ஆட்சியில் அந்தக் குறை நீக்கப்படும் என்று மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, அந்தக் குறையை அவர்கள் நீக்குவார்கள் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போல், தாத்தையங்கார்பேட்டை நெசவாளர் வாழும் பகுதி. இன்றைக்கு புரட்சித் தலைவர் மானியக் கோரிக்கையில் ஒரு நல்ல திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். டாக்டர்களே நோய்வாய்பட்டு இருக்கும் கிராமங்களுக்குச்சென்று, அங்கே இருக்கும் நெசவாளர்கள் வீட்டிற்குப்போய் மருத்துவ வசதி செய்துவருவது என்ற முறையில் செய்து இருக்கிறார்கள். அதற்காக பல மினி ஹாஸ்பிடல்கள் செயல்படும் அளவிற்கு, தற்போது 54 உருவாக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் 50 உருவாக்கப்படவிருக்கிறது என்ற அறிவிப்பைப் பார்க்கிறபோது, நிச்சயமாக அதை உழவர் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், நெசவாளர் பெருமக்கள் ஆகியோரின் உள்ளக் குமுறல் தீர்க்கப்படும். அந்தத் தீர்வு காணும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இத்தகைய நல்லதொரு மானியக் கோரிக்கையைத் தந்திருக்கிற இந்த அரசையும், அதன் பொறுப்பை ஏற்று இருக்கிற புரட்சித் தலைவர் அவர்களையும் நான் மக்கள் சார்பாகப் பாராட்டி, நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. வி. கொ. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவரவர்கள் கொண்டுவந்திருக்கிற மக்கள் நல்வாழ்வுத் துறை, மருத்துவத்துறை என்ற இந்த இரண்டு மானியங்களையும் ஆதரித்து, பாராட்டி என்னுடைய கருத்துக்களை இந்த அவை முன் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்டுவந்த சென்னை ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை இரண்டுக்கும் விரிவுரைக் கூடங்கள், அறுவை சிகிச்சை அரங்குகள் வசதி செய்து கொடுத்திருப்பதுடன் நவீன கருவிகள், அவசர முக்கியத்துவம் வாய்ந்த நவீன கருவிகள் வாங்க பல இலட்சக் கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருப்பது பாராட்டக் கூடிய ஒன்று, வரவேற்கக்கூடிய ஒன்று என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல கடந்த சட்டமன்றத்திலே நான் இங்கே கூறினதற்கிணங்க என்னுடைய பவானிசாகர் தொகுதியைச் சேர்ந்த நம்பியூர் ஊராட்சித் ஒன்றியத்திலே செட்டியாளையம் ஊராட்சி மருந்து கூடமாக இருந்ததை அரசாங்க மருத்துவமனையாக மாற்றியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல என்னுடைய சொந்த தொகுதியாகிய பவானிசாகரில் நம்பியூர் என்ற இடத்தில் ஒரு ஆரம்பச்சுகாதார நிலையம் பல ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத்திலும் இதைக் குறிப்பிட்டுச் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தனியாக இதுகுறித்து விண்ணப்பித்திருக்கிறேன். இருப்பினும் அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் வாய்ப்பு இல்லை என்று அறிகிறேன். அது மிகவும் வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. அங்கே அதற்கு ஒரு கட்டடத்தை அத்தியாவசியமாகக் கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல அரசு மருத்துவமனையாக இயங்கிவருகின்ற செட்டிபாளையம் மருத்துவ மனைக்கும் உடனடியாக அரசாங்கக் கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க மருத்துவ மனைகளுக்கு எவ்வளவுதான் செலவு செய்தாலும் மருந்துகள் சரியாக மக்களுக்குப் போய்சேருகிறதா என்றால் இல்லை என்பதை இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே நோயாளிகளுக்காகக் கொடுக்கும் இறைச்சி, முட்டை, பால் போன்றவை நோயாளிகளுக்கு ஒழுங்காக வழங்கப்படுவதில்லை ; அவை அங்கு பணியாற்றுகின்றவர்களின் வியாபாரப் பொருட்களாகின்றன என்பதைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல பார்வையாளர்கள் மருத்துவ மனைகளுக்கு போகும் போது சில்லரை கொடுத்தால்தான் சிலர் அனுமதிக்கிறார்கள் என்ற குறைபாடு பரவலாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, கடவுளுக்கு சமமானவர்கள் டாக்டர்கள் என்று சொல்கிறார்கள் ; அதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் டாக்டர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது. கோவை மருத்துவ மனையில் வேலை செய்யும் டாக்டர்கள் சரியாக வேலைக்கு வருவதில்லை என்று தெரிந்து, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் திடீரென்று கோவை மருத்துவ மனைக்கு விஜயம் செய்தார்கள். அந்த நேரத்தில் அங்கே டாக்டர்கள் சுமார் 30 பேர் பதிவேட்டில் கையொப்பமிடவில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குப் பின்னரும் அதைப்போலவே டாக்டர்கள் ஒழுங்காக வருவதுமில்லை ; கையொப்பமிடுவதுமில்லை ; ஆனால் மாதம் தவறாமல் சம்பளம் மட்டும் வாங்குகிறார்கள். கடமையைச் செய்யாமல் சம்பளம் மட்டும் தவறாமல் வாங்கிக்கொள்ளும் டாக்டர்கள் விஷயத்தில் அரசாங்கம் கண்டிப்பாக இருக்க வேண்டும் ; இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல கடந்த 11—3—1978 அன்று பழனியப்பன் என்பவருக்கு நம்பியூரில் பலமாக அடிபட்டுவிட்டது. அவரை கோபிசெட்டிபாளையம் அரசாங்க மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றால், அங்கே இருந்த டாக்டர் அவரை அட்மிட் செய்யவில்லை ; அவருடைய பெயரை இங்கே குறிப்பிட விரும்பவில்லை; மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தனியாகத் தெரிவிக்கிறேன்; பேஷன்டை அட்மிட்

செய்ய மறுத்துவிட்டார்; மீண்டும் நம்பியூருக்கே அனுப்பிவிட்டார். அடுத்தநாள் நிலைமை மிகவும் மோசமாகி, அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டு, காவல் துறையினர் மீண்டும் அவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். பிறகு அட்மிட் செய்து கொண்டார்கள். குறைந்தது 10 நாள் வரை சிகிச்சை அளிக்கப்பட்டது என்பதை இந்த மன்றத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன், இப்படிப்பட்ட குறைபாடுகள் தவிர்க்கப்பட்டு, சாதாரண மக்களின் குறைகளைப் போக்க உடனடியாக தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10-40]

அதேபோல் சாதாரண மக்களுக்கும் கிராமப் புறத்திலே உள்ள ஏழை எளிய ஹரிஜன மக்களுக்கும் உண்மையிலேயே அரசாங்கம் மருத்துவத் துறையின் மூலம் கொடுக்கின்ற மானியத் தொகை பயன் அளிக்க வேண்டுமென்றால் அது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய நடமாடும் மருத்துவக் குழு திட்டத்தின் மூலம் நிச்சயம் கிடைக்கும் என்பதை நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலேயே அதிகமாக கிராமங்கள் நிறைந்த பகுதியாக இருப்பது கோவையிலே பவானிசாகர் தொகுதி என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டு நூறு நடமாடும் மருத்துவமனை அமைக்கப்பட விருப்பதாகச் சொல்லியிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அதனை நிதிநிலை அறிக்கையிலே படித்துப் பார்த்தபின் உண்மையிலே பெரு மகிழ்ச்சியடைகிறேன். அப்படி அமைக்கபடும்போது நிச்சயமாக எங்களுடைய தொகுதியாகிய பவானிசாகரிலோ, அல்லது நம்பியூரிலோ அல்லது உக்கரத்திலோ ஏதாவதொரு இடத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திலே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையினை ஆதரித்துப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. இ. கணேசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரறிஞர், பெருந்தகை, அமரர் அண்ணாவின் இதயக் கனியாம் புரட்சித் தலைவரது பொறுப்பிலே இருக்கும் இந்த மருத்துவத் துறை மானியக் கோரிக்கையினை ஆதரித்துப் பேசுகின்ற அரிய வாய்ப்பினை பெருமைக்குரிய வாய்ப்பாகக் கருதுகிறேன்.

மக்கள் நல்வாழ்வுத்துறை, இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால் மக்கள் நல்வாழ்வுத்துறையாக இயங்கவில்லை. சிலருக்கு மட்டும் வாழ்வளிக்கக்கூடிய நல்வாழ்வுத் துறையாக இயங்கி வந்தது. மேட்டுக்குடியினருக்கும் உல்லாசபுரியினருக்கும், நகரத்தில் வாழ்பவர்களுக்கும் மட்டுமே இந்தத் துறை பயன்பட்டு வந்தது என்ற அந்த நிலைமையை மாற்றி ஏழை எளியவர்களுக்கும் கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்களுக்கும் பஞ்சைகளுக்கும் பராரிகளுக்கும் பயன்படக்கூடிய துறையாக மாற்றிய பெருமை எங்கள் இதய தெய்வமாம் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மலையே சாரும்.

இதுகாறும் இந்தத் துறை லஞ்சலாவண்யத்திற்கும், முறைகேடான செயலுக்கும் புகலிடமாக இருந்தது. ஆனால் இன்று என்ன நிலைமை. மேம்பட்ட அதிகாரிகளிலிருந்து அனைத்துமட்ட அதிகாரிகள் அத்தனை பேரும் மக்களுக்குச் சேவை செய்திட வேண்டுமென்ற உணர்வும், தவறு செய்தால் தப்ப முடியாது என்ற அச்சமும் ஏற்பட்டிருக்கிறதென்றால் அது யாரால் எப்படி ஏற்பட்டது என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டுகிறேன்.

அடுத்து, புரட்சித் தலைவரின் ஆட்சியில்தான் மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் கிராமப் புறத்திலிருந்து வருகின்ற மாணவர்களுக்கு அதிக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். கல்லூரியிலே கிராமப் புறம்க்களால் நுழைய முடியாததொரு நிலை இருந்தது. அட்மிஷனுக்கு ரூபாய் 10,000, ரூ. 5,000, ரூ. 2,000 என்று நிர்ணயிக்கப் பட்டிருந்த கட்டணங்கள் தவிடுபொடியாக ஆக்கப்பட்டு நல்ல படித்த இளைஞர்களுக்கு இந்தத் துறையிலே புக ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திய புரட்சித் தலைவரவர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவக் கல்லூரியிலே தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களில் 75 சதவீதம் கிராமப் புறத்திலேயிருந்து படித்துத் தேறி வரும் மாணவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும், அப்போதுதான் கிராமப்புறத்திலே டாக்டர்கள் தயக்கமின்றிச் சென்று பணியாற்றக்கூடிய நிலைமை ஏற்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில், கிராமங்களில் டாக்டர்கள் குறைந்தது ஐந்து ஆண்டு காலமாவது பணியாற்ற வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படவேண்டும். மருத்துவத் துறையிலே பட்ட மேற்படிப்புக்கு, குறைந்த பட்சம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதிக ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கு மட்டுமே, அனுமதி வழங்கப்படவேண்டும். அனுபவமற்றவர்களுக்குப் பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு அனுமதி வழங்கப்படுவது அறவே நீக்கப்படவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் உயர் படிப்புத் தகுதி பெற்ற பின்னரும் குறிப்பாகச் சில ஆண்டுகளுக்கு அவர்கள் கிராமப் புறங்களிலே பணியாற்ற வேண்டுமென்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

ஒரு டாக்டரை உற்பத்தி செய்ய அரசு மக்கள் வரிப் பணத்திலிருந்து சுமார் ரூ. 80,000 வரை செலவு செய்ய வேண்டியுள்ளது என்று சொல்லப்படுகிறது. மக்கள் வரிப் பணத்திலிருந்து கணிசமானதொரு தொகையைப் பயன்படுத்தி ஒரு டாக்டராக வளர்ந்துவிட்ட பிறகு கிராமம் ஒரு நரகம், நகரம் என்பது மோட்ச சாம்ராஜ்யம் என்று கருதுகிறார்கள். இது மனித சமுதாயத்திற்குச் செய்யக்கூடிய ஒரு மாபெரும் துரோகம் என்று சொல்லப்பட வேண்டும்.

ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஆயிரம் வரை மருத்துவக் கல்லூரிகளிலிருந்து டாக்டர் பட்டம் பெற்று வெளியே வருகிறார்கள். கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக பட்டம் பெற்ற டாக்டர்களுக்கு, அவர்கள் இன்னும் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள் என்பது மிகவும் வருத்தத்திற்குரிய செயலாகும், செய்தியாகும்.

மருத்துவ வசதி பெறாத கிராமங்கள் ஏராளமாக உள்ளன. தொழில் செய்ய முடியாத நிலையில் ஆயிரக் கணக்கான டாக்டர்கள் உள்ளார்கள். இந்த இரண்டையும்

ஒருங்கிணைக்கும் ஒரு திட்டம் வகுத்திட வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

நகரங்களில், மாநகரங்களில் மருத்துவ நிலையங்களில் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து விஸ்தரிப்பதை விட மருத்துவமனைகளே இல்லாத கிராமங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கங்கே நல்லமுறையில் லட்சோபலட்சம் குழந்தைகள், தாய்மார்கள் முதியோர் இவர்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ மனைகளை அமைத்து, அவர்களுக்குப் பயன்படக்கூடிய ஒரு துறையாக இதை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். கிராமங்களிலே நல்லமுறையில் மருத்துவ வசதி களை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்கள் என்ற முழு நம் பிக்கை மக்களுக்கு உள்ளது. (மணியடிக்கப்பட்டது).

என் எடப்பாடி தொகுதியைப் பொறுத்தவரையில், எடப்பாடி நகரம் 40,000 மக்கள் தொகையைக் கொண்டது. 40, 50 ஆண்டுகளுக்கு முன்னதாகக் கட்டப்பட்ட ஒரு மருத்துவமனைதான் அங்கு இருந்துவருகிறது. அந்த மருத்துவ மனையில் ஒரே ஒரு டாக்டர்தான் இருக்கிறார். ஆகவே, 40,000 மக்கள் தொகை கொண்ட அந்த நகரத்தில் உள்ள இந்த மருத்துவ மனையை பெரிய மருத்துவ மனையாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க நம் புரட்சித் தலைவர் அவர்கள் பத்து படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அதை மாற்ற ஏற்பாடு செய்திருக்கி றார்கள் என்பதை அறிந்து புரட்சித் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். என் எடப்பாடி................

(மணியடித்து திருவேங்கடம் பேச அழைக்கப்பட்டார்).

* திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கு வைக்கப்பட் பட்டுள்ள மக்கள் நல்வாழ்வுத் துறை, மருத்துவத் துறை மானியக்கோரிக்கைகள் மீது எங்கள் கட்சி சார்பில் கொடுக் கப்பட்டுள்ள வெட்டுத்தீர்மானங்களை நான் வழிமொழிந்து சில கருத்துக்கள் சொல்ல விழைகிறேன்.

இன்றைய தினம் நம் அரசு ஏராளமாக, பலகோடி ரூபாய் இத்துறைக்கு ஒதுக்கி கிராமங்களிலும் நகரங்களிலும் இருக்கக்கூடிய மருத்துவமனைகளைச் செம்மைப்படுத்த

முயற்சித்தாலும் கிராமங்களில் இருக்கிற மக்கள் தனிப் பட்ட மருத்துதவர்களிடம் நிறையப் பணம் கொடுத்து வைத் தியம் செய்துகொள்கிற ஒரு சூழ்நிலைதான் இருந்துவருகிறது. ஏழை மக்களிடத்தில் கூட இந்த நிலைதான் இருக்கிறது. ஆகவே, ஏழை மக்கள் அவர்கள் விரும்புகிற முறையிலே அவர்கள் நல்ல முறையில் கவனிக்கப்படுகிற வகை யிலே அரசு மருத்துவ மனைகள், தாலூகாமட்டத்தில் உள்ள மருத்துவ மனைகளானாலும் சரி அல்லது கிராமங்களில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களானாலும் சரி அவற் றில் அவர்களை எல்லாம் நல்லமுறையில் கவனிப்பதற்கு அர சாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திருவண்ணாமலையில் இருக்கிற தாலூகா மருத்துவமனை யில் உள்ள படுக்கைகள் எல்லாம் அந்த ஆஸ்பத்திரி எப் போது கட்டப்பட்டதோ அப்பொழுது கொடுக்கப்பட்ட படுக் கைகள்தான், அவைகள் மிகவும் சீர்கேடான நிலையில் இருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-50]

வட ஆற்காடு ஒரு பெரிய மாவட்டம், திருவண்ணாமலை இது போன்ற பெரிய இடங்களில் எல்லாம் இருக்கின்ற மருத்துவ மனைகளில், முக்கியமாக திருவண்ணாமலை தாலூகா வின் தலைமையிடமாக இருக்கின்ற திருவண்ணாமலையிலும் இருக்கின்ற மருத்துவ மனைகளில் எல்லாம் ஏராளமான மருத்துவ அதிகாரிகள் இருந்தாலும் போதிய மருந்துகள் இல்லாத நிலைமை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படி மருத்துவ அதிகாரிகள் அதிகமாக இருக்கின்ற மருத்துவ மனைகளில் எல்லாம் போதுமான அளவுக்கு மருந்துகள் இருக்கின்ற அளவில் பார்த்துக்கொள்வதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத் தில் கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் 38 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இதற்கு முன்பெல்லாம் 10, 15 சுகாதார நிலையங்கள் தான் இருந்தன. அப்போது இவற்றை மாவட்ட மருத்துவ அதிகாரி கவனித்து வந்தார் கள். பிற்பாடு மாவட்ட சுகாதார அதிகாரி கவனித்து வரு கிறார். எப்படி இந்த 38 ஆரம்ப சுகாதார நிலையங்களை

யும் வேலூரில் இருக்கின்ற சுகாதார அதிகாரி கவனித்துக் கொள்ள முடியும் என்பதை இந்த அரசு எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில், பல்வேறு கிராமங்களில் முன்பு இருந்த அரசு கட்டடங்களை கட்டிக் கொடுத்திருக்கிறது. அப்போதும் பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரண்டு மூன்று மருத்துவ அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டிருந்தனர். இப்போது எல்லா சுகாதார நிலையங்களிலும் மூன்றாவது மருத்துவரை நியமனம் செய்யப் போவதாக இங்கு சொல்லியிருக்கிறார்கள். இன்றைய தினம் இரண்டு மருத்துவர்கள், மூன்று மருத்துவர்கள் என்று நியமனம் செய்துவிட்ட பிறகு அவர்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்குவதற்கு வழி செய்தாக வேண்டும். இப்படி மூன்றாவது மருத்துவரையும் நியமிக்கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான கட்டட வசதி செய்து கொடுக்க வேண்டும். ஆங்காங்கு இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் எல்லாம் மருந்து வசதி, படுக்கை வசதி, மருத்துவர்களுக்கு தேவையான கட்டடவசதி இவைகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று அரசை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, கலசபாக்கம் தொகுதியில், கலசபாக்கம் ஒன்றியத்தின் தலைநகராக இருக்கின்ற கலசபாக்கத்தில் பத்து படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ மனையைக் கட்டுவதற்காக யோசனை ஒன்று அரசின் யோசனையில் இருந்து வருகிறது. அதை நிறைவேற்றி அங்கு அந்த மருத்துவ மனையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று உங்கள் மூலம் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று ஜவ்வாது மலை மக்களின் வசதிக்காக—இப்போது மருத்துவமனை வசதி எதுவும் இல்லை. தற்போது கலசபாக்கம் அல்லது போளூர், திருப்பத்தூர், நாட்றாம் பள்ளி இந்த இடங்களுக்குத்தான் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஜமுனாபுத்தூர் என்ற இடத்தில் மலை வாழ் மக்களுக்கு என்று மருத்துவமனை அமைப்பதற்கான யோசனை ஒன்று அரசின் கவனத்தில் இருந்து வருகிறது. அதை விரைவில் ஆரம்பிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, குடும்ப நலத் துறையைப் பொறுத்த வரையில், பொது மருத்துவத் துறையிலுள்ள சிப்பந்திகள் குடும்பநலத்துறைக்கு வருவதற்குத் தயங்குகிறார்கள். இந்தத் துறையில், போடப்படுகின்ற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது, இதிலுள்ள சிப்பந்திகள் அதிகமான தொகையை முதலீடாக வைத்துக்கொண்டு அறுவை சிகிச்சைத் திட்டத்தை நிறைவேற்றுவதுமான செயல் படுத்துவதுமான ஒரு நிலைமை இருந்து வருகிறது. நான் உங்கள் மூலமாக அரசுக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அதாவது ஐந்தாண்டு காலம் சுகாதார ஆய்வாளராகவோ அல்லது சுகாதாரப் பார்வையாளராகவோ குடும்ப நலத்துறையில் ஐந்தாண்டு காலம் பணியாற்றியிருந்தால், அவர்களைப் பொதுத்துறைக்கு எடுத்துக்கொண்டு, பொதுத் துறையில் இருக்கின்ற சிப்பந்திகளை ஐந்தாண்டு காலத்திற்கு குடும்பநலத்துறைக்கு மாற்றுகின்ற ஒரு ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்தால் இதில் பணியாற்றுகின்றவர்களுக்கு உற்சாகம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் நல்ல மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், நான் முதலில் சொன்னது போல், மாவட்ட அளவில் ஓரளவுக்குக் கண்காணிப்பு இருந்து வருகிறது, ஆனால் இவ்வாறு போதிய அளவு கண்காணிப்பு இல்லாத மருத்துவ மனைகளில் வருகின்ற மருந்துகளை மருத்துவர்கள் அப்படியே எடுத்துச் செல்லுகின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இதைச் சரியான முறையில் கண்காணிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது புதிய முறைகளைக் கொண்டுவந்து சரியான முறையில் கண்காணித்து கிராம மக்களுக்குச் சரியானமுறையில் மருந்துகள் கிடைப்பதற்கான வழிமுறைகளைச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சென்னைக்கு அடுத்து ஆவடி நகரியம் இருக்கிறது. அங்கு இரண்டரை லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இந்த இரண்டரை லட்சம் மக்கள் வாழக்கூடிய இந்த இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தான் இருந்து வருகிறது. 1975-ல் இங்கு 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு இன்னும் செயல்படுத்தாமல் இருந்து வருகிறது என்பதை நான்

அறிந்திருக்கிறேன். ஆகவே இந்த அரசாங்கம் அந்த 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று பூவிருந்தவல்லி ஒன்றியத்தைச் சேர்ந்த நேமம் என்கிற கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைப்பது அரசின் கவனத்தில் இருந்து வருவதாக அறிகிறேன். அதையும் விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பூவிருந்தவல்லி தாலுகாவின் தலைநகராக இருக்கின்றது. அங்கு இருக்கின்ற மருத்துவ மனையின் கட்டடம் மிக சீர்கேடாக இருந்து கொண்டிருக்கிறது. அதை நல்ல முறையில் சீர்படுத்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதியில், எலத்தூர், மோரட்டூர், கிராமங்களில் இருக்கின்ற தொழுநோய் மருத்துவ மனைக்கான கட்டடம் 1964-65-ம் ஆண்டுகளில் கட்டப்பட்டவை. இக்கட்டடம் இன்னும் சீர்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. இதனால் தொழுநோய் பிடித்திருக்கின்ற வியாதிஸ்தர்கள் அங்கு சென்று தங்களுக்கு மருத்துவ உதவி பெற முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது.

இந்த அரசாங்கம் அங்கே நல்ல கட்டடத்தைக் கட்டி, படுக்கை வசதிகளை ஏற்படுத்தி, அந்த மருத்துவ மனை நல்லமுறையிலே செயல்படுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற அரசு, தமிழகத்திலே மறுவாழ்வு இல்லங்களை ஏற்படுத்தியது. இந்த மறு வாழ்வு இல்லங்களிலே அதற்கான மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, இன்னும் பல்வேறு சிப்பந்திகள் நியமிக்கப்பட்டு, அங்கே உள்ளவர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இன்றைய தினம் பல்வேறு மறுவாழ்வு இல்லங்களிலே மருத்துவ அதிகாரிகள் இல்லை என்பது உண்மை. அங்கே போய் அவர்கள் இந்தப் பணியிலே சேர்வதில்லை. அப்படியே சேர்ந்தாலும் அதை விட்டு விரைவிலே வருவதற்கு முயற்சிக்கிறார்கள். எனவே, நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட மறுவாழ்வு இல்லங்களிலும், அதே போன்று நான் முன்பு சொன்ன தொழுநோய் ஆஸ்பத்திரிகளிலும் பணியாற்றுகின்ற இந்த மருத்துவ அதிகாரிகள் அல்லது அதிலே உள்ள மற்றச் சிப்பந்திகளுக்கு எல்லாம் அதிகமான சம்பளம் கொடுத்து, அதிலே அவர்கள் பணியாற்றுவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதபோன்று உளுந்தூர்பேட்டையிலே உள்ள மருத்துவ மனையிலே டாக்டர்கள் நீண்ட நாட்களாக நியமிக்கப்படாமல் இருப்பதாக நான் அறிகிறேன். எனவே, அங்கே தேவையான டாக்டர்களை உடனடியாக நியமிக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, உளுந்தூர்பேட்டையிலே, கிளியூர் கிராமத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட வேண்டியிருக்கிறது. எனவே, அங்கேயும் ஒரு ஆரம்ப சுகாதார நிலயத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், 2,000, 3,000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களிலே எல்லாம் பேறுகால உதவியாளர் நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன்படி 3 மருத்துவ அதிகாரிகள் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நியமிக்கப்படுகின்றார்கள். அப்படி நியமிக்கப்படுகின்ற நேரத்தில், இந்த பேறுகால உதவியாளர் மாலை நேரங்களில் அந்தந்த பகுதியிலே உள்ள கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கு உதவி அளிக்கிற இந்தத் திட்டம் நல்ல முறையிலே செயல்பட்டது. ஏற்கனவே நல்ல முறையிலே செயல்பட்டு வந்த இந்தத் திட்டம் மேலும் நல்ல முறையில் செயல்பட வேண்டும். ஆனால், பெட்ரோல் விலையேற்றத்தின் காரணமாக, இந்த பெட்ரோல் கோட்டாவைக் குறைத்த காரணத்தால், இந்த மருத்துவ அதிகாரிகள் இப்போது இந்த சப் சென்டர்களுக்குச் செல்வதில்லை. எனவே இது நல்லமுறையிலே செயல்பட ஏற்பாடு செய்யவேண்டும்.

அதேபோன்று, இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களிலே சுகாதாரப் பணிகளைக் கவனிப்பதற்கு சுகாதார ஆய்வாளர்கள் இருப்பதில்லை. அதற்கு என்ன காரணம் என்றால், அரசாங்க சுகாதார ஆய்வாளர்கள் பிரைமரி

ஹெல்த் சென்டர்களிலே பணியாற்றுகிற டாக்டர்களின் நிர்வாகத்தின் கீழ் போடப்படுகின்றார்கள். அவர்கள் அந்த ஒன்றியத்திலே உள்ள ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் நியமிக்கப்படுவதில்லை. அவருடைய நிர்வாகத்தின் கீழ் இந்த சுகாதார ஆய்வாளர் நியமிக்கப்பட்டால், மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளைச் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, ஒரு தனியான சுகாதார ஆய்வாளரை ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதைப்பற்றிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமருகிறேன். வணக்கம்.

***திரு. எம், ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மருத்துவ, பொதுச் சுகாதார மானியக் கோரிக்கையின் மீது ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய பொதுச் சுகாதாரத் துறையின் பல்வேறு பிரிவுகளில் கடந்த பல ஆண்டுகளாகக் கிராமங்களிலே பணியாற்றுகின்றவர்கள் துப்புரவு ஆய்வாளர்கள் பயிற்சிக்காக சென்னை வந்திருக்கிறார்கள். மேலும், ஏற்கனவே அவர்கள் நிரந்தரமாகப் பணியாற்றியவர்கள். அந்த ஊழியர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் ஊதியமும் உதவித் தொகையும் கிடைக்காத காரணத்தால் அவர்கள் கடந்த 3, 4 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அப்படித் தொடர்ந்து அவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருவதால், ஒரு சிலருடைய உயிர் இன்றையதினம் எனக்குக் கிடைத்த தகவல்படி ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்று அறிகிறேன். ஆகவே, தமிழக அரசு இந்த விஷயத்தில் உடனடியாகத் தலையிட்டு, இந்தத் துப்புரவு ஆய்வாளர்களுடைய கோரிக்கைகளை, குறைகளை முடித்து வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சங்க காலத்தில் இருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருவது சித்த வைத்தியம். தமிழ் கூறும் நல்லுலகத்தில் இந்த சித்த வைத்தியத்தில் பல அதிசயிக்கத்தக்க, ஆங்கில மருத்துவத்தில் இல்லாத பல அரிய மருந்துகள் இருக்கின்றன. ஆகவே நம்முடைய தமிழக அரசு பாளையங்கோட்டையிலே பல

மாதங்களாக மூடியிருந்த இந்த சித்த வைத்தியக் கல்லூரியை இன்றையதினம் திறந்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.

[முற்பகல் 11-00]

அந்த மருத்துவக் கல்லூரியை விரிவுபடுத்தி, சிறந்த ஆசிரியர்களை நியமித்து அதைத் தமிழகத்திலேயே சிறந்த சித்த வைத்திய மருந்துவக் கல்லூரியாக ஆக்கவேண்டும். மேலும் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசு மருத்துவ மனையிலும் சித்த வைத்தியப் பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஓமியோபதி மருத்துவத்தை எடுத்துக் கொண்டால் அது ஏழை எளிய மக்களுக்கு மிகவும் குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய மருத்துவமாக அமைந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் துறையில் ஒரு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி நடைபெற்று வருகிறது. அதற்கு அரசு உடனடியாக அங்கீகாரம் கொடுக்கவேண்டும். இது நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற கோரிக்கையாகும். அந்த ஓமியோபதி கல்லூரிக்கு உடனடியாக அங்கீகாரம் வழங்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்ட மாவட்டம். அந்த மாவட்டத் தலைநகரான நாகர்கோயிலில் அரசு மருத்துவ மனை சிறியதாக இருக்கிறது. போதுமான இடவசதியின்றி அங்கு நோயாளிகள் வராண்டாக்களிலே படுக்க வைக்கப்படுகிறார்கள். இடமில்லாத காரணத்தால் நோயாளிகளை விரைவில் வெளியே அனுப்பிவிடுகிறார்கள். அந்த மருத்துவ மனைக்குக் கூடுதலான கட்டடங்களைக் கட்டி அதிக படுக்கை வசதிகள் கொண்டதாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க உத்தியோகத்துக்குச் செல்லக்கூடியவர்கள் மருத்துவச் சான்றிதழ் பெறவேண்டுமென்றால் அரசு டாக்டரிடம் 16 ரூபாய் கட்டணம் செலுத்திப் பெறவேண்டுமென்று அரசு விதி இருக்கிறது. நாகர்கோயில் மருத்துவ மனையில் பணியாற்றக்கூடிய டாக்டரிடம் ஒருவர் மருத்துவச் சான்றிதழ் கோரி வந்தவர் ஒட்டுமொத்தமாக 20 ரூபாய்

கொடுத்திருக்கிறார். அந்த டாக்டர் அதை எண்ணிப் பார்க்காமல் வாங்கித் தனது சட்டைப் பையில் போட்டுக் கொண்டு சான்றிதழ் வழங்கினார். உடனே லஞ்ச ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அவரைக் கைது செய்து லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டினார்கள்.

அரசாங்க மருத்துவ மனைகளில் ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மருந்துகள் லட்சக் கணக்கில் வெளியே போய்க் கொண்டிருக்கிறது. அவற்றை எல்லாம் தடுக்க நடவடிக்கை எடுக்காமல் 20 ரூபாய் கொடுத்ததை எண்ணிப்பார்க்காமல் வாங்கிய டாக்டர் மேல் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது பொருத்தமாக இல்லை. அதைக் கண்டித்து அந்த டாக்டர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அந்தத் தொழிலில் உள்ளவர்கள் மனம் நொந்து போயிருக்கிறார்கள. இந்த நிலையில் அவர்கள் தங்கள் பணியை எப்படி ஆற்ற முடியும்?

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே கிராமப் புறங்களுக்கு டாக்டர்கள் செல்லுவதில்லை என்ற குறையைச் சொன்னார்கள். கிராமப்புறங்களுக்குச் செல்லக்கூடியவர்களுக்கு போதுமான அளவு வீட்டு வசதி செய்து தரப்பட்டிருக்கிறதா என்று எண்ணிப்பார்க்கவேண்டும். நகரிலிருந்து கிராமப் புறங்களுக்குச் செல்லுகிற டாக்டர்கள் தங்க இடம் இல்லாமல் சிறு சிறு வீடுகளைத் தேடிச் செல்லவேண்டி இருக்கிறது. கிராமப் புறங்களுக்கு டாக்டர்களை நியமிக்கும் அதே நேரத்தில் அவர்களுக்கு நவீன வசதிகள் கொண்ட வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் தக்கலை, குலசேகரம், குழித்துறை பகுதிகளில் அரசு மருத்துவ மனைகள் இருக்கின்றன. அந்த அரசு மருத்துவ மனைகளில் போதுமான இடவசதி இன்றி மக்கள் அவதிப்படுகிறார்கள். குலசேகரம் பகுதியில் 50,000-க்கு மேற்பட்ட ஏழை எளிய மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் பழந்தமிழர்கள், ஆதி தமிழர்கள், மலைசாதி மக்கள். இன்பேஷன்ட்ஸ்க்கு படுக்கை வசதி கிடையாது. அவர்களும் வெளி நோயாளிகளாக வந்து மருந்து வாங்கிச் செல்கிறார்கள். ஆகவே, குலசேகரம் பகுதியில் மருத்துவமனைக் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கோத்தநல்லூர் பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும். இதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு உதவியுடன் ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவ மனையாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம்—தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நீண்ட காலமாக சேலத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சேலம்—தர்மபுரி மாவட்ட ரயில்வே செஸ் நிதியில் 22½ லட்சம் ரூபாய்க்கு மேல் பயன்படுத்தப்படாமல் இதற்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியைப் பயன்படுத்தி சேலத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலத்தில் உள்ள தலைமை மருத்துவ மனையில் உள்ள காச நோய்ப்பிரிவை ஏர்க்காடு மலை அடிவாரத்தில் திறந்த வெளியிலே அமைத்துத் தரவேண்டுமென்றும் அதன் மூலம் மக்களுக்குச் சிறந்த வைத்திய வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சேலத்தின் மத்தியிலே திருமணிமுத்து ஆறு என்ற ஆறு ஓடுகிறது. அது இன்றைய தினம் திருமலமூத்திர ஆறு என்ற அளவிற்குச் சொல்லப்படுகிற நிலையில் இருக்கிறது. சென்னையிலே எப்படி கூவம் என்று சொல்கிறோமோ அதைப் போன்று சேலத்தில் கூவம் என்று அதைக் கொள்ளலாம். அந்தச் சாக்கடைத் தண்ணீரைச் சுத்தப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அந்த சாக்கடைத் தண்ணீரின் மூலமாக கொசுக்கள்பெருகி மலேரியா என்ற கொடிய நோய் ஏற்படுகிறது. ஆகவே அதைத் தடுக்கவேண்டும். அந்த முறையிலே அந்த ஆற்றின் கரைகளைக் கட்டி தகுந்த முறையிலே தேங்கிக் கிடக்கிற சாக்கடை நீரை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வேண்டுமென்றால் மத்திய அரசின் உதவியைப் பெற்றாவது இதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக தமிழ்நாட்டிற்கு கடந்த ஆண்டில் கொடுக்கப்பட்ட மத்திய அரசு உதவி செலவழிக்கப்பட்டிருந்தாலும் கூட கொசுக்கள் பெருகி வருகின்றனவே தவிர ஒழிந்தபாடில்லை. அதையும் கவனிக்க வேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மக்களிடத்திலே புகுத்த விரும்புகிறோம். அதைப்போன்று இந்த கொசுக்களைப் பொறுத்த வரைக்கும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டுவந்தால் யாருமே எதிர்க்கமாட்டார்கள், மக்களுடைய பூரண ஆதரவும் கிடைக்கும், ஆகவே அதைச் செய்ய வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பொறுத்தவரையில், நெருக்கடி காலத்திலிருந்தது போன்று தான் அதிகாரிகளிடம் கெடுபிடி இருந்து வருகிறது. அதை நீக்க வேண்டும்.

தர்மபுரி மாவட்டத்திலே பெல்ஜியத்தின் உதவியோடு ஒரு தொழுநோய் மருந்தகம் இருந்து வருகிறது. அதை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. அங்கே 115 பணியாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே அதை அரசாங்கமே எடுத்துக்கொண்டு, அந்த 115 பணியாளர்களையும் நிரந்தரமாக்கி ஊதியம் அதிகமாக வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் பணிபுரியக்கூடிய ஹெல்த் ஆபீஸர்ஸ் அந்த நகராட்சிகளின் ஆணையரின் கட்டுப்பாட்டுக்குள் இல்லை. மற்ற அதிகாரிகள் ஆணையரின் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள், ஆனால் இந்த சுகாதார அதிகாரிகள் மட்டும் மாநில, மருத்துவ இயக்குநர் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். அதனால் அடிக்கடி அந்த ஆணையருக்கும் அந்த சுகாதார அதிகாரிக்கும் மோதல் ஏற்படுகிறது. இரட்டை ஆட்சி என்று சொல்லக்கூடிய முறையிலே அங்கே சில நேரங்களிலே முட்டுக்கட்டைகள் ஏற்படுகின்றன. அந்த அதிகாரியை ஆணையர் கட்டுப்படுத்த முடியவில்லை. நகராட்சி ஆணையாளர்களை அந்த சுகாதார அதிகாரிகள் மதிப்பது கூட இல்லை. நான் சேலம் நகராட்சி மன்றத்தின் உறுப்பினராக 18 ஆண்டுக்காலம் இருந்தவன் என்ற அடிப்படையிலே அனுபவ ரீதியாகச் சொல்கிறேன். ஆகவே, ஆணையரின்கீழ் அவருடைய கன்ட்ரோலின்கீழ் அந்த ஹெலித் ஆபீஸரும் வரவேண்டுமென்ற முறையிலே சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

கடந்த ஆண்டில் டெண்டல் மெக்கானிக்குகள் தங்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படவேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்போது அவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புக் கொடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சொன்னார்கள். அதனால் அந்த உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. ஆனால் இதுவரையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை. இதைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, திரு. ஆறுமுகம் அவர்கள் கொசு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் அந்தத் திட்டத்தை மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி அமல் செய்வதற்கு ஆவனசெய்தால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். மத்திய அரசாங்கத்தில் அவருக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி அதை அமல்படுத்துவார்களா? அப்படி அமல்படுத்தும்போது அதற்காக நிதி உதவி செய்வார்களானால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம், ஆகவே அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்தின் திட்டமல்ல, மாநில அரசாங்கத்தின் திட்டமுமல்ல, அவருடைய சொந்தத் திட்டந்தான்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள மருத்துவமனைகளில் மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 11 ஆயிரம் என்று கூறப்பட்டிருக்கிறது, அதிலே 8,000 படுக்கைகள் சென்னையிலே இருக்கின்றன, மற்ற மாவட்டங்களிலே 3,000 தான் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் 400, 500 படுக்கைகள் தான் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் 20 லட்சம், 25 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவ்வளவு பேர்களுக்கு 500 படுக்கைகள் என்பது குறைவு. சேலம் போன்ற பெரு நகரத்திலே 500 படுக்கைகள் தான் இருக்கின்றன.

[முற்பகல் 11·10.]

அதிலும் அங்கேயுள்ள கட்டடங்கள் பழங்காலக் கட்டடங்களாகவும், ஓட்டு வில்லைக் கட்டடங்களாகவும் இருக்கின்றன. அவற்றைப் பலமாடிக் கட்டடங்களாகக் கட்டவேண்டுமென்றும் அங்கே படுக்கை வசதிகளையும் அதிகப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [1978 மார்ச் 25

ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் பேசும் பொழுது, மருத்துவ மனைக்கு அவுட்-பேஷன்டுகளாக வரக் கூடியவர்கள் வாங்கும் சீட்டுக்கு 10 காசு வசூலிக்க வேண்டுமென்று கூறினார்கள். அதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். ஏழை மக்கள், தாங்கள் அன்றாடம் மருத்துவம் பார்த்துக்கொள்வதற்காக வருபவர்களிடம் 10 காசு வாங்க வேண்டுமென்ற யோசனை அபாயகரமான யோசனை. இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கூறி, பேச வாய்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி நன்றி என்று கூறி விடைபெறுகிறேன்.

* THIRU A. EKAMBARA REDDY : Mr. Deputy Speaker, Sir, I rise to speak on Demand Nos. 18 and 19—Medical and Public Health. The provision for extending Public Health Programmes and rendering adequate medical facilities to the people are the primary objectives of a Welfare State. The prosperity of a Nation is no doubt depending upon the good health of the people.

Though the present Government is aiming at, undertaking several programmes for the physical welfare of the rural people, some more attention is essential to concentrate on the health programmes and medical services of the rural population which forms 70 per cent of the total population.

Out of 383 Primary Health Centres only in 139 Primary Health Centres there are three doctors ;.only 192 Primary Health Centres have been provided with dispensary buildings and staff quarters. I am happy to note that there is a proposal with the Government to provide one more medical officer in 100 Primary Health Centres. The posting of a third Medical Officer and construction of dispensary buildings should be completed at an early date so as to keep the programme complete and to render basic medical facilities to the needy rural people.

The present Government have increased the annual provision for the purchase of drugs from Rs. 12,000 to 14,000. It is also insufficient. I request the kind consideration of the Government to provide at least Rs. 20,000 for the purchase of drugs for the Primary Health Centres to render medical services to the needy people in rural areas.

1978 மார்ச் 25] [திரு. எ. ஏகாம்பர ரெட்டி]

Then I come to the Mobile Health Services. The doctors of Primary Health Centres could not find time to inspect the villages and render medical service to the rural people. So the present Government have come forward with a proposal to render medical services through Mobile Medical Teams.

Now there is a proposal with the Government of India to implement a Nation-wide scheme for improving the Rural Health Services by means of Community Health Workers to be identified by the community and to be deployed in the villages. This was substituted by our Government with a better scheme, namely Mobile Medical Team radiating from the Primary Health Centre to every village. The medical facilities can be extended to villages through Mobile Medical Teams, since the infrastructure facilities like good inter-connecting roads and electricity are available. Therefore, we can render better medical facilities better than those available under the scheme proposed by the Central Government.

I am glad to know that the Central Government also have approved this scheme, and permitted to go ahead. The Central Government have provided Rs. 17 lakhs for this scheme. I request this Government to get that amount for the year 1977-78 released early and also a like sum for 1978-79 to implement the scheme successfully in our State. Now it is proposed to extend this scheme in 100 more Primary Health Centres.

Pallipat is a backward area. I request that this scheme should be implemented in 3 Primary Health Centres in my constituency i.e. Prodatoorpet, Annayarkuppam and Beerakuppam which are most backward areas.

As regards Mini Health Centres, opening of Mini Health Centres is a good scheme which aims at rendering preventive, curative and promotive health services to the villages. It could be entrusted to Panchayat Unions, as most of the Panchayats are prepared to contribute 1/3rd of the total cost i.e. (Rs. 6,000 of the total cost Rs. 18,000) and to provide suitable buildings. At present, the Central Government have not yet given their concurrence for

1/8 share of the cost of expenses, so as to facilitate the Panchayat Unions and Voluntary Organizations to come forward to start more number of Mini Health Centres.

The D.P.T. Immunisation Programme should be extended compulsorily to all the Panchayat Unions to immunise all the children with two doses of triple vaccine to save the poor children from the 3 diseases, viz. Whooping cough, Diphtheria and Tetanus. It is mostly required nowadays. It is essential to save poor children who are living in villages without this facility.

Filaria, Tubercolosis and Leprosy are prevalent mostly in villages in our State. Such diseases are found to be prevalent everywhere as our state is endemic to these diseases. Filaria is a dreadful disease easily transmitted through mosquitoes.

I request the Government that one of the doctors of the Primary Health Centres should be solely entrusted with the work of taking controlling, prevention and curative measures for these three dreadful diseases with the co-ordination of the departmental District Heads concerned.

It is a welcome proposal of the Government to conduct a T.B. detection drive among the Handloom Weavers and Beedi workers with the help of B.C.G. Teams.

Filaria and other diseases can be eradicated by taking preventive steps. Filaria is a dangerous disease which can be easily cured if proper treatment is given at the initial stage.

As for Panchayat Union Dispensaries, the ceiling limit of Rs. 5,400 to cover 50 per cent of expenditure on the maintenance of one regular dispensary at every Panchayat Union, should be increased to at least Rs. 7,500. The present ceiling of Rs. 5,000 is very meagre.

From 1968 to 1977, 112 Panchayat Union Dispensaries have been provincialised. The present Government have got a proposal to provincialise 20 Panchayat Union Dispensaries. Most of the

Panchayat Unions are without financial assistance. For example Pallipat Panchayat Union cannot run a Dispensary from its slender finances. Though there is a proposal pending with the Government for a very long time to Provincialise Panchayat Union Dispensary it has not been done. I request this Government to kindly provincialise the Panchayat Union Dispensary at Pallipat at least this year.

In Trichy district, Karur Taluk, at Pallapatti there is a Government Dispensary. When it was Local Fund Dispensary post mortem cases were attended to. Now after the Dispensary has been converted into Government dispensary, post mortem cases are not attended to. The hospital has been provided with all the facilities for conducting post mortem examination. I request the Government to kindly consider this issue and pass orders accordingly to enable the hospital at Pallipat, Karur taluk, Trichy district to attend to post-mortem cases.

With these words I conclude my speech. Thank you, Sir.

[முற்பகல் 11-20]

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக மருத்துவக் கல்லூரியிலே படிக்கின்றவர்கள் தகுதி திறமை அடிப்படையிலேதான் அவர்கள்சேர்க்கப்படவேண்டும் என்கிற ஒரு கருத்தை இந்த அரசாங்கம் வைத்திருக்கிறது. அந்தக் கருத்து வரவேற்கப்படவேண்டிய ஒரு கருத்து என்று சொன்னாலும் அதிலே மருத்துவக் கல்லூரியிலே இடம் பெறவேண்டிய வாய்ப்புக்களை நகர்ப்புறங்களிலே இருக்கிற, எல்லா வசதி படைத்த மாணவர்களுக்குத் தான் கிடைக்கிறது. படித்த குடும்பங்களிலே இருக்கிற மாணவர்களுக்குத்தான் கிடைக்கிறது.

ஆனால் கிராமப்புறங்களிலே இருந்து வருகின்ற மாணவர்கள் அந்த மருத்துவக் கல்லூரியிலே இடம் கிடைப்பது என்பது கனவில் கூட கருத முடியாத ஒன்றாக இருக்கிறது. சென்ற முறை கூட சொன்னேன். சேலம் ஆத்தூர் கல்லூரியிலே, அந்தக் கல்லூரியிலே முதல் மாணவனைத் தேர்ந்

தெடுக்கப்பட்ட ஒரு மாணவனுக்கு எம்.பி.பி.எஸ். சீட் வேண்டும் என்று மனுப்போட்டபோது, வேண்டிய மார்க்குகள் இல்லை என்று அவனுக்கு இடம் கிடைக்கவில்லை.

இதுபோன்ற கிராமப் புறங்களிலே உள்ள கல்லூரிகளில், மொபசல் காலேஜிலே இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். அங்கே இருக்கிற மாணவர்களுக்குப் படிப்பதற்கு வேண்டிய வாய்ப்புகளையும் நாம் ஏற்படுத்தித் தருகிறோம். அப்படி கஷ்டப்பட்டு படிக்கின்ற மாணவர்கள், அவர்கள் நகர்ப்புறங்களிலே இருக்கிற மாணவர்களிடம், படித்த குடும்பங்களிலேயும், எல்லாவிதமான வாய்ப்புக்களையும் வசதிகளையும் பெற்ற மாணவர்களிடம் போட்டி போட்டுக்கொண்டு தேர்விலே வெற்றி பெற முடியாத நிலைமை இருக்கிறது. சென்ற முறை எம்.பி.பி.எஸ். சேர்ப்பதற்காக ஒரு மார்க்கு சிஸ்டத்தை வைத்திருந்தார்கள். அதிலே சொன்னார்கள், அந்தக் கணக்கின்படி போட்டுப்பார்த்தால் ஒரு மாணவிக்கு 149½ மார்க்கு வந்தது. அந்த செலக்ஷன் போர்டிலே 150 மார்க்குகள் வாங்கினால்தான் கன்சிடர் செய்யமுடியும் என்று வைத்திருந்ததால் 149½ மார்க்கு வாங்கி ½ மார்க்கு இல்லாத காரணத்தால் அந்த மாணவிக்கு அங்கே இடம் கிடைக்கவில்லை. அதாவது ஒரு கணக்குப் போட்டு இவ்வளவு மார்க்கு வாங்கினால்தான் இடம் என்று வைத்தால், நாம் இப்போது பேசுகின்ற கருத்துக்கள், கிராமப்புறங்களுக்கு முன்னுரிமை, கிராமப் புறங்களில் படித்து வாய்ப்புப் பெறுகிற மாணவர்களுக்குப் பாதுகாப்பு எல்லாம் இல்லாமல் போய்விடும். ஆகவே தகுதியையும் திறமையையும் அடிப்படையாக நாம் வைத்துக் கொண்டு இருப்போமேயானால், பெரியார் அவர்கள் இந்த நாட்டிலே இருக்கிற அந்தக் கல்லாமையை, அறியாமையை மக்களிடையே ஒழித்துத் தீரவேண்டும் என்ற உணர்வு கொண்டார்களே அந்தக் கனவுகள் எல்லாம் நனவுகளாக ஆக்குகின்ற ஒரு பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஆகையினாலே ஒரு பர்சன்டேஜ் ஒதுக்கித் தாருங்கள் அல்லது ஒரு பகுதிக்கு 150 மார்க்குகள் என்று இருந்தால், மொபசல் காலேஜிலேயிருந்து வருகிற மாணவர்களுக்கு 125 என்று வையுங்கள். அல்லது மொத்தம் 100 இடங்கள் என்றிருந்தால் 50 இடங்களை மொபசல் கல்லூரி மாணவர்களுக்கு ஒதுக்கித் தாருங்கள். இப்படி ஒதுக்கி வைத்தால்தான் அந்த மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிற சூழ்நிலை உருவாகும். அப்படி இல்லை என்றால், நாம் ஒரு பேராபத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறோம். கிராமப்புறங்கள் அடியோடு புறக்கணிக்கப்படுகின்றன என்ற நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை இந்த அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. அதற்கு வழிவகுக்கக்கூடாது என்று அழுத்தமான கருத்தை நான் கூறவிரும்புகிறேன்.

அடுத்து, 1975லே பாஸ் செய்த எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்கு இந்த அரசாங்கம் உத்தியோகம் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. படிப்பதோ மிகவும் கஷ்டம், அப்படிக் கஷ்டப்பட்டு படித்த பிறகும் இன்றைக்கு வேலையில்லை என்கிற நிலைமைதான் இருக்கிறது. வேலை இல்லாதவர்கள் பிரைவேட் பிராக்டிஸ் செய்வதற்கும் வாய்ப்பில்லை. காரணம், அரசாங்க ஆஸ்பத்திரியிலே வேலை செய்கின்றவர்கள் அவர்கள் பிரைவேட் பிராக்டிஸ் செய்ய முடியும் என்ற உத்தரவின் காரணமாக அரசாங்கத்திலே சம்பளம். வாங்கிக் கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது.

அரசாங்க மருத்துவமனையிலே They come into contact with several kinds of patients. அவர்களைத் தங்களுடைய தனியார் மருத்துவமனைகளுக்கு பேஷண்டுகளை டைவர்ட் செய்கிற வாய்ப்பும் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, அரசாங்க உத்தியோகத்தில் அவர்களுக்கு கேரண்டி இருக்கிறது. அதே நேரத்தில் அவர்களுக்கு வேண்டிய கிளையன்டுகளை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில், மருந்துகளை விலைக்குவாங்க வேண்டிய அவசியம் இல்லாமல், மருத்துவ மனையில் இருந்தே மருந்துகளை எடுத்துச்சென்று பயன்படுத்திக்கொள்ள அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆகவே, அரசாங்க டாக்டர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்வதால் இந்த 3 விதமான வசதிகள் இருக்கின்றன. அப்படி அவர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்வதால், படித்து விட்டு வெளியே இருக்கின்ற எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்கு பிரைவேட் பிராக்டீஸ் இல்லை, அரசாங்க உத்தியோகமும் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்கிறேன், அரசாங்க உத்தியோகத்திற்கு வந்தால் அந்த டாக்டர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக் கூடாது என்று தடை விதிக்கப்படவேண்டும். ஒன்று, அரசாங்க உத்தியோகத்தில் வேலை செய்ய வேண்டும், இல்லை

யென்றால், பிரைவேட் பிராக்டீஸ் செய்யவேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாகப் படித்துவிட்டு வந்து இருக்கிறவர்களுக்கு வாய்ப்பு இருக்கும்.

They need not suffer for their livelihood என்று சொல்கின்ற முறையிலே அந்த பிரைவேட் பிராக்டீசை நீங்கள் நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரிசர்ச் ஸ்டடீஸ் என்ற வகையில் எம்.டி., டி.சி.எச். போன்றவற்றிற்கு தேர்ந்தெடுக்கப்படுவதில்கூட, நகரத்தில் இருப்பவர்களுக்குத்தான் கிடைக்கிறது, கிராமப்புறத்தில் படித்துவிட்டு, வேலை செய்து கொண்டிருக்கிறவர்களுக்கு அந்த மேல் படிப்பு படிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்காத நிலை இருந்து வருகிறது. அதைப்போக்கவேண்டும்.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விழைகிறேன். குறிப்பாக, காச நோய், ஆஸ்துமா, கேன்சர், தொழுநோய் போன்றவைகள் எல்லாம் ஒரு ஸ்டேஜ் கடந்து விட்ட பிறகு It is only preventive அதை மேற்கொண்டு வளர முடியாத அளவிற்கு தடுத்து நிறுத்த முடியுமே தவிர, கட்டாயம் கம்பிளீட்டாக, எராடிகேட் செய்ய முடியாது என்ற நிலைமை அந்த பயங்கரமான நோய்க்குஇருப்பதால் தமிழக அரசாங்கம் ஒரு ரிசர்ச் சென்டர் ஆரம்பித்து, அவற்றை எப்படித் தீர்க்கலாம் என்று மேற்கொண்டு ஆராய்ந்து, அந்த நோய்க்கு உரிய காரண காரியங்களைக் கண்டுபிடிக்கவும், தக்க மருந்துகளைத் தயாரிக்கவும், தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த எலும்பு முறிந்தவர்களை ஆஸ்பிடலில் சேர்க்கிறோம். எலும்பு முறிந்த இடத்திற்கு ஒரு ஜாயின்ட் செய்து, மாவு வைத்து கட்டுகட்டிவிடுகிறார்கள். அது நேச்சுரல் கியூர் என்ற வகையில் தானாகவே அந்த எலும்பு வளர்ந்து வரவேண்டும். அதற்கு வேறு எந்தவிதமான சிகிச்சையும் தேவையில்லை. நோயாளிக்கு மியர் ரெஸ்ட் தான் தேவை. அது சில நேரங்களில் சரிவர குணமாவது இல்லை. ஆனால் நகரிப்புத்தூர் போன்ற இடங்களில் மூலிகைகளை வைத்துக்கொண்டு சுலபமாக அவர்கள் அதற்கு வைத்தியம் செய்து விடுகிறார்கள். என் மகனுக்கு எலும்பு

முறிவு ஏற்பட்டபோது ஆஸ்பிடலில் சேர்த்து இருந்தேன். பல நாட்கள் சிகிச்சை செய்தபிறகும் குணம் ஏற்படாத காரணத்தால், நகரிப்புத்தூருக்கு எடுத்துச் சென்றேன். ஒரு மூன்று கட்டுகள் போட்டவுடனே அது குணமாகிவிட்டது. ஆகவே, அந்த மூலிகை வைத்தியம் மூலமாக இந்த எலும்பு முறிவை குணப்படுத்துவதற்கு ஆஸ்பிடலில் முதலிடம் கொடுத்து, அதற்காக ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று மஞ்சள் காமாலை நோய் இருக்கிறது. அதற்கு கருசலாங்கண்ணி லேகியம் தயார் செய்து கொடுக்கிறார்கள். ஆங்கில வைத்திய முறையில் மஞ்சள் காமாலை நோயை குணப்படுத்த முடியவில்லை. ஆகவே, அதற்கு இந்த மாதிரி இயற்கை வைத்திய முறையைப் பின்பற்றலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் அந்த மாதிரியான வைத்திய முறைகளையும் என்கரேஜ் செய்வதற்கு சைமல்டேனியஸ்ஸாக ஆஸ்பிடலில் தனிப் பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

மற்றும் இந்த அரசு ஏறத்தாழ 20,000 ஜனத் தொகை இருக்கிற இடங்களில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் அமைக்கும் என்று குறிப்பில் சொல்லியிருக்கிறது. அதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால் அங்கே இருக்கிற மக்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்ட வேண்டும். கட்டினால் தான் பிரைமரி ஹெல்த் சென்டர் அல்லது ஏதோ 'சப் சென்டர்' ஏற்படுத்த வாய்ப்புத் தருகிறார்கள். அப்படிச் சொல்லும்போது அந்தப் பகுதி மக்களுக்கு அந்தப் பணத்தைக் கட்ட முடியாத நிலை இருக்கிற போது பிரைமரி ஹெல்த் சென்டர் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

ஆகையால் அரசாங்கமே அதை ஒரு பாலிஸியாக வைத்து 5 மைல் ரேடியசுக்குள் கட்டாயம் ஒரு மருத்துவமனை இருந்து ஆகவேண்டும் அல்லது 20,000 ஜனத் தொகை கொண்ட ரேடியசுக்குள் கட்டாயம் ஒரு மருத்துவமனை இருந்து ஆக வேண்டும் என்று வலியுறுத்துவதன் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு நல்லதொரு வாய்ப்பையும் மருத்துவ வசதிகளையும் செய்து தந்தவர்களாவோம். அதை நீங்கள் கருத்திற்கொண்டு, மக்களிடமிருந்து பணம் வாங்கும் முறையை

வற்புறுத்த வேண்டாம் ; அரசாங்கமே சொந்த செலவில் மருத்துவ மனையை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் பல சீர்திருத்தங்களை இந்தக் குறிப்பிலே தந்திருக்கிறார்கள். இந்தக் குறிப்பிலே சொல்லியிருப்பவைகளை சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்து எந்த முறையில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதைப் பரிசீலனை செய்து, பொறுப்போடு செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை, குறிப்பாக கிராமப் புற மக்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற முறையில் மருத்துவ மனைகளைத் தொடங்க வேண்டும். Medical Service must be at the door of each individual என்ற முறையிலே மருத்துவமனைகளை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக இந்தக் கருத்துக்களை எல்லாம் பதிய வைத்து, விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : தலைவரவர்களே, இப்போது தனியார் மருத்துவ மனைகளிலே 'மெடிகோ லீகல் கேசஸ்' விபத்துக்கள் மூலம் காயம் ஏற்பட்டாலும் மற்றவர்களால் தாக்கப்பட்டு காயம் ஏற்பட்டாலும் அதற்கு சிகிச்சை அளிக்க அனுமதிக்காத நிலைமை இருக்கிறது. குறிப்பாக வேலூரில் இருக்கிற சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் மெடிகோ லீகல் கேஸ்களை அனுமதிக்கக் கூடாது என்று முடிவு செய்திருக்கிறார்கள். நமது அரசு அப்படிப்பட்ட தனியார் மருத்துவ மனைகளில் இந்த மெடிகோ லீகல் கேஸ்களை அனுமதிக்க வேண்டுமென்றும் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் மருத்துவ மனைகளைப் பற்றிய ஒரு தனியார் தீர்மானம் இங்கே வந்திருக்கிறது. அது எந்த அளவுக்கு இப்படிப்பட்ட சேவை மனப்பான்மையோடு தொண்டு செய்கின்ற மருத்துவமனைகளைப் பாதிக்கும் ; அதே நேரத்தில் அது எந்த அளவுக்கு அதிலே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் நலனை உயர்த்தும் என்பதைக் கருத்தில் கொண்டு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியாக இப்போது பயிற்சி செய்கிறார்கள். 'பிராக் ... செய்கிறார்கள். அந்த பிரைவேட் பிராக்டிஸை அரசாங்கம் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

பெரணமநல்லூர் தொகுதியிலே போளூர் வட்டத்திலே வடபாதிமங்கலம் என்ற இடத்தில் ஒரு மருத்துவமனை கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பிணங்களை அறுத்து பரிசோதனை செய்கின்ற நிலைமைகள் எல்லாம் பிரைமரி ஹெல்த் சென்டர்களில் இல்லை. அங்கே மெடிகோ லீகல் கேஸ்களை கூட அனுமதிக்க மாட்டேன் என்கிறார்கள். போஸ்ட்மார்ட்டம் செய்யும் வசதியும் இல்லை இவைகளுக்கு எல்லாம் பிரைமரி ஹெல்த் சென்டர்களில் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போஸ்ட்மார்ட்டம் செய்யும் போது காவல் துறையினரும் மருத்துவரும் சேர்ந்துகொண்டு சில நேரங்களில் சரியாகச் செய்வதில்லை. அனாதைப் பிணம் என்றால், வழக்கு சிக்கலாக இருக்கும் என்று தெரிந்தால், கொலை செய்யப்பட்டிருந்தாலும் தற்கொலை அல்லது விபத்தினால் ஏற்பட்டது என்று சொல்லிவிடுகிறார்கள். மருத்துவரும் காவல் துறையினரும் சேர்ந்து கொண்டு பல வழக்குகளில் இப்படி ஒரு அத்தாட்சி வழங்கி, அந்த வழக்குகளைத் தள்ளுபடி செய்துவிடுகிறார்கள். அனாதை என்ற நிலைமைகளில் மட்டுமல்ல ; அந்தக் கொலை வழக்கைப் பதிவு செய்தால் அந்த வழக்கிலே சிக்கல் வரும் அல்லது சிக்கல் இருக்கிறது என்று தெரிந்தால் காவல் துறையினரும் மருத்துவரும் சேர்ந்து, அவர்கள் கலந்து பேசி, விபத்து அல்லது தற்கொலை என்று அத்தாட்சி கொடுத்துவிடுகிறார்கள் ; அந்த நிலைமைகளை மாற்றியமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தொழுநோய் பற்றிச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தொழுநோயினால் பாதிக்கப்பட்ட ஆரம்பக் கட்ட நிலையிலுள்ளவர்கள் தங்கள் வியாதிகளை எல்லாம் மறைத்துக் கொள்கிறார்கள். சாதாரணமாக பனியன் போடுபவர்கள் அரைக்கைச் சட்டையும், அரைக்கைச் சட்டை போடுகிறவர்கள் முழுக்கைச் சட்டையும் அணிந்து கொண்டு நோயினை மறைக்கும் நிலை இருக்கிறது. அவர்கள் மருத்துவ மனைக்குச் சென்று தங்களைச் சோதித்து, சரியான மருந்து சாப்பிடுவதற்கு முன்வருவது கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த நோயினை மறைக்க முற்பட்டால் அது குற்றம் என்று இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வி.டி. இந்த வியாதி மிக அதிகமாக இப்போது பரவி இருக்கிறது. இதனை எஸ்.டீ.டி. என்று கூறுகிறார்கள். அதாவது செக்ஸுவலி ட்ரான்ஸ்பர்ட் டிசீஸ் என்று சொல்கிறார்கள். இது ஒரு தவறான கருத்து என்று நான் கருதுகிறேன். ஐ திங்க் இட் இஸ் எ மிஸ்நாமர். அதாவது இந்த டெலிபோன் சம்பந்தமாகப் பேசுவதுபோல் 'சப்ஸ்க்ரைபர்ஸ் ட்ரங்க் டையல்' சிஸ்டம் என்பது போல் இதுவும் கூறப்படுகிறது என்று நினைக்கிறேன். வெகு சீக்கிரத்தில் தொடர்பு ஏற்படுத்துவதற்காக அந்த சிஸ்டம் உபயோகப்படுவதுபோல் இந்த வியாதியும் வெகு எளிதில் பரவுகிறது என்ற எண்ணத்தில் சொல்லப்பட்டிருப்பதாகக் கருதுகிறேன். ஆகவே இது செக்ஸுவல் தொடர்பு மூலமாக மட்டும்தான் பரவும் என்று சொல்வது தவறு. தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்போதே இந்த வியாதி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கு இந்த வி.டி.ஆர்.எல். டெஸ்ட் செய்ய வேண்டும். ஏனென்றால் கருவிலே இருக்கும் குழந்தை ஒரு பாவமும் அறியாதது. அது வெளியே வந்து கஷ்டப்படுவதைப் பார்த்தால் வேதனையாக இருக்கிறது. ஆகவே முன்னேற்பாடாக நடந்து கொள்ளும் விதத்தில் இந்த வி.டி.ஆர்.எல். டெஸ்ட் செய்வதைப் பரவலாக்க வேண்டும்.

அடுத்து, தற்போது எலும்பு முறிவு ஏற்படும் சமயங்களில் நகரிக்கு கொண்டு போகப்படுகிறது. முறிவு ஏற்பட்ட உடனேயே நகரிக்கு எடுத்துச் செல்வது அவ்வளவு நல்லதல்ல. அதனால் பல பேர் ஊனமுற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆகவே முறிவு ஏற்பட்டவுடனே எக்ஸ்ரே எடுத்து மற்ற மருத்துவ மனைகளில் செட் செய்த பிறகு நகரிக்கு எடுத்துச் செல்லலாம். ஆகவே உடனடியாக இந்த எக்ஸ்ரே எடுத்து செட் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று மருந்துகளைத் தண்ணீர் போன்று பயன்படுத்தும் கொடுமைகளைச் சொல்லி முடியாது. மருத்துவர்கள் அதைக் கண்டபடி அதிகமாகவும் மிகத் தாராளமாகவும் கொடுக்கக் கூடாது என்று இப்போது இருக்கின்ற தடையை மிகவும் கடுமையான முறையில் வலியுறுத்தி கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இப்படிப்பட்ட மருந்துகளை பலர் உபயோகிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இதில் இருக்கும்

ஆபத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும். உபயோகித்தவர்கள் மனம் உடைந்து போகாத நிலைமையிலே அவற்றை மிகவும் ஜாக்கிரதையாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

அடுத்து மன வைத்தியத்தைப் பொறுத்தவரை இப்போது போதுமான சைக்யாட்ரிஸ்ட்கள் இல்லாத நிலை இருக்கிறது. செயலாளர் போதுமான சைக்யாட்ரிஸ்ட்ஸ் கிடைக்கவில்லை என்று சொல்கிறார். அந்தக் குறையைப் போக்குவதற்கு அதிகமான மருத்துவர்களை இத்துறையில் பயிற்சி பெறச் செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் இப்படிப்பட்ட வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களின் மன வியாதிக்குரிய காரணங்களைக் கண்டறியவேண்டும். ஆகவே, இந்த விஷயத்திலே எவ்வளவு பேரைக் காப்பாற்றலாம்? மன டிப்ரஷன் எப்படி வருகிறது என்பதையெல்லாம் கண்டறிவதற்குத் தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கீழ்வைத்தியநாம்குப்பத்தில் சி. எம். சி. மருத்துவமனையில் ரூசோ திட்டம் என்று ஒன்று கொண்டு வந்திருக்கிறார்கள். அது மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. அதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அதனை மற்ற மருத்துவமனைகளிலும் அதாவது அரசு மருத்துவமனைகளிலும் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அப்ளையிடு நியூட்ரீஷன் ப்ரோக்ராம். இதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இத்துடன் உரையை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. சி. ராமநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மருத்துவ மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மருத்துவத் துறையிலே எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் அவர்கள் சமூகப் பொருளாதார முன்னேற்றம், கிராமத்திலே

உள்ள மக்களுடைய உடலையும் உயிரையும் பேணுவதில் தான் இருக்கிறது என்பதை உணர்ந்து கிராமப்புறங்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று எண்ணி இருப்பதைப் பார்த்து உண்மையிலேயே பாராட்ட வேண்டியவனாக இருக்கிறேன். இதைப் பெரும்பாலும் கிராமத்திலே இருப்பவர்கள் வரவேற்பார்கள் என்பதில் எனக்குக் கொஞ்சமும் ஐயமில்லை என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 11-40.]

அடுத்து, கிராமப்புறங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று 130 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றாவது மருத்துவரை நியமித்திருக்கிறார்கள். அப்படி நியமித்ததில் ஒருவர் தலைமையிடத்தில் வேலை செய்வதாகவும், மற்ற இருவரை நடமாடும் மருத்துவமனையில் பணிக்குழுவில் அமைத்து கிராம மக்களுக்கு கடைசிவரையில் ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய ஒரு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே கிராம மக்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் கிராமப்புறங்களில் மக்கள் மருத்துவ வசதி இல்லாமல், ஏழை மக்கள் போக்குவரத்து வசதியில்லாமல் கஷ்டப்பட்டு இறப்பதை நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். அந்த முறையில் இப்போது கிராம மக்களுக்கு இந்த வாய்ப்பு கிடைத்திருப்பது மிகவும் பெருமைக்குரிய விஷயம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு மருத்துவர்கள் பணிக்குழுவை, அந்த வட்டாரத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு சப் சென்டர் மாதிரி அமைத்து அந்த சப் சென்டரில் அந்த மருத்துவர்கள் பணியாற்றினால் அந்தக் கிராம மக்களுக்கு சமீபத்திலும் இருக்கும், அதே நேரத்தில் அவர்கள் போக்குவரத்துச் செலவும் குறையும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொண்டு அந்த முறையை அனுசரித்து நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விருத்தாசலத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் மாடிக்குப் போகும் பாதையில் லட்ரீன் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே போனால் சுகாதார வசதி இல்லாமல்

துர்நாற்றம் அடித்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் 'கட்டடம் கட்டியது சரியில்லை என்று சொல்கிறார்கள். இந்த நிலையை மாற்றியமைத்து சுகாதார வசதிகளோடு மருத்துவ நிலையங்கள் அமையுமாறும், மருத்துவர்கள் தக்கமுறையில் அதை சுகாதார வசதியோடு பயன்படுத்துமாறும் கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விருத்தாசலத்தில் உள்ள மருத்துவமனையில் ஒரு எக்ஸ்ரே பிரிவும், லாபரட்டரியும் ஏற்படுத்தித் தருமாறும், ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்தித் தருமாறும் கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்களுக்கு நல்ல முறையில் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் ஆம்புலன்ஸ் இருந்தால் அவர்களை எடுத்து வருவதற்கும் அடுத்து இல்லா மருத்துவமனைக்குக் கொண்டு போவதாக இருந்தால் அதற்கும் வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொண்டு அப்படியிருக்கும் அந்த ஆம்புலன்ஸ் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் பகுதியில் முகாசாபரூர், இருப்பு, கீரனூர் இவற்றில் மினி ஹெல்த் சென்டர்ஸ் ஏறபடுத்தித்தர வேண்டும். கிராமங்கலில் விவசாய வேலைகள் செய்யக் கூடிய மக்கள் விஷப் பாம்புகளால் தீண்டப்படுகிறார்கள். பகல் அல்லது வேலைசெய்யும்போது அல்லது படுக்கையிலோ விஷப் பாம்பால் தீண்டப்படுகிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு அளிக்கிற வகையில் தக்க மருத்துவ வசதி அளிக்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இவர்கள் வசதி இல்லாதவர்கள், இப்படி திடீரென்று ஒரு குடும்பத்தை விட்டுவிட்டு பாம்பு கடித்து இறந்துவிடுவார்களேயானால் எப்படி பனைமரத் தொழிலாளர்களுக்கு நம் அரசு உதவுகிறதோ, எப்படி மீனவர்களுக்கு உதவுகிறதோ அதேபோல் இந்த விஷப் பாம்பால் தீண்டப்பட்டு இறப்பவர்களின் குடும்பத்திற்கு நம் அரசு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த அளவிற்கு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்,

***திரு. இ. தமிழரசன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற மருத்துவம், மக்கள் நல்வாழ்வு போன்ற மான்யக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி பேசத் துவங்குகிறேன்.

இந்த மான்யங்களில் 82½ கோடி ஒதுக்கீடு செய்திருப்பது, இந்த நாட்டின் பொது சொத்தாகக் கருதப்படுகின்ற மக்களின் நல்வாழ்வு எவ்வளவு முக்கியமானது என்பதை நம்முடைய புரட்சித் தலைவரின் அரசு கோடிட்டுக் காண்பித்திருக்கிறது என்பதைத் தெட்டத் தெளிவாக விளக்குகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, கிராமப் புறங்களிலுள்ள மக்கள் சீரான மருத்துவ வசதியையும், செம்மையான மருத்துவ வசதியையும் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு மாவட்டம், வட்டார மருத்துவ மனைகளில் எல்லாம் அதிகமான வசதிகளை பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த அறிக்கை தரப்பட்டிருக்கிறது என்பதை நினைத்து நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மருத்துவத்துறையில், எந்த அளவுக்கு சிறந்த தொண்டு புரிய வேண்டும் என்பதற்கும், அதற்கேற்ற முறையில் பணி புரிய கல்லூரிகளில் கற்றுக் கொடுக்க போதுமான துறைகளை ஏற்படுத்தவும், மேலும் இப்படிப்பட்ட துறைகளில் ஆசிரியர்கள் இல்லை என்பதைக் கருத்திற்கொண்டு பட்டமேற்படிப்பு, பட்டயத்திற்குத் தகுந்த வகுப்புகள் இவைகளை எல்லாம் நடத்தி வருவதற்காகத் திட்டங்களை உருவாக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற புரட்சிகரமான கொள்கை விளக்க அறிக்கை வரவேற்கத்தக்கதாக உள்ளது. நடப்பு ஆண்டில் பல்வேறு புதிய மருத்துவ மனைகளில் சிறந்த பிரிவுகளும், புதிய நவீனக் கருவிகளும் கொண்டுவர வேண்டும் என்ற முறையில் அதற்கேற்ற வகையில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி பாராட்ட விரும்புகிறேன்.

பொதுவாக மருத்துவத்தில், மனிதனுக்கு நோய் பாதி, பயம் பாதி என்று சொல்வார்கள். நோயால் அவஸ்தைப் படுகிறவர்களின் மனநிலையை மாற்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தலைமை மருத்துவ மனைகளிலும் மனநோய் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தத் திட்டமிட்டிருப்பதை மிகவும் பாராட்டி வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே போன்று தொழுநோய் பிரிவும் ஏற்படுத்தி அந்த நோயைத் தடுக்கும் நோக்கத்துடன் மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் தனியாக வார்டுகளை ஏற்படுத்தி, மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

குறிப்பாக, பள்ளி மாணவர்களிடம் இந்த நோய் பரவாதவாறு ஆங்காங்கு சுகாதார ஆய்வாளர்களை நியமித்து, மாணவர்களைப் பரிசோதனை செய்து உடனுக்குடன் அவர்களுக்கு மருத்துவ வசதி வழங்கியிருப்பதற்கு மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவத் துறை என்பது மிகவும் புனிதமான துறை. இதில் வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பார்க்காமல் பணிபுரியும் மருத்துவர்களுக்கு சில மன மாற்றங்களை ஏற்படுத்த, சில கட்டுப்பாடுகளை விதிக்க இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மருத்துவர்களுடைய பணியின் அளவையும், பணி செய்யும் நேரத்தையும் குறைக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மாநில மாவட்ட மருத்துவ மனைகளில் அதிகமான அளவில் நோயாளிகளைப் பார்க்கவேண்டியிருக்கிறது. விஞ்ஞான வசதிகள் பெருகியிருக்கின்றன, நாடு தொழில்மயமாகிக் கொண்டு வருகிறது, புதிய புதிய முறையில் நோய்களும் வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக மருத்துவமனைகளுக்கு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டிருக்கிறது. ஆனால் மருத்துவர்களின் எண்ணிக்கை பெருகியபாடில்லை. இப்படிப்பட்ட மருத்துவ மனைகளில் அதிகமான மருத்துவர்களை நியமித்து அவர்களின் பணியையும், நேரத்தின் அளவையும் நிர்ணயித்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தவிதமான இடர்ப்பாடுகளின் காரணமாகத் தங்களிடம் வருகின்ற நோயாளிகளின் நோய்களின் தன்மையைப் பொறுமையாக அறிந்து கொள்வதற்காகக் கேள்விகளைக் கேட்டுக் கொள்வதற்கோ அல்லது நோயாளிகள் தங்கள் நிலைமைகளை, நோயின் தன்மைகளை எடுத்துச் சொல்வதற்கோ

[திரு. இ. தமிழரசன்] [1978 மார்ச் 25

வழியில்லாத அளவில் மருத்துவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனால் மூன்று நாட்களில் குணமடைய வேண்டிய நோய் குணமாகாமல் ஒரு வாரம், 10 நாட்கள் மருத்துவ மனையில் சென்று குணமடைய வேண்டிய நிலைமை இருந்து வருகிறது என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் அரசு மருத்துவ மனையில் பணியாற்றுகின்ற மருத்துவர்கள் தனியாக மருத்துவமனை வைத்துக் கொள்வதற்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அரசு மருத்துவ மனையில் பணிபுரியும் மருத்துவர்கள் தனியாக மருத்துவ மனை நடத்துவார்களேயானால், அரசு மருத்துவமனைகளில் வருகின்ற நோயாளிகளை மிகவும் பொறுப்பாக தெளிவாக சுத்தமாக கவனிக்க முடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதே நேரத்தில் தாங்கள் தனியாக நடத்துகின்ற மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகளை தாங்கள் பணி புரிகின்ற அரசு மருத்துவமனைக்கு சிபாரிசு செய்து, அரசு மருத்துவமனையிலுள்ள எல்லாச் சலுகைகளையும் வசதிகளையும்—மருந்துகள் இலவசமாக அளித்து தங்களுடைய நோயாளிகளை குணமாக்கிய பிறகு அதற்காகத் தனியாக பணம் பெறுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன், வாணியம்பாடி பெரிய நகரம். ஏழை தினக்கூலி செய்யும் தொழிலாளர்கள் வாழும் பெரு நகரம். அங்கே உள்ள மருத்துவ மனையில் பரிசோதனைச் சாலை ஒன்றும் கதிரியக்கப் பிரிவு ஒன்றும் திறக்க வேண்டுகிறேன். அங்கே பணிபுரியும் பெண் மருத்துவர்களுக்கென்று தனி கழிவறைகள் இல்லை. போன் வசதி இல்லை. இவற்றைச் சீரமைக்க கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50.]

எனவே, இந்த அரசு மருத்துவர்கள் தனியாக மருத்துவமனை நடத்தக் கூடாது என்ற கட்டுப்பாட்டை இந்த அரசு விதித்து, அப்படி தவறு செய்கின்றவர்கள் மேல் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், மருத்துவமனைகளில் ஊசி போடுகின்ற நேரத்திலும், கட்டு கட்டுகின்ற நேரத்திலும் சரி

1978 மார்ச் 25] [திரு. இ. தமிழரசன்]

மனிதத்தன்மையோடு. அன்பான ஒரு சூழ்நிலையில் அவர்கள் சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நான் பலமுறை மருத்துவமனைகளுக்குச் சென்று பார்த்திருக்கிறேன். அங்கே குழந்தைகள், தாய்மார்கள் ஊசி போட்டுக் கொள்வதற்கும், ரணத்திற்கு கட்டு கட்டிக் கொள்வதற்கு செல்லும்போதும் அங்கிருக்கின்ற செவிலியர்கள் அன்பான சூழ்நிலையிலே இல்லாமல், எங்கேயோ பார்த்துக்கொண்டு நறுக்கென்று ஊசி குத்தக் கூடிய நிலைமை தான் இருக்கிறது. அதனால், நோயாளிகளைப் பார்த்து, அன்பாக நல்லமுறையிலே பேசி கனிவாக ஊசி குத்த வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இரவு நேரங்களில் அங்கிருக்கின்ற நோயாளிகளை அவர்கள் சரியாகப் பராமரிப்பதில்லை. சிறந்த முறையில் கவனம் செலுத்துவதில்லை. எனவே, அரசுத் துறையைச் சேர்ந்த மருத்துவர்கள், இரவு நேரங்களில் அங்கே திடீரெனச் சென்று பரிசோதனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இதனால் நோயாளிகள் சிறந்த முறையில் கவனிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படும், அதைச் செய்து தரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், காலரா போன்ற நோய் பரவுகின்ற நேரங்களில் காலரா நோய் கண்டு ஏழை மக்கள் அரசு மருத்துவ மனைக்குச் செல்லும்போது, அங்கே அதற்கு ஏற்ற மருந்துகள் இல்லை. குளுகோஸ் இல்லை, வெளியே சென்று வாங்கி வந்தால் தான் சிகிச்சை செய்ய முடியும் என்ற நிலைமை ஏற்படுகிறது. இதனால் இந்த நோய் கண்டுள்ள ஏழை விவசாயிகளும், ஏழைத் தொழிலாளர்களும் உடனடியாக குளுகோஸ் கொடுக்கமுடியாத நிலையில் இறக்கின்ற பரிதாபகரமான நிலையெல்லாம் ஏற்படுகிறது.

எனவே, இதையெல்லாம் நலமை அதிகாரிகள் உடனடியாகக் கவனித்து, தேவையான மருந்துகளைத் தந்து நல்ல முறையிலே இவர்களுக்கு சிகிச்சை கொடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், ஆரம்ப சுகாதார நிலையங்களிலே கம்பவுண்டர்கள் போன்ற பதவிகள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அப்படி இருக்கக்கூடிய பதவிகளை எல்லாம் உடனடியாக நிரப்பப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே உள்ள நரியம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திலே 2 மருத்துவர்களைப் போட்டிருக்கிறார்கள். அந்தத் தொகுதி முழுக்கமுழுக்க கிராமங்கள் கொண்டதாகும். அதிலே 2 டாக்டர்கள் போடப்பட்டிருந்தும், ஒரு பெண் மருத்துவர் நீண்ட நாட்களாக விடுமுறையில் இருக்கிறார்கள். இருக்கின்ற ஒரு ஆண் மருத்துவருக்கும் அடிக்கடி நோய் ஏற்பட்டு, அவரும் அடிக்கடி விடுமுறையில் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, மருத்துவ மனைக்கு வரக்கூடிய நோயாளிகள் மருத்துவர் இல்லாததால் திரும்பிப் போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்தமாதிரியான ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணியாற்றுகின்ற மருத்துவர்கள் அடிக்கடி விடுமுறையில் செல்லாதவாறு, அவர்கள் ஒழுங்கான முறையிலே பணியாற்றுகின்ற வகையிலே, ஏழை மக்களுக்கு வசதி அளிக்கின்ற முறையிலே மருந்து, கருவிகளை அதிகமாகக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே பணிபுரியும் மருத்துவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தர கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், நகரசபைகளிலும், கிராமங்களிலும் பணியாற்றுகின்ற சானிடரி இன்ஸ்பெக்டர்கள், ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தைக் குறைக்க வேண்டும். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளை தினமும் சுற்றிப்பார்க்க உத்தரவு இடவேண்டும். இங்கே இருக்கின்ற அதிகாரிகள் முதற்கொண்டு, அமைச்சர்கள் முதற்கொண்டு அவர்கள் வாங்குகின்ற சம்பளத்தைவிட இந்த சானிடரி இன்ஸ்பெக்டர்கள், நகரசபைகளிலே, முனிசிபாலிடிகளிலே பணியாற்றுகின்றவர்கள் அதிகமான பணம் வாங்குகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, வாணியம்பாடியிலே உள்ள சானிடரி இன்ஸ்பெக்டர் வரும்போது எந்தவிதமான வசதியும் இல்லாதவர், இப்போது மாளிகை கட்டிக்கொண்டு உல்லாசமாக வாழ்கின்றார் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இந்த பால்வினை நோய் ஒழிப்புத் திட்டம் என்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய திட்டமாகும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னதாக

இந்த பால்வினை நோயினால் பாதிக்கப்பட்டு வருகின்றவர்கள் மேல் கண்டிப்பாக சட்டப்படி தண்டனை கொடுத்து அவர்களுக்கு சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ விதித்து, பின் அவர்களுக்கு இந்த நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். அவ்விதம் செய்தால்தான், இந்த பால்வினை நோய் ஒழியும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில், கடந்த காலத்தில் கண் ஒளி வழங்கும் திட்டம் என்ற ஒரு திட்டம் மிகவும் மோசமாக நடந்து கொண்டிருந்தது. குறிப்பாக, அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால், கண்பார்வை பெற்றவர்களை விட கண் பார்வை இழந்தவர்கள்தான் அதிகம் இருக்கிறார்கள். அவர்களுக்கு கண் பார்வை பெறுவதற்கான நல்ல கண்ணாடி வழங்கப்பட்டதா அல்லது சாதாரண ஏதாவது பொம்மைக் கண்ணாடி வழங்கப்பட்டதா என்பதை இந்த நேரத்தில் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும். இந்த கண் ஒளித் திட்டத்தின் மூலம் எத்தனை பேர்கள் கண்ஒளி இழந்திருக்கிறார்கள் என்பதை பரிசோதனை செய்து, ஒரு அறிக்கை தயாரித்து, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்கள் பேச கடமைப்பட்டிருக்கிறேன். என் தொகுதியில் உதயேந்திரம் — வடச்சேரி — மேல்பட்டி ஆகிய ஊர்களில் அரசு மருந்தகங்கள் ஏற்படுத்தித்தர கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு வார்த்தை. பேரணாம்பட்டு தொகுதி மிகப் பெரிய தொகுதி. கிராமங்களை முழுக்க முழுக்க உள்ளடக்கிய தொகுதி. பேரணாம்பட்டில் மருத்துவமனை இல்லை. தோல் பதனிடும் தொழிலாளர்களும், பீடி சுற்றும் தொழிலாளர்களும் தங்கள் நோய்களுக்கு சிகிச்சைபெற பத்து மைல் தூரத்திலுள்ள குடியாத்தத்திற்குச் செல்ல வேண்டும், இல்லையென்றால் 15 மைல் தூரத்திலுள்ள ஆம்பூருக்குச் செல்ல வேண்டும். இதை நான் பல முறை எடுத்துச் சொல்லி அதிகாரிகளைக் கேட்டபோது பலவிதமான திட்டங்களைச் சொல்லி என்னைக் குழப்புகிறார்கள்.

அந்தத் தொகுதியிலுள்ள எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் 'இந்தச் சிறு பையனால் நிச்சயமாக பேரணாம்பட்டுக்கு மருத்துவ மனையை வாங்க முடியாது; நாங்கள்

[திரு. இ. தமிழரசன்] [1978 மார்ச் 25

கடந்த 15 வருஷ காலமாக அசைத்துப் பார்த்துவிட்டோம், அசைக்க முடியவில்லை' என்ற சவாலை விட்டிருக்கிறார்கள். அந்தச் சவால் எனக்கு விட்ட சவால் அல்ல; இந்தத் துறையில் இருக்கிற அதிகாரிகளுக்கு விட்ட சவாலாக அதனை ஏற்றுக்கொண்டு பேரணாம்பட்டு, தொகுதியின் தலைநகராக இருக்கும் காரணத்தால் அங்கு ஒரு மருத்துவ மனையை நிச்சயமாக இந்த அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நடமாடும் மருத்துவ மனைகள். உண்மையிலேயே கிராமங்களுக்குச் செல்லுகின்றனவா, செயல்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க மக்கள் குழுக்களை நிர்மாணிக்க வேண்டுமென்று கேட்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமருகிறேன். வணக்கம்.

திரு. மு. கருணாநிதி: பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை விவாதம் முடிவுற்று அடுத்து அறநிலையத் துறை வருகிறது. அதற்குப் பிறகு சட்டமன்றத் துறை மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. இவைகளைப் பற்றியெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி தலைவர்கள் முடிவு எடுத்ததற்கு நேர்மாறாக இங்கு காரியங்கள் நடைபெறுகின்றன. தங்களைக் கேட்டால் இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேச பாக்கி இருப்பதாகச் சொல்லுகிறீர்கள். மானியம் காலையிலேயே முடிவுற இருக்கிறதா இல்லையா என்று சொன்னால் அதற்கேற்றபடி எங்கள் நிகழ்ச்சி நிரலை வகுத்துக் கொள்ள ஏதுவாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பலர் பேச விரும்பி, என்னையும் வற்புறுத்தி, சட்டப் பேரவைத் தலைவர் அவர்களிடமும் வற்புறுத்திய தன் விளைவாகத்தான் உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்று முற்பகலில் முடியாவிட்டால் தொடர்ந்து பிற்பகலிலும் நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் அனைவரும் ஒத்துழைத்தால் உபயோகமாக இருக்கும்.

1978 மார்ச் 25]

திரு. மு. கருணாநிதி: நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். எவ்வளவு நேரமானாலும் அவையில் வீற்றிருந்து மானியங்களை நிறைவேற்றித்தர எதிர்க்கட்சி தயாராக இருக்கிறது. ஆனால் இருக்கிற சங்கடம் என்னவென்றால், நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று ஒவ்வொரு மானியமும் நீட்டப்பட்டுக் கொண்டே போகுமானால், அறநிலையத் துறை, சட்டமன்றத் துறை இவைகள் எல்லாம் கில்லெட்டினுக்கு ஆளாகுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. அவை கில்லெட்டினுக்கு ஆளாகாமல் பாதுகாக்க வேண்டுமென்றுதான் இந்தப் பிரச்சினையை எழுப்புகிறோம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இது அன்றைய தினமே பேசப்பட்டது. இவற்றுக்கு கில்லெட்டின் வரக் கூடாது என்றுதான் நாங்களும் விரும்புகிறோம். பேச விரும்புகிறவர்கள் காவல் துறை மானியத்தில் மூன்று நாட்களை எடுத்துக் கொண்டதன் விளைவாகத்தான் ஒவ்வொரு மானியமும் தள்ளிக் கொண்டே போகிறது. முன்பே கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்தால் பயனுடையதாக இருந்திருக்கும். இதிலே விளக்கமாகப் பேசி தங்கள் கருத்துக்களை விளக்கமாக வெளிப்படுத்த வேண்டுமென்றுதான் அனைவரும் விரும்புகிறார்கள். அதற்கு நாங்களும் ஒத்துழைக்கத் தயார். அதே போல் ஒத்துழைக்கத் தயார் என்று சொன்ன எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றி.

திரு. மு. கருணாநிதி: இந்தக் கருத்துரையாடல்களை வைத்து நிகழ்ச்சி நிரலைப் பற்றி தாங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் நாலைந்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். அவர்கள் பேசி முடித்து விரைவில் விவாதம் முடிந்துவிட்டால் மாலை இருக்காது. அப்படி இல்லை என்றால் மாலையிலும் வைத்துக் கொள்ளலாம்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர், இந்த மன்றத்தில் இன்றைய தினம் நடைபெற

இருக்கிற நிகழ்ச்சிகள் என்ன என்ன என்று வெளியிடப்பட வேண்டும் என்றுதான் கேட்டார்கள் என்று நினைக்கிறேன். சொல்ல வேண்டிய அந்த பதிலை 1-30 மணிக்குள் சொல்ல வாய்ப்பு இருந்து பதில் சொல்லி முடித்துவிட்டால் அதற்குப் பிறகு எத்தனை மணி நேரத்திற்கு துணைத் தலைவர் அவர்கள் மறுபடியும் கூட்டத்தைத் தொடங்க விரும்பினாலும் மன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு அதற்கேற்ப அறநிலையத் துறை, பொது நிர்வாகம் போன்றவைகளையும் விவாதித்து முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். துணைத் தலைவர் அவர்கள் கருத்தை வெளியிடலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த மானியம் எப்பொழுது முடிவடையும்? அடுத்து அறநிலையத் துறை மானியத்திற்காக எத்தனை மணி நேரம் ஒதுக்க இருக்கிறோம்? அதற்கு அடுத்தாற்போல் சட்ட மன்றம், மற்ற மானியங்கள் எடுக்கப்படுகிறபோது ஒவ்வொரு மானியத்திற்கும் எவ்வளவு நேரம் ஒதுக்க இருக்கிறோம் என்பதை விளக்கமாகச் சொன்னால் வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காலை நிகழ்ச்சிகளை ஒரு மணிக்கு முடித்துக்கொண்டு மாலை...!

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச இருக்கின்ற உறுப்பினர்களைப் பேச அனுமதித்து விட்டு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தம்முடைய பேச்சை தொடரும்படி ஏற்பாடு செய்யலாம். அதற்குப் பிறகு அப்போதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு நேரம் இருந்தால் பதில் சொல்லலாம். அப்படி நேரம் இல்லையென்றால் மாலை 4 மணிக்கு கூடுவதற்கு துணைத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களானால் அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலை வைத்துக் கொள்ளலாம்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். காலையிலே கேள்வி நேரமும் நீக்கப்பட்டு, அந்த ஒரு மணி நேரமும் எடுத்துக் கொள்ளப்பட்டு அதற்குப் பிறகு அதையொட்டிய பிரச்சினைகள் வருகிற அரை மணி நேரமும் எடுத்துக்கொள்ளப்பட்டு வேறு எந்த

மானியத்திற்கும் இல்லாத முறையில், வேறு எந்த ஆண்டும் இல்லாத வகையிலே இந்த ஆண்டு ஏறத்தாழ 20 உறுப்பினர்களுக்கு மேல் பேசியிருக்கிறார்கள். இன்னும் நேரத்தை வளர்த்திக்கொண்டு போக வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது முக்கியமான மானியம், அதிகமான உறுப்பினர்கள் பேச விரும்புகிறார்கள். பேரவை மாலை 4 மணிக்குக் கூடும்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் நான் 10 மணிக்குள் பேசி முடித்து அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு 12-15 மணி அளவிலேயாவது என்னைப் பேச அழைத்ததால்தான் நான் பேசி முடிக்க முடியும், இல்லாவிட்டால் 1-15 மணிக்குப் பேசி விட்டு மறுபடியும் மாலையிலே பேச வேண்டுமென்று சொன்னால் பேசுவதற்கு விரும்பாமல், பேசுவதற்கான ஆர்வமே கூடப் போய் அதற்குப் பிறகு எடுத்துச் சொல்கிற கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியாமல் போய்விடும். ஆகவே, 12-15 மணிக்காவது என்னைப் பேச அழைக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேச வேண்டுமென்ற நிலைமை வந்துவிட்டது. அவர்கள் 2, 3 பேர்கள் இன்னும் பேச வேண்டியிருக்கிறது, அவர்களை பேசவிட்டால் மிகவும் பெரிய ஒத்துழைப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுக்கப்பட்டதைப்பற்றி அன்றைக்கு அறிவித்தார்கள். அது சம்பந்தமாக மறுபடியும் சொன்னால் பயனுள்ளதாக இருக்கும். அது மாத்திரம் அல்ல. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்டுக்கொண்டதைப் போன்று அவர்களை முதலிலே பேச அனுமதித்துவிட்டு சீக்கிரமாக முடித்தால் நல்லது. நேரத்தை ஒழுங்குபடுத்தாமல் மேலும் அதிகரித்துக் கொண்டு போவது நல்லதல்ல. ஏற்கனவே அலுவல் ஆய்வுக் குழுவிலே அறிவித்த முடிவுகளைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் பற்றிய விளக்கம் தேவை.

திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியம் மிக முக்கியமானது. ஆகவே அதிகமான உறுப்பினர்கள் பேசவேண்டுமென்று விரும்பக்கூடிய இந்த நிலையிலே பேசுவதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. அவர்கள் தாராளமாகப் பேசலாம். அதைப் பேசவிட்டு அதற்குப் பிறகு இருக்கக் கூடிய மானியங்கள் அறநிலையம், சட்டமன்றம் பற்றியது, இதைவிட முக்கியமான மானியம் அது என்பதை மறந்து விடக் கூடாது. இவைகளையெல்லாம் அலட்சியப்படுத்தக் கூடிய முறையில் ஒரே நாளிலே இந்த இரண்டு துறைகளையும் எடுத்துக்கொள்ள மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அனுமதிக்கக் கூடாது.

அந்த அறநிலையத்துறை மிகவும் ஊழல் நிறைந்த துறை, இரண்டு நாட்கள் வேண்டுமென்றாலும் அப்படிப் பேசுவதற்குக் கண்டிப்பாக அனுமதிக்க வேண்டும். அதைப்போலவே லெஜிஸ்லேச்சர், இதையெல்லாம் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவகாசம் இல்லை, ஆகவே, இரண்டு மணி நேரம், ஒரு மணி நேரத்தில் முடித்து விடுவோம் என்ற அளவிற்கு முடிவுக்கு வரக்கூடாது என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்லெண்ணத்திற்கு நான் நன்றி கூறுகின்றேன். எந்த மானியக் கோரிக்கையையும் அலட்சியப்படுத்தி விவாதத்திற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பில்லாமல் செய்யவேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்குக் கிடையாது என்பதை தயவு செய்து அவர்கள் மனப்பூர்வமாக நம்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாட்கள் போதவில்லை என்பதுதான் இங்கேயிருக்கின்ற நமக்கு சோதனையான நிலைமையே தவிர வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் பதில் சொல்ல விரும்பி, 160 நிமிடங்கள் பேசியதாக மற்றவர்கள் சொன்னாலும் என் அளவிற்கு இன்னும் பதில் சொல்ல வேண்டியிருந்தது என்பதையும், அடுத்த கோரிக்கைக்குச் சென்று எல்லோரும் ஒத்துழைத்து நிறைவேற்றினோம் என்பதையும் நினைத்துப் பார்த்தால் இது முக்கியம், இது முக்கியம் அல்ல என்று நாங்கள் எடுத்துக்கொள்ளவில்லை, அனைத்துமே முக்கியம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எதில் அதிகமாக விளக்கம் பெற வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதில் விளக்கங்களைத் தெரிந்துகொள்ளவும், அல்லது உண்மை மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்ற அளவிற்கு கருத்து சொல்வதிலும் எங்களுக்கு நிச்சயமாக ஆர்வம் உண்டு. அதைக் கேட்பதிலும் அக்கறை உண்டு என்று சொல்லி, எப்படி எல்லோரும் வழிவகுக்க முற்படுகிறார்களோ அதற்கு அரசு கூடுமானவரையில் முடிந்தவரையில் நல்ல மனத்தோடும், பூர்ணமான ஒத்துழைப்போடும் எங்களுடைய கடமையைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பேராசிரியர் அவர்களை 12-30 மணியிலிருந்து பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் சபை நான்கு மணிக்குக் கூடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொது சுகாதாரம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது பேச அனுமதி தந்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் மக்கள் அனைவரும் சுகாதாரத்தோடு வாழ வேண்டுமென்றால் அத்தியாவசியமாக நாம் குடிக்கின்ற தண்ணீர் சுத்தமாக அனைவருக்கும் கிடைக்கவேண்டும். அதைப்போலவே நம்முடைய சுற்றுப்புறமும் சுகாதாரத்தோடு சுத்தமாக விளங்க வேண்டும். ஆனால் சென்னையை எடுத்துக்கொண்டால் இப்பொழுது நாம் குடிக்கின்ற தண்ணீர் சுத்தமாகக் கிடைக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக, குழாயைத் திருப்பினால் வருகின்ற அந்தத் தண்ணீர் மஞ்சள் நிறமாகவும், கறுப்பு நிறமாகவும், வெள்ளை நிறமாகவும் இப்படிப் பல வர்ணங்களிலே வருகிறது.

அதற்கு அடிப்படைக் காரணம் பல ஆண்டுகளுக்கு முன்னதாகக் குழாய்கள் பொருத்தப்பட்டு, அந்தக் குழாய்களை மாற்றியமைக்காத காரணத்தால் நாம் குடிக்கின்ற தண்ணீர் நல்ல நிலையிலே கிடைக்கவில்லை என்ப... த நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ... த குடி தண்ணீரின் காரணமாகத்தான் இன்றைக்குச் ... சன்னையிலே மஞ்சள் காமாலை போன்ற நோய்களும், காலரா, மலேரியா போன்ற நோய்களும் பரவியிருக்கின்றன.

[திரு. அ. செல்வராசன்] [1978 மார்ச் 25

அதைப்போலவே கிராமப்புறங்களை எடுத்துக்கொண்டால் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் அவர்களுக்குச் சரியாகக் கிடைக்காததால் அங்கேயெல்லாம் கிணறுகளிலிருந்தும், குளங்களிலிருந்தும் தண்ணீரை எடுத்துப் பயன்படுத்துகிறார்கள். அந்தத் தண்ணீர் சுத்தமாகக் கிடைப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு, குறிப்பாக எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரைத் தருவதற்காகத் தக்க ஏற்பாடுகளையெல்லாம் செய்து அது இப்பொழுது நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். அது தொடர்ந்து செயல்பட்டு கிராமப்புறங்களில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைக்க இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

துப்புரவுத் துறையை எடுத்துக் கொண்டால், சென்னையிலே திராவிட முன்னேற்றக் கழகம் மாநகராட்சி மன்றத்தை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் நாங்களெல்லாம் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருந்த நேரத்தில் எங்கெங்கு கழிவு நீரை அகற்றவேண்டுமோ அங்கெல்லாம் பக்கத்திலே சிறு கிணறுகளை அமைத்து அந்தக் கிணறுகளின் மூலம் தண்ணீரை அனுப்பி அந்தக் கழிவிடங்களைச் சுத்தம் செய்து வந்தது. அந்த நிலைகளெல்லாம் இப்பொழுது மாற்றப்பட்டிருப்பதை தயவு செய்து மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–10]

சென்னையிலே இப்பொழுது எங்கு பார்த்தாலும் கொசுக்கள், ஈக்கள் தொல்லை அதிகமாகி, அவைகள் ஏராளமாகப் பரவிக் கொண்டே போகின்றன. அதை மாற்றுவதற்கு இந்த அரசு தக்க முயற்சி எடுக்க வேண்டும். இந்த நிலைமைகளையெல்லாம் நான் மாநகராட்சிமன்ற அதிகாரிகளைச் சந்தித்துக் கூறியிருக்கிறேன். முன்பெல்லாம், கொசுக்களை, ஈக்களை அகற்ற 'பாரத்தீன்' என்ற மருந்தை உபயோகப்படுத்தி வந்தார்கள். அந்த நிலை இப்பொழுது அகற்றப்பட்டு வருகிறது.

குடி நீரை எடுத்துக் கொண்டால், பம்பாய், கல்கத்தா, போன்ற நகரங்களில், நபர் ஒன்றுக்கு 60 காலன் நீர் கொடுப்பதாக நான் அறிகிறேன். ஆனால், இப்பொழுது சென்னையில் 16 காலன் கூட கிடைக்காத நிலையிருந்து வருகிறது. அதை நீங்கள் பரிசீலித்து நபர் ஒன்றுக்கு 50 காலன் தண்ணீராவது

1978 மார்ச் 25] [திரு. அ. செல்வராசன்]

கொடுக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களையெல்லாம் நாங்கள் மாநகராட்சிமன்ற உறுப்பினர்களாக இருந்து பரிசீலனை செய்து, டெல்லிக்கும் கல்கத்தாவுக்கும் லெட்டர்கள் எழுதி, அங்கேயுள்ள நிலைமைகளை அறிந்திருக்கிறோம்.

அதேபோலவே, இப்பொழுது சுகாதாரத் துறை, துப்புரவுத் துறை இவற்றை எடுத்துக்கொண்டால், ஏன் சரியாக இயங்க முடியவில்லை என்றால், ஒவ்வொரு வட்டத்திற்கும், ஒவ்வொரு தொகுதிக்கும் முன்பு எத்தனை ஆட்களை வைத்திருந்தார்களோ, அத்தனை ஆட்களையே இப்பொழுதும் வைத்துத்தான், பொருட்களை வைத்துத்தான் வளர்ந்து வருகின்ற சென்னையிலே பணியாற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே, ஆட்களுக்குப் பஞ்சம் இல்லாமல் அமர்த்தினால்தான், சுகாதாரமிருக்கின்ற வகையில் பணியாற்ற முடியும்.

அதேபோல், கொடுக்கின்ற சாமான்களைச் சரிவரக் கொடுப்பதில்லை. முன்பெல்லாம் தெருக்களில், சிறுநீர் கழித்தல், மலம் கழித்தல் போன்ற நிகழ்ச்சிகள் சிறுவர்களால் ஏற்படும்போது, அங்கெல்லாம் பிளீச்சிங் பவுடர் போட்டு சுத்தமாக வைப்பார்கள். இப்பொழுது மாநகராட்சி அதிகாரிகளைக் கேட்டால், பிளீச்சிங் பவுடரே வாங்குவதில்லை, சுண்ணாம்பும் சரியாகத் தருவதில்லையென்றால் நாங்கள் எப்படிப் பணியாற்றுவது என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குறைகளை நீக்க அரசு மாநகராட்சி அதிகாரிகளுக்கு வேண்டிய பொருள்களை வாங்க பணம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1913 ஆம் ஆண்டு மாட்லி என்ற வெள்ளையரால் தீட்டப்பட்ட திட்டமாகும், சென்னைக்குக் குடிநீர் வழங்கல் திட்டமும், பாதாளச் சாக்கடை திட்டமும். 1959 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக்கழகம் மாநகராட்சியிலே ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த நேரத்தில், நாங்கள் எல்லாம் மேயராக இருந்த நேரத்தில், மாநகராட்சி மன்றத்தை ஆட்சி செய்கிற நேரத்தில், மிகத் தெளிவாக விரிவுபடுத்தி வந்தது. அது மீண்டும் செயல்பட இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, தண்ணீர் குழாய்களை எடுத்துக்கொண்டால், என்னுடைய துறைமுகத் தொகுதியில், தண்ணீர் சரியாகக் கிடைப்பதில்லை. அதைப் போலவே, பாதாளச்

சாக்கடைகள் சரியாக இல்லாமல் சில்ட் என்று சொல்வார்களே, அந்த சில்ட் சரியாக வராமல், மிக அசுத்தமாக இருந்து வருவதை நாம் பார்க்கிறோம்.

குப்பைத் தொட்டிகளிலே குப்பைகளை இப்பொழுது சரியாகப் போடுவதில்லை. முன்பெல்லாம், குப்பைத் தொட்டிகளிருந்தால் குப்பை வாருகின்ற லாரியோ, வண்டியோ வராவிட்டால், அந்தக் குப்பைகளை, குப்பைத் தொட்டியில் போட்டு, அடுத்தநாள் அகற்றிவிடுவார்கள். அந்த நிலை இல்லாத காரணத்தாலே, இப்பொழுது குப்பைகள் வீதியிலே பறந்து தெருக்களை அசுத்தமாக்குகிற நிலையிருக்கிறது. ஆகவே, அதை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பொது மருத்துவ மனையை எடுத்துக்கொண்டால் என்னுடைய தொகுதியிலே ஸ்டான்லி ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கே, நோயாளிகள் தங்களைப் பாதுகாக்கச் செல்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு படுக்க இடம் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அவர்களெல்லாம் தரையிலே, கிழிந்த பாயிலே படுக்க வேண்டிய நிலையில், தகுந்த சிகிச்சை இல்லாமலிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையிலேதான் மருத்துவ மனை இயங்கிவருகிறது. அவைகளையெல்லாம் நீங்கள் அருள் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மக்கள் சுகாதாரத்துடன் வாழ நாம் சென்னையிலே உள்ள பூங்காக்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அந்தப் பூங்காக்கள் எல்லாம் இப்போது சுடுகாடாக மாறிவருவதைப் பார்க்கிறேன். என்னுடைய தொகுதியான துறைமுகப் பகுதியிலே மாடி பூங்கா என்று ஒன்று இருக்கிறது. அதற்கு நாம் முன்பெல்லாம் பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து அங்கே வாழ்கின்ற மக்கள் நல்ல காற்று பெறவும் வசதிகளோடு வாழவும் ஏற்பாடு செய்தோம். அந்த நிலைமை இன்று மாறியிருக்கிறது. எனவே அருள் கூர்ந்து பூங்காக்களை எல்லாம் மிகச் சுத்தமாக பராமரிக்க வேண்டும். பூங்காக்களில் டி. வி. போன்றவைகளை அமைத்து மக்களுக்கு நல்ல செய்திகள் கிடைக்க வழிசெய்ய வேண்டும்.

ஆவடியிலே 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்ட 1975-லே திட்டமிடப்பட்டது. அதை உடனடியாக கட்டித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பூந்தமல்லியிலே ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. அதையும் கட்டித் தரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பினைத் தந்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ மானியக் கோரிக்கையை வரவேற்பதோடு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு மருத்துவத் துறை தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே எந்த அளவுக்கு மாறியிருக்கிறது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இந்தத் துறை எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறதோ அந்த மாற்றம் தான் இந்த நாட்டினுடைய மாற்றம் என்பதை நாம் கவனத்திலே வைத்துக் கொண்டாக வேண்டும். இந்தத் துறையினுடைய மாற்றத்தின் அடிப்படையிலேதான், ஒரு நாட்டு மக்களுடைய உடல் நலனை எந்த அளவிற்குப் பேணிக் காக்கிறோமோ அந்த அளவுக்கு இந்த நாடு மாறியிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகும். அந்த வகையில் பல்வேறு மாற்றங்களை ஏற்பாடு செய்யவேண்டுமென்ற வகையில் இன்றைக்கு மருத்துவத் துறையிலே இந்த இலாகாவை கையிலே வைத்துக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இதிலே மிகுந்த ஆர்வத்தைக் காட்டி பல்வேறு புதிய சாதனைகளை உருவாக்க வேண்டும் என்ற வகையிலே பல்வேறு திட்டங்களைத் தீட்டிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் அப்படிச் செயல்பட்டுக் கொண்டு வருகிற அந்தச் செயல்களின் காரணமாக நான் இன்றைக்கு மருத்துவத் துறையிலே பல்வேறு வேறுபாடுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இந்தத் துறை அவர்களுடைய கைக்கு வருவதற்கு முன்னால், ஓராண்டுக்கு முன்னால், இரண்டாண்டுக்கு முன்னால் இந்தத் துறை எந்த அளவுக்கு இருந்தது என்பதை நாடு நன்றாக அறியும். இந்தத் துறையை இன்றைக்கு நவீனப்

படுத்துகிற வகையில், புதுமைப்படுத்துகிற வகையில் பல்வேறு சாதனைகளை, இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிற முதல்வர் புரட்சித் தலைவர், அவர்களைப் பாராட்டியாக வேண்டும். நான் உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அரசு மருத்துவமனைகளிலே பணிபுரிகின்ற மருத்துவர்கள் எந்த நிலையிலே இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கவனித்தாக வேண்டும்.

உதாரணத்திற்கு எடுத்துச் சொல்கிறேன்; சென்னையிலே அரசினுடைய பெரிய மருத்துவமனை இருக்கிறது. இந்த மருத்துவமனை இன்றைக்கு பல்வேறு வகையிலேயும் முன்னேறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனால் நீண்ட நெடுங்காலமாக இந்த மருத்துவமனை எந்த நிலையில் இருந்தது என்பதை நாம் கவனித்தாகவேண்டும். சென்ற ஆண்டு மருத்துவ மானியத்தில் நான் பேசும் போது குறிப்பிட்டேன். சென்னையிலே இருக்கிற அரசு மருத்துவமனையில் கூவத்தினுடைய தண்ணீர் வருகிறது என்று குறிப்பிட்ட நேரத்தில் சில பத்திரிகைகளில் இருக்கிறவர்கள் கூட கொட்டை எழுத்துக்களிலே போட்டார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர் பகிரங்கமாக குற்றம் சாட்டினார்கள் என்று பகிரங்கமாக போட்டார்கள். ஆனால் அன்றைக்கு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது உடனடியாக அந்தக் குறை நிவர்த்திக்கப்படும் என்று அறிவித்த சில நாட்களுக்குள் அந்தக் குறை வேகமாக தீர்க்கப்பட்டது. ஆனால், தீர்க்கப்பட்டாலும் நான் இன்றைக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்வேன், இந்த மானியத்தின் மீது பேசுகிற நேரத்தில் சென்னையிலே உள்ள மருத்துவ மனையை நாம் எந்த அளவுக்குக் கவனிக்கவேண்டும் என்பதை நினைவு படுத்தியே ஆகவேண்டும்.

[பிற்பகல் 12-20]

நான் இதை நினைவுபடுத்தக் காரணம், ஏதோ அரசுத் தரப்பில் இருக்கிற, ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் அரசின் மருத்துவத் துறையைப் பற்றிக் குறை சொல்லிப் பேசுகிறார் என்று கருதக்கூடாது என்பதற்காகத்தான். இதிலே இருக்கிற சில குறைபாடுகளை எல்லாம் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், அவை திருத்தப்படவேண்டும் என்கிற

அடிப்படையிலேதான் சொல்கிறேனே தவிர குறைகளைச் சொல்கிறபோது கேட்கிற மனோபாவம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற காரணத்தாலே, பல்வேறு குறைகளைச் சுட்டிக் காட்டுகிற போது அவற்றிலே ஆர்வம் காட்டி, அவற்றை நிவர்த்தி செய்வதாலே சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

ஏற்கெனவே இருந்தவர்களுக்கு குறை சொன்னால் கோபம் வந்தது. சில நேரங்களில், நாம் குறைகளைச் சுட்டிக்காட்டினால் நான் வைத்து இருக்கும் இலாகாவிலா குறை சொல்கிறாய், யாரடா இவன் என்று கேட்டு இருப்பதை நான் மறக்கவில்லை. குறைகளைப் பற்றிச் சொன்னால்தான் அதைப் பற்றி விவாதித்தால்தான், குறைகளைக் களைய முடியும் என்ற எண்ணத்திலே முதலமைச்சர் அவர்களும் குறைகளைக் கேட்டு, அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதை நிவர்த்தி செய்யவேண்டும் என்ற எண்ணத்திலே செயல்படுவதால், இன்று பல்வேறு வகையில் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த மாற்றம் எல்லா இடத்திலும் தேவை என்பதால் நான் சொல்லிக்கொள்கிறேன்.

சென்னையில் இருக்கும் மருத்துவமனையைப் பொறுத்த வரையில், சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். தமிழ் நாட்டில் அது பெரிய மருத்துவமனை. அங்கே அனுமதிக்கப்பட்டிருக்கிற பொதுமக்களைப் பார்த்தால் அவர்களை எல்லாம் கீழே உட்கார வைத்து, அதை ஒரு பெரிய காய்கறி சந்தையைப் போல் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அதை மாற்றுகிற வகையில் அங்கே இருக்கும் மருத்துவ அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த மருத்துவமனையைச் சிறந்த மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில், என்ன நிலைமை இருக்கிறது என்பதை நான் சொல்லியாக வேண்டும். அங்கே இருக்கும் மிகப் பெரிய டாக்டர்கள் தங்கள் கையிலே அங்கேயிருக்கும் படுக்கைகளையெல்லாம் வைத்துக்கொண்டு, தாங்கள் இஷ்டப்பட்டவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டும், மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்ற நிலைமை இருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டு

[திரு. எஸ். ஆர். இராதா] [1978 மார்ச் 25

மானால். தஞ்சாவூரில் இருக்கும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. அங்கேயிருக்கும் 4–5 டாக்டர்கள், பெரிய டாக்டர்கள் என்ற பெயரில் இருப்பவர்கள், தங்கள் கையிலே அந்தப் படுக்கைகளை வைத்துக்கொண்டு அவர்கள் சேர்த்தால்தான் அந்த மருத்துவமனையில் சேர முடியும் என்ற நிலை இருக்கிறது. இதை அதிகாரிகள் கவனத்தில் வைத்துக்கொண்டு அந்த நிலையை மாற்றி, அந்த மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுவதில் எந்த அளவிற்குப் பரவலாக சீர்திருத்தம் செய்யமுடியுமோ அந்த அளவிற்குச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இதைச் சொல்கிறபோது, தஞ்சாவூரில் இருக்கும் இன்னொரு மருத்துவமனை பற்றியும் சொல்ல விரும்புகிறேன். ராஜா மிராசுதார் மருத்துவமனை தஞ்சாவூரில் இருக்கிறது. அது தஞ்சாவூர் மாவட்ட மருத்துவ மனையாக இருக்கிறது. ஆனால் வியாதி வந்த பல பேர் வியாதி போகிறதோ இல்லையோ, மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில்தான் சேரவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் இந்த மருத்துவமனையைப் பார்க்கிறபோது, வியாதி இல்லாதவர்கள் கூட அந்த ராஜா மிராசுதார் மருத்துவமனையில் சேர்ந்தால் அதில் பல பேர் சாகும் நிலை வந்து இருக்கிறது. இதை அதிகாரிகள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும், அதைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. அன்புழகன் : தலைவரவர்களே, ஆளும் கட்சி உறுப்பினர் வியாதி இல்லாதவர்கள் கூட சாகும் நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். வியாதி இல்லாதவர்களை ஏன் மருத்துவமனையில் சேர்க்கிறார்கள்? இந்தப் புதிய முறையை எப்போது உருவாக்கினார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தயவு செய்து, பேராசிரியர் அவர்களுக்கு நான் பதில் சொல்கிறேன் என்று நான் நினைக்கக்கூடாது. நான் அவர்களிடத்தில் மிகுந்த மரியாதை வைத்து இருக்கிறேன். நான் சொல்வதற்குக் காரணம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது எனக்கு நினைவு இருக்கிறது. பல பேர் வியாதி இல்லாமலேயே மருத்துவ மனையில் சேர்ந்து கொண்டு இருந்தார்கள், மீண்டும்

1978 மார்ச் 25] [திரு. எஸ். ஆர். இராதா]

மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், பல அமைச்சர்கள் வியாதி இல்லாமலேயே திடீர் திடீரென்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள், பத்திரிகையில் அவைகள் வந்து இருக்கின்றன. மருத்துவ மனையில் உட்கார்ந்து கொண்டு சொன்னார்கள், வியாதி வரவில்லை, ஆனால் சில நிலைமைகள் காரணமாக வந்து இருக்கிறேன் என்று சொன்னார்கள்.

திரு க. அன்பழகன் : அது கூட ஒரு வியாதிதான். என்ன வியாதி என்று ஆளும் கட்சி உறுப்பினருக்குத் தெரியாது. மருத்துவமனையில் படுக்காவிட்டால் அவர்களுக்கு உணவு கூட செல்லாது. ஆகவே, அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத்தலைவர் அவர்களே, என்னுடைய மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் மிக நல்ல கருத்தை இந்த நேரத்தில் நினைவுபடுத்தினார்கள். நீண்ட நாட்களாக இது எந்த வியாதி என்று கண்டுபிடிக்க முடியாமல் இருந்ததை இன்றைக்கு அவர்கள் பகிங்கரமாகச் சொல்லியிருக்கிறார்கள். சிலர் மருத்துவ மனையில் போய் படுத்தால்தான் வியாதி போகும் என்று எண்ணுகிறார்கள் ; அந்த நிலைமை இருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : அந்த நிலைமை இன்றைக்கும் இருக்கிறது. ஏதாவது ஒரு குறைவு இருக்கிறது. அவரவர் வீட்டில் இருந்து சாப்பிடுவதாக இருந்தால் சில சமயங்களில் அப்படிச் சாப்பிடுகின்ற உணவு கெடுதலாக இருந்தால், மருத்துவ மனையில் வந்து படுத்துக்கொண்டால் தான் அதைக் கட்டுப்படுத்த முடியும் ; ஆகையால் நீங்கள் மருத்துவ மனையில் வந்து படுத்துக்கொள்ளுங்கள் என்று மருத்துவர்களைச் சொல்கிறார்கள். மருத்துவ மனையில் படுத்துக் கொண்டு, வெளியே போகக் கூடாது என்ற நிலைமை ஆளுங் கட்சியில் இருக்கிறவர்களுக்கு இன்றைக்கும் இருக்கிறது. இந்தப் பழக்கம் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறது ; அது வேறு ; அதைப் பொதுவாக்க வேண்டாம்.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த வியாதியைப் பொதுவாக்க வேண்டாமென்று சொல்கிறார்கள். அந்த வியாதி இன்றைக்கு ஏற்பட்டதல்ல. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்

இருந்தே இருக்கிற வியாதி. இன்றைக்கு அது மாற்றப்படவேண்டும். (குறுக்கீடு—உங்களுக்கும் அது வரும்.) எனக்கு நிச்சயமாக அந்த வியாதி வராது. எனவே அந்த வியாதியைக் குறைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இன்றைக்கு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த மருத்துவ மனைகளைப்பற்றிச் சொல்லும்போது என்னுடைய குடந்தை தொகுதியைப்பற்றியும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே ஒரு மருத்துவ மனை இருக்கிறது. அந்த மருத்துவமனை இன்றைக்கு பல்வேறு தாலூக்காக்களுக்கு இணைந்தாக இருக்கிறது. அந்த மருத்துவமனை உடனடியாகச் சீர்படுத்தப்பட்டு, பல்வேறு பிரிவுகளை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் சில பிரிவுகள் உண்டாக்கப்பட்டதற்குப் பிறகுகூட, இன்னும் சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்த குறைபாடுகளையும் நீக்கி, அந்த மருத்துவமனையை நல்ல முறையில் செயல் படச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு மருத்துவமனைகள் பற்றிச் சொன்னார்கள். ஆனால் சென்னையிலே ஒரு மருத்துவமனை—மனநோய் மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனை எந்த அளவுக்கு நாட்டிலே பயன்படுகிறது என்பதை நினைவுகூர்ந்து பார்க்கிறேன். நான் அதை அரசியல் ரீதியாகச் சொல்கிறேன் என்று யாரும் எண்ண வேண்டாம். சில நேரங்களில் அது ஆளுங் கட்சிக்கு அது எந்த அளவுக்கு பயன்பட்டது என்பதை மறுக்கவில்லை.

2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பேராசிரியரை கட்டாயப்படுத்தி, திடீரென்று மனநோய் மருத்துவ மனைக்கு அனுப்பி விட்டார்கள். எனக்கு மனநோய் இல்லை என்று அவர் வாதாடிப் பார்த்தார். ஆனால், டாக்டர்கள் சொன்னார்கள், நீங்கள் வாதாடுவதைப் பார்த்தால் உங்களுக்கு மனநோய் இருக்கிறது என்று சொல்லி, உள்ளே வைத்துக் கொண்டார்கள். அந்த அளவுக்கு அந்த மருத்துவமனை பயன்படுகிறது.

அங்கே இருக்கிற சீர்திருத்தங்களைப் பார்த்தால் பல்லாண்டுகளாக எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் அந்த மருத்துவமனை இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. அதை

மாற்றி, அந்த மருத்துவ மனையை ஒரு புதிய மருத்துவ மனையாக, ஒரு சிறந்த மனநோய் மருத்துவ மனையாக, நல்ல முறையிலே நோயாளிகளைக் கவனிக்கும் ஒரு சிறந்த மருத்துவ மனையாக மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் பெரிய பெரிய டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களை சென்னையில் தான் பார்க்க முடியும் என்ற நிலை இருக்கிறது. ஏழை எளிய மக்களைப்பற்றி, கிராமப்புற முன்னேற்றம் பற்றி இன்றைக்குப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால், அந்த கிராமப்புற மக்கள் பெரிய டாக்டர்களைப் பார்க்க வேண்டுமென்றால் நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் செலவு செய்தால்தான் பார்க்க முடியும் என்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட பெரிய டாக்டர்களை சாதாரண ஊர்களுக்கெல்லாம் அனுப்பி, மக்களைப் பார்க்கும் நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிக் குறிப்பிடும்போது ஒன்றைக் கேட்பார்கள். இப்படிப்பட்ட பெரிய பெரிய டாக்டர்களை வெளியிலே அனுப்பினால் அவர்களுக்கு வசதியாக பல கருவிகள் பல்வேறு இடங்களில் கிடைப்பதில்லை என்று சொல்வார்கள், இங்கே பலரும் அப்படி குறிப்பிட்டார்கள். அந்தக் கருவிகளைக் காரணமாக வைத்துக்கொண்டு, அனுப்பக்கூடாது என்ற நிலையை மாற்றியாக வேண்டும்; மாற்றக்கூடாது என்பதற்கு கருவிகள் அடிப்படையல்ல என்பதைத் தெரிவித்து அவர்களை எல்லா மக்களும், சாதாரண மக்களும், ஏழை எளிய மக்களும், கிராமத்து மக்களும் பார்த்து சிகிச்சைப் பெறவும், பெரிய டாக்டர்களின் சேவை அப்படிப்பட்ட மக்களுக்கும் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இங்கே, குடும்பக் கட்டுப்பாடு பற்றி பேசப்பட்டது. இந்த குடும்பக் கட்டுப்பாட்டில் அரசாங்கத்தின் இன்றைய நிலைமை தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசு தன்னுடைய நிலையை சொல்லிவிட்டது. மத்திய அரசு தன்னுடைய நிலையைத் தெரிவித்திருக்கிறது.

குடும்பக்கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் கட்டாய அறுவைச் சிகிச்சை இல்லை என்று அறிவித்திருக்கிறோம். ஆனால், பிரச்சாரத்தின் மூலம் மக்களே மனமுவந்து வந்து

அறுவை சிகிச்சை செய்தால் அவர்கள் உரிய பலனை அடைவதற்கு இன்று திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அதை அனைவரும் வரவேற்க வேண்டும். நான் அதை வரவேற்கும் போது என் நினைவில் இருக்கிற ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்னாள் குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சையில் நடை பெற்றது. 13, 14 டாக்டர்கள் சேர்ந்து அறுவை சிகிச்சை செய்யாமலே பல பெயர்களைக் குறிப்பிட்டு, இவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்தோம் என்று காரணம் காட்டி, பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை மோசடி செய்த விவரம் இன்றைக்கும் அரசு இலாகாவில் இருக்கிறது.

[பிற்பகல் 12—30]

இரகசிய போலீஸார் மூலம் துப்பு துலக்கப்பட்டு கண்டு பிடிக்கப்பட்டது. விசாரித்தறிந்தபின் அங்குள்ள டாக்டர்கள் சிலர் குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப்பட்ட பின்னும் அங்கே யாரும் கைது செய்யப்படாத நிலை இருக்கின்றது. இதற்குக் காரணம் அங்குள்ள ஒரு டாக்டர், எம்.எல்.ஏ. ஒருவரின் மகன் என்று இருப்பதுதான் என்று சொல்லப்படுகிறது. இது மாதிரி ஊழல்களை எல்லாம் ஒழிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்வேன்.

அடுத்து, இன்றைக்கு நம்முடைய டாக்டர்கள் மிகச் சிறந்த டாக்டர்களாக மாற வேண்டுமென்று சொன்னால் அதற்கு நவீன முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும். 10 ஆண்டுகளுக்கு முன்னால் ,20 ஆண்டுகளுக்கு முன்னால் படித்துவிட்டு வெளியே வந்த டாக்டர்கள் கிராமப்புறத்தில் பழைய முறைகளிலேயே மருத்துவம் செய்துகொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே, 5 அல்லது 6 அல்லது 7 ஆண்டு காலத்திற்குள் அந்த டாக்டர்களை எல்லாம் கூப்பிட்டு அவர்களுக்கு புதிய முறைகளில் எப்படி எப்படி மருத்துவம் செய்ய வேண்டும் என்பதைக் கற்றுக்கொடுத்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வேன்.

அடுத்து இன்றைக்கு டாக்டர்களுக்கு வேலை இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. அதனை மாற்றுவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இன்றைக்கு பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிக்கின்ற அந்தப்பள்ளி

களிலே எல்லாம் மருத்துவத்திற்கென்று சிறு தொகையினை வசூல் செய்யப்படுகிறது. அந்தத் தொகையினை வைத்துக் கொண்டு ஒவ்வொரு கல்லூரியிலும் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு ஆயிரம் மாணவர்கள் இருக்கின்ற நிலைகளில் ஒரு மருத்துவ மனையினை வைத்துக்கொண்டு அந்த மாணவர்களின் உடல்நிலையை உடனுக்குடன் கவனிக்கின்ற அந்த நிலையினை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இதைச் சொல்கிற நேரத்தில் பல்வேறு கல்லூரிகளிலே உயர்நிலைப்பள்ளிகளிலே மாணவர்களின் உடல் நிலையினைக் கவனிக்கின்ற நிலை இல்லை. அவர்கள் ஆஸ்பத்திரிக்குத் தான் போக வேண்டு மென்ற நிலை இருக்கிறது. அதே நேரத்தில் தொழில்களைப் பார்த்தால் அங்கே டாக்டர்கள் இருந்து தொழிலாளரின் உடலைப் பேணும் நிலை இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களைக் கவனிப்பதற்குடாக்டர்களை நியமித்து இருக்கிறோமே அதே போல் கல்லூரிகளிலே பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களையும் கவனிப்பதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மணியடித்த காரணத்தினால் வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவரவர்களே, இந்தப் பேரவையின் முன்னால் அரசின் சார்பில் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துகளைச் சொல்லி கொள்ள நான் முன் வருகிறேன்.

மருத்துவத் துறை மக்கள் நல்வாழ்வுத்துறை ஆகியஇரண்டு துறைகளுக்குமாக ஏறத்தாழ 82 கோடி ரூபாய் என்ற அளவுக்கு மானியம் கேட்கின்ற இந்த நேரத்திலே அந்தத் துறையின் தேவைகளை, இன்றைய தேவைகள் என்று எடுத்துக்கொண்டு பார்த்தாலும் கூட கணக்கிட்டுப்பார்த்தால், மேலும் ஒரு 30 கோடி ரூபாய் தேவை என்ற அளவுக்கு நிலைமை இருந்தாலும் அதை ஒதுக்க முடியாத நிலையில், ரூபாய் 82 கோடியை மட்டும் ஒதுக்கி ஓரளவு கடமையைச் செய்ய முன்வருகிற அரசு சட்டசபையில் இந்த மானியத்தின் மீது பேசுவதற்காகாவது நேரத்தை அதிகமாக ஒதுக்க முன்வந்ததற்கு நான் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பணம் ஒதுக்க முடியவில்லை என்று சொன்னாலும் நேரத்தையாவது ஒதுக்கித் தரவேண்டும் என்ற நல்லெண்ணம் ஏற்பட்டதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1978 மார்ச் 25

'நோயற்றே வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற கருத்தும், 'நோய்க்கிடங்கொடேல்' என்ற கருத்தும், நோய் வரும் முன் தடுத்துக் கொள்வது நோய் வந்தபின் காப்பதைவிட நல்லது' என்ற கருத்தும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் மக்களால் பேசப்பட்டு வந்தாலும், உணரப்பட்டு வந்தாலும், மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவாகவும் நாகரீகத்தின் வளர்ச்சியினால் ஏற்படுகின்ற விளைவாகவும் நோய் பெருகும் சூழ்நிலை உருவாக்கவும் இருக்கின்றது. இதனால் மக்களின் வாழ்வு தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வகையிலேயும் மங்கிக் கொண்டுதான் வருகிறது என்பதை நாம் நினைத்திடாமல் இருக்க முடியாது.

அப்படி மங்கிக் கொண்டுவருகிற, வளம் இழந்து வருகிற மக்கள் வாழ்வினை, நோய்க்கு இடம் கொடுக்காத வாழ்வாக மாற்றுவதற்காக மருத்துவத் துறையும், நல்வாழ்வுத் துறையும் பல ஆண்டுகளாகப் பல வகைகளில் சிறப்பான பணியை ஆற்றிவந்திருக்கின்றன. அப்படிப்பட்ட சிறப்பான பணியாற்றினாலும் கூட மிகப் பெரிய துறைகளாக அமைந்திருக்கிற காரணத்தால் அவற்றில் பல குறைபாடுகள் ஏற்படத்தான் செய்யும். என்பதால், அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காகவும், அவை மேலும் ஏற்படாமல் தடுக்கவும் தான் இந்தத் துறைப் பற்றி பலரும் பேசுகிற அவசியம் ஏற்படுகிறது என்பதை நினைவூட்டுவது என் கடமை.

ஆனால் இந்தத் துறையைப் பற்றிப் பேசும்போது ஏற்கெனவே யாருக்கும் ஏற்படாத ஒரு எண்ணம் இன்றைய ஆட்சிக்காரர்களுக்குத் திடீரென்று ஏற்பட்டு, நகரங்கள், பெரு நகரங்கள் இவற்றில்தான் மக்கள் வரிப் பணம் எல்லாம் பாழ்செய்யப் படுகிறது இந்தத் துறையில் என்று குறிப்பிட்டு அங்கலாய்க்கிறார்கள். கிராமங்களில் உள்ள மக்களுக்கு இதுகாறும் ஏதும் செலவழிக்கப்படவில்லை என்ற எண்ணம் ஏற்படுகிற வகையில், இதுவரை கிராமங்களைக் கவனிக்கவில்லை, நாங்கள்தான் கிராமங்களைக் கவனிக்கப்போகிறோம் என்று அறிக்கையில் அவர்கள் தெரிவித்திருப்பது உண்மையில் இன்றைக்கு உள்ள நிலையை எடுத்துக்காட்டுவது அல்ல.

அப்படி ஒரு கருத்தோட்டத்தை மக்களிடம் ஏற்படுத்தி விட்டால் மக்கள் திருப்தி அடையலாம் என்றுதான் எண்ணுகிறார்களே தவிர அவை நடைமுறையில் எந்த வகையிலும்

1978 மார்ச் 25] [திரு. க. அன்பழகன்]

உண்மையல்ல என்பதை புள்ளிவிவரங்களோடு நான் வாதிட முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நமது நிதி அமைச்சர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தது இது. நவீன மருத்துவ வசதிகளைப் பெறுவதில், மாநிலத்தில் மிகப் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் வசிக்கிற எந்தவொரு பரம ஏழையும்—சாதாரண ஏழை கூட அல்ல, பரம ஏழை—நகரவாசிகளுக்கும் வசதி பெற்றோருக்கும் இருக்கும் அதே வாய்ப்பினை அடைய வேண்டும், இதுதான் நமது இலட்சியம் என்று தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) நாஞ்சில் மனோகரன் என் நண்பர். அவர்கள் இன்னும் இருபது ஆண்டுகள் நிதி அமைச்சராக இருந்தாலும் அந்த நிலையை அவர்களால் ஏற்படுத்த முடியாது. (குறுக்கீடு.) அது இலட்சியம் என்றால் ஏற்படுத்த முடியாத ஒன்றை இலட்சியம் என்று எடுத்துச் சொல்வது எந்த வகையில் ஏற்றதாகும்? (குறுக்கீடு.) முயற்சி என்றால் இது வரை முயற்சிகள் நடைபெறவில்லையா? ஏற்கெனவே முயற்சித்து அந்த முயற்சிகளால் ஏற்கெனவே நடைபெற்றதை யொட்டித் தொடர்ந்து நடைபெறுகிறதே தவிர எந்த அமைச்சரவையும் இந்தத் துறையில் செய்யாத ஒன்றை, அந்தப் புதிய பணியை இந்த அமைச்சரவை இந்த மருத்துவத் துறையில் புதிதாக உருவாக்கவில்லை என்பதை நான் புள்ளிவிவரங்களோடு எடுத்துக்காட்டத் தயாராயிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. வரும் ஆண்டில் கிராம மருத்துவ வசதியைப் பெருக்குவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து அதற்கான திட்டங்களை திறம்பட செயல்படுத்த முனைந்துள்ளோம் என்றும் சொல்கிறார்கள். அந்த எண்ணத்தைதான் வரவேற்கிறேன். ஆனால் அதைச் செயல்படுத்துவதில் எந்த அளவு விகிதாசாரம், வெற்றி கண்டுள்ளார்? இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சென்னை நகரத்திற்கு இந்த ஆண்டுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்? மருத்துவ் மனைகளுக்காக, அதுவும் மருத்துவக் கல்லூரிகளோடு சேர்ந்த மருத்துவ மனைகளுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள், மாவட்ட தலைமை மருத்துவ மனைகளுக்காக, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரங்களைத் தயவுசெய்து இலாகாவிடம் எடுத்து கணக்குப்போட்டுக் காட்டச் சொல்லி அந்த விகிதாசாரத்தைப் பாருங்கள். கடந்த ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டும் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து ஒரு விழுக்காடு அல்லது இரண்டு

விழுக்காடு வேண்டுமானால் அதிகமாக இருக்குமேதவிர முன்னர் ஒதுக்கியதைவிட பத்து விழுக்காடு கூட அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிற வாய்ப்பு உங்களுக்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்ல எண்ணம் இருந்தால் மட்டும் போதாது. சர்க்கரை என்று தாளில் எழுதி வைத்துக்கொண்டு அதை எப்படி எதனால் தொட்டுப்பார்த்தாலும் அது தித்திக்காது. அதே போல், இலட்சியம் என்று சொன்னால் மட்டும் காரியம் நடக்காது. அந்த இலட்சியத்தை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு வசதிகள் குறைவாக இருக்கின்றன என்பதை உணர்ந்து அதையும் சேர்த்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் நல்வாழ்வுத்துறை பற்றிய அறிக்கையில் அதே கருத்து, ''கிராமங்களில் நம் பணிகளை அதிகப் படுத்த வேண்டியிருக்கிறது என்ற கருத்தும், ஏற்கெனவே இருந்த அரசு கிராமப்புறப் பணிகளை அடியோடு புறக்கணித்து விட்டது'' என்ற அங்கலாய்ப்பும் கூறப் பட்டிருக்கிறது. ஆனால் மருத்துவத் துறை அறிக்கையை நீங்கள் பார்த்தால் அதற்குப் பதில் இதிலே வருகிறது. அதறகுப் பதிலாக, அவர்கள் தெரிவித்திருப்பது, கிராமப் பகுதிகளில் முன்னிலும் சிறந்த சீரான வசதிகளைச் செய்து கொடுப்பதில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்ற கருத்திற்கிணங்க, மாவட்ட, வட்டத் தலைமையிடத்திலும் பிறயிடங்களிலுமுள்ள மருத்துவ மனைகள், மருந்தகங்கள் முதலியவற்றில், இந்த நோக்கத்தினை அடைய வசதிகள், படிப்படியாகக் கூடுதலாக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்திருக்கிறார்கள். படிப்படியாகக் கூடுதலாக்கப் பட்டுள்ளன. என்றால் இன்று திடீரென்று இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ஏற்பட்டவை அல்ல. இன்று இத்தனை பேமலி ஹெல்த் சென்டர்ஸ் உள்ளன என்று சொன்னால் 10,12 ஆண்டுகளுக்கு முன்னால் அதற்குத் திட்டம் உருவாக்கப் பட்டிருக்கிறது. பாமிலி ப்ளானிங் சென்டர்ஸ் என்றால், ஒவ்வொரு ஒன்றியத்திலும் அமைக்க எண்ணி பத்து ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அதறகான கட்டடங்கள் கட்டி முடிந்து செயலாற்க்கொண்டிருக்கின்றன.

அதோடு கிராமப்புறங்களில் உள்ளமக்களும் பயன்பெறுமாறு தாலுகா மருத்துவ மனைகள் மூலம், பெரிய நகரங்களிலுள்ள மாவட்ட தலைமை மருத்துவ மனைகள் மூலம்

கிராமங்களுக்கு அந்த மருத்துவ வசதியை ஓரளவு விநியோகிக்க முடியும், அந்த வகையில் அந்த மக்களும் பயன் அடைய முடியும் என்ற எண்ணத்தில்தான் இதனைக் கருத வேண்டும். ஆங்கிலத்தில் உள்ள அறிக்கையிலும் 'has been Progressively strengthened to achieve the objective inview' என்றுதான் கூறப்படுகிறது.

[பிற்பகல் 12-40]

இதுவரையில் அந்த வகையில் அந்த நோக்கத்தோடு தான் இப்படி செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்றுதான் குறிப்பாக சொல்லப்பட்டிருக்கிறது. பல்வேறு பணிகள் நிதி வசதியில்லை என்பதற்காக விடப்பட்டிருக்குமே தவிர, ஏற்கனவே இருந்த அரசுக்கு இதில் அக்கறை இல்லாமல் இருந்ததைப்போலவும், இப்போதுள்ள ஆட்சி வந்த பிறகுதான் இதனை அக்கறையோடு செயல்படுத்துவது போலவும் சொல்லியிருப்பது சரியல்ல, இவையெல்லாம் ஏற்கனவே இருந்து வந்தவைதான். புதிதாக எந்தவித வளர்ச்சிக்கு வழிகாணப் படவில்லை என்பதை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல் நான் தெரிவிக்க விரும்புவது, சமுதாய நல பணியாளர்கள், திட்டம் என்கின்ற ஒரு பிரிவை மாநில அரசு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு சொன்னபோது, சமுதாய நலப் பணியாளர்கள் என்கின்ற ஒரு திட்டம், தமிழ்நாட்டில், மக்களுக்கு ஒத்து வராது. இதன் மூலம் நீங்கள் நினைக்கிற அளவுக்கு பலன் எதுவும் கிடைக்காது, இதன் மூலம் என்னென்ன பணிகள் நடைபெற வேண்டும் என்று நினைக்கப்படுகிறதோ அவை மருத்துவர்கள் மூலமே செய்து கொள்வதற்கான வாய்ப்பு இங்கு ஏராளம் இருக்கிறது, மேலும் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், கிராமப் புறங்களில் ஏராளமான நாட்டு மருத்துவர்கள் உள்ளனர். இங்கு மட்டுமல்ல, கேரளாவிலும் ஆந்திராவிலும் இருக்கிறார்கள், ஓரளவு கர்நாடகத்திலும் இருக்கிறார்கள், எனவே தென்னாட்டைப்பொறுத்த வரையிலும் இந்தத் திட்டத்தை இங்குள்ள மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், கிராமங்களில் சித்தவைத்தியம் பார்ப்பவர்கள், ஓமியோபதி மருத்துவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் கிராமங்களில் இருக்கின்ற காரணத்தினால், சமுதாய நலப் பணியாளர்கள் என்கின்ற திட்டம் நிச்சயமாக சிறப்பு அடைய முடியாது என்பதை நான் நல்வாழ்வுத்துறை

[திரு. க. அன்பழகன்] [1978 மார்ச் 25

அமைச்சராக இருந்த காலத்திலேயே தெரிவித்திருக்கிறேன். அதோடு இதற்காக ஒரு மாற்றுத் திட்டத்தையும் தெரிவித்திருந்தேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலமாக, அவற்றைச் சுற்றியிருக்கின்ற இடங்களில் சப்-சென்டர்கள் என்று அமைத்து, அதன் மூலம் விரிவாகப் பணியாற்றுவதோடு கிராமங்களில் பணியாற்றுகின்ற சித்த மருத்துவர்கள் மூலம் இந்தப் பணியை கிராமங்களிலுள்ள மக்கள் பயன்பெறக் கூடிய அளவில் ஒரு திட்டத்தை மக்களுக்கு வழங்கமுடியும் என்பதைத் தெரிவித்து, சமுதாய நல பணியாளர்கள் என்கின்ற திட்டம் பயன்படாது என்பதை அன்றைக்கே சொன்னேன். மத்திய அமைச்சர் கூட்டிய நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் கூட்டத்திலும் சொல்லியிருக்கிறேன். தற்போது, நடமாடும் மருத்துவப் பணிகள் என்ற முறையில் இந்தத் திட்டம் 24 ஒன்றியங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் வரவேற்கிறேன். முன்னரும் பத்து பன்னிரண்டு பிற்பட்ட வட்டாரங்களில் மலைப் பகுதிகளில், மொபைல் வேன்கள் மூலம் இப்பொழுது துவங்குவதாகக் கூறப்படும் இந்த முறையில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

அதே போல், பேம்லி பிளானிங் பிரிவின் கீழும் போதுமான அளவுக்கு ஒன்றியங்களில் சப்-சென்டர்கள் அமைக்கப்பட்டு குடும்ப நலப் பணிக்காக வழங்கப்பட்ட வாகனம் (ஜீப்) மூலம் அதற்குரிய டாக்டர் சுற்றி வந்து பணி செய்து வருகிறார். ஆனால் போதுமான அளவுக்கு அவை நிறைவு செய்வதாக இல்லை. எனவே, இப்பொழுது கூறப்படும் நடமாடும் மருத்துவக் குழு என்பது தமிழ்நாட்டில் ஏற்கெனவே இல்லாதது ஒன்றல்ல என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த முறையை வலியுறுத்தும் போது, "நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்கெனவே சிறந்த முறையில் நடைபெற்று வந்திருக்கின்றது என்பதும், அதற்கான சூழ்நிலைகள் தமிழ் நாட்டில் இருந்து வந்தன என்பதும் இந்த அறிக்கையிலேயே ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது........, அந்தப் பகுதி இது, "இதன் நோக்கம் தமிழ்நாட்டில் சிறந்த முறையில் இணைப்புசாலைகளும் மின்சார வசதிகளும் அமைந்திருப்பதால் நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலமாக சிறந்த மருத்துவவசதிகளை அளிக்க முடியும் என்பதாகும் ...." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1978 மார்ச் 25] [திரு. க. அன்பழகன்]

எனவே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் இதற்கான வசதிகள் உருவாகி இருந்தன என்பது இந்த நேரத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இணைப்பு சாலைகள் இருக்கின்றன, மின்சார வசதி உள்ளது என்று சொல்லும்போது, தமிழ்நாட்டில் கிராம மக்கள் முன்னேற்றத்துக்கு முந்தைய ஆட்சியில் ஏதும் செய்யப்படவில்லை என்றும் கருத்தை வெளியிட்டவர்கள் இந்த அறிக்கையினாலாவது தெளிவு பெற வேண்டும். நாட்டில் இருப்பதைத்தான் ''பிக்சரைஸ்'' செய்கின்ற முறையில் இங்கு தரப்பட்டிருக்கிறதே தவிர, புதிய கண்டு பிடிப்புகள் என்ற வகையில் அல்ல என்பதையும் ஆளுங்கட்சி நண்பர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, புதிய திட்டம் என்று கூறப்படும் நடமாடும் மருத்துவப் பணி இன்னொரு வகையில் சிறப்பு உடையதாக முன்னர் நடைபெற்று வந்தது. அந்த முறை என்னவென்றால் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியில். இருந்தும், ரூரல் மெடிக்கல் கேம்ப் என்ற வகையில்—மருத்துவக் கல்லூரியிலிருந்து பல துறை வல்லுநர்களும் பயிற்சி பெறுவோருமாகச் சேர்ந்து ஒவ்வொரு ஒன்றியப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்படுகிற கிராமத்திற்குச் சென்று சிகிச்சை அளிக்கின்ற முறை இருந்து வந்தது. இதற்காக ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் செலவு ஏற்படும். இப்படிப்பட்ட ரூரல் கேம்ப்-கள் மூலமாக ஒரு இலட்சம் செலவு என்று வைத்துக்கொண்டாலும் கிராமத்து மக்களுக்கும் நுண்ணறிவாளர்களுடைய தொண்டு கிடைக்கின்ற வழியில் இவை நடைபெற்றுக்கொண்டிருந்தன. இப்போது அதைப்பற்றி எந்த விவரத்தையும் இந்த அறிக்கையில் காணோம். அந்தத் திட்டமே கைவிடப்பட்டிருக்கிறதா என்பதும் தெரியவில்லை. அது கிராம மக்களுக்கு கிடைத்த 'வைட்டல் புரோகிராமாக' இருந்தது. கிராம மக்களுக்கு மருத்துவத் துறையில் உள்ள சிறந்த நுண் அறிவாளர்கள் மூலம் நல்ல பயனுடைய சிகிச்சை கிடைப்பதற்கும் வாய்ப்பாக அது இருந்தது. ஆளுங்கட்சி உறுப்பினர் ராமதாஸ் அவர்கள் பேசும்போது பெரிய மருத்துவர்களைக் கிராம மக்கள் காணவே முடியாது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

கிராமத்துமக்களைப் பொறுத்த அளவில், இன்றைய நிலையில் மருத்துவத்தில் சிறப்புத் தகுதி பெற்றவர்கள், நுண்ணறிவாளர்கள் தேவைப்படும் நோயாளிகளுக்கு மாவட்ட தலைநகரத்தில்தான் சிகிச்சை செய்ய முடியும். ஆகவே, இந்த முறை தொடர்ந்து படிப்படியாக நடைமுறைக்கு வந்திருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், மருத்துவக் கல்லூரிகளில் உல்ள சிறந்த மருத்துவர்கள் கொண்ட குழுவை கிராமப் பகுதிக்கு அனுப்பி அங்கு செயல்படச் செய்வதின் மூலம் கிராம மக்களுக்கு கிடைத்து வந்த பயனைக் கருதி, மறுபடியும் இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதின் மூலம் சிறந்த நன்மைகளைச் செய்யலாம் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அடுத்து கிராமங்களிலே மருத்துவ வசதிசெய்வது என்பது மாநில அரசாங்கத்தின் பொறுப்பே தவிர, மத்திய அரசாங்கத்தின் நேரடிப் பொறுப்பாக முடியாது. அவர்களின் நேரடிப் பொறுப்பு இதிலே கிடையாது. வேண்டுமானால், அவர்கள் கைட்-லைன்ஸ் தரலாம். இன்னும் சொல்லப் போனால், குறிப்பிட்ட உதவித் தொகையை பெரிய அம்மை ஒழிப்புத் திட்டம் மலேரியா ஒழிப்புத் திட்டம் போன்றவைகளுக்கு வழங்கலாம். ஒரு மாநிலத்தில் செயல்படாவிட்டால், அது இன்னொரு மாநிலத்தைபம் ாதிக்கக்கூடிய நிலைமை இருக்கின்றகாரணத்தால், மத்தில் அரசாங்கம் இவைகளுக்கெல்லாம் சில சிறப்பு உதவித் தொகையைக் கொடுக்கிறார்கள். இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவது மிகவும் தேவையான காரியமாகும்.

ஆனால், அப்படி நிறைவேற்றினால்கூட, மருத்துவப் பணியை ஒன்றியங்களிடம் ஒப்படைப்பது, நகராட்சிகளிடம் ஒப்படைப்பது என்னும் முறை இதில் நீண்ட காலமாக இருந்து வந்திருக்கிறது. இதில் ஒன்றியங்களுக்கு சில முக்கியமான பொறுப்புகள் இருக்கின்றன. ஆனால், எதிர்பாராத விதமாக கடந்த 2 ஆண்டுகளாக ஒன்றியங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் நிர்வாகம் இல்லை. சில ஒன்றியங்களில் நிதி வசதி இல்லை. இந்த நிலையில் அந்த ஒன்றியங்களில் உள்ள மருந்தகங்களையே கூட அரசாங்கம் ஏற்று நடத்துவது என்ற நிலை ஏற்படுகிறது. அதன்படி ஏறத்தாழ 112 ஒன்றிய மருந்தகங்கள் ஏற்கனவே நான் அமைச்சராக இருந்தபோது. எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னர் தொடர்ந்து கடந்த ஆண்டு 20 ஒன்றிய

மருந்தகங்களை எடுத்துக்கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த 20 மருந்தகங்கள் 4-வது, 5-வது கிரேடு ஒன்றியங்களில் உள்ளவை என்று அறிவிக்கப்பட்டது. இப்படி அறிவிக்கப்பட்டு 6 மாதங்கள் ஆகிறது. இன்னும் அந்த ஒன்றியங்களில் உள்ள 20 மருந்தகங்கள் உடனடியாக இந்த இலாகவால் ஏன் ஏற்றுக் கொள்ள இயலவில்லை என்பது தெரியவில்லை. அப்படி அந்த ஒன்றியங்களில் உள்ள மருந்தகங்கள் ஏற்கப்பட்டிருந்தால், அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு மேலும் 30 மருந்தகங்களை எடுத்துக் கொள்ளலாம். இப்படி இன்னும் இருக்கிற மருந்த்கங்களை எல்லாம் தொடர்ந்து எடுத்துக் கொள்ளலாம் என்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால், உடனடியாக ஒன்றியங்களில் உள்ள 20 மருந்துகங்களை ஏற்றுக்கொள்ளப்படும் என்று கடந்த ஆண்டு அறிவித்துவிட்டு, 6 மாதங்களாக அதைச் செயல்படுத்தாமல், அறிவிப்பாகவே அது இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

24 ஒன்றியங்களுக்கு சுற்றி வரும் மொபைல் மருத்துவ வசதி அளிக்க இருப்பதாக நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஒன்றியம் ஒவ்வொன்றிலும் 2 சுற்றி வருகிற மருத்துவக் குழு அமைக்கப்பட்டு, கிராமங்களில் பணியாற்றும் என்று சொல்லப்பட்டது. அந்த இரண்டு மருத்துவக் குழுக்களுக்கு மொபைல் வேன் வழங்கப்பட்டதா என்று தெரியவில்லை. ஏற்கனவே 383 ஒன்றியங்களில், 350 ஒன்றியங்களுக்கு மேல் ஜீப்புகள் வழங்கப் பட்டிருக்கின்றன ; அம்பாசிடர் கார்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவை பாமிலி பிளாணிங் புரோக்கிராம் என்ற அடிப்படையில், யூனிசெப் உதவித் திட்டத்தின்கீழ் பெரும் பகுதி வழங்கப்பட்டிருக்கிறது.

அப்படி உள்ள திட்டத்தை மேலும் வளர்க்கக்கூடிய நிலையில், வழங்கப்பட்ட வண்டி, வாகனங்கள் பயன்படத்தக்க வகையில் ஒழுங்காக இருக்கின்றதா ? இந்த 24 ஒன்றியங்களுக்கு ஏற்கனவே வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதையும், இன்னும் 100 ஒன்றியங்களுக்கு அப்படி சுற்றி வரக்கூடிய வண்டி வசதிகளை வழங்க ஏற்பாடு இருக்கிறதா என்பதையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

இவைகள் எல்லாம் புதிதல்ல என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1978 மார்ச் 25

அதைப்போல், கிராமப்புற மக்களுக்கு நல்வாழ்வுத் திட்டம் வழங்குவதற்கும், நகரப்புற மக்களுக்கு நல் வாழ்வுத் திட்டம் வழங்குவதற்கும் இடையே சிறு வேறு பாடுகள் இருக்கின்றன. கிராமப்புறத்திலே உள்ள மக்கள் வறிய நிலைமையிலே இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு பிறக்கின்ற குழந்தைகள் உடல்நலக் குறைவுடையன வாகவும், சில குழந்தைகள் ஊனமுற்றவைகளாகவும் இருக்கின்றன. அந்தக்குழந்தைக்ளுக்கு நல்ல வளர்ச்சி இருப்பதில்லை.

ஆனால், நகர்ப்புறத்திலே உள்ள தாய்மார்கள் ஓரளவு படித்திருப்பதாலும், ஓரளவு உலகம் தெரிந்தவர்களாகவும் இருக்கின்ற காரணத்தால், இதிலே சிறிதளவு முன்னேற்றம் இருக்கிறது. எனவே, குழந்தைகள் பிறக்கின்றது முதல் ஏறத்தாழ 15 ஆண்டுகள் வரையில் அந்தக் குழந்தைகளை வளர்ப்பதற்கே துணைநிற்க வேண்டியுள்ளது. இந்தக் குழந்தைகளுக்கு ஏதாவது ஒரு வகையான ஊட்டச் சத்துத் திட்டத்தின் மூலம், நோய்த் தடுப்பு ஊசி அதாவது (D.P.T.) டீ.பி.டி. போடுவதன் மூலம், குழந்தைகள் காப்பகத்தில் வைத்து செவிலியர்கள் மூலம் நல்ல உணவு வழங்குவதன் மூலம், பள்ளிக்கூடத்திலும் நல்ல சத்துள்ள உணவு வழங்குவதன் மூலம், மேலும் பள்ளிகளிலே இவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்துவதன் மூலமாகவும் இவர்களுக்கு நாம் பல கடமைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் அரசாங்க அறிக்கையிலே காணப்படுவது போல் ஏற்கனவே உள்ளவைகள்தான். இப்போதும் இருப்பவைகள்தான்.

ஊட்டச் சத்துக் திட்டம் இல்லாத 10, 12 ஒன்றியங்களிலே உள்ள பள்ளி மாணவர்களுக்கு நல்ல ஊட்டச் சத்தும் உணவு கொடுப்பதற்கான ஏற்பாடு இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் ஊட்டச் சத்து கல்வி வழங்கும் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் நல்ல பயன் ஏற்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போல் பள்ளிப் பிள்ளைகளைப் பரிசோதனை செய்வதற்கானத் திட்டம் 53 ஒன்றியங்களிலே இடம்பெற்று அதற்கான வேலை நடைபெற்றிருக்கிறது. இன்னும் 320ஒன்றியங்களிலேநடைபெறவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த 53 ஒன்றியங்களிலேகூட ஒரு ஆண்டிற்கு 2,000 மாணவர்களுக்குத்தான் பரிசோதனை செய்ய கூடிய நிலைமை இருக்கிறது.

1978 மார்ச் 25] [திரு. க. அன்பழகன்]

[பிற்பகல் 12.50]

நகரப் பகுதியில் அந்தத் திட்டம் இருக்குமானால் ஒரு ஆண்டுக்குப் பத்தாயிரம் மாணவர்களைப் பரிசோதனை செய்யலாம் என்று இருக்கிறது. அந்தத் திட்டம் ஆழ்ந்து நோக்கப்படுமானால் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடத்தப்படுவதன் காரணமாக ஐந்தாண்டுகளில் அது அளிக்க வேண்டிய பயனை அளிக்காது என்பதை நான் அமைச்சராக இருந்தபோதே எடுத்துச் சொன்னேன். அப்போதிருந்த வசதிக் குறைவு காரணமாக எல்லா ஒன்றியங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று எண்ணினாலும் கூட செயல்படுத்த முடியவில்லை. மூன்று மருத்துவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமிக்க வேண்டுமென்று முடிவெடுத்து அவர்களுக்குப் போதுமான வேலை இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் பள்ளி மாணவர்களை மூன்று ஆண்டு காலத்தில் அல்லது நான்காண்டு காலத்தில் அந்த பகுதி ஆரம்ப சுகாதார வட்டாரத்தில் இருக்கிற எல்லாப் பள்ளி மாணவர்களையும் பரிசோதிக்க வேண்டுமென்ற திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கருதபட்டது.

கிராமப்புறத்தில் உள்ள பள்ளி மாணவர்கள், குழந்தைகள், இளைஞர்களுக்கு ஏற்படுகிற கடுமையான நோய்கள் பெரும்பாலும் தொத்து நோய்களாகத்தான் இருக்கின்றன. நகரப் பகுதிகளிலும் ஏழை மக்கள் வாழ்கிற பகுதிகளில் அப்படிப்பட்ட தொத்து நோய்கள்தான் வருகின்றன. நான்காண்டுகளுக்கு முன்னால் சென்னை நகரில் குடிசைகளில் வாழும் ஏழை மக்கள் வட்டாரத்தில் குழந்தைகளுக்கு ஏற்படுகிற கடுமையான தொத்து நோய் சரியாகக் கவனித்துத் தடுக்க முயற்சியின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக குழந்தை மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு மருத்துவர் தலைமையில் 50, 60 பேர் ஒரு குழுவாக இருந்து பணியாற்றினார்கள். அவர்கள் ஓராண்டுக் காலம் பணியாற்றினார்கள். அதனால் ஏழை மக்களிடையே உள்ள குழந்தைகளுக்கு ஏற்படுகிற வியாதிகள் கண்டு பிடிக்கப்பட்டு, தடுப்பு சிகிச்சை வழங்கப்படும் நிலைமை இருந்தது. அது தற்போது கைவிடப்பட்டதாகக் கருதுகிறேன். எந்த அறிக்கையிலும் அதுபற்றிக் கூறப்படவில்லை. பெடியாட்ரிஷன் தலைமையில் அமைக்கப்பட்ட அந்தக் குழுவால் என்ன பலன் ஏற்பட்டது? முடிவு என்ன? ஏன் தொடரப்படவில்லை? இவை எதுவும் இதிலே விளக்கப்படவில்லை. அப்படிப்பட்ட கடமைகளை ஆற்றுவது மீண்டும் தொடரப்படவேண்டும்

மூன்றாவது மருத்துவரை எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் நியமிப்பது பள்ளி மாணவர்களுக்குத் தகுந்த மருத்துவ பரிசோதனைத் திட்டத்தை நிறைவேற்ற பயன்படும் சுகாதாரத் துறையில் பயிற்சி பெற்ற ஆயாக்களை எல்லா ஒன்றியங்களிலும் நியமிக்காமல் டி.பி.டி. திட்டம் 80, 100 ஒன்றியத்திலேதான் நிறைவேற்றப்படுகிறது. இத் திட்டம் 383 ஒன்றிய வட்டாரத்திலும் நிறைவேற்றித் தீர வேண்டிய ஒன்று.

அந்த மருந்து போதுமான அளவு கிடைக்கவில்லை என்பதற்காக மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிற கிண்டி கிங் இன்ஸ்டிடியூட்டால் அந்த மருந்தைத் தயாரிக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அது குழந்தைகளுக்கான மூன்று வகை நோய் தடுப்பு மருந்தாக அமைகிற காரணத்தால் சமுதாயத்திற்குச் சிறந்த பலன் அளிக்கும் என்ற முறையில் அதை உற்பத்திச் செய்வதை வரவேற்கிறேன். அந்தத் திட்டத்தை எல்லா ஒன்றியங்களிலும் நிறைவேற்ற முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலுள்ள மருத்துவ மனைகளில் படுக்கை வசதி இல்லை. சென்னை நகரத்தில் ஏராளமான படுக்கை வசதி இருக்கிறது என்று சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். பத்தாண்டுகளுக்கு முன்னால் திட்டமிடப்பட்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்காக 383 ஒன்றியங்களில் 192 ஒன்றியங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மிச்சமிருக்கும் 191 இடங்களில் கடந்த மூன்றாண்டுக் காலமாக ஒன்றும் கட்டப்படவில்லை. ஒவ்வொன்றுக்கும் 2 லட்சம் ரூபாய் தேவை. 191 கட்டிடங்கள் கட்ட 4 கோடி ரூபாய் தேவை. ஒரு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் என்று ஒதுக்கி ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குத் தேவையான மருத்துவ மனைக் கட்டிடங்களைக் கட்டினால், குடியிருப்புகளைக் கட்டினால் ஒவ்வொன்றுக்கும் ஆறு படுக்கைகள் கிடைக்க முடியும்.

சுற்றி வரும் முறையில் டாக்டர்கள் கிராமங்கள்தோறும் சுற்றி வந்து சில வியாதிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்ந்து சிகிச்சை பெற வேண்டுமென்று சொன்னால், படுக்கை வசதி இல்லை, கட்டிடம் இல்லை என்றால் சுற்றி வருகிற டாக்டர்களால் கூடப் பலன் கிடைக்காது. ஆகவே, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான மருத்துவ மனைக் கட்டிடங்களை எல்லா ஒன்றியங்களிலும் கட்ட வேண்டும்.

நான் அமைச்சராக இருந்தபோது மத்திய அரசிடம் தெரிவித்தேன் ஒவ்வொரு ஒன்றியத்திலும் குடும்ப நல மருத்துவமனை ஓரிடத்திலும், ஆரம்பச் சுகாதார மருத்துவ மனை இன்னோரிடத்திலும் அமைத்திட இசைவுத் தந்தால் மேலும் ஒரு லட்சமோ இரண்டு லட்சமோ மருத்துவமனைக் குடும்ப நல மருத்துவமனை கட்டிடத்திற்காக கூடுதலாகச் செலவிட்டு கட்டடங்களைக் கட்டி இரண்டு இடங்களிலும் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஈடாகப் பணியாற்ற அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றைக்கு நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற திட்டப்படி இரண்டு இடத்திலும் மருத்துவ மனையை இயங்கச் செய்வது எளிதாக இருக்கும்.

இந்தப் யபுதி திட்டத்தை 100 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இப்போது நான்கு பேர் என்ற அடிப்படையை ஏற்றுக்கொண்டு ஒன்றியத்திற்கு இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையத்தை அமைத்து இரண்டு பகுதிகளாக இயங்கும் அளவுக்கு பெரிய ஒன்றியங்களைப் பிரித்து பணியாற்றினால் கிராம மக்களுக்கு நல் வாழ்வுத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கம் ஓரளவு வெற்றிகரமாக அமையும் என்ற ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு வேளை இந்த ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட இன்னும் சிலகாலம் ஆகலாம். ஆக, முதல்படி என்கின்ற முறையிலாவது வருகின்ற ஆண்டாவது ஏதாவது ஒரு வழியிலே பெரிய அளவான ஒன்றியங்களிலாவது அவ்வாறு செய்ய அதற்கு அரசாங்கம் உதவ வேண்டுமென்று விரும்புகிறேன்.

கண் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது பற்றி நான் திரும்பத் திரும்ப கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதல்வராக இருந்த கலைஞர் அவர்களுக்கு கண் சிகிச்சையிலே ஏற்பட்ட அனுபவத்தாலே ஏற்பட்ட திட்டம்தானே தவிர, அது அரசாங்கத்திலிருந்து கொண்டு வரப்பட்ட திட்டம் அல்ல. கலைஞர் அவர்களுடைய தகப்பனாருக்கு இருந்த கண் நோய்க்கு சிகிச்சை செய்து கொள்வதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பதை எண்ணிப் பார்த்த கலைஞர் கிராமப் புறங்களிலே உள்ள மக்களும் கண் சிகிச்சைகளை நல்ல முறையிலே பெற வேண்டுமென்ற முறையிலேதான் தேர்ச்சி பெற்ற கண் டாக்டர்களை அழைத்துப் பேசி அந்த முறையிலே எவ்வளவு நிதி வேண்டுமென்ற அடிப்படையிலே கணக்கிடப்பட்டு தொடங்கப்பட்ட ஒன்று.

அந்தத் திட்டத்திற்கு இன்று கலைஞர் பெயர்கூட இல்லை. அந்த வகையிலே கிராம மக்களுக்காக அப்படிப்பட்ட ஒரு திட்டம் தொடங்கப்பட வேண்டுமென்ற முறையிலே தான் கொண்டு வரப்பட்டது. நகரப் புற மக்களுக்காக அல்ல, ஏனென்றால் நகரத்திலே ஒரு கண் டாக்டரை மருத்துவமனையில் நியமித்து விட்டால் நகரப்புற மக்கள் அவரிடம் சிகிச்சை பெற்றுக் கொள்வார்கள். ஆனால் கிராமங்களிலே உள்ள மக்கள் ஆறு, ஏழு நாட்களுக்கு வெளியே வந்து சிகிச்சை பெறக் கூடிய வசதியைப் பெற்றவர்கள் அல்லர், உணவுக்கே போதிய வருமானம் அற்றவர்களாக இருக்கிறவர்கள். ஆகவே அந்த ஏழை மக்களுக்காக ஆண்டுக்கு 30 லட்சம் ரூபாய், 40 லட்சம் ரூபாய் செலவிடக் கூடிய முறையிலே அத்திட்டம் நிறைவேற்றப்பட்டன. இவைகளையெல்லாம் செய்த ஒரு அரசிலே தான் நாங்கள் எல்லாம் இருந்தோம் என்பதை நான் இன்றைய ஆட்சியாளர்களின் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

இன்றைய தினம் அவர்கள் மினி ஹெல்த் சென்டர்ஸ் என்று சொல்கிறார்களே, அது ஏற்கனவே இருந்த தமிழக அரசாலே ஊக்கப்படுத்தப்பட்ட ஒன்றுதான். நான் அமைச்சராக இருந்தபோது வாலன்டரி ஹெல்த் சர்வீஸில் உள்ள பெரியவரை அழைத்து வேறு சில சர்க்கரை ஆலை உரிமையாளர்களையும் அழைத்துப் பேசி நான் இருக்கிறபோதே அது பற்றி ஆலோசிக்கப்பட்டு நடைமுறைக்கு வர இருந்த திட்டம். காந்தி கிராம இன்ஸ்டிடியூட் நடைபெறுகிற மதுரை மாவட்டத்தில் அந்த வட்டாரத்து மக்களுக்கு எல்லாம் சமூக நலன் பயக்கும் திட்டத்தை அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இன்னும் விரிவாக மக்களுக்கு நலன் பயக்கத்தக்க அளவில் அமையத்தக்க விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், கிராம மக்களுக்காக நிறைவேற்றப்படுகிற திட்டம் தகுந்த பயன்தர அந்த மக்களின் உள்ளத்திலே. அதற்குத் தேவையான கருத்தை உருவாக்க வேண்டும்.

குடும்ப நலத் திட்டத்தில் இந்த அரசு அதிக அக்கறையை எடுத்துக் கொள்ளவில்லை. அதிகாரிகளும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. அதைப்பற்றிய பிரசாரம் இன்று இல்லை. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் ஊராட்சித் தலைவர்களும் கூடி மாவட்ட ஆட்சித் தலைவரால் கூட்டப்பட்டு ஆலோசித்து தீவிரமாகச் செயல் படவேண்டும். கட்டாயப்படுத்தக்கூடாது என்பது ஒன்றுதான் நியாயமே தவிர, அதை ஊக்குவிக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் மாறுபாடு இருக்காது. இந்த ஆண்டு 3 லட்சத்து 59 ஆயிரம் பேருக்கு செய்யப்படவேண்டும் என்று மத்திய அரசாங்கம் ஏதோ ஒரு கணக்கை சொல்லியிருந்தாலும் 2 லட்சம் என்ற அளவிலாவது நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டு, 69 ஆயிரம் என்ற அளவிற்குதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, அநேகமாக ஒரு லட்சம் பேருக்கு நிறைவேற்றலாம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற முறையிலே அரசாங்க ஊழியர்களாக உள்ள தாய்மார்களுக்கு மூன்றாவது மகப்பேறு காலம் வந்தால் லீவு கூட கிடையாது என்ற அரசாங்கத்தினுடைய ஆணை திரும்பப் பெறப்பட்டிருக்கிறது என்பதை நான் வரவேற்கிறேன்.

அரசாங்க ஊழியர்கள், கணவனாக இருந்தாலும், மனைவியாக இருந்தாலும் யாராக இருந்தாலும் குடும்ப நல சிகிச்சை செய்து கொண்டால் ஒரு ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டுமென்று இருந்தாலும்கூட அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்தத் திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கின்ற முயற்சியை இந்த அரசு விட்டு விடக் கூடாது. குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிய பிரச்சாரம் மக்களிடத்திலே பரவலாக ஏற்படுகின்றபோதுதான் அதனுடைய பலன் உண்மையிலேயே மக்களுக்குக் கிடைக்கும்.

நல்வாழ்வுத் துறை நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றக் கூடிய துறையாக மட்டுமின்றி, மக்களிடத்திலே ஏற்படக் கூடிய கருத்து வளர்ச்சியால் பயன் தருகின்ற துறை. தொத்து நோய்கள் பற்றியும், அவைகளைத் தடுக்கின்ற முறைகள் வழிகள் பற்றியும், சத்துணவுத் திட்டங்கள் பற்றியும், சத்துணவுக் குறைவினால் ஏற்படும் நோய்கள் பற்றியும், அவைகளைத் தடுப்பதற்கான எளிய உணவு முறைகளைப் பற்றியும், குடும்ப நலத் திட்டம் பற்றியும், மதுவிலக்குத் திட்டம் பற்றியும் மக்களிடம் பிரசாரம் செய்வது மக்கள் நல்வாழ்வுக்கு நலம் பயக்கக் கூடிய ஒன்று.

[திரு. க. அன்பழகன்] [1978 மார்ச் 25

[பிற்பகல் 1-00]

மக்களுடைய உடல் நலத்தை அடிப்படையாக வைத்து எண்ணுகின்ற மதுவிலக்கு 'திட்டம் நல்லது என்பதைப் பற்றியும், தொழுநோய்ச் சிகிச்சை பற்றியும், காச நோய்க்குத் தரப்படும் சிகிச்சை பற்றியும் ஒரு பிரச்சார இயந்திரத்தை இந்த அரசு நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டும். அது பெயரளவில் இன்றைக்கு நடைபெறுகிறதே தவிர, போதுமான அளவில் நடைபெறவில்லை, விளக்கங்கள் கிடைக்கவில்லை. மாவட்டத்தில் மக்களிடத்தில் செல்லக்கூடிய அளவிற்கு ஒருமுகப்படுத்தப்பட்டு அந்தப் பணி நடைபெறுகின்ற அளவிற்கு நடந்தால் ஏதாவதொரு வகையில் நமக்குக் கிடைக்க வேண்டிய பயன் கிடைக்கும், மக்களின் நல்வாழ்வை உருவாக்க வேண்டிய கடமை நிறைவேறும்.

சென்ற ஆண்டு அறிக்கையின்மீது நான் பேசும்பொழுது சில குறைகளை எடுத்துக் காட்டினேன். சென்னையிலே உள்ள சென்னை மருத்துவக் கல்லூரியின் தரம் உயர்த்தப்பட்டு 'அப்கிரேடட் இன்ஸ்டிடியூட்' என்று ஆக்க வேண்டுமென்பது ஐந்தாண்டுகளுக்கு முன் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. அதற்காகச் சில துறைகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அந்தத் துறைகளுக்கு டைரக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களிலே சில டைரக்டர்கள் மீது ஏற்கனவே இருந்த இடைக்காலத்திலே இருந்த ஆட்சியாளர்கள், அவர்களெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்று தவறாகக் கருதி, திருநாமம் போடுபவர்களானாலும் திருநீறு அணிபவர்களானாலும் திருக்கோயிலுக்குப் போகிறவர்களானாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாகக் கருதி, இந்த அடையாளங்கள் இருந்தாலும் இன்னொருஅடையாளம் இல்லை என்பதால் அந்த அடையாளம் இல்லாத சிலரை அந்த இடத்தினின்றும் வேறு இடத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறையற்ற காரியத்தைச் செய்தது அப்பொழுது நடைபெற்ற ஆட்சி. அதற்கு நியாயம் கற்பிக்கக்கூட அவர்களால் முடியாது. அப்படி நடந்தாலும் கூட அந்தக் கல்லூரி "Institute of Post-graduate, Medical Education and Research" என்ற பெயருடன் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டாலும், இரண்டு வகையான பெயர்கள் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருந்தால், அதில் ஒன்று அமைய வேண்டுமென்று நான் குறிப்பிட்டு இந்த

1978 மார்ச் 25] [திரு. க. அன்பழகன்]

ஆண்டு அறிக்கையில் அதைப்பற்றி எந்த குறிப்பும் இல்லை. அதிகாரிகளுக்குத் தெரிந்த மிகச் சிறந்த முறை அவைகளையெல்லாம் தாங்கள் குறிப்பிடாமல் கைவிட்டு விடுவது என்பது தான்.

ஆனால் இந்த ஆண்டாவது சென்னை மருத்துவக் கல்லூரி 'போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூட்' என்ற பெயர் பெற்றிருக்க வேண்டும், அப்படிப் பெயர் பெற்றதாகவும் தெரியவில்லை.

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புகிறேன், மருத்துவத் துறையில் பணியாற்றும் டாக்டர்களைப்பற்றிப் பொதுவாகவே அவர்களெல்லாம் குறைபாடு உடையவர்கள் என்று பேசுகின்ற கருத்து அதிகமாகி வருகிறது என்பதைக் காண்கிறேன். குறைபாடு இல்லாத மனிதனே கிடையாது, சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந்தாலும் சரி, தலைவர்களாக இருந்தாலும் சரி, குறைபாடு இல்லாத மனிதனே கிடையாது. டாக்டர்களும் மனிதர்கள்தான், எனவே குறைபாடு அவர்களிடத்திலும் இருக்கூடும்.

இவ்விடத்திலே அந்தக் குறைபாட்டை வைத்துக்கொண்டு முதலமைச்சரவர்கள் கடந்த ஆண்டு பேசும்பொழுது கூறியது பற்றி நான் குறிப்பு வைத்திருக்கிறேன், மருத்துவமனைகளிலே பெரும்பகுதி மருந்து திருட்டு போகிறது, எல்லா மருந்துகளும் திருட்டுப் போகிறது, நல்ல மருந்துகள் எல்லாம் திருட்டுப் போகிறது என்று கூறினார்கள். அது தவறான கருத்து, அதை முதலமைச்சர் சொன்னாலும் சரி, அல்லது வேறு யார் சொன்னாலும் சரி. எல்லா மருந்துகளும் திருட்டுப் போகிறது, 100-க்கு 90 விழுக்காடு மருந்துகள் திருட்டுப் போகிறது என்றால் மருத்துவமனைகளையே மூடிவிட வேண்டியதுதான். அப்படி மருந்துகளே மகக்ளுக்கு வழங்கப்படாவிடில் மக்களே கூட மருத்துவமனையை மூடிவிடுவார்கள். எனவே, 100-க்கு 10 விழுக்காடு திருட்டுப்போகும், அதுவும் பல்வேறு சேனல்ஸ் வழியாகப் போகும், ஒவ்வொரு வழியாகப் போகும், ஆங்காங்கு கை வைக்கிறவர்கள் இருக்கிற இடத்தில் போகும். நான்கு பேர் 400 ரூபாய் மருந்துகளைக் கையாளும்பொழுது 40 ரூபாய் அளவிற்கான மருந்துகள் காணாமற் போகலாம்.

அப்படிக் காணாமற்போகும்பொழுது ஏற்கனவே இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தகுந்தபடி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நான் அமைச்சராக இருந்த காலத்திலும் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, டாக்டர்கள் திருடுகிறார்கள் என்ற எண்ணத்தைத் தயவு செய்து ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நர்ஸ்கள் திருடுகிறார்கள் என்று கூட நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். யாரோ சிலர் எப்படியோ திருடுகிறார்கள். அப்படித் திருடுகிற நேரத்திலும் 100-க்கு 10 விழுக்காடு என்ற அளவில் இருக்குமே தவிர 100-க்கு 90 என்ற அளவில் அல்ல.

இப்படிச் சொல்தவற்குப் பதில் மாற்றிச் சொல்லி விட்டாரோ என்னவோ முதலமைச்சர். பத்திரிகையிலே வந்துவிட்டதால் முதலமைச்சர் இப்படிச் சொல்லியிருக்கிறாரே என்று மருத்துவத்துறையில் உள்ள பலர் வருத்தப்பட்டுக் கொண்டார்கள். எதையுமே அதிகப்படுத்திச் சொன்னால்தான் எச்சரிக்கையாக இருப்பார்கள் என்று முதலமைச்சர் ஏற்கனவே சொல்லி யிருக்கிறார். ஆகவே, இதையும் மிகைப்படுத்திச் சொல்லியிருக்கிறார்கள் என்று தான் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர டாக்டர்கள் நர்சுகள் எல்லோரையுமே குற்றவாளிகளாக நினைத்துக் கூறியிருக்க மாட்டார்கள் என்று நான் சொன்னேன்.

ஏனென்றால் எத்தனையோ டாக்டர்கள் அவருக்கு நண்பர்களாக இருக்கிறார்கள். (குறுக்கீடு) முதலமைச்சரை அப்படித்தான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம். அப்படித்தான் சொல்ல வேண்டுமே தவிர எங்களோடு சேர்ந்திருந்த ஒருவரைப்பற்றி வேறு எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே, மிகைப்படுத்திச் சொல்வார்கள் என்று சொன்னாலும், நியாயமாக இருந்து, இன்ன மருத்துவமனையில் திருட்டுப் போய்விட்டது என்று தெரிந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, மேலும் சில டாக்டர்கள் மீது குறைபாடு இருந்தால் அதற்குக்கூட நடவடிக்கை எடுக்கலாமே தவிர அந்தத் துறையே குறைபாடு உடையது என்ற கருத்து ஏற்படுமாறு பேசுவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைவிட இப்படித் திருட்டுப் போகின்ற அளவிற்கு உள்ள, மருந்துவமனைகளிலேயிருந்து திருட்டுப் போகின்ற மருந்துகளுக்கும் கடைகளிலே விற்கப்படும் மருந்து

களுக்கும் இடையில் அடையாளம் தெரியாமல் ஒரே மாதிரியாக இருப்பதால் பெரிய மருத்துவமனைகளில் தனி அடையாள ஸ்டாம்ப் குத்தி வைக்க வேண்டுமென்று ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், 'தமிழ்நாடு தாதா பார்மசூடிகல்ஸ்' என்ற நிறுவனம் இருக்கிறது. அதுவும் அரசாங்கத்தின் பங்கோடு நடத்தப்படும் மருந்து உற்பத்தி நிறுவனமாகும்.

அந்த நிறுவனத்திலே, அரசாங்க மருத்துவமனைகளுக்காகத் தயாரிக்கப்படுகிற மருந்துகள் எல்லாம் ஒரு தனிப்பட்ட அடையாளத்தோடு தயாரிக்கிற அளவுக்கு, உள்ளே இருக்கிற மாத்திரை அல்ல, மேலேயிருக்கிற பாட்டிலோ, அல்லது டப்பியோ தனியான அடையாளத்தோடு தயாரிக்கிற அளவுக்கு முறையை ஏற்படுத்தி, திருட்டு போனால் அந்த மருந்து, எந்தக் கடையில் இருந்தாலும், யாரும் கண்டுபிடிக்கின்ற எளிதாக்கும் முறையை மேற்கொள்ளலாம்.

இன்னும் ஒன்று சொல்லவிரும்புகிறேன், மருத்துவமனைக்குத் தேவையான மருந்துகளை கம்பெனியிலிருந்துதான் வாங்க வேண்டுமென்ற முறை சிறந்த முறையல்ல. 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் 'ஹாஸ்பிட்டல் ஃபார்மஸி' என்ற திட்டம் கொண்டு வந்து, சென்னை பொது மருத்துவமனையிலும், திருச்சி, மாவட்ட மருத்துவ மனையிலும், இந்த 'ஹாஸ்பிடல் ஃபார்மஸி' ஏற்படுத்தி, இந்தத் துறையைச் சேர்ந்தவர்களைக் கொண்டும், மாணவர்களைக் கொண்டும், மருத்துவ மனைகளிலே அன்றாடம் பயன்படுகிற மருந்துகளை பெரிய அளவில் உற்பத்தி செய்து வழங்குகிற திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கு ரூ. 50 இலட்சம், ரூ. 60 இலட்சம் மூலதனம் தேவையாதலின் அடுத்த ஆண்டுகளில் கவனிக்கலாம் என்ற வகையில் திட்டமிருந்தது. இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வீர்களானால் சென்னையிலே இருக்கிற பொது மருத்துவமனைகளுக்கு மருந்துகளுக்காக ரூ. 50 இலட்சம் செலவாகிறதென்றால், ரூ. 25 இலட்சம், ரூ. 30 இலட்சம் செலவிலேயே முடிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். ரூ. 10 இலட்சம் குறைந்தால் கூட, இன்னும் அதிகமான அளவில் மருந்துகள் வாங்கி,

[திரு. க. அன்பழகன்] [1978 மார்ச் 25

பரவலாக மற்றவர்களுக்குப் பயன்படக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே, ஹாஸ்பிடல் ஃபார்மஸி ஏற்படுத்த முடியுமா என்றும், ஏன் ஏற்படுத்தவில்லையென்பதையும் தயவுசெய்து கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பொதுவாகவே, டாக்டர்களைப் பற்றி, மிகச்சிறந்த நிபுணர்கள், திறமையானவர்கள் என்றெல்லாம் சொல்லி விட்டு, அவர்கள் மேல்நாடுகளுக்கு செல்வதைத் தடுக்கின்ற வகையில், 6 மாதகாலமாக அந்தத் துறையினுடைய இயக்குநர், உங்களுக்கு வெளிநாடு செல்ல அனுமதி கிடையாது என்று விண்ணப்பிக்கும் டாக்டர்களிடம் சொல்கிற நிலைமையிருக்கிறது. டாக்டர்கள் போகக்கூடாது, ஆனால், இன்ஜினீயர்கள் போகலாம், மற்ற அதிகாரிகள் போகலாம், அலுவலைப் பார்க்கிற அதிகாரிகள் அரசாங்கச் செலவிலே போகலாம். டாக்டர்கள் சொந்தச் செலவிலே போக மறுக்கப்படுகிறது. அப்படிப் போகவேண்டுமென்றால், ரூ. 1 இலட்சம் வரை இழப்பீடு என்று கேட்கப்படுகிறது என்று டாக்டர்கள் வட்டாரத்திலே அப்படி ஒரு குறை சொல்கிறார்கள்.

நான் அரசாங்கத்திற்குச் சொல்கிறேன், அப்படி தடுக்கிற உரிமை நியாயமாக அரசாங்கத்திற்குக் கிடையாது. யாரைத் தடுக்கலாம்? பாண்ட் எழுதிக்கொடுத்து விட்டு அந்தக்காலக்கெடுவிற்குள் போக விரும்புவர்களைத் தடுக்கலாம். 3 ஆண்டுக காலம் பணியாற்றுகிறேன், 5 ஆண்டுக் காலம் பணியாற்றுகிறேன் என்று சிலர் எழுதிக் கொடுக்கிறார்கள், மேல் பட்டப்படிப்புசேரும் போது. அந்த முதல் 3 ஆண்டுக்காலத்திலே, 5 ஆண்டுக் காலத்திலே அவரிடத்திலே வேலை வாங்குகிற பொறுப்பு நமக்கு இருக்கிறது. அந்த 3 ஆண்டுக்காலம், அவரை வேலையில் சேர்க்கமாலிருந்துவிட்டு, 7-வது ஆண்டிலே வேலைகொடுத்து 10-வது ஆண்டுவரை வேலை செய்ய வேண்டு மென்று கேட்பது கூட நியாயம் அல்ல.

மருத்துவத்துறையில் படிக்க மாணவர்களுக்குச் செலவாகிறது, ஒத்துக்கொள்கிறேன். ஆனால், படித்து விட்டு. 3,000 டாக்டர்கள் இன்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர்கூட அதைச் சொன்னார். அதில், 1500 பேர், 1,000 பேர்

1978 மார்ச் 25] [திரு. க. அன்பழகன்]

ஏதாவது தனிப்பட்ட முறையிலே, தொழில் நடத்தி வாழ்க்கையை நடத்தமுடியும். ஆனால், 2,000 பேருக்கு மாதம் ரூ. 200 300 வருமானம் பெறுகிற அளவு கூட தொழில் நடத்த வாய்ப்பு இருக்காது. எனவே, அப்படிப்பட்ட வாய்ப்பு, வசதி இல்லாத நிலையிருக்கும்போது, 7 ஆண்டுக்காலம் வேலையிலமர்ந்திருந்தவர்கள், 5 ஆண்டுக் காலம் வேலையில் அமர்ந்திருந்தவர்கள், அரசாங்கத்தின் டெப்புடேஷனை இல்லாமல், அல்லது காமன்வெல்த் ஸ்காலர்ஷிப் பெறாமல், தாங்களாகவே சொந்தச் செலவில், இங்கிலாந்து செல்கிறேன், அமெரிக்கா செல்கிறேன் என்று சொன்னால் அனுமதிக்கிற முறைதான் தொடரவேண்டும் என்பதே நியாயம்.

ஆளுங்கட்சி உறுப்பினர் டாக்டர் பொன்னுசாமி சொன்னார். நம்முடைய மாநிலத்திலேதான் டாக்டர்கள் வெளி நாடுகளுக்குப் போவதைத் தடுக்கிறோம், ஒத்துக்கொள்ள வில்லை. ஆனால், ஆந்திராவிலே, கேரளாவிலே, 200 பேர், 300 பேர் என்று ஸ்பெஷல் பிளேன் வைத்து மேல்நாடுகளுக்கு அனுப்புகிறார்கள் என்று சொன்னார்.

மத்திய அரசிலே கூட, வெளி நாடுகளிலே 10 வகையான பயிற்சி பெற்ற டாக்டர்கள் தேவை என்று கேட்கிறார்கள் என்றால், அதை இரண்டு மாதங்களுக்கு முன்னால் நமக்குத் தெரிவிக்காமல், கடைசி இரண்டு நாட்களுக்கு முன்னால் தெரிவித்து, நாம் பெயர்களை அனுப்புவதற்குள், பக்கத் திலே இருக்கிற இரண்டொரு மாநிலங்களுக்கு அனுப்பி, அவர்களுக்கு வேண்டியவர்களைத் தேர்தெடுத்து அனுப்பு கின்ற முறை நீண்ட நெடுங்கலாமாக இருந்து வருகிற ஒன்று.

எனவே, தமிழ்நாடு தன்னுடைய ஆற்றலிலே, இத் துறையிலே, உயர்ந்து முன்னேறி வருகிறது என்றாலுங் கூட, நம்முடைய மாநிலத்தில், மற்ற மாநில டாக்டர் களுக்குக் கிடைத்திருக்கிற அளவு, வெளிநாடு போகிற வாய்ப்பு, நமது டாக்டர்களுக்கு கிடைக்கவில்லை. அவர் களாகத் தேடிக்கொள்கிற வாய்பபையும் அடியோடு மறுப்பது தவறு.

இன்னும் சொல்லப் போனால், அரசாங்க விதிமுறை களிலே அரசாங்க ஊழியர்களே, எக்ஸ்டிரார்டினரி லீவில் 5 ஆண்டுக்காலம், சம்பளம் பெறாமல், விடுமுறையில் போகலாம் என்று இருக்கும்போது, டாக்டர்களை ஏன்

[திரு. க. அன்பழகன்] [1978 மார்ச் 25

அந்த விதிமுறைகளின்கீழ், 2 ஆண்டுக்காலம், 3 ஆண்டுக் காலம் விடுமுறையில் வெளிநாடு போவதைத் தடுக்கிறார்கள், என்று அவர்கள் கேட்கிறார்கள். அவர்களில் யாராவது, இதை எதிர்த்து நீதிமன்றத்திற்குப் போனால், தீர்ப்பு அவர் களுக்குச் சாதகமாகக் கிடைக்கிற அளவு நியாயம் இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், கடந்த ஆண்டுகளில் அரசாங்கத் தரப்பிலே இருப்பவர்கள் 50 பேர், 60 பேர்தான் ஆண்டுதோறும் போவார்கள். இப்பொழுது அதிகம் போனால், 100 பேர் அளவுதான் போவார்கள். இபபொழுதே டாக்டர்கள் 3,000 பேர்கள் வேலையில் சேரக் காத்திருக்கிறார்கள். பணியிலுள்ள டாக்டர்களில் 500 பேர் களுக்கு மேல் தற்காலிகமாக வைத்திருக்கிறோம். மேலும் வேலையில் உறுதி தராமல், அதாவது ரெகுலரைஸ் செய்யா மல் 500 டாக்டர்கள் இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் கவனித்தால், டாக்டர்கள் வெளி நாடுகளுக்குச் செல்ல அனுமதிப்பது, தமிழ்நாட்டு முன் னேற்றத்துக்கே தேவையான ஒன்று. டாக்டர்கள் வெளி நாடுகளுக்குப் போய் அங்கே இருக்கிற மருத்துவத் துறை யில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லாவிட்டாலும், மேல் படிப்பு படிக்க வாய்ப்பு இல்லாவிட்டாலும், இங்கே தமிழ்நாட்டிலே மேல் நாட் டிலே உற்பத்தியான புதிய கருவியைப் பெற்றாலும் அந்தக் கருவிகளைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல் கூட இல்லா மல்போய்விடும், நம் டாக்டர்களுக்கு

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட முதல் வராக இருந்தபோது அமெரிக்காவிலேதான் சிகிச்சை பெற் றார்கள். மதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டி அவர்கள்கூட அமெரிக்காவிற்குப் போகக்கூடிய நிலை ஏற் பட்டது. பொதுவாகவே முதல் அமைச்சராக வருபவர்கள் எல்லாம் அமெரிக்காவிற்குப் போகக்கூடிய நிலைமை இருக் கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். மருத்துவத்திற்காக அமெரிக்காவிற்கு முதல் அமைச்சர் போகலாம். ஆனால் டாக் டர்கள் போகக் கூடாதா, அமெரிக்கா, இலண்டன் போகக் கூடாதா?

1978 மார்ச் 25] [திரு. க. அன்பழகன்]

[பிற்பகல் 1-10]

அதனால் கிராமங்களுக்கு தேவையான டாக்டர்கள் கிடைக்காமல் போய்விடுவார்கள். எவ்வளவு டாக்டர்கள் தேவை என்று என்னிடம் சொல்லுங்கள், நான் ஒரு பட்டா ளத்தையே கொண்டு வந்து நிறுத்தத் தயாராக இருக் கிறேன். ஏதோ, யாரோ தவறாகச் சொன்னதை மனதில் கொண்டு அந்த பிரிஜூடிஷியல்வியூ பாதிக்கின்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு இப்படி எண்ணுவதை நாம் பார்க்கிறோம். முதலமைச்சர் இன்னும் இரண்டாண்டுகள் அனுபவம் பெற் றால் அந்த எண்ணங்கள் மாறிவிடும். நான் ஏற்கெனவே பெற்றிருந்த எண்ணத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, நான் இதைச் சொல்லுகிறேன். அவரிடத்திலே நல்ல எண் ணம் கிடையாது என்பதல்ல. அந்த நல்ல எண்ணத்தை விளக்கக்கூடியவர்கள் அவரிடம் கிடையாது.

டாக்டர்களில் சில துறைகளில் திறமை பெற்றவர்களை ஊக்குவிக்க வேண்டும். யூராலஜி, இ.என்.டி. போன்ற துறை களில் சிறப்பு பட்டப் படிப்புப் படித்தவர்கள் போஸ்டு கிராஜூவேட் டிக்ரி பெற்றவர்கள் இன்னும் அந்தத் துறை யிலே வேலை கிடைக்காமல் நான்-கிளினிக்கல் துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிற நிலைமையிருக்கிறது. ஆகவே, இத்துறை பற்றிய முழு அளவு (Total picture) வடிவத்தின் விளக்கத்தை அரசாங்கத்தில் இருக்கிற அதிகாரிகள் தரவேண் டும். தகுதியுள்ள டாக்டர்களுக்கு எவ்வளவு வாய்ப்புகள் இருக்கின்றன, எவ்வளவு வசதிகள் இருக்கின்றன என்று விளக்குகிற நிலைமை இருந்தால்தான் இந்தக் குறைபாடுகளைப் போக்க முடியும் என்று டாக்டர்களின் சார்பாக தெரிவிக்க கிறேன்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது, இந்தத் துறை யிலே பணியாற்றுகிற பேசிக்ஹெல்த் ஒர்க்கர்ஸ்—அடிப்படை சுகாதார பணியாளர்கள் 7, 8, 10 ஆண்டுகள் பணியாற்றி யவர்கள் துப்புரவு ஆய்வாளர் பயிற்சி பெறுபவர்கள் ஏறத் தாழ 340 பேர்கள் இருக்கிறார்கள். அப்படி 7 ஆண்டு, 8 ஆண்டு, 10 ஆண்டுகள் பணியாற்றியபின் தகுதி பெற துப்புரவு ஆய்வாளர்கள் பயிற்சி அளிப்பதற்காக சில மாதங்களுக்கு முன்னாலே, அத்துறையில் தேர்ந்தெடுக்கப் பட்டு ஓராண்டு பயிற்சி பெறுகிறார்கள். அதற்குப் பின்னாலே திரும்பவும் அவர்கள் ஏற்கெனவே பணியாற்றிய பழைய நிலையிலேதான் பணியாற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது.

அந்த சானிடரி இன்ஸ்பெக்டர் பயிற்சி முடித்த பின்னாலே வேலை கிடைக்கவில்லை. புரமோஷன் கிடைக்கவில்லை. ஆகவே, சானிடரி இன்ஸ்பெக்டர் பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை குறையுங்கள் என்று சொன்னேன். அரசாங்க வேலையிலே இருக்கிறவர்களை இந்தப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பி விட்டால் அவர்களுக்குச் சம்பளம் கிடையாது. ஒரு ஆண்டுக்கு சம்பளம் இல்லாமல் இருந்தால் அதை எப்படி ஈடுகட்டுவது? பிறகு சானிடரி இன்ஸ்பெக்டராகப் பணியாற்றும்போது ஏற்பட்ட கடனுக்கு வசூல் வேலைதான் ஆரம்பம் ஆகும். சமுதாயத்திலே ஏற்படுகிற குறைபாடுகளுக்கு நாமும் ஒரு விதத்தில் காரணமாக இருக்கிறோம். அவர்களுக்கு சம்பளம் தர முடியாமல் போனால், ஸ்டைபன்டாவது தரவேண்டும்.

எம்.டி. படிப்பவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு சர்வீஸ் இருந்தால் 500 ரூபாய் கொடுக்கிறோம். 5 ஆண்டுக்கும் 10 ஆண்டுக்கும் இடையிலே இருப்பவர்களுக்கு 650 ரூபாய் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அதைக்கூட அவர்கள் முழு அளவு ஏற்றுக்கொள்ளவில்லை. அது வேறு விஷயம். அரசாங்கத்தில் 7, 8, 9 ஆண்டுகள் பணியாற்றி 150 ரூபாயிலிருந்து 220 ரூபாய் வரை அடிப்படைச் சம்பளம் வாங்குகிறவர்கள், இந்தச் சம்பளம் இல்லாமல் ஓராண்டுக் காலம் பயிற்சி பெறுவது என்றால் அது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். அதனை மேலும் வளர விடாமல் உடனடியாக கவனித்து ஊதியம் வழங்கும் அறிவிப்பு வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இந்த அடிப்படை சுகாதார ஆய்வாளர் ஆற்றுகிற பணிகளுக்கு சைக்கிள் அலவன்ஸ் என்ற அடிப்படையில் மாதம் 4 ரூபாய் தரப்படுகிறது. அது இடைக்கால நிவாரணம் என்ற வகையில் தரப்பட்டது. அவர்கள் ஆற்றுகிற பணிக்கு ஒரு நாளைக்கு 15 கிலோ மீட்டரிலிருந்து 20கிலோ மீட்டர் வரையில் சுற்றிவர வேண்டியிருக்கிறது. அவர்கள் இந்த அலவன்ஸை கட்டாயமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற காரணத்தை விளக்கி இருக்கிறார்கள். வேறு துறையில் இருக்கிற இந்த அடிப்படை சுகாதார ஊழியர்களுக்கு 42 ரூபாயும், சுகாதார ஆய்வாளர்களுக்கு 60 ரூபாயும் வழங்கப்படுகிறது. அதேபோல் கால்நடை உதவியாளர்களுக்கு 60 ரூபாயும் வழங்கப்படுகிறது. அதைப்போல தங்களுக்கும் வழங்கப்பட்டால்

தான் நீதி வழங்கப்பட்டதாகும் என்று கேட்டும் தங்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்றும் பல்வேறு காரணங்களை விளக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். இதை அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் பரிசீலித்துப் பார்த்து, என்னென்ன செய்ய வேண்டும் என்பதை முதலமைச்சருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்குத் தெரிந்த வரையில், அந்தப் பணி புரிகிறவர்கள் 10–15 ஆண்டு காலமாக செலக்ஷன் கிரேடு கிடைக்காமல், பிரமோஷன் கிடைக்காமல் இருக்கிறார்கள். எனவே, அவர்கள் ஆற்றுகிற பணியில் அதிக அக்கறை இல்லாமல் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு 40 ரூபாய் சுற்றுப்பயண அலவன்சாக கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதன் மூலம் அவர்களுடைய மனக்குறையை நீக்கலாம், நீக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல நோக்குப் பணியாளர்கள் (மல்டிபர்ப்பஸ் ஒர்க்கர்ஸ்) திட்டங்கள் வருகிறபோது, அவர்களில் அரசாங்க சுகாதாரத் துறைப் பணியாளர்களாக இருப்பவர்களுக்கு அதற்கான பயிற்சி கொடுத்து அவர்களை அதிலே முன்னுரிமையுடன் ஈடுபடுத்த வேண்டும் அவர்களில் யாரையும் கைவிட்டு விடக் கூடாது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழுநோயைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த தொழுநோய் பரவலாக இருக்கிறது என்று சொன்னாலும், இந்த தொழுநோய் 7½ இலட்சம் பேருக்குக் கண்டிருக்க வேண்டும். அதிலே 6½ இலட்சம் பேர் கண்டிருப்பவர்களை நாங்கள் கண்டுபிடித்து இருக்கின்றோம். (கேசஸ் டிடக்டெட்). அதிலே 5¼ இலட்சம் பேருக்கு சிகிச்சை வழங்குகிறோம் என்று சொல்கிறார்கள். 6½ இலட்சம் பேரைக் கண்டுபிடித்துவிட்டு, 5 இலட்சம் பேருக்குத்தான் சிகிச்சை அளிக்கிறோம் என்று சொன்னால், அதை எப்படி முழுமையாக நிறைவேற்றியதாக ஆகும்? ஆகவே, கண்டுபிடிக்கப்பட்ட கேஸ்கள் எல்லாவற்றிற்கும் சிகிச்சை அளிக்க வழிவகை செய்கிற முறையில் அதை எப்படி நிறைவேற்றலாம் என்று அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1978 மார்ச் 25

அதேபோல், அவர்கள் நடத்துகிற பரிசோதனை அதற்குப் பின்னால் அவர்கள் வழங்குகிற அந்தச் சிகிச்சை எல்லாம் டாக்டர்களுடைய மேற்பார்வையில் இயங்கவேண்டுமென்று ஒரு முறை இருக்கிறது. அதிலே ஈடுபடுகிற டாக்டர்களால் அதிலே அதிக அக்கறை செலுத்தமுடியாத நிலை இருக்கிறது. லெப்ரசியைப் பொறுத்த வரையில், கடந்த ஆண்டு அறிக்கையில் காணப்படுகிறது, 10–15 களப் பணியாளர்கள் இதற்காக பயிற்றுவிக்கப்படும் என்று. அதை விரிவுபடுத்தவேண்டும். அந்த லெப்ரசி துறையைப் பொறுத்த வரையில், அதற்காக ஒரு தனி தேர்ச்சி பெற்றவர்கள், வேண்டுமானால், கல்வித் துறையில் தோல் நோய் சம்பந்தப்பட்ட சிகிச்சை அளிப்பதற்கு பல பேரைக் கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்தி, 100 டாக்டர்களில் 5 டாக்டர்களுக்கு லெப்ரசியைப் பற்றி நல்லமுறையில் தேர்ச்சி ஏற்படும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அதே போல், அரசாங்கத்திலே மறுவாழ்வு இல்லங்கள் தொழுநோய்க்காரர்களுக்கு என ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. அதற்காக ஏறத்தாழ 5 இலட்ச ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. மாதம் ஒன்றுக்கு பெரியவர்களுக்கு ரூபாய் 70-ம், குழந்தைகள்-சிறுவர்களுக்கு ரூபாய் 35-30-ம் செலவாகிறது, ஆனால், அரசாங்கத்தினுடைய சார்பில் அமைக்கப்பட்டு இருக்கும் மறுவாழ்வு இல்லங்களிலே, என்ன இருந்தாலும் அரசாங்கத் துறைதானே என்பதால் நோயாளிகளிடம் காட்ட வேண்டிய பரிவும் இரக்கமும் குறைந்து விடுகிறது. ஆனால் அதேபோன்ற கிருஸ்துவ சொசைடிகள் நடத்துகிற இல்லங்களைப் பார்க்கிறபோது, அந்த பாதிரிமார்கள் நடத்துகிற இல்லங்களைப் பார்க்கிறபோது, ஒரு குடும்பத்தில் வாழ்கிற உணர்வோடு, பற்றும் பாசத்தோடும் நோயாளிகள் மனநிறைவோடு வாழும் நிலை இருக்கிறது. திரு. மனோகரன் அவர்கள் பாதர் சூலூஸ் அவர்கள் நடத்துகிற அந்த இல்லத்திற்குச் சென்று வந்தார்கள் என்றால், அவரும் அந்த எண்ணம் பெறுவார்கள் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட இல்லத்திற்கு, நாம் இப்போது அளிப்பது பெரியவர்களுக்கு ரூபாய் 25, குழந்தைகளுக்கு ரூ. 12½. நாமே பெரியவர்களுக்கு ரூபாய் 70-ம், ரூபாய் 35 சிறுவர்களுக்கும் செலவழித்து வருகிறபோது, தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் விகிதாசாரத்தைப் பார்க்கிற போது, அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் அமைச்சராக இருந்த கடைசி ஆண்டில் அவர்களது வேண்டுகோள் கிடைத்தது. இப்போது

1978 மார்ச் 25] [திரு. க. அன்பழகன்]

இன்னும் இரண்டாண்டு காலம் ஆகிவிட்டது. ஆகவே, அதை ரூபாய் 50 பெரியவர்களுக்கு என்றும், ரூபாய் 25 குழந்தைகள்-சிறியவர்களுக்கு என்றும் உயர்த்தி வழங்க வேண்டும். இதற்காக வழங்கப்பட்டிருக்கும் 5 இலட்ச ரூபாய் மானியத்தை இரண்டு மடங்காக ஆக்க வேண்டும்.

இப்போது அந்த இல்லங்களில் 500 பேரிலிருந்து ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால், நாம் எவ்வளவு நிதி ஒதுக்குகிறோமோ அந்த அளவிற்கு அதிகமாக அவர்கள், நோயாளிகளை வைத்துப் பராமரிக்க முடியும். 7½ இலட்சம் பேர் இந்த நோயினால் தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஜெபமணி அவர்கள் அன்றைய தினம் பேசியது போல் தெருவுக்குத் தெரு பிச்சை எடுத்துக்கொண்டு இருப்பது போன்று, நிலைமை இருப்பதாலும், அரசே அவர்களைப் பராமரிக்க அதிக செலவு ஆகிறது என்ற காரணத்தாலும், அந்த மாதிரி தனியார் இல்லங்களுக்குத் தரப்படுகிற தொகையை உடனடியாக இரட்டிப்பாக்கி, 10 இலட்ச ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்து, அந்த வகையில் அவர்களுக்கு வாழ வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–20]

காசநோய் ஒழிப்புத் திட்டம். அதில் இந்த அரசுக்கு ஒரு தனிக் கவனம் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். காச நோய்த் தடுப்புக் கழகம்—டி.பி. அசோசியேஷன்—ஒன்று இருக்கிறது. இப்போது முதலமைச்சர் தலைவராக இருக்கிறார். பரவலாக, சிறந்த முறையிலே பணியாற்ற அந்தக் கழகத்திலிருந்து ஆலோசனைகள் கிடைக்கும். இந்தப் பணிக்கு நிதித் திரட்டுவதற்காக காச நோய் வில்லைகள் விற்கப்படும். ரூபாய் 6 இலட்சம், 7 இலட்சம் அளவுக்கு தமிழ்நாட்டிலே விற்கப்பட்டிருக்கிறது. அனைத்திந்தியாவிலும் தமிழ்நாட்டில்தான் அதிக அளவுக்கு விற்பனைச் செய்யப்பட்டிருக்கிறது.

அந்த வில்லைகள் விற்று கிடைக்கின்ற பணத்தில் 5 சதவீதத்தை மத்திய மாநில அமைப்பின் நிர்வாகத்திற்கு எடுத்துவிட்டு, மிச்சப் பணத்தை அந்தந்த மாவட்டத்தில் இருக்கும் காசநோய் தடுப்பு நிறுவனத்திற்கு வழங்கி விடுவார்கள். அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு

கடலூரில் ஒரு மொபைல் வேன் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது அந்த மாவட்டத்திலே செயல்பட்டுவரும் காசநோய் கழகம் பற்றி இந்தக் குறிப்பில் ஒரு வரிகூட இல்லை. இப்போது வில்லைகள் விற்கப்படுகின்றனவா, அதன்மூலம் நிதி திரட்டப்பட்டதா, எவ்வளவு கிடைத்தது என்ற குறிப்பே இல்லை. 7 ஆண்டு காலமாக அனைத்திந்தியாவிலும் அதிக அளவில் காசநோய் வில்லைகள் விற்று நிதி திரட்டியதற்காக சுற்றிவரும் சுழல் கோப்பை தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது! இன்றைக்கு அந்த கோப்பையும் இல்லை; குறிப்பும் இல்லை. இத்திட்டம் செயல்படுகிறதா என்று கூட தெரியவில்லை.

இந்த காசநோய் தடுப்பு சானடோரியம் தனியார் நிர்வாகத்தில் பெருந்துறையில் ஒன்றும், செங்கிப்பட்டியில் மகாத்மா காந்தியடிகளின் பெயரில் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. ஆனால் இந்த தனியார் நடத்தும் மருத்துவ மனைகள் நிதி பற்றாக்குறையின் காரணமாக சரியாக நடத்த முடியாமல் பெருந்துறை சானடோரியமும், செங்கிபட்டி சானடோரியமும் செயலிழந்து இருக்கின்றன என்று கேள்விப் படுகிறேன். திருச்சியில் இராஜாஜி பெயரால் நடைபெற்ற சானடோரியம் செயலிழக்கும் நிலையிலிருந்த போது திருச்சி மாவட்ட தலைமை மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டு, இப்போதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எந்தெந்த இடத்திலே இருக்கிற சானடோரியம் செயல்பட முடியாத அளவுக்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிறதோ அவற்றை யெல்லாம் அரசே எடுத்து நடத்த நிதி வசதி இல்லை என்றால் அவைகளுக்குத் தகுந்த நிதி உதவி செய்ய அரசு முன்வர வேண்டும்.

தமிழக அரசு மத்திய அரசு உதவியோடு தன்னுடைய முயற்சியால் செங்கற்பட்டில் திருமணி தொழுநோய் மருத்துவமனையை நடத்திக் கொண்டிருந்தது அது மருத்துவமனை மட்டுமல்ல; ஒரு ரீசர்ச் சென்டரும் கூட. பின்னால் அதை மத்திய அரசு ஏற்று நடத்துவதாக அறிவித்தது. ஆனால் அவர்கள் ரீசர்ச் மட்டும் தான் நடத்துவோம்; மருத்துவ மனையை எடுத்துக்கொள்ள மாட்டோம் என்று சொன்னார்கள். ரீசர்ச் பிரிவை மத்திய அரசு எடுத்துக் கொண்டாலும் மாநில அரசுக்கும் அதில் பொறுப்பு உண்டு. மாநில அரசு இலாகாவுக்கும் அதில் தொடர்பு இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். தொழு நோயாளிகளைத் தங்க வைத்து சிகிச்சை வழங்க

மத்திய அரசு முன்வராவிட்டாலும் மாநில அரசே அதைத் தொடர்ந்து நடத்த வேண்டிய வழிவகைகளைச், செய்ய வேண்டும்.

அறிஞர் அண்ணா பெயரில் புற்றுநோய் மருத்துவமனை ஒன்று காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகிறது. அது புற்றுநோய் ஆராய்ச்சி நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அங்கு படுக்கைகள் கிடையாது. ஆனால் படுக்கைகள் கொண்ட பிரிவு ஒன்றை காஞ்சீபுரத்திற்குப் பக்கத்தில் பெங்களூர் நெடுஞ்சாலையில் ஏற்படுத்தியதின் மூலம் அது ஒரு முழுமைபெற்ற புற்று நோய் மருத்துவமனையாக உருவாகி இருக்கிறது. இந்த ஆண்டுகூட பல இலட்சம் ரூபாய் அதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இதுவரை 75 இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. இன்னும் பல்வேறு நவீன வசதிகள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. அந்த நிறுவனம் நார்வே நாட்டின் நோராடு நிறுவன உதவியோடு உருவாகிக் கொண்டிருக்கிறது. அவர்கள் ''ஃபாரின் எக்சேஞ்''ஆக அளிக்கும் உதவியைக் கொண்டு நமக்குத் தேவைப்படும் நவீனபுற்றுநோய் சிகிச்சை சாதனங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளலாம். மற்ற உள் நாட்டில் ஏற்படக்கூடியச் செலவுகளை தமிழக அரசு நிதியிலிருந்து செய்வது ஏற்கப்பட்டுள்ள ஒன்று. டபிள்யூ. எச்.ஓ.வினுடைய ஆலோசகராக இருந்த ஒருவரின் மூலம் நமக்கு நல்ல உதவி கிடைத்து, ஏற்பாடுகள் நடைபெற்றன. அதைப் பற்றி இந்த அறிக்கையில் ஒன்றும் இல்லை. இப்போது அந்த நிறுவனம் டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் தலைமையின் கீழ்கொண்டு வரப்பட்டிருக்கிறது; அதை நான் வரவேற்கிறேன். ஆனால், இன்னும் தகுந்த முறையில் அது செயல்படவில்லை. அதை சிறந்த முறையில் உருவாக்கி நல்ல முன்னேற்றம் காண வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு காசநோய், தொழுநோய்— ஆகிய நோய்களுக்கு அடுத்தபடியாக மக்களைத் துன்புறுத்தும் கொடிய நோய் புற்றுநோய். அந்த புற்றுநோயை முழுமையாகத் தடுக்கும் முயற்சி அங்கே இயலாவிட்டாலும் ஒரு முன்மாதிரி முயற்சியை அங்கே நாம் தொடங்க முடியும். அந்த புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தை நல்ல முறையிலே நடத்த முற்பட்டால் அந்த நோய்த் தடுப்புக்கான ஒரு பெரும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1978 மார்ச் 25

அடுத்து, சென்னையிலே சுற்றுப்புற மருத்துவமனைகளை, ஏற்படுத்த வேண்டுமென்று, 4, ஆண்டுகளுக்கு முன்னர் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. அண்ணா நகரில் ஒரு மருத்துவமனை, தண்டையார்பேட்டையில் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் ஒன்று, தேனாம்பேட்டையில் ஒன்று, பெரம்பூரில் ஒரு மருத்துவமனை ஏற்படுத்த வேண்டுமென்று முடிவு செய்து ஒவ்வொன்றுக்கும் 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, இடம் வாங்க 5, 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, இரண்டு இடங்களில் மருத்துவமனைகளுக்கான கட்டடம் 6 மாதத்திற்கு முன்னரே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றைச் செயல்படுத்த யாருக்கும் ஊக்கம் இல்லை. அண்ணா நகரில் கட்டப்பட்ட மருத்துவமனை கட்டிடம் அப்படியே இருக்கிறது. கட்டி முடிக்கப்பட்ட இடங்களில் ஏன் இன்னும் மருத்துவமனையை ஆரம்பிக்கவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. இந்தச் சுற்றுப்புற மருத்துவமனைகள் செயல்பட்டால், ஏதாவது விபத்து அல்லது வேறு காரணங்களால் சிகிச்சைக்கு வரக்கூடியவர்கள் ஆங்காங்கே சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். அப்படி வரும்போது அவர்கள் சென்னையில் இருக்கிற பொது மருத்துவ மனைக்கோ அல்லது ஸ்டான்லி மருத்துவ மனைக்கோ வரவேண்டியதில்லை. அதனால் இந்தப் பெரிய மருத்துவ மனைகளில் நோயாளிகள் கூட்டம் குறையும் என்பது மட்டுமல்ல ; மேலும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்கும் ஒரு வாய்ப்பும் ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடையிலே ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். 1978-79 பெர்பாமன்ஸ் பட்ஜெட்டிலே கூறப்பட்டிருப்பது இது.

Number of operations performed, number of X-rays taken, etc., in the hosiptel during 1976-77.

என்பதன் கீழ் :

சென்னைப் பொது மருத்துவ மனையிலே மேஜர் ஆப்ரேஷன் 6,760, மைனர் ஆப்பரேஷன் 1,505, மொத்தம் 8,265 ஸ்டான்லி மருத்துவமனையில் மேஜர் ஆப்பரேசன் 18,265 மைனர் ஆப்பரேஷன் 40,850. மொத்தம் 59,145. இதிலே மொத்தம் 8 ஆயிரம் அதிலே மொத்தம் 60 ஆயிரம். இது உண்மை அல்ல. இந்தக் குறிப்பு—மேஜர் ஆப்பரேஷன் மைனர் ஆப்பரேஷன் என்பதைப் பற்றி ஒரு வரன் முறை வைத்துக் கொள்ளாத காரணத்தாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ இப்படி அறிக்கையிலே மிகவும் மாறுபட்டதாக ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வான வகையில் அமைந்திருக்கிறது.

1978 மார்ச் 25] [திரு. க. அன்பழகன்]

சென்னைப் பொது மருத்துவமனையில் ஸ்டான்லி மருத்துவமனையை விட அதிக படுக்கைகள் இருக்கின்றன. அறுவை சிகிச்சைக்கான அதிகமான வாய்ப்புகளும் இருக்கின்றன. எனவே இந்த எண்ணிக்கை தரப்பட்டுள்ள முறை ஆய்வுக்குரியதாகும். அடுத்து மருநது ஆய்வுக் கூடம் ஏற்படுத்த வேண்டுமென்ற குறிப்பு இருக்கின்றது. கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்திருந்தாலும் இன்னும் லேபரேட்டரி பயனுக்கு வரவில்லை. சென்னையில் விரைவாக அதனை இயங்கவைக்கவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அதேபோல் அறிஞர் அண்ணா மருத்துவ மனையில் இருக்கக்கூடிய மருந்து தயாரிக்கும் நிலையத்தில் தேவையான நவீன கருவிகள் இல்லாமல் இருப்பதால் மருந்து உற்பத்தி செய்வது சாத்தியம் இல்லாமல் இருக்கின்றது. நவீனக் கருவிகள் இருந்தால் நல்ல முறையில் செய்ய முடியும்.

அடையாற்றில் இருக்கின்ற இந்திய மருத்துவர்களின் கூட்டுறவு அமைப்பு சார்பாக நடத்தப்படுகிற மருந்து உற்பத்தி நிலையம் நவீனக் கருவிகளோடு இயங்குகிறது.

பாளையங்கோட்டையில் இருக்கிற கல்லூரியிலே ஃபார்மசிக்கான கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அங்கு நவீன கருவிகளுக்கு மத்திய அரசு அனுமதி எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இதற்கெல்லாம் மத்திய அரசு நிதி பெறுவதற்கு விண்ணப்பித்தாலும் முன்கூட்டியே மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்து அந்தக் கடமையை நிறைவேற்றி இருக்க வேண்டும்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் தமக்கு சித்த மருத்துவத்திலே அதிக அக்கறை இருப்பதாகவும், ஆயுர்வேதத்தில் ஆர்வம் இருப்பதாகவும் கூறினார். ஆனால் நிதிநிலைக் குறிப்பைப் பார்த்தால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஒரு இலட்ச ரூபாய்தான் அதிகமாக ஒதுக்கி இருக்கிறார். மனோகரன் அந்த நேரத்தில் அல்லோபதி மருத்துவத்தைப் பெற்று வந்தாரோ என்னவோ தெரியவில்லை. சித்த மருத்துவத்திற்கு ஒரு ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாய் கூட ஒதுக்காமல் அதன் வளர்ச்சிக்கு என்ன செய்ய இயலும் ?

நடமாட முடியாத மனிதனைக் கம்பு கொடுத்து நடமாட
வைப்பதுபோன்ற அந்த நிலைமைக்கு சித்த மருத்துவம் இன்று
ஆளாக்கப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவம் உயர்ந்த
தொன்று. ஆனால் அத்துறையில் தகுதி வாய்ந்தவர்கள் பலர்
இன்று இல்லை. அவர்களிடத்திலேகூட நான் சொல்வதற்குத்
தயாராக இருக்கிறேன். அப்படி இல்லாத நிலையில் தகுதி
வாய்ந்தவர்களைத் உருவாக்குவதற்குத் தேவையான அளவு
பணம் ஒதுக்கக் கல்லூரியில் அதிக அக்கரையோடு அதனை
வளர்ச்சியுறச் செய்ய வேண்டும். அங்கே ஓர் ஆண்டு காலம்
படித்தார்கள். தேர்வு எழுத முடியவில்லை.

கடந்த ஆண்டு பி.ஐ.எம். வகுப்புக்கு மாணவர்களைத்
தேர்ந்தெடுத்தும், அந்தப் பட்டியல் வெளியிடப்படவில்லை.
தேர்ந்தெடுத்தும், அந்தப் பட்டியல் வெளியிடப்படவில்லை.
பட்டியலே வெளியிடாமல் எப்படி அரசாங்கம் நடக்கிறது?
சட்டமன்ற மேலவையிலே அதுபற்றிச் சொன்னார்களாம்.
எந்தெந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்
என்று அவரவர்களுக்கு மட்டும் செய்தி அனுப்பப்பட்டதாம்
நானும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பத்திரிகையிலே
பார்த்தேன். பட்டியல் வரவில்லை.

இந்தப் பாளையங்கோட்டை கல்லூரி 5, 6 ஆண்டு கால
மாக நல முறையில் வளர்ந்து வந்தது. இதுவரை 20 25:
இலட்சம் ரூபாய் செலவழித்து பல கட்டடங்கள் கட்டப்
பட்டு சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு வந்தது.
அந்தக் கல்லூரி சிறப்பாகப் பணியாற்றக் கூடிய அளவுக்கு
மாணவர்களைச் சேர்த்து ஆசிரியர்களை நியமித்து இயங்கு
வதற்கு வழி செய்ய வேண்டும். சித்தமருத்துவத்தில் தேர்ச்சி
பெற்று 60 அல்லது 70 வயதானவர்களிடமிருந்து தான்
இந்தத் துறை ஆலோசனை பெற வேண்டிய நிலைமை
இருக்கிறது. 88 கோடி ரூபாய் பொதுவாக செலவழிக்கப்
படுகின்ற ஒரு மாநிலத்தில் இந்த சித்த, ஆயுர்வேத, யூனானி
போன்றவற்றிற்கு 63 இலட்சம்தான் செலவிடப்படுகிறது.
இந்த இக்கட்டான நிலைமை இருக்கும் காரணத்தால்
கடந்த ஆண்டு 4 இடங்களில்தான் சித்த மருத்துவப்
பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு கூட பத்து இடங்களில்தான் ஏற்படுத்தத்
திட்டம் உள்ளது. நான் முதல் அமைச்சர் அவர்களையே
கேட்டுக் கொள்வேன். ஒரு ஆண்டுக்கு இருபது இடங்களி
லாவது சித்த மருத்துவப் பிரிவு திறக்கப்படுவதன் மூலம்
அலோபதி முறையில்தான் வைத்தியம் செய்து கொள்ள

வேண்டும். வேறு வழியே இல்லையா என்று நினைக்கிற மக்கள்
இந்த சித்த வைத்திய முறை மூலம் நிச்சயம் பயன் பெறுவர்.
வேறு ' சாய்ஸே ' இல்லை என்றால் அலோபதி முறைக்குப்
போக வேண்டியதுதான். ஆனால் சாய்ஸ் இருக்கும்போது
அதற்குச் செல்லலாம் அல்லவா ?

[பிற்பகல் 1-30]

ஹோமியோபதி முறையை எடுத்துக் கொள்வோம்.
ஹோமியோபதி மருத்துவமுறையில் ஒரு டிஸ்பென்ஸரி திறப்
பதாக அறிக்கையில் குறிப்புத் தந்திருக்கிறார்கள். ஒரு டிஸ்
பென்ஸரி திறக்க ஒரு அரசு, ஒரு இலாகாவின் ஆலோசனைகள்
இவைகள் தேவை இல்லை. ஒரு பத்து இடங்களிலாவது
ஹோமியோபதி டிஸ்பென்ஸரீஸ் திறக்க வேண்டும். அதை
விட மிகவும் சிக்கனமான மருத்துவமுறை கிடையாது.

ஹோமியோபதி ஒரு சிக்கனமான மருத்துவ முறை.
சித்த மருத்துவம் நாட்டு மக்கள் இயற்கையோடு ஒத்து
வருகிற ஒரு மருத்துவ முறை. அதே நேரத்தில் பல்வேறு
விதமான சிறப்புகள் பெற்றிருக்கிற ஒரு மருத்துவ முறை.
ஒருவரது சிகிச்சைக்கு ஹோமியோபதியில் 20 காசு செல
வாகிற மருந்து சித்த மருத்துவத்தில் 40 காசும் அலோபதி
யில் 100 காசும் செலவாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கும்வரை பேரவையின்
நேரத்தை நீட்டிக்கிறேன்.

*திரு. க. அன்பழகன்: இன்னும் ஐந்து நிமிடங்களில்
முடித்துக் கொள்கிறேன். எனவே, கிராமங்களில் மருத்துவ
வசதி வளர வேண்டும், கிராமங்களுக்கு அந்த வாய்ப்புக்
கிடைக்க வேண்டும் என்று சொல்கிறபோது ஒவ்வொரு
ஒன்றியத்திலும் ஐந்து இடங்களிலாவது ஹோமியோபதி
டிஸ்பென்ஸரியை ஏற்படுத்தி ஹோமியோபதி சான்றிதழ்
பெற்றவர்களைக் கொண்டு நடத்தலாம். மாதம் ஒன்றுக்கு
ரூ. 200 செலவில், டாக்டருக்கு ரூ. 150, மருந்துக்காக ரூ. 50
என்ற வகையில் அந்த மருந்தகங்கள் மூலம் நாள்தோறும்
இருபது முப்பது பேர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும்.
சித்த வைத்திய முறையினால் ரூ. 600 செலவாகும். ஏற்கனவே
ரூ. 180 மாதம் சம்பளமாகப் பெற்று சித்த மருத்துவர்கள்
கிராம மருத்துவ மனைகளில் பணியாற்றுகிறார்கள். இப்
போது அவர்களுக்கு ரூ. 200 அல்லது 250 அளித்தால்
போதும். கிராம மக்களுக்குப் பயன்படும் வகையில் மருந்
தகங்களை நாம் அமைத்துக் கொள்ளலாம்.

கழக ஆட்சியின்போது ஹோமியோபதி பயிற்சிக்காக ஒரு
கல்லூரியை ஏற்படுத்தினல்தான் ஏற்கனவே மதுரைக்
கல்லூரியில் படித்த மாணவர்கள் அக்கல்லூரி மூடப்பட்ட
தால் படிப்பு தடைப்பட்டு விடாமல் அவர்களையும்
சேர்க்கலாம் என்று அந்த ஹோமியோபதி கல்லூரி
துவக்கப்பட்டது. அந்தக் கல்லூரி ஏற்கனவே கீழ்பாக்கம்
மருத்துவக் கல்லூரி இருக்கிற அந்த இடத்தில்தான் அமைந்
திருக்கிறது. அதற்காக தனியாக ஒரு கல்லூரி கட்டடம்
கட்ட வேண்டும்.

ஹோமியோபதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை
குறைவு. அந்தக் கல்லூரிக்காக தனியாக ஒரு கட்டடம்
கட்டிக் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.
எளிய முறையில் சிகிச்சை பெற, இலவசச் சிகிச்சை பெற,
சிக்கனமான சிகிச்சை பெற வேண்டுமானல் சித்த மருத்து
வம், யுனனி மருத்துவ முறை இவை தவிர வேறு வைத்திய
முறை நமக்குக் கிடையாது. அலோபதி முறை என்றல்
அவர்கள் மேல் நாடுகளில் இருக்கிற அறிவு வளர்ச்சி, விஞ்
ஞான வளர்ச்சி இவற்றல் கிடைக்கிற சாதனங்களை எல்லாம்
பயன்படுத்துவதால் அம்முறை மிக அற்புதமான முறையாக
இருக்கிறது என்று சொன்னலும் நடைமுறையில் எல்லா
மக்களுக்கும் கிடைக்கக் கூடியதாக இல்லை. எல்லா மக்களும்
அதனல் பயன்பெறும் அளவிற்கு பொருளாதார நிலைமை
கள் இன்று இல்லை.

நம் நாட்டிலுள்ள பரம ஏழைகளும் மருத்துவ வசதிபெற
வேண்டுமென்றல், அப்படி பெற வேண்டுமென்று அரசு
கருதினல், அப்படிப்பட்ட பரம ஏழைகளுக்கும் உடனடி
யாகக் கைகொடுக்கக் கூடியவை சுக்கு, மிளகு, திப்பிலி.
இன்று பரம ஏழைகளுக்கும் பயன்படக்கூடியது வெற்றிலை,
ஆடாதொடை இலை. ஆடுதொடா இலையைப் பயன்
படுத்தி ஆஸ்துமாவைக் கூடப் போக்கியிருக்கிற மருத்துவர்
கள் இருக்கிறர்கள். இப்படி எவ்வளவோ மருந்துகள் உள்
ளன. மக்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடிய மருந்துகள்
எவ்வளவோ உள்ளன.

இன்னும் சொல்லப் போனல் நாட்டு மருத்துவம், வீட்டு
வைத்தியம் என்றழைக்கப்படும் அந்த மருத்துவம் சித்த
மருத்துவத்தோடு சேர்ந்தது.

குறிப்பாக சித்த மருத்துவம் பற்றி ஒன்றைச் சொல்ல
விரும்புகிறேன். ஏற்கனவே பழனி அறங்காவலர்கள் அளித்த
நன்கொடையிலிருந்து 35 அருமையான நூல்கள் வெளியிடப்
பட்டன. அவை தொடர்ந்து வெளியிடப்படுகிற முயற்சி
இரண்டு ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளது. பழனி
திருக்கோவிலில் உள்ள ஆண்டவனைக் காப்பாற்றுவதாகக்
கூறிக் கொண்டு—அந்தப் பணத்தைக் கொண்டு சித்த
மருத்துவ ஏடுகள் வெளியே வரக் கூடாது என்று தடை
செய்தார்கள், தவறன நோக்கோடு தடை செய்தார்கள்.
சாதாரணமாக 70 நூல்கள் இந்த இரண்டு ஆண்டுகளில்
வெளிவந்திருக்க வேண்டும், வரவில்லை. அரசாங்கக் குறிப்
பிலேயே தெரிவித்திருக்கிறர்கள், “அச்சிடப்பெற்ற அரிய
561 நூல்களில், அச்சிடுவதற்காக, முதற்கண் 84 நூல்கள்
தெரிந்தெடுக்கப்பட்டன. சுமார் 40 நூல்களின் படிகள்
எடுக்கப்பட்டு அவற்றிலுள்ள பிழைகள் முதலியவை.
முறையே நீக்கப்பட்டன. திரட்டப்பட்ட பனை ஓலைச் சுவடி
கள் கையேட்டுப் பிரதிகள் ஆகியவற்றை பகுத்தாய்ந்து,
மீண்டும் எழுத வேண்டியுள்ளது” என்று தெரிவித்திருக்
கிறர்கள். எழுதி அச்சிட வேண்டிய நூல்கள் 84 உள்ளன.
(கையேட்டுப் பிரதிகள்) இதையெல்லாம் அரசாங்க அச்ச
கத்தில் கொடுத்தால் அவை அச்சகத்திலிருந்து வராது,
கெஸெட் அடிக்கத்தான் அதனல் முடியும். அந்த நூல்களை
அச்சடிக்க அரசு அச்சகத்தில் கொடுத்தால் ஒன்றிரண்டு,
ஆண்டுகளாகும். எனவே, தனியார் அச்சகத்தில் அடித்து
வெளியிடும் முறை மேற்கொள்ளப்பட்டது

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்</u> : அரசாங்க
அச்சகம் திறமையாக நடந்து கொண்டிருக்கிறது. தயவு
செய்து பேராசிரியர் அவர்கள் ஒரு களங்கம் கற்பிக்க வேண்
டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்,

<u>திரு. க. அன்பழகன்</u> : தலைவர் அவர்களே, நான்
சொன்னது, அரசாங்கப் பணிகள் நிறைய அரசாங்க அச்ச
கத்திற்கு இருக்கும் என்ற அளவில், முழுமையான நேரத்
தையும் இப்படிப்பட்ட புத்தகங்களை அச்சடிக்கக் கொடுக்
கப்போகும்போது, முழுமையான கவனத்தை செலுத்த
முடிவதில்லை என்ற அளவில் தான் நான் அதைக் குறிப்
பிட்டேன்.

[திரு. க. அன்பழகன்] [1978 மார்ச் 25

(ஓர் அகராதியை காட்டினர்.).. இந்த அகராதி 30
ஆண்டுகளுக்கு முன்னல் எழுதப்பட்டது. இதனுடைய இரண்டு
பகுதிகள் வெளிவந்தன, மூன்ருவது, நான்காவது பகுதிகள்
அச்சேற்றுவதற்காக இதனுடைய மூல எழுத்து பிரதியை,
5,000 ரூபாய் அளவில், அரசாங்கத்திலிருந்து வழங்கி,
அந்த பிரதியை வாங்கி, அரசாங்க அச்சகத்தில் கொடுத்
தால் நீண்ட காலமாகும் என்ற எண்ணத்தில் ஜி.டி. நாயுடு
அவர்களிடம் கொடுக்கப்பட்டது. அறிஞர் ஜி. டி. நாயுடு
அவர்கள் சித்த வைத்தியத்தில் பெரும் ஈடுபாடு உடையவர்
என்ற காரணத்தினல் அவரிடம் கொடுக்கப்பட்டது, இது
எழுதப் பெற்று 30 ஆண்டுகளுக்கு மேலாகியிருந்ததால்,
அகராதியை அச்சேற்றுவதற்காக இதை முறைப்படி எழுதிக்
கொடுப்பதற்காக டாக்டர் துரைராஜ் அவர்களிடம் எழுத்
தாளர் என்ற அளவில் கொடுக்கப்பட்டது. பிற்பாடு
ஜி. டி. நாயுடு அவர்களின் மகன் கோபால் அவர்களின்
முயற்சியால் அது அச்சிடுகின்ற நிலையில் இருந்தது. மேலும்
தொடர்ந்து இந்த அரசாங்கம் இதில் ஊக்கம் காட்டி
யிருக்குமேயாளுல் ஆறு மாத காலத்திற்குள் இந்த வேலை
முடிந்து இருக்கும். சித்த வைத்தியத்திற்கு என்று ஒரு
அகராதியை தயாரிப்பதற்கு எவ்வளவு செலவிட்டாலும்
முடியாத அளவில், ஒரு தனி மனிதரால் எழுதப்பட்டு அது
வெளியிட முடியாத நிலையில்—சாம்பசிவம் பிள்ளை என்பவர்
எழுதியது, இதன் மூலம் அலோபதியை படிக்கின்றவர்கள் கூட
சித்த வைத்தியத்தைப் படித்துக் கொள்ள முடியும் என்கின்ற
அளவில் இந்த அகராதி அமைந்திருக்கிறது. 30, 40
அறிஞர்கள் கூடிப் பல ஆண்டுகள் ஆராய்ச்சிகள் நடத்தித்
தான் ஒரு கலைக்களஞ்சியத்தையே தயார் செய்கின்ருர்கள்,
அந்த அளவில் சித்த வைத்தியத் துறையிலேயே கலைக்களஞ்
சியமாக விளங்குகின்ற முறையில், அவர் ஒருவரே உருவாக்
கிய இந்த அகராதியை வெளியே கொணர முயற்சி எடுக்கா
மல் இருப்பது வருந்தத்தக்க ஒன்று தான். நான் இதைக்
குறிப்பிடுவது என்பது இதற்கு முதலமைச்சர் அவர்களையோ
அல்லது இந்த அமைச்சரவையையோ கண்டிப்பதற்கில்லை,
இதை விரைவில் வெளியிட வேண்டும் என்கின்ற ஒரு உணர்வு
இந்தத் துறையில் இல்லாமல் இருப்பதை சுட்டிக் காட்டுவதற்
காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். அது மட்டுமல்ல, சித்த
மருத்துவத்தைப் பற்றி ஆய்வு செய்து Dr, வி. நாராயணசாமி
அவர்கள் ஒரு ஆய்வுரையாக ஒரு சிறிய நூலை ஆங்கிலத்தில்
எழுதியுள்ளார். இதை நூலாக்க வேண்டும் என்ற முயற்சி மேற்
கொள்ளப்பட்டது. மத்திய அரசிலிருந்து சித்த வைத்திய
நூல் ஆங்கிலத்தில் இருக்கிறதா என்ற கேள்விக்கு பதிலாக

1978 மார்ச் 25] [திரு. க. அன்பழகன்]

சில நூல்களை தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்
மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் ஒன்று. அரசாங்கத்திலி
ருந்து கேட்டுக்கொண்டதற்கிணங்க 18 மாத கடும் உழைப்
புக்குப்பின் திரு. கந்தசாமி பிள்ளை என்பவர் மிகச் சிறந்த
நூல் ஒன்றினை ஆங்கிலத்தில் எழுதித் தந்தார். பிற்பாடு
அப்போதிருந்த அரசாங்கம் தொடர்ந்து இதனை செயல்படுத்த
முடியாத நிலை ஏற்பட்டதின் காரணமாக, 1976 ஜனவரி,
பெப்ரவரி, மாதங்களில் சீப்-செக்ரட்டரியிடம் கொடுக்கப்
பட்டது. மிகக் கடுமையான உழைப்பினல் உருவாக்கப்
பட்ட அந்தநூலை அச்சேற்றுகின்ற முயற்சி எடுத்துக்
கொள்ளப்படாததின் காரணமாக அப்படியே நின்றிருக்
கிறது. இதிலுள்ள சிலவற்றை மறுபரிசீலனை செய்த
பிறகு இப்போது அச்சேற்றுவதற்கு இருக்கின்றன
என்று இத்தனை காலத்திற்குப் பின் இந்த இலாகா
கூற முன் வந்திருக்கிறது. இரண்டாண்டு காலம் தூங்கி
விட்டு, இப்போதுதான் இதற்கான முயற்சிகளை மேற்
கொள்ள முன் வந்திருப்பதிலிருந்து, இந்தத் துறை எவ்
வளவு பொறுப்பற்ற தன்மையோடு இருந்து வந்திருக்கிறது
என்பது தெளிவாகிறது, இது மிகவும் வருந்தத்தக்கது,
வருந்தத்தக்கது மட்டும் அல்ல, கண்டிக்கத் தக்கதுமாகும்,
நான் இத்துறையின் அமைச்சராக இருந்த நேரத்தில்
இதற்கென்று எடுத்துக் கொண்ட முயற்சியின் காரண
மாக இந்தத் துறை ஓரளவுக்கு வளர்ந்தது, இன்றும்
முழுவதுமாக நிறைவு பெறவில்லை. மத்திய அரசாங்
கத்தில் கே. கே. ஷா இந்தத் துறையில் அமைச்ச
ராக இருந்த நேரத்தில், இந்தத் துறைக்கு அட்வைசரி
கௌன்சில், ரிசர்ச் கௌன்சில் என்றிருந்த நேரத்தில், நான்
கேட்டுக் கொண்டேன், சித்தா கௌன்சில் என்றும், ஆயுர்
வேதா கௌன்சில் என்றும் தனியாக உருவாக்கப்பட
வேண்டும் என்று அதற்கிணங்க தனித்தனி அமைப்பு
உருவாக்கப்பட்டது. கே. கே. ஷா அவர்கள் இதற்கு ஆதரவு
காட்டி வந்ததன் காரணமாக, பிற்பாடு ஆயுர்வேதாவுக்கும்
சித்த வைத்தியத்திற்கும் நிபுணர்கள் அடங்கிய குழு அமைக்
கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு, பின்னல் 'ஆயுர்வேதா
இன்க்ளுடிங் சித்தா' (Ayurveda including Siddha) என்று
அமைக்கப்பட்டு, சித்தா கௌன்சில் என்பது கலைக்கப்
பட்டு, ஆயுர்வேதா என்பதோடு சித்தா என்பதை சேர்த்த
தன் தனித் தன்மையை கரைத்துவிட வேண்டுமென்று நினைக்
கிருர்கள். இதை நான் கண்டிக்கிறேன். இதை நான்
எதிர்த்தாக வேண்டும். சித்த மருத்துவத்திற்கு என்று

தனியாக ஒரு அமைப்பு இருக்க வேண்டும் என்று கேட்பது, தனியாக சித்த மருத்துவம் நிலைப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகத்தான், இல்லையென்றால் நிச்சயமாக அது அழிந்து போகும், இங்கேயே அது அழிந்து போகுமோ என்ற ஐயப்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறோம்.

பிற மொழிகளிலிருந்து தமிழ் மொழியை காப்பாற்ற வேண்டியது எவ்வளவு அவசியமோ, அதே போன்று பிற மொழி ஆக்கத்திலுள்ள மருத்துவங்களிலிருந்து தமிழ் மொழியின் அடிப்படையில் பிறந்து வளர்ந்திருக்கின்ற சித்த மருத்துவத்தைக் காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமையாக ஆகியிருக்கிறது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

மேலும் சுற்றுப்புற சுகாதாரக் குழு கவர்னர் தலைமையில் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது...... எமர்ஜென்சி காலத்தில் வேண்டுமென்றால் இவ்வாறு அமைக்கப்பட்டது சரியாக இருக்கலாம்.

[பிற்பகல் 1-40].

ஆனால், அதற்குப் பிறகு அந்தக் குழு எப்படி திருத்தி அமைக்கப்பட்டதென்றால், கவர்னர் அவர்கள் அதற்குத் தலைவராகவும், முதல் அமைச்சர் அவர்கள் அதற்குத் துணைத் தலைவராகவும் அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஒரு குழுவிற்கு கவர்னர் அவர்கள் தலைவராக இருப்பது முறையல்ல. கவர்னருக்கு இந்த அரசாங்கமே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தில் முதல் அமைச்சர் தலைவராக இருக்கும் போது, அவர்கள் தான் அதற்குத் தலைவராக இருக்க வேண்டும். இப்படி கவர்னர் அவர்கள் அந்தக் குழுவிற்குத் தலைவராகவும், முதல் அமைச்சர் அவர்கள் அதற்குத் துணைத் தலைவராகவும் இருப்பது ஆட்சி முறைக்கும் ஜனநாயகத்திற்கும் ஏற்றதாக இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடந்த ஆண்டு தெரிவித்த சில கருத்துக்கள் சில அரசாங்கத்திலே ஏற்கப்பட்டு ஜீரணம் ஆகியிருக்கும் என்ற எண்ணத்தோடு இந்த ஆண்டு தெரிவிக்கின்ற கருத்துக்களில் சிலவும் அவ்வாறு ஜீரணம் ஆகுமென்று எதிர்பார்த்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

4 அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு. மீதமுள்ள மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதமும், வாக்கெடுப்பும், சில மாற்றங்கள்.

இன்று 25—3—1978	மாலை	18. மருத்துவம், 19. பொதுச்சுகாதாரம்

ஆகியவற்றிற்கான முதல் அமைச்சர் அவர்களின் பதிலுரையும், வாக்கெடுப்பும் நடைபெறும். அதற்குப் பின்னாலே, எண். 7. மாநில சட்ட மன்றம் பற்றி இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாநில சட்ட மன்றத் துறையின் மீது விவாதம் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறதா? அல்லது இரவு 10 மணி வரை இருந்து அதன் மீது விவாதமும், வாக்கெடுப்பும் எடுத்து முடிக்கப் படுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று மாலை முதல் அமைச்சர் அவர்களின் பதிலுரையும், வாக்கெடுப்பும் முடிந்த பிறகு, கண்டிப்பாக மாநில சட்ட மன்றத் துறை பற்றி எடுத்துக் கொள்ளப்படும்.

26—3—1978 (ஞாயிற்றுக்கிழமை)	..	விடுமுறை
27—3—1978 (திங்கட்கிழமை)	..	21. மீனளம 35. நுகர் பொருள் வழங்கல. 57. பல் வகை மூலதனச்செலவு.
28—3—1978 (செவ்வாய்க்கிழமை)		8 தேர்தல்கள். 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.

அதன் பின்

மாலை ..	6	பத்திரப் பதிவு.	
	23	கூட்டுறவு.	
	25	சின்கோனா.	
	45	காட்டுவளத் துறை.	
	56	காட்டுவள மூலதனச் செலவு.	
29—3—1978 புதன்கிழமை	12	இந்து சமய அறநிலையக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்.	
மாலை 1-00 மணி	41	இயற்கையின் சீற்றங்கள் குறித்து	விவாதமின்றி வாக்கெடுப்பு
	42	பென்ஷன்.	
	43	மிஸலேனியஸ்.	
	46	இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.	
	48	ஜமீன்தார்கள் இழப்பீடு.	
		நிதி ஒதுக்கீடு சட்ட முன் வடிவுகள் அறிமுகம்.	
30—3—1978 (வியாழக்கிழமை)		நிதி ஒதுக்கீடு சட்ட முன் வடிவுகளின் மேல் விவாதம்.	

மற்ற நாட்களில் மாற்றமில்லை.

பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. இன்று பிற்பகல் 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-43 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமையில் பேரவை மாலை 4 மணி அளவில் மீண்டும் கூடியது.

3. 1978-79ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)—

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்—சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களின் நலனுக்காக நோய் வராமல் தடுக்கவும், வந்த நோயைப் போக்கவும் நல்ல பணி செய்வதற்காக தொண்டு செய்கின்ற ஒரு அமைப்பாக மருத்துவம், பொதுநலம், தியாகம், சீர்மை, திறமை இவைகளை உள்ளடக்கி மருத்துவர்கள் தங்களுடைய அரிய தொண்டின் மூலம் நாட்டிலே உள்ள கோடிக் கணக்கான மக்களுக்கு, ஒருசிலரே என்று சொல்லுகிற அளவுக்கு எண்ணிக்கையிலுள்ளவர்கள், நிதிப் பற்றாக்குறை நிலையில், வசதியின்மை நிறைந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி தங்களுடைய உழைப்பால் மக்களை வாழ வைக்க முயலுகின்ற ஒரு அமைப்பு மருத்துவத் துறை என்று சொல்ல நான் விரும்புகிறேன்.

மருத்துவத் துறை பல்வேறு பிரிவுகளை, பல்வேறு எண்ணங்களின் எதிரொலிகளை உள்ளடக்கி நாட்டு மக்களுடைய நல்வாழ்விற்காக செயல்படுத்துகிற, ஆற்றலும் அறிவும் பெற்றவர்களின் நல்லதொரு கூட்டமைப்பாகும் என்று நான் அதை இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே தங்கள் தொகுதியிலும், தங்கள் பகுதியிலும் உள்ள வசதியின்மையை, அதாவது மருத்துவர்கள் போதாது என்கிற குறையும், மருத்துவர்கள் இருந்தால் மருந்து இல்லை என்ற நிலையும், மருந்தும் மருத்துவர்களும் இருக்கக்கூடிய நிலைமை இருந்தால் கட்டிடம் இல்லையென்ற நிலையும், இவை அத்தனையும் இருந்தால் சீராகப் பணியாற்றுவதில்லை என்கின்ற குறையும், இப்படி விரிவாக எடுத்துச் சொல்லி தங்களது கடமை உணர்வுகளைச் செயலாக்குவதற்காக, இங்கே அரசைத் தூண்டி விடுபவர்களாக, நன்றாக எரியும் விளக்கில் எண்ணெய் இருந்தாலும் திரியைத் தூண்டி விடுவது போல், எங்கள் உள்ளத்தில் நல்லெண்ணம் இருந்தாலும், நல்வாழ்வுக்கு மக்களுக்குத் தொடர்பு ஏற்படுத்த வேண்டுமென்ற ஆர்வம்

இருந்தாலும், அந்த ஆர்வம் சோர்விலே தேய்ந்து, நைந்து போகக் கூடாது என்ற மிகப் பெரிய பொறுப்புணர்ச்சியோடு தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியதை நான் படித்தும் கேட்டும் புரிந்து கொள்ள முடிந்தது.

இந்த அரசைப் பொறுத்தவரை நான் ஒன்றைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். மருத்துவம் எந்த அளவுக்கு மக்களுக்குப் பயன்பட வேண்டுமோ அந்த அளவுக்குப் பயன்பட ஒவ்வொருவரும் அவரவர் கடமையைச் செய்கிறார்களா என்ற கேள்வியை முதலிலேயே வைத்து, அதற்குப் பதில் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். எனக்குத் தெரிந்த வரையில் இந்த ஏழெட்டு மாதங்களில் நேரடியாக நான் கவனித்த வகையில் பல மருத்துவ மனைகளுக்கு நேரடியாகச் சென்று இன்னமும் முழு நிலைமையையும் திடீர் சோதனை மூலம் நானே தெரிந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும், நண்பர்களைக் கொண்டும், அமைச்சர்களைக் கொண்டும் ஆங்காங்கே கவனித்ததில், அலட்சியப் போக்கும், திறமை இருந்தும் பயன்படுத்தாமல் ஏதோ நாள் கடந்து கொண்டு போகிறது என்ற நிலையில் பணியாற்றுவதை நான் ஓரளவு தெரிந்து கொள்ள முடிந்தது.

எல்லோரும் அப்படி இருக்கிறார்களா என்று கூறினால் நிச்சயமாக நான் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு சிலர் என்கின்ற வகையில் சில நேரங்களிலே பல பெரிய தவறுகளுக்கு ஒரு சிலருடைய செயல் காரணமாகி விடுகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இங்கே பேசிய பிரதான எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒரு குறிப்பை இங்கே தந்துள்ளார்கள். எப்போதும் சொல்வதுபோல் நாங்கள் செய்ததைத் தானே நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்கள் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்: என்ன புதிதாகச் செய்துவிட்டீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நான் மனப்பூர்வமாக ஒப்பு கொள்கிறேன், இங்கே கட்டியிருக்கிற கட்டடங்களை எல்லாம் மருத்துவ மனைகளை எல்லாம் இடித்துவிட்டுப் புதிதாக நாங்கள் திட்டமிட்டு புதிய கட்டடங்கள் கட்ட ஆரம்பித்திருக்கிறோம் என்று சொல்வதற்கு நாங்கள் ஆசைப்படாதது எங்களுடைய குற்றம், தான். அதை நான் மறுக்கவில்லை.

அது மட்டும் அல்ல. நடமாடும் மருத்துவ மனை என்று சொல்கின்ற அளவுக்கு இரண்டு மருத்துவர்கள் அவர்களுக்குத் துணைவர்கள் என்கின்ற வகையிலே மருந்தகத்தையும் உள்ளடக்கி ஆங்காங்கே கிராமப் பகுதிகளுக்குச் சென்று தங்கள் கடமையைச் செய்ய அவர்கள் முன்வந்த நேரத்தில் மத்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் ஒரு கருத்து வேறுபாடு வந்தது என்பதும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவைகளில் படித்துப் பட்டம்பெற்ற டாக்டர்கள், மருத்துவர்களை வைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றும் ஏதோ ஒரு சில ஆண்டுகள் என்ற வகையில் கூட அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் நடத்த வேண்டுமென்று சொன்னபோது தமிழக அரசு மறுத்ததற்குப் பிறகு, உங்கள் மாநிலத்தில் வேண்டுமென்றால் உங்கள் மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை இருந்தால் அதைச் செயல்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொன்னதையும் இந்த மாமன்றம் மறந்திருக்காது என்று நம்புகிறேன். அந்த வகையில் இந்த அரசு செயல்படுத்த முன்வந்து, குறிப்பாக, நடமாடும் மருத்துவ மனையை அமைத்து ஆங்காங்கே வசதிகளை ஏற்படுத்தித் தர நாங்கள் முன்வந்தபோது குறை கூறியவர்கள் இந்த அவையில் இருக்கிறார்கள் என்று நான் கூறமாட்டேன், இந்த அவைக்கு வெளியே உள்ள பலர் அந்தக் குறைகளைக் கூறியதையும், அது எங்கே நடமாடப் போகிறது, அது ஒரு நாள் உட்கார்ந்து விடும் என்று சொன்னவர்களையும் நான் இந்த நேரத்திலே நினைவுகொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

எங்களைப் பாராட்டியே தீரவேண்டும், பாராட்டினால் தான் எங்களுக்கு உற்சாகம் வரும் என்று சொல்லத் தயாராக இல்லை. பாராட்டாமல் எந்த அளவிற்கு எங்களைக் குற்றங் குறை காணுகிறார்களோ அந்த அளவிற்கு அவர்களைப் போற்றிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களுடைய சோர்வு எங்களுக்குச் சொந்தமாக ஆக்ரமித்துக் கொள்ள முனையும்பொழுது அதைத் தடுப்பதற்கு அப்படிப்பட்ட குற்றங்குறைகள், அப்படிப்பட்ட எதிர்ப்புகள் பயன்படும் என்ற வகையிலே அவைகளை ஏற்றுக்கொண்டு எங்களைக் கொஞ்சம் சுறுசுறுப்பு உள்ளவர்களாகச் செயல்படுகிறவர்களாக ஆக்கிக்கொள்ள அவைகளைப் பயன்படுத்திக்கொள்கிறோம். அப்படி விரும்புகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 25

நானே சொல்லியிருக்கிறேன், இதே மாமன்றத்திலே என்று எனக்கு நினைவு. என்னுடைய நண்பருடைய—அவர் பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை—கைவிரல் துண்டானபோது ஒரு பர்லாங் தூரத்திற்குச் சென்று அங்கே இருக்கிற மருத்துவ மனையிலே கட்டுப் போட்டுக் கொள்ளலாம் என்று பார்த்தபொழுது, அங்கே டாக்டர்களும் இல்லை, ஊசிபோடுவதற்கு ஆள் இல்லை, கட்டுப் போடுவதற்குக் கூட ஆள் இல்லை என்ற நிலை, அதற்குப் பிறகு 100 மைல் தூரத்தில் உள்ள நகரத்தில் உள்ள ஒரு மருத்துவ மனைக்குச் சென்று அவர் கட்டுப் போட வேண்டிய நிலைமை இருந்தது என்பதை இங்கே சொல்லியிருக்கிறேன், எனக்கு நினைவு இருக்கிறது. அப்படி சொல்லியிருந்தால் மீண்டும் சொல்கிறேன் என்று எடுத்துக்கொள்ளுங்கள்; சொல்லவில்லையென்றாலும் எடுத்துக்கொள்ளுங்கள். இதையே ஒரு ஆதாரமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இந்த நிலையில், 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலைமையை நான் சொல்லும் வகையில், நாங்கள் என்ன, என்ன செய்திருக்கிறோம் என்ற புள்ளி விவரங்களை எல்லாம் இங்கே தந்திருக்கிறோம், நான் திரும்பச் சொல்லவில்லை. காலையிலே சொன்னார்கள் நிதிப் பற்றாக்குறை இருந்தாலும் நல்லவேளை, நேரப் பற்றாக்குறை இல்லை அந்த அளவிற்கு வாய்ப்புத் தந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

[மாலை 4–10]

அந்த அளவிற்குத் திருப்தியிருந்தாலும் நிதியில்லாத நேரத்திலும் நாங்கள் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை நீங்கள் படித்துப் பார்த்து இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையில் அவைகளைத் திரும்பவும் சொல்லாமல் ஒன்றிரண்டை மட்டும் நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

150 பேர்கள் புதிய மருத்துவர்கள் என்ற நிலைமையில் தொடங்கி 450 புதிய மருத்துவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கின்ற அளவிற்கு நாங்கள் திட்டம் தீட்டியிருக்கிறோம் என்றால் அது நடைமுறைச் சாத்தியமா இல்லையா என்பதல்ல, அதைச் செய்ய முனைந்திருக்கிறோம் என்பதை இங்கே உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும், அதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

1978 மார்ச் 25] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அத்துடன் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, கேள்வி கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் என்று சொன்னேனே, அந்தக் கேள்விக்கான பதிலைப் பெறுவதற்காக நான் முயன்று பார்த்தேன் ஏழெட்டு மாதங்களாக. ஒன்றை நான் வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன்.

வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவத் துறையிலே விசேட பயிற்சி பெற்று, திறமை பெற்று, அங்கிருந்து வந்து இந்த நாட்டு மக்களுக்கு அவர்கள் பயன்படுவதற்கான வாய்ப்பு தர வேண்டுமென்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு கோப்பிலே நான் அதைப்பற்றி எழுதும் பொழுது, முதலிலே வெளிநாடுகளுக்குச் செல்ல பதிவு செய்து கொண்டு, அதற்குப் பிறகு வெளிநாடுகளுக்குப் போக வாய்ப்பு பெற்று, இந்தத் துறையிலே பயிற்சி பெறுகிறேன் என்று 'பாண்ட்' எழுதிக் கொடுக்கிறார்களே அதில் இத்தனை ரூபாய் தருகிறேன் என்ற நிலைமைகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதாவது, வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பி வந்து, அரசுத் துறையிலே பணியாற்ற விரும்பாமல், தனியார் துறையிலோ, தனியாகவோ பணி செய்ய விரும்பினால் அதற்கு இத்தனை ரூபாய் நஷ்ட ஈடு என்று தமிழக அரசுக்குக் கொடுத்து விடுவது என்று ஒரு பாண்ட் எழுதி வாங்கிக் கொள்கிறார்கள், ஒரு பத்திரத்தில்.

நான் உங்களையெல்லாம் உள்ளத்தைத் தொட வைக்க வேண்டுமென்று ஒரு கேள்வியை வைக்க விரும்புகிறேன். ஒருவர் எம்.பி.பி.எஸ். படித்து, டாக்டர் என்ற பட்டத்தோடு வெளி வர வேண்டுமானால் இலட்சத்து ஐயாயிரம் ரூபாய் தமிழக அரசு அந்த மாணவருக்கு, படித்துப் பட்டம் பெறுவதற்காக தொடக்கத்திலிருந்து செலவு செய்கிறது என்ற புள்ளி விவரத்தை அதிகாரிகள் தருகிறார்கள். இலட்சத்து ஐயாயிரம் ரூபாய்களைத் தமிழக அரசு செலவு செய்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அது தமிழக அரசினுடைய சொந்தப் பணம் அல்ல, மக்களுடைய பணம். எதற்காக? அந்த மக்களுக்கு நன்மை செய்வதற்காக. எப்படிப்பட்ட நன்மைகள்? இங்கே சொன்னார்களே,

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்று. அதற்கேற்ப நோயில்லாமல் மனிதன் வாழ்வதற்காக, வந்த நோயைத் தீர்ப்பதற்காக. இதற்காக இத்தனை ஆண்டுகள் ஒருவர் படித்து, இத்தனை இலட்சம் ரூபாய் வரிப் பணத்திலிருந்து செலவு செய்து, அவர் பட்டம் பெற்ற பிறகு சில ஆண்டுகள் வேலை செய்துவிட்டு, நான் போய் வெளி நாடுகளில் மருத்துவத் துறையிலே விசேஷ பயிற்சிபெற்று, ஏதாவது ஒன்று, அந்த வகையிலே திறமையானவராக நான் திரும்பி வந்து இந்த நாட்டிற்குச் சேவை செய்ய விரும்புகிறேன் என்று சொல்லி, நம்பிக்கைக்காகப் பத்திரம் எழுதிக் கொடுத்து, திரும்பி வந்த பிறகு பத்தாயிரமோ, பதினைந்தாயிரமோ கொடுத்து விட்டு நான் வெளியே வேலை செய்யப் போகிறேன் என்று சொல்லி திரும்பவும் ஜெர்மனிக்கோ, யு.கே. என்று சொல்லப்படும் இலண்டனுக்கோ அல்லது அமெரிக்காவிற்கோ அல்லது பிரான்ஸ் நாட்டிற்கோ இப்படி எங்கேயாவது சென்று விடுகிறேன் என்றோ அல்லது தனியார் துறையிலே ,பணியாற்றி அதிகச் சம்பளம் வாங்கிக் கொள்கிறேன் என்றோ அல்லது தானே டிஸ்பென்சரியைச் சொந்தமாக ஆரம்பித்து திறமையைக் கொண்டு தானே சம்பாதித்துக் கொள்ள விரும்புகிறேன் என்றோ சொல்கிறார்களே அதைத் தடுக்க வேண்டாமா ?

உங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டு, உங்களை எந்தத் தீர்ப்பை வழங்குவது என்ற நெருக்கடிக்கு ஆளாக்காமல், பொறுப்பேற்றுக்கொண்டுள்ள நான் ,அந்தக் கேள்வியை எனக்கே மாற்றிக் கேட்டுகொண்டதற்குக் கிடைத்த பதில், அவர்கள் பத்திரத்திலே கையெழுத்து இடும்பொழுது எத்தனை வயது வரையில் அவர்கள் பணியாற்றலாம் என்று அனுமதி வழங்கப்படுகிறதோ, சட்டத்தின் அடிப்படையில் அந்த வயது வரையில் தமிழக அரசினுடைய மருத்துவ மனைகளில்தான் பணியாற்றுவேன் என்று எழுதித் தந்தால் அவர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பலாம் என்று நான் சொன்னேன், சொல்கிறேன். இதில், என்ன தவறு என்று எனக்குப் புரியவில்லை.

தமிழக அரசு செலவு செய்வது ஏதோ தனிப்பட்ட மனிதர்களுடைய பணம் அல்ல, மக்களுடைய வரிப் பணம். இந்த வரிப் பணத்தைக் கொண்டு படித்து, பட்டம் பெற்று, அந்தப் பயிற்சிக்காக ஓராண்டு பணியாற்றி, அந்தப் பயிற்சியையும் பெற்று அதற்குப் பிறகு அரசினுடைய வாய்ப்பை,

சக்தியை, வசதியைப் பயன்படுத்தி, வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பி வந்தபிறகு, ரூ. 5,000, ரூ. 10,000 பெற்றுக்கொள்ளுங்கள், நான் வெளியே சென்று வேலை செய்கிறேனென்றால் அது நியாயந்தானா ? அதை அனுமதிக்கலாமா ?

ஏன் தாமதம் ஆகிறது என்று சிலர் கேட்பதாக நான் கேள்விப்படுகிறேன். படித்தேன், சிலர் பேசுவதையே கேட்டேன். என்னுடைய வருத்தம் எல்லாம், விவரம் தெரிந்தவர்கள், நன்கு விஷயம் புரிந்தவர்கள், இதைப்பற்றி அவர்களுக்கு யாரும் கற்றுக்கொடுக்க வேண்டிய தேவையில்லையென்ற அந்த அளவுக்கு நிலைமைகளை நன்கு அறிந்து தெரிந்தவர்கள் இப்படிச் சொல்கிறார்களென்றால், எனக்கு உண்மையிலே புரிந்துகொள்ள முடியவில்லை. எந்த நோக்கத்தோடு அவர்கள் அந்தக் கருத்தை வைக்கிறார்கள் என்று.

உண்மையிலே, இந்த நாட்டிற்குத் தொண்டு செய்வது அரசாங்க மருத்துவமனையானால் என்ன, தனியார் மருத்துவமனையானால் என்ன, அவர்கள் மக்களுக்குத் தொண்டு செய்கிறார்களாவென்றால், அந்தக் கேள்வி நியாயமாக இருக்கலாம். ஆனால், எதற்காக மருத்துவமனை ? எதற்காக இவ்வளவு பணம் செலவு செய்யப்படுகிறது ? எதற்காக திட்டம் இடப்படுகிறது ? எதற்காக வெளியே அனுப்பப்படுகிறார்கள் ? வெளியே அனுப்பப்பட்ட பிறகு, அதற்குரிய கருவிகள், இயந்திரங்கள் நமக்கு எதற்காகச் சேர்த்து வைக்கிறார்கள்? அதைப் பயன்படுத்த, தகுதி பெற்றவர்கள் திரும்பி வந்த பிறகு, நான் இங்கே இருக்கவில்லை, வெளியே போகிறேன் என்று சொன்னால் அதை எந்த அரசும் ஒத்துக் கொள்ள முடியாது என்ற என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆகவேதான், நான் பொறுப்பேற்ற பிறகு, நான் கோப்பிலே எழுதும்போது, புதிய நிபந்தனையைப் போட வேண்டுமென்று வற்புறுத்தினேன். இரண்டு ஆண்டுகள் நான் வெளியிலே பணியாற்றுகிறேன் என்று வெளி நாட்டிற்குச் செல்கிறார்கள். அங்கிருந்து கொண்டு இன்னும் ஓராண்டு என்று எழுதுகிறார்கள். அதற்குப் பிறகு இன்னும் ஓராண்டு என்று எழுதுகிறார்கள். அதற்குப் பிறகு விலகிக் கொள்கிறேன், நஷ்ட ஈடு தருகிறேன் என்று சொல்கிறார்கள்.

அனுமதிக்கலாமா? அனுமதிக்க முடியுமா? இது நியாயம் தானா? அனுமதிக்க முடியாது அனுப்புவதற்கில்லையென்றாலும் ஏதோ இரண்டு ஆண்டுகள் அங்கே சென்று அங்கே இருப்பவைகளைத் தெரிந்துகொண்டு ஏதோ தங்களுடைய கடமைகளை மக்களுக்குச் செய்ய வாய்ப்பிருக்கிறது, போய் வரலாம் என்று சொன்னால், அதையும் தவறாகப் பயன்படுத்த முயன்றால், அதைத் தடுக்கவேண்டாமா?

அதைவிட இன்னொன்றையும் சொல்கிறேன். நாம் இங்கே இருந்தாலும், வெளியே இருந்தாலும் என்ன சொல்வோம்? கிராமத்திற்குச் சென்று, மருத்துவர் ள், அந்த ஒன்றும் அறியாத அப்பாவியானவர்களுக்கு, விவரம் தெரியாதவர்களுக்கு, நாகரீகம் புரியாதவர்களுக்குத் தங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வாய்ப்பு வசதியற்றவர்களுக்கு, வரும் நோயைத் தடுப்பது; நோயைத் தடுப்பது மட்டுமல்ல, நோயை போக்குவது நோயைப் போக்குவது மட்டுமல்ல, எதிர்காலத்திற்கு உத்தரவாதம் அளிப்பது என்ற அளவுக்குத் தொண்டு செய்ய வேண்டும், சிறப்பு அம்சத்தைப் பெற்றவர்கள், திறமையைப் பெற்றவர்கள், கிராமங்களிலே போய் பணி செய்யலாம் என்று எல்லோரும் சொல்கிறார்கள். எல்லோருக்கும் அந்த ஆசை இருக்கிறது.

ஆனால் கணக்கிட்டுப் பார்க்கும்போது, நான் முன்பே சொல்லியிருக்கிறேன், வேதனையோடு சொல்கிறேன். ஏறத்தாழ 20 ஆண்டுகள் கூட இந்தச் சென்னை நகரத்தைவிட்டு வெளியே எட்டிப் பார்க்காத மருத்துவர்கள் சென்னை நகரத்திலேயிருக்கிறார்கள் என்று சொல்கிறேன். அவ்வளவு படித்தவர்கள், அவ்வளவு நன்றாகப் படித்து, அனுபவம் பெற்று அறிவாற்றல் பெற்றவர்கள், கிராமப் பகுதிகளுக்கு வேண்டாம்—திருச்சிக்கோ, மதுரைக்கோ, திண்டுக்கல்லுக்கோ, அல்லது, குடந்தைக்கோ, அல்லது நெல்லைக்கோ, அல்லது தூத்துக்குடிக்கோ, அல்லது தென்காசிக்கோ, அங்கே ஓரிடத்திற்குச் சென்று, பல டாக்டர்களைத் தயாரிப்பது போன்ற அளவிற்குத் தங்களுடைய திறமையை அங்கே பயன்படுத்தி மற்ற இளைஞர்களாக வந்துள்ள டாக்டர்களுக்கு தங்களுடைய திறமையைக் கற்றுக்கொடுத்தார்களானால், அவர்களைத் தயாரிப்பாளர்களானால், இந்த 20 ஆண்டுகளில் எத்தனை நல்ல சிறப்பு வாய்ந்த, சக்தி வாய்ந்த டாக்டர்கள்

இந்த நாட்டிலே உருவாக்கப்பெற்றிருப்பார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். 20 ஆண்டுகள், 22 ஆண்டுகள் என்பது ¼ நூற்றாண்டு—ஒரு தலைமுறை என்று சொல்கிற அளவுக்கு அது அங்கே தடுக்கப்பட்டு, மக்களுடைய வசதி, வாய்ப்புகள் அத்தனையுமே பாழாக்கப்பட்டு, தான், தனது குடும்பம், தனது இருப்பிடம், தனது வளர்ச்சி, அந்த வளர்ச்சிக்கேற்றவாறு தன்னுடைய சுற்றுச் சார்பு என்று இருந்து வந்தார்கள்.

[மாலை 4–20]

இவைகளை எல்லாம் அனுமதிக்கிற எண்ணத்தோடு இருந்து விட்டார்கள். அல்லது இருந்துவிட அனுமதித்து விட்டார்கள். அல்லது அவர்களை வற்புறுத்தி போகச் சொல்லவில்லை. அவர்களை வேண்டிக் கொண்டாவது அனுப்பிவைத்தார்களா என்றால் இல்லை என்ற நிலைமையைப் பார்க்கும்போது நமக்கு என்னென்ன தோன்றும்?

ஏன் அவர்கள் இங்கே அனுமதிக்கப்பட்டார்கள்? சென்னையிலே இருக்கிற மக்கள் மட்டும்தான் நோய்வாய்ப் படாமல் இருக்கவேண்டுமா? நான் பலமுறை மருத்துவ நண்பர்களிடம் விவாதிப்பது உண்டு. நான் ஒரு மருத்துவமனை துவங்கினேன் என்பது உலகறிந்த விஷயம். விளம்பரத்திற்காக அல்ல. அது என்னவாயிற்று என்பதும் தெரியும். அப்படி வரும்போது அவர்களிடம் கேட்டேன். கிராமப் புறத்திலே இருந்து வருகிறவர்கள் சென்னைக்கு வந்த உடனே நோய்வாய்ப்படுகிறார்களே, ஏன் என்று கேட்டபோது ஒரு விசேஷ மருத்துவர் சொன்னார், தொழிற்சாலைகள், தொழில் நிறுவனங்கள், ஆலைகள் இவைகள் எல்லாம் எங்கெங்கு அதிகமாக இருக்கின்றனவோ, அது போல பல்வேறு மாநிலங்களில் இருந்தும், மாவட்டங்களில் இருந்தும் வந்து போகிற நிலைமை எந்த ஒரு இடத்தில் அதிகமாக நடைபெறவேண்டிய அளவில் சூழ்நிலை இருக்கிறதோ, அங்கே எல்லாம் நம்மையும் அறியாமல் நம்முடைய உடலில் ஏதோ ஒரு நோய் இருந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார். நான் அதை நம்பவில்லை. அது எப்படி இருக்க முடியும் என்று சொன்னேன். உதாரணத்திற்கு அவர் சொன்னார். நல்ல காற்று வசதியிலே, வயலிலே வேலை செய்து கொண்டிருக்கிற ஒரு விவசாயி சென்னைக்கு வந்தால் அவர் டி.பி. ஆஸ்பத்திரிக்கு போவதற்கு அதிக நாட்கள் ஆகாது என்று

சொன்னார். அப்போது நான் என்ன டி.பி. வந்தவனா என்று கேட்டேன். நாம் எல்லோரும் அப்படிதான், அதைத் தடுக்கக்கூடிய சக்தி பழக்கத்திலேயே நமக்கு வந்துவிடுகிறது என்று சொன்னார்.

ஒரு நோய் என்பது சுற்றிலும் இருக்கிற சுகாதாரத்தைப் பொறுத்து நம்முடைய உடம்பிலே இருக்கிற நிலைமைக்கேற்ப அது வலிவு பெற்றதாக ஆகிறது. நம்மை ஜீரணிக்க முடியாமல் நம்முடைய பழக்கவழக்கங்களின் நிலைமைகளை ஒட்டி வளர்ந்து விட்டதன் காரணமாக அப்படிப்பட்ட நிலைமைக்கு அது தன்னை சொந்தமாக்கிக்கொண்டு அதையும் ஜீரணித்துக் கொண்டு, மனிதன் வாழக்கூடிய நிலைமைக்கு ஆளாகி இருக்கிறான் என்று சொல்லவேண்டியிருக்கிறது. அதை எல்லாம் எண்ணிப்பார்த்தால் கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுக்கு வாய்ப்பு வசதிகள் இல்லை என்று சொல்லுகிற நாம் அவ்வப்போது வசதிகளை உருவாக்க வேண்டும் என்று வரும்போது நாம் எவ்வளவு பெரிய பொறுப்போடு செய்ய வேண்டியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே நிதி போதாது என்று சொன்னார்கள். அண்ணாவினுடைய பேரால் இருக்கிற புற்று நோய் மருத்துவமனைக்கு நிதி போதாது என்று சொன்னார்கள். நிதி போதாது தான். இல்லை என்று சொல்லவில்லை. நாங்கள் எதிர்பார்க்கிற அளவுக்குச் செலவு செய்யமுடிகிறதா என்றால், முடியவில்லை. ஓரளவுக்காவது செய்யலாம் என்றால் அதைச் செய்யவிடுகின்றார்களா என்றால், ஆங்காங்கே ஓரிருவரைத் தூண்டிவிட்டு அல்லது அந்த உணர்வை உண்டாக்குகிற அந்த அளவுக்கு, சம்பளம் வேண்டும், வசதி வேண்டும் என்று அவர்களையும் தூண்டிவிட்டு, அதாவது 'குழந்தையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவதைப் போல' மற்றவர்களையும் தூண்டிவிடுகிற இந்த நிலையை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை.

வரியைப் போட்டால் ஏன் போட்டீர்கள் என்கிறார்கள். வரியைப் போடாவிட்டால் ஏன் போடவில்லை என்று மத்திய அரசு கேட்கிறது. ஆனால் அதே நேரத்தில் ஊதியம் அதிகமாகக் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்று கேட்கிறார்கள். அதைக் கொடுத்து விட்டு நிதி போதவில்லை என்றால், எதற்கு நிதி போதவில்லை? கேள்வி! இப்படி சிக்கலான

சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் நாம் அனைவரும் தொடர்ந்து ஒரு காரியத்தைத் திறம்பட செய்ய முடியுமா என்றால் நிச்சயமாக செய்ய முடியும் என்று என்னால் கூற முடியாது என்றாலும், நாம் நல்ல நோக்கத்தோடு செயல் படுகிற நேரத்தில் இது போகப் போக மக்களே உணர்ந்து இந்த அரசினுடைய நோக்கம் நியாயம், எந்த நோக்கத் தோடு அவர்களைத் தேர்ந்தெடுத்தோமோ இங்கே தேர்ந் தெடுக்கப்பட்ட 234 அங்கத்தினர்களையும் எந்த எண்ணத் தோடு தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறோமோ, அதற்கு நாம் குறுக்கே நிற்கக் கூடாது என்று ஒவ்வொருவருக்கும் தோன்றும், என்ற நம்பிக்கை எனக்கு இன்னும் அதிகமாக இருக்கிற வகையில் சந்தர்ப்பம் உருவாகிறது என்ற நிலை மையில் நான் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்கிறேன், இந்தத் திட்டங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றனவே தவிர, இத்தோடு நின்று விடாது, இவை தொடரும் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் ஆட்களை அனுப்பி, ஆங்காங்கு இருக்கும் மக்களை நேரில் சென்று எப்படி இருக்கிறீர்கள் என்று விசாரிக்க நட மாடும் மருந்தகங்களை வைத்து இருக்கிறோம். இதில் எங்களைத்தானே பின்பற்றுகிறீர்கள் என்று சொன்னார்கள். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். பழங்காலத்தில் சந்திரன், சூரியன், இருக் கின்றன என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு பழங் காலத்திலேயே பெரியவர்கள் சொன்னார்கள். அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்கள் இருக்கின்றன, எப்படி சந்திரன், சூரியன், பூமி இவைகளெல்லாம் மூடி மறையும். சுற்றும் என்றெல்லாம் சொன்னார்கள். பெரியவர்கள் சொன்ன தைத்தானே இந்த விஞ்ஞானிகள் சொல்கிறார்கள் என்று சொல்லலாம். அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண் டும்.

அதைப் போல் கிரஹணம் ஏற்படுகிறது என்று சொன் னார்கள். தற்போது பாம்பு பிடிப்பதால் அது ஏற்படுவது இல்லை என்று விஞ்ஞானிகள் சொன்னாலும், சந்திரன், சூரி யன், பூமி இவைகளின் சுழற்சியால் ஏற்படுகிற நிலைமை களால் ஏற்படுகிறது என்று விஞ்ஞான ரீதியாக நமக்குச் சொல்வதைப் பார்க்கிறபோது நாம் பெரியவர்கள் சொன் னதுதானே என்று சொல்லிக் கொண்டே போகலாம். அதற்கு முடிவே கிடையாது. புதிய யோசனை இருக்கிறதா என்றால்,

பலர் நல்ல யோசனைகளைச் சொல்லி இருக்கிறார்கள். சிலர் பாராட்டியிருக்கிறார்கள். அருமை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சில விஷயங்களைச் சொல்லி பாராட்டியிருக்கிறார்கள். நன்றி கூறிக்கொள்கிறேன். இங்கே பல அங்கத்தினர்கள் பாராட்டிவிட்டு, இவைகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அவற்றை உணர்கிறோம். அவைகளைக் கண்டிப்பாக நாங்கள் செய்வோம்.

முதலில் இந்த 7–8 மாத காலத்தில் நான் அறிந்து கொண்ட அளவில் செய்ய வேண்டிய நடை முறை, நாம் செலவழிக்கிற பணம் வீணடிக்காமல், வீணாகாமல் தடுத்தாக வேண்டும்.

முதலில், மருந்துகள் களவாடப்படுவதைத் தடுத்தாக வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் மருத்துவர்கள், பணியாளர்கள், செவிலியர்கள் யாராக இருந்தாலும், தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்யும் நிலைமை ஏற்பட்டாக வேண்டும். இதற்குத்தான் முதலில் நான் என்னுடைய அனுபவத்தில் இருந்தும்–நான் இரண்டொருமுறை மருத்துவ மனையில் படுத்திருந்த காரணத்தால் அங்கே சுற்றுச் சார்பில் என்னென்ன பேசுகிறார்கள் என்று கவனித்த அந்த அனுபவத்தைக் கொண்டும், பெரியவர்கள் சொல்லி இருப்பதை வைத்தும், புத்தகங்களில் எழுதி இருப்பதை வைத்தும், இப்படி பல அனுபவங்களை வைத்தும் நமக்கு வரும் அறிவைப் பயன்படுத்தி, அந்த நினைவில் நான் ஒன்றைச் செய்ய விரும்புகிறேன்,

டீன் என்று ஒருவர், சூப்பிரன்டென்டென்ட் என்று ஒருவர், பிரின்சிபால் என்று ஒருவர் இப்படி பிரித்தாக வேண்டும் என்று முடிவு செய்து, அதை அமுல்படுத்த இருக்கிறேன்.

அது மட்டுமல்ல, வார்டுகளாகப் பிரித்தாக வேண்டும். ஒரு 10 படுக்கைகள் அல்லது 20 படுக்கைகள் இருக்கின்றன என்றால், அந்த 20 படுக்கைகளுக்கு யார் யார், எந்தெந்தப் பொறுப்பில் இருந்தாலும், அதை மேலாக நின்று கவனிக்க வாரத்திற்கு ஒரு மருத்துவர், அதற்கென தனியாக நியமிக்க வேண்டும். அங்கே எது நடந்தாலும், நடக்காவிட்டாலும், அவர் உடனடியாக அதைப் பற்றி தெரிவிக்கவும், கண்டிக்கவும் உரிமை பெற்றவர்.

அதே நேரத்தில் அவர் தொடர்ந்து அதே இடத்தில் இருக்காமல் வாரத்திற்கு ஒரு முறை இன்னொரு இடத்திற்கு மாற்றப்படுவார். அங்கே வேலை செய்தவர்கள் பிரித்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவர். ஆகவே, தொடர்ந்து ஒரே இடத்தில் அவர்களுக்குச் சொந்தம் என்று எண்ணி ஏதாவது தப்புக் காரியம் செய்து விடுவதைத் தடுக்கிற வகையில் இவைகளை நாம் செய்ய வேண்டியிருக்கிறது.

மருந்துகளைக் களவாடுதல், கொண்டு போய் விற்றல், அதை வாங்குதல் ஆகியவற்றைச் செய்கிறவர்கள் எல்லாம் கடுமையாக தண்டிக்கப்படும் வகையில் ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதைச் செய்ய வேண்டும் என்று நீங்களும் விரும்புவீர்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை.

மிகக் கடுமையான தண்டனைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டாக வேண்டும். தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள மக்கள் மருத்துவ மனைக்கு வருகிறார்கள். அவர்கள் ஏழையாக இருக்கலாம், பண வசதி படைத்தவர்களாக இருக்கலாம். யாராக இருந்தாலும் நல்ல மருந்துக்குப் பதிலாக மண்ணெண்ணையை ஊசி போடும் டாக்டர்கள், இப்படிப்பட்ட பயங்கரக் கொடுமையைச் செய்கிற டாக்டர்கள் இருக்கிறார்கள். அப்படி செய்வதையும் செய்துவிட்டு, அங்கேயே நான் தொடர்ந்து இருப்பேன், என்ன செய்து விட முடியும் என்று நினைத்தால், நான் ஒன்றைச் சொல்கிறேன், ஒருவனுடைய கழுத்தை வெட்டும் கொலைகாரனுக்கும், இப்படிப்பட்ட மருத்துவருக்கும் வித்தியாசம் கிடையாது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அத்தகைய கொடுமையான காரியத்தைச் செய்கிற' அப்படிப்பட்ட வகையில் உயிரைப் போக்கக் காரணமாக இருந்த ஒருவர் பெரிய தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய எண்ணம்.

[மாலை 4-30]

அவற்றை நிறைவேற்றுவதற்கான சட்டம் கொண்டு வரப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். அதை நீங்கள் நிச்சயமாக ஆதரிப்பீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

அதைப்போலவே, மருத்துவ மனைகளில் மாற்றங்கள் வேண்டும் ; சிறப்பு அம்சம், கண்காணிப்புகள், கவனிப்புகள், அக்கறை இவை எல்லாம் இருக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லி, நான் பதவி ஏற்பதற்கு முன்பேயும், பதவியேற்ற சில நாட்களுக்குப் பின்னாலும் சொன்னேன். இந்த கௌரவ மருத்துவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளில் பணியாற்ற வேண்டுமா? அவர்கள், வெளியேயும் தங்கள் வியாபாரத்தை வைத்துக் கொள்கிறார்கள். இங்கே வருகின்றவர்களையும் பார்த்து, நீ அங்கே வந்து ஊசி போட்டுக் கொள் என்று சொல்கிறார்கள். அங்கே பார்க்கும் போது நான் இங்கே பணியில் இருக்கும்போது வா, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்று சொல்கின்ற குற்றச் சாட்டுகள் நிறைய இருக்கின்றன. அவைகளை எண்ணிப் பார்த்துத்தான் நான் சொன்னேன்.

இன்னொன்றையும் சொல்வேன். நான் அனைவரையும் சொல்லவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். எதிலும் ஒரு சிலர் தவறு செய்தால் அனைவருக்கும் கெட்ட பெயர் வரும் என்பதை மறுக்கவில்லை, ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

வெளி நாட்டவர் இங்கே வந்து நம்முடைய சட்ட மன்றம் எப்படி நடக்கிறது என்று வேடிக்கை பார்க்கிறார்கள் அல்லது புரிந்து கொள்ள வேண்டுமென்று பார்க்கிறார்கள். அவர்கள் இங்கே என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருக்கும்போது நாம் இங்கே குழப்பம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தால் தமிழ் நாட்டில் மட்டுமல்ல ; இந்தியா முழுவதிலும் உள்ள சட்ட மன்றங்கள் இப்படித்தான் நடக்கின்றனவோ என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படும். ஒரு நாள் எப்படியோ ஒரு தவறு நடந்து விடுமானால், அதைப் பார்க்கின்றவர்களுக்கு எல்லா நாளும் அப்படித்தான் என்ற எண்ணம் தோன்றும் என்பது இயற்கையாக இருப்பதால் நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறோமோ அதைப் போல அவர்கள் இருந்து ஆக வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்குவதற்கு நாம் சில சமயம் குழந்தையைக் கண்டிப்பதுபோல கண்டிக்கவும் வேண்டியிருக்கிறது ; குழந்தையிடம் அன்பு செலுத்துவதைப் போல சில சமயம் அன்பு செலுத்தவும் வேண்டியிருக்கிறது.

ஆகையால் நம்முடைய கடமை உணர்வை அவர்கள் உணர்ந்து, பொறுப்போடு செயல்பட வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, இவைகளுக்குப் பிறகும் தவறு செய்வார்கள். ஒன்றிரண்டு தவறு செய்வார்கள் என்றால் கண்டிப்பாகத் தண்டிக்க வேண்டிவரும். இந்த வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க விரும்புகிறது. ஆகவே, விரைவில் சென்னையை தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிற, 10, 15 ஆண்டு, 20 ஆண்டு என்று இங்கே உட்கார்ந்து இருக்கிற நல்ல திறமையான மருத்துவர்கள் நிச்சயம் மற்ற இடங்களுக்கு மாற்றப்படுவார்கள்: அங்கு சென்று தங்கள் பணியைச் செய்து, பல இளைஞர்களுக்கு தங்கள் திறமைகளைக் கற்றுக் கொடுத்து, பல இடங்களில் ஸ்பெஷலிஸ்ட் என்று சொல்வார்களே, அதைப்போல பணியாற்றக்கூடிய நிலைமை விரைவில் உருவாக்கப்படும் என்பதையும் இந்தச் சட்டமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்த கருத்துக்களை அவர்கள் கேட்பார்கள் என்பதையும் அந்த வகையிலே அவர்கள் எல்லாம் எனக்கு ஒத்துழைப்பு தருவார்கள், தங்கள் கடமையை உணர்ந்து செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே சில தொற்றுநோய்கள் தோன்றுவதும், தோன்றியதைத் தடுப்பதும், தோன்றாமல் இருப்பதற்கான தடுப்பு முயற்சிகளையும் பார்க்கிறோம். அதற்கான புள்ளிவிவரங்கள் எல்லாம் தரப்பட்டிருக்கின்றன. அதைச் சொல்லி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. விவரங்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

எந்த அளவுக்கு வசதி இருக்கிறதோ அந்த அளவுக்கு அதை முழுமையாக, மிகப் பெரிய அளவில் பொறுப்போடு நாங்கள் பயன்படுத்துகிறோம். சில இடங்களில் இருக்கிறவர்கள் பழக்கத்தின் காரணமாக சில எழுத்துக்களை எழுதுவார்கள். உங்களைப் பதவியில் இருந்து நீக்கக் கூடாது என்பதற்கு உடனே காரணம் சொல்லவேண்டும் என்று அறிக்கை விடுவது வழக்கமாக இருந்தால் யார் யாருக்கு எழுதுவது என்று தெரியாமல் தவறு செய்கிறார்கள். அதைப்போல சிலர் எழுதுகிறார்கள். கட்டாயமாக இத்தனை ஆட்களை பிடித்துக்கொண்டு வா, இல்லையென்றால் இன்னின்ன செய்வோம் என்று அவரவர்களுக்கு ஏற்பட்ட பழக்கத்தின் காரணமாக ஏற்பட்ட தவறு என்றாலும் இந்த அரசு இது சின்ன தவறுதானே என்று

காதாமல் உடனடியாக சஸ்பென்ட் செய்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கிறது என்பதை ஆதாரத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதற்குமேல் சென்று யார் மீதும் குற்றச்சாட்டு சொல்ல விரும்பவில்லை. குறைகளைச் சொல்லும்போது, பிறர்மீது இருக்கிற குறைகளைச் சொல்லும்போது, நாங்கள் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் நிச்சயமாக இல்லை. எனக்கு என்றால் எங்களுக்கு, எங்களுக்கு என்றால் எனக்கு என்ற முறையிலேதான் நான் எப்போதும் இந்த மன்றத்திலே சொல்லி வருகிறேன். அதைப்போல, நான் எப்போதும் சொல்வதைப்போல நமக்கு அந்த எண்ணம் இருக்கக் கூடாது ; இல்லை என்று கூற விரும்புகிறேன்.

குற்றங்களை, தவறுகளை ஒத்துக்கொண்டால்தான் மனிதன் திருந்துவதற்கு வாய்ப்பு கிடைக்கும். திருந்துகிற வாய்ப்புக் கிடைத்தால் தான் அவன் தன்னுடைய கடமையைச் செய்ய முடியும். தன்னுடைய பொறுப்பிலே சரியாகச் செயல்பட முடியும். இந்த நேரத்தில் இங்குள்ள அத்தனைப் பேரின் கருத்துக்களையும், யோசனைகளையும் கவனத்தோடு எண்ணிப் பார்த்துத்தான் என்னுடைய பதிலை முன் வைக்கிறேன். நன்கு இயங்குகின்ற தன்மை மனிதனுக்கு இருந்தாக வேண்டும்.

சோர்வு அடைந்து அசந்து, அலுத்து உட்கார்ந்துவிடக் கூடாது. அந்த நிலைமையில் சிலருக்குச் சொந்தமாக நான் எதைச் சொன்னேனோ அது ஆகிவிடுகிறது. ஆகிவிட்டிருக்கிறது சில இடங்களில் என்று எண்ணும்போது எனக்கு வேதனையாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் ஒய்வு எடுத்துக் கொள்ள வேண்டிய வகையில், ஓய்வு வயது வரவில்லை என்றாலும், அவர்களைக் கட்டாயமாக கொஞ்ச நாளைக்கு விலக்கி வைத்து அவர்கள் மீது பரிதாபம் கொண்டு, முழுச் சம்பளத்தையும் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள், வேலை செய்கின்றவர்களை வேலை செய்வதற்குக் கொஞ்சம் இடத்தைக் கொடுங்கள் என்று சொல்கிற அளவில் நாங்கள் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இதிலே யார் மீதும் பழி வாங்கும் உணர்ச்சி இல்லை. [illegible] வேலை நீக்கம் தேவையா ? அந்தக் கட்டாய [illegible] எப்போது ஏற்படும் ? தானும் உட்கார்ந்துகொண்டு [illegible] இடத்தை இன்னொருவருக்கும் அனுமதிக்காமல், ஆனால்

அதே நேரத்தில், மக்களுக்கு செய்ய வேண்டிய வேலையை தானும் செய்யாது இருக்கும்போது அவரைக் கொஞ்ச நேரம் விலகி இருங்கள் என்று சொல்வதைத் தவிர ஒரு பொறுப்புள்ள ஆட்சிக்கு வேறு வழி இருக்காது என்பதை நீங்கள் உணர வேண்டும்.

ஒருவர் இங்கிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அனுப்பப்படுகிறார், ஏர்ன்ட் லீவு என்று யார் ஏற்படுத்தினார்களோ தெரியாது. ஏறத்தாழ $1\frac{1}{4}$ வருடம் அவர்கள் சம்பளத்தை வாங்கிக் கொண்டு இப்படி ஆண்டுக் கணக்கில் உட்கார்ந்து விடுகிறார்கள். ஆக, மாற்றப்பட்ட இடத்திற்கு ஆளும் போவதில்லை, ஆனால் சம்பளத்தையும் வாங்கிக் கொண்டிருக்கிறார். எதற்காக ? இப்படி ஒரு லீவு தேவைதானா ? இதற்கு லீவு என்று பெயரா ? நான் இதனை ஒரு அரசோ மருத்துவ அமைப்போ ஏற்றுக்கொள்கிறதென்று சொன்னால், அது தற்கொலை செய்து கொள்கிறது என்றுதான் சொல்ல முடியுமே தவிர மற்றவர்களுக்கு நம்பிக்கையும், நாணயமும், மரியாதையும் காட்டுவதாகப் பொருள் அல்ல.

எப்போது ஓய்வு எடுக்க வேண்டும்? 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்று உழைத்துவிட்டு இனிமேல் உழைக்க முடியாது, ஊசி போட வேண்டிய நேரத்திலே எந்த உடம்பில், எந்த நரம்பில், எந்தப் பகுதியில் போட வேண்டுமோ அது சரியாகத் தெரியவில்லை, கை நடுங்குகிறது கண் பார்வை தெரியவில்லை. ஆகவே ' நாங்கள் ஒய்வு எடுத்துக் கொள்கிறோம், நீங்கள் எங்களை விட்டுவிடுங்கள், எங்களுக்கு ஒய்வு சம்பளத்தையும் சேர்த்துக்கொடுங்கள் ' என்று கேட்பதுதான் நியாயமாக இருக்கும். இது அப்படி அல்ல.

இந்த இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வேலை செய்யப் போகவேண்டும் என்றால் உடனே லீவுதானா ? உடனே விடுமுறைதானா ? அவர்களைக் கேட்பதற்கு நாதி இல்லை. என்ன செய்வது ? உடனே என்ன சொல்ல வேண்டி இருக்கிறது. நீங்கள் உடனடியாக அந்த இடத்திற்கு போக வேண்டும். போய்ப் பதவியை ஏற்றுக்கொள்ளாவிட்டால் உங்களை அந்தப் பதவியிலிருந்து நீக்க வேண்டி வரும். இதை விட வேறு என்ன சொல்வது. இவரும் போவது இல்லை. அங்கேயும் ஆள் இல்லை என்றால் என்னவது ? இப்படியும் சிலர்

சண்டித்தனம் செய்வதை நான் பார்க்கிறேன். அவர்களுக்கெல்லாம் கொஞ்சம் சொல்லிக் கொடுக்க வேண்டியதைச் சொல்லிக் கொடுத்து புரிய வைக்க வேண்டிய நிலைமையை உண்டாக்க வேண்டி இருக்கிறது.

அடுத்து, கண்ணாடியைப் பற்றிச் சொன்னார்கள். 'இரண்டு ரூபாய்க்கு சராசரியாக வாங்கி 4 ரூபாய் வரையில் கொடுத்து எல்லோருக்கும் வழங்கினோம்' என்று சொன்னார்கள். நாங்களும் இப்போது வழங்குவதற்கிருக்கிறோம். அந்தக் கண்ணாடியிலே பலதரப்பட்ட நிலைமைகள் உண்டு. இதுதான் முன்னாலே கொடுக்கப்பட்ட கண்ணாடி (கண்ணாடியைப் பேரவைக்கு காண்பித்தார்) இப்போது ஆண்களுக்கு என்றும் தாய்மார்களுக்கு என்றும் பார்த்து அவர்களுடைய கண்களுக்குக் பொருத்தமான கண்ணாடியை, அது எந்த அளவுக்குப் பவர் பொருத்தமாக இருக்குமோ அப்படித் தேர்ந்தெடுத்து நாங்கள் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

[மாலை 4–40]

அதற்காக இரண்டு அல்லது மூன்று ரூபாய் விலை கூடுதலானாலும் ஒட்டுமொத்தமாக ஒருவருக்கே காண்ட்ராக்ட் மாதிரி கொடுத்து விடாமல், ஆங்காங்கு இருப்பவர்களைப் பரிசோதித்து, மருத்துவர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கச் செய்து, அதிகாரிகளைக் கொண்டு முடிவுசெய்யப்பட்டு, அதற்கு பிறகு நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம்.

இதைச் சொன்னால், நாங்கள்தானே கண்ணாடி கொடுப்பதற்கு ஆரம்பித்தோம், அதைத்தானே நீங்களும் செய்கிறீர்கள் என்று சொன்னால் நான் பணிவன்போடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், நீங்கள் ஆரம்பித்து வைத்தீர்கள் இல்லை என்று சொல்லவில்லை; ஆரம்பித்ததில் குறை இருந்தது என்பதை மற்றவர்கள் சொன்னார்கள் என்றால் அது இருந்ததா, இல்லையா, என்பதைப்பற்றி இப்போது நான் சொல்ல விரும்பவில்லை, தேவையில்லை. ஆனால் இதிலிருந்து இப்படி மாறுகிறது என்பதில் தவறு இல்லை என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கை வீணாகாது என்று இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி பல்வேறு வகைகள். நான் புதுப்புது மாற்றங்களைச் செய்ய விரும்புகிறோம்.

சிலருக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டு துன்பப்படும்போது அவர்களைக் கவனிக்க வேண்டியவர்கள் பொறுப்போடு கவனிக்க வேண்டும். இதை நான் இங்கே சொல்லும்போது உனக்கு ஒன்றும் மூளைக் கோளாறு இல்லையே என்று கேட்டு விட மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஏனெனில் இவ்வளவு நேரம் பேசியதை நீங்கள் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருக்கும்போது, நிச்சயமாக அந்த அவநம்பிக்கை உங்களுக்கு வராது. திரு. ஜேம்ஸ் அவர்கள் ரசித்துச் சிரிக்கிறார்கள்.

நாம் எதைச் செய்தாலும், எதை நினைத்தாலும் அந்தந்த மனிதர்களின் வாழ்க்கை அனுபவத்தின் கூறாக ஏற்படுவதை வைத்துத்தான் அதற்கு ஒரு புதிய பொலிவு, புது மாற்றம், திருத்தத்தை ஏற்படுத்த விரும்புகிறோம். வெறும் வெட்ட வெளியில் நின்றுகொண்டு ஒரு கட்டடத்தை கற்பனை செய்பவர் முதலில் ஒரு கட்டடத்தைக் கண்ணால் கண்டிருக்க வேண்டும்; அல்லது கட்டடம் என்ற அமைப்பைப் பற்றி கேட்டிருக்க வேண்டும் ; அதே போல் இங்கே சொன்னார்களாம். நான் இல்லை அப்போது, என் உடல் நலம் சரியில்லை என்ற காரணத்தால். இதைச் சொன்னவுடன் பத்திரிகையில் போடுவார்கள். எம்.ஜி.ஆர். உடல் நலம் சரியாக இல்லை என்று. அதுதான் முதலில் வரும், மற்ற விஷயங்கள் வெளியே வராது.

நான் கூட ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் கொண்டுவரலாம் என்று நினைத்தேன், மூன்று பத்திரிகைகள் பேரில். அவையிலே முக்கியமான செய்தியை முதல் அமைச்சர் என்ற பொறுப்பில்—இராமச்சந்திரன் என்று அல்ல—உங்களால், மக்களால், ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றுகிற வகையில் ஒத்துழைக்கிற அந்தச் சூழ்நிலையில் எல்லோரும் சேர்ந்து நடத்துகிற இந்த அரசுக்கு முதல் அமைச்சராக இருக்கிற நான் ஒரு செய்தியை வெளியிடும்போது, அதை அனைத்துப் பத்திரிகைகளும் வெளியிடும்போது குறிப்பிட்ட மூன்று பத்திரிகைகள் அதை மட்டும் போடாமல் விலக்குகிறது என்றால் அந்தப் பத்திரிகைகள் பற்றி இங்கே ஒரு உரிமைப் பிரச்னை கொண்டுவரலாம் என்று கூட நான யோசித்துக் கொண்டிருக்கிறேன். அது இப்போது தேவையில்லை என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 25

பத்திரிகைகளில் செய்திகளைப் போடுகிறவர்கள் இந்த நோய்பற்றி எல்லாம் மக்களுக்குச் சில சமயம் அச்சம் ஏற்படுகிற அளவிற்குச் செய்திகளை வெளியிடுகிறார்கள். பிரதான எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்களும் நானும் மறைந்துபோன மணியம்மையார் அவர்களுடைய இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளும்போது அவர் வேடிக்கையாக அல்ல வேதனையோடு சொன்னார்கள், மாரடைப்பால் இறந்து விட்டார், மாரடைப்பால் இறந்து விட்டார் என்று. மாரடைப்பு, மாரடைப்பு என்று போடும்போது யாருக்காவது ஒருவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டு விட்டால் நமக்கு மாரடைப்பு வந்துவிடுமோ என்று அஞ்சுகிற அளவிற்கு இல்லாமல் மாரடைப்பு என்றில்லாமல் திடீரென்று காலமாகிவிட்டார் என்று போட்டால் நலமாகயிருக்கும், உதவியாக இருக்கும் என்று சொன்னார். காரணம், அவர்களுக்கு அப்படி ஒரு நண்பர் இருந்து அந்தச் செய்தியைக் கேட்டு அவர் இறந்துவிட்டார். அவருக்கு அந்த நோய் இருந்தது.

எந்த ஒரு நோய் யாருக்கு இருந்தாலும் மனிதன் தன் நம்பிக்கையோடு இருக்க வேண்டும். என்றோ ஒரு நாள் மூச்சு வாங்குகிறது என்றால் ஓஹோ, மூச்சு வாங்குகிறதே, வாங்குகிறதே, ஒருவேளை நமக்கு நெஞ்சில் ஏதாவது கோளாறோ, இதயத்தில் கோளாறோ என்று எதற்கெடுத்தாலும் பயந்து, பயந்து தனக்குத்தானே சந்தேகித்துக் கொள்ளக்கூடாது. அப்படியிருந்தால் சாதாரண நோயாக கூட ஒரு பெரிய ஆபத்து எழுகிற நிலை உருவாகும்.

உதாரணத்திற்காகச் சொல்லுவேன், என்னுடைய வாழ்க்கைத் துணைவி 18 ஆண்டு காலம் காச நோயினால் பீடிக்கப்பட்டு காலமானாள். இதை நான் சொல்வதற்குக் காரணம், அன்றைக்கு இப்போதுள்ளது போல் மருந்து வசதி வாய்ப்பு இல்லாமல் இருந்தது. முன்னால் அந்த காலத்தில் எ.பி.சி. என்ற பவுடர் கொடுப்பார்கள், நெஞ்சிலே பெரிய ஊசி போடுவார்கள், அது இதயம் வரை செல்லும். இதை அகற்றிய பிறகு ஏற்படும் ரணம் தானாகவே ஆற வேண்டும்.

அப்போது இருந்த இரண்டு ஸ்பெஷலிஸ்டுகள் என் வாழ்க்கைத் துணைவியை பார்த்து கை விட்டு விட்டார்கள். அவர்களில் ஒருவர் சொன்னார், இன்னும் மூன்று மாதத்திற்கு மேல் போகாது. அதற்குமேல் காப்பாற்ற முடியாது. ஆகவே அவர்களுக்கு என்னென்ன தேவையோ அவையெல்லாம் கொடுக்கலாம், இதை அவர்களிடம்

1978 மார்ச் 25] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சொல்ல வேண்டாம். நாட்களைத்தான் எண்ணிக் கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னார். பின்னால் இன்னொருவரிடம் கேட்டோம், இவர் ஏதாவது நல்ல செய்தி சொன்னால் அதைக் கேட்டு ஏதாவது சிறிது சந்தோஷத்தோடு இருப்போம் என்று அவர்களிடம் எக்ஸ்ரே முதலியவற்றை யெல்லாம் காட்டிப்பார்த்தோம். அவரும் கைவிட்டு விட்டார். எப்படியும் இதை காப்பாற்ற முடியாது, நீங்கள் வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லிவிட்டார்கள்.

அதற்குப் பிறகு ஸ்பெஷலிஸ்ட் இல்லாத ஒரு மருத்துவர், எங்கள் குடும்ப மருத்துவர், அவர் என் வாழ்க்கைத் துணைவிக்கு சிகிச்சை பார்த்து 18 ஆண்டுகள் அவரை உயிரோடு வைத்திருந்தார் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி ஸ்பெஷலிஸ்டுகளாக தமிழகத்தில் தலைசிறந்தவர்களாக இருந்தவர்களால் கைவிடப்பட்ட என்னுடைய வாழ்க்கைத் துணைவியை 18 ஆண்டுகள் உயிரோடு வைத்திருந்தார் இன்னொரு மருத்துவர், அவர் சர்ஜன், ஏதோ ஊசி மருந்துகளை எல்லாம் போட்டு 18 ஆண்டு காலம் உயிரோடு வைத்திருந்தார்.

ஆக மனிதனுக்கு நம்பிக்கை வேண்டும். முதலில் நல்ல நம்பிக்கை ஏற்பட்டு, அதற்குப் பின்னால் உயிர் போகிறது என்றால் அதற்கு கவலைப்பட வேண்டியதில்லை. அண்ணா அவர்கள் சொன்னது போல், தினம், தினம் செத்துப் பிழைப்பதை விட, என்றோ ஒரு நாள் போகிற உயிரை, என்றைக்கு என்று காத்திருக்காமல். அதுவரை நம்முடைய வேலைகளை எந்த அளவுக்கு முடியுமோ நம்முடைய வேலைகளை செய்து கொண்டிருக்க வேண்டும் என்கின்ற துணிவு பெற வேண்டும். அந்த அச்சத்திலிருந்து விடுதலை பெற்றாக வேண்டும். அந்த நம்பிக்கை நமக்கெல்லாம் வரவேண்டும்.

எங்காவது அம்மை நோய் வந்திருக்கிறது என்று சொன்னால் எப்படி, எப்படி காரியங்கள் நடைபெறும் என்பது நமக்குத் தெரியும். காளி கோபித்துக் கொள்வாள், மாரியம்மன் கோபித்துக் கொள்வாள், பத்திரகாளி கோபித்துக் கொள்வாள், வேப்பிலை அடித்தாக வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், ஒரு நாட்டு மருத்துவர் வந்து வைத்தியம் செய்தால்—மந்திரவாதி, என்ற முறையில், அல்ல மக்கள் எந்த அளவுக்கு எங்கெங்கே போவார்கள்!

என்பது நமக்குத் தெரியும் — நாட்டு வைத்தியத்தில் நம்பிக்கையுள்ள நான் அதை அலட்சியப்படுத்துபவன் அல்ல, சில நல்ல மூலிகைகளைப் பயன்படுத்திக்கொள்ள நமக்கு நம்பிக்கை வரவேண்டும். அந்த நம்பிக்கை நமக்குத் தேவை.

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள், நாட்டு வைத்தியத்தைப்பற்றிய எத்தனையோ புத்தகங்கள், நூல்கள் இருக்கின்றன, அவைகள் வெளிவரவில்லை என்று என்னிடம் பேசிக் கொண்டிருந்த போது சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன், அப்படிப்பட்ட புத்தகங்கள் எல்லாம் சரிவர வெளிவர, தேவையான வகையில் வெளிவர, உண்மையான செய்திகளாக இருக்கின்ற வகையில் வெளிவர, இந்தத் தமிழக அரசு நிச்சயமாக அக்கறை செலுத்தும், அதை செயல்படுத்துவதற்கும் முயலும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சித்த வைத்தியத்தை அலட்சியப்படுத்திவிடக் கூடாது என்றும், ஆயுர்வேதத்தோடு சித்த வைத்தியத்தை ஒன்றாக்கிவிடக் கூடாது என்றும் சொல்லப்பட்டது. அந்த எண்ணம் நம் ஒவ்வொருவருக்கும் அதாவது தமிழகத்தில் அந்த எண்ணம் இருந்தாலும் வட நாட்டில் ஆயுர்வேதத்தையும் சித்த வைத்தியத்தையும் ஒன்றாகச் சேர்த்துவிடுகிறார்கள் என்று சொன்னால், அதை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதல்ல என்பதையும், நாம் தனித்தன்மையோடு, தனி மரியாதை கொடுத்து, அக்கறையோடு வளர்ப்பதற்கும், நாட்டு மக்கள் அனைவரும் அதை பயன்படுத்துகின்ற அளவுக்கு சக்தி வாய்ந்த அளவுக்குக் கொண்டு வருவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[மாலை 4.50]

அதற்கு என்று ஒரு குழு அமைக்க நாங்கள் விரும்புகிறோம். கண்காணிப்புக் குழு, ஆலோசனைக் குழு என்று அதைச் சொன்னாலும், அவைகள் ஒழுங்காகவும், சிறப்பாகவும், சரியாகவும் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்காக, இவைகள் விரிவுபடுத்தப்பட்டு, அதன்மூலம் மக்களுக்கு இன்னும் அதிகமான வசதிகள் கிடைக்கக்கூடிய வகையில், வாய்ப்பு அனைத்தையும் பயன்படுத்துவதற்கு

யோசனை சொல்லத் தகுதி உள்ளவர்களாக ஐந்து பேர்களை "இந்திய மருத்துவ மேம்பாட்டு ஆய்வுக் குழு" என்ற பெயரில் இந்த அரசு நியமிக்கிறது. நீங்கள் மகிழ்ச்சி உறுவீர்கள் என்பதிலே எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

தலைவர்,

டாக்டர் சி.எஸ். உத்தமராயன், எச்.பி.ஐ.எம்., முன்னாள் இந்திய மருத்துவத் துறை இயக்குநர்.

உறுப்பினர்கள்.

(1) டாக்டர் தியாகராயன், எல்.ஐ.எம்., ஓய்வு பெற்ற மருத்துவ அதிகாரி, மத்திய அரசு சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கூடம், சென்னை.

(2) டாக்டர் சி.பி. மணவாளன், எல்.ஐ.எம்., ஓய்வு பெற்ற பேராசிரியர், இந்திய மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

(3) டாக்டர் சி.பி. இராமநாதன், எல்.ஐ.எம்., ஓய்வுபெற்ற செய்நிலை மருத்துவ அதிகாரி, சென்னை.

(4) டாக்டர் யு.சிங்காரவேலு, எல்.ஐ.எம்., ஓய்வு பெற்ற பேராசிரியர், இந்திய மருத்துவக் கூடம், பாளையங்கோட்டை.

இப்படி ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு தங்களுடைய கடமையைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இதற்கேற்ப, அவர்களுக்குச் சில விதிமுறையை, நாங்கள் உருவாக்கித் தர இருக்கிறோம். அது பிறகு வெளியிடப்படும். இதிலே நீங்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டதற்கு அவர்கள் மகிழ்ச்சியோடு, பெருமனதோடு ஒப்புக் கொண்டதற்கு, இந்தச் சபையின் மூலமாக நான் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுபோல, சென்னை அரசினர் பொது மருத்துவ மனை ஸ்டான்லி மருத்துவ மனை, ராயப்பேட்டை மருத்துவ மனை இதிலே அச்சடித்து இருந்தாலும், மனநோய் மருத்துவ ம[illegible] என்றிருப்பதை மாற்றி, 'மன நல பாதுகாப்பு நிலைய[illegible]

என்ற பெயரில் வைத்து, அங்கு செயல்பட்டுக் கொண்டிருப்பவைகளைப் போன்ற மருத்துவ மனைகளைக் கண்காணிப்பதற்கு பல மருத்துவ நிபுணர்களை, பல்வேறு துறைகளிலே உள்ளவர்களைப் பார்த்து, யாருக்கு சென்னையிலே இருந்து, சொந்தமாகத் தொழில் செய்தாலும், இல்லை என்றாலும், யார் பொது உணர்வோடு பணியாற்ற முடியுமோ, அத்தகையவர்களைக் கொண்ட ஒரு குழுவை முதலில் சென்னை நகரத்திலே இருக்கின்ற மருத்துவ மனைகளை எல்லாம் திருத்துவதற்கும், சீர்படுத்துவதற்கும், உரிய யோசனைகளைச் சொல்வதற்காக ஒரு குழுவினை நாங்கள் அமைத்திருக்கிறோம்.

சென்னை நகரிலுள்ள அரசு மருத்துவ மனைகளைக் கண்காணிக்கும் குழு.

(1) டாக்டர் ஏ.எஸ். இராமகிருஷ்ணன்,
முன்னாள் பேராசிரியர்,
சென்னை மருத்துவக் கல்லூரி.

(2) டாக்டர் ஏ.வேணுகோபால்,
முன்னாள் கௌரவ மருத்துவர்,
சென்னை மருத்துவக் கல்லூரி.

(3) டாக்டர் வி. ஆர். சுப்பிரமணியம்,
முன்னாள் கௌரவ மருத்துவர்.
ஸ்டான்லி மருத்துவ மனை.

(4) டாக்டர் எம். நடராஜன்,
முன்னாள் முதல்வர்,
சென்னை மருத்துவக் கல்லூரி.

(5) டாக்டர் எம்.வி.கிருஷ்ணமூர்த்தி,
முன்னாள் கண்காணிப்பாளர்.
இராயப்பேட்டை அரசு மருத்துவ மனை.

(6) டாக்டர் நந்தகோபால்,
முன்னாள் காது, மூக்கு, தொண்டை நிபுணர்.
இராயப்பேட்டை அரசு மருத்துவ மனை.

(7) டாக்டர் பாலகோபால் ராஜு,
முன்னாள் இயக்குநர்,
குழந்தைகள் நல நிலையம், சென்னை.

இப்படி எழுவரைக் கொண்ட அந்தக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த மிகப் பெரிய பொறுப்பினை அவர்கள் மன நிறைவோடு ஏற்று, தொண்டு செய்ய முன்வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் உங்களுக்குச் சொல்லி, அவர்களுக்கு இந்தச் சபையின் சார்பாகவும், இந்த அரசின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோல் ஆங்காங்கு பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. அந்த வகையில் நாங்கள் கிராமப்புறங்களில், சென்னை நகரத்திற்கு அப்பால் இருக்கிற இடங்களில் அரசு மருத்துவ மனைகளைக் கண்காணிப்பதற்கென்று முதலில் சிறு சிறு குழுக்கள் அமைக்க விரும்பினாலும், அதிலே மருத்துவர்கள், ஓய்வு பெற்ற மருத்துவர்கள் மட்டுமின்றி, பொதுமக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான அரசியல் கட்சியைச் சேர்ந்த நல்லோர்களில் சிலரையும் சேர்த்து அவர்களுடைய கண்காணிப்பையும் அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. அவைகளை விரைவில் வெளியிட இருக்கிறோம் என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் கிராமப் புறங்களில் சேவை செய்யவேண்டும், கிராமப்புறங்களில் பணியாற்ற வேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில் எல்லாம், நகரத்திற்கு எதையும் செய்யப் போவதில்லை என்று பிரச்சாரம் செய்து கொண்டிருந்தவர்கள். கொஞ்சம் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

சென்னை நகரத்திலும், அதுபோன்று திருச்சி, மதுரை நகரங்களிலும் பல இடங்களில் மருத்துவ மனைகளுக்காக புதிய கட்டடங்களை உருவாக்கவும், புதிய இயந்திரங்களை வாங்கிக் கொடுக்கவும், நல்ல நிபுணர்களை அங்கு அனுப்பவும் நாங்கள் எடுத்திருக்கும் முயற்சியைக் கவனித்து வருபவர்கள், இங்கே பாராட்டியவர்கள், யோசனை சொன்னவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியோடு நன்றி கூறிக்கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன்.

குழந்தைகளுக்கு, அதிலும் படிக்கிற மாணவர்களுக்கு—அவர்களைச் சென்று பார்த்து, அவர்களுக்குத் தொழு நோய் இருக்கிறதா என்பதைப் பார்க்கும்போது அதைச் சொல்லவும் சிலர் நாணுவார்கள் என்பதையும், விவரம் தெரியாத விஞ்ஞானத்தைப் பற்றி, விஞ்ஞான உலகைப் பற்றிப் புரியாத, வளர்ந்துவிட்ட விஞ்ஞானத்தின் திறமையை,

சக்தியைப் புரிந்துகொள்ள முடியாத நிலைமையில் இருக்கிற சாதாரண கிராம மக்கள், அவர்களை ஒதுக்கி விடுவார்கள். அந்தக் கிராமத்திற்கே இந்த நோய் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகிற அளவுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தை வெளியிட்டார்கள். அந்த உள்ளத்தில் ஏற்பட்ட அந்த எண்ணத்திற்கு நான் மதிப்புக் கொடுக்கிறேன் : மரியாதை காண்பிக்கிறேன்.

ஆனாலும், நம்முடைய பொறுப்பையும் உணர வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம். அவர்களிடம் தொழு நோய் என்று சொல்லாமல் இருக்கலாம். ஆனால் எந்த நோயாவது இருக்கிறதா என்று பார்ப்பதற்கு, அதைப் போன்ற நோய்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து விசேஷ திறமை படைத்தவர்களை அனுப்ப வேண்டுமென்பதும், அவர் போகும்போது அவர் எந்தத் திறமைக்குச் சொந்தக்காரர், எந்த வகையில் ஸ்பெஷலிஸ்ட் என்பதை அங்குள்ளவர்களும் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது என்பதைப் பார்க்கும்போது அப்படிப் பட்டவர்கள் போகாமல் இருக்கவும் முடியாது. போனால் தொல்லையும் வரும் என்றால்—நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன் — எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஒரு பிரச்சாரக்குழுவை வைத்தாக வேண்டும். இது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்ற எண்ணத்தைக் கொண்டு அரசியல்வாதிகளைத் தள்ளிவிட விரும்பவில்லை. அரசியல்வாதிகளாகிய நாம்தான் அதைச் செய்தாக வேண்டும்.

அன்றையதினம் வேறு பல பிரச்சினைகளைப் பற்றி பேசும் போது பிரதான எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் சார்பாக, அந்தக் கட்சியின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் சொன்னார்கள்—நாங்கள் முழு மனதோடு ஒத்துழைக்கிறோம் என்று. அந்த வகையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும், அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்களும், இங்கும் வெளியேயும் அரசோடு ஒத்துழைத்து கட்சி வேறுபாடு கருதாது மக்கள் மத்தியில் சென்று அதற்குரிய எண்ணத்தை மக்களுக்கு உண்டாக்க, இப்படி ஒரு நோய் இருப்பதால் எந்த ஆபத்தும் வந்துவிடாது, எந்த நோயாக இருந்தாலும் தீர்ப்பது அவசியம், அவர்களை ஒதுக்கி வைத்து விட்டால் நோய் வராது என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களை அச்சத்திற்கு அப்பாற்பட்டவர்களாக்கி, இப்படிப்பட்ட

நோய் இருந்தாலும், அதைத் தீர்த்துக் கொண்டு அவர்களோடு ஒத்து வாழ்கின்ற நிலைமையை, அவர்கள் மனதில் பதிய வைக்கிற பெரும் பொறுப்பில் நாம் அனைவரும் சேர்ந்து செயல்பட ஒத்துக் கொண்டோமானால், துணிந்து முன் வருவோமானால்—எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது, ஓராண்டு காலத்திற்குள் இப்படிப்பட்ட அச்சத்தை தமிழகம் முழுவதும் தீர்த்து வைத்து, இந்தியத் துணைக் கண்டத்திற்கே முன்னோடியாக பலவற்றை நாம் முன் னால் செய்து காட்டியதுபோல், இப்போதும் பாராட்டப்படு வதுபோல், இந்த வகையிலும் பாராட்டுப் பெறுவோம். அவர் கள் நம்மைப் பின்பற்ற வேண்டுமென்று எண்ண வேண்டிய அளவுக்கு தமிழகத்தில் ஒரு புதுமை பிறக்கும்.

[மாலை 5.00]

ஒரு நல்ல நேர்மையான மனச்சாட்சியோடு வாழ்கின்ற மக்கள் எவ்வளவு நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்பதற்கு அடையாளமாக அது அமையும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

இப்படிப் பல்வேறு வேலைப் பிரச்சினைகள், படித்துப் பட்டம்பெற்று வேலை இல்லாமல் இருப்பவர்கள் இவைகளையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து, எப்போது முடியும் என்று கேட்டிருக்கிறார்கள். நான் நிச்சயமாகக் கூறுகிறேன், நேரம் இல்லை, நான் குறைத்துக் கொள்கிறேன், இத்தனை குறிப்புகளையும் படிக்கவேண்டுமென்று தான் வந்தேன், ஒன்றிரண்டை மட்டும் படித்துவிட்டு, மற்றவைகளைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

காச நோய் வில்லைகள் விற்பனை விவரம்: அதாவது, ஸ்டாம்ப் என்று சொல்லி காச நோய் நிதிக்காக வில்லைகளைப் லவிதமாகச் செய்யலாம். வில்லைகள் செய்து விற்பது, அந்த வகையில் 1974-75 ஆம் ஆண்டில் 6,50,557 ரூபாய் ; 1975-76 ஆம் ஆண்டில் 6,99,825 ரூபாய் ; 1976-77 ஆம் ஆண்டில் 7,29,608 ரூபாய் ; 1977-78 ஆம் ஆண்டில் 7,14,500 ரூபாய். ஆக இப்படிப்பட்ட அந்த விற்பனைகளால் எல்லாம் நாம் நமது கடமையை ஆற்றி மக்களை அக்கறை கொள்ளச் செய்து அதிகமான அளவில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லும்பொழுது இதை அரசு செய்கிறது; மக்கள் வாங்குகிறார்கள் என்று யாராவது சொன்னால் நம்பத் தயாராக இல்லை.

மக்களுக்குச் சொல்கின்ற அரசியல் கட்சித் தலைவர்களும், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் இங்கே சொல்வதாலே, அதற்காக உழைப்பதாலே, இப்படிப்பட்ட முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப்பட்டவைகள், புள்ளி விவரங்களைச் சொல்லி மக்களுக்குப் புரிய வைக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்படுவதற்கு முன்னேற்றத்தில் நாம் அவர்களைத் தயார்படுத்தி எதை எதை எப்படிச் செய்யவேண்டும் என்று சொன்னால் அது வெற்றிகரமாக அமையும். இங்கே சொன்னார்கள், நாங்கள் செயல்படுத்த இருந்தோம், யாரோ வந்து குறுக்கிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அந்தக் கெடுமதியாளர்கள், இங்கே நாம் சேர்ந்து செயல்படும்பொழுது, அவர்கள் மறைந்துவிடுவார்கள். பிறகு திரும்பி வரமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவத் துறையில் நான் முதலில் சொன்னதைப் போல் ஒன்றை நான் கண்டிப்பாகச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். பட்டம் படித்து மருத்துவர்கள் என்கின்ற தகுதியோடு வெளிவருகின்றவர்கள் குறைந்தது 5 ஆண்டுக்காலம் கிராமப் புறத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் போன்றவைகளில் வேலை செய்தால், அவர்களைத் தொடர்ந்து வேலைக்கு வைத்துக் கொள்வது, அதோடு மற்ற மருத்துவ மனைகளிலே நியமிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாம் வேலை செய்ய அனுமதிக்க முடியாத அளவில் முதலிலே கையெழுத்து வாங்க வேண்டுமென்றும் ஆசைப்படுகிறேன்.

சட்டம் எந்த அளவிற்கு உதவி செய்யும், எப்படிக் கொண்டுவரப் போகிறோம்; எத்தனை பேர்கள் வழக்கிற்காக நீதிமன்றத்திற்குப் போகப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் இந்த எண்ணத்தைச் சொல்லியாக வேண்டும். கிராமப்புறங்களிலிருந்து சென்னைக்குப் படிக்க வந்தால், படித்துவிட்டு திரும்ப அவர்கள் அங்கே போவது இல்லை. கிராமப்புறங்களுக்குப் போக வேண்டும் ' என்று இன்றைக்குச் சொல்கிறவர்கள் படித்துப் பட்டம் பெற்றால் அங்கு போகிறார்களா என்றால் அரிதாக இருக்கிறது. நிலைமைகள், வசதிகள் எங்கே தங்க வைக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறதோ, அங்கே மனிதன் வாழ்வது இயற்கை; தண்ணீர் இருந்த இடத்தைத் தேடி, எழுதப் படிக்க மொழி தெரியாத காலத்திலே மக்கள் அங்கு அங்கு குடியேறினார்கள்

என்று சொல்வது போல், வாய்ப்பு, வசதி இருக்கிற இடத்திற்கு, விவரம் தெரிந்த, நாகரிகம் தெரிந்த, பட்டப்படிப்பு படித்த, விஞ்ஞானத்தைத் தெரிந்த, ஒரு தொழிலைத் தானே நடத்தக்கூடிய தகுதியையும் திறமையையும் பெறக்கூடிய வகையில் படித்த ஒருவர் இதை வேண்டுமென்றே அலட்சியப்படுத்துகிறார் என்பதை எப்படி இந்தச் சமுதாயம் மன்னிக்க முடியும் என்பதை நீங்களே தீர்ப்புக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த வகையில் நாம் கண்டிப்பாக இருந்தாக வேண்டும். இந்த மருத்துவத்தில் பட்டப்படிப்பு படித்து, எம்.பி.பி.எஸ். படித்து வெளியே வந்தால் அரசு மருத்துவமனைகளில் அவர்கள் குறிப்பிடுகின்ற இடத்தில், கிராமங்களில் குறைந்தது ஐந்தாண்டுகள் அவர்கள் பணியாற்றியாக வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாக்கும் நேரத்தில், மூன்றாண்டுகளுக்கு மேல் ஒரு இடத்தில் இருக்கக் கூடாது என்று சட்டமிருந்தாலும், விதி முறைகள் இருந்தாலும், பழக்க வழக்கங்கள் இருந்தாலும், எங்கேயோ சென்று யாரையோ பிடித்து, நான் ஒரு கட்டளை போட்டால் இன்னொருவரிடம் சிபாரிசுக்குப் போய், அவர் கட்டளையிட்டால் இன்னொருவரைப் பார்த்து, இப்படியே சுற்றிச்சுற்றி இராயப்பேட்டை, மைலாப்பூர், திருவல்லிக்கேணி என்று சுற்றிக் கொண்டேயிருக்கின்ற நிலைமையை மாற்றி, இன்னும் கொஞ்சம் பெரிதாக இருக்கிறது தமிழ்நாடு, அந்த மாவட்டத்தையும் கொஞ்சம் சுற்றிப் பாருங்கள், அங்கே போய் மக்களைப் பாருங்கள், அங்குள்ள நல்ல டாக்டர்களுக்கு, இளைஞர்களுக்கு உங்களது அறிவையும், ஆற்றலையும் சொல்லிக் கொடுங்கள், உங்களுடைய வயதோடு உங்கள் ஆற்றல் மறைந்துவிடக் கூடாது என்று வேண்டுகோள் வைக்கின்ற நிலைமைகளையும், இந்த அரசு நிச்சயமாகக் கடைப்பிடிக்கும், அதற்கும் இந்த மாமன்றம் உறுதுணையாக நிற்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொசுத் தொல்லைகளைத் தீர்க்க வேண்டுமென்று சொல்கின்றபொழுது நமது சென்னை நகரத்தில் தார் ரோடுகள் போட்டாலும், எந்த ரோடுகள் போட்டாலும் காரிலே எங்கே போகிறார்களோ அங்கேதான் போடப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆனால் வண்டிகள், மனிதர்கள் நடமாடும் இடங்களில் ஆங்காங்கே சந்துகள் இருக்கின்றன. ஸ்லம்ஸ் என்ற, நாம் விரும்பாத சேரி

என்று அழைக்கப்படும் இடத்தில், உழைத்து மக்களுக்கு வாழ்வு தருகின்றவர்கள் வசிக்கும் இடத்தில் எந்த வசதியும் இல்லை. குட்டைகள், 'நீர் தேக்கங்கள்'—நீர்த்தேக்கங்கள் என்றால் அணைக்கட்டுகள் என்று எண்ணிவிட வேண்டாம்—சிறு சிறு பள்ளங்களில் நீர் தேங்கி கொசுக்களுக்கு இடமளித்து விடுகின்றன. அதைத் தடுக்க வேண்டுமென்றால், மிகப்பெரிய அளவில் நாம் பெரிய திட்டத்தைத் தீட்டி. அதை மக்கள் மத்தியிலே செயல்படுத்துவதற்கு அவர்களையும் நமக்குத் துணையாக ஆக்கி அந்தப் பணிகளைச் செய்தால் அன்றி அரசோ, அதிகாரிகளோ மட்டும் நிறைவேற்றிவிடக் கூடியது அல்ல அது.

பேராசிரியர் கூறினார்கள் என்று சொன்னார்கள். நூற்றுக்கு ஐந்து பேர்களாவது தொழுநோய் பற்றித் தெரிந்த டாக்டர்களாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதைச் சொல்வதைப்பற்றி நான் எடுத்துக்கொள்வது என்னவென்றால், இந்த அரசின்மேல் குற்றம் சொல்வதற்காகச் சொல்கிறார் என்று நான் எடுத்துக் கொள்ளவில்லை, அவர்கள் மருத்துவத் துறைப் பொறுப்பை வகித்திருந்த காரணத்தால் அப்படியிருந்தால் இதையெல்லாம் சீர் திருத்த முடியுமென்று அக்கறை காட்டுகிறார்கள் என்றுதான் எடுத்துக் கொள்கிறேன்.

ஆனால் அவர்கள் இருந்தபொழுது ஏன் செய்ய முடியவில்லை என்றால் இதே நிதிப் பிரச்னைதான் வந்திருக்கும் என்று கருதுகிறேன் அல்லது வேறு எந்தக் காரணம் என்று தெரியவில்லை. இப்பொழுது நான் அதைப்பற்றிப் பேசவில்லை. ஆனால் ஒன்றை விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் இதைப்போன்ற ஒவ்வொரு காரியத்திற்கும் மத்திய அரசோடு விவாதித்து, அந்தந்த இலாக்காக்களைச் சேர்ந்த அமைச்சர்களிடம் எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி, நம்முடைய அதிகாரிகளும், அமைச்சர்களும் விவாதிப்பதன் மூலம் பலன்களைப் பெறுவதற்குரிய வாய்ப்புகளும், பெறுவதற்கான சந்தர்ப்பமும் நமக்குக் கிடைத்திருக்கின்றன என்ற நம்பிக்கையில் செயல்பட்டு சிலவற்றைப் பெற்றிருக்கிறோம், சிலவற்றைப் பெறுவதற்கு முயன்று கொண்டிருக்கிறோம். பலவற்றைப் பெறவில்லையா என்று கேட்டால், நம்மைப்போன்ற பல மாநிலங்கள் பலவற்றைக் கேட்பதால், நாம் சிலவற்றை

மட்டும், கேட்டு எதையாவது சிலவற்றைப் பெற்றுக்கொள்வது என்று இருக்கிறோமே தவிர, வேண்டுமென்றே, மத்திய அரசுக்குச் சொல்லாமல், அலட்சியப்படுத்திவிட்டு, மக்களை ஏமாற்றி, நாங்கள் நல்ல பெயர் வாங்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடவில்லை என்பதை நீங்கள் நம்பியாக வேண்டும்.

அதைப்போல, மனிதன் எவ்வளவுதான் சொத்துக்குச் சொந்தக்காரனாக இருந்தாலும், எவ்வளவுதான் புகழுக்கும், பதவிக்கும் சொந்தக்காரனாக இருந்தாலும், அவன் வயிறார சாப்பிட முடியவில்லை என்றால், அவன் இருந்து பயன் இல்லை. உழைக்கின்றவனுக்குச் சாப்பிட வேண்டிய தேவை இருக்கிறது. உழைக்கவும் முடியவில்லை என்றால், அதற்குரிய உடம்பையும் கெடுத்துக் கொண்டு வயிறார சாப்பிடவும் முடியவில்லை, பிறர் சாப்பிடுவதைக் கண்டு வயிறு எரிகிறது என்று சொன்னால் அது நம் குற்றம் இல்லை என்று ஒதுங்கிவிட முடியாது. அவர்களுக்கு நல்ல வாழ்க்கையைக் கொடுக்க வேண்டும். அவர்கள் மனிதர்களாக வாழ, அவர்கள் நினைத்ததை வசதிக்கேற்ப வாங்கி உண்ண வேண்டும், வயிறார நல்ல உணவை உண்ண வேண்டும். அப்படி உண்டாக வேண்டுமென்றால், அவர்கள் உடலைப் பேணிப் பாதுகாத்தாக வேண்டும்.

அந்த வகையில் மருத்துவத் துறை எந்த அளவிற்குப் பயன்பட முடியும் என்று எண்ணும்பொழுது ஆயிரம் மாணவர்கள் இருக்கும் இடத்தில் ஒரு மருத்துவர் இருக்க வேண்டுமென்று இங்கே கூறப்பட்டது. அது நல்ல ஆசைதான். ஆனால் எத்தனை பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன என்று கணக்குப் பார்த்தால், எத்தனை ஆயிரக்கணக்கான பள்ளிக் கூடங்கள் என்று கணக்குப் பார்த்தால், இப்பொழுது வேலையில்லாமல் இருக்கும் மருத்துவர்கள்கூடப் போதாது என்பதைச் சொல்லியாக வேண்டும். மருத்துவர்கள் மட்டும் இருந்தால் போதாது, மருந்தகங்களும் இருந்தாக வேண்டும்.

[மாலை 5-10.]

மருந்தகம் மட்டும் இருந்தால் போதாது. மருந்தைக் கலவை .செய்து கொடுக்கக்கூடிய திறமை வாய்ந்த பணியாளர்கள் இருந்தாக வேண்டும். அந்தப் பணியாளர் இருந்

தால் போதாது. முன்பே சொன்னதுபோல், நேரா நேரத்திற்குச் சென்று அந்தக் கடமையைச் செய்யக்கூடிய பொறுப்பானவர்களாகவுமிருக்க வேண்டும்.

அவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு நாம் சட்டம் போட வேண்டும் என்று பேசிக் கொண்டால், அதை உருவாக்கி விட்டால், யாரோ சிலருக்குத் தண்டனை கொடுக்கும்படி செய்துவிட்டால், அதோடு முடிந்து விடாது. ஆனால், அதே நேரத்தில் நாம் அனைவரும் அந்த உணர்வை ஏற்படுத்துவதற்கு நாம் பெரிய எழுச்சியை உண்டாக்க வேண்டும். மக்கள் தட்டிக் கேட்கக்கூடிய அளவில் இருக்கிறார்கள் என்ற உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்குப் பதில், அந்தப் பணியாளர்களுக்குப் பொறுப்பிலே உள்ளவர்களுக்கு ஏற்படுத்தியாக வேண்டும்.

இதை நாம் செய்யாவிட்டால், மக்கள் நம்மைச் சும்மா விடமாட்டார்கள், அரசு விட்டாலும், சட்டத்திலிருந்து தப்பித்தாலும் மக்கள் நம்மை ஒதுக்கி விடுவார்கள் என்ற அளவுக்கு அவர்களுக்கு அந்த அச்சம் வந்தாகவேண்டும். அந்த நிலைமையை அவர்களுக்குத் தந்தாக வேண்டும். மக்கள்தான் சிலரைத் திருத்தி ஒழுங்குபடுத்தவேண்டும். சிலரைத் திருத்துவதற்கு மக்கள் வேண்டும்; சிலரைத் திருத்துவதற்குச் சட்டம் வேண்டும், சிலரைத் திருத்துவதற்கு நல்ல பழக்க வழக்கங்கள் வேண்டும். அந்தப் பழக்க வழக்கங்களைக் காப்பாற்றுபவர்கள் மக்கள். அந்த மக்களைக் காப்பாற்றுவது சட்டம். அந்தச் சட்டத்தைக்காப்பாற்றுவதற்கு இந்த மன்றம் இருக்கிறது.

ஆகவே, இங்கே நான் ஒன்றைச் சொல்வேன், மாணவர்கள் படிக்கும்போது, அவர்கள் நோயில்லாமல் இருப்பதற்கு, ஆயிரம் என்று இல்லாவிட்டாலும் இங்கே நீங்கள் குறிப்பிட்டதைப் போல் 10,000 மக்கள் பகுதியிலே இருக்கிற அனைவருக்கும் கவனிப்பை நாம் உண்டாக்க எண்ணி, அவர்களோடு தொடர்புகொள்ளச் செய்து, அதை நிறைவேற்ற முடியுமானால் அது அங்கே இருக்கிற மாணவர்களுக்கும் பாதுகாப்பாக அமையும்.

அதே நேரத்தில், உடற்பயிற்சி செய்கின்ற வாய்ப்புகளை அவர்களுக்கு நாம் ஏற்படுத்தித் தந்தாக வேண்டும். அந்த வகையிலே எனக்கு மிகப்பெரிய ஒரு ஆசை. நான் பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்தபொழுது பள்ளிக்கூடம்

முடிந்து அந்த மாலை நேரத்திலே ஒரே மாதிரியான உடை அணிந்து ஆண்களும் பெண்களும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து, அங்கங்கே விளையாடும் இடங்களுக்குச் சென்று, பல்வேறு விளையாட்டுக்களில் அவர்கள் மகிழ்ச்சியோடு ஈடுபடுவதை நான் பார்த்தபொழுது, உண்மையிலே பொறாமை ஏற்படுகிற நிலைமைதான் எனக்கும் ஏற்பட்டது. நமது நாட்டிலே எப்பொழுது இந்த மாதிரி நிலைமை வரும் என்று கேட்கக்கூடிய அளவிலேதான் இருக்கிறேன்.

அந்த நிலைமை வரவேண்டுமென்பதற்காக, சுற்றுலா
அமைப்பு என்ற அமைப்பு ஏற்படுத்தி, அதைத் தொடர்ந்து
தற்காலிகமாக என்றில்லாமல், அப்படிப்பட்ட அமைப்புகளை
அங்கங்கே குழந்தைகள் வந்து விளையாட்டு நிலைமைகளைப்
புரிந்துகொள்வதோடு மட்டும் அல்லாமல், தாங்களே சென்று
பயிற்சி பெறக்கூடிய அளவுக்கு அந்த உள்ளங்களிலே உற்
சாகம் உண்டாக்கக் கூடிய அளவுக்கு நிலைமைகளை உண்டாக்க
சுற்றுலா கண்காட்சிகளை அங்கங்கே குறிப்பிட்ட நகரங்களி
லாவது தொடங்கி, அல்லது நகரத்தை ஒட்டி, கிராமத்திற்
கும் அதற்கும் அருகாமையில் உள்ள இடத்தை உருவாக்கவும்
எல்லோரும் சென்று பார்க்கவும், அதன் விளைவாக அந்த
மக்களுக்கு நல்லதொரு எதிர்கால வளர்ச்சி கிடைக்கும்.
அது பயன் ஊட்டுவதாக அமைய வேண்டுமென்று நான்
க்ருதுகிறேன். அதைச் செய்வதற்கு மிகப் பெரிய கஷ்டம்
இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

பண வசதி உள்ளவர்கள், நிதி மிகுந்தவர்கள், நிதியை
அதிகமாக வைத்துக் கொண்டிருப்பவர்கள், தமிழகத்திலே
நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். வணிக வங்கியிலே போட்டு,
வட்டியை எண்ணிப் பார்ப்பதைவிட மக்களை எண்ணிப்
பார்த்து, மக்களுடைய நன்மைக்காக என்றும் தங்கள் பெயர்
கள் நிலைக்க, அந்த நிலையிலுள்ள அவர்கள் செயல்பட முன்
வந்தார்களானால், அரசும் அவர்களும் அங்கங்கு செய்கின்ற
அந்தக் காரியங்களைத் திறமையாகச் செய்ய முடியும் என்ற
கொள்கையிலே நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். இவை
களையெல்லாம் நிறைவேற்ற மருத்துவர்கள் ஒத்துழைக்க
வேண்டும். கல்லூரி ஆசிரியர்கள் மிகப் பெரிய பொறுப்பை
ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

மாணவர்கள் படிக்கின்றபொழுது, அரசியலைத் தெரிந்து
கொள்வதிலே நமக்கு ஆட்சேபணை இல்லை, பன்முறை நான்
சொல்லியிருக்கிறேன். ஆனால் இதுபோன்ற கல்லூரிகளில்,

மருத்துவக் கல்லூரிகளிலே படிக்கின்றவர்கள், மிகப் பெரிய பொறுப்பு ஏற்கக்கூடியவர்கள், பின்னால் இந்த நாடு, இந்த நாட்டு மக்களும், மற்றவர்களும் கண்டு பொறாமைப்படக் கூடிய அளவுக்கு, நோய் நொடியற்று, சுகாதாரத்திலே மிக வசதியாக உள்ள ஒரு மாநிலமாக அமைக்க அவர்கள் உறுதி பூண்டு, எந்தச் சூழ்நிலை வந்தாலும், எந்தத் துன்பங்கள் வந்தாலும், யார் இடையிலே குறுக்கிட்டாலும், யார் தங்களைத் தூண்டிவிட்டாலும், முதலில் கல்வி கற்றுக் கொண்டு, அதிலே பட்டம் பெற்று, அவர்கள் தங்களைப் பெற்ற இந்தத் தாய் நாட்டிற்கு, தமிழகத்திற்கு மிகப் பெரிய கடமையைச் செய்வதாக எண்ணி இதை முடித்துக் கொண்டு வெளியே வந்தபிறகு, அரசியல் பேசட்டும், எவ்வளவு வேண்டுமானாலும் பேசட்டும்.

இங்கே ஒருவர் குறிப்பிட்டார், எதிர்க் கட்சியிலேயிருந்த ஒருவர் குறிப்பிட்டார், அவர் பெயர் நினைவில்லை. ஒரு மருத்துவர் இன்ன ஜாதி, இன்ன கட்சி என்று பார்க்காமல் அவர்கள் நோயைப் போக்கப் பணியாற்ற முடியும் என்று குறிப்பிட்டார்கள். அதுதான் உண்மை. நோயைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறவர்கள் எந்த ஜாதி, எந்தக் குலம், எந்த மதம், எந்த ஊர் என்று கேட்க முடியாது.

இந்தப் பிரச்சினையை பல நேரங்களில் பல பெரியவர்கள் அரசியல் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சொன்னாலும் அதைச் செய்யும்போது எவ்வளவு பெரிய பொறுப்போடு செய்ய வேண்டியிருக்கிறது என்பதை எல்லோரும் உணருகிறார்கள் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை என்றாலும் உணர வைக்கின்ற தன்மைக்கு உரியவர்களாக இருக்கிற அவர்களைக் கெடுக்கப் பார்க்கிறார்களே என்று எண்ணும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

ஒரு மருத்துவர் தன்னுடைய குழந்தைக்கு மருத்துவம் பார்க்கக் கூடாது என்பது மருத்துவம் தெரிந்தவர்கள் சொல்லுகின்ற தத்துவமாகும். தான் பெற்ற குழந்தைக்கு ஊசி போட்டு, அறுவை சிகிச்சை செய்து அதை காண்பது என்பது அவர்களால் இயலாத காரியம். ஆகவே இன்னொரு மருத்துவரைக் கூப்பிட்டு அவர்களைக் கொண்டு பரிசீலித்துப் பார்ப்பார்கள் என்பது நியதியாக இருக்கிறது, காரணம், தான் பெற்ற குழந்தையை எண்ணிப் பார்க்கும்போது அந்தக் குழந்தையின் உடம்பிலே ஊசி குத்தும்போது பெற்ற தந்தையால் பார்த்துக் கொண்டு இருக்க முடியவில்லை.

அதுபோல, மாணவர்கள் கல்வி பயிலும்போது அந்த மாநிலத்தில் உள்ள மக்கள் அனைவரும் அவர்களை விட பெரியவர்களாக, வயது வந்தவர்களாக, பெற்றோர்களாக உருவானவர்களாக இருந்தாலும், இந்தச் சிறு குழந்தையைப் போல கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட குழந்தையைக் காப்பாற்றத்தான் நாங்கள் இங்கே கல்வி கற்கிறோம், இந்த மருத்துவக் கலையை மேற்கொண்டிருக்கிறோம், இதிலே பட்டம் பெறுகிறோம். அந்தப் பட்டத்தைப் பெற்ற பிறகு வெளிநாடுகளுக்குச் செல்வது நாம் பணம் சம்பாதிப்பதற்காக இல்லை. அந்த அறிவாற்றலால் மக்களுடைய நோயைத் தீர்க்க முடியும் என்று ஒவ்வொருவரும் அணுகுவார்களானால், அவர்கள் நம்முடைய வணக்கத்திற்கும், பாராட்டுதலுக்கும் ஆவார்களே தவிர, அவர்கள் எத்தனை வீடுகளுக்குச் சொந்தக்காரர்கள், இந்த மருத்துவ மனையில் பணியாற்றினார்கள், 20 ஆண்டுகள் சென்னையிலே இருந்தார்கள், அவர்களுக்கு மாதம் எவ்வளவு சம்பளம் 2,000 ரூபாய் அல்லது 1,000 ரூபாய். எவ்வளவு சொத்து—இப்போது 10, 20 இலட்சத்துக்குத் தேறும், நேற்று எப்படி இருந்தார்—ஒன்றும் இல்லை, இது எப்படி வந்தது—தெரியாது—இப்படி இருக்கக் கூடாது, பணம் சம்பாதிப்பதற்கென்று வியாபாரம் இருக்கிறது, வியாபாரிகள் இருக்கிறார்கள். இதுவும் ஒரு தொழில்தான். பணம் சம்பாதிக்கலாம். ஆனால் திட்டவட்டமான எல்லைக் கோடு இருக்கிறது. அதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கே வந்து உட்கார்ந்திருக்கிற அத்தனை பேர்களும் வியாபாரத் துறையிலோ அல்லது எந்தத் துறையிலேயும் நல்ல திறமையோடு பணியாற்ற வாய்ப்பும் வசதியும் பெற்றுதான் இங்கே உள்ளார்கள். ஏதோ ஒரு வகையில் வாழ முடியும். ஆனால் இங்கே கொடுக்கின்ற பணம், அரசின் சார்பாகக் கொடுக்கின்ற பணம்—எவ்வளவு பணம்—நூற்றுக் கணக்கான ரூபாய்கள்தான் என்பது நமக்குத் தெரிந்ததே. அதை வாங்கிக் கொண்டு, கொடுக்கின்ற படியையும் வாங்கிக் கொண்டு, இத்தனை மணி நேரம் இங்கே உட்கார்ந்து பேசி, விளக்கம் பெற, தெளிவு பெற, தெளிவை ஏற்படுத்த முயல்கிறோமே, என்ன காரணம்? எல்லைக்கோடு வகுத்துக் கொண்டு இருக்கிறோம். நமக்கு இது போதும் என்கிற மன நிறைவோடு நாம் யாருக்கோ செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டியிருக்கிற ஆர்வம் பெறுகிற காரணத்தால் இந்தக் கட்டுப்பாடும் அக்கறையும் வந்து விடுகிறது. இது அவர்களுக்கும் வந்தாக வேண்டும்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 25

[மாலை 5-20]

இந்த நிலைமை ஏற்படுவதற்கு நான் உங்களைச் சொல்லவில்லை, எதிர்க்கட்சிகளைச் சொல்லவில்லை. என்னையே நான் சொல்லிக்கொள்கிறேன். நான் தூய்மையாக இருந்தாக வேண்டும். லஞ்சம் வாங்காமல் இருக்க வேண்டும். பேராசைக்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும். இப்படி பேசுகின்ற நான் செயலில் அதைக் கடைப்பிடித்தால்தான், மற்றவர்களும் பின்பற்ற முடியும்.

இது போன்று மருத்துவத் துறையில் இருப்பவர்கள், இப்படிப்பட்ட கணக்குகளுக்கு ஆளாகி, நாளைய தினம் அரசு கணக்குக் கேட்கிறபோது, இங்கே நான் சொல்வதை ஆட்சேபிக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன், ஒவ்வொரு மருத்துவருக்கும் சென்னையில் மட்டுமல்ல, பல இடங்களில் அவர்களுக்குச் சொத்து எவ்வளவு இருந்தது, அவர்களுடைய சொந்தக்காரர்களுக்கு எவ்வளவு சொத்து இருந்தது, இன்றைக்கு எவ்வளவு இருக்கிறது என்று கணக்குக் கேட்டு பெறுகிற நிலையில், யார் யார் என்ன சொல்லப் போகிறார்கள் என்று தெரியாது. ஒரு வேளை யாராவது தவறு செய்து இருக்கிறார்கள் என்ற நிலை ஏற்படுமானால் இனி வருகின்ற இளைஞர் சமுதாயம் அதை அடியோடு கிள்ளி எறிகிற சக்தியாக புரட்சியின் எதிரொலியாக அவர்கள் இருந்தாக வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிப்பட்ட இளைஞர்கள் மருத்துவத் துறைக்கு ஆயிரக் கணக்கில் வரவேண்டும். நம்முடைய எண்ணங்களுக்கு அவர்கள் ஒத்துழைக்க வேண்டும். நமக்கு நேர்மை தேவை. அந்த நாள் நெருங்கிக் கொண்டு இருக்கிறது என்பதைச் சொல்லி, உங்களுக்கு இன்னும் நிறைய விளக்கம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன், நேரம் இல்லை, இப்போது சொல்லாவிட்டாலும், நாம் வெளியிடுகின்ற அறிவிப்பு மூலம், எழுதுகின்ற எழுத்தின் மூலம் உங்களிடையே என்னுடைய எண்ணத்தை தெரிவிக்க முடியும், உங்களுடைய நோக்கமும் தவனிக்க முடியும் என்பதைச் சொல்லும்போது, கிராமப் புறத்தை விட்டு விடாமல், கிராமங்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்று சொல்கிறபோது, நகரத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளை ஒதுக்கி வைத்து விடுவோம் என்ற சந்தேகத்திற்கு இடம் தராமல், அவைகளையும் பார்த்துச் செய்வோம் என்று கூறிக் கொள்கிறேன். ஆகவே உங்களுடைய ஆதரவைத் தந்து இந்த மானியக் கோரிக்கை,

1978 மார்ச் 25]

களை நிறைவேற்றிவைத்து, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று சட்டப் பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, நான் நேற்று பேசும்போது அரசு அங்கீகாரம் பெற்ற நிருபர்களுக்கும், குடும்பத்தாருக்கும் இலவச மருத்துவ வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் கருத்து சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்குப் பின்னால், அப்படிப்பட்ட திட்டங்களை அங்கே தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வீடு ஒதுக்கி வைக்கவும் திட்டம் இங்கே தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அது போன்ற பணிகளை நிச்சயமாக இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. திருவாளர்கள் கோ. இளங்கோவன், சுப்பிரமணியம், கு. ரமணி, சி. ஆறுமுகம், எம். ஏ. லத்தீப் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண். 18-க்கு கொடுக்கப்பட்ட அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பட்டன. திரு. செ. சிவசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண். 18. மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 50,40,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

திருவாளர்கள் மு. அரங்கநாதன், நா. சுந்தரராஜ், வி. கே. கோதண்டராமன், சி. ஆறுமுகம், எம். ஏ. லத்தீப் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண். 19-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றவனவாகக் கருதப் பெற்றன.

திரு. செ. சிவசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 19. பொது சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,84,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண். 7—மாநில சட்டமன்றம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 7. மாநில சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 63,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, பழைய சட்ட மன்ற விவாதங்களை மீண்டும் அச்சடிக்க வேண்டியதன் தேவையைச் சுட்டிக்காட்ட—

"மானியக் கோரிக்கை எண். 7.—மாநில சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி : தலைவரவர்களே, சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு எழுத்தர்கள் நியமித்துக் கொள்ள வகை செய்வதுபற்றி விவாதிக்க —

"மானியக் கோரிக்கை எண். 7—மாநில சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU P. VIJAYARAGHAVAN : Sir, to discuss the need to constitute Consultative Committees of the Legislature as is done in Parliament of India and follow the practice adopted in Parliament,

I move——

"that the allotment of Rs. 63,63,000 under Demand No. 7—State Legislature, be reduced by Rs. 100".

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 7 இங்கு என்னால் முன்மொழியப்பட்டிருக்கிறது. அதுகுறித்து சுருக்கமாக தங்களது கருத்துக்களை எடுத்துச்சொல்லி, இன்றைக்கு முடித்துவிட வேண்டுமென்று நான் என் எண்ணத்தை குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர்களில் முக்கியமான நமது மாரிமுத்து அவர்களிடம் கேட்டபோது, அதுபற்றி விரிவாகப் பேசவேண்டும் என்றும், ஆகையினாலே அதற்கு நேரம் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டார்கள். அதிலே அவ்வளவு ஒன்றும் பிரதானமான பிரச்சனை இல்லை என்று சொன்னபோது அதிலே இருக்கிறது என்று அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அதுமட்டுல்ல. சபையிலே இருக்கிற பெரும்பாலான உறுப்பினர்கள் குறிப்பாக அனுபவம் மிக்க திரு. லத்தீப் போன்றவர்கள் அதுகுறித்து தங்களது நல்ல கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டுமென்ற கருத்தையும் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். எனவே, மனம் திறந்து வெளியிடுகின்ற கருத்துக்களுக்கு கதவடைக்காமல் அவர்களின் கருத்துக்களை நான் தெரிந்து கொள்ள வேண்டும்; தெரிந்துகொண்ட பிறகு என்னுடைய கருத்துக்களை வெளியிடுகின்ற வாய்ப்பினை நான் பெற முடியும் என்று நம்புகிறேன். ஆகையால், இப்போது

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 25

மணி 5½-யை நெருங்கிக் கொண்டிருக்கிறது. 6 மணி வரை சபை நடைபெறும் என்று நம்புகிறேன். அதற்குப் பிறகு—அதற்கு மேல் நீங்கள் இங்கே இருக்கமாட்டீர்கள் என்று நிச்சயமாகத் தெரியும். அதற்குப் பிறகு, இதுகுறித்து நல்ல அருமையான விவாதத்தை இன்னும் கொஞ்சம் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்து, செவ்வாய்க்கிழமை நாம் தொடரலாம் என்ற எனது கருத்தைச் சொல்லி, இப்போது அவை உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

[மாலை 5—30]

THIRU R. E. CHANDRAN JAYAPAL: Hon. Mr. Deputy Speaker, Sir, The Hon. Speaker of the Lok Sabha and the Hon. Chairman of the Rajya Sabha have independent financial powers. But unfortunately the Hon. Speaker of our Assembly and the Hon. Chairman of the Legislative Council do not have these powers. They cannot even appoint a peon. They cannot even have amenities needed in their rooms. Their requests have to be routed through the Legislative Assembly or Council Department to the Finance Department. With the concurrence of the Finance Department only, their needs will be met. This lacuna should be eliminated and independent financial powers should be given to the Hon. Speaker and the Hon. Chairman of the Legislative Assembly and the Legislative Council.

Now, I find that in spite of the Union Government's direction the following three Committees are not functioning in our Assembly:

(1) Committee on Petitions.

(2) Committee on Scheduled Castes and Scheduled Tribes

(3) Library Committee.

The reason is this. There are not adequate Officers and Assistants, so that these Committees can be formed and regulated.

[திரு. ஆர். ஈ. சந்திரன் ஜெயபால்] [1978 மார்ச் 25

Kerala State Legislative Assembly has a total strength of 138 members. There are 10 Officers in that Legislative Assembly department. In addition to a Secretary, there is a Joint Secretary and 8 other Gazetted Officers. But here in Tamil Nadu Legislative Assembly department, there is only one Secretary, one Deputy Secretary and 3 Under Secretaries. But our strength is a hundred more than that of the Kerala State Assembly. Why not the number of these Officers be increased commensurate with the number of Members of this Assembly and also why not proportionately increase the staff, that is, Assistants and last grade servants?

I also request the Government to fix up separate higher pay scales for Officers and staff of the Legislative Assembly Department, like the Lok Sabha Secretariat. In the Lok Sabha Secretariat higher pay scales than that of the Central Government Secretariat are given to them.

I find that the Officers and staff of our Legislative Assembly Department are attending office from 8 a.m. to 8 p.m. But the overtime allowance or whatever allowance they call it, that is being paid to them is a very paltry sum, not even exceeding Rs. 2.50. This lamentable state of affairs should immediately be set right and a higher overtime allowance may be given to these people.

The space available in the various wings of the Legislative Assembly Department—the Bills Section, the R.R. Section, the Reporting Section and the library—is very limited. I am afraid the library is in a very cramped place. There is very poor ventilation there. Apart from the collection of books, during summer time it is impossible for the Members to sit there and read books So, I request the Government to pay attention to this fact and remove the library to a better place, better ventilated and better lighted.

Likewise, in the Reporting Section, whenever hon. Members go there to meet the Reporters, there is no place for the Members to sit. We have to evict or ask one of the Assistants to get up from his seat and we have to sit in his seat or in a Reporters seat.

It is the same problem with the other wings of the Assembly also. Now that the new Secretariat buildings have been opened and the Departments are moving over there, I request that more space should be allotted for the various sections like Bills Section, R.R. Section and Reporting Section of the Legislative Assembly Department.

I understand that during the emergency the Compulsory Deposits and Savings Amount that was recovered from the pay of the staff of the Legislative Assembly Department has not yet been refunded to them. I request the Government to pay immediate attention to this fact and see that the refunds are made within a week.

About the M.L.As., we have been given coupons for travel by train for 10,000 kilo metres. I understand that in almost all the States this privilege to Members has been extended to 20,000 kilo metres.

As I go through the terms and conditions printed on the coupons, it appears that the Member and his spouse can use these coupons in other States. But here in our State only the Members are permitted to use these coupons and not their spouses. I understand that in other States this privilege is extended to the respective spouses. So, I earnestly solicit the Government to extend the same privilege to the Members in our State also.

*திரு. நா. சுந்தரராஜ்: பாயிண்ட் ஆப் ஆர்டர். கோரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கோரம் இருக்கிறது.

THIRU R. E. CHANDRAN JAYAPAL: Sir, at times when we book tickets, we have to cancel them due to unforeseen circumstances—say natural calamities like flood or storm. When we cancel our tickets, like the cash refund, the coupons are not refunded to us. So, we lose those coupons sometimes extending to 3,000 kilo metres or 4,000 kilo metres, especially when we undertake official tours with the Committees of the Legislature. This aspect should be immediately looked into.

Another factor is most of the hon. Members who come from mofussil districts board the trains at very small stations. Hence, they are not able to get reservation of berths. So, I request the Government to address the Southern Railway or any other Railway to see to it that Members of this Legislative Assembly are given priority over others in the matter of reservation of berths.

Thank you, Mr. Deputy Speaker, Sir.

*திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில சட்டமன்ற மானியக் கோரிக்கை மீது ஒருசில கருத்துக்களை நான் இங்கே எடுத்துரைக்க விழைகிறேன்.

இங்கே நம்முடைய மானியக்கோரிக்கையை முன்மொழிந்த நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மூன்று முறை நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர். அங்கே பாராளுமன்றத்தில், அங்கேயிருக்கிற செயலகங்கள், லோக் சபா செகரட்ரேரியேட், ராஜ்யசபா செகரேட்ரேடரியேட் என்பன எப்படி இயங்கி வருகின்றன, எப்படி தனித் தன்மையுடனும் சுதந்திரத்துடனும் இயங்கி வருகின்றன என்பதை நேரடியாக அறிந்தவர். அவர்கள் அங்கே பணியாற்றுகிற போது அவைகளையெல்லாம் பார்த்து, நேரடியாக உணர்கிற நிலையில் இருந்தவர்கள். அவர்கள் இந்த மானியக் கோரிக்கையை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லித்தான் தெரியவேண்டும் என்ற நிலைமை இல்லை. ஆனாலும் ஒரு சில கருத்துக்களை நான் இங்கே எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு லோக்சபா செகரேட்டேரியட், ராஜ்ய சபா செகரேட்டேரியட் இவை எப்படி பணியாற்றுகின்றன, எப்படி சுதந்திரத் தனித் தன்மையுடன் விளங்குகின்றன என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். அதேபோல் நமது மாநிலச் சட்டமன்றம் அந்த வகையில் தனித்தன்மையுடன் சுதந்திரமாகச் செயல்படுகிறதா என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது நமக்கு வெறுமைதான் காட்சியளிக்கிறது என்பதை இங்கே சொல்லாமல் இருக்கமுடியாது. அப்படிச் சொல்கிற நேரத்தில் உதாரணத்திற்காக சில உதாரணங்களைக் கோடிட்டுக் காட்டுவதற்குக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன். சட்டப் பேரவைத் துறை

[திரு. பொ. விஜயராகவன்] [1978 மார்ச் 25

மற்ற துறைகளுக்கு அடிமைப்பட்டிருக்கக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நடப்பாண்டில் சட்டப் பேரவைத் துறை செலவிற்காக ரூ. 63,63,000 ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பேரவை இதை அங்கீகரித்த பிறகு சட்டப் பேரவைத் துறை அதிலிருந்து செலவு செய்ய முக்கிய அதிகாரங்கள் இங்கே இருக்க வேண்டும்.

ஆனால் இங்கிருக்கிற நிலைமை வேறுவிதமாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்ட மன்றப் பேரவை குழு உறுப்பினர்கள் ஆய்வுக்காக வெளிமாநிலங்களுக்குச் செல்ல வேண்டிய நேரத்தில் நிதி இலாக்கா ஒப்புதல் பெறாமல் அங்கிருந்து பணம் எடுக்கமுடியாது என்ற ஒரு நிலை இருந்துவருவதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டப் பேரவைத் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள்தான் முழு அதிகாரமும் உள்ளவர்கள். அதற்குப் பதிலாக இலாக்கள் இங்கே ஆதிக்கம் செலுத்துகிற ஒரு சூழ்நிலையைக் காண்கிறோம். அதை மாற்றியமைத்து இந்தச் சட்டமன்றப் பேரவைத் துறைதான் அதை நிர்வகிக்கிற பொறுப்பில், அந்தப் பணத்தைச் செலவழிக்கிற பொறுப்பில் இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[மாலை 5-40]

அதுமட்டுமல்ல, லோக் சபாவில் அங்கு இருக்கின்ற பேரவைத் தலைவர் தன்னுடைய செயலகத்திற்கு யாரை நியமிக்க வேண்டும் என்று கருதுகிறார்களோ அவர்களை நியமிக்க அதிகாரம் இருக்கிறது. ஆனால் இங்கே நிதி இலாகாவின் ஒப்புதலுக்கு காத்து இருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒரு பியூன் இடத்தில் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றாலும் அதற்கும் இந்தத் துறைக்கு அதிகாரம் கிடையாது. அதற்கும் நிதி இலாகாவின் ஒப்புதலை பெற வேண்டிய நிலை இருக்கிறது. அதே போன்று அதிகாரிகள் யாரையாவது நியமிக்க வேண்டும் என்றால் அதற்குப் பப்ளிக் சர்வீஸ் போன்ற துறைகளின் ஒப்புதலை பெற்றுதான் நியமிக்க வேண்டிய நிலை இங்கு இருந்து வருகிறது. இங்கே இருக்கின்ற அதிகாரிகள், செயலாளரிலிருந்து மற்ற அதிகாரிகள் வரை சுதந்திரமாக இயங்கக் கூடிய அளவில் செயல்படுவதற்கு தகுந்த அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 மார்ச் 25] [திரு. பொ. விஜயராகவன்]

1948-ம் ஆண்டு அன்றைய தினம் பாராளுமன்றத்தில் பேரவைத் தலைவராக இருந்த மாவ்லங்கர் கூறிய சில வார்த்தைகளை இங்கு சொல்ல ஆசைப்படுகிறேன்.

" Every Officer, subordinate or otherwise, serving in the Secretariat of the Legislature must be in a position to carry out his duties without fear or favour of the Executive Government, and obviously this cannot be done if persons in the employ of the Legislature Secretariat have to look upon such bodies as Selection Board, consisting of the Officers and nominees of the Executive Government for their chances and career in the Secretariat of the Legislature. Even in the old regime when the Executive Government was not responsible to the Legislature and the entire power vested technically in the Governor-General, it was a well-established convention that the presiding authority (the Speaker) was the sole judge and controller in respect of appointments, promotions, etc., in the Legislative Assembly Department. "

இலாகாக்களிடத்தில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. சாதாரண கேள்விகளுக்கு 42 நாட்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என்றிருக்கிறது. 42 நாட்களுக்குள் கட்டாயமாக பதில் அளிக்க வேண்டும் என்ற முறையில் சுதந்திரமாக அவற்றை கேட்பதற்கு இந்தத் துறைக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, குறுகிய கால கேள்வியைப் பொறுத்த வரையில், 10 நாட்களுக்குள் விடையளிக்கவேண்டும் என்று இருக்கிறது. அதிகாரிகளிடம் கேட்டால், அமைச்சர்களிடம் ஒப்புதல் பெற்றுத்தான் குறுகிய கால கேள்விக்குப் பதில் அளிக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். அமைச்சர்களிடம் குறுகிய கால கேள்வி சென்று அதற்கு ஒப்புதல் அளித்தால் தான் பதில் அளிக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். அங்கத்தினர்கள் சென்று அமைச்சர்களிடம் சென்று, அமைச்சர்களுடைய ஒப்புதலைப் பெற்று வர முடியாது.

குறுகிய கால கேள்வி ஏன் எடுக்கவில்லை என்று சில நேரத்தில் அதிகாரிகளிடம் போய் கேட்கும்போது, அமைச்சர்களுக்கு அனுப்பியிருக்கிறோம். இதுவரை எந்தவிதமான தகவலும் வரவில்லை என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள்.

[திரு. பொ. விஜயராகவன்] [1978 மார்ச் 25

இதைப்பார்க்கும்போது, உண்மையிலேயே இந்தத் துறை தனித்தன்மை வாய்ந்ததாக சுதந்திரமாக செயல்படுகிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. அப்படியில்லாமல் சுதந்திரமாக தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டால் தான் சுதந்திரமாக செயல்பட முடியும். இன்றைக்கு ஜூடிஷியறி, எக்ஸிக்யூட்டிவ், லெஜிஸ்லேச்சர் என்ற மூன்று தூண்களும் நாட்டை தாங்கி நின்று, நாட்டை நல்லமுறையில் நடத்துவதற்கு உதவி செய்தாகவேண்டும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வைப்பதற்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல இன்னொரு நிலைமையும் நாம் கண்கூடாக காண்கிறோம். அரசின் குழுக்களின் பரிந்துரைகள் செய்யும் போது, அதை மூன்று மாதங்களுக்குள் செயல்படுத்தி அதற்கான பதிலை அனுப்பியாக வேண்டும். ஆனால் இப்போது இருக்கின்ற நிலைமையை பரிசீலித்துப் பார்த்தால், குறைந்த பட்சம் பதில் வருவதற்கு இரண்டு வருடங்களுக்கு மேலாக ஆகிறது. குழுக்கள் எடுக்கின்ற பரிந்துரைகள்மீது எடுக்கப் படுகின்ற கருத்துக்கள் என்ன என்பதை அறிய முடிவதில்லை. நான் குறைந்த பட்சம் இரண்டு வருடம் ஆகிறது என்று சொன்னேன். இரண்டு வருடங்கள் அல்ல. மூன்று வருடம், நான்கு வருடம் ஆகிறது. கேள்விகளுக்கு பதில் கிடைப்பதிலும் இந்த நிலைமை இருக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்கது என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

கேள்விகளுக்கு 42 நாட்களுக்குள் விடையளிக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் 42 நாட்களுக்குள் விடையளிக்கப்படுகிறதா என்று பார்த்தால் அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் கூட இந்த மாமன்றத்தில் சொன்னார்கள், சில கேள்விகளுக்கு ஐந்து மாதங்கள் ஆகியும் பதில் வரவில்லை, ஆகவே சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவர்கள் துறையில் சொல்லி விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இந்த நிலைமையை மாற்றி அமைத்து, 42 நாட்களுக்குள் பதில் கிடைக்கின்ற அளவில், அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும்.

1978 மார்ச் 25] [திரு. பொ. விஜயராகவன்]

அதே நேரத்தில் அமைச்சர்களுடைய நிர்வாகத்தின்கீழ் இந்த துறை அமையக் கூடாது, தனித் தன்மையோடு இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

புதிய குழுக்கள் நியமிக்கப்படவில்லை என்று எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரன் ஜெயபால் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாராளு மன்றத்திலேயும், மற்ற மாநிலங்களிலேயும் இருக்கின்ற குழுக்கள்கூட இங்கே இல்லை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக '' கமிட்டி ஆன் பெடிஷன்ஸ் '', '' கமிட்டி ஆன் ஷெடியூல்டு காஸ்ட் அண்டு ஷெடியூல்டு டிரைப்ஸ் '', '' லைப்ரரி கமிட்டி '' போன்ற கமிட்டிகள் இங்கே இல்லை என்று குறிப்பிட்டார்கள். அத்தகைய அமைப்புகளை, இந்தக் கூட்டத் தொடரிலேயே செயல்முறைக்குக் கொண்டு வந்து, அவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பாராளு மன்றத்திலே எல்லா அமைச்சகங்களுக்கும் '' கன்சல்டேடிவ் கமிட்டி '' என்று எல்லாத் துறைகளிலும் ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இங்கேயும், சட்டமன்றத் துறையைப் பொறுத்தமட்டிலும், அதைப்போல் மற்ற அமைச்சகத் துறைகளைப் பொறுத்தமட்டிலும் இத்தகைய குழுக்கள் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். எனவே, இந்த '' கன்சல்டேடிவ் கமிட்டி '' அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குழுக்கள் அமைப்பதன் நோக்கமே, தங்களுடைய பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத் தான். எனவே, அத்தகைய குழுக்களின் கூட்டம் அடிக்கடி கூட்டப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இல்லை என்று சொன்னால், எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ, அந்த நோக்கங்கள் நிறைவேறாமல் போய்விடும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் குழுக்கள் சிறப்பாக செயல்பட வேண்டுமானால், அலுவல்கள் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் அதிகாரிகள்கூட அதிக

[திரு. பொ. விஜயராகவன்] [1978 மார்ச் 25

நிலைமைகளை உணருகிறோம். அப்
மாக இருக்க வேண்டிய
படிப் பார்க்கின்றபோது, இராஜஸ்தான் போன்ற சிறிய
மாநிலத்திலே கூட, நம்முடைய தமிழகத்தைவிட சிறியதாக
இருந்தாலும்கூட, அங்கே 10 சார்புச் செயலாளர்களுக்கு
மேல் இருந்து பணியாற்றி வருவதை நாங்கள் நேரிலே
சென்றபோது கண்கூடாகப் பார்த்தோம் என்பதை நான்
இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இட வசதியைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய நண்
பர்கள்கூட குறிப்பிட்டார்கள். இங்கே இருக்கின்ற நிலை
மைகளைப் பார்த்தால், இடவசதி மிகவும் குறைவாக இருக்
கிறது. அதிலும் நூலகத்திற்குப் போனால், அங்கே ஒழுங்
காக உட்கார்ந்து படிப்பதற்குக்கூட இட வசதி இல்லை.
புத்தகங்களை வைப்பதற்கு நல்ல அறைகள்கூட கிடையாது.
வராந்தாக்களிலே, ஆங்காங்கே அலமாரிகளில் புத்தகங்கள்
வைக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையை நாம் காண முடிகின்றது.

டி.ஏ. செக்ஷனை எடுத்துக் கொண்டால், 10 பேர்கள்
அங்கே உட்காருவதே கஷ்டம். 10 பேருக்கு மேல் 20
பேர்கள் சென்றால், உட்காருவதற்குகூட அங்கே இடமில்லை ;
நிற்கத்தான் வேண்டும். அது மட்டும் அல்ல. அங்கே
இருக்கக்கூடிய பணியாளர்கள் உட்கார்ந்து வேலை
செய்வதற்கே அங்கே இட வசதி இல்லை. அதேபோல்தான்
இந்த ஆர்.ஆர். செக்ஷன், அங்கும் இதே நிலைமைதான்
இருக்கிறது.

புதிதாக அரசு தலைமைச் செயலகம் ஒரு கோடி ரூபாய்
செலவிலே கட்டப்பட்டு, பல துறைகள் அங்கே போனாலும்
கூட இந்தத் துறைக்கு அதற்குப் பின்னால் ஒரு அங்குலம்
இடம்கூட ஒதுக்கப்படவில்லை. ஆகவே, இந்த சட்டமன்றத்
துறைக்கு, அமைச்சர்கள் இருக்கின்ற இந்த பழைய தலைமைச்
செயலகத்திலே உள்ள கட்டிடத்தின் அடித்தளம் முழுமை
யும் ஒதுக்கிவிட வேண்டும் என்று நான் இந்த அரசை
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், இந்தச் சட்டமன்றத் துறையிலே ஒ
பப்ளிக் ரிலேஷன் ஆபீசர் நியமிக்கப்பட வேண்டும். சட்ட
மன்ற உறுப்பினர்கள் சொல்லக்கூடிய கருத்துக்களை எடுத்து

1978 மார்ச் 25] [திரு. பொ. விஜயராகவன்]

கூறி, அவர்களுக்கு உள்ள நிலைமைகளை எல்லாம் சரியான முறையிலே, செவ்வனே செயல்படுத்துவதற்கு இந்தத் துறைக்கு ஒரு அதிகாரி அந்த வகையிலே நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆஸ்டலைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய தேவைகளைக் கவனிக்க அங்கேயுள்ள பியூன்கள், மற்றப் பணியாளர்களும் தற்போதுள்ள எண்ணிக்கை போதாது. இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அங்கே ஆறு ரிசப்ஷனிஸ்டுகள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏறத்தாழ 10, 15 ஆண்டுகளுக்கு முன்பாக நியமிக்கப்பட்டு, இன்றைக்கும் அவர்கள் அதே பணியை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு இன்றைக்குப் பதவி உயர்வு இல்லை என்ற நிலைமையில் பணியாற்றி வருகிறார்கள். Once a mortgage is always a mortgage' என்று சொல்வார்கள், அதைப் போல 'Once a Receptionist is always a Receptionist' என்ற நிலைமையில் அவர்கள் இன்றையதினம் பணியாற்றிக், கொண்டு வருகிறார்கள். இந்த நிலைமை கண்டிப்பாக வருந்தத்தக்கதாகும் என்பதைக் கூறாமல் இருக்க முடியாது. அவர்கள் வந்தபோது, இந்தப் பதவிக்கு, பொறுப்புக்குப் பட்டதாரிகள் வராமல் இருந்திருக்கலாம். ஆகவே, இன்றைக்கு அவர்கள் தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகின்ற அளவுக்கு, பதவி உயர்வுகள் பெறுகின்ற அளவுக்கு அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கேகூட, பியூன்கள் பல ஆண்டுகளாக தற்காலிகமாகவே பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லப்படுகின்றது. அவர்களுக்கு இங்கே நிரந்தரமாக வேலை வாய்ப்பு இல்லாவிட்டாலும், மற்றத் துறைகளிலே அவர்களை எடுத்துக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். 10, 12 ஆண்டுகளாக அவர்கள் தாற்காலிகமாகவே பியூன்களாகவும், அவர்களைப் போன்றவர்களும் பணியாற்றக் கூடிய நிலைமையிலே இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

[மாலை 5-50]

அவர்களுடைய நிலைமையைப் பொறுத்த வரையில் ''நித்திய கண்டம் பூரண ஆயுசு'' என்ற நிலைமைதான் இருந்து வருகிறது. சட்டமன்றம் கூடுகிறபோது வருகிற நிலைமை இருக்கிறது, மற்ற நேரங்களில் இல்லாத நிலைமை இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைப் பொறுத்தவரை அது ஒரு ''நோ மேன்ஸ் லாண்ட்'' என்று சொல்லுகிற அளவுக்குத்தான் இருக்கிறது. யாரும் வரலாம், எப்படியும் வரலாம், என்னமும் நடக்கலாம், ஒழுங்காக இருப்பவர்கள் அங்கே இருக்கவே அஞ்சுகிறோம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இருக்கிறது. அங்கிருக்கிற எங்களைப் போன்றவர்களைப் பார்த்து ''நாங்கள் எல்லாம் வயதானவர்கள், சட்டமன்ற விடுதி சாப்பாட்டைச் சாப்பிட்டு வராத நோய் கூட வந்து விடுமோ என்ற நிலைமை இருக்கிறது; இளைஞர்களாகிய நீங்கள் பார்த்துச் சாப்பிடுங்கள்'' என்று வயதான, பலமுறை உறுப்பினர்களாக இருந்தவர்கள் கூறுகிறார்கள். மற்ற மாநிலங்களில் இருப்பதுபோல் அரசே அந்த மெஸ்ஸை ஏற்று நடத்த வேண்டும். டில்லியில் உள்ள தமிழ்நாடு ஹவுசில் எப்படி இருக்கிறதோ அதைப் போல் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் இருக்கும் உணவு விடுதி நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

<u>திரு. ரா. க. சு. தண்டபாணி:</u> மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற சட்டமன்ற மானியத் துறையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த விவாதத்தின்மீது ஓரிரு கருத்துக்களைக் கூற முன்வருகிறேன். இன்றைய மன்றம் எப்படி நடந்து கொண்டிருக்கிறது, எவ்வளவு சுதந்திரத் தன்மையோடு, ஒவ்வொரு உறுப்பினரின் சுதந்திரத்தையும் பாதுகாக்கக்கூடிய தன்மையோடு நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கையில் உள்ளபடியே பேரானந்தம் அடைகிறேன். இதற்காக சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும்,

எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த சட்டமன்றத் துறை மானியத்தின்மீது எனது கருத்துக்கள் எல்லாவற்றையும் தெரிவிக்க விரும்பிய போதிலும், வேறு மானியங்கள்போல் அல்லாமல் இந்த மானிய விவாதத்திலே என்னையும், என்போன்ற உறுப்பினர்களும் நேரடியாக ஏதோ வசதிகளையும், சலுகைகளையும் பெறும்படியாக அமைந்திருக்கிறபடியால் எனக்கு வார்த்தைகள் வெளிவரத் தயங்குகிறது. தன்னலம் கூடாது அல்லவா? ஆயினும் ஓரிரு கருத்துக்களை உங்கள் முன்னால் சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குப் பல்வேறு அலவன்ஸ்களும் சேர்ந்து நாங்கள் மொத்தமாக 550 ரூபாய் பெற்று வருகிறோம். எங்களுடைய செலவுக்கு அது பூரணமாக மாதம் முழுவதற்கும் போதுமானதாக இருக்கிறதா என்று யோசித்துப் பார்க்கையில் நடைமுறையில் சரியாக ஒத்து வரவில்லை. மாண்புமிகு அண்ணன் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஐந்து நாட்களுக்குத்தான் வருகிறது. பாக்கி 25 நாட்களுக்கு வேறு எப்படியோ சமாளித்துக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு.) நல்லவழியில்தான். வீட்டிலிருந்து பணம் பெறுகிறோம். .. ..

<u>திரு. சு. பாலன் :</u> உறுப்பினர் அவர்கள் மாதம் 25 நாட்கள் வேறு முறையில் சம்பாதித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுவது எதைக் காட்டுகிறது ?

<u>திரு. ரா. க. சு. தண்டபாணி :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியது வீட்டிலிருந்து பணம் பெறுகிறோம் என்பதுதான். எனக்கு வயதான தாய், தந்தையர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் கஷ்டப்பட்டு உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் கேட்டுத்தான் பணம் வாங்க வேண்டியிருக்கிறது. இதற்கு முன்பு இங்கே எப்படி யார் யார் எப்படி இருந்தார்கள் என்று சொன்னால் உங்களுக்கு மனம் புண்படும். நிச்சயமாக உங்களைப்போல் அல்ல. எனது தாய், தந்தையர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை இன்னும் வற்புறுத்தி பணம் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது.

ஆகவே, மேலும் 200 ரூபாய் அல்லது 300 ரூபாய் சம்பளம் சேர்த்துக் கொடுக்கும் வகையில் செய்தால் மிகவும் உதவிகரமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் தங்கியிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் பல குறைபாடுகள் இருக்கின்றன. குறிப்பாக, அங்கு நடைபெறும் ஓட்டலில் கொடுக்கின்ற உணவின் தரம் மிகவும் தாழ்ந்ததாக இருக்கிறது. கிங் இன்ஸ்டிடியூட் போன்ற லாபரட்டரீஸ்களுக்கு அதை அனுப்பினால் அதில் கிடைக்கிற முடிவு மிகவும் அதிர்ச்சி தரத்தக்கதாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்,

ஆகவே, உடனடியாக அங்கு அரசே ஒரு நல்ல ஹோட்டலை நடத்த முன்வந்தாலும் சரி, அப்படி இல்லாவிட்டால் வேறு யாராவது நன்றாக நடத்தக்கூடிய சில தனியார்களுக்கு, இந்த ஹோட்டல் துறையிலே நல்ல அனுபவம் பெற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுக்கு மட்டும் சம்பளம், அலவன்ஸ் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறபோது எனக்கு முன்னால் அமர்ந்திருக்கிற அமைச்சர்களுக்கும் சேர்த்துக் கேட்க விரும்புகிறேன். அவர்களுக்கும் 500 ரூபாய் சேர்த்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, எங்களுடைய கோறடா. அவர்களுக்கு 3 லிட்டர் பெட்ரோல் தான், ஏதாவது ஒரு பெட்ரோல் பங்கில் 3 லிட்டர் பெட்ரோல் என்று கேட்டால் காரில் சவாரி செய்வதற்கே அவமானம் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, குறைந்தது 15 லிட்டராவது பெட்ரோல் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் உடல் பயிற்சி பற்றிப் பேசினார்கள். (குறுக்கீடு.) நீங்கள் வேண்டுமானால் உங்களுக்கும் கொஞ்சம் கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள் (குறுக்கீடு.) அதை நீங்கள் சொல்லுங்கள், உங்களுக்கு பாயின்ட் வேண்டுமே. உடல் பயிற்சி பற்றி எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் எங்கள் மனங்கவரும் வண்ண சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட மு

னேற்றக் கழக உறுப்பினர்கள் ஹாஸ்டலை விட்டு வெளியே வந்தால்—"எதிர்க்கட்சியைச் சார்ந்த எங்களுடைய நண்பர்கள் வழக்கமாகச் சொல்வதுண்டு—அதோ பார், அவர்களுக்கு என்ன வயது, புட்பால் பிளேயர்ஸ் போல் இருக்கிறார்கள் என்று சொல்வார்கள். ஆகவே, எங்களைப் போன்றவர்களுக்கு உடல் நலத்தைப் பேணுகின்ற வகையிலே அங்கே விளையாடுவதற்கான ஏதாவது வசதிகளை—வாலிபால் போன்ற கேம்ஸ் ஃபெஸிலிட்டிஸ்—செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன் வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் மீண்டும் 28—3—1978 அன்று செவ்வாய்க்கிழமை தொடரும்.

பேரவையின் இன்றைய மாலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 27—3—1978 அன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 5-58 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(5) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

322. நெல், பருத்தி, நிலக்கடலை, மிளகாய் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் கம்பம் முறைபடுத்தப்பட்ட அங்காடிப் பகுதியை அறிக்கையிடப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்த வேளாண்மைத் துறையின் 2—2—1978 ஆம் தேதியிடப்பெற்ற 156 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ், பேரவை முன் வைக்கப்பெற்றது.]

323. உள்துறையில் 4—10—1958 ஆம் தேதியன்று வெளியாகி 15—10—1958 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ் நாடு அரசிதழின் பாகம் I-ல் கண்ட இணைப்பு விதிகளின்

பக்கங்கள் 450–456-ல் (ஆங்கிலத்தில்) வெளியான SROA-6743/1958 ஆம் எண் அறிவிப்பில் (இது பின்னர் திருத்தப்பெற்றுள்ளது) வெளியிடப்பெற்ற தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாறு (கட்டுப்படுத்துதல், முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து தொழில் துறையின் 22—6—1976 ஆம் தேதியிடப்பெற்ற 776 ஆம் எண் அரசாணையிலும், 22—8—1977 ஆம் தேதியிடப்பெற்ற 1065 ஆம் எண் அரசாணையிலும் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

157. 27—8—1969 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க 31—3—1977 ஆம் தேதியன்றுள்ளவாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களது சொத்திருப்புகள் பற்றிய விவரக் கணக்குகள் பேரவை முன் வைக்கப்பெற்றன :—

(1) திருமதி சுப்புலட்சுமி.

(2) திரு. கே. எம். அப்துல் ரஜாக்,

%158. தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. கி. மனோகரன் அவர்கள் 1977–78 ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகளை சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை (ஆங்கிலம், தமிழ்).

%159. மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. கி. மனோகரன் அவர்கள் 1970–71 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளை சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை (ஆங்கிலம், தமிழ்).

%160. 1977–78 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (ஆங்கிலம், தமிழ்).

%161. 1977–78 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (ஆங்கிலம், தமிழ்).

%162. 1970–71 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (ஆங்கிலம், தமிழ்).

%163. 1970–71 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (ஆங்கிலம், தமிழ்).

%%164. மருத்துவத்துறைக்கான மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை, 1978–79 (தமிழ்).

%%165. மக்கள் நல்வாழ்வுத்துறைக்கான மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை, 1978–79 (தமிழ்).

%%166. மக்கள் நல்வாழ்வு பற்றி 1978–79 ஆம் ஆண்டிக்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

%%167. மருத்துவக் கல்வி பற்றிய 1978–79 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

%%168. மருத்துவப்பணிகள் மற்றும் குடும்ப நலன் பற்றிய 1978–79 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

%23–3–1978 அன்று பேரவைமுன் வைக்கப் பெற்றன.

%%22–3–1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society. (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-2.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot., Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Aiantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

RC 116

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONARY AND PRINTING, MADRAS.